V2:1,31 'N72
N72.17
61548

வெளியீடு—5—6—1972]
Issued—5—6—1972]

3897

# தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

புதன்கிழமை 1972 மார்ச் 8
Wednesday 8th March 1972

தொகுதி XVII—எண் 1
Volume XVII—No. 1

©
தமிழ் நாடு அரசு
1972
GOVERNMENT OF TAMIL NADU
1972

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-9*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

V2ll, 31 'N72

31 N72·17

61548

# Index to TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

*8th to 11th March* 1972.

*Volume XVII* (*Nos.* 1 *to* 4).

3897

TABLE OF CONTENTS.


PAGES

*Wednesday, 8th March* 1972.

1. Obituary reference—Demise of Venkataswamy Naidu, Thiru K. .. .. .. .. 1
2. Questions and Answers .. .. .. .. 2–38
3. Announcement—
   Programme of business of the House .. .. 38
4. Presentation of Report—
   Report (Second) of the Committee on Government Assurances .. .. .. .. 39
5. Budget for the year 1972–73—
   General discussion—*cont.* .. .. .. 39-115
6. Papers laid on the Table ... .. .. .. 116

*Thursday, 9th March* 1972.

1. Points of Order—
   (*a*) Resignation of the Minister, Thiru A. P. Dharmalingam .. .. ... 121–126
   (*b*) Failure of the Chief Minister to announce first to the House about the resignation of a Minister ... .. . . 170–180

PAGES

*Thursday, 9th March 1972*—cont.

2. Questions and Answers .. .. .. .. 126–169
3. Statement by Minister—
   Resignation of the Minister, Thiru A. P. Dharmalingam and the appointment of Thiru Mannai P. Narayanaswamy as Minister .. .. .. .. .. 169–170
4. Adjournment Motion—
   Unemployment and starvation among handloom weavers at Aruppukottai due to non-availability of yarn at fair prices and the steps taken to prevent them .. .. 180–183
5. Budget for the year 1972–73—
   General discussion—*cont.* .. .. .. 183–249
6. Announcement—
   Release of Thiru A. Subramaniam, M.L.A. 250
7. Papers laid on the Table .. .. .. 250

*Friday, 10th March 1972.*

1. Questions and Answers .. .. .. .. 255–296
2. Budget for the year 1972–73—
   General discussion—*cont.* .. .. .. 296–312, 313–407
3. Introduction of new Minister .. .. .. 312
4. Papers laid on the Table .. .. .. 407–408

*Saturday, 11th March 1972.*

1. Questions and Answers .. .. .. .. 409–443
2. Adjournment Motions—
   (a) Alleged lathi charge by Police on the workers of Srivilliputhur Co-operative Textile Mill .. .. .. .. 444–448



PAGES

*Saturday, 11th March 1972*—cont.

2. Adjournment Motions—*cont.*
   (b) Alleged lathi charge by Police on students' processions in support of teachers of Madurai .. .. .. .. .. 448–453
3. Government Motions—
   (a) Election to the Committee of Privileges .. 454
   (b) Election to the House Committee .. 455
4. Announcements—
   (a) Election to the Committee of Privileges. 454
   (b) Election to the House Committee .. 455
5. Budget for the year 1972–73—Voting on Demands for Grants—
   (a) Demand No. 23—Community Development Projects, etc., .. .. ..
   (b) Demand No. 29—Public Works—Grants-in-Aid .. .. .. .. .. } 456–593
6. Papers laid on the Table .. .. .. .. 594

# தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

## தமிழ்நாடு ஆளுநர்:

மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்) : கீழ்க் கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, செய்தி, விளம்பரம், திரைப்படச் சட்டம், பயண அனுமதிச் சீட்டுகள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம், தமிழ்நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசைமாற்று வாரியம்.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சிமொழி, நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், சட்டமன்றம்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுது-பொருள்—அச்சுத்துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு (திருமதி) சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவளம், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (உணவு-வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, வணிக வரிகள் வருவாய், மாவட்டத் துணை ஆட்சித் தலைவர்கள், வருவாய்த்துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறுவனங்கள். மாவட்ட துணை ஆட்சித் தலைவர்கள்.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப்பொருள்கள், இரும்பு- உருக்குக் கட்டுப்பாடு, வேலை வாய்ப்பும்-பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், மூகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறுநிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்கத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

*10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை, உணவு உற்பத்தி.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

12. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.



13. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

14. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்:—அறக்கட்டளைகள், பால் வழங்கு துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான்—கிராமதான இயக்கங்கள்.

---

* 1972 மார்ச் 8-ம் தேதி மாண்புமிகு அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் தமது அமைச்சர் பதவியை இராசிநாமா செய்தார்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் 1972 மார்ச் 10-ம் தேதியிலிருந்து வேளாண்மைத் துறை அமைச்சராக பொறுப்பேற்றார்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU.

THIRU KODARDAS KALIDAS SHAH

*Members of the Council of Ministers.*

1. THE HON. DR. M. KARUNANIDHI (*Chief Minister*)—in charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition, Information and Publicity, Cinematograph Act, Passports, Newsprints Control, Prices and Supplies of Goods Act, Tamil Nadu Drainage and Water Board and Slum Clearance Board.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN (*Minister for Education and Local Administration*)—in charge of Education including Technical Education, Official Language, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions and Legislature.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN (*Minister for Public Health*)— in charge of Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN (*Minister for Labour*)—in charge of Labour, Stationery and Printing, Government Press, Prosperity Brigade, Legislation on Weights and Measures, Statistics and Registration.

5. THE HON. THIRUMATHI SATYAVANIMUTHU (*Minister for Harijan Welfare*)—in charge of Harijan Welfare, Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages, Approved Schools and Vigilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM (*Minister for Food and Revenue*)— in charge of Food, Commercial Taxes, Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

7. The Hon. Thiru S. MADHAVAN (*Minister for Industriesi*—in charge of Industries, Textiles, Yarn, Handloom) Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. The Hon. Thiru S. J. SADIQ PASHA (*Minister for Public Works*)—in charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. The Hon. Thiru Si. Pa. ADITANAR (*Minister for Co-operation*)—in charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Khadi and Village Industries and Rural Industries Project.

*10. The Hon. Thiru A. P. DHARMALINGAM (*Minister Agriculture*)—in charge of Agriculture and Food Production.

11. The Hon. Thiru K. RAJARAM (*Minister for Backward Classes*)— in charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

12. The Hon. Thiru O. P. RAMAN (*Minister for Electricity*)—in charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

13. The Hon. Thiru S. RAMACHANDRAN (*Minister for Transport*)—in charge of Transport, Nationalised Transport, and Motor Vehicles Tax.

14. The Hon. Thiru M. KANNAPPAN (*Minister for Religious Endowments*)—in charge of Religious Endowments, Milk, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

---

* The Hon. Thiru A. P. Dharmalingam resigned his Ministership on 8th March 1972.

The Hon. Thiru Mannai P. Narayanasamy assumed charge of Minister for Agriculture on 10th March 1972.

## தமிழ்நாடு சட்டப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

### பேரவைத் தலைவர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன், பி.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. பெ. சீனிவாசன், எம்.ஏ., பி.எல்:

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

திரு. செ. கந்தப்பன்.
திரு. எஸ். முருகையன்.
திரு. பெ. மலைச்சாமி.
திரு. என். டென்னிஸ்.
திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி.
திரு. எம். சுரேந்திரன்.

### சட்டப் பேரவைச் செயலாளர் :

திரு. கா. து. நடராசன், எம்.ஏ., பி.எல்.

### இணைச் செயலாளர்.

திரு. மா. சண்முகசுப்ரமணியம், பி.ஏ., பி.எல்.

### உதவிச் செயலாளர்கள் :

திரு. த. இராதாகிருஷ்ணன், (எஸ்டேட் அதிகாரி).
திரு. கோ. இராகவன்.
திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.
திரு. ஆர். மாணிக்கம், பி.எஸ்ஸி., பி.எல்.

### விவாதப் பதிப்பாளர்.

திரு. கே. சுந்தரராசன்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்களின் (தமிழ் அகரவரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 1 அண்ணாமலை, திரு. சி. வி. எம். .. | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அழகமுத்து, திரு. து. ப. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 6 அழகர்சாமி, திரு. சோ. .. .. | கோவில்பட்டி. |
| 7 அழகுத்தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 8 அனந்தநாயகி, திருமதி த. ந. .. | மயிலாப்பூர். |
| 9 அன்பழகன், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 10 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 11 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ.) |
| 12 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 13 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 14 ஆல்டா எம். ஃபௌலர் திருமதி .. | நியமன உறுப்பினர். |
| 15 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 16 ஆறுமுகம், திரு. எஸ். .. .. .. | வீரபாண்டி. |
| 17 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 18 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திகுளம். |
| 19 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 20 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி (செ.வ.) |
| 21 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 22 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 23 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 24 இராசாராம், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | சேலம்-II. |
| 25 இராசு, திரு. ஜே. எஸ். .. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 26 இராதாகிருட்டிணன், திரு. எம். .. | தண்டராம்பட்டு. |
| 27 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 28 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 29 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 30 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 31 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.) |
| 32 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.) |
| 33 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 34 இராஜாங்கம், திரு. என். .. .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.) |
| 35 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. | கன்னியாகுமரி. |
| 36 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 37 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 38 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 39 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 40 கணபதி, திரு. என். .. .. .. | பாபநாசம். |
| 41 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 42 கணேசன், திரு. எல். .. .. .. | ஒரத்தநாடு. |
| 43 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 44 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 45 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேவின்பிரிட்ஜ். |
| 46 கதிரவன், திரு. கா. மு. .. .. | தென்காசி. |
| 47 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 48 கந்தசாமி, திரு. கே. பி. .. .. | சாத்தான்குளம். |
| 49 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 50 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 51 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 52 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 53 கருணாநிதி, திரு. தாழை. மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 54 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 55 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.). |
| 56 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம் |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 57 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு.. | முதுகளத்தூர். |
| 58 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 59 கார்த்தீசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 60 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 61 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 62 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 63 கிருட்டிணன், திரு. நா. .. .. | பேரணம்பட்டு (செ. வ.) |
| 64 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 65 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 66 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 67 குப்பல் ராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 68 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 69 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 70 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 71 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 72 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 73 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.) |
| 74 கோபால், திரு. கே. பி. .. .. | கம்பம். |
| 75 கோபால், திரு. பி. .. .. .. | கோயம்புத்தூர் மேற்கு. |
| 76 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 77 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 78 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 79 கோவிந்தன், புலவர் கா. .. .. | செய்யாறு. |
| 80 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 81 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 82 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 83 சதாசிவம், திரு. சே. .. .. .. | ஆண்டிமடம். |
| 84 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 85 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 86 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 87 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 88 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 89 சத்தியவாணிமுத்து, மாண்புமிகு திருமதி (அமைச்சர்). | பெரம்பூர் (செ.வ.) |
| 90 சத்தியேந்திரன், திரு. எம். எஸ். கே. .. | இராமநாதபுரம். |
| 91 சம்பத், திரு. டி. வி. .. .. .. | செம்பனார்கோயில் |
| 92 சாதிக்பாட்சா, மாண்புமிகு திரு. எஸ். ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 93 சாரதி, திரு. மா. பா. .. .. .. | வேலூர். |
| 94 சிதம்பரம், திரு. சித. .. .. .. | காரைக்குடி. |
| 95 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. .. | சேரன்மகாதேவி. |
| 96 சிவபெருமாள், திரு. கோ. .. .. | அரியலூர். |
| 97 சிறைமீட்டான், திரு. தொ. க. .. .. | பரமக்குடி (செ. வ.) |
| 98 சீனிவாசன், திரு. பெ. (பேரவைத் துணைத் தலைவர்). | விருதுநகர். |
| 99 சீனிவாசன், திரு. தொ. ப. .. .. | போளூர். |
| 100 சின்னசாமி, திரு. அ. .. .. .. | செயங்கொண்டம் செ வ.) |
| 101 சின்னசாமி, திரு. ஆர். .. .. .. | தர்மபுரி. |
| 102 சின்னசாமி, திரு. மு. .. .. .. | மொடக்குறிச்சி. |
| 103 சின்னசாமி, டாக்டர் வ. .. .. .. | ஏற்காடு (ஆ.வா.). |
| 104 சின்னராசு, டாக்டர் ச. அ. .. . | ஓசூர் (செ.வ.) |
| 105 சின்ன வெள்ளையன், திரு. சி. .. .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 106 சுந்தரம், திரு. ஒ. என். .. .. .. | திண்டுக்கல். |
| 107 சுப்ரமணியம், திரு. எஸ். கே. .. .. | சத்யமங்கலம் |
| 108 சுப்பிரமணியம், திரு. எ. .. .. | சிங்கநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. கே. எம். .. .. | தியாகராயநகர். |
| 110 சுப்பிரமணியன், திரு. மா. .. .. | ஈரோடு. |
| 111 சுப்பிரமணியன், திரு. வீ. .. .. | உளுந்தூர்பேட்டை |
| 112 சுப்பு, திரு. க. .. .. .. .. | ராஜபாளையம். |
| 113 சுப்பையா, திரு. ஆ. கு. .. .. .. | கோட்டூர் (செ.வ.). |
| 114 சுப்பையா, திரு. கே. வி. .. .. | ஆலங்குடி. |
| 115 சுப்பையா, திரு. ச. .. .. .. | சங்கரன்கோயில் (செ.வ.) |
| 116 சுப்பையா, திரு. எ. ஆர். .. .. | கடயநல்லூர். |
| 117 சுருளிவேல், திரு. மு. .. .. .. | போடிநாயக்கனூர். |
| 118 சுரேந்திரன், திரு. எம். .. .. | மேட்டூர். |
| 119 சுவாமிதாஸ், திரு. எ. .. .. .. | பத்மநாபபுரம். |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 120 செபமாலை, திரு. கோ. .. .. .. | மங்களூர் (செ.வ.). |
| 121 ஜெயராமன், திரு. கி. .. .. .. | சேலம்-1. |
| 122 செல்லதுரை, திரு. வீ. .. .. .. | ஓமலூர் (செ.வ.). |
| 123 செல்லையா, திரு. குழ. .. .. | பேராவூரணி. |
| 124 செல்வராஜ், திரு. எம். .. .. .. | விருத்தாசலம். |
| 125 சேதுராமன், திரு. சி. .. .. .. | சிவகங்கை. |
| 126 சோனையா, திரு. த. .. .. .. | மானாமதுரை. |
| 127 சோமசுந்தரம், திரு. ந. .. .. .. | வலங்கைமான் (செ.வ.). |
| 128 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். .. .. | அருப்புக்கோட்டை. |
| 129 சௌந்திரபாண்டியன், திரு. பெ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 130 டென்னிஸ், திரு. என். .. .. | கிள்ளியூர். |
| 131 தங்கமணி, திரு. கே. டி. கே. .. .. | மதுரை மேற்கு. |
| *132 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 133 தருமலிங்கம், திரு. ந. .. .. .. | ரிஷிவந்தியம் (செ.வ.). |
| 134 தவமணித் தேவர், திரு. வி. .. .. | சேடப்பட்டி. |
| 135 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. .. | நாட்ரம்பள்ளி. |
| 136 தியாகராசன், திரு. அ. .. .. .. | திருமயம். |
| 137 தியாகராசன், திரு. இ. எஸ். .. .. | திருத்தணி. |
| 138 திருப்பதி, திரு. கு. .. .. .. | மதுரை (சென்ட்ரல்). |
| 139 துரைசாமி, திரு. எ. க. .. .. .. | குடியாத்தம். |
| 140 துரைசாமி, திரு. சு. .. .. .. | திருப்பூர். |
| 141 துரைமுருகன், திரு. .. .. .. | காட்பாடி. |
| 142 துரைராஜ், திரு. சு. ம. .. .. | திருவள்ளூர் (செ.வ.). |
| 143 தூயமணி, திரு. மே. சி. .. .. | மேட்டுப்பாளையம். |
| 144 தேவராசன், திரு. எம். .. .. | உதகமண்டலம். |
| 145 தேவேந்திரன், திரு. அ. .. .. | நன்னிலம் (செ.வ.). |
| 146 தோப்பூர் திருவேங்கடம், திரு. .. | கணியம்பாடி. |
| 147 நடராசன், திரு. ஈ. எம். .. .. | அந்தியூர். |
| 148 நடராசன், திரு. எஸ். .. .. .. | தஞ்சாவூர். |
| 149 நரசிம்மன், திரு. எ. சி. .. .. | ஆரணி. |
| 150 நல்லசாமி, திரு. எஸ். .. .. .. | கரூர். |

* 1972 மார்ச் 8-ம் தேதியில் அமைச்சர் பதவியை இராசிநாமா செய்தார்.

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 151 நாகராஜன், திரு. க. .. .. .. | வடமதுரை. |
| 152 நாகலிங்கம், திரு. பா. .. .. .. | பொன்னேரி (செ.வ.). |
| 153 நாச்சிமுத்து, திரு. நா. .. .. | ஒட்டஞ்சத்திரம். |
| 154 நாச்சியப்பன், திரு. ஏ. எம். டி. .. | ஆத்தூர். |
| 155 நாச்சியப்பன், திரு. ந. .. .. .. | சங்கராபுரம். |
| 156 நாராயணசாமி, திரு. மா. வே. .. | திருவொற்றியூர். |
| 157 நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்) | திருவல்லிக்கேணி. |
| 158 நைனாமலை, திரு. இரா. .. .. | ராசிபுரம். |
| 159 பத்மநாபன், திரு. பொ. .. .. | திருநெல்வேலி. |
| 160 பத்மாவதி, திருமதி ஏ. கோ. .. .. | முகையூர். |
| 161 பரந்தாமன், திரு. ஆ. .. .. .. | கடம்பத்தூர். |
| 162 பரமசிவம், திரு. எம். .. .. .. | தாரமங்கலம் |
| 163 பலராமன், திரு. என். எஸ். .. .. | அரக்கோணம். |
| 164 பழனிசாமி, திரு. நா. .. .. .. | பொங்கலூர். |
| 165 பழனிசாமி, திரு. என். கே. .. .. | பெருந்துறை. |
| 166 பழனிசாமி, திரு. மு. .. .. .. | வெள்ளக்கோயில். |
| 167 பழனிச்சாமி, புலவர் சி. .. .. | பழனி (செ.வ.). |
| 168 பழனியப்பன், டாக்டர் ச. மு. .. .. | கோபிசெட்டிப்பாளையம். |
| 169 பழனியம்மாள், திருமதி வி. ப. .. | தாராபுரம். |
| 170 பழனிவேலன், திரு. க. .. .. | வரகூர். |
| 171 பழனிவேலன், திரு. மு. .. .. | நாமக்கல். |
| 172 பழனிவேலு, திரு. பி. .. .. .. | ஆத்தூர். |
| 173 பழனிவேல் ராஜன், திரு. .. .. | தேனி. |
| 174 பன்னீர்செல்வம், திரு. எம். .. .. | ஆம்பூர் (செ.வ.). |
| 175 பாண்டுரங்கம், திரு. சி. .. .. | செங்கம் (செ.வ.). |
| 176 பாலகிருட்டிணன், திரு. கு. .. .. | மன்னார்குடி. |
| 177 பாலசுந்தரம், திரு. வை. .. .. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 178 பாலையா, திரு. ஏ. .. .. .. | கொளச்சல். |
| 179 பெரியசாமி, திரு. கு. .. .. .. | கொடவாசல். |
| 180 பெரியசாமி, திரு. தி. ஓ. .. .. | அவினாசி. |
| 181 பெருமாள், திரு. செ. .. .. .. | காட்டுமன்னார்கோயில். |
| 182 பெருமாள், திரு. ஏ. ஆர். .. .. | காரியப்பட்டி. |



| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 183 பொம்மன், திரு. கு. அ. .. .. | கூடலூர் (செ.வ.). |
| 184 பொன்சொக்கலிங்கம், திரு. பி. .. .. | சிதம்பரம். |
| 185 பொன்னப்ப நாடார், திரு. ஆர். .. | விளவங்கோடு. |
| 186 பொன்னுமலை, திரு. தி. .. .. | பனைமரத்துப்பட்டி. |
| 187 பொன்னுரங்கம், திரு. ஏ. எம். .. | சோளிங்கபுரம். |
| 188 மணலி கந்தசாமி, திரு. சி. .. .. | திருத்துறைப்பூண்டி. |
| 189 மணியன், திரு. பி. எஸ். .. .. | சோழவந்தான். |
| 190 மதியழகன், மாண்புமிகு திரு. கே. ஏ. (பேரவைத் தலைவர்). | ஆயிரம் விளக்கு. |
| 191 மருதாசலம், திரு. என். .. .. | பேரூர் (செ.வ.). |
| 192 மலைக்கண்ணன், திரு. வீ. .. .. | இளையாங்குடி. |
| 193 மலைச்சாமி, திரு. பெ. .. .. .. | மேலூர் வடக்கு. |
| 194 மன்னியப்பன், திரு. சி. .. .. .. | கிருஷ்ணகிரி. |
| 195 மாணிக்கம், திரு. என். .. .. | பென்னகரம். |
| 196 மாணிக்கவாசகம், திரு. இரா. .. .. | தொண்டாமுத்தூர். |
| 197 மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். |
| 198 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். .. .. | பட்டுக்கோட்டை |
| 199 மாரிமுத்து, திரு. மூ. .. .. .. | தலைவாசல் (செ.வ.). |
| 200 மீனாட்சிசுந்தரம், திரு. மா. .. .. | வேதாரண்யம் |
| 201 முகமது காதர் முகைதீன், திரு. எஸ். .. | மேலப்பாளையம். |
| 202 முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. ந. .. | லால்குடி. |
| 203 முத்து, திரு. வ. .. .. .. | சங்கரி (செ.வ.). |
| 204 முத்துசாமி, திரு. ப. .. .. .. | வேடசந்தூர். |
| 205 முத்துச்செல்வன், திரு. பு. செ. .. | முசிறி. |
| 206 முத்துவேல், திரு. ந. .. .. .. | வானூர் (செ.வ.). |
| 207 முத்தையா, திரு. கே. கே. .. .. | கடலூர். |
| 208 முத்தையா, திரு. எம். .. .. .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.). |
| 209 முருகையன், திரு. எஸ். .. .. | கலசப்பாக்கம். |
| 210 முனியாண்டி, திரு. ஆ. .. .. .. | நிலக்கோட்டை (செ.வ). |
| 211 முனு ஆதி, திரு. மு. .. .. .. | திருப்போரூர். |
| 212 முனுசாமி, திரு. ரா. ரா. .. .. | மேல்மலையனூர். |
| 213 மொய்தீன், திரு. திருப்பூர் ஏ. எம். .. | துறைமுகம் (சென்னை நகரம்). |

| தொடர் எண்ணும், உறுப்பினர்கள் பெயரும். | தொகுதி. |
|---|---|
| (1) | (2) |
| 214 மோசஸ், திரு. ம. .. .. .. | நாகர்கோயில். |
| 215 ரங்கனுதன், திரு. கே. .. .. .. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 ராமசாமி, திரு. இ. .. .. .. | வால்பாறை. |
| 217 ராமசாமி, திரு. ஜி. .. .. .. | திருப்பத்தூர். |
| 218 ராமராசன், திரு. வ. க. .. .. .. | பவானிசாகர் (செ.வ.). |
| 219 ராஜா, திரு. எ. எம். .. .. .. | பவானி. |
| 220 ராஜாராம், திரு. ஜி. .. .. .. | திண்டிவனம். |
| 221 ரெத்தினசாமித் தேவர், திரு. மு. சி. ஆ. | திருமங்கலம். |
| 222 லத்தீப், திரு. எம். எ. .. .. .. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. .. .. .. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. .. .. .. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். .. .. .. | சீர்காழி (செ.வ.). |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. .. | செங்கல்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. .. .. .. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. .. .. | ஹோசூர். |
| 229 வெள்ளத்துரை, திரு. அ. .. .. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. .. .. .. | வண்ணாரப்பேட்டை (சென்னை மாநகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. .. .. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. .. .. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. .. .. .. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி .. | ஸ்ரீரங்கம் (செ.வ.). |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. .. .. | பார்க் டவுன் (சென்னை மாநகரம்). |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்**

தொடர் எண்ணும், பெயரும்.

| | |
|---|---|
| 1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .. | அமைச்சர். |
| 2 திரு. எஸ். கோவிந்த் சாமிநாதன் .. | தலைமை வழக்கறிஞர். |

## தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

### புதன்கிழமை, 1972 மார்ச் 8.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு கே எ மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. நீத்தார் நினைவுக்குறிப்பு.

**முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்கள் மறைவு குறித்து.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் துணைத் தலைவராகவும், பின்னர் 1952-லிருந்து 1957-ம் ஆண்டு வரை ஆயிரம் விளக்கு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டப்பேரவையின் உறுப்பினராகவும், 1952-லிருந்து 1954-ம் ஆண்டு வரை அன்றைய ஒருங்கிணைந்த தமிழ்நாடு மாநிலத்தின் அறநிலையத் துறை அமைச்சராகவும் இருந்த திரு. கே. வெங்கடசாமி நாயுடு அவர்கள் 7--3--1972-ம் நாளன்று மறைந்துவிட்ட செய்தியை இப்பேரவைக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் சென்னை மாநகரத்தின் மேயராகவும் பணியாற்றியுள்ளார்.

அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவையின் இரங்கலையும், ஆழ்ந்த வருத்தத்தையும் இப்பேரவையின் சார்பாக நான் தெரிவிக்கிறேன்.

மறைந்த அன்னாருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

அவையினர் அனைவரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றனர்.

[1972 மார்ச் 8

## 2. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*New building for Secretariats*

* 351 Q.—THIRU N. K. PALANISAMY:
THIRU N. V. GURUSAMI:
THIRU N. KITTAPPA:
} Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to contract a new building for the Secretariat office; and

(b) if so, the site selected for the same?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** சென்னை மாநகரத்தில் வாடகைக் கட்டடங்களில் இயங்கும் அரசு அலுவலகங்களுக்குத் தனியாகக் கட்டடம் கட்ட உத்தேசம் இருக்கிறதா ? அல்லது, செக்ரடேரியட் ஆபீஸ் எல்லாவற்றையும் சேர்த்து ஒரே இடத்தில் கட்ட உத்தேசம் இருக்கிறதா ? அப்படியானால், எந்த இடத்தில் கட்ட உத்தேசம் என்று தெரிவிக்க முடியுமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தனித்தனியாகவும் துண்டுதுண்டாகவும் இயங்கும் அரசு அலுவலகங்கள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் கட்டுவதற்கு உத்தேசம் இல்லை. தலைமைச் செயலகத்தைப் பொறுத்தவரை, இங்கிருந்து மாற்றி வேறோர் இடத்தில் கட்டலாம் என்கின்ற உத்தேசம் இருக்கிறது. ஏனெனில், தற்போதுள்ள கணக்குப்படி, தலைமைச் செயலகத்தில் பணியாற்றுகிறவர்களுக்கு 2,9 லட்சம் சதுர அடி இடப்பரப்புத் தேவையாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது 1.8 லட்சம் சதுர அடி இடப்பரப்பில்தான் நெருக்க நிலையில் பணிபுரிகிறார்கள். ஆகவே, அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரை நெருக்க நிலையிலிருந்து மாற்றி, நல்ல சூழ்நிலையில் வேலை செய்யும்படி செய்வதற்கும், இன்னும் பார்வையாளர்களும், மக்கள் பிரதிநிதிகளும் வசதியான முறையில் வந்துசெல்வதற்கும் ஏற்றவகையில் தமிழ்நாடு தலைமைச் செயலகத்தை முழுவதுமாக வேறு இடத்தில் மாற்றலாம் என்கின்ற எண்ணம் இருக்கிறது. அதற்காக



1972 மார்ச் 8]

அரசினர் கலைக் கல்லூரியிலுள்ள மனை, சைதாப்பேட்டை ஆசிரியர் கல்லூரியிலுள்ள மனை, கிண்டி இராஜ் பவனுலுள்ள மனை, இந்திய தொழில் நுட்பப் பயிற்சி நிறுவன (ஐ.ஐ.டி.) எல்லையிலுள்ள மனை ஆகிய இவைகளில் ஏதாவது ஒன்றில் அந்தக் கட்டட அமைப்புக்களை உருவாக்கலாமா என்கிற யோசனை இருக்கிறது. இன்னும் இது முடிவு பெறவில்லை. அமைச்சரவைக் கூட்டத்தில்தான் இதுபற்றி இறுதியாக விவாதித்து முடிவு எடுக்கலாம் என்கின்ற யோசனை இருக்கிறது.

**திரு. நா. வெ. குருசாமி :** கிண்டிப் பகுதியில் புதிய துணைச் செயலகம் கட்டப்போவதாக முதலமைச்சரவர்கள் முன்பு கூறினார்களே. அந்தத் திட்டம் இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைச் செயலகம் கட்டுவதாக என்றைக்கும் சொல்லவில்லை.

**திரு. என். கிட்டப்பா :** தற்போது கோட்டையில் உள்ள தலைமைச் செயலகத்திற்கு உள்ள கட்டடம் போதுமானதாக இல்லை என்று கூறப்படுவதால், கோட்டையில் மத்திய அரசுக்குச் சொந்தமாக இன்னும் எஞ்சியுள்ள மற்றக் கட்டடங்களிலும் புதிய தலைமைச் செயலகம் அமைக்கப்படும் விதத்தில் மாநில அரசு அவைகளை எடுத்துக்கொள்ள வகை செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இப்போதுள்ள அந்த இடங்களெல்லாம் மத்திய அரசுக்குப் பெரிதும் தேவைப்படுகிற இடங்களாக இருக்கின்றன. ஆகவே, அவர்களிடமிருந்து அவற்றை எடுப்பதற்கு இயலாது. இங்கிருந்து மாற்றி, கிண்டி போன்ற இடங்களில் தலைமைச் செயலகத்திற்குரிய கட்டடம் கட்ட வேண்டும் என்பதற்கு இதுவும் ஒரு காரணம். அப்படி மாற்றப்படுவதன் மூலம் சென்னை மாநகரத்தில் இந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலை ஓரளவு குறைக்க முடியும் என்கின்ற அந்த நிலையும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி கட்டியிருக்கக்கூடிய இடத்தில் காலி இடம் ஜாஸ்தியாக இருக்கிறதே, அது புதிதாக அமைக்கப்பட இருக்கும் தலைமைச் செயலகத்திற்குப் போதுமானதாக இருக்குமா ? அப்படியானால், அது அரசு பரிசீலனையில் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அப்படிச் செய்தால் அது இன்னும் நெருக்கடி மிகுந்த இடமாக ஆகிவிடும். இப்போதே அந்த இடத்தில் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்கள் காரணமாக அந்த இடம் நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது, அது மட்டுமல்லாமல் போக்குவரத்து வசதிகளையும் பார்க்கவேண்டும். இன்னும் பத்தாண்டுக் காலத்தில் சென்னை மாநகரத்தில் போக்குவரத்து எந்த அளவுக்கு இருக்கும் என்பதையும் எவ்வளவு நெரிசலுக்கிடையே அவைகள் அமையும் என்பதையும் கணக்கிட்டுப் பார்த்துத்தான், இப்பொழுது போக்குவரத்து நெருக்கடி இல்லாத இடமாக அதை அமைத்தால், வருகின்ற காலத்தில் போக்குவரத்து நெரிசலிலிருந்து சென்னை மாநகரம் மீள முடியும் என்பதைக் கணக்கில் வைத்துத்தான் இந்த யோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** முன்பிருந்த அரசாங்கம் கிண்டியிலே இந்த செக்ரடேரியட்டை அமைக்கவேண்டும் என்ற ஆலோசனை வைத்திருந்தது. அந்த ஆலோசனையின்மீது மறுபரிசிலனை செய்வதற்கு இந்த அரசாங்கம் தயாராக இருக்கிறதா ? அதுவல்லாமல், மத்திய அரசாங்கத்திடமிருந்து இந்த செக்ரடேரியட் கட்டுவதற்கு எவ்வளவு பணம் எதிர்பார்க்கலாம் ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** முன்பிருந்த காங்கிரஸ் அரசாங்கம் இப்படித் தலைமைச் செயலகத்தை கிண்டியில் கட்டலாம் என்கின்ற ஒரு யோசனை வைத்திருந்ததாக காங்கிரஸ் கட்சித் தலைவரவர்கள் கூறுகிறார்கள். அந்த யோசனையின் அடிப்படையில்தான் இந்த யோசனைகள் ஆரம்பமாகியிருக்கின்றன.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இன்றிருக்கக்கூடிய இந்தக் கோட்டை மத்திய அரசுக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய நிலையில் தலைமைச் செயலகத்தை வேறு இடத்தில் மாற்றுகின்றபோது மத்திய அரசாங்கத்திடமிருந்து அப்படி மாற்றுவதற்கு ஆகும் செலவுக்காக மானியத் தொகையைப் பெற்று, இன்னும் ஓராண்டு, ஈராண்டுகளுக்குள்ளே தலைமைச் செயலகத்தை மாற்றுவதற்கு அரசுக்கு யோசனை உண்டா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி அவர்களுடைய இந்தக் கேள்வியின் அடிப்படையில் நாம் மத்திய அரசாங்கத்திடமிருந்து மானியத் தொகை





கோருவதற்கு நியாயம் இருக்கிறது — கோருவோம் --- அவர்கள் தருவார்கள் என்று எதிர்பார்ப்போம்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தை இப்பொழுது இருக்கின்ற இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றுவதற்காக ஏற்படுகின்ற செலவு எவ்வளவு என்பதை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நிச்சயம் லட்சக்கணக்கில் இருக்காது ; கோடிக்கணக்கில்தான் இருக்கும்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தைச் சென்னையிலே கட்டுவதைவிட தமிழ்நாட்டுக்கு மத்தியிலிருக்கும் திருச்சியில் கட்டுவதற்கு அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** திருச்சியில் ஏற்கெனவே மலைக்கோட்டை இருக்கிறது. இந்தக் கோட்டை தேவை இல்லை!

(சிரிப்பு).

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தற்போது மாநில அரசாங்கத்தின் அலுவலகங்கள் சிதறிக் கிடக்கின்றன. புதிய தலைமைச் செயலகக் கட்டடம் கட்டும்போது, அவையெல்லாம் அந்தக் காம்பவுண்டுக்குள்ளேயே கட்டப்படுவதற்கு அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவற்றையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்துத்தான் இந்த யோசனை சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** முதலமைச்சரவர்கள் கூறும்போது, லட்சக் கணக்கில் அல்ல, பல கோடி ரூபாய் இதற்குச் செலவாகும் என்று கூறினார்கள். இப்பொழுது இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளுவது சரியா ? இன்னும் சிறிது காலத்திற்கு ஒத்திப் போட்டு இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பது சரியா ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதைவிடப் பொருளாதார நெருக்கடி மிகுந்த காலத்தில்தான் காங்கிரஸ் அரசு இந்த யோசனையையே முன்வைத்ததாக நம்முடைய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே,

அந்த யோசனையினுடைய அடிப்படையிலேயும் இப்போதுள்ள தேவைகளை முன்னிட்டும் நாம் இந்தத் தலைமைச் செயலகத்தை மாற்றுவது பற்றிய யோசனையிலே ஈடுபட்டிருக்கிறோம். பல கோடி அல்ல. அதாவது 50, 60 கோடி ரூபாய் அல்ல. மூன்று, நான்கு கோடி ரூபாய்க்குள்ளேதான் ஆகக்கூடும். அதுவும் ஒரே ஆண்டுக்குள்ளேயே அந்தத் தொகை செலவழிக்கப்படுவதில்லை. கொஞ்சங்கொஞ்சமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும். இறுதியாகக் கட்டி முடிக்கப்படுவதற்கு நான்கு, ஐந்து ஆண்டுக் காலம் செல்லும்.

திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி : தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத்தை வேறு இடத்திற்கு மாற்றும்பொழுது நமது சட்ட மன்ற உறுப்பினர்களின் விடுதியையும் சேர்த்து மாற்றுவதற்கு உத்தேசம் அந்தத் திட்டத்தில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உறுப்பினர் அவர்களுடைய வேதனையை உணர்கிறேன். அதுபற்றியும் யோசிக்கப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Chief Minister whether there is any proposal to construct a new building for the Assembly also, very close to the place where the Government have proposed to construct the Secretariat?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இரண்டும் இணைந்துதான் யோசிக்கப்படும்.

திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே! இந்தக் கோட்டைப் பகுதி மத்திய அரசுக்குச் சொந்தமாக இருப்பதால் அதை மாநில அரசுக்கே வேண்டுமென்ற கோரிக்கையை எழுப்பி அதைப் பெற முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த இடத்தை மாநில அரசுக்குப் பெற்றுவிட்டாலும் இங்கேயே தலைமைச் செயலகத்தைத் தொடர்ந்து வைப்பதற்கு இயலாது என்பதற்குப் போக்குவரத்து நெரிசலைக் காரணமாகக் குறிப்பிட்டேன். அது அலட்சியப்படுத்திவிடக் கூடிய ஒன்றல்ல. மாநில அரசு இந்த இடத்தைப் பெறுவதற்கான முயற்சிகளிலே ஈடுபடுவதிலே தவறு ஒன்றும் இல்லை. அப்படிப்பட்ட முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.





திரு. எம். தேவராசன் : புதிதாகக் கட்டப்படவிருக்கும் தலைமைச் செயலகம் பெங்களூரிலே இருக்கின்ற விதான் சபா போன்று கட்டப்படுமா? உல்லாசப் பயணிகள் பெருமளவுக்கு வந்து பார்க்கக்கூடிய நிலையில் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூன்று, நான்கு கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டால் யாரும் பார்க்கமுடியாத அளவுக்குக் கட்டடம் இருக்காது.

## குடிநீர் வழங்கு திட்டங்கள்

* 352 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிடமங்கலம் பேரூராட்சிமன்றத்தைச் சேர்ந்த ஊர்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது தற்போது எந்த நிலைமையில் உள்ளன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) குடிநீர் திட்டத்தின் மதிப்பீடுகள் தயார் செய்ய, ஆய்வு வேலை விரைவில் தொடங்கப்படும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, ஆய்வு வேலைகள் ஓரளவுக்கு முடிந்துவிட்டன என்று கருதுகிறேன். உப்பிடமங்கலத்தில் ஒரு பெரிய மாட்டுச் சந்தை இருக்கிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். அங்கே மாட்டுக்குத் தண்ணீர் கிடைக்காமல் காசு கொடுத்து வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே திட்டத்தைத் துரிதப்படுத்தி நிறைவேற்றித் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிர்வாக ஒப்புதல் இதற்கு அளிக்கப்பட்டு இதற்காக 14 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டாகிவிட்டது. இவையெல்லாம் வேலைகள் ஆரம்பமாகும் என்பதற்கான சூழ்நிலைகள்தாம்,

* 353 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether this Government has any concrete programme to end drinking water scarity and to provide enough supply of drinking water at Pallavaram and its neighbourhood; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** (அ) & (இ) பல்லாவரம்—ஆலந்தூர் நகரங்களுக்குக் குடிநீர் வழங்க ஓர் அடங்கல் திட்டம் ரூபாய் 173.32 லட்சம் செலவில் நிறைவேற்றிடவும், அதனைப் பேணிக்காக்க ஆண்டுதோறும் ரூபாய் 3.76 லட்சம் செலவிடவும் அரசு தனது 24—1—1972-ம் தேதியிட்ட பொதுப்பணித்துறை ஆணை எண் 122-ல் அனுமதி வழங்கியுள்ளது.

## மருத்துவ மனைகள்

* 354 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய மருத்துவமனையில் கட்டடங்கள், மருத்துவர் குடியிருப்பு இல்லங்கள் அத்தனையுடன் அரசாங்க மருத்துவமனை ஏற்படுத்த இலவசமாக இடங்கள் அளிப்பதாக சங்கராபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் தீர்மானம் நிறைவேற்றி 1970-ம் ஆண்டு அரசுக்கு அனுப்பியுள்ளார்களா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) மக்கள் நல்வாழ்வு குடும்பநலத்துறை இயக்குநர், சங்கராபுரம் ஊராட்சி ஒன்றிய தீர்மானத்தை அரசுக்கு அனுப்பி வைத்து அதற்கான திட்டத்தையும் அனுப்பியுள்ளார்.

(இ) இத்திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளது.

* 355 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், கடம்பூர் மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்ட பணம் ஒதுக்கப்பட்டதில், தாய்-சேய்



நல விடுதி கட்டடம் மட்டும் கட்டி முடிக்கப்பட்டு, குடும்பக்கட்டுப்பாடு மருத்துவமனைக் கட்டடம் இன்னும் நடைமுறைக்கு வராமல் உள்ளது என்பது பொது சுகாதாரத் துறையினாலும், கயத்தார் பஞ்சாயத்து யூனியனாலும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) கடம்பூரில் அரசு மருத்துவமனை இல்லை. ஆனால் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அதில் குடும்பக் கட்டுப்பாடு நிலையத்திற்கான கட்டடம் கட்டி முடிக்கும் தருவாயிலுள்ளது.

## கேரளாவுக்கு மாடுகள் செலவு

* 356 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மாடுகள் விற்பனைக்காக கொண்டுசெல்லப்படுவது உண்மையா ?

(இ) ஆம் எனில், இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை ஏதேனும் எடுக்கப்பட்டு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** (அ) & (இ) ஒவ்வொரு வாரமும் சராசரியாக 2,000 முதல் 3,000 மாடுகள் கேரளாவுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. வளர்ப்பதற்கு அவை பயனற்றதாக இருப்பதாலும் இறைச்சிக்காக மட்டுமே பயன்படுவதாலும், கேரளாவுக்கு அவை கொண்டு செல்லப்படுவதைத் தடுக்கவேண்டுமென்று எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

**திரு. பி. எஸ். மணியன்:** தலைவர் அவர்களே, தினசரி தென் மாவட்டங்களிலிருந்து இப்படி ஏராளமான மாடுகள் கேரளாவுக்குப் போவதால் தென் மாவட்டங்களிலே கால்நடைப் பஞ்சம் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் இருக்கிறது. அதைத் தடுப்பதற்கு அரசு இனியாவது நடவடிக்கைகள் எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 8

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கேரளாவுக்கு அனுப்பப்படுகிற பெரும்பாலான மாடுகள் அடிமாடுகளாகத்தான் அனுப்பப்படுகின்றன. அடிமாடுகள் எண்ணிக்கையிலே குறைவதாலே எந்த அளவுக்கு மக்களுக்குப் பலன் வரும் என்பதையும் பார்க்கவேண்டும். நாம் கேரளாவுக்கு அனுப்பக்கூடாது என்று சொல்வதைக் காட்டிலும் மாட்டு இறைச்சியைப் பக்குவப்படுத்துகின்ற தொழிற்சாலையை அமைக்க இங்கே யாராவது முன்வந்தால் இங்கேயே அவற்றைப் பெற்றுக் கொள்ளலாம். எனவே இதற்கிடையே இங்கேயிருந்து அங்கே அனுப்பக்கூடாது என்ற கருத்தை மட்டும் வலியுறுத்துவது பொருத்தமானதல்ல.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** இரண்டாயிரம் மாடுகள் அனுப்பப்படுகின்றன. அவைகள் அடிமாடுகள்தானா என்று பரிசோதிப்பதற்கு ஏதாவது ஏற்பாடு உண்டா? சில சமயங்களிலே நல்ல மாடுகள் அனுப்பப்படுவதைக்கூட எங்களாலே பார்க்க முடிகிறது.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நல்ல மாடுகளாக இருந்தால் தகுந்த விலை கொடுத்துத்தான் வாங்கிப் போவார்கள். மேல் நாடுகளில் இப்படிப்பட்ட மாடுகளை இறைச்சிக்காக என்றே வளர்த்து இறைச்சித் தொழிற்சாலைக்கு அனுப்பி பக்குவப்படுத்தி விடுகிறார்கள். இங்கே நாம் இறைச்சியைப் பக்குவப்படுத்துகின்ற தொழிற்சாலையைப் பெறுவதாலே கேரளாவுக்கு அனுப்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இதனாலே மாடுகள் வளர்ச்சிக்கு எந்த விதமான நஷ்டமும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### அனாதைகளின் சவ அடக்கம்,

***357 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அனாதைகளின் சவ அடக்கத்திற்கு உதவி செய்ய திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அனாதைகளின் சவ அடக்கத்திற்கு உதவிசெய்ய முன்னதாகவே அரசு ஆணை பிறப்பித்துள்ளது, அங்கங்கேயுள்ள ஊராட்சிமன்றங்கள்,



1972 மார்ச் 8]

நகராட்சி மன்றங்கள் இவைகளின் மூலமாக அனாதை சவ அடக்கம் ஏற்பாடு செய்யப்படும்.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, அனாதைகள் சவ அடக்கம் செய்யும் பொறுப்பினை செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பொது நிறுவனங்களிடம் ஒப்படைக்கும் செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவா அவர்களே, அனாதைகளுடைய சடலங்களை இப்படி அடக்கம் செய்வதோ அல்லது எரிப்பதோ ஆகிய கடமைகளை பொது நிறுவனங்கள் மேற்கொள்கின்றபொழுது அதைத் தடுப்பதற்கு நடவடிக்கை ஒன்றும் இல்லை. ஆனால் யாரும் வரமுடியாதபோது நகராட்சிகள், ஊராட்சிகள் தலையாரிகள் அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றி ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 358-ம் 359-ம் மாண்புமிகு தொழிலாளர்நலத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

### மீன் எண்ணெய் உற்பத்தி,

***360 வினா—திரு. என். கிட்டப்பா :**

**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நமது மாநிலத்தில் மீன் எண்ணெய் தயாரிக்க அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மீனவத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சுறா ஈரலெண்ணெய் எடுக்கும் நிலையங்களில் சுறா ஈரலெண்ணெய் எடுக்கப்படுகிறது. இது தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயாகும். இம்மாநிலத்தில் இத்தகைய நிலையங்கள் ஏழு உள்ளன. 1970–71-ஆம் ஆண்டில் இந்த நிலையங்களில் 9,127 கிலோ கிராம் தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் உற்பத்தி செய்யப்பட்டது; ரூ. 26,035 மதிப்புள்ள எண்ணெய் விற்கப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, மீன் எண்ணெய் உள் நாட்டுத் தேவைகளை நிறைவேற்றுவதோடு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதால்

தனியார் துறையிலோ அல்லது பொதுத் துறையிலோ பெரிய அளவிலே ஒரு தொழிற்சாலை துவங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** சுரு ஈரலெண்ணெய் தூய்மைப்படுத்தப்படாத எண்ணெயாக இருப்பதால் அது மேல் நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதா என்ற குறிப்பு இல்லை. ஆனால் கார் மீனிலிருந்து எடுக்கப்படுகிற எண்ணெய் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** தலைவர் அவர்களே, ஓரளவுக்கு எண்ணெய் தயாரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான் பத்திரிகைகளிலே பார்த்தேன். 'பிவேர் ஆப் ஷார்க்ஸ்' என்று அறிவிப்பைப் போட்டு 'சுறாக்கள் ஜாக்கிரதை' என்று பத்திரிகைகளிலே வெளியிட்டு குளிப்பவர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்ற முறையிலே முதலை போன்ற பெரிய சுரு மீன்கள் கடலிலே இருப்பதால் அந்த ஷார்க் மீன்களிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நான் ஷார்க் மீன் கிடைக்கவில்லை என்று சொல்லவில்லை. கிடைக்கின்றன. அதை வைத்துத்தான் ஏழு இடங்களில் எண்ணெய் எடுக்கப்படுகிறது. நான் கூறியது மேல்நாடுகளுக்கு அனுப்பப்படும் எண்ணெய், ஷார்க் மீன் எண்ணெய் அனுப்பப்படுவதில்லை. கார் மீனிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அவைகளை தோல் பதனிடுவதற்காக அதிகமாகப் பயன்படுத்துவதாகக் கூறுகிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, ஏழு இடங்களில் தயாரிக்கப்படுவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். மொத்தமாக எவ்வளவு எடுக்கிறார்கள். எவ்வளவு வெளிநாடுகளுக்குச் செல்கிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** அதைத்தான் நான் ஆரம்பத்திலே, சொன்னேன். 1970–71 ஆண்டு கணக்குதான் இப்பொழுது இருக்கிறது, அந்த ஏழு நிலையங்களிலிருந்து



எடுக்கப்படுகின்ற எண்ணெய் 9,127 கிலோகிராம். 26,035 ரூபாய் பெறுமானமுள்ள எண்ணெய் விற்கப்பட்டது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே, ஷார்க் லிவர் ஆயில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகக் கூறினார்கள். மீன் எண்ணெய் குழந்தைகளுக்குச் சிறந்த உணவுச் சத்துக்கள் அடங்கிய பொருளாகும். மேலும் அது அத்தியாவசியமான ஆகாரமாகவும்கூட இருக்கிறது. ஆகவே, அதை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யாமல் நம் நாட்டிலேயே தாராளமாகக் கிடைக்க அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நான் சுரு ஈரலெண்ணெய் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதாகச் சொல்லவில்லை. கார் மீனிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் அனுப்பப்படுகிறது. இந்த சுரு ஈரலிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் தற்சமயம் நம் உள்நாட்டிலேயே படகு கட்டும் தொழிற்சாலை, இன்னும் பல தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுகிறது.

**திரு. எஸ். வடிவேல் :** தலைவரவர்களே, மீன் எண்ணெய் தயாரிக்கப்படும் தொழிற்சாலைகள் எங்கெங்கு எவ்வளவு இருக்கின்றன ? அவைகள் அரசாங்கத்திற்குச் சொந்தமா அல்லது தனியாருக்குச் சொந்தமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** ஏழு நிலையங்கள் இருக்கின்றன. சேதுபாவாசத்திரம், கடலூர், அதிராம்பட்டினம் அம்மாப்பட்டினம், தூத்துக்குடி, புன்னக்காயல், பாம்பன், இந்த ஏழு தொழிற்சாலைகளிலிருந்துதான் இன்றைக்கு நடத்தப்படுகின்றன. இவைகள் அரசாங்கத்தின் சார்பில்தான் நடத்தப்படுகின்றன.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, பொதுவாக மீன் உடம்புக்கு நல்லது. அதில் வைட்டமின் ஏ யும் டி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் பல பேர் மீன் எண்ணெய் சாப்பிட முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே மாத்திரையாகச் செய்து வெளிநாட்டிற்கு அனுப்பவும், உள்நாட்டில் உபயோகப்படுத்தவும் வாய்ப்புகளைச் செய்வார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மீன் வளர்க்கவும், அதிலிருந்து எண்ணெய் எடுக்கவும்தான் இந்தத் துறையிலே

செய்கிறார்கள். மாத்திரைகள் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக இந்தத் துறை இல்லை. இருந்தாலும் அதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, மீன் எண்ணெய் உடம்புக்கு நல்லது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். அது சைவ உணவைச் சேர்ந்ததா அல்லது அசைவ சைவர்கள் சேர்ந்ததா ? ஏனென்றால் கல்கத்தாவிலே உயர்ந்த சைவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் அதை வெஜிடேரியன் வகையறா என்றுதான் சொல்கிறார்கள், மீன்கறி என்றுதான் சொல்லுகிறார்கள். அதைப்பற்றி அரசாங்கம் விளக்கமாகக் கூறுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மீனைச் சாப்பிடும்போது அசைவம், அதை மாத்திரையாகச் சாப்பிடும் போது சைவம்.

மீன் பிடிக்க இலவச உரிமம்

* 361 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாஜி ராணுவத்தினருக்கு இலவசமாக மீன் பிடிக்கும் உரிமம் வழங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் என்றால், இலவச உரிமம் கேட்டு எத்தனை பேர் தற்போது விண்ணப்பித்துள்ளார்கள் ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழி.**

* 362 வினா—திரு. மா. பா. சாரதி : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் கோட்டையைச் சுற்றியுள்ள அகழியைச் சீர்திருத்தி செப்பனிட்டு உல்லாசப் படகு விடவும், நீச்சல் குளம் நிறுவவும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அந்திட்டம் எப்போது நிறைவேற்றப் படும் ?



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அகழியைச் சீர்திருத்தவும், ஆழப்படுத்தவும் திட்டம் உள்ளது, உல்லாசப் படகு விடவோ, நீச்சல் குளம் கட்டவோ திட்டமெதுவும் இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, வேலூர் கோட்டை மிகவும் பழமை வாய்ந்தது. மேலும் வெளிநாட்டவர்களெல்லாம் அங்கு வருகிறார்கள். ஆகவே ஒரு பகுதியை மீன் வளர்க்கும் பகுதியாகவும், மறு பகுதியை இப்படிப்பட்ட உல்லாசப் பிரயாணிகள் இன்பம் அனுபவிக்கும் நிலை ஏற்படும் சூழ்நிலையையும் இனிமேலாவது அரசாங்கம் முயற்சியெடுத்துச் செய்யுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்த அகழியைப் பொறுத்தவரையில், 1921-ஆம் ஆண்டில் வேலூர் கோட்டையானது அகழி உட்பட 1904-ஆம் ஆண்டு பண்டைய சின்னங்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், பாதுகாக்கப்பட்ட சின்னமாக அறிவிக்கப்பட்டது. எனவே மத்திய சர்க்காரிலே இருக்கும் தொல்பொருளியல் துறையால் இவைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவைகளை வேலூர் முனிசிபாலிடிக்குக் கொடுக்க வேண்டுமென்று இடைக்காலத்தில் முடிவெடுக்கப்பட்டது. இருக்கின்ற தண்ணீரைச் சுத்தப்படுத்தி, பாசிகளை நீக்கி, வருகின்ற மீனைப்பிடித்து விற்கத்தான் இந்தத் துறைக்கு அதிகாரம் இருக்கிறது. அதை ஆழப்படுத்தவோ அகலப் படுத்தவோ அல்லது வேறு வகையாகப் பயன்படுத்தவோ முனிசிபாலிட்டியில் கேட்கிறார்கள். இன்னும் முடிவெடுக்கப் படவில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, வேலூரிலுள்ள அகழியை ஆழப்படுத்தி மீன் உற்பத்தி செய்யத் திட்டமிருப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். அங்கே எவ்வளவு மீன் உற்பத்தியாகிறது, அதில் நம் மாநிலத்திற்குப் போக மேற்கு வங்கம் போன்றவைகளுக்கு எவ்வளவு ஏற்றுமதி செய்யப் படுகிறது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அதிக அளவில் ஒன்றும் அங்கே கிடைப்பதாகக் குறிப்பில்லை. குறைந்த அளவிலே தான் கிடைக்கிறது. அது வேலூரிலிருப்பவர்களுக்கே சரியாகப் போய்விடும்.

[1972 மார்ச் 8

## செய்தித்தாள் காகிதம்

*363 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்திற்குத் தேவையான 'நியூஸ் பிரிண்ட்' பேப்பரில் தன்னிறைவு பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஒவ்வொரு உரிம ஆண்டுக்கும் அறிவிக்கப்படும் செய்தித்தாள் காகிதப் பங்கீட்டுக்கொள்கையின் அடிப்படையில் செய்தித்தாள் காகிதம் வெளியீடுகள் வாரியாக நாடு முழுவதும் பங்கிடப்படுகிறது. மத்தியப் பிரதேசத்தில் உள்ள 'நேபா மில்ஸ் லிமிடெட்' ஒன்றுதான் இந்நாட்டில் செய்தித்தாள் உற்பத்தி செய்யும் ஆலையாகும். பெரும்பகுதி செய்தித்தாள் காகிதம் இறக்குமதி செய்யப்படுகிறது. எனவே, தமிழகத்தின் சுயதேவைப் பூர்த்தி என்ற வினா எழாது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிற்கு நியூஸ் பிரிண்ட் காகிதம் ஆண்டுதோறும் எவ்வளவு தேவை என்பதையும், மத்திய அரசு தமிழ்நாட்டிற்கு எவ்வளவு ஒதுக்குகிறது என்பதையும் அறிவிக்க இயலுமா என்பதையும், தஞ்சை மாவட்டத்தில் வைக்கோல், மூங்கில் போன்றவை அதிகமாகக் கிடைப்பதால், அங்கே மாயவரத்தில் இல்லாவிட்டாலும் தஞ்சையிலாவது அத்தகைய காகிதத் தொழிற்சாலையை அமைக்க அரசு ஆலோசிக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்திய நாட்டிற்குத் தேவைப்படும் காகிதத்திலேயே 70 சதவிகிதம் வெளிநாட்டிலேயிருந்து இறக்குமதி செய்யப்படுவதாகத்தான் குறிப்பு இருக்கிறது. நம் தமிழகத்தைப் பொறுத்த வரையில், வெளிநாட்டிலிருந்து 1967-68-இல் 2,104 டன் இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழ்நாட்டிலே சன் பேப்பர் ஆலையில் 15,000 டன் பேப்பர், நியூஸ் பிரிண்டை ஒத்த பேப்பரை செய்யும் முயற்சி நடைபெறுகிறது.



1972 மார்ச் 8]

**திரு. கே. பி. கந்தசாமி :** தலைவரவர்களே, மெஸ்தா என்பதிலிருந்து நல்ல காகிதம் செய்ய முடியுமென்று சொல்லப்படுகிறது. அதைத் தமிழகத்திலே அதிகமான அளவிற்கு மூலப் பொருளாக உபயோகித்து இப்படிப்பட்ட பத்திரிகைக் காகிதத்தைச் செய்யும் ஆலையை பொதுத்துறையிலே நிறுவ இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** புளிச்சகீரையிலிருந்து தயார் செய்வதைப்பற்றி நம்முடைய கூட்டுறவுத்துறை அமைச்சரவர்கள் ஆராய்ச்சி செய்து, சன் பேப்பர் ஆலையிலே பேப்பர் உற்பத்தி செய்யப் பயன்படுத்த முடியும் என்று நிரூபித்திருக்கிறார்கள். அதையொட்டிக் கூட்டுறவுத் துறையின் சார்பிலே இதைப் போன்ற தொழிற்சாலைபற்றி கன்சல்டண்ட் நியமிக்கப்பட்டு ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த சன் பேப்பர் ஆலைக்குக் கன்னியாகுமரி காடுகளிலிருந்து மூங்கில் போன்றவைகள் மலிவாகக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அதுபற்றி காட்டிலாக்கா அமைச்சரவர்களைக் கேட்க வேண்டும். சன் பேப்பர் ஆலையைப் பொறுத்தவரையில் ரீடாரீட்சை ரா மெட்டீரியலாக அதிகமாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இந்த நியூஸ் பிரிண்ட் பேப்பர் அதிகமாக வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி செய்யும் நிலையிலே, தமிழகத்திலேயே உற்பத்தி செய்யவோ அல்லது ஏற்கனவே உள்ள தொழிற்சாலைகளில் அதிகமான உற்பத்தி செய்யவோ அல்லது புதிதாகத் தொழிற்சாலைகள் அமைக்கவோ செயற்குறிப்பு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதைப்பற்றி நான் இப்பொழுது கூட்டுறவுத்துறை அமைச்சரவர்களிடத்திலே பேசிக்கொண்டிருந்தேன். கிரைண்டிங் மெஷின் உள்ள இடத்தில்தான் நியூஸ் பிரிண்ட் பேப்பர் உற்பத்தி செய்ய முடியுமென்று சொல்கிறார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் எந்த அளவிற்கு உற்பத்தி செய்யப்பட முடியுமென்பது யோசிக்கப்பட வேண்டிய பிரச்சினையாகும்.

[1972 மார்ச் 8

திரு. சோ. அழகர்சாமி : காகிதம் மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் ஆராய்ச்சியின் பயனாக கோவில்பட்டி, சங்கரன்கோவில் போன்ற இடங்களில் விளையும் அகத்தியிலிருந்து காகிதம் செய்யலாம் என்று சொன்னதாகக் கேள்விப்படுகிறேன். ஆகவே கூட்டுறவுத் துறையில் இப்படி ஒரு காகிதத் தொழிற்சாலை அமைப்பதற்கு முயற்சி செய்தால் மூலப் பொருளான அகத்தி அங்கு ஏராளமாகக் கிடைப்பதால் அப்படி ஒரு தொழிற்சாலை அமைக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மெஸ்தா ஃபைபர் அதிகமாக உள்ள என்னென்ன செடிகள் ராமெட்டீரியல்லாக உபயோகப் படும் என்று யோசித்தோம். அதில் இந்த புளிச்ச கீரையில் ஓரளவுக்கு வெற்றி கண்டு ஸன் பேப்பர் ஆலையில் நிரூபித்துக் காண்பிக்கப்பட்டிருக்கிறது. வயபிள் யூனிட்டாகச் செய்ய ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. அகத்தி அல்லது வேறு விதமான செடிகளைப் பயன்படுத்த முடியுமா என்பதுபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

திரு. இரா. மாணிக்கவாசகம் : பருத்திமாறில் காகிதம் செய்யலாம் என்று சொல்லப்பட்டு வருகிறது. ஆகவே பருத்தி மாறு கோவையில் அதிகமாக இருப்பதால் அங்கு அதைக் கொண்டு ஒரு தொழிற்சாலை நிறுவ அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நீளமான ஃபைபர் எந்தெந்தச் செடிகளில் இருக்கிறதோ அதைப் பயன்படுத்த முடியும் என்பது பொதுவான ஒரு உண்மை. ஆனால் ஒரு குறிப் பிட்ட செடியை மட்டும் நம்பி தொழிற்சாலை ஆரம்பிக்க முடியுமா என்பது ஆராய்ச்சியில் இருக்கிறது. பருத்திச் செடியிலிருந்து வருமா என்பதுபற்றித் தனி ஆராய்ச்சி வேண்டும்.

திரு. கு. காமாட்சி : காகிதத்தின் முக்கியத்துவத்தை உணராமல் சில ஆசிரியர்கள், சில பத்திரிகை ஆசிரியர்கள், எழுத்தாளர்கள் ஏதேதோ கண்டவிதமான புத்தகங்களை எல்லாம் போடுகிறார்கள். தமிழ்ப் பண்பாட்டிற்கு ஒத்துவராத புத்தகங்கள் எல்லாம் இன்று அச்சிடப்படுகிறது. ஆகவே அவைகளை எல்லாம் தடைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுக்குமா?



1972 மார்ச் 8]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எழுத்தையும் பேச்சையும் தடைப்படுத்துவதால் எதுவும் நின்றுவிடாது. இது காகித உற்பத்தி பற்றிய பிரச்னை. புத்தக உற்பத்தி பற்றிய பிரச்னை அல்ல.

## ஜலகண்டாபுரத்துக்கு தொழிற்பேட்டை

* 364 வினா—திரு. எம் சுரேந்திரன் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) மேட்டூர் தாலுக்கா ஜலகண்டாபுரத்தில் தொழிற் பேட்டை ஒன்று அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனை யிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை.

## பஞ்சு இறக்குமதி

* 365 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஆண்டுதோறும் எவ்வளவு பேல் பஞ்சு இறக்குமதி செய்யப் படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் சுமார் 10.2 லட்சம் பேல்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : வெளிநாட்டிலிருந்து சில ஆண்டுகளாக நூறு கோடி ரூபாய் பெறுமானமுள்ள பஞ்சு இறக்குமதியாகிறது என்ற செய்தியை நான் பார்த்தேன். இப்போது தமிழ்நாட்டிற்கு வெளிநாட்டில் இருந்தும் வட நாட்டிலிருந்தும் பஞ்சு வந்துகொண்டிருக்கிறது. தமிழ்நாட்டில் பலவிடங்களில் நீள இழைப் பருத்தி உற்பத்தி செய்கிறார்கள். அப்படி உற்பத்தி செய்யப்படுகிற இடங்களில் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் ஏக்கரேஜை அதிகப்படுத்தாவிட்டாலும் உற்பத்தியையாவது அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யப் படுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் வெளி மாநிலங்களிலிருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்கிற பருத்தியை நம்பித்தான் நம் ஆலைகள் செயல்பட்டு வருகின்றன. நம் தமிழ் நாட்டில் இன்னும் தீவிரமாக இந்தப் பருத்தி சாகுபடியை அதிகரிக்க வேண்டும், பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் வேளாண்மைத் துறையில் ஒரு புதிய தீவிர சாகுபடித் திட்டத்தைப் பருத்திக்காக வகுத்திருக்கிறது. அது நம் மாநிலத்தில் சிலவிடங்களில் இப்போது நடைபெற்று வருகிறது.

**திரு. கோவை செழியன் :** இப்போது வெளிநாடுகளிலிருந்து இறக்குமதியாகும் பஞ்சு, நீள ஃபைபராக உள்ள பஞ்சை இறக்குமதி செய்கிறார்கள். அது இங்கு போதுமான அளவிற்குக் கிடைக்கவில்லை என்பதால் அதை இறக்குமதி செய்கிறார்கள் வெளிநாடுகளிலிருந்து. ஆனால் தமிழ் நாட்டில் கோவை விவசாயக் கல்லூரியில் சுஜாதா என்ற ஒரு வகை வெரைட்டியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது ஈஜிப்ஷன் பருத்தியின் கூட்டுறவில் உள்ளது, நீளமான ஃபைபர் உடையது. ஆனால் அவ்வளவாக அது உறுதியாக இல்லை என்பதால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியதொரு நிலை இருக்கிறது. ஆகவே மேலும் ஆராய்ச்சி செய்து அந்த சுஜாதாவில் ஒரு மாற்றம் செய்கிற வகையில் ஏதாவது முயற்சி எடுத்தால் வெளிநாட்டுச் செலாவணி மிச்சமாகுமே. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உறுப்பினர் அவர்கள் ஒரு யோசனை சொல்லியிருக்கிறார்கள். அது வேளாண்மைத் துறைக்குப் பரிந்துரை செய்யப்படும்.

**திரு. மு. சுருளிவேல் :** இன்றையதினம் போடி, கம்பம், தேனி பகுதிகளில் பருத்தி, எம்.யு.ஸி. 5-ஐ விவசாயிகள் ஏராளமாக உற்பத்தி செய்து அதை வியாபாரிகள் வாங்காமல் இன்றைய தினம் தேக்கம் அடைந்திருக்கிறது. ஆகவே அரசாங்கமே அதைக் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு நன்மை பயக்கிற வகையில் பருத்தி இறக்குமதியைக் குறைக்கிற அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசாங்கம் முன்வருமா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நம் ஆலைகளுக்குத் தேவையான பருத்தி தமிழ்நாட்டிலே கிடைக்குமானால் அதை வாங்குவதற்கு யாரும் மறுக்க மாட்டார்கள். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நம் ஆலைகளுக்குத் தேவையான பருத்தியை வெளிநாடுகளிலிருந்து பெறவேண்டிய ஒரு சூழ்நிலைதான் இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** ஆலை முதலாளிகள் பஞ்சை வாங்கும்போது வெளியிடங்களிலிருந்து வாங்கும் பஞ்சுக்குத் தருவதைவிட தமிழ்நாட்டிலிருந்து வாங்கும் பஞ்சுக்குக் குறைவான விலை தருகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. சில நேரங்களில் விலை மிகவும் மோசமான முறையில் கீழே விழுந்துவிடுகிறது. ஆலை முதலாளிகள்தான் விலை நிர்ணயம் செய்கிறார்கள். ஆகவே தமிழ்நாட்டில் உற்பத்தியாகக்கூடிய பஞ்சுக்கு ஒரு நியாய விலை நிர்ணயம் செய்து அரசாங்கமே அந்தப் பஞ்சைக் கொள்முதல் செய்து ஆலை முதலாளிகளுக்குக் கொடுக்கக் கூடியதொரு ஏற்பாட்டினைச் செய்தால் இந்தப் பஞ்சு உற்பத்தியும் அதிகமாகும். ஆகவே அதை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** வேளாண்மைப் பொருள்களின் விலையை நிர்ணயிப்பதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்கவேண்டும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நான் கேட்க விரும்பியது, எப்படி இன்று நெல் உற்பத்தியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு நவீன முறைகள் காரணமாக உற்பத்தியை அதிகப்படுத்துகிறோமோ அதேபோல் எந்தெந்தப் பிராந்தியங்களில் இன்று பருத்தி உற்பத்தி செய்யப்படுகின்றதோ குறிப்பாக கோவை மாவட்டம், மதுரை மாவட்டத்தில் தேனி பகுதி போன்றவிடங்களில் உற்பத்தியாகக்கூடிய பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்காக நெல் தீவிர சாகுபடித் திட்டத்தின்கீழ் மாவட்டரீதியாக சில மாவட்டங்களை எடுத்திருப்பது போல் இந்தப் பருத்தி உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கும் அப்படிப்பட்ட இடங்களைத் தீவிரச் சாகுபடித் திட்டத்தின்கீழ் இணைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டும். என்னிடமுள்ள

புள்ளிவிவரப்படி, 1971-72-ம் ஆண்டு நாம் எதிர்பார்க்கக்கூடிய பருத்தி உற்பத்தி 5.3 லட்சம் பேல் ஆகும். வேளாண்மைத் துறையில் தீவிரத் திட்டம் மத்திய அரசின் உதவியோடு நடத்தப் படுகிறது. சில மாவட்டங்களில் அந்த முயற்சி நடைபெற்று வருகிறது. மற்ற மாவட்டங்களில் பிரிவுபடுத்துவதுபற்றித் தனியாக ஆலோசிக்க வேண்டும்.

**வக்பு போர்டு சார்பில் திருச்சிராப்பள்ளியில் தொழில்நுட்பக் கல்லூரி**

* 366 **வினா—திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வக்பு போர்டின் சார்பில் திருச்சிராப்பள்ளியில் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி நடத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், எவ்வளவு மூலதனத்தில்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. கே. எ. வகாப் :** இப்போது தமிழ்நாடு வக்பு வாரியத்தில் பெருவாரியான பணம் இருப்பதாகக் கூறப்படுகிறது. அப்படி இல்லை என்றாலும் இப்போது வருகிற வருவாயைக் கொண்டு இப்படித் தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றை திருச்சி அல்லது சென்னையில் ஏற்படுத்த அல்லது ஒரு மருத்துவக் கல்லூரியை யாவது ஏற்படுத்த இந்த வக்ப் வாரியத்திற்கு அரசு யோசனை கூறுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பெருவாரியான வருமானம் வருகிறது என்று சொல்வது சரியல்ல. இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் ப்ரின்ஸ் ஆஃப் ஆர்காட் என்டோமென்ட்ஸ் சம்பந்தமாக உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு நடைபெற்றது. ஒரு சமரச முடிவு எடுக்கப்பட்டது. அதில் ஒரு ஷரத்து,

"The respondent shall start a College for Girls or an Industrial School for Boys at Tiruchirappalli and such a College shall be named as 'The Prince of Arcot Wakf Board College for



1972 மார்ச் 8]

Girls' or 'The Prince of Arcot Uakf Board Industrial School for Boys' as the case may be". என்று இருக்கிறது.

அந்த என்டோமென்ட்க்கும் இந்த போர்ட்டுக்கும் ஏற்பட்ட சமரசம் என்று சொல்ல முடியாது. அந்த என்டோமென்ட் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** இந்த வக்பு வாரியத்தினால் மதுரையில் நடத்தப்படும் கல்லூரியில் ஆசிரியர்களுக்குக் கூட ஒழுங்காக மாதச் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்ற குறை இருந்து வருவதை அரசு ஆராயுமா? அந்தக் கல்லூரியை நன்கு நடத்த வக்ப் வாரியம் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்களின் கேள்வியிலேயே பதில் இருக்கிறது. நிதி நெருக்கடி காரணமாக சில வேளைகளில் அங்கு உரிய காலத்தில் சம்பளம் கொடுக்க முடியவில்லை. இருந்தாலும் எல்லா முயற்சிகளும் எடுக்கப்பட்டு இப்போது சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** வக்பு போர்ட்டிலிருந்து கன்னியாகுமரி ஜில்லாவில் ஒரு மருத்துவக் கல்லூரி ஆரம்பிப்பதாக இருந்தது. அதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. அது எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நில ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. அங்குள்ள பஞ்சாயத்து தலைவர் அவர்கள் நிலம் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்பேர்ப்பட்ட கருத்து ஒன்று வக்பு போர்ட் ஆலோசனையில் இருந்து வருகிறது.

**திரு. கு. காமாட்சி :** திருச்சி பகுதி பெரிய, பெரிய தொழிற் சாலைகள் அமைந்த பகுதியாகிவிட்டது. அங்கு ஒரு தொழிற் கல்லூரி மிகவும் அவசியம் என்பதை உணர்ந்து வக்ஃப் போர்டில் பணவசதி இல்லாவிட்டாலும் கூட அரசாங்கமே முன்வந்து ஒரு தொழிற் கல்லூரியை அமைக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அங்கு ஏற்கனவே ஒரு தொழிற் கல்லூரி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுவார்களேயானால் அதுபற்றி வக்ப் போர்டு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

[1972 மார்ச் 8

## மணிமுத்தாறு தண்ணீர்

* 367 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்தில் வடக்கு கோடை மேல், தெற்கு கோடை மேல், அழகியனிகால், நதியுண்ணிகால், ஆகிய மூன்று கால்வாய்களுக்கு விவசாயத்திற்கு மணிமுத்தாறு தண்ணீர் விடப் படுகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழாது.

## மலட்டாற்றுத் திட்டம்

* 368 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், மலட்டாறு திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தைப் பற்றிய தொழில்நுட்பக் கூறுகள் தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : இந்த மலட்டாறுத் திட்டம் இரண்டு, மூன்று ஆண்டுகளாக ஆய்வில் இருக்கிறது. அந்தப் பின்தங்கிய பகுதிக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்கும் வகையில் அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க அரசு துரித நடவடிக்கை எடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சுமார் 60 லட்சம் ரூபாய் செலவில் 5,000 ஏக்கர் நிலத்தில் பாசனம் அளிக்கும் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னால் அங்கு கிடைக்கும் நீரின் அளவு, நீரியல் தன்மை ஆகியவற்றை அறிந்து கொள்ள வேண்டும்.



1972 மார்ச் 8]

முதுகுளத்தூர் வட்டத்தில் குறைந்த அளவே மழை பெய்வதால் இந்த ஆறுகளின் தன்மைகளைப் பற்றியும், அளவைப் பற்றியும் அதிகாரிகள் கவனமாகப் பரிசீலித்து முடிவு கூறிய பிறகுதான் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும். இராமநாதபுரம் மாவட்ட மேற்பார்வைப் பொறியாளர் இதுபற்றி ஆராய்ந்து முடிவு கூறிய பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, இந்த மலட்டாறு என்ற பெயர் நன்றாக இல்லை. அதை மாற்றியமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நிலைமை அப்படி இருக்கும் காரணத்தால் ஒருவேளை அப்படிப் பெயர் வைக்கப்பட்டிருக்கிறதோ என்னவோ தெரியவில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப் படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொண்ட பிறகு அது நீர்ப்பாசன வசதிக்குப் பயன்படும் என்றும் அது பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்றும் சொன்னார்கள். அப்படி எடுத்துக்கொண்ட பிறகாவது மலட்டாறு என்ற பெயரை மாற்றி வேறு பெயர் வைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : விஞ்ஞான முறைப்படி இந்தக் காலத்தில் மலடிகள் கூடப் பிள்ளைகள் பெற முடியும். இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு கே. டி. கே. தங்கமணி : இந்தத் திட்டம்பற்றி நீண்ட காலமாகப் பேசப்பட்டு இப்போதுதான் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நடப்பு ஆண்டிலாவது பணி துவங்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இந்தத் திட்டம் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. முதுகுளத்தூர் வட்டத்தில் ஏற்கனவே சில நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. அங்கிருக்கும் நிலைமைகள், மழை பெய்யும்

நன்மை ஆகியவற்றைப்பற்றி அதிகாரிகள் பரிசீலித்து, எகனமிக் ஸ்கீம் என்று தெரிவித்தால் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** அந்தப் பகுதியில் இருக்கும் நிலம் சரியில்லை என்ற காரணத்தால் அந்தப் பெயர் வைக்கப் பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். உண்மையிலேயே அந்தப் பகுதியில் இருக்கும் நிலங்கள் வளமான நிலங்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அங்கு தண்ணீர் கிடைக்காத காரணத்தால்தான் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது என்பதால், அதற்கு வேண்டிய தண்ணீரைக் கேரள மாநிலத்திலிருந்தாவது பெறுவதற்கான ஏற்பாட்டைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அவற்றை வளமான நிலமாக மாற்ற வேண்டுமென்பதற்காகத்தான் முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முதுகளத்தூர் பகுதியில் மழை குறைவாகப் பெய்வதாகவும் பொறியியல் துறையினர் அதுபற்றி ஆய்ந்து வருவதாகவும் சொன்னார்கள். மலட்டாறுக்கு வருகின்ற தண்ணீர் மதுரை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து கிருதுமால் நதி, பரலியாறு, குண்டாறு போன்றவற்றில் இருந்து வந்து தற்போது வீணாகக் கடலில் சென்று கலந்து கொண் டிருக்கும் காரணத்தால், அந்தத் தண்ணீரை விவசாயிகள் பயன் படுத்த முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, உடனடியாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முன்வந்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கு நீர்ப்பாசனத்திற்கு வசதி செய்து கொடுக்கப் படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** நான் முதுகளத்தூருக்குச் சமீபத்தில் வந்தபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதிகாரிகள் இதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்றக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்ற முடிவுக்கு வந்தால் நிச்சயமாக நிறைவேற்றி வைக்கப்படும்.





## மேட்டூர் உயர்மட்டக் கால்வாய்

*369 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூர் உயர்மட்டக் கால்வாயில் பாசன விஸ்தீர்ணத்தை அதிகரிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

## சுங்க வசூல்

* 370 வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் மாநிலத்தில் தற்போது எத்தனை பாலங்களில் டோல் வசூலிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தற்போது நான்கு பாலங்களில் சுங்கம் வசூலிக்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** நமது தமிழகத்தில் நிதிப் பற்றாக் குறை காரணமாகப் பல இடங்களில் கட்டப்பட வேண்டிய பெரிய பாலங்கள் கட்டப்படாமல் இருக்கின்றன. ஆகவே, எல்.ஐ.சி. போன்ற நிறுவனங்களிடமிருந்தோ அல்லது மத்திய அரசிடமோ கடனுகத் தொகைகளைப் பெற்று பாலங்களைக் கட்டி முடித்துவிட்டு அந்தக் கடன் அடைபடுகிற வகையில் டோல் வசூலிக்கும் நியதியை மேற்கொள்ள ஆவன செய்ய அரசு முன்வருமா ? கொள்ளிடம் பாலம் கட்டி பல ஆண்டுகள் ஆகியும் அங்கு இன்னும் சுங்கம் வசூலிப்பது ஏன் என்பது பற்றி அரசு பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இப்போது கட்டப்பட்டு வருகின்ற பாலங்களுக்கு சுங்கம் வசூலிப்பதில்லை. ஏற்கனவே கட்டப்பட்ட பாலங்களுக்குத்தான் சுங்கம் வசூலிக்கப் படுகிறது. கொள்ளிடம் பாலத்தைப் பொறுத்தவரை மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைப் பற்றிப் பரிசீலித்த பிறகுதான் முடிவு கூறமுடியும். தற்போது வசூலிக்கப்படுகின்ற அந்தப் பணத்தைப் பஞ்சாயத்து பெறுகிற காரணத்தால், இதன் காரண மாகப் பஞ்சாயத்துக்கு வருமானம் வரக்கூடிய நிலைமை இருப்ப தால் இதைப் பற்றிப் பரிசீலித்த பிறகுதான் அரசு முடிவுக்கு வரும்.

**திரு. நா. வெ. குருசாமி:** நான்கு பாலங்களுக்கு டோல் வசூலிக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவை எந்தெந்தப் பாலங்கள் ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சிதம்பரம்-சீர்காழி சாலையில் அணைக்காரன் சத்திரத்திற்குப் பக்கத்தில் கொள்ளிடம் பாலம். ஈரோட்டில் இருக்கும் பள்ளிப்பாளையம் காவேரி ஆற்றுப் பாலம். தென்னாற்காடு மாவட்டத்தில் பொன்னியாற்றில் கட்டப்பட்ட பாலம். வட ஆற்காடு மாவட்டத்தில் செய்யாறு பாலம்.

**திரு. அ. தேவேந்திரன் :** கொள்ளிடம் பாலத்தை அந்தப் பகுதியில் இருக்கும் ஊராட்சி ஒன்றியத்தினுடைய வருமானத்தைக் கருதி அவர்கள் எடுத்துக் கொள்ள கேட்டு அரசு அனுமதித்ததாகத் தெரிகிறது. ஏனைய பாலங்களைப் பொருத்த வரையும் ஊராட்சி ஒன்றியத்தின் நிதி நிலைமையைச் சரிக்கட்டும் வகையில் டோல் வசூலிக்கும் உரிமையை அவர்களுக்குத் தர அரசிடம் செயற்குறிப்பு உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** சுங்கம் வசூலிப்பதை ஏலத்தில் விடுகிறோம். ஏற்கெனவே ஏலத்திற்கு விட்டு அரசாங்கத்திற்கு வருமானம் வந்திருக்கிறது. சுங்கம் வசூலிக்கும் உரிமையைப் பஞ்சாயத்து யூனியனுக்குக் கொடுக்கும்போது கடந்த மூன்று ஆண்டு காலத்தில் வருமான அதிகமான தொகையை அரசுக்குச் செலுத்திவிட்டு அதற்கு அதிகமான தொகை வந்தால் பஞ்சாயத்து எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்படி பாலங்களுக்குச் சுங்க வரி வசூலிப்பது அதற்குச் செலவான பணம் வசூலாகும் வரையில் வசூலிக்கப்படுகிறதா அல்லது எவ்வளவு காலமானாலும் வசூலிக்கப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** அதுபற்றிக் குறிப்பு இல்லையென்றாலும், செலவை வசூலிக்கும் வரையில்தான் சுங்கம் வசூலிக்க வேண்டுமென்பது எண்ணம்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** இந்தச் சுங்கம் வசூலிப்பதில் எல்லாப் பாலங்களுக்கும் 24 மணி நேரம் கொடுக்கும்போது கொள்ளிடம் பாலத்தில் 12 மணி நேரந்தான் கொடுக்கப்படுகிறது. இதனால் காலையில் சுங்கம் செலுத்தி விட்டுப் போகிறவர்கள் இரவு





திரும்பும்போது மறுபடியும் சுங்கம் செலுத்தக்கூடிய நிலை, ஒரே நாளில் இருமுறை செலுத்தக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, இங்கும் 24 மணி நேரம் என்று டைம் கொடுத்து சுங்கம் வசூலிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** எல்லாப் பாலங்களுக்கும் 24 மணி நேரத்திற்குத்தான் சுங்கம் வசூலிக்கப்படுகிறது. அப்படி ஏதாவது குறைபாடு இருக்குமானால், எழுதி அனுப்பினால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. என். இராஜாங்கம் :** பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறிய 4 பாலங்கள் எந்தெந்த ஆண்டில் கட்டப்பட்டனர் ? எந்த அடிப்படையில் அங்கு சுங்கம் வசூலிக்கப்படுகிறது ? அப்படிக் கட்டுவதற்கு அப்போது மதிப்பீடு தொகை எவ்வளவு ? எந்தக் காரணத்தால் அது வசூலிக்கப்படுகிறது என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** 1965-ம் ஆண்டுக்கு முன்பு ஒரு பாலம் கட்டுவதற்கு மதிப்பு ரூ. 5 லட்சம் வரை இருக்குமானால் மலைப் பாதைகளுக்குச் சாலை அமைப்பதற்கு சுங்க வரி வசூலிக்கலாம் என்ற கொள்கையிருந்தது. அதற்குப் பிறகு 1965-ம் ஆண்டுக்குப் பிறகு பல வேலைகளுக்கு ரூ. 10 லட்சம் வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. மலைப்பகுதி சாலைகளுக்குச் சுங்கம் வசூலிக்கவேண்டாம், தேசிய நெடுஞ்சாலையைப் பொறுத்தும் வசூலிக்க வேண்டாம் என்று முடிவு செய்யப்பட்டது. எந்த ஆண்டு கட்டப்பட்டது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. தஞ்சாவூரில் இருக்கும் கொள்ளிடம் பாலத்திற்கு ஆன செலவு ரூ. 35 லட்சம். கோவையில் இருக்கும் பள்ளிப்பாளையம் பாலத்திற்கான செலவு ரூ. 13.22 லட்சம். தென்னாற்காட்டில் இருக்கும் பொன்னியாற்றிலிருக்கும் பாலத்திற்கான செலவு ரூ. 14.88 லட்சம். வடாற்காட்டில் இருக்கும் செய்யாற்றுப் பாலத்திற்கான செலவு ரூ. 14.04 லட்சம்.

### கோவை மாவட்டத்துக்கு அனல் மின் நிலையம்

* 371 வினா—**திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் அனல் மின்விசை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், எந்த ஆண்டு அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்கிறபோது ' இல்லை ' என்று சொன்னார்கள். இப்போது நம் அரசாங்கம் எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் அளிப்பது, நிறைய மின்சார பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது என்ற முறையில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தாலும், புதிய தொழிற்சாலைகள் மின்சாரம் வேண்டுமென்று கேட்கிற காரணத்தாலும், எல்லா ஹைட்ரோ ஸ்கீம்களையும்--தண்ணீரைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தி செய்து விட்டபடியாலும், இப்படிப்பட்ட தெர்மல் ஸ்டேஷன்களை கோயம்புத்தூரில் இல்லாவிட்டாலும், தமிழ்நாட்டில் எதிர்காலத்தில் மின்சாரம் தயாரிப்பதற்கான வகையில் நிறைய தெர்மல் ஸ்டேஷன்களை அமைக்க அரசு திட்டங்களை ஏற்படுத்தி செயல்பட முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, நிறைய அனல் மின்சார உற்பத்திக்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவரவர்களே, அனல் மின்சார அமைப்புகள் மிகவும் சக்திவாய்ந்த இயந்திரங்களால் இயங்கப்படுவதாக அறிகிறோம். எண்ணூரில் இருக்கும் அனல் மின்சார நிலையத்தை இந்தச் சட்டமன்றத் தொடரில் சட்டமன்ற உறுப்பினர்கள் போய்ப் பார்க்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : எப்போதும் போய்ப் பார்க்கலாம்.

## இரவு நேரப் பேருந்துப் பணிகள்

*372 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் நள்ளிரவு பஸ்கள் எந்தெந்த ரூட்டுகளில் விடப்படுகின்றன ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பல்லவா போக்குவரத்துக் கழகத்தின் 15 பேருந்துகள் இரவு நேரங்களில் கீழ்க்கண்ட 13 வழித்தடங்களில் செல்கின்றன :—

- தங்கசாலை—எண்ணூர் ;
- பிராட்வே—அம்பத்தூர் தொழிற்பேட்டை ;
- தங்கசாலை—டன்லப் ;
- திருவல்லிக்கேணி—இ. பெ. தொழிற்சாலை ;
- இ. பெ. தொழிற்சாலை—பாரிமுனை ;
- உயர்நீதிமன்றம்—டன்லப் ;
- டன்லப்—விவேகானந்தர் இல்லம் ;
- சுங்கச் சாவடி—திருவல்லிக்கேணி ;
- மூலக்கடை—திருவல்லிக்கேணி ;
- மூலக்கடை—அண்ணாசாலை ;
- திரு. வி. க. நகர்—விவேகானந்தர் இல்லம் ;
- அண்ணாசாலை—அடையாறு ;
- அண்ணா சாலை—சைதாப்பேட்டை.

* 373 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether the night Decker Bus going from Madras to Tiruchirappalli met with an accident on 22nd August 1971; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) 22—8—1971-ல் சென்னையிலிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் செல்லும் இரண்டடுக்குப் பேருந்து மாமண்டூரைக் கடந்து 65/2 கிலோ மீட்டர் கல்லுக்கும் 65/4 கிலோ மீட்டர் கல்லுக்கும் இடையில் சென்று கொண்டிருந்தபோது சென்னையை நோக்கி எதிர்த் திசையில் வந்து கொண்டிருந்த தனியார் லாரி ஒன்றின் வலப் பக்கத்தில் மோதியது. அப்போது மழை தூறிக்கொண்டிருந்தது. எதிரே பொருட்கள் மங்கலாகத் தெரிந்தன. அன்றியும் இரு சைக்கிள் வண்டிக்காரர்கள் பேருந்துக்கு முந்திச் சென்று கொண்டிருந்தனர். விபத்து நேரிடுவதைத் தவிர்ப்பதற்காக அரசு போக்குவரத்து அலுவலர் மிகவும் வலப்பக்க

ஓரத்திற்கு வண்டியைத் திருப்பினார். இதனால் லாரியுடன் மோதல் ஏற்பட்டது. இந்த விபத்தில் அரசுப் பேருந்தில் எவரும் காயமுற வில்லை.

**திரு கே. டி. கே. தங்கமணி** : சார், அந்தக் குறிப்பிட்ட விபத்து நடந்த சமயத்தில் சாமர்த்தியமாக டிரைவர் வண்டியைத் திருப்பிய காரணத்தால்—அந்த லாரி டிரைவர் வெகு வேகமாக வண்டியை ஓட்டிய காரணத்தால்—சேதம் கம்மியாக ஆகியிருக்கிறது, என்பதை அரசு அறியுமா? அந்த பஸ்ஸிலே இருந்த பிரயாணிகளில் நானும் ஒருவன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

Mr. SPEAKER : We are happy.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதிலே இருந்த காரணத்தால் எல்லா விவரங்களையும் அறிவார்கள். அது சம்பந்தமாக வழக்கு தொடரப்பட்டு அந்த வலவருக்கு ரூ. 75 அபராதம் விதிக்கப்பட்டு இருக்கிறது. அரசும் அவர் மீது நடவடிக்கை எடுத்து இருக் கிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : அப்படி திறமையாக ஓட்டி, பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றிய அந்த டிரைவருக்கு ஏதாவது சன்மானம் வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவரவர்களே, அந்தத் தகவல் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவரவர்களே, இப்படி அரசாங்க பஸ்களிலே ஆக்சிடெண்ட்கள் நடப்பதற்கு யார் அதிகமாகக் காரணமாக இருக்கிறார்கள் என்பதை ஆராய குழு அமைக்கப் படுமா? சமீபத்தில் ஆரணியில் இரண்டு பஸ்கள் மோதி ஆக்சி டெண்ட் ஏற்பட்டு இருக்கிறது. பல காரணங்களால் விபத்துகள் ஏற்படுகின்றன. இவற்றை ஆராய ஒரு நிபுணர் குழு அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : விபத்துக்கள் குறை வதைத்தான் இந்த அரசு விரும்புகிறது. அதைக் குறைப் பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்பது பற்றியும் அரசு அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, அது சம்பந்தமாக தீவிரமான முடிவுகள் மேற்கொள்ள வேண்டுமென்று



இருக்கிறோம். ஏனென்றால் இது வரையில் விபத்துகள் குறைந்து இருந்தது, திடீரென்று பிப்ரவரி மாதத்தில் அதிகமாகியிருக்கிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அரசாங்கம் இப்படி விபத்துகள் நேரிடுவதைத் தவிர்ப்பதற்காக வேண்டிய எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, அந்த டிரைவரின் திறமை நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். நீதிமன்றத்தில் நிரூபிக்கப்படவில்லை என்று சொன் னாலும், அந்த இடத்திலேயே இருந்த சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தங்கமணி அவர்கள் எடுத் துக்கூறியதைக் கருத்தில் கொண்டாவது, அந்த ஓட்டுநருக்கு பரிசு வழங்க அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்** : தலைவரவர்களே, ஓட்டு நருக்குப் பரிசு வழங்காவிட்டாலும். அவரைப் பதவியை விட்டு நீக்கிவிடாமல் இருப்பதே பெரிய பரிசாக இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின் பேரில் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

*Ghee produced at Madhavaram Milk Project*

* 374. *Q.*—Thiru A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) the quantity of ghee produced at Madhavaram Milk Project for the period 1970–71; and

(*b*) the steps taken to dispose them?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** : (அ) 1969-70—23,238.240 கி.கி 1970-71—24,525.685 கி.கி.

(இ) சென்னை மாநகரில் மண்டல அலுவலகங்கள், பால் டிப் போக்கள் ஆகியவற்றின் மூலம் நெய் விற்கப்பட்டுள்ளது.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவரவர்களே, அரசாங்க நெய்யை நானும் வாங்கிப் பார்த்தேன். பக்குவமாக அது காய்ச்சப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியும். அதை வாங்கி

மறுபடியும் ஒரு முறை நாம் காய்ச்சவேண்டியிருக்கிறது. விற்பவர்களே சொல்கிறார்கள் நீங்கள் அதை ஒரு முறை உருக்கித் தான் பயன்படுத்தவேண்டுமென்று. we must again boil it, நெய்யை நாம் மறுபடியும் உருக்கித்தான் பயன்படுத்தவேண்டியிருக்கிறது. உடனே நெய்யை உபயோகிக்க வேண்டுமானால், அதை நல்ல பக்குவமாக உருக்கி, மற்ற கடைகளில் விற்பது மாதிரி செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, நெய்யை குறைவாகவும் காய்ச்சக்கூடாது. அதிகமாகவும் காய்ச்சக் கூடாது. பக்குவமாகக் காய்ச்ச வேண்டும். அந்த அடிப்படையில்தான் காய்ச்சி நெய்யை விநியோகம் செய்கிறோம். அப்படி ஏதாவது குறைபாடு இருக்குமானால், அதைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவரவர்களே, மாதவரம் பண்ணை போன்று, மதுரையில் இருக்கும் பால் பண்ணையிலும் நெய் விற்பனை செய்யும் நிலையங்கள் ஏதாவது மதுரை டவுனில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, அது பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை.

**திரு. தொ. ப. சீனிவாசன் :** தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணைக்கு அதிகப் பால் தேவைப்படுகிற திட்டத்தின் அடிப்படையில் வட ஆற்காடு மாவட்டத்தில் போளூர், களம்பூர் கிராமங்களில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து பாலைப் பெற்றுத்தருகிறார்கள். அப்படி ஏராளமான பாலை உற்பத்தி செய்வதற்காக கிராமங்களில் மாடுகளை வாங்கி பாலை உற்பத்திசெய்கிறார்கள். ஒரு நாளைக்கு 1,500 லிட்டர் பால் வாங்குகிறார்கள் என்று சொன்னால், திடீரென்று 500 லிட்டர் பாலைக் குறைத்து விடுகிறார்கள். இதனால் அந்த 500 லிட்டர் பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வீணாகிற நிலைமையேற்படுகிறது. அந்த நிலைமையை மாற்ற கிராமத்திலிருந்து கிடைக்கும் எல்லாப் பாலையும் எடுத்துக்கொள்வதற்கு அரசாங்கம் வழிவகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்** தலைவரவர்களே, பால் உற்பத்தியைத் தீவிரப்படுத்தவேண்டுமென்பதில் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தி வருகிறது. அதற்காக கிராமப்புறங்களில் இருக்கிறவர்களுக்கு கடன் வசதி தருகிறது. மாடுகள் வாங்கிக்கொடுப்



பதற்கும், மாடுகளை வளர்ப்பதற்கும் நாம் தீவிரமாக முயற்சி எடுத்து வருகிறோம். ஆனால் பாலைத் திரட்டி மாதவரம் பால் பண்ணைக்கு வேண்டுமென்று, கூட்டுறவுச்சங்கங்களைக் கேட்கிற நேரத்தில், அதிகமான பால் கிடைக்கிற நேரத்தில், விலை வெளியே குறைவாக இருக்கிற நேரத்தில் பால் தாராளமாகக் கிடைக்கிறது. ஆனால் வெளியே விலை அதிகமாக இருக்கிற நேரத்தில், அதிகமான விலைக்கு வெளியே விற்றுக்கொண்டு, மாதவரம் பண்ணைக்குப் பால் கொடுக்காமல் இருந்து விடுகிறார்கள். அப்படி இருக்கிற காரணத்தால்தான் அரசாங்கம் இவ்வளவு பால் கொடுக்கவேண்டுமென்று நிர்ணயித்து இருக்கிறது. அப்படி அதிகமாகப் பால் கிடைக்கிற நேரத்தில் அதைப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே. இவைகளைப் பரிசீலித்து ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கமும் இந்த அளவுக்குத் தான் பால் விநியோகம் செய்யவேண்டுமென்று இப்போது நாம் உருவாக்கியிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மூலக்கேள்வி நெய்யைப் பற்றியது. அதனால் துணைக் கேள்விகளும் நெய்யைப் பற்றியதாகவே இருக்கவேண்டும். சில உறுப்பினர்கள் பாலைப் பற்றி கேட்கிறார்கள். மேலும் பல உறுப்பினர்கள் கேள்விகள் கேட்க விரும்புகிறார்கள். நெய்யைப்பற்றிய துணைக் கேள்விதான் அனுமதிக்கப்படும்.

**திரு. ம. மோசஸ் :** தலைவரவர்களே, நெய்யைப் பக்குமாகக் காய்ச்சுவதற்குத் தாய்மார்களுக்குத்தான் தெரியும். ஆகவே, மாதவரம் பால் பண்ணையில் நெய்யைக் காய்ச்சுவதற்கு தாய்மார்களை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையில் இயந்திரங்கள் மூலம் தான் நெய் காய்ச்சப்படுகிறது. அதனால் அங்கே தாய்மார்களை நியமிக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இப்போது மாதவரம் பால் பண்ணையில், நெய் விற்பனையில் லாபம் வருகிறதா அல்லது நஷ்டம் வருகிறதா என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, லாபமா அல்லது நஷ்டமா என்ற விபரம் தற்போது என்னிடம் இல்லை. 1967-68-லும், 1970-71-லும் சுமார் 4 லட்சம் ரூபாய் பெறுமானமுள்ள நெய் விற்பனைச் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, மாதவரம் பால் பண்ணையில் உற்பத்தியாகும் நெய் வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்புவது இல்லை. சென்னையிலுள்ள பால் டிப்போக்கள் மூலமாகவே விற்பனைச் செய்யப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சென்னையில் எங்கு பார்த்தாலும் 'மாயவரம் வெண்ணெய், மாயவரம் வெண்ணெய்' என்ற உயர்ந்த ரக வெண்ணெய் விற்கப்பட்டு வருகிறதே. அதே மாதிரியான உயர்ந்த ரக வெண்ணெய் மாதவரம் பால் பண்ணையிலும் உற்பத்தி செய்யப்படுகிறதா என்ற விபரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மாயவரம் வெண்ணெயைப் பற்றித் தகவல் இல்லை. ஆனால் மாதவரம் நெய் நல்ல முறையில்தான் உற்பத்திச் செய்யப்படுகிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, உருக்கிய நெய்யை மீண்டும் உருக்கினால் ஊழ நாற்றம் தான் அடிக்கும் என்று சொல்வார்கள். ஆனால் அம்மையார் (திருமதி த. ந. அனந்தநாயகி) உருக்கிய நெய்யை மீண்டும் உருக்கினால்தான் நன்றாக இருக்கிறது என்று சொன்னார்கள். அந்த விபரத்தை எங்களுக்கும் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அம்மையார் அவர்கள் அமைச்சரல்ல பதில் சொல்வதற்கு.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார். இப்போது மாதவரம் பால் பண்ணையில் விற்பனைச் செய்யப்படும் நெய் 'சீல்டு பாட்டிலில்' இல்லை. சீல்டு பாட்டிலில் வைத்துக் கொடுத்தால் அடல்டிரேஷன் இல்லாமல் சுத்தமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இப்போது சுகாதார முறையில் பக்குவப்படுத்தி, சுத்தமாகத்தான் விநியோகம் செய்யப்படுகிறது. ஆகவே, சீல்டு பாட்டிலில் வைத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமா என்பதைப் பரிசீலிக்கலாம்.

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, உதகையில் தோதவர்கள் காய்ச்சும் நெய் மிகவும் பிரசித்தமானது என்று சொல்லப்படுகிறதே. அதைப்பற்றி அரசாங்கம் ஆராய்ச்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அதைப் பற்றிய தகவல் எனக்குத் தெரியாது.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவரவர்களே, நம்முடைய மாதவரம் பால் பண்ணையில் கிடைக்கும் நெய் சென்னை நகரில் மட்டும் விற்பனைச் செய்யப்படுகிறதா அல்லது மற்ற மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகிறதா என்ற விவரத்தை அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : சென்னை நகரில் மட்டும் தான் விற்பனைச் செய்யப்படுகிறது.

## தியாகராயநகரிலுள்ள சிவா-விஷ்ணு கோயில்

* 375 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தியாகராயநகரில் உள்ள சிவா-விஷ்ணு ஆலயம் இந்து அறநிலைய போர்டு நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த சிவா-விஷ்ணு ஆலயத்தின் சொத்தின் மதிப்பு என்ன ? அங்கு டிரஸ்டிகளாக யார் யார் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ? கோவில் நிர்வாகப் பொறுப்பில் அகில் திராவிடர்கள் அல்லது பார்ப்பனர் அல்லாதவர்கள் இருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்* : தலைவரவர்களே, இந்தக் கோவிலைச் சேர்ந்த சொத்தின் மதிப்பு விபரம் என்னிடம் இல்லை. ஆனால் ஆண்டு வருமானம்—இந்த ஆண்டு வருமானம் ரூ. 19,604. இந்தக் கோவிலுக்கு அறங்காவலர்கள் யாரும் நியமிக்கப்படவில்லை. சன்மார்க்க சம்வர்த்தினி சபையினர் பரம்பரையாக இந்தக் கோவில் நிர்வாகத்தைக் கவனித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. தற்சமயம் அவர்கள் தான் அறங்காவலர்களாக இருக்கிறார்கள்.

*திருமதி த. ந. அனந்தநாயகி* : தலைவரவர்களே, சென்னையிலே இன்னும் பல கோவில்களுக்கு அறங்காவலர்கள் நியமிக்கப்படவில்லை. பைராகி மடம் என்ற ஒரு பெரிய கோவில் இருக்கிறது. அங்கே இரண்டு வருடங்களுக்கு மேலாக டிரஸ்டிகள் நியமிக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக அந்தக் கோவிலுக்கு டிரஸ்டிகளை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்* : தலைவரவர்களே, ஆண்டு கணக்கில் எந்தக் கோவிலிலும் அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் இல்லை. சில கோவில்கள் சம்பந்தமாக வழக்குகள் நீதி மன்றத்தில் இருப்பதினாலோ அல்லது வேறு சில தகராறுகளினாலோ அறங்காவலர்கள் நியமிக்கப்படாமல் இருக்கலாம். ஆனால் அம்மையார் அவர்கள் குறிப்பிடும் கோவிலில் அறங்காவலர்கள் நியமிக்கப்படவில்லை என்ற தகவல் தற்போது என்னிடம் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (3) அறிவிப்பு

### பேரவை அலுவல் குறித்து

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* : சட்டப் பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி விவரமும், 1972–73-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பிற்காக ஒதுக்கப்பட்ட நாட்களின் விபரமும் ஏற்கெனவே உறுப்பினர்களுக்கு அச்சிட்டு அனுப்பியுள்ளவாறு நடைபெறும்.



## (4) அறிக்கை அளித்தல்.

### அரசு உறுதி மொழிக்கு பின் இரண்டாவது அறிக்கை.

THIRU MANALI C. KANDASWAMY : Mr. Speaker, Sir, I place on the Table of the House the Second Report (Fifth Assembly) of the Committee on Government Assurances. I take this opportunity, as outgoing Chairman of the Committee, to thank all the Members and the staff who assisted me, through you.

## (5) 1972-73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

***திரு. ஏ. ஆர். மாரிமுத்து** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் முன் வந்துள்ளேன்.

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 20 கோடி ரூபாய் சர்க்காருடைய வருவாய் அதிகரித்திருக்கிறது. இந்த வருவாய் அதிகரிப்பின் மூலம் இரண்டரைக் கோடி ரூபாய் உபரி தரக்கூடிய ஒரு நிதிநிலை அறிக்கையை இங்கு முதலமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ளார்கள். மொத்தமாக 'ஓவர் ஆல் பட்ஜெட்' என்ற முறையிலே இந்த பட்ஜெட்டைப் பார்த்தால் 55 லட்சம் ரூபாய் இறுதி கையிருப்புப்படி இந்த நிதிநிலை அறிக்கை முடிந்திருக்கிறது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பூராவாகப் பரிசீலனை செய்து பார்க்கின்றபோது, சென்ற ஆண்டு எந்த அளவுக்கு மக்களின் நலனுக்கும், மேம்பாட்டுக்கும் தொகை ஒதுக்கியிருக்கிறோமோ, அந்த அளவுக்கு இந்த ஆண்டு தொகை ஒதுக்கப்படவில்லை என்பது இந்த அறிக்கையிலிருந்து தெரிகிறது.

20 கோடி ரூபாய் அதிகமாக வருவாய் வந்தும், சென்ற ஆண்டைவிட குறைவாகத்தான் செலவு இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை நாம் ஆராயக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த அறிக்கையை நாம் பூராவாகப் பார்க்கின்றபோது சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 28 கோடி ரூபாய் மத்திய சர்க்காருடைய கடனுக்காக சிங்கிங் பண்டில் செலவு எழுதப்பட்டிருக்கிறது. இதுநாள் வரையில் மத்திய சர்க்காருடைய கடனுக்காக சிங்கிங் பண்டில் தொகை ஒதுக்கப்பட்டது

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 8

கிடையாது. டிப்பிரிசியேஷன் பண்டு என்ற வகையில் 1½ சதவிகிதம் சர்க்காரால் வாங்கக்கூடிய கடன்கள் எல்லாவற்றுக்குமாக ஒதுக்குவது போக மக்களிடம் இருந்து வாங்கக்கூடிய கடனுக்குத்தான் சிங்கிங் பண்டு போடப்பட்டு வந்தது. அதிலே ரிசர்வ் பாங்க ஆலோசனைப்படி இந்த 1½ சதவிகிதம் டெப்ரிசியேஷன் கூட ஒதுக்க வேண்டியதில்லை என்று சொன்ன காரணத்தினால் அதுவும் விடப்பட்டுள்ளது. சிங்கிங் பண்டு என்பதாக ஒரே ஆண்டில் 28 கோடி ஒதுக்க வேண்டிய அவசியம் என்ன ? அதைக் கொஞ்சம் கொஞ்சமாக ஒதுக்கியிருக்கலாமே. இப்படி ஒரே ஆண்டில் ஒதுக்கிய காரணத்தினால் மக்கள் வளவாழ்வுக்கான திட்டங்களுக்கு நிதி ஒதுக்க முடியாது போகவில்லையா ? இப்படி ஒதுக்கத்தான் வேண்டும் என்பதாக ரிசர்வ் பாங்க் ஆலோசனை கூறியதா ? அதுபற்றிய விவரம் எதுவும் இல்லாத காரணத்தினால் அமைச்சர் அவர்கள் அதைத் தெளிவுபடுத்த வேண்டும். முடியுமானால் சிங்கிங் பண்டு என்பதற்கு 10 கோடி அல்லது 14 கோடி இவ்வாண்டு ஒதுக்கிவிட்டு பாக்கித் தொகையை வேறு பல அபிவிருத்தித் திட்டங்களுக்குச் செலவிட முடியாதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிதிநிலை அறிக்கை முடிந்துவிடவில்லை. இப்போதுதான் அதைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். ஆகவே இதில் தொகையைக் குறைத்து வேறு வகையில் செலவு செய்வதற்கு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொன்றை நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். சென்ற ஆண்டு மூலதனத்துறையில் செலவுக்கு 90 கோடி போட்டிருக்கிறோம். ஆனால் இந்த ஆண்டு ரூ. 82 கோடிதான் போட்டிருக்கிறோம். இப்படி மூலதனத்துறையில் செலவிட்ட அளவிலும், ரூ. 8 கோடி குறைந்திருக்கிறது.

அடுத்து, அசெட்ஸ் அண்டு லயபிலிட்டீஸ் பற்றிப் பார்க்கிறபோது நெட்டாக 42 கோடி ரூபாய் அதிகமாகியிருக்கிறது. ரொக்க வசதி அசெட்ஸ் மட்டும் 22 கோடி ரூபாயாக இருக்கிறது. நிகர பாரோயிங் கப்பாசிடி ஏழேமுக்கால் கோடி ரூபாய் அதிகரித்திருக்கிறது. ஆக இந்த ஆண்டு கடன் குறைவாக வாங்கி உள்ளோம். ஆகவேதான் குறைந்த பட்சம் இன்றும் 15 கோடி ரூபாய் மூலதனத்தையாவது மக்களுடைய நன்மைக்காக நாம்



1972 மார்ச் 8] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

செலவிடுவதில் கூட்டியிருக்கலாம். மக்களுடைய தேவை எல்லாம் பூர்த்தியாகிவிட்டது என்று இல்லை. இன்னும் எத்தனையோ தேவைகள் இருக்கின்றன. ஆகவே, இன்னும் ஒரு 15 கோடி ரூபாயாவது மக்களுடைய நன்மைக்காகச் செலவிடுவதற்குத் திட்டமிட இந்த அரசாங்கம் முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சுகாதாரத்தை எடுத்துக்கொண்டால் ஆஸ்பத்திரிகளுக்கு ஆகும் செலவைவிட கம்மியாகத்தான் சுகாதாரத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. நோய் வந்த பிறகு சிகிச்சை செய்வதைவிட நோய் வாராமலேயே நம் நாட்டு மக்களைக் காப்பாற்ற நாம் கவனம் செலுத்த வேண்டும். ஒரு குடும்பத்தில் 5 பேர்கள் இருந்தால் 3 பேர்கள் நோயாளிகள் என்கிறபோது நாட்டின் எதிர்காலம் என்ன ? மக்களுடைய உழைப்புச் சக்தி எப்படி விரயமாகிறது என்பதை நாம் சிந்திக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, நோய் வாராமல் நோய்த்தடுப்புக்காகச் சுகாதாரத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கி, நல்ல பல பணிகள் செய்யப்படவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரொம்ப நாளாக இருக்கக் கூடிய பிரச்சினை— கவர்ன்மெண்டு கமர்ஷியல் அண்டர்டேக்கிங்ஸ். இதன்கீழ் வருடா வருடம் தொடர்ந்து நஷ்டத்தில்தான் போகிறது. சென்ற வருஷம் 11 கோடி நஷ்டம். இந்த ஆண்டு 10 கோடி நஷ்டம், இந்த 10 கோடிக்குக் கீழே போனது கிடையாது. இதைத் தடுத்து கவர்ன்மெண்டு அண்டர்டேக்கிங்ஸ் கொஞ்சமாவது லாபகரமானதாக இயங்க ஏதாவது செய்ய முடியாதா என்பதைச் சிந்திக்க வேண்டும். இந்த ரூ. 10 கோடி நஷ்டம் என்பது அச்சகம், காடு வளர்ப்பு எல்லாவற்றையும் சேர்த்த மொத்த நட்டம். வெளி மாநிலங்களோடு ஒப்பிடுகிறபோது நமக்கு அதிகமான காடுகள் இல்லை என்றாலும் நம்முடைய காடுகளின் மண்வளம் மிகவும் சிறப்பானதாகும். இவற்றில் கொய்னா பயிரிடுகிறார்கள். யுகலிப்டெஸ் பயிரிடுகிறார்கள். இது அவசியம்தானா ? மழை வேண்டும் என்பதற்கு மரம் பயிரிடவேண்டுமென்றால் நல்ல பலன் தரக்கூடிய தென்னை போன்ற மரங்களை வளர்க்கலாம். நாம் காட்டுக்காக 4 கோடி செலவழிக்கிறோம் என்றால் ஒரு கோடிகூட நிகர வருமானம் இப்போது கிடைப்பதில்லை பரீட்சார்த்தமாகவாவது சில பகுதிகளில் தென்னை போன்ற மரங்களை

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 8

வளர்த்தால் ஐயாயிரம் குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய் வருவாய் கிடைக்கக்கூடிய அளவில் அவற்றின் மூலம் வருமானம் கிடைக்கும். இப்படி மக்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுவதோடு, அரசாங்கத்திற்கும் வருமானம் கிடைக்க வழி யேற்படும். அதையும் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நாம் கவனிக்க வேண்டியது படித்து வேலையில்லாதவர்களது நிலைமையைப் பற்றியதாகும். சென்ற ஆண்டு முதல்வர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கையில் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். இந்த ஆண்டு அவர்களுக்கு ஒன்றும் செய்யப்படவில்லை. இன்றைக்கு எஸ்.எஸ்.எல்.சி., பி.யு.சி., பி.ஏ., படித்தவர்கள் எல்லாம் ஒரு ப்யூன் வேலையாவது வாங்கித் தாருங்கள் என்று எங்களிடம் வந்து கேட்கிற அவல நிலையைப் பார்க்கிறபோது மிகவும் வருத்தமாக உள்ளது. படித்தவர்களிடம் மட்டும் இந்த வேலையில்லாத் திண்டாட்டம் நிலவுவதாகச் சொல்லவில்லை. கைத்தறி நெசவாளர்களை எடுத்துக்கொள்ளுங்கள். சொசைடிகள் சரியாக இயங்கவில்லை, நூல் கிடைக்கவில்லை, வேலை செய்ய முடியவில்லை என்று கூறுகிறார்கள். தேங்கிக் கிடக்கக்கூடிய கைத்தறித்துணிகள் அனைத்தையும் அரசாங்கம் கொள்முதல் செய்து தொடர்ந்து நெசவாளர்களுக்கு மேற்கொண்டு வேலை கிடைக்கும்படியான சூழ்நிலையை ஏற்படுத்தித்தரவேண்டும்.

அடுத்து, உணவு உற்பத்தி அதிகமாகப் பெருகியிருக்கிறது. அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. ஆட்சேபனை கிடையாது. நிதர்சனமாகப் பார்க்கிறோம். ஆனால் விலைவாசி குறையவில்லை. இதற்கு என்ன காரணம் என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். நெல் பயிர் செய்கிறவர்களுக்கும் அதிகமாகச் செலவாகிறது. அவர்களுடைய பண்டத்திற்குச் சரியான விலை கிடைப்பதில்லை. இப்படி விவசாயம் செய்கிறவர்களுக்கு ஆதாயம் இல்லை. வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும் லாபம் இல்லை. இடையில் இருக்கிறவர்கள்தான் லாபத்தை அடைந்துகொண்டே போகிறார்கள். ஆகவே, இதுபற்றி அரசாங்கம் நன்கு பரிசீலித்து இரண்டாம் ரகம் புழுங்கல் அரிசி லிட்டர் 75 பைசாவுக்கு அதிகம் போகாது மக்களுக்குக் கிடைக்க ஏற்பாடு செய்தாகவேண்டும். இப்பொழுது உயர்ந்த ரக அரிசி ஒரு லிட்டர் ஒரு ரூபாய்க்கு மேல் இருக்கக்கூடாது. என்னுடைய கருத்து என்னவென்றால், தானிய



1972 மார்ச் 8] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

வியாபாரம் பூராவும் அரசாங்கம்தான் ஏற்று நடத்த வேண்டுமென்பது. அரசாங்கத்தினுடைய நிலைமை இதைக்குறித்து என்ன என்பது எனக்குத் தெரியாது. அப்படி அரசாங்கம் ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலைமைக்கு வழிவகை செய்ய வேண்டும். சாதாரண மக்கள், குறைந்த சம்பளம் வாங்குபவர்கள், மத்தியதர வர்க்கத்தினர் எல்லாம் இந்த விலையேற்றத்தினால் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். நல்ல ரக பச்சரிசி, இரண்டு லிட்டர் அரிசி 3 ரூபாய் என்று விற்கிறது. ஒரு லிட்டர் அரிசிக்கு 1½ ரூபாய் என்று கொடுத்தால் இவர்களுடைய வாழ்க்கை நிலை என்ன ஆகும்? இவர்கள் தங்களுடைய வாழ்க்கையைச் சிரமமின்றி நடத்த முடியுமா? இதையெல்லாம் அரசாங்கம் பரிசிலனை செய்ய வேண்டும். அரிசியைக் குறைந்த விலையில் கொடுக்க அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கமே தானிய வியாபாரத்தை மேற்கொள்வதன்மூலமாகத்தான் இதைச் செய்ய முடியும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பசுமைப்புரட்சியைப்பற்றிச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இது நல்ல திட்டம். பசுமைப் புரட்சிக்காக நாம் நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவழித்துக் கொண்டிருக்கிறோம். இந்தப் பசுமைப் புரட்சித் திட்டத்தினால் கிடைக்கக்கூடிய பலன் விவசாயத்திலே ஈடுபட்டிருக்கிற அத்தனை மக்களுக்கும் கிடைத்திருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். விவசாயத் தொழிலில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கும் இந்தத் திட்டத்தின் பலன் கிடைக்கவேண்டும். அவர்களுக்கும் அதில் பங்கு இருக்க வேண்டும். தேசத்தின் பொருளாதாரம் எல்லா மக்களுக்கும் சமமாகக் கிடைக்கின்ற அளவிலே வழங்கச் செய்வதுதான் சோஷலிச அரசாங்கத்தின் லட்சியமாகும். பசுமைப்புரட்சித் திட்டத்தினால் பெரும் நிலச் சொந்தக்காரர்களுக்குத்தான் அதிகப் பலன் கிடைத்திருக்கிறதே தவிர, சிறு விவசாயிகள், நிலத்தில் பாடுபடுகின்ற தொழிலாளர்கள் போன்றோருக்கு அதிகம் கிடைக்கவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பசுமைப்புரட்சித் திட்டத்தின் பலனை ஆராய்வதற்காக 'எவால்யுவேஷன் கமிட்டி ஒன்றைப் போட்டு பலன் எப்படிப் பிரிந்திருக்கிறது என்பதை ஆராய வேண்டும். இந்த சபைக் கூட்டத்திலேயே

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 8

எவால்யுவேஷன் கமிட்டியைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காங்கிரசார் ஆட்சி செய்த காலத்தில், நேருஜீ பிரதமராக இருந்த காலத்தில் பெரிய பெரிய திட்டங்களைப் போட்டார்கள். அவர்கள் கருதியதெல்லாம், நாட்டில் உற்பத்தியாகின்ற செல்வம் எல்லாம் எல்லா மக்களுக்கும் கிடைக்கும் என்பதுதான். மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டதற்குப் பின்னால், ஒரு கமிட்டியை வைத்துப் பரிசிலனை செய்வதில். திட்டத்தின் பலன்கள் எல்லாம் நாட்டில் உள்ள ஒரு சிலருடைய கைகளில்தான் போய்ச் சேர்ந்திருக்கிறது என்பது தெரிய வந்தது. ஆகவே, பசுமைப் புரட்சித் திட்டத்தின் பலனைப்பற்றி அறிந்து கொள்வதற்கும் ஒரு கமிட்டி அமைப்பது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, நமது முதலமைச்சர் அவர்கள் நாட்டு மக்களுக்கு நாங்கள் எத்தனையோ காரியங்களைச் செய்திருக்கிறோம் என்று பதினைந்துக்கு மேற்பட்ட திட்டங்களைப்பற்றி அவருடைய நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அந்தத் திட்டங்களின் பலன், இதுவரையில் இயற்றிய சட்டங்கள் சரியாக இயங்கி அதன் பலன்கள் எல்லாம் எல்லோருக்கும் ஒழுங்காகக் கிடைத்திருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டும். அதற்காகவும் ஒரு எவால்வேஷன் கமிட்டியைப் போட்டு, பரிசீலனை செய்தால், சர்க்கார் எடுத்துக்கொண்ட முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றுகிற பலன் யாருக்குக் கிடைக்க வேண்டுமென்று எண்ணுகிறோமோ அவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்பது தெரியவரும், இந்த ஐந்து ஆண்டுகளுக்குள் என்ன நடந்தது என்பதைப் பரிசீலனை செய்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது மிகமிக முக்கியமானது. அதன்மூலம் கிடைக்கின்ற அனுகூலத்தை வைத்துக்கொண்டு, மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப் பயனுள்ளதாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயம் சம்பந்தமாக நாம் கோடிக் கணக்கான ரூபாய்களைச் செலவழித்தாலும், இன்னும் பழைய முறையிலேயே விவசாயம் செய்து கொண்டு வருகிறோம். காலத்திற்கேற்ப விஞ்ஞான முறைகளில் சாகுபடி செய்வதற்குத்



1972 மார்ச் 8] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

தகுதிபடைத்தவர்களாக விவசாயிகள் ஆக வேண்டும். சர்க்கார் பல இடங்களில் விதைப் பண்ணைகள் வைத்துத் தரமான விதைகளைத் விவசாயிகளுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் விவசாயிகளுக்கு எந்த மண்ணில் எந்த விதைகளைப் போட்டுப் பயிரிடுவது, எந்த மண்ணுக்கு எந்த உரம் இடுவது என்பதெல்லாம் தெரியாத காரணத்தால், ஏதோ ரசாயன உரம் என்றாலே உடனே கிடைத்த உரத்தைப் போட்டு விடுகிறார்கள். அப்படிச் செய்வதனால் பணம் பாழாகிறது, ஆகவே, விவசாயிகளுக்கு விஞ்ஞான முறையில் சாகுபடி செய்வதைப்பற்றிச் சொல்லித்தர விதைப்பண்ணைகள் இருக்கும் இடங்களில் விவசாயப் பள்ளிகளை ஆரம்பித்து, மூன்று மாதம், ஆறு மாதம் என்ற அளவில் விவசாயிகளுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விஞ்ஞான ரீதியில் சாகுபடி செய்யாத காரணத்தினால் உரம் பாழாகிறது, பணம் பாழாகிறது. அதுமட்டுமல்ல, கிடைக்கின்ற பலனும் குறைவாக இருக்கிறது. ஆகவே, அரசு விவசாயப் பள்ளிகளை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,

அடுத்தபடியாக, நிலச்சீர்திருத்தம் சம்பந்தமாக உச்சவரம்பு 40 எக்கர் என்று அறிவித்திருப்பதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். இதனால் எந்த அளவிற்கு நிலம் கிடைக்கும் என்பது தெரியாவிட்டாலும், இது ஒரு முற்போக்கானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நிலச் சீர்திருத்தம் செய்வதை ஒட்டுமொத்தமாக ஒரே சமயத்தில் செய்துவிட்டால் நல்லது. மேலும், குத்தகை தள்ளுபடி செய்கின்ற அறிவிப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இந்த ஆண்டு குத்தகை பாக்கியைக் கட்டிவிட்டால் பழைய பாக்கிகளை ரத்து செய்துவிடுகிறோம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த வருடம் குத்தகை செலுத்தப்பட்டால் அதைப் பழைய பாக்கிக்குத் தான் வரவு வைத்திருப்பார்கள். நான்கூட பாக்கி கட்ட வேண்டுமென்றால், போன வருஷ பாக்கியைக் கட்டிவிட்ட பிறகுதான், இந்த வருஷ வசூலிப்பார்கள். ஆகவே, இந்தத் தேதியில் பாக்கி கொடுக்கப்பட்டிருந்தால் அதை இந்த ஆண்டுக்குக் கட்டியதாகக் கொண்டு பழைய பாக்கிகள் எல்லாவற்றையும் ரத்து செய்யவேண்டும். குத்தகைதாரர்கள் எத்தனை நாளைக்கு குத்தகைக்காரர்களாக இருந்து கொண்டிருப்பது? அவன்

நிலத்திற்குச் சொந்தக்காரனாக வேண்டும். இரண்டு ஏக்கர் வைத்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்கள், கிளார்க் போன்றவர்களுக்கு ஒருசிறு விதிவிலக்கு அளித்து, மற்ற நிலங்களை அவர்களுக்கு சொந்தமாக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார், குத்தகைதாரர்களே இருக்கக்கூடாது என்று தீவிரமாகச் சொல்கிறார். எல்லோருக்கும் கிடைக்கக்கூடிய அளவில் நிலம் இருக்கிறதா? புள்ளிவிவரம் இருக்கிறதா, நிலப்பசி (லேண்ட் ஹங்கர்)-யைத் தீர்க்கக் கூடிய அளவில் நிலம் இருக்கிறதா? எப்படி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியும்?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் ஒன்றும் இல்லை. எங்களுடைய ஆலோசனையை நாங்கள் சொல்கிறோம், உழுபவனுக்குத்தான் நிலம் சொந்தம். உழுபவனுக்கு அந்த நிலத்திலிருந்து கிடைக்கும் பலன் கிடைக்க வேண்டும். உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்று ஒரு சட்டத்தைப் போட்டுவிட்டு, ஒரு குழப்பத்தை உண்டாக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. நிலத்தில் பாடுபடும் விவசாயிகளின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் கொடுக்க வேண்டும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, பெண்கள், விதவைகள் போன்றவர்கள் நிலம் வைத்திருக்கிறார்கள் என்றால் அதற்கு என்ன வழி? அவர்கள் நிலத்தை குத்தகைதாரர்களுக்குக் கொடுத்துவிட்டால் அவர்கள் எப்படிச் சாப்பிட முடியும்? அல்லது அவர்களே நிலத்தில் போய் உழுது வேலை செய்ய வேண்டுமென்கிறீர்களா? அவர்களுக்கு ஏதாவது எக்ஸெம்ப்ஷன் உண்டா?

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, சட்டம் செய்கிறபோது, ராணுவத்தில் பணியாற்றுபவர்கள், அங்கஹீனம் உள்ளவர்கள், தாய்-தந்தை இறந்த மைனர்கள், விதவைகள் போன்றோருக்கு விதிவிலக்கு அளிக்கப்படும். எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும் சிலருக்கு விதிவிலக்கு உண்டு. சட்டம் கொண்டுவரும்போது அவற்றைப்பற்றியெல்லாம் பரிசீலனை செய்யலாம். ஆனால் வேறொரு இடத்தில் தொழிலைச் செய்து



கொண்டு இருப்பவர்களுடைய நிலத்தை எடுத்துவிட வேண்டும். ஆசிரியர், கிளார்க் போன்ற குறைந்த வருவாய் பெறுபவர்களுக்கு சில சலுகைகள் கொடுக்கலாம். ஒரு குத்தகைதாரர் ஒரு ஏக்கர் நிலத்துக்கு 10 மூட்டை அல்லது 5 மூட்டை நெல்லை குத்தகையாகக் கொடுத்த பிறகு அவனுக்குக் கிடைப்பது ஒரு பகுதிதான். அந்த குறைந்த அளவை அவன் பெறுவதால் மீண்டும் நிலத்தில் உற்சாகமாக உழைத்து, உற்பத்தியைப் பெருக்க எண்ண மாட்டான். அதனால் உற்பத்தி குறைந்து போகும். நிலச் சொந்தக்காரனாக இருந்தால், மேலும் மேலும் உற்பத்தியைப் பெருக்குவதில் கவனம் செலுத்துவான். அந்தக் கண்ணோட்டத்தில்தான் இதைச் செய்ய வேண்டும் என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, டிரஸ்டுகளைப்பற்றி குறிப்பு வந்துள்ளது, சமுதாய நலனுக்காக ஒரு நல்ல காரியத்தைச் செய்ய வேண்டுமென்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தால் அதைத் தடுப்பதற்கென்றே ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது. அதற்கு ஆலோசனை சொல்வதற்காக வேறொரு கூட்டம் காத்துக் கொண்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: On a point of Order, Sir, it is a slur on a very good profession. He must withdraw that word.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து:** தலைவர் அவர்களே, தவறான ஆலோசனைபற்றி குறிப்பிட்டேனே தவிர, வழக்கறிஞர்களைப் பற்றி நான் சொல்லவில்லை. நாட்டில் படிக்காத வக்கீல்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள், பொதுவாகத்தான் நான் பேசினேன். டிரஸ்டுகளை எடுக்கிறபோது கோயில் சொத்துக்களையும் தாராளமாக எடுக்க வேண்டும். கோயிலின் அன்றாட காரியங்களுக்குத் தேவையான தொகையை அவர்களுக்குக் கொடுத்துவிட்டு அந்த நிலங்களை எடுத்துக் கொள்ளலாம். தஞ்சை மாவட்டத்தில் உள்ள நிலங்களில் மூன்றில் ஒரு பங்கு மடங்களுக்கும் கோவில்களுக்கும் சொந்தமானவை, அந்த நிலங்களின் வருவாய் எல்லாம் எங்கே போகிறது, வருவாய் எவ்வளவு என்பதெல்லாம் தெரியவில்லை. ஆகவே, அவைகள் எல்லாம் சாகுபடியாளர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது). இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுக்க வேண்டும். கடன் சுமையைப் போக்குவது பற்றி

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 8

அறிவித்திருப்பது மிகவும் நல்லது. விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இராஜாஜி காலத்திலே கடன் நிவாரணச் சட்டம் வந்தது. அப்பொழுது 6 சதவீதத்திற்கு மேல் வட்டி வாங்கக்கூடாது என்பது தான் சட்டம். இன்றைக்கு அப்படியில்லை, அதிகமான ரூபாய்க்குக் கையெழுத்துப்போட்டு 100 ரூபாய் மட்டுமே வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் விவசாயிகள். அப்படிப் பட்ட கையெழுத்துக்கள் வாங்கியவற்றையெல்லாம் சேர்த்து நிறைய கட்டுக்காடாக வைத்திருக்கிறார்கள், அவையெல்லாம் போகவேண்டும். வட்டியாகக் கொடுத்துக் கொடுத்தே விவசாயி கள் நிலை கெட்டுப் போய்விட்டது. கடன் கொடுப்பவர்கள் எல்லாம் 50 சதவீதத்திற்குக் குறைந்து யாரும் வட்டி வாங்குவது இல்லை. நியாயமான வட்டி என்பதே 18 சதவீதம்தான். 300 ரூபாய்க்குக் கையெழுத்து வாங்கிக்கொண்டு 100 தான் கையிலே கொடுக்கிறார்கள். இதையெல்லாம் நிச்சயமாகத் தடுத்தாகவேண்டும்.

இதுமட்டுமல்ல, இனிமேலும் அப்படி வட்டி அதிகமாக வாங்காமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இனிமேல் அப்படித் தடுப்பதற்குக் கொஞ்சம் யோசிக்கலாம். அப்படிச் செய்தால் உண்மையிலேயே அவர் களுக்குப் பணம் கிடைக்காமல் போய்விட்டால் அவற்றையெல்லாம் அரசாங்கம் தருவதற்கு முடியுமா என்பதையும் பார்க்க வேண்டும். இருந்தாலும் இதிலே கவனம் செலுத்தித் தடுக்க வேண்டும். ஒரு கிராமத்தை எடுத்துக் கொண்டால் 10 வட்டிக் கடைகள் இருக் கின்றன. வட்டி 20 சதவீதம், 30 சதவீதம் ஆகிறது. விவசாயிகள் நகைகளைக் கொண்டு வைத்துத்தான் பணம் வாங்குகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையில் கூட்டுறவுத் துறைகளின் மூலமாகவும், மற்ற பாங்குகளின் மூலமாகவும் விவசாயிகளுக்கு நகையீட்டின் பேரில் பணம் கொடுப்பதற்கு நடவடிக்கைகள் நாம் எடுத்தாக வேண்டும். கூட்டுறவு பாங்குகள் இருக்கின்றன. இப்பொழுது நாம் கூட்டுறவு நாணயச் சங்கங்கள் வேறு ஆரம்பித்து இருக்கிறோம். இவைகள் மூலமாகப் பணம் விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டும். எனவே, விவசாயிகளுக்குப் பல வகைகளிலேயும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சாதாரண மக்களைப்பற்றி நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். எந்தக் குடும்பமாக இருந்தாலும் ஏழ்மையான குடும்பத்திற்கு



1972 மார்ச் 8] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

மாதம் 150 ரூபாய் அளவிற்காவது வருவாய் கிடைக்கக்கூடிய முறையில் அரசாங்கம் உத்திரவாதம் அளிக்க வேண்டும், மூன்று ஆண்டுகளிலோ அல்லது ஐந்து ஆண்டுகளிலோ அந்த வருவாயை அவர்களுக்கு ஏற்படுத்தித் தருவதற்கு அரசு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும். நூறு ரூபாய்க்குக் கீழே வருவாய் உள்ள குடும்பத்தினர் ஏன் அவ்வளவு வருவாய் பெற்றிருக்கிறார்கள், ஏன் அதற்கு மேலே வருவாய் பெறச் சக்தியற்றவர்களாக இருக்கிறார்கள் என்று பார்த்து அவர்களுக்கு உதவி செய்யக்கூடிய முறையிலே ஒவ்வொரு குடும்பத்தோடும் தொடர்புகொண்டு வரவேண்டும். இதற்குப் புதிய சட்டங்கள் தேவையில்லை, நம்முடைய கவனிப்பு, உற்சாகம் இவைதான் தேவை. இவற்றை நாம் செய்ய முடியும். 100 ரூபாய்க்குக் குறைந்த வருவாய் உடைய குடும்பங்கள் எத்தனை குடும்பங்கள் அந்த நிலையில் இருக்கின்றன என்பதைக் கணக்கெடுக்க வேண்டும். பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக எடுத்துப் பார்க்கலாம், அவர் களுக்கு உதவிகளைச் செய்யலாம்.

ஒவ்வொரு குடும்பத்தையும் இப்படித் தனித்தனியாகப் பார்த்துக் கவனம் செலுத்துவதன் மூலமாகத்தான் நாட்டிலே உள்ள ஏழைக் குடும்பங்களின் வருவாயை உயர்த்த முடியும். பட்ஜெட்டிலே பெரிய தொகையை ஒதுக்குவதால் மாத்திரம் நாம் எல்லாம் கீழே உள்ளவர்களுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டது என்று கருதிவிட முடியாது. அப்படிக் கருதினால் அது தவறு. அப்படியிருந்திருந்தால், இதற்கு முன்னாலே ஒதுக்கப்பட்ட பணம் எல்லாம் போய்ச் சேர்ந்திருந்தால் இன்றைக்கு நாட்டிலே வறுமை இருக்காது. ஆனால் வறுமை இருக்கிறது. எங்கே போய்ச் சேர வேண்டுமோ அது சேரவில்லை. அப்படிச் சேருவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, கட்டாயக் கல்வி. எல்லோரும் கட்டாயக் கல்வி என்ற முறையிலே படிக்க வருவதில்லை. கிராமங்களிலே உள்ள வறுமையின் காரணமாக இன்றைக்கும் அங்கேயுள்ளவர்கள் சிலர் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்ப முடியவில்லை. பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டால் உணவு கொடுக்க வேண்டுமென்ற காரணத்தினாலே 5, 6 வயதிலேயே அந்த ஊரில் உள்ள பெரிய விவசாயிகளிடத்திலே மாடு மேய்ப்பதற்கு அனுப்புகின்ற பழக்கம்

இன்னும் இருக்கிறது. படிக்காமல் இருந்தால் சமுதாயத்திற்குப் பாரமாகத்தான் இருப்பான், சமுதாயத்திற்குக் கெடுதலாகத்தான் இருப்பான், அதற்காகத்தான் நான், 150 ரூபாய் வருமானமாவது ஒரு குடும்பத்திற்கு வேண்டுமென்று சொன்னேன், அப்படிச் செய்வோமேயானால் படிக்க வருவார்கள். இல்லாவிட்டால் கட்டாயக் கல்வி என்ற பெயரால் படிக்க வேண்டுமென்று சொன்னாலும்கூட வரமாட்டார்கள், வரவில்லையென்பதற்கு அபராதம் போட்டாலும் கட்டமுடியாது, ஜெயிலுக்குத்தான் போவான். எனவே அவர்களுக்கு உணவு கிடைக்கக்கூடிய முறையிலே வருமானத்தைப் பெருக்குவதால் அவர்கள் கட்டாயக் கல்வியிலே வந்து சேர்ந்து விடுவார்கள், அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.

அடுத்ததாக கங்கை-காவிரி இணைப்பு பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது போதாது. என்னைப் பொறுத்தவரையில் தாமிரவருணியோடு இணைக்கவேண்டும் என்று கூறுவேன். அப்படி இணைத்தால்தான் இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்கள் பயனடையும். கங்கை-காவிரி இணைப்பு என்று இல்லாது தாமிரவருணி இணைப்பு என்று செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சோஷலிசக் கொள்கைபற்றி முதலமைச்சர் அவர்கள் இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சோஷலிஸம் என்ற கொள்கை தேசத்தின் ஒரு பகுதியிலே மட்டும் அமலாக முடியாது. பல சிக்கல்கள் எல்லாம் அதிலே வரும். இந்தியா ஒரு நாடு என்றால் நாட்டில் ஒட்டு மொத்தமாக அந்தக் கொள்கை செயல்பட்டால்தான் தவறு செய்கிறவர்கள் தப்பிப் போக முடியாது, எனவே, சோஷலிஸம் என்பது எல்லாப் பகுதிகளுக்கும் சேர்த்து நிறைவேற்றக்கூடிய ஒன்று என்பதைத் தெரிவித்துக்கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

* திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக முதலமைச்சர் அவர்கள் நல்ல முறையிலே 1972-73-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அளித்திருப்பதை நான் வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல



விரும்புகிறேன். இந்த மாமன்றத்திலே இதனைப் பல உறுப்பினர்கள் வரவேற்றும், ஒரு சில உறுப்பினர்கள் வரவேற்பதற்கு மாறான கருத்துக்களையும் சொன்னார்கள். நானும் இந்த நிதிநிலை அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். இந்த நிதிநிலை அறிக்கை பாராட்டக்கூடிய முறையிலே இருக்கிறது. நாட்டிலேயுள்ள ஏழை எளிய மக்கள், சாதாரண, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், உத்தியோகத் துறையிலே இருக்கக் கூடியவர்கள், ஆசிரியப் பெருங்குடி மக்கள் அத்தனை பேர்களும் பாராட்டக் கூடிய நிலைமையிலே இது அமைந்து இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

இந்த அறிக்கையை அரசியல் காரணத்திற்காகத்தான் எதிர்க்கிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், வேளாண்மைத் துறைக்குப் பல கோடிக்கணக்கான ரூபாய்கள் ஒதுக்கப்படுகின்றன. கூட்டுறவுத் துறைக்கு 1967-ஆம் ஆண்டுக்கு முன்னாலே 31 கோடிதான் ஒதுக்கப்பட்டது. இன்றையதினம் 61 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீண்டகாலக் கடன் என்ற முறையிலே 1967-க்கு முன்னாலே 3 கோடி ரூபாய்த்தான் ஒதுக்கப்பட்டது. இன்றைய தினம் ஏறக்குறைய 30 கோடி ரூபாய் ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்த நாட்டிலே வேளாண்மைத் துறைக்காக அதிகமான பணத்தை ஒதுக்கியதால்தான் இன்றைய தினம் மக்களுக்குத் தேவையான உணவு மலிவான விலையிலே கிடைக்கிறது. 1967-ஆம் ஆண்டுக்கு முன்னால் இந்த நாட்டிலேயுள்ள மக்கள் உணவுக்காகக் கால்கடுத்து கியூ வரிசையிலே நின்று கஷ்டப்பட வேண்டிய நிலையெல்லாம் இருந்தது. தங்கள் சொந்தக் காசைப் போட்டு அரிசி வாங்க எடுத்துச் செல்லும்பொழுது, திருடன் செல்வதுபோல் பதுங்கிப் பதுங்கிச் செல்வது போன்ற அந்த நிலைமை 67-க்கு முன்னால் இருந்தது. அந்த நிலைமையை மாற்றி, திராவிட முன்னேற்றக் கழக அரசு, தமிழக அரசு விவசாய அபிவிருத்திக்காகச் செய்த காரணத்தால் இன்று கடைக்குச் சென்று அரிசி வாங்கப் போகிறோம் என்று சொன்னால், அந்தக் கடையில் பலவிதமான அரிசி, 1 ரூபாய் 60 காசு, 2 ரூபாய் 50 காசு அரிசி வேண்டுமா என்று கேட்கிறார்கள். அவ்வளவு மலிவான விலையில் மக்கள்

உண்ணும் நிலையிருப்பதால் சாதாரண ஏழை எளிய மக்கள் பாராட்டுகிறார்கள். போற்றுகிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். 1 ரூபாய் 60 காசுக்கு எங்கே விற்கிறது? நியாய விலைக் கடைகளில் கூட 2 ரூபாய் 2 காசு என்று படியரிசி விற்கும்பொழுது 1 ரூபாய் 60 காசுக்கு எங்கே விற்கிறது என்று சொன்னால் நல்லது. இடத்தைச் சொன்னால் வாங்குவதற்கு உதவியாக இருக்கும்.

MR. DEPUTY SPEAKER : It is not a point of order. He is not giving a wrong information.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is. It is not sold anywhere like that.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அரிசிக்கு ஃபிக்ஸெட் பிரைஸ் கிடையாது. பணம் கொடுத்து வேண்டுமானால் கேளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கேட்கிறேன்.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: ஏழை எளிய மக்கள் தொழிலாளர்கள் வாங்கி உண்ணுகின்ற அரிசிக்கே அந்த விலை. ஆகவே 2 ரூபாய் 50 காசுக்கும் இருக்கிறது, 1 ரூபாய் 50 காசுக்கும் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

அடுத்தபடியாக, மருதாநதி திட்டம் என்ற திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று இந்த மன்றத்தில் பல ஆண்டுக் காலமாக எடுத்துரைத்து, இந்த ஆண்டு தமிழக அரசு இந்தத் திட்டத்தை ஏற்றுச் செயல்பட வந்தமைக்காக ஆத்தூர் தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய பாராட்டையும், நன்றியையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் தர்மத்துபட்டி கிராமம் புதுக்குளத்திற்கும் கோம்பையாறுக்கும் குறுக்கே அணை கட்டுவதற்கு 8 இலட்சத்திற்கும் மேலாக ஒரு மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தையும் இந்த ஆண்டு செயல்படுத்த ஆவன செய்து கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களிலே குடித்தண்ணீர்த் திட்டம். இந்த நிதிநிலை அறிக்கையில் கிராம மக்களுக்காகக் குடிநீர்த்





திட்டத்திற்கு வசதி செய்ய சேர்க்கப்பட்டிருக்கிறது. இது பாராட்ட வேண்டிய விஷயமாகும். கிராமங்களிலே ஓரிடத்திலே கிணறு வெட்டினால் அந்த இடத்திலே உப்புத் தண்ணீர் இருக்கிறது. ஆகவே, ஒரு திட்டம் அமைத்து நல்ல தண்ணீர் கிடைக்கும் இடத்திலேயிருந்து அந்தக் கிராம மக்களுக்குக் குடிநீர் வசதி அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவத் துறையிலே பல கோடிக்கணக்கான பணம் இந்த அரசால் செலவழிக்கப்படுகிறது. குறிப்பாக, இந்த ஆண்டு ஊராட்சி ஒன்றியங்களிலேயுள்ள 200 மருந்தகங்களில் அரசு 45 மருந்தகங்களை ஏற்றுக்கொள்ள முன் வந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். என்னுடைய தொகுதியிலே பல மருந்தகங்கள் இருக்கின்றன. ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக நடத்தக்கூடிய மருந்தகங்கள் இருக்கின்றன. அவைகளில் டாக்டரும் இருப்பதில்லை, மருந்தும் இருப்பதில்லை. அந்த நிலைமையிலே இருக்கிறது. ஆகவே, குறிப்பாக, இந்த 45 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை எடுப்பதில் ஆத்தூர் தொகுதியிலிருக்கும் சித்தையங்கோட்டையிலிருக்கும் அந்த மருந்தகத்தையும் அரசு ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த ஊரிலுள்ள பொதுமக்கள் 13,000 ரூபாய் வரையிலேயும் நன்கொடை கொடுக்கத் தயாராகயிருக்கிறார்கள். மருந்தகத்திற்கு வேண்டிய நிலத்தையும் வாங்கிவிட்டிருக்கிறார்கள். ஆகவே அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக கல்வி. 1967-க்கு முன்னால் ஆண்ட காங்கிரஸ் அரசாங்கம் 53 கோடி ரூபாய்தான் கல்விக்காகச் செலவழித்தார் கள். ஆனால் இன்றைக்கு 89 கோடியாக அது உயர்த்தப் பட்டிருக்கிறது. இந்த நேரத்திலே நான் சொல்ல விரும்புவ தெல்லாம் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் ஆரம்பக் கல்வியையும், உயர்நிலைப்பள்ளிக் கல்வியையும் பொறுத்தவரையில் நாட்டிலே பரவலாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கல்லூரிப் படிப்பு மட்டும் நகர்ப்புறங்களில்தான் அதிகமாக இருக்கிறது. அப்படி நகர்ப்புறங்களிலே இருப்பதால் கிராமங்களிலுள்ள ஏழை எளிய விவசாயிகள், தொழிலாளர்கள் குடும்பத்திலுள்ளவர்கள், நகரங் களுக்கு, தூரமான இடங்களுக்கு வந்து படிக்க வேண்டுமென்றால் அவர்களுக்குப் பணச் செலவும் கஷ்டங்களும் ஏற்படுகின்றன.

[திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்] [1972 மார்ச் 8

ஆகவே, இந்தக் கல்வி விஷயத்தில் கல்லூரிகள் எந்தத் தொகுதிகளில் இல்லையோ அந்தத் தொகுதிகளில் அரசினர் கலைக் கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்: குறிப்பாக, ஆத்தூர் தொகுதியிலே ஒரு கல்லூரி கூட இல்லை. ஆகவே, ஆத்தூர் தொகுதியிலே ஒரு கலைக் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பிற்பட்டோர் நலனுக்காக இந்த ஆண்டு 4 கோடி ரூபாய்க்கு மேலாகச் செலவு செய்யவிருக்கிறது. இதற்காக பிற்பட்டோர் சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள் உண்மையிலேயே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால். சின்னாளப்பட்டியில் பிற்பட்ட மாணவர்களுக்காக ஒரு ஹாஸ்டல் இருக்கிறது. அது வாடகைக் கட்டிடத்தில்தான் நடந்து வருகிறது. அந்த ஹாஸ்டலுக்கு இந்த ஆண்டில் புதிதாக அரசாங்கம் ஒரு புதிய கட்டிடத்தை. சொந்தக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முடிவாக, கைத்தறி நெசவாளர் பிரச்னை, கைத்தறி நெசவாளர்கள் இந்த நாட்டிலே கஷ்டப்படுகிறார்கள் என்று எடுத்துச் சொன்னதன் காரணமாக இன்றைக்குக் குறைந்தபட்ச ஊதியக் குழு ஏற்படுத்தப்பட்டிருப்பதாக முதலமைச்சரவர்கள் சொன்னார்கள். இதை நான் முழு மனதோடு பாராட்டுகிறேன். இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பல சந்தர்ப்பங்களிலே நூல் விலை கூடுவதாலும். செயற்கைப்பட்டு விலை கூடுவதாலும் அதன் காரணமாகத் தொழில் வளர்ச்சி இல்லாமல், லாபம் இல்லாமல், கூலியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதற்கு அடிப்படையான திட்டமொன்று வகுத்தால்தான் அந்த மக்களுக்கு நிம்மதியான நிலை ஏற்படும். எப்படி அறுவடைக் காலத்திலே வியாபாரிகள் கொள்முதல் செய்து பதுக்கி வைத்து பின்னால் விலையை ஏற்றி வைக்கிறார்கள் என்று அதைத் தடுக்க அரசாங்கம் உணவு வியாபாரக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி, அதைக் கொள்முதல் செய்து விலை கூடுகின்ற நேரத்தில் மக்களுக்கு மலிவாகக் கிடைக்க ஏற்பாடு செய்திருக்கிறதோ அதைப்போல் இந்த நூல்களையும், செயற்கைப்பட்டுகளையும் அரசாங்கமே கொள்முதல் செய்து



1972 மார்ச் 8] [திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்]

விலையேறும் காலங்களில், நியாயமான விலைக்கும் அதிகமாக விற்கும் காலங்களில் அந்தத் தொழிலாளர்களுக்கு நியாயமான விலைக்குக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஏப்ரல் 2-ஆம் தேதி கைத்தறி வாரம் நடைபெறப் போகிறது. கைத்தறித் துணியை விற்பனை செய்ய அந்த விழா நடத்தப்பட இருக்கிறது. அந்த விழாவில் தள்ளுபடி காசு கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுக்கும் காசு கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான் கொடுக்கிறார்கள். நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புவதெல்லாம், தனியார் துறையிலே உள்ளவர்களும் அந்தக் கைத்தறி வார விழாவிலே கடை வைத்தால் அவர்களுக்கும் தள்ளுபடி கொடுக்க வசதி செய்து கொடுக்கவேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக்கொண்டு இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பாராட்டி என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. மே. சி. தூயமணி: மாண்புமிகு மாமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த சக்தி வாய்ந்த மாமன்றத்திலே சமர்ப்பித்திருக்கும் 1972-73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தை வளம் நிறை இதயத்தோடு வரவேற்றுப் பேச வழங்கிய நல்வாய்ப்புக்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நாடெல்லாம், வீடெல்லாம் நல்லவர்தம் ஏடெல்லாம் வாழ்த்து மழையால் நனைந்து கொண்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கைக்கு நானும் எனது இதய வாழ்த்துக்களை இணைப்பதிலே பெருமைப்படுகிறேன், புளகாங்கிதம் கொள்கிறேன்.

1972-73-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வருவாய்க் கணக்கில் செலவு ரூபாய் 394.78 கோடியாகவும் வரவு ரூபாய் 397.27 கோடியாகவும் இருக்குமென்று அறிவிக்கப்பட்டு, இதன் விளைவாக உபரி ரூபாய் 2.49 கோடி கிடைக்கும் என்று சுட்டிக் காட்டியிருப்பது தமிழக சர்க்காரின் தன்னிகரில்லாத் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டாக—கலங்கரை விளக்காக அமைந்துள்ளது என்பதை யாரும் மறுத்துவிட முடியாது.

[திரு. மே. சி. தூயமணி] [1972 மார்ச் 8

கோவைப் பெருநகரத்தில் மூடப்பட்டுக் கிடந்த ஐந்து பஞ்சாலைகளைப் பாட்டாளி மக்களின் துயர் துடைக்க இந்தச் சர்க்காரே ஏற்று நடத்தவும், இதற்கு முன்பு வேலையின்றிப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக இரண்டு லட்ச ரூபாய் நிவாரணத் தொகையாக அள்ளித் தந்திருப்பதும் இப்போது மூடப்பட்டுள்ள பஞ்சாலைகளைத் திறந்திட நடுவரசோடு வாதிடுவது, "ஆலையின் சங்கே நீ ஊதாயோ" என ஆர்வத்தோடு காத்திருப்பது மட்டுமல்லாது முழுமையான நெஞ்சத்தோடு மூன்று இலட்ச ரூபாய்களை வாரி வழங்க இந்த அரசு முன்வந்திருக்கிறது என்றால், இதைவிட ஒரு உன்னத அரசு இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மூலையிலே பதுங்கியிருக்கிறது என்பதை, வசைபாடுகிற பெரியவர்கள் அன்புகூர்ந்து சுட்டிக்காட்ட வேண்டுகிறேன். மூடிக்கிடக்கிற நூற்பாலைகளின் கதவுகளைத் திறக்க தமிழக சர்க்கார் எடுத்துக் கொள்ளும் இராட்சத முயற்சிகளைக் கண்டு வாடிக் கிடக்கின்ற தொழிலாளி வர்க்கம் வாழ்த்துக்களைக் குவித்துக் கொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல.

நமது மாநிலத்தில் கைத்தறி நெசவாளர் பெருங்குடி மகன் படுகின்ற அல்லலை நீக்க 1966-67-ல் ரூபாய் 1.82 கோடி இருந்ததற்கு மாறாக 1971-72-ல் ரூபாய் ·2.03 கோடியாக உயர்த்தப்பட்டது. மேலும் 1972-73-ல் ரூபாய் 2.34 கோடியாக உயர்த்தியிருக்கிறது என்றால் கண்ணீர் வடிக்கும் கைத்தறி நெசவாளர்களின் வாழ்வை இந்தச் சர்க்கார் உயர்த்தியிருக்கிறது என்று பொருளாகும். ஆயிரக்கணக்கான கைத்தறி நெசவாளர்கள் வாழ்வு நடத்தும் மேட்டுப்பாளையம் தொகுதியிலேயிருந்து வந்திருக்கின்ற நான் அந்த உயர்ந்த பெருமக்களின் சார்பாக உளம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு குடும்பத்திற்கு அதிக அளவு அறுபது ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை வைத்திருக்கலாம் என்கிற அளவை, குடும்பத்திற்கு நாற்பது ஸ்டாண்டர்டு ஏக்கர் என மாற்றியமைக்க வேண்டிய திருத்தங்கள் சட்ட சம்மதம் பெறும் என அறிவித்திருப்பது நிலப்பிரபுக்களின் நெஞ்சத்தை வாள்கொண்டு அறுப்பதாகவும், நெஞ்சொடியப் பாடுபடும் விவசாயப் பெருங்குடி மகனின் வயிற்றிலே பால் வார்ப்பதாகவும் அமைந்திருக்கின்றது. அது மட்டுமல்ல. முந்திய நில உச்ச வரம்புச் சட்டத்தின்



1972 மார்ச் 8] [திரு. மே. சி. தூயமணி]

உயிரோட்டத்தையே கெடுக்கின்ற வகையிலும், அதன் உன்னத நிலையைப் புதைக்கின்ற முறையிலும் மிட்டா-மிராசுதார்கள் பலர் 'அறக் கட்டளைகள்" என்னும் பெயரிலே தங்கள் நில ஆதிக்கத்தை நிலைநாட்டி வந்தனர். அப்படிப்பட்ட அறக் கட்டளைகளுக்கு அளிக்கப்பட்ட விதி விலக்குகளுக்கெல்லாம் இந்த நிதிநிலை அறிக்கை. சாவுமணி அடித்திருக்கிறது, சவக் குழிக்கு அனுப்பியிருக்கிறது, என்றால் இதைவிட ஒரு புரட்சிகரமான நடவடிக்கை வேறு எதுவாக இருக்க முடியும், எங்கே பார்க்க முடியும் என்பதை அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

அதுமட்டிலுமல்ல. இந்த நிதிநிலை அறிக்கை வரிக்கு வரி சுட்டிக் காட்டி இருக்கிற ஒவ்வொரு பிரச்சினையும், வாழ்க்கையின் அடித்தளத்திலே வாழும் மனித சமுதாயத்தை வழி நடத்திச் செல்லும் வழிகாட்டியாகவும்—திக்குத் தெரியாத காட்டில் திண்டாடுகிற தொழிலாளி வர்க்கத்திற்கு திசை காட்டும் தீபஸ்தம்பமாகவும், இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது. வெறித்தனம் கொண்டு பூர்சுவா சித்தாந்தம் றனது கடைசிக் கட்டத்தில் நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறது. சோசலிச சிந்தனைகள் மிகக் கம்பீரமான தோற்றத்தோடு கொடி கட்டிப் பறக்க ஆரம்பித்து விட்டது என்பதற்கு இந்த நிதிநிலை அறிக்கை சிறந்த அடையாளமாகும். சீரிய ஆதாரமாகும். சுருக்கமாச் சொல்லப்போனால் ஒவ்வொரு தமிழ் மகனும் இந்த நிதிநிலை அறிக்கையைப் பேணிக் காத்து வைக்கும் "கற்பூரப் பெட்டகம்"—செல்வக் களஞ்சியம் என்பதை மறந்துவிடக்கூடாது.

இதுபோன்றே சாலை மேம்பாட்டிற்காக நடப்பு ஆண்டில் ரூபாய் 3.68 கோடியும், சாலைப் பராமரிப்புக்காக ரூபாய் 6.63 கோடியும் செலவழிக்க வகை செய்யப்பட்டிருக்கிறது. இது தவிர, தேசிய நெடுஞ்சாலைகளுக்காக 1971-72-ல் ரூபாய் 5.54 கோடி நம் மாநிலத்தில் செலவிடப்படும். 1,000 மைல் நீளமுள்ள, பேருந்துகள் செல்லும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை, அரசே மேற்கொள்ளுவது என்ற அருமையான முடிவை அறிவித்திருக்கிறது. மேலும் முக்கியமாகப் பாராட்டவேண்டிய செய்தி ரூ. 5.33 கோடி செலவாகும் பாம்பன் பாலத்திற்கு நடுவணரசு தனது ஒப்புதலைத் தந்துள்ளது என்பதாகும்.

[திரு. மே. சி. தூயமணி] [1972 மார்ச் 8

இப்படிப்பட்ட சாலைப் பணிகளும், பால வேலைகளும் துரித வேகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், எனது தொகுதியிலே உள்ள தூர்ந்துபோன சாலைகளை—துவக்க வேண்டிய பால வேலைகளை நினைவுபடுத்துவது எனது தலையாய கடமையாக எண்ணுகிறேன்.

மேட்டுப்பாளையத்திலிருந்து உதகை செல்லுகின்ற பவானி ஆற்றுப்பாலம் விரிவுபடுத்தப்பட வேண்டும் என நீண்ட நெடு நாட்களாகச் சொல்லப்பட்டும் இதுவரை செயல்படுத்தப்படவில்லை. எனவே, உல்கத்துப் பெரியவர்கள் எல்லாம், பவனி வருகின்ற அந்த பவானி ஆற்றுப் பாலத்தை, உயர்வு படுத்த, விரிவு படுத்த எல்லா வகை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுகிறேன்.

அது போன்றே, காரமடையிலிருந்து வெள்ளியங்காடு வரை யிலும், தோளம்பாளையத்திலிருந்து கோபனரி வரையிலும், கார மடையிலிருந்து சிறுமுகை வரையிலும் சாலை வேலைகள் நடை பெறுகிறது என்றாலும் அதற்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட வில்லை. ஆகவே, இந்தப் பணிகள் எல்லாம் சரிவர நடைபெறாத நிலையிலுள்ளது. எனவே, அதற்குப் போதுமான நிதியை உடனடி யாக ஒதுக்கி வேலையைத் துரிதப்படுத்த வேண்டுகிறேன்.

மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு இருக்கின்ற வருமானம் மிக மிகக் குறைந்த நிலையிலேயே இருக்கிறது. எந்த ஒரு சிறப்பான வேலையும் செய்ய முடிவதில்லை. ஐம்பதினாயிரம் ஜனத்தொகை கொண்ட மேட்டுப்பாளையம் நகராட்சிக்குச் சொந்தமாக ஒரு கட்டடம் கூட இல்லை. அதற்குக் கால்கோள் விழா நடைபெற் றிருந்தும் இதுகாறும் கட்டடம் உருவாக்கப்படவில்லை; எனவே, அப்பணியும் விரைந்து நடைபெற ஆவன செய்ய அன்புடன் வேண்டுகிறேன்.

தோளம்பாளையம், காளம்பாளையம், மருதூர், ஆகிய பஞ் சாயத்துக்களுக்குப் பாசன வசதிக்காகப் பயன்படும் நீண்ட நெடு நாட்களாகச் சொல்லப்பட்டு வரும் பெரும்பள்ளத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற முழு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். இலுப்பை நடத்தும் ஊராட்சி மன்றத்தைச் சார்ந்த பகத்தூரில் பாலம் கட்ட வேண்டு மென்று அந்தப் பகுதி மக்கள் பல்லாண்டுகளாகச் சொல்லி வரு கிறார்கள். அந்த எண்ணம் பகற்கனவாகவே இருந்து வருகிறது.



1972 மார்ச் 8] [திரு. மே. சி. தூயமணி]

எனவே, அந்த மக்களின் இனிய கனவை அன்புகூர்ந்து நனவாக் கித் தர வேண்டுகிறேன்.

தேக்கம்பட்டி ஊராட்சியிலுள்ள இராமேகவுண்டர் புதூர் பாலம், சிறுமுகை மூலத்துறை பாலம் சாலவேம்பு நெல்லித்துறை பாலம், தாளானூர் பேயாறு பாலம் ஆகிய அனைத்தும் நிறை வேற்றித் தரப்படவேண்டுமெனக் கேட்டு இந்த நிதிநிலை அறிக்கையை நெஞ்சம் திறந்து வரவேற்று அமர்கிறேன்.

*திரு. மு. சத்தியமூர்த்தி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு பட்ஜட் மீது என்னுடைய கருத்தைச் சொல்ல விழைகிறேன்.

ஏழைகளுக்குப் புது வரி இல்லை என்று சொன்னாலும் மறை முகமாக ஏழை மக்களைப் பாதிக்கும் பட்ஜட் இது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இப்போது வரிகளைப் போடவில்லை என்று சொன்னாலும் கூட கள்ளுக்கடை, சாராயக் கடைகளை ஏலம் விட்டதன் மூலம் இன்று 35 கோடி ரூபாய் வந்திருக்கிறது. இந்த 35 கோடி ரூபாய் ஏழை மக்களிடமிருந்துதான் பெறப்பட் டிருக்கிறது. ஏழை மக்களைத்தான் பாதிக்கிறதே ஒழிய மேட்டுக்குடியில் உள்ளவர்களைப் பாதிக்க முடியாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். இதை சாராயக் கடை, கள்ளுக்கடை மூலமாகக் வரக்கூடிய வருவாய் என்று சொல்லுவதற்குப் பதிலாக கீழே இருக்கக்கூடிய பாமர மக்களுடைய குடும்பங்களை ஏலம் விட்டு வருகிற தொகை என்றுதான் சொல்லமுடியும் என்று இந்த நேரத்தில் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வரியைக் குறைப்போம், வசதிகளைப் பெருக்குவோம் என்று சொன்னார்கள். கிட்டத்தட்ட இன்றுவரை சிறுகச் சிறுக 200 கோடி ரூபாய்க்கு வரியைப் பெருக்கியிருக்கிறார்கள், ஆனால் வசதி பெருகியிருக்கிறதா என்றால் இல்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது. விவசாயிகள் பாதிப்பு, வேலையில்லாத் திண் டாட்டம் ஆகியவற்றைப் போக்குவதற்கு இதிலே ஒரு வழி வகை யும் இல்லை என்று சொல்ல ஆசைப்படுகிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் சென்ற ஆண்டு 2,400 பட்டதாரிகளுக்கு வேலை கொடுக்கும் திட்டம் இருந்தது. இந்த ஆண்டு பட்ஜெட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கு வதற்கு எந்த விதமான ஏற்பாடும் செய்யவில்லை என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. மு. சத்தியமூர்த்தி] [1972 மார்ச் 8

அதே நேரத்தில் விவசாயிகள் பாதிப்பு, விவசாயிகள் மின் கட்டண உயர்வினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு விவசாயிகளுக்கான அந்த மின் கட்டணத்தைக் குறைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எனது தொகுதி பற்றி ஒருசில வார்த்தைகள் கூறவிரும்புகிறேன். புதுக்கோட்டையில் ஆசிரியர்கள் பயிற்சிப் பள்ளியை மூடி விடுவதற்கு ஏற்பாடு நடந்துவருவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு முன்பு அங்கு ஆசிரியர்கள் நான்கு பிரிவுகளாக 160 ஆசிரியர்கள் அங்கு பயிற்சி பெற்று வந்தார்கள். அடுத்தப்படியாக மூன்றாகக் குறைக்கப்பட்டது. இப்போது 80 ஆசிரியர்கள்தான் அங்கு பயிற்சிபெற்று வருகிறார்கள். அதையும் மூடிவிடுவதற்கு இங்கு ஏற்பாடுகள் நடப்பதாகச் சொல்கிறார்கள். இதை நல்ல முறையில் பரிசீலித்து அந்தப் பயிற்சிப் பள்ளியை அங்கேயே இருக்குமாறு உதவி செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் புதுக்கோட்டையில் உள்ள மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருப்பது புதுக்கோட்டையை ஒரு தனி ஜில்லாவாக ஆக்கவேண்டுமென்பது ஆகும். அப்படி அதை ஒரு தனி ஜில்லாவாக ஆக்கவேண்டுமென்று வெகு நாட்களாகக் கேட்டுக் கொண்டு வருகிறோம். அதையும் கவனிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்கள் பகுதியைப் பின்தங்கிய பகுதியாகக் கருதவேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். குடுமியான்மலையில் ஒரு பண்ணை நல்லவிதமாக நடைபெற்று வருகிறது. அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைத்தால் அங்குள்ள பின்தங்கிய மக்களுக்கும் பயன்படும் என்ற காரணத்தினால் அங்கு ஒரு விவசாயக் கல்லூரி அமைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, புதுக்கோட்டை பகுதியில் கரும்பு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. 90 சதவிகிதம் மக்கள் அங்கு இறைவைத் தண்ணீரைக் கொண்டு சாகுபடி செய்து வருகிறார்கள். அங்கு அதிகப்படியாக கரும்பு சாகுபடி செய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே அங்கு ஒரு சர்க்கரை ஆலையை அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டு என் சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.



1972 மார்ச் 8]

திரு. இரா. இராமலிங்கம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை வரவேற்று எனது கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கை 2.49 கோடி ரூபாய் உபரியாக இருப்பது பாராட்டத் தக்க ஒன்றாகும். டாக்டர் கலைஞர் அவர்கள் ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்காக அதன் முன்னோடி அறிக்கையாக இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கியிருக்கிறார்கள். கடன் சுமையைப் பொறுத்தவரையில் மத்திய அரசுக்கு நாம் ஆண்டு ஒன்றுக்கு கடன் தொகை கொடுக்க வேண்டியது 53.38 கோடியாகவும் நமக்குக் கிடைக்கிற கடன் 45,80 கோடியாகவும் இருக்கிறது. ஆக ஆண்டு ஒன்றுக்கு எட்டு கோடி ரூபாய் நாம் அதிகமாகக் கொடுக்கிறோம். மூலதனக் கணக்கில் வளர்ச்சிப் பணிகளுக்கு நாம் செலவழிக்கிற தொகை அத்தனையும் மாநில அரசின் நிதியையே நம்பியிருக்கவேண்டியிருக்கிறது. குறைந்தபட்சம் நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இறுதி வரையிலாவது மத்திய அரசு இந்தக் கடன் தொகையை நிறுத்தி வைக்கும்படி நாம் மீண்டும் வலியுறுத்தவேண்டும். அப்படி வலியுறுத்தி அவர்கள் கடன் தவணையை வசூலிப்பதை நிறுத்தி வைத்தால் வளர்ச்சிப் பணிகளுக்கு நாம் ஆண்டு ஒன்றுக்கு ஐம்பது கோடி ரூபாய்க்கு அதிகமாகச் செலவழிக்கக் கூடிய ஒரு வசதி வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வேளாண்மைத் துறையில் இந்த அரசு செய்திருக்கும் சாதனைகளை நாம் மனத்தில் நினைத்துக்கொள்ளவேண்டும். பசுமைப் புரட்சியினால் வேளாண்மைத் துறையில் நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். விவசாயிகளுக்கு கடன் வசதிகள் அளிப்பது, அவர்களுக்கு நல்ல தரமான விதைகள் கொடுப்பது, பூச்சிக் கொல்லி மருந்துகள் கொடுப்பது, போன்ற வகைகளிலும், வேளாண்மைத் தொழில் கழகம் மூலம் 1.050 டிராக்டர்கள் அதிகமாகக் கொடுத்தும் எல்லாவிதமான வசதிகளையும் நாம் செய்திருக்கிறோம். அதை வைத்துக்கொண்டுதான் வேளாண்மைத் துறையில் இவ்வளவு பெரியதொரு சாதனையை நாம் செய்ய முடிந்திருக்கிறது. கடன் வசதியைப் பொறுத்தவரையில் கூட்டுறவுத் துறை மூலம் குறுகிய காலக் கடன்கள், மத்திய கால கடன் வசதி என்று

[திரு. இரா. இராமலிங்கம்] [1972 மார்ச் 8

72-73-க்கு மட்டும் 61 கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருக்கிறோம். அதேபோல நீண்ட காலக் கடன் வசதி என்ற வகையில் இந்த ஆண்டு முப்பது கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருப்பதன் மூலம் விவசாயிகள் தங்கள் உற்பத்தியை நல்லமுறையில் பெருக்கிக் கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. விவசாயிகளுக்கு பழைய குத்தகை நிலுவை அத்தனையையும் ரத்து செய்யக்கூடிய சட்டம் கொண்டுவருவது இன்று கடன் சுமையில் இருக்கும் விவசாயிகளுக்கு நல்லதொரு நிவாரணம் அளிக்கக்கூடிய சட்டமாகும்,

மின்வசதியைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் 50,000 கிராமங்களுக்கு மேல் இதுவரையில் மின்வசதி அளித்திருக்கிறோம். இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, 72-73-ம் ஆண்டு இறுதிக்குள்ளாக தமிழ் நாட்டிலுள்ள அத்தனை கிராமங்களுக்கும் மின் வசதி கொடுக்கக்கூடிய திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறோம். எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுப்பதை நாம் ஏற்றுக் கொண்டிருப்பது போல் கிராமப்புறங்களில் தண்ணீர் வசதி செய்து கொடுக்கும் முயற்சியில் நாம் ஈடுபடவேண்டும்.

டாக்டர் கலைஞர் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்கள். இணைப்புச் சாலைகள் அமைப்பதற்கும் கிராமங்களில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பதற்கும் ரூபாய் 300 கோடி வரையில் தேவைப்படுகிறது. அதற்காக லெவி போன்றவற்றை அதிகமாக்கி இணைப்புச் சாலைகளையும், தண்ணீர் வசதி போன்றவைகளையும் செய்யவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்று கிராமங்களில் அவசியமாகத் தேவைப்படுவது குடி தண்ணீர். அதுவும் கடற்கரைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் உள்ள மக்கள் குடி தண்ணீருக்கு மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடற்கரையிலிருந்து ஐந்தாறு மைல்கள் தள்ளி உள்நாட்டில் இருக்கிற கிராம மக்கள் கோடை காலங்களில் கிணற்றை ஆழப்படுத்தினால் உப்புத் தண்ணீர்தான் பெறமுடிகிறது. ஆகவே சில சமயங்களில் சோறுகூட வேகாமல் விரைத்துப் போய் விடுகிறது. ஆகவே, கடற்கரைப் பகுதிகளில் உள்ள கிராமங்களுக்குக் குடி தண்ணீர் வசதி சீக்கிரமாகச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தண்ணீர் வாரியம் மூலமாக இந்தப் பணியைச் செய்யவேண்டும். பஞ்சாயத்துக்களைப் பொறுத்த வரையில் வருமானம் மிகவும் குறைவாக இருக்கிறது. பல பஞ்சாயத்துக்கள்



1972 மார்ச் 8] [திரு. இரா. இராமலிங்கம்]

வரிகளை வசூலித்து மின் கட்டணம் மட்டும் செலுத்தக் கூடிய அளவிற்குத்தான் தங்களது நிதிநிலை வசதியைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே உபரியாக இருக்கிற இந்த இரண்டு கோடி ரூபாயிலிருந்து ஒரு கோடி ரூபாயை ஒதுக்கி தண்ணீர் வாரியம் மூலமாகக் கடற்கரைப் பகுதிகளில் உள்ள கிராமங்களில் பரீட்சார்த்தமாக ஒரு திட்டத்தை உருவாக்கிச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையைப் பொறுத்தவரையில் 72-73-ம் ஆண்டுக்கு 34.69 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் மருந்துகளுக்காக அதிகப்படியான தொகை செலவு செய்யப்பட்டு வருகிறது. சென்னை நகரில் உள்ள டெப்டி டைரக்டர் ஆப் மெடிக்கல் ஸ்டோர்ஸ் டெப்போ அவர்களை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தேன். அவர்கள் சொன்னார்கள், நான் இந்தியாவிலே பல மாநிலங்களிலே பணியாற்றியிருக்கிறேன், தமிழ்நாட்டைப்போல் கடந்த இரண்டு ஆண்டுகளில் அதிகமாக மருந்துக்குச் செலவு செய்யக்கூடிய ஒரு மாநிலம் வேறு எதுவும் இருக்கமுடியாது என்று. அதேபோல் வெளிநாடுகளில் இருந்து வருகிற, இனமாக வருகிற மருந்துகளானாலும்சரி எல்லாவற்றையும் இன்று தமிழக மக்கள் அதிகமாக உபயோகிக்கிறார்கள். தமிழக அரசு அதற்கான முயற்சியில் இன்று ஈடுபட்டிருக்கிறது என்றும் குறிப்பிட்டார்கள்.

கல்வித் துறையில் இந்த ஆண்டு 89.85 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தரமான கல்வியை ஊட்ட வேண்டுமென்று ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்கது.

தொழில் துறையில் இன்று தொழிலாளர்களுக்காக, அவர்களின் நலன்களுக்காக இந்த அரசு மேற்கொண்டுள்ள கொள்கையினை நடுநிலையாளர்கள் ஆதரிக்கிறார்கள். சமுதாய ஏற்றத்தாழ்வு இருக்கிற வரையில் போராட்டங்கள், கிளர்ச்சிகள். தவிர்க்க முடியாத ஒன்று என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆகவே. அவ்வப்போது ஏற்படுகிற கிளர்ச்சிகளை, போராட்டங்களை இன்று நமது முதல் அமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிற கொள்கை அடிப்படையில் தீர்ப்பதுதான் சிறந்த முறை.

ஆலைகளைப் பொறுத்தவரையில், இன்றைக்கு தமிழகத்தில் பல ஆலைத் தொழிலாளிகள் மற்றைய தொழிலாளர்களைவிட ஓரளவுக்கு

நல்ல ஊதியம் பெறுகிறார்கள் என்பது நமக்கு நன்றாகத் தெரியும். ஆலையை விட வேறு பல தொழிலில் ஈடுபட்டு இருக்கும் தொழிலாளிகள் போராடக்கூடிய வசதியற்ற நிலையில் இன்று அல்லல் படுகிறார்கள். மற்ற தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமென்பதற்காக கூலியை நிர்ணயம் செய்வதற்கும், கூலி நிர்ணயக்குழுவை ஏற்படுத்தி, கூலி நிர்ணயம் செய்து நிவாரணம் அளிக்கவேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆலைகளில் வரும் தகராறுகளுக்குக் காரணம், தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்திற்கும் ஏற்படும் தொழில் தகராறுகள்தான் என்பதை இன்று நாம் காண்கிறோம். தொழிலாளர்களுக்கும் ஆலையின் நிர்வாகத்தில் பங்கு கொடுத்தால், ஓரளவுக்கு அந்தத் தொழில் தகராறுகளைத் தீர்க்க முடியும், சமாளிக்க முடியும். பொதுவாக இன்று நடக்கும் கூட்டுறவுத் துறையில் பல ஆலைகளில் நிர்வாகக்குழுவில், தொழிலாளர்களைச் சார்ந்தவர்களும் இயக்குநர்களாக இருக்கிறார்கள். உற்பத்தியை அதிகரித்தல், வேலைப் பளுவை அதிகரித்தல். ஊதிய உயர்வு ஆகிய பிரச்னைகளில் எல்லாம் தொழிலாளர்களோடு கலந்து பேசி, நிர்வாகத்தோடு கலந்து பேசி அப்படிப்பட்ட காரியங்கள் சுமுகமாக தீர்க்கப் பட்டிருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தில் தொழிலாளர்களுக்கு—பொதுத்துறையாக இருந்தாலும் சரி, கூட்டுறவுத்துறையாக இருந்தாலும் சரி—பங்கு கொடுக்கவேண்டும். அதற்காக ஒரு குழுவை அமைக்க இருக்கிறார்கள் என்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும்.

இதேபோன்று தனியார் துறையில் இயங்கிக்கொண்டிருக்கிற ஆலைகளிலும், இப்படி தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்குமிடையே ஒற்றுமை ஏற்படுகிற வகையில், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கு கொடுக்கச் செய்யும் அளவில் இந்தக் குழு அமைக்க முடியுமா என்பதை அரசு ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தில் பங்கு ஏற்பட்டால், தொழிலாளர்களுக்கு ஒரு பொறுப்பு ஏற்படும் என்பதை மனதில் கொண்டு, தனியார் நடத்துகிற ஆலைகளிலும் பப்ளிக் லிமிடெட் கம்பெனிகளிலும், அரசாங்க நிறுவனங்களிலும் நிர்வாகத்தில் தொழிலாளர்கள் பங்கு பெறத்தக்க வகையில் வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கடன் நிவாரணச் சட்டம் கொண்டுவருவதை அறிவித்து இருப்பது பாராட்டக்கூடிய ஒன்றாகும். விவசாயிகள், மில் தொழிலாளர்கள், கடன் சுமையால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், என்பதை மறந்து விடக்கூடாது. குறிப்பாக நகர்ப் புறங்களில் இருக்கும் தொழிலாளர்கள்—எந்தத் தொழிலாளி குடும்பத்தை எடுத்துக்கொண்டாலும் கடன் இல்லாது இருக்க முடியாது—கடன் வாங்கிவிட்டு, அதனால் வாழ்க்கை நடத்துவதற்கு முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஒரு தொழிலாளி 100 ரூபாய் கடன் பெறுகிறான் என்றால் அதற்கு 12 ரூபாய் வரை வட்டி கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 100-க்கு ரூபாய் 144 சதவிகிதம் வட்டி செலுத்தக்கூடிய நிலை இருக்கிறது. இப்படி அதிக வட்டி வாங்குவதைத் தடை செய்ய பல சட்டங்கள் இருந்தாலும், அவைகளால் பலன் இல்லை. அவற்றைக் கடுமையாக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் இப்படி அநியாயமாக வட்டி வாங்குபவர்கள் சமுதாயத்தில் இருக்கும் மக்களை உறிஞ்சும் அட்டைகள், அந்தச் சட்டத்தைப் பலன் உள்ளதாக ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு விடிவு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கிடைக்குமென்று சொன்னார்கள். இதற்கு முன்னால் பாங்குகள் ஒரு சில பேருக்குதான் கடன் உதவியளிக்கிறது. தேசியமயமாக்கினால் ஏழைகளுக்குக் கடன் கொடுக்கும் என்று சொன்னார்கள். ஆனால் தேசியமயமாக்கப்பட்ட பின்னர் ஒரு சிலருக்குத்தான் அந்த பாங்குகள் கடன் கொடுத்தன. ஏழைகளுக்கு அந்த பாங்குகள் நன்மை செய்யும் என்று எதிர்பார்த்தோம். தேசியமயமாக்கப் பட்ட பிறகு ஒரு சிலருக்குக் கொடுக்கப்பட்டு வந்த கடன்களும் இப்போது நிறுத்தப்பட்டு விட்டன. ஆகவே, இந்த பாங்குகள் சாதாரணமானவர்களுக்குக் கடனுதவி அளிக்கவேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு வற்புறுத்தி எழுதவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது இந்த பாங்குகளில் கஸ்டோடியன்கள் என்று இருக்கிறார்கள். அவர்கள் எங்கேயிருந்து வருகிறார்கள்? மாநில அரசுக்கு அந்த வங்கிகளில் எந்தவிதமான பங்கும் கிடையாது. மத்திய அரசை வற்புறுத்தி, அந்த பாங்கு நிர்வாகத்தில் மாநில அரசுக்குப் பங்கு வேண்டுமென்று கூறவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. இரா. இராமலிங்கம்] [1972 மார்ச் 8

தூத்துக்குடியில் பல பெரிய தொழிற்சாலைகள் வந்து இருக்கின்றன. கூட்டுறவுத் துறையில் 71 கோடி ரூபாய் மூலதனத்தில் ஒரு தொழிற்சாலை ஆண்டு ஒன்றுக்கு 66,000 டன் சோடா உப்பும், 660 டன் அம்மோனியா உப்பு தொழிற்சாலை ஒன்றும் 10 கோடி மூலதனத்தில் தூத்துக்குடியில் வர இருக்கிறது. இது போன்று பல பெரும் தொழிற்சாலைகள் அந்தப் பகுதியில் வர வாய்ப்பு இருக்கிறது, அந்தப் பெரும் தொழிற்சாலைகள் குறிப்பாக தூத்துக்குடிக்கு வர டாக்டர் முதல்வர் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு என் தொகுதி மக்களின் சார்பில் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

தூத்துக்குடிப் பகுதியில் உப்பு ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும். உப்புத் தொழிலில் 20,000 குடும்பங்கள் ஈடுபட்டு இருக்கின்றன. சால்ட் பேஸ்ட் இன்டஸ்ட்ரீஸ் என்று சொல்வார்களே, அதாவது உப்பை மூலப் பொருளாகக் கொண்டு பல தொழில்கள் வளர இன்றைக்கும் வாய்ப்பு இருக்கிறது. அரசு அதற்கான ஆராய்ச்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உப்புத்தொழிலை நல்ல முறையில் பாதுகாக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். உப்புத் தொழில் மிகச் சிறப்பாக இப்போது இருக்கிறது. பங்களா தேஷ் ஏற்பட்ட பிறகு தூத்துக்குடியிலிருந்து ஏராளமான உப்பு இப்போது ஏற்றுமதி செய்யப்படுகிறது. தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகம் அமைக்கப்பட்டு விட்டால், மூலப் பொருள்கள் அதிகமாக இந்தத் துறைமுகத்தின் வாயிலாக ஏற்றுமதி செய்ய முடியும், 10 லட்சம் டன் வரையில் நாம் உற்பத்தி செய்ய வேண்டும். தூத்துக்குடி துறைமுகம் நல்லபடியாகச் செயல்படவேண்டுமானால் 10 லட்சம் டன் வரை உப்பு நாம் உற்பத்தி செய்யவேண்டும், இன்றைக்கு தூத்துக்குடியில் 8 லட்சம் டன் தான் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது, இந்த 8 லட்சம் டன் உற்பத்தியில் ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன்தான் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஒரு லட்சம் முதல் 2 லட்சம் டன் வரையில் மேற்கு வங்கத்தில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. ஆகவே, 10 லட்சம் டன்னுக்குமேல் உப்பு உற்பத்தி செய்யப்பட வேண்டுமானால் அங்கே இருக்கக்கூடிய நிலங்கள் பாதிக்கப்படக் கூடாது. அப்படி பாதிக்கப்பட்டால், துறைமுகத்திற்குத் தேவையான 10 லட்சம் டன் உற்பத்தியை நம்மால் செய்யமுடியாது.



1972 மார்ச் 8] திரு. இரா. இராமலிங்கம்]

அரசு சமீபத்தில் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. உப்பு உற்பத்தியாகும் 4,000 ஏக்கர் நிலங்களை இன்றைக்கு தொழில் வளர்ச்சிக்காக ஆர்ஜிதம் செய்வதற்காக அரசு உத்தரவு போட்டிருக்கிறது. அந்த 4,000 ஏக்கர் நிலங்களில் 4 லட்சம் டன் உப்பு உற்பத்தி ஆகிறது. அந்த நிலத்தை ஆர்ஜிதம் செய்வதால் 4 லட்சம் டன் உப்பு உற்பத்தி குறைந்து விடும். ஆகவே நான் இந்த அரசைக் கேட்டுக் கொள்வதெல்லாம், இந்த ஆழ்கடல் துறைமுகம் வந்ததற்குப் பிறகு நாம் எவ்வளவு உப்பு வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யவேண்டுமோ அந்த அளவிற்கு உற்பத்தியைப் பாதிக்காத அளவில் பார்த்துக்கொண்டு அந்த நிலத்தைப் பிறகு ஆர்ஜிதம் செய்யலாம் என்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்த தலைவரவர்களுக்கு நன்றி சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

* திரு. த. சோனையா : துணைத்தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி, பெருமதிப்பிற்குரிய டாக்டர் கலைஞர் அவர்கள் சமர்ப்பித்துள்ள இந்த வரவு-செலவு திட்டத்தில் வரவு ரூ. 397.27 கோடியாகவும், செலவு ரூபாய் 394.78 கோடியாகவும், வருவாய் உபரி ரூபாய் 2'49 கோடியாகவும் இருக்குமென்று கூறி ஒரு உபரி பட்ஜெட்டை இங்கே சமர்ப்பித்து இருக்கிறார்கள். இந்த பட்ஜெட்டிலே பேசுகிற நேரத்தில் உள்ளபடியே நான் பெருமைப்படுகிறேன், பூரிப்பு அடைகிறேன்.

காரணம், எங்கள் பகுதி பஞ்சம், வறட்சி நிறைந்த பகுதி. இராமநாதபுரம் மாவட்டத்தில், அதுவும் கிழக்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதி. நீண்ட நெடுங்காலமாக அந்தப்பகுதி மக்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த பல பிரச்னைகளுக்கு இன்று செயல்முறைத் திட்டங்கள் வந்திருப்பதைக் கண்டு உள்ளபடியே பூரிப்பு அடைகிறேன்.

இதன்மூலம் இராமநாதபுரம் மாவட்ட மக்கள் உள்ளபடியே பூரிப்படைவார்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறேன். குறிப்பாக ஊராட்சி மன்றங்கள் சீர்செய்ய முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்த 1,000 மைல் பஸ் போகும் ரோடுகளை அரசாங்கம் ஏற்றிருப்பதானது, உள்ளபடியே எங்களுக்கெல்லாம் மெத்த

மகிழ்ச்சியைத் தருகிறது. நான் ஊராட்சி ஒன்றியத் தலைவராக இருக்கிற காரணத்தால், கஷ்ட நஷ்டத்தை அறிந்து இந்த அரசாங்கம் செய்திருப்பதைப் பெரும் பெருமையாக ஏற்று, வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

அடுத்து, நீண்ட நெடுங்காலமாக இராமநாதபுரம் மாவட்ட மக்கள் ஏக்கத்தோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த ஒரு முக்கியமான பிரச்னை பாம்பன் பாலம். அது எப்பொழுது வரும்? வருமா வராதா? என்று நீண்ட நெடுங்காலமாக சந்தேகப்பட்டுக் கொண்டிருந்தோம். அந்த மக்களுக்கு, இந்த அரசு, திருப்திகரமாக மத்திய சர்க்காரோடு போராடிப் போராடி நீண்ட காலத்திற்குப் பிறகு இன்று 5.33 கோடி ரூபாயில் அந்தப் பாம்பன் பாலத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நிலைமையை இங்கே கொண்டு வந்திருக்கிறார்கள். உள்ளபடியே, அந்த இராமநாதபுரம் மாவட்ட மக்கள், இந்தத் தடவை இந்தத் தொடர்க் கூட்டம் முடிந்து, இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஊருக்குத் திரும்புகிற பொழுது மாலை போட்டு வரவேற்று மரியாதை செய்ய இரயில்வே நிலையத்திற்குத் திரண்டு வருவார்கள் என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். ஏனென்றால், இந்தப் பாம்பன் பாலப் பிரச்னை இராமேச்வரம் கோவிலுக்குப் போக ஒரு தடையாக இருக்கிறது. இப்பொழுது மக்கள் போகக் கஷ்டப்படுகிறார்கள். இந்தப் பாலத்தைப் போட்டு விட்டால், எண்ணற்றவர்கள், இலட்சோபலட்சம் பேர் இராமேச்வரம் சென்று வருவதற்குப் பெரிய வாய்ப்பாகவும் வசதியாகவும் இருக்கும். இந்த வாய்ப்பையும் வசதியையும் ஏற்படுத்திக் கொடுத்த தமிழக அரசை இராமநாதபுரம் மாவட்ட மக்கள் வரவேற்பார்கள், பாராட்டுவார்கள்.

அடுத்தபடியாக, சிவகங்கைக்கு அருகில் அங்கே அனாதையாகக் கிடந்த 'கிராபைட்' 'கலவம்' என்ற கல் எங்கே பார்த்தாலும் பரவிக் கிடந்தது. அந்தப் பகுதி என்னுடைய தொகுதியாகும். 20 வருஷமாக எனக்கு முன் இருந்தவர்களெல்லாம், இதைப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இருந்தாலும் கூட அது அனாதையாகக் கிடந்தது. அதை எடுத்து, அருமையான தொழிற்சாலை உருவாவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்து, 22 லட்சம் ரூபாய் அதற்கு ஒதுக்கி இருப்பதற்காக, இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.





இன்னொன்று. சென்ற கூட்டத் தொடரிலேயே, இந்த நாட்டிலிருக்கின்ற ஏழை விவசாயிகளுக்குத் தேவையான உரத்தை கடனில் வாங்க வேண்டுமென்றால் அவர்கள் பல வகையில் கஷ்டப்பட வேண்டி இருக்கிறது என்று குறிப்பிட்டேன். வில்லங்க சர்டிபிகேட் வேண்டுமென்று யூனியன் ஆபீசில் காத்திருந்து கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலைமை போக வேண்டுமென்றால். விவசாயிகளுக்கு ஆளுக்கு ஒரு பாஸ் புக் என்று கொடுத்து, அதில் அவர்களுடைய மொத்த நிலம், வாரம், வாங்குகிற கடன் போன்றவற்றைக் குறித்து, உடனடியாகக் கடன் வாங்கி உரம் வாங்கும் வசதியை இந்த அரசாங்கம் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்கள் இந்த மருந்தகங்களைச் சென்று பார்த்து வருவதென்பது மிகக் கஷ்டமான காரியம். ஒவ்வொரு இடத்திலும், ரூபாய் 10 ஆயிரம் 15 ஆயிரம் என்று செலவாகிறது. அப்படிக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒன்றியங்கள், அவற்றை இன்றைய தமிழக அரசிடம் கொடுத்து விடுவது என்று ஒன்று அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இது மிக சந்தோஷமான காரியம் என்று கருதுகிறேன்.

அடுத்து, 'வைகை சீரமைப்புத் திட்டம்'. இந்தத் திட்டத்திற்கு நம் அரசு பணம் ஒதுக்கி, அது அபரிமிதமாகச் செயல்பட்டு வருகிறது. அதற்காகப் பாராட்டுகிறேன்.

அடுத்து, பாப்பியனூர் அருகில் இன்னொரு மதகு கட்டும் திட்டம் இருக்கிறது. இதைத் துவக்க அரசாங்கம் கொஞ்சம் தீவிரமாகவும், வேகமாகவும் செயல்பட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

என் தொகுதி ஊர் ஒன்றில் ஒரு லட்சம் ரூபாய் செலவில் 4 கிணறுகள் வெட்டி, அவைகள் மூலமாக ஒரு கிராமம் வளர்ச்சிக்கு வகை செய்ததற்காக இந்த அரசாங்கம் அனுமதித்ததற்காக, அந்தக் கிராம மக்கள் சார்பில் இந்த அரசுக்கு நான் பாராட்டைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்டிருக்கின்ற மருந்தகத்தை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். மானாமதுரை—ஒரு மேஜர் பஞ்சாயத்து—முனிசிபாலிடியாகும் தருணத்தில் இருக்கிறது. ஆகவே, அந்த

ஊராட்சி ஒன்றியம் அதனை நிர்வகிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் நிலையில் தமிழக அரசிடம் அதனை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த மருத்துவ மனைக்கருகில் இருக்கிற இடைக்காட்டூர் என்ற ஊருக்கு, மதுரை-மண்டபம் சாலைக்கும் வர மக்கள் திண்டாடித்தான் வருகிறார்கள். தண்ணீர் இருக்கிற காலத்தில், பெண்கள் நீந்தி வர மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நான் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களை ஒரு தடவை இடைக்காட்டூருக்கு அழைத்துச் சென்று, மக்கள் படுகிற அவஸ்தைகளை நேரிடையாகவும் எடுத்துச் சொன்னேன். வைகையில் ஒரு பாலம் கட்டித் தரவேண்டுமென்று தமிழக அரசை நான் மிகவும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, கிருதுமால் நதித் திட்டத்திற்கு, பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்கள். அவர் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறேன், கொண்டு வருகிறேன், அதோ வருகிறது, இதோ வருகிறது என்று சொல்லி, அந்தப் பகுதி மக்களை நீண்ட காலமாக நம்ப வைத்துக் கொண்டிருந்தார்கள். அந்த அரசு அந்த நம்பிக்கையை இழந்து விட்ட காரணத்தால், இன்றிருக்கின்ற அரசாவது அந்த மக்களுடைய எண்ணத்தையும் அவர்கள் எண்ணி எண்ணி எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற பிரச்னையையும் தீர்த்து வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருப்பூவணம் கண்மாய் எனக்கு விவரம் தெரிந்த காலத்திலிருந்து தூர்வாராமல் கிடக்கிறது. அதை மனித சக்தியை வைத்து தீவிரப்படுத்த முடியாது. இயந்திர சக்தி மூலமாக அதைச் செய்ய இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்,

திருப்பூவணம் ஒரு மேஜர் பஞ்சாயத்து. அங்கே, குடி நீர் திட்டத்திற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தைச் செயல் முறையில் செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதியில் வாழ்கிறவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடி நீர் தர வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். இன்றைன்று, நம்முடைய கலைஞர் அவர்கள் எந்த மாநிலத்திலும் செய்யாத பெரிய காரியமான பிச்சைக்காரர்கள் புனர் வாழ்வுக்காகத் திட்டமிட்டு, அதன் மூலமாகச் செயல்பட்டு வருகிறார்கள்.





அதே போல், இந்த நாட்டில் இருக்கின்ற, கீழ் மட்டத்திலிருக்கின்ற ரிக்ஷா ஓட்டுகிற தொழிலாளி, கை வண்டி இழுக்கும் தொழிலாளிகளுக்காக ஒரு மறுவாழ்வுத் திட்டத்தை இந்த அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்களுக்குக் கடனாக ரிக்ஷா அல்லது கை வண்டிகளை வாங்கி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அவர்கள் தமிழ்நாடு பூராவும் பரந்து கிடக்கிறார்கள். அவர்கள் மிகவும் ஏழை, எளியவர்கள். உழைத்து, உழைத்து உருக்குலைந்து போன மக்கள். அவர்கள் உழைப்பால் கிடைப்பதை வாடகையாகக் கொடுத்து விட்டு, அரைப் பட்டினி, கால் பட்டினி கிடக்கும் நிலைமை இருக்கிறது. இதை மாற்றி, வண்டியை அவர்களுக்குச் சொந்தமாக்கினால், நிச்சயமாக அவர்கள் வாழ்வு முன்னேறும். அப்படிப்பட்ட திட்டத்தை இந்தத் தமிழக அரசு ஏற்படுத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, இராமநாதபுரம் கண்மாய் பெரிய கண்மாய் கடல் போலிருக்கிறது. 48 மடை உடையது. நீண்ட காலமாக, அந்தக் கண்மாய் மராமத்து செய்யப்படாமலிருக்கிறது. இதை மராமத்து செய்ய, இந்த அரசு 35 லட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறது. இதைக் கண்டு நான் பாராட்டுகிறேன். இப்படிப் பல நல்ல காரியங்களைச் செய்து தந்து கொண்டிருக்கின்ற இந்த அரசை உள்ளபடியே நான் மனதாரப் பாராட்டுகிறேன். வரவேற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கை தமிழக மக்களுக்கு மிக்க மகிழ்ச்சி தரக்கூடிய அறிக்கையாகும். இந்த நிதிநிலை அறிக்கை மிகச் சீராகவும் சிறப்பாகவும், தமிழக மக்களின் நல்வாழ்வுக்கு இந்த சர்க்கார் திடமாக இருக்கிறது என்பதைக் காட்டுகிறதென்று சொல்லி இந்த அறிக்கையை வரவேற்று வணக்கம் சொல்லி இந்த அளவோடு முடிக்கிறேன். நன்றி. வணக்கம்.

* திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, கனம் முதல் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற 1972-73 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இது ஏதோ ஒரு சர்பிளஸ் பட்ஜெட்டாக வந்துவிட்டது என்று பெருமைப்பட்டாலும் எதிர்க்கட்சியில் இருக்கிற நாங்கள் எதிர்க்க

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1972 மார்ச் 8

வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. எதிர்க்கட்சியில் இருக்கிறவர்கள் நல்ல பல யோசனைகளையும் கூறியிருக்கிறார்கள், அவைகளை எல்லாம் அரசு நிரா யோசனை செய்து எதை எதை எடுத்துக்கொள்ள வேண்டுமோ அதை அதை எடுத்துக்கொள்ள முன்வந்தால்தான் அதிக நன்மை அளிக்கும். எதிர்க்கட்சியில் உள்ளவர்களும் ஆயிரக்கணக்கான மக்களுடைய பிரதிநிதிகள் தான். மககளுடைய குரலையேதான் இங்கே ஒலி செய்கிறார்கள் என்பதை எந்த அரசும் மனதில் வைக்க வேண்டும். இதை நான் இந்த பட்ஜெட் உரையில் ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், தொடர்ந்து இந்தச் சபையில் பலமுறை எத்தனையோ இன்சல்ட்ஸ்—இன்சின்யுவேஷன் ஏற்படுகிறது. பேரவைத் தலைவர் அவர்களும், தாங்களும் தான் இந்த சபையின் டீசென்சி—டெக்கரோத்தைக் காப்பாற்ற முன்வரவேண்டும்.

ஏதோ நடந்துவிட்ட சம்பவத்தை மட்டும் நான் இங்கே கூற விரும்பவில்லை என்றாலும், இந்தச் சந்தர்ப்பத்தில் நான் அதைக் கூறாமலும் விட முடியாது. ஒரு ரூலிங் கொடுப்பது—பின்னர் பாயின்ட் ஆப் எக்ஸ்ப்ளநேஷன் என்கிற முறையில் அதையே எழுப்புவது, பின்னர் ரூலிங் கொடுப்பது, மறுபடியும் இந்த ரூலிங்கையே மாற்றுவது என்பது எல்லாம் சரியான முறையை ஏற்படுத்தாது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்பு கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பொதுவாக நீங்கள் சொல்வது சரியல்ல.

That is not a baad precadent. That will not spoil the decorum of the House. Every day trend is changing. Every day new ideas are coming.

புதிய, புதிய சந்தர்ப்பங்கள், அனுபவங்கள் வளர்ந்து வருகிற நேரத்தில் முன்பு கொடுத்த ரூலிங்குகளும் கூடத்தான் மாறு கின்றன. சுப்ரீம் கோர்ட்டிலே கூட ஒரு நாள் கொடுத்த ரூலிங் அடுத்த நாள் மாறுகிறதைப் பார்க்கிறோம்.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் தாங்கள் தயவு செய்து ஒரு விளக்கம் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன், டெபுடி ஸ்பீக்கர் கொடுத்த ரூலிங்கை, 



1972 மார்ச் 8] [திரு. ஜே. ஜேம்ஸ்]

ஸ்பீக்கர் கொடுத்த ரூலிங்கை அடுத்த நிமிஷத்திற்கே மாற்றிக் கொள்ளலாம் என்றால் — கொடுக்கிற ரூலிங் அங்கத்தினர்களைக் கட்டுப்படுத்துமா ? எத்தனை காலம் கட்டுப்படுத்தும் ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்த ரூலிங் கொடுக்கிற வரை இந்த ரூலிங் கட்டுப்படுத்தும்.

THIRUMATHI JOTHI VENCATACHALLUM : Sir, to keep up the decency and decorum of this Honrable House, it is the duty of the Hon. Speaker or the Deputy Speaker to see that it is maintained. That is my point. I am not going into the merits or demerits of the question. Whether the ruling of the Deputy Speaker can be overruled by the Hon. Speaker, is not my point. As Members of the Opposition, we have been functioning in this House for some years and to safeguard the interests of the Opposition, I request that this sort of thing should not occur again. I have taken this opportunity to express our feelings about it and that is all.

MR. DEPUTY SPEAKER : I give an assurance that the Chair will never go against the rules and conventions which we have been following so far. Yesterday, we discussed a controversial subject and we might have differed with the Chair and that is a different matter and I do not think that that will spoil the decorum the House.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : All right, Sir. Let us leave it at that. Now I want to refer to an important part of the House.

திரு. ஜே. ஜேம்ஸ் : சார். எ பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன், எப்போதும் முன்னால் கொடுக்கப்பட்ட ரூலிங்கை பின்னால் மாற்றிக்கொள்ளலாம் என்றார்கள். அப்படியானால் சபாநாயகர் கொடுத்த ரூலிங்கை டெபுடி ஸ்பீக்கர் மாற்ற முடியுமா? மாற்றலாம் என்பதற்கு நமது விதிகளில் இடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இந்த இடத்தில் யார் உட்கார்ந்திருந்தாலும் அந்த நேரத்தில் இருக்கிற சந்தர்ப் பத்தைப் பொறுத்து நமது விதிகளுக்குட்பட்டு ரூலிங் கொடுக்கப்

படுகிறது. லண்டன் பார்லிமெண்டு கன்வென்ஷன்களைப் பார்க்கிறோம். அப்படியே அவற்றைப் பின்பற்ற வேண்டும் என்ற அவசியம் கிடையாது. நமக்கு சில விதிகள் இருக்கின்றன. இந்த அசெம்பிளி ரூல்சுகளுக்கு விரோதமாக முடிவு எடுக்க முடியாது— எடுக்கப் போவதும் இல்லை.

நமது விதிகளுக்குட்பட்டு, 'வெளியில் இருக்கிற ஒருவரைப் பற்றி இந்தச் சபையில் பேசக்கூடாது' என்று நான் ரூலிங் கொடுத்தேன். "நானாக இருந்தால் அந்த முடிவைச் சொல்லியிருக்க மாட்டேன்" என்றார் ஸ்பீக்கர். பத்திரிகைகளில் கூட சரியான முறையில் அது விமர்சனம் செய்யப்படவில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** டெபுடி ஸ்பீக்கரை மதிக்கவில்லை என்று அர்த்தம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அந்தக் கருத்து சரியானது அல்ல.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I do not find in the Assembly Rules any rule which gives power to revoke the ruling given by the Hon. Speaker or Deputy Speaker or Temporary Chairman......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான் திருப்பிக் கேட்கிறேன். ஒரு ரூலிங் கொடுத்தால் அதை மாற்றக் 'கூடாது' என்று விதி இருக்கிறதா? ஒரு கேசில் ஒருவிதமாக தீர்ப்புக் கொடுக்கிறார்கள். அதேபோன்ற கேசில் சுப்ரீம் கோர்ட்டிலேயே வேறுவிதமாகத் தீர்ப்பு வந்து விடுகிறதே.

**திருமதி ஜோதி. வெங்கடாசலம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதில் வீணான காலத்தையும் எனக்குச் சேர்த்துத் தர வேண்டும். இந்த ஆண்டு வரவு செலவுத்திட்டம் ஒரு உபரி—சர்ப்ளஸ் பட்ஜெட் என்று நாம் பெருமைப்பட்டாலும் கூட இதிலே முக்கியமாக சில கருத்துக்களை மாத்திரம் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு விலைவாசி எந்த அளவில் உயர்ந்திருக்கிறது என்று பார்க்கும்போது அந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த ஒரு சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஏற்படுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்கள். சிவில் சப்ளை கார்ப்பரேஷன் ஏற்படுத்தினாலும் பொது



மக்களுக்குக் கொடுக்க வேண்டிய அத்தியாவசியமான பண்டங்களின் விலை எப்படி நிர்ணயிக்கப்படும் என்பதுபற்றி அரசு கவனம் செலுத்த வேண்டும். கார்ப்பரேஷன் ஏற்படுத்தலாம். போர்டுகள் என்று ஏற்படுத்தலாம். நமக்கு ஏற்பட்டிருக்கிற அனுபவங்களைப் பார்க்கிறபோது அவற்றினால் ஓரளவுதான் நன்மை ஏற்படுகிறதே தவிர முழுக்க முழுக்க நாம் நினைக்கின்ற அளவு பயன்படுவதில்லை. பண்டங்களின் விலையேற்றம் குறைந்தால் தான் மக்கள் வாழ்வில் நன்மை ஏற்படும். இன்றைக்கு விலைவாசி ஏகமாக உயர்ந்துவிட்டது--காங்கிரஸ் ஆட்சியில் ஏறவில்லையா என்று திருப்பிக்கேட்பார்கள்--ஏறியிருந்தாலும் விலைவாசியைக் குறைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். சர்க்கரையில் இருந்து, அரிசியில் இருந்து எல்லா உணவுப் பொருள்களின் விலையும் ஏறியிருக்கிறது. ஒருவர் அரிசி ஒரு ரூபாய் பத்து காசுக்குக் கிடைப்பதாகச் சொன்னார். அந்த அளவில் இல்லை. நடுத்தர மக்கள் வாங்கும் அரிசி 3 ரூபாய் ஒரு படி. அந்த அளவு உயர்ந்துபோகிறது. இந்த நிலைமையில் உடனடியாக அரசு உணவுப் பொருள் விலையைக் குறைப்பதற்கு முன்வரவேண்டும். அரசாங்க ஊழியர்கள் கடன் வாங்கி மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கடன் நிவாரண சட்டம் ஒன்று கொண்டு வரப் போவதாகச் சொன்னார்கள். அரசாங்க ஊழியர்களின் கடன் பளுவைக் குறைப்பதற்கும் வழி வகை செய்ய வேண்டும். அதற்கு ஒரு பொறுக்குக் குழுவை அமைத்து நல்லபடியாகச் செய்ய வேண்டும். ஏற்கெனவே 'மணி லெண்டர்ஸ் ஆக்ட்' என்று இருக்கிறது. எந்த அளவிற்கு வட்டி வாங்கப்பட வேண்டுமென்று சட்டத்தில் இருந்தாலும், நடைமுறையில் வட்டி அதிகமாகத்தான் மணிலெண்டர்ஸ் வாங்குகிறார்கள். புதிதாக சட்டம் கொண்டுவரும்போது இதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

இன்னொரு முக்கியமான பிரச்சினை தொழிலாளர் பிரச்சினையாகும். பல இடங்களில் தொழிற்சாலைகள் எல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு கோயம்புத்தூரில் மில்கள் திறக்கப்படுகிற நிலை இருந்தாலும்கூட, சென்னை போன்ற நகரில் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சென்னையிலே இருக்கிற சிம்ப்ஸன் பிரச்சினை இன்னும் தீராமல் இருக்கிறது. அரசாங்கம் இதற்குக் கட்சி மூலம் பூசி தக்க நடவடிக்கைகளை எடுக்காமல்

இருக்கிறது. இதனால் தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இதற்கு ஒரு வயா மீடியாவாகவாவது ஒரு நல்ல ஏற்பாட்டை உடனடியாகச் செய்ய வேண்டும். ஒரு குடும்பத்தில் மூன்று பேர்கள் தொழிற்சாலையில் வேலை செய்பவர்களாக இருந்தால், அந்த மூன்று பேரும் வேலையில்லாமல் கஷ்டப்படும் போது அந்தக் குடும்பம் எவ்வளவு கஷ்டப்படும், அந்தக் குடும்பம் எந்த அளவிற்கு க்ஷீணித்துப்போகும் என்பதை அரசினர் உணர வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கோவை, மதுரை போன்ற இடங்களில் வேலைநிறுத்தங்கள், கிளர்ச்சிகள் நடைபெற்றன. அதிலிருந்து நமக்கு ஒரு உண்மை, தெளிவான முறையில் தெரிகிறது. ஆகவே, அந்தப் பிரச்சினைகளை ஆராய்ந்து, தக்க முடிவு எடுப்பது அரசாங்கத்திற்குச் சுலபமாக இருக்கிறது. ஆனால் சென்னையில் சிம்சன் பிரச்சினை என்ன என்று தெரியவில்லை. தொழிலாளர்களுடைய கோரிக்கை என்ன என்றே தெரியவில்லை. அதற்காக அறுவர் கமிட்டியை அமைத்தோம். அறுவர் கமிட்டியாலும் சமாளிக்க முடியாத அளவிற்கு நிலைமை இருந்ததால் அவர்கள் விலகிவிட்டனர். அறுவர் கமிட்டி கலைக்கப்பட்டுவிட்டாலும் அதனுடைய ஆலோசனைகளின்படி அரசு சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டுதான் வருகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, சாமர்த்தியசாலியான முதலமைச்சர் அவர்கள், சிம்சன் பிரச்சினையைத் தீர்க்க முடியவில்லையென்றால், நாங்கள் அதை நம்பத் தயாராக இல்லை. இது தொழிலாளர்களுடைய பிரச்சினையாக இருப்பதால், தொழிலாளர்களுடைய கோரிக்கை என்ன, வேண்டுகோள் என்ன என்பதைக் கேட்டறிந்து, துரிதமாகத் தீர்வு காண வேண்டும். இது தொழிலாளர்களுடைய குடும்பத்தைப் பாதிக்கின்ற நிலையாக இருப்பதால் உடனடியாக அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பசுமைப்புரட்சியின் காரணமாக வேளாண்மைத் துறையில் விளைச்சல் அதிகமாக ஆகியிருக்கிறது. விவசாயிகளுக்குப் பல துறைகளிலும் நிவாரணங்கள் அளிக்கக்கூடியதாக இந்த பட்ஜெட் இருக்கிறது. என்னுடைய தொகுதியைப்



பொறுத்த ஒன்றிரண்டு குறைகளை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளலாம் என்று கருதுகிறேன். விவசாயம் செய்யும் குடியானவர்கள் கரும்பு, நெல், வாழை போன்ற பயிர்களைப் பயிரிடுகிறார்கள். இம்மாதிரியான பயிர்களைப் பக்குவமாகப் பயிரிட்டு அறுவடையாகும் சமயத்தில் அந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் இல்லையென்று சொன்னால் அவன் உழைத்த உழைப்பின் பலன் என்ன? அந்தப் பயிர்களின் நிலைமை என்ன? என் தொகுதியில் உய்யகொண்டான் வாய்க்கால், மாயனூர் கட்டளைக் கால்வாய், பெறுவளை வாய்க்கால் போன்ற வாய்க்கால்களில் தண்ணீர் இல்லாமல் கிராமத்திலுள்ள விவசாய மக்கள் பெரிதும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசு உடனடியாக உத்தரவு பிறப்பித்து ஒரு மாத காலம் வரைக்குமாவது, அறுவடையாகிற வரையிலுமாவது தண்ணீர் விட வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக. மின்சார இணைப்பு எல்லாக் கிராமங்களுக்கும், ஏழை மக்கள் இருக்கும் இடங்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. 20 ஆயிரம், 30 ஆயிரம், 50 ஆயிரம் கிராமங்களுக்கு மின்னொளி அளித்திருப்பதாகக் கூறி இருக்கிறார்கள். எந்த எந்தக் கிராமங்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள், எந்தெந்த மாவட்டங்களில் எவ்வளவு பூர்த்தியாகியிருக்கின்றன என்கிற கணக்கை வைத்துக்கொள்ள வேண்டும். என்னுடைய தொகுதியில் ஒரு பஞ்சாயத்து யூனியனில் இருக்கும் அரிசன மக்கள் வாழ்கின்ற இடங்களில் குறைந்தபட்சம் 11 கிராமங்களில் மின்விளக்கு இல்லாத நிலைமை இருக்கிறது. வெளிச்சமே இல்லாமல் அவர்கள் இருளிலே மூழ்கியிருக்கிறார்கள் ஸ்ரீரங்கம் தொகுதி தொடர்ச்சியாக காங்கிரஸ் தொகுதியாக இருக்கின்ற காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, அந்தக் கிராமங்கள் எல்லாம் மின்விளக்குகள் இன்றி இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. என் தொகுதியைப்பற்றிய மனு வேண்டுமென்றால் தனியாக எழுதித் தருகிறேன். அரசு அந்தக் கிராமங்களுக்கு விளக்குகள் போட வசதி செய்துதரவேண்டும்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து யூனியன்களிலுள்ள டிஸ்பென்சரிகளை அரசு எடுத்துக்கொள்வதுபற்றி மிக்க மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் பஞ்சாயத்து யூனியன்களில் நிதிவசதி இல்லாத காரணத்தால் மக்களுக்கு வேண்டிய மருந்துகள் அளிக்க முடியாமல் இந்த டிஸ்பென்சரிகள் இயங்கி வந்தன. மக்களுக்குத்

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1972 மார்ச் 8

தேவையான மருந்து கொடுக்க முடியாத நிலையில் இருந்தன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள். இன்றையதினம் 200 மருந்தகங்களை அரசு ஏற்க இருக்கிறது. ஆகையால் அந்த மருந்தகங்களில் வேலையில்லாத மருத்துவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். டெபுடி டைரக்டர் ஆஃப் மெடிகல் ஸ்டோர்ஸ் அவர்களுடன் பேசிக்கொண்டிருந்தபொழுது, மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்குத் தமிழ்நாட்டில்தான் அதிகமான மருந்துகள் செலவாகின்றன என்று குறிப்பிட்டதாகவும் இரண்டு ஆண்டுகளாகத் தமிழகத்தில் அதிகமான மருந்துகள் செலவாகின்றன என்பதாகவும் இங்கு எனக்கு முன் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் குறிப்பிட்டார். அதைக் கேட்டதும் எனக்கு ஒரு கவலை ஏற்பட்டது. ஒரு வேளை தமிழகத்தில் வியாதி அதிகமாகிவிட்டதோ இந்த இரண்டு ஆண்டுகளில் என்று நினைத்தேன். மற்றவைகளைப்பற்றி அந்த அந்த மானியம் வரும்போது சொல்லிக்கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

அடுத்தபடியாக பென்ஷன் பற்றியது, பென்ஷன் தொகையைக் குறைந்த பட்சம் 50 ரூபாய் என்ற அளவிற்கு உயர்த்தித் தர வேண்டும். இன்றைக்கு முதியோர் பென்ஷன் என்று 20 ரூபாய் தரப்படுகிறது என்று சொன்னால் உடனே உங்கள் ஆட்சிக் காலத்தில்தானே கொடுத்தது என்று சொல்லிர்கள். இப்பொழுது இருக்கும் நிலைமைகளையொட்டி, இப்பொழுது இருக்கும் 20 ரூபாயுடன் இன்னும் முப்பது ரூபாயைக் கூட்டி 50 ரூபாயாகக் கொடுக்க வேண்டும். இன்று பல துறையில் பணியாற்றி 50 ரூபாயைவிடக் குறைந்த பென்ஷன் கிடைக்கிறவர்களுக்கு எல்லா இனங்களுக்கும் 50 ரூபாய் என்ற அளவில் கொடுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஏழை மக்களுக்கு உதவி செய்கிறோம் என்று சொல்லி இன்றைக்கு மதுவிலக்கை ரத்து செய்திருக்கிறீர்கள். ஏழைகளுக்கு நன்மை ஏற்பட்டதா? நான் அதிகப்படியாகச் சொல்லவில்லை. உள்ளதை உள்ளபடிதான் சொல்ல எனக்குத் தெரியும். மதுவிலக்கு ரத்து செய்த காரணமாக ஏதோ வருமானம் கிடைத்ததால் உபரி பட்ஜெட் தயாரிக்க முடிந்தது என்று சொல்லலாம். இது ஏழை மக்கள் கொடுக்கக்கூடிய வரி, ஏழை மக்களிடத்திலிருந்து வாங்கக்கூடிய வரி என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். ஆகவே, மதுவிலக்கு ரத்தை மீண்டும் பரிசீலனை



1972 மார்ச் 8] [திருமதி ஜோதி வெங்கடாசலம்]

செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் கள்ளுக் கடைகளும் சாராயக் கடைகளும் தான் கள்ளு, சாராயம் அதிகமாக விற்கின்றன. ஏழை மக்கள் எல்லாம் பெரும்பாலும் அங்கேதான் செல்கிறார்கள். ஒயின் கடைகள் எல்லாம் திறந்திருந்தாலும் அவர்கள் அங்கே போவதில்லை. போக இயலாது. எனவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த டெபுடி ஸ்பீக்கர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த மன்றத்திலே வைத்துள்ள 1972-73 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை உளமாரப் பாராட்டி வரவேற்று என்னுடைய கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையில் சமதர்மக் கொள்கைக்கு நாட்டு மக்களை அழைத்துச் செல்லக்கூடிய வகையிலே ஒரு சோஷலிஸம் நிறைந்த நிதிநிலை அறிக்கையை நம்முடைய முதல்வர் அவர்கள் மன்றத்திலே வைத்திருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு குடும்பத்திற்கு 60 ஏக்கர் என்று இருந்ததை இன்றைக்கு 40 ஏக்கர் என்ற அளவிலே குறைத்துக் கொண்டு வந்திருப்பதும் பாராட்டுக்குரிய ஒன்றாகும். அதோடு இன்றைக்கு நிலத்திற்கு மட்டும் உச்சவரம்பு அல்ல, நகரச் சொத்துக்களுக்கும் உச்ச வரம்பு கொண்டு வரக்கூடிய முயற்சியினை நம்முடைய முதல்வர் அவர்கள் எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இதைப்பற்றி எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் எதிர்க்கட்சியிலே இருப்பவர்கள் நகரச் சொத்துக்களுக்கு உச்ச வரம்பு கொண்டுவர வேண்டுமென்று சொல்லாததற்குக் காரணம் நகரத்திலே பெரும் நிலங்களை வைத்துக்கொண்டும் பெரும் மாளிகைகளைக் கட்டிக் கொண்டும் இருப்பவர்கள் அவர்களுக்குப் பக்கபலமாக இருக்கிறார்கள் என்ற காரணத்தினாலேதான் அப்படிச் சொல்வதற்கு அவர்கள் அஞ்சுகிறார்கள். இருந்தாலும் சமதர்மக் கொள்கையை இந்த நாட்டிலே நிலைநிறுத்த வேண்டுமென்று முயற்சியெடுத்து வரும் நம்முடைய முதல்வர் அவர்கள் இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. எஸ். ஆறுமுகம்] [1972 மார்ச் 8]

சேலம் உருக்காலை பற்றிப் பேசப்படுகிறது. இது என்னுடைய தொகுதிப் பிரச்னையாக இருக்கிற காரணத்தினாலே இதை மட்டும் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். 1964ஆம் ஆண்டு 24 ஆயிரம் ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய ஒப்புக் கொள்ளப் பட்டது. அப்படி 24 ஆயிரம் ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்ய நோடிபிகேஷன் கொடுத்த பிறகு இப்பொழுதுதான் இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் இரண்டாயிரம் ஏக்கர் நிலங்களை உடனடியாக எடுத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படுகிறவர்களுக்கு வீட்டு மனைகள் கொடுக்க வேண்டுமென்றும், 1964-ஆம் ஆண்டு நோடிபிகேஷனில் சேர்க்காத சில கட்டடங்கள், கிணறுகள் இப்பொழுது சேர்க்கப்பட்டிருப்பதால் அவற்றையெடுக்கும்பொழுது அவற்றிற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்றும், 1964ஆம் ஆண்டு விலை நிர்ணயம் குறைவு ஆகையால் இன்றைக்கு உள்ள மதிப்பைப் போட்டு அவர்களுக்கு நஷ்ட ஈட்டுத் தொகையை அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கும், வேறு பல பாதுகாப்பு நிதிக்கும் வசூல் செய்ய வேண்டுமென்று முதல்வர் அவர்கள் வேண்டுகோள் விட்டதை நாட்டுமக்கள் ஏற்றுக்கொண்டு நிரம்ப நல்ல ஆதரவு கொடுத்து நிதியை வாரி வழங்கிக் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். ஆனால் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதியிலே மோசடி நடந்தவிட்டது, யுத்த நிதியிலே மோசடி நடந்துவிட்டது என்று இன்றைக்கு எதிர்த்தரப்பிலே உள்ளவர்கள் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். யுத்த நிதி வசூல் செய்வதில் தமிழக அரசு எவ்வளவு கண்ணியமான முறையில் நடந்து வருகிறது என்பதைப் பார்க்கிறோம். 1965-ஆம் ஆண்டு அவர்கள் ஆட்சியிலே இருந்தபொழுது யுத்த நிதி வசூல் செய்தார்களே, அப்பொழுது தங்கக் கட்டிகளை, நகைகள் போன்றவற்றை எல்லாம் வசூல் செய்தார்கள். பல கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புக்கு வசூல் செய்தார்கள். அப்பொழுது சொல்லப்பட்ட குற்றச்சாட்டுகள் பல நகைகள் வாங்கினார்கள், தங்கக்கட்டிகள் வாங்கினார்கள் அவையெல்லாம் ஒழுங்காகக் கணக்கிலே கொண்டு வரவில்லை என்று நாங்கள் எல்லாம் குற்றங்கள் சாட்டியிருக்கிறோம். இப்படிப்பட்ட குற்றத்திற்கு ஆளானவர்கள்தான் இன்றைக்கு, நம் மீது குற்றம் சாட்டுகிறார்கள். நகைகள்



1972 மார்ச் 8] [திரு. எஸ். ஆறுமுகம்]

வேண்டாம், பணமாகக் கொடுங்கள், ரசீது கொடுங்கள் என்று நாணயமாகச் செயல்படுகிற அரசைத் தப்பாக யுத்த நிதி வசூல் எங்கோ போய்விட்டது என்று சொல்கிறார்கள். அவர்களை எங்களுக்கு 1965 ஆம் ஆண்டிலேயே தெரியும். சென்னை நகரத்திலே எங்கே பார்த்தாலும் சில வால் போஸ்டர்களை நாம் பார்க்கிறோம். சிண்டிகேட் இண்டிகேட் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சில மாணவர்கள், நட்சத்திர இரவு என்ற பெயரில் தேசியப் பாதுகாப்பு நிதி திரட்டியதில் மோசடி நடந்துவிட்டது என்று எங்கு பார்த்தாலும் போஸ்டர்கள் ஒட்டியிருக்கிறார்கள், விளம்பரம் செய்திருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். 1965-ஆம் ஆண்டிலே அவர்கள் பாதுகாப்பு நிதி வசூல் செய்தது நமக்கு எல்லாம் தெரியும். இன்றைக்கு அவர்கள் நம்மைப் பார்த்து மோசடி நடந்துவிட்டது மோசடி நடந்துவிட்டது என்று சொல்வதைப் பார்த்தால் அவர்கள் நாட்டு மக்களை எப்படியாவது திசை திருப்பப் பார்க்கிறார்கள் என்றுதான் பொருள். மக்களை எப்படியாவது திசை திருப்பப் பார்க்கிறார்கள் என்றுதான் பொருள். பெருந்தலைவர் என்று சொல்லிக் கொண்டிருப்பவர், ஏழை பங்காளர் என்று சொல்லிக் கொண்டிருப்பவர் இன்றைக்கு இந்த ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று சொல்கிறார். முதலமைச்சர் அவர்கள் மூலமாக நான் சொல்லிக் கொள்கிறேன்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** பெருந்தலைவர் இந்த ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறார் என்று சொன்னார்கள். பெருந்தலைவர் எந்த இடத்திலும் அப்படிச் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** பெருந்தலைவர் என்று சொன்னாலே அவர்களுக்குக் காமராஜர் ஞாபகம் தான் வருகிறது, இருக்கட்டும் பரவாயில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** காமராஜ் என்று கூட அவர்கள் சொல்லவில்லை, அதைக் கற்பனை செய்துகொண்டு பேசிக்கொண்டிருக்கிறார் நண்பர்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** காமராஜர்தான் இன்றைய தினம் அப்படிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், சேலத்திலே கூட்டம் நடந்தது. இந்த ஆட்சியைக் கவிழ்ப்பேன் என்று சொல்கிறார்,

கவிழ்ப்பேன் என்று சொல்வது சதிச்செயல் ஆகும். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக ஆட்சியைச் சதிசெய்து கவிழ்ப்பேன் என்று சொல்வது மாபெரும் குற்றமாகும். * *

• • •

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, இந்த மன்றத்தினுடைய மரபுகளை நாம் அனைவரும் கட்டிக் காத்திட வேண்டும். இதிலே எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற பாகுபாட்டுக்கு எந்தவிதமான இடமும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் கூறிய வார்த்தைகள் உள்ளபடியே இந்த மன்றத்திலே பேசக்கூடிய வார்த்தைகள் அல்ல. காங்கிரஸ் கட்சித் தலைவர் காமராஜர் அவர்கள் எந்த இடத்திலும், திரு. ஜேம்ஸ் சுட்டிக்காட்டியதைப்போல், இந்த அரசைக் கவிழ்ப்பேன் என்று கூறியதாக நானும் படிக்கவில்லை. அவர்கள் சொல்லியிருப்பது அவர்களாகவே கவிழ்ந்து போகட்டும் என்ற அளவிலே தான் குறிப்பிட்டு இருக்கிறார்கள், கவிழ்ப்பேன் என்று கூறியதாகத் தெரியவில்லை.

• • •

**திரு. எஸ். ஆறுமுகம்:** அவர்கள் இந்த ஆட்சியை. பணக்காரர்கள் பக்கம் சென்றுவிட்டது, பணக்காரர்களுக்கு வக்காலத்து வாங்கிவிட்டார்கள் என்று பேசிக் கொண்டிருக்கிறார்கள். சுதந்திராக் கட்சியிலே இருப்பவர்களும் சேர்ந்துகொண்டு பேசிக் கொண்டிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே 1967-ஆம் ஆண்டிலே ஏற்றுக்கொண்ட முதல் இன்றைக்கு வரை நிதிநிலை அறிக்கை ஒவ்வோர் ஆண்டும் சமர்ப்பிக்கப்படுகின்ற நேரத்திலேயும் எந்த முதலாளிக்காவது அல்லது எந்த நிலப்பிரபுக்காவது சலுகைகள் காட்டியிருக்கிறதா என்பதை ஆதாரத்தோடு எடுத்துக்காட்ட வேண்டும். பஸ் முதலாளிகளுக்குத் துணை போயிருக்கிறதா என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். தனிப்பட்ட முதலாளிகளுக்குத் துணைபோய் இருக்கிறதா என்பதைச் சொல்லவேண்டும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான் முதலாளிகள் ஆரம்பமாகிவிட்டார்களா, முதலாளிகள் உதயமாகிவிட்டார்களா என்பதை எடுத்துச் சொல்ல வேண்டும். வெள்ளைக்காரன் காலத்திலாவது

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.





நிலப்பிரபுக்கள் வந்தார்கள். காங்கிரஸ் ஆட்சியின் இருபது ஆண்டுக் காலத்திலேதான் மில் முதலாளிகள் வந்ததைப் பார்க்கிறோம், பஸ் முதலாளிகள் வந்ததைப் பார்க்கிறோம். இவ்வளவும் இருப்பதைக் காங்கிரஸ்காரர்கள் மறந்துவிட வேண்டாம், நாட்டு மக்களுக்கு இது தெரியாதது அல்ல. நாட்டு மக்களுக்குத் தெரிந்திருக்கின்ற காரணத்தினால்தான் சமதர்மக் கொள்கையை ஏற்றுக்கொண்டு இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக அரசை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டுப் போசுவதன் மூலம் மக்களைத் திசை திருப்பிவிட்டு ஆளுகின்ற பொறுப்புக்கு வந்துவிடலாம், எப்படியாவது இந்த நாற்காலி கிடைக்காதா என்று எண்ணிக்கொண்டு சொல்கிறார்கள். உங்களைப் பொதுமக்கள் அடையாளம் கண்டு கொண்டிருக்கிறார்கள், நீங்கள் பேராசை கொண்டவர்கள் என்று. டி.வி.எஸ். பஸ் நிறுவனங்களை உருவாக்கியவர்கள் நீங்கள், இன்றைக்கு அதைப் பொதுவுடைமையாக்கியிருக்கிறோம் நாங்கள். எ.பி'டி. நிறுவனத்தை உருவாக்கியது காங்கிரஸ் ஆட்சி, இன்றைக்குப் பொதுவுடைமையாக்கப்பட்டிருப்பது எங்கள் காலத்திலே. ராமனுக்கு அப்புறம் எத்தனை ராமனடி என்று சொல்லுமளவில் ராமன் அண்ட் ராமன் என்ற பஸ் நிறுவனத்தை உருவாக்கியவர்கள் உங்கள் கட்சி, உங்கள் காலத்திலே உருவாக்கப்பட்டது. இன்றைக்கு அது தேசிய மயமாக்கப்பட்டது எங்கள் காலத்திலே.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** டி.வி.எஸ். பொதுவுடைமை ஆக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நஷ்ட ஈட்டுத்தொகை எவ்வளவு என்பதையும் சேர்த்துச் சொன்னால் அவர்களுடைய சமதர்மத்தின் அடிப்படையை நாம் புரிந்து கொள்ளலாம்.

**திரு. எஸ். ஆறுமுகம்:** அமைச்சர் இருக்கிறார்கள், அவைகளையெல்லாம் அமைச்சரிடத்தில் கேட்டுத் தகவல் பெற்றுக் கொள்ளலாம். அதை வைத்துக் கொண்டு பேசுவதற்கும் சந்தர்ப்பம் கிடைக்கும். இன்றைக்கு இப்படிப்பட்ட பஸ்கள் பொதுவுடைமையாக்கப்பட்டு தொழிலாளர்கள் வாழ வேண்டும். பொதுவுடைமைத் தத்துவத்தைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லும் எங்களைப் பார்த்து முதலாளி பக்கம் போய்விட்டார்கள். போய்விட்டார்கள் என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பதன் மூலம் . . . . ,

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I take very strong objections. It is not Parliament.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** ஒப்பாரி என்று சொல்வது பார்லிமெண்ட்ரி அல்ல என்று தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே மறுபடியும் அதை உபயோகிக்காமல் இருப்பது நல்லது.

**திரு. எஸ். ஆறுமுகம் :** முன்பு சொல்லியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தமிழில் வேறு எவ்வளவோ வார்த்தைகள் இருக்கின்றன, அதைச் சொல்லுங்களேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** காங்கிரஸ் கட்சியிலே இருப்பவர்கள் அங்கலாய்த்துக் கொள்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : What is the capital involved?

MR. DEPUTY SPEAKER : He is only a Member and not a Minister. How can he answer?

THIRU K. M. SUBRAMANIAM : Have I not got right to seek a clarification? What is the capital involved in ten buses?

**திரு. எஸ். ஆறுமுகம் :** அங்கலாய்த்துக் கொள்கிறார்கள் என்பதை மாற்றிக்கொள்ள வேண்டுமென்றால் நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள் என்று சொல்லலாமா ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அதைவிட ஒர்ஸ்ட்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** ஆகவே, பொதுவுடைமைக் கொள்கைகளை இன்றைக்கு ஏற்றுச் செயல்படுத்தும் இந்த ஆட்சியைப் பார்த்து, எங்கள் தலைவரைப் பார்த்து, இந்த அமைச்சரவையைப் பார்த்து இன்றைக்கு நாட்டு மக்களிடத்தில் அவர்கள் பேசுவது, இங்கேகூட மன்றத்தில்கூட சொன்னார்கள். பொதுமக்களால் பேசப்படும் வதந்திகளைத்தான் நாங்களும் பேசுகிறோம் என்று சொல்கிறார்கள். நீங்கள் வதந்திகளை நம்பி நம்பிப் பேசினீர்கள். வதந்திகளை மக்களிடத்திலே பரப்பப் பார்த்தீர்கள். 1967-க்குப் பின்னால் என்ன சொன்னீர்கள் ? 6 மாத காலத்திற்குத்தான் இந்த ஆட்சி என்று சொன்னீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** . என்னைப் பார்த்துச் சொல்லுங்கள்.



**திரு. எஸ். ஆறுமுகம் :** அதைவிட 1967-க்குப் பின்னால், பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு இந்த ஆட்சி எவ்வளவு காலத்திற்கு இருக்கப் போகிறது என்று பொறுத்திருந்து பார்ப்போம் என்று கூறினார்கள். அவர்களுக்குள்ளாகவே அடிபட்டுக் கொண்டு அவர்களுக்குள்ளேயே பிரிந்து போய் விடுவார்கள் என்று கனவு கண்டார்கள். இதையும் மீறி 1971-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பத்திரிகை பலத்தை வைத்துக்கொண்டு, பல பெரியவர்களை வைத்துக்கொண்டு சிண்டிகேட்டிலிருப்பவர்கள் நாட்டு மக்களிடத்தில் எவ்வளவு தப்பான பிரச்சாரங்களைப் பரப்ப வேண்டுமென்று திட்டமிட்டு எவ்வளவு பெரிய காரியங்களிலெல்லாம் ஈடுபட்டார்கள். இன்னமும் சொல்லப்போனால் மந்திரிகள் பட்டியல் எல்லாம் தயாரிக்கின்ற அளவில் உங்கள் நிலைமை உருவாக்கப்பட்ட நேரத்திலேயும்கூட இந்த நாட்டு மக்கள் உங்களுடைய பேச்சுக்கு மதிப்புத் தராமல் திராவிட முன்னேற்றக் கழகம் சமதர்மக் கொள்கையைக் கொண்ட கட்சி, ஜாதிமத பேதமற்ற சமுதாயத்தை உருவாக்கப் பாடுபடக்கூடிய கட்சி, ஏழைகளுக்கு என்றிருக்கும் கட்சி இன்றைக்குத் தமிழ்நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதை உணர்ந்து திட்டவட்டமான முடிவிற்கு வந்த பிறகுதான் 1967-ல் 134 பேர்களாக இருந்தவர்கள் 1971-ல் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் 183 பேர்களை இங்கே அனுப்பி வைத்தார்கள். 15 பேர்களாக உட்கார்ந்த பிறகாவது வதந்திகளைப் பேசாமல் உண்மைகளை எடுத்துக்கூறி மக்களிடத்திலே நியாயம் கேட்போம் என்ற உணர்வு அவர்களுக்கு வருகிறதா என்றால் இல்லை. 15-இல் ஒன்று போய்விட்டது, 14 வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த 14-ம் நிலைக்குமா என்று பார்த்தால் சந்தேகமாகத்தான் இருக்கிறது. காரணம் என்னவென்றால் சிண்டிகேட்டில் இருப்பவர்கள் நாட்டில் அவர்கள் அகில இந்தியக் கட்சி. 16 மாநிலங்களில் தேர்தல் நடக்கிறது. அவர்களது பெருந்தலைவர் காமராஜர் போன்றவர்கள் 16 மாநிலங்களுக்கும் சென்று மக்களுக்குக் கருத்துக்களை எடுத்துக்கூறி ஓட்டுக்களைக் கேட்டு அந்தந்த மாநிலங்களிலே சிண்டிகேட் ஆட்சியை அமைக்கச் செய்வதை விட்டுவிட்டு 14 மாவட்டங்களிலே சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** கனம் அங்கத்தினர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தைப் பற்றிப் பேசுகிறார்களா? அல்லது

கட்சிப் பிரச்சாரத்தைச் சட்டசபையில் செய்கிறார்களா? அப்படிப் பேசுவதென்றால் வெளியிலே மேடை போட்டுச் செய்யலாம்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** நீங்கள் இருக்கிறீர்களே, உங்களைப் பற்றித்தான். ஆகவே இப்படிப்பட்ட ஒரு கட்சி.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, நீங்கள் இருக்கிறீர்களே என்று பேச வேண்டுமா என்பதற்குத் தாங்கள் முடிவு சொல்ல வேண்டும். இப்படிப்பட்ட பேச்சுக்கள் தவிர்க்கப் பட்டால் நல்லது. ஏனென்றால் பல காரியங்கள் அவருக்குத் தெரியும். இந்தப் பேச்சிலே வேண்டுமானால், அவர்கள் வேண்டுமானால் செய்யட்டும், காமராஜரைத் திட்ட வேண்டுமானாலும் பக்கத்திலே மேடை போட்டு நன்றாகத் திட்டட்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 'சொல்கிறீர்கள்' என்பதாக அவர்களைப் பார்த்துச் சொல்லாதீர்கள். 'சொல்கிறார்கள்' என்று சொல்லுங்களேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** உங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படிப்பட்ட நிலையான கொள்கையில்லாதவர்கள் சமதர்ம பட்ஜெட்டை ஆதரிப்பார்கள் என்று பார்த்தால் நாம்தான் ஏமாற வேண்டியிருக்கும். ஜோதி அம்மையார் அவர்கள் சொன்னார்கள், ஏதோ சர்ப்ளஸ் பட்ஜெட் என்பதால் இதை நாங்கள் ஆதரித்து விடுவதாக இல்லை, எத்தனையோ குறைகள் இருக்கின்றன, அதை எடுத்துக் காட்டத்தான் . . .

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** தலைவரவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. அங்கத்தினர் அவர்கள் என்னுடைய பேச்சைச் சரியானபடி புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன் எதிர்க்கட்சி என்றால் எதிர்த்துத்தான் ஆக வேண்டுமென்பதில்லை. எதிர்க்கட்சிகளின் சம்பிரதாயம் எதிர்க்க வேண்டியவைகளை எதிர்க்கத்தான் வேண்டும். நீங்கள் எதிர்க்கவில்லையா எங்களை ? அதையொட்டி சம்பிரதாயப்படி எதிர்க்கத் தான் செய்வோம், எதிர்ப்பதற்கு பட்ஜெட்டில் சில குறைகள் உள்ளன என்று ஆரம்பப் பேச்சிலேயே சொன்னேன். நாங்கள் எதிர்க் கட்சியிலே இருப்பதாலே சொல்கிறோம் என்று எண்ணாமல் நாங்கள் சொல்லும் நல்ல காரணங்களையும் யோசனைகளையும்





ஆராய்ச்சி செய்ய வேண்டியது ஆளுங்கட்சியின் பொறுப்பு, கடமை என்று அதைத்தான் சொன்னேனே தவிர தயவுசெய்து என்னுடைய பேச்சை மாற்றிச் சொல்ல வேண்டாமென்று கனம் அங்கத்தினர் அவர்களிடம் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆறுமுகம் :** இப்படிப்பட்ட நல்ல முற்போக்கான கருத்துக்களை நம்முடைய முதல்வரவர்கள் வரவேற்பார்கள். அம்மையார் அவர்களது கருத்துக்கள் வரவேற்கப்படும் என்பதை நான் நினைவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகவே ஏழைகளின் உயர்வைப் பிரதிபலிக்கத் தக்க வகையில் பாட்டாளி மக்களின் உயர்வை எடுத்துக் காட்டுகின்ற வகையில். விவசாயத் தொழிலாளர்கள் மதிக்கத் தக்க வகையில் உள்ள இப்படிப்பட்ட நல்ல நிதிநிலை அறிக்கையை இன்றையதினம் நாட்டுமக்கள் அனைவரும் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் பாராட்டு தமிழக அரசுக்கு நிச்சயமாகக் கிடைக்கும். எதிர்பவர்களைப்பற்றி இந்த அரசு கவலைப்படத் தேவையில்லை என்று கூறி இப்படிப்பட்ட முற்போக்குக் கொள்கைகளைக் கொண்ட முதலமைச்சரவர்களை மீண்டும் பாராட்டி நிதிநிலை அறிக்கையை ஆதரிக்கிறேன், நன்றி, வணக்கம்.

***திரு கே கந்தசாமி :** பெருமதிப்பிற்குரிய கௌரமிக்க உதவி சபாநாயகரவர்களே, 1972-73-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை வரவேற்று பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பில் பாராட்டுரை வழங்க நிற்கிறேன்.

பல சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தங்கள் தொகுதிகளைப் பற்றியும், அரசினுடைய திறமையையும், நல்லெண்ணத்தையும் இந்தத் திட்டத்தின் மூலம் பாராட்டியும், செய்ய வேண்டிய, விட்டுப் போன சில நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்ற விவரத்தையும் கூறினார்கள். நானும் இந்தத் திட்டத்தை, என்னுடைய கட்சித் தலைவர், சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஏ. ஆர். பெருமாள் அவர்கள் கூறியதைப் போல்—இதை ஒரு சமதர்மப்' பூங்கா என்று கூறினார்கள்—அதையே நானும் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். இந்தத் திட்டம் ஏழை எளியவர்களுக்கு, ஏழை பாட்டாளித் தொழிலாள வர்க்கத்திற்கு, அவர்களது நலன்களுக்காக, பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை

[திரு. கே. கந்தசாமி] [1972 மார்ச் 8

நீக்க பல கோணங்களில் பல துறைகளில் எடுக்கப்பட்ட அரசின் முயற்சிகளை யெல்லாம், இப்படிப்பட்ட திட்டங்களை யெல்லாம் பிரதிபலிக்கின்ற நல்ல திட்டமாக, விளக்க உரையாக அமைந்திருக்கிறது.

இதிலே சோஷலிசத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், எழுதுகிறார்கள். ஆனால் நடைமுறையில் செயல்பட்டார்களா என்றால் இல்லை. பல ஆண்டுகளாக சோஷலிசம் பேசி வந்த தலைவர்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக, பஸ் முதலாளிகள், ஆலை அதிபர்களுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டு காந்தியின் சீடன் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள். 'அன் டு தி லாஸ்ட்' என்ற புத்தகத்தில் பேரறிஞர் ரஸ்கின் அவர்கள் குறிப்பிட்டது போன்று டாக்டர் கலைஞர் அவர்கள், ஏழை எளியவர்கள், சமுதாயத்தில் புறக்கணிக்கப்பட்டு கவனிக்கப்பட முடியாத நிலையில் இருப்பவர்கள் அரசின் திட்டங்களால் பயன் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடு இந்தத் திட்டத்திலே சோஷலிசக் கொள்கைகளை உருவாக்கித் திட்டங்களைத் தந்திருக்கிறார்கள், காந்தியடிகள் இதைத் தான் ராம ராஜ்யம் என்று குறிப்பிட்டார்கள், காந்தியடிகள் கொள்கையில் நம்பிக்கையுள்ளவன் நான். அவருடைய சீடன் என்று சொல்லாத கலைஞர் அவர்கள் காந்தியடிகளின் கொள்கையைப் பிரதிபலிக்கும் வகையில் இன்று திட்டத்தைத் தந்திருக்கிறார்கள். திரு ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டது போல் பஸ்களை அரசுடமையாக்கியதன் மூலம் அதன் வருவாய் நாட்டு மக்களுக்குப் பயன்படும் நிலை ஏற்பட்டிருக்கிறது. 60 ஸ்டாண்டர்டு ஏக்கர் வரை அறநிலையங்களுக்கு விதிவிலக்கு. பழத் தோட்டங்கள், கரும்புத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு என்பதெல்லாம் மாறி இன்று 40 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்ற நிலைக்குக் கொண்வரப்பட்டிருக்கிறது. இதெல்லாம் ஏழை எளியவர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட நல்ல திட்டங்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வைப் போக்குவதற்கான திட்டங்கள் என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் வழங்கும் திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. மனுநீதித் திட்டத்தின் மூலம் ஏழை விவசாய மக்கள், தொழிலாள மக்கள் தங்களுடைய தேவைகளைப் பெற்று வாழ்வதற்கு உரிய வழிவகைகள் எல்லாம் செய்திருக்கிறார்கள். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுடைய



[திரு. கே. கந்தசாமி]

நலன்கள் புறக்கணிக்கப்படுவதைப் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை உணர்ந்து, இன்று அதற்கென ஒரு அமைச்சரை ஏற்படுத்தி பிற்பட்டோர் நலக் குழுவையும் அமைத்தார்கள். சமுதாயத்தில் பிற்பட்ட அவர்களுடைய நலன்கள் இன்று பெருமளவுக்குக் கவனிக்கப்பட்டு வருகின்றன.

குடிசைவாழ் மக்களுக்கு நன்மை செய்வதற்காகக் குடிசை வாரியம் அமைத்து அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. அரிசனங்களைக் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குப் பரிசுத் திட்டமும் இருக்கிறது. அரிசனங்களைக் கடவுளின் குழந்தைகள் என்றார் காந்தியடிகள். ஆனால் அவர்கள் சமுதாயத்தில் இன்றும் புறக்கணிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். அவர்களுடைய முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களைப் போட்டிருக்கின்ற டாக்டர் கலைஞர் அவர்களுடைய முயற்சி பாராட்டுக்குரியது.

விவசாயத் துறையைப் பொறுத்த வரையில் கலைஞர் அவர்கள் பசுமைப் புரட்சியை (க்ரீன் ரெவல்யூஷன்) கொண்டு வந்திருக்கிறார்கள். விவசாயிகள் நாட்டின் முதுகெலும்பு—"பாக் போன் ஆப் தி இண்டியன் எகானமி". அந்தச் சமுதாயத்திற்கு கோடிக் கணக்கான ரூபாய்களைக் கடனாகக் கொடுக்கவும், ரசாயன உரங்களைக் கொடுக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள். அதன் காரணமாக என்றும் இல்லாத அளவுக்கு நாம் உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். அப்படிப்பட்ட நல்ல திட்டங்களை விவசாயிகளுக்காகச் செய்திருப்பதற்காக நாம் அவர்களைப் பாராட்டத் தான் வேண்டும்.

"கலைஞரின் ஆட்சி கழகத்தின் ஆட்சி, பலருக்கு இல்லாமல் ஒரு சிலருக்கு, ஒரு சிலரின் நலனுக்காக இருக்கின்ற ஆட்சி, லஞ்ச ஊழல் பெருகிவிட்டது. ஆகவே, அவ்வளவு பேரும் ஆட்சிக்கு எதிராக ஒன்று சேர வேண்டும்" என்று பெருந்தலைவர் மேடை தவறாமல் பேசி வருகிறார். 1957-ல் நான் மாணவனாக இருந்த நேரத்தில், செம்புதாஸ் தெருவில் இருந்தபோது, ஆட்சியிலிருப்பவர்கள் மீது லஞ்சக் குற்றங்கள் சாட்டப்பட்டன. கள்ள நோட்டு அடிப்பவர்களுக்குத் துணையாக இருக்கிறார்கள் என்று தெய்வத் திருமகன் தேவர் அவர்கள் கடற்கரைக் கூட்டத்தில் லட்சக் கணக்கான மக்களுக்கு முன்னால் குற்றம் சாட்டினார்கள்.

[திரு. கே. கந்தசாமி] [1972 மார்ச் 8

அதற்கு லஞ்சம் வாங்குகிறவர்கள் யார்? மாமனும் மச்சானும் லஞ்சம் வாங்குகிறார்கள்? என்ன செய்வது என்ற நிலையில் லஞ்சம் வாங்குவதைத் தவிர்க்க முடியாது என்ற நிலையில் பேசினார்கள். அவர்கள் இன்று கலைஞர் ஆட்சியைப் பார்த்து லஞ்சம், ஊழல் என்று சொல்லி ஆட்சியைக் கவிழ்ப்போம் என்று சொல்லாவிட்டாலும் அந்தத் தொனியிலே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் என்று சொல்லுகிறார்கள். என்ன ஜனநாயகத்தை இவர்கள் பாதுகாக்கப் போகிறார்கள்? அன்று கள்ள நோட்டு வழக்கில் அரசுக்குச் சம்பந்தம் இருக்கிறது என்று சொல்லி சேலஞ்சு என்ற வகையில் அரசுக்கு எங்கள் தலைவர் சவால் விட்டார்கள்.

அன்று ஆட்சியிலிருந்த அவர்கள் என்ன செய்தார்கள்? எங்கள் தலைவர் முத்துராமலிங்க தேவர் மீது கொலைக் குற்றத்தைச் சாட்டி, சிறைச்சாலையிலே தள்ளி, லட்சக் கணக்கான மக்கள் மீது பொய் வழக்குகள் போட்டார்கள். அந்த வழக்குகளைப் போடும்படி போலீஸ் அதிகாரிகளைத் தூண்டிவிட்டு அவர்களுக்குப் பதவி உயர்வு தருகிறேன் என்று சொல்லி பொய் வழக்குப் போடத் தூண்டினார்கள். ஐந்து பேரைக் கண்ணைக் கட்டி நிற்க வைத்துச், சுட்டுத் தள்ளினார்கள். காட்டிலே மிருகங்களைக் கூடச் சுடக் கூடாது என்று சொல்லுகின்ற நேரத்தில், மனிதர்களைச் சுட்டுத் தள்ளிய மாமனிதர்கள் இன்று சட்டம் அமைதி குலைந்து விட்டது என்று கூறுகிறார்கள்.

மாண்புமிகு கலைஞர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் 1947-ல் இருந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்த அமைச்சர்கள் மீதுள்ள லஞ்சக் குற்றச்சாட்டுகளையும் மற்றவற்றையும் விசாரணை செய்ய ஒப்புக் கொண்டார்கள். நான் இந்த மாமன்றத்தின் மூலமாக, சபாநாயகர் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்—அன்று இருந்த பெருந் தலைவர் காமராஜர் அவர்கள் எங்களது பெருந்தலைவர் தேவர் அவர்களை வெளியிலே விடுவதற்கு முன்னால் ஸ்லோ பாய்ஸன் என்று சொல்லகூடியக் உடனே கொல்லாமல் நாளடைவில் கொல்லக்கூடிய ஸ்லோ பாய்சனைக் கொடுத்து அவரைக் கொல்லச் சதி செய்தார்கள்.



1972 மார்ச் 8]

**திருமதி த. ந. அனந்தநாயகி:** இதெல்லாம் என்ன பேச்சு? ஆதாரம் இல்லாமல் எதை வேண்டுமென்றாலும் பேசலாம் என்றால் அது எங்கே கொண்டு போய்விடும் என்று எனக்குத் தெரியவில்லை. ஸ்லோ பாய்ஸன் கொடுக்கும்போது இவர் என்ன பக்கத்திலே இருந்தாரா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த மாதிரி ஆதாரமில்லாத அபாண்டங்களைப் பேசுவதற்கு இதுவா இடம்?

**திரு. ஏ. ஆர். பெருமாள்:** மாண்புமிகு கந்தசாமி அவர்கள் பேசுகிறபோது சொன்ன கருத்து தென் மாவட்ட மக்களின் மத்தியில் பரவலாகப் பேசப்பட்டு வருகிற ஒன்று ஆகும். அதைப் பற்றி விசாரணை வைக்க வேண்டுமென்று சொல்ல வந்தாரே தவிர. அதை உறுதிப்படுத்திச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்களே குற்றவாளி என்று முடிவு செய்து பேசக் கூடாது. இன்னார்தான் செய்தார் என்று சொல்லக் கூடாது.

**திரு. கே. கந்தசாமி:** அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் அவர்கள் தலைமையில் நடந்த சதி காரணமாக தேவர் அவர்கள். . .

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அவர் ஒரு வழக்கறிஞர். சதி நடந்தது என்று சொல்கிறார்கள். இந்தமாதிரி குற்றச்சாட்டுகளைச் சொல்வது சரியல்ல. அதிலும் குறிப்பாக, விசாரணை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராயிருக்கிறதா? அப்படியானால் அதை அவர்கள் நிரூபிக்கட்டும்

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி:** கந்தசாமி அவர்கள் ஒரு குற்றச்சாட்டு சாட்டுகிறார்கள். நீங்கள் எல்லாம் லஞ்சம், ஊழல் மலிந்திருக்கின்றன என்று குற்றஞ்சாட்டுகிறீர்களே, அதே போல் அவர்களும் ஒரு குற்றச்சாட்டைச் சாட்டுகிறார்கள். அவர்கள் அதற்கு ஒரு விசாரணை வேண்டுமென்று கேட்கிறார்கள். அவர் சொல்வதில் தவறு எதுவும் இல்லை.

MR. DEPUTY SPEAKER: He is unnecessarily dragging Mr. Kamaraj's name. It is not proper. That may be an accusation. விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்கலாம். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது, காமராஜ் செய்தார், அதை விசாரிக்க

வேண்டுமென்று சொல்லும்போது. நீங்கள் குற்றஞ்சாட்டி விசாரிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்படிக் குற்றச்சாட்டு இருந்தால் இவ்வளவு காலம் தாழ்ந்து குற்றச்சாட்டு சொல்வதற்கு அவர்கள் ஏன் அப்படிச் சொல்கிறார்கள் என்பதையும் ஆராய வேண்டும். அவர் இறந்த சமயத்தில் குற்றச்சாட்டு சாட்டியிருந்தால், அதை அப்போதே உடனடியாகச் சொல்லியிருக்கலாம். மத்திய அரசு இருந்தது. நீதிமன்றங்கள் இருந்தன, வழக்குப் போட்டிருக்கலாம். எவ்வளவோ காரியங்கள் செய்திருக்கலாம். அதொன்றும் செய்யாமல் இப்போது இந்தச் சபையில் வந்து தமக்கு உரிமை இருக்கிறது, பாதுகாப்பு இருக்கிறது என்ற காரணத்தினால் என்னென்னவோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள், இது பொருத்தமல்ல என்பதை மறுமுறையும் ஞாபகமூட்டுகிறேன்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** இறந்த அன்றே கூறியிருக்கலாம் என்று எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொல்கிறார்கள். இறந்த அன்றைக்கே, தேவர் அவர்களின் பிரேதத்திற்கு முன்பே, பேரறிஞர் அண்ணா அவர்களின் முன்னிலையிலே அந்த மரணத்தில் மர்மம் பொதிந்திருக்கிறது, அதுபற்றி விசாரிக்க வேண்டும் என்று அன்று நடைபெற்ற கூட்டத்திலேயே பேசப்பட்டது. நாடு முழுவதும் பேசப்பட்டது. பார்வேர்ட் ப்ளாக் உறுப்பினர்கள் மட்டுமல்ல, அத்தனைக் கட்சிக்காரர்களும் பேசினார்கள். ஆனால் அப்போதிருந்த ஆட்சி அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. கந்தசாமி அவர்கள் சொல்வது ஒரு பெரிய குற்றச்சாட்டு, அதை இந்தச் சபையில் வந்து இத்தனை ஆண்டுகள் கழித்து சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். பொதுவாக விசாரணை வேண்டுமென்று சொல்லலாம். இன்னார் வந்து ஸ்லோ பாய்ஸன் கொடுத்தார் என்று குற்றஞ்சாட்டி விசாரிக்க வேண்டும் என்று சொல்வது முறையல்ல. அப்படிப் பேசக் கூடாது. நான் அதை அனுமதிக்க மாட்டேன்.

**திரு. நா. வீராசாமி :** கந்தசாமி அவர்கள் சொல்வது, அவர்களது ஆட்சிக் காலத்தில் நடைபெற்றிருக்கிறது, நீதி விசாரணை வேண்டுமென்று சொல்கிறார்கள்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவர் அப்படிச் சொல்லவில்லை. ஆட்சிக் காலத்தில் நடந்தது என்று சொல்லவில்லை.

**திரு. நா. வீராசாமி :** காமராஜ் செய்தார் என்று சொல்லவில்லை, காமராஜ் ஆட்சிக் காலத்தில் . . ,

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சதி செய்தார்கள் என்று சொன்னார்கள்.

**திரு. கே. கந்தசாமி :** நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்வது, உயர்திரு காமராஜ் ஆட்சிக் காலத்தில் சதி நடந்தது. அவர்களுக்கும் அதற்கும் எந்தளவிற்குத் தொடர்பு உண்டு என்று சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படிச் சொல்லக் கூடாது. சதி நடந்ததாகச் சந்தேகப்படுகிறேன் என்றுதான் சொல்ல வேண்டும்,

**திரு. கே. கந்தசாமி :** மக்கள் பேசுகிறார்கள். அப்போதே அந்தக் குற்றச்சாட்டை. . .

THIRU R. PONNAPPA NADAR : Is the Government prepared to institute a judicial or any other enquiry? I would like to have a clarification from the Hon. Chief Minister.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இந்த விஷயத்தை வைத்து அரசு ஒரு விசாரணை நடத்துமா என்று மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் கேட்கிறார்கள். வதந்திகளை வைத்துக் கொண்டு விசாரணை நடத்த முடியாது, இப்போது அல்ல, பல நேரங்களில் நான் தெரிவித்திருக்கிறேன். வதந்திகளைப் பரப்புவது என்ற முறையை யார் கடைப்பிடித்தாலும் அது இருபுறமும் கூர் உள்ள கத்தி. அது பரப்புகிறவர்கள் மீதே திருப்பித் தாக்கும், அதைத்தான் இங்கு பார்க்கிறோம். ஆகவே வதந்திகளை அடிப்படையாக வைத்து விசாரணை நடத்தப்படுமா என்று கேட்பது தவறானதாகும். இப்போது அவர்கள் சொல்வதும் வதந்தி என்பதால் விசாரணை நடத்த இயலாது. யார் சொன்னாலும் வதந்தியாக இருந்தால் விசாரணை நடத்த இயலாது.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** அவர்கள் சொல்வதை ஒத்துக் கொள்கிறேன். வதந்திகளை வைத்து விசாரணை செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்கிறார்களே, அதற்கு விசாரணை நடத்துவார்களா ? காலையில் ஒரு வதந்தி, மாலையில் ஒரு வதந்தி, இரவில் ஒரு வதந்தி என்று ஒவ்வொரு வதந்தியாக வந்து கொண்டேயிருக்கிறது. அதற்கெல்லாம் விசாரணை நடத்தப்படுமா ? அதற்கு இல்லை என்றால் இதற்கும் வேண்டாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் திரு. பொன்னப்ப நாடார் அவர்களுக்கு அளித்த பதிலைத்தான் அளிக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** வதந்திகளை வைத்து விசாரணை நடத்தலாம், நடத்தாமல் இருக்கலாம். ஆனால் இம்மன்றத்தில் வதந்திகளை வைத்துப் பேசக் கூடாது என்பது மன்றத்தின் விதிமுறை.

**திரு. கே. கந்தசாமி :** பல ஊழல்கள் பற்றி குற்றஞ்சாட்டுகிறார்கள். ஆதாரமிருக்கிறதா என்றால் பேப்பரில் வந்திருக்கிறது, மக்களிடையே கூறிக் கொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவற்றை அனுமதிப்பதில்லை. அவற்றை ஆதாரமாக வைத்து இங்கு பேசக் கூடாது, வதந்திகளை வைத்து, அவற்றை ஆதாரமாக வைத்து இங்கு பேசக் கூடாது என்பது சட்டசபையின் கண்டிப்பான விதி.

**திரு. கே. கந்தசாமி :** பல பொறுப்புள்ள அதிகாரிகள் அன்று ஆட்சியின் குறுக்கீட்டால், போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்து டி.எஸ்.பி. ஆக இருந்தவர் பற்றி, இன்று ஓய்வு பெற்றுள்ள அந்த நபரைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். அவரை, விசாரணை வைத்தால் சாட்சியாக அழைத்துவரத் தயாராகயிருக்கிறேன். ஏற்கனவே இருந்த ஆட்சியாளர்களின் தவறுகளுக்கு உடந்தையாக இருந்து, அவர்களது கட்டளைக்கிணங்க சுட்டுவிட்டேன், அதன் பலனை இப்போது இரவு பகலாக தூக்கமில்லாமல் தவிக்கிறேன், ஆண்டவனைத்தான் வேண்டுகிறேன், மன அமைதியே இல்லை. எவ்வளவு பிறப்புகள் எடுத்து இந்தப் பாவத்தைக் கழிக்கப் போகிறேனோ என்று என்னிடம் என் கைகளைப் பிடித்துக் கொண்டு, என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுத அதிகாரியை



இம் மாமன்றத்திற்கு முன் கொண்டு வர நான் தயாராயிருக்கிறேன். (ஆரவாரம்) உண்மையில் விவரங்களை கையும் மெய்யுமாக என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று கைகால் சௌகரியமிக்க சட்டசபையில் ஒரு பொறுப்புள்ள உறுப்பினர் என்ற வகையில் பேசுகிறேனே தவிர அரசியல் பிரச்சாரத்திற்கோ அல்லது ஒருவர் மீதுள்ள துவேஷம் காரணமாகவோ அல்ல என்பதை பணிவடன் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று கைகால் விளங்காமல், இரவு பகல் தூக்கமில்லாமல் என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டு கண்ணீர்விட்ட அந்த கெஜட்டட் ஆபீசரை இங்கு கொண்டு வந்து உங்கள் முன்னால் நிறுத்தத் தயாராயிருக்கிறேன். பல கொடுமைகள் நடந்தன அப்போது, அதுபற்றி ஒரு நீதி விசாரணை வேண்டுமென்று கேட்டபோது ஒரு சர்க்கார் அதிகாரி, ஒரு ஸ்பார்டினேட் ஆபீசரைக் கொண்டு. ஒரு ஐ.ஸி.எஸ். ஆபீசர், வெங்கடேஸ்வரன் அவர்களைக் கொண்டு விசாரணை நடத்தினார்கள்.

There should be an enquiry, a judicial enquiry. It should be independent and impartial. Was it independent and impartial? It was not indepedent because he was a Government servant. He was essentially a subordinate of the Government wing. Therefore. fore, we wanted an immediate, independent and impartial enquiry under the chairmanship of a High Court Judge.

அதைத்தான் குறிப்பிட விரும்புகிறேன். நேதாஜி பற்றி ஒரு குழு அமைக்கப்பட்டு விசாரணை நடந்தது. ஒரு தலைப்பட்டசமான விசாரணையாகும். ஆகவே மறு விசாரணை தேவை என்று கூறினோம். அதற்கு நேரு அவர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. இன்று பெருமதிப்பிற்குரிய இந்திரா அம்மையார் அவர்கள் அன்றிருந்த முடிவை மாற்றியமைக்கக்கூடிய அளவிற்கு ஓய்வுபெற்ற நீதிபதி கோஸ்லா அவர்களை நியமித்து இன்று விசாரணை நடத்தி வருகிறார்கள் என்ற விவரத்தைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். அன்று விசாரிக்கப்பட்டிருந்தாலும், அது இன்டிபென்டென்ட், இம்பார்ஷியல், அண்ட் அக்ஸெப்டபிள் இல்லை என்பதால் மறு விசாரணை செய்வதன்மூலம் ஒரு தேசத் தலைவருக்கு, ஒரு தேசத் தொண்டருக்கு செய்யும் ஒரு மரியாதையாகும் அது. ஜனநாயக மரபிற்கு ஏற்றமுறையில் செய்யப்பட வேண்டும் அது. அப்படிப்பட்டதொரு மரபை, ஜனநாயக மரபை நாம் நிலைநாட்ட

வேண்டும். ஆகவேதான் சொல்கிறேனே தவிர துவேஷ மனப்பான்மையால் சொல்வதல்ல இது.

அடுத்தபடியாக, அன்று அவர்கள் ஆட்சியில் இருந்தார்கள். இன்று கலைஞர் அவர்களின் பட்ஜட் ஜனநாயக சோஷலிஸ மரபுகளுக்கு விரோதமாக இருக்கிறது, ஒரு தலைப்பட்சமாக இருக்கிறது என்று கண்டிப்பதைக் காண்கிறேன். நாட்டு மக்களை வாழ வைப்பதற்கு, ஏழை எளியவர்களை வாழவைப்பதற்கு வழி வகுக்கும் பட்ஜட் இது. அதை ஒரு திருஷ்டாந்தத்தின் மூலம் விளக்க விரும்புகிறேன்.

1957-ல் ஆசிய ஜோதி நேரு அவர்கள் மதுரைக்கு விஜயம் செய்தபோது ஒரு வாரத்திற்கு முன்னால்—எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்று பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது, பாரதியாரும் பாடியிருக்கிறார்கள் ; ஆனால், பிச்சைக்காரர்களை, அவர்கள் நேருவின் கண்களில் பட்டுவிடக் கூடாது என்பதற்காக. லாரி லாரியாக ஏற்றிச் சென்று அழகர்கோவில் காடுகளுக்குக் கொண்டு சென்றனர். போலீஸ் லாரிகளிலும், ப்ரைவேட் லாரிகளிலும் அவர்களை ஏற்றிச் சென்றனர். கம்பம், கடலூர் பள்ளத்தாக்குகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர். நாட்டின் தலைவரின் ஆசிய ஜோதியின் சோஷலிஸப் பிதாவின் கண்களில் இவர்கள் பட்டுவிடக் கூடாது என்று லாரிகளில் ஏற்றிச் செல்லப்பட்டனர். இந்த ஏழைகளின் கண்களிலும் அவர் பட்டுவிடக் கூடாது. அவர்களது கண்களிலும் இவர்கள் பட்டுவிடக் கூடாது என்று இப்படிப்பட்ட ஒரு தீண்டாமையை உருவாக்கினார்கள் சமுதாயத்தில். அப்படிப் புறக்கணிக்கப்பட்ட அந்தப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் விதத்தில் தமாஷா வரி போட்டு, லட்சாதிபதிகள், கோடீஸ்வரவர்கள், இவர்கள் செல்லக்கூடிய குதிரைப் பந்தயத்திற்கு வரி போட்டு—"அன் டு தி லாஸ்ட்" என்று ரஸ்கின் எழுதியுள்ள புத்தகத்தில் காணப்படும் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டுமென்று காந்தியார் கூறியிருக்கிறார்கள், அதற்கிணங்க—பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்கக்கூடிய திட்டத்தினைக் கலைஞர் அவர்கள் இன்று நிறைவேற்றுகிறார்கள், இதை விட சோசலிசம், இதை விட மிக உன்னதமான திட்டம் வேறு எதுவும் இல்லை என்று சொல்லிக்கொள்கிறேன். குறை கூறட்டும். ஆனால் ஆக்கபூர்வமான திட்டங்களைப்பற்றிக் கூறலாம்.



மாற்றுக்கட்சி, தோழமைக் கட்சி எதுவாக இருந்தாலும் அத்தனைக்கும் அந்த உரிமையுண்டு. இது ஒரு உன்னதமான திட்டம், மிக நல்ல திட்டம் என்பதைக்கூறி என்னுடைய தொகுதியைப் பற்றி சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் ஹாஸ்பிடல் வசதி கிடையாது. ஒரு தொழிற்சாலை கூட கிடையாது. அன்று ஆட்சியில் இருந்தவர்களால் என்னுடைய தொகுதிக்கு வைகைத் திட்டத்தின் மூலம் பாசன வசதி (21,000 ஏக்கர் நிலங்களுக்கு வர இருந்தது) கிடைக்க இருந்ததையும், மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தொகுதிக்குக் கொண்டு போய் விட்டார்கள், திரு. கக்கன் அவர்கள் காலத்தில். எங்கள் பகுதியில் இருப்பவர்களில் பல பேர் அன்று சி.டி. ஆக்டின் கீழ் அழுத்தப்பட்டிருந்த காரணத்தால், நியாயம் கோரிப் போராட முடியவில்லை, ஆகவே, எங்கள் மக்களுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. ஆகவே, கலைஞர் அவர்களும், பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களும் கேரள அரசோடு தொடர்பு கொண்டு கடலில் சென்று வீணாகப் போகும் நதிகளை யெல்லாம் திருப்பி மதுரை. இராமநாதபுரம் மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களுக்கு வசதி செய்யும் பொருட்டு நல்ல நீர்த்தேக்க திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

ஆசிரியர்களின் கோரிக்கையையும், தொழிலாளர்களின் கோரிக்கையையும், கைத்தறி நெசவாளர்களின் கோரிக்கையையும், இந்த அரசு நல்ல விதத்திலே தீர்த்து வைத்ததற்காக நான் பாராட்டுகிறேன். மாணவர்களை அரசியலுக்கு இழுக்கிறார்கள். அரசியலுக்கும் மாணவர்களுக்கும் தொடர்பு இல்லாத அளவுக்கு சர்வ கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி, மாணவர்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்று ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு இவ்வளவு நேரம் பேச அனுமதி கொடுத்த தலைவரவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன். வணக்கம்.

* திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர், கலைஞர், முதல்வர் அவர்களால் இப் பேரவையின் முன் சமர்ப்பிக்கப்பட்ட 1972-73-ம் ஆண்டு நிதி அறிக்கையினை ஆதரித்து, எனது கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆண்டு பட்ஜெட்டில் ஏழை எளிய மக்களுக்கு வரி போடாமல், பணக்காரர்களுக்கு மட்டும் வரி போட்டு, ஏழைகளுக்கு நன்மை செய்து சுமார் 2½ கோடி ரூபாய் உபரியாக உள்ள பட்ஜெட்டாக இது அமைந்திருக்கிறது என்பதைக் குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். பாசன வசதிக்காக 1966-67-ல் 7.89 கோடி ரூபாய் என்று இருந்ததை மாற்றி, 1972-73-ல் ரூ. 14.28 கோடியாக செலவழிக்க திட்டமிட்டும், மக்கள் நல்வாழ்வுக்காக 1966-67-ல் 16.75 கோடி ரூபாயாக இருந்ததை, 1972-73-ல் ரூ. 34.69 கோடியாக உயர்த்தியும், ஹரிஜன நலத்திற்காக ரூ. 3.59 கோடி என்று 1966-67-ல் இருந்ததை மாற்றி, 1972-73-ல் ரூ. 8.41 கோடியாக உயர்த்தியும் பிற்பட்டோர் நலதிற்காக 1966-67-ல் ரூ. 0.91 கோடி என்று செலவழிக்கப்பட்டு வந்ததை 1972-73-ல் 4.68 கோடி ரூபாயாக உயர்த்தியும், கைத்தறி நெசவாளர்கள் நலத்திற்காக 1966-67-ல் ரூ. 1.82 கோடி என்று இருந்ததை 1972-73-ல் ரூ. 2'34 கோடியாக ஆக்கியும், சாலைப் போக்குவரத்து வசதிக்காக 1972-73-ல் ரூ. 10,31 கோடி என்று ஒதுக்கியும், குடி தண்ணீர் வசதிக்காக ரூ. 8.96 கோடி ஒதுக்கியும் மற்றும் மாநிலம் பூராவும் மின் வசதி ஏற்படுத்துவது என்ற திட்டத்தை செயல்படுத்தியும், பின்தங்கிய இனத்திற்காக பிரதிநிதித்துவத்தை 25-லிருந்து 31 என்று உயர்த்தியும், ஹரிஜனங்களுக்கான பிரதிநிதித்துவத்தை 16-லிருந்து 18 என்று உயர்த்தியும், மிக நல்ல வகையில் அமைந்துள்ள இந்த பட்ஜெட்டை வரவேற்று என்னுடைய தொகுதியைப்பற்றிய இரண்டொரு கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதி திருச்சி மாவட்டத்திலேயே மிகவும் பின்தங்கிய பகுதிகளில் ஒன்று. அதற்குச் சான்றாக பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் சட்டநாதன் அவர்களின் குழு 24—1—1970 அன்று என் தொகுதியிலுள்ள கிராமத்தைப் பார்வையிட்டு அது பற்றி அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் வல்லம், அகரம் என்ற கிராமங்கள் பார்வையிடப்பட்டு மிகவும் பின் தங்கியவை என்பதுபற்றி குறிப்பு எழுதியுள்ளார்கள். அதிலே வல்லம் கிராமம் பற்றி அந்தக் குழு கூறியிருப்பதைக் கூற விரும்புகிறேன்.





"வல்லம் கிராமத்தில் அரிசன குடும்பங்கள், தச்சர், வண்ணார், நாவிதர் ஆகியோர் சிறு அளவிலும் இருப்பது தவிர்த்து மற்ற மக்கள் அனைவரும் படையாச்சிகள், மககள் தொகை சுமார் 3,000. அனைவரும் உள்ளூர் ஆரம்பப் பள்ளியில் 100 குழந்தைகளே சேர்ந்துள்ளனர். அதாவது பள்ளிப் பிராயமுள்ள குழந்தைகளில் பத்தில் ஒரு பங்கினர்தான் பள்ளிக்குச் செல்கிறார்கள். சுமார் 3 மைலுக்கு அப்பால் உள்ள உயர்நிலைப் பள்ளிக்கு 3 சிறுவர்கள் செல்லுகிறார்கள். ஒரு மாணவர் தமிழ்க் கல்லூரியில் படிக்கிறார். காடு திருத்த வேலைகள் காரணமாக தங்கள் வாழ்க்கைத் தொழில் போய்விட்டதாக அனைவரும் முறையிட்டனர். அறுவடைக் காலத்தில் அற்றைக் கூலிக்கு வேலை செய்வதற்காக தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஆண்களும் பெண்களும் பலர் குடிபெயர்கிறார்கள். உயர்நிலைப்பள்ளியில் வாசிக்கும் ஒரு சில மாணவர்களும் உபகாரச் சம்பளம் பெற முடியவில்லை. ஏனெனில், உபகாரச் சம்பளத்திற்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ள குறைந்த பட்சமான 40 மதிப்பெண்கள் பெற அவர்களால் இயலவில்லை. ஆண்களில் பலர் இடுப்புக்குச் சரியான வேட்டி கூட இல்லாமல் கோவணத்துடன் இருக்கிறார்கள். சிறுவர்களில் பெரும்பாலானவர்களுடைய நிலையும் அவ்வாறே. அரிசன மாணவர்கள் சற்று நல்ல முறையில் நல்ல விதமாய் உடை அணிந்தவர்களாய் இருக்கிறார்கள். அகரம், வல்லம் ஆகிய இரு கிராமங்களிலும் பெரும்பான்மைச் சமூகமான படையாச்சி சாதியினர் பொருளாதாரத்தில் அரிசனர்களை விடவும் மோசமாய் இருக்கின்றனர் என்பதே பொதுவான கருத்து. பள்ளி செல்லும் சில குழந்தைகளும் உயர்நிலைப்பள்ளி செல்லும் சில குழந்தைகளும் எந்தவிதமான அரசு உதவியும் பெறுவதில்லை. இப் பகுதி முழுவதிலும் குறிப்பிடத்தக்க சாலை வசதி ஏதுமில்லை." இவ்வாறு ஒரு கிராமத்தைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் எல்லாக் கிராமங்களிலும் அநேகமாக இதே விதத்தில் தான் நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே அவைகளை நிவர்த்தி செய்ய அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி ஆண்டிமடம். அதிலுள்ள எல்லா கிராமமும் பின்தங்கிய பகுதியைச் சார்ந்தது. பெருவாரியான கிராமங்களில் வருஷத்தில் 6 மாதத்திற்குக் கூடக் குடிதண்ணீர் கிடைப்பது அரிது. கிணறுகள் வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காது,

எங்கள் பகுதியில் யுனிசெப் உதவியுடன் ஆழக் குழாய்க் கிணறுகள் போடுவதாகப் பூர்வாங்க வேலைகள் நடந்தன. ஒவ்வொரு கிராமத்திலும் எந்தெந்த இடங்களில் குழாய்க் கிணறு போடப்படும் என்று கூடத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் என்ன காரணத்தினாலோ வேலைகள் துவக்கப்படவில்லை. உடனடியாக ஆழக் குழாய்க் கிணறு வேலையைத் துரிதப்படுத்தி குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்து, அந்த மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரியலூர் தாலுக்காவிலுள்ள பொன்பரப்பி, சிறுகளத்தூர் முதலிய கிராமங்களுக்கு பெரியாகுறிச்சி கிராமத்திலிருந்து குழாய் மூலம் குடிதண்ணீர் கொண்டுவருவதற்காக ஒரு திட்டம் பரிசீலிக்கப்பட்டு வந்தது. அந்தத் திட்டத்தைத் துரிதப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு அந்தக் கிராமங்களுக்கு நிரந்தரமான குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மத்திய அரசால் ஆங்காங்கே பல திட்டங்களின் பிரச்னைகள் ஆராயப்பட்டு, ஆழக் குழாய்க் கிணறுகள் இலையூர் போன்ற கிராமங்களில் போடப்பட்டு, நல்ல குடி தண்ணீருக்கான தகுதியுள்ள இடங்கள் இருந்தும் அவற்றை மூடி வைத்திருக்கிறார்கள். அவற்றை ஊராட்சி ஒன்றியங்களிடத்திலோ, அல்லது ஊராட்சிகளிடத்திலோ ஒப்படை செய்தால், அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களில் குடி தண்ணீர்க் குறை தீர்க்கப்படலாம். ஒரு பெரிய உயர்நிலைத் தண்ணீர்த் தொட்டி கட்டி பக்கத்திலுள்ள கிராமங்களுக்குக் கூடத் தண்ணீர் சப்ளை செய்ய முடியும். எனவே மத்திய அரசாங்கத்திடமிருந்து மாநில அரசு பெற்று ஊராட்சி அல்லது ஒன்றியங்களிடத்தில் அதை ஒப்படை செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. செ. கந்தப்பன்—தலைமை)

அடுத்ததாக, பாதை வசதிகளைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். ஊராட்சி ஒன்றியங்கள் துவங்கிய காலத்திலிருந்து பஞ்சாயத்து மூலமாகவும் ஒன்றியங்கள் மூலமாகவும் ரோடு போடப்பட்டு வருகிறது. போதிய நிதி வசதி பஞ்சாயத்துக்கோ அல்லது யூனியன்களுக்கோ இல்லாததால் ரோடுகள் போடப்படுவதோடு நின்று விடுகிறதே தவிர பராமரிக்கப்படுவதில்லை. செந்துறைப் பகுதியில் தளவாய், அங்கனூர், தத்தனூர்,



V211, 31 N72



31 N72·17

குழூமூர். வஞ்சினபுரம். நம்மங்குணம், நக்கம்பாடி பஞ்சாயத்துக்களில் கறுப்பு மண் கொண்டவை. மழை பெய்தவுடன் சகதியாக மாறிவிடுகிறது. அந்த ரோடு ரோடாக இருக்காது, ஆகவே, மணலோ சரளையோ நாரோ போட்டு அதை நிரப்பினால் தான் அவைகள் நல்ல ரோடுகளாக மாறும். 1,000 மைல் நீளமுள்ள பேருந்துகள் செல்லும் ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசு மேற்கொள்ளுவது என்று முடிவு அறிவித்திருப்பதை நான் வரவேற்கிறேன். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்த ரோடுகளை சரியானபடி பராமரிப்பதற்காக ஸ்பெஷல் கிராண்ட் கொடுத்து உதவி புரிய வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அதோடு கவரைப்பாளையத்திலிருந்து [illegible] பேட்டைப் பாதையை பெரும்பாட்டை [illegible] கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய பகுதியில் ஒரு [illegible] ஏரி கூட கிடையாது. கிணறு வசதி கூட கிடையாது. [illegible] கிணறு வெட்டினாலும் தண்ணீர் கிடைக்காது. எந்த விதமா[illegible] ஆற்றுப்பாசனமும் கிடையாது, இருக்கின்ற ஏரிகளும் ச[illegible] பராமரிக்கப்படவில்லை. அதற்குப் போதுமான நிதி [illegible]யும் கிடையாது. ஆண்டிமடம் யூனியனில் மதிகெட்டான் ஏரி, நமங்க ஓடை திட்டம் ஆகிய இரண்டும் நீண்டகாலமாகவே அரசின் [illegible]யில் இருந்து வருகிறது. செந்துறை யூனியனில் வங்காரம் [illegible] பெருமாண்டி ஏரி முதலிய ஏரிகளை மராமத்து செய்யவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அரசு அதன் மேல் விரைவில் ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

நெசவாளர்கள் நிலைமைகளைப் பற்றி அரசு ஒரு குழு ஏற்படுத்தி இருக்கிறது. அதன் பரிந்துரைகளை உடனடியாகக் கேட்டு, அவர்களுடைய கூலிகளும் வசதிகளும் மேலும் பெருகச் செய்ய வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மேலும், என் பகுதியில் மருந்து, வைத்திய வசதி கிடையாது. இப்பொழுது ஜில்லா போர்டிலிருந்து யூனியன் ஒன்றியத்திற்கு, டிஸ்பென்சரிகளின் நிர்வாகத்தை மாற்றி இருக்கிறார்கள். அவைகளில் 45 யூனியன்களில் உள்ள ஜில்லா போர்டு ஆஸ்பிடல்களை அரசாங்கம் இந்த ஆண்டு எடுத்துக் கொள்வது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன். அப்படிப்பட்ட ஆஸ்பிடல்கள் கூட, சில இடங்களில் பஞ்சாயத்து யூனியன் ஆரம்ப சுகாதார நிலையமும், ஜில்லா

[திரு. செ. சதாசிவம்] [1972 மார்ச் 8

போர்டு ஆஸ்பிடல்களும் ஒரே இடத்தில் இருக்கின்றன. பிரைமரி ஹெல்த் சென்டர் இருக்கிற இடத்தில் இல்லாமல், ஜில்லா போர்டு ஹாஸ்பிடல்களை வேறு இடத்தில் மாற்ற வேண்டும். ஆண்டிமடம், செந்துறையில் முதன்மையாக இதை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தங்கள் மூலமாக மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், என் பகுதியில் ஒரு ஓட்டு வீடு இருந்தால், அநேகமாக 10 வீடுகள் குடிசையாக இருக்கும். அவைகள் தீப்பற்றிக் கொண்டால் தற்சமயம் கும்பகோணத்திலிருந்தோ திருச்சியிலிருந்தோதான் தீயணைக்கும் படை வர வேண்டும். அந்த இடத்திற்கு அவர்கள் வந்து சேருவதற்குள் எல்லாம் எரிந்து தீர்ந்து விடும். பொன்பரப்பி போன்ற கிராமங்களுக்குத் தந்தி தொலைபேசி போன்ற எந்த வசதியும் கிடையாது. வேறு இடங்களுக்குச் சென்று அதைத் தெரிவித்து விட்டு, திரும்ப அந்த இடத்திற்கு வருவதற்குள் எல்லாம் எரிந்து விடும். ஆகவே, உடையார்பாளையத்தில், ஜெயங்கொண்டம் கிராமத்தில் தீயணைக்கும் படையை அமைத்துத் தருமாறு பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மேலும், யூனியன் மூலம் தற்சமயம் ஸ்தல வரி விதிக்கப்படுவதை 5 எக்கருக்குக் குறைந்தவர்களுக்கு வரி கிடையாது என்று சொல்வதுபோல. இந்த ஸ்தல வரியும் இவ்வளவு தொகைக்கு மேல் வரி செலுத்துகிறவர்களுக்கு விதிக்கலாம் என்ற நிர்ணயத்தை அரசு ஏற்படுத்தி கொடுத்தால் அது மிகவும் நலமாக இருக்குமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அரியலூர் உடையார்பாளையம் தாலுக்காவில் அரசு காடுகள் பல ஏக்கர்களில் இருக்கின்றன. முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. பாக்கி எவ்வித பிரயோஜனமும் இல்லாமல் ஆயிரக் கணக்கான ஏக்கர் இருக்கிறது. அவற்றைப் பரிசீலனை செய்து. பிரயோசனமில்லாது கிடந்து, அதிலே காவல் வேலை செய்பவர்களின் கூலிக்குக் கூட வருவாய் இல்லாது கிடப்பதை விவசாயிகளுக்குப் பயிர் சாகுபடிக்குக் கொடுத்தால் அது மிகவும் நலமாக இருக்கும். ஆகையினால், அரசுக்கு வருமானமில்லாத, எந்த விதமான பயிரையும் செய்ய முடியாமலிருக்கின்ற காலி இடங்களை அரசு



1972 மார்ச் 8] [திரு. செ. சதாசிவம்]

பாதுகாத்துக் கொண்டிருப்பதை விட்டு, பொது மக்களுக்குக் கொடுத்தால், செப்பனிட்டுத் திருத்திக் கொள்ள ஏதுவாக இருக்குமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மேலும், உடையார்பாளையம், அரியலூர் தாலுகாவில் முந்திரி சாகுபடி செய்யும் நிலங்கள் ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. முதலில் சொன்னது போல், அறுவடை காலத்தில் தொகுதியிலுள்ள மக்கள் வேலை இல்லாமல் தஞ்சாவூருக்குப் போகிறார்கள், முந்திரித் தோப்புகளை வைத்து, தொழிற்சாலை ஒன்றை அந்த வட்டாரத்தில் ஆரம்பித்தால், அவர்கள் வாழ்க்கை உயர வசதியாக இருக்கும். முந்திரிக் கொட்டைகளிலிருந்து எண்ணெய்களும், முந்திரி பழத்திலிருந்து சாராயமும் காய்ச்சலாம்மென்று சொல்கிறார்கள். இதைப் பரிசீலனை செய்து, ஆயிரக்கணக்கான மக்கள் முந்திரி சாகுபடி செய்யும் அந்த இடத்தில் ஒரு முந்திரி தொழிற்சாலையையும் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பணிவாகக் கேட்டுக் கொண்டு மேலும் இந்த மாநில சுயாட்சி பற்றி இரண்டொரு சொல்—என் கருத்தாக சொல்லுகிறேன்.

மாநில சுயாட்சி அவசியம்தானு என்று கேட்கப்படுகிறது. மிகவும் அவசியமானது என்று சொல்ல எனக்குத் தோன்றுகிறது. மக்களுடைய நல் வாழ்வைப் பிரதிபலிக்க, அவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற, இந்த மாநில சுயாட்சி மிகவும் அவசியம். இன்று காலையில் கூட மின்சார அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அனல் மின்சார நிலையங்கள் நம் தமிழகத்தில் துவக்கப்படுமா என்று கேட்ட பொழுது, மத்திய சர்க்கார் ஒப்புக் கொண்டால் செய்யலாமென்று சொன்னார்கள். நம் பணத்தைச் செலவழித்து நம் தேவைக்கு அனல் மின்சாரத்தை ஏற்படுத்த வேண்டுமென்றால்கூட, அவர்கள் மத்தியில் அதிகாரம் வேண்டுமென்று சொல்லுகிறார்கள். தஞ்சாவூர் கோயில் யாரால் கட்டப்பட்டதோ அவர்களுக்கே ஒரு சிலை வைக்க வேண்டுமென்று சொல்கிறபொழுது, அந்தக் கோயிலில் வைக்க மத்திய சர்க்காரின் அனுமதி பெற்றுத்தான் வைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. எந்தச் சிறு காரியமானாலும் கூட, மத்திய சர்க்காரின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தால் எப்படி நாம் முன்னேற முடியும்? இங்கு இருக்கின்ற சேர்வராயன் மலையில் இரும்பு கனிச் சுரங்கம் இருக்கின்றது. அதை வெட்டி

[திரு. செ. சதாசிவம்] [1972 மார்ச் 8

எடுக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாகப் பேசப்பட்டு வருகிறது. இங்கே இருக்கிற தொழிலாளர்கள் வேலை இல்லாமல் திண்டாடுகிறார்கள். இதைச் செய்யும் உரிமை நமக்கிருந்தால், நாம் முயற்சி செய்து வேலை இல்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியாதா? மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாதா? ஆகவே அவைகளை எல்லாம் செய்ய நமக்கு மாநில சுயாட்சி தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த நீண்ட காலமாக தி.மு.க. அரசால் நமக்கு நன்மை இருக்குமென்று நினைத்துக் கொண்டிருக்கிற அவர்களுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்ய மாநில சுயாட்சி மேலும் தேவை என்று கூறி, இந்நேரம் அனுமதி அளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

**திரு. ஆ. கு. சுப்பையா :** மதிப்பிற்குரிய தலைவரவர்களே, இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டம் சென்ற ஆண்டை விட அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 400 கோடி ரூபாய் நம் மாநிலத்தில் செலவு செய்வதற்கு முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிக்கையில் சமர்ப்பித்திருக்கிறார்கள். இந்த 400 கோடி ரூபாய் முறையாக, இருக்கின்ற ஏழை, எளியவர்களுக்காகப் பயன்படக்கூடிய அளவில் செலவு செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக் கொள்ளுவதற்கு விரும்புகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், தஞ்சை மாவட்டத்திலேயே 14 லட்சம் ஏக்கர் விவசாயத்தில் இருந்து கொண்டிருக்கிறது. அந்த 14 லட்சம் ஏக்கரில் வருஷா வருஷம் வெள்ளம், மழை போன்ற இயற்கை பாதிப்பால் மிகப் பெரும் அளவிற்கு பாதிக்கப் படுவது குறித்து உலக ஐக்கிய நாட்டுக் கமிஷன் ஆராய்ச்சி செய்து அந்த மாவட்டத்தில் வாய்க்கால் வசதிகளையும் பாசன வசதிகளையும் செய்ய வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தார்கள். அந்தச் சிபார்சை, இன்றையத் தினம் ஏற்று நடத்துவதற்கு மத்திய அரசு தயக்கம் காட்டுவதன் மூலமாக அது தஞ்சை மாவட்டத்திலும், பொதுவாகத் தமிழகத்திலும் பெரிய அளவுக்கு உணவு உற்பத்தி செய்து கொடுக்கக் கூடிய பிரதேசம் பாதிக்கப் படுகிறது என்பதைக் கவனத்தில் கொண்டு, அந்தத் திட்டத்தைத் தீவிரமாக நிறைவேற்றுவதற்காக ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டிய ஒரு அவசியம் இருக்கிறது.



1972 மார்ச் 8]

அது போல, சேது சமுத்திரத் திட்டமும் இன்றைய தினம் பல ஆண்டுகளாக தமிழக மக்கள் கோரிக்கையில் ஒன்றாக இருந்து கொண்டிருக்கிறது. சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகத் தமிழகத்தில் பல ஆயிரம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பது மட்டுமல்லாமல் தமிழகத்தின் பொருளாதார உயர்வுக்கும் ஒரு வசதியாக இருக்கக் கூடிய திட்டமாகும். அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்றும், அதற்கு அரசாங்கம் முன் முயற்சி எடுக்க வேண்டுமென்றும், சகல கட்சிகளையும் அழைத்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற ஒரு கிளர்ச்சி நடத்த வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பதில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஸ்தல ஸ்தாபனங்களுக்குச் சொந்தமான, பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்குச் சொந்தமான சாலைகளில் இன்றையத் தினம் பஸ்கள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அந்தச் சாலைகள் மிகவும் மோசமாக இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் நடத்த வசதி இல்லாத காரணத்தால் அந்தச் சாலைகளைப் பராமரிக்க முடியாத நிலையில் ஓடிக் கொண்டிருக்கின்ற பஸ்கள் நின்று விடுகின்றன. அப்படி நிறுத்தினால் அங்குள்ள மக்களுக்கு அதிருப்தி ஏற்படுகிறது. அம்மாதிரி நேரங்களில் அங்கு ஓடிக் கொண்டிருக்கும் பஸ்களை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுவது என்று செயல்பட்டு வருகிறது. எங்கெங்கெல்லாம் பஸ்கள் அவ்வாறு ஓடுகின்றனவோ அவற்றை எல்லாம் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுவது என்பது நியாயமாக இருக்குமென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

லோகல் சர்சார்ஜ் செஸ் ரூ. 1.50-ல் இருந்து மீண்டும் 2.50 விதிக்கலாமென்று சொல்லுவது அவசியமில்லாதது. இன்றைய தினம் ஏராளமாக வரிகள் சர்க்காருக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கிராமப் புறங்களில் இருக்கிற ஏழை, எளியவர்கள், எந்தவித வசதியும் வருவாயும் இல்லாதவர்கள் சர் சார்ஜ் கொடுப்பதென்பது நியாயத்திற்கு விரோதமானது. அந்த உத்தேசத்தை அரசாங்கம் கைவிட வேண்டும். அதற்குப் பதில் சர்க்கார் வேறு வகையில் நிதி உதவி செய்ய வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 மார்ச் 8

குடியிருப்பு நில ஆர்ஜிதம் செய்வது மூலமாக, தஞ்சாவூர் மாவட்டத்தில் சட்டம் கொண்டு வந்திருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். அதுபோல இராஜ்யத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் இந்தக் குடியிருப்பு மனையைச் சொந்தப்படுத்தும் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுவதுடன், அரிஜனங்களுக்கு குடியிருப்பு மனைகள் கொடுக்கும் திட்டம் மிகத் தாமதமாய் இருக்கிறது, சென்ற வருஷமும் முன் வருஷமும் இம் மாதிரி மனைகள் நில ஆர்ஜிதம் செய்வது நிறுத்தப்பட்டிருந்தது. இந்த வருஷம் அதற்காக 15 லட்சம் ஒதுக்கி இருப்பதாக நான் வரவு-செலவுத் திட்டத்தில் பார்த்தேன். அது போதுமானது அல்ல. அதிகமாக நிதி ஒதுக்கி இன்றையதினம் எல்லா மாவட்டங்களிலும் இருக்கிற ஹரிசனங்களுக்கு குடியிருப்பு மனையைச் சொந்தமானதாக வழங்க வேண்டும்.

ஹரிஜனங்களுக்கு வீடு கட்டிக்கொள்ள மனைகள் வழங்கினாலும் அவர்கள் சொந்தமாக வீடுகள் கட்டிக்கொள்ள மிகவும் கஷ்டப்படுகிறார்கள். இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழக அரசு நகரத்தில் எப்படி குடிசை மாற்று வாரியத்தை ஏற்படுத்தி ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தருகிறதோ அதுபோல கிராம மக்களுக்கு என்று ஒரு வாரியத்தை ஏற்படுத்தி—எல்.ஐ.ஸி.யில் கடன் பெற்றாலும் சரி அல்லது வேறு வகையிலே பணம் ஒதுக்கி ஏழை எளிய ஹரிஜன மக்களுக்கு எல்லாம் வீடுகள் கட்டித் தருவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயத் தொழிலாளர்கள் கூலி கீழ்த்தஞ்சையில்தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அது மேல் தஞ்சைக்குக் கூட இல்லை. சட்டப்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள கூலியும் குறைவானதாகவே இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை ஆண்களானால் 4 ரூபாயும், பெண்கள் என்றால் ரூ. 2.50 என்றும் நிர்ணயித்து எல்லா மாவட்டங்களுக்கும் இந்த நியாயக் கூலிச் சட்டத்தை விஸ்தரித்தால்தான் ஏழை எளிய ஹரிசன விவசாய மக்களிடத்திலே நல்லதொரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இன்றையதினம் அவர்கள் பல மாவட்டங்களிலே மிகக் குறைந்த ஊதியத்தைப் பெற்று வறுமையில் உழன்று கொண்டிருக்கிறார்கள்.



1972 மார்ச் 8] [திரு. ஆ. கு. சுப்பையா]

போலீஸ் நடவடிக்கைகளை எடுத்துப் பார்த்தாலும் போலீசார் முதலாளிகளின் பக்கம் நின்றுதான் தொழிலாளர்களை, தொழிலாளர்களின் தலைவர்களைத் தாக்கி வருகிறார்கள். எங்கள் கட்சியைச் சேர்ந்த கண்ணபிரான், மங்களசாமி ஆகியவர்களை போலீசார் முன்னிலையில் அடித்திருக்கிறார்கள். போலீசார்களே அடித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தவறான செய்தி நாட்டில் பரவிவிடக் கூடாது என்பதற்காக நான் குறுக்கிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் கண்ணபிரானைப் பற்றித்தான் சொல்கிறார் என்று நினைக்கிறேன். போலீசாரால் அவர் அடிக்கப்பட்டிருந்தால் உண்மையிலேயே நானும் மிக வருத்தம் அடைவேன். அதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலும் விசாரித்தேன். அங்கே சோடா பாட்டில் வீசப்பட்டது. அதில் இருந்து தெறிந்த ஒரு க்ளாஸ் துண்டு இவரது நெற்றியில் தெறித்து விழுந்தது. திரு. கண்ணபிரானே "என்னை யாரும் அடிக்கவில்லை, கிளாஸ் துண்டுதான் தெறித்து விழுந்தது, நீங்கள் கலைந்து போங்கள்" என்பதாக கூட்டத்தைக் கலைந்து போகச் சொன்னார்களே, அவரை யாரும் தாக்கவில்லை என்பதாக மாவட்ட ஆட்சித் தலைவரும் தெரிவித்து இருக்கிறார். அவரைப் போலீசார் அடிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மங்களசாமி பற்றியும் குறிப்பிட்டார்கள். நானும் அதுபற்றி விசாரித்தேன். அன்று நடந்த கலவரத்தில் தன்னை யாரும் தாக்கியதாக எந்தப் போலீஸ் ஸ்டேஷனிலும் திரு. மங்களசாமி வழக்குப் பதிவு செய்யவில்லை; மாறாக தங்களைத் தாக்கியதாக திரு. மங்களசாமி மீது நான்கு பேர்கள் வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள் என்கிற விவரம் தான் கொடுத்திருக்கிறார்.

**திரு. ஆ. கு. சுப்பையா:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதான். அவர்கள் சொல்கிற மாதிரி திரு. மங்களசாமி அவர்கள் போலீஸ் ஸ்டேஷனில் புகார் எதுவும் செய்யவில்லை. ஆனால் தன்னை அடித்துவிட்டார்கள். உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போன் மூலமாக கோரியிருக்கிறார். போலீசார் கம்ளெய்ன்டு இல்லாமலேயே பல

இடங்களில் வழக்குகள் பதிவு செய்திருக்கிறார். எங்களது கட்சித் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கூட திரு. மங்களசாமி தாக்கப்பட்டது குறித்து போலீஸ் அதிகாரியிடத்தில் நேரில் பேசியிருக்கிறார். இதுபோல சில இடங்களில் தகராறுகள் ஏற்படுகிறது என்றால் போலீசார்கள் தலையிட்டு அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்குப் பதிலாக ஒரு தலைப் பட்சமாக பல இடங்களில் நடக்கிறார்கள். சமூக விரோத சக்திகளும் இதைப் பயன் படுத்திக் கொண்டு கலவரத்தை வளர்க்கும்படியான காரியங்களில் ஈடுபட்டுவிடுகிறார்கள். அப்படி யின்றி காவல்துறையினர் நடுநிலைமையில் அங்கங்கே எந்தவித மான அசம்பாவிதமும் நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, இன்றையதினம் கொள்முதல் சம்பந்தமாக தமிழ்நாடு அரசு வாரியம் ஒன்றை ஏற்படுத்தி நமக்குத் தேவையான தானியங்களைக் கொள்முதல் செய்ய முடிவு செய்யப் பட்டிருக்கிறது. அந்த மாதிரி சந்தர்ப்பத்தில் விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பதாக எங்கள் கட்சியின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு விவசாயத்திற்கு ஆகும் செலவிற்குத் தக்க வகையில் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

மற்றொன்று, நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக குடும்பத்திற்கான உச்சவரம்பைக் குறைத்து அரசு அறிவித்திருக்கிறது. இது போன்று எவ்வளவு செய்தாலும் சரியில்லை—அடிப்படை மாற்றம் —உழுபவனுக்கே நிலம் சொந்தமானது என்பதாகச் செய்தால் தான் பலவிதமான ஏமாற்று வேலைகளுக்கே இடமில்லாது போகும். 30-ஐ 15 ஆக்கினாலும் உபரி நிலம் கிடைக்குமா என்கிற ஐயப்பாடுதான். இல்லை என்றால் ஏற்படும். முதல் அமைச்சர் அவர்கள் திருச்சியில் பேசும்போது 5 ஆயிரம் ஏக்கரா உடைய ஒருவர் எப்படி எப்படி எல்லாம் நிலத்தைப் பிரித்து வைத்து விட்டார், அவரிடம் இருந்து உபரியாக 48 ஏக்கராதான் எடுக்க முடிந்தது என்பதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.

உழுபவனுக்கே நிலம் சொந்தம். ஒரு குடும்பத்திற்கு உயர்ந்த பட்சம் 25 ஏக்கராவுக்கு மேல் போகக் கூடாது என்பதுபோன்ற ஆலோசனைகளை எல்லாம் நாங்கள் கூறுகிறோம். அப்போதுதான்



நிலச் சீர்திருத்தத்தை நியாயமான முறையில் அமுல்படுத்த முடியும். குத்தகை தள்ளுபடி என்கிறபோது—இதுவரை பழைய குத்தகை பாக்கிக்காக பல்லாயிரக்கணக்கானவர்கள் நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் இது ஒரு பெரிய நிவாரணமாக அமையும் என்றாலும் இந்த வருஷம் குத்தகையை அளித்தால்தான் இந்தப் பயன் ஏற்படும் என்கிறார்கள். அளந்த இந்த வருஷக் குத்தகையை நிலப் பிரபுக்கள் பழைய பாக்கிக்கே வரவு வைத்திருப்பார்கள். ஆக இந்த வருஷம் பாக்கி என்பது பல பேர்களுக்கு இருக்கும். ஆகவே, 1972-ம் வருஷம் நெல் அளந்திருந்தால் விவசாயிகளுடைய முன் பாக்கிகள் தள்ளுபடி செய்யப்படும், ரத்து செய்யப்படும் என்று குறிப்பிட வேண்டும். அந்த முறையில் சட்டம் செய்யப்பட வேண்டும். இன்றையதினம் பெரிய அளவிலே கடன்பட்டிருக் கிறார்கள். கடனிலே பிறந்து, கடனிலேயே வாழ்ந்து கொண்டிருக் கிறார்கள். விவசாயிகளுடைய கடன் நிவாரணத்திற்கு 1938-ம் ஆண்டில் கனம் ராஜாஜி அவர்கள் முதலமைச்சராக இருந்த போது ஒரு சட்டம் கொண்டு வந்தார். அதில் இருக்கக்கூடிய குறைகளை நீக்கி கடன்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில், நல்ல நிவாரணம் கிடைக்கும் வகையில் நல்ல சட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.

அடுத்தபடியாக, இப்போது எங்கே பார்த்தாலும் வட்டிக் கடைகள் அதிகரித்து வருகின்றன. புடவைகளைக்கூட அடகு வாங்குகிறார்கள். கிராமப்புறங்களில் விவசாயிகளுடைய சாதனங் கள் கூட வட்டிக் கடைக்குச் செல்கின்ற நிலைமை இருக்கிறது. கிராமங்களில் வட்டிக் கடைகள் அதிகமாக ஏற்பட்டிருக்கின்றன. கடன் வாங்கித்தான் குடும்பத்தை நடத்த வேண்டும் என்கிற நிலை இருக்கிறது. அவர்கள் வாங்குவது அநியாய வட்டி. நியாயமான வட்டிக்குக் கடன் கிடைக்க வழி இல்லை. பத்தாயிரம், இருபதாயிரம் ரூபாய் என்று மூலதனம் வைத்து, வட்டிக்குக் கடன் கொடுப்பவர் கள், நூற்றுக்கு 12½ ரூபாய் வட்டி என்று சொல்லி, அந்த 12½ ரூபாயை முதலிலேயே கழித்துக் கொண்டுதான் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கிறார்கள். இந்த வட்டிக்குக் கடன் வாங்குவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை. ஆகவே, நியாய வட்டிக்குக் கடன் கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கூட்டுறவு வங்கிகளின் மூலமாகவோ அல்லது தேசிய உடைமை

[திரு. ஆ. கு. சுப்பையா] [1972 மார்ச் 8

யாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகவோ நியாயமான வட்டிக்குக் கடன் கிடைக்க வழிவகை செய்து கொடுக்க வேண்டும். இதனால் விவசாயிகளுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் கடன் கிடைக்கும் இல்லையென்றால், அவர்கள் லேவாதேவிக்காரர்களிடம் சிக்கிக் கொண்டு, அவர்கள் வலையில் விழுந்து அவர்களுடைய வாழ்வு பாதிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டம் கொண்டுவரும்போது, விவசாயிகளுக்கு, தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான நடவடிக்கைகள் எடுப்பதற்குரிய வகையில் சிறந்த சட்டமாகக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு. என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எல். கணேசன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நாடும் ஏடும் நல்லவர்களும் பாராட்டுகின்ற நிதிநிலை அறிக்கையை நானும் பாராட்டி, எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை பாடுபடுகின்ற பாட்டாளி வர்க்கம் நிச்சயமாகப் பாராட்டுகிறது. உழைக்கின்ற தொழிலாளி வர்க்கம் அதை ஏற்றுப் போற்றி, நன்றி தெரிவிக்கிறது. இதிலே பெருமைக்குரிய செய்தி என்னவென்றால், பகை கக்குவதையே தங்களுடைய மரபாகக் கொள்கிற பத்திரிகைகள்கூட அதை ஆதரித்துப் பாராட்டி இருக்கின்றன. நவமணி பத்திரிகை இந்த நிதிநிலை அறிக்கையை நல்ல வண்ணம் பாராட்டி ஏற்றுக் கொண்டிருக்கிறது. எதிர்ப்பதையே இயல்பாகக் கொண்ட 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை அதை வெகுவாகப் பாராட்டியிருக்கிறது. 'உபரி நிதிநிலை அறிக்கை என்பது ஒரு அபூர்வமாகிவிட்ட இந்தக் காலகட்டத்தில் தமிழகத்தின் முதலமைச்சர் உபரி நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிப்பது பாராட்டுதற்குரிய ஒன்று' என்று சொல்லி, 'இந்த நிதிநிலை எதிர்காலப் பொருளாதார நிலைக்கு நல்ல அறிகுறியாக இருக்கிறது, இதை மற்ற மாநிலங்கள் பின்பற்ற வேண்டும்' என்று சொல்லியிருக்கிறது. இதைப்பற்றி ஒரே வரியில் நான் விமர்சனம் செய்ய வேண்டுமென்றால், 'இது ஒரு புரட்சிகரமான பொதுவுடைமை அறிவியல் தத்துவங்களைக் கொண்டதாக அமைந்திருக்கிறது' என்று கூறிவிடலாம், பொதுவுடைமைக் கர்த்தா கார்ல் மார்க்ஸ் தத்துவமான பொதுவுடைமை எண்ணங்களை உள்ளடக்கி



1972 மார்ச் 8] [திரு. எல். கணேசன்]

நாடாளுமன்ற ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காக உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாக அமைந்துள்ளது. பொதுவுடைமை கோஷத்தைத் தனது சொந்த வாழ்வுக்கு என்று இல்லாமல் நாட்டுமக்களின் நல்வாழ்வுக்கு ஒரு கொள்கை, ஒரு லட்சியம் என்ற அளவில் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்திருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இந்த அறிக்கையில் கொடுத்துள்ள புரட்சிகரமான திட்டங்களை அத்தனை பேரும் வரவேற்கிறார்கள்.

உச்சவரம்பு கொண்டுவந்த காலத்தில், தங்களுக்கு வேண்டியவர்கள் தப்பித்துக் கொள்ள வேண்டுமென்று பல விதிவிலக்குகள் அளித்திருந்த நிலையில், காலப் போக்கில் இந்த அரசு ரத்து செய்து வருகிறது. குறிப்பாக, அறக்கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களை எடுத்துக் கொள்வது மிகமிகப் புரட்சிகரமானதாகும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்புடன் சொல்லிக் கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நிலத்தில் கணிசமான அளவு நிலங்கள் அறநிலையங்களுக்கும், மடங்களுக்கும், மடாலயங்களுக்கும் சொந்தமானவைகளாக இருக்கின்றன. கடவுளர்க்கும் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. கடவுளர்க்கு நடத்தப்படும் விழாக்களையும், உற்சவங்களையும், இன்ன பிற பூசைகளையும் நடத்த வேண்டாமென்று நாங்கள் சொல்லவில்லை. அவைகள் எல்லாம் நடத்துவதற்குத் தேவையான தொகை போக மற்றவற்றை அரசு எடுத்துக் கொண்டு நாட்டு மக்களுக்காகப் பயன்படுத்தலாம். கோயில் பூசை போன்ற செலவுகளுக்கான வருவாய் தரக்கூடிய நிலங்கள் போக மற்ற நிலங்களை நாட்டுடைமையாக்க வேண்டும் என்பன போன்ற புரட்சிகரமான திட்டத்தை இந்த அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குத்தகை நிலுவைகளைப்பற்றி பட்டுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் சொன்ன கருத்தையே நானும் வலியுறுத்திக் கூட விரும்புகிறேன். இந்தப் பசலிக்குரிய வரியை செலுத்தினால் பழைய பாக்கிகள் தள்ளுபடி செய்யப்படும், ரத்து செய்யப்படும் என்ற கருத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். இதை நடைமுறைப்படுத்தும்போது இதுபோன்ற எல்லாவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. எல். கணேசன்] [1972 மார்ச் 8

அடுத்தபடியாக, இன்றையதினம் அரசியல் ரீதியாக இந்த அரசு ஒரு கொள்கையை அழுத்தந் திருத்தமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. அதுதான் மாநில சுயாட்சி. மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி மலர்ந்திட வேண்டுமென்று சொல்கிற நேரத்தில் பலர், இப்போதே மத்தியில் கூட்டாட்சி தானே இருக்கிறது, அங்கே—மத்தியிலே—நாடாளுமன்றம் இருக்கிறது, இங்கே—மாநிலத்தில்—சட்டசபை இருக்கிறது, மத்தியிலே ஒரு அமைச்சரவை, இங்கே மாநிலத்திலே ஒரு அமைச்சரவை என்ற அடிப்படையில் இப்போதும் கூட்டாட்சிதானே இருக்கிறது என்கின்றனர். நான் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். மனிதனும் வாலில்லாக் குரங்கும் ஒன்றுதான். காரணம், இரு இனத்திற்கும் இரண்டு கால்கள், இரண்டு கைகள் அமைந்திருக்கின்றனவே என்று சொன்னால் எப்படிப் பொருந்தாதோ அப்படித்தான் அதற்கும் பொருந்தாத கூற்று அவர்களுடையது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். கூட்டாட்சியின் அடிப்படையான லட்சியம், கூட்டாட்சிக்குள் அடங்கியிருக்கிற மாநில அரசுகளும், மத்திய அரசின் எல்லைக்கோட்டில் வல்லாண்மை பெற்றவைகளாக இருக்க வேண்டும். They are soverign bodies within their spheres. வல்லாண்மை இன்றையதினம் மாநிலங்களுக்கு இல்லை யென்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். கூட்டாட்சியின் முக்கிய அடிப்படையான அம்சங்கள் என்ன என்பதைக் குறித்து அரசியல் சட்ட விற்பன்னர்கள், 'மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு, எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களுக்கு இருந்தாக வேண்டும்' என்று கூறியிருக்கிறார்கள். இதுவே கூட்டாட்சித் தத்துவத்தின் குறிக்கோள். இங்கே இருக்கிற அரசியல் நிர்ணயசபையைக் கூட்டுகிறபோது, அதனுடைய லட்சியங்கள் இப்படித்தான் இருக்க வேண்டுமென்று நினைத்தனர். மத்திய அரசுக்கு வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள், மற்றவை மாநிலங்களுக்கு என்றுதான் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் கூறிக் கொண்டிருந்தார், என்ன காரணத்தாலோ அப்படி இல்லாமல், மத்திய அரசின் அதிகாரங்கள் வளர்ச்சிபெறக்கூடியவைகளாக ஆக்கப் பெற்று, மாநிலங்களின் அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. இது கூட்டாட்சி முறை அல்ல. இந்திய அரசியல் அமைப்பைப்பற்றி அரசியல் சட்ட விற்பன்னரான திரு. கே. சி. பேர் என்பவர்.



1972 மார்ச் 8] [திரு எல். கணேசன்]

resolution என்றுதான் கூறியிருக்கிறார். இதைப்பற்றி கருத்து சொல்ல வேண்டுமென்றால், அது ஒன்றை ஆட்சிமுறையைப் பொருந்தி இருக்கிறதே தவிர கூட்டாட்சி முறையைப் பொறுத்ததாயில்லை, அரசியல் சட்ட விற்பன்னரும் நல்ல புகழ்பெற்றவருமான ஐவர் ஜென்னிங்ஸ் It is more unitary than federal. என்று சொல்லியிருக்கிறார்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், மாநில அரசுகள் எந்த அளவிற்கு மத்திய அரசையொட்டி, மத்திய அரசோடு சேர்ந்து, தழுவிச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது என்பது தெரிய வரும். மாநில அரசுகள் சாவரினிட்டி பெற்றவைகளாக, சிறப்பு அம்சங்கள் பெற்றதாக இருக்கிறதா என்பதைக் கணக்கில் எடுத்துப் பார்க்க வேண்டும். திட்டமிட்ட பொருளாதாரத்தின் அடிப்படையில் இந்திய நாட்டின் முழுமையான அதிகாரமும், சட்ட அமைப்பிலே அதற்குரிய வாய்ப்புகளும் மத்திய அரசுக்கு இருக்கிற காரணத்தால், மாநில அரசுகளின்மீது பளுவைச் சுமத்தியிருக்கிறார்கள்.

இன்றைய தினம் மாநில அரசுகள் மேலும் மேலும் மத்திய அரசைச் சார்ந்து நிற்க வேண்டுமென்ற நெருக்கடியைப் பெற்று வருகின்றன. இந்த நாடு விடுதலை பெற்றபோது மாநில அரசுகள் மத்திய அரசுக்குத் தரவேண்டியிருந்த கடன் பளு 43.97 கோடியாக இருந்தது, அந்தக் கடன் பளு அதிகமாகி அதிகமாகி இன்றைக்குப் பார்த்தால், 1967-68-ஆம் ஆண்டுக் கணக்குப்படி 5,000 கோடி அளவிலே உயர்ந்திருக்கிறது. மாநில அரசுகள் மத்திய அரசுக்குத் தர வேண்டிய வட்டித் தொகையும் மாநிலத்தினுடைய வருமானத்தின் பெரும்பகுதியைச் சாப்பிட்டு விடுகிறது. 1950-51-ஆம் ஆண்டிலே மாநில அரசு தன்னுடைய வருமான வரியின் பங்கிலிருந்து 3.5 சதவீதம் ரூபாயை வட்டிக்காகக் கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் அதே செலவு 1966-67-ஆம் ஆண்டிலே 20 சதவீதம் ஆக உயர்ந்திருக்கிறது. 1967-68-ஆம் ஆண்டு வருமான வரி வருமானத்தில் 23 சதவீதம் உயர்ந்திருக்கிறது. இப்படி மாநில அரசுகள் கொடுக்க வேண்டிய வட்டியும் கடனும் மத்திய அரசைச் சார்ந்து கெஞ்சி வாழ வேண்டிய நிலைமை உருவாகியிருக்கிறது. நாம் மத்திய அரசிடமிருந்து பெறுகின்ற உதவித் தொகையைவிட நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன், வட்டித் தொகைகள்தான் அதிகமாக இருக்கின்றன என்பதைப் புள்ளி

விவரங்களோடு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். ரூபாய் 45.80 கடனாக திட்ட வகையிலேயும் பிற வகைகளிலும் மாநிலத்திற்குக் கிடைக்கும், ஆனால் அதே நேரத்தில் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை 63.38 கோடியாக வந்து சேருகிறது.

பொருளாதாரத்திலே மத்திய அரசு ஒரு கேந்திரமாக இருந்து கொண்டு மாநில அரசுகளைக் கொத்தடிமைகளாக்குவதைப் பார்க்கிறோம். நிதி வருவாயிலும் நமக்குப் போதுமான பங்கு இல்லை. பொது விற்பனை வரியிலிருந்து உபரியாக வருவதிலே நமக்கு எந்த விதமான பங்கு இல்லை, மிகப் பெரிய அளவிலே பேசிக் கொண்டிருக்கின்ற தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் நிர்வாகத்திலேயும் நமக்குப் பங்கு இல்லை. இந்த வகையிலே மேலும் மேலும் மத்திய அரசினுடைய வலிமை மிகுந்து அதிகரித்து மாநில அரசு ஒரு வெறும் நகராட்சி மன்றமாக்கப்படுகிறது என்ற கருத்தைப் பல்வேறு கால கட்டங்களிலும் சொல்லி வந்து இருக்கிறார்கள்.

இன்னும் பணிவோடு நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். என் இதய தெய்வம், அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் முதல் நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்திலே வைத்தபோது அவர்கள் அவர்களுக்கேயுரிய நட்புணர்ச்சியோடு, லாவகத்தோடு கல்லும் கரையும் பாணியிலே எடுத்துச் சொல்லி இருந்தார்கள். முழுமையான மாநில சுயாட்சித் தத்துவத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லியும் அதைத் தொடர்ந்து ஒவ்வொரு நிதிநிலை அறிக்கையிலும் எடுத்துச் சொல்லியும் அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. நான் பணிவோடு சொல்லிக் கொள்வேன். இப்படி எல்லாவற்றையும் இந்த மாமன்றத்திலே ஆற்றப்படுகின்ற உரைகளாலே அவர்களுடைய உள்ளத்தைத் தொட்டு அதைப் பெறமுடியும் என்று நம்பவில்லை, ஜனநாயக முறையிலே மாநாடுகளைக் கூட்டி கருத்துக்களை மக்கள் முன்னால் வைத்து அவர்களை உணரச் செய்து பெறமுடியும் என்று நான் நம்பவில்லை. நம்முடைய இலட்சியம் எவ்வளவுக்கு எவ்வளவு உயர்ந்ததோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான விலையையும் நாம் தந்தாக வேண்டும். நம்முடைய இலட்சியம் எவ்வளவுக்கெவ்வளவு புனிதமானதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமான தியாகங்களையும் நாம் செய்தாக வேண்டும். உறுதியாக நான் சொல்லிக்கொள்கிறேன். வளர்ந்து



வரும் இளந்தலைமுறையினர் இன்றைக்கு அந்தப் புனிதமான இலட்சியத்தை அடையப் போராடித்தான் ஆகவேண்டும், அந்தப் போராட்டத்திற்கு எவ்வளவு விலை ஆனாலும் அதைத் தருவதற்கு இந்தத் தலைமுறை தயாராகத்தான் இருக்கிறது.

இந்த நிதிநிலை அறிக்கையில் பொருளாதாரப் புரட்சிகரமான அம்சங்களை நாம் சொல்லியிருக்கிறோம். அரசியல் ரீதியிலே தெளிவான கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறோம். இவற்றையெல்லாம் களிப்போடு நான் எடுத்துவைக்கிற அதே நேரத்தில் கவலையோடு ஒன்றை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சமுதாயத் துறையிலே நாம் இன்னும் தீவிரமான கவனம் செலுத்தியாக வேண்டும். ஜாதி இருக்கிறதே, அதை நான் சந்தேகிக்கிறேன் ஜனநாயகம்கூட அதை வளர்த்துக் கொண்டிருக்கிறதோ என்று. இதை நாம் செய்யத் தவறினால்--நாம் செய்யத் தவறினால் என்று நான் ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் நம்முடைய சமுதாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய இரண்டு தலைவர்கள் அடுத்தடுத்து நம்முடைய நாட்டின் முதலமைச்சர்களாக இருக்கிற காலகட்டத்திலே நாம் செய்யத் தவறினால்— வேறு யாரும் எந்தக் காலத்திலும் செய்ய முடியாது. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நாம் அதிகமாகப் பண ஒதுக்கீட்டைச் செய்வதாலும், பிற்பட்ட மக்களுக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கினாலும் அவர்கள் இன்றைக்கு அவர்கள் முன்னேற்றம் பெற்ற தாழ்த்தப்பட்டவர்களாகவும் முன்னேற்றம் பெற்ற பிற்பட்ட வகுப்பினராகவும் தான் இருப்பார்கள். இந்த மூன்று வர்க்கங்களும் ஒன்றாக இணையும் என்பதற்கு ஆன உத்திரவாதம் பொருளாதாரத் திட்டத்தில் இல்லை.

வெளிநாட்டிலேயிருந்து கிறித்துவ மதம் இங்கே **பரவியது** என்றால் இங்கே இருக்கிற பகவத்கீதையைவிட அங்கே இருக்கிற பைபிள்மேல் நாட்டம் வந்ததால் அல்ல, இங்கேயிருக்கிற கிருஷ்ணனைவிட அங்கேயிருக்கிற கர்த்தர் சக்திமிக்க இறைவன் என்று யாரும் எண்ணிச் சென்றுவிடவில்லை. அவர்கள் சலுகைகள் பெற்றுத் தந்தார்கள், சென்றார்கள். ஜாதி கலப்புத் திருமணத்தின் மூலமாக ஒழிக்கப்பட முடியும் என்றாலும்கூட இன்னும் அதிகமான சலுகைகளைக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு நாம் அரசுப் பணிகளுக்குக் குறைந்த பட்சத் தகுதி நிர்ணயித்து

இருக்கிறோம். அதிலே முதலிடம் கலப்புமணம் செய்துகொண்டவர்களுக்கும், அல்லது அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கும் கொடுப்பதாலே எந்தவிதமான நிர்வாகச் சீர்கேடும் வந்துவிடாது, அதிகமான பொருளாதார நெருக்கடியும் வந்துவிடாது. தாழ்த்தப்பட்டவர்களுக்கு பதவிகள் ஒதுக்கீடு செய்து கொடுக்கிறோம், மற்றவர்களுக்கு ரிசர்வேஷன் என்று கொடுக்கிறோம். அந்த நிலைமையிலேயே கலப்புமணம் செய்துகொண்டவர்களுக்கு, அவர்களுடைய வழித்தோன்றல்களுக்கு முதலிடம் கொடுத்துவிடுவதாலே எந்தவிதமான இழப்பும் வந்துவிடாது.

இன்றைய தினம் ஜாதி தலைதூக்கி ஆடுகிறது. கல்லூரிகளிலே பார்த்தால் பரவி வருகிறது. முதலமைச்சர் அவர்கள் தங்களுடைய காலகட்டத்திலே ஜாதி ஒழிப்பைத் தொடக்கி வைத்தால்தான் நாடு விரைவிலே நல்ல வளர்ச்சியடையும் என்று சொல்லிக்கொண்டு நிதிநிலை அறிக்கையை மற்றவர்களைப்போல நானும் பாராட்டி வரவேற்று என்னுடைய நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன்.

* திரு. பூ. எட்டியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களால் தயாரிக்கப்பட்டு இந்த மன்றத்திலே வைக்கப்பட்டு பல கட்சித் தலைவர்களாலும் ஏனைய மாண்புமிகு உறுப்பினர்களாலும் வரவேற்கப்பட்டு எல்லோரும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள்.

குறிப்பாக இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிப் பேசும்பொழுது எதிர்க் கட்சியில் உள்ளவர்கள் ஒரு சில குறைகளைச் சொல்லத்தான் செய்வார்கள். ஏற்கனவே காங்கிரஸ் இருபது ஆண்டுக்காலம் ஆட்சிசெலுத்திவந்த காலத்திலே ஏழை எளிய மக்களுக்கு சோஷலிஸ சமுதாயத்தை உருவாக்குவதற்கு நல்ல திட்டங்களை உருவாக்கவில்லையே என்ற கொதிப்பின் காரணமாகத்தான் அவர்கள் பொறுமைப்பட்டுத்தான் செய்வார்கள் என்பது என்னுடைய எண்ணம். எனவே அவைகளை யெல்லாம் நாம் குறைகளாக எடுக்கக்கொள்ள முடியாத நிலையிலிருக்கிறோம். மேலும் இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி ஒருசில கருத்துக்களைக் கூற ஆசைப்படுகிறேன்.





தற்பொழுது 5 ஏக்கருக்கு உள்ளாக நஞ்சை நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு நிலத் தீர்வை, அடிப்படைத் தீர்வை இல்லை என்று அரசு நிர்ணயித்திருக்கிறது. ஆனால் அதே நேரத்திலே, தண்ணீர்த் தீர்வை என்று வசூலிக்கப்படுகிறது. அதே நேரத்தில் பஞ்சாயத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு 1½ ரூபாய் சர்சார்ஜ் என்றிருந்ததை 2½ ரூபாயாக மாற்றிக்கொள்ளலாம். விருப்பப்பட்டால் மாற்றிக் கொள்ளலாம் என்பதற்கு வழி வகுத்திருக்கிறது. இதை யெல்லாம் பார்க்கும்பொழுது பல முனைகளிலே விவசாயிகள் குறைப்படும் அளவிற்கு இருக்கிறது. தற்பொழுது கேரளாவில் 1 ஏக்கருக்கு 25 ரூபாய் என்று ஒரு ஸ்டாண்டர்டுக்கு வரி வசூலிக்கிறார்கள். அதேபோல் நம்முடைய தமிழகத்திலேயும் சர்சார்ஜையும், நிலத்திற்கு அதாவது 5 ஏக்கருக்குள்ளாக வரி, அடிப்படைத் தீர்வை நீக்கப்படுவதையும் ஒன்றாக இணைத்து ஒரு ஏக்கருக்கு 10 அல்லது 15 என்று குழு ஆராய்ந்து ஒரு நிர்ணய வரியாக அதை ஏற்பாடு செய்தார்களேயானால் ஒன்றியங்கள் தனியாக சர்சார்ஜ் விதிக்க வேண்டிய நிலையில்லாமலும், அரசும் தண்ணீர்த் தீர்வை என்று வசூலிக்கும் அதிகப்படியான ஒரு வேலைப் பளுவும் குறைந்திருக்கும். கிராமாதிகாரிகளுக்கும் ஸ்டாண்டர்ட் வகையிலே, எந்த வகையிலே எவ்வளவு வசூலிப்பது என்ற வேலை சுலபமாக இருக்கும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், பேரணமல்லூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதியாக இருக்கிறது. நீண்டகாலமாக சட்டமன்றத்திலே பேரணமல்லூர், அதாவது வந்தவாசி வட்டமே மிகவும் பின்தங்கியதாக இருப்பதால், அங்குள்ள மக்களுக்கு வேலைவாய்ப்புக்கு வழி செய்யும் வகையில் சிறுதொழில்களுக்காக ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க வேண்டுமென்று மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிசைமாற்று வாரியத்தின் பணி நகர்புறங்களிலே செயல்படுவதைப் போன்று உடனடியாகக் கிராமப்புறங்களிலேயுள்ள அரிசன காலனிகளுக்கும் அதை விஸ்தரிக்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஒரு ஏக்கர் நிலத்திலே சுமார் 70, 80 குடும்பங்கள். கிராமங்களிலே உள்ள அரிசனங்கள் மற்ற எந்தவகையான சுகாதாரத்தோடும் வாழ முடியாமல் ஒரேயொரு குடிசை வீட்டிலே நான்கைந்து குடும்பங்களாகயிருந்து

வருகிறார்கள். அவர்களுக்கு வேறுவகையில்லாமல் அதைச் சுற்றிலும் ஜாதி இந்துக்களின் நிலமிருப்பதால் அவர்கள் எங்கும் போக முடியாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்தக் குடிசை மாற்று வாரியம் உடனடியாகக் கிராமப் பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கிணறுகள் வெட்டுவதற்காக பணமெல்லாம் விவசாயிகளுக்கு நிறையக் கொடுக்கிறார்கள். ஆனால் அவர்கள் அந்தக் கடன்களைக் குறிப்பிட்ட அந்தக் காலத்திற்குள்ளே திருப்பிச் செலுத்த முடியாமல் இருக்கிறார்கள். ஆனால் அதேநேரத்தில் வேலை பூர்த்தியடைந்து, கணக்கிட்டபடி அவர்கள் தவணை முறையில் கட்ட முடியாமல் போயிருந்தால், ஒரே தவணையில் செலுத்த வேண்டுமென்று அரசிலே கெடுபிடி நடக்கிறது. அப்படிக் கெடுபிடியில்லாமல் நியாயமாக, கிணறு வெட்டிப் பூர்த்தி செய்திருந்தால் தவணை முறையிலே கொடுத்துப் பயனடையத்தக்க அளவிற்குச் செய்ய வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் கைத்தறி நெசவாளர்கள் முழுக்க முழுக்க நெடுங்குளம், கோவிலூர், கொடுக்காத்தூர், மேல்சீஷமங்கலம், முனுகப்பட்டு, திருமணி, புரிசை போன்ற கிராமங்களில் நிறைய இருக்கிறார்கள். குறிப்பாக ஒருசில முதலாளிகள் நூல்களை வைத்துக் கொண்டு 100 ரூபாய், 200 ரூபாய் என்று ஏழைக் கைத்தறியாளர்களுக்குக் கொடுத்துவிட்டு அவர்கள் நூலைக் கொடுத்து, சாதாரணமாக 5 ரூபாய் கூலி கொடுக்க வேண்டிய சேலை என்றால், அதில் பாதி ரூபாய்தான் கொடுக்கிறார்கள். ஏற்கனவே அவர்கள் கடன்பட்டிருப்பதால் அவர்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியம் கிடைக்காமல் அவதிப்படுகிறார்கள். அந்த இடங்களிலேயெல்லாம் அரசாங்கமே நூலை வாங்கி அவர்களுக்கு விநியோகிக்கத் தக்க அளவில் செய்து, தக்க பயனை, தக்க கூலியை அடையும் வகையிலே ஆவன செய்ய வேண்டுமென்று வணக்கத்துடன் கேட்டுக் கொள்கிறேன். இதன் காரணமாக என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 10,000 கைத்தறியாளர்களுக்கு நல்ல பயன் கிடைக்கும். கொடுக்காத்தூர், வாழைப்பந்தல் இடையிலே சேயாறு என்று இருக்கிறது. சென்ற ஆண்டு கூட கேட்டுக்



கொண்டிருக்கிறேன். அந்த இரண்டு பகுதிகளிலேயிருக்கும் மக்களுக்கு அடுத்த பக்கத்திலே நிலம் இருக்கிறது. ஏறத்தாழ மழைக் காலத்தில் ஒரு மாத கால அளவிற்கு இக்கரையிலிருப்பவர்கள் அக்கரைக்குச் செல்ல முடியாமலிருக்கிறார்கள். எனவே அங்கு ஒரு " காஸ்வே " கட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விண்ணமங்கலம், சேயாற்றின் குறுக்கே விண்ணமங்கலத்தில் ஏறத்தாழ இருபது கிராமங்களில், சுமார் 10,000 ஏக்கர்களில் இருபோகம் விவசாயம் செய்யும் நிலத்திற்கான வாய்ப்பு இருக்கிறது. அதற்குச் சென்ற ஆண்டு சர்வே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்களை மிகவும் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட வேலை தேடித்தரும் நிலையங்களில் வேலைவாய்ப்பிற்காக மக்கள் பதிவு செய்கிறார்கள். அதிலே ஒருசில வகைகளிலே ஆராய்ந்து ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். ஒரு குடும்பத்திலே 6, 7 பேர் ஆண்கள், பெண்கள் இருந்தால் அவர்கள் எல்லோரும் வேலை தேடித்தரும் அலுவலங்களிலே பதிவு செய்துவிட்டு உத்தியோகம் செய்கிறார்கள். ஆனால் வேலையில்லாமல், நிலமில்லாமல் எந்தவிதமான வசதியுமில்லாமல் இருப்பவர்கள் வேலைவாய்ப்பிற்காகப் பதிவு செய்தாலும்கூட அவர்களுக்குக் குறிந்த காலத்திலே அந்த இண்டர்வியூ வருவதில்லை. அப்படியே வந்தாலும் பல காரணங்களால் அவர்கள் பயன் அடைகிற முறையில்லாமல் இருக்கிறார்கள். எனவே, 5, 6 நபர்கள் இருக்கும் குடும்பங்களில் 4 பேர் 3 பேர் வேலை செய்தால் மேற்கொண்டிருப்பவர்கள், மற்றவர்களுக்கும் வேலை வாய்ப்பு தர வேண்டுமென்ற காரணத்தினால் அவர்கள் வேலை வாய்ப்பிற்குப் பதிவு செய்யக் கூடாது என்ற நிர்ணயத்தை அரசு பரிசிலனை செய்து ஏற்பாடு செய்தால் வேலையில்லாத மற்ற மக்களுக்கும் வேலை வாய்ப்பு வசதி ஏற்படும் என்று பணிவன்போடு என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் பிற்பட்டோர் நலக் குழுவின் அறிக்கை ஏற்கனவே மாமன்றத்திற்கு வந்திருக்கிறது. அதில் பரிந்துரைகள் பல இருக்கின்றன. அதன் காரணமாகப் பிற்பட்ட மக்களுக்கும்

தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் இன்னும் எவ்வளவோ வசதிகள், வாய்ப்புகள் அதிலே இருந்து கொண்டிருக்கின்றன. அந்த வாய்ப்பு முழுவதும் கிடைக்குமளவிலே அந்தப் பரிந்துரைகளின் மீது தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு முதல்வரவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாமன்றத்திலே முதல்வரவர்களால் அளிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை, ஏழைகளின் வரப்பிரசாதமாக இருக்கின்ற இந்த அறிக்கையை மீண்டும் மனமாரப் பாராட்டி, வரவேற்று, அதற்காக என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. செ. கந்தப்பன்)** : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளை காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

## 6. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders.*

50. Notification issued with Roc. No. 188981/70-E5, dated the 19th April 1971, in regard to extension of certain provisions of the Tamil Nadu District Municipalities Act, 1920 relating to drainage in the area of Thirumangalam Town Panchayat of Madurai District. [*Laid on the Table of the House under section* 179 (4) *of Tamil Nadu Panchayats Act*, 1958 (*Tamil Nadu Act* XXXV *of* 1958).]

### *B. Reports, Notifications and Other Papers.*

53. Notification issued with G.O. Ms. No. 710, Labour, dated the 19th June 1971, in regard to an amendment to the Tamil Nadu Factories (Welfare Officers) Rules, 1953.

54. Notification issued with G.O. Ms. No. 926, Labour, dated the 3rd August 1971 in regard to an amendment to the Tamil Nadu Factories Rules, 1950.

# தமிழ் நாடு சட்டப் பேரவை.

## வியாழக்கிழமை, 1972 மார்ச் 9.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## (1) நடைமுறைக் கேள்விகள்.

(அ) அமைச்சர் திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் பதவி விலகல் குறித்து.

THIRU K. T. K. THANGAMANI : I am raising a point of order.

MR. DEPUTY SPEAKER : After question hour.

THIRU K. T. K. THANGAMANI : I know this can be raised after question hour. But there is a precedent that such an issue was raised in this House before the question hour in the year 1970 when three Ministers resigned. The matter was raised by Mr. Vinayakam before question hour. In the year 1964 when Mr. Kamaraj resigned, the matter was raised by the present Speaker of this House who was then an opposition Member, after question hour. So, I am well within my rights for raising it before question hour.

THIRU R. PONNAPPA NADAR : I would also like to say a few words. Our Assembly procedure—Rule 56 says that it is incumbent on the ......... (MR. DEPUTY SPEAKER : 'May ') 'May ' shall be construed as ' shall ' in this context. One other point which I want to stress before this House is this. This House should have been taken into confidence before any announcement has been made either in the Press or outside. I would invite the attention of the Hon. Deputy Speaker to the matters which have already come up before this House previously and it would be obligatory on the part of the Ministry to let the Members know

[Thiru R. Ponnappa Nadar] [1972 மார்ச் 9

what are the reasons for the change and full details should be placed before the House. A statement should be called for from the Government. So, I think it is eminently a fit case in which the Chair may direct that particular clarifications may be made.

THIRU K. T. K. THANGAMANI : Actually before I came to this House I have addressed a letter to the Hon. Speaker thus :

"I learn from the morning papers that the Minister for Agriculture Thiru Anbil Dharmalingam has resigned and that Thiru Mannai Narayanasamy has been included in the Council of Ministers in his place.

It is customary for a Minister who resigns, to make a statement giving reasons for his act and thanking the members and his staff for their co-operation. Such a statement was made by the former Union Finance Ministers Chintaman Deshmukh and T. T. Krishnamachari. Failure to make such a statement was adversely commented upon in the case of V. K. Krishna Menon.

If there is a reshuffle of the Cabinet leading to dropping of a Minister or Ministers it will be different.

Not to make such a statement will lead to unnecessary speculations. It will be improper for the outgoing Minister to make a statement outside without a statement made in the House at the first instance.

May I request you, Sir, to give information to the House about my views."

I have addressed this letter and the point of order I would raise is under Rule 56. I am fully aware that the rule merely says 'may' make a statement. But certain conventions have grown in the Union Legislature and I know it has not been followed in this House. In the case of Mr. Kamaraj in 1964 it was actually raised by the present Hon. Speaker himself and in the case of the three Ministers who resigned in 1970 it was raised by Mr. K. Vinayagam. In both these cases the ruling is of a peremptory nature. Sir, you may please take some time also and give a considered ruling on this particular point because there are other precedents in the other Legislatures and in other Parliaments also. So, if a comprehensive and a detailed ruling is given, it will be a great guide to us.



1972 மார்ச் 9]

THIRU J. JAMES : On a point of order, Sir.

MR. DEPUTY SPEAKER : Is it the same point of order?

THIRU J. JAMES : I do not want to repeat what he has stated. I want to add another thing.

துணைத் தலைவர் அவர்களே, நேற்று பத்திரிகையிலும் ரேடியோவிலும், ஒரு அமைச்சர் ராஜினாமா செய்தார் என்றும், அது மட்டுமல்லாமல் இன்னொரு மாண்புமிகு அங்கத்தினரை பேரவையில் சேர்த்துக்கொண்டதாகவும் அறிவிக்கப்பட்டது. இன்றைய தினம் சாதாரணமாக ஒரு புது அமைச்சர் நியமிக்கப்பட்டிருந்தால், அமைச்சரவையில் அவர் இடம்பெறுவாரானால், அது மற்ற அங்கத்தினர்களுக்குத் தெரியாத முறையில் ஒரு அங்கத்தினர் புதிய அமைச்சராக அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கிறார் என்றுதான் ஆகிறது.

MR. DEPUTY SPEAKER : You are referring to the Press. Is it not? It is not a statement by the Hon. Chief Minister or any of his colleagues.

திரு. ஜே. ஜேம்ஸ் : ரேடியோவில் அனௌன்ஸ் பண்ணியாகிவிட்டது. புது அமைச்சர் அமைச்சரவையில் இடம் பெறுவது அங்கத்தினர்களுக்குத் தெரியாது. அங்கத்தினர்களுக்குத் தெரியாத முறையில் ஒரு புது அமைச்சர் வரும்போது நாங்கள் அவரை 'அமைச்சர்' என்று எடுத்துக்கொள்வதா? அல்லது வேறு எந்த முறையில் எடுத்துக்கொள்வது? அந்தச் சூழ்நிலை மோசமாக இருக்கும், சட்ட மன்றத்தில் அறிவிக்கவேண்டிய பொறுப்பு முதலமைச்சருக்கு இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் பதவிக்கு முதலமைச்சரவர்கள் சிபார்சு செய்வதும், அதை ஆளுநர் அவர்கள் ஏற்றுக்கொள்ளுவதும், அமைச்சர் ஒருவர் பதவியிலிருந்து விலகுவதாக தம்முடைய பதவி விலகல் கடிதத்தைத் தருவதும், அதை முதலமைச்சரவர்களின் சிபார்சு பேரில் ஆளுநர் அவர்கள் ஒப்புக்கொண்டு அறிவிப்புத் தருவதும் அரசியலமைப்புச் சட்டத்திலே குறிப்பிடப்பட்ட ஷரத்துக்களாகும். நம்முடைய சட்டமன்றத்திற்கும் அமைச்சர்களுடைய பதவி விலகல் பற்றியும் நேரடிச் சம்பந்தம் இல்லை என்பதும் எல்லோரும் அறிந்த விஷயமாகும்.

[திரு. செ மாதவன்] [1972 மார்ச் 9

இப்பொழுது வந்திருக்கக்கூடிய செய்திகூட, நம்முடைய முதலமைச்சரவர்களிடமிருந்தோ, சம்பந்தப்பட்ட அமைச்சரவர்களிடமிருந்தோ, அரசாங்கத் தரப்பிலோ சொல்லப்படவில்லை. ஆளுநர் அவர்கள் அரசியலமைப்புச் சட்டப்படி ஒரு நடவடிக்கை எடுத்து உத்தரவைப் பிறப்பித்து, அந்த உத்தரவு ஆளுநர் அவர்கள் மூலமாக வெளிவந்திருக்கிறது. அவ்வளவுதானே தவிர, முதலமைச்சரவர்களோ, அமைச்சரவையோ, அரசாங்கமோ நேரடியாக எந்தத் தகவலையும் தரவில்லை என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : May I know from the Hon. Minister whether the newly-appointed Minister is not responsible to the Legislature so that that information may be given to the House?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சொல்லாததைச் சொன்னதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. அமைச்சரைப் போடுவதையும் அமைச்சர் பதவி விலகுவதை ஒப்புக்கொள்ளுவதும் ஆளுநர் அவர்களுக்கு, முதலமைச்சர் அவர்களுடைய சிபார்சின் பேரில், அரசியலமைப்புச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற உரிமை. அவ்வளவுதான் நான் சொன்னேன்.

நம்முடைய சட்டமன்ற விதிகளைப் பொறுத்தவரையில், அமைச்சர்கள் பதவி விலகினால், அமைச்சர்கள் விருப்பப்பட்டால், அவர்களுடைய அறிக்கையை வைக்கலாம் என்றுதான் இருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமே இல்லை. 'மே' என்பதைப்பற்றியும், 'ஷால்' என்பதைப்பற்றியும் முதலிலே விவாதம் வந்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது. முன்னாலே இருக்கக்கூடிய 'முன் மாதிரி' (ப்ரீஸிடென்ட்) என்ற முறையில் முன்பிருந்த ஒரு முதலமைச்சர் ராஜிநாமா செய்தவுடன் ஒரு பிரச்னை இங்கே எழுப்பப்பட்டு, அப்போதும் முடிவு கூறப்பட்டிருக்கிறது. அந்த முடிவின்படி அவர்களாக விருப்பப்பட்டு அறிக்கை தந்தாலொழிய, அவசியம் அறிக்கை தரப்படவேண்டும் என்று கட்டாயப்படுத்துவதற்கு உரிமை கிடையாது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 1970-ம் ஆண்டு இதே போன்ற ஒரு நிலை ஏற்பட்டபோது, அப்போதும் அந்தத் தீர்ப்பையொட்டியே, சட்டமன்றத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை, அவர்கள் விரும்பினால் அறிக்கை தரலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.



1972 மார்ச் 9] [திரு. செ மாதவன்]

நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிடும்போது, இவையெல்லாம் உடனுக்குடன் அப்போதே சொல்லப்பட்ட தீர்ப்பு என்று சொன்னார்கள். எப்படித் தீர்ப்புச் சொன்னாலும் நம்முடைய சட்ட மன்றத்திலேயே இரண்டு முன்மாதிரிகள் இருப்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

பாராளுமன்றத்தில் எப்படி இந்த முறை பின்பற்றப்பட்டது என்பதை ஆராய்ந்தபோது, அவர்கள் குறிப்பிட்ட அந்த அமைச்சர்கள் எல்லாம் அவர்களாக விரும்பி அறிக்கை வைத்திருக்கிறார்கள்.

அந்த அமைச்சரோ, அல்லது அமைச்சரவையோ அல்லது முதலமைச்சரோ இந்த விதியின்கீழ் அறிக்கை வைக்கத்தான் வேண்டுமென்று சொல்ல உரிமை இல்லை என்பதை மட்டும் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆளுநர் அவர்கள் கொடுத்த அறிவிப்பு என்ன என்பதைப் பற்றியெல்லாம் நாம் விவாதிப்பது அவ்வளவு சரியல்ல என்றுதான் நான் கருதுகிறேன். அமைச்சரவையைப் பொறுத்தவரை இது கேள்வி நேரத்திற்குப் பிறகு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்குமானால் தெளிவாக விளக்கம் அளித்திருக்க முடியும். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அரசாங்கத்தின் சார்பில் விதி 82-ன் கீழ் ஒரு ஸ்டேட்மெண்ட் வைக்க அனுமதி கேட்டிருக்கிறார்கள். அப்போது இந்தப் பிரச்சினையே வந்திருக்க முடியாது. சட்டப்படி தவறு எதுவும் நடைபெறவில்லை. அரசாங்கம் சட்ட மன்றத்தைப் புறக்கணித்து விட்டு வெளியே எதையும் சொல்லவில்லை. இதிலே எந்த விதமான ஒழுங்குப் பிரச்சினையும் இல்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 56-வது விதியின்படி A member who has resigned the office of the Minister *may*, என்று இருக்கிறது. இதிலே 'மே' என்பது 'ஷெல்' என்ற அர்த்தத்தைத் தான் கொடுக்கும் என்று எடுத்துக் கொள்ளக் கூடாது. 'may' also implies 'shall' **என்று** இல்லை. பார்லிமெண்டில்கூட இதைப் பற்றி விவாதம் வந்திருக்கிறது. திரு. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டது—

It will be improper for the outgoing Minister to make a statement outside without making a statement in the House at the first instance.

[பேரவைத் துணைத் தலைவர்] [1972 மார்ச் 9

அதிலே ஸ்டேட்மெண்ட் வந்ததாக இல்லை. அவையில் ஸ்டேட்மெண்ட் கொடுத்துத்தான் தீரவேண்டுமென்று கட்டாயம் இல்லை. It is the right on the part of a Minister, not a duty. It is not a duty. So there is no point of order.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI : I wish to know first of all whether any such point of order can be raised before question hour is over. So much of discussion has taken place now, even before question hour is over, even before first question is over, since a Member has raised a point of order.

MR. DEPUTY SPEAKER : This has been allowed once. It is the responsibility of Members.

THE HON. THIRU K. ANBAZHAGAN : May I submit that it might have been allowed on one occasion; it is not generally in vogue. The question hour is most important. The question hour has got protection and points of order are not raised. The right of Members during question hour is to put questions and it cannot be utilised for any other purpose.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** 1970-ம் வருஷத்தில் ஏற்கனவே இவ்வாறு கேள்வி நேரத்திற்கு முன்னால் கிளப்பப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஒரு தடவை அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருக்கலாம். அதனால் அதைப் பின்பற்ற வேண்டுமென்பதல்ல. அது நல்ல முறை அல்ல.

(2) வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

**இயல் ஊர்தி மருத்துவ மனைகள்.**

* 379 வினா—திரு. கே. என் குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கிராமங்கள்தோறும், நடமாடும் ஆஸ்பத்திரி ஏற்படுத்த செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால், எப்பொழுது அமலுக்கு வரும் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.



1972 மார்ச் 9]

**திரு. கே. என். குமாரசாமி :** கிராமங்களில் பெருவாரியான மக்கள் ஏழை மக்களாக இருப்பதால், அவர்கள் ஆஸ்பத்திரிக்குப் போவதற்கான நிலைமைகள் இல்லாத காரணத்தால் கிராமங்களில் இப்படிப்பட்ட நடமாடும் ஆஸ்பத்திரிகள்மூலம் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்க அரசாங்கம் பரிசீலிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தப் பிரச்சினையினுடைய அளவை மாண்புமிகு உறுப்பினர் எண்ணிப் பார்க்க வேண்டும். எத்தனை ஆயிரம் கிராமங்கள் இருக்கின்றன ; அதற்கு நடமாடும் மருத்துவ மனைகள் எவ்வளவு அமைக்க வேண்டியிருக்கும் ; அதற்கு என்ன செலவாகும் என்பதைப்பற்றியெல்லாம் எண்ணிப் பார்த்தால் இப்படிப்பட்ட கேள்விகளே வராது. நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதியில் வாழ்கின்ற மக்கள் ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் சுலபமாகச் செல்ல முடியாத நிலை இருக்கும் காரணத்தால் அங்கே இரண்டு நடமாடும் மருத்துவ மனைகள் இருக்கின்றன. வட ஆற்காடு மாவட்ட மலைப் பகுதியில் ஒன்று இருக்கிறது ; திருச்சி, தருமபுரி மாவட்டங்களில் மலைப் பகுதியில் ஒன்று இருக்கிறது. இப்படி எந்த இடத்தில் மக்கள் 10 மைல், 20 மைல் சுற்றளவில் மருத்துவ வசதியே பெற முடியாத நிலையில் இருக்கிறார்களோ அங்கு ஒரு நடமாடும் மருத்துவ மனை அமைக்கும் திட்டந்தான் இருக்கிறது. இன்றைக்கு உள்ள நிலையில் நடமாடும் மருத்துவர்களைத்தான் (நடமாடாதவர்களை அல்ல) அரசாங்கத்தால் போடமுடியும்.

**திரு. வி. கே. இராஜாப் பிள்ளை :** ஆப்பிரிக்காக் கண்டத்தில் ஒரு கிறித்துவப் பாதிரியார் அவர்கள் விமானத்தில், அறுவை சிகிச்சைக்கு வேண்டிய அவசியமான கருவிகள், மருந்துகள் ஆகியவற்றை வைத்துக் கொண்டு பறக்கும் ஆஸ்பத்திரி போன்று ஆங்காங்கு சென்று சிகிச்சை செய்வதாகச் சமீபத்தில் ரீடர்ஸ் டைஜஸ்ட் பத்திரிகையில் படித்ததாக ஞாபகம். அவ்வாறு, வண்டிகளோ, பஸ்களோ போக முடியாத இடத்தில் அத்தியாவசியமான மாநிலங்களில் மருத்துவ வசதி கொடுக்க பறக்கும் ஆஸ்பத்திரியை வைத்து நடத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மருத்துவ மனைகளைப் பஞ்சாயத்து ஒன்றியங்களில் வைத்தால் ஒரு ஆண்டில் ஒன்பது மாதங்கள் பறந்து போய்விடுகின்றன. மீதியுள்ள காலத்தில்தான் அது நிலத்தில் இருந்து பணியாற்றுகிறது.

**திரு. எம். சுரேந்திரன் :** நடமாடும் மருத்துவ மனைகள் மலைப்பாங்கான இடத்தில் வைக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் பாலமலை என்ற பகுதி இருக்கிறது. அங்கு செல்வதற்குக்கூட வசதி இல்லை. அங்குள்ள மக்கள் வெகுதூரம் நோயாளிகளைக் கொண்டுசெல்ல முடியாத நிலைமையில் இருக்கிறார்கள். அது போன்ற இடங்களில், குறிப்பாக பாலமலையில் ஒரு நடமாடும் மருத்துவ மனையை வைக்க முன்வருவார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் .** அப்படிப்பட்ட இடங்களைப் பற்றிச் சரியான விளக்கங்களோடு விண்ணப்பங்கள் வருமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. கே. எ. வகாப் :** இப்போது அரசாங்கம் அல்லாமல் தனியார் நடத்துகின்ற சில மருத்துவ மனைகளிலிருந்துகூட நடமாடும் மருத்துவ மனைகளை நடத்துகிறார்கள். அவர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் அரசு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தனியார் மருத்துவ மனைகளுக்கு வேறுசில நாடுகளில் இருந்து நல்ல உதவிகள் கிடைக்கின்றன. அந்த உதவிகளைப் பெற்று நடத்துகின்ற நிலையில் ஓராண்டு வரவு-செலவில் நஷ்டம் ஏற்படுமானால் அந்த நஷ்டத்தில் பாதியைக் கொடுக்க அரசாங்கத்திற்கு நியாயமான கடமை உண்டு. நஷ்டம் ஏற்பட்டதற்கான விளக்கங்களைத் தந்து அவர்கள் இதைப் பெற வேண்டும்.

**திரு. நா. வெ. குருசாமி :** அமைச்சர் அவர்கள் மலைப்பாங்கான இடங்களில் நடமாடும் மருத்துவ மனைகள் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியில் வருஷநாடு என்ற மலைப்பகுதி இருக்கிறது. அந்தப் பகுதிக்கு இந்தத் திட்டம் கொண்டுவரப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மலை இருக்கிற பகுதியெல்லாம் மலைப் பகுதியாகிவிடாது. அப்படிப் பார்த்தால் திருவண்ணாமலையும் மலைப் பகுதியாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மலையில் வாழ்கிற மக்கள் நீண்ட தொலைவுக்கு மருத்துவ வசதி பெற முடியாத சூழ்நிலை இருந்தால், அப்படி ஒரு நடமாடும் மருத்துவமனை ஏற்படுத்தினால் 100, 200 பேராவது பயன்



படுவார்கள் என்ற நிலை இருந்தால் (யுடிலிடி ஆப் சர்விஸ்) அப்படிப்பட்ட மலைப் பகுதிகளில் நடமாடும் மருத்துவ மனைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் நீலகிரி, தருமபுரி, இராமநாதபுரம் மாவட்டம் போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. ஆ. கு. சுப்பையா :** நடமாடும் மருத்துவ மனைகளை அமைத்து எல்லாக் கிராம மக்களுக்கும் மருத்துவ வசதி கொடுக்க முடியாவிட்டாலும் ஹோமியோபதி படித்த டாக்டர்களை ஆங்காங்கு கிராமப் பகுதிகளில் நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இதைப்பற்றி ஒரு கருத்து விளக்கம் அவசியமாகும். அரசாங்கம் மாவட்ட மருத்துவ மனை, வட்ட மருத்துவ மனை, ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் அமைத்து வருகிறது. கிராம நலத்தைக் கவனிக்க மாபெரும் அமைப்பு பஞ்சாயத்து ஒன்றியமாகும். கிராம நலத்தைச் சிறப்பாகக் கவனிக்கும் பொறுப்பு அந்த ஒன்றியத்திற்கு இருக்கிறது. அந்தந்த ஒன்றியங்கள் இப்படிப்பட்ட ஹோமியோபதி மருத்துவர்களைப் போட்டு குறைந்த செலவில் மருத்துவ வசதியைக் கிராம மக்களுக்குச் செய்து கொடுக்க முடியும். இந்த ஹோமியோபதி மருத்துவர்களைப் பொறுத்தவரை அந்தச் சட்டத்திற்குக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் கிடைத்த பிறகு ஒன்றியத்தின்மூலம் ஹோமியோபதி மருத்துவர்களை வைத்துக் கொள்ள உரிமை வழங்கப்படும்.

**திரு. சௌடி. எஸ். சுந்தரபாரதி :** நடமாடும் மருத்துவ மனைகளுக்குப் பதில் நடமாடும் டாக்டர்கள் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே குறிப்பிட்ட எக்ஸ்பர்ட் டாக்டர்கள் இருக்கிறார்களா ? அவர்கள் சிறு சிறு ஆஸ்பத்திரிகளுக்கு அவ்வப்போது சென்று அட்வைஸ் கொடுக்கும் வகையில் நடமாடும் மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்போதே ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருக்கின்ற டாக்டர் அந்த வட்டாரத்தில் ஐந்தாறு மெடர்னிடி சென்டருக்குச் செல்ல வேண்டுமென்ற முறை வைக்கப்பட்டிருக்கிறது. அதே போன்று குறிப்பிட்ட தேர்ச்சி பெற்றவர்கள் மருத்துவ மனைகளோடு தொடர்பு கொள்வதற்கும் வழிவகைகள் காணப்படும்.

[1972 மார்ச் 9

**திரு. இ. ராமசாமி :** வால்பாறைத் தேயிலைத்தோட்டப் பகுதி பெரிய சுற்றளவு உள்ளதாக இருக்கிறது. அங்கு மானேஜ்மென்ட் கொடுக்கக்கூடிய மருத்துவசதி மிக மிகக் குறைவு. அங்கு பஸ் போக்குவரத்தும் மிக மிகக் குறைவு. ஆகவே அங்கு ஒரு நடமாடும் மருத்துவ மனை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் பரிசிலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** உறுப்பினர் அவர்களது வேண்டுகோள் அரசினுடைய பரிசிலனைக்கு உரியதாக இருக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** அதிக வசதியுள்ள பெரிய மருத்துவ மனைகளுக்குச் சென்று சிகிச்சை பெறவேண்டுமென்றால், பிரதானமாக பிரசவக் கேஸ் போன்றவைகளில் பெரிய மருத்துவ மனைகளுக்குச் சொல்ல ஆம்புலன்ஸ் வான் தேவைப்படுகிறது. அதற்கு 60 அல்லது 70 ரூபாய் கட்டினால்தான் பெற முடியும் என்ற நிலை இருப்பதால் ஏழை எளிய மக்கள் அதைப் பெறமுடியாமல் பாதிக்கக்கூடிய அளவிற்கு, சில நேரங்களில் இறந்து விடக்கூடிய அளவிற்கு ஆபத்து ஏற்படுகிறது. ஆகவே ஏழை எளிய மக்களுக்கு இனமாக ஆம்புலன்ஸ் வான் வசதி பெறுவதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அரசின் நிதிநிலை வசதி பெருகுகிறபோது அப்படிப்பட்ட ஆம்புலன்ஸ் வான் வசதி எல்லோருக்கும் கிடைக்க வழி செய்யப்படும்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Dharmapuri district in general and Hosur and Denkanikottah in particular are hilly tracts and are full of forests. Villages are scattered. It requires a number of mobile hospitals. May, I know whether the Hon. Minister will consider starting of more hospitals there?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the question itself is based on a wrong assumption that wherever there is a hilly tract, there should be a mobile hospital. But it is only where it is not possible for the people to go from one place to another. we are providing these mobile hospitals.

**திரு. எஸ். முருகையன் :** நடமாடும் மருத்துவ ஊர்திகள் அங்கு சென்று மருத்துவ வசதி செய்துவிட்ட பிறகு தரைப்பகுதிகளுக்கு வந்துவிடுகிறார்கள். உடனே அவசரமாகத் தேவை என்றால் அங்குள்ளவர்கள் கீழே வர வேண்டியிருக்கிறது ஆகவே மலைவாசப் பகுதிகளில் ஒரு இடத்திலே நிரந்தரமாக அது தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?



1972 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** நடமாடும் மருத்துவ மனை என்பதே நடமாடிக் கொண்டிருப்பதுவே யல்லாது அங்கேயே நின்றுவிடுவதாக இருந்தால் அதற்கு நடமாடும் மருத்துவமனை தேவை இல்லை. ஆனால் அந்த டாக்டர்கள் அங்குள்ள நிலைமைக்கேற்ப தொடர்பு வைத்துக் கொண்டு பணியாற்றுவார்கள்.

## கால்நடை வளர்மானம்

* 380 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா :—

கால்நடை வளர்ப்புக்காக மத்திய அரசால் வழங்கப்பட்டு வந்த மானியம் நிறுத்தப்பட்டுவிட்டதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இல்லை.

**திரு' கே. என். குமாரசாமி :** இந்தக் கால்நடை வளர்ப்புக்காக நல்ல தரமுள்ள கன்றுகளை அழிக்காமலும் விற்றுவிடாமலும் இருப்பதற்காக அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து முன்பு மானியம் ஒரு கன்றுக்கு மாதம் ரூ. 30 என்று வழங்கப்பட்டு வந்தது. அதனால் நல்ல தரமான கன்றுகாலிகளை ஏழை எளியவர்கள் காப்பாற்றி வந்தார்கள். இப்போது அந்த மானிய உதவி நிறுத்தப்பட்டுவிட்டதால் கன்றுகாலிகளை வளர்க்க முடியாமல் இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தை அரசாங்கம் மீண்டும் மத்திய அரசிடம் பேசிக் கொண்டுவர முயற்சிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** வினு கால்நடை வளர்ப்புக்காக என்று இருக்கிறது. அதற்கு ஆங்கிலத்தில் அனிமல் ஹஸ்பன்டரி என்றுதான் பொருள். அதில் பல பகுதிகள் உள்ளன.

(1) Progeny Testing of Bulls.

(2) Rinder Pest Eradication.

(3) Training Centre for Sheep Husbandry and Rural Technology.

(4) Sheep Breeding Farms.

இப்படி பல தலைப்புகள் உள்ளன. அவைகளில் மத்திய அரசு ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ள முறைப்படியான உதவிகளை நிறுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. கன்றுகளின் வளர்ச்சிக்காக என்று கேட்கப்பட்டிருந்தால் முழு விவரங்கள் தந்திருக்க முடியும். அவைகளுக்கு மத்திய அரசின் உதவியும் இல்லை. மாநில அரசு இந்த சப்ஸிடி முறையில் எல்லா வளர்ச்சிகளையும் ஏற்படுத்துவது என்பது பலநேரங்களில் அதன் முக்கியமான நோக்கம் இழந்துவிடச் செய்கிறது என்ற அச்சத்தோடு இருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** இந்தக் கால்நடை வளர்ப்புக்காக மத்திய அரசு உதவி தருவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மானிய உதவி கொடுக்க முடியவில்லை என்றாலும், தரமுள்ள மாடுகள் வாங்குவது என்றால் 1,000, 1,500 ரூபாய் ஆகிறது. ஆகவே கடன் உதவியாவது அளித்து அந்த மாடுகளை அபிவிருத்தி செய்ய அரசு யோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக ஸ்மால் ஃபார்மர்ஸ் ஸ்கீம் என்ற முறையில் பல கிராமங்களில் உள்ளவர்களுக்கு இப்படி கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டால் கடன் வசதி செய்ய சில முறைகள் உள்ளன. வேண்டிய முயற்சிகளை உறுப்பினர் அவர்கள் எடுத்துக் கொள்வார்களேயானால் வங்கிகளில் இருந்தும் கடன் தர சிலயிடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தமிழ்நாட்டில் கால்நடைகளின் தரத்தையும் தன்மையையும் உயர்த்துவதற்காக வெளிநாடுகளில் இருந்து சில கால்நடைகளை இறக்குமதி செய்வதற்கு மத்திய அரசை நம் அரசு வலியுறுத்துமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** அரசு வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. மத்திய அரசும் இணங்கிக் கொண்டிருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன் :** முன்னால் இயங்கிக் கொண்டிருந்த ஐ.ஸி.டி.பி. திட்டம் எல்லாயிடங்களிலும் அமல்படுத்தி கால்நடை வளர்ப்பை மேம்படுத்த உரிய வழி செய்யப்படுமா ?



**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** ஐ.ஸி.டி. பிராஜெக்ட் என்ற முறையில் அமைக்கப்பட்ட திட்டம் இடையில் கைவிடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அதே நோக்கம் மையக் கிராம வளர்ச்சித் திட்டம் மூலம் ஆங்காங்கு ஆர்டிஃபிஷியல் இன்செமனேஷன் சென்டேர்ஸ் மிகுதியாக ஏற்படுத்துவதன் மூலம் அந்தத் திட்டத்தின் நோக்கத்தில் பெரும் பகுதியை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் .** இந்தக் கன்றுகாலிகளைப் பராமரிப்பதில் பல கஷ்டங்கள் உள்ளன. ரின்டர்பெஸ்ட் நோய் அடிக்கடி ஏற்படுகிறது. அதற்கான எக்ஸ்பர்ட்ஸ் இரண்டு மூன்று பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே இதை விரிவுபடுத்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ? கூடுதலாகப் பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசாங்கம் வைத்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்த ரின்டர்பெஸ்ட் நோய் கால்நடைகளுக்கு வருவது வெளிமாநிலங்களிலிருந்து வருகிற கால்நடைகள்தான் காரணமாக இருக்கும் என்று கருதப்பட்டு அவைகள் வருகிறபோது இங்கு அவை இம்யூன் செய்யப்பட்ட பிறகுதான் உள்ளே அனுமதிக்கப்பட வேண்டும் என்கிற முறையில் ‘Check-post under Rinder Pest Eradication Programme’ ஏற்படுத்துவதில் அரசு முனைந்திருக்கிறது.

**திரு. ஏ. ஆர். சுப்பையா :** கால்நடை வளர்ப்புத் திட்டத்தில் சமீபத்தில் கூட மத்திய அரசின் உதவியின் மூலம் ‘டைரி டெவலப்மென்ட்’டுக்காகப் பணம் ஒதுக்கப்பட்டு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** பால் பெருக்குத் திட்டத்தின் அடிப்படையில் அமையும் ஒன்றாகும் அது. கால்நடை வளர்ச்சியிலும் அதிகம் கவனிக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** பாமலி ப்ளானிங்-க்கு அதிகப்படியான விளம்பரங்கள் கொடுக்கப்படுகின்றன. அதேபோல் கால்நடைத் துறையிலும் விவசாயிகளுக்குப் பயன்படும் முறையில் கடன் வசதி, சப்ஸிடி வசதி போன்றவை குறித்து தக்கபடி விளம்பரங்கள் செய்ய அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இது சப்ஸிடி முறை என்பதல்ல. இது கடன் உதவி மட்டும்தான். லோன் ஸ்கீம். ஆங்காங்குள்ள நிலைமைக்கேற்ப பத்து அல்லது இருபது பேர்கள் சேர்ந்து முயற்சித்தால் கொடுப்பது என்பதாகும். குடும்பக் கட்டுப்பாட்டிற்கு விளம்பரம் செய்வது என்பது மனிதனின் மனம் அடிக்கடி குழம்பிவிடுகிறது. அப்படி இவற்றிக்கு விளம்பரம் தேவையில்லை. தெளிவு இருக்கிறது என்று கருதுகிறேன்.

**திரு. சோ. அழகர்சாமி :** சிறு விவசாயிகள் மேம்பாடுத் திட்டத்தின்கீழ் எங்கள் மாவட்டத்தில் ஒரு சில ஏரியாக்கள் எடுக்கப்பட்டு கால்நடை வளர்ப்பிற்கு மத்திய அரசாங்கம் நான்கில் ஒரு பங்கு கடன்கள் கொடுக்கப்படுவதாகச் சொன்னார்கள். பல மனுக்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. மாவட்ட கூட்டுறவு வங்கிக்கு ரிசர்வ் வங்கியிலிருந்து இதற்காகக் கடன் வழங்கப்படவில்லை. ஆகவே அங்குள்ளவர்கள் கடன் வாங்கமுடியாமல் இந்த வருஷம் பூராவும் போய்விட்டது. ஆகவே கால்நடை வளர்ப்பிற்காக மானிய உதவி பெறுவதற்கு, கடன் வழங்க சிறுவிவசாயிகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் குறிக்கோளில் ஒன்று கிராமங்களில் இப்படிப்பட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு என்று கடன் உதவி அளிப்பது என்பது. அதில் மானியம் இருக்கிறதா என்று தெரியாது. மானியங்களாக வங்கிகள் தர முடியாது. அத் திட்டத்தில் எந்த விதமான குறைபாடுகள் இருந்தாலும் அதுபற்றி எழுதியனுப்பினால் அது பற்றி பரிசீலனை செய்யப்படும்.

* 381 வினா—திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) வடார்க்காடு மாவட்டம், ஆலங்காயம் பஞ்சாயத்து யூனியனுக்கு உட்பட்ட ஜவ்வாது மலைப் பகுதியில் 'ஜெர்சி' போன்ற உயர்ரக கால்நடை அபிவிருத்திப் பண்ணை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.



**திரு. கே. எ. வகாப் :** தலைவரவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே, ஆலங்காயம் பகுதிகளிலே நல்ல இயற்கை புல்வெளி இருக்கிறது. ஆகவே, கால்நடை வளம் குறைந்து வரும் நிலையில், வளமான கால்நடை உற்பத்திக்கு வழி செய்கிற வகையில் வடாற்காடு மாவட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு பண்ணையை இனி யாவது ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, கேள்வி செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா என்பது. ஆகவே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு இல்லை என்று சொன்னேன். இனி யாவது ஆலோசிக்கப்படுமா என்பது துணைக் கேள்வி. எப்போதாவது யோசிக்கப்படும்.

* 382 *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to start buffalo farms in the State ; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** விவர அறிக்கை @ ஒன்று சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி :** தலைவரவர்களே, ஆந்திரா மாநிலம் பிரிந்ததற்குப் பிறகு, அந்த மாதிரி பண்ணைகள் நம் மாநிலத்தில் இல்லை. அதை ஏற்படுத்துவதற்கு காலதாமதமாவதற்கு என்ன காரணம் ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மாநில அரசு இப்படிப்பட்ட முர்ரா எருமைகளைக் கொண்ட பண்ணையை அமைப்பதற்கு மத்திய அரசுக்கு ஏறத்தாழ 1½–2 ஆண்டுகளுக்கு முன்பே இணக்கம் தெரிவித்தது. மிகத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து, சென்னைக்குப் பக்கத்திலே உள்ள பண்ணையை எடுத்துக் கொள்ள ஒப்புதல் தந்து இருக்கிறது. மத்திய அரசும் எடுத்துக் கொள்வதாக உறுதியளித்திருக்கிறது. தண்ணீர் கொடுப்பதைப் பற்றி மத்திய அரசு சில பிரச்சினைகளை எழுப்பியது. அதற்கு மாநில அரசும் தெளிவான விளக்கமான பதிலைத் தந்து தண்ணீர் தர ஒப்புக் கொண்டிருக்கிறது. விரைவில் செயல்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 132-134-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப் பட்டுள்ளது.

[1972 மார்ச் 9

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister the conditions required for starting a buffalo farm and whether they would consider the case of Dharmapuri district where there are extensive pasture lands, suitable to start such farms?

THE HON. THIRU K. ANBAZHAGAN : The first condition that is required is the intention of Central Government. The second condition is co-operation of State Government. The third condition is the choice of the place and the centre has to be accepted by the State. These things are followed in this particular farm and it is now approved by the Centre.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இப்போது மத்திய அரசின் ஆதரவோடு அமைக்கப்படக்கூடிய இந்தப் பண்ணையிலே குறிப்பில் இருக்கிற அளவுக்கு 750 கால்நடைகள் ஆரம்பத்திலேயே இருக்குமா? அல்லது, இந்த ஆண்டில் எத்தனை முர்ரா எருமைகள் அந்தப் பண்ணையில் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, அந்தக் குறிப்பின் முதல் பக்கத்திலேயே முதல் 2-3 ஆண்டுகள் வரை 300 எருமைகள். இனப் பெருக்க வயதடைந்த கிடேரிகள் கொண்ட தொடக்க இருப்பு படிப்படியாக ஏற்படுத்தப்படும் என்று இருக்கிறது. ஆகவே, படிப்படியாக அந்த வளர்ச்சி ஏற்படும்.

**திரு. ஏ. எம். இராஜா :** தலைவரவர்களே, அந்த அலமாதியில் ரூ. 83 லட்சம் செலவில் ஏற்பட இருக்கிற எருமைப் பண்ணையின் நிர்வாகம் மத்திய அரசாங்கத்தின் நேரடிப் பொறுப்பில் இருக்குமா, மாநில அரசின் பொறுப்பில் இருக்குமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** மத்திய அரசின் பொறுப்பில் இருக்கும்.

**திரு. கே. என். குமாரசாமி :** தலைவரவர்களே, சென்னைக்கு அருகிலே அந்தப் பண்ணையை நடத்துவதைக் காட்டிலும், நல்ல பாரஸ்ட் பகுதியாக இருக்கும் பகுதிக்குப் பக்கத்திலே, இந்தப் பண்ணையை வைப்பதன் மூலம் அந்த எருமைகளை வளர்ப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே, அப்படிப்பட்ட பகுதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், அந்தப் பண்ணையைச் சரியான வகையில் நடத்த முடியும் மாதவரம் பால் பண்ணைக்கு அரசாங்கம் மீண்டும் அதிக பால் உற்பத்திக்காக வழி செய்திருக்கிறது. இதை வேறு ஒரு இடத்தில் ஏற்படுத்த அரசு முன்வருமா ?



1972 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** திருமணமாகி விட்டது. குடும்பம் தான் நடத்தவில்லை. இனி பழைய மாப்பிள்ளையை மாற்றுவது என்பது இயலாத காரியம்.

**திரு. கே. கந்தசாமி :** மரியாதைமிக்க துணைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டம் போன்ற இடங்களில் இப்படிப்பட்ட பண்ணைகளை ஏற்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இப்படிப்பட்ட கால் நடைப் பண்ணைகளை நடத்த, அவற்றை அபிவிருத்தி செய்ய இது ஒன்று தான் வழி என்று கருதக் கூடாது. கால்நடை வளர்ப்புக்கு பல் வேறு முறைகள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் அக்கறை எடுத்துக் கொண்டால் தமிழ்நாட்டில் 5 ஆண்டுகளில் கால்நடை வளர்ப்பில் நல்ல அபிவிருத்தி காட்ட முடியும். கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்தில் உள்ளவர்களும் கால்நடை வளர்ப்பிற்காக, அதன் தரத்தை உயர்த்துவதற்காக முயற்சி எடுத்துக் கொண்டால், அரசாங்கத்தின் உதவியில்லாமலேயே பெரும் அளவுக்குக் கால்நடை வளர்ப்பு ஏற்படுத்தலாம்.

## கும்மிடிப்பூண்டிக்குத் துணைப்பதிவாளர் அலுவலகம்

* 358 வினா—**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், கும்மிடிப்பூண்டியில் " சப்-ரிஜிஸ்ட்ரார் " அலுவலகம் தொடங்க செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் .** தற்போது இல்லை.

**திரு. கா. வேழவேந்தன் :** துணைத் தலைவரவர்களே, கும்மிடிப்பூண்டி வட்டாரத்தில் இருக்கும் பொதுமக்களும், விவசாயிகளும் நீண்ட தூரம் சென்று, பொன்னேரி சென்று பதிவுகளைச் செய்ய

வேண்டி உள்ளது. அந்த வட்டாரத்தின் பரப்பளவைக் கருதியாவது, இந்த ஆண்டிலேயே ஒரு சப்-ரிஜிஸ்திரார் அலுவலகம், கும்மிடிப்பூண்டியில் அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, கும்மிடிப்பூண்டிக்கும், பொன்னேரிக்கும் இடையே 7 மைல் தொலைவுதான் இருக்கிறது. என்றாலும், துணைப்பதிவு அலுவலகம் அமைக்க வேண்டுமானால் அதற்கு வேண்டிய நிதி வசதியில் தனித்து அது இயங்கக்கூடிய நிலையில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அவற்றைப் பரிசீலனை செய்து உறுப்பினர் அவர்கள் கூறிய ஆலோசனையை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சி செய்யலாம்.

**திரு. கா. வேழவேந்தன்:** தலைவரவர்களே, கும்மிடிப்பூண்டிக்கும் பொன்னேரிக்கும் இடையே சுருக்கு வழியாகப் போனால் 10 மைல் இருக்கலாம். கும்மிடிப்பூண்டிக்கு வடமேற்கே 15—20 மைல் தூரம் இருக்கிற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பொன்னேரிக்கு வர வேண்டுமானால், 25-30 மைல் வரவேண்டியிருக்கிறது. ஆகவே, இந்த ஆண்டு அங்கே ஒரு தனி துணைப்பதிவு அலுவலகம் திறப்பதற்கு வேண்டிய முயற்சியை அமைச்சரவர்கள் மேற்கொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** எவ்வளவு தொலைவு இருக்கிறது என்பது மட்டுமல்ல. இந்தப் பிரச்னைக்கு நான் முன்பு கூறியது போல், தனித்து இயங்குகிற அளவுக்கு அதனுடைய நிதி வசதி இருக்க வேண்டும். அந்த முறையில் பரிசீலனை செய்யப்படும்.

### தொழிலாளர் வேலை நேரம்

*359 வினா—திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தொழிலாளர்களின் வேலை நேரங்களை (வாரத்தில்) குறைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** (அ) ஆம்.

(இ) வாரத்துக்கு 48 மணி நேர வேலை என்கிற தற்போதைய அளவை வாரத்துக்கு 45 மணி நேரமாகக் குறைக்கும் கருத்து பரிசீலனையில் உள்ளது.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் கூறும்போது வேலை நேரத்தைக் குறைப்பதற்காக அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது எப்போது அமுலுக்கு வரும் என்று அமைச்சரவர்கள் அறிவிப்பாரா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** அது பற்றி தேசிய தொழிலாளர் நல ஆணைக்குழு பரிசீலனை செய்து வருகிறது. ஆனால் ஒரே சமயத்தில் 40 மணியாகக் குறைப்பதற்கு சாத்தியமில்லை. முதலில் 45 மணி என்றும், பின்னர் 40 மணி என்றும் குறைக்கலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டது. அதுவும் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. அந்த முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவரவர்களே, இன்றைக்குப் பல நாடுகளில் தொழிலாளிகள் 6 நாள் வேலை செய்வது என்பதற்குப் பதிலாக 5 நாள் வேலை செய்து, 40 மணி நேரமும், அதற்குக் குறைவாகவும் வேலை செய்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமை இருப்பது போல், இந்த 45 மணிநேரம் வேலை குறைப்பு என்று சொல்லப்படுகிறது, அது மாதிரி வேலை நாட்களும் குறைக்கும் குறிப்பு ஏதாவது அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன்:** தலைவரவர்களே, அதை நடைமுறைக்குக் கொண்டுவரும்போது, கனம் உறுப்பினரவர்களின் யோசனை நினைவில் கொள்ளப்படும்.

### *Sudanthiram Transport in Madurai*

* 383 Q.—THIRU K. T. K. THANGAMANI,
THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(a) whether the workers of Sudanthiram Transport, Madurai have been on strike for more than two months; and

(b) the steps taken to bring it to a successful conclusion?

[1972 மார்ச் 9

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** (அ) மதுரையிலுள்ள சுதந்திரம் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் 30—9—1971 முதல் வேலை நிறுத்தம் செய்தனர்.

(இ) 22—11—1971-ல் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பாக ஓர் உடன்பாடு ஏற்பட்டு, வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** அந்த சிறிய பஸ் கம்பெனியிலே பணியாற்றும் தொழிலாளர்கள் 100-க்கும் கம்மியாக இருக்கிறார்கள். அப்படியிருக்கிறபோது அந்தத் தொழில் தகராறு இரண்டு மாதங்கள் நீடித்து இருந்ததற்கான காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** அதற்குக் காரணம் தொழிலதிபர்களிடத்தில் சரியான மனமாற்றம் இல்லாதது தான்.

**திரு. கே. கந்தசாமி :** உதவித் தலைவரவர்களே, சுதந்திரம் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்கள் இரண்டு மாதங்களுக்கு மேல் தொழில் இழந்து இருந்ததால், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு இருந்தும், அதற்குரிய பலனை இன்னும் அடையாத நிலையில் இருக்கிற காரணத்தால், அவர்கள் குடும்பங்கள் தெருவில் அல்லலுரும் நிலையில் இருக்கின்றன. ஆகவே, அவர்களுக்கு அரசு ஏதேனும் பொருத்தமான திட்டம் வகுத்து இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் பொருத்தமான யோசனை கூறினால் அதை நாம் பரிசீலனை செய்யத் தாயராக இருக்கிறோம்.

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, வேலை இழந்து இருக்கிற தொழிலாளர்களுக்கு சேமிப்பு நிதியிலிருந்து, சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் நிதியிலிருந்து ரூ. 4,000 (அ) ரூ. 5,000 வரை வரும் என்று கூறப்படுகிறது. அதை ஸ்தாபனக்காரர்களும், அரசுத்துறையும் சேர்ந்து தர வேண்டுமென்று சொல்கிறார்கள். அப்படியிருக்குமானால், அரசு உடனே தலையிட்டு அவர்களுக்கு உதவ முன்வருமா ? அதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** கனம் உறுப்பினர் அவர்களுடைய யோசனையை நடைமுறைக்குக் கொண்டுவர சாத்தியக் கூறு இருந்தால் அதற்கேற்ப செய்ய அரசு முன்வரும்.



1972 மார்ச் 9]

## கல்லூரிகளில் அரிசன மாணவர்களுக்கான இடங்கள்

* 384 வினா—**திரு. ந. சோமசுந்தரம் :** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கல்லூரிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்குரிய 18 சதவிகிதம் நிரப்பப்படுகிறதா என அறிய ஒரு குழு அமைக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இல்லை.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, பல தனியார் கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களைக் கொடுக்காமலும், மாணவர்கள் விரும்பிக் கேட்கின்ற பாடங்களின் பிரிவைக் கொடுக்காமலும், அறிவியல் பாடம் கேட்டால் சரித்திரப் பாடத்தையும், சரித்திரம் கேட்டால் வணிக இயல் பாடத்தையும் கொடுக்க முன்வருகிறார்கள். எனவே இந்தக் குறைகளை நிவர்த்திக்க ஒரு குழு அமைத்து அரசாங்கம் பரிசீலனைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அத்தனையும் நிரப்பப்படுகின்றனவா என்று அறிய டைரக்டர் ஆஃப் கலிஜியேட் எட்யூக்கேஷன், நலத்துறை இயக்குநர் ஆகியோரிடம் கேட்கப்பட்டது. அவர்கள் எல்லாக் கல்லூரிகளிலும் பரிசீலனை செய்து, பல தனியார் கல்லூரிகளிலும், அரசாங்கக் கல்லூரிகளிலும் ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களும் நிரப்பப்படவில்லை என்று தெரிவிக்கிறார்கள். அதற்குக் காரணம், மாணவர்கள் விரும்பிக் கேட்கின்ற பாடத்தில், அவர்களுக்குப் போதுமான திறமை இருக்கிறதா என்பதைப் பார்த்துதான் அந்தப் பாடம் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. அந்தக் குறிப்பிட்ட பாடத்தில் திறமை போதாவிட்டால், வேறு பாடம் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதற்கு மாணவர்கள் ஒத்துக் கொள்ளாததே இதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. கூடுமான வரையிலும் ஒதுக்கப்பட்ட மொத்த இடங்களையும் நிரப்புவதற்கு டைரக்டர் ஆஃப் கலிஜியேட் எட்யூக்கேஷன், நலத்துறை இயக்குநர் மூலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

[1972 மார்ச் 9

**திரு. வை. பாலசுந்தரம் :** தலைவரவர்களே, கல்லூரிகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 18 சதவிகிதம் சரியாக ஒதுக்கப்படுவதில்லை என்று புகார் சொல்லப்படுகிறது. அப்படி எத்தனை அரசாங்கக் கல்லூரிகள், எத்தனை தனியார் கல்லூரிகளில் இந்த 18 சதவிகிதம் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் நிரப்பப்படாத கல்லூரிகளைக் கூறுகிறேன். அரசாங்கக் கல்லூரிகளில் பிரி-யூனிவர்சிட்டி இங்க்லிஷ் மீடியத்தில் 5 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.யு.சி. தமிழ் மீடியத்திலும் 6 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.இ. ஒரு கல்லூரியில் தரப்படவில்லை. பி.ஏ. தமிழ் மீடியம் 5 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.எஸ்ஸி. ஒரு கல்லூரியில் தரப்படவில்லை. பி.எஸ்ஸி. தமிழ் மீடியம் 5 கல்லூரிகளில் தரப்படவில்லை. பி.டி. இங்க்லிஷ் மீடியத்திற்கு யாரும் அப்ளிக்கேஷன் போடவில்லை. பி.டி. தமிழ் மீடியம் இரண்டு கல்லூரிகளில் தரப்படவில்லை. அதே போன்று சில தனியார் கல்லூரிகளிலும் தரப்படவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : What is the percentage of reservation made for the scheduled caste students in Government colleges and also private-managed colleges?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தனியார் கல்லூரியானாலும், அரசாங்கக் கல்லூரியானாலும் எல்லாக் கல்லூரிகளிலும் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம் :** ஸ்பீக்கர் சார் ; அமைச்சரவர்களுடைய பதிலிலிருந்து பல அரசாங்கக் கல்லூரிகளில் 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது. அதைக் கொடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ? பாதிக்கப்பட்ட மாணவர்களின் கதி என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நான் ஏற்கெனவே சொன்னதுபோல, அதைப்பற்றி பரிசீலனை செய்யும்படி டைரக்டர் ஆஃப் கலிஜியேட் எட்யூக்கேஷன், நலத்துறை இயக்குநர் ஆகியோர் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். அவர்களின் பரிசீலனை



1972 மார்ச் 9]

யிலிருந்து, மாணவர்கள் கேட்கின்ற பாடத்தில் போதிய அளவுக்கு மார்க் வாங்கியிருந்தால்தான் அந்தப் பாடம் கொடுக்கப்படுகிறது. மாணவர்கள் வாங்கியிருக்கக்கூடிய மார்க்கின் அடிப்படையில் வேறு பாடம் கொடுத்தால் அதை மாணவர்கள் ஏற்றுக்கொள்ளாமல் போய்விடுகிறார்கள். இங்கிலிஷ் மீடியம் கேட்பவர்கள் ஆங்கிலத்தில் போதிய மார்க் வாங்கியிருக்க வேண்டும். தமிழ் மீடியம் கேட்பவர்கள் தமிழில் போதிய மார்க் வாங்கியிருக்க வேண்டும். அப்படியானால்தான் மாணவர்களின் விருப்பப்படி கல்லூரி முதல்வர்கள் சப்ஜெக்ட் கொடுக்கிறார்கள். இல்லையென்றால் கொடுக்கப்படுவதில்லை. அதனால்தான் எல்லா இடங்களும் நிரப்பப்பட முடியவில்லை என்று சொல்கிறார்கள்.

### அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 385 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்குவதற்காக நிலங்களை கையகப்படுத்த திருச்சி மாவட்டத்திற்கு 1971-72-ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** இதுவரை ரூ. 1,50,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

**திரு. பெ சௌந்தரபாண்டியன் :** தலைவரவர்களே, வீட்டுமனை வழங்குவதற்கு, நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட பணம் பெரும்பாலும் செலவழிக்கப்படாமல் இருப்பதற்கு, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் காலதாமதம் ஆவதே காரணம் என்ற புகார் சொல்லப்படுகிறதே. எனவே, நிலங்களை ஆர்ஜிதம் செய்வதில் அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நிலத்தை கையகப்படுத்துவதில் தாமதமாகிறது என்றக் காரணத்தினால் ஒதுக்கப்பட்ட பணம் திருப்பி அனுப்பப்படவில்லை. பூராவும் செலவழிக்கப்படுகிறது. ஒரே ஒரு முறைதான் தென் ஆற்காடு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப்படாமல் இருந்தது. ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப்பட

வேண்டுமென்றும், இனிமேல் பணம் செலவழிக்கப்படாமல் இருக்கக் கூடாது என்றும் அவருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. 1971-72-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 15 லட்சம் ரூபாயும் செலவழிக்கப்பட்டுவிட்டது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், திருச்சி மாவட்டத்தில் அரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு, விளை நிலங்களாக இருந்தால் அதை கட்டாயமாகக் கையகப்படுத்தக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** விளை நிலங்களாக இருந்தாலும், அவை தேவையாக இருந்தால், உரிய தொகையினைக் கொடுத்து கையகப்படுத்தப்படும்.

### குடிசை பகுதிச் சிறுவர்களுக்குப் பயிற்சி முகாம்

* 386 வினா—**திரு. பெ. மலைச்சாமி .** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் குடிசைப் பகுதிச் சிறுவர்களைச் சீர்திருத்தும் வகையில் காவல் துறையினர் பயிற்சி முகாம் ஏதேனும் நடத்தினார்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** (அ) ஆம்.

(இ) 1971-ம் ஆண்டு மே மாதம் 21, 22 மற்றும் 23 தேதிகளில் ஆவடியிலுள்ள டோனிக் கோலா சாகத்திலும் மற்றும் அதே ஆண்டு ஜூலை மாதம் 9, 10 தேதிகளில் பூண்டி அணைக்கட்டிலும் முகாம்கள் நடத்தப்பட்டன.

### கோவை மாவட்டத்தில் அரசு தரிசு நிலங்கள்

* 387 வினா—**திரு. என் மருதாசலம் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-1971-ல் கோவை மாவட்டத்தில், சர்க்கார் புறம்போக்கு நிலங்கள் மொத்தம் எவ்வளவு ?



(இ) விவசாயம் செய்ய வழங்கியது எத்தனை ஏக்கர் ?

(உ) வீடு கட்ட அளிக்கப்பட்ட நிலத்தின் அளவு என்ன ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் .** (அ) 13,31,467 ஏக்கர்.

(இ) 20,089 ஏக்கர்.

(உ) 996 ஏக்கர்.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே, சில தனியார்கள் புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்து வருகிறார்கள். எத்தனை பேர் அப்படி புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்கிறார்கள் ? அதைப் பறிமுதல் செய்து, நிலமற்ற மக்களுக்கு கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, தனியார் எத்தனைபேர் புறம்போக்கு நிலங்களை உழுது பயிர் செய்து வருகிறார்கள் என்ற புள்ளிவிபரம் இல்லை. தனியார் பயிர் செய்கிறார்கள் என்பதற்காக எல்லா நிலத்தையும் கையகப்படுத்த முடியாது. நிலமில்லாதவர்கள் பயிர் செய்து வந்தால், அவர்களுக்கு குறிப்பிட்ட அளவுக்குக் கொடுத்துப் போக மீதி நிலம் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்படும்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, அரசாங்கத்தினிடத்தில் நிலத்தைப் பயிர் செய்வதற்கென்று அடமானம் செய்து பெற்றுக்கொள்கிறார்கள். அடமானம் செய்து கொடுத்த பின்னால், அவர்கள் அந்த நிலத்தில் பயிர் செய்கின்றார்களா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, பயிரிடுவதற்காகத்தான் நிலம் கேட்கிறார்கள். பயிர் செய்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் நிலம் அடமானம் செய்து கொடுக்கப்படுகிறது. அப்படி எங்காவது பயிர் செய்யவில்லை என்ற புகார் வந்தால் அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. க. மு. இராசகோபால் :** தலைவரவர்களே, கொடுக்கக் கூடிய பட்டாக்கள் டெம்பரரியாகக் கொடுக்கப்பட்டு, நீண்ட நாட்களாகியும் பெர்மனன்ட் செய்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக பெர்மனன்ட் செய்து கொடுக்க, அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** புரொவிஷனல் பட்டாவாக இருந்தால், பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க துரிதப்படுத்தப் படும்.

**திரு. ஆர் பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, 996 ஏக்கர் நிலம் வீடு கட்ட அளிக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். அந்த நிலங்கள் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விபரத்தை அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, அந்த 996 ஏக்கர் நிலமும் 33,563 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக் கின்றது.

DR. H. V. HANDE : During the discussion is it not a fact that it was said that a particular member Mr. Natesa Mudaliar owns nearly 30 acres of poramboke land and on enquiry, is it not a fact that he holds only 2 acres and 94 cents and that too, that has been regularised by the Government? May I know whether this particular matter has been examined by the Government? If so, may I know the correct position, so that the House will know the correct position and so that no person will be unnecessarily taken to task or no aspertion is casts against any person who is outside this House?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, கனம் சுதந்திராக் கட்சி உறுப்பினர் அவர்கள் பழைய காங்கிரஸ் கட்சி உறுப்பினருக்காக இந்தத் தகவலைச் சேகரித்து வந்து சொல் கிறார்கள் என்று நினைக்கின்றேன். அது உண்மையா இல்லையா என்பதை அரசாங்கம் பரிசீலித்துப் பின்னால் தான் அறிய முடியும். பரிசிலனைக்குப் பின்னால் நிலம் கொடுக்கப்பட்டிருந்தால், அதை கையகப்படுத்த அரசாங்கம் தயங்காது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், சொந்த நிலம் வைத்திருப்பவர்களுக்குப் புறம்போக்கு நிலம் பட்டா செய்து கொடுத்திருந்தாலும், அதைத்





திரும்பப் பெறக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று. அந்த அதிகாரத்தின்படி நிலச் சொந்தக்காரர் யாருக்குப் பட்டா செய்து கொடுத்திருந்தாலும் அது திரும்பப் பெறப்படும்

## கோமுகி நீர்த் தேக்கப் பகுதியில் தொழிற்பேட்டை

* 388 வினா—**திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்விராயன் மலைப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி கோமுகி நீர்த்தேக்கப் பகுதியில் தொழிற்பேட்டை ஒன்று துவங்குவதற் கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) & (இ) இல்லை.

**திரு. ந. நாச்சியப்பன் :** கல்விராயன்மலைப் பகுதியில் மூங்கில் காடுகள் இருப்பதால் அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையைக் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தக் காடுகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய கையகத்திற்கு வந்ததற்குப் பின்னாலே பரிசீலிக்கலாம்.

## பல்லடத்துக்கு முன்சீப் கோர்ட்

* 389 வினா—**திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

பல்லடத்தில் முன்சீப் கோர்ட் ஒன்று திறப்பதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை.

**திரு. கே. என். குமாரசாமி :** பல்லடம் தாலுக்கா ஹெட் குவார்டர்ஸ். அங்கே ஒரு முன்சிப் கோர்ட் ஏற்படுத்தினால் போக்குவரத்துக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே வாரத்திற்கு 3 தினங்களாவது அங்கே ஒரு முன்சிப் கோர்ட்டை ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 9

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** எல்லா வட்டத்திலும் முன்சிப் கோர்ட் இல்லை. தாலுக்கா தலைநகர் என்ற காரணத்தினால் மட்டும் முன்சிப் கோர்ட்டை ஏற்படுத்த முடியாது.

**திரு. க. உரொ. எட்மண்டு :** ஒருசில இடங்களில் அதிகமான முன்சிப் கோர்ட்டுகள் இருப்பதுபோல சில பகுதிகளில் 40, 50 மைல் வட்டாரத்திற்குள் முன்சிப் கோர்ட் இல்லாமலும் இருக்கிறது. உதாரணமாக, திருச்செந்தூர் வட்டத்தில் முன்சிப் கோர்ட் இல்லை. இப்படிப்பட்ட இடங்களில் உடனடியாக முன்சிப் கோர்ட் அமைக்கும் உத்தேசம் அரசாங்கத்திற்கு இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்படிப்பும் வசதி இல்லாது சிலசில இடங்கள் இருக்கின்றன. ஆகவேதான் இதைப்பற்றி பரிசீலிக்க ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குழு மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து இதுபற்றி தன்னுடைய அறிக்கையை அளிக்கும்.

**திரு. பா. நாகலிங்கம் :** பொன்னேரியில் ஒரு முன்சிப் கோர்ட் அமைப்பது பற்றி ஏற்கனவே ஒரு யோசனை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்தது. அதன் நிலைமை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மூலக் கேள்வி கோவை பல்லடத்தைச் சேர்ந்தது. செங்கல்பட்டு பொன்னேரி பற்றித் தனிக் கேள்வி போட வேண்டும்.

**திரு. ஆ. முனியாண்டி :** ஏற்கனவே நிலக்கோட்டையில் ஒரு முன்சிப் கோர்ட் ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது. அங்கே ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மதுரை மாவட்டம்—நிலக்கோட்டை கோவையில் இருந்து வெகுதூரம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** பல்லடத்தில் ஒரு முன்சிப் கோர்ட் ஏற்படுத்துவது பற்றி உயர்நீதி மன்றம் எப்போதாவது கேட்கப்பட்டிருக்கிறதா ? அப்படி இருந்தால் அவர்களுடைய கருத்து என்ன ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உயர்நீதி மன்றம் இதைப் பரிசீலித்து இப்போதைக்கு அந்த இடத்தில் தேவையில்லை என்ற



1972 மார்ச் 9]

கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆயினும் நாம் அமைத்திருக்கிற குழுவும் இதைப் பரிசீலித்து தன்னுடைய பரிந்துரையை அளிக்கும்.

**திரு. நா. வெ. குருசாமி :** ஒரு தாலுக்காவில் இருக்கிற இடமே இன்னொரு தாலுக்கா முன்சிப் கோர்ட்டோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அப்படியின்றி அந்த அந்த தாலுக்காவில் உள்ள இடங்கள் எல்லாம் ஒரே இடத்தில் இருக்க ஒவ்வொரு தாலுக்காவிலும் முன்சிப் கோர்ட் ஏற்படுத்தும் யோசனை பற்றிய விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** சுதந்திர ஆட்சிக்கு முன்னரே இதுபோல ஒரு தாலுக்காவின் ஒரு பக்கம் ஒன்றோடும், இன்னொரு பக்கம் இன்னொன்றோடும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கடங்களை எல்லாம் போக்கத்தான் ஒரு மாவட்ட நீதிபதி—ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியைக் கொண்ட ஒரு குழு அமைக்கப் பட்டிருக்கிறது. இது ஒவ்வொன்றின் ஜூரிஸ்டிரிக்ஷன் பற்றியும் பரிசீலித்து எல்லைகளையும் வரையறை செய்யும். இப்போது நிறைய சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகள் இருக்கின்றன. நம்முடைய யோசனைப்படி எஸ்.பி.எம்.-கம்-முன்சீப் கோர்ட் என்பதாக மற்ற மாநிலங்கள் சிலவற்றில் உள்ளது போல ஏற்படுத்தும் யோசனைக்கு உயர்நீதிமன்றமும் அனுமதி அளித்தால் நிலைமை சீராகும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அந்தக் கமிட்டியின் அறிக்கை எப்போது வரும் என்பதற்கு ஒரு காலவரையறை ஏற்படுத்தி இருக்கிறார்களா ? இப்போதே வழக்கறிஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கிற காரணத்தினால்—ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் அமைச்சரைக் கேட்டுக்கொள்கிறேன்—எஸ்.பி.எம்-கம்-முன்சீப் கோர்ட் என்று அமைப்பதன் மூலம் வழக்கறிஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஏற்படுத்தி விடாதிருப்பார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அந்தக் குழுவினுடைய அறிக்கை விரைவில் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுக்கே சிவில் கோர்ட் அதிகாரமும் வழங்கப்படுவதன் காரணமாக வழக்கறிஞர்கள் மத்தியில் எப்படி வேலையில்லாத் திண்டாட்டம் வரும் என்று தெரியவில்லை. ஆங்காங்கு ஜில்லா கோர்ட்டுகளும் இருக்கும். சப்-மாஜிஸ்ட்ரேட்

கோர்ட்டுகளும் இருக்கும். சப்-மாஜிஸ்ட்ரேட்டாக வருவதற்கு 2 ஆண்டு பயிற்சி இருக்க வேண்டும். ஜில்லா முன்சிபாக வருவதற்கு 3 ஆண்டு பயிற்சி இருக்க வேண்டும். சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளுக்கே சிவில் கோர்ட் அதிகாரத்தைக் கொடுப்பதால் பொது மக்களுக்கு வசதியாக இருக்கும். இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படாது.

**திரு. சொ. காவேரிமணியம் :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில் இந்தக் குழு மாவட்ட ரீதியாகப் பரிசிலனை செய்வதாகச் சொன்னார்கள். மாவட்ட ரீதியாகப் பரிசீலனை செய்யும்போது மாவட்ட வழக்கறிஞர்கள் கழகத் தலைவர் செக்ரடரி, வர்த்தக சபைத் தலைவர் செக்ரடரி, இன்னும் மாவட்டத்தில் உள்ள முக்கியமானவர்கள் ஆகியவர்களையும் இந்தக் குழு கலந்து கொள்ளுமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் .** அந்த முறையில் தான் இந்தக் குழு பலஇடங்களுக்கும் சென்று பரிசீலித்து வருகிறது. அதில் சங்கடம் இருந்தாலும் இதுபற்றி தங்களுடைய கருத்துக்களை யார் வேண்டுமானாலும் அரசாங்கத்திற்கும் அனுப்பலாம். அவற்றை அரசாங்கம் அந்தக் குழுவிற்கு அனுப்பி வைக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு சிவில் அதிகாரங்களைக் கொடுப்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. அப்படி ஏதாவது முடிவு செய்வதற்கு முன்னால் உயர் நீதிமன்றத்தின் கருத்தையும் தெரிந்துகொள்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பொருத்தமாக இருக்காது என்பதை நான் ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. ஒரு சில மாநிலங்களில் இந்த முறையும் இருக்கிறது. ஆயினும் இதுபற்றி உயர்நீதி மன்றம் நம் கருத்தை ஒத்துக் கொண்டால் தான் என்பதை நான் முன்பே சொல்லியிருக்கிறேன்.

**திரு. எம். கந்தசாமி :** வேலைவாய்ப்பு புதிய திட்டத்தின் மூலம் கெட்டுவிடாது என்று அமைச்சர் அவர்கள் கூறியதைப் பாராட்டுகிறேன். சிவில்-க்ரிமினல் இரண்டு அதிகாரமும் சப்-மாஜிஸ்ட்ரேட்டுக்கு கொடுக்கிறபோதே அவர்களுடைய அந்தஸ்துக்கு ஏற்ற முறையில் பொருளாதார முறையிலும் அவர்களை உயர்த்த அரசாங்கம் முன்வருமா ?



**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உறுப்பினர் குறிப்பிட்டது உண்மையான கருத்து. 126 பேர்கள் சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளாக இருக்கிறார்கள். நான் ப்ராக்டீஸ் செய்து கொண்டிருந்தபோது ஒரு சப்-மாஜிஸ்ட்ரேட் கூடச் சொன்னார் Once an accused always an accused, once a magistrate always a magistrate என்று அவர்களுடைய குறைகளையும் போக்க வேண்டுமென்பதுதான் இப்படிச் செய்யலாமா என்று யோசிப்பதற்கு ஒரு காரணம்.

இப்போதே சப்-மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு சிவில் அதிகாரம் கிடையாது என்று சொல்ல முடியாது. சப்-மாஜிஸ்ட்ரேட்டுக்கு சிவில் அதிகாரங்களைக் கொடுத்திருக்கிறோம்.

**திரு. எம். தேவராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் எல்லாம் கேட்டுக்கொண்டதற்கிணங்க நம்முடைய நீதிமன்றங்களை எங்கு எங்கு எப்படி எப்படி அமைக்கலாம் என்பதைப்பற்றி பரிசீலிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதை வரவேற்கிறேன். மாநிலம் முழுவதையும் பரிசீலித்து அறிக்கை கொடுப்பதற்கு காலமாகும் என்றாலும் பரிசீலனை செய்த மாவட்டங்களைப் பற்றி இடைக்கால அறிக்கை வாங்கி அவற்றை உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** அப்படி ஒரு சில இடங்களில் செய்தால் மற்ற இடங்களில் இருந்து ஆட்சேபனை வரும். மாநிலம் முழுவதற்குமாகப் பரிசீலிப்பதே சரியானது.

**திரு. எஸ். வடிவேல் .** சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் வழக்காட ஹரிஜனங்களுக் கென்று வழக்கறிஞர்களை நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இப்போதே க்ரிமினல்-சிவில் ப்ரொஸீஜர் கோட்படி யார் யாருக்கு அரசாங்கம் உதவி செய்யலாம் என்ற முறையில் ‘லீகல் எய்ட் டு புவர்’ என்று இருக்கிறது. ஹரிஜன் என்று செய்வதற்கு அரசாங்கம் முடிவு எடுக்கவில்லை.

**திரு. கே. எ. வகாப் .** தலைவர் அவர்களே, வக்கீல்களாக இருக்கின்ற அங்கத்தினர்கள் வக்கீல்களுக்குப் பாதுகாப்பு கேட்கின்ற முறையில் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களுக்காகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. மதுவிலக்கு ரத்தானதால் குற்றங்கள் குறைந்து சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில்

[1972 மார்ச் 9

வேலையில்லாமல் இருக்கிறது. பொதுமக்களின் நலனைக் கருதி தாலுக்கா தலைநகரங்களில் இருக்கும் எல்லாக் கோர்ட்டுகளுக்கும் சிவில் அதிகாரத்தை அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கேட்ட காரணத்தால் இந்தக் கேள்வி எழுப்பப்படுகிறது என்று கருதுகிறேன். அம்மையார் உட்பட வழக்கறிஞர்கள் அனைவரும் பொதுமக்களின் நன்மைக்காகத்தான் வாதாடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களும் ஒருகாலத்தில் பொதுமக்களுக்காக வாதாடியவர் தான். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட், டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளிலும் வேலைவாய்ப்பு அதிகமாகத் தேவைப்படுகிற காரணத்தால் தனியாகப் போடுங்கள். இந்த சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டைச் சேர்க்காதீர்கள் என்று சொன்னேன். வேலைவாய்ப்புக் கிடைப்பதைப்பற்றித்தான் சொல்ல வந்தேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** விளக்கம் சொன்னதற்குப் பின்னால் இதே கருத்தைச் சொல்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும் இருக்கும், சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டும் இருக்கும்.

**திரு. அ. தேவேந்திரன்:** தலைவர் அவர்களே, சப்-மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டுகளில் வேலை குறைந்து இருப்பதால் இவர்களை ஃபர்ஸ்ட் கிளாஸ் மாஜிஸ்ட்ரேட் அதிகாரமாக மாற்றினால் நலமாக இருக்கும் அல்லவா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** எங்கெங்கு குறைந்த வழக்குகள் என்று அதற்கு ஒரு ஸ்கீம் போட்டு அதைப்பற்றி உயர்நீதி மன்றமும் பரிந்துரைத்தால் அதுபற்றி தக்க முடிவு எடுக்கப்படும்.

**திரு. க. மு. இராசகோபால்:** தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் தங்களுடைய குறைகளைப்பற்றிச் சொல்லிக் கொண்டே போனால், பொதுமக்களுடைய குறைகளை நீக்குவதற்கு அவர்களால் எப்படி முடியும்?



1972 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** பொதுமக்களுடைய உணர்ச்சியைப் பிரதிபலித்ததற்கு நன்றி.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி:** தலைவர் அவர்களே, முன்னாள் ஊராட்சிகளுக்கு சிவில் விவகார அதிகாரங்களை வழங்கியிருந்தார்கள். பின்னாலே அது நிறுத்தப்பட்டது. மீண்டும் கிராமங்களில் சிறிய முறையில் சிவில் அதிகாரங்களை வழங்கும் செயற்குறிப்பு ஏதாவது ஆய்வில் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலுள்ள பல்லடத்திலுடைய நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று கருதுகிறேன். முன்னால் 1955-ம் வருஷத்திய சட்டம் இருந்தது. பின்னர் 1958-ல் ஏற்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்தின் மூலம் அது எடுக்கப்பட்டு விட்டது. இருந்தாலும் வில்லேஜ் பஞ்சாயத்து ஆக்ட் என்கிற சட்டம் மூலம் சில இடங்களில் அனுமதிக்கப்படுகிறது. இதையெல்லாம் ஒட்டுமொத்தமாகச் சேர்த்து, 'ஊர் நீதிமன்றம்' என்கிற சட்டத்தை உருவாக்குவது பற்றி யோசிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கேள்வி 390 . . .

THIRU K. KANDASWAMI: Sir, I am raising a point of order. I may kindly be permitted to raise it and whether it is relevant or otherwise, the Hon. Speaker can decide. The hon. Member on the other side referred to the lawyer members sitting here and said that they are interested in having more cases. It is an insult rather to the genius of the lawyers community who sit here as Hon. Members. It is not the intention of the Hon. Lawyer Members here to have more cases. The point is that the existing cases should be distributed in such a manner to the civil and criminal Courts............

MR. DEPUTY SPEAKER: There is no point of order. Our Minister is also a Lawyer. I am also a Lawyer. It is not an insult. The question was put in a jovial manner.

THIRU K. KANDASWAMI: That can be expunged please.

MR. DEPUTY SPEAKER: It is not necessary. He never intended anything. He put the question in a jovial manner. There are so many Advocates here and I do not think that any member will dare ask such a question.

[1972 மார்ச் 9

## திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பாசன வசதிகள்

*390 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்குத் தொடர்ச்சி மலையில், உற்பத்தியாகும் சிற்றாறுகளை யெல்லாம் இணைத்து, நெல்லை மாவட்டத்தில் அதைப் பாசனத்திற்குப் பயன்தரும் வகையில் ஏற்படுத்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஒரு குழு பரிசீலனை செய்ததா ?

(இ) ஆம் எனில், அந்தக் குழு அளித்துள்ள அறிக்கையின் முழு விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** (அ) இல்லை.
(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் சிற்றாறுகளை யெல்லாம் இணைத்துத் திருப்பிவிடப் போவதாகச் சொல்லப்பட்டது. வறண்ட பகுதியாக இருக்கும் நெல்லை மாவட்டத்திலுள்ள சங்கரன்கோவில் போன்ற பகுதிகளுக்கு நீர்ப்பாசன வசதி செய்து கொடுக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, இந்த அரசாங்கத்தால் எந்தக் குழுவும் நியமிக்கப்படவில்லை. மத்திய அரசிலிருந்து இரிகேஷன் கமிஷன் ஒன்று தமிழ் நாட்டிற்கு வந்த நேரத்தில், இதுபற்றி எடுத்துச் சொல்லி, இந்தத் திட்டத்தினால் நெல்லை மாவட்டம் பயன் அடையும் என்று தெரிவித்தோம். எங்களுடைய யோசனையை அந்தக் கமிஷனும் ஒப்புக் கொண்டிருக்கிறது. திட்டவட்டமான செயற்குறிப்பு ஒன்று அனுப்பி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

**திரு. கே. பி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்திலுள்ள மணிமுத்தாறு அணையிலிருந்து வரும் கால்வாய் திருச்செந்தூர், நாசரத்பேட்டை, சாத்தான்குளம் வழியாகத் தண்ணீர் பாய வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கால்வாய்கள் எல்லாம் அகலமாக இல்லாமல் குறுகியதாக அமைந்திருப்பதால் சிரமம் ஏற்படுகிறது. மேலும்



1972 மார்ச் 9]

பெரிய கால்வாய்களிலிருந்து குளங்களுக்குத் தண்ணீர் செல்வதற்கான இணைப்புக் கால்வாய்கள் இல்லாமல் இருக்கின்றன. இணைப்புக் கால்வாய் இல்லாத காரணத்தால், தண்ணீர் ஒரு குளத்திற்குப் பாய்ந்து பின்னர் அடுத்த குளத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. இந்த ஆண்டிலே மணிமுத்தாறு அணை நிரம்பி வழிந்த நேரத்திலேகூட அந்தப் பகுதிகளிலே தண்ணீர் கிடைக்காத நிலைமை இருக்கிறது. ஆகவே, கால்வாய்களை அகலப்படுத்தி, இணைப்புக் கால்வாய்களை வெட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய நீண்ட கேள்விக்குப் பிறகு என்னால் பதில் சொல்ல இயலவில்லை. இருந்தாலும் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்தால், தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வசதியாக இருக்கும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலைகளில் உற்பத்தியாகி, அரபிக்கடலில் விழும் ஆறுகளில் எந்த எந்த ஆறுகளைத் திருப்பிவிடலாம் என்பதைக் குறித்து கேரள மாநில அரசோடு இது சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடந்ததா ? இந்தச் சபையில் அந்த விவரங்களை வெளியிடுவார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** தலைவர் அவர்களே, கேரள அரசோடு பேச்சுவார்த்தை நடத்தவில்லை. இதுகுறித்து மத்திய அரசிலிருந்து வந்த இரிகேஷன் கமிஷனிடம் விவரமாகச் சொல்லியிருக்கிறோம். அதுகுறித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் அரசாங்கத்தின் குறிப்பு ஒன்று தயாரிக்கப்படுகிறது.

**திரு. கே. பி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆறுகளைத் திருப்பி விடுவதைப்பற்றிப் பரிசீலனைகள் நடக்கின்றன என்பதைக் குறித்துச் சொன்னார். மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களும் வறண்ட பகுதிகளாக இருப்பதால், அதைக் குறித்தும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படுமா ? மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி, அரபிக் கடலில்போய் விழும்

[1972 மார்ச் 9

ஆறுகள் கேரளப் பகுதிகளில் எத்தனை ? அவற்றின் தண்ணீரை எப்படி நாம் பயன்படுத்தலாம் என்பதைக் குறித்து ஆராய ஒரு தனிக் குழுவை அமைத்துச் செயல்பட முயற்சி செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, மூலக் கேள்வி, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி அரபிக்கடலில் விழும் ஆறுகளை நெல்லை மாவட்டத்திற்குப் பயன்படுத்தும் திட்டம் என்பதாகும். மதுரை மாவட்டத்தைப் பற்றித் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து புறப்படுகின்ற நதிகள் தண்ணீரை நெல்லை மாவட்டத்திற்குப் பயன்படுத்தும் திட்டத்திற்கு என்ன செலவாகும் ? அதற்கு ஒரு எஸ்டிமேட்டாவது அரசாங்கம் தயாரித்திருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, பொதுமக்களின் நன்மையைக் கருதி, இதற்கு விடையளிக்கவில்லை.

**திரு. கா. மு. கதிரவன் :** தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் அச்சன் கோவிலாறு அரபிக் கடலில் போய் விழுகிறது. நெல்லை மாவட்டத்திற்கு அதைப் பயன் படுத்தும் திட்டம் உண்டா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, எல்லா ஆறுகளும் சிற்றாறுகள்தான். அவற்றை நெல்லை மாவட்டத்திற்குத் திருப்பி விடுவதற்கான சாத்தியக் கூறுகளை அரசு பரிசீலித்து வருகிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, வழக்கம் போல் நாம் மத்திய அரசுக்கு எழுதி, அவர்களுடைய அனுமதியைப் பெறுவதற்குள் கேரள மாநிலம் அந்த ஆறுகளைப் பயன்படுத்திக் கொண்டாலும் பயன்படுத்திக் கொள்ளும். ஆகவே மத்திய அரசாங்கத்தின் குறிப்புகளுக்காகக் காத்திராமல், நேரடியாக கேரள அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி, பின்னர் மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி, என்ன என்ன செய்ய வேண்டுமோ அப்படிச் செய்ய அரசு முன்வருமா ?



1972 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவர் அவர்களே, நம்முடைய அரசும் இதைப்பற்றிய விவரங்களைச் சேகரித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியுடன் தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திற்கு குறிப்பு அனுப்பியிருக்கிறோம்.

### மேல்மலையனூர் பெரிய ஏரியிலிருந்து வரத்துவாய்க்கால்

*** 391 வினா—திரு. ரா. ரா. முனுசாமி :** மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூர், பெரிய ஏரியில் இருந்து ஈயக்குளம் ஏரிக்கு வரத்து வாய்க்கால் வெட்ட வேண்டிய வேலை கைவிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) செஞ்சி வட்டம், மேல்மலையனூர் பெரிய ஏரியிலிருந்து ஈயக்குளம் ஏரிக்கு வரத்து வாய்க்கால் வெட்டும் திட்டம் எதுவும் இதுவரை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஆகையால் இவ் வேலை கைவிடப் பட்டுள்ளதா என்ற கேள்விக்கு இடமில்லை.

(இ) இக் கேள்வி எழாது.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவர் அவர்களே, மேல்மலையனூரில் இருந்து சங்கராபரணியூர்வரை சென்று மேல்மலையனூர் தண்ணீர் வீணாகக் கடலில் சென்று விடுகிறது. மேல்மலையனூரிலிருந்து ஈயக்குளம் நான்கு பர்லாங் தூரத்தில்தான் இருக்கிறது. ஈயக் குளம் ஏரிக்குத் தண்ணீர் வந்தால் அதை யொட்டிய எம்பலம், சாத்தாபுத்தூர், சித்தாபுத்தூர், தாத்தாபுத்தூர் போன்ற ஆறு ஏரிப் பகுதிகளுக்கும் தண்ணீர் கிடைப்பதன் மூலமாக இரண்டாயிரம் ஏக்கர் வரை விவசாயத்திற்குப் பயன்படக்கூடிய அளவில் இருக் கின்ற அந்த வரத்துக் கால்வாயைச் செப்பனிட்டுத் தர அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** உறுப்பினர் அவர்கள் மேல்மலையனூரிலிருந்து ஈயக்குளம் ஏரிக்கு வரத்துக் கால்வாய் வெட்டும் திட்டம் உண்டா என்று கேட்டார்கள், இல்லை என்று சொன்னேன். அது ஒரு சிறு பாசன ஏரிதான். அதன்

ஆயக்கட்டு சுமார் 1,018.33 ஆகும். இப்பொழுது 132 ஏக்கர் சாகுபடி செய்யப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அங்கத்தினர் கூறுகின்ற ஆறு, ஏரிகளுக்கு அந்தத் தண்ணீரைக் கொண்டுவர முடியுமா அதற்குச் செயற்குறிப்பு இருக்கிறதா என்பதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

*Road connecting Rameswaram and mainland*

* 392 *Q*.—THIRU S. SANGUMUTHU THEVAR :
THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the State Government have received any reply from the Union Government about the proposed road connecting Rameswaram and the mainland; and

(b) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** . (அ & இ) இத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி த் துறை ஒப்புதல் அளித்திருப்பதாகவும் இதற்கான ஆணை கப்பல் போக்குவரத்து (சாலைப்பிரிவு) துறையிலிருந்து விரைவில் அனுப்பப்படுமென்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

**திரு. என். கே. பழனிசாமி** . இதற்கான செலவு எவ்வளவு ? இராமேஸ்வரம் மேம்பாலத் திட்டம் இந்த எஸ்டிமேட்டில் சேர்க்கப் பட்டு இருக்கிறதா ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : It is understood that detailed estimate has already been finalised and approved by the Government for Rs. 532–87 lakhs for construction of road bridge against Pamban strait on national highways 49. The cost of bridge works out to Rs. 481.86 lakhs and cost of approach road works to Rs. 51.01 lakhs.

**திரு. காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி** : பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திற்கும், தனுஷ்கோடிக்கும் ஏற்கனவே போடப்பட்டு வருகிற கடலோரப் பாதையில் பள்ளம் ஏற்பட்டு கடல் அரிப்பு ஏற்படுவதால் இதை மறுபரிசீலனை செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : கடலலைகளால் அரிப்பு ஏற்படாமல் இருப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.





**திரு. என். கே. பழனிசாமி** : இந்த ரோடு தேசியப் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த ரோடு ஆக இருப்பதால் இந்தச் செலவு பூராவையும் மத்திய அரசாங்கமே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மாநில அரசு வற்புறுத்தி இருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றுதான் நான் கருதுகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : வரவு செலவுத் திட்டத்திலே பாம்பன் பிரிட்ஜுக்கும் 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதோடு இந்தத் திட்டத்தையும் சேர்த்துவிட்டால் இரண்டையும் முடிப்பது சுலபமாக இருக்குமே. எனவே அதற்கும் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : பட்ஜெட்டிலே இந்தப் பாலத்தைப் பற்றித்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : 5 கோடி ரூபாய் பட்ஜெட்டிலே ஒதுக்கப்பட்டிருப்பது இந்த இரண்டுக்கும் சேர்ந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** : சேர்த்துத்தான்.

*Overbridge near Jamalia*

*393 *Q*.—DR. H. V. HANDE : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the overbridge near Jamalia at Perambur has been closed for traffic a few years ago; and

(*b*) if so, the reasons therefor?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா** . (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

*Pine-apple processing factory in Kanyakumari district*

* 394 *Q*.—THIRU J. JAMES : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether the Government received any representation, dated 25th June 1971, to start a pine-apple processing unit in the Co-operative Sector at Kulaseharam in Kanyakumari district; and

(*b*) if so, the action taken thereon?

[1972 மார்ச் 9

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** (அ) & (இ) அன்னாசிப் பழம் பதனிடும் தொழிற்சாலை கன்னியாகுமரி மாவட்டத்திலே மார்த்தாண்டம் என்ற இடத்தில் தொடங்குவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, இந்த அன்னாசிப்பழம் பதனிடும் தொழிற்சாலையைத் தொடங்குவதற்கு அனுமதி எப்பொழுது வழங்கப்பட்டது? அதற்காக எவ்வளவு தொகை வழங்கப்பட்டது? அரசாங்கத்திலிருந்து அனுமதிக்கப்படும் பணத்தை வாங்க கூட்டுறவு வங்கி அனுமதியளிக்கவில்லை என்று கூறப்படுகிறதே அது உண்மையா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, வழக்கப்படி கட்டடம் இவைகள் எல்லாம் தொடங்கினால், அந்தச் சமயத்தில் பணத்தைக் கொடுப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இப்பொழுது அங்கே நிர்வாகக் குழு இயங்கிக்கொண்டிருக்கிறதா? நிர்வாகச் செலவுகளுக்குப் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அதன் விவரங்களை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கிற கற்குளம், விளவங்கோடு கூட்டுறவு விற்பனைக் கழகத்திற்குப் பணம் அனுமதிக்கப்பட்டு அவர்களால் இந்தத் தொழிற்சாலை தொடங்கப்பட இருக்கிறது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இதற்கு ஏதாவது பணம் கொடுக்கப்பட்டிருக்கிறதா? ஏதாவது பணம் செலவழிக்கப் பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** தலைவர் அவர்களே, பணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. எவ்வளவு செலவழிக்கப் பட்டிருக்கிறது என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.



1972 மார்ச் 9]

## உழவர்களுக்கு விசையேற்றங்கள்

* 395 வினா—**திரு. க. நாகராஜன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூட்டுறவு நிலவள வங்கிகள் மூலம் விசையேற்றங்களை விவசாயிகள் கடனுக்கு வாங்கும்போது, அவைகளை நிறுவுவதற்கான ஒப்பந்த விலை பட்டியல்களை (Quotations) கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் மட்டும் தான் பெறவேண்டும் என்று அரசு வற்புறுத்தும் செயற்குறிப்பு ஏதும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** இல்லை.

**திரு. க. நாகராஜன்:** விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் பம்பு செட்டுகளுக்காகக் கடன் வழங்குகின்றபோது நிலவள வங்கித் தலைவர், செயலாளர் இவர்கள் எல்லாம் விவசாயிகளை குறிப்பிட்ட விற்பனையாளர்களிடம் சென்று பம்புசெட்டுகள் வாங்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துகிறார்கள். இதனால் பல தவறுகள் ஏற்படுகின்றன. இதைத் தடுத்து ஒரு கூட்டுறவு அமைப்பு மற்றொரு கூட்டுறவு அமைப்புக்கு உதவி செய்யக்கூடிய வகையில் வாய்ப்பு உண்டு என்பதால், அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** மாண்புமிகு உறுப்பினர் கூறியது போல் சுற்றறிக்கை விடப்பட்டிருக்கிறது. கூட்டுறவுத் துறையில் பம்புசெட்டுகள் பெறும்படி ஆலோசனை சொல்லப் பட்டிருக்கிறது. கட்டாயம் எதுவும் இல்லை.

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, கூட்டுறவு நிலவள வங்கி கொடுக்கும் கடனைக் கொண்டு பம்பு செட்டுகள் வேண்டிய சாமான்கள் வாங்கும்பொழுது கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் மார்க்கெட்டிங் சொசைட்டிகளில்தான் வாங்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கனம் உறுப்பினர் அவர்கள் கூறியது போல் கமிஷன் அடிப்படையிலே சிலர் செயல்படுகிறார்கள். எனவே கூட்டுறவுத் துறையின் மூலம் இயங்கும் மார்க்கெட்டிங் சொசைட்டிகளிலே அவர்கள் வாங்க வேண்டுமென்ற முறையிலே—

ஏனென்றால் கூட்டுறவிலேதான் லாபம் குறைந்த சதவிகிதத்தில் இருக்கிறது—கட்டாயமாகச் செய்வதற்கு அரசாங்கம் முன் வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா விடுதிகள்

* 396 வினா.—**திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1971-ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், 15-ம் தேதி முதல் தமிழ்நாட்டில் மாநில அரசு சுற்றுலா விடுதிகளின் அறைகளுக்கு வாடகை 50 சதவிகிதம் உயர்த்தியுள்ளதா ?

(இ) ஆம் எனில், சட்டசபை அங்கத்தினர்கள் வாடகை இல்லாமல் தங்குவதற்கு உத்தரவளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) ஆம்.

(இ) இல்லை.

**திரு. என். மருதாசலம் :** தலைவர் அவர்களே, சுற்றுலா மாளிகைக்கு 25 சதவிகிதத்துக்கும் அதிகமாக வாடகை வாங்குகிறார்கள். சட்டசபை உறுப்பினர்களுக்கு வாடகையில்லாமல் தங்குவதற்கு அனுமதியளிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, 25 சதவிகிதம் அல்ல 50 சதவிகிதம் வாடகை தரப்படுகிறது. சட்டசபை உறுப்பினர்கள் இலவசமாகத் தங்குவதற்கு ஏற்பாடு செய்யும் செயற் குறிப்பு இப்பொழுது இருக்கிறதா என்று கேட்டார்கள். அதுபற்றி சுற்றுலா வாரியம்தான் முயற்சி செய்ய வேண்டும். இப்பொழுது அரசாங்கத்தின் பரிசீலனையில் இல்லை.

**திரு. என். கணபதி :** தலைவர் அவர்களே, சாதாரணமாக டூரிஸ்ட் பங்களாவிலே போய்த் தங்குவதற்கு வரிசை வாரியாக அதாவது ஆர்டர் ஆப் பிரையாரிடி வைத்திருப்பதில் சட்டசபை. மேலவை உறுப்பினர்களுக்கு ஆறாவது இடம்தான் இருக்கிறது.





அந்த இடத்தை 2-வது 3-வது இடமாக ஆக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, சுற்றுலா மாளிகைகள் 5 இடங்களிலே இருக்கின்றன. ஐந்து இடங்களிலும் இதுவரையிலே எந்த இடத்திலும் சட்டசபை உறுப்பினருக்கு இடம் மறுக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. எந்த இடமாக இருந்தாலும், அவர்களுடைய பிரச்சினை கவனிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், மறுக்கப்படவில்லை என்ற காரணத்திற்காக நாங்கள் செய்ய மாட்டோம் என்று சொல்வது நியாயமில்லை. நியாயமான கோரிக்கைகளை சட்டசபை, மேலவையிலுள்ள மக்களின் பிரதிநிதிகள் கேட்கிறார்கள். முதலிடங்களை மந்திரிகளுக்கும், இரண்டாவது இடத்தை சட்டசபை, மேலவை அங்கத்தினர்களுக்கும் கொடுப்பதுதான் நியாயம். அதுமட்டுமல்ல, ஊட்டியிலேயிருக்கும் தமிழகத்திலேயும், இன்னும் பல டூரிஸ்ட் ஹோம்ஸிலும் ஆபீசர்களுக்குத்தான் ப்ரஃபெரன்ஸ் கொடுக்கிறார்களே தவிர, எம்.எல்.ஏ.-க்களுக்கு ப்ரஃபெரன்ஸ் கொடுப்பதில்லை. இதைப் புகார்களாகச் சொல்ல வேண்டாமென்று கருதி, கண்ணியத்தோடு புகார்களைச் சொல்வதில்லை. எனவே அப்படி புகார்களே இல்லை என்ற காரணத்தைச் சொல்லாமல் இதைப்பற்றிக் கவனிக்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அம்மையார் அவர்கள் சர்க்யூட் ஹவுஸையும், டூரிஸ்ம் ஹோமையும் போட்டு இரண்டையும்பற்றிப் பேசுவது குழப்பத்தை அளிக்கும் என்ற காரணத்தினால் விளக்கம் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது சுற்றுலா வாரியத்திற்குக் கீழே 5 இடங்களிலுள்ள மாளிகைகள். அது வெளியூர்களிலிருந்து, வெளிநாடுகளிலேயிருந்து வந்து தங்கக்கூடிய சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்காக இருக்கும் இடம். அது ஐந்து இடங்கள், உதகமண்டலம், திருச்சி, மதுரை, திருச்செந்தூர், கன்னியாகுமரி. ஆகவே யாரும் அமைச்சர்கள் தங்குவது இல்லை. எனவே அமைச்சர்களைப்பற்றிய பிரச்சினை வருவதில்லை. வருபவர்கள் வியாபாரிகள், ஊர் சுற்றிப் பார்ப்பவர்கள்தான். சட்டமன்ற உறுப்பினர்கள் ஊரைச் சுற்றிப் பார்க்கப் போவதாகத் தெரியவில்லை. அதனால் காரணமாக தங்குவதற்காக

அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்ய எண்ணமிருக்கிறது. ஆனால் இதுவரையிலிருந்த வாடகையினால் ஏராளமான நஷ்டம் வந்திருக்கிறது. சுற்றுலா வாரியம் வியாபார வாரியம். ஆகவே லாபகரமாக நடத்த வேண்டும். அப்படி நடத்துவதற்காகத்தான் 50 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

## ஜவ்வாது மலையில் வனவிலங்குகள் உய்விடம்

* 397 வினா.—திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஜவ்வாது மலையில் விலங்குகள் அதிகமாக வசிக்கும் பகுதியை வன விலங்கு சரணாலயமாக அறிவிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** இல்லை.

**திரு. கே. ஏ. வகாப்:** தலைவரவர்களே, இப்பொழுது வேடந்தாங்கலில் பறவைகள் சரணாலயம் இருக்கிறது. ஆனால் ஜவ்வாது மலையில் வன விலங்குகள் நிறைய ஏற்படும் சூழ்நிலை நன்றாக இருக்கிறது. எனவே இப்பொழுது அங்கே வனவிலங்குகள் அதிகமாக இல்லாவிட்டாலும் வெளியிலேயிருந்து அஸ்ஸாம் போன்ற இடங்களிலிருந்து கொண்டுவந்து வனவிலங்குகளைப் பாதுகாக்க அரசு இனியாவது முயற்சியெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் :** தலைவரவர்களே, வடார்க்காடு மாவட்டத்தில் சந்தவாசல் சரகத்தில் மான் பூங்கா அமைக்க திட்டமிருக்கிறது.

## லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கல்

* 398 வினா.—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

லாரி போக்குவரத்தை அரசுடமையாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.





**திரு. பி. எஸ். மணியன் :** தலைவரவர்களே, பேருந்துகளுக்கு ஒரு உச்சவரம்பை நிர்ணயித்து அரசுடமையாக்கியது நாட்டு மக்களிடத்தில் நல்ல வரவேற்பைக் கொடுத்திருக்கிறது. அதைப்போல் முதல் கட்டமாக இந்த லாரிகளுக்கும் ஐம்பதோ அல்லது அதற்கு மேற்கொண்டோயிருக்கும் கம்பெனிகளை அரசுடமையாக்கும் உத்தரவை அரசு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இது கொள்கைப் பிரச்சினை.

**திரு. என். கணபதி :** துணைத் தலைவரவர்களே, இருக்கின்ற லாரி கம்பெனிகளை தேசிய மயமாக்குவது என்பதை ஒரு பிரச்சினையாக்கப் பிறகு பார்த்துக் கொள்ளலாம். சிவில் சப்ளை டிபார்ட்மெண்டில் நிறைய லாரிகளை வைத்துக்கொண்டு, அதைப் போலீஸ் டிபார்ட்மெண்டு, ஃபயர் சர்வீஸ் போன்றவைகளுக்குக் கொடுத்து பயனற்றதாக்கியிருக்கிறார்கள். அந்த லாரிகளை வைத்து ஒரு தேசிய லாரி கம்பெனி ஆரம்பிக்க நம் அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அவர்கள் குறிப்பிடுகின்ற லாரிகள் உணவு வருவாய்த்துறை அமைச்சரிடத்தில் இருக்கின்றன. ஆகவே அவற்றைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, லாரிகளைத் தேசியமயமாக்கக்கூடிய திட்டம் இப்பொழுது இல்லை என்று சொன்னார்கள். ஆனால் இண்டர் ஸ்டேட் பர்மிட்டோடு மற்ற மாநிலங்களுக்கு நீண்ட தூரம் போகக்கூடிய லாரிகள் இருக்கும். அவைகளையாவது அரசாங்கம் ஏற்குமா ? அதோடு லாரிகளுக்குக் கட்டண விகிதாச்சாரம் இதுவரையில் இல்லை. பஸ்ஸில் ஒரு பாசஞ்சருக்கு ஒரு கிலோ மீட்டருக்கு 3 காசு என்று இருக்கிறது. ஆனால் லாரிகளில் அவர்கள் கண்டபடி அந்தக் கட்டணத்தை வசூலிக்கிறார்கள். அதையாவது ஒரு டன்னுக்கு ஒரு மைலுக்கு இவ்வளவுதான் வாங்க வேண்டுமென்று அரசாங்கம் சட்டத்தைக் கொண்டுவருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, இப்பொழுது தமிழ்நாட்டிலே ஓடும் லாரிகளானாலும் சரி, வெளி மாநிலங்களுக்கு ஓடுகின்ற லாரிகளானாலும் சரி அவற்றை நாட்டுடமையாக்குகின்ற செயற்குறிப்பு அரசாங்கத்தினிடத்தில் இல்லை.

அதேபோல் லாரிகளுக்குக் கட்டண விகிதம் வைக்க வேண்டுமென்று சொன்னார்கள். பஸ்களிலே அது சுலபம். ஏனென்றால் பிரயாணத்தை மனிதர்கள்தான் செய்கிறார்கள். ஆனால் லாரிகளிலே பல்வேறு வகையான சாமான்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன. சில சாமான்களுக்கு அதிக கட்டணம் கொடுப்பார்கள். சிலவற்றிற்கு, தாதுப் பொருள்கள் போன்றவைகளுக்கு அதிகக் கட்டணம் தரமாட்டார்கள். இதுபோன்ற பல சிக்கல்கள் இருப்பதால், அதுற்றி நாம் ஒன்றும் செய்வதற்கில்லை.

**திரு. முனு. அதி.** தலைவரவர்களே, பேருந்துகளில் நமக்கும் நஷ்டம் ஏற்படுகின்ற அறிகுறி தென்படுகின்ற காரணத்தினால், இரயில்களிலும் பிரயாணிகள் வண்டிகளினால் நஷ்டமும், குட்ஸ்களினால் லாபமும் வருகின்ற காரணத்தினால், அங்கேயும் குட்ஸ்களுக்கு முதல் மதிப்பைத் தருகிறார்கள். ஆகவே, இங்கேயும் லாரிகளைத் தேசிய மயமாக்குவதைத் தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியத் துணைக்கண்டம் பூராவும் சாமான்களை எடுத்துச் செல்லும் லாரிகளைத் தேசிய மயமாக்கினால் அதிக லாபம் வரும் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அப்படிச் செய்கின்ற எண்ணம் ஏதாவது அரசுக்கு உண்டா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நான் ஏற்கனவே லாரிகளைத் தேசிய மயமாக்கும் உத்தேசம் இல்லை என்று சொன்னேன். ஆனால் அவர்கள் பயணிகள் போக்குவரத்திலே நஷ்டம்தான் வருகிறது என்று சொன்னார்கள். அதிலே படிப்படியாக முன்னுக்குக் கொண்டு வந்திருக்கிறோம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எம். இராஜா:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது லாரிகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் இப்பொழுது இல்லை என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டிலேயிருக்கும் அத்தனை லாரிகளையும் இப்பொழுது நாட்டுடைமையாக்குவதற்கு முயற்சிக்கவில்லை என்றாலும், டி.வி.எஸ்., ஏ.பி.டி. பார்சல் சர்வீஸ் என்பவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு அந்த பார்சல் சர்வீஸ்களை உடனடியாக நாட்டுடைமையாக்கும் திட்டம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இன்னும் பஸ்களையே நாம் முழுவதும் தேசியமயம் ஆக்காத நிலையிலே லாரிகளைப்பற்றி இப்பொழுது சிந்திப்பதே தேவையில்லை.



**திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** தலைவரவர்களே, லாரிகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் தற்போது இல்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாட்டு மக்களின் பாதுகாப்புக்கும், உடைமைக்குப் பாதுகாப்பும் இருக்கின்ற வகையிலே லாரிகளில் மீட்டர்களைப் பொருத்துவதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, உறுப்பினரவர்கள் வேகமானிகளைப்பற்றிக் குறிப்பிடுகிறார்கள் என்று நான் கருதுகிறேன். அவைகளில் ஒழுங்காக வேகமானிகளைப் பராமரித்துக் கொள்கிறார்களா இல்லையா என்பதைப்பற்றி போக்குவரத்துத் துறையின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவரவர்களே, லாரிகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் இப்பொழுது இல்லை என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். கொள்கை அளவிலாவது நாட்டுடைமையாக்கும் முறையில் லாரிகளை நாட்டுடைமையாக்கும் கொள்கையை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, கேள்வி நேரங்களில் கொள்கைப் பிரச்சினைகளைச் சொல்வதற்கில்லை.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** சார், இரவு நேரங்களில் லாரிகள் வேகமாக ஓட்டப்படுவதால் பல விபத்துக்கள் ஏற்படுகின்ற காரணத்தினால் இரவு நேரங்களில் லாரிகளை ஓட்டாமலிருக்க நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வருமா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, தனிக் கேள்வி போடவும்.

### *Food carrying baskets in State Transport buses in Madras*

* 399 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Transport be pleased to state whether food-carrying baskets are being permitted to be carried in Government buses in Madras City?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தற்போது சென்னை மாநகரப் பேருந்துகளை இயக்கி வருகிற பல்லவா போக்குவரத்துக் கழகம், சாப்பாட்டுக் கூடைகளைப் பேருந்துகளில் கட்டணமின்றி எடுத்துச் செல்ல தொடர்ந்து அனுமதித்து வருகிறது.

[1972 மார்ச் 9

**திரு. கோவை செழியன் :** தலைவரவர்களே, சட்டசபை, சட்டமன்ற மேலவைகளின் உறுப்பினர்களுக்கு ஃப்ரி பாஸ் கொடுத்திருந்தார்கள். இப்பொழுது அரசாங்க பஸ்களை கார்ப்பொரேஷனாக ஆக்கிவிட்டதால் அந்தச் சலுகை நீட்டிக்கப்படுமா அல்லது பறிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அந்த சலுகை நீடிக்கப்படும்.

## *Re-treading of tyres*

* 400 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state the steps taken to get the tyres of Transport buses re-treaded in the Department Workshop itself?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** சென்னை போக்குவரத்து இல்லத்திலும், நாகர்கோயில் ராணித் தோட்டம் பணிக்களரியிலும் உள்ள இரு டயர் புதுப்பிக்கும் பிரிவுகளில், அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளின் டயர்கள் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சார், நாகர்கோயில் ராணித் தோட்டத்திலே இப்பொழுது அமைந்திருக்கும் அந்த ஓர்க்ஷாப் எல்லா அமைப்புகளையும் பெறவில்லை. ஆகவே அதை விஸ்தரித்து போதிய வசதிகளை ஏற்படுத்த அமைச்சரவர்கள் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு. திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, நாகர்கோயிலில் இப்பொழுது நாள் ஒன்றுக்கு 24 டயர்கள் புதுப்பிக்கும் வசதிகள் இருக்கின்றன. அவர்களும் கடந்த ஆண்டு 5,702 டயர்களைப் புதுப்பித்திருக்கிறார்கள். ஆகவே வேலை ஒழுங்காகத்தான் நடைபெறுகிறது. அப்படி எதுவும் பொருள்கள் இல்லை என்றால், பற்றாக்குறை ஏற்பட்டால் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பிருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திருமதி த. ந. அனந்தநாயகி :** புதுப்பிக்கப்பட வேண்டிய எல்லா டயர்களுமே இந்த இரண்டு இடங்களில்தான் ரிட்ரீட் செய்யப்படுகிறதா ? அல்லது வெளி கம்பெனிகளுக்கும் கொடுக்கப்படுகிறதா ? அப்படிக் கொடுத்தால் எந்தெந்தக் கம்பெனிகளுக்குக் கொடுக்கப்படுகிறது ?



1972 மார்ச் 9]

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அரசாங்கப் போக்குவரத்துத் துறைக்கான எல்லா டயர்களும் இந்த இரண்டு இடங்களிலேதான் புதுப்பிக்கப்படுகின்றன. வெளியிலே யாருக்கும் தரப்படுவதில்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நாகர்கோயிலில் டயர் புதுப்பிக்கும் பிரிவுக்குத் தேவையான ஆட்களை நியமிப்பதற்குள்ள அதிகாரம் அங்கிருக்கும் அதிகாரிகளுக்கு வழங்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அங்கு இன்னும் பல சிப்பந்திகள் தேவைப்படுகின்றனர். அதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யப்படுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டுமென்றுதான் பல இடங்களில் போக்குவரத்துக் கழகங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரியில் இருக்கும் ஜாயிண்ட் டைரக்டர் அவர்களுக்கு முழு அதிகாரமும் தரப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குறுகிய கால வினா எண் 1, கேள்வி எண்கள் 376, 377, 378 ஆகியவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க 11—3—1972-க்கு தள்ளி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (3) அமைச்சரின் அறிக்கை.

அமைச்சர் திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்கள் பதவி விலகல் குறித்தும் திரு. மன்னை ப. நாராயணசாமி அவர்கள் அமைச்சராக நியமிக்கப்பட்டது குறித்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது விதி 82-ன் கீழ் ஒரு அறிக்கையை அளிப்பார்கள்.

THE HON. THIRU V. R. NEDUNCHEZHIAN : Mr. Speaker, Sir, The Hon. Thiru A. P. Dharmalingam, Minister for Agriculture

resigned as Minister for Agriculture and on the advice of the Hon. Chief Minister, the Governor has accepted his resignation. However, on the advice of the Hon. Chief Minister, the Governor is pleased to appoint Thiru Mannai Narayanaswami as Hon. Minister for Agriculture.

*(1) நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.*

*(ஆ) அமைச்சர் பதவி விலகலைப்பற்றிய அறிக்கையை முதல் அமைச்சர் அளிக்காதது, அதுபற்றிய அறிவிப்பை முதலில் அவைக்கும் அளிக்காதது ஆகியவை குறித்து.*

திரு. ஜே. ஜேம்ஸ்: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, இன்றைய தினம் இம்மாதிரியான முக்கிய அறிவிப்பைச் சபைக்குத் தெரியப்படுத்த வேண்டுமென்ற பொறுப்பு முதலமைச்சரைச் சார்ந்தது. முதலமைச்சர் இந்த அவைக்கு வாராமல், கல்வி அமைச்சர் இந்த அறிவிப்பைத் தருவதற்குக் காரணம் என்ன என்பதைத் தலைவர் மூலமாகக் கேட்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: No doubt under Rule 82 a statement may be made by a Minister on a matter of urgent public importance, with the consent of the Speaker. But before he made the statement, the news has come already in the papers yesterday evening. When the Assembly is in session, we must have priority over anything else.

சட்டசபையின் உரிமையைப் பாதிக்கக்கூடிய அளவுக்குச் செய்திகள் செய்தித்தாள்களில் வந்திருக்கின்றன. வெளியே எங்களைக் கேட்கிறார்கள் ‘ சட்டசபைக்குப் போனீர்களே; இந்தச் செய்தி உங்களுக்குத் தெரியாதா? இந்த மந்திரிசபை கவிழப் போகிறதா? என்று கேட்கிறார்கள். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ராஜினாமாச் செய்த அமைச்சரின் இலாகா ரொம்ப முக்கியமான இலாகா, விவசாய இலாகா. புது மந்திரியை இங்கே காணோம். அவருக்கு ஜாயினிங் டைம் கொடுத்திருக்கிறார்களா? ஒரு வாரம் கொடுத்திருக்கிறார்களா?

When the House is in session, we must have priority over anything else.





ஒரு மணிக்கு எடுத்த முடிவை 11 மணிக்கே எடுத்து இந்த அவைக்கு முடிவைச் சொல்லியிருக்கலாமே. ஆகவே, இது சட்டசபையின் உரிமையைப் பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

DR. H. V. HANDE: Normally when a Cabinet reshuffling takes place or whenever a Cabinet Minister submits his resignation, it will be in order for the Hon. Chief Minister or Leader of the House or Minister to take the House into confidence. I am supporting the same arguments advanced by Thirumathi Anandanayagi. We are asked outside by the public. Nobody knows what is happening here. If the Hon. Leader of the House had given this statement yesterday it would have been different. But even yesterday evening, the papers had published the notification from Raj Bhavan. The outside public have been informed and this House has come to know of it only now. At least hereafter, as a sort of precedent, will this House be taken into confidence and will the Hon. Leader of the House inform the House about the resignation of a Minister or Ministers, why the resignation had come about, etc. Why should the whole thing be shrouded in a mystery? In a sportsman-like spirit, please take the House into confidence first. Even now it is not too late. A statement could be made on why the Minister has resigned. The House may be taken into confidence.

THIRU R. PONNAPPA NADAR: The news has been broadcast on the AIR. I think the Chief Minister is in charge of publicity department. Is it not the duty of the Hon. Chief Minister to at least inform the House first, when it is in session? That is the point I am raising. I once again reiterate that it is incumbent on the Chief Minister to take the House into confidence. As remarked by Thirumathi Anandanayagi it is proper we are informed first before Press and other people know about it.

திரு. நா. வீராசாமி: ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். காலையில் கேள்வி நேரத்திற்கு முன்னால் இந்தப் பிரச்சினை இந்த மன்றத்தில் எழுப்பப்பட்டு அதைப்பற்றி விவாதிக்கப்பட்டு, நம்முடைய சட்ட அமைச்சர் அவர்கள் பதில் அளித்து, துணைச் சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பை அளித்துவிட்டார்கள். மீண்டும் இதைச் சட்டமன்றத்தில் எழுப்புவது முறைதானா?

MR. SPEAKER: This is a different question. Don't con fuse.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் ராஜினாமாச் செய்து, அதை ஆளுநர் அவர்கள் ஏற்றுக் கொண்ட பிறகு புதிய அமைச்சர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இவை எல்லாம் முறைப்படி நடைபெற்றிருக்கின்றன. சட்டத்திற்குப் புறம்பாக நடைபெறவில்லை. இதிலே என்ன முடிவு எடுக்க வேண்டுமென்பதை இந்தச் சபையைக் கலந்து கொண்டு செய்யமாட்டார்கள். ராஜினாமாவை ஒப்புக்கொள்ளவேண்டிய முழுப் பொறுப்பு ஆளுநர் அவர்களைச் சார்ந்தது. ஆளுநர் அறிவித்த பிறகுதான் முதலமைச்சர் மேற்கொண்டு நடவடிக்கை எடுத்திருக்கிறார். ஆளுநர் அதைப்பற்றி அறிவித்த பிறகு புதிய அமைச்சரைப் போட்டிருக்கிறார்கள். இதெல்லாம் நேற்று இரண்டரை மணிக்கு மேல் நடைபெற்றிருக்கிறது. அதற்குப் பிறகு இப்போதுதான் இந்த மன்றம் கூடுகிறது. இதைப்பற்றிய அறிவிப்பைக் கேள்வி நேரத்திற்குப் பிறகுதான் கொடுக்க முடியுமே தவிர, அதற்கு முன்னால் கொடுக்க முடியாது. இரண்டு மணிக்கு எடுத்த முடிவை 11 மணிக்கு எடுத்தால் என்ன என்பதெல்லாம் சரியல்ல. எந்த முடிவை எப்போது எடுக்க வேண்டுமென்பதெல்லாம் பார்த்து சட்ட முறைப்படி செய்யப்பட்டிருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் ராஜினாமாச் செய்ததற்காக காரணங்களைச் சொல்ல வேண்டுமென்று கேட்டார்கள் காரணங்களைச் சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. ராஜினாமாச் செய்த உறுப்பினர் ஒரு ஸ்டேட்மெண்டை விரும்பினால் வைக்கலாம் என்றுதான் சட்டத்திலே இருக்கிறதே தவிர, மற்றப்படி காரணங்களைச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இந்த அறிக்கையை முதலமைச்சர் அல்லவா கொடுக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவையின் முன்னவர் என்ற முறையில் நானே இந்த அறிக்கையை அவையில் வைக்கலாம். இந்தப் பிரச்சினையை இந்த அவையிலே கிளப்ப வேண்டுமென்பதற்காக இதைக் கிளப்பியிருக்கிறார்களே தவிர இதிலே முறை தவறு எதுவும் இல்லையென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.





THIRUMATHI T. N. ANANDANAYAKI : I understand it is left to the Governor to decide. The Raj Bhavan news has come out yesterday evening. You must know that the Assembly is in session. Why should the news come from Raj Bhavan yesterday evening, before the House knew about it?

You just now told us that the reasons need not be told. If you do not say the reasons, people will start talking about all sorts of reasons. When we ask for reasons, why the Government gets touchy about it? I do not think that without proper reasons the Hon. Minister was sent out. You are all responsible Ministers.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I take exception to the words 'that the Minister was sent out'. The Minister has voluntarily resigned of his own accord. The Hon. Member has no right to say that the Minister was sent out from the Cabinet. She can only say that he has resigned. The words 'sent out' cannot be used in this House, if you want to honour any Minister or Member here.

THIRU R. PONNAPPA NADAR : Voluntary resignation.

DR. H. V. HANDE : The point is, whether he was asked to resign or whether he gave any reasons. That is, we want to know whether he gave any reasons for his resignation to the Governor or whether he was persuaded to resign or whether he was forced to resign?

THE HON. THIRU K. ANBAZHAGAN : The hon. Member wants to bring down this sort of motivation behind so many things. The Government will not accept it.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: We were told that even when the Cabinet is formed the resignation letters are also received along with it, so that whenever they want, they can produce resignation letter.

சோவின் நாடகத்தில் ஒரு நிகழ்ச்சி வருகிறது. ரெஸிக்னேஷன் லெட்டர்லை வாங்கி வைத்துக்கொண்டு நீ சரியாக நடக்கவில்லையென்றால் இதை கவர்னர் அவர்களிடம் கொடுத்து விடுவேன் என்று பயமுறுத்துவதுபோல் வருகிறது. அவரது ரெஸிக்னேஷன்

வாலண்டரியா அல்லது ட்ராப் செய்யப்பட்டாரா என்று கேட்க உரிமை இருக்கிறது, கேட்டோம்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ராஜிநாமாக் கடிதத்தை ஆளுநர் அவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார்கள். ஏன் செய்தார், எப்படிச் செய்தார் என்று சொல்வதற்கு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது. அவர் விரும்பினால் ஸ்டேட்மென்ட் கொடுக்கலாம் என்றுதான் இருக்கிறது. ஏன் செய்தார்கள் என்பதற்குக் காரணங்கள் சொல்லவேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை. அவர் விரும்பினால் ஏன் செய்தார் என்பதுபற்றி ஸ்டேட்மென்ட் கொடுப்பதற்கு உரிமை இருக்கிறது. வலுக்கட்டாயமாகச் செய்தோம் என்று சொல்வதற்குக்கூட உரிமை இருக்கிறது அவர்களுக்கு. அதை அவர் செய்யவேண்டும். ராஜிநாமா செய்தி வந்திருக்கிறது. பிறகு அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. முறைப்படி நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கின்றனவே தவிர, சட்டத்தை மீறி எதுவும் நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கணபதி :** திருமதி அனந்தநாயகி அவர்கள், அமைச்சரவையில் நியமிக்கும்போதே அமைச்சர்களிடமிருந்து ராஜிநாமாக் கடிதங்கள் எழுதி வாங்குகிறார்கள் என்று சொன்னார்கள் எந்தத் தகவலின் பேரில் அதை இந்த சபையில் சொன்னார்கள் என்பதைத் தெரிவிக்க முடியுமா ? நாங்கள் கேள்விப்படுவது அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கட்சி மாறி விடுவார்கள் என்ற அச்சத்தோடு காமராஜ் அவர்கள் அவர்களிடமிருந்து ஒரு ராஜிநாமாக் கடிதத்தை வாங்கி வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது எவ்வளவு தூரம் உண்மை என்று அறிய விரும்புகிறேன். (ஆரவாரம்.)

THIRU R. PONNAPPA NADAR : It is absolutely untrue to make such allegations. As the leader of the party I am giving this information. It is absolutely untrue and it is a tissue of falsehood.

THIRU N. GANAPATHI : We, on our part, have denied the information which has been given by the Hon. Member Thirumathi T.N. Anandanayaki here.





**திருமதி த. ந. அனந்தநாயகி :** நீங்கள் சொல்வதற்கு நான் பயப்படவில்லை. ராஜிநாமாக்களை வாங்கி வைத்துக்கொள்வதாக சோ நாடகத்தில் காண்பித்தார்கள். இந்தமாதிரி ராஜிநாமாக் கடிதத்தை வாங்கி வைத்துக்கொண்டு, அந்த மாதிரி ஏதாவது நடக்கிறதா என்றுதான் கேட்டேன்.

**திரு. துரைமுருகன் :** சபையில் இல்லாத 'சோ' வைப்பற்றி பேசலாமா ?

**திரு. என். கணபதி :** திருமதி அனந்தநாயகி அவர்கள் ஒரு வழக்கறிஞர். சாதாரணமாக முன்பு வழங்கப்பட்ட தீர்ப்புகளைச் சொல்லி தங்கள் வழக்கை வாதாடக்கூடியவர்கள். அவர் சோவின் நாடகத்தை உதவிக்கு அழைப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. செ. கந்தப்பன் :** தலைவரவர்களே, நான் மெத்தப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக இந்தப் பிரச்சினை கேள்வி நேரத்திற்கு முன்பும் இப்போதும் இந்த அவையில் சிறிது அதிகமாக விவாதிக்கப்படுவது ஒரு தவறான முன் மாதிரியை ஏற்படுத்திவிடுமென்று நான் அஞ்சுகிறேன். உலகில் ஜனநாயக மரபுள்ள எந்த நாட்டிலும் . . . (மணி அடிக்கப்பட்டது.) இது ஒரு அடிப்படையான பிரச்சினை. நம் நாட்டு அரசியல் அமைப்புச் சட்டத்திலோ அல்லது வேறு எந்த நாட்டின் அரசியல் அமைப்புச் சட்டத்திலோ . . .

MR. SPEAKER : It is not a point of order. Is it not?

THIRU S. KANDAPPAN : I am just formulating the point of order.

MR. SPEAKER : Are you advising me how to conduct the proceedings of the House ?

THIRU S. KANDAPPAN : I am raising a point of order which I consider is very vital to the matter that is being raised presently in the House.

[1972 மார்ச் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ன என்று சொல்லவேண்டும்.

**திரு. செ. கந்தப்பன் :** அமைச்சரவையிலிருந்து ஒருவர் வெளியேறும்போது அவர் ஏன் வெளியேறுகிறார் என்ற காரணத்தை கண்டிப்பாகக் கூறவேண்டுமென்று எந்த அரசியல் சட்டத்திலும், உலகிலுள்ள, ஜனநாயக மரபிலுள்ள எந்த நாட்டு அரசியலமைப்புச் சட்டத்திலும் விதி விதிக்காமல் இருப்பதற்குக் காரணம் முதல் அமைச்சர் அவர்களுக்கு அந்த உரிமை கண்டிப்பாக இருக்கவேண்டும் என்பதால்தான். வெளியேறுகிற அமைச்சர் விரும்பினால் தவிர காரணங்களை வெளிப்படுத்த வேண்டுமென்று எவரும் கட்டாயப்படுத்தக் கூடாது என்பது. அவர் அமைச்சரின் கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவதற்கு அவருக்குத் தரவேண்டிய பாதுகாப்பு என்று ஜனநாயக நாடுகளில் கருதப்படுகிறது. அந்த மரபின் அடிப்படையில் இன்று காலையிலிருந்து திரும்பத் திரும்ப இந்தப் பிரச்சினைபற்றி விவாதிக்கப் படுவது நல்லதல்ல என்பதைத் தான் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(டாகடர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)

**திரு. எம். சுரேந்திரன் :** நான் வெகு நேரமாக எழுந்து நின்று கொண்டிருக்கிறேன். ஒரு அமைச்சரை மாற்றுவது அல்லது வேறு ஒரு அமைச்சரை நியமிப்பது என்பதில் முதல் அமைச்சர் அவர்களுக்கு முழு அதிகாரமும் இருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சபை நடந்துகொண்டிருக்கும்போது மந்திரிசபையின் மீது இங்கிருக்கிற உறுப்பினர்கள் நம்பிக்கை கொள்கிற விதத்தில் நடந்துகொள்ள வேண்டும் என்பது ஒரு மரபாகும். சட்டத்தில் விதிவிலக்கு இருக்கிறதா அல்லது சட்டம் இருக்கிறதா என்பது பிரச்சினை இல்லை. நேற்று சபை நடந்து முடிந்த பிறகு இன்று சட்டசபை இருக்கிறது என்பது நிச்சயமாக தெரிந்திருக்கிற போது . . . .

MR. SPEAKER : Is it a point or order ?



1972 மார்ச் 9]

**திரு. எம். சுரேந்திரன் :** பாயிண்ட் ஆப் ஆர்டர். அப்படித் தெரிந்திருக்கிறபோது இந்த சபைக்கு அறிவிக்கப்பட்ட பின்னர் தான் அறிவித்திருக்கவேண்டும் என்பதுதான் சரியான நிலை. இதுதான் என் பாயின்ட் ஆப் ஆர்டர்.

DR. H. V. HANDE : I am also raising a point of order. My point of order is very clear. The question is whether this House has got the right to discuss the subject or not. My submission is this. The parliamentary practice even in the Lok Sabha is that whenever a Minister has resigned during the Session, the question has been arised and a detailed discussion has taken place. Especially the hon. Member Kandappan was a member of the Lok Sabha and he knows the practice. It is up to the Leader of the House to say that as the hon. Member Thirumathi T. N. Anandanayaki has stated, such a resignation letter, a resignation letter of that type has not been collected. It is up to him to say that such a resignation letter was not at all collected from the Hon. Minister Thiru Anbil Dharmalingam. It is for the Leader of the House to say and not for the hon. Member. It is said that as the House was not in session, it was not announced here. In the Legislative Council also the question was raised yesterday. Even there the answer was not given. There, it was stated that the answer would be given in due course. Here it is stated that the information was not given because the House was not in session. In other words 'Heads I win and tails you lose'. There it has been told that the answer would be given in due course. Here no statement was given because the House was not in session. What is the exact position? I want to know whether it is in order to give such a statement.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இந்த ஒழுங்குப் பிரச்சினை பற்றி ஏற்கனவே விவாதிக்கப்பட்டு பதிலும் சொல்லப் பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் அப்போது வராத காரணத்தினால் இப்போது இதை எழுப்புகிறார்கள்.

ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். அமைச்சரவை சார்பில் அல்லது முதல் அமைச்சர் அவர்கள் சார்பில் அல்லது அரசாங்க சார்பில் எந்தவிதமான கருத்தும் வெளியே தெரிவிக்கப்படவில்லை, அப்படி தெரிவித்ததாக நினைத்துக்கொண்டு

தவறு என்று சொல்வது சரியல்ல. சொல்லவேண்டுமா வேண்டாமா என்பது வேறு பிரச்சினை. இந்த அவையில் சொல்ல வேண்டுமென்ற முறைப்படி இப்போது சொல்லப்பட்டிருக்கிறது. வெளிவந்த செய்தி, அரசியல் சட்டத்தின்கீழ் ஆளுநர் அவர்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டு, ஆளுநர் மூலம் அறிவிக்கப்பட்டது.

அந்த சுதந்திரத்தை நாம் கட்டுப்படுத்தவோ அல்லது செய்தியை வெளியிடக்கூடாது என்று சொல்லவோ நமக்கு உரிமை கிடையாது. முதல் அமைச்சர் அவர்கள் சிபார்சு செய்கிறார்கள். ஆளுநர் அவர்கள் அதை ஒத்துக்கொள்கிறார்கள். ஒத்துக்கொண்டு அவர்கள் உத்தரவு பிறப்பிக்கிறார்கள். அந்த முடிவு வெளியாகி யிருக்கிறது. அமைச்சரவை அதற்கு பொறுப்பில்லை.

82-வது விதியின்கீழ் இப்போது ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கப் பட்டிருக்கிறது. அவையைப் புறக்கணித்தோம் என்று சொல்வது தவறு. அங்கு மேலவையில் இது கொண்டுவரப்படவில்லை. அங்கு அனுமதிக்கப்பட்டிருக்குமானால் பதில் சொல்லப்பட்டிருக்கும். அங்கும் ஸ்டேட்மெண்ட் வைக்கப்பட்டிருக்கும்.

ஆளுநர் அவர்கள் அறிக்கைக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை. 1964-ம் ஆண்டில் இந்தப் பிரச்னை எழுப்பப்பட்டிருக்கிறது. 1970-லும் எழுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் விருப்பப்பட்டால் அறிக்கை விடலாம் என்று இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் அரசாங்க சார்பிலோ அல்லது அமைச்சரவை சார்பிலோ ஒருவர் விலகுவதுபற்றி எந்தவிதமான அறிக்கையும் கொடுக்கவேண்டியதில்லை. நம் பண்பாட்டின் காரணமாக 82-வது விதியின்கீழ் ஸ்டேட்மெண்ட் விடப்பட்டிருக்கிறது. இதில் சட்ட சபையை புறக்கணிப்பது என்பதோ அல்லது அவமதிப்பது என்பதோ துளிக்கூட இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Law Minister has referred to the Constitution. Article 162 of the Constitution says :

" Subject to the provisions of this Constitution, the executive power of a State shall extend to the matters with respect to which the Legislature of the State has power to make laws :





• • •

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * *

• • •

இங்கே எழுப்பப்பட்ட ஒழுங்குப் பிரச்னையில் திரு. ஜேம்ஸ் அவர்கள், முதலமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். முதலமைச்சர் சார்பில் இங்கே அமைச்சர்கள், எந்த அமைச்சர் வேண்டுமானாலும் பேசலாம் முதலமைச்சர் சார்பில் தான் பேசுகிறார்கள் என்று பொருள். அமைச்சரவை என்பதே கூட்டுப்பொறுப்பு உள்ளது தான். அவை முன்னவர் சொன்னாலும், முன்னவர் சொல்லாவிட்டால் பின்னவர் சொன்னாலும் சாதாரணமாக ஒருவர் சொன்னாலும், முதலமைச்சர் குரலை ஒலிக்கிறார் என்பது சட்டமன்றத்தின் விதிமுறையாகும். முதலமைச்சர் கூறவேண்டுமென்பதல்ல. இதிலே ஒழுங்குப் பிரச்னை எதுவும் இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

இரண்டாவதாக, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சராக இருந்த திரு. அ. பெ. தர்மலிங்கம் அவர்களின் ராஜினாமாவை இந்த அவைக்கு ஏன் சொல்லவில்லை என்று கேட்டார்கள். சாதாரணமாக சொல்லலாம். அவைக்கு சொல்லலாம். அது ஒரு சாதாரணமான மரபு தான். ஆனால் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் சொல்லியதிலிருந்து அவைக்குச் சொல்லும்படியான தகவல்கள் தயாராக இல்லை, அந்த நேரத்தில் அவை இல்லை என்பது தான் பொருள். இப்போது வந்திருக்கும் அறிவிப்பு ராஜ்பவனில் இருந்து வந்தது. புதிய மந்திரி நியமனம் பற்றியும், வெளியேறிய மந்திரி ராஜினாமா பற்றியும் அங்கே இருந்து அறிவிப்பு வந்தது. இந்த அவை கூடிய நேரத்தில் அதுபற்றி அறிவிக்கப்படவில்லை என்று சொல்லியிருக் கிறார்கள். ஆகவே, இந்த அவையில் அறிவிக்கப்படவில்லையென்றோ அவைக்குத் தகவல் கொடுக்கவில்லை என்றோ சொல்வது சரியானது அல்ல.

அதேபோல் மாண்புமிகு கந்தப்பன் அவர்கள் சொன்னார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஒரு மந்திரி ராஜினாமா செய்வது என்பது அவருடைய இஷ்டத்தைப் பொறுத்தது. அதேபோல்

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பட்டது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு மந்திரியைப் புதியதாக போடுவது என்பது முதலமைச்சர் அதிகாரத்தைப் பொறுத்தது. அவர்கள் அந்தக் கட்சிக்குப் பொறுப்புடையவர். பார்ட்டி சிஸ்டம் என்பதிலே பொறுப்பான அந்தத் தலைவருக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. மந்திரிகளைக் கூட்டவும் செய்யலாம், அவர்களே வேண்டாம் என்று போய் விட்டால் அவர்கள் ராஜினாமா செய்யலாம். அது அவர்களுக்குள் உள்ள விவகாரம். அவர்கள் அறிவித்த நிலைமையைத்தான் கவனிக்கவேண்டுமே தவிர, அவர்களை நிர்ப்பந்தப்படுத்தி கேட்கவேண்டுமென்பது சட்ட மன்றத்தின் உரிமையில் இல்லை. ராஜினாமா செய்கிற அமைச்சர் விரும்பினால், அவர் அதற்கு வேண்டிய ஸ்டேட்மெண்ட் கொடுக்கலாம் என்று இருக்கிறது. அந்த அமைச்சர் கொடுத்தாலும் கொடுக்கலாம். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே, ஏன் ராஜினாமா செய்தார்கள் என்று கேட்பதோ அல்லது ஏன் சொல்லவில்லை என்று கேட்பதோ, அவையெல்லாம் அமைச்சரவையில் உள்ள விவகாரங்கள். ஆகவே, இவை முதலமைச்சருடைய அதிகாரங்கள் என்ற வகையிலே இங்கே எழுப்பப்பட்டவை ஒழுங்குப் பிரச்னை அல்ல என்று கூறி இதனை இத்தோடு விடுகிறேன்.

### (4) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

**அருப்புக்கோட்டையில் நியாய விலையில் நூல் கிடைக்காததால், கைத்தறி நெசவாளரிடையே வேலையின்மையும், பட்டினிச் சாவும் ஏற்படுவதைத் தடுக்க எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து.**

MR. SPEAKER: Thiru Sowdi S. Sundara Bharathi has given notice of an adjournment motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules to discuss a matter of urgent public importance, viz., "the growing non-employment of handloom weavers at Aruppukottai due to the non-availability of yarn at fair prices and due to sharp rise in prices has rendered them to face a situation of starvation causing agitation in the minds of the people. Thus the necessity to take speedy steps to check the price level and non-employment and to take ameliorative steps to prevent deaths due to starvation".

என்று ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.





திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி: தலைவரவர்களே. தமிழகத்திலே சுமார் 4½ லட்சம் கைத்தறி நெசவாளர்கள் இருக்கிறார்கள் அவர்களிலே குறைந்த அளவு சுமார் 2 லட்சம் பேராவது இப்போது ஏற்பட்டு இருக்கக்கூடிய நூல் விலை ஏற்றத்தின் காரணமாக வேலையில்லாத நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக, அருப்புக்கோட்டையிலும், இராஜபாளையத்திலும், பரமக்குடியிலும் இருப்பவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் அரசுக்கு தெரிவிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறேன். எனக்குத் தெரியும், சடந்த ஒரு மாதத்தில் சுமார் 20 சத விகிதம் 30 சத விகிதம் விலை ஏற்றத்தின் காரணமாக அங்கே யிருக்கும் கைத்தறி நெசவாளர்கள் வேலையில்லாத நிலையில் பாதிக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். வெளியே அதிகமான விலை விற்பதால் சொசைட்டியில் வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இபபடி பல சங்கங்கள் வாயிலாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. இதற்கு முன்பு கைத்தறி நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதற்காக என்ன கஷ்ட நிலை ஏற்பட்டதோ அதே நிலைமை இன்றும் ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் அரசுக்கு தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுடைய நிலை தினமும் நசுங்கிக் கொண்டே இருக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்கு உடனடியாக ஏதாவது செய்ய வேண்டுமென்ற நிலைமையிருக்கிறது. அவர்களுக்கு வேண்டிய நூல் எங்கே வேண்டுமானாலும் கிடைக்கும் நிலையில் இருக்கிறது. ஆனால் அந்த நூலை பிளாக் மார்க்கெட்டில் தான் வாங்கவேண்டியிருக்கிறது. அந்த நூல் ஸ்டாக்கில் இல்லாமல் இந்த நிலை ஏற்படவில்லை. வேண்டிய நூல் ஸ்டாக்கில் இருக்கிறது. அந்த நூல் எங்கேயோ போய் பதுங்கிவிட்டது. அந்த நூலை வெளியே கொண்டு வர ஆலோசித்து, நடவடிக்கை எடுத்து நியாயமான விலையில் நூல் கிடைக்கும் அளவுக்கு நடவடிக்கை எடுத்தால் இந்த பிரச்னையை நிச்சயமாகத் தீர்க்க முடியும். அரசு அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று சொல்வதற்காகத்தான், இது மிகவும் முக்கியமான பிரச்னை—சுமார் 2 லட்சம் கைத்தறி நெசவாளர்களை பாதிக்கக் கூடிய பிரச்னை—என்கிற காரணத்தால்தான், இந்த அவையின் பிற

நடவடிக்கைகளை ஒற்றி வைத்து, இதுபற்றி விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நெசவாளர்கள் பிரச்னையை நாம் அப்போதைக்கப்போது பரிசீலித்து நடவடிக்கை எடுத்து வருகிறோம். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எழுப்பிய பிரச்னை கூட்டுறவுத் துறையில் நெசவாளர்களுக்கும் இந்தப் பிரச்னை இருப்பதாகச் சொன்னார்கள். அது அவ்வளவு சரியாகாது. காரணம், நம்முடைய கூட்டுறவு நூற்பாலை மூலமாக அவ்வப்போது நூல் விலை நிர்ணயிக்கப்பட்டு எவ்வளவு குறைந்த விலையில் நூல் கொடுக்க முடியுமோ கொடுத்து வருகிறோம். ஸ்டேபிள் ஃபைபர் பற்றித்தான் கஷ்டம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த நூலைப் பொறுத்தவரையில் நம்முடைய தமிழ்நாட்டில் இதுவரையில் இல்லாத சூழ்நிலை இருந்தது. நாம் இப்போது அதை மாற்றி கூட்டுறவு நூற்பாலைகளிடத்தில் அதை உற்பத்திச் செய்யச் சொல்லி, அந்த நூலை கூட்டுறவு நெசவாளர்கள் சங்கத்திற்கு கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையில் செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு நெசவாளர்களைப் பற்றி அவ்வளவு கவலைப்பட வேண்டாம் என்று நினைக்கிறேன்.

கூட்டுறவுத் துறையில் இல்லாது தனியார் இடத்தில் இருக்கும் மாஸ்டர் வீவர்களுக்குத்தான் பெரும் கஷ்டம் இருக்கிறது. அந்தப் பிரச்னையை நாம் கவனத்தில் கொண்டு இருக்கிறோம். அதற்காக நம்முடைய அரசாங்கம் நேரடியாகத் தலையிடாவிட்டாலும், தனிப்பட்ட அந்த நூற்பாலை அதிபர்களை அழைத்துப் பேசி வாலின்டரி டிஸ்டிரிபியூஷன் முறையில் குறைந்த விலையில் கொடுப்பதற்கு முயற்சி எடுத்து வருகிறோம். மத்திய அரசாங்கத்திடம் சொல்லி அந்த ஸ்டேபிள் பைபர் டிஸ்டிரிபியூஷனை பொறுத்தவரையில் மாநில அரசாங்கத்தினிடத்தில் ஒப்படைத்து விடவேண்டும், அப்போதுதான் விலையேற்றத்தை கட்டுப்படுத்த முடியும் என்ற கருத்தை மத்திய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லிவருகிறோம். மிக விரைவாக நெசவாளர்களுடைய இந்தப் பிரச்னை தீர்க்கப்படும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இங்கே விலையேற்றத்தை ஏற்படுத்தக்கூடிய நூற்பாலைகள் மீது எப்படிப்பட்ட கட்டு திட்டத்தை கொண்டு





வரலாம் என்பதைப் பற்றியும் மாநில அரசு மத்திய அரசிடத்தில் கலந்து, தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதிலே தயக்கம் காட்டாது என்ற உறுதியை கூறி, இதற்கு மேல் இதைப் பற்றி விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக்கொள்கிறேன்.

**திரு. சௌடி எஸ். சுந்தரபாரதி :** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையைப் பொறுத்த வரையில் இடமில்லை என்று சொன்னார்கள். கூட்டுறவுத் துறையில் தொழிலாளிக்கு எந்தப் பாதுகாப்பு இருக்கிறது ? அருப்புக்கோட்டையைப் பொறுத்த வரையில், கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் அவர்கள் கொடுக்க வேண்டிய உதவியைக் கொடுக்காமல் நிறுத்தி இருக்கின்றன. அதன் காரணமாக, வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகமாகப் பரவி இருக்கின்றது. கூட்டுறவுத் துறையிலிருந்து கிடைப்பதை அருப்புக்கோட்டைக்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்திற்கு அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆக, அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது. இப்பொழுது 1972-73-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கைமீது பொது விவாதம் தொடரும்.

### (5) 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

MR. SPEAKER : Dr. H. V. Hande, How long you will take?

DR. H.V. HANDE : If I do not have interruptions I will take half an hour.

Mr. Speaker, Sir, I would like to express the views on behalf of the Swatantra party on the current Budget.

It is very clear that we are going to totally oppose this Budget for the following reasons :—

The Hon. Chief Minister in his Budget speech was talking that there was practically no taxation at all this year. But my submission is that there has been a heavy dose of taxation already

[Dr. H. V. Hande] *[1972 மார்ச் 9*

introduced in various measures during the last one year. For external appearance it looks as though no heavy dose of taxation is there. But it is my charge that the ruling party has hit upon a novel practice of introducing taxation in between the Budget, that is, the major Budget Session in various doses and then coming out with the statement that there is no taxation. I can quote a number of instances. Various increased measures of taxation are being assiduously and deliberately brought about when the public and the Press are less vigilant. For instance, the electricity tariff has been increased. For instance, let us take sales tax and that has been increased. For instance, let us take agricultural income-tax. I have got statistics here to prove that a 30 standard acre holder who was paying Rs. 108 as agricultural income-tax has to pay nearly Rs. 900 now. In other words, it has increased about 9 times during the last two or three years. Therefore, there is no point in saying that this Budget is without taxation.

Then, take the case of land revenue. They said they had abolished it and I shall very briefly mention certain things. They said they had abolished land revenue below 5 acres of wet lands and on dry lands. I have got statistics to prove that the total land revenue in 1966-67 was Rs. 399 lakhs, that is about 4 crores of rupees. Then again in 1967-68 it was Rs. 4.16 crores. In 1968-69 it was Rs. 4.30 crores. I had worked it out and brought it here. In 1969-70 it was Rs. 4.40 crores. They say they have abolished land revenue by stages. They say that they have abolished land revenue for less than five acres of wet lands. But even after that, the total is on the increase. But actually, it should have come down to half or one-fourth, whereas it has really increased.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** லேண்ட் ரெவின்யூவைப் பொறுத்தவரையில், 5 ஏக்கருக்குக் கீழ் நிலம் வைத்திருப்பவர்களுக்கு அடிப்படை தீர்வை ரத்து என்று சொல்லி இருக்கிறது. புஞ்சைக்குத் தீர்வை இல்லை என்று சொல்லி இருக்கிறோம். இவைகள் நீக்கப்பட்டதாக கணக்கு இருக்கிறது. வரிகள் வேறு இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். பல திட்டங்கள், சில அணைக்கட்டு வேலைகள் செய்திருக்கிறார்கள். அதற்காகத் தண்ணீர்த் தீர்வையை உயர்த்த வேண்டி வந்தது. அதனால் வரியை கூட்டி இருக்கிறோம். வரியை தள்ளிப் போடுகிறோம் என்று சொல்வது தவறு.



*1972 மார்ச் 9]*

**DR. H.V. HANDE:** That exactly proves my point. In other words in the name of water cess, we have collected more. That is one point. Again I have got proof here to show that land revenue has been collected even for lands less than 5 acres. I have actually got the receipts here. I am quite sure that the Hon. Chief Minister will be surprised to see that these lands are less than 5 acres. I have brought a couple of receipts here and I am prepared to give them to the Hon. Minister.

**HON. THIRU P. U. SHANMUGAM:** Basic land revenue has been abolished. That is the point. There is a difference between basic land revenue and water cess and other cesses. Cess will be collected. Basic assessment is not taken into account. That would have been deducted. Please verify and if there is any error we are here to rectify it.

**DR. H. V. HANDE:** It reminds me of a Thennaliraman story —monkey and the horse. Water cess and other things, we have increased. For land bearing Patta No. 136 in Meicheri, North Arcot district—1.7 crores—a kist Rs. 44 has been collected. Similarly, for land bearing Patta No. 189 Rs. 46 has been collected. These are only a few instances I am trying to quote to prove that land revenue has been increased.

Then I have got here a Gazette Notification. It gives clear proof about the amount of tariff for electricity being increased by our Hon. Minister for Electricity during the last one year. Tariff at every stage has been increased ruthlessly and mercilessly even in cases of ordinary *vivasayees*, especially in Coimbatore district. All these go to prove that a lot of revenue has been collected in a different manner. Though not in the Budget, they have announced extra taxation earlier. Everything has been done early. Taxation has already been increased.

There is no point in saying that there is no extra taxation when we are vigilant. I am trying to explode that myth, that argument that there is no taxation in this Budget. All these things have already been done. That is my point.

Then Sir, there is another important point which I would like the Government to take note. The Hon. Revenue Minister and the Hon. Chief Minister will be surprised to know that even during collection of Defence Fund I have got proof to show that circulars have been issued by Tahsildars at various places, like Walaja in North Arcot district. I have got all the records with me.

I am prepared to give them to the Hon. Minister concerned. "Unless you pay Rs. 5 or Rs. 10, unless you pay a percentage for the Defence Fund, we are not going to accept your land revenue at all. We will not allow you to do anything. The records will not be regularised ". That is what they say. There are such printed circulars, *Chuddrarikaigal*. Because of paucity of time, I am not reading them in this House. They are with me right now. They clearly prove what I say. There are some other circulars also. I shall give them later on.

Another very important point which I want the Hon. Chief Minister to take note of, is this. What is the malady of our State? It is a very serious malady for the past several years. Practically for the past four years the entire industrial progress in our State has come to a grinding halt. It is a very, very serious matter. Why is it not reversed? If we do not start industries, if we do not increase the buoyancy of the State, we will get into serious trouble. For the past four or five years nothing serious has been done to step up the buoyancy of the State. That is one of the reasons why we are faced with a very serious unemployment problem which is going to explode. I may tell the House that not only uneducated but educated unemployment is increasing very heavily during the last four or five years. Nothing concrete, nothing worthwhile has been done. Of course they have done something for the slum dwellers. If they do not do even that, then you cannot call it a Government worth the name. But the point is, previous Governments were completely concentrating on developmental activities. Nothing serious or worthwhile mentioning as developmental activities has taken place during the last four or five years. That is the question which I want the Hon. Chief Minister to answer when he replies. That is a very, very valid question.

Then I come to another very important point, a major point with regard to labour. There is complete chaos in the field of labour, whether it is Simpson workers or whether it is something else. There is complete chaos. Chaos is being repeated continuously. What exactly is the positive fact, what exactly is the nucleus of the cause for this malady, we want to know. A small wing, a small section, a small coterie of unruly elements in particular organisations they call themselves ruling party, they call themselves as supporters of the ruling party.



They have been holding the entire trade union activities into complete ransom. Several times I have said on the floor of this House that a small nucleus is out to create trouble. This small group of 150 to 200 people is holding all other people to ransom. I have previously told that the Hon. Chief Minister was unleashing a terrible force and that he had opened the Pandora's box. I repeated that charge during the Governor's address. Now also I repeat it. This small nucleus should be put down. Today also when I met Mr. Khadilkar I have said the same thing. I do not mince matters and I tell what I feel. The activities of this small group, which is out to create mischief, should be put down. They are saying they are pro-DMK. But they are spoiling the name of the DMK. In the interest of the Chief Minister, in the interest of democratic Government (I do not want this Government to be thrown out in any undemocratic manner. I will never be a party to that) I demand that this small group's activities, which are spoiling the name of DMK, should be prevented.

**மாண்புமிகு திரு. என். வி. நடராசன் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் சிம்ப்ஸன் கம்பெனியிலே ஏற்பட்ட கலவரத்தைப்பற்றிக் கூறினார்கள். அப்பேர்ப்பட்ட வன்முறையாளர்கள் மீதும், கலகக்காரர்கள் மீதும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கின்றபோது டாக்டர் ஹாண்டே அவர்களும், மற்றக் கட்சித் தலைவர்களும், தொழிற் சங்கத் தலைவர்களும் அரசுக்கு சாதகமாக இருக்கிறார்களா என்றால் இல்லை. அதற்கு பதிலாக மற்ற கட்சித் தலைவர்களின் போக்கு வன்முறையாளர்களுக்கு ஆதரவு தருவதைப்போல அமைந்து விடுகிறது. இனிமேலாவது, சமூக விரோதிகள் மீதும், வன்முறையாளர்கள் மீதும் அரசு நடவடிக்கை எடுக்க எல்லா அரசியல் கட்சிகளும். தொழிற்சங்கத் தலைவர்களும் துணையாக இருப்பார்களா என்பதைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்களின் கருத்து என்ன என்பதை அறிவிக்க வேண்டுகிறேன்.

Dr. H. V. HANDE : I do not want 6,000 workers to be intimidated by 200 workers. I know this group led by Mr. Prathapchandran. I can narrate the incident that happened in Simpsons, but that will worsen the atmosphere. 6,000 people were assembled in Sembiam gate. Everyone's pocket was searched. But nobody bothered about the 200 strong group waiting outside. That is

[Dr. H. V. Hande] [1972 மார்ச் 9

my charge. They are spoiling the name of the DMK by indulging in these brutal activities. I want this nucleus to be stopped. Their conventional weapon is cycle-chain and pipe. Today, I had received a telegram. When I had gone to meet Mr. Khadilkar, Mr. Ramanujam gave me the telegram. It has come from some machine workers from Coimbatore. What I say is the lawlessness should be put down. An assurance should be given that no worker will be victimised by the management. Take immediate steps to hold immediate election. Mr. Gurumurthy was holding on but he was forced to give up presidentship. A situation like that developed. He gave up presidentship. Now there is inability to hold the union election. A situation has been created and we have reached a point of no return. Some people are saying ' we do not like DMK and they should go. But I want that a democratically elected Government should not be thrown out and I will not be a party to that. What I am pointing out is the unleashing of violence by this small group which should be put an end to. I do hope it will be done and work would be started and Government would do the needful in the matter.

The law and order situation has not been properly tackled. I shall give one or two examples of the present law and order situation. Mr. Kudandai Ramalingam, who opposed the Hon. Chief Minister, was taking coffee in Buhari hotel. Suddenly two or three persons accosted him and beat him. I can bring in Mr. Ramalingam and ask him to narrate before the Hon. Chief Minister what happened. A question was asked of him " How dare you oppose our Dr. Kalaignar? Who are you to contest our Chief Minister ? ". When he said it was his duty to contset, he was beaten. I would have been very happy if the Hon. Chief Minister had gone to hospital and seen the boy Mr. Ramalingam and told him that his Government would give him all protection.

**திரு. துரைமுருகன்** : அன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, குடந்தை இராமலிங்கம் அடிபட்டது, ' நீ எங்கள் முதலமைச்சரை எதிர்த்து நின்றாயாமே ' என்று கூறி அடித்ததாகச் சொன்னார்கள். குடந்தை இராமலிங்கம் அவர்கள் அடிபட்டது மாநிலக் கல்லூரியில் நடைபெற்ற தேர்தலையொட்டியதாகும். அவர் அந்தக் கல்லூரியில் மாணவர் அல்ல. முன்னாள் மாணவர். அவருக்கும் அந்தத் தேர்தலுக்கும் சம்பந்தமில்லை.



1972 மார்ச் 9] [திரு. துரைமுருகன்]

அப்படி இருக்க அவர் அங்கே போகவேண்டிய அவசியமில்லை. இருந்தும் குடந்தை இராமலிங்கம் அங்கு சென்றதால் மாணவர்களுக்குள் தகராறு ஏற்பட்டு, அதன் காரணமாக அவர் அடிபட்டிருக்கிறார். அடித்ததாக கூறப்பட்ட மாணவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆகவே, டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மன்றத்திற்குத் தவறானதொரு தகவலைத் தருகின்றார் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : தலைவரவர்களே, குடந்தை இராமலிங்கம் அவர்கள் மாநிலக் கல்லூரி மாணவர்கள் தேர்தலில் தலையிட்டதால் அடிபட்டார் என்று துரைமுருகன் அவர்கள் கூறுகிறார்கள். அப்படிக் கூறுவது சரியல்ல. குடந்தை இராமலிங்கம் அவர்களை நேரிலே விசாரித்தால்தான் உண்மை தெரியும். உண்மை தெரியாமல் இப்படிக் கூறுவது சரியல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** : தலைவரவர்களே, அவர்கள் குறிப்பிடுகின்ற மாணவரை அடித்ததாக புகார் கூறப்பட்ட மாணவர் உடனடியாக கைது செய்யப்பட்டிருக்கிறார். இதில் எந்தவிதமான கட்சிக் கண்ணோட்டமும் காட்டாமல் காவல்துறையினர் உடனடியாக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். 1971-ஆம் ஆண்டிலே நடைபெற்ற தேர்தலைக் காரணமாகக் கொண்டு 1972-ஆம் ஆண்டிலே குடந்தை இராமலிங்கம் அடிபட்டார் என்று கூறுவது வியப்பாக இருக்கிறது. ஏனென்றால் 1971-ஆம் ஆண்டிலே தேர்தல் நடைபெற்றபோது, ஜனநாயக அடிப்படையில் அவரும் தேர்தலில் போட்டியிடலாம்; யாரை வேண்டுமானாலும் எதிர்த்து நிற்கலாம்; தேர்தல் பணிகளைச் செய்யலாம். அந்த உரிமையும் அவருக்கு உண்டு. ஆனால் அதைக் காரணமாகக் காட்டி, அதையும் இப்போது நடைபெற்ற மாநிலக் கல்லூரி மாணவர் யூனியன் தேர்தலையும் இணைத்துப் பேசுவது பொறுப்புமிக்க உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்களுக்குப் பெருமையாகாது. அடித்தது தவறு. அடிபட்டவர் யாராக இருந்தாலும் அது தவறுதான். அவர் எந்தக் கட்சி மாணவராக இருந்தாலும் அடித்தவர் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்த வகையில் உடனடியாக அடித்த மாணவர் கைது செய்யப்பட்டு, அவர்மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

DR. H. V. HANDE: I am not giving wrong information to the House. Mr. Duraimurugan is a few miles away from Mr. Kudandai Ramalingam. He is an *ex*-ex-student. I am not at all going into the Presidency College question. What I say is when he was taking coffee in Buhari, he was beaten.

He was taking a cup of coffee in Buhari hotel. At that time a couple of persons came and said ' We have been waiting for you for the past one year '. That is what they said. I have such a great regard for our Chief Minister. The Hon. Chief Minister has reminded me of one thing which I missed. ' We have been waiting for you ', that is what they have said. I would have been very happy if the Hon. Chief Minister in a sporting spirit has talked to that boy. He should have gone and talked to that boy. It would have been very nice. I am very sorry that he did not do that.

Then again what happened on the 11th? He was admitted in the hospital on the 11th and he was discharged on the 16th. How is it so soon he was discharged? I have got the x-ray photo. The x-ray photo taken shows a crack in the bone, whereas in the hospital that crack was not notified in the case sheet. Why he was discharged prematurely? I would request the Hon. Chief Minister in a sporting manner to see that these things are checked properly. Then take the case of Law College students. Everywhere we have got violence. There are groups and they are set against each other. One particular group of students is set against another group in Law College. Students go as a group for fear of life. The police interferes if they go as a group. The police say 'you shall not go in groups'. If they go singly, they are attacked. The business of the Opposition is to spotlight all these things.

Then, I come to the beating of the trade union leaders. That should be stopped. You cannot stop the trade union leaders from their legitimate activities. Take for instance Thiru Kuchelar, take for instance Mr. Kannabiran. For the past 25 years I know him when he started his practice in Gudiyatham. He is a very good man. I know him very well. He is such a soft-spoken man. He was beaten. These things should be put an end to. By beating the trade union leaders the Government are not going to get a grip. On the other hand, the Government are making or



forcing the labourers to become more and more harsh and they make the labour force much stronger. The labour force will then retaliate in some way like strike and other things. The discontentment of labour has increased step by step. All these things should be done in a democratic method. It is absolutely necessary to do so.

I have got telegrams. I do not want to read those telegrams. I have not taken the permission of the Speaker to read them. I have got telegrams from different parties. D.M.K. party members are also sending me telegrams. They say that they belong to the D.M.K. party. But the Chief Minister may say that they are not D.M.K. members. It is said that some people were admitted in the hospital. The police has shown inaction. In Rameswaram there was a procession, an all-party procession. That was attacked. Telegrams have come saying they are being beaten mercilessly. The point is, this sort of thing should be put an end to. There are rival groups in the D.M.K. itself—one group of D.M.K. versus another group of D.M.K. The Hon. Chief Minister must consider the whole thing in an objective manner and do something about it.

Then I come to the next point—' *Oozhalgal* '. I do not want to make any blanket statement. I do not like that. I would like to say something with facts and figures. I shall give one or two facts. I would request the Hon. Chief Minister to have the matter examined. There is a Divisional Engineer, Highways, in Vellore. I have received information that contracts have been given by breaking big contracts into small contracts. Normally the practice is, if it is Rs. 5,000 and above, tenders have to be called for. There is a road called Krishnagiri-Ranipet road. Practically two or three lorry loads of ' *manal* ' gravel were spread there. But the entire thing has been split up into small contracts and certain contracts have been given. I shall mention the names of the persons to whom the contracts have been given. I would be very happy if the Hon. Chief Minister gives a report as to exactly what had happened. The charge is, practically work worth Rs.1 00 or Rs. 200 took place there. But the contractors were given Rs. 4,000 and odd. If it is Rs. 5,000 and above, they have to call for tenders. They have lowered it down and the contracts were given split into Rs. 4,000 and odd worth contracts and they

were given. About 6 or 7 contractors were given contracts like that. I can even mention the names. One contractor's name is Palivalam Munuswamy in North Arcot district. Another contractor is from Wallajah. These contractors did not do the full work. They did only a small quantity of work, but they have collected the money. I do not know how these things happened. The Finance Department and every department has to take proper note of these things because it is a very, very serious matter I am bringing before this House. I do not charge the Ministry also for that. These things might have happened without the knowledge of the Minister. But it is the duty of the Opposition Members to spotlight these things. The Chief Minister may please find out who exactly is responsible for these things, what is the highest point at which these things took place and who is exactly responsible. This is well gravel work. Nearly about Rs. 100 or Rs. 200 worth of work took place and they passed the bill. The bill was objected to by the E.O. Panchayat of Melvisaram. Probably his conscience pricked. No work has taken place. But in spite of the objection by the E.O. Panchayat of Melvisaram, overriding that objection, the bill was passed. That is an important point which I want the Government to take note of. Within the last three months Rs. 4 lakhs worth of work has taken place. From the rate at which the works take place, it may take some time—3 or 4 years for that quantity of work to take place. That is the point which I want the Hon. Chief Minister to take note of and collect information. Probably by tomorrow if he can give an answer, it will be nice.

THE HON. THIRU S. J. SADIQ PASHA. May I request the Hon. member to specifically mention the particular work about which he was complaining, so that I may enquire into the matter and give him the proper reply.

DR. H. V. HANDE: I shall mention the names of the contractors—Krishnagiri-Ranipet road. (interruption). I will be very happy if the P.W.D. Minister makes enquiries not only about Krishnagiri-Ranipet road but also other road works. I have got a lot of information. I am also trying to collect proof. If an enquiry is held, I am prepared to come and help the Minister concerned to give some more evidence. I am ready for that.



Then, Sir, I come to another important point in my own constituency. What is happening is this. There is one Sangam called—the House will be suprised to know—*Chennai Narayona Iyer Road Azhugum Porul Vyaparigal Munnetra Sangam.* Everybody knows what the word 'Munnetra' connotes. What right this Sangam has got to collect 50 paise? This Sangam every day collects 50 paise. I have got a small bundle of papers here. I have got a big bundle in my house. Every day 50 paise every shop keeper is paying. This Association leader collects 50 paise per day. The income out of 300 shops would be about Rs. 150. One gentleman Mr. Veerappan do wept and wrote to me. Two baskets were kept. The leader of the organisation kicked the whole thing and all the fruits fell down. He has gone to the police station. He has given me a complaint. I have also forwarded it to the police station. I have written to the Commissioner of Police. Everything has been done, but no action has taken place. I want to stress that this is the method by which collection of money is made. I do not know that is the only one particular instance. The point is, the Government should take note of all these things and find out from the C.I.D.—the Hon. Chief Minister from his own C.I.D. and see to it that such things do not take place.

I definitely do not charge the Chief Minister. He will never do it. But it is his duty to find out whether these things are taking place. People from different parties come to me. Somebody from his own party may cheat me saying that he has come from there. Whoever comes to me, I ask him what he has brought. If nothing can be done, I will say in his own presence that nothing can be done. Otherwise he would go and say 'I have talked to Dr. Hande.' That is what is happening. In other words, it is possible for anybody to cheat, to whichever party he belongs, not necessarily those who belong to the party in power. Therefore, I am only pointing out in what manner the Secretary of this Association is collecting money. That is an important point which I would like the Hon. Chief Minister to attend to. I now come to the most important point and perhaps the last point, viz, State autonomy (Mr. Speaker sounded the gong)

I shall finish quickly. As far as the State Government is concerned and as far as the country is concerned, the Hon. Chief Minister assured us in this House last time during the discussion

[Dr. H. V. Hande] [1972 மார்ச் 9

on the Governor's Address that by State antonomy he did not mean secession; that he would not plead for secession. At that time I told him that he was unlesahing a force and that after some time the cry of secession will raise its ugly head. He said "no. the world understands our stand and only Dr. Hande does not understand." Now what is the position? We went on repeating our position and the Hon. Chief Minister said that whoever preached for secession, then they would go to Court and take action against the concerned. What is the position now? One or two important aspects I will touch.

Previously I talked after the Thanjavur conference wherein posters were exihibited depicting Tamil Nadu as 'Thani Tamilnadu'. But in Rajapalayam, something worse than that had happened. They exhibited the portrait of Mujubir Rehman and Chief Minister. It may be asked what is wrong in exhibiting the portrait of Mujubir Rehman? I agree; there is nothing wrong in exhibiting the portrait. But what is it that happened? That poster has come in 'Alai Osai'. It has become now an international issue. It has gone to New York. The publicity standard of D.M.K. is so great. All countries which opposed us during the recent conflict of Pakistan, including USA want to know what is the position? They want to know whether the D.M.K. wants 'thani atchi or thannatchi'. Of course the Hon. Chief Minister is claver in quibbling words and he is an expert in that and I am no match to him and he can floor me. My point is let us not floor our own people. Even his own party-men are not able to correctly understand him, leave alone myself.

திரு. இராம அரங்கண்ணல். ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். டாக்டர் ஹாண்டே அவருடைய கருத்துக்களைச் சொல்வதில் ஆட்சேபனை இல்லை. அவருக்குப் புரியலாம், புரியாமலும் இருக்கலாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் கலைஞருமான முதலமைச்சர் அவர்களின் கருத்தை, கழகத்தின் தலைவர் சொல்வதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்று காரணம் கற்பித்துப் பேசுவது நல்லது அல்ல.

Dr. H. V. HANDE: I am going to prove it. I shall cite one or two things to prove it.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிஸ்டர் அரங்கண்ணல், புரியவில்லை என்று நீங்களும் சொல்லுகிறீர்களேன். இதற்குப் போய்



1972 மார்ச் 9] [பேரவைத் தலைவர்]

பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்வதா? தலைவர் அவர்கள் சொல்வதே டாக்டர் ஹாண்டே அவர்களுக்குப் புரியவில்லையே, மற்றவர்கள் சொல்வதை அவர்கள் எப்படிப் புரிந்துகொள்ள முடியும் என்று சொல்லலாம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, புரிந்து கொள்ளாமல் பேசுவதைக்கூடத் தவிர்த்துவிடலாம், அல்லது மன்னித்துவிடலாம். புரிந்துகொண்டே தலைவருக்கு மாறாகப் பேசுபவர்கள் அந்தப் பக்கத்தில் நிறைய இருக்கிறார்கள். மாநில சுயாட்சியைப் பற்றி உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சுவாமிநாதன் அவர்கள்கூட வரவேற்று மேலவையில் பேசியிருக்கிறார்கள். நீங்கள் ஒருவேளை புரிந்துகொள்ளாமல் பேசுகிறீர்களா அல்லது புரிந்து கொண்டுதான் இப்படிப் பேசுகிறீர்களா என்று தெரியவில்லை. புரிந்துகொள்ளாமல் பேசுபவர்களைத் திருத்திவிடலாம். புரிந்துகொண்டும் வேறுவிதமாகப் பேசுபவர்கள் திருந்த மாட்டார்கள்.

Dr. H. V. HANDE: I am very glad the Hon. Chief Minister had given me an opportunity to clarify the position. Our Swatantra Party had clearly reviewed the position three days ago on 5th March 1972. Our Executive Committee had clearly stated its stand. I shall read:

> "The State Executive Committee of the Tamilnad Swatantra Party while welcoming any move to acquire more powers to the States deplores any attempt to take shelter under the same to divert the attention of the people, from the State Government's failure to solve the pressing problems such as rising prices, industrial stagnation, growing unemployment, labour unrest, etc."

We have also passed the resolution:—

> 'The Executive Committee calls upon the people of Tamil Nadu to be vigilant and resist the forces of secession in the name of State autonomy. The Tamil Nadu Swatantra Party finds it strange that the State Government is not prepared to share its powers with local bodies while it is crying hoarse about State autonomy."

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாநில சுயாட்சி வேண்டுமென்று சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் திரு. சுவாமிநாதன் பேசியிருக்கிறார்கள். இரண்டு

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 9

நாளாகப் பேசியிருக்கிறார்கள். ஸ்டேட் அடானமியைப்பற்றி என்ன குறிப்பிட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

DR. H. V. HANDE : Our General Council has clarified its stand.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : உங்களுடைய கட்சியைச் சேர்ந்த திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். இன்றைக்கும் ஸ்டேட் அடானமி வேண்டுமென்று சொல்கிறார்கள். எங்கள் கட்சிக்கும் வேண்டுமென்று சொன்ன தலைவருடைய முடிவை எதிர்த்து நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள்.

DR. H. V. HANDE : When one of your Members asked whether it would include 'ranuvapadai' why was he not pulled up. Now this small difference between Mr. Swaminathan and myself is now made an issue. I have corrctly given the stand of our Party Executive. Just like that can you say what is your clear stand on this issue? Does your cry of State autonomy include 'ranuvapadai' also?

MR. SPEAKER : Only one minute.

DR. H. V. HANDE : I have not been allowed to talk continuously. I will finish within five minutes. There is the Chief Minister's view of State autonomy and the view of his assistants who said that it would include 'ranuvapadai'. Even their leader in Lok Sabha had said yesterday that if State autonomy is not given, they will have to voice definitely secession. He has mentioned it clearly. It has come in the papers. I want the Hon. Chief Minister to give a categorical answer. His party leader in Lok Sabha has talked like that. Does the Hon. Chief Minister subscribe to that view? 'Ranuvapadai' means military. By crying "State autonomy, State autonomy", you have unleashed a terrible force. It is creating difficulties. There is difference in the view of Hon. Chief Minister and his assistants. When one of the Members asked whether it would include 'Ranuvapadai' what was the Chief Minister doing? He could have said something in that Rajapalayam meeting when that member asked that question. He could nave said in Tamil like this :
"அந்த நண்பர் தனி ராணுவப் படை கேட்கிறார். கேட்கலாம் நான் அந்த அளவிற்குப் போகவில்லை. அவர் சொன்னதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை."



1972 மார்ச் 9] [Dr. H. V. Hande]

"It is wrong. I do not accept it." The Chief Minister could have said like that, but he has not said so. That is why I say a stage will come when things will go out of control.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் அவர்கள் ஒரு தவறான கருத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். மாநில சுயாட்சி பற்றி என்ன என்ன கேட்கலாம், பல்வேறு நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கக் கிறவர்கள்கூட கேட்கலாம். 'ராணுவம் வைத்துக்கொள்ள வேண்டும்' என்று கேட்கலாமா என்றார்கள். எதை எதைக் கேட்கலாம் என்பதற்கும் நாங்கள் எதைக் கேட்கிறோம் என்பதற்கும் வேறுபாடு இருக்கிறது. நானும் கழகத் தலைவர் அவர்களும் எந்தவிதமான குழப்பத்திற்கும் இடம் அளிக்கக் கூடாது என்று இருக்கிறோம். மாநில சுயாட்சி கேட்பதனால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை இந்தக் கழகம் ஏற்றுக் கொள்ளும். அதற்காக டாக்டர் ஹாண்டே அவர்கள் கவலைப்பட வேண்டாம் (கரவொலி).

மாநில சுயாட்சி என்பது ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு வகையிலே இருக்கும். சோவியத் யூனியனிலே ஒவ்வொரு மாநிலமும் தனித்தனியாக இருக்கின்றன. தனித்தனி உரிமைகள் பெற்றிருக்கின்றன. அதேபோன்று அமெரிக்க நாட்டைப் பொறுத்தவரையிலே தனி மாநிலங்கள் இருக்கின்றன, அவற்றிற் கென்று தனித்தனி உரிமைகள் இருக்கின்றன. ஆகவே உலகத்திலே உள்ள எல்லா மாநிலங்களிலும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் எட்டு உரிமைகள் தான் வேண்டுமென்று எதுவும் கிடையாது. அங்கங்கே வேறு வேறு முறையிலே மாநிலங்கள் தனித்தனி உரிமைகளோடு இயங்கி வருகின்றன. உதாரணத்திற்கு நாம் பல கூறலாம். எனவே அவர்கள் அங்கே பேசியபொழுது நாம் என்ன என்ன கேட்கலாம் என்று எடுத்துச் சொன்னார்கள். பிறகு நாம் அந்த அளவுக்குப் போகவில்லை, தனி நாடு கேட்கவில்லை, தன்னாட்சிதான் கேட்கிறோம் என்றுதான் சொன்னார்கள். ஒன்று அங்கத்தினர் அங்கே வந்து கேட்டிருக்கவேண்டும், எங்களைப் போன்றவர்களையாவது கேட்டுத் தெரிந்திருக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் பேசுவது முறை யாகாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

DR. H. V. HANDE : The Hon. the Leader of the House is now trying to explain what he has done. Actually at that time

[Dr. H. V. Hande] *[1972 மார்ச் 9*

why did not the Hon. the Leader of the House who is also the General Secretary pull up the member and say' we are not for *Ranuva padai.* '

*கேட்கலாம், கேட்டாலும் கேட்கலாம், கேட்காமலும் இருக்கலாம் என்ற நிலைமையை உருவாக்கினால் ....*

THE HON. THIRU K. ANBAZHAGAN : On a point of order, Sir. The hon. Member is trying to put his own words in the mouth of the members of the D.M.K. What is explained here by the Hon. Minister for Education and the General Secretary is this. All these things were mentioned there as demands for State autonomy by different people (DR. H. V. HANDE : Different Members) It is not by different members. Different persons spoke in the Conference explaining the State autonomy. People may demand also such things as it is the case in all the instances of other provincial autonomy cases. But here our party's decision was accepted by all the members and therefore, the hon. Member should not continue his speech on these lines.

DR. H. V. HANDE : The Minister for Public Health has no business to ask me not to speak.

THE HON. THIRU K. ANBAZHAGAN : As a member of this House I have got a right.

DR. H. V. HANDE : The Hon. Minister for Public Health has no right to ask me not to speak like that. I take orders only from the Hon. Speaker and not from anybody else.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I am only addressing the Hon. Speaker.

DR. H. V. HANDE : You can only request the Speaker.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I am only addressing the Speaker.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** *டாக்டர் ஹாண்டே அவர்கள் ஏன் இவ்வளவு கோபித்துக் கொள்கிறீர்கள் ? ஏன் இவ்வளவு ஆத்திரம் ? ஏன் இவ்வளவு திடீரென்று கோபம் வருகிறது ?*

DR. H. V. HANDE : He has been doing like that persistently several times.



*1972 மார்ச் 9]*

***மாண்புமிகு பேரவைத் தலைவர்:*** *உட்காருங்கள். ஏன் இவ்வளவு ஆத்திரம் ? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது, பல கருத்துக்களை மாநில சுயாட்சி உலகத்திலே எப்படியெல்லாம் கேட்கலாம் என்று எடுத்துரைத்தார்கள், அது எங்களுடைய கழகக் கருத்து அல்ல, அதை கரெக்ட் பண்ணிப் பேசுங்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொல்வதற்கு எல்லா உறுப்பினருக்கும் உரிமை இருக்கிறது. நோ பிஸ்னஸ் என்று சொன்னீர்கள். கரெக்ட் பண்ணிக்கொள்ளுங்கள் என்று சொன்னார்கள், அவர் சொல்வதை நீங்கள் கேட்பதும் கேட்காமல் இருப்பதும் தனி விஷயம். ஆனால் கரெக்ட் பண்ணிக் கொள்ளுங்கள் என்று சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது. நீங்களே கூடச் சொல்லவில்லையா, சபாநாயகர் கரெக்ட் பண்ணிக் கொள்ளவேண்டுமென்று. நோ பிஸ்னஸ் என்று சொல்வது மரபுக்குச் சரியானதல்ல. பிஸ்னஸ் என்பது சாதாரணமானது. தமிழிலே கொஞ்சம் அழுத்தமாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆங்கில உணர்விலே நோ பிஸினஸ் என்று சொல்லியிருப்பார்கள். நோ பிஸினஸ் என்று சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைக் கேட்கவில்லை என்பது மாதிரியல்ல.*

DR. H. V. HANDE : I will take only four more minutes and finish my speech.

***மாண்புமிகு பேரவைத் தலைவர் :*** You have taken enough time. *ஒரு வரியிலேயே முடித்து விடுங்கள்.*

DR. H. V HANDE : I want to know from the Hon. Chief Minister whether he is going to subscribe to the opinion of the Leader of the D.M.K. Party in the Lok Sabha. 'Let me ask them not to persist in the idea of separation. Then, if necessary, we may have to revive the separatist idea. That is what the Leader of the Lok Sabha D.M.K. party has said. Whether the Hon. Chief Ministr agrees with him, whether it is the Chief Minister's view, in his reply he can answer.

*திரு. ஜி. ராஜாராம்: தலைவர் அவர்களே, சுதந்திராக் கட்சியின் உறுப்பினருக்கு இந்த மன்றத்திலே அதிகமான சுதந்திரம் அளிக்கப்பட்டு இருப்பதாக நான் அஞ்சுகிறேன். இந்த மன்றத்திலே எத்தனையோ முறைகள் அவர்கள் எதையாவது, புண்படுத்து*

வதுபோல சொல்வதும் அப்படியே விட்டு விடுவதும் வழக்கமாக இருக்கிறது. "I am hearing the zoological sounds" என்றும் ஒருமுறை சபாநாயகர் அவர்களைப் பார்த்து Are you a Minister. Are you defending the government என்று ஒருமுறையும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவற்றையெல்லாம் பின்னாலே திரும்பப் பெற்றுக் கொள்வதும் இல்லை. இப்போது தலைவருக்குப் புரிவது தொண்டருக்கு புரியவில்லை. என்று சொல்லியிருக்கிறார். இப்படி சட்ட மன்றத்திலே சொல்லி விட்டு திரும்பப் பெற்றுக்கொள்ளாதது வழக்கமாக இருக்கிறது. எனவே சுதந்திராக் கட்சி உறுப்பினருக்கு அதிகச் சலுகை அளிக்கப்படுவதாக நான் அஞ்சுகிறேன்.

Dr. H. V. HANDE : On a point of order, Sir. If I had just said that, then automatically a privilege motion would have been raised against me. I think a lot of leniency is given to the hon. Member by not raising a privilege motion against him. Automatically it will be said 'You have cast aspersion on the neutrality of the Speaker'. Once such a privilege motion was raised against me by the previous Speaker. Now actually no privilege motion has been raised against the hon. Member. If I had said the same thing, a privilege motion would have been raised against me. I just want to bring this to the generous attention of the members.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, நான் தங்களை ஒன்று கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்களுக்கு இவ்வளவு கோபம் எதற்கும் வரத் தேவையில்லை. உரத்த குரலிலே பேசுவார்கள், ஆனால் இப்பொழுது மேஜையை அடித்துக்கொண்டு பேசுகிறார்கள். தமிழ்நாடு சட்டமன்றம் மரபுகளைக் காப்பதில் முதன்மையாக இருந்து வருகிறது. இனிமேலாவது அப்படிச் செய்யாமல் இருப்பது இந்த மன்றத்தின் மரபைக் காப்பதற்கு உகந்ததாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சபாநாயகர் அவர்களே, இந்த வரவு செலவுத் திட்டத்தின்மீது ஸ்தாபனக் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் என்ற முறையிலே ஒரு சில கருத்துக்களை அரசாங்கத்திற்கு . . . . (சிரிப்பு) எதற்காகச் சிரிக்க வேண்டும். எனக்குப் புரியவில்லை.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். துணைத் தலைவர் அவர்கள் இப்பொழுது பேசுவார்கள் என்று அழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (சிரிப்பு).

**திருமதி த. ந. அனந்தநாயகி :** இப்பொழுது முதல்வராக இருக்கிறவர் அந்தக் கட்சியின் துணைத் தலைவராகத்தான் முன்னாலே இருந்தார்கள் இங்கே. இப்படி எல்லாம் மரியாதை கொடுப்பதுதான் மரபு. இந்த வரவு-செலவுத் திட்டம் நமக்குப் பலவிதங்களிலே வருத்தத்தை அளிக்கிறது. 2.40 கோடி ரூபாய் உபரியிருந்தும் வரி போட்டிருக்கிறார்கள். துண்டு விழுகிற பட்ஜெட் ஆக இருந்தால்தான் வரி போட்டு துண்டுகளைச் சரிக்கட்டுகிறோம் என்று சொல்வார்கள். ஆனால் நம்முடைய முதல்வர் அவர்கள் உபரி பட்ஜெட் என்று சொல்லி வரிப் போட்டிருக்கிறார்கள், வரி போட மாட்டோம், வரி போட மாட்டோம் என்று சொன்னவர்கள் இப்பொழுது உபரி பட்ஜெட் ஆக இருந்தாலும் வரிப் போடுவோம் என்று வரிப் போட்டிருப்பது முதலிலே கண்டிக்கத்தக்கது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரவு செலவுத் திட்டத்திலே பெரிய வளர்ச்சித் திட்டம் ஏதாவது இருக்கிறதா ?

It is just like a house-wife's account book. சாதாரணமாக வீட்டிலே உள்ள அம்மையாரிடம் வீட்டுச் செலவுக்குப் பணத்தைக் கொடுத்து கணக்கு எழுதிவைக்கச் சொல்வது மாதிரிதான் இருக்கிறது, கணக்கு எழுதிக் கொடுத்திருக்கிறார்களே தவிர தமிழகம் முன்னேறக்கூடிய திட்டங்கள் இருக்கிறதா என்றால் இல்லை, முன்னேற்றத்திற்கான குறிப்பிடத்தக்க அம்சங்கள் இதிலே இல்லை என்பதற்குச் சில குறிப்புகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டரைக் கோடி ரூபாய் உபரி வந்துள்ள பட்ஜெட் இது. எவ்வளவோ எதிர்பார்த்தோம். தமிழகத்திலே உள்ள பென்ஷன்தார்கள் 20 ரூபாய் 30 ரூபாய் பென்ஷனுக்கு ஏங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதை 50 ரூபாய்க்கு உயர்த்துவார்கள் என்று எதிர்பார்த்தோம். பக்கத்திலே அண்டை மாநிலமான கேரளாவிலே நம்மைவிட வரவு குறைவான மாநிலத்திலே 50 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆனால் கருணை மிகுந்த முதல்வர் கருணாநிதி அவர்கள்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 9

அரசாங்கத்தில் பட்டை நாமம்தான் கிடைத்தது. உபரி பட்ஜெட்டிலே வரி விலக்குகள் ஏதாவது கொடுப்பார்கள் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை நகரத்திலே நகர்ப்புறச் சொத்துக்களுக்கு ஒரு கிரவுண்டிற்கு மேல் அர்பன் லேண்ட் டாக்ஸ் போட்டிருக்கிறார்கள். நான் அப்பொழுதே வாதாடினேன். ஒன்றரை கிரவுண்டாவது இருந்தால்தான் அவர்கள் வீடு கட்ட முடியும். ஆகவே சென்னை நகரத்தில் 1½ கிரவுண்ட் வரையில் விலக்கு தர முன்வர வேண்டுமென்று எவ்வளவோ முறை வாதாடிப் பார்த்தேன். ஆனால் அவர்கள் சாமர்த்தியமாகச் சொல்வதைப்போல் என்னுடைய வீடு ஒன்றரை கிரவுண்டில் இருக்கிறது. ஆகவே மாட்டேன் என்று சொன்னார்கள். இப்படி ஒருவருக்காக எத்தனை இலட்சக்கணக்கான மக்கள் கஷ்டப்படுவது என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அதிலிருந்து விதிவிலக்கு கொடுப்பதற்கு கஷ்டம் ஏதுவுமில்லை.

அடுத்தபடியாக, என்.ஜி.ஓ.-க்களுக்கு என்னென்னவோ தரப் போகிறோம் என்று சொன்னார்கள். அதுவும் பெரிய ஏமாற்றமாகப் போய் விட்டது. ஏற்கனவே பே கமிஷன் அறிவித்தபடி 12 சத விகிதமாக வீட்டு வாடகைப் படியை உயர்த்தியிருக்கிறார்களே தவிர, மத்திய சர்க்காரில் தரப்படுகின்ற பஞ்சப்படியையோ, மருத்துவப்படி போன்று இன்னும் பல வசதிகளையோ கொடுத்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை. அவர்களுக்கு நீண்ட நாட்களாக இருந்துவந்த கான்பிடன்ஷியல் ஃபைலை எடுத்து விட்டோம், ஆகவே பண விஷயத்திலே இப்பொழுது எந்தச் சலுகையுமில்லை என்று வேகமாக விரட்டிவிட்டது மாதிரியிருக்கிறது.

அதேமாதிரி இரண்டாவது ஊதியக் கமிஷன் அமைத்தார்களே. அதிலே எத்தனையோ குறைபாடுகள் இருக்கின்றன என்று அடிக்கடி எடுத்துச் சொல்லி வந்தோம். அதற்காக ஒரு அதிகாரியை வைத்திருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் ஒரு வருஷத்திற்குப் பிறகு இப்பொழுது மீண்டும் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் புதிதாகக் கமிஷன் போடப் போகிறோம், அதன் மூலம்தான் 6 மாதத்தில் இதற்குப் பரிகாரம் காண முடியும் என்று கூறி நம்மை ஏமாற்றிவிட்டார்கள்.



1972 மார்ச் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

இப்படி இது உபரி பட்ஜெட்டாக இருக்கிறதே, இதில் நன்மைகள் எங்கேயாவது கிடைத்திருக்கிறதா என்று பார்த்தால் நமக்கு ஏமாற்றம்தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல மக்களின் வசதிகளைப் பெருக்குவதற்கு வழிகள் இருக்கின்றனவா என்று பார்த்தாலும் இல்லை, விலைவாசியைக் கட்டுப்படுத்த வழி காணவில்லை. விலைவாசிகள் விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கின்றன. 1966-ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்டத்தின் மீது நம்முடைய முதல்வரவர்கள் பேசியதைப் படித்துப் பார்த்தேன். அதிலே சொல்லுகின்றார்கள், 162 கோடியை மக்கள் தாங்குவார்களா, இந்த ஒட்டகம் தாங்குமா இந்த உயர்வை என்றெல்லாம் 1966-ல் கேட்டார்கள். 162 கோடியைத் தாங்க முடியாத ஒட்டகம் இன்றைய தினம் 397 கோடியைத் தாங்கிக்கொள்ள முடியாமல் முதுகு முறிந்துகொண்டிருக்கிறது என்பதைக் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எண்ணெய் விலை 3 ரூபாய் 91 காசு கிலோ விலை, சாதாரணமாக மளிகைக் கடைக்குச் சென்றால் குறைந்தது 28 ரூபாய் ஆகிறது. இதைத் தாங்க முடியுமா சாமான்யர்களால் என்று கேட்டார்கள். ஆனால் இன்று என்ன நிலைமை? 3 ரூபாய் 90 காசாக இருந்த எண்ணெய் இன்றைக்கு 5 ரூபாயை எட்டிப் பிடித்திருக்கிறது, கால் கிலோ கறி 1-40-லிருந்து 2 ரூபாய்வரை போகிறது. இப்படியே அரிசி, உப்பு, புளி இவைகளெல்லாம் என்ன விலை என்று கேட்டால் அவர்கள் காதில் விழுவதேயில்லை. கேட்டால் நாங்கள் சாமான்யர்களின் ஆட்சியில் உள்ளவர்கள் என்பார்கள். இந்த சாமான்யர்களின் ஆட்சியில் இந்தச் சாமான்களை வாங்குவதற்குப் படும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இதை எப்படியாவது கட்டுப்படுத்த வேண்டும் என்று . . . .

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** தலைவரவர்களே, நேற்றுக்கூட, உறுப்பினர் திரு. நாச்சியப்பன் அவர்கள் பேசும்பொழுது அவர்கள் தொகுதியிலே ஒன்றரை ரூபாய்க்கு அரிசி கிடைக்கிறது என்று சொன்னார்கள். அம்மையார் அவர்கள் சென்னையிலே கிடைக்கிறதா என்று கேட்டார்கள். நான் அப்பொழுதே சென்னையிலே கிடைக்கிறது என்றேன். இல்லை இல்லை என்று மறுத்தார்கள். நான் எந்தக் கடையிலே அந்த அரிசி விற்கிறது என்று கூறுவதாகச் சொல்லியிருந்தேன். இப்பொழுது

அந்தக் குறிப்புகளைச் சொல்கிறேன், அரிசியைக்கூடக் கொண்டு வந்திருக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அரிசியைக் காட்ட அனுமதி வேண்டாமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தங்கம் ஸ்டோர்ஸ் . . . . .

THIRU K. M. SUBRAMANIAM : Does that shop-keeper know that rice is to be purchased for Minister's house?

THIRU R. PONNAPPA NADAR : I think the permission of the Chair should be obtained for bringing in exhibits?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** நான் கடையைச் சொல்கிறேன், தங்கம் ஸ்டோர், 95, எம். எஸ். கோயில் தெரு, ராயபுரம், சென்னை 13. 1 படி, இரண்டு லிட்டர்கள் 1 ரூபாய் 15 காசு, இது தஞ்சாவூர் கட்ட சம்பா அரிசி. இன்னொன்று 1 ரூபாய் 50 காசு. அதுவும் ஒரு படி இரண்டு லிட்டர்கள். இப்பொழுது தங்கம் ஸ்டோரில் வேண்டிய அளவிற்கு கிடைக்கிறது. இரண்டு மூட்டைகள் வேண்டுமானாலும் வாங்கிக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களே போனாலும் கிடைக்கும். அல்லது அவர்களேகூட சென்றாலும், அந்த நண்பரும் இங்கே இருக்கிறார்கள், அவர்களைத் தங்களுடன் அனுப்புகிறேன். உங்களுடைய பேச்சு முடிந்தபிறகு நேராக அந்தக் கடைக்குச் சென்று அந்த அரிசியை வாங்கிக் கொள்ளுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அம்மையார் அவர்கள் இந்த விபரங்களைக் கொடுத்ததற்கு மிகவும் நன்றி சாபாநயாகரவர்களே. இந்தத் தகவலை அம்மையார் அவர்கள் சொன்னது எனக்கு மட்டுமல்ல, சென்னை நகர மக்கள் அத்தனைபேருக்கும் உதவிகரமாக இருக்கும். ஆனால் அவர்கள் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கும் உணவு அமைச்சர் அவர்களுக்கு இந்த விலைக்கு கிடைக்கிற விஷயம் தெரியாமல் போய்விட்டதே . . . .

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, நான் கூறுவது என்னவென்றால், இப்படிப்பட்ட தவறான செய்திகளைச் சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசக்கூடாது என்பதற்காகத்தான் சென்னையிலே கிடைக்கிறது என்று சொன்னேன். பேசும்பொழுது முழு விவரங்களும் தெரிந்து பேசவேண்டும்.



தெரியவில்லை என்றால் பேசாமல் இருப்பது மிகவும் நல்லது. தவறான தகவல்களை இங்கே பேசுவது முறை அல்ல என்பதற்காகத் தான். நான் இதை நிரூபித்துக் காட்டுகிற முறையில் கூறினேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, அம்மையார் அவர்களுக்குத் தெரிந்திருக்கலாம், எங்களுக்குத் தெரியாமல் இருந்திருக்கும். தெரிந்து அவர்கள் சொன்னால் திருத்திக் கொள்கிறோம். இப்படி 1 ரூபாய் 15 காசுக்கும், 1 ரூபாய் 50 காசுக்கும் அரிசி விற்கப்படும்பொழுது அரசாங்கத்தால் விநியோகிக்கப் படும் அரிசிக்கடைகளில் அப்படி விற்கலாமே, அதுகூட விற்கப்பட வில்லையே என்றுதான் கேட்கிறேன். அப்படியென்றால் பக்கத்திலுள்ள உணவு அமைச்சரவர்களுக்கு அது தெரியவில்லையா ? ஆகவே இனிமேலாவது அரசாங்கம் ஏழை மக்களுக்கு அப்படி விற்க முன்வருவார்கள் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொருள் குறித்து ஃபுட் டிபேட் அன்று பேசலாமே.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தெரியாது, தெரிந்தது என்று அவர்கள் சொன்னார்களே என்பதற்காகத்தான் கூறுகிறேன்.

இன்றைக்கு விலைவாசி உயர்ந்து கொண்டிருப்பதைப் பார்க்கும் பொழுது இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன செய்திருக்கிறது என்று பார்த்தால், ஏதோ நாங்கள் உணவு கார்ப்பொரேஷனை ஆரம்பிக்கப் போகிறோம் என்று சொல்கிறார்களே தவிர சிவில் சப்ளை கார்ப்பொரேஷன் மூலம் என்னென்ன பொருள்களை வாங்கி விநியோகிக்கப் போகிறார்கள், எந்த விலையில் விற்கப் போகிறார்கள் என்பதை பக்கத்திலிருக்கும் உணவு அமைச்சராவது சற்றுக் கவனித்துக் கூற வேண்டும். நல்ல தகவல்களை அவரே கேபினெட்டில் உள்ள மற்றவர்களிடம் கேட்டு அதைப் பயன் படுத்திக் கொண்டு மீண்டும் ஏழைகளுக்கு 1 ரூபாய்க்கு 1 படி அரிசி என்று விநியோகிக்க வேண்டும். இதில் 55 பைசாதான் நஷ்டம் வரப்போகிறது, 397 கோடி ரூபாயிலே இந்த சாமானிய மக்களுக்கு ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசித் திட்டத்தைக் கொண்டு வந்தால் 55 பைசா ஒரு படிக்கு நஷ்டம் வரப்போகிறது என்றால் அது ஒன்றும் பெரிதில்லை. அதை மக்களுக்காக நன்றாகத் தாங்கலாம் என்று மீண்டும் வற்புறுத்தி அதை வாங்கி எங்களுக்கெல்லாம்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 9

விநியோகம் செய்வதற்கு உணவு அமைச்சரவர்கள் வாக்குறுதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நாங்கள் வரி போட மாட்டோம், வரி போட மாட்டோம் என்று சொன்னார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்தில் பார்த்தால் 1963–64-இல் 134 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. பிறகு 1966–67-இல் 194 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறது. சற்றேறக்குறைய நான்காண்டுக்கால காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே உயர்ந்த வரி 60 கோடி ரூபாய். ஆனால் இப்பொழுதுள்ள அரசாங்கம், வசதிகளைப் பெருக்குவதிலே அக்கறைகாட்டும் அரசாங்கத்தின் ரிக்கார்டுகளைப் பார்த்தோமானால் 1966-67-இல் 194 கோடியாக இருந்தது, இன்றைக்கு 397 கோடி ரூபாயை எதிர்பார்க்கிறார்கள். எனவே . . . .

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, வரி உயர்வு என்பது வேறு, வருமானம் என்பது வேறு, இரண்டுக்கும் வேற்றுமை இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆமாம், அமைச்சரவர்கள் எவ்வாறு வருமானத்தைச் சேமிப்பது என்பதை நன்கு தெரிந்தவர்கள். எந்தெந்த வழிகளிலே சம்பாதிப்பது என்பதைத் தெரிந்தவர்கள். வரவு-செலவுத் திட்டம் என்றால் முக்கால் பங்கு அளவிற்கு வரியிலேதான் வரும். நீங்கள் செய்வது நஷ்ட வியாபாரம். எனவே வருமானம் கட்டாயம் வரி மூலம்தான் வர வேண்டியிருக்கும். 203 கோடி ரூபாய் கிட்டத்தட்ட 4 ஆண்டுகளில் வரி உயர்வினால் மக்களின் மூலம் செலுத்தியிருக்கிறார்கள் என்பதைப் புள்ளி விவரங்களோடு நீங்கள் கொடுத்த கணக்கைப் பார்த்தே நாங்கள் சொல்லத் தயாராக இருக்கிறோம்.

இந்த 397 கோடி ரூபாயைப்பற்றி வெகு சாமார்த்தியமாகச் சொல்வார்கள், நாங்கள் போட்டது தாங்கக் கூடியவர்களுக்குத்தானே தவிர, சாமான்ய மக்களின் தலைகளிலே போடுவதில்லை என்று சொல்வார்கள். உங்களுடைய வருமானத்தைச் சற்றுப் பார்த்தால் சேல்ஸ் டாக்ஸ் மூலம் 104 கோடி ரூபாய், கள்ளுக்கடை ஏனைய வழிகள் இப்படியாக 15 கோடி என்பதாக இப்படிக் கிட்டத்தட்ட 397 கோடி என்று ஏழை எளிய சாமான்ய மக்களின் வரிகளைத்தான் உயர்த்தியிருக்கிறார்கள். ஆகவே நாங்கள் வரிகளை



1972 மார்ச் 9] [திருமதி த. ந. அனந்தநாயகி]

உயர்த்தியது ஏதோ தாங்கக்கூடியவர்களின் தலையிலேதானே தவிர மற்றவர்கள் மேலே இல்லை என்று சொல்வது நியாயமல்ல.

அதே சமயத்தில், சிறு சிறு விவசாயிகளுக்கு எவ்வளவோ விதிவிலக்கு கொடுத்திருக்கலாம். வேளாண்மை வருமான வரி ரூ, 3.2 குரோர்ஸ். 5 ஏக்கர்களுக்கு நஞ்சைக்கு வரியை ரத்து செய்துவிட்டோம் என்று சொல்வார்களேயானால் அது எதைக் காட்டுகிறது என்றால் நாங்கள் பேசிக் டாக்சை எடுத்துவிட்டோம், வாட்டர் டாக்ஸ் போட்டோம் என்ற முறையிலே அவ்வளவுதானே தவிர உண்மையிலேயே பயன் ஏதும் உண்டா என்றால் இல்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, டிஃபென்ஸ் ஃபண்ட் கலெக்ஷன். அதை நல்லெண்ணத்திலேதான் முதலமைச்சரவர்கள் இந்திரா காந்தி அம்மையார் அவர்களிடம் எந்த மாகாணமும் கொடுக்காத அளவில் நாங்கள் 10 கோடி ரூபாய் தருகிறோம் என்று தாராளமாக வாக்குறுதி கொடுத்தார்கள். நம்மையும் விடப் பெரிய மாகாணங்களிலேயெல்லாம்கூட இதைவிடக் குறைவாகத்தான் தந்திருக்கிறார்கள். ஆனால் தேசிய பாதுகாப்புத் தொகை கொடுப்பதுபற்றி நாங்கள் யாரும் வேண்டாமென்று சொல்லவில்லை. ஆனால் விரலுக்குத் தகுந்த வீக்கமாக இருக்க வேண்டும். ஏதோவொரு ஆசையிலே, மக்களுக்கு எவ்வளவு தூரம் தொல்லை கொடுக்க முடியுமோ அந்த அளவிற்குத் தொல்லை கொடுக்கும் அளவில் அந்த அளவிற்கு நிகழ்ச்சிகள் நடப்பதாகப் பல தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

இப்போதுகூட மதுரையிலே இருந்து மணி லெண்டர்ஸ் தந்தி அனுப்பி இருக்கிறார்கள். தாசில்தார் வருகிறார், கமர்ஷியல் டாக்ஸ் ஆபீசர் வருகிறார், இப்படி ஒவ்வொருவருக்கும் 100 ரூபாய், 500 ரூபாய், 1,000 ரூபாய் என்று கொடுத்துக் கொண்டிருந்தால் என்ன ஆவது என்று கேட்டிருக்கிறார்கள். கொடுக்க மாட்டேன் என்று அவர்கள் சொன்னால் பல சிக்கல்களில் மாட்டிக் கொள்ளும் நிலை இருக்கிறது என்று பயப்படுகிறார்கள். அரசாங்கச் சிப்பந்திகள் பரிசுச் சீட்டை எடுத்துக்கொண்டு போய் ஒவ்வொருவர் காலிலும் விழுந்து நீங்கள் வாங்கிக் கொள்ளுங்கள், இல்லை என்றால் எங்கள் வேலை போய்விடும் என்ற அளவுக்கு

நிலைமை இருக்கிறது. அரசாங்க சிப்பந்திகள் அவர்கள் என்ன வேலையைச் செய்ய வேண்டுமோ அதையா செய்து கொண்டிருக்கிறார்கள்? ஆசிரியர்களை எடுத்துக்கொண்டால் அவர்கள் இன்றைக்குப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கவா முடிகிறது? அறுவை சிகிச்சைக்கு ஆள் தேடவும், சிறு சேமிப்புக்கு டிக்கட் விற்கவும், டிஃபன்ஸ் பண்ட் கலெக்ஷன் செய்யவுந்தான் நேரம் சரியாக இருக்கிறது. இந்த நிலை எந்த அளவுக்கு சமுதாயத்தைப் பாதிக்கும் என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும். அரசாங்க சிப்பந்திகள், ஆசிரியர்கள் எல்லாம் பயந்துகொண்டே வேலை செய்யக்கூடிய நிலை இருப்பது நல்லதல்ல, அது ஜனநாயகத்திற்கு கூட உகந்தது அல்ல.

அடுத்து, சேலம் உருக்காலை வந்துவிடும், வந்துவிடும் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். மத்திய உருக்கு அமைச்சர் திரு. மோகன் குமாரமங்கலம் இங்கு வந்து சொல்லுகிறார்— '1970-லேயே லட்சக் கணக்கான ரூபாயை நில ஆர்ஜிதம் செய்வதற்காக இந்த அரசிடம் கொடுத்து விட்டோம். நிலம் ஆர்ஜிதம் செய்வதில் அவர்களால்தான் தாமதமே தவிர, எங்களால் அல்ல' என்று கூறுகிறார். யார் சொல்லுவது சரி, என்ன என்பதெல்லாம் நமக்கு ஒன்றும் புரியவில்லை. இவர்கள் அவர்களைச் சொல்லுகிறார்கள், அவர்கள் இவர்களைச் சொல்லுகிறார்கள், இதிலே உண்மை நிலை என்ன என்பதை முதலமைச்சர் அவர்கள் திட்டவட்டமாகக் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து காவேரிப் பிரச்சினை என்னவாயிற்று? சுப்ரீம் கோர்ட்டிலும் விட்டுவிட்டோம். மைசூர் அரசோ அணையைக் கட்டிக் கொண்டிருக்கிறது. அங்கு மத்திய அமைச்சர் பச்சைக் கொடி காட்டினார் என்று சொல்லுகிறார்கள். அந்த அமைச்சரோ இல்லை, இல்லை என்று சொல்லுகிறார். ஆனால் அவர்கள் அணைக் கட்டைக் கட்டிவிட்டார்கள். இனிமேல் நமக்குத் தண்ணீர் வருமா என்பது பிரச்சினையாக இருக்கிறது. இந்த நிலையில் வீராணம் திட்டத்திற்குப் பலகோடி ரூபாய் செலவழித்து அதன் தலைவிதி என்ன ஆகுமோ என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதைப் பற்றி ஒரு வார்த்தைகூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லை. காவேரிப் பிரச்சினையை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்பதைப் பற்றி வரவு-செலவுத் திட்டத்தில்





ஒன்றையும் காணோம். இன்று காவிரியுடன் கிருஷ்ணாவை இணைப்போம், கோதாவரியை இணைப்போம் என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கே இதைப் பற்றிச் சொன்னோம். அன்றே சோமசிலா பிராஜக்டைப் பற்றி முடிவுக்கு வந்திருந்தால் சிறப்பாக இருந்திருக்கும்.

(The Deputy Speaker sounded the gong)

I have not yet come to 'taxes'.

அடுத்தபடியாக, சர்சார்ஜ் ஆன் மோட்டார் வெகிகிள் என்று கூறியிருக்கிறார்கள். பஸ், லாரி, தனி நபர்கள் வைத்திருக்கின்ற கார்கள் இவற்றுக்கெல்லாம் ஏற்கனவே வரி போட்டிருக்கிறோம். இந்த வரியை எடுத்துக்கொண்டால் லாரிக்கு ஆந்திரப் பிரதேசத்தில் குவார்ட்டர்லி டாக்ஸ் 860 ரூபாய்தான். ஆனால் தமிழ்நாட்டில் 1,120 ரூபாய். இந்த நிலையில் தமிழகத்தில் எப்படி இந்தத் தொழில் பிழைக்க முடியும்? நாம் போடுகின்ற வரியின் காரணமாக தமிழகத்தின் தொழிலை வேறு மாநிலத்திற்கு எடுத்துச் செல்லுகின்ற நிலைமை ஏற்படுத்தக் கூடாது. ரொம்ப நாட்களாக இவர்களுக்கு மோட்டார் மேல் கோபம். வரி, வரி என்று வரியைப் போட்டுக்கொண்டே இருக்கிறார்கள். உபரி பட்ஜெட் போட்டிருக்கக்கூடிய நிலையில் இந்த சர்சார்ஜ் அவசியந்தானா? ஏற்கனவே போட்ட வரியை மிகச் சிரமப்பட்டு சமாளித்து வரக்கூடிய நிலையில் மேலும் வரியை உயர்த்துவது நியாயந்தானா என்பது பற்றி முதலமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

குதிரைப் பந்தயத்தின் மீது வரி நல்ல ஒரு காரியத்திற்காகப் போடப்பட்டிருக்கிறது. இட் இஸ் நாட் எ டாக்ஸ், இட் இஸ் எ லெவி. பிச்சைக்காரர் மறு வாழ்வு நிதிக்காக அதை ஒதுக்கியிருப்பது வரவேற்கத்தக்கது. கனம் முதலமைச்சர் அவர்கள் பிச்சைக்காரர் மறுவாழ்வில் அக்கறை காட்டுவதை வரவேற்கிறேன். நீங்கள் இப்போது ஆயிரம் பேருக்குத்தான் இருப்பதற்கு இடம் கட்டியிருக்கிறீர்கள். மீதி பேருக்கும் இடம் கொடுக்க துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி இருந்தாலும்கூட இந்தக் குதிரைப் பந்தயத்தின் மீதான வரி புக்கீஸ் மேல் போடப்பட்டிருக்கிறதே தவிர, டோட்டலைசர் என்ற முறையில் போடப்படவில்லை. வரியை உயர்த்தி விட்டால் மட்டும் போதாது, அதில் திருட்டுத்தனம் இல்லாமல் இருக்கிறதா என்று கண்காணிக்க

வேண்டும். ஆனால் வரியை உயர்த்தியதன் காரணமாக ப்ளூ பெட்டிங் அதிகமாகி இருக்கிறது. திருட்டுத்தனமாக வரி ஏய்ப்பு அதிகமாகி இருக்கிறது. அதிகமாக வரியைப் போடுவதற்குப் பதிலாக இருக்கின்ற வரியை சரியாக வசூலிக்க முயற்சித்தாலே அதிக வருவாய் வரும். புக்கீஸ் மேல் வரி போடாமல் நேரடியாக டோட்டலைசர் என்ற முறையில் போட்டால் 100, 1,000 ரூபாய் என்று டிக்கட் வாங்குபவர்கள் அதைக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படும்.

கடைசியாக, நிலச் சீர்திருத்தத்தைப் பற்றி முற்போக்கான கருத்தைக் கொண்டிருப்பதாகக் கூறினார்கள். அடிக்கடி வெளியே முதலமைச்சர் அவர்கள் எங்கள் பெருந் தலைவரைக் குற்றஞ் சாட்டிப் பேசக்கூடிய முறையில் வாண்டையாரைக் காப்பாற்ற, மூப்பனாரைக் காப்பாற்ற நிலச் சீர்திருத்தச் சட்டத்தை வழி செய்ததாகக் கூறிக்கொண்டிருக்கிறார். நீங்கள் 1970-ல் நிலச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்துவிட்டோம் என்று சொல்லுகிறீர்கள். 26—2—1970 கமென்ஸ்மென்ட் ஆப் தி ஆக்ட்; 23—6—1970 பிரசிடென்ட்ஸ் அஸ்ஸெந்ட்; 23—6—1970 ஸ்டேட் கெஜட் பப்ளிகேஷன்; அமலுக்குக் கொண்டு வந்தது 2-10-1970. 23-6-1970-ல் இருந்து அமலுக்குக் கொண்டு வந்தது வரையில் உள்ள இடைவெளி கிட்டத்தட்ட நான்கு மாதங்கள். இந்த இடைவெளியில் திருவாரூர் வடபாதிமங்கலம் எப்படி தன்னுடைய நிலத்தை மாற்றிக்கொண்டார்? அமைச்சர் ஆதித்தனார் எப்படி மாற்றிக்கொண்டார்?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:** அம்மையார் ஏதாவது குற்றம் சாட்டுவதாக இருந்தால் பத்திரிகை மூலமாகக் குற்றம் சாட்டினால் வழக்குத் தொடரத் தயாராக இருக்கிறேன். அலை ஓசை என்ற பத்திரிகை மீது, அவதூறாக எழுதியதற்காக வழக்குத் தொடர்ந்திருக்கிறேன். அம்மையார் மீதும் வழக்குத் தொடர முடியும். வாண்டையார் அவர்களோ மற்றவர்களோ தங்களுக்கு இருந்த நிலங்களை எழுதி வைத்ததுபோல் அப்படி எனக்கு இருந்த நிலங்கள் எதையும் நான் டிரஸ்டுக்கு எழுதி வைக்கவில்லை. அப்படி தவறாகச் சொல்லுவதை வெளியில் சொல்லி பத்திரிகையில் வெளியிடுங்கள். அலை ஓசை உங்கள் பத்திரிகை. நவசக்தியும் இருக்கிறது. அப்போது எது உண்மை, பொய் என்பது நீதிமன்றத்தில்





தீர்ப்பாகும். ஏற்கனவே நாத்திகம் பத்திரிகை மீது வழக்குத் தொடர்ந்து ஆறு மாதம் அந்த ஆசிரியர் தண்டனை பெற்றிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் மீது வழக்குத் தொடர்ந்து அவர் மன்னிப்புக் கேட்டுக்கொண்டதால் அந்த வழக்கு மேற்கொண்டு தொடரப்படாமல் இருக்கிறது. அதேபோன்று அம்மையார் அவர்களும் வெளியிலே பேச வேண்டும்; இங்கே பேச்சுரிமை இருக்கிறது, அதை வீணாகப் பயன்படுத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் திரு. மு. கருணாநிதி:** வடபாதி மங்கலம் தியாகராஜ முதலியாரை விட்டு விட்டோம் என்று சொன்னார்கள். நான் வெளியில் சொன்னதில் இரண்டு, மூன்று பெயர்கள் மட்டுந்தான் இருக்கிறது. மற்றபடி பத்திரிகையில் சொன்னது முழுவதும் இடம் பெறவில்லை. 1960-61-ம் ஆண்டில் நீங்கள் உச்சவரம்புச் சட்டம் கொண்டுவந்தபோது யார் யாருக்கு விதிவிலக்கு என்று வகுக்கப்பட்டதிலே கரும்புத் தோட்டத்திற்கு விதிவிலக்கு என்று சொல்லப்பட்டது. அப்போது ஆவடி மாநாட்டைச் சிறப்புற நடத்திய வி. எஸ். தியாகராஜ முதலியாருடைய ஏழாயிரம் ஏக்கர் நிலம் கரும்புத் தோட்டம் என்ற பெயரிலே விதிவிலக்குப் பெற்றது. நாங்கள் உச்ச வரம்பு சட்டம் கொண்டு வந்து அந்த 7,000 ஏக்கரையும் அரசாங்கமே எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நிலச் சீர்திருத்தத்திலே எல்லாக் கட்சிகளும் முற்போக்கான கொள்கை உடையன என்பதை ஏற்றுக் கொள்கிறேன். ஆனால் ஒரு குடும்பத்திற்கு 40 ஏக்கருக்கு மேல் இருக்கக்கூடாது என்றால் பினாமியாக விற்கப்பட்ட விவரங்களைப் பார்க்க வேண்டும். குடும்பத்திற்குள்ளே விற்றுக் கொள்ள முடியாது. மற்றவர்களுக்கு விற்கின்ற நிலையிலே பினாமியாக இருக்கிறது என்பதற்கு ஆதாரம் இருக்கிறது. பினாமி அல்ல என்பதற்கு ஆதாரம் காட்ட வேண்டுமென்ற நிலை ஏற்படவேண்டும்.

மிச்சம் இருப்பதை தங்கள் கட்சிக்காரர்கள், உறவினர்கள் இவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதை விட மூன்றாம் நபர்களுக்கு விற்று விடுகிறார்கள். Benami means querionable Source of money பினாமி என்றால் அதைப்பற்றி ஆராய்ந்து யாரிடமிருந்து

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 9

பணம் வந்தது, எந்த சோர்ஸிலிருந்து வந்தது என்று கண்டு பிடித்துச் செய்ய வேண்டும். முப்பது ஏக்கர் என்று உச்சவரம்பு கொண்டு வந்தபோது 23,000 ஏக்கர்கள்தான் மிச்சம் கிடைத்தது என்று சொன்னார்கள். இப்போது அதைப் பதினைந்து ஏக்கர்களாக குறைத்திருக்கிறீர்களே இப்போது உங்களுக்கு எவ்வளவு மிச்சம் கிடைத்தது என்று கணக்குப் போட்டுப் பாருங்கள். உச்சவரம்பு என்பது ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் ஒரு தனி மனிதனின் கையில் சிக்கக்கூடாது என்பதுதான் அதனுடைய நோக்கம். அதை விட்டுவிட்டு அது இது என்று சொல்வதில் பிரயோஜனம் இல்லை. இன்றைக்கும் 13 விதிவிலக்குகள் இருக்கின்றன. அவற்றைத் துரிதமாக எடுத்துவிடுங்கள்.

Fuel trees grown on land prior to 1st June 1959.
இன்னும் அதற்கு எக்ஸெம்ஷன்ஸ் உள்ளது. சவுக்குக் காடு வைத்திருப்பவர்கள் கொடுத்துவிட்டுப் போகட்டுமே. கரும்பு நிலங்களை எடுப்பதைப் பாராட்டுகிறேன். விதிவிலக்குகள் எடுக்கப்படுவதை வரவேற்கிறோம். ஆனால் நாங்கள் ஏதோ செய்யாதது மாதிரியும் நாங்கள் ஏதோ ரொம்பவும் பிற்பட்ட சக்தி மாதிரியாகவும், இவர்கள்தான் ஏதோ நிலச் சீர்திருத்தத்திற்கு கர்த்தாக்கள் மாதிரியும் பேசுவதுதான் வருந்தத்தக்கது.

அடுத்தபடியாக, தமிழகத்தில் பல துறைகளிலும் அமைதி குன்றியிருக்கிறது. தொழிலாளர்கள் அமைதிக் குறைவு, மாணவர்கள் மத்தியில் அமைதிக் குறைவு என்று இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் அந்தப் பையனை, குடந்தை ராமலிங்கத்தை அடித்த பையனை, கைது செய்திருக்கிறோம் என்று கூறினார்கள். பாராட்டுகிறேன். உங்களையும் மீறி உங்கள் கட்சிக்காரர்கள் தவறு செய்யக்கூடிய நிகழ்ச்சிகளை கண்டிக்க வேண்டும். ஏன் ஒரு ஆண்டு கழிந்து அடித்திருக்கிறார்கள். இப்போது வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. முதல் அமைச்சர் அவர்களின் தேர்தல் வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. உங்கள் கட்சி மாணவர்களுக்கு உங்களிடம் அக்கறையிருக்குமானால் இந்தச் சூழ்நிலையில் இதைச் செய்யலாமா? உங்களையும் மீறி உங்கள் கட்சிக்காரர்கள் சில செயல்களைச் செய்து வருகிறார்கள். அதில் அக்கறை காட்டுங்கள். யாரிடமும் பாரபட்சம் காட்ட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 9]

**திரு. துரைமுருகன்:** குடந்தை இராமலிங்கத்தை அடித்ததற்கும் கட்சிக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்று திரும்பத் திரும்பக் கூறுகிறேன். மாணவர்கள் தேர்தலில் மூன்றாவது ஆளாகப் போயிருக்கிறார். உள்ளே நுழைந்தபோது, கைகலப்பு ஏற்பட்டபோது குடந்தை ராமலிங்கத்திற்கு அடி விழுந்தது, கட்சியின் அடிப்படையில் விழுந்தது அல்ல என்று மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** மீண்டும் மீண்டும் நானும் வலியுறுத்திக் கூறுகிறேன், கட்சி மாச்சரியத்தின் காரணமாகத்தான் நடந்திருக்கிறது, அதில் கொஞ்சம்கூட சந்தேகமில்லை.

**திரு. துரைமுருகன்:** இந்தச் சவாலை நான் ஏற்றுக் கொள்கிறேன். கட்சி அடிப்படையில் குடந்தை இராமலிங்கத்திற்கு அடி விழுந்தது என்பதை அவர்கள் நிரூபிப்பார்களா? இந்தச் சவாலை அவர்கள் ஏற்கத் தயாரா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏற்றுக் கொள்கிறேன். குடந்தை இராமலிங்கத்தைக் கொண்டு வந்தே நிரூபிக்கத் தயாராயிருக்கிறோம். நானும் அதை ஏற்றுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இரண்டு பேரும் சேர்ந்து சவாலுக்குச் சவால் படத்திற்கு வசனம் எழுதுங்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதேபோன்று சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் நடந்தது. மாணவர்கள் கவுன்சில் வருடாந்திரக் கூட்டத்தை நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சில்தானே கொண்டாட முடியும். கொண்டாடாதே என்று அடிதடி. ஆக, எங்கு பார்த்தாலும் வன்முறைச் செயல்கள். வன்முறையைத் தூண்டிவிட்டு அமைதிக் குறைவை ஏற்படுத்தினால் இம்மாநிலம் மேற்கு வங்கமாகிவிடும் என்ற பயத்தால் சொல்கிறேன். தொழில் பிரச்சினையிலும் நாம் அமைதிக் குறைவைப் பார்க்கிறோம். தொழிலாளர்கள் வேலை நிறுத்தம், ஆசிரியர்கள் வேலை நிறுத்தம், ரொட்டித் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம், பால்பண்ணையில் அவதி. நாய் பிடிக்கிறவன் கூட பிடிக்க மாட்டேன், அதிகமாகக் கொடுத்தால்தான் பிடிப்பேன் என்று சொல்கிறார்கள். Even mad dogs catchers, they go on strike இது எதைக் காட்டுகிறது? இந்த நோய் எதனால் வந்தது

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 9

என்று அதன் காரணங்களைக் கண்டு பிடித்து அதைப் போக்க வேண்டும். யார் குற்றம் செய்தாலும் சரி கண்டிப்பான முறையில், கட்சிப் பாகுபாடு இல்லாமல், பாரபட்சமில்லாமல், அடக்கத் தயாராகயிருந்தால்தான் தொழில் அமைதி ஏற்படும். நானும் சிம்சன் அறுவர் குழுவில் இருந்துபார்த்தேன், கோரிக்கைகளைவிட வன்முறைச் செயல்கள் தான் அதிகமாக இருப்பதை பார்க்கிறேன். தமிழகத்தில் Industrial Fabric will be completely torn by these elements என்பதை தான் சொல்ல ஆசைப்படுகிறேன். மேற்குவங்கத்தில் தொழில் அமைதி கெட்டுப்போய் தொழில்கள் வேறு இடங்களுக்குப் பறந்து போய்க் கொண்டிருக்கிற அதேநிலை தமிழ் நாட்டில் வந்து கொண்டிருக்கிறது. ஏற்கனவே நாம் இங்கு வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே வன்முறைச் செயல்கள் நடக்காத முறையில் பார்த்துக்கொண்டால் தான் தொழில் அமைதி ஏற்படும். ஆளும் கட்சியினர் தொழிற் சங்கங்களில் ஈடுபடவேண்டுமென்ற ஆசையினால் இதைக் தூண்டி விடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. எப்போதும் ஆளும்கட்சி தொழிற்சங்கத்தில் ஈடுபடக்கூடாது. அது ஆபத்தானது. ஆளும் கட்சியிடமே தொழிற்சங்கத் தலைமை இருந்தால் அமைதி ஏற்பட வாய்ப்பில்லை. தானே எஜமானர், தானே கேட்கக்கூடியவர் என்றிருந்தால் எப்படிப் பிரச்னையைத் தீர்க்கமுடியும்? தொழில் அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்றால் பிரச்னைகளை ஒத்திப் போட்டுக்கொண்டு செல்வது சரியல்ல.

இரண்டு மாதங்கள் பொறு, நான்கு மாதங்கள் கழித்து வா, ஆறு மாதங்கள் பொறு என்று இப்படியாகப் பிரச்சினைகளை தள்ளிப் போடுவது நல்லதல்ல, சரியல்ல.
By postponing the problem you will not solve it.
ஆகவே நீங்கள் பிரச்னைகத் தள்ளிப் போடாதீர்கள். பிரச்சினைகளை விரைவில் தீர்க்கத் தயாராகுங்கள்.

(மணியடிக்கப்பட்டு திரு. கணபதி அழைக்கப்பட்டார்)

**திரு. டி. கணபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை பொன்னேடென வாழ்த்தி வரவேற்றுப் பேசுகிறேன்.

இந்த அறிக்கையின் 45-வது பாராவில், மாநில சுயாட்சி என்பது அதிகார உரிமைகளை மாநிலங்கள் பெறுவது என்பது



1972 மார்ச் 9] [திரு. டி. கணபதி]

மட்டுமல்ல. தங்குதடையின்றி வளமிகு திட்டங்களை மாநிலங்களில் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி வாயில்களை மத்திய அரசிடமிருந்து பெற்றிட வேண்டுமென்பதும் இன்றியமையாத ஒன்றாகும். எடுத்துக்காட்டாக வருமான வரியில் பங்கு, உபரி வரிப் பங்கு, தேசியப் பாங்குகளில் மாநில அரசுக்கு நிர்வாகப் பொறுப்பு இத்யாதி என முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் நாட்டிலுள்ள நல்லவர்கள் ஆராயும்படி தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்று சொல்வது பிரிவினை வாதம் அல்ல என்றார்கள். அரசியல் மாச்சரியங்கள் காரணமாக காங்கிரஸ்காரர்கள் ஏதேதோ சொல்லி முட்டுக்கட்டை போட்டு வருகிறார்கள். சாலைகளில் குழாய் போடவும், கோயிலில் ஒரு சிலை வைப்பதற்கும் நாம் மத்திய அரசை எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே தான் அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கப்படுகிறது.

டாக்டர் கலைஞரின் ஆட்சி காலத்தில் மாநில சுயாட்சி கொடுத்து விட்டால் இப்போது பத்து பதினொன்கு பேர்கள் இருப்பவர்கள்கூட வராமலிருக்கும்படி எங்கே தமிழ் நாட்டு மக்கள் செய்து விடுவார்களோ என்ற பயத்தால்தான் அதை எதிர்க்கிறார்கள். ஒன்று என் நினைவிற்கு வருகிறது. ஏகபிரான் தன்னோடு வலது புறத்திலும் இடது புறத்திலும் சிலுவையில் அறையுண்டவர்களுக்காக பிதாவே இவர்களை மன்னியும், இவர்கள் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் செய்கிறார்கள் என சொல்வது தவிர வேறில்லை.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** சைத்தான் வேதம் ஓதுவது போல் பைபிளில் இருக்கிற வார்த்தைகளை அவர்கள் இங்கு சொல்கிறார்கள்.

**திரு. டி. கணபதி :** விவாதத்தை துவக்கி வைத்துப் பேசிய மதிப்பிற்குரிய சுவாமிதாஸ் அவர்கள் சுயாட்சி பற்றி நையாண்டி பேசி குமரி மாவட்டத்திற்கும் சுயாட்சி கேட்க தோன்றுகிறது என்று சொன்னார்கள். மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சு போடுவதுபோல் இருக்கிறது அது. மறைந்த மாமேதை திரு. நேசமணி அவர்கள் இருந்திருந்தால் இதைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டார்கள். மாநிலச் சுயாட்சிக்கு தானே தலைமை தாங்கி நடத்த அல்லது தொண்டன் என்ற முறையில்

[திரு. டி. கணபதி] [1972 மார்ச் 9

முன்னின்று போராடுவார்கள். ஏனெனில் கேரளாவில் போராடி அந்தப் பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு சேரவேண்டும் என்று போராடியது அந்தப் போராட்டத்தை காமராஜ் அவர்கள் நையாண்டி செய்தார்கள். அப்போது கழகம்தான் அவர்களுக்கு கை கொடுத்தது என்பதை மறந்துதான் இப்படி பேசுகிறார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அப்போது தாங்கள் கழகத்தில் இருந்தீர்களா அல்லது காமராஜரோடு இருந்தீர்களா என்பதை விளக்குவீர்களா ?

**திரு. டி. கணபதி :** தக்க சமயத்தில் முன்னேற்றக் கொள்கைகள் கொண்டுள்ள கட்சியோடு பணியாற்ற வந்திருக்கிறேன். அதை அவர்களும் செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாக அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தாய் தமிழகத்தோடு குமரி மாவட்டம் இணையும்போது என்னென்ன குறைபாடுகள் இருந்தன. இப்போது நிலைமை என்ன என்பதைச் சிந்திக்காமல் பேசுகிறார்கள். குமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறதா, எந்த விதத்தில் இந்த அரசு வந்தபின் குமரி மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. எந்த அலுவலகத்திற்கு நீங்கள் போனாலும் குமரி மாவட்டத்தைச் சேர்ந்த ஓரிருவர் அங்கு இருப்பார்கள். அங்குள்ள மக்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் பெருகியிருக்கின்றன. இதையெல்லாம் மறந்துவிட்டு தங்களைத்தானே சுருக்கிக்கொள்வோம் என்றால் சுருக்கிக் கொள்ளட்டும். பிரிந்து போக வேண்டுமென்று தீர்மானம் போட்டு வந்தால் எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. குமரி மாவட்டத்திற்கு என்ன செய்யத் தவறி விட்டார்கள் ? நல்ல முறையில் திட்டங்களைப் போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். வேணுமென்று போட்ட திட்டங்களில் குறைபாடு ஏதாவது செய்ததுண்டா. எந்த வகையில் தவறாக நடந்து கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக் காட்ட வேண்டும். என் தாயார் பிறந்த ஊர் குமரி மாவட்டம். மாமன் மச்சான் உறவு கெட்டுவிடக்கூடாது. இப்பொழுது நிலவிவரும் நல்ல சூழ்நிலையைக் கெடுத்து விடாதேயுங்கள்.

அங்கே நடப்பது என்ன, எங்கே பார்த்தாலும் தார் ரோடு, மூலை முடுக்குகளில் எல்லாம் பஸ் ஓடுகிறது. அங்கே முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு மாண்புமிகு கூட்டுறவுத் துறை



1972 மார்ச் 9] [திரு. டி. கணபதி]

அமைச்சர் அவர்கள் கையாலே கடற்கரை ஓரத்தில் இருக்கிற மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் திட்டம் திறந்து வைக்கப்பட்டது. குமரிப் பெண்கள் கையில் தழும்பு ஏற்படக் கூடாது என்பதற்காக கிரௌண்ட் லெவல் வாட்டர் டாங்கி ஏற்படுத்தித் தந்து இருக்கிறார்கள்.

திரு. சுவாமிதாஸ் அவர்கள் இந்த அரசு, ஜனநாயக அரசு, எல்லாம் கழகக்காரர்களைக் கேட்டுத்தான் ஆட்சி நடத்தப்படுகிறது என்று சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்களிலே கழகக்காரர்கள் சொல்வதைக் கேட்டுத்தான் செய்கிறார்கள் என்று கூறினார்கள். இதையெல்லாம் அவர்கள் எதற்காகப் பேசுகிறார்கள் என்றால் சட்டசபையில் தாமும் பேசுகிறோம் என்று சொல்வதற்காக பேசுகிறார்கள். குமரி மாவட்டத்தில் கழகத்துக்காரர்கள் செய்த தவறுகள் இருந்தால் அதை எடுத்துப் பேசியிருக்கலாம். கழகத்துக்காரர்களைக் கேட்காமல் உங்களைக் கேட்டுக்கொண்டா செய்வார்கள், அமைச்சர்கள் டூர் புரோகிராம் அனுப்பித்தான் வருவார்கள். வீடு வீடாகப் போய் அழைக்க மாட்டார்கள். அப்படி வருகிறபோது அவர்களைப் போய்ப் பார்த்து மக்கள் குறைகளைச் சொல்லி, அந்தப் பகுதிகளில் நல்லது செய்யச் சொல்ல வேண்டும். அவர்கள் தங்கள் ஊரில் வரும் பொழுது குறைகளைச் சொல்லப்போவதில்லை. இங்கே கோட்டையில் சந்திக்கிறார்கள். மாமன்றத்தில் குழைகிறார்கள், அவர்கள் நேரில் வரும்போது போனால் எங்கே மக்கள் கேள்வி கேட்பார்களோ என்று வெட்கப்பட்டு வருவதில்லை.

விழாக்கள் நடத்துகிறார்கள். வீண்விரயம் செய்கிறார்கள் என்றால் விழாக்கள் நடத்துவதில் என்ன தவறு இருக்கிறது என்று எங்களுக்குப் புரியவில்லை. இப்போது குமரி மாவட்டத்தில் மின்சாரம் முழுமை பெறப் போகிறது. குமரி மாவட்டத்திற்கு அமைச்சர் எல்லாம் வரப் போகிறார்கள். அமைச்சர்கள் எல்லாம் இந்த அரசு செய்த சாதனைகளை எடுத்து மக்கள் மத்தியிலே சொல்லுவார்கள். இனிமேலும் உங்கள் இருட்டடிப்பு வேலை நடவாது, குமரி மாவட்ட மக்கள் திரிசங்கு சொர்க்கத்திலிருந்து திரும்பி விட்டார்கள். நீங்களும் திருந்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

லஞ்சம், ஊழல் என்று பரவலாகப் பேசப்படுகிறது என்கிறார். கழகத்தவர்கள் வீடுகள் கட்டியிருக்கிறார்கள். வசதியைப் பெருக்கி இருக்கிறார்கள் என்று சொன்னார். அவர் சொல்ல மறந்துவிட்டது கழகத்தார் கல்யாணம் பண்ணுகிறார்கள் என்பது. திரு. பாலையா அவர்கள் படி அரிசி ரூ. 2.50-க்கு, ரூ. 3-க்கு விற்கிறது என்கிறார். இந்த ஊழல்கள் எல்லாம் எங்கே நடந்தன? காங்கிரஸ்காரர்கள் எல்லாம் குமரி மாவட்டத்தில் ரேஷன் கடை வைத்திருந்தார்கள். சொசைட்டிகள் வைத்துக்கொண்டு எத்தனை ஊழல்கள் நடத்தி யிருக்கிறார்கள்? அதனால் அவர்கள் வாழ்க்கையை வளர்த்துக் கொண்டார்கள். புதுப்புது வீடுகள் கட்டியிருக்கிறார்கள். இதை யெல்லாம் நான் சாலஞ்சு செய்யத் தயாராக இருக்கிறேன். குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்கொயரி வைக்கட்டும், நான் அவற்றை நிரூபிக்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்த மன்றம் ஒரு விசாரணை அமைத்துத் தந்தால், நாங்களும் எங்கள் குற்றச்சாட்டை நிரூபிக்கத் தயாராக இருக்கிறோம். அவர்கள் கூறிய சவாலை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை ஏற்றுக் கொள்ள இந்த மன்றம் தயாராக இருக்க வேண்டுமே.

**திரு. டி. கணபதி:** அங்கே பிளாக் மார்க்கெட் செய்தது யார்? அங்கே கடத்துபவர்கள் யார்? ஆரல் வாய்மொழியில் அரிசி ரூ. 1.30க்கு விற்கிறது. என் ஊரிலிருந்து இரண்டு பர்லாங் இருக்கிறது. கேரளாவுக்கு அதை கடத்தி விற்பவர்கள் யார்? பழைய உறவின் பெயரால் அவர்கள் செய்து வருகிறார்கள். விலை கூடத்தானே செய்யும். மாமன் மச்சான் கடத்துவதால் வெளியே சொல்வதில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் எப்படி பிளாக் மார்க்கெட்டை குறைப்பது என்பதற்கும், அரிசி கடத்தலைத் தடுப்பது என்பதற்கும் நல்ல ஆலோசனையை கூறுங்கள்.

தலைவர் காமராஜர் அவர்கள் 16 மாநிலங்களுக்கு சட்டமன்ற தேர்தலுக்காக ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். ஊழலுக்கும் லஞ்ச லாவண்யத்துக்கும் வித்திட்ட அவர் அந்த அறிக்கையில் கூறியது பதவி ஆசையால் நாடு உருப்படவில்லை, குட்டிச் சுவராகி விட்டது. கண் அவிந்தபின் சூரிய நமஸ்காரம் செய்வது





போதும், ஆற்றோடு போன குள்ளநரி உலகம் போச்சு, உலகம் போச்சு என்று ஊளையிட பக்கத்தில் நின்றவன் காப்பாற்றி, எப்படிடப்பா உலகம் போச்சு என்று கேட்க, தான் ஆற்றோடு போனால் உலகத்தை விட்டு நான் போய்விடுவேன் என்று ஊழல் ஊழல் என சொல்லித் திரிகிறார். ஆனால் பதவி ஆசையால், பெரியவர் காங்கிரசை இரண்டாக உடைத்தார். 80 சதவிகிதம் தங்கள் இனத்தை சார்ந்தவர்கள் இருக்கிற பகுதிக்கு வந்து தேர்தலுக்கு நின்றார். குமரி மாவட்ட அரசியலை குட்டிச் சுவராக்கி விட்டார்கள். கழகத்தை கேட்டு எல்லாம் நடக்கிறது என்கிறார்கள் சுவாமிதாஸ், பின்னர் இவரையா கேட்கும்? பெரியவர் காமராஜை ஆதரித்து விட்டு மேலே டில்லியிலும் இடமில்லாமல் இங்கேயுள்ள ஆட்சியிலும் இடமில்லாமல் திரிசங்கு சுவர்க்கமாகிவிட்டதே என வயிற்றெரிச்சல் படுகிறார்கள்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவரவர்களே, நாங்கள் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கிறோம் என்று சொன்னார்கள். திரிசங்கு சொர்க்கத்திற்கு முன்பு இருக்கும் இடத்திற்கு அவர்கள் போயிருக்கிறார்களா?

**திரு. வி. கே. இராஜப்பிள்ளை.** உறுப்பினர்கள் பேசுகிறபோது கன்னியாகுமரி மாவட்டத்தையே குட்டிச் சுவராக்கிவிட்டார்கள் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியை விலக்கிவிட்டு சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:** பொதுவாக ஒரு குறிப்பிட்ட இடத்தை குட்டிச்சுவராக்கிவிட்டார்கள் என்று சொல்வது தவறு.

**திரு. டி. கணபதி:** கன்னியாகுமரி தொகுதியை நீக்கிவிட்டுச் சொல்கிறேன். ஊருடன் ஒத்து வாழ் ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் என்ற ஔவைப் பிராட்டியின் வாக்கியம் பலித்து விட்டது. ஒத்து வாழ்வதற்குத் தயாராக இல்லாமல் இப்படி பேசிக் கொண்டிருப்பது சரியில்லை என்று சொல்லிக் கொண்டு, இந்த நிதிநிலை அறிக்கை பற்றி சில வார்த்தைகள் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

வேளாண்மையே நாட்டின் அடிப்படைச் செல்வம். வேண்டியது முதலீடு. 1966-67-ல் 31.41 கோடியாக இருந்த குறுகிய மத்திய

காலக்கடன் இப்பொழுது 61 கோடியாக உயர்த்தப்பட்டது. நீண்ட காலக் கடன் 3 கோடியிலிருந்து 29.40 கோடிக்கு மேல் உயர்த்தப்பட இருக்கிறது. பாசன வசதிக்காக 1966-67-ல் ரூபாய் 7.89 கோடியிலிருந்து 1972-73-ல் 6,1428 கோடியாக இப்போது அமைந்துள்ளது. இந்த நிதியைக் கொண்டு காவிரி, அமராவதி, வைகை, தாமிரபரணி போன்ற ஆற்றுப்பாசன ஏற்பாடுகளின் பராமரிப்பு வேகமாக செயல்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஒதுக்கீட்டிலிருந்து குமரி மாவட்டம் பேச்சிப்பாறை அணை எல்லா கால்வாய் பராமரிப்புக்கும் சீர்திருத்துவதற்கும் வழி செய்து வாண்ட தாராபுரம் மற்றும் கிராமங்களுக்கு கூடுதல் நாட்கள் தண்ணீர் கொடுக்க வசதி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மணிமுத்தாறு பாசன வசதிக் கால்வாயையும் நல்லமுறையில் செயல்படுத்தி ஒவ்வொரு குளத்திற்கும் தனிக்கால்வாய் வெட்டி கூடுதலான குளங்களுக்கு தண்ணீர் விடலாம், நான்குநேரி குளத்திற்கும் தண்ணீர் பாய்ச்சாலாம், வடக்கு விஜய நாராயண குளம், வள்ளியூர் குளம், பராமரிப்பு வேலை நடத்த வேண்டும். மேலும் புது பாசன வசதிக்காக 8.72 கோடி ஒதுக்கியுள்ளது. இதிலிருந்து எனது தொகுதியிலுள்ள பச்சையாறு அணை, குடமாடி அணை, அறுத்தலையாறு திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு முதலமைச்சரையும் பொதுப் பணித்துறை அமைச்சரையும் கேட்டு என் உரையை முடிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள்: பேரவைத் துணைத்தலைவரவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையை முழுக்க முழுக்க வரவேற்று என்னுடைய கட்சியின் சார்பில் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை வழங்கிய அன்றைக்கே, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு சமதர்ம பூங்காவாக மாற்றக்கூடிய அளவுக்கு இருக்கிறது என்ற கருத்தினை நான் தெரிவித்தேன். அந்த அடிப்படையில் இந்த நிதிநிலை அறிக்கையில் ஏழை எளிய மக்களின் நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும், கிராமங்களில் வாழ்கிற சாதாரண மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்க வேண்டுமென்பதை அடிப்படையாக வைத்து இந்த பட்ஜெட் அமைந்திருக்கிறது.





நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக் கொண்டால், 1966-67-ல் 10 கோடி, 1972-73-ல் 14.28 கோடி என்று பராமரிப்புச் செலவுகளுக்காக செலவு செய்யப் படுகிறதாக காட்டப் பட்டிருக்கிறது. அடுத்து, புதிய பாசனத் திட்டம் என்று வருகிறபொழுது, 1972-73-க்கு 3.90 கோடி செலவழிக்கப்பட இருப்பதாகச் சொல்லப் படுகிறது. இது போக, 8.11 கோடி பின்றுறை, பாப்பலாறு, பாம்பாறு. பொருந்தலாறு, பொன்னியாறு போன்ற புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட ஒதுக்கப் பட்டிருக்கிறது. இவ்வளவு புதிய திட்டங்கள் நிறைவேற்றப் பட்டாலும், நெடுங்காலமாக நாம் வற்புறுத்தி வருகிற, இந்தப் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்படும் என்று நம்பிக் கொண்டிருக்கிறோம். அந்த நம்பிக்கை வீண் போகாது என்று நம்புகிறோம். ஏற்கெனவே இந்த மன்றத்தில் பாம்பாறு பற்றிப் பேசி இருக்கிறேன். அந்தக் கிருதமால் நதி தூர்ந்து போய் அந்த நதி இருக்கிற இடமே தெரியாமல் போய் விட்டது. அன்று ஆட்சியிலிருந்த காங்கிரஸ்காரர்கள், தங்களுடைய அதிகார பலத்தை வைத்துக் கொண்டு, அந்த நதியை ஆக்கிரமித்து, வீடு கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த நதியை தூர் எடுத்துச் செப்பனிட வேண்டுமென்றால், பல காங்கிரஸ் நண்பர்கள் வீடுகள் இடிக்கப்படும். அதற்கு உடன்பட வேண்டுமென்று சொல்லவில்லை. அது ஒரு தொன்மையான நதியாகும். கிருதமால் நதி என்பது வைகையிலிருந்து பிரிகிறது. துவரமானிலிருந்து அருப்புக்கோட்டையில் புகுந்து, முதுகுளத்தூரில் போய் முடிகிறது. அந்த நதியை நீர்ப்பாசன நதியாக மாற்றினால் ஏறத்தாழ 50,000 ஏக்கர் பாசனத்திற்கு வருமென்று எடுத்துக்காட்டத் தயாராக இருக்கிறேன்,

பின் தங்கியோர் நலனுக்காக ரூ. 3.60 கோடியாக இருந்த பணம் 8.40 கோடியாக உயர்ந்திருப்பதை, பின் தங்கிய மக்கள் சார்பாக வரவேற்கிறேன். பின் தங்கியோர் நலனுக்காக, உயிரைப் பணயம் வைத்தாவது பெறுவேன் என்று சொன்ன பேச்சு வெறும் பேச்சல்ல. நடைமுறையில் செயல்படுவது கண்டு பின்தங்கிய மக்களான, பெரும்பாலான, கோடிக்கணக்கான மக்கள் இந்த நிதி நிலை அறிக்கையைத் தங்கள் அறிக்கையாகக் கொள்ளுகிறார்கள்.

மாநில சுயாட்சி பற்றி நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருக்கிறது. இதுபற்றி ஏகப்பட்ட விவகாரம் தமிழகத்தில்

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1972 மார்ச் 9

பேசப்படுகிறது, இந்த நிதிநிலை அறிக்கையச் சமர்ப்பிக்கும் முன் தமிழகத்தில் பேசப்பட்ட கருத்துக்கள், பொதுக் கூட்டங்களில் பேசப்பட்ட பேச்சுக்கள் எல்லாம் இந்த மாமன்றத்திற்கு வரும். இன்னும், ஏராளமான வாதப்பிரதி வாதங்கள் நடைபெறும். ஸ்தூலமான குற்றச்சாட்டுக்கள் வெளியில் பேசப்பட்டு வருபவைகளை ஆதாரபூர்வமாக சட்ட மன்றத்தில் எடுத்து வைப்பார்கள் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். இங்கே உள்ள யாரும் எந்தக் குற்றச்சாட்டையும் ஆதாரபூர்வமாகச் சொல்லவில்லை. வெளியே நிறைய பேசினார்கள். பெரும் தலைவரும் பேசுகிறார், போலீசாரை விட்டு குண்டாந் தடியால் மண்டையை உடைக்கிறார்கள், இது ஒரு ஆட்சியா? என்று, நான் கடந்த காலச் சரித்திரத்தை நெஞ்சில் நிறுத்திப் பேசுகிறேன். போலீசாரை வைத்து, குண்டாந் தடியால் அடித்து மண்டையை உடைக்கிறார்கள் என்றால், அங்கே ஏதாவது கலவரம், ஆர்ப்பாட்டம் நடந்திருக்கும். அப்படிப்பட்ட நிலையில், போலீசார் தாக்கி இருப்பார்கள். போலீசார், எந்த விதமான குற்றமும் செய்யாத மக்களை அப்படியே பிடித்து இழுத்துக் கொண்டு போய் சுட்ட சரித்திரம் இந்த நாட்டில் கிடையாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, முதுகுளத்தூரில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு, ஒரு ஐ.ஸி.எஸ்., அதிகாரியை நியமித்து விசாரணை செய்ததாக முன்னாள் முதலமைச்சராக இருந்த திரு. பக்தவத்சலம் இந்த மன்றத்தில் கூறி இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், எதிர்க் கட்சியிலிருந்த தி.மு.க. உறுப்பினர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்களும், செல்வராஜ் என்ற உறுப்பினரும் இந்த மன்றத்தில் உரையாற்றி இருக்கிறார்கள். ஆகவே, அதை மறுமுறை கிளறத் தேவை இல்லை. அந்த கேஸ் நடந்து ஹை கோர்ட்டில் சென்று முடிந்திருக்கிறது. அதை மறு முறையும் இந்த மன்றத்தில் கிளப்ப வேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ளுகிறேன்,

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது ஏற்கெனவே முடிந்து விட்ட ஒன்று என்று சொல்லலாம். அது அவர் கருத்தாக இருக்கலாம். என்னைப் பொறுத்த வரையில் அது முடியாத ஒன்று. தொடர்ந்து இருக்கக்கூடிய



1972 மார்ச் 9] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

ஒன்று. நான் போலீசாரிடம் அப்போதே சொன்னேன். குண்டாந்தடியால் மண்டையில் அடிக்கிறார்கள், கைகளையும் கால்களையும் கட்டிவிட்டு சுட்டுக் கொன்றார்கள். ஐ.சி.எஸ். அதிகாரியைப் போட்டா விசாரணையை நடத்த வேண்டும்? அதிகாரியைப் போடுகிறபொழுது, அதிகாரி விசாரணை கூடாது, நீதிமன்ற விசாரணை வேண்டுமென்று நாமும் வேண்டுகோள் கொடுத்து, காங்கிரசுக்குத் துணையாக இருந்த அவ்வளவு கட்சிகளும் கொடுத்து, தி.மு.க. சார்பிலும் கொடுக்கப்பட்டது. கீழத்தூவல் துப்பாக்கிச் சூடு பற்றியும் சட்ட மன்றத்தில் பேசப்பட்டது. அதற்குப் பதிலாக அந்த நேரத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் போலீஸ் மீது தாக்கி இருப்பார்கள். அசம்பாவிதம் நடக்கக் கூடாதென்று தடியடி நடந்திருக்கும். கண்ணீர்ப் புகை விட்டிருப்பார்கள். சட்டம், ஒழுங்கைக் காப்பாற்ற இவைகளெல்லாம் சட்ட சம்மதம் என்று சொல்லுகிறோம். அந்த நீதி விசாரணையை அன்று மட்டுமல்ல, இன்றும் கேட்கிறோம், நீதி விசாரணை வேண்டுமென்று. நீதி மன்றம் விசாரணை செய்திருக்குமானால் இன்றையத்தினம் பெருந்தலைவர் காமராஜர் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருப்பார்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, மறுமுறையும் ஒரு கட்சித் தலைவரை, பெருந் தலைவரைப் பற்றிக் குறிப்பிடுவது சரியல்ல. அது முடிந்து விட்ட விவகாரம். அதற்கு, இப்பொழுது அரசாங்கம் நீதி விசாரணை வேண்டுமென்றால் போடட்டும். நாங்கள் குற்றவாளிக் கூண்டில் நிற்க வேண்டுமென்றால் நிற்கத் தயார்.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் நீதி மன்ற விசாரணை போடட்டும், அதற்குத் தயார் என்று மட்டும் சொன்னால் போதாது. யார் முதலமைச்சராக இருந்தாரோ, யார் போலீஸ் அமைச்சராக இருந்தாரோ அவர்கள் சொல்ல வேண்டும் நீதி விசாரணைக்குத் தயார் என்று. கட்சி சார்பில் ஏற்றுக் கொள்ளலாம். பொறுப்பான ஒருவர் நீதி விசாரணைக்குத் தயார் என்றால், அவர் அதிகாரத்தை, கட்சியை, வேண்டுமென்றே அரசியல் காரணங்களுக்காக தவறாக உபயோகப்படுத்தி அந்த அநியாயத்தைச் செய்தார்கள் என்று ஆதாரபூர்வமாகக் காட்ட நாங்கள் தயார். அவர் தயாராக

[திரு. ஏ. ஆர். பெருமாள்] [1972 மார்ச் 9

இருக்கின்றாரா? ஆகவே, இதைப் புரிந்து கொள்ள வேண்டும். போலீசார் தலையிட்டு மண்டையை உடைக்கிறார்கள் என்று அராஜகத்திற்கு மேற்கோளாகச் சொல்லும்பொழுது சொன்னார்கள்.

மாநில சுயாட்சிபற்றி சொன்னார்கள், எக்கச்சக்கமாக ஊழல் என்று வெளியில் பேசுகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்கு நம் முதலமைச்சர் அவர்கள், ஊழல் இருக்கிறதா? அதை எடுத்துச் சொல்லுங்கள் விசாரிக்கிறேன் என்று சொன்ன பிறகு—பெரும் தலைவர், தேசத் தலைவர், கட்சித் தலைவராக இருந்தாலும் இந்த அரசு தவறு செய்தால் குற்றம் சாட்ட அவர்களுக்கு உரிமை உண்டு. எடுத்துக் காட்டும் கடமை இருக்கிறது. நம் முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். இந்த ஆட்சியில் எந்த இடத்தில் தவறு இருக்கிறதென்று தயவுசெய்து சொல்லுங்கள், எனக்கு எழுதுங்கள், ஆதாரபூர்வமாக எழுதியனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று. அப்படி ஆதாரபூர்வமாக காட்டாமல், வெளியில் பொதுக் கூட்டங்களைப் போட்டு, இந்த ஆட்சி ஊழல் ஆட்சி, எங்கே பார்த்தாலும் லஞ்சம் பெருகி விட்டது, ஆபீசுகளில் கட்சி, ஆட்சியாளர் தலையீடு என்று தவறான பிரசாரம் செய்து மீண்டும் ஆட்சிக்கு வர முடியாதா என்று பார்க்கிறார்கள். உண்மையான, நியாயமான குற்றச்சாட்டுகளை இந்த மன்றத்தில் வைக்க வேண்டும். வெளியில் நாம் பேசுகிறோம். அன்றைய ஆட்சி மீது குற்றச்சாட்டுகள் கொடுத்தோம்.

ஒரு கிராமத்தில் கண்மாயை மராமத்து செய்து 600 டன் உணவு உற்பத்தியாகி இருக்கிறது என்று அச்சில் வந்திருக்கிறது. அந்தக் கண்மாய் கட்டபொம்மன் காலத்தில் எப்படி இருந்ததோ அப்படியேதான் இன்றும் இருக்கிறது என்று கேட்டபொழுது, திரு. பக்தவத்சலம் அவர்கள் பதில் சொன்னார்கள், அச்சுப் பிழை என்று. ஒன்று அல்லது இரண்டு அச்சுப் பிழைகளாக இருக்கலாம். ஒரு பாரா முழுவதும், ஒரு பக்கம் முழுவதும் அச்சுப் பிழையாக இருக்க முடியாது என்று அந்த ஆட்சியைப் பற்றி குற்றச்சாட்டு வைக்கப்பட்டது. நடைபெறுகிற ஊழலை எடுத்துக்காட்டித்தான் சொல்வோம், ஆட்சியில் இருப்பவர்கள் ஏற்க வேண்டுமென்று. ஆட்சியில் இருப்பவர்களை மக்கள் இறக்க



1972 மார்ச் 9] [திரு. ஏ. ஆர். பெருமாள்]

வேண்டுமென்று எதையாவது சொல்லிக் கொண்டிருப்பது சரியான குற்றச்சாட்டாகாது.

ஏழை எளிய மக்களின் நலனுக்காகவே தயாரித்தளிக்கப் பட்டிருக்கும் இந்த பட்ஜெட்டை மாற்றுக்கட்சிக்காரர்கள் பாராட்டுவார்கள் என்று நினைத்தேன். ஆனால் அவர்களிலே யாரும் பாராட்டவில்லை. அதற்குப் பதிலாக இந்த பட்ஜெட்டிலே என்ன இருக்கிறது என்று கேட்டார்கள். பாராட்டுவதற்குரிய ஒன்றுமே இதில் இல்லையா? குற்றஞ்சாட்டக்கூடிய அளவிலே தான் இந்த பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறதா? குற்றங்குறைகள் இருந்தால் எடுத்துச் சொல்லலாம். சொல்லக்கூடாது என்று நான் சொல்லவில்லை. அதே நேரத்தில் பாராட்டப்படக்கூடிய அம்சங்களைப் பாராட்ட வேண்டாமா? வெறும் குற்றச்சாட்டுகளையேச் சொல்லிக்கொண்டு போவதுதான் பட்ஜெட் உரையா? பட்ஜெட் உரையை கட்சிகளுக்கு அப்பாற்பட்ட ஒன்றாகக் கருதி உரையாற்றவேண்டும். அதிலே உள்ள நல்லது கெட்டது எல்லாவற்றையும் சொல்லவேண்டும். நெஞ்சத்திலே நியாயம் படைத்தவர்கள் அப்படித்தான் சொல்வார்கள். குற்றச்சாட்டுக்களைச் சொல்லும்போது ஆதாரத்தோடு சொல்லவேண்டும். ஆதாரமற்றக் குற்றசசாட்டுகளைச் சொல்லக்கூடாது. இப்படி ஆதாரமற்றக் குற்றச்சாட்டுகளையெல்லாம் சொல்லி வீண் புரளியைக் கிளப்பி விட்டால் இந்த ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். அதன் விளைவு 1971 தேர்தலிலே முன்னைவிட அதிகமான இடங்களைப் பெற்று அரசாங்கத்தை அமைத்திருக்கிறார்கள்.

**திரு. க. சுப்பு :** சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். போலீசார் குண்டாந்தடியால் அடித்து, மண்டை பிளந்தது என்று இன்னும் பழைய விருதுநகர் கோட்டை சம்பவத்தையே பேசிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது போலீசாரின் தடியடியால் மண்டை உடைவது ஒருவேளை அவர் தலையில் தொப்பி போட்டிருப்பதால் தெரியவில்லையோ என்று நினைக்கிறேன். அவர் ஆளும் கட்சியில் இருந்து பேசுகிறாரா அல்லது எதிர்க் கட்சியில் இருந்து பேசுகிறாரா என்பதே தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது பாயிண்ட் ஆஃப் ஆர்டர் அல்ல.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** நான் ஆளும் கட்சியும் அல்ல ; எதிர் கட்சியும் அல்ல. ஆளும் கட்சிக்குத் தூய்மையான, வலுவான, உறுதியான தோழமைக் கட்சிக்காரன் (கரவொலி) தேர்தலிலே தோழமைக் கட்சி என்று சொல்லிக்கொண்டு வெற்றி பெற்ற பின்னால் அந்தக் கட்சியைக் குழி தோண்டி புதைக்கத் துடிக்கும் கட்சிக்காரன் அல்ல என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். குற்றச்சாட்டுகளைச் சொன்னால் வெளியே மேடையிலே ஒன்றைச் சொல்வது ; இங்கே இந்த மன்றத்திலே ஒன்றைச் சொல்வது என்பது கூடாது. உண்மையான குற்றச்சாட்டுகளாக இருந்தால் ஆதாரத்தோடு எங்கும் ஒரே மாதிரியாகப் பேச வேண்டும்.

**திரு. க. சுப்பு :** கனம் அங்கத்தினர் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையாத் தேவர் என்பதையே மறந்து விடுவார் போலிருக்கிறது. இன்னும் பழைய பொட்டல் வெளிப் பேச்சையே பேசிக்கொண்டிருக்கிறார். தோழமைக் கட்சி, தூய்மையான கட்சி என்றெல்லாம் பேசிக்கொண்டிருக்கிறார். தோழமைக் கட்சி என்றால் ஆட்சி புரிகின்ற கட்சிக்காரர்கள் செய்வதெல்லாம் தூய்மையானது என்று ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றல்ல. செய்கின்ற தவறை எடுத்துச்சொல்வதனால் தோழமைக் கட்சியல்ல, தூய்மையான கட்சி அல்ல என்று பொருள் அல்ல. அதனால்தான் எனக்கு அங்கத்தினர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று சந்தேகம் ஏற்படுகிறது. அவர் ஆளும் கட்சியிலே சேர்ந்து விட்டாரா என்றுகூட ஐயப்பட வேண்டியிருக்கிறது. மெம்பர்கள் பதவிப் பிரமாணம் செய்கின்ற நேரத்தில் கூட அங்கத்தினரின் பெயர் தி.மு.க. பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது. அதனால்தான் அவர் தி.மு.க.விலே சேர்ந்து விட்டாரோ என்று சந்தேகம் ஏற்படுகிறது.

**திரு. ஏ. ஆர். பெருமாள் :** பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர் மூக்கையா தேவர் தான். நானும் பார்வர்டு பிளாக் கட்சியைச் சேர்ந்தவன்தான். என் பெயரும் பார்வர்டு பிளாக் கட்சிப் பட்டியலில்தான் வெளியிடப்பட்டிருந்தது. எனவே, கனம் சுப்பு அவர்களுக்கு என்னைப்பற்றி எவ்வித சந்தேகமும் வேண்டாம். திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கூட தி.மு.க.வில் சேரப்போவதாகச் சொல்லப்பட்டது. உடனே அவர்கள் தி.மு.க. காரர் என்று சொல்லமுடியுமா ? அப்படிச் சொல்வது நியாயமாகுமா ?



தி.மு.க. அரசாங்கம் தயாரித்திருக்கும் இந்த பட்ஜெட்டை நான் மட்டும் பாராட்டவில்லை. இந்த நாட்டு மக்களெல்லாம் பாராட்டுகிறார்கள். தேர்தல் காலத்திலே அண்ணா அவர்களின் படத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் படத்தையும் அச்சிட்டு, 'அண்ணா, இன்னும் உங்கள் தம்பிமார்களிலே பலர் பங்களாக்களும், காரும் வாங்கவில்லை. அவர்களும் பங்களாக்களும் காரும் வாங்குவதற்கு இந்தத் தேர்தலிலும் எப்படியாவது நாங்கள் ஜெயிக்க வேண்டும். அதற்கு ஆசி கூறுங்கள்' என்று முதலமைச்சர் கேட்பதுபோல் அதிலே அச்சிட்டு, சுவரொட்டிகளாக ஒட்டினார்கள். எங்கெங்கெல்லாமோ ஒட்டினார்கள். அப்படிப்பட்ட லட்சக்கணக்கான சுவரொட்டிகள் ஒட்டினார்கள். அதன் முடிவு அந்தச் சுவரொட்டிகள் ஒட்டுவதற்கு முன்னால் தி.மு.க.வினர் 134 பேர், அதற்குப் பின்னால் 184 பேர். அந்தச் சுவரொட்டிகளுக்கு முன்னால் காங்கிரஸ்காரர்கள் 50 பேர், அதற்குப் பின்னால் 15 பேர். ஆகவேதான் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைக் கூறவேண்டாமென்று திரும்பத் திரும்பச் சொல்கிறேன். ஆதாரத்தோடு எந்தக் குற்றச்சாட்டையாவது சொல்வார்களானால், அவர்கள் யாராக இருந்தாலும் அவர்களோடு நாங்களும் சேர்ந்து எதிர்க்கிறோம். ஆனால் ஆதாரமற்றக் குற்றச்சாட்டுகளை எந்தக் கட்சிக்காரர்கள் சொன்னாலும் அவர்கள் எங்கள் விரோதிகளாகவே கருதப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியைப்பற்றிச் சில வார்த்தைகள் சொல்லி முடித்துக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலுள்ள கிருதமால் நதித் திட்டத்தை விரைவிலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது நிறைவேற்றப்பட்டால் எங்கள் பகுதி மட்டுமல்லாமல் திருப்பரங்குன்றம், மானாமதுரை, காளியாம்பட்டி, முதுகுளத்தூர் ஆகிய தொகுதிகளும் பயனடையும். எனவே, விரைவிலே நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* **திரு. துரைமுருகன் :** தலைவரவர்களே, 1972-73-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் மீது என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[திரு. துரைமுருகன்] [1972 மார்ச் 9

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில் நல்ல நேர்த்தியான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை, படித்துப் பார்த்த அனைவரும் ஒப்புக்கொள்வார்கள். நாட்டிலே பல்வேறு பிரச்சனைகள் எழும்பிக்கொண்டிருக்கும்போது, அந்தப் பிரச்சனைகளுக்கெல்லாம் தீர்வுகாண்கின்ற வகையிலே திட்டங்கள் தீட்டி, அதற்கேற்ப நிதிநிலை அறிக்கையைத் தயாரித்திருக்கும் இந்த அரசினை நான் பாராட்டுகின்றேன்.

பாட்டாளி மக்கள் படும் துயரினைப் போக்கிடும் வகையில், ஏழை எளிய மக்களின் விழி நீரைத் துடைக்கின்ற வகையில் தீட்டப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையை அழகுத் தமிழிலே வடித்தளித்திருக்கிறார்கள் டாக்டர் கலைஞர் அவர்கள். அதற்காக அவர்களுக்கு என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். பல்வேறு பிரச்சனைகளில் பாங்கான முடிவினைக் காண்பதிலேயே ஆழ்ந்திருக்கும் கலைஞர் அவர்களுக்கு அழகு தமிழிலே, ஆற்றல்மிகு தமிழிலே இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க எங்கே நேரம் இருந்தது என்றெண்ணி ஆச்சரியப்படுகிறேன். அந்த ஆச்சரியத்திற்கு விடையும் கிடைத்தது. எப்படிக் கிடைத்ததென்றால் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் 'தொல்லைக் குள்ளே சுகம் ஒன்று கண்டேன் தோழி' என்ற பாடல் என் நினைவுக்கு வந்தது. டாக்டர் கலைஞர் அவர்களின் இந்த ஆற்றல்மிகு சக்தியைக் கண்டு நான் பெருமைப்படுகிறேன். பூரிப்படைகின்றேன். இளைஞர் சமுதாயம் கலைஞருக்கு இருக்கும் தொல்லைகளை அகற்றுகின்ற வகையில் அவர் பின்னாலே அணி வகுத்து நிற்கும் என்பதை இம் மாமன்றத்திலே கூறிக் கொள்ளுகிறேன்.

இப்படிப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றி பல்வேறு கருத்துக்களை இங்கே சொன்னார்கள். இது ஒரு பட்ஜெட்டா? இந்த பட்ஜெட்டிலே ஏழைக்கு என்ன இருக்கிறது? இதிலே வரவேற்கக் கூடிய அம்சம் ஏதாவது இருக்கிறதா என்றெல்லாம் பலர் பேசினார்கள். அவர்களுக்கு எல்லாம் பதில் கூறுகின்ற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது. பெரிய வாக்கியங்களாக இருந்தால் படித்துப் புரிந்துகொள்ள மாட்டார்கள் என்று எண்ணி, சிறு சிறு சொற்களிலே சிறிய சிறிய வாக்கியங்களாக, எதை எதை எப்படி எப்படிச் சொன்னால்



1972 மார்ச் 9] [திரு. துரைமுருகன்]

புரியுமோ அந்த வகையிலே, படிப்படியாக பலாச்சுளை போன்று இந்த அரசு என்னென்ன செய்திருக்கிறது, என்னென்ன செய்ய திட்டமிட்டிருக்கிறது என்பதைப் பிட்டுப் பிட்டு வைத்திருக்கின்றார்கள். பாட்டாளி மக்களின் தோழர்களாக அரசு இருக்கும் என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள்.

இன்னும் பல கிராமங்களில் சாலை வசதி கிடையாது; குடிநீர் வசதி கிடையாது; மின்சார வசதி கிடையாது. அந்தக் குறைகள் எல்லாம் போக்கப்படுகின்ற வகையிலே இந்த அரசு மோட்டார் வாகன வரிமீது 10 சதவிகிதம் கூடுதல் வரி விதித்து, அந்தப் பணத்தைக்கொண்டு இத்தகைய கிராம வளர்ச்சிப் பணிகளைச் செய்ய இந்தப் பட்ஜெட்டிலே வழி செய்திருக்கிறது. அப்படிப்பட்ட இந்த பட்ஜெட் ஏழைகளுக்காகப் போடப்பட்ட பட்ஜெட் இல்லையா?

அடுத்து, குதிரைப் பந்தய வரி, பந்தயம் பிடிப்போர், பந்தயக் கணக்கு இயந்திரம் மீது 15 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாக வரியை உயர்த்தி, அந்தப் பணத்தைக் கொண்டு, நோயாளிகளுக்கு, திக்கற்றோருக்கு, இலட்சக்கணக்கானப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறதே, அவர்களெல்லாம் உங்களுக்கு ஏழைகளாகத் தெரியவில்லையா? எங்களுடைய பஞ்சைக் கண்களுக்கு இவர்கள்தான், ஏழைகள் தான் தெரிகிறார்கள். ஆனால் உங்கள் கண்களுக்கு எல்லாம் கனத்த சரீரம், கனத்த குண்டலம் அணிந்து, பாலிலே கற்கண்டு கலந்து சாப்பிடுகிறவர்கள்தான் பெரிய ஏழைகளாகத் தெரிகிறார்களோ என்னமோ—வேறு ஒன்றும் இல்லை.

இங்கே வரியை யாருக்குப் போட வேண்டுமோ அவர்களுக்குத் தான் போட்டிருக்கிறார்கள். யாருக்குச் செலவழிக்க வேண்டுமோ அவர்களுக்குத்தான் செலவழிக்க இருக்கிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதுபோல "Tap the rich and pat the poor"— பணக்காரர்களிடம் கறந்து ஏழைகளைத் தட்டிக் கொடுக்கும் வகையில் செலவிடவே திட்டங்கள் தீட்டப்பட்டிருக்கின்றன. சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைப் போக்க வேண்டுமென்றால் 'levelling up and levelling down' என்பதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்களே அதைப்போலத் தான் இன்றைக்கு மோட்டார் வாகன வரியை 10 சதவிகிதம்

உயர்த்தியிருக்கிறோம். அதன் மூலம் கிடைக்கும் வருவாயைக் கொண்டு கிராமங்களில் உள்ள சாலைகளைப் போட ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்** "Tapping the rich and patting the poor" என்பதில் மதுவிலக்கு உட்பட்டு வருமா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று மன்றத்தலைவர் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** அதிலும் கூட வெளிநாடுகளில் இருந்து வருகிற உயர்ந்த மதுபான வகைகளுக்கு அதிகம் வரி போட்டிருக்கிறார்கள்—பணக்காரர்கள் கொடுக்க முடியும் என்று கருதி.

ஆகவே இன்றையதினம் இந்த நிதிநிலை அறிக்கையில் ஹரிஜனங்களுக்காக கழக அரசு ரூ. 8.41 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இது ஏழைகளுக்காக போடப்பட்ட பட்ஜெட் இல்லையா? பிற்பட்ட வகுப்பினர்களுக்காக ரூ. 4.68 கோடி ஒதுக்கியிருக்கிறார்கள். இது ஏழைகளுக்காகப் போடப்பட்ட பட்ஜெட் இல்லையா? மில் தொழிலாளர்களுடைய நிவாரணத்திற்காகப் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். இது ஏழைத் தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டு போடப்பட்ட பட்ஜெட் இல்லையா? நிலச்சீர்திருத்தத் துறையில் குடும்பத்திற்கு 60 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று இருந்ததை 40 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று குறைக்க முன்வந்திருக்கிறார்கள். இது ஏழை எளிய விவசாய மக்களின் நலனில் அக்கறை கொண்டு தயாரிக்கப்பட்ட பட்ஜெட் இல்லையா? கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டுவர முன்வந்திருக்கிறார்கள். இது ஏழை எளியவர்களுக்காகப் போடப்பட்ட பட்ஜெட் இல்லையா? இவ்வளவையும் மறந்து இது ஏழை எளியவர்களுக்காகப் போடப்பட்ட பட்ஜெட் இல்லை என்று அவர்கள் சொன்னால், நான் கேட்கிறேன் அவர்கள் இந்த பட்ஜெட்டைப் படித்துப் பார்த்தார்களா, இல்லையா என்று. எங்கள் வில் விஜயன்—டாக்டர் கலைஞர் அவர்கள் வகுத்த வ்யூகத்திற்குள் அவர்களால் நுழைய முடியவில்லை. ஆகவே வெளியில் இருந்தே ஒன்றும் இல்லை, ஒன்றும் இல்லை என்று குற்றஞ்சாட்ட ஆரம்பித்திருக்கிறார்கள்.

அவர்கள் என்ன பேசுகிறார்கள்? எம்.எல்.ஏ.க்கள் பணம் சேர்த்துவிட்டார்கள். வட்டச் செயலாளர்கள் எல்லாம் பணம்





சேர்த்துவிட்டார்கள். லஞ்சம் பெருகிவிட்டது என்று காங்கிரஸ்காரர்கள் பேசுவதைக் கேட்கும்போது வேடிக்கையான ஒரு கதை ஞாபகத்திற்கு வருகிறது.

நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்ட கைதி ஒருவன் "ஐயா, என்னைக் காப்பாற்றுங்கள், என்னைக் காப்பாற்றுங்கள்" என்று கதறி அழுதானாம். அதைக் கண்டு கொஞ்சம் இரக்க உணர்ச்சியினால் மனம் நெகிழ்ந்துவிட்ட நீதிபதி அவர்கள் அவனைக் கொண்டுவந்த காவல்துறையினரிடம் "இவன் என்ன குற்றம் செய்தான்?" என்று கேட்டாராம். அதற்கு அவர்கள் இவன் "தாய் தகப்பன் இரண்டுபேர்களையும் ஒருசேர வெட்டிவிட்டான்" என்றார்களாம். அப்படி ஊழலையே உற்பத்தி செய்தவர்கள் இன்றைக்கு நிர்வாகத்தில் ஊழல் மலிந்துவிட்டது, ஆட்சியாளர்களின் குறுக்கீடு அதிகரித்துவிட்டது என்பதாகக் கூக்குரலிடுகிறார்கள். விவரமாகச் சொல்கிறேன். எம்.எல்.ஏ.க்கள் தங்களுடைய சொத்து விவரத்தை இந்த சபைக்கு அறிவிக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டுவந்ததே எங்களது கழக ஆட்சிதான் என்பதை அவர்களால் மறுக்க முடியுமா? (பலத்த கரவொலி). உங்கள் காலத்தில் இப்படிப்பட்டதொரு வரன்முறை இருந்ததுண்டா? அம்மையார் அவர்கள் கூடச் சொன்னார்கள், "வதந்தி பரவுகிறது" என்று. அப்படிப்பட்ட வதந்திகளை எடுத்துக்கொள்ளலாமா? எட்டுத் திசையும் தன் புகழைப் பரப்பிய இராவணனுடைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் தான் நாங்கள். நீங்கள் இராமனையே சரணடைந்த பரம்பரையினர். ஆனால் அந்த ராமபிரான் மனைவியான கற்பின் கனியான ஜானகியைப் பற்றியே ஒருவன் அந்த அம்மையார் ஒருமாதிரி என்று கட்டிவிட்ட புரளியை நம்பி—தன் மனைவி சீதையைக் காட்டில்கொண்டுபோய் விட்டானே அப்படி நீங்கள் எதை விட்டீர்கள்? உங்கள் பேரில் எவ்வளவு வதந்திகள் வந்தன? அதற்காக எவற்றையாவது விட்டீர்களா? திரு. முத்துராமலிங்கத் தேவருக்கு விஷம் கொடுத்துக் கொன்றீர்கள் என்பது வதந்திதான். அதை ஏற்றுக்கொண்டு எதையாவது விட்டீர்களா? கள்ள நோட்டுக்கும் காமராஜருக்கும் தொடர்பு உண்டு என்பது வதந்திதான். நீங்கள் ஏற்றுக்கொண்டீர்களா? அவர் இன்றையதினம் 1½ கோடி ரூபாய் பாங்கில் போட்டிருக்கிறார் என்பது வதந்திதான். ஏற்றுக்கொண்டீர்களா? ஆனால் திரு. காமராஜர் விட்டார்; எதை?

முதலமைச்சர் பதவியை! ஆனால் பெற்றது அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவி. பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட ஒரு முறை சொன்னார்கள், விட்டது பெட்டிக்கடை வேலை; பெற்றது முதலமைச்சர் பதவி என்று.

இன்றைக்கு எல்லோரும் சொல்கிறார்கள், எம்.எல்.ஏ.-க்கள் நிர்வாகத்தில் தலையிடுகிறார்கள் என்பதாக. நியாயத்திற்குப் புறம்பாக எம்.எல்.ஏ.-க்கள் தலையிடுகிற நிலைமை எங்கள் ஆட்சியில் இல்லை. முன்னாள் முதல் அமைச்சர்—உங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. பக்தவத்சலம் அவர்கள் எனது நினைவுகள் என்பதாக ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார்கள். பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியின் பேரில் அதில் இருந்து இரண்டே இரண்டு விஷயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

விருதுநகரில் நாடார் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கிறது. அதில் ஆரம்பம் முதலே இலவசக் கல்விதான். மாணவர்களிடம் இருந்து எவ்விதக் கட்டணமும் வசூலிக்கவில்லை. ஆனால் இலவசக் கல்வித் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவந்தபோது ஏற்கனவே கட்டணம் வாங்கிக்கொண்டிருந்த பள்ளிக்கூடங்களுக்கு நஷ்டஈடு என்று கொடுக்க முடிவு செய்தார்கள். விருதுநகர் பள்ளிக்கூடம் முன்பே கட்டணம் வசூலிக்கப்படாமல் நடந்து வந்த காரணத்தினால் அதற்கு நஷ்டஈடு எதுவும் கிடையாது என்று இவர் சொல்லிவிட்டார்கள். ஆனால் திரு. காமராஜர் குறுக்கிட்டு அந்தப் பள்ளிக்கூடத்திற்கும் நஷ்ட ஈடு தரச் சொன்னார். 'தந்தேன்' என்று குறிப்பிடுகிறார் முன்னாள் முதலமைச்சர். கொடுக்க முன்வந்தவுடன்—எனக்குக் கொஞ்சம் எங்க அம்மாவுக்கு கொஞ்சம் என்று கேட்பது போல—அந்த விருதுநகர் பள்ளிக்கூட நிர்வாகிகள் முன்தேதியிட்டு நஷ்ட ஈடு கோரியிருக்கிறார்கள். அதையும் கொடுக்கச் சொல்லியிருக்கிறார் திரு. காமராஜ். இப்படி நிர்வாகத்தில் தலையிட்டவர்கள் யார்? அவரைப் போய் ஏழைப் பங்காளர்—மாணிக்கவாசகர் ... அடியப்பாடி! எந்தமாதிரியாக எல்லாம் புகழ்கிறார்கள்!

திரு. பக்தவத்சலம் அவர்கள் இன்னொரு இடத்தில் சொல்கிறார். தஞ்சை மாவட்டத்தில் ஒரு திருட்டுப் பயல் குற்றம் சாட்டப் பட்டிருக்கிறான். அவனை விடுவிக்கச் சொல்கிறார் மந்திரி. சப்-இன்ஸ்பெக்டர் மறுக்கிறார். அதன் காரணமாக அந்த சப்-இன்ஸ்பெக்டர் மீது குற்றம் கற்பித்து அவரை வேறு இடத்திற்கு மாற்ற





உத்தரவு போடுகிறார். ஒரு திருட்டுப் பயலுக்காக நியாயம் தவறி நடக்க மறுத்த ஒரு அதிகாரி பழிவாங்கப்படுகிறார். அப்படிச் செய்தவர் யார்? திரு. கக்கன்தான். 'அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை' என்கிறார் முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம்.

இப்படி யாருடைய ஆட்சியிலே நிர்வாகத்தில் குறுக்கீடுகள் இருந்தன என்பதை நான் உதாரணங்களோடு சொல்லிக் கொண்டே போக முடியும்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** முன்னாள் முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் நடுவில் கொஞ்ச நாள் உங்களோடு சேர்ந்து இருந்திருக்கிறார் இல்லையா? அதன்காரணமாக எழுதியிருக்கிறாரா என்பதை அறிந்துதான் பார்க்கவேண்டும்.

**திரு. துரைமுருகன்:** நன்றாக அறிந்து பாருங்கள். அவர்கள் காலத்தில் நிர்வாகத்தில் எப்படி எல்லாம் தலையிட்டிருக்கிறார்கள் என்பதை இன்று நாள் பூராவும் பேசலாம். அவர்கள் இன்றையதினம் பரவலாகப் பேசப்படுகிற வதந்தி என்கிறார்களே—இதை யார் கிளப்பி விடுகிறார்கள். அன்றைக்கு இரவோடு இரவாக வந்து இந்திரா காந்தியார் அவர்கள் கலைஞரை சந்தித்தார் என்கிற வதந்தியைக் கிளப்பிவிட்டது யார்? வாக்குச் சீட்டில் குத்துவதற்கு ருஷ்யாவில் இருந்து ஒரு கெமிகல் மை வந்தது என்றார்களே, இப்படி கலக்கல், குலுக்கல், கெமிகல் வதந்திகளை எல்லாம் கிளப்பிவிட்டது யார்? உங்களுடைய நிலைமையைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். நிலைமை என்ன என்பது புரிந்துவிடும்.

இந்த நிதிநிலை அறிக்கையில் அடுத்ததாக முக்கியமான இடத்தைப் பெற்றிருப்பது மாநில சுயாட்சி. மாநில சுயாட்சி கோரிக்கையைப் பற்றி பலர் பலவிதமான கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். பெடரல் என்பதை அரசியல் சட்டமே ஒத்துக்கொண்டிருக்கிறது. அதில் மாற்றம் இல்லை. இருக்கிற பெடரலை விஸ்தரிக்க வேண்டும். அரும்பு மலராக வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை. மைனா பேசுகிறது. பேச்சு தெளிவாக இல்லை என்றால் அதன் நாக்குத் தோலை கொஞ்சம் உறித்தால் அழகாகப் பேசும் என்று அறிஞர் அண்ணா அவர்கள்

[திரு. துரைமுருகன்] [1972 மார்ச் 9

சொல்வார்கள். அந்தமாதிரி நாக்குத்தோலை உரிக்கத்தான் சொல்கிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை.

இன்று டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு குற்றச்சாட்டைச் சொன்னார்கள். திராவிடநாட்டுப் பிரிவினை கோரி வந்த நேரத்தில் திரு. சுப்பிரமணியம் அவர்கள் திராவிடநாடு பிரச்சனையை தேர்தலில் வைக்கத் தயாரா என்று ஒருமுறை சவால் விட்டார்கள். 1962-ம் வருஷம் கோவையிலே நடைபெற்ற சிறப்பு மகாநாட்டில் இந்தத் தீர்மானத்தைப் படிக்க எழுந்த நேரத்தில் அண்ணா அவர்கள் இது ஒரு சவால் தீர்மானம் என்று படிக்க ஆரம்பித்தார்கள். அந்தத் தீர்மானத்தை இந்த நாடு ஏற்றுக்கொண்டது. அன்றைக்கு அதை ஏற்றுக்கொண்டோம் என்பதனால் இன்றைக்கு அதை ஆதரிக்கிறேன் என்று பொருள் அல்ல. இதய சுத்தியோடு சொல்கிறோம்—நாங்கள் பிரிவினை கேட்கவில்லை. நாங்கள் பிரிவினையை மறந்துவிட்டோம். மீண்டும் மீண்டும் அதை ஞாபகப் படுத்த வேண்டாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, நேற்றைய தினம் உங்களுடைய கட்சியின் உறுப்பினர், நாடாளுமன்ற உறுப்பினர் 'பிரிவினை கேட்கிறோம்' என்று பிரிவினையைப்பற்றிப் பேசியிருக்கிறார். அவர் மேல் முதலமைச்சர் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார் ?

**திரு. துரைமுருகன் :** தலைவர் அவர்களே, எதற்கு எங்கள்மீது சந்தேகம் ? பிரிவினை கேட்டுவிடுவார்களோ என்று. இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு சீனக்கதை நினைவிற்கு வருகிறது. கன்ஃபூஷியஸ் அவர்கள் கூறியது. ஒருவனுக்கு பக்கத்து வீட்டுக்காரன் ரொம்ப யோக்கியனாக, ஞானியாக, புத்திசாலியாக, அவன் கண்ணுக்குத் தென்பட்டானாம். பக்கத்து வீட்டுக்காரன் ரொம்ப நல்லவனாக அவனுடைய கண்ணுக்குத் தென்பட்டான். ஒரு நாள் அவனுடைய வீட்டில் உள்ள ஒரு பொருள் காணமல் போய்விட்டது. ஒருவேளை பக்கத்து வீட்டுக்காரன் எடுத்திருப்பானோ என்று சந்தேகம் பிறந்தது. அந்த சந்தேகம் பிறந்ததிலிருந்து பக்கத்து வீட்டுக்காரனைப் பார்க்கும் போதெல்லாம் பக்கத்து வீட்டுக்காரன், திருடனைப்போலவும், அயோக்கியனாகவும், மோசக்காரனாகவும் தென்பட ஆரம்பித்தது. இரண்டு மூன்று நாட்கள் கழிந்த பின்னர், காணமல் போன



1972 மார்ச் 9] [திரு. துரைமுருகன்]

அந்தப் பொருள் அவனுடைய பெட்டியிலேயே இருந்ததாம். காணமல்போன பொருள் கிடைத்ததற்குப் பின்னால் பக்கத்து வீட்டுக்காரன் யோக்கியனைப் போலவும், ஞானியைப் போலவும், நல்ல மனிதனாகவும் தென்பட்டான். ஆகவே, இந்தக் கதையிலிருந்து என்ன தெரிகிறது என்றால், குற்றம் பக்கத்து வீட்டுக்காரன்மீது அல்ல. பக்கத்து வீட்டுக்காரனைப் பார்க்கின்ற கண்ணிலேதான் கோளாறு இருக்கிறது என்பது தெரிகிறது. அது போல பார்ப்பவர்களின் பார்வையிலேதான் கோளாறு இருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்கிறது. அந்தச் சவாலை நாங்கள் ஏற்றுகொள்கிறோம். அதிலிருந்து நாங்கள் எள்ளளவும் பின்வாங்கமாட்டோம். முதலிலே கழகம் நியாயத்தை எடுத்து வைக்கும். அதற்குப் பிறகு அதற்கு ஆதாரத்தோடு வாதாடும். அதற்குப் பிறகு நியாயம் புறக்கணிக்கப்பட்டு, ஆதாரம் வாதாடும். அதற்குப் பிறகு நியாயம் புறக்கணிக்கப்பட்டு, ஆதாரம் தூக்கியெறியப்படுமானால், எங்கள் கோரிக்கை குப்பைக் கூடையில் போடப்படுமானால், நான் உங்களுக்குப் பணிவோடு—எச்சரிக்கையோடு அல்ல—தெரிவித்துக்கொள்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகம், தன்னைத்தானே வருத்திக்கொண்டு அறப் போராட்டத்தில் ஈடுபடுமே தவிர, வேறு வழிகளைக் கையாளாது என்பதை இந்த மாமன்றத்தில் மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். மகாத்மா காந்தியார் காட்டிய வழியில், பேரறிஞர் அண்ணா அவர்கள் காட்டிய வழியில் கழகத்தினர் செயல்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களைப்பற்றி நாட்டு மக்களுக்குத் தவறான முறையில் படம் பிடித்துக் காட்டாதீர்கள் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். மாநில சுயாட்சியைப் பேச முற்பட்டவுடன் என்னுடைய தொகுதியைப்பற்றிய பல விஷயங்களைப்பற்றிப் பேச வேண்டுமென்று எண்ணியிருந்தவை களைக்கூட மறந்துவிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று, பேச வாய்ப்பு அளித்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றிகூறி, என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்தபடியாக ஜேம்ஸ் அவர்கள் ஐந்து நிமிடம் பேசுவார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, எனக்குப் பேசுவதற்கு இருபது நிமிடங்கள் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் பேசுவதற்கு ஐந்தாறு உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஆகவே, சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

* **திரு. ஜே. ஜேம்ஸ்:** தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

என்னுடைய நேரத்தைக் குறைக்கக்கூடாது என்று முதலிலேயே கேட்டுக்கொள்கிறேன் ஏறத்தாழ இரண்டரைக் கோடி ரூபாய் உபரியாகக் கிடைக்கும் வகையில் முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த மன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்கள். ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடுவோம் என்று சொன்னதையெல்லாம், இன்றைக்கு சர்ப்பிளஸ் பட்ஜெட் போடுகிற நேரத்திலாவது அந்தத் திட்டத்தை அமல்படுத்த இப்போது அரசு முன்வந்திருக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இன்றைக்கு 2½ கோடி ரூபாய் உபரியாக வந்திருக்கிறது. 400 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கில் காட்டப்பட்டிருப்பது ஏழைகளிடமிருந்தும் பெருமளவு வரி வசூல் செய்யப்பட்டது ஆகும். முக்கியமாக எக்சைஸ் வரியாக 35 கோடி ரூபாயும், சேல்ஸ் டாக்ஸ் வரியாக 104 கோடி ரூபாயும் வந்ததன் காரணமாக உபரி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்ய முடிந்தது. மதுவிலக்கை ரத்து செய்தபொழுது, முதலமைச்சர் அவர்கள், மதுவிலக்கை என் ரத்து செய்கிறேன் என்றால், "காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், வசதி படைத்தவர்கள் பர்மிட் வாங்கி வைத்துக்கொண்டு உயர்ந்த ரக மதுவைக் குடித்தார்கள். ஏழை மக்கள் பட்டை சாராயம் முதலியவற்றைக் குடித்து, குடல் அழுகிச் சாகிறார்கள். ஏழைகளும் நல்ல மதுவை வாங்கிச் சாப்பிடட்டும்" என்று சொன்னார்கள். உடனே மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களும், "மது உடலுக்கு நல்லது" என்று சொன்னார்கள். இன்றைக்கும் பட்டை சாராயம் குடித்து, குடல் அழுகிச் சாகின்றவர்களின் எண்ணிக்கை குறைந்ததாகத் தெரியவில்லை. ஆனால் அரசுக்கு வருவாய் கூடிக்கொண்டு வருகிறது. இன்றைக்கு





இருக்கிற உபரி நிதிநிலையானது வசதி படைத்தவர்களால் கிடைத்தது அல்ல; மதுவைக்குடித்து மதிமயங்கிய ஏழை மக்களால்தான் கிடைத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இருக்கின்ற நிதிநிலை அறிக்கையை 1966-67-ம் ஆண்டோடு ஒப்பிட்டு, பல விவரங்களைக் கூறி இருக்கிறார் முதல்வர். 1966-67-ஐ விட 100 சதவிகிதத்திற்குமேல் வருவாய் கூடியிருக்கிறது. வளருகின்ற சமுதாயத்திற்கு ஏற்ற வகையில் மக்களுக்கு நிதியை ஒதுக்கியிருக்கிறார்களா என்றால் நிச்சயமாக இல்லையென்றுதான் கூற வேண்டும். 1966-67-ல் கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம் அந்த ஆண்டு வருவாயில் 23 சதவீதம். இன்றைக்கு இந்த ஆண்டு வருவாயில் 22 சதவீதம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் நலன், வேலைவாய்ப்பு போன்றவற்றிற்காக 1966-67-ல் இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இன்றையதினம் 1 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும் வேலையில் அமைதி இல்லை, வேலைவாய்ப்பு இல்லை. ஆகவே, தொழிலாளர் நலனுக்காக அதிகமாகத் தொகையை ஒதுக்க வேண்டும். மேலும், என்னுடைய மாவட்டத்தில் 6 மாத காலமாக லேபர் ஆபீசர் இல்லாமல் இருக்கிறது.

விஞ்ஞானத் துறையில் முன்னேறுவதற்காக 1966-67-ல் 8 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இன்றைய தினம் 14 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கழிந்த ஆண்டு 16 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்போது அந்த அளவு குறைந்துபோய் இருக்கிறது. ரஷ்யா போன்ற நாடுகள் எந்த அளவிற்கு விஞ்ஞானத்தில் முன்னேறியிருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். சந்திரனை எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிற நிலைமை இருக்க, இங்கே "கழுதை தேய்ந்து கட்டெறும்பான" கதை போல தொகை குறைந்துகொண்டே போகிறது. விஞ்ஞானத்திற்கு முக்கியத்துவம் தராத நிலையில் இருக்கிறோம். அதிகமான முக்கியத்துவம் தர வேண்டும்.

அடுத்தபடியாக மாநில சுயாட்சியைப்பற்றி அதிகமாக எடுத்துக்கூறப்பட்டது. பிரிவினை கேட்கவில்லை என்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் நிலை என்னவென்றால், ஆட்டுத்தோல் போர்த்திய புலியைப்போல, அதிக அதிகாரம் என்ற போர்வையில்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 மார்ச் 9

நாட்டுப் பிரிவினை கோரிக்கை வளர்ந்து வருகிறது. அதிக அதிகாரத்தைக் கேட்கிறோம் என்று சொல்வது பிரிவினைக்குத்தான் வழி வகுக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன் நாம் பெற்ற சுதந்திரத்திற்கும், சிறப்பாக நடைபெற்று வருகிற ஜனநாயகத்துக்கும், 55 கோடி மக்களின் இரத்தத்தில் ஊறிக் கிடக்கும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் உலை வைப்பதற்கு அரசோ அல்லது அங்கத்தினர்கள் சிலரோ நினைத்தால், அது நிச்சயம் நடைபெறாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக அந்தப் பிரிவினை கோரிக்கை தூக்கி எறியப்படும் **என்பதைச்** சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, அதிக அதிகாரங்களைக் கேட்கிறோம் என்கிறார்கள். இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு எந்த முறையில் அரசு செயல்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். தொழில் துறையில் இந்த மாநிலம் அகில இந்தியாவில் மூன்றாவது நிலையில் இருந்தது. இப்போது 21-வது இடத்தில் இருக்கிறோம். தொழில் துறையில் 1966-ல் இருந்த அதிகாரத்திலிருந்து எதுவும் எடுக்கப்படவில்லை. அதிக அதிகாரம் இருக்கிறது. அப்படி இருந்தும், தொழில் துறையில் முன்னேற முடியவில்லை.

மேலும், நமது நகரத்திலும், பல்வேறு இடங்களிலும் பல்வேறு வீடுகளையும் மத்திய அரசாங்க சுங்க வரி அதிகாரிகள் சோதனை செய்தார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. அதைப்பற்றி முதலமைச்சர் அவர்கள் ஏன் அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. ஒருவேளை மத்திய அரசாங்க அதிகாரிகள் தவறு செய்தார்களா? அல்லது இங்கேதான் தவறு இருக்கிறதா என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இன்றையதினம் மாநில சுயாட்சி என்பது நிச்சயமாக ஆபத்தானது. அது கடைசியில் எங்கு போய் முடியுமோ என்று அச்சப்படக்கூடிய நிலைமை இருக்கிறது.

அடுத்தபடியாக, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த சம்பவம்குறித்து ஜஸ்டிஸ் ராமஸ்வாமி அவர்கள் ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் பல்வேறு வகைகளில் அங்கே இறந்தது உதயகுமார் என்கிற மாணவன் அல்ல என்ற கருத்துப்பட அறிவித்தார்கள். அன்று மாணவன் உதயகுமார் இறந்தான் என்று பத்திரிகைகளில் விளம்பரம் வந்த



1972 மார்ச் 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

பொழுது, "தவறான முறையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது" என்று இந்த மன்றத்தில் முதல்வர் அறிவித்தார்கள். ஆனால் இன்றையதினம் அங்கு இறந்தது உதயகுமார்தான், இறந்தது சர்வகலாசாலை மாணவன்தான் என்று ஜஸ்டிஸ் ராமஸ்வாமி அவர்கள் நிச்சயமாகக் கூறியிருக்கிறார்கள். அந்த நிலையிலே ராமசாமியின் அறிக்கை வந்தவுடனே நம்முடைய முதலமைச்சர் ராஜிநாமாச் செய்திருக்கவேண்டும். உண்மைக்கு மாறாக இந்த மன்றத்திலே கருத்துக்களைத் தெரிவித்தார்கள் . . .

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** உண்மைக்கு மாறான கருத்துக்களைத் தெரிவித்தார்கள் என்று அவர்கள் சொல்ல வேண்டுமானால் அதற்கான ஆதாரத்தோடு சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து படித்துக்காட்டிச் சொல்ல வேண்டும். உதயகுமார் இறந்தாரா என்பதை உறுதிசெய்வதற்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை என்றுதான் சொன்னார்கள். கிடைத்திருக்கிற படத்தைக் காட்டி உதயகுமார் இறந்தாரா என்பதற்கு அதை உறுதி செய்வதற்கு இல்லை என்றுதான் முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்களேதவிர கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப்போல் குறிப்பிடவில்லை. முதலமைச்சர் அவர்கள் குறிப்பிடாததை அடிப்படையாக வைத்துக்கொண்டு முதலமைச்சர் அவர்கள் ராஜிநாமாச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள், முதலமைச்சர் ராஜிநாமாச் செய்யவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள் என்றால் நீங்கள் எங்களுக்கு முதலமைச்சராக இருப்பதில் விருப்பம் இல்லை, நீங்கள் ராஜினாமாச் செய்யவேண்டுமென்று அவர்கள் சொல்லலாம்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** நீங்கள் இதனைக் கேட்பீர்கள் என்று நினைத்துத்தான் நான் ஆதாரத்துடன் வந்திருக்கிறேன். சட்ட மன்றத்திலே ஜூலை மாதம் 26-ஆம் தேதியன்று திங்கட்கிழமையன்று நடந்த நடவடிக்கைக் குறிப்பின் அச்சடித்த காப்பியிலிருந்து படிக்கிறேன். துணைத் தலைவர் அவர்களின் அனுமதியோடு படிக்கிறேன். பக்கம் 567-ல் பாரகிராப் இரண்டிலே "இதற்குப் பிறகு பத்திரிகையொன்றில் தவறான செய்தி வந்தது, சுதேசமித்திரன் பத்திரிக்கையில். அதில் இறந்தவர் மாணவர் ஒருவர் என்றும் கடலூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பிறகு

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1972 மார்ச் 9

இறந்துவிட்டார் என்றும் ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தார்கள்" என்று கூறியிருக்கிறார்கள். அப்பொழுது நாங்கள் சொன்னோம் இறந்தவர் மாணவர்தான் என்று சொன்னோம் . . .

**திரு. நா. வீராசாமி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார், கனம் உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் சட்டப் பேரவையில் பேசிய முழுப் பேச்சையும் படிக்காமல் ஒரு சொற்றொடரைத் தனியாக எடுத்துச் சொல்வது சரியல்ல. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியபொழுது உதயகுமார் இறந்தார் என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கிறது என்றுதான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஜேம்ஸ் அவர்கள் சிம்பிளாகச் சொல்லவேண்டும். முதலமைச்சர் அவர்கள், இறந்தது உதயகுமார் அல்ல என்று சொன்னதாகச் சொல்கிறீர்களா? அப்படி முதலமைச்சர் அவர்கள் சொல்லவில்லையென்றுதான் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் போலீஸ் தகவல், படங்கள் முதலானவற்றைக் காட்டித்தான் சொன்னார்கள் இது உதயகுமாரின் படம்தான் என்று சொல்வதற்குப் போதுமான ஆதாரம் இல்லை, அதை இப்பொழுது உறுதி செய்யமுடியாது என்றுதான் சொன்னார்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** முதலமைச்சர் அவர்கள் அவ்வாறு சொன்னார்கள். ஆனால் நாங்கள் உதயகுமார்தான் என்று சொன்னோம். பத்திரிகைகளிலே உதயகுமார் . . .

**திரு. ஜி. ராஜாராம்:** நீதிபதி அவர்கள் ஜட்ஜ்மெண்டிலேகூட உதயகுமாராக இருக்கலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள், உதயகுமார்தான் என்று சொல்லவில்லை.

THIRU R. PONNAPPA NADAR: In all probability என்றுதான் சொல்லியிருக்கிறார்கள் Relative Portions may be read

**திரு. ஜே. ஜேம்ஸ்:** அன்றைய தினம் நாங்கள், இறந்தது உதயகுமார் தான் என்று கூறினோம். பத்திரிகையிலே இறந்தவர்



1972 மார்ச் 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

மாணவர் என்று பிரச்சாரம் பண்ணுகிறார்கள், பத்திரிகைகளில் தவறான செய்தியைப் பிரசுரிக்கிறார்கள் என்று முதல்வர் சொன்னார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** முதலமைச்சர் அவர்கள் வாசகத்திற்கு நீங்கள் நோக்கம் கற்பித்துப் பேசுவது சரியல்ல. முதலமைச்சர் அவர்கள், உதயகுமார் அல்ல என்று பாஸிடிவ் ஆன்ஸர் கொடுத்தாரா என்றுதான் சொல்லவேண்டும்.

THIRU J. JAMES: I leave the matter to the Chair.

MR. DEPUTY SPEAKER: That is better.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** இறந்தது உதயகுமார்தான் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. கமிஷன் அவர்களும் கூறியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அறிக்கையை முழுவதும் படிக்கவில்லை என்று நினைக்கிறேன். நீதிபதியவர்கள் திட்டவட்டமாக, இருக்கக் கூடும் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

THIRU R. PONNAPPA NADAR: What is "proved" and "not proved" is defined under the Evidence Act.
இன் ஆல் பிராபபிலிட்டி என்று சொன்னால் அவர்களுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையிலே உதயகுமார்தான் என்ற கருத்துக்கு வந்திருக்கிறார்கள். இன் ஆல் பிராபபிலிடி என்றுதான் சொல்லியிருக்கிறார்கள், பிராபபிலிடி இல்லை என்று சொல்லவில்லை.

THIRU J. JAMES: I will read from the findings of the Commission. In Page 38 of the Commision's report, it is found as follows:—

"Now that I am able to see with the magnifying glass the letters K.P.S. on this ring, it is fairly clear that the dead body is that of Udayakumar."

It is evident. . . . .

THE HON. THIRU S. J. SADIQ PASHA: That relates to an alleged letter. It is no finding. Nowhere it is said that the dead body is that of Udayakumar.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* ஜேம்ஸ் அவர்கள் விவாதத்திற்குரிய பிரச்னைகளைக் கிளப்பவேண்டாம்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member started reading the Hon. Chief Minister's speech and said that the Hon. Chief Minister had said "it was not Udayakumar". He was reading from the official Report. He must either read the portion wherein the Hon. Chief Minister had said 'it was not Udayakumar'. Otherwise, he must withdraw those words.

THIRU J. JAMES : If I am asked to prove I am prepared to prove it on the floor of the House.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : There is no question of proof. You read the portion wherein the Hon. Chief Minister is reported to have said "it is not Udayakumar".

MR. DEPUTY SPEAKER : The hon. Member Thiru James when he refers to some documents, must first get permission of the Chair so that the Chair would have time to go through the text.

THIRU R. PONNAPPA NADAR : He was reading from the proceedings.

MR. DEPUTY SPEAKER : Not from the proceedings of the Assembly.

THIRU J. JAMES : Before I read, I got permissin of the Speaker.

MR. DEPUTY SPEAKER : You were reading extracts from some judgment. You must have got permission previously from the Chair.

THIRU R. PONNAPPA NADAR : Not necessary. That is a copy presented to the House and it may be referred to.

*திரு. ஜே. ஜேம்ஸ் :* அதோடு முதலமைச்சர் அவர்கள், அவர்களுக்குப் பாராட்டைத் தெரிவித்திருக்கிறார்கள். அன்றைய தினம் . . ...

THE HON. THIRU Si. Pa. ADITANAR : The hon. Member said that he was going to read from offcial report and that the Hon. Chief Minister had said that 'it is not Udayakumar'. Either he must withdraw that word or read that



portion. He cannot riggle out of it since it is an allegation made against the Hon. Chief Minister. He must either read the portion or withdraw the words.

THIRU R. PONNAPPA NADAR : There is no question of riggling or withdrawing. What the Hon. Member has read is from printed portion of Hon. Chief Minister's speech. That is from the official copy of proceedings given to us. Reading may be in one sense and understanding may be in another sense. I do not know why the Hon. Minister is so much worried about the contents.

THIRU J. JAMES : My time is being taken by others.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* முதலமைச்சர் அவர்கள் சொன்னது இறந்தது உதயகுமார் அல்ல என்று என்று சொன்னீர்கள். பாஸிடிவ் ஆன்ஸர் கொடுத்தார்களா? அதிலே என்ன சொன்னார்கள் என்பதைப் பற்றித்தான் நீங்கள் சொல்லவேண்டும்.

*திரு. ஜே. ஜேம்ஸ் :* எனக்கு டைம் வேண்டும், சொல்கிறேன். உதயகுமார் அல்ல என்று பொருள்பட சொன்னார்கள் என்றுதான் சொன்னேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன் :* தலைவரவர்களே, அவர்கள் தாங்கள் சொல்வதன் பொருளை உணர்ந்து சொல்கிறார்களா அல்லவா என்று தெரியவில்லை. உத்யகுமார்தான் என்று உறுதியாகச் சொல்வதற்குப் போதுமான காரணங்கள் இல்லை என்ற கருத்தில்தான் முதலமைச்சரவர்கள் கூறினார்கள். உதயகுமார் அல்ல என்றுதான் கூறியதாக அங்கத்தினர் அவர்கள் கூறுகிறார்கள் அந்தத் தொடரில் சிறுசிறு சொற்கள்தான் சேர்ந்துள்ளன என்றாலும் பொருள் வேறுபாடுகள் நிறைய இருக்கின்றன. அந்தப் பொருளைத் தெரியாமல் சொல்கிறார்களா? அப்படிப்பட்ட தவறான குற்றச்சாட்டை முதலமைச்சரவர்கள்மீது கூற வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஜே. ஜேம்ஸ் :* முதலமைச்சரவர்கள் கூறியிருப்பது உதயகுமார் அல்ல என்ற பொருள்படக் கூறினார் என்று சொல்கிறேன்.

[1972 மார்ச் 9

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மீண்டும் தவறைச் செய்கிறார்கள். நீங்கள் சொல்லுகின்ற சொற்றொடரில் முதலமைச்சர்மீது குற்றச்சாட்டு வரும். அப்படிச் சொல்லவில்லை என்று ஆதாரத்தோடு சொல்கிறேன். உதயகுமார்தான் என்று நிரூபிக்கப்பட ஆதாரமில்லாத நிலையில் இப்பொழுதே அதை உறுதி செய்ய முடியாது என்ற கருத்தில்தான் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் நீங்கள் சொல்வது, முதலமைச்சரவர்கள் உதயகுமார் அல்ல என்று கூறியதாகப் பொருள்படும். இரண்டுக்கும் கருத்து வேறுபாடு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பொருள்படுவதாகக் கூறுவது பொருத்தமாகத் தெரியவில்லை. பொருள்படுவதை எப்படி நிரூபிக்க முடியும்?

**திரு. ஜே. ஜேம்ஸ்:** I am reading the portion பக்கம் 558-இல்,

"மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: மீண்டும் மீண்டும் இந்தத் தடியடிப் பிரயோகத்தில் உயிர்ச்சேதம் ஏற்பட்டது என்று கூறுகிறார்கள். நிரூபிக்க இயலுமா? உயிர்ச்சேதத்திற்கு ஆளான மாணவர் யார்? அவருடைய பெயரைச் சொல்ல முடியுமா?" என்றும், பக்கம் 567-இல் "இதற்குப் பிறகு பத்திரிகையொன்றில் தவறான செய்தி வந்தது, 'சுதேசமித்திரன்' பத்திரிகையில். அதில் இறந்தவர் மாணவர் ஒருவர் என்றும், கடலூர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு பிறகு இறந்துவிட்டார் என்றும் ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தார்கள்."

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேற்கொண்டு வாசியுங்கள்.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** "பின்னர் அவர்களே உண்மையைப் புரிந்துகொண்டு இன்று காலைப் பத்திரிகையான 'தினத்தந்தி' பத்திரிகையில் தாங்கள் கொடுத்த தவறான செய்தியால் மாணவர்களிடையே பதட்டம் ஏற்பட்டுவிடுமோ என்று கருதி அச்செய்தி தவறானது என்று 'சுதேசமித்திரன்' சார்பிலே ஒரு அறிவிப்பைக் கொடுத்திருந்தார்கள். அப்படிப்பட்ட பத்திரிகைத் தர்மத்தை உள்ளபடியே பாராட்டுகின்றேன்" என்று இருக்கிறது.



1972 மார்ச் 9]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பத்திரிகைக் கருத்து இருக்கலாம். அதை ஒரு சட்டமன்றத்திற்கான ஆதாரமாகக் கொண்டு வந்து முதலமைச்சரைக் குற்றம் சாட்ட முடியாது.

**திரு. ஜே. ஜேம்ஸ்:** சுதேசமித்திரன் பத்திரிகையில் வந்த செய்தி தவறு என்று கருத்தைக் கூறினார்கள். அதிலிருந்து இறந்தது மாணவர் என்று சுதேசமித்திரன் பத்திரிகையில் வந்தது தவறு என்று முதல்வர் கூறினார் என்று புரிந்துகொண்டேன்.

THE HON. THIRU Si. Pa. ADITANAR: On a point of definite order. He started by saying that he has got definite proof and that he is going to read from the proceedings to show that the Hon. Chief Minister has said that it was not Udayakumar. Please read that portion or withdraw.

THIRU J. JAMES: I am reading it. Why do you threaten me?

THIRU R. PONNAPPA NADAR: If the Minister talks so rudely, we do not know what to do. He is a Minister and he should respect another member

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** யாருமே கோபப்பட வேண்டியதில்லை, கட்சித் தலைவர் கோபப்பட வேண்டியதில்லை. கோபப்பட எதுவுமில்லை. யாரும் கோபப்பட எதுவுமில்லை (குறுக்கீடு) பிரைவேட் கான்வர்சேஷன் எல்லாம் வேண்டாம். நீங்கள் சொன்னது சாதாரண பாயின்ட்தான். நீங்கள் இதை இப்படிப் புரிந்துகொண்டு சொல்லவில்லை, அப்படிப்பட்ட பொருள் இல்லை என்று விட்டுவிட வேண்டியதுதானே.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** மினிஸ்டர் கோபப்பட உரிமை இருக்கிறது. அவரும் உறுப்பினர், நாங்களும் உறுப்பினர்கள்தானே, எங்களுக்குக் கோபப்பட உரிமையில்லையா? எங்களுக்கு உரிமையில்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எல்லோருக்கும் ஒரே உரிமைதான்.

THIRU KOVAI CHEZHIAN: Ask him to withdraw.

THIRU R. PONNAPPA NADAR : You should not tell that. The Chair will have to say and we know how to obey the Chair.

THE HON. THIRU Si. Pa. ADITANAR : I want to make it very plain that I am not angry. I am only sorry. It is the decorum and the dignity of the House that is being affected. The hon. Member said that he is going to read a portion where the Hon. Cheif Minister is reported to have stated that it was not the body of Udayakumar. He must read it or withdraw it. That will accord with the dignity of the House.

THIRU J. JAMES : I proceed to the next point.

MR. DEPUTY SPEAKER : The Members have got a right to ask you whether you are pressing that point. That is what the Minister has been saying.

THIRU J. JAMES : I am proceeding to the next point.

MR. DEPUTY SPEAKER : It is not correct to do like that.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** ஜேம்ஸ் அவர்கள் முதலமைச்சர் சொன்னதாக ஒன்றைச் சொன்ஞர்கள். அதற்கு ஆதாரமிருந்தால் ஆதாரத்திற்குண்டானவைகளைப் படித்துக் காட்டியிருக்கலாம். நீங்கள் படித்த பகுதியிலேயே அந்த ஆதாரம் இல்லை என்பது உங்களுக்கே தெரியும். நான் இப்படிப் பொருள் கொண்டேன் என்று பேசுவது முறையல்ல. நீங்கள் படித்ததிலேயே ஆதாரமில்லை என்று தெரிகிறது. ஆதாரமில்லாத ஒன்றைத் திரும்பத் திரும்பப் பேசுவது ஏதோ நாங்கள் தவறு செய்ததைப் போலவும், நீங்கள் உண்மை பேசுவதைப் போலவும் சொல்வது சரியல்ல.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் கூறிஞர்கள், இதற்கும் அப்படியும் பொருள் இருக்கும் என்று சொன்ஞர்கள். அப்படியும் பொருள் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் சொன்னது, அப்படித் தவருன பொருள் உண்டாகும்படி பேசக் கூடாது என்பதுதான். இது குற்றச்சாட்டு. குற்றச்சாட்டு இல்லாததைச் சொன்ஞல் யாரையும் பாதிக்காது. ஆனல்



குற்றச்சாட்டுச் சாட்டும்பொழுது பொருளை தவருக உணர்ந்து பேசக்கூடாது. அப்படி முதலமைச்சர் பேசியதாகக் குற்றம் சாட்ட வேண்டாமென்று தான் சொன்னேன். இப்பொழுதுகூட நீங்கள் சொன்ன குற்றச்சாட்டை இப்பொழுது நிரூபிக்கப் போதிய ஆதாரமில்லாததால் நான் அந்தக் குற்றச்சாட்டைச் சொல்லவில்லை என்று சொல்லி விட்டால் போதும்.

THIRU J. JAMES : I leave the matter there. That is what I say.

MR. DEPUTY SPEAKER : You say you are not clear.

THIRU J. JAMES : As far as I am concerned, I am quite clear.

MR. DEPUTY SPEAKER : You yourself said that you guessed something from the statement of the Chief Minister. You understood something else.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** நான் தெரிந்த அளவில் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** முதல்வர் அவர்கள் சொன்னதில் எனக்கு அந்தப் பொருள் தொனித்தது என்ற முறையிலே சொல்கிறேன் என்று சொல்வது சட்டமன்ற மரபுக்குச் சரியானதல்ல.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** இந்தப் பிரச்னை மறுபடியும் இந்த அவையில் வரக்கூடாது என்பதற்காக, தீர்ப்பு, 35-வது பக்கத்தில் நீதிபதியால் வழங்கப்பட்டிருக்கிறது. அதில் ஒரு பகுதியைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"First of all from the proceedings of the Legislative Assembly a copy of which is now before me it is now found that the Chief Minister has nowhere stated that the body was not that of Udayakumar. He has not said anything definite about the identity."

என்று மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுமட்டு மல்லாமல் அவர்கள் வழங்கிய தீர்ப்பைப்பற்றிய கருத்தைச் சொல்லும்போதும்

"From that of course I am not coming to the conclusion that the dead body is not that of Udayakumar for reasons which

[திரு. க. அன்பழகன்] [1972 மார்ச் 9

I would refer to infra. It appears to me that the dead body is in all probability that of Udayakumar."

என்று ஆக இரண்டு இடங்களிலேயும் அந்த முடிவைச் சொல்லும் பொழுது பெரும்பாலும், மிகப்பெருமளவில் உதயகுமாரின் உடலாகத்தான் இருக்க வேண்டுமென்று கருதுகிறேன், ப்ராபபிலிட்டி என்றுதானே தவிர எந்த இடத்திலேயும் முதலமைச்சரவர்கள் உதயகுமார் அல்ல என்ற கருத்தைச் சொல்லவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே அங்கத்தினர் அவர்களும் தாம் பேசியதற்கு வருத்தம் தெரிவித்துக்கொண்டு இதைவிட்டுவிட்டால் பிரச்னை இல்லை.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** 'உதயகுமார் அல்ல' என்று கூறியதாகக் கூறியதை வித்ட்ரா பண்ணிக்கொள்கிறேன்.

THE HON. THIRU S. Pa. ADITANAR :—rose.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** I am not yielding. அடுத்தபடியாக, லஞ்ச ஊழல் புகார்களை இந்த அரசாங்கத்தின் மீது தாராளமாகக் கூறி வருகிறார்கள். அதை நிரூபிக்க முடியுமா என்று இந்த மன்றத்திலே கேள்விக்குறியாக எழுப்பப்பட்டு வருகிறது. இந்த அரசாங்கத்திற்கு நான் சொல்லிக் கொள்வதெல்லாம், வதந்திகளைப் பற்றி எங்களைப் போன்ற அங்கத்தினர்கள் கேட்கத்தான் முடியுமே தவிர, அதற்கான ஆதாரங்களைக் கொடுக்க எங்களிடத்தில் வாய்ப்பில்லை. நிச்சயமாக அதைக் கொடுக்க முடியாது. வதந்திகளை வேண்டுமென்றேதான் கூறுகிறார்களா அல்லது உண்மையிலேயே அதற்கு அர்த்தம் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. ஏனென்றால் நாங்கள் இப்பொழுது கேட்டுக் கொண்டிருப்பதிலே ஒருவேளை முறையாக இருந்தாலும் இருக்கலாம், அதற்கு நீதி விசாரணை செய்ய வேண்டும், ஆங்காங்கே லஞ்ச ஊழல்கள் மலிந்து விட்டன. அதற்காக நீதி விசாரணை செய்ய வேண்டுமென்று நாங்கள் கேட்கிறோம். ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை ஒரு நீதிபதியை நியமித்து விசாரிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் நேரத்தை இன்னும் ஒருசில நிமிஷங்கள் நீடித்துக்கொள்ளலாம் என்று கருதுகிறேன். அப்பொழுதாவது விரைவில் பேசி முடியுங்கள்.



1972 மார்ச் 9] [திரு. ஜே. ஜேம்ஸ்]

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இன்னும் இரண்டு நிமிஷங்களில் முடித்து விடுகிறேன். எனவே நீதி விசாரணை நடத்த வேண்டும். இந்த அரசாங்கத்தின்மீது கூறப்படும் புகார்கள் ஒருவேளை ஆதாரமற்ற புகார்களாக இருக்குமோ என்னவோ தெரியவில்லை, வதந்திகள் என்றால் அவைகளையெல்லாம் வதந்திகள் என்று நிரூபிக்கவும், இந்த அரசின் மீது ஏற்படுகின்ற களங்கத்தைப் போக்கவும் அது ஏதுவாக இருக்கும்.

உதாரணமாகச் சொல்லுகிறேன். வதந்தி அல்ல. கன்னியாகுமரி ஜில்லாவிலே ஏகப்பட்ட ஊழல்கள் நடைபெறுகின்றன. சுப்பிரமணியம் என்ற நபர் முதலமைச்சருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்கள். பள்ளக்குளம் என்ற இடத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டம் இருக்கிறது. கிட்டத்தட்ட 900 ஏக்கர் ஏரியா இருக்கிறது. அது வன இலாகாவை சேர்ந்தது. அங்கிருந்து பல லட்சம் ரூபாய் பெறுமான தடிகளை எடுத்துச் சென்று ஒரு வன இலாகா அதிகாரி விற்றுக் கொண்டிருக்கிறார். அதிலே ஈடுபட்டு உள்ள ஆட்கள் குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதைப் பற்றிய ஒரு மனு முதலமைச்சர் அவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது, அதன் நகல் எனக்கும் தரப்பட்டிருக்கிறது. இது நிச்சயமாக நடந்த ஒன்று. இதைப்பற்றி விசாரிக்க வேண்டும்.

கன்னியாகுமரி ஜில்லாவில் போக்குவரத்து இலாகா இருக்கிறது. அங்கு உத்தியோகம் வாங்கித் தருவதாக ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் பணம் வாங்கி தொழில் நடத்துவதாகக் கூறப்படுகிறது. அங்குள்ள அதிகாரி ஒருவர் சுற்றறிக்கை கூட விட்டிருப்பதாகத் தெரிகிறது. 'இம்மாதிரி சிலர் வேலை வாங்கித் தருவதாகப் பணம் கேட்பதாகத் தெரிகிறது; அதற்கு நாங்கள் பொறுப்பு அல்ல' என்று மக்களை ஜாக்கிரதையாக இருக்கும்படி சுற்றறிக்கை விட்டதாகவும் தகவல் இருக்கிறது. இந்த இரண்டு விஷயங்களும் வதந்திகள் அல்ல அரசாங்கத்திற்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்று நான் கற்பனை செய்து இதைக் கூறவில்லை. இதைப் பற்றி விசாரிக்க வேண்டும், தேவையான நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்,

### (6) அறிவிப்பு.

### உறுப்பினர் திரு. ஏ. சுப்பிரமணியம் விடுதலை செய்யப்பட்டது குறித்து.

MR. DEPUTY SPEAKER : I have to announce to the House that I have received the following communication from the Superintendent of Police, Coimbatore :—

" With reference to my DTO 221125, dated 22nd February 1972 Thiru A. Subramaniam, M.L.A. Socialist Party, President of all India (H.M.S.), Singanallur Assembly Constituency, Coimbatore District had been released from Central Jail, Coimbatore on 8th March 1972 at about 8 00 p.m. The case against him has been withdrawn.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இன்று இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளைக் காலை 9 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

### (7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

#### *A. Statutory Rules and Orders.*

51. Notification issued with G.O. Ms. No. 2630, Rural Development and Local Administration, dated the 2nd December 1971, in regard to certain amendments relating to refixation of strength of the newly constituted municipalities. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920)]

52. Notification issued with G.O. Ms. No. 2126, Rural Development and Local Administration, dated the 17th September 1971, in regard to an amendment to rule 8 in schedule IV to the Madras City Municipal Corporation Act, 1919. [Laid on the Table of the House under section 348 (*d*) of the Madras City Municipal Corporation Act 1919 (Tamil Nadu Act IV of 1919)]

53. Notification issued with G.O. Ms. No. 2665, Rural Development and Local Administration, dated the 6th December 1971, in regard to certain amendments to the Municipal Council Provident Fund Rules. [Laid on the Table of the House under section 304 (*d*) of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920).]



#### *B. Reports, Notifications and Other Papers.*

55. Noification issued with G.O. Ms. No. 711, Labour, dated the 19th June 1971 in regard to an amendment to Rule 12-C of the Tamil Nadu Factories Rules, 1950.

@ 56. Second Report of the Committee on Government Assurances, (Fifth Assembly)

---

@ Laid on the Table of the House on 8th March 1972.

## இணைப்பு

[135-ம் பக்கத்தில் 382-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

(அ) இந்திய அரசு, சென்னைக்கு அருகில் உள்ள அலமாதியில் மத்திய எருமைப் பண்ணை ஒன்றைத் துவங்கத் திட்டமிட்டுள்ளது.

(ஆ) (1) நான்காவது திட்டக் காலத்தில் இப்பண்ணையை அமைப்பதற்காக இந்திய அரசினால் ரூ 82.91 லட்சம் ஒப்பளிக்கப் பட்டுள்ளது.

(2) முதல் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் 300 முர்ரா எருமைகள்/இனப்பெருக்க வயதடைந்த கிடேரிகள் கொண்ட தொடக்க இருப்பு படிப்படியாக ஏற்படுத்தப்படும் பஞ்சாபிலுள்ள கால்நடை வளர்ப்புப் பகுதிகளிலிருந்தும், பல்வேறு மாநில எருமைப் பண்ணைகளிலிருந்தும் இவை பெறப்படும்.

(3) தொழில் நுட்ப திட்டங்களுக்கு இணங்க மட்டுமே பண்ணைகளில் கால்நடைகள் இனப்பெருக்கம் செய்யப்படும்.

(4) இனவிருத்தி சோதனை, இனவிருத்தித் திறனின் தன்மையைக் கண்டுபிடிக்க நடத்தப்படும். அது அரசு கால்நடை வளர்ப்புப் பண்ணைகள், விந்து சேமிப்பு நிலையங்கள் அனைத்து நாடுகள் கால்நடை வளர்ச்சித் திட்டப் பகுதிகள் முதலிய வற்றிற்கு அதனதன் சிறந்த தன்மையையொட்டி வழங்கப்படும். உள்ளதற்குள் சிறந்தவை பண்ணையின் உபயோகத்திற்காகப் பண்ணையிலேயே வைத்துக்கொள்ளப்படும்.

(5) இனவிருத்தித் திறனுடைய எருதுகளுக்கும் (தந்தை விலங்கு), அதிகப் பால் தரும் எருமைகளுக்கும் (தாய் விலங்கு), பிறந்த 80 முர்ராக் காளைகள் மாநிலங்கள், யூனியன் நேரடி ஆட்சிப் பகுதிகள் முதலியவற்றிற்குக் கால்நடை வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றும் பொருட்டு நான்காவது ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இனவிருத்திக்கென்று விற்பனை செய்யப்படும்.

(6) சென்னைக்கருகில் உள்ள அரசினர் பாற்பண்ணைக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 1,000 முதல் 1,200 லிட்டர் பால் கிடைக்கச் செய்யப்படும்.



(7) பண்ணை முழு அளவில் நிறுவப்படும்பொழுது ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 லட்சம் வருமானம் கிடைக்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

(8) பண்ணையின் சிறந்த வகை இனங்களின் இனவிருத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 2.5 சதவிகிதத்திலிருந்து 3.5 சதவிகிதம் ஆக உயரும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

(9) பண்ணை முழு அளவில் நிறுவப்படும்பொழுது அதில் 750 கால்நடைகள் இருக்கும். இதுவே நாட்டில் உள்ள முர்ரா எருமைப் பண்ணைகளில் பெரியதாக இருக்கும். அறிவியல் முறை வளர்ப்புப் பண்ணையாக இது இருக்குமேயன்றி வணிகத் தன்மை கொண்ட பண்ணையாக இருக்காது.

(10) இந்தப் பண்ணை, பாற்பண்ணை மந்தைகளை நிர்வகித்தல், தீவனப்பயிர்கள், அறிவியல் முறையில் கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் ஒரு கட்டிட விளக்கப் பண்ணையாகத் திகழும். இப்பண்ணை, மற்ற நாடுகளில் இன வளர்ப்புக் காரியத்திற்காக இனவிருத்திச் சோதனை செய்யப்பட்ட முர்ரா எருமைக் கடாக்களையும் வழங்கலாம்.

## Answer.

(a) The Government of India have proposed to start a Central Buffaloe farm at Alamadhi near Madras.

(b) (1) A sum of Rs. 82.91 lakhs have been sanctioned by the Government of India for setting up the farm during the Fourth Plan period.

(2) A foundation stock of 300 Murrah buffaloes/mature heifers will be gradually built up during the first two or three years by procuring them the breeding tracts of Punjab and also from various State Buffaloe Breeding Farms.

(3) Breeding of cattle at the farm will be strictly in accordance with the technical programme.

(4) Progeny testing will be conducted to find out the genetic merit and it will be issued to State Breeding Farms, Semen Banks, ICDP areas, etc., according to its merit, the very best being retained in the farm for use there.

(5) About 80 young Murrah bulls (sons of proven sires of high yielding dams) will be sold for breeding purposes every year from about the fourth year onwards to States, Union, Territories, etc., for Cattle Development Programme.

(6) About 1,000 to 1,200 litres of milk per day will be made available to the Government Dairy Plant near Madras.

(7) The annual anticipated receipt when the farm is fully established will be Rs. 6 lakhs.

(8) The genetic merit of the herd for production is expected to increase at the rate of 2.5 per cent to 3.5 per cent annually.

(9) The farm when fully established will have a herd strength of about 750 animals and will be the largest Murrah Buffaloe Breeding Farm in the Country. It will be a scientific breeding farm and not a commercial farm.

(10) The Farm will serve as a demonstration farm in dairy herd management, fodder crops and scientific breeding of cattle. This farm may also supply progency tested Murrah bulls for breeding purposes in other countries.

## தமிழ்நாடு சட்டப்பேரவை.

---

### வெள்ளிக்கிழமை, 1972 மார்ச் 10

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### பாஞ்சாலங்குறிச்சி கோட்டை

*401 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

பாஞ்சாலங்குறிச்சி கோட்டையை அகழ்ந்தெடுத்துப் பாதுகாக்க ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு? செலவழிக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை அகழ்ந்து எடுத்துப் பாதுகாக்க ஆரம்பத்தில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 8,500 தற்போது இதற்காக செலவழிக்கப்பட்டுள்ள தொகை ரூபாய் 7,552.

**திரு. க. சுப்பு :** தலைவர் அவர்களே, வீரம் விளைந்த மண் என்று வரலாற்றுப் புகழ் பெற்ற பாஞ்சாலங்குறிச்சியில், ஜெய்பூர், சித்தூர் போன்றயிடங்களில் ராணுவப் பயிற்சிப் பள்ளி அமைக்கப்பட்டிருப்பதுபோல் பாஞ்சாலங்குறிச்சியிலும் ஒரு ராணுவப் பயிற்சிப் பள்ளி அமைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்த இடம் வீரம் பொருந்தியதாக இருக்கலாமே தவிர அப்படி ஒரு பயிற்சிப் பள்ளி அமைக்க வேறுபல வசதிகள் வேண்டும், அதற்கான தன்மைகள் வேண்டும், அவை எல்லாம் அங்கு இருப்பதாகச் சொல்ல முடியாது. ஆனால் பாஞ்சாலங்குறிச்சியை கட்ட

பொம்மன் ஆண்டான், அங்கு அவன் அரண்மனை இருந்தது. கடைசியில் அது அடியோடு அழிந்தது ஒழிக்கப்பட்டது என்று அங்கிருந்த ஒரு மேட்டை அகழ்ந்து பார்த்ததில் தொல்பொருள் ஆராய்ச்சிக்குப் பயன்படும் சிலபல பொருள்கள் கிடைத்திருக்கின்றன. ஆனால் அவ்விடம் இப்படிப்பட்ட ஒரு பள்ளி அமைக்க ஏற்றதாக இருக்காது.

**திரு. சோ. அழகர்சாமி :** இப்போது ஒதுக்கப்பட்ட பணத்தை வைத்துக் கொண்டு அந்த இடத்தை அகழ்ந்து பார்த்ததாகச் சொன்னார்கள். ஆனால் அங்குள்ள எல்லாயிடங்களையும் அகழ்ந்து எடுத்துப் பார்க்கவில்லை என்று சொல்லப்படுகிறதே, ஆகவே இன்னும் அதிகப்படியான நிதி ஒதுக்கி அந்த இடம் பூராவையும் தோண்டி ஆராய்ச்சி செய்வதற்கு அரசு முயற்சிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அந்தப் பகுதியிலுள்ள ஒரு மேட்டுப் பகுதியை அகழ்ந்து கண்ட வகையில் அங்கு அரண்மனைத் தோட்டம், ராணியின் இருப்பிடம், திருமண மண்டபம், யானைகள் கட்டுகின்ற லாயங்கள், சில மதிள் சுவர்கள் இவைகள் மட்டும் தென்பட்டிருக்கின்றன. அவைகள் மட்டும் அகழ்ந்து காணப்பட்டிருக்கின்றன. மதிள் சுவர்கள் ஓரளவிற்குப் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. பெருமளவில் இருக்கிறது. என்று சொல்லமுடியாது. மேலும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் அதை அகழ்ந்து பார்த்தால் வேறு பல தொல் பொருள்கள் கிடைக்குமா என்பதுபற்றி யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் வரும்போது அதற்கான அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்க அரசு முன்வரும்.

**திரு எம். தேவராசன் :** பாஞ்சாலங்குறிச்சி கோட்டை தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் கீழ் வருகிறதா அல்லது நம் அதிகாரத்திற்கு உட்பட்டதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாநில அரசினுடைய தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின்கீழ்தான் ஆராய்ந்து அகழ்ந்து காணப்பட்டிருக்கிறது.

**திரு. க. சுப்பு :** அகழ்ந்து எடுக்கப்பட்ட இடம் போதுமான பாதுகாப்பு இல்லாத காரணத்தினால், சுவர்கள் எல்லாம் இடிந்து விழுந்து கொண்டிருக்கின்றன. அதைப் பாதுகாப்பதற்காகவாவது அரசாங்கம் என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறது ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அகழ்ந்து எடுக்கப்பட்ட இடத்தை பலரும் பார்வையிட்டு வருகிறார்கள். அதைப் பாதுகாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட வேண்டுமென்று குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன, தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினால். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. கா. காளிமுத்து :** பாஞ்சாலங்குறிச்சியில் ராணுவப் பயிற்சிப் பள்ளி அமைப்பதற்கு வசதி வாய்ப்பு இல்லாவிட்டாலும் அங்கு ஒரு ஆயுதப் போலீஸ் படைப் பிரிவை அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** ஆயுதப் போலீஸ் படை அமைப்பது என்பது, ஒரு பகுதியில் எப்போதும் கலவரமாக இருக்கிறது, எப்போதும் அடிக்கடி, கலவரங்கள் எல்லாம் நடைபெறுகின்றன, உடனடியாக ஆயுதப் போலீஸ் பிரிவு செல்ல வேண்டும் என்பதற்காகத்தான் அந்தயிடத்தில் வைக்கப்படுகிறது. அந்தப் பகுதி இப்போது அமைதியாக இருப்பதால் அங்கு கொண்டு போய் ஆயுதப் போலீஸ் படை வைக்க வேண்டிய அவசியமில்லை, அதற்குத் தேவையும் இல்லை.

## *Employment opportunities*

* 402 Q.—THIRU K. T. K. THANGAMANI : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Crash Programme of the Government of India for providing employment to the rural unemployed has been enforced;

(*b*) if so, the number of people employed; and

(*c*) the nature of work?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) ஆம்.

(இ) இத் திட்டம் இம் மாநிலத்தில் இரு நிலைகளில். நீலகிரி, கன்னியாகுமரி, தர்மபுரி மாவட்டங்கள் நீங்கலாக மாவட்டம் ஒன்றுக்கு 20 வட்டாரங்கள் வீதம் 10 மாவட்டங்களில் 229 வட்டாரங்களில் துவக்கப்பட்டுள்ளது. முறையே 4, 9, 16 வட்டாரங்கள் கொண்ட மேற்குறிப்பிட்ட மாவட்டங்கள் முழுவதிலுமே

இத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மைய அரசின் விதி முறைப்படி 1971-72-ல் இவ்வட்டாரங்கள் அனைத்திலும் சேர்ந்து 59,00,000 உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட வேண்டும். 31-1-1972 வரை மொத்தம் 32.09 இலட்சம் உழைப்பு நாட்கள் உருவாக்கப் பட்டுள்ளன.

(உ) (1) பெருந்திட்ட அடிப்படையில் சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்ளமைப்பு வேலைகள்.

(2) தரிசுகளை விளை நிலங்களாக்குதல், ஊராட்சி நிலங்களைத் திருத்துதல் போன்றவை.

(3) கழிவுநீர் வசதி, கரைகள் அமைத்தல் போன்றவை.

(4) நீரைப் பாதுகாத்து, நில நீரைப் பயன்படுத்துதல் போன்றவை.

(5) பாசனத் தேக்கங்களை அமைத்தல், சீராக்குதல் போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

(6) மண் வளப்பாதுகாப்பு அல்லது மனித உழைப்பு தேவைப்படும் காடு வளர்ப்புத் திட்டங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : மத்திய அரசு 1971-72-ல் 50 கோடி ரூபாய் ஒதுக்கி இந்தத் திட்டத்திற்கு ஏற்பாடு செய்திருக் கிறார்கள். நம் மாநிலத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது? கேரளா போன்ற மாநிலங்களில் இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து மூன்று ஆண்டுக் காலம் நடத்த அவர்கள் ஏற்பாடு செய்திருக் கிறார்களே, அம்மாதிரியான ஒரு திட்டத்தை இங்கும் தொடர அரசாங்கத்திற்கு ஆலோசனை உண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : முதலில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புத் தருகிற வகையில் திட்டங்கள் வகுத்து அதற்கான நிதிவசதி ஒதுக்கீடு செய்தார்கள். நாம் அதற்குப் பிறகும் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருபது வட்டாரங்கள் எடுத்துக் கொள்வது என்ற முயற்சியை மேற்கொண்டு அதற்கு அதிகமான தொகை தரவேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டோம். அந்த வகையில் ரூ. 2,65,00,000 மத்திய அரசு நமக்குத் தருகிறார்கள். முப்பது லட்சம் ரூபாய் வரையில் மாநில அரசு



பயன்படுத்தியிருக்கிறது. இந்தத் திட்டத்தை நாம் மூன்று ஆண்டுக் காலத்திற்கு வற்புறுத்தியிருக்கிறோம், மத்திய அரசும் மூன்று ஆண்டுகள் தொடர இசைவு தந்திருக்கிறது.

**திரு. கா. வேழவேந்தன்** : இந்தக் கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒன்றியங்களில் சிறப்பாக பணிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு ஒன்றியத்திற்கு ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு அதன் மூலம் பல கிராம இணைப்புச் சாலைகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு மாவட்டத்தில் இருபது ஒன்றியங்கள்தான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மற்ற ஒன்றியங்கள் எல்லாம் ஏங்கிக் கொண்டிருப் பதால் அவைகளையும் இணைத்துக் கொள்வது அல்லது சில ஆண்டுகளுக்கு இந்த ஒன்றியங்களுக்கு ஒதுக்கி அந்தப் பணிகள் முடிந்த பிறகு மற்ற ஒன்றியங்களை எடுத்துக் கொள்வதுபற்றி அரசாங்கம் ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தொடர்ந்து ஒரு மூன்று ஆண்டுக் காலத்திற்கு இந்தத் திட்டத்தை அந்தந்த வட்டாரங்களில் செயல்படுத்த வேண்டுமென்ற கருத்தை வற்புறுத்தி மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல் மற்ற வட்டாரங்களிலும் இதே அளவில் கொண்டு வருவதற்கு மத்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்து அதை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணம்தான் மத்திய அரசுக்கும் இருந்து வருகிறது. எனவே ஒதுக்கக்கூடிய நிதி அளவில்தான் திட்டத்தை எடுத்துக்கொள்ள முடிகிறது. எல்லா வட்டாரங் களையும் எடுத்துக் கொள்வது என்றால் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டிவரும். ஆகவே அந்த நிலைமை ஏற்பட்ட பிறகு, குறிப்பிட்ட வட்டாரங்கள் முடிந்த பிறகு விடுபட்ட வட்டாரங்களை எடுத்துக் கொள்ளலாம். குறிப்பாகக் கன்னியாகுமரி நீலகிரி, தர்மபுரி மாவட்டங்களில் உள்ள எல்லா வட்டாரங்களிலும் மேற்கொள்ளப்பட்டு விட்டன. மற்றயிடங்களில் இருபது, இருபது வட்டாரங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற வட்டாரங் களும் இத்திட்டத்தின் அடிப்படையில் வரவேண்டுமென்ற எண்ணம் அரசுக்கும் இருக்கிறது.

**திரு. ஜே. ஜேம்ஸ்** : தலைவரவர்களே, கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இப்போது

அவர்கள் செய்கிற வேலை அளவினை நிர்ணயித்து, டார்ன் ஓவர் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகிறது. அதன் காரணமாக குறைந்த பட்சம் ஒரு நாளைக்கு அவர்களுக்கு ரூ. 3 என்ற அடிப்படையில் கூடச் சம்பளம் கிடைப்பது இல்லை. ரூ. 2 அல்லது ரூ. 2-½ தான் கிடைக்கிறது. இதனை மாற்றி அவர்களுக்கு தினம் மினிமம், குறைந்த பட்சம் ரூ. 3 ஊதியம் கிடைக்கக் கூடிய அளவில் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, அவர்கள் செய்கிற வேலையின் அடிப்படையில் தரவேண்டுமென்று தான் இருக்கிறது. அப்போதுதான் அவர்கள் அந்தப் பணியினை சிறப்பாகச் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்ற முறையில் வைத்து இருக்கிறோம். மாதம் ரூ. 100-க்கு குறையாத அளவிற்கு அவர்கள் வேலை செய்யலாம் என்ற சூழ்நிலை இருக்கிறது. ஒரு நாளைக்கு ரூ. 3 என்று கொடுக்காமல், அவர்கள் செய்ய வேண்டிய பணிகளை 25 நாளைக்குள் முடித்து விட்டால் கூட ரூ. 100 பெற்றுக் கொள்ளலாம் என்று இருக்கிறது. அவர்கள் முன்கூட்டியே அந்த வேலைகளைச் செய்தாலும் அவர்களுக்கு அந்த ரூ. 100 கொடுக்கப்படும். அவர்கள் எந்தெந்தப் பணிகளைச் செய்ய வேண்டுமென்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திட்டங்கள் மேற்கொண்டு செயல்படுத்தி வருகிறார்கள்.

**திரு. சோ. அழகர்சாமி** : தலைவரவர்களே. கிராமப்புறங்களில் வேலையில்லாமல் உள்ளவர்களுக்கு வேலை அளிக்கும் திட்டத்தின் கீழ் ஒரு குறிப்பிட்ட சில வேலைகளைததான் செய்யலாம் என்று இருப்பதால், பல இடங்களில் பழைய ரோடுகளைப் புதுப்பித்தல், சாலைகளை அகலப்படுத்துதல், கல் பாப்புதல் போன்ற பணிகளைச் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே, பல இடங்களில் வேலை நடைபெறவில்லை. ஆகவே, அந்தந்த இடங்களில் உள்ள நிலைமைகளைப் பொறுத்து கலெக்டர்கள் பணிகளைச் செய்ய அவர்களுக்கு அதிகாரம் அளிக்கும் உத்தேசம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, எந்தெந்த வேலைகளை எடுத்துக் கொள்ளலாம் என்பதற்காக 6 தலைப்புகளின் கீழ் பல்வேறு பணிகள் செய்ய அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் வாய்ப்பு, வசதி இல்லாத நிலைமை வந்து, வேறு வேலைகள் செய்ய வேண்டுமென்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசாங்கத்திற்கு எழுதுவார்களே



யானால், அதற்கு மேல் அது பரிசிலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கலாம். ஏகப்பட்ட வேலைகளைப் பரவலாக எடுத்துக் கொண்டு விட்டு, எதையும் சரியாக செய்ய முடியாத நிலைமை ஏற்படுவதை விட, ஒரு குறிப்பிட்ட பணியினை எடுத்துக் கொண்டு அதை செய்து முடிப்பதுதான் நல்லது. ஒவ்வொரு ஒன்றியமும் பலன் பெற வேண்டுமென்ற அடிப்படையில்தான் 6 பணியினை குறிப்பிட்டு அந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. அதிலே எதையாவது மாற்றவேண்டுமென்று சொன்னால், மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆலோசனையின் பேரில் மாற்றலாம். அதைக்கூட மத்திய அரசின் யோசனையின் பேரில்தான் செய்ய முடியும். இந்த 6 குறிப்பிட்ட பணிகள் கூட மத்திய அரசு கூறியதன் அடிப்படையில்தான் செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் பணிகளைச் செய்கிற தலைப்பில் பள்ளிக்கூடம் கட்டுவதையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று நாம் மத்திய அரசுக்குச் சொன்னோம். அவர்கள் அதை ஒப்புக்கொள்ளவில்லை. அவர்கள் கூறிய தலைப்பின் கீழ்தான் இப்போது ஆங்காங்கு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. சோ. கருணைநாதன்** : தலைவரவர்களே, இத்திட்டத்தின் கீழ் புதிய சாலைகளை அமைக்கிற நேரத்தில் தனியார் பூமி குறுக்கிடுகிற காரணத்தால் அந்த வேலைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆகவே அப்படிப்பட்ட பூமிகளை அரசாங்கம் கையகப்படுத்தித்தர முயற்சிகளை மேற்கொள்ளுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : அப்படிப்பட்ட இடைஞ்சல்கள் ஏற்படுகிறபோது, அவற்றை நீக்குவதற்கு அரசாங்கம் முயற்சிகளை முறைப்படி மேற்கொள்ளும்.

*College of Karnatic Music*

* 403 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) the details of the new courses of study to be started at the College of Karnatic Music, Madras, from this year; and

(b) the details of the syllabus prepared for them?

[1972 மார்ச் 10

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :**

(அ) சென்னையிலுள்ள கர்நாடக இசைக் கல்லூரியில் புதிதாக கீழ்க்கண்ட வகுப்புகள் தொடங்க அனுமதிக்கப் பட்டுள்ளன :—

(1) புல்லாங்குழல் ;

(2) மிருதங்கம் ;

(3) பரதநாட்டியம்.

(ஆ) புல்லாங்குழல், மிருதங்கம், வகுப்புகளுக்கான பாடத் திட்டம் முடிவு செய்யப்பட்டு வருகிறது. பரத நாட்டிய வகுப்பிற்கு பரதநாட்டியத்தில் அரசு தொழில் நுட்பத் தேர்வுக்கான (உயர்நிலை) பாடத் திட்டத்தையே கர்நாடக இசைக் கல்லூரியில் ஆரம்பிக்கவிருக்கும் பரதநாட்டியம் வகுப்பிற்கும் வைத்துக் கொள்ளலாமென்று அந்தக் கல்லூரித் தலைவர் கூறியுள்ள யோசனையை ஏற்றுக்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது.

## எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணம்

*404 **வினா—திரு. சி. மணலி கந்தசாமி :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்ய அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தமிழகத்தில் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணத்தை ரத்து செய்யும் செயற் குறிப்பு இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவரவர்களே, இன்றைக்கு மாணவர்களுக்கு பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி கொடுக்கப் படுகிற காரணத்தால், எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு பீஸ் கட்டாமல் பரீட்சைக்கு செல்லுவதற்கு இந்த ஆண்டு எழுதும் மாணவர்களுக்காவது எக்சம்ஷன் அளிப்பதற்கு ஆலோசிக்கப் படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** புகுமுக வகுப்பு வரையில் இலவசக் கல்வி கொடுப்பது என்பது வேறு



1972 மார்ச் 10]

எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக்குக் கட்டணம் வசூலிப்பது என்பது வேறு. பல வகையில் நாம் இலவசக் கல்விக்கு ஆதரவு கொடுத்திருக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுக் கட்டணம் ரூ. 15 என்று நீண்ட காலத்திற்கு முன்பே இருந்து வருகிற ஒன்று. அதைக் கூட்ட வேண்டுமென்ற செயற்குறிப்பு அரசிடத்தில் இருந்தாலும், ரூ. 20 ஆக்க வேண்டுமென்று இருந்தாலும், அதை நடைமுறைப் படுத்தாமல் ரூ. 15 என்றே வசூலித்து வருகிறது. எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் இந்தக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒரு 15 ஆண்டுகள் படித்த பிறகு இந்தப் பள்ளி இறுதி வகுப்புக்கு ரூ. 15 இருப்பது முறையான ஒன்றுதான். செலவு வகையைக் கணக்கிட்டால் வசூலிக்கக்கூடிய இந்தக் கட்டணத்திற்கும் அதிகமாக ஆகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, இப்போது தாழ்த்தப் பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு இப்படிப்பட்ட தேர்வுக் கட்டணம் செலுத்துவதற்கு அரசு, ஏதேனும் பண உதவி கொடுத்து இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** தலைவரவர்களே. அரசாங்கத்தின் கொள்கை பி.யு.சி. வரையில் இலவசக் கல்வி என்று இருக்கிற போது, அதற்கிடையில் இருக்கும்படியான எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு எக்சாமினேஷன் பீஸ் வசூல் செய்வது முறையானதல்ல. கேரளா போன்ற அண்டை மாநிலங்களில் எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குக் கட்டணம் வசூலிப்பது இல்லை. ஆகவே, அரசாங்கம் இதை மறு பரிசீலனை செய்து எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்குக் கட்டணம் வசூலிப்பதை நிறுத்த முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் திரு. இரா. நெடுஞ்செழியன் :** இலவசக் கல்வி என்பது வேறு. எக்சாமினேஷன் பீஸ் என்பது வேறு, டியூஷன் பீஸ் என்பது வேறு. இலவசக் கல்வி என்கிறபோது, டியூஷன் பீஸ் வசூலிப்பது இல்லை என்பதாகும். இந்த ரூ. 15 என்பது நீண்ட பெரும் காலத்திற்கு முன்பே உருவாக்கப்பட்ட ஒன்று. வேறு பல பல்கலைக் கழகங்களிலும் இது பின்பற்றப்பட்டு வருகிறது. கேரளாவில் இல்லை என்று சொன்னார்கள். அது

பற்றிய விவரக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. அரசாங்கத்தின் கொள்கையில் அதை தற்போது நிறுத்தும் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

### *English medium schools*

*405 Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of High Schools and Elementary Schools in this State (apart from convents) which impart instructions to students in English medium also during the academic year 1969-70;

(*b*) the strength under English medium sections in each class; and

(*c*) the average proportion of the students in the English medium classes to those in other mediums in those schools?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே,

(அ) உயர்நிலைப் பள்ளிகள் 204 (கான்வென்ட் தவிர). தொடக்கப் பள்ளியில் ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்பு கிடையாது.

(இ) 1-வது வகுப்பிலே 45-ம், இரண்டாம் வகுப்பில் 47-ம், மூன்றும் வகுப்பில் 53-ம், நான்காம் வகுப்பில் 55-ம், ஐந்தாம் வகுப்பில் 44-ம் இருக்கின்றன. இந்த வகுப்புகள் சென்னை, தி.நகர் வித்தியோதயா மகளிர் உயர்நிலைப் பள்ளியில் மட்டும் நடத்தப்படுகின்றன. மற்ற பள்ளிகளைப் பொறுத்தவரையில் 6-ம் வகுப்பில் 8,508 மாணவர்களும், ஏழாம் வகுப்பில் 7,981 மாணவர்களும், எட்டாம் வகுப்பில் 7,765 மாணவர்களும், ஒன்பதாம் வகுப்பில் 7,495 மாணவர்களும், பத்தாம் வகுப்பில் 6,535 மாணவர்களும், பதினோறும் வகுப்பில் 5,343 மாணவர்களும், ஆக மொத்தம் 43,871 மாணவர்கள் இருக்கின்றனர்.

(உ) சராசரி விகிதாச்சாரம் 17:83.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்**: தலைவரவர்களே, ஆங்கிலப் படிப்பை ஊக்குவிக்கும் வகையில் இன்னும் அதிகமாக இந்த எஜுகேஷன் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம்



வைத்திருக்கிறதா? அப்படி இருந்தால் அரசாங்கப் பள்ளிக்கூடங்களிலாவது, அல்லது தனியார் பள்ளிக்கூடங்களிலாவது இந்த வகுப்புகளை விஸ்தரிக்க உத்தேசமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே, இத்தகைய பள்ளிக்கூடங்களில் குறிப்பிட்ட சில இடங்களில் மட்டும் சில குறிப்புகளை வைத்து பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இதற்கு அனுமதி அளித்து வருகிறார். எங்கும் தமிழ் இருக்க வேண்டுமென்ற கொள்கையை நாம் கடைப்பிடித்து வருவதன் காரணமாக, வெளி மாநிலங்களுக்கு மாற்றிச் செல்லும் வாய்ப்புடையவர்கள் மாணவர்களுக்கு பாதகம் ஏற்படாத வகையில் இந்த ஆங்கிலப் பயிற்சி மொழி வகுப்புகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இதைத் தவிர, மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் வரும் பள்ளிகளிலும் ஆங்கிலப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள் அதைத் தனியாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் அந்தந்த வட்டாரங்களில் உள்ள தேவையை உத்தேசித்து, அவைகளுக்கு அனுமதி வழங்கி வருகிறார்.

### நீடாமங்கலம் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டடம்

*406. வினா—**திரு. ந. சோமசுந்தரம்**: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், நீடாமங்கலம் உயர்நிலைப்பள்ளி வசதி அற்ற கட்டடத்தில் நடத்தப்படுவது உண்மையா?

(இ) அப் பள்ளியை அரசு ஏற்று புதிய கட்டடம் கட்ட மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: (அ) இல்லை.

(இ) இப் பள்ளியை அரசு ஏற்று நடத்தும் பிரேரணை ஏதும் வரவில்லை.

### போக்குவரத்தை ஒழுங்குபடுத்த சாரணர்கள்

*407 வினா—**திரு. ஏ. சுப்பிரமணியம்**: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

[1972 மார்ச் 10

(அ) சென்னை நகரின் வீதிகளில் போக்குவரத்தை ஒழுங்கு படுத்துவதற்கு ஆண், பெண் சாரணர்கள் எவரேனும் பயன் படுத்தப்படுகின்றனரா?

(இ) ஆமெனில், இதற்காக ஏற்படும் செலவு எவ்வளவு?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : (அ) ஆம்.

(இ) இத் தொண்டு ஆண் சாரணர்கள் விரும்பிச் செய்யும் ஒரு சேவை. அரசாங்கத்திற்கு இதனால் எந்தவிதமான செலவும் கிடையாது.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவரவர்களே, இந்தச் சாரணர் இயக்கத்தை சிலர் ஏதோ மத சம்பந்தமான இயக்கம் என்று கருதிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த இயக்கத்தை, சீரணி இயக்கம் போன்று பொதுப் பணியில் ஈடுபடும் வகையில் முக்கியத்துவம் கொடுத்து அரசு பயன்படுத்திக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, சாரணர் இயக்கத்தை எல்லாப் பள்ளிகளிலும் அமைத்து, மாணவர்களிடையே தொண்டு உள்ளத்தை வளர்க்க வேண்டும் என்பதுதான் அரசின் திட்டம். சீரணி இயக்கம் போன்ற இதுவும் பயன்படுகின்ற ஒரு இயக்கம் தான். ஆனால் எல்லாப் பள்ளிகளிலும் சாரணர் இயக்கம் தொடங்கப்படவில்லை. எனவே சாரணர் இயக்கத்தை எல்லாப் பள்ளிகளிலும் செயல்படுத்துவதற்கான ஒரு விரிவான திட்டத்தைத் தீட்டித்தருமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது மத சார்புடைய இயக்கம் என்று கருதுவது தவறு. தொண்டின் அடிப்படையில் தான் இந்த இயக்கம் இயங்கி வருகிறது. சென்னையில் ஒரு பகுதியில் சாரணர் படையினர் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 4 மணி முதல் 8 மணி வரையில் போக்குவரத்தைச் சீர்படுத்தும் பணியில் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

**திரு. என். கணபதி** : தலைவரவர்களே, இந்தச் சாரணர் இயக்கத்திற்கு தமிழ்நாட்டில் தலைமை தாங்கி நடத்துபவர் யார்? இந்த இயக்கத்திற்கு அரசாங்கம் என்னென்ன சலுகைகள் வழங்குகின்றன என்ற விபரத்தை அறிய விரும்புகிறேன்.



1972 மார்ச் 10]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, தமிழ்நாட்டிலுள்ள சாரணர் படை இயக்கத்திற்கு, கல்வி அமைச்சர் என்ற முறையில் நான் தலைவராக இருக்கிறேன். அதன் இயக்குநராக பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் இருக்கிறார்கள். அகில இந்திய அளவில் சாரணர் இயக்கத்திற்கு ஆணையாளராக நமது சட்டமன்றச் செயலாளர் அவர்கள் இருக்கின்றார்கள். இந்த இயக்கத்தை மேலும் சிறப்புற நடத்துவதற்காக, சாரணர் மாவட்டக் கிளைகள் மூலம் ஓரளவுக்கு நிதி திரட்டப்படுகிறது. சில அடிப்படைத் தேவைகளுக்காக, சாரணர்களுக்கு 50 காசு வீதம் கொடுக்கப்படுகிறது. அவர்களுக்குத் தேவைப்படும் துணி மணிகள் அதாவது யூனிஃபார்ம் முதலியவற்றை அவர்களே தைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அதற்காக நிதி உதவி வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கின்றது.

**திரு. கு. காமாட்சி** : தலைவரவர்களே, பொதுவாக கான்வென்ட் பள்ளிகளில் படிக்கும் மாணவ மாணவியர்கள் தான் சாரணர் இயக்கத்தில் இருந்து வருகிறார்கள். மற்றப் பள்ளிகளிலும் சாரணர் இயக்கத்தை தொடங்கி அவர்களையும் பொதுத் தொண்டில் ஈடுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, கான்வென்ட் பள்ளிகளில் உள்ளவர்கள்தான் சாரணர் இயக்கத்தில் இருக்கிறார்கள் என்பதல்ல. மற்றப் பள்ளிகளிலும் இருக்கிறார்கள். ஆனால் எல்லாப் பள்ளிகளிலும் இல்லை. எல்லாப் பள்ளிகளிலும் இந்த இயக்கத்தை ஏற்படுத்துவதற்கு பள்ளிக் கல்வி இயக்குநரிடம் விரிவான அறிக்கை கேட்கப்பட்டிருக்கிறது. அறிக்கை வந்த பின்னால், அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

**திரு. வை. பாலசுந்தரம்** : தலைவரவர்களே, இப்போது சாரணர் இயக்கம் கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக்கப்பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்றால் அதை கட்டாயமாக்கி, நடத்துகின்ற ஒரு முடிவு இந்த அரசுக்கு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, சாரணர் இயக்கம் பள்ளிகளில் தான் இருக்கின்றது.

கல்லூரிகளில் சோஷியல் காடர் என்ற ஒரு பிரிவு இம்மாதிரியான பொதுத் தொண்டில் ஈடுபட்டு வருகிறது. அது தவிர, என்.சி.சி. என்ற இராணுவப் பயிற்சி பெறுகின்ற இயக்கமும் இருக்கிறது. சாரணர் இயக்கம் உயர்நிலைப் பள்ளிகளில் மட்டும் தான் பணியாற்றுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி** : தலைவரவர்களே, இந்த இயக்கத்தினுடைய ஒரு முக்கிய மகாநாடு ஜப்பானில் நடைபெற்றது. அதற்கு இந்தியாவிலிருந்து நமது சட்டமன்ற செயலாளர் அவர்கள் சென்றிருந்தார்கள். அவர்கள் அறிக்கை ஏதாவது சமர்ப்பித்திருக்கிறார்களா? அப்படி இருந்தால் அந்த அறிக்கை இந்தச் சபை முன் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, அந்த மகாநாடு பற்றிய அறிக்கையை அவர்கள் சாரணர் இயக்கத்தின் தலைமை இயக்கத்திற்கு அனுப்பி இருப்பார்கள். அந்த அறிக்கை அவசியம் என்றால் இந்த அவைமுன் வைக்கலாம்.

THIRU K. M. SUBRAMANIAM : Will the Government consider the question of giving special dresses free of cost to the pupils who are prepared to join the Scout Movement particularly in poor class schools?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : தலைவரவர்களே, மாநகராட்சி மன்றத்தினரால் அப்படிக் கொடுக்கப்படுவதாகத் தகவல்; முழு விபரம் இல்லை. மற்ற இடங்களிலும் இதுபோன்ற கோரிக்கை இருக்கிறது. மாஸ்டர்களுக்கு மட்டும் தருகின்ற முறைதான் இருக்கிறது. மற்ற இடங்களிலும் மற்றவர்களுக்கும் தருவது பற்றி அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Minister for Education whether there is an Assistant Scout Commissioner for the State and whether he is going round the State to organise Scout Programmes?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : ஆணையர், துணை ஆணையர்கள் எல்லாம் இருக்கின்றார்கள். பள்ளிக் கல்வி இயக்குநர், ஆணையர், துணை ஆணையர்கள் மகாநாடு சென்னையில் வருடத்திற்கு ஒருமுறை கூட்டம் நடத்தப்படுகின்றது. இப்போது



எல்லாப் பள்ளிகளிலும் இந்த இயக்கம் இல்லை. எல்லாப் பள்ளிகளிலுமே இந்த இயக்கம் நிறுவப்பட வேண்டுமென்ற அடிப்படையில் தான் அறிக்கை சமர்ப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அதுபற்றிய அறிக்கை வந்த பிறகு அரசு கூர்ந்து கவனித்து தக்க முடிவினை மேற்கொள்ளும்.

## வேலூரிலுள்ள அரசு மருத்துவ மனை

*408 வினா—**திரு. தோப்பூர் திருவேங்கடம்** : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகராகிய வேலூரில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் (Special Wards) தனிப் பிரிவு வார்டுகள் தற்போது எத்தனை உள்ளன?

(இ) அதை மேலும் விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : (அ) நான்கு படுக்கைகள் கொண்ட 'சி' கிளாஸ் பிரிவு ('C' Class Ward) ஒன்று அரசு தலைமை மருத்துவமனை வேலூரில் உள்ளது.

(இ) இல்லை.

**திரு. கே. எ. வகாப்** : தலைவரவர்களே, வேலூர் வட ஆர்க்காடு மாவட்டத்தின் தலைநகரம். அங்குள்ள மருத்துவமனையில் உள்ள தனிப்பிரிவில் நான்கு படுக்கைகள் என்பது மிகவும் குறைவானது. போதிய படுக்கை வசதிகள் இல்லாமலிருப்பதால் மக்கள் மிகவும் வேதனைப்படுகிறார்கள். இன்னும் அதிகமான படுக்கைகளைப் போட அங்கே வசதி இருக்கிறது. ஆகவே படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்** : தலைவரவர்களே, இந்த 'சி' கிளாஸ் பிரிவில் நான்கு படுக்கைகள் உள்ளன. இது தவிர, மகப்பேறு மருத்துவ மனைக்கு நான்கு படுக்கைகள் கொண்ட 'சி' கிளாஸ் தனிப்பிரிவு ஒன்று கட்டுவதற்கு வரைபடம் தயாரிக்கப்படுகிறது. வரைப்படம் வந்தவுடன் கட்டடம் கட்டப்படும். இது

தவிர, ஏற்கெனவே அங்கே வெள்ளிவிழா அல்லது டைமண்ட் ஜூபிலி நடைபெற்றபோது, அதற்கென்று ஒரு சிறு தொகையைத் திரட்டித் தந்திருக்கிறார்கள். அந்தப் பணமும் இந்தக் கட்டடப் பணிக்குச் செலவிடப்படும்.

## திருமணமான செவிலியர்களுக்கு குடியிருப்புகள்

*409. வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமணம் ஆன Nurses செவிலியர்களுக்கு ஆங்காங்குள்ள மருத்துவ மனைக்குள்ளோ அல்லது அருகிலோ அவர்கள் தத்தம் குடும்பங்களோடு வாழ்வதற்கு தக்க வகையில் இல்லங்கள் அமைத்துத் தரும செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:**

(அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

**திரு. கே. என். குமாரசாமி:** தலைவரவர்களே, செவிலி உதவியாளர்கள், 12 மணி நேரத்திற்குமேல் வேலைசெய்கிறார்கள். அவர்களுடைய பணியும் கடைநிலை ஊழியர்களோடு ஒப்பிடப் படுகிறது. அவர்களின் வேலை நேரத்தை 8 மணி அளவுக்கு குறைக்க வேண்டுமென்றும், அவர்களின் பணியை சுப்பீரியர் காடரில் சேர்க்க வேண்டுமென்றும் கோரி வருகிறார்களே. இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, இந்த துணைக் கேள்வி மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டதல்ல. செவிலியர்களுக்கு மருத்துவ மனைக்குள்ளோ அல்லது அருகிலோ குடும்பம் நடத்துவதற்கு வசதியாக இல்லங்கள் அமைத்துக் கொடுக்கப்படுமா என்பது மூலக் கேள்வி. செவிலியர்களிலிருந்து



துணைச் செவிலியர்களுக்குச் சென்றிருக்கிறார் கனம் அங்கத்தினர். அதற்குத் தனிக் கேள்வி போட்டால் பதிலளிக்கப்படும்.

**திரு. கே. ஆர். கிருஷ்ணன்:** தலைவரவர்களே, செவிலியர், பயிற்சிக்கு வருபவர்களில் ஏழை மக்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படும் உதவித் தொகை போதாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் பரிதாப நிலையை அறிந்து, பயிற்சிக் காலத்தில் அளிக்கப்படும் உதவித் தொகையை அதிகரிக்க அரசு ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, அவர்களுடைய பரிதாபத்தை உணர்ந்துதான் உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இல்லையென்றால் உதவித் தொகை அளிக்க இடமில்லை. உதவித் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்பது அரசின் நிதிநிலை வசதிகளைப் பொறுத்தது.

**திரு. என். கணபதி:** தலைவரவர்களே, செவிலியர்கள் அரசாங்க அலுவலர்களைத் திருமணம் செய்துக் கொண்டால்தான் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து ஒரே இடத்தில் பணிபுரிந்து, குடும்பம் நடத்தக்கூடிய வசதி இருக்கிறது. அரசாங்க அலுவலர்களை கணவராகப் பெறாமலிருந்தால், இந்த வசதி இல்லாமல் கணவன், மனைவி பிரிந்து இருந்து குடும்பம் நடத்தி துன்பபடுகிறார்கள். எனவே, அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தலைவரவர்களே, செவிலியர்களின் கணவன்மார்களைப்பற்றி ஆராய்வதில்லை.

## பெருநாளிக்குப் பதிவு அலுவலகம்

*410 வினா—திரு. எஸ். காதர்பாஷா என்ற வெள்ளைச்சாமி: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், பெருநாளி என்னும் ஊரில் புதிய பதிவு அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், எப்போது செயல்படும்?

[1972 மார்ச் 10

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) இல்லை.

(இ) இவ் வினாவிற்கு இடமில்லை.

## புன்னக்காயலைச் சார்ந்த மீனவர்கள்

* 411 வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், புன்னக்காயலைச் சேர்ந்த மீனவர்கள் தங்கள் குறைகளைக் கூறி கோரிக்கைகள் அரசுக்கு விடுத்துள்ளார்களா?

(இ) 5—10—1971 முதல் 7—10—1971 வரை அடையாள உண்ணாவிரதம் இருப்பதாக அரசுக்குத் தெரிவித்தார்களா ?

(உ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆம்.

(உ) புன்னக்காயலிலுள்ள தாம்பிரபரணியாற்றின் முகத்துவாரத்தை அடைத்துக் கொள்ளும் மணல்மேட்டை உடலுழைப்பால் அகற்றுவதற்காக ஆண்டுதோறும் ரூ. 3,500 இவ்வரசால் வழங்கப்பட்டு வருகிறது. இவ் வாண்டு மணல்மேடு மிகப் பெரிய அளவில் தோன்றி விட்டதாலும், அதனை உடலுழைப்பால் நீக்க முடியாததாலும், இந்திய-நார்வே திட்டத்தின் மணல் உறுஞ்சியைக் கொண்டு வேலை தொடங்க இருக்கும் போது ஆற்றில் புதிய வெள்ளம் வந்து மணல் மேடு தானாகவே கரைந்துவிட்டது. இவ்வரசு புதிதாக வாங்கவிருக்கும் தூர்வாரி வந்த பின்னர், எங்கெங்கு எவ்வெப்பொழுது முகத்து வாரங்களில் மணல் மேடுகள் தோன்றுகின்றனவோ அவற்றை நீக்க மேற்படி தூர்வாரியினால் இயலும்.

திரு. க. உரோ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, இந்தப் புன்னக்காயல் என்கிற கடற்கரை கிராமம் திருச்செந்தூர் தொகுதியில் உள்ளது. தாம்பிரபரணி முகத்துவாரத்தில் இது இருப்பதால் ஆண்டுதோறும் மணல் மேடிட்டு மீனவர்களின் படகுகள் போவதற்குக் கூட கஷ்டமாக இருக்கிறது. நமது மாநில அரசும் இந்த மணலை அகற்ற ஆண்டுதோறும் ரூ. 3,500



1972 மார்ச் 10]

செலவிட்டு வருகிறது. இருந்தாலும் அந்தத் தொகை போதாது. ஆகவே நிரந்தரமாக அங்கே உள்ள மீனவர்களுக்கு வசதி ஏற்படுகிற வகையில் இந்தப் புன்னக்காயலை ஒரு மீன்பிடித் துறைமுகமாக ஆக்கித் தருவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்கள் கேட்கும்போதே ஆண்டுதோறும் மணல் மேடிட்டு இரண்டு படகுகள் போவதற்குக் கூட சங்கடங்கள் ஏற்படுவதைச் சொன்னார்கள். அந்த இடத்தை மீன்பிடித் துறைமுகமாக அமைப்பது என்பது கடினமாகும்.

## அரிசனக் குடியிருப்புகள்

* 412 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தீண்டத்தகா நிலையை ஒழிக்க இனியேனும் அரிசன மக்களுக்கு நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனை வழங்கும்போது ஒதுக்குப்புறமாக இல்லாமல், ஊர் மக்களுடன் இணைத்துக் கொடுக்கிற திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 1968-ம் ஆண்டு மே திங்களிலேயே தமிழக அரசு எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வீட்டுமனையில்லா அரிசனங்களுக்கு மனைகள் வழங்கும்போது இயன்றவரையில் மற்ற இந்துக்களின் குடியிருப்புக்கருகில் வீட்டு மனை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று விளக்கமாக அறிவுரை கூறியுள்ளது. உறுப்பினர் விழையும் செயல் நடைமுறையில் இருந்து வருகிறது.

திரு. கா. வேழவேந்தன்: இந்தக் கொள்கையை இந்த ஆட்சிதான் நிறைவேற்றுகிறது என்ற வகையில் இனிமேலாவது கிராமங்களில் சேரி என்பது தனியே இல்லாதவாறு அரிசன மக்களுக்குக் காலனிகளை அமைக்கும்போது கிராமங்களை ஒட்டியே நில ஆர்ஜிதம் செய்து ஏற்படுத்த அரசு முன்வருமா ? அப்படி ஏற்படுத்தினால், குடிதண்ணீர் வசதி ஆகியவற்றை பொதுவில் செய்து தருவதற்கு வசதியாக இருக்காதா ? 1968-லே நாம் தந்திருக்கிற விதிமுறைகள்படி முறையாகக் காரியங்கள்

நடைபெறவில்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ? ஆகவே இனிமேலாவது சேரி என்று தனியாக இல்லாத முறையில் இருக்கக்கூடிய கிராமங்களை ஒட்டியே அரிசனக் காலனிகள் அமைய ஏற்பாடு செய்வார்களா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து:** இப்போது இருக்கிற அரசு இந்தக் கொள்கையில் உறுதியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகின்ற முறையில்தான் செயல்படுகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இதுபற்றி அறிக்கை கொடுத்திருக்கிறது. கிராமங்களை ஒட்டியே அரிசன காலனிகள் அமைவது என்றால் அதை இரண்டு சமுதாயத்தினரும் ஒத்துக் கொள்ள வேண்டும். பல இடங்களில் விலை கொடுத்து நிலங்களை வாங்கிய பிறகும்கூட மேல்சாதியினர் ஆட்சேபிப்பதன் காரணமாக அரிசன காலனிகள் அமைக்க முடியவில்லை. சில இடங்களில் அரிசனங்களே அவர்களோடு சேர்ந்து வசிப்பது என்றால் நிரந்தரமாக அடிக்கடி பல தொல்லைகளுக்கு உள்ளாக நேரிடும், நாங்கள் அங்கே போய் வசிக்கத் தயாராய் இல்லை என்கிறார்கள். ஆக இரண்டு சமுதாயத்தினரும் ஒத்துழைத்தால் தான் இந்தப் பொன்னான கொள்கை வெற்றிதரும். எந்த அளவுக்கு இந்தக் கொள்கையை கடுமையான அளவில் பின்பற்ற முடியுமோ அந்த அளவில் பின்பற்றுகிறோம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** இந்தத் தீண்டாமை ஒழிப்பிற்காக ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்தக் கமிட்டியின் பணிகள் என்ன? அந்தக் கமிட்டி இதுவரை ஆற்றியுள்ள பணிகள் என்ன, என்ற விவரம் இருந்தால் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தீண்டாமை ஒழிப்பிற்காக தனிக் குழுக்கள், தாலுக்கா அளவில், தாலுக்காவில் இருந்து மாவட்ட அளவில், மாவட்டத்தில் இருந்து மாநில அளவில் அமைக்கப்படுவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்களை தகுந்த உறுப்பினர்களைப் பொறுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். இதுபோன்ற கமிட்டிக்கு உறுப்பினர்கள் 8 மாவட்டங்களில்தான் பொறுக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற மாவட்டங்களில் இருந்தும் பொறுக்கப்பட்ட பிறகுதான் அந்தக் கமிட்டிகளுக்கான செயல் திட்டம் வகுத்துக் கொடுக்கப்படும்.





**திரு. எம் சுரேந்திரன் :** அமைச்சர் அவர்கள் பதிலில் சாதி இந்துக்களும், அரிசனங்களும் ஒத்துக் கொண்டால்தான் இது போன்று கிராமங்களை ஒட்டியே காலனிகள் அமைக்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் இதனை இரண்டு பேரும் இப்போது ஆட்சேபிப்பதாகச் சொன்னார்கள். வசதியுள்ள மேல்சாதியினர் தான் பெரும்பாலும் இதை ஆட்சேபிப்பார்கள். ஆகவே வசதியற்ற மேல்சாதியினர், அரிசனங்கள் ஆகியவர்களைப் பொறுக்கி எடுத்து ஒரு மாதிரி கிராமமாக அமைத்தால் இரண்டு பேர்களும் சேர்ந்து வாழ சம்மதிப்பார்கள். பொதுவாக ஆட்சேபணை வருவது உயர்ந்த சாதி வசதி உள்ளவர்கள் மத்தியில் இருந்து வருவதால் இதுபோல் அரசு ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** உறுப்பினர் கூறுவது அவ்வளவு பொருத்தமானது அல்ல. மிக உயர்ந்த சாதியினராகக் கருதப்படுகிற பிராமணர்களும் தாழ்த்தப்பட்ட மக்களும் மோதிக் கொண்டதாக இதுவரை புகார்கள் எதுவும் இல்லை. பிற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கும் இந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் மத்தியில் மோதல் இருப்பதாகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இந்தப் பிற்பட்ட மக்கள் தான் தொல்லைகள் கொடுப்பதாகப் புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. இது சாதி அடிப்படையில் ஏற்படுகிற சங்கடங்கள். பொதுவாக அந்த அரிசனங்களுக்காக என மனைக்கட்டு ஆர்ஜிதம் செய்கிற போது உறுப்பினர்களே அதற்கு ஃடே கேட்டு வருகிறார்கள். அதுபோல வராது இருந்தாலே அவர்களுக்கு அரசு பலவிதமான நன்மைகளைச் செய்வதற்கு முடியும்.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தீண்டாமையை ஒழிப்பது இடமாற்றத்தால் முடியாது, மனமாற்றத்தால்தான் முடியும் என்பதை உணர்ந்து தீவிர பிரச்சாரம் செய்ய ஏதேனும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** மனமாற்றத்திற்கு இப்போதே பிரச்சாரங்கள் நடைபெற்று வருகின்றன. அதற்கும் மேலே தாலுக்கா வாரியாக, மாவட்ட வாரியாக, மாநில அளவில் கமிட்டிகள் அமைத்து இதுபோன்ற பணியை மேற்கொள்ளவும் இருக்கிறோம். அதோடு சட்டத்தை கடுமையாக்கி தீண்டாமைக் குற்றம் முதல் முறை செய்பவர்களுக்கு 200 ரூபாய் அபராதம் அல்லது 6 மாதம் கடுங்காவல் தண்டனை, இரண்டாம் முறையாகச்

செய்பவர்களுக்கு 500 ரூபாய் அபராதம் அல்லது ஒரு வருட கடுங்காவல் தண்டனை, மூன்றாவது முறையாகச் செய்பவர்களுக்கு ரூ. 1,000 அபராதம், ஒரு வருஷ கடுங்காவல் தண்டனை என்று பீனல் கோடு சட்டத்தையே மாற்றியிருக்கிறோம். இதைவிட ஓர் அரசு என்ன செய்ய வேண்டும்? மேலும் மக்கள் மத்தியில் மன மாற்றம் ஏற்பட வேண்டுமென்று இந்த அரசு பலவகையான பிரச் சாரங்களைச் செய்துகொண்டுதான் வருகிறது.

திரு. முனு ஆதி: தலைவர் அவர்களே, மேல்ஜாதி, கீழ்ஜாதி களிடையே உள்ள வேற்றுமைகளை ஒழிப்பதற்காக பல்வேறு துறைகளிலே அரசாங்கம் முனைந்து பணியாற்றினாலும் கோயில் களில் அறங்காவலர்களாக நியமிக்க வேண்டும். ஒரு கோயிலில் ஐந்து அறங்காவலர்கள் என்று நியமிக்கப்படுகிற இடத்தில், கட்டாயமாக அரிசன வகுப்பைச் சேர்ந்தவர் ஒருவர் அறங் காவலராக இருக்க வேண்டுமென்கிற சட்டம் கொண்டுவரப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, அறங்காவல் துறையிலே என்ன சட்டம் இருக்கிற தென்று எனக்குத் தெரியாது. இப்போது சில அறங்காவலர்கள் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆலயங்களிலேகூட தாழ்த்தப்பட்ட மக்களும் அர்ச்சகர்களாக வரவேண்டுமென்று சொல்வதை எதிர்த்து மேல்ஜாதிக்காரர்கள் வழக்கு மன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டிலேகூட பெருந்தலைவர்கள் மத்தியிலே இப்படிப்பட்ட எண்ணம் இருந்து வருவது கண்டு வேதனையடைய வேண்டியிருக் கிறது. வருத்தப்பட வேண்டியிருக்கிறது.

### கொல்லி மலை ஆதிவாசிகளுக்கு நிலப் பட்டா

* 413 வினா—திரு. சி. சின்னவெள்ளையன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்லிமலையில் உள்ள ஆதிவாசிகளுக்கு நிலப் பட்டா வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:

(அ) & (இ): 1-1-1971 தேதி முதல் 31-1-1972 தேதி முடிய 2285.05 ஏக்கர் ஒப்படை செய்யப்பட்டுள்ளது. 1,135 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. சி. சின்னவெள்ளையன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலையிலே வசிக்கின்ற மலைவாசிகளுக்கு நிலப் பட்டா வழங்குவதில் காலதாமதம் செய்யாமல் உடனடியாக வழங்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பட்டா வழங்கப்பட்டிருப்பதைதான் இப்பொழுது நான் சொன் னேன். இன்னும் 463 ஏக்கர், 95 சென்ட் உள்ள இடம் இருக் கிறது. அதையும் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### தரமுள்ள காகிதம் உற்பத்தி

* 414 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

நமது மாநிலத்தின் தொழிற்சாலையில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்ற பேப்பர்கள் போன்று தரமுள்ள காகிதங்கள் தயாரிக்கும் திட்டம் ஏதேனும் தற்சமயம் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

### *Pelletisation plant at Salem*

* 415 *Q.*—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the pelletisation plant at Salem launched some time past is working; and

(*b*) if so, the details of production so far achieved by this plant?

[1972 மார்ச் 10

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) சேலத்தில் சிறு இரும்பு உருண்டைகள் தயாரிக்கும் ஆலை நிறுவப்படவில்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, சிறு உருக்கு உருண்டைகள் தயாரிப்பது என்கிற திட்டம் இருந்ததாக முன்பு அறிவிக்கப்பட்டது. அது கைவிடப்பட்டதா? அதை மறுபடியும் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை வருவதற்கு முன்னால், இதை அமைக்கலாம் என்று ஜப்பானிய நிபுணர்களின் யோசனையை அரசு பரிசீலித்தது. சேலம் உருக்காலை இப்போது வந்துவிட்ட காரணத்தால் அது தேவையில்லை என்று கருதுகிறது.

திரு. சோ. கருணைநாதன்: தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலைத் திட்டத்திலே மாநில அரசுக்குப் பங்கு இல்லை என்று திரு. மோகன் குமாரமங்கலம் அறிவித்துள்ளாரே, இதுபற்றி மாநில அரசின் முடிவு என்ன?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலையைப்பற்றி பலதரப்பட்ட கருத்துக்கள் அறிவிக்கப் படுகின்றன. இதிலே காலதாமதமே இல்லை என்கிற கருத்துகூட தெரிவிக்கப்பட்டது. 1970 செப்டம்பர் மாதம் இந்த நாட்டின் பிரதமரால் இந்தத் திட்டம் துவக்கி வைக்கப்பட்டு, இப்போது ஒன்றரை ஆண்டுகள் ஆகியிருக்கிறது. மத்திய அரசாங்கம் காலதாமதம் செய்ததாக நாம் சொல்லவில்லை. காலதாமதம் செய்யாமல் உடனடியாக வர வேண்டுமென்றுதான் சொல்கிறோம். நிர்வாகத்தைப் பொறுத்தவரையில், நமக்கு இவ்வளவு பங்குத் தொகை, லாபத்திலே பங்குத் தொகை இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று நாம் கேட்டதாக ஊகித்துக் கொண்டு பதில் சொல்வது விந்தையாக இருக்கிறது. நாம் கேட்டதெல்லாம் பல ஆண்டுகளாக முயற்சிக்கப்பட்டு அதனைச் சிறந்த முறையிலே நிர்வாகம் செய்ய, மாநில அரசையும் நிர்வாகத்திலே சேர்த்து நடத்தப்பட்டால் நல்லதாக இருக்கும் என்கிற ஆலோசனைதான் கூறினோம், அவ்வளவுதான்.



1972 மார்ச் 10]

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி காலதாமதமாவதற்கு மாநில அரசுக்கும் பங்கு இருக்கிறது என்று சொல்கிறார்களே, அது உண்மையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** . தலைவர் அவர்களே, ' மாநில அரசு காலதாமதம் செய்கிறது, சேலம் இரும்பாலைக்கு நிலமே ஆர்ஜிதம் செய்யப்படவில்லை, என்பன போன்ற செய்திகள் நம்முடைய பத்திரிக்கையில் வெளிவந்தன. நம்முடைய அரசாங்கத்தை மட்டுமல்ல, சேலத்து மக்களையே குற்றம் சொல்வதுபோல் இருக்கிறது. இது காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்திலும் இந்தத் தொழிற்சாலையைக் கொண்டுவர வேண்டுமென்று பிரயாசை எடுத்துக் கொண்டு பல திட்டங்களை உருவாக்கினார்கள் என்பதை நாடு மறந்துவிட முடியாது. இந்த ஆட்சி வருவதற்கு முன்னால் 24 ஆயிரம் ஏக்கர் நிலங்களை நோட்டிபிகேஷன் செய்து வைத்திருந்தார்கள். நம்முடைய அரசு எவ்வளவு நிலம் வேண்டுமோ அதை எடுத்துத் தருகிறோம் என்று எழுதியிருக்கிறது. ஆனால் நிலம் ஒரு செண்ட் கூட கொடுக்கவில்லையென்று குற்றச்சாட்டு வந்தது. இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் சேலம் உருக்காலை விழாவைத் தொடங்கி வைக்க வந்திருந்த நேரத்திலே, நிலம் வேண்டுமென்று கேட்ட நேரத்திலே, சேலத்து மக்கள் தாமாகவே முன்வந்து நிலத்தை வழங்கினார்கள். சேலம் இரும்பாலைக்கு நம்மிடத்தில் தேவையான நிலம் இருக்கிறது என்பதை பிரதமர் விழாவிலே பங்கெடுத்துக் கொண்டதன் மூலமாக தெரிந்து கொண்டிருப்பார்கள். இப்போதுகூட 30 லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பணத்தைக் கொண்டு நில ஆர்ஜித வேலைகள் நடைபெறுகின்றன. 4 (1) நோட்டிபிகேஷன் கொடுத்திருக்கிறோம். இந்தத் திட்டத்தை மூன்று கட்டமாக நிறைவேற்ற வேண்டும். சேலம் இரும்பாலைக்கு மாநில அரசு நிலம் கொடுக்கவில்லை என்று சொல்வது தவறாகும். சேலம் உருக்காலை வருமானால் ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டுமானாலும் முன்கூட்டியே தர சேலம் மாவட்ட மக்கள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற தொழிற்கூடங்கள் அமைகின்றபோது, வருவாயைப் பெருக்க வேண்டுமென்று மட்டுமல்ல; அந்த வட்டாரத்தில் உள்ள மக்கள்

வேலை வாய்ப்பு பெற வேண்டுமென்பது முக்கிய குறிக்கோளாகும். தமிழகத்தில் பல இடங்களில் உள்ள மத்திய அரசின் தொழில் நிறுவனங்களில் அந்த வட்டார மக்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்காதது நமக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை. சேலம் இரும்பாலையில் நமது அரசு எச்சரிக்கையோடு இருந்து, நல்ல வகையில் அந்த வட்டார மக்களுக்கு வேலைவாய்ப்புத் தேடித்தர முன்வருமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட நல்ல கருத்து நமது மாநில அரசு மட்டுமல்ல, முதலமைச்சர்கள் மாநாட்டிலே கூட எழுப்பப்பட்டிருக்கிறது. பல முதலமைச்சர்கள் என்னிடம் பேசும்போது அதை வலியுறுத்தியிருக்கிறார்கள். எந்த எந்த மாநிலங்களில் மத்திய அரசின் தொழிற்சாலைகள் இருக்கின்றனவோ அவற்றில் எல்லாம் மாநில அரசுகளுக்குப் பங்கு கொடுத்து, நிர்வாகத்திலே பங்கு பெறச் செய்து அந்த வட்டார மக்களுக்கு வேலைவாய்ப்புத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தக் கருத்தை திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தினால் பல்வேறு விதமாகப் பேசப்படுகிறது. என்னைப் பொறுத்த வரையில், பல மாநில முதலமைச்சர்களோடு பழகியபோது இந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** தலைவர் அவர்களே, சேலம் உருக்காலை சம்பந்தமாக மத்திய சர்க்கார் தவறு செய்கிறது, மாநில சர்க்கார் தவறு செய்கிறது என்ற வகையில் பத்திரிகை களில் வந்துகொண்டிருக்கிறது. அந்தத் திட்டம் எப்போது பூர்த்தியாகும்? ஓரளவுக்கு எப்போது ஆரம்பமாகும் என்பதைக் குறித்து அமைச்சர் அவர்கள் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் இதிலே தவறு செய்கிறது என்று எந்தக் காலத்திலும் நாங்கள் சொல்லவில்லை. சேலத்தைச் சேர்ந்த அமைச்சர் இந்தத் துறைக்குப் பொறுப்பு ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் உற்சாகமாக தீவிரப்படுத்த முன்வந்திருக்கிறார் என்றுதான் எங்கள் சார்பில் சொல்லப்படுகிறது. வெளியே யார் எப்படிச் சொல்கிறார்கள் என்பதைப் பற்றிக் கவலை இல்லை.

**திரு. எஸ். ஆறுமுகம்:** தலைவர் அவர்களே, சேலம் இரும்பை எடுத்துக் கொண்டு போய் நெய்வேலி நிலக்கரியையும் எடுத்துக் கொண்டுபோய் ஆந்திர மாநிலத்தில் தொழிற்சாலைகளை அமைப்போம் என்கிற பேச்சு நடைபெற்று வருகிறதே, அது உண்மையா?



**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட குற்றச்சாட்டை நாங்கள் சொல்லவில்லை. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் சேலத்திலே எங்களை முன் வைத்துக் கொண்டு, 'சேலத்து இரும்பை இங்கே பயன்படுத்த முடியாது, இது உண்மை' என்றார். எங்கள் தரப்பிலே இதைக் குறித்து குற்றம் சொல்லாமல், இப்படிப்பட்ட வாதங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள் என்று மக்களிடம் கேட்டுக் கொண்டோம். மேலும், அந்தக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரிடத்திலே இதைக் குறித்து எடுத்துச் சொல்லி, எங்கள் கருத்தைச் சொன்னோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, இந்த உருக்காலையிலே மத்திய ஆட்சி மாநில அரசுக்கு ஒரு தனிப் பங்கு தராவிட்டாலும்கூட ஏனைய மத்திய அரசு நடத்தும் நிறுவனங்களிலே—இங்கே இருக்கின்ற நிறுவனங்களிலே தமிழர் களுக்கு அதிகமாக வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இல்லாத நிலைமை இருக்கிறது. எனவே நமது மாநிலத்திலே அமைகின்ற இதுபோன்ற தொழில் நிறுவனங்களிலேயாவது பெரும்பாலான தமிழர்களை வேலைக்கு எடுத்துக் கொள்வதற்கு இந்த அரசு மத்திய அரசாங்கத்திடம் கேட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இப்படிப்பட்ட நல்ல கருத்தை திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சொல்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தருகிறது. எல்லாக் கட்சித் தலைவர்களும் அந்த அந்த மாநிலங்களிலே தொடங்கப்படுகிற தொழிற்சாலைகளில் அந்தந்த மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு அதிகமாக வாய்ப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்றுதான் சொல்லி வருகிறார்கள். மற்ற மாநிலத்தவர்களுக்குக் கொடுக்க வேண்டாமென்று யாரும் சொல்லவில்லை. அந்தந்தப் பகுதிகளிலே தொடங்கப்படுகின்ற பொழுது அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற நல்ல கருத்தை அவர்கள் சொன்னதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

[1972 மார்ச் 10

**திரு. சொ. காவேரிமணியம் :** தலைவர் அவர்களே, சேலத்திலே ஆரம்பிக்கப்பட இருக்கிற உருக்குத் தொழிற்சாலைப்பற்றி இந்த மாநிலத்திற்கு பொறுப்புகள் எவை எவை வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அவை பரிசீலனையில இருக்கிறது. இந்த நேரத்திலே மத்திய அமைச்சராக இருக்கும் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் ஒருதலைப்பட்சமான கருத்துக்களைக் கூறி நாலரை கோடித் தமிழ் மக்களின் மனதைப் புண்படுத்தியிருக்கிறார்கள். இது குறித்து மத்திய அரசுக்கு வருத்தம் தெரிவித்துக்கொள்ளும் முறையில் நடவடிக்கை எடுக்க நம்முடைய அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** பத்திரிகைச் செய்தியை நான் நம்பவில்லை. நாங்கள் தனித்துப் பேசிக்கொண்டிருந்த பொழுது அவர்கள் நாம் எல்லோரும் சேர்ந்துதான் இதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று மகிழ்ச்சியுடன் தான் சொல்லி இருக்கிறார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவர் அவர்களே, தமிழக அரசின் சார்பாக ஒரு டைரக்டர் போட்டுக் கொள்ளலாம் என்று மத்திய அமைச்சர் கூறியிருக்கிறாரே, அதை நம்முடைய அரசு ஏற்றுக்கொள்கிறதா ? ஏற்றுக்கொள்ளவில்லையா? அப்படி ஏற்றுக் கொண்டால் யாரை டைரக்டராக நியமிக்கப்போகிறார்கள், உத்தியோகப் பற்றுள்ளவரையா அல்லது உத்தியோகப் பற்றற்றவரையா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நாம் கேட்டது, இந்த நிறுவனம் சீராக நடைபெற்று வருவதற்கு மாநில அரசினுடைய பொறுப்பிலே நடைபெற வேண்டுமென்று சொன்னோம். இயக்குநர் போர்டிலே ஒரு இயக்குநர் பதவி கொடுக்கலாம் இந்த அரசாங்கத்திற்கு என்று சொல்லியிருக்கிறார்கள். அது எந்த அளவுக்கு உண்மை என்பது தெரியவில்லை. இதுவும் புதிதல்ல. இப்பொழுதே கூட இருக்கிறது. மெட்ராஸ் ரிபைனரிஸ் இருக்கிறது, அதிலே ஒருவர் இயக்குநராக இருக்கிறார். இது போன்ற தொழிற்சாலைகள் இருக்கும்பொழுது ஆங்காங்கு உள்ள மாநில அரசினைச் சேர்ந்தவர்களை தொழில் துறை செயலாளரை டைரக்டராகப் போடும் வழக்கம் இருந்து வருகிறது. எனவே புதுமை எதுவும் இல்லை.



1972 மார்ச் 10]

**திரு. எம். சுரேந்திரன் :** சேலம் உருக்காலையை ஆரம்பித்த காலத்திலே நெய்வேலிக் கரியை அதற்குப் பயன்படுத்துவதற்காகத் தான் அது தொடங்கப்படுவதாகச் சொல்லப்பட்டது. இப்பொழுது நெய்வேலிக் கரி அதற்குப் பயன்படாது என்றும் மின்சாரத்தைப் பயன்படுத்தித்தான் அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்றும் சொல்லப்படுகிறதே, இதிலே கால தாமதம் ஏற்படுவதற்கு மத்திய அரசு காரணமா அல்லது மாநில அரசு காரணமா ? யாருடைய காரணத்தினாலே தாமதம் ஏற்படுகிறது என்று பொது மக்களுக்குத் தெரியவில்லை. விரைவிலே நடைபெற்றால் நல்லதாக இருக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். விரைவாக நடத்துவதற்கு இந்த அமைச்சரவை என்ன செய்கிறது ? அதற்கு நாங்கள் ஏதாவது செய்ய வேண்டுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** உண்மைக் காரணம் அது அல்ல என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். 1964-ஆம் ஆண்டிலே சேலத்திலே எடுக்கப்பட்ட நிலக்கரிக்கும் இப்பொழுது எடுக்கப்படுகிற நிலக்கரிக்கும் வேறுபாடு இருப்பதாக கருத்துத் தெரிவிக்கப்பட்டு அந்தக் கருத்தின் அடிப்படையிலே பரிசீலனை செய்யப்பட்டது. சேலத்து இரும்பைக் கொண்டு இன்ன இன்ன இரும்பை உற்பத்தி செய்தால் லாபகரமாக இருக்கும் என்ற கருத்தைப் பரிசீலிப்பதிலே காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. தஸ்தூர் கம்பெனி அறிக்கையின் அடிப்படையிலே மத்திய அரசு ஸ்பெஷல் ஸ்டீல் என்ற முறையிலே அதிக லாபம் தரக்கூடியதை உற்பத்தி செய்யலாம் என்ற முடிவை எடுத்து இறுதி முடிவைப் பரிசீலித்து வருகிறார்கள். அந்த முடிவை எடுத்தவுடன் விரைவிலே தொடங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. நா. வீராசாமி :** தலைவர் அவர்களே, நாம் எவ்வளவோ கோரிக்கைகள் விட்டதற்குப் பின்னாலேயும் மத்திய அரசாங்கம் காலதாமதம் காட்டுகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்னாலே பிரதமர் அவர்கள் சிறப்பு விழாவிலே கலந்து கொண்டும் ஆக்க வேலைகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. அதோடு மட்டுமல்ல, மைசூர் மாநிலத்திலும் ஆந்திர மாநிலத்திலும் துரிதமாக வேலைகள் நடைபெறுகின்றனவே, இரண்டு மாநிலங்களிலும் துரிதமாக வேலைகள்

*[1972 மார்ச் 10*

நடைபெற்றுக் கொண்டு நம்முடைய மாநிலத்தில் வேலை ஸ்தம்பித்து இருப்பது மாற்றாந்தாய் மனப்பான்மைபோல் இருக்கிறது. எனவே, நம்முடைய அரசு மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச் சொல்லி விரைவிலே நிறைவேற ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** கனம் உறுப்பினர் அவர்களுடைய உணர்ச்சியை நான் மதிக்கிறேன். வேறு வகையிலும் பேசப்படுகிறது. ஆந்திரம், மைசூர், தமிழ்நாடு ஆகிய மூன்று இடத்திலும் தொடங்கினார்கள். இருந்தாலும் சேலத்திலேதான் அதிக விரைவிலே வேலைகள் நடைபெறுகின்றன என்றும் பரவலாகப் பேசப்படுகிறது. அது உண்மையல்ல. 1964-ம் ஆண்டிலே காங்கிரஸ் ஆட்சி நடந்தபொழுது அப்பொழுது தொழில் துறை அமைச்சராக இருந்தவர் இதிலே தனித்த அக்கறை எடுத்துக் கொண்டு பல ஆராய்ச்சிகள் நடத்தி உடனடியாக இதை நிறைவேற்றுவதற்கான செய்திகளை எல்லாம் சேகரித்து வைத்திருந்தார்கள். அதனால் கர்நாடகம், ஆந்திரம் மாநிலங்களின் உருக்காலைப் பணிகளைவிட சேலம் உருக்காலைப் பணியை உடனடியாகத் தொடங்குவதற்கு நிறைய வாய்ப்பு இருக்கிறது என்று மத்திய அரசிடத்திலே வற்புறுத்தப் பட்டிருக்கிறது.

## சிறிய கார் உற்பத்தி

* 416 வினா—திரு. பி. எஸ். மணியன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிறிய கார் உற்பத்தி செய்வதற்கான அனுமதி யாருக்கேனும் வழங்கப்பட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மாற்றியமைக்கப் பெற்ற வடிவமுடைய பயணிகள் கார்களை ஆண்டு ஒன்றுக்கு 10,000 வீதம் உற்பத்தி செய்ய புதிய தொழில் நிறுவனம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு சேலத்திலுள்ள அசோக் என்ஜினியரிங் கார்ப்பரேஷனுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது.



*1972 மார்ச் 10]*

THIRU K. M. SUBRAMANIAM: Since priority should be for cheaper classes of vehicles, is this Government thinking of starting another Scooter factory in Tamil Nadu?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஸ்கூட்டர் 20,000 எண் உற்பத்தி செய்வதற்குத் தனி நபர் ஒருவருக்கு அனுமதி வழங்கப் பட்டது. ஆனால் அந்த அனுமதியை நிறைவேற்ற முடியாது என்று அவர்கள் கைவிட்டுவிட்டார்கள். அதற்குப் பிறகு அவருக்குக் கொடுக்கப்பட்ட அந்த அனுமதியை இந்த அரசாங்கம் தொடங்குவதற்கு அனுமதிக்கவேண்டுமென்று இந்த அரசாங்கத்தின் சார்பிலே கேட்டிருக்கிறோம்.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை:** பேரவைத் தலைவர் அவர்களே, தொடங்கப்படுகிற தொழில்கள் அத்தனையும் சென்னையிலும், சென்னை நகரத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில்தான் தொடங்கப் படுகின்றன. அதனால் சென்னை நகரிலே ஜனப் பெருக்கம் ஏற்பட்டு ஜன நெரிசல் உண்டாகியிருப்பதன் காரணமாக வசதிக் குறைவுகள் ஏற்படுகின்றன. பியட் கார் கம்பெனி ஒன்று தொடங்கப் போவதாக அறிகிறேன், அதை செங்கற்பட்டு மாவட்டத்தின் மேற்குப் பகுதியிலே பின்தங்கியப் பகுதியாக உள்ள காஞ்சிபுரத்திலே தொடங்குவதற்கு எண்ணம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** ஒவ்வொரு மாவட்டத்திலும் பிற்பட்ட பகுதிகள் இருக்கின்றன. அவர்கள் மாவட்டத்திலேயே இன்னொரு பகுதிக்கு வேண்டுமென்று கேட்கிறார்கள். நம்முடைய அரசைப் பொறுத்தவரையில் எல்லா மாவட்டங்களிலும் உள்ள பிற்பட்ட பகுதிகளுக்கு பரவலாக முக்கியத்துவம் கொடுத்துத்தான் பல தொழில்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. அதற்காகத்தான் தொழிலதிபர்களுக்குப் பல சலுகைகள், கன்செஷன்ஸ் அளிக்கப் படும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஏற்கெனவே கார்களை உற்பத்தி செய்யும் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையின் தகராறே இன்னும் தீர்ந்தபாடில்லை. போட்டிக்கு இப்பொழுது சேலத்திலே கார் தொழிற்சாலை ஆரம்பித்தால் அதனால் சென்னையிலே உள்ள தொழிற்சாலை பாதிக்கப்படுமா?

[1972 மார்ச் 10

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இது ஒன்றும் போதிய அளவுக்கு இருக்கும் தொழிற்சாலையல்ல. ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலைக்குக் கூட ஒரு யோசனை சொல்லப்பட்டது. குறைந்த அளவு உற்பத்தியை வைத்துக் கொண்டிருந்தால் இந்திய அளவிலே வயபிள் ஆக இருக்க முடியாது, அந்தத் தொழிற்சாலை இன்னும் நல்ல முறையிலே அதிகமாக உற்பத்தி செய்யக் கூடிய முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்று யோசனை சொல்லப்பட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

**திரு. கே. கந்தசாமி :** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல் தொழிற்சாலை கான்சன்ட்ரேஷன் ஆப் பீபிள் உள்ள பகுதிகளிலே ஆரம்பிக்காமல் குறிப்பாக மதுரை, இராமநாதபுரம் போன்ற பகுதிகளிலே குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட பகுதிகளாக இருக்கிற உசிலம்பட்டி, முதுகுளத்தூர் பகுதிகளிலே ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் கருணைகூர்ந்து முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பகுதியைப்பற்றி இங்கே கேள்வி கேட்டதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். எல்லா மாவட்டங்களிலும் ஒரு சில பிற்பட்ட பகுதிகள் இருக்கின்றன. பின்தங்கிய பகுதிகளில் தொழில் ஆரம்பிப்பதிலேதான் நாம் அதிகமாக உற்சாகம் காட்டி வருகிறோம்.

### சூலூரிலுள்ள ராமச்சந்திரன் குளம்

* 417 வினா—திரு. கே. என் குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், பல்லடம் தாலுக்கா, சூலூரில் உள்ள ராமச்சந்திரன் குளம் ஒன்றை நூறு ஏக்கராவில் அமைக்கத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** ஆம்.



1972 மார்ச் 10]

### திண்டிவனம்–செஞ்சி–திருவண்ணாமலை சாலை

* 418 வினா—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனத்திலிருந்து செஞ்சி வழியாக திருவண்ணாமலை அடையும் சாலையை அகலப்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

### சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய்கள்

* 419 வினா—திரு. நா. நாச்சியப்பன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சாத்தனூர் அணைக்கட்டிலிருந்து தெற்கு பகுதியில் சங்கராபுரம் பகுதிக்கு கால்வாய் வெட்டி தண்ணீர் பாசனத்திற்கு விடக்கோரி அப்பகுதி மக்கள் 1962-லிருந்து தொடர்ந்து கேட்டுக் கொண்டிருப்பதின் பேரில் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** பொன்னியாற்றுக்குக் குறுக்கே உள்ள சாத்தனூர் 'பிக்அப்' அணைக்கட்டிலிருந்து வலதுபுறம் ஒரு கால்வாய் வெட்டி வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கம் வட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்தில் கல்லக்குறிச்சி வட்டத்திலும் உள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க ஒரு திட்டம் உள்ளது. இத்திட்டத்தில் சங்கராபுரம் பஞ்சாயத்து யூனியனிலுள்ள சில கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

**திரு. ந. நாச்சியப்பன் :** பேரவைத் தலைவர்களே, இந்த வாய்க்கால் வெட்டுவதற்கான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுமதி கோரி வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். எனவே, விரைவில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1972 மார்ச் 10

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : அந்தத் திட்டம் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது. பரிசீலனை முடிந்தவுடன் அரசாங்கத்திற்கு அனுப்பி வைக்கப்படும். அப்பொழுது நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. தே. கேசவலு : தலைவரவர்களே, சங்கராபுரம் பகுதிக்கு வரும் வாய்க்காலை கல்லக்குறிச்சிக்கும் விரிவுபடுத்தும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் ஏற்கனவே பதில் சொன்னேன், கல்லக்குறிச்சி வட்டத்திலும் உள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்க ஒரு திட்டம் உள்ளது.

## வைகையிலிருந்து தண்ணீர்

*420 வினா—திரு. எஸ். காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை கோட்டம், முதுகுளத்தூர் வட்டம், கிருதமால் நதி வழியாக வைகை நதியிலிருந்து தண்ணீர் விடும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் என்றால், அத்திட்டம் எப்பொழுது செயல்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## குடதலையாற்றின் குறுக்கே மேம்பாலம்

*421 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், குடதலையாற்றின் குறுக்கே பாகல்மேடு—தாமரைப்பாக்கம் இணைப்புச்சாலை ஆகியவற்றினை இணைக்க ஒரு மேம்பாலம் கட்ட செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.



1972 மார்ச் 10]

## பிற்பட்ட மாணவர்களுக்கு உணவு விடுதிகள்

*422 வினா—திரு. இ. ராமசாமி : மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில் பிற்பட்டோர் மாணவ மாணவிகளுக்கான உணவு இல்லங்கள் ஏதேனும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டு உள்ளனவா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இவ்வாண்டு கோயமுத்தூரிலும், பெருந்துறையிலும் பின்தங்கிய மாணவர்களுக்கு ஒவ்வொரு உணவு விடுதியும், அவினாசியில் குற்ற பரம்பரைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு ஒரு உணவு விடுதியும் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது.

திரு. இ. ராமசாமி : தலைவரவர்களே, அதைப்போல பொள்ளாச்சி வட்டத்திலும் ஒரு விடுதி திறப்பதற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, அடுத்த ஆண்டு 35 விடுதிகள் திறப்பதற்கு உத்தேசமுள்ளது. அதிலே பொள்ளாச்சி பற்றியும் யோசிக்கலாம் என்று கருதுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், அந்த ஒவ்வொரு விடுதியிலேயும் எத்தனை மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் ? எத்தனை மாணவர்களுக்கான வசதிகளோடு விடுதிகள் ஆரம்பிக்கப் படுகின்றன என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்கள், உயர் நிலைப்பள்ளிகள் இருக்கும் இடங்களில் 50 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள், கல்லூரிகள் இருக்கும் இடங்களில் 100 மாணவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, பிற்பட்ட மாணவ மாணவிகள் உணவு விடுதிகளுக்காக இப்பொழுது எத்தனை கட்டிடங்கள் கட்டுவதற்கு உத்தேசம் இருக்கிறது ? அப்படியிருந்தால் எந்தெந்த மாவட்டங்களில் அந்தக் கட்டிடங்கள் கட்டப்படும் ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, நிதிநிலை காரணமாக தற்பொழுது அப்படிப்பட்ட உத்தேசங்கள் எதுவுமில்லை.

**திரு. எம். சுரேந்திரன் :** சார், பிற்பட்டோர் மாணவ மாணவிகளுக்காக விடுதிகளை ஆங்காங்கு கட்டுவதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். பிற்பட்ட மாணவ, மாணவிகளுக்காக எவ்வளவு விடுதிகள் தேவை என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா ? ஒவ்வொரு பகுதியிலேயும் என்ன முன் உரிமைகள் அளிக்கப்பட்டு அந்தப் பகுதிகளில் கட்டிடம் கட்டுவதற்கு வழி வகுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தேவைகளை ஆங்காங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களின் மூலமும் ஆங்காங்குள்ள டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் அதிகாரிகள் மூலமும் ஆராய்ச்சி செய்து ஆங்காங்கு இந்த உணவு விடுதிகளை உருவாக்குகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*Tourist Bungalow for Devarabetta*

* 423 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state—

(*a*) whether the Government have received and proposal from the Collector of Dharmapuri district (last year) for constructing a tourist bungalow and also for providing other facilities at Devarabetta in Thali Block of Denkanikota taluk; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU K.S. KOTHANDARAMIAH : Sir, the Thali area in Hosur taluk is said to be " Little England " and is a very nice place for tourism. The Hon. Minister for Backward Classes knows it well; May I know from the Hon. Minister whether he will consider the request to construct a tourist bungalow there?

**மாண்புமிகு திரு க. இராசாராம் :** தலைவரவர்களே, இப்பொழுது சுற்றுலாத்துறையில் நான்கைந்து இடங்களில்தான் இப்படிப்பட்ட சுற்றுலா மாளிகைகள கட்டுவதற்கான உத்தேசங்





கள் ஏற்பட்டு உதகமண்டலம், ஹொகேனக்கல், குற்றாலம், மகாபலிபுரம், ஏற்காடு இவைகளில் கட்டப்பட்டு வருகின்றன. அடுத்து தளி போன்ற இடங்கள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டு காரியங்கள் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** சார், இப்படிப்பட்ட விடுதிகளைக் கட்டுவதா, வேண்டாமா என்பதை சுற்றுலா வாரியம் தான் முடிவு செய்கிறதா ? அப்படி முடிவு செய்யப்பட்டால் சுற்றுலா அமைச்சரவர்களையும் கலந்துகொண்டு அவர்கள் செய்கிறார்களா ? இரண்டுபேருக்கும் உள்ள அதிகார வரம்பு என்ன என்று அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, சுற்றுலா வாரியத்திற்கு ஒரு தலைவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிகாரிகளும் இருக்கிறார்கள். அதற்கென்று ஆர்க்கிடெக்ட் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் முடிவு செய்து அது அமைச்சருக்கு வந்து அதற்குப்பிறகு அமைச்சரவையிலே வைத்து, அதற்குப்பிறகு முடிவெடுக்கப்படுகிறது.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, உதகையில் புதிதாக 20-க்கு மேற்பட்ட காட்டேஜ்கள் கட்டுவதற்கு ஆணையிட்டுள்ளதா ? அதை மே திங்களுக்குள் கட்டிமுடிக்க ஆணையிட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில், வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சுற்றுலா மாளிகைகள் சில கட்டுவதற்கு அரசு சில எண்ணங்களை மேற்கொண்டிருக்கிறது. அதற்கான காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். எத்தனை என்பது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

**திரு. சி. வி. எம். அண்ணாமலை :** தலைவரவர்களே, காஞ்சீபுரத்தில் சுற்றுலா மாளிகை கட்ட வேண்டுமென்று நீண்ட நாட்களாக உள்ள கோரிக்கை கிடப்பிலே இருக்கிறது என்பதை அரசு அறியுமா ? அப்படி அறிந்தால் உடனடியாகக் கட்ட முயற்சிக்கப்படுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, காஞ்சீபுரத்தில் அடுத்த ஆண்டு சுற்றுலா மாளிகை கட்ட

சுற்றுலா வாரியத்தில் எண்ணமிருப்பதாக நான் அறிகிறேன். அந்த எண்ணம் அடுத்த ஆண்டில் நிறைவேறும் என்று நினைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த எண்ணம் கைகூடும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன் என்கிறீர்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** அந்த எண்ணம் கைகூடும் என்பதாக நினைக்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** தலைவரவர்களே, ஒவ்வொரு சுற்றுலா மாளிகையிலும் எத்தனை அறைகள் கட்டப்படுகின்றன ? சுற்றுலா மாளிகைகளில் 4 சூட்ஸ், 5 சூட்ஸ் என்று ஏதாவது வரையறுக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, ஒருவர் தங்குவதற்கான அறைகள், இருவர் தங்குவதற்கான அறைகள், ஒரு குடும்பமாகப் போகின்றவர்கள் தங்குவதற்குக் குறைந்த வாடகையிலேயுள்ள அறைகள் என்று பரவலாக ஒரு 10, 12 படுக்கைகள் என்று 50 பேர்கள் தங்கக்கூடிய முறையிலே முதலிலே கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. அதற்குமேல் நிலைமைகள் அபிவிருத்தியடைந்தால் அபிவிருத்தி செய்யப் படுகிறது.

*Madras-Hosur State Transport buses*

* 424 *Q.*—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(*a*) whether there are proposals with the Government to run State Transport Buses from Madras to Hosur and Madurai to Hosur; and

(*b*) if so, the details thereof?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There is heavy traffic from Madras to Hosur and that is the only Highway road that leads people from other places in our State to Mysore State. I hear that a bus from Madras to Hosur was decided to be started from the 3rd of this month. May I know exactly what were the orders of the Government?



THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, our officers of the Government have recently entered into negotiations with the officers of the Government of Mysore and as a tentative conclusion they have agreed to certain routes to be plied between Madras and Bangalore. In view of that, there is no point in once again running an express bus service from Madras to Hosur. But the formal concurrence of the Mysore Government is still awaited. On receipt of the concurrence, we will be able to ply express buses from Madras to Bangalore.

*நகர்ப் பேருந்துகள்*

* 425 வினா—திரு. தோப்பூர் திருவேங்கடம் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகர மன்றங்களின் வருவாயைப் பெருக்கிக் கொள்ள வழிவகை செய்யும் வகையில் நகர எல்லைக்குள் ஓடும் பேருந்துகளை (Town Buses) நகரமன்றங்களே ஏற்று நடத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், இன்றைக்கு நகரசபைகளில் வருவாய் கம்மியாக இருக்கிறதே. அப்படி இருக்கக்கூடிய நகரசபைகளிலாவது ஓடுகின்ற டவுன் பஸ்களை நகரசபைகளிடம் ஒப்படைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, பொதுவாக நகரப் பேருந்துகள் வழித்தடங்களை நடத்துவதில் லாபம் வருவதில்லை, நஷ்டம்தான் வருகிறது என்பது உலக நகரங்களிலுள்ள அனுபவம். இந்தச் சூழ்நிலையில் ஏற்கனவேயே நிதி ஆதாரமற்ற நகரசபைகளுக்கு மேலும் இந்தப் பேருந்துகளை நடத்துகின்ற வாய்ப்புகளைக் கொடுப்பதன்மூலம் எந்த அளவிற்கு அந்த நகரசபைகள் நிலைக்கும், நீடிக்கும் என்பது எனக்குத் தெரியவில்லை. அதுமட்டுமல்ல, நாம் அதற்கான தனி வாரியங்கள், கழகங்கள் ஏற்படுத்துவதன்மூலம்தான் பேங்குகளிலே நிதியுதவி பெற முடிகின்றது. அரசாங்கமே நிதி ஆதாரங்களைத் திரட்ட இருக்கின்ற கஷ்ட நிலையிலே அவைகளைத் தனிக் கம்பெனிகளாக வைத்து நிதி ஆதாரத்தை வைத்து நடத்த வேண்டியதா?

இருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நகரசபைகள் எந்த அளவிற்கு ஏற்று நடத்தும் சூழ்நிலை இருக்கும் என்பது தெரியவில்லை. ஆதலால் நகரசபைகளுக்கு அதிலே எந்தவிதமான பலனும் ஏற்படாது என்று இந்த அரசு கருதுகிறது.

**திரு. கோவை செழியன்:** பேரவைத் தலைவரவர்களே, கோவை டிஸ்டிரிக்ட் போர்டிலே பொள்ளாச்சி கோவை இரயிலேயே வெற்றிகரமாக நடத்தி லாபத்தைக் காட்டினார்கள். ஆகவே முன்மாதிரியாக கோவை நகரசபைக்கு இந்த அனுமதியைத் தந்து கோவையிலே பரீட்சார்த்தமாக வைத்து அதில் லாபம் இருக்கிறதா என்று அறிந்து அதை மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சேரன் போக்கு வரத்துத் தொடங்கப்பட்டு நாட்டுடைமைத் திட்டத்தின்கீழ் இப்பொழுது நல்லமுறையில் நடக்கிறது. மாண்புமிகு உறுப்பின ரவர்கள் கூறிய விஷப்பரீட்சை தேவையில்லை.

**திரு. தோப்பூர் திருவேங்கடம்:** தலைவரவர்களே, அரசாங்கம் ஏற்று நடத்தும் போக்குவரத்துகள் நீங்கலாக மற்றபடி தனியார் நடத்தும் பஸ்களையெல்லாம் நகரசபைகளுக்கு ஒப்படைத்தால் அவர்கள் நல்லமுறையில் நிர்வகித்து தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள முடியும் என்று பல நகரசபைகள் தீர்மானங்கள் கூடப் போட்டிருக்கின்றன. அதை அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, நகரசபைகள் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியிருக்கின்றன. 1947-ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட எழெட்டு தடவைகள் இதற்குமுன்பிருந்த அரசும், அதைப்போல இந்த அரசும் 70-ஆம் ஆண்டும் பரிசீலித்த பிறகுதான் இந்த முடிவிற்கு வந்திருக் கின்றன.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** நகரங்களில் ஓடுகின்ற பஸ்கள் நஷ்டத்தில் ஓடுகின்றன என்று கூறுவது தவறு. சமீப காலம் வரையிலும் டி.வி.எஸ். நிறுவனத்தினர் நகர பஸ்களை லாபகர மாகத்தான் நடத்தி வந்திருக்கிறார்கள். எந்தவித உதவியும் முனிசிபாலிடிக்குத் தராமல் இருப்பது நியாயம் அல்ல. ரோடுகளில்



பஸ்கள் ஓடுவதன் காரணமாக வெகு சீக்கிரம் அவை பழுதடைந்து விடுகின்றன. ஆகவே, அரசாங்கம் முனிசிபாலிடிகளுக்கும், கார்ப்பரேஷன்களுக்கும் ஸ்பெஷல் கிராண்ட் கொடுக்க முன் வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** இந்தக் கேள்வி நகரசபைகள் தானே பேருந்துகளை நடத்தலாமா என்பதைப் பற்றியது. ஸ்பெஷல் கிராண்ட் எல்லாம் அவைகளை நடத்த ஆரம்பித்தால் தானே வந்துவிடும். டி.வி.எஸ். நகர பஸ்களை லாபத்தில் நடத்தியதாக உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். அவர்களும் கூட நகர பஸ்களை நஷ்டத்தில்தான் நடத்தியிருக் கிறார்கள். நீண்டதூரப் பேருந்துகளையும் சேர்த்து அவர்கள் நடத்திய காரணத்தால்தான் லாபகரமாக நடத்தும் வாய்ப்பு இருந்திருக்கிறது. ஆகவேதான் இந்த நகர பஸ்களை நகரசபை களிடம் தருவதன் மூலம் அவற்றின் வருமானம் பெருகும் என்று அரசு கருதவில்லை.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, has this Government examined the working of the B.E.S.T. in Bombay where the Corporation and the Government jointly run the buses on a monopoly basis and whether they are not making a profit and rendering efficient service?

THE HON. THIRU S. RAMACHANDRAN: Sir, the Government are fully aware of the working of the B.E.S.T. It is not only the transport system but also the electricity system which is combined there and they are running it, in profit due to that.

THIRU K. M. SUBRAMANIAM: So, in view of that experience, will this Government also allow both the Corporation and the Electricity System to run the buses so that there would be profit for the Corporation?

THE HON. THIRU S. RAMACHANDRAN: There is a fundamental difference. Even in Bombay, as I have stated it is jointly owned by the Government and the Corporation, and the Corporation as a company has got the financial flexibility. Here again we have set up the Pallava Transport Corporation and the same flexibility is now envisaged. So far as ownership is concerned, probably the Corporation there is giving some shares but here it is fully owned by Government.

[1972 மார்ச் 10

THIRU K. M. SUBRAMANIAM: Will the Government think of having the Madras City Corporation as a partner of the Pallava Transport Corporation? I understand that certain municipalities are allowed to sell electric power but the Corporation has not even got such a power?

THE HON. THIRU S. RAMACHANDRAN: When four crores of people own the Pallava Transport Corporation, I think even 25 lakhs of the Corporation are still within the limits. So the question does not arise. Anyhow, the party to which the hon. Member belongs is asking the Government of India to give bigger financial assistance in a liberal way. So I do not think the Pallava Transport Corporation should come to the rescue of the Corporation as such.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் *வெள்ளிக்குறி இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## (2) 1972-73-ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு இ. எஸ். தியாகராசன்:** தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தப் பேரவைக்குத் தந்துள்ள நிதிநிலை அறிக்கை மனநிறைவு தருவதாக இருக்கிறது. அறிக்கை நல்ல தமிழில் தயாரிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சி தருகிறது. நிதிநிலை அறிக்கை மூலப்பிரதி ஆங்கிலத்தில் தயாரிக்கப்பட்டு அதனை தமிழில் மொழி பெயர்த்து படிக்கும் வழக்கம் இதுகாறும் இருந்து வந்தது. அதற்கு மாறாக அறிக்கையின் மூலப் பிரதியே தமிழில் தயாரிக்கப்பட்டிருப்பது புலனாகிறது. இந்த மாறுதலுக்காக மாண்புமிகு முதல்வரை பாராட்டுகிறேன்

மாநில அரசுக்கு போதிய நிதி வசதி இல்லை என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அது காரணமாகவும் மாநில சுயாட்சி கோரி வருகிறோம். இந்நிலையிலிருந்தும் சமுதாயத்தின்



1972 மார்ச் 10] [திரு. இ. எஸ். தியாகராசன்]

அடித்தளத்திலுள்ள மக்களின் நலன்களுக்கே அரசு முதலிடம் தந்து வரும் கொள்கையின் காரணமாக, நலிந்தோர் நலன்களுக்கென கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டிருக்கக் காண்கிறேன். குறிப்பாக, அரிஜன, பிற்பட்ட வகுப்பினர்களின் நலனுக்கான திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இத்துறையில் மத்திய அரசின் உதவி நிறுத்தப்பட்டிருந்தும், மாநில அரசு கூடுதலான நிதி ஒதுக்கியிருப்பது கண்ணுக்குப் புருவம் தூரம் தான் என்ற பழமொழியை நினைவூட்டுகிறது. அரிசன, பிற்பட்ட மக்களின் நலனில் தொடர்ந்து அக்கறை காட்டி வருவதற்காக அரசைப் பாராட்டுகிறேன். கைத்தறி நெசவாளர் நலன் திட்டத்திற்கான நிதி இந்த ஆண்டு கூடுதலாக்கப்பட்டிருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. என்றாலும் கைத்தறி நெசவாளர் தங்கள் தொழில் முறைச் சாதனமாகவும் ஏனைய பிற்பட்ட வகுப்பினரைவிட, கல்வி, பொருளாதார துறைகளில் வளர்ச்சிப் பெறாமல் இருந்திருந்தனர். அவர்களில் வேலையற்றோருக்கு வேறு வேலை தருவதிலும அரசு தீவிரம் காட்ட வேண்டும். கைத்தறி நெசவாளர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்டுள்ள குழுவின் பரிந்துரைகளை அரசு விரைவில் செயல்படுத்தும் என்று உறுதி கூறியதற்காக முதல்வரைப் பாராட்டுகிறேன்.

நிதி நிலை அறிக்கையில் கிராமப்புற மக்களுக்கான, விவசாய மக்களின் முன்னேற்றத்திற்காக நல்ல அம்சங்கள் பல கூறப்படுகின்றன. குறிப்பாக விவசாயிகளின் கடன் பளுவை குறைத்து அவர்களின் வருங்கால வாழ்வை தெளிவு உடையதாக்கி கடன் நிவாரண சட்டம் கொண்டுவருவதாக அரசு அறிவித்துள்ளது வரவேற்கத்தக்கதாகும். குறைந்த வருவாயுள்ள தொழிலாளர்கள், உழைப்பாளர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோரின் குடும்பங்களையும் கடன் தொல்லைகளிலிருந்து காப்பாற்ற சட்டம் கொண்டு வரப்படும் என முதல்வர் அறிவித்துள்ளது மகிழ்ச்சியைத் தருகிறது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாநில சுயாட்சி அவசியம் பற்றி முதல்வர் நிதிநிலை அறிக்கையில் வெளியிட்டிருக்கும் கருத்துக்களை தமிழரசு கழகத்தின் சார்பில் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே

வரவேற்கிறேன். மாநில சுயாட்சி என்ற சொற்றொடரில் பிரிவினைக்கான உள்நோக்கம் மறைந்திருப்பதாக கூறப்படுகிறது. இது வெறும் பூச்சாண்டி. மாநில சுயாட்சி என்ற சொற்றொடரையே அரசியல் உலகில் வழக்குக்கு கொண்டு வந்தது காங்கிரஸ் கட்சிதான். சுயாட்சி என்பதன் பொருள் வேறு. சுதந்திரம் என்பதன் பொருள் வேறு. சுதந்திரம் கோருவதுதான் பிரிவினையாகும். சுயாட்சி கோருவது பிரிவினையாகாது. நாம் தமிழகத்திற்கு மட்டும் சுயாட்சி கோரவில்லை. அனைத்து மாநிலங்களுக்கும் கோருகிறோம். மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று தான் முதல்வர் குரல் கொடுக்கிறார். மத்திய கூட்டாட்சியில் இருந்து மாநில சுயாட்சியை, மாநில சுயாட்சியிலிருந்து மத்திய சுயாட்சியை பிரித்து பார்க்க முடியாதபடி, இரண்டும் இணைந்தேயிருக்கின்றன.

விஷயங்கள் இவ்வளவு தெளிவாக இருந்தும் மாநில சுயாட்சி கோரிக்கையை பிரிவினை வாதம் என்று கூறுவது ஒன்று புரியாத்தனம் அல்லது புரிந்தே செய்யும் வீம்புத்தனம். மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் கோருவது குற்றமில்லையானால், அந்த கோரிக்கைக்கு மாநில சுயாட்சி என்று பெயர் வைப்பது மட்டும் எப்படி குற்றமாகி விடும்? பிரிவினைக்கு பரிகாரமாகவும் எனது கழகம் மாநிலங்களுக்கு சுயாட்சி கோருகிறது. சுயாட்சி மறுக்கப்பட்டால், சுயாட்சி கிளர்ச்சியை ஒடுக்க முயன்றால், பிரிவினை கோரும் சக்திகளின் கை வலுப்பட்டு போகும். அந்தத் தவறைச் செய்ய வேண்டாம் என்று அதை எதிர்ப்பவர்களை கேட்டுக் கொள்கிறேன். மாநில சுயாட்சி கோரிக்கையை நிதிநிலை அறிக்கையில் உறுதியாக வலியுறுத்தியதற்காக தமிழ் அரசு கழகத்தின் சார்பில் முதல்வரை பாராட்டுகிறேன்.

பட்ஜெட்டானது சமதர்மபாதையில், தமிழர் சமுதாயத்தை கொண்டு செல்லக் கூடியவகையில் அமைந்துள்ளது. அறக் கட்டளைகளைச் சார்ந்த, நிலங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள விதிவிலக்கை ரத்துச் செய்யவும், நில உச்சவரம்பை குறைத்திருப்பதும் சோஷலிசப் பாதையில் பல அடிகள் முன்னேறியதற்கொப்பாகும்.





தமிழக அரசின் பட்ஜெட், முற்போக்கு பாதையில் நடைபோட விரும்புகிறது. பிற மாநிலங்களுக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. அதற்காக தமிழன் என்ற முறையில் பெருமைப்பட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக என்னுடைய தொகுதியான திருத்தணியில் ரயில்வே மேம்பாலம் ஒன்றும், குசஸ்தலி ஆற்றில் பாலமும் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டு அமருகிறேன்.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் முதல்வர் அவர்கள் அளித்துள்ள பட்ஜட் மீது எனது பேச்சைத் தொடங்குமுன் இந்தப் பேரவைக்கு சில கருத்துக்களை முன்னுரையாக கூற விரும்புகிறேன்.

முதல்வர் அவர்கள் சமர்ப்பித்துள்ள பட்ஜட்டை மட்டும் வைத்துக்கொண்டு நான் இப்போது பேசவில்லை. இதற்கு முன்பு இதே பேரவையில் பலராலும் வைக்கப்பட்ட பட்ஜட்டுகளை நான் பரிசீலனை செய்த பிறகுதான் நான் இந்தப் பட்ஜெட்டினை அணுகுகிறேன் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு ஜனநாயக நாடு. ஜனநாயகத்தின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளாகிய நாம் இந்த பட்ஜட்டைப் பற்றி விவாதிப்பதற்கும் அதிலுள்ள குறைகளை எடுத்துச் சொல்லி அதற்குரிய நிறைவு காணவேண்டும் என்பதில் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு என்பதை நான் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்கிறேன்.

இந்தப் பேரவையில் ஒன்றை நான் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். ஜனநாயக அடிப்படையில் அமைக்கப்பட்ட பிறகு இந்தப் பேரவையில் கொண்டுவரப்பட்டுள்ள பட்ஜட்களையும் இப்போது கொண்டுவரப்பட்டிருக்கிற பட்ஜெட்டையும் பார்த்தால் இதற்கு நிகராக ஏதாவது அமைந்திருக்கிறதா என்பதைத் துணிவோடு கேட்கிறேன். தயவுசெய்து அதை நீங்கள் ஆராயும்படி கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் ஒன்று என்னைக் கேட்கலாம். நீங்கள் சொல்வது அண்ணாவினுடைய பட்ஜட்டும் இதோடு பின்னுமா என்று கேட்கலாம். அண்ணாவினுடைய பட்ஜட் அப்போது மிகவும் மேடும் பள்ளமும் நிறைந்த காலத்தில் போடப்

[திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்] [1972 மார்ச் 10

பட்டது. அந்த மேடு பள்ளத்தைத் திருத்துவதற்காக அந்த பட்ஜட் அமைந்திருந்தது. சுருக்கமாகச் சொல்லப்போனால் நீண்ட காலமாக போராடப்பட்டு மக்களின் நலன்களை அடிப்படையாக வைத்து அமையக்கூடிய அளவிற்கு அண்ணா அவர்களின் அந்த பட்ஜட் வித்திடுவதாக இருந்தது என்று சொல்லவேண்டும். முதல்வர் கருணாநிதி அவர்களின் பட்ஜட் வித்திடப்பட்டதை இப்போது விளைவிப்பதற்கான வகையில் திட்டங்கள் வகுக்கப் பட்டிருக்கின்றன என்று கூறுவதற்கு சிறிதுகூட நான் கலங்க வில்லை. அதைப் பெருமையோடு ஏற்றுக்கொள்கிறேன். இந்தப் பீடிகையோடு நான் இந்த பட்ஜட்டை ஆராய விரும்புகிறேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினைத் தொடங்கும்பாணியே அலாதியாக அமைந்து இருக்கிறது. "உலக அரங்கில் கம்பீரமாகத் தலைதூக்கிப் புன்னகை சிந்தும் எழுச்சிமிகு காட்சிகண்டு இதயம் பூரித்தவாறு, இந்த நிதிநிலை அறிக்கையை பேரவையின் சார்பில் நாலரைக் கோடித் தமிழ் மக்களின் திருமுன் வைத்து அவர்களின் பேராதரவை என்றும் போல் இன்றும் இறைஞ்சி நிற்கின்றேன்" என்று இப்படித் தொடங்கி இருப்பது அவர்களது பெருங்குணத்தையும் தன்னடக்கத்தையும் காட்டுகிறது என்று கூறிக்கொள்கிறேன், பெருமைப்படுகிறேன்.

"நடந்து முடிந்த போரில் கிழக்கு வங்கத்தின் குரலுக்கு ஜனநாயக உணர்வோடு காது கொடுத்து இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் செயல்பட்ட திறனையும், இந்தியத் தளபதிகள், வீரர்கள் காட்டிய வியத்தகு ஆற்றலையும் எத்தனை முறை இந்த அவையில் பாராட்டிப் புகழ்ந்திடினும் தெவிட்டுவதே இல்லை" என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது தேன் போல் திகட்டுகிறது.

"நாட்டுப் பாதுகாப்பிற்கு நமது மாநிலத் தமிழ் மறவர்கள் சிந்திய ரத்தம்—மாநில அரசின் மூலம்—மாநில மக்கள் எல்லா வகையிலும் அளித்த ஆதரவு இந்திய ஒருமைப்பாட்டில், தமிழகத்திற்குள்ள உளமார்ந்த நம்பிக்கையின் அடையாளங் களாகும்" என்று குறிப்பிட்டிருப்பது ஒருமைப்பாட்டிற்கு இந்த



1972 மார்ச் 10] [திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

அரசுக்கு உரிய உண்மையான, அழுத்தந்திருத்தமான எண்ணத்தை நிறைவுபடுத்திக் காட்டுகிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

"பகைப்புலத்தை வேரறுப்பதில் இந்திய மக்கள் காட்டிய ஒற்றுமை மேலும் வலுப்பெற வேண்டுமென்பதில் இந்த அரசு தனியாத ஆர்வம் கொண்டுள்ளது" என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது வரவேற்கத்தக்கதொரு அம்சமாகும்.

"ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் பல்வேறு கருத்துக்களுக்கும், பல்வேறு கொள்கைகளுக்கும் சுதந்திர மளிக்கப்பட வேண்டும்" என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட் டிருப்பது இந்த நாட்டின் பிரத்தியட்ச நிலைமையை பிரதிபலித்து காட்டுகிறது.

"நாடு வாழ, நலிவு தீர, சமுதாயக் கேடு களைய, 1967-ஆண்டு தமிழகத்தில் அறிஞர் அண்ணா தலைமையில் பொறுப்பேற்று, தொடர்ந்து 1971-லும் மக்களின் பேராதரவோடு பயணம் நடத்தும் இந்தத் தமிழக அரசு, தேர்தல் காலத்து வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட வேண்டியவை என்று கருதாமல், அவைகளைக் கல்மேல் எழுத்தெனக் கொண்டு இயன்ற வரையில் கடமையாற்றி வருகிறது" என்று கூறுவது தமிழக அரசு மக்கள் மீது கொண்டிருக்கிற நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் உறுதிப் படுத்துகிறது என்றுதான் கூறுவேன்.

அன்புக்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த பட்ஜெட் ஏழை மக்களுக்காகப் போடப்பட்டிருக்கிறது என்பதற்கு அவர்கள் கொடுத்துள்ள புள்ளிவிவரங்களே சான்றுகளாக அமைந்துள்ளன. பின்தங்கியோர் நலன், பிச்சைக் காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடிய திட்டம், குடிசை மாற்று வாரியம், குடிநீர் வாரியம், கல்லூரிகளில் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி, நில உச்சவரம்பு விதிவிலக்குகளை நீக்கம் செய்தல், தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகள் வழங்குதல், நியாயமான கூலி நிர்ணயம் செய்தல், ஏழைகளுக்கு, ஹரிஜனங் களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நிலப் பட்டா, மனைப் பட்டா வழங்குதல் போன்ற திட்டங்கள் உள்ளன. அவைகள் பாராட்டப்படவேண்டியவைகளாகும், வரவேற்கத்தக்கவையாகும்.

[திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்] [1972 மார்ச் 10

இதற்கு முன்பு பலபேர் பல கருத்துக்களை வெளியிட்டதைக் கூர்ந்து கவனித்தேன். அவர்கள் அளிக்கப்பட்டுள்ள நிதி போதாது. அதை இன்னும் அதிகப்படுத்த வேண்டும், இந்தத் திட்டத்தில் சாரமே இல்லை என்று சிலர் குறிப்பிட்டதை நானும் கேட்டேன், தாங்களும் கேட்டிருக்கலாம். ஒன்று நான் துணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதுவரையில் இங்கு ஏழைகளுக்காக, தொழிலாளர்களுக்காக, விவசாயிகளுக்காக, பின் தங்கியோருக்காக, எல்லாத் துறைகளிலும் உள்ள ஏழை மக்களுக்காக வேறு எந்த பட்ஜட்டிலும் இவ்வளவு தெளிவாக, விளக்கமாக தரப்பட்டுள்ளதா என்பதை தயவுசெய்து ஆலோசிக்க வேண்டும்.

கடைசியாக விருப்பு வெறுப்பின்றி எல்லாத் தரப்பட்ட தியாகிகளுக்கும் மாதாந்திர நிதி உதவி வழங்கப்பட்டிருப்பது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும்.

இனி, நான் மாநில சுயாட்சிக்கு வருகிறேன். இங்கே பாருங்கள், அவர்கள் தொடங்கியுள்ள பாணியை! அவர்கள் எழுத்தாளர், பேச்சாளர், அரசியல் நிபுணத்துவம் உடையவர், அதேநேரத்திலும் தன்னடக்கமும், நிறைவும் கொண்டவர்கள். அவர்கள் தொடங்கும் பாணியை தயவுசெய்து கவனிக்கவேண்டுகிறேன். " . . . குடும்பப் பெருமைகள், குலப்பெருமைகள் எதுவுமற்றப் பராரிகளின் தோழர்களாய், அரசுக் கடமையாற்றி, இருக்கின்ற அதிகாரங்கள், வசதிகள், வாய்ப்புக்களை அடிப்படையாக வைத்து சமுதாயத்தின் அடித்தளத்தில் ஆழ்ந்திக் கிடக்கும் மனித தெய்வங்களை ஆராதனைக்குரியவர்களாக ஆக்க, இந்த நிதிநிலை அறிக்கை வாயிலாகவும், இதற்கு முன்பு வெளியிடப்பட்ட நிதிநிலை அறிக்கைகள், திட்டங்கள் வாயிலாகவும் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம் . . ." என்று முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருப்பது அரசின் தன்னடக்கத்தையும், தமிழர்களின் பரிதாபகரமான நிலைமையையும் அவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

இன்னொன்று, " நமதரசுக்குள்ள அதிகார வாம்புகளுக்கேற்றவாறு, பின்னடைந்தோர், தாழ்த்தப்பட்டோர், தவித்து நிற்போர் நெஞ்சுயர்த்த ஆவன செய்துள்ளோமெனினும், உடனடியாகச் சந்தித்துத் தீர்வு காண வேண்டிய பல்வேறு பிரச்சினைகளுக்கு



1972 மார்ச் 10] [திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்]

அதிகாரமோ, நிதியாதாரமோ, குறைந்தபட்ச உரிமைகளோகூட இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறோம்" என்று முதல்வர் அவர்கள் உருக்கமாகக் கோடிட்டுக் காட்டியிருப்பது பரிதாபத்திற்கு உரியதாக இருக்கிறது.

" மாநில விவகாரங்களில் மைய அரசு தலையிட பெருமளவு வாய்ப்புக்கள் காண்கின்றன. இதன் மூலம் மாநிலங்களின் சுயாட்சி உரிமை பாதிக்கப்படுகின்றது" என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். முதல்வர் அவர்கள் மேலும் ஆதாரங்களோடு கூறுகிறார்கள். தனக்குத் தேவையற்ற அதிகாரங்கள் பலவற்றை மத்திய அரசு மாநில அரசிடமிருந்து பறித்துக்கொண்டும்—மாநில அரசுகளுக்குத் தேவையான பல அதிகாரங்களை பகிர்ந்தளிக்காமலும் இருக்கின்ற நிலை, சுயாட்சித் தத்துவத்தின் முழுமையைக் காட்டுவதாகாது" என்று முதலமைச்சர் அவர்கள் கூறியுள்ள விளக்கமானது, தெளிவுடையதாகும் என்று கூறுவேன்.

" மத்திய அரசு எஜமானனாகவும், மாநில அரசுகள் ஏவல் கேட்போராகவும் மாறுகிற நிலையொழிந்து தோழமை உணர்வு வலுப்பெற்றிடவும், மாநிலங்களுக்கு முழு சுயாட்சி வேண்டும் என்ற நமது முதலமைச்சரின் கூற்று அரசுக்குள்ள அழுத்தமான சுயாட்சி வேண்டுமென்ற உறுதியை உறுதிப்படுத்துகிறது என்பதைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். இவ்வளவு அழுத்தம் திருத்தமாக பேசியிருக்கும் முதலமைச்சருக்கு என் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வளவு அழுத்தம் திருத்தமாக மாகாண சுயாட்சிப்பற்றி முதல்வர் அவர்கள் பேசியிருக்கிறபோது, எனது அரசியல் சகாவும், மதிப்பிற்குரிய காங்கிரஸ் தலைவருமான என் அருமை சகோதரர் உயர்திரு காமராஜர் அவர்கள் எந்த அடிப்படையை வைத்துக்கொண்டு புதுக்கோட்டையில் ஒரு பொதுக்கூட்டத்தில் ஒரு கருத்தை வெளியிட்டு இருக்கிறார்கள் என்று அவரோடு நீண்ட நாள் தொடர்பு கொண்டிருந்த என்னால்கூட புரிந்து கொள்ள முடியவில்லை. அவர் புதுக்கோட்டையில் சொல்லியிருக்கிறார், மாகாண சுயாட்சி வேண்டுமென்று இங்கே சொல்கிறார்.

மத்திய அரசுக்கு செல்லுகிறபோது, மத்திய அரசுக்கு தமிழக அரசு சரணடைந்து இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார். நம்முடைய தங்கமணி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் 'டபிள் அட்டாக்' என்று. நான் சொல்கிறேன், அதற்காக என்னை மன்னிக்கவேண்டும், எனக்குச் சொல்ல உரிமையிருக்கிறது. அவர் அந்தக் கருத்தை எதை அடிப்படையாக வைத்துக்கொண்டு சொல்கிறார் என்று சொன்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

இன்னொன்று என் பக்கத்திலே சுதந்திரா கட்சியின் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் இருக்கிறார்கள். இப்போது இல்லை. இருந்தார்கள். நேற்றைய தினம் பேசும்போது சொன்னார்கள். அவர்களுக்கு ஒன்று நான் கூறவிரும்புகிறேன். உலகப்பெரும் தலைவர்களில் ஒருவரான இராஜாஜி அவர்களின் கருத்தை நீங்கள் படித்திருப்பீர்கள். ஆனால் உங்கள் கட்சியிலேயே மேல் சபையில் திரு. சாமிநாதன் அவர்கள் கூறிய கருத்துக்களை இங்கே சமர்ப்பிக்க விரும்புகிறேன். நானாகச் சொல்கிறேன் என்பதைவிட உங்கள் கட்சியின் கொள்கைக்குக் கட்டுப்பட்ட, மேலவையின் உறுப்பினராக உள்ள திரு. சுவாமிநாதன் கூறி இருப்பதைச் சொல்கிறேன். மாகாண சுயாட்சி கோரிக்கைபற்றி குறிப்பிட்ட போது மத்திய அரசாங்கத்திற்கு ஜீரணிக்கமுடியாத அளவுக்கு அதிக அதிகாரங்கள் அளிப்பதன் மூலம் மத்திய அரசு வலுவு இழந்துவிடும் என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் சிறப்பாக கூறியுள்ளார்கள். சுயாட்சி என்பதற்கும், சுதந்திரம் என்பதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளது. சுயாட்சி என்றால் தனி அதிகாரங்களைக்கொண்டது என்று தான் பொருள். சுயாட்சி என்று சொல்லில் தவறில்லை என்று சொல்லியிருக்கிறார்கள், திரு. சுவாமிநாதன் அவர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** நண்பர் திருப்பூர் மொய்தீன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்வேன் அந்தப் பேச்சுக்குப் பிறகு 5-ம் தேதி எங்களுடைய கட்சியின் மாகாண பொதுக்குழு கூடி போட்டிருக்கிற தீர்மானத்தில் மிகத்தெளிவாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் நேற்றையதினம் பேசியிருக்கிறேன். ஒரு கட்சியிலே ஒரு உறுப்பினருக்கும் மற்றொரு உறுப்பினருக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். அந்த





மாதிரியான கருத்து வேறுபாடுகளை பொதுக்குழுவின் மூலமாக தீர்த்துக்கொள்கிறோம். பெருமதிப்பிற்குரிய அப்துல் சமத் அவர்களுக்கும், நம் தலைவர் மொய்தீன் அவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம். அதற்குப் பிறகு அதைப் பொதுக் குழுவில் தீர்த்துக்கொண்டு இருக்கலாம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருத்துக்கும், மனோகரன் அவர்கள் கருத்துக்கும், ஆசைத்தம்பி அவர்கள் கருத்துக்கும் வேறுபாடு இருக்கலாம். அதை அவர்கள் தீர்த்துக்கொள்ளவேண்டும். ஒரு கட்சியைப் பொறுத்தவரையில் பொதுக்குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள்தான் கொள்கை. நான் இதைப்பற்றி நேற்று பேசிய நேரத்தில் நீங்கள் இங்கு இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும் போது மனோகரன் அவர்களுக்கும், ஆசைத்தம்பி அவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம், தீர்த்துக்கொள்ளலாம், அதைப் போல் சாமிநாதன் அவர்களுக்கும், தனக்கும் உள்ள கருத்து வேறுபாடு இருக்கலாம், அதை தீர்த்துக்கொள்ளலாம். பொதுக் குழுவில் கட்சி எடுத்த முடிவுதான் சரியானது என்று சொன்னார்கள். அதுதான் எங்கள் கொள்கை என்று சொன்னார்கள். இந்த நியாயத்தை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கிறேன். ஆசைத்தம்பிக்கும், மனோகரனுக்கும் கருத்து வேறுபாடு இருந்தாலும், அந்தக் கட்சியினுடைய, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர், பொதுச் செயலாளர் என்ன சொல்கிறார்களோ, என்ன கொள்கை பொதுக் குழுவிலே தீர்மானம் போட்டு எடுத்தார்களோ, அது தான் ஆதாரபூர்வமானது என்பதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே :** மனோகரன் அப்படிக்கூறி இருக்கிறார்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்கிறார்களா, மறுக்கிறார்களா என்று தான் கேட்டேன். முதலமைச்சர் வந்த பிறகு சொல்கிறேன்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், உணவுத் துறை அமைச்சர் அவர்கள் அழுத்தம் திருத்தமாகச்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 10

சொன்னார்கள். பொதுக்குழுவிலே எடுத்ததுதான் முடிவு. அது தான் கட்சியின் கொள்கை என்று சொன்னார்களே, அப்படி கட்சிக் கொள்கையை மீறுகிறவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கான உத்தேசம் உண்டா? அந்தக் கட்சித் தலைவர் எடுப்பாரா?

MR. DEPUTY SPEAKER: This has no relevancy to the subject.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்:** அதைப்பற்றி எல்லாம் கட்சி பார்த்துக்கொள்ளும்.

**திரு. கே. எ. வகாப்:** பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பாயிண்ட் ஆப் ஆர்டரா? இல்லையென்றால், உட்காருங்கள்.

**திரு. கே. எ. வகாப்:** பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் மதிப்பிற்குரிய அப்துல் சமத்திற்கும், மாண்புமிகு திரு. மொய்தீன் அவர்களுக்கும் கருத்து வேறுபாடு இருக்கலாம் என்று சொன்னார்கள். அது கட்சியிலே தீர்த்துக் கொள்ளப்படவேண்டிய விஷயம். இப்படிப்பட்ட பேச்சுக்களின் மூலமாக கட்சியிலே அவர்கள் பிளவு உண்டாக்க முற்படுகிறார்கள் என்று கருதுகிறேன். ஆகவே, அப்படி அவர்கள் கூறுகிற கருத்திற்கு, ஆதாரம் கூறவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இருக்கலாம் என்று தான் சொன்னார்கள். ஆதாரம் தேவையில்லை. இப்படிப் பேசுவதால் கட்சியில் பிளவு உண்டாகும் என்றால், அதை விட கட்சி இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** 'இருக்கலாம்' என்ற இந்த ஒரு வார்த்தை மனித சமுதாயத்திற்கே மிக இழுக்கானது. அந்தப் பதத்தை யார் மீதும் கூறலாம். இருக்கலாம் என்று சொல்லிவிட்டு, அதனுள்ளே பொருத்திக்கொள்வதற்கு ஒரு பயங்கரமான புகை அது. யார் தலையிலும் கல்லைப்போட்டு விட்டு, ஒளிந்து கொள்வதற்கு ஒரு இரும்புத்திரை அது. அதைப்பற்றி நான் விளக்கம் கூற விரும்பவில்லை. நான் கேட்டதெல்லாம் அவர்களுடைய கருத்து என்ன என்பது தான். கட்சி அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கும், என்ன எடுக்கவேண்டுமென்பதைப்



1972 மார்ச் 10] [திருப்பூர் திரு. ஏ. மொய்தின்]

பற்றி நான் தீர்ப்பு சொல்வதற்கு இல்லை. அப்படி சொல்லப் பட்டிருக்கிறது என்று நான் சொன்னேனே தவிர இப்படி சொல்லக் கூடாது என்று நான் சொல்லவில்லை. அது பேப்பரில் வந்திருக்கிறது என்றுதான் சொன்னேன். "மாநிலத்தில் சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி என்பது பிரிவினை வாதம் அல்ல. கூட்டாட்சி என்பதற்குப் பதிலாக 'ஒன்றியம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பதாகவும், ஒன்றியம் என்ற சொல்லைப் பயன் படுத்தியிருந்தாலும், நமது அரசியல் அமைப்பு கூட்டாட்சி முறையில் தான் அமைந்திருக்கிறதென்றும் அரசமைப்புச் சட்ட மியற்றியவர்களில் தலைமையானவராகத் திகழ்ந்த டாக்டர் அம்பேத்கார் அவர்களே கூறியிருக்கிறார்".

**திருமதி த. ந. அனந்தநாயகி:** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். இந்த வரவு-செலவு திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் படித்தபோது நாங்கள் கேட்டுக்கொண்டு தான் இருந்தோம். திரும்பவும் முஸ்லீம் தலைவர் அந்த வரவு-செலவு திட்டத்தைப் படிக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது ஒன்றும் பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** நானும் அதைக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இங்கே பேசியவர்கள் பேச்சைக் கேட்ட உடனே ஒருவேளை அவர்கள் இதைப் படிக்கத் தவறியிருப் பார்களோ என்பதற்காகத்தான் படிக்கிறேன். ஏனென்றால் அவர்கள் இதை நன்றாகப்படித்திருப்பார்களேயானால், அவர்கள் இதிலுள்ள கருத்துக்கு முரணான கருத்தை சொல்வதாக இருந்தால் பரவாயில்லை, இதிலே இல்லாததை எல்லாம் அவர்கள் சொன்னார்கள். பெருமைக்குரிய தலைவர்கள் எல்லாம் அப்படி பேசியதைக் கண்டு, ஒருவேளை இந்த 10-15 பக்கமுள்ள புத்தகத்தை படிக்காமல் பேசியிருப்பார்களோ என்று நினைத்து நாம் கொஞ்சம் இதைப்படித்து விளக்கம் சொல்லலாம் என்று கருதித்தான் சொல்கிறேன். இதைத் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும். இப்படி அடிக்கடி குறுக்கிட்டால் நான் விஷயத்தை முழுவதுமாக பேசுவதற்கு அவகாசத்தை உரிமையோடு கேட்கத் தான் செய்யவேண்டும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

"உரிமைக்கு குரல் கொடுப்போர் மாகாண அரசிலும், உறவிற்கு கை கொடுப்போர் மத்திய அரசிலும் இருக்கும் இந்தக் காலத்திலும்—இதை கவனிக்கவேண்டும். "உரிமைக்கு குரல் கொடுப்போர் மாகாணத்திலும் உறவுக்கு கை கொடுப்போர் மத்திய அரசிலும் இருக்கும் இந்தக் காலத்திலேயே இப்படி நிலைமை என்றால் பொறுப்பை தட்டிக் கழிப்போர், தாராள சிந்தையற்றவர் மத்திய அரசில் இருந்து விட்டால் மாகாணத்தின் வேண்டுகோள் விழலுக்கு இறைத்த நீராகும்" என்று முதல்வர் அவர்கள் கூறுவது எவ்வளவு நியாயமானது என்பதை இந்தப் பேரவை சற்று சிந்தித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அன்புக்குரியவர்களே, தலைவர் அவர்களே, ஆகவே, மாகாண சுயாட்சி என்பது பயப்படக் கூடிய ஒன்றல்ல. அதற்கு பயப்பட வேண்டியதும் இல்லை. இந்த மாகாண சுயாட்சியைப்பற்றி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முதல் வரிசையில் இருப்பவர்கள், மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் பேசும் போதெல்லாம் மிக அழுத்தமாக தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். டாக்டர் ஹாண்டே அவர்கள் நேரடியாக என்னிடம் சொன்னார், அவையில் சொன்னாரோ என்னவோ எனக்குத் தெரியாது. இப்படிப் பேசும் போது இதைக் குறிப்பிட வேண்டும் என்று சொன்னார். அதை அவர்கள் மறுக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன். முதலமைச்சரிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று சொல்லுங்கள்; அங்கத்தினர்கள் ஆங்காங்கே தாறுமாறாக பேச வேண்டாம் என்று சொன்னார். நான் அதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். முதலமைச்சர் அவர்கள் சொல்கிற மாகாண சுயாட்சி கருத்தை டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். மற்றவர்கள் சொல்வதையெல்லாம் கண்டு பயப்படவேண்டாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முதலமைச்சர் அவர்கள் சொல்லியதை நான் முழுக்க முழுக்க ஒத்துக்கொள்ளவில்லை. நான் அவர்களிடம் பேசியது எல்லாம் இவர்கள் பேசப் பேச இன்னும் குழப்பம்தான் ஏற்படும் என்று சொன்னேன். ஆகவே அதைத் தவிர்ப்பதற்காக முதலமைச்சர் அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டுமென்று சொன்னேனே தவிர, ஒருபோதும் நான் முதலமைச்சர் சொல்லியதை அப்படியே முழுக்க ஒத்துக்கொள்ளவில்லை.



1972 மார்ச் 10]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் இரண்டு பேரும் ஒரு சாட்சி வைத்துக்கொண்டு பேசுவது நல்லது.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: மற்றவர்களும் அவரவர்கள் கருத்தைச் சொல்வார்கள். அதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதில்லை.

DR. H. V. HANDE : I am very much interested in the country. I do not want others to exploit the situation. Outside world is going on commenting on this.

வெளிநாடுகள் இதைப் பற்றி விமர்சிக்கக் கூடிய அளவிற்கு வந்துவிட்டது. ஆகவே, அந்த அளவுக்கு போகாமல் கொஞ்சம் நேஷணலிஸம் இருக்கவேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதை ஒத்துக்கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

Let us be naturalistic. Outside countries are exploiting the whole thing.

திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்: வெளியே உள்ளவர்கள் இதைப் பற்றிப் பேசும்போது திரித்துக் கூறுகிறார்கள் என்று அவர்கள் சொல்கிறார்கள். இங்கே இருக்கிறவர்கள் என்ன வாழ்கிறார்கள்? இங்கே உள்ள பத்திரிகைகள் என்ன வாழ்கிறது? இங்கே உள்ள மேடைப் பேச்சாளர்கள் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? திரித்துத்தான் பேசுகிறார்கள். அதற்கு உள் அர்த்தம் கற்பித்துத்தான் பேசுகிறார்கள். அதற்குப் பதில் சொல்கிறபோது சிலர் தி.மு. கழகத்தில் அடுத்த அடுத்த வரிசையில் இருக்கிறவர்கள் பேசுகிறபோது அவர்கள் அவர்களின் கருத்துக்களை கூறுகிறார்கள். இப்படி ஜனநாயகப்படி பேசுவதை எப்படி முரணானது என்று என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. இது நிச்சயமாக முரண்பட்ட ஒன்று அல்ல. மறைந்த நேரு அவர்கள் மாகாண சுயாட்சியை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இராஜாஜியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இராஜாஜி அவர்கள் இப்போது எதிர்க்கிறார்கள். முன்னர் உள்ள பல தலைவர்களால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. இப்படி ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றை, அழுத்தம் திருத்தமாக ஒத்துக்கொள்ளப்பட்ட ஒன்றை ஏதோ தி.மு. கழகம் சொல்கிறது என்ற காரணத்திற்காக அதில் பிரிவினை

உணர்ச்சி இருக்கிறதென்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. பிரிவினை உணர்ச்சிதான் உள்ளே இருக்கிறது என்று சொல்லி எதிர்க்கட்சிக்காரர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை மாநில சுயாட்சி எல்லைக் கோட்டை இன்றைக்கு மீற வேண்டும் என்ற கருத்தினைக் கொள்கிற அளவிற்கு எதிர்க் கட்சியின் மேல் வரிசையில் இருக்கிறவர்கள் இப்படி நிர்ப் பந்திக்காதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களைத் தூண்டாதீர்கள், நல்ல உணர்ச்சியை குலைத்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஒன்று கூறுகிறேன் என்றைக்கு தி.மு.க. மாகாண சுயாட்சி எல்லைக்கோட்டை மீறிவருகிறதோ அன்றைக்கு அதை எதிர்க்கிறபோது முதல் வரிசையில் என்னை நிறுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று நண்பர் ஒருவர் சொன்னார். நாளை நீங்கள் பேசப் போகிறீர்கள். நீங்கள் வக்காலத்து வாங்கித் தான் பேசப் போகிறீர்கள் என்று சொன்னார். நான் தோழமைக் கட்சியில் இருப்பதால் இப்படிச் சொல்வேன் என்று அவர்கள் சொல்லி இருக்கக்கூடும். ஆனால் நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன். நான் அர்த்தம் இல்லாமல் நீட்டியோ, ஒட்டியோ பேச விரும்பவில்லை. நான் உங்களுக்கு ஆரம்பத்தில் சொன்னேன் நடுநிலைமையில் பேச வருகிறேன் என்று சொன்னேன். அதன் அடிப்படையில்தான் இப்போது பேசுகிறேன். கடைசியாக நான் அதிகமாகப் பேச முடியவில்லை. பேசுகின்ற நிலையிலும் நான் இல்லை.

ஆகையினால் ஒன்றை நான் மிகத் தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன். எல்லா மாகாணங்களையும் விட நம்முடைய மாகாணம், அதாவது தமிழ்நாடு, மிக அமைதியோடு நிர்வாகம் நடத்திக்கொண்டிருக்கிறது. சீரோடும் சிறப்போடும். அதை யாரும் மறுக்கமுடியாது. அதில் பல பிரச்சினைகள் கிளம்பக் கூடும். தொழிலாளர்கள் பிரச்சினைகள், பட்டதாரிகள் பிரச்சினைகள், வேறு சில பிரச்சினைகள் கிளம்பக்கூடும். அம்மாதிரி வருகிற பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காண்பதற்கு நாம் முயல வேண்டுமே தவிர, அதை வைத்து பிரச்சினைகளை பெரிது படுத்த வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.





ஒன்று நான் குறிப்பிடுவேன். நீங்கள் என்னை என்ன சொன்னாலும் சரி. முதலமைச்சர் அவர்கள் இந்த திட்டமிட்டு நடந்த போராட்டங்கள் அத்தனையுமே ஒரு அமைதியோடு பார்த்து அவர்கள் அழுத்தம் திருத்தமாக நடந்து வெற்றி கண்டிருக்கிறார். அவர்கள் கோயம்புத்தூர் விவகாரம், சிம்சன் விவகாரம், பட்டதாரி ஆசிரியர்களின் விவகாரங்களில் மிக அமைதியோடு, தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போல அல்லாமல் மிக தைரியமாக, சுமுகமான முறையில் தீர்வு கண்டிருப்பதற்காக நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கட்சியின் சார்பிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல நிகழ்ச்சிகள் நடக்கும். நடக்கலாம். நடக்க வைக்கவும் செய்யலாம். இந்த 'லாம்' போடுவதை ரொம்ப தைரியமாக போடலாம். ஆனால் நான் சொல்லிக்கொள்கிறேன். இப்போதுள்ள தமிழர்கள், இந்த பட்ஜெட்டை புரிந்து கொண்டவர்கள் இதை ஒரு நல்ல பட்ஜெட் என்று சொல்வார்கள்.

நான் இந்த சர்க்காரிடம் கேட்டுக்கொள்வதெல்லாம் இன்னும் இவ்வாறாக ஏழைகளுக்கு உதவக்கூடிய அளவிற்கு திட்டங்களை திட்ட சிந்தனையை செலவிடவேண்டும். ஆனால் அதைக் கேட்டால் பணம் இல்லை. பலர் இங்கே பேசுகிறார்கள். வரி போடவேண்டாம் என்று சொல்கிறவர்கள் இன்னின்ன காரியங்களை செய்யவேண்டுமென்று சொல்கிறார்கள், வரி போடாமல் இன்னின்ன காரியங்களை செய்யவேண்டுமென்று சொல்லவில்லை. நீங்கள் போடுங்கள். ஆனால் அதே நேரத்தில் சமுதாயத்தில் மிக அடித்தளத்தில் உள்ள ஹரிஜனங்கள், பின்தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டோர் ஆகியவர்களுடைய நலன்களை குறிப்பாக கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த மக்கள் எல்லாம் தலைதூக்கி முன்னேறி வரவேண்டும். அந்த முயற்சியை சர்க்கார் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையை முஸ்லீம் லீக் கட்சியின் சார்பில் நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன் என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

**திரு. என். கணபதி:** சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். எதிர்க்கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் ஆளும் கட்சி பக்கத்திலே வந்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அப்படி ஒன்றும் கண்டிப்பான வரன்முறை கிடையாது. (திருமதி அனந்தநாயகி எழுந்தார்கள்) உட்காருங்கள். 'யு டேக் இட் ஈஸி'. அவையில் ஒரு கலகலப்புக்காக அப்படிக் கூறுகிறார். அவ்வளவுதான்.

### (3) புது அமைச்சர் அறிமுகம்.

**திரு. கே. ஏ. வகாப் :** துணைத் தலைவரவர்களே, நம்முடைய அவைக்கு புதிய அமைச்சரவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களை அங்கத்தினர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** புதிய அமைச்சரவர்களை அறிமுகப்படுத்தித்தான் தெரிந்துகொள்ளவேண்டுமென்று இல்லை. வேண்டுமானால் அமைச்சரவர்களே தன்னுடைய திருமுகத்தைக் காட்டுவார்கள். (மாண்புமிகு திரு. மன்னை நாராயணசாமி அவர்கள் எழுந்து, கைகூப்பி வணக்கம் தெரிவித்துவிட்டு உட்கார்ந்தார்கள்) அமைச்சரவர்களை அவையின் சார்பில் வரவேற்று, வாழ்த்துகிறேன்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** இந்த புதிய அமைச்சரவர்களை எனக்கு 35 வருட காலமாகத் தெரியும். ஆரம்பக் காலத்திலிருந்தே சுயமரியாதை இயக்கத்தில் மிக்க ஈடுபாடு உள்ளவர். அதிலே அழுத்தம் திருத்தமான நம்பிக்கை உடையவர். அவர் அமைச்சராக வந்திருப்பது நானே அமைச்சராக வந்திருப்பதுபோன்றிருக்கிறது. எனக்கு அமைச்சராகக்கூடிய வாய்ப்பு இல்லையானாலும் அவர் அமைச்சராக வந்திருப்பது குறித்து மகிழ்ச்சியடைகிறேன் ; பெருமைப்படுகிறேன் ; பாராட்டுகிறேன்.

### (2) 1972-73-ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம்—தொடர்ச்சி.

**திரு கே. டி. கே. தங்கமணி:** மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி பலவித கருத்துக்கள் இங்கே கூறப்பட்டன. அந்தக் கருத்துக்கள் எல்லாம் மறைந்து போயிருந்தாலும் இருக்கலாம். எனவே, அவைகளில் ஒருசில





விஷயங்களை இங்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அதே நேரத்தில் இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி ஆங்கிலத்தில் சொல்வதானால்,

The Budget speech is largely a policy document. No dobut the Finance Minister reviews the salient features of the financial administration of the year ending and the year coming. But at the same time the purpose is to focus the attention on the policies and programmes of the Government and how they had been implemented and how far they are going to be implemented in the future. At the same time this is also an instrumentt for the implementation of the Plan.

My comment is this. The Budget is good as far as it goes, but it does not go far enough. The pace of progress is not commensurate with the needs of the people.

இந்த ஒரு கருத்தை நான் சொல்வதற்கு பல சான்றுகளை பின்னால் எடுத்துச் சொல்லமுடியும். இந்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட அன்றே என்னுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன். இந்த மாதிரி அறிக்கைகள் வருகின்றபோது, ஒரு ஆண்டு பூராவும் அமல்படுத்தப்படக்கூடிய திட்டங்களைப் பற்றி ஒவ்வொருக் கட்சியைச் சார்ந்தவர்களும் தங்களுடைய கருத்துக்கள் என்ன என்பதையும், அதிலே என்னென்ன மாறுதல்கள் செய்யவேண்டும் என்பதையும் எடுத்து விளக்கியிருக்கிறார்கள். அந்தமுறையில் பார்க்கின்றபோது எனக்கு இந்த பட்ஜெட்டில் பொதுவாக இருக்கின்ற எட்டு அம்சங்களைக் குறிப்பிட்டு, அதன் பேரில் நான் விளக்கமாகப் பேசலாம் என்று நினைக்கிறேன்.

முதலாவதாக, இந்த பட்ஜெட்டில் சென்ற காலத்தில் என்னென்ன நடந்தது என்பதை அரசு தொகுத்துக் கொடுக்க வேண்டும். அந்தமுறையில் 1967-ம் வருடம் முதற்கொண்டு என்னென்ன சாதித்து இருக்கிறோம் என்பதைப் பற்றி ஒரு 25 ஐட்டம் கொண்ட விபரத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இந்த சாதனைகள் இருந்தாலும் கூட, இந்த சாதனைகளிலே எந்த அளவுக்கு மக்களுடைய வாழ்க்கைப் பிரதிபலித்திருக்கிறது என்பதுதான் முக்கியமாகும்.

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

இரண்டாவதாக The Budget is based on quantitative argument and not the qualitative aspect of it.

மூன்றாவதாக, ஏற்கெனவே எக்கானமி பற்றி ஒரு நோட் அனுப்பி இருக்கிறார்கள். இருந்தாலும் கூட There is no study on the economic situation of the State . . . இங்கே இருக்கக்கூடிய விவசாயிகள் நலன்கள், தொழிலாளர்கள் நலன்கள், வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற அம்சங்களைப் பற்றிய ஒரு பரிசீலனையை எந்த டாக்குமென்டிலும் பார்க்கமுடியவில்லை.

நான்காவதாக, சில குறிப்பிட்டப் பிரச்சனைகளை 'லா அண்டு ஆர்டர்' என்று பார்ப்பதற்குப் பதிலாக 'கன்டிஷன்ஸ் ஆஃப் தி பீப்பில்' என்று பார்த்தால் இன்னும் கொஞ்சம் சிறப்பாக இருந்திருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஐந்தாவதாக, இன்றைக்கு விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் உற்பத்தியாளர்களுக்கு வேண்டிய விலைக்கு ஏற்பாடுகள் இல்லை.

In other words, there is no relief to the peasant producers, but there is a lot of relief to the industrial producers.
அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சில சலுகைகளைப்பற்றி எல்லாம் இந்த சபை ஆராயவேண்டும்.

ஆறாவதாக, சில முக்கியமான நிவாரண அம்சங்களைப் பற்றி நான் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். அந்த அம்சங்கள் 1938-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையிலே வரும் என்றும், சாகுபடியாளர்களுக்கு பாதுகாப்பு என்பது மட்டுமல்லாமல், நடப்பாண்டிலே அவர்கள் அந்த குத்தகைப் பாக்கியை கொடுத்துவிட்டால், எல்லாப் பாக்கிகளும் ரத்துச் செய்யப்படும் என்றும் சொல்லப்பட்டிருக்கிற நல்ல அம்சத்தை வரவேற்கிறேன். உச்ச வரம்புச் சட்டத்தில் சில விதிவிலக்குகளை எல்லாம் நீக்கியிருப்பது வரவேற்கத்தக்க அம்சமாகும்.

ஏழாவதாக இதனுடைய 'நெகட்டிவ் ஆஸ்பெக்ட்டை' பார்க்க வேண்டும். வரியே போடப்படவில்லை என்று சொன்னாலும் கூட இதில் மூன்று வரிகள் இருக்கின்றன என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். முதலாவது இன்றைக்கு ஒன்றரை கோடி ரூபாய் பெறுமானத்திற்கு செஸ் வரி போடப்பட்டிருப்பது.



1972 மார்ச் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

இரண்டாவது அரை கோடி வருமானம் வரக்கூடிய வரி ஒன்று. மூன்றாவது, பஞ்சாயத்துக்களுக்கும் பஞ்சாயத்து யூனியன்களுக்கும் வருவாயை அதிகரிப்பதற்காக இடைக்காலத்தில் நாம் ஏற்கெனவே கட்டிக்கொண்டிருந்த சில சர்சார்ஜ்களை எல்லாம் அதிகரித்திருப்பது. இவைகளையெல்லாம் பார்க்கும்போது புது வரி போடாத பட்ஜெட் என்று சொல்லமுடியாது.

எட்டாவதாக, மத்திய மாநில உறவு என்பது பற்றி, எல்லா மாநிலங்களிலும் இதுபற்றி பேசப்பட்டு வருகிறது. இருந்தாலும் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் ஒரு அரசியல் கோஷம் உருவாக்கக்கூடியத் தன்மையில் வந்திருக்கிறது.

ஆகவே இந்த எட்டு அம்சங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது முதலாவதாக இன்று அரசைப் பற்றி அதிகமாகச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். மற்ற அம்சங்களைப் பற்றி எங்கள் கட்சியின் சார்பில் பேசிய பல உறுப்பினர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அதில் எந்தவிதமான மாறுபாடும் இல்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

1971-ஆம் வருஷத்திலே தேர்தல் முடிந்த பிறகு ஏற்பட்ட ஒரு நிலையை இப்போது நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அப்போது இந்தியாவில் இருக்கக்கூடிய பல பத்திரிகைகளும் நமது தமிழகத்தில் நடந்து முடிந்த தேர்தலைப்பற்றி விமர்சனம் செய்திருக்கிறார்கள். உங்கள் அனுமதியின் பேரில் தலைவர் அவர்களே 14-3-1971-ஆம் தேதி தலையங்கத்தில் The Patriot" என்ற பத்திரிகை எழுதியுள்ளதைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

"The massive majority of D.M.K. has obtained should lead to humility on the part of the Party's leadership. The people have always recognised it as a vaguely progressive party, and this belief was strengthened by the formation of the Progressive Front in the State and the support given to Mrs. Gandhi's Government at the Centre. What is called for now is, the translation of this vague image of radicalism into concrete terms. Its position should not lead to adoption of an arrogant attitude by the D.M.K. towards its allies, chiefly the C.P.I., Forward Block and P.S.P.; the Front should work out a programme of social and economic measures for

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

the next five years in which land reforms and a fair deal for labour, as well as provision of jobs to the unemployed should have top priority."

நான் இதை ஞாபகப்படுத்துவதற்குக் காரணம் என்னவென்றால் இந்தமாதிரியான காரியங்களை அரசு செய்யவில்லை என்பதற்காக அல்ல. இதைப்பற்றி எந்த அளவுக்கு திட்டமிட்ட முறையில் செயலாற்றி வந்திருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதைக் குறிப்பிட்டேன்.

ஆண்டு ஒன்று ஆனதற்குப் பின்னால் இதைப் பரிசீலனை செய்து பார்க்கிறபோது சில முரண்பாடுகள் தோன்றத்தான் செய்யும். அந்த முரண்பாடுகள் தோன்றுவது எதில் இருந்து என்று பார்க்கும்போது எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல முடியும். அது இந்தச் சபைக்கும் தெரியும். உங்களுக்கும் நன்றாகத் தெரியும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் பாடுபடுவதற்கு மக்கள் மத்தியில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டிருக்கக்கூடிய கட்சிகளில் முக்கியமான கட்சி ஒன்று கம்யூனிஸ்டுக் கட்சி. அப்படிப் பார்க்கிறபோது தொழிலாளர்கள் நடத்தக்கூடிய போராட்டங்கள், விவசாயிகள் நடத்தக்கூடிய போராட்டங்கள் இம்மாதிரியான போராட்டங்களில் ஈடுபடுகிற தொழிலாளர்களுக்கு ஆதரவாக எங்கள் கட்சி நிற்கின்றபோது சில சம்பவங்கள் ஏற்படலாம். சிலவிதமான மோதல்கள் கூட உருவாகலாம். அது தற்காலிக நிகழ்ச்சி என்று பார்ப்பதற்குப் பதிலாக இந்தச் சம்பவங்கள்—நம் . ஆட்சிக்கு எதிரானது என்ற பார்வை சிலர் மத்தியில் வந்ததும், அதன் காரணமாக சில முரண்பாடுகள் ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தது. அடுத்து இடைத்தேர்தல் என்று வருகிறபோது—பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் தேர்தல்தான் முக்கியமான பங்கு வகிக்கிறது—அம்மாதிரியான தேர்தல் நேரத்தில் நமது உறவு எம்மாதிரி இருக்கும் என்பதுபற்றி மீண்டும் சர்ச்சை எழுந்தது. ஒவ்வொரு கட்சியும் ஒவ்வொரு குறிப்பிட்ட நடவடிக்கையை எடுக்கத்தான் செய்கிறார்கள். 1971-ஆம் வருஷம் எடுத்த அந்த நடவடிக்கை இருக்கிறதே அந்த நடவடிக்கைக்குப் பின்னால் மேலும் மேலும் மக்களுடைய சிந்தனை தீவிரமாகப் போகிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் அமலாக்கப்பட வேண்டுமென்ற அக்கறையைச் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள்.



1972 மார்ச் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அப்படி அக்கறை செலுத்திக்கொண்டிருக்கிற நேரத்தில் இதை எதிர்க்கின்ற பிற்போக்குச் சக்திகள்—அவர்கள் பலம் இன்றைக்கும் குறையவில்லை—அவை—தலைதூக்கிக்கொண்டுதான் இருக்கின்றன. அதை எதிர்த்து நிற்கவேண்டியது இன்னமும் அவசியம் என்பதில் மாறுதல் கிடையாது. பிற்போக்குச் சக்திகள் 71 தேர்தலிலே ஒருவிதமாக எதிர்த்து நின்றார்கள் என்றால் இப்போது வேறு வகையில் ஒன்று சேர்ந்து தாக்க வருகிறார்கள். அதன் காரணமாக நாளைக்கு நடக்க இருக்கும் புதுச்சேரி அரியாங்குப்பம் தேர்தலில் கூட—விடுதலைப்போரில் தலைமை தாங்கி நடத்திய எங்கள் கட்சியைச் சேர்ந்த திரு. வி. சுப்பையா—மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிற தலைவர்—மக்கள் இயக்கத்திற்கு விரோதமாக இருக்கிற . சக்திகளை எதிர்த்து நின்றுகொண்டிருப்பதைப் பார்க்கிறோம். அங்கு என்றைக்கும் நிலையான ஆட்சி ஏற்பட நிம்மதியாகவிட்டதில்லை. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் திராவிட முன்னேற்றக் கழகமும், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியும் ஒன்றாகச் சேர்ந்து—நாம் ஆட்சி நடத்துகிறபோது கீழ்க்கண்ட காரியங்களைச் செய்வோம் என்பதாக 14 அம்சத் திட்டத்தை வெளியிட்டிருந்தார்கள். அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ஏதோ சில குறைகள் இருந்தாலும் செயல்பட்டு வருகிறார்கள். மூன்று ஆண்டுகள் தொடர்ந்து அமைதியாகச் செயல்படுவதா என்கிற முறையில் பிற்போக்குச் சக்திகள் எப்படி எப்படி அமைதியைக் குலைக்க முன்வருகின்றன என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டிய அவசியம் இல்லை.

அடுத்து, இந்த பட்ஜெட்டின் சில விபரங்களுக்குச் சென்றுவிட்டு பின்னால் பொதுவாக . ஒன்றிரண்டு அம்சங்களைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன். இந்த பட்ஜெட்டைப்பற்றி நான் சொல்வதைவிட சில பத்திரிகைகள் கொடுத்திருக்கக் கூடிய கருத்துக்களை நாம் கவனத்தில் கொஞ்சம் அழுத்தமாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. அது நம்முடைய கருத்துக்கு ஒத்ததாக இல்லாமல் இருக்கலாம். பட்ஜெட் வந்தவுடன் மறுநாளே இந்துப் பத்திரிகையில் ஒரு தலையங்கம் தீட்டியிருந்தார்கள். அதன் ஒரு பகுதி

"What was the need to impose special surcharges in order to secure revenues for specific purposes like development of roads in rural sides and maintaining beggar homes?"

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

ரூரல் ஏரியாவில் சாலைகள் போடுவதற்காக இந்த 1½ கோடிக்கு வரி போட வேண்டியது அவசியம் தானா என்று கேட்கிறது. பிச்சைக்காரர்கள் விடுதிக்காக ½ கோடிக்கு வரிபோட்டிருக்கிறோம். "could not be available budgetary resources be suitably reallocated and economics in non-Plan expenditure made? There is besides scope for larger borrowing from public institutions for viable schemes." இந்த அம்சத்தையும் அரசு கவனிக்கவேண்டுமென்று நான் வலியுறுத்த ஆசைப்படுகிறேன். இந்த இரண்டு சர்சார்ஜையும் யார் பேரில் போடுகிறோம் என்பது பிரச்னையல்ல. "பஸ் முதலாளிகள் மீது போடக்கூடிய வரியை கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எதிர்க்கிறாரே என்று முன்னர் பேசினது எனக்கு ஞாபகம் இருக்கிறது. பஸ் முதலாளிகள் மீது வரி போடுவதிலோ, பஸ்களை தேசியமாக்குவதிலோ அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் இன்றைக்கு நமக்கு இருக்கக்கூடிய ரிசோர்சுகளைப் பார்க்கிறபோது இந்த சர்சார்ஜ் வரி போடவேண்டியது அவசியம்தானா? அதேமாதிரி அவர்கள் சொல்வது "Thanks to the scrapping of prohibition, a massive ways and means accommodation by the Centre . . .".
இந்த பட்ஜெட்டைப் பார்த்தாலே தெரியும். அறுபத்தாறு கோடி ரூபாய் அளவுக்கு வேஸ் அண்டு மீன்ஸ் அட்ஜெஸ்மெண்டு மத்திய சர்க்கார் கொடுத்திருக்கிறார்கள். இந்த வருஷத்தில் 2 கோடிக்கு அதிகமாக சென்ட்ரல் ரெவின்யூ ஷேர் கிடைத்திருக்கிறது. ஆகவே புதிதாக இம்மாதிரியான வரிகள் போடாமலேயே இதைச் செய்ய முடியும்.

சென்ற ஆண்டில் கூட அந்தப் பத்திரிகை சொல்கிறது. எவ்வளவு பணம் ஒதுக்கி இருந்தோமோ அதைவிட 35 கோடி அதிகமாகச் செலவழித்திருக்கிறோம். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 575 கோடி ரூபாய் வரையில் திட்டம் அமுலாக்கக் கூடிய நிலைதான் இருக்கிறது. இந்த வருஷத்தில்கூட பொதுவாக போன வருஷத்தைவிடக் கொஞ்சம் அதிகமாக பணம் செலவழிக்கப்பட்டது என்றிருந்தாலும்கூட அதிகமாக ஒதுக்கியிருப்பது இர்ரிகேஷன் அண்டு பவர்க்குத்தான். சென்ற



1972 மார்ச் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

ஆண்டிலே எவ்வளவு ஒதுக்கியிருந்தோமோ அதைவிடக் குறைவாக ஒதுக்கியிருக்கிறோம், 3 கோடி ரூபாய் குறைவு என்று நினைக்கிறேன். இப்போது நவீனமாக உற்பத்தியைப் பெருக்குவதற்குச் சில ஏற்பாடுகள் இருக்கின்றன. அதற்கு தஞ்சை போன்ற இடங்களில், "the modernisation of the Delta Irrigation System in Thanjavur district cannot brook delay."
வழிவகைகள் செய்யவேண்டும். இப்படிச் செய்வதனால் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்று சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பில் பேசிய திரு. என். கே. பழனிச்சாமி அவர்கள் எப்படி இந்த ஆண்டில் இரிகேஷனுக்கு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சென்ற ஆண்டு ஒதுக்கப்பட்டதே போதாது. இந்த ஆண்டு இதைவிடக் குறைவாக இருக்கிறது. தமிழகத்தில் இரிகேஷனுக்கு சரியான முறையில் பிளான் இல்லை என்று தெரிகிறது.

இன்னொரு பத்திரிகையின் குறிப்பையும் சொல்லலாம் என்று இருக்கிறேன். அந்தப் பத்திரிகை தினமணிப் பத்திரிகையாகும். அந்தப் பத்திரிகை இது சம்பந்தமாக கருத்துக்களைச் சொல்லும்போது, "நிதி நிர்வாகத்திலும் பல்வேறு பணிகளை நிறைவேற்றி வைப்பதிலும் அரசு சிக்கனமும் போதிய கண்டிப்பும் காட்டி கூடியவரை ஊழலுக்கு இடமில்லாத நிலைமையை உறுதி செய்வது அவசியம்" என்று சொல்லியிருக்கிறார்கள்.

இவர்களுடைய விமர்சனம் 'சில விதிவிலக்குகளை ரத்து பண்ணுவதைக்கூட ஒத்துக்கொள்ள முடியாது' என்கிறது. 'குத்தகை ரத்து செய்யும்போது தரும நியாயம் தவறிவிடக் கூடாது' என்கிறார்கள். இதையெல்லாம் நான் எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், இந்தப் பட்ஜெட்டை அவர்கள் எப்படிப் பார்க்கிறார்கள் என்பதற்காகத்தான் சொன்னேன்.

அடுத்தபடியாக, யுத்த நிதிக்காக இதுவரையில் 3 கோடியே 30 லட்சம் ரூபாய் வசூலித்திருக்கிறோம் என்று சொன்னார்கள். பத்து கோடி ரூபாய் வசூலித்துக் கொடுப்போம் என்ற வாக்குறுதியை முதலமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. யுத்தம் இருந்த காலத்தில் இருந்த உணர்ச்சி இப்பொழுது இல்லை, அந்த உணர்ச்சி குறையத்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

தான் செய்யும். அந்த வகையில் பார்த்தால், இப்போது யுத்த நிதி வசூலிப்பது என்பது நிர்ப்பந்தப்படுத்துவது என்கிற தன்மையில் தான் போய்ச் சேரும்.

எனக்குத் தெரிந்த இரண்டொரு அம்சங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மதுரையில் ஹார்வி மில் இருக்கிறது. விக்கிரம சிங்கபுரம், தூத்துக்குடி, மதுரை இவைகளிலுள்ள ஆலைத் தொழிலாளர்கள் யுத்த நிதிக்காக ஒருநாள் ஊதியத்தைக் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய ஒரு நாள் ஊதியம் 1½ லட்சம் ரூபாய் ஆகிறது. யுத்த நிதி அளிக்கும் அந்தக் கூட்டத்தில் முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு கருத்தைச் சொன்னார்கள். அதாவது, தொழிலாளர்கள் ஒரு நாள் கூலியைக் கொடுக்கும்போது, முதலாளிகள் ஒருநாள் உற்பத்தியை யுத்த நிதியாகத் தர வேண்டும் என்று சொன்னார்கள். கடந்த ஆண்டு உற்பத்தியின் மதிப்பு 39 கோடி ரூபாய். ஒருநாள் உற்பத்தியானது 12½ லட்சம் ரூபாய் ஆகும். தொழிலாளர்கள் ஒருநாள் ஊதியத்தை அதாவது 1½ லட்சம் ரூபாயைக் கொடுக்கும்போது ஆலை முதலாளி ஒருநாள் ஊதியத்தை, அதாவது 12½ லட்சம் ரூபாயைக் கொடுக்க வேண்டும் அல்லவா ? அதற்கு மாறாக காலங்கடந்து முதலாளி 2 லட்சம் ரூபாய்தான் கொடுத்தார். தொழிலாளர்கள் தங்களாலானவரையில் கொடுத்தார்கள். ஆனால் முதலாளிகள் அப்படித் தருவதற்கு தயங்கினார்கள். யுத்த நிதிக்காக எந்தெந்த முதலாளிகள் எவ்வளவு ரூபாய் கொடுத்தார்கள் என்பதை வெளியிட்டால் மிக்க உதவிகரமாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் தொழிலாளர்களை வற்புறுத்துவது சரியல்ல.

ஆசிரியர்களுடைய கையில் பரிசு சீட்டுகளைக் கொடுத்து அவர்களின் மூலமாக ரூபாய் 5 கோடியைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் கையில் 100 பரிசு சீட்டுகளைக் கொடுத்து விற்க வேண்டும் என்கிறார்கள். ஆசிரியர்கள் அப்படி விற்க முடியுமா ? அப்படி விற்க முடியாமல் போனால், அந்த பரிசு சீட்டுகளுக்கான தொகையை அவர்களுடைய சம்பளத்திலிருந்து பிடிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதுகுறித்து பஞ்சாயத்து யூனியன் கமிஷனர் ஒரு சர்குலரே அனுப்பியிருக்கிறார். அதை



1972 மார்ச் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

நான் வைத்திருக்கிறேன். அந்த சர்குலரில், "ஏற்கெனவே முன்னே சொல்லியுள்ளபடி அதைச் செய்யாவிட்டால் நடவடிக்கை எடுப்போம்" என்ற வகையில் எழுதப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஆசிரியர்கள் எல்லாம் நிர்ப்பந்தப்படுத்தப்படுகிறார்கள்.

இனிமேல் வசூலிப்பது என்றால், நிர்ப்பந்தப்படுத்துவது என்கிற நிலைமைதான் வரும். நாம் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக, சாதாரணமாக இருக்கக்கூடிய ஆசிரியர்களையும் சர்க்கார் ஊழியர்களையும், தங்களையும் நிர்ப்பந்தப் படுத்திக்கொண்டு, மற்றவர்களையும் நிர்ப்பந்தப்படுத்துவது என்கிற நிலைமைதான் வரும். ஆகவே, இன்றோடு யுத்த நிதிக்கு வசூலிப்பதை நிறுத்திவிட வேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, 25-வது அரசியல்சட்ட திருத்தம் கொண்டுவந்த காரணத்தால் சில தொழிற்சாலைகளையெல்லாம் அரசு ஏற்று நடத்தலாம் அல்லவா என்று உறுப்பினர் ஒருவர் கேட்டார். 25-வது திருத்தம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அதற்கு நாமும் ஒப்புதல் கொடுத்துவிட்டோம். இந்தத் தேர்தல் முடிந்த பிறகு பல மாநிலங்கள் ஒப்புதல் கொடுக்க வேண்டியிருக்கும். இந்த ஆண்டுக்குள் முடியும் என்று கருதுகிறோம். குறிப்பிட்ட இன்னின்ன தொழிற்சாலைகளை, தொழில்கேந்திரங்களை எடுக்கப் போகிறோம் என்ற அறிவிப்பு வர இருக்கிறது. குறிப்பாக ஸ்டாண்டர்டு மோட்டார் போன்றவற்றை பப்ளிக் பர்பஸுக்காக வேண்டுமானால் எடுக்க முடியும். அரசு விரும்பினால் என்ன என்ன தொழிற்சாலைகளை எடுக்கலாம் என்று இருக்கிறது.

இன்றைக்கு, கேரள மாநிலத்தில் நாம் சொல்வது மாதிரி 25 சாதனைகளை வெளியிட்டிருக்கிறார்கள். அந்தச் சாதனைகள் எல்லாம் நாங்கள் நடத்தும் ஆங்கில ஏட்டில் வந்திருக்கிறது. இன்றைக்கு கேரளாவில் அந்நியருக்குச் சொந்தமாயுள்ள தோட்டத் தோட்டங்களை தேசிய மயமாக்க வேண்டுமென்பதற்காக ஒரு அவசர சட்டத்தைத் தயாரித்து, மத்திய சர்க்காருக்கு அனுப்பி, அது மத்திய சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது. அங்கே திரு. அச்சுதமேனன் தலைமையில் ஆட்சி வந்து இரண்டரை ஆண்டுகள்தான் ஆகிறது. அதற்குள் அந்நியருக்குச்

சொந்தமான தேயிலைத் தோட்டங்களை தேசிய மயமாக்கப் போகிறோம் என்கிறார்கள். மத்திய அரசு அதை பரிசீலித்து வருகிறார்கள். அங்கே கால தாமதமாகிறது. இது பற்றிய எக்ஸ்பிளனேட்டரி நோட் லீக் அவுட் ஆனதால் அதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இப்போது ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், அந்நிய நாட்டுத் தேயிலைத் தோட்டங்கள் மட்டுமல்ல, எல்லாவற்றையுமே தேசிய மயமாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் இந்த நிலையில் தமிழகத்தில் அப்படிச் செய்யத் தயாரா என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். கேரள மாநிலத்தில் அரசியல் சட்டத்திற்கு உட்பட்டு வேலை செய்கிறார்கள். அரசியல் சட்டத்தையே ஒழித்துவிடுவோம் என்றார்கள் சிலர். கேரள அரசு அனுப்பிய மனு மத்திய அரசின் கையிலே இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மத்திய அரசிலே கொள்கை ரீதியிலே தாமதம் ஏற்பட்டிருக்கிறதா? அல்லது நிர்வாக ரீதியிலே தாமதம் ஏற்பட்டிருக்கிறதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** அது எனக்கு நிச்சயமாகத் தெரியாது. இதுவரையிலும் மத்திய அரசு தாமதம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது அதைப்பற்றி அவர்கள் வற்புறுத்திக்கொண்டு வருகிறார்கள். இதிலே ஏதாவது சிக்கல்கள் வந்தால் இந்த 25-வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட பிறகு, அது வந்தவுடனே கேரள அரசு தாங்களே இதற்கான சட்டத்தை நிறைவேற்றி எடுத்துக்கொள்வார்கள் என்பதிலே சந்தேகம் இல்லை. ஏனென்றால் வங்காளத்திலே அப்படித்தான் டிராம்வேக்களைப் பொறுத்த வரையில் செய்தோம். அவை ஐ.டி.ஆர். ஆக்டிலே எடுக்கப்படவில்லை, தனியாக சட்டம் நிறைவேற்றித்தான் எடுத்தோம்.

தமிழகத்திலே நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்திலே விவசாயிகளுக்கு ஓரளவுக்கு உதவிதான். இல்லை என்று சொன்னால் உண்மையை மறைப்பதாகும். அதே நேரத்திலே கேரளாவிலே கொண்டுவந்திருக்கக்கூடிய நிலச் சீர்திருத்தச் சட்டத்திற்கும் நாம் இங்கே கொண்டுவந்திருக்கக்கூடிய ஆண்டு ஆண்டாகக் கொண்டிருக்கக்கூடிய சட்டங்களுக்கும் அடிப்படையான வித்தியாசம் இருக்கிறது. கேரளாவிலே லேண்ட் ரிபார்ம்



கொண்டுவந்தார்களே, அதன் அடிப்படையிலே நிலச்சுவான்தாருக்கும் அதாவது நிலப்பிரபுக்கும் குத்தகை சாகுபடி செய்யக் கூடியவருக்கும் உறவே இல்லை என்ற முறையிலே 1—1—70-ஆம் தேதிக்குப் பிறகு யார், யார் உழுதுகொண்டிருக்கிறார்களோ அவர்கள் எல்லாம் நெல்லோ குத்தகையோ இனி கொடுக்க வேண்டியதில்லை என்ற முறையிலே கொண்டுவந்திருக்கிறார்கள். இலட்சக்கணக்கான விவசாயிகள் குத்தகைத் தொகை கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருந்தது. இப்பொழுது அந்த நிலங்கள் அவ்வளவும் விவசாயிகளுக்குச் சொந்தம் என்ற அளவிலே கொண்டுவந்திருக்கிறார்கள். அதிலே மூன்றிலே ஒரு பங்கு அரிசன மக்கள். அவர்களுடைய வாழ்க்கை நேரடியாக மேம்பாடு அடைகிறது, இன்டர்னல் மார்க்கெட் என்று சொல்லப்படுகிறதே, அது வாங்கும் சக்தி நேரடியாக அந்த விவசாயிகளுக்கு கிடைத்து இருக்கிறது. அதுமாதிரிக் கொண்டு வருவதற்கு நம்முடைய தமிழக அரசும் தயங்கக்கூடாது.

அங்கே நிலச் சீர்திருத்தங்களினுடைய அம்சங்களைப் பார்த்தால் நிலத்திற்கு வரம்பு வைத்திருக்கிறார்கள். ஒரு குடும்பத்தை ஒரு யூனிட்டாக வைத்து 12½ எக்கர் என்று வரம்பு வைத்திருக்கிறார்கள், அதற்கு மேலே ஒவ்வொரு ஆளுக்கும் ஒவ்வொரு எக்கர் என்ற அளவிலே கொடுத்து 20 ஸ்டாண்டர்டு எக்கருக்கு அப்பாலே போகாமல் வரம்பு வைத்திருக்கிறார்கள். அப்படி வரம்பு வைத்தபிறகு மீதியிருக்கிற நிலத்தை எடுத்து அந்த அரசு விவசாயிகளுக்கு விநியோகம் பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** நான் ஒரே ஒரு சிறு விளக்கம் மட்டும் கேட்டுக்கொள்கிறேன். நிலச் சீர்திருத்தங்களைப் பற்றி கேரளாவிலே சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். கேரளாவிலே நிறைவேற்றப்பட்டிருக்கின்ற சட்டங்கள் எல்லாம் அமலாக்கப்பட்டிருக்கின்றனவா? அமலாக்கப்பட்டு நிலத்தை எடுத்து விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கிறார்களா என்பதை அவர்கள்மூலம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சட்டங்களை அவர்கள் நிறைவேற்றி அமலாக்க முடியாமல் நீதிமன்றங்களிலே வழக்குகளாக நிற்கின்றன. இன்னும் அங்கு சட்டங்களை அமலாக்க முடியாத நிலைமை

தான் இருக்கிறது என்பது எங்களுக்குக் கிடைத்த தகவல் ஆகும். அவர்கள் வேறு தகவல்கள் இருந்தால் அதைப்பற்றிச் சொல்லலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: அமலாக்கிக்கொண்டுதான் இருக்கிறார்கள். 25 லட்சம் விவசாயிகளுக்கு நிலம் கிடைப்பதற்கு 1—1—70-ம் நாள் சட்டத்தின் அடிப்படையிலே முடியும் என்று தெரிவித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: 1963-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டும்கூட இப்பொழுது அங்கே இருக்கிற அரசு அதை 1970-ஆம் ஆண்டு வரையிலேகூட நிறைவேற்றவில்லை. எங்களுக்கு அவர்களிடமிருந்து வந்த கடிதத்திலேகூட அவர்கள் ceiling provisions were not enforced till1st January 1970. என்றுதான் சொல்லியிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: அதைத்தான் நானும் சொன்னேன். 1—1—70-ஆம் தேதிக்குப் பிறகுதான் திருத்தங்கள் கொண்டுவந்து நஷ்டஈடு 55 சதவிகிதம் ஆப் தி மார்க்கெட் வேல்யூ என்று இருந்ததை குறைத்து இன்றைக்கு நாலில் ஒரு பங்கு கொடுத்தாலே எடுத்துக்கொள்ளலாம் என்ற முறையில் கொண்டு வந்தார்கள். அப்படி எடுத்துக்கொள்வதாலே இன்றைக்கு பாதி விலைக்குக் குறைவாகவே விவசாயிகளுக்கு நிலம் சொந்தமாகி விடுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. சட்டம் வந்திருக்கிறது. அமலாக்குவதிலே சிரமங்கள் இருக்கலாம். அதைப் பார்க்காமல் நிலச் சீர்திருத்தம் என்று கொண்டு வந்தால்தான் முடியும். எனக்கு இருபது எக்கர் நிலம் இருக்கிறது என்றால்—அங்கேயுள்ள சட்டப்படி—நான் அதை உழுது பயிரிடாமல் வைத்திருந்தால் எனக்கு அதை வைத்துக்கொள்ளக்கூடிய ரைட் ஆப் ரிஸம்ப்ஷன் கிடையாது. நான் அதை வைத்துக்கொள்ள முடியாது. எனவே இருபது எக்கர் என்று சொன்னாலும் அந்த இருபது எக்கரையும் வைத்துக்கொள்ள முடியாது என்ற நிலைமை இருக்கிறது.

விவசாயிகளுக்கு வன நிலங்கள் இன்றைக்குப் பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறார்கள். ஐம்பது ஆயிரம் எக்கர் நிலத்தை எடுத்து நபர் ஒன்றுக்கு ஒரு எக்கர் என்று கொடுத்திருக்கிறார்கள். அதிலே மூன்றில் ஒரு பங்கு அரிசன மக்களாகும்.





கண்ணன்-தேவனுக்குச் சொந்தமாக இருக்கிற 22 ஆயிரம் ஹெக்டார் நிலத்தை அதாவது 55 ஆயிரம் ஏக்கர் நிலத்தை நஷ்ட ஈடு இன்றி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணன்-தேவன் தேயிலை பயிரிடும் நிலங்கள் 55 ஆயிரம் ஏக்கர் எடுக்கப்பட்டிருக்கிறது. கண்ணன்-தேவன் பெரிய ராஜ்யம் மாதிரி; மூணாறுக்குப் போனவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதியிலே அந்த நகரமே அவர்களுக்குத்தான் சொந்தம், ரோடுகள் யாரும் போட முடியாது. கடைகள் வைக்க முடியாது, வீடுகள் கட்ட முடியாது, என்ற நிலையில் அவர்களுக்குச் சொந்தமாக இருந்தது அனைவருக்கும் தெரியும். இந்தக் கூட்டணி ஆட்சிக் காலத்தில்தான் 55 ஆயிரம் ஏக்கர் நிலத்தை தேயிலைக்கு என்ற பெயரால் வைத்திருந்த நிலத்தை நஷ்ட ஈடு இன்றி எடுத்திருக்கிறார்கள்.

பிரைவேட் லேன்ட்கள் 7 லட்சம் ஏக்கர் வரையில் 'as an agrarian reform measure, without compensation' என்ற முறையிலே நஷ்ட ஈடு கொடுக்காமல் எடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்த முறையிலே இங்கேயும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறார்கள், அவ்வளவுதான் சொல்ல முடியும், எனக்குக் கிடைத்த விவரங்கள் அந்த அரசிடமிருந்து.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்**: அங்கே சட்டம் போட்டு இருக்கலாம், 1963-ம் ஆண்டிலே போட்டிருக்கிறார்கள், ஆனால் 1970-ம் ஆண்டு வரையிலும் ஒன்றுமே செய்யவில்லை. நஷ்ட ஈடு கொடுக்காமல் எடுக்கலாம் என்று சட்டம் போட்டிருக்கிறார்கள். ஆனால் 1970-ம் ஆண்டு வரையிலே செய்யவில்லை என்றுதான் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்களே இன்னும் நிறைவேற்றவில்லை என்றுதான் சொல்லியிருக்கிறார்கள், அவர்கள் பெருமையோடு சொல்கிற ஆட்சியிலிருந்துதான் அவர்களே எழுதியிருக்கிறார்கள்.

**திரு. கே. டி. கே. தங்கமணி**: நான் இண்டஸ்ட்ரீஸ் மினிஸ்டருக்குச் சொல்லிக்கொள்கிறேன். அங்கே எந்தவிதமாகவும் விவசாயிகளுக்குப் பிரித்துக் கொடுக்கப்படவில்லை என்றுதான் சொல்கிறார்களா? அப்படி என்றால் நான் இன்னும் விஷயங்களை வைக்கத் தயாராக இருக்கிறேன். அவர்கள் போன அளவுக்குக் கூட தமிழக அரசு போகவில்லை என்பதுதான் என்னுடைய பாயிண்ட்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** அவர்கள் நிறைவேற்றி இருக்கலாம். ஆனால் அமுலாக்கவில்லை. மற்றைய மாநிலங்களைவிட நிலச் சீர்திருத்தம் கொண்டுவருவதில் நாம் இளைத்தவர்கள் அல்ல. கேரளாவிலே பல சட்டங்கள் பல முன்னேற்றச் சட்டங்கள் கொண்டுவந்தும் அவை இன்னும் அமலாக்கப்படாமல் தேங்கி நிற்கின்றன, சென்ற 15 நாட்களுக்கு முன்னாலே கூட அவர்களிடமிருந்து வந்த தகவல் எங்களுக்கு இதுதான்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** பிரைவேட் பாரஸ்ட் நிலத்தை தேசீயமயமாக்க வேண்டுமென்றால் 76 கோடி ரூபாய் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய நிலைமை இருந்தது நமது மாநிலத்திலும் பிரைவேட் பாரஸ்ட் திருச்சியிலே, புதுக்கோட்டையிலே பல இடங்களிலே இருக்கின்றன. இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் என்ன கேரளாவிலே நடந்திருக்கிறது என்று கேட்டார்கள். அதற்குத்தான் நான் பட்டியலைச் சொல்கிறேன்.

உணவுக் கொள்முதலை நடத்த சிவில் சப்ளைகள் மூலமாக ஒரு கார்ப்பரேஷன் நியமிக்கப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எங்கள் கட்சியின் சார்பிலே பேசிய திரு. மணலி அவர்கள் கார்ப்பரேஷன் அமைத்து 52 பேர்களுக்குக் கொடுத்து அவர்கள் மூலமாக கொள்முதல் செய்யப் போகிறீர்கள் என்று சொன்னார்கள். அவர்கள் 52 பேர்கள் யார், சென்ற காலத்திலே எப்படியிருந்தாலும் மீண்டும் அவர்கள் கையில் விட்டால் எப்படியாகும்? அவர்கள் மத்தியில் கொள்முதல் செய்வது சரியா என்பதைச் சொன்னார்கள். என்னுடைய பதில் என்னவென்றால் உணவு தானியக் கொள்முதல் செய்வதற்கு ஃபுட் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா என்று வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்திலே பல கோடி ரூபாய்களைச் செலவழித்துக் கட்டிடம் கட்டியிருக்கிறார்கள். சில மெஷின்களை வைத்திருக்கிறார்கள். பலவிடங்களில் பிராஞ்சை வைத்திருக்கிறார்கள். கேரளாவிலே கொள்முதல் செய்வது முழுவதையும் ஃபுட் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவிற்கே வைத்திருக்கிறார்கள். தமிழகத்திலேயும் அப்படி வைக்கத் தயாரா? அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷனுக்கு விடுவதை எங்கள் கட்சி ஏற்றுக்கொள்ளாது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, ஃபுட் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவிற்கு போட்டியாக அமைக்கப்



பட்டது அல்ல. அப்படி அமைக்கப்பட்டது என்ற கருத்துப்பட சொல்லவேண்டாமென்று அன்றைக்கே குறிப்பிட்டேன். ஏதோ 52 பேர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்பதற்காக முயற்சித்து இப்படிப்பட்ட கார்ப்பொரேஷன் நிறுவப்படுகிறது என்பது முற்றிலும் தவறான தகவல். இப்பொழுது 52 பேர்கள் என்பது, நான் அன்றைக்கே சொன்னேன். சிவில் சப்ளைஸ் டிபார்ட்மெண்டில் ஏற்கெனவே உள்ள ஹல்லிங் ஏஜண்டுகள்—ஒவ்வொரு மாவட்டத்திலேயும் இருக்கிறார்கள், அதைப்போல் அந்த மாவட்டத்திலேயும் இருக்கிறார்கள்—சென்ற ஆண்டுவரை அரசாங்கத்திற்கு பாக்கி கொடுக்காதவர்களை நீக்கியிருக்கிறோம், அவர்கள்மீது வழக்குத் தொடர்ந்திருக்கிறோம், நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஏற்கெனவே உள்ள பாக்கிகளைக் கொடுத்தவர்களை ஹல்லிங் ஏஜண்டுகளாக நியமித்திருக்கிறோம். எனவே அப்படித் தொடர்பு படுத்திப் பேசுவது சரியல்ல. ஏற்கெனவே ஃபுட் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாவில் இருப்பவர்கள் நாம் என்ன பிரைஸ் நிர்ணயித்திருக்கிறோமோ அதற்குத்தான் வாங்கத் தயாராகயிருக்கிறார்கள். ஆனால் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் ஃபுட் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா எல்லா மூலை முடுக்குகளுக்கும் ஏஜண்டுகளை வைத்து வாங்குவது கிடையாது. விவசாயிகள்தான் 7 மைல், 10 மைல், 15 மைல், 20 மைல் தூரத்திற்குக் கொண்டுபோக வேண்டியிருக்கிறது என்று புகார்கள் வந்து, மேலும் பல தொல்லைகள் இருக்கின்றன என்று விவசாயிகளிடமிருந்து புகார்கள் வந்ததால் அவர்களும் செய்யட்டும் என்றும், அரசாங்கமும் சிவில் சப்ளைஸ் கார்ப்பொரேஷன் வைத்து வெளி மார்க்கெட்டில் வாங்குவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறது. இப்பொழுது ஃபுட் கார்ப்பொரேஷனுக்கும் நீங்களும் வாங்குங்கள் என்றுதானே தவிர அதை முழுமையாகத் தடுக்கவில்லை. நம் கார்ப்பொரேஷனைப் பொறுத்தவரையில் தீவிரப்படுத்தி நாம் தீவிரமாகக் கொள்முதல் செய்ய வெளிமார்க்கெட்டில் இறங்கியிருக்கிறோம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என்னுடைய பாயிண்ட், ஃபுட் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியா இருக்கும்பொழுது நாம் இன்றைக்கு அமைந்திருக்கும் ஃபுட் கார்ப்பொரேஷன் சிக்கலான அம்சத்தைத் தோற்றுவிக்கும். இரண்டு விதமான கார்ப்பொரே

ஷன்கள் இருந்தால் கண்டிப்பாகக் குழப்பத்தைத் தான் உண்டாக்கும். கேரள அரசாங்கத்திலும், இன்னும் சில மாநிலங்களிலும் ஃபுட் கார்ப்பொரேஷன் ஆஃப் இந்தியாதான் அந்தக் காரியத்தைச் செய்கிறார்கள். இந்தப் பட்டியலை நான் இன்னும் அதிகமாக்கிக்கொண்டு போக விரும்பவில்லை.

அதே சமயத்தில் தொழிலாளர்கள் சம்பந்தமாக கேரள அரசிலே இருப்பதைச் சொல்லத்தான் வேண்டும். இன்றைக்கு கிராசுட்டி கட்டாயமாகக் கொடுக்க வேண்டுமென்று சட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார்கள், அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பிரைவேட் மோட்டார் தொழிலாளர்கள் சம்பள போர்ட் தீர்ப்பு வந்தது. தமிழகத்திலே பலமுறை பேசியும் எந்த முதலாளியும் நடவடிக்கை எடுக்கத் தயாராயில்லை. அப்படி அமல் நடத்தாவிட்டால் சட்டமே கொண்டு வருவோம் என்று அவர்களை வற்புறுத்தினார்கள். ஆனால் அவர்களும் அமல்படுத்துவதாகத் தெரியவில்லை, நாமும் சட்டம் கொண்டு வருவதாகவும் தெரியவில்லை. கேரளாவிலுள்ள அந்த சம்பள போர்டில் கூறப்பட்ட அந்த மோட்டார் தொழிலாளர்களுக்குக் கொடுப்பதுபோல் இங்கும் கிடைப்பதற்கு அந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்தபட்ச சம்பளம் நிச்சயிக்கலாம் என்று நம் அரசிடமும் இருக்கிறது. குறைந்த பட்ச சம்பள ஷெட்யூலில் விவசாயத் தொழிலாளிகளும் இருக்கிறார்கள். முதலில் 2½ ரூபாயாகயிருந்து 3 ரூபாய் ஆகி, 4 ரூபாய் ஆகி இன்றைக்கு 5 ரூபாய் குறைந்தபட்சக் கூலியாக விவசாயத் தொழிலாளர்களுக்குக் கேரளாவிலே கொடுக்கப்படுகிறது.

இன்னொன்று, வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில், அரிசனங்களைப் பொறுத்தவரையில் ஒரு நல்ல அம்சத்தை அவர்கள் செய்திருக்கிறார்கள். 10,000 வீடுகள் அரிசனங்களுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கட்ட வேண்டும். அதற்காக 3 லட்சம் பேர்கள் கொண்ட தொண்டர்படை எம்.என். கோவிந்தன் நாயர் அவர்களின் தலைமையில் நடந்து கொண்டிருக்கிறது.





இப்படியே அதிகமாகச் சொல்லப்போனால் கேரளாவிலே அவர்கள் செய்த சாதனைகளைப் பேசுவதாக வரும். இருந்தாலும் அண்டையில் இருக்கக்கூடிய கேரளாவை உதாரணத்திற்குக் காட்டினேன். அந்தக் கேரள அரசிலே நாங்கள் நேரடியாக ஈடுபட்டிருக்கிறோம். அந்த அரசிலே உள்ள கட்சிகள் எப்படியாவது தகராறுகளை நடத்தி காரியத்தை நடத்த வேண்டுமென்ற கட்சிகள் இல்லை. வெளியிலே தொழிலாளர்கள் இயக்கத்திலே ஈடுபட்டால் நாங்களும் ஈடுபடுவோம். அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் காரணம் இல்லை என்பதால், அங்கே மார்க்சிஸ்ட் கட்சியினர், எங்களிடமிருந்து பிரிந்தவர்கள், இவர்கள் கொள்கையோடு எந்தத் தகராறு வேண்டுமானாலும் இருக்கலாம், ஆனால் எங்களைப் பொறுத்தவரையில் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் இயக்கம் நடத்தினால் சேர்ந்து நிற்போம். இந்த அளவில் ஒன்றுபட்டு இருந்தால்தான் தொழிலாளர்களுக்குப் பலன் கிடைக்கும், பலன் கிடைக்க வைக்க முடியும், இன்றைக்கிருக்கும் அமைப்பிலே அப்படித்தான் செயல்பட வேண்டுமென்ற முறையிலே இன்றைக்கும் கேரளாவிலே, எங்கள் கட்சி ஆட்சியிலிருக்கும் சமயத்திலேயும் எங்கள் தலைவர்கள் கைது செய்யப்படுகிறார்கள். தொழிலாளர்கள் சரியாக இருப்பதற்கு என்று பல உதாரணங்கள் இருக்கின்றன, கேரளத்து நிலை இப்படி.

அடுத்தபடியாக அரசியல் கோஷத்தைப்பற்றி எங்களுடைய நிலையைக் கொஞ்சம் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஏனென்றால் இது மிகவும் விவாதிக்கப்பட்டு வந்திருக்கிறது. மாநில சுயாட்சி சம்பந்தமாக அல்லது நமது ராஜமன்னார் கமிட்டி சம்பந்தமாக எல்லாக் கட்சிகளும் சேர்ந்த, இல்லாவிட்டாலும் ஏற்கெனவே கூட்டணியிலேயிருக்கும் கட்சிகளாவது இணைந்து நின்று அவர்கள் பொதுவான சில நிலைகளை எடுக்க உதவிகரமாக இருக்கும் நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இல்லாவிட்டால் இது வேறுவிதமான காண்ட்ராவர்சியாகப் போய்க் கொண்டிருக்கிறது. ஆனால் இந்த நேரத்திலே நான் சார்ந்துள்ள கட்சியின் நிலையைக் கொஞ்சம் வெளிப்படுத்திச் சொல்வது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.

1971-ஆம் வருஷம் தேர்தலுக்குப் பிறகு இன்றைக்கு ஒரு புதிய நிலை என்ன ஏற்பட்டிருக்கிறது என்றால் சென்ற ஆண்டு இறுதியிலே ஒரு பெரிய யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்திலே நம் நாடு

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

முழுமையும் ஈடுபட்டிருந்தது. நமக்கு எதிரியாக பாகிஸ்தான் இருந்தாலும் உண்மையான எதிரியாகயிருந்தது அமெரிக்காதான். அதிலே எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இல்லை. இன்றைக்கு அமெரிக்காவின் பெயரில் நமக்கு வெறுப்பு இல்லை அல்லது இங்கிலாந்து பேரில் வெறுப்பு இல்லை, ஆனால் நம் நாட்டின் நலன்களுக்கு முழுமையும் விரோதமாக எந்த அளவிற்கு இடைஞ்சல்களைச் செய்ய வேண்டுமோ அந்த நிலையிலே இன்றையதினம் அமெரிக்க அரசு, அமெரிக்காவிலே செல்வாக்கான நிலையிலேயுள்ளவர்கள், பெரும் பெரும் ஏகபோக முதலாளிகள் அந்த அளவுக்கு நிலைமைகளை எடுத்திருக்கிறார்கள் அப்படி இந்தியாவிலே ஏதாவது குழப்பம் ஏற்படுமா என்று ரொம்ப உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த நிலையில் எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் எங்களுக்குப் புரோகிராம் உண்டு. அந்த புரோகிராமிலே நாங்கள் என்ன சொல்கிறோம் என்று சொன்னால் இந்த மாநில சுயாட்சி போன்ற காரியங்கள் வரும்பொழுது

'The first thing is the integrity of this country'

என்னும் நிலையில், இந்த நாடு வலுவுள்ள நாடாகவும் அதுமட்டுமல்லாமல், அந்நியர்கள் யாராவது தாக்கினால் எதிர்த்துத் தாக்கவும் இந்த நாட்டின் அமைப்பு பூராவும் சரித்திர ரீதியாக இருக்கிறதா என்பது நமக்குச் சுதந்திரம் கிடைக்க சமயத்திலிருந்து குறிப்பிட்ட அம்சமாக இருந்து வந்திருக்கிறது.

So, in 1917 power was transferred to the people. The people meant the people of the Indian Union. இந்திய யூனியனிலுள்ள மக்களிடம் அதிகாரமானது மாற்றப்பட்டது. இந்த அடிப்படையிலே வைத்து எல்லாவற்றையும் சிந்திக்கிறது. அப்படி மாற்றி மக்கள் பூராவும் ஒன்று என்று இருக்கும் இந்த நிலையிலே இங்கே பல மாநிலங்கள் இருக்கின்றன. பல மொழிகள் பேசக்கூடியவர்கள் இருக்கிறார்கள். கூடியவரையில் மாநிலங்களில் அந்தந்த மொழிகள் பேசக்கூடியவர்களைச் சேர்த்து வைக்க வேண்டுமென்ற ஒரு நிலை ஏற்பட்டது. அடுத்த எங்கள் திட்டம் என்னவென்றால் "Cohesion between various language groups"



1972 மார்ச் 10] . [திரு. கே. டி. கே. தங்கமணி]

இந்த நாட்டிலேயிருக்கும் பல்வேறு மொழிகள் பேசக்கூடியவர்கள் இடையே இணைப்பு இருக்க வேண்டும். அதற்கு முழு மூச்சாக இருக்க வேண்டும்.

'ஒவ்வொரு மாநிலத்திலும் இன்றைக்குத் தங்களை வளப்படுத்திக் கொள்வதற்காக

'For the development of democracy, for the developmental activities and for the cultural development'.

இந்த மூன்று அம்சங்களுக்கும் போதுமான நிதியை ஏற்பாடு செய்ய வேண்டும். இந்த விஷயத்தில் நமக்கும் மத்திய ஆட்சிக்கும் இடையே சில முரண்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்ற அளவுக்குத்தான் அந்த ப்ரோகிராம் வந்திருக்கிறது. இதற்குத் தேவையான அளவுக்கு அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டிய அவசியம் இருக்கலாம். அப்படி வருகிறபோது கம்யூனிஸ்டு கட்சியின் பார்வைக்கும், இன்று ஆளும் கட்சியாக இருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பார்வைக்கும் வித்தியாசம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன்.

ஆரம்பமே ஒரு ஸ்டேட் என்ற அளவிலே, தமிழ் நாட்டுக் கட்சி என்ற அளவிலே வளர்ந்ததால் தமிழ் நாட்டுக்கு அதிகாரம், தமிழ் நாட்டுக்கு முழுமையான அதிகாரம் இருக்க வேண்டுமென்றும், அப்படி அந்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு மற்ற விஷயங்களைப் பார்க்க வேண்டுமென்றும் கூறப்படுகின்ற நிலையிலே சில முரண்பாடுகள் எங்களுக்கிடையே இருக்கின்றன.

**மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :** ஆளும் கட்சியின் சார்பில் கேட்கப்படுவது தமிழ்நாடு சுயாட்சி அல்ல. மாநில சுயாட்சி. தமிழ்நாடு சுயாட்சி என்று கேட்டால்தான் தாங்கள் சொல்லுகின்ற வாதம் பொருந்தும். மாநில சுயாட்சி என்று கேட்பது இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல; கேரளத்திற்கும், ஆந்திரத்திற்கும், பஞ்சாபிற்கும், எல்லா மாநிலங்களுக்கும் சுயாட்சி என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் கேட்கப்படுகிறது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** நான் உடனடியாகப் பதில் சொல்ல வேண்டாமென்று நினைத்தேன். இதே விஷயம் கேரள மாநிலத்திலும் எழுப்பப்பட்டது. கேரள காங்கிரஸ் கிட்டத்தட்ட

இங்கு வைக்கக்கூடிய அளவுக்கு கோஷத்தை அங்கு வைத்தார்கள். அவர்களை ஆதரித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, ஆனால் கேரள முதலமைச்சர் திரு. அச்சுதமேனன் 'உள்நாட்டு சுயாட்சி கோஷம் அபாயகரமானது. மத்திய அரசுக்கு எதிராகப் போர் தொடுக்கும் பிரச்சினை இல்லை' என்றார். இந்த நேரத்தில் அவர் கூறியதை 'கோட்' பண்ணுவது தவறு இல்லையென்று நினைக்கிறேன். தங்கள் அனுமதியுடன் அவர் கூறியதைக் கூறுகிறேன். 'கலைஞர்' ஹாகாஸ், அறிஞர் மணி, திரு. ஜார்ஜ் கூற்றுக்கள் சரிதானா? பலம் மிக்க இந்தியாவின் பகுதியாக பலம் மிக்க கேரளா இருக்கும். உரிமைக்கும் நம் தேவைக்கும் முறையாக மத்திய அரசை எதிர்த்து வலுவாகப் போராடுவோம்' என்றுதான் திரு. அச்சுதமேனன் அவர்கள் சட்டமன்றத்தில் எடுத்துச் சொன்னார்கள்.

(திரு. கோவை செழியன் எழுந்தார்)

உங்கள் அனுமதியைக் கேட்டுக்கொண்டுதான் படித்தேன்.

"I was only quoting what Thiru Achutha Menon had stated. I did not say that what he had stated was correct. . . . "

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தி.மு.க. கேட்பது தமிழ்நாடு சுயாட்சியா? மாநில சுயாட்சியா? தாங்கள் எப்படிப் புரிந்து கொண்டிருக்கிறீர்கள்?

**திரு. கே. டி. கே தங்கமணி:** மாநில சுயாட்சி என்ற அம்சம் வந்திருக்கிறது. இதே மாநில சுயாட்சிக் கோரிக்கை கேரளாவிலும் எழுப்பப்பட்ட நேரத்தில் இதிலே இருக்கக்கூடிய அபாயத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சிலபேரை எதிர்த்துக்கொண்டிருக்கிறோம். நாங்கள் எதிர்ப்பது ஏகாதிபத்தியத்தை; முக்கியமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் கேட்டதை விட்டுவிட்டு அதற்குள் கேரளாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போய் விட்டார்கள். நான் கேட்டது—திராவிட முன்னேற்றக் கழகம்



கேட்பது தமிழ்நாடு சுயாட்சியா, மாநில சுயாட்சியா? தமிழ்நாட்டுக்கு சுதந்திரம் வேண்டுமென்று கோரவில்லை என்பதையாவது தாங்கள் புரிந்துகொண்டு, குறைந்தபட்சம் அந்த அளவுக்காவது திருத்திக் கொள்ளுகிறீர்களா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** மாநில சுயாட்சி என்று வரும்போது, ஒவ்வொரு மாநிலத்திலும் அந்தக் கோரிக்கை வந்து அந்த மாநிலம் பூராவும் அந்த மாநில மக்களுக்குத்தான் அதிகாரம் என்ற அடிப்படையில் வந்தால் அந்த அதிகாரத்தை எல்லாம் மாநிலங்கள் வைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில் மத்திய அரசு இவர்களை எல்லாம் சேர்த்து வைத்துக் கொண்டிருக்கின்ற அரசு என்று வருமே தவிர பலமான மத்திய அரசாக இருக்க முடியாது.

**மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி:** தாங்கள் பின்பற்றும் ரஷ்யாவில் அரசியலமைப்பு எப்படி இருக்கிறது? மத்திய அரசு பலம் வாய்ந்ததாக இருக்கிறதா, இல்லையா? அந்த அளவுக்கும் குறைவாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் மாநில சுயாட்சி கேட்கிறது. அதையாவது தெளிவாக அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார்களா?

**திரு. கே டி. கே. தங்கமணி:** சோவியத் யூனியன் போன்ற சோஷலிஸ்ட் நாடாக இந்தியா வந்துவிட்டால் அதனுடைய தன்மை வேறு. விளையாட்டுக்காகச் சொல்லவில்லை. அங்கிருக்கக் கூடிய மாநிலங்களுக்கிடையே வருகின்ற முரண்பாடுகள் ரொம்பக் குறைவு.

**மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி:** இவ்வாறு கூறுவது, அப்படி சோஷலிஸ்ட் நாடாக இருந்தால்தான் மாநில சுயாட்சி இருக்க வேண்டும்; பிற்போக்கான நாட்டில் மாநில சுயாட்சி இருக்கக்கூடாது; இப்போது இந்தியா பிற்போக்கு நாடாக இருக்கிறது; பிற்போக்குக் கொள்கையைக் கடைப்பிடிக்கின்ற மத்திய அரசுதான் இருக்கிறது என்று மறைமுகமாகக் குற்றஞ் சாட்டுவதாகாதா?

**திரு. கே. டி. கே. தங்கமணி:** என்னைப் பொறுத்தவரை இன்றைக்கும் இந்தியா முதலாளித்துவ நாடு என்றுதான் சொல்லுகிறேன். முதலாளித்துவம் இருக்கின்ற நிலையிலேயே சில

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

காரியங்களை, சில சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். இந்தியா சோஷலிச நாடு, இந்திரா காந்தி சோஷலிசத்தைக் கொண்டு வந்துவிடுவார் என்று நாங்கள் நம்பவில்லை. நாங்கள் புரிந்து கொண்டிருக்கும் சோஷலிச அம்சங்கள் வந்துவிட்டன என்று சொன்னால் பிரிந்து போகிற நிலைமைக்கே இடம் கிடையாது.

தெளிவாகச் சொல்லுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களுக்கு எல்லாம் பிரிந்து போக வேண்டுமென்ற விருப்பம் இருக்கிறது என்று சொல்லவில்லை. ஆனால் வெளிநாட்டிலே, 'நியூயார்க் டைம்ஸ்' என்ற பத்திரிகையிலே எப்படி செய்தி வெளி வந்திருக்கிறது? 'யாகியாகானை எதிர்த்து கிழக்கு வங்க மக்கள் கிளர்ந்தெழுந்தார்கள்; கிழக்கு வங்க மக்களுக்கு எவ்வளவு கொடுமைகளை யாகியாகான் இழைத்தாரோ அதே அளவுக்குக் கொடுமைகளை இந்திரா காந்தி தமிழ்நாட்டு மக்களுக்கு இழைத்துக் கொண்டிருக்கிறார்' என்ற கருத்துப்பட அந்தப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது.

நான்கு வருஷத்திற்கு முன்பு இந்த மாதிரி வெளியிட்டிருந்தால் ஒன்றுமில்லை. இந்த யுத்தத்திற்குப் பிறகு இப்படி வந்திருக்கிறது. பங்களாதேஷ் விடுதலை அம்சத்தின் நிலை எப்படி வந்தது? அந்த மக்கள் யாகியாகானை மட்டும் எதிர்க்கவில்லை, அமெரிக்காவின் முழுச்சக்தியையும் அவர்கள் எதிர்த்தார்கள், அந்தப் பகுதியில் இருக்கும் மக்கள் கிட்டத்தட்ட காலனி நாட்டில் இருந்த நிலையில் இருந்தார்கள். அந்த நாட்டின் செல்வ வளங்கள் அவர்கள் பயன் பெற முடியாத நிலைமையில் இருந்தது. பல அம்சங்கள் இருந்து அது விடுதலைப் போராட்ட உருவில் வந்தது. அந்த நிலை தமிழ்நாட்டில் இருக்கிறது என்று சொல்ல முடியுமா? தெளிவாகச் சொல்லுவது என்றால் இந்திரா காந்தி யாகியாகானா?

**மாண்புமிகு டாக்டர் மு கருணாநிதி :** தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. தங்கமணி அவர்கள் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் வந்ததைக் குறிப்பிட்டார்கள். அமெரிக்கப் பத்திரிகை, இந்தியாவுக்கு எதிராக எந்தக் கருத்தை எப்போது சொல்லலாம் என்று தேடிக் கொண்டிருக்கிற பத்திரிகை. வேண்டுமென்றே இந்தியாவுக்கு எதிரான கருத்தைச் சொல்லுவதற்கு இப்படிப்பட்ட செய்திகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கலாம்.



1972 மார்ச் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

ஏதோ ஒரு பத்திரிகை வேண்டுமென்றே இப்படிப்பட்ட செய்திகளை வெளியிட்டது என்பதற்காக நம்முடைய கருத்தை விட்டுவிடுவது என்பது நியாயமா? திரு. தங்கமணி அவர்கள் 'இந்தியா முதலாளித்துவ நாடு' என்று திட்டவட்டமாக அறிவித்தார்கள். 'இந்திரா காந்தியம்மையாரால் சோஷலிசத்தைக் கொண்டு வர முடியாது' என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். இனிமேல் அவர்கள் இதை மாற்றிக்கொள்ள முடியாது. அச்சில் ஏறிவிடும். இதை ஒரு சோஷலிஸ்ட் நாட்டின் பத்திரிகையில் 'இந்திரா காந்தியால் சோஷலிசத்தைக் கொண்டுவர முடியாது; இந்தியா முதலாளித்துவ நாடு' என்று இந்திய கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் அறிவித்து விட்டார் என்று வெளியிட்டால் அதற்கு நீங்கள் பொறுப்பேற்றுக் கொள்வீர்களா? உண்மையிலேயே சோஷலிசம் வரவேண்டுமென்பதற்காக நீங்கள் அந்தக் கருத்தைச் சொன்னீர்கள். வேண்டுமென்றே வெளிநாட்டுக்காரர்கள் செய்யும் விஷமத்தனங்களுக்கு நாம் பொறுப்பாளியாக முடியாது.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** வெளிநாடு என்று சொல்லும் போது அது அமெரிக்காவில் இருக்கும் பத்திரிகையில் வருவது, அதுவும் ஆறு மாதத்திற்கு முன்னால் வந்திருந்தால் பாவாயில்லை. யுத்தத்திற்குப் பிறகு வருவது சரிதானா? அதற்கு இடம் ஏற்படலாமா? இந்திய மக்கள் பூராவும் அமெரிக்கா நமக்கு எதிரி, நம்மைத் தாக்கத் தயாராக இருந்தவர்கள் என்ற எண்ணத்தில் இருக்கின்ற நிலையில் இந்த நாட்டு மக்களுடைய கருத்து எந்த முறையில் அங்கு பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். 'முஜிபுர் ரகிமான் போராட்டம் மாதிரி' என்று சொன்னால், அதை எப்படி எற்றுக் கொள்ள முடியும்? இரண்டுக்கும் அடிப்படையில் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது. நாம் கேட்பது அதிகமான அதிகாரங்கள் 'முஜிபுர் ரகிமான் மாதிரி . . .' என்று ஒரு உறுப்பினர் பேசினார். நான் அதற்குள் போக விரும்பவில்லை. இவ்வாறெல்லாம் பேசுவது அந்த மாதிரி கருத்துக்கள் பரவ ஏதுவாக இருக்கின்றன.

சுதந்திரத்திற்குப் பிறகு வளர்ந்து வருகின்ற மகத்தான ஒற்றுமையின் அடிப்படையில் மத்திய அரசோடு போர் கிடையாது, ஆனால் போராட்டந்தான் என்று திரு. அச்சுதமேனன் சொல்லுகிறார். அவருடைய பினான்ஸ் மினிஸ்டர் கே. டி. ஜார்ஜ் 'ஓவர் டிராப்ட் சம்பந்தமாகத் தடை போட்டார்கள்; விடப்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

போவதில்லை' என்று அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறார். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஓவர்டிராப்ட் எப்போதோ கிளியர் பண்ணப்பட்டிருக்கிறது. இன்னும் கூட பொதுத் துறை நன்றாக வளர்ந்து போக்குவரத்துத் துறையில் நல்ல வருமானம் அதிகமாக வரத் தொடங்கினால் சர்ப்ளஸ் பட்ஜட்டாக அதிகமாக வருவாய் வரத் தொடங்கி திட்டங்களுக்கு அதிகமாகச் செலவழிக்க முடியும்.

இந்த பட்ஜட் சர்ப்ளஸ்-ஆக இருக்கும்போது பல ஐட்டங்களில் செலவுகள் குறைக்கப்பட்டிருக்கிறது. இன்டஸ்ட்ரீஸை உதாரணம் காட்டினேன்.

அடுத்தபடியாக, கைத்தறி. ஐந்தாண்டுத் திட்டத்தில் பத்து கோடி ரூபாய் செலவிட வேண்டும். அதில் மூன்று ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டிருப்பது 5.43 கோடி ரூபாயாகும். சென்ற ஆண்டு செலவு செய்யப்பட்டது ரூ. 2.03 கோடி என்றால் இந்த ஆண்டு செலவு செய்யவிருப்பது ரூ. 2.34 கோடியாகும். ஆகவே, இந்த ஆண்டு கைத்தறிக்காகச் செலவு செய்ய இருப்பது அதிகமாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. போட்ட திட்டத்தின் அடிப்படையில் பத்து கோடி ரூபாயை ரீச் செய்யக்கூடிய அளவிற்கு இல்லை. டெம்போ ஆஃப் டெவலப்மென்ட், எந்த அளவிற்கு வேகமாகப் போயிருக்கவேண்டுமோ அந்தளவிற்குப் போகவில்லை என்பதற்காகத்தான் இதைச் சுட்டிக் காட்டுகிறேன். வில்லேஜ் அன்ட் ஸ்மால் ஸ்கேல் இன்டஸ்ட்ரீஸ், இன்டஸ்ட்ரீஸ் இவைகளில் இப்படிப்பட்ட நிலைதான் இருக்கிறது. இரிகேஷன் அன்ட் பவர்—என்பதை எடுத்துக்கொண்டால் சென்ற ஆண்டு 44.30 கோடி செலவழித்தால் இந்த ஆண்டு 43.80 கோடி தான் செலவு செய்ய இருக்கிறோம்.

' Though the main concentration is an irrigation and power, we are spending Rs. 4 crores less than what we were spending last year.

(மணியடிக்கப்பட்டது.)

தொழிலாளர்கள் மற்றும் பல விஷயங்களில் நான் அதிகமாகப் போகவில்லை. போலீஸ் மானியத்தின்மீது பேசுவதாகயிருந்தாலும் ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். போலீஸ் லாக்கப்புகளில் சாவது என்பது கொஞ்சம் அதிகமாகிக்



1972 மார்ச் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

கொண்டு இருக்கிறது. இதை அரசு கவனிக்க வேண்டும். இரணியல் போலீஸ் ஸ்டேஷனில் வேலப்பன் என்பவர் இறந்தது பற்றி ஒரு ஒத்திவைப்புத்தீர்மானம் வந்தது. நாமக்கல் லாக்கப்பில் சின்னப்பன் என்பவர் 26—2—72-ல் இறந்திருக்கிறார். கரிவலம்வந்த நல்லூரில் லாக்கப்பில் ஒருவர் இறந்து பிரேதத்தை பரிசோதனை செய்ய விடமாட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். அங்கு துப்பாக்கிப் பிரயோகம் கூட நடந்துள்ளது. சென்ற ஆண்டு கூட இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. சேலத்திலே அஸ்தம்பட்டியில் மஞ்சுளா என்ற பெண் லாக்கப்பில் இறந்ததாக. ஆகவே இவற்றைச் சிறிது கவனிக்கவேண்டும்.

போலீஸ் கான்ஸ்டபிள்களுக்கு இன்றையதினம் 1.50 ரூபாய் பாட்டாவாகக் கொடுக்கப்படுகிறது. இது போதுமா? இதையும் சிறிது அதிகப்படுத்தவேண்டும். சென்னை நகரைச் சுற்றியுள்ள போலீஸ் ஸ்டேஷன்களில் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் நிர்ணயித்த அதே அளவிற்குத்தான் போலீஸ் கான்ஸ்டபிள்ஸ் இருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இது உண்மையாக இருந்தால் அது வருந்தத்தக்கது. அதையும் கவனிக்கவேண்டும்.

பி.டபிள்யூ.டி. பொறுத்தவரையில் எப்படி சேலம் உருக்காலை ஐந்து ஆண்டுகள், பத்தாண்டுகள் என்று போய்க்கொண்டிருக்கிறதோ அதேபோல் ஐந்து ஆண்டுகள், பத்தாண்டுகள், பதினைந்தாண்டுகள் என்று சில சாதாரணத் திட்டங்கள் ஆரம்பமாகாமலும், பாதியில் நிற்கக் கூடியவைகளும் இருக்கின்றன. அதையும் கவனிக்கவேண்டும். மதுரையில் சென்ற மாதம் 22-ம் தேதி நடந்த அபிவிருத்தி கவுன்சில் கூட்டத்தில் எல்லோரும் சேர்ந்து முடிவு செய்தார்கள். சட்டமன்ற உறுப்பினர்களும் இருந்தார்கள். பவர் ஸ்ப்ரேயர்களை ஜாஸ்தியாக்கவேண்டுமென்று முடிவு செய்தார்கள். இப்போது எரியல் ஸ்ப்ரேயர்களைக் கொண்டு போடுகிறார்கள். ஒரு பவர் ஸ்ப்ரேயர் ஆயிரம் ரூபாய் இருக்கும். ஒரு பத்தாயிரம் பவர் ஸ்ப்ரேயர்களை அங்கு கொண்டு போய் போட்டால் அது விவசாயிகளுக்கு மிக்க நன்மை பயக்கும்.

அடுத்தபடியாக, பட்டதாரி ஆசிரியர்கள் ஒரு இயக்கம் நடத்தினார்கள், கடைசியில் நல்லமுறையில் முடிந்தது. நமக்கெல்லாம் திருப்திதான். அவர்கள் மாதிரியே கல்வி இலாகாவில்

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

பணியாற்றக்கூடியவர்கள் இருக்கிறார்கள். டைரக்டர் ஆபீஸில் இருக்கிறார்கள். டி.ஈ.ஓ. ஆபீஸ்களில் இருக்கிறார்கள், ஸி.ஈ.ஓ. ஆபீஸ்களில் இருக்கிறார்கள். அவர்களுக்கு முதலாவது சம்பளக் கமிஷன் சிபார்சுகளை அமல்படுத்தாமல், சில சலுகைகள் அவர்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள், அதையும் கவனிக்கவேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

பின்னர் ஒரு முக்கியமான விஷயம். ஆரம்பத்திலேயே அதுபற்றி வற்புறுத்தினேன். நமது அரசு முதல் கூட்டம் நடந்தபோது ஒரு பத்தாண்டு திட்டத்தை வைக்கப்போகிறோம் என்று சொன்னார்கள். அதுமாதிரி ஒரு திட்டம் தேவை. உதாரணமாகச் சொல்கிறேன். இந்திரா காங்கிரசும் வலதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியும் சேர்ந்து வங்காளத்தில் வெற்றிபெற்றால் கூட்டாட்சி வைப்பது என்று வந்து ஒரு 10 அம்சத் திட்டத்தை வைத்திருக்கிறோம். For a clean administration இன்று மக்கள் சில விஷயங்களை விரும்புகிறார்கள். அவர்கள் லஞ்சம் வாங்கினார்கள். ஊழல்கள் நடந்தன என்பதைப்பற்றியெல்லாம் நான் சொல்லவில்லை. ஒரு க்ளீன் அட்மினிஸ்ட்ரேஷன் வேண்டும். அட்மினிஸ்ட்ரேஷனின் தலைமையில் இருப்பவர்கள் சிறிது உறுதியோடு நின்றால்தான் கீழே யிருப்பவர்கள் சிறிது பயப்படுகிறார்கள்.

போலீஸ் தலையீடு என்று வரும்போது, கேரளாவில் போலீஸ் தலையீடு இருந்தது. மார்க்சிஸ்ட் கட்சியைச் சார்ந்தவர் போலீஸ் அமைச்சராக இருந்தபோது. இரண்டு சேர்கள் போடப்பட்டிருக்கும். ஒரு சேரில் அந்தக் கட்சியின் செயலாளர் உட்காருவார். பின்னர் முஸ்லீம் லீக் கட்சியைச் சேர்ந்தவர் போலீஸ் அமைச்சராக வந்தபோது, அப்படி யாரும் தலையிடக் கூடாது, ஏதாவது விஷயம் வேண்டுமென்றால் எங்களை நாடுங்கள், நாங்கள் போலீஸ் இலாகா மூலம் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறோம் என்று ஒரு கட்டுப்பாட்டிற்கு வந்து போலீசைத் தொந்தரவு படுத்துவது நின்றது.

பெரிய பட்டணத்தில், இராமநாதபுரம் மாவட்டத்தில், அங் அங்குள்ள முஸ்லீம் பெண்களை—ஒரு சப் இன்ஸ்பெக்டர் இருக்கிறார், பெயரைச் சொல்ல விரும்ப வில்லை. ஏற்கனவே பெரிய ஷெடிசிக்கார்ட்ஸ் உண்டு அவருக்கு. அவர் தன்னிச்சையாகச் செய்



1972 மார்ச் 10] [திரு. கே. டி. கே. தங்கமணி]

திருக்கிறார், ரொம்ப அவமானகரமான முறையில் நடந்து கொண்டிருக்கிறார்கள். செய்திகள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

ஆக, நான் சொல்வது, இந்த பத்து வருடத் திட்டத்தில் க்ளீன் அட்மினிஸ்ட்ரேஷன் என்பது ஒரு அம்சமாக இருக்க வேண்டும், குறை சொல்ல வேண்டுமென்றோ அல்லது விமர்சிக்க வேண்டுமென்றோ சொல்லவில்லை

மண்டபத்தில் ஒரு ஆசிரியர் மாற்றப்பட்டார். அது தலையீடு இல்லையா? ஆதாரம் வேண்டும் என்று சொன்னால் போதாது. பழைய டிபேட்ஸ்களை படித்துப் பார்த்தேன். நமது முதல்வர் அவர்கள் பேசியதையும் பார்த்தேன். அண்ணா அவர்கள் பேசியுள்ளதையும் பார்த்தேன். ஆதாரம் என்றால் அதை அரசே பெற்றுக்கொள்ள முடியும். எங்களைக் கேட்டால், ஒரு லெட்டர் வருகிறது, ஒரு லெட்டர் வந்துள்ளது என்றுதான் சொல்லலாம். அதற்கு மேல் என்ன ஆதாரம் சொல்ல முடியும்?

There is no unrestricted licence.

சபையில் பேசுகிறோம் என்பதால் எதையும் பேசலாம் என்பதில்லை என்று "மே" யில் தெளிவாகச் சொல்லப்படுகிறது. ஆகவே எதையும் பேசலாம் என்ற நிலைமை அல்ல, இது உண்மையாக இருக்கலாம் என்று திருப்திப்பட்டு இங்கு கிளப்புவது என்பது சரியானது, என்னைப் பொறுத்தவரையிலும் எங்கள் கட்சியைப் பொறுத்த வரையிலும் உள்ளே எதைக் கிளப்புகிறோமோ அதையே வெளியேயும் கிளப்புகிறோம், வெளியே சொல்வதை இங்கு எந்தளவிற்கு பக்குவமாகச் சொல்ல முடியுமோ அந்தளவிற்குப் பக்குவமாகச் சொல்கிறோம்.

**திரு. எம். எஸ் கே. சத்தியேந்திரன்:** பெரிய பட்டணத்தில் சில சம்பவங்கள் நடந்ததாக தங்கமணி அவர்கள் சொன்னார்கள். பெரிய பட்டணம் சம்பவம், அங்கு கிளைச் செயலாளராகப் பணியாற்றி வருகிற கபீர் வீட்டில் நுழைந்து அவரையும் அவரது மனைவியையும் தாக்கியிருக்கிறார்கள். தாக்கியவர்கள் மீது நடவடிக்கைகள் எடுத்தார்கள். அங்கு பெண்களை அவமானப்படுத்தியதாகச் சொல்வது அவைக்குத் தவறான தகவலை அவர்கள் தருகிறார்கள் என்றுதான் சொல்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: போலீஸ் நடவடிக்கை சாதாரண நடவடிக்கை அல்ல. நான் அந்த ஊருக்குப் போய் வந்தேன். அந்த நடவடிக்கைகள் பயங்கரமாக இருநதது. விசாரித்ததில், அதிலுள்ள விஷயங்கள் வருத்தப்பட வேண்டியவைகளாக இருந்தன. கடைசியாக, அரங்கண்ணல் அவர்கள் ஒன்று சொன்னார்கள். ஒரு பட்டியலைக் கொடுத்து இவ்வளவு மில்கள் மூடப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். எனக்கு அது அதிர்ச்சியாக இருந்தது. இந்தியாவில் மொத்தம் பஞ்சாலைகளே 68.

தமிழ் நாட்டில் மொத்த விவரம் எடுத்தால் அவ்வளவு வராலாம். பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய அளவுக்குப் போயிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: பஞ்சாலையைப் பொறுத்தவரையில் கூட கணக்குச் சொன்னால் நன்றாக இருக்கும். பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் மற்ற மாநிலங்களுக்கும் நமக்கும் என்ன விகிதாசாரம் இருக்கிறது என்றுதான் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தமிழ்நாட்டில் பஞ்சாலைகள் மூடப்பட்டிருந்தது முன்பு 28 ஆக இருந்தது, பிறகு 18 ஆக இருந்தது. இப்போது 12 ஆக இருக்கிறது, 6 மில்கள் கோவையிலும், 3 மில்கள் மதுரை மாவட்டத்திலும், 1 நெல்லை மாவட்டத்திலும், 1 செங்கற்பட்டு மாவட்டத்தில் வாலாஜாபாத்தில் இருக்கிறது. மற்ற மாநிலங்களில் பஞ்சாலைகளை எடுத்துக் கொண்டால், மொத்தமே 68 என்று இருக்கிறது, அவைகளை, அரசே ஏற்று நடத்த முடியாத நிலையில் இருக்கிறது.

அரசின் தொழிற்சாலைகளில், அரசு ஏற்று நடத்தும் தொழிற்சாலைகளில் "There should be workers, participation in industry" என்று சொல்லியிருக்கிறார்கள். இதற்காக விசேஷ நிபுணர் குழு போட வேண்டிய அவசியமே இல்லை. அதை ஒரு பாலிசியாக அறிவித்துவிட்டால் இப்படி அரசாங்கம் ஏற்று நடத்தும் தொழிற்சாலைகளில் திறமையாக நிர்வாகம் நடப்பதற்கு வழி வகையாக இருக்கும்.

இந்த பட்ஜெட் சம்பந்தமாக பொதுவாக எங்கள் கட்சியின் கொள்கை என்ன என்பதைப்பற்றி தெரிவித்து இருக்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன்.





திரு. கு. காமாட்சி: ஆன் எ பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். மாண்புமிகு உறுப்பினர் தங்கமணி அவர்கள் பேசுகிறபோது தொழிலாளர்கள் பிரச்சினையில் இங்கே இருக்கிற கம்யூனிஸ்ட் கட்சி அணுகுகிற முறைக்கும் வெளியே இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அணுகுகிற முறைக்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துச் சொன்னார்கள். திருச்சியில் உள்ள கொதிகலன் தொழிற்சாலையில் இயங்கும் யூனியனில் தலைவராக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் தோழர் கல்யாணசுந்தரமும், செயலாளராக மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் உமாநாத் அவர்களும் இருக்கிறார்கள், அவர்கள் எப்படி தொழிற்சங்க பிரச்னைகளை அணுகுகிறார்கள் என்று நான் தெரிந்துகொளள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அதேமாதிரி தூத்துக்குடியில் பல தொழிற்சங்கங்களில் தலைவராக கம்யூனிஸ்ட் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் இருக்கும். பல கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒரு தொழிற்சங்கத்தில் இருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் நிலையில் எப்படி இருக்கிறது என்று சொன்னால், பஞ்சாலைகளைப் பொறுத்தவரையில் எல்லாக் கட்சிகளும் சேர்ந்து அந்தப் பிரச்னையை அணுகுகிற காரணத்தால் (There are two dangers right reaction and left extreme)

அந்த இரண்டும் அபாயம்தான். அந்த மாதிரி ஏற்படாமல் இருப்பதற்கு செய்யவேண்டும். எங்களுடைய கட்சியின் கொள்கை என்ன என்று சொன்னேன், பல இடங்களில் கம்யூனிஸ்ட் கட்சியும், இந்திரா காந்தி காங்கிரசும் சேர்ந்து இருக்கிற அளவுக்கு யூனியன்கள் இருக்கின்றன. முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து இயங்குகிற சங்கங்களும் இருக்கின்றன. சில இடங்களில் பல சங்கங்கள் இருந்தாலும், அனைத்தும் ஒன்று சேர்ந்து சங்கம் நடத்துகிறோம். மதுரையில் இருககும் மகாலட்சுமி ஆலையில் முன்னேற்றக் கழகம், பார்வர்ட் பிளாக் போன்ற கட்சிகள் சேர்ந்து யூனியன் நடத்துகிறோம். தேர்தல் முடிந்தபிறகு அந்தக் கூட்டு கடைசிவரையில் இருக்கவேண்டுமென்று அங்கே இருக்கிறார்கள். அங்கே ஒரு ஸ்ட்ரைக் நடந்திய நேரத்தில், சில முன்னேற்றக் கழ்கத்தைச் சார்ந்தவர்கள் அந்த ஸ்ட்ரைக்கில் கலந்து

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1972 மார்ச் 10

கொள்ளக்கூடாது என்று சொன்னபோது, நாங்கள் நான்கு பேரும் இங்கே ஒன்றாக இருக்கிறோம் இதிலே, இந்தத் தொழிற் சங்கத்திலே அரசியலை கொண்டுவராதீர்கள் என்று அந்த தொழிலாளர்கள் சொன்னார்கள். தொழிற்சங்கத்தில் இம்மாதிரியாக பல (permutations and combinations are inevitable. They cannot be avoided.)

**திரு ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, இந்த நிதி நிலை அறிக்கையின் மீது என்னுடைய கட்சியின் சார்பில் நான் இரண்டொரு கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்பு வைக்க விரும்புகிறேன். இந்த மன்றத்திலே உள்ள பலரும் இந்த நிதி நிலை அறிக்கையை வரவேற்று வெகுவாக பாராட்டி, பலவிதமாக அடைமொழிகள் எல்லாம் சொல்லி முதலமைச்சரை வாழ்த்தினார்கள்.

எங்கள் கட்சியின் சார்பாக நாங்கள் சொல்வதெல்லாம், இது ஒரு சமதர்ம சமுதாயத்தை அமைப்பதற்கான நிதிநிலை அறிக்கையாக இல்லை. இது ஒரு ஏழைகளின் பட்ஜெட் அல்ல என்ற முகவுரையோடு ஓரிரண்டு கருத்துக்களை கூற விரும்புகிறேன். இது ஒரு மிச்ச பட்ஜெட்டாக இருந்தாலும், இது முன்பு போடப்பட்ட வரிகளினால் அதிகமாக பணத்தைப் பெருக்கியிருக்கிறது. இந்த ஆண்டிலே ரூ. 397.27 கோடி வருவாய் என்றும் சொல்லி, உபரி காட்டப்பட்டிருக்கிறது. நான் இந்த மன்றத்திலே ஏற்கெனவே சுட்டிக்காட்டியது மாதிரி, எலெக்டிரிசிடியின் மீது 9 பைசா என்று இருந்ததை 12 பைசாவாக கூட்டப்பட்டிருக்கிறது. அதே மாதிரி விற்பனை வரி முன்பு இருந்ததை விட அதிகமாக கூட்டப்பட்டிருக்கிறது. ஸ்டாம்பு கட்டணம் அண்மையில் 10 சதவிகிதத்திலிருந்து 12½ சதவிகிதம் கூட்டியிருக்கிறார்கள். பஸ் கட்டணம் உயர்ந்திருக்கிறது. கேளிக்கை வரி கூட்டப்பட்டிருக்கிறது. ஏன், இப்படிப் பார்த்தால் பல முறைகளிலும் வரிகள் கூட்டியிருப்பதை நாம் எல்லோரும் உணர்வோம். இவையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் சிந்திக்கவே இல்லை. இந்த நேரத்தில் நான் ஒன்றை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பாக மறைந்த தலைவர் உயர்திரு சி.என்.ஏ. அவர்கள் மறைமுக வரிகளை



1972 மார்ச் 10] [திரு, ஆர். பொன்னப்ப நாடார்]

நீக்குவோம், வரிகளைக் குறைப்போம், விலைவாசியைக் குறைப்போம் என்று திருவல்லிக்கேணியில் நடந்த பொதுக்கூட்டத்தில் கூறியிருக்கிறார்கள். ஆனால் மறைமுகவரியாக எக்ஸைஸ் வரியிலிருந்து மாத்திரம் ரூ. 14,39,060 வந்து இருக்கிறது. விற்பனை வரியிலிருந்து ரூ. 104 கோடிக்கு மேலாக வருகிறது. எக்ஸைஸ் வரியானது 35½ கோடியாக இன்று ஆகியிருக்கிறது என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இது யாரை பாதிக்கிறது என்பதை உணரவேண்டும். சாதாரண ஏழை மக்களை, எளிய மக்களைத்தான், இந்த மறைமுக வரி பாதிக்கிறது என்று கூறிக் கொள்கிறேன்.

இரண்டாவதாக, இந்த பட்ஜெட்டிலே ஒரு பெரும் அளவுக்கு ஏழைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது ஒரு சாதாரண மக்களின் பட்ஜெட் அல்ல. ஏழைகள் பட்ஜெட் அல்ல. இதிலே சமதர்மம் பூத்துக் குலுங்கவில்லை என்பதையும் நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, நான் ஒரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். இங்கே அமைச்சரவையிலிருந்து ஒரு அமைச்சரவர்கள் விலகினார்கள். அதைச் சில பத்திரிக்கைகளிலே பலவிதமான கருத்துக்கள் கொடுத்து போட்டு இருக்கிறார்கள். அதை முதலமைச்சர் அவர்கள் தெளிவுபடுத்தவேண்டுமென்ற காரணத்திற்காக இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். 'டி.எம்.கே. மினிஸ்டர் அவுட், மர்டர் கேஸ் எக்கோ' என்று டைம்ஸ் ஆப் இந்தியா பத்திரிக்கையிலே போட்டிருக்கிறார்கள். நாட்டிலே ஒரு பகுதியில் ஒரு கொலை நடந்ததாகவும், அதிலே அவர் தலையிட்டதாகவும், நீதி மன்றத்திலே அது சம்பந்தமாக, ஸ்டிரிக்சர்ஸ் வந்ததாகவும், அந்தப் பத்திரிக்கையில் எடுத்துக் கூறி இருக்கிறார்கள். அந்தக் கேசிலே முதலில் எப்.ஐ.ஆர். போட்டபோது 4 பேர் மீது குற்றம் சாட்டப்பட்டதாகவும், கடைசியில் ஒரு நபர் மீது அந்த வழக்கு தொடரப்பட்டதாகவும், நீதிபதி அவர்கள் போலீசார் இந்த வழக்கிலே நீதிபதிகளின் வேலையைச் செய்திருக்கிறார்கள் என்ற முடிவை வெளியிட்டு இருக்கிறார்கள் என்ற காரணத்தினால் தான் அவர்கள் இந்த மந்திரிசபையிலிருந்து விலகி விடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு இருக்கிறது என்ற ஒரு கருத்தினையும் அந்தப் பத்திரிகை

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 10

யிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவரவர்களே, திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் வழக்கறிஞர். நீதிபதியே சொல்லிவிட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் அந்தத் தீர்ப்பை படித்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். பத்திரிக்கையிலே இப்படி செய்தி வந்திருக்கிறதே அதற்கு விளக்கம் தாருங்கள் என்று கேட்டு இருக்கிறார். அவர்கள் உண்மையிலேயே அப்படிப்பட்ட குற்றச்சாட்டை கூறுகிறாரா என்று அறிய விரும்புகிறேன். நீதிபதி என்ன சொன்னார்கள். அந்தத் தீர்ப்பை படித்துப் பார்த்த பிறகு, அதை ஆராய்ந்த பிறகு இப்படிப்பட்ட பிரச்சினை எழுப்பினால் நன்றாக இருக்கும். எப்.ஐ.ஆர். போட்டதாலேயே அவர்களைச் சார்ஜ் ஷீட்டில் சேர்க்க வேண்டுமென்று விதி இருக்கிறதா? எப்.ஐ.ஆர். போடாதாலேயே சார்ஜ் ஷீட்டில் சேர்க்கக் கூடாது என்று இருக்கிறதா? அப்படிப்பட்ட சட்டம் இருக்கிறதா என்று சொல்லவேண்டும்.

ஒரு கொலை வழக்கிலே பல பேர் குற்றவாளிகளாக கம்ப்ளெயின்ட் கொடுக்கப்பட்டு, எப்.ஐ.ஆர். எழுதுகிற நேரத்தில், ஒருவன் நான்தான் குத்தினேன் என்று சொல்கிறான். நான்தான் குத்தினேன். நான் குத்தியதாலே அவர் இறந்து விட்டார். ஏன் குத்தினேன் என்றால் அவர் என்னை வெட்ட வந்தார். நான் குத்தினேன். செல்ப்-டிபன்ஸ்க்காக குத்தினேன் என்று எடுத்துச் சொல்கிறான். அதைப் போலீசார் விசாரித்த பிறகு அதைப் பரிசீலித்த பிறகு அவர்கள் முடிவு கட்டுகிறார்கள். இப்படி ஒருவர் ஒப்புக் கொள்கிறார், சாட்சிகளிலே சில பேர் யாரைச் சேர்க்கவில்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்களோ அவர்கள் எதுவும் செய்யவில்லை என்று சில பேர் சாட்சியங்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்தச் சாட்சியத்தையும் ஒப்பிட்டுப் பார்த்து, இதையும் ஒப்பிட்டுப் பார்த்ததில், யார் உண்மையான குற்றவாளியோ அவர்களைச் சேர்த்து இருக்கிறார்கள்.

இரண்டுவிதமான சாட்சியங்கள் இந்த வழக்கில் இருக்கின்றன. ஒரு சாட்சியத்தை போலீசார் ஒப்புக்கொள்கிறார்கள். ஒரு சாட்சியம்தான் தான் அந்தக் கொலையைச் செய்தேன் என்று



1972 மார்ச் 10] [திரு. செ. மாதவன்]

ஒப்புக்கொள்கிறது, ஆகவே, மற்ற சாட்சியங்களை எப்.ஐ.ஆர்.லிருந்து எடுத்துவிட்டு வழக்கு தொடர்கிறது சார்ஜ் ஷீட்டைப் பண்ணுகிறார்கள். அதைப்பற்றி அந்த வழக்கை விசாரித்த நீதிபதி அறிவித்த தீர்ப்பை நீங்கள் படித்திருப்பீர்கள். அதே நீதிபதி யாரைக் குற்றவாளி என்று சொன்னார்களோ அவரை விசாரித்து செல்ஃப் டிபன்ஸ்-க்காக அந்த கொலையைச் செய்தார் என்று தன்னுடைய தீர்ப்பில் கூறியிருக்கிறார், ஆகையால், இந்த வழக்கிலே போலீசார் என்ன தவறைச் செய்தார்கள் என்று குறிப்பிட்டு விளக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, ஒரு நபர் மீது எஃப்.ஐ.ஆர். போட்டு வேறு நபர்களைப் பிறகு சேர்த்துக் கொள்ளலாம். அதில் தவறில்லை. ஆனால் இந்தக் கேசில் முதலில் நாலு பேர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது, மாணிக்கம் என்பவர் இவர்களால் கொலை செய்யப்பட்டார் என்று. 6–4–1971 அன்று எஃப்.ஐ.ஆர். உடனடியாக போலீஸ் ஸ்டேஷனில் எழுதப்பட்டு, அதில் பழனி ஆண்டி சோழகர், விரையன், ஆயிப்பொன்னு, கருத்தபாபு ஆகியோர் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கடைசியாக இந்த கருத்தபாபு என்பவர் மீது மட்டும் சார்ஜ் ஷீட் கொடுக்கப்பட்டு விசாரணை நடந்தது. அதில் 'பெனிபிட் ஆஃப் டௌட்' கொடுக்கிறேன் என்று தீர்ப்பில் கூறியிருக்கிறார்கள். அதில் 'செல்ஃப் டிபன்ஸ்' க்காக செய்யப்பட்டது இந்தக் கொலை என்று கூறப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இரண்டு கேள்விகளைக் கேட்டேன். ஒன்றுக்குப் பதில் சொல்லியிருக்கிறீர்கள் எப்.ஐ.ஆர். இருப்பதால் ஒருவரின்மீது சார்ஜ் ஷீட் போட வேண்டும் என்றில்லை. அதேபோல எஃப்.ஐ.ஆரில் இல்லாததால் ஒருவரின் மேல் போடக்கூடாது என்பதல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** நீதிபதி அவர்கள் அந்தப் போலீஸ்காரர்கள் நீதிபதியின் வேலையைச் செய்துவிட்டார்கள். They have arrogated to themselves the powers of Judiciary— என்ற ஒரு கருத்தையும் கூறியிருக்கிறார்கள் என்பதை சட்ட அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்கிறேன்.

அதில் மற்றவர்களை விடவேண்டும் என்று சொல்லவில்லை. இந்த மாதிரி குற்றச்சாட்டு வெளியில் வருவதைப் பார்க்கிறோம். விடப்பட்டவர்களில் ஒருவரின் உறவினர் இந்த அமைச்சரவையில் ஒரு அமைச்சராக இருந்தவர் என்பதால் இப்படிச் சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் ரொம்ப முக்கிய பொறுப்பான விஷயத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கொலை வழக்கில் தண்டனை பெறுகிற குற்றவாளிகள் பற்றி இப்போது யாருக்கும் கவலையில்லை. ஒரு மந்திரி அவர்களின் ராஜிநாமாவை வைத்து--அவர்கள் மீது தாங்கள் குற்றம் சாட்டவில்லை என்றாலும், குற்றம் சாட்டுகிற மாதிரியான ஒரு போக்கில், அம்மாதிரி அமைகிற வகையில் உங்களின் வாதம் இங்கே அமைகிறது. இந்த மாமன்றத்தின் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொருவரின் உரிமையைக் காக்க வேண்டிய பொறுப்பு எல்லோருக்கும் இருக்கிறது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் இரண்டு கேள்விகளுக்கு விளக்கம் கேட்டார்கள். அதை விளக்க வேண்டிய பொறுப்பு உறுப்பினருக்கு உண்டு, எஃப்.ஐ.ஆர்-ல் இருக்கிற பெயரை பின்னாலே விட்டு விடலாமா எஃப்.ஐ.ஆர்-ல் இல்லாத பெயர்களை பின்னாலே சேர்க்கலாமா என்பது கேள்வி. அதற்கு நீங்கள் பதிலளித்து விட்டீர்கள். ஒரு போலீஸ் ஸ்டேஷனில் போலீஸ்காரர்களுக்குத் தெரியும். எஃப்.ஐ.ஆர்-ல் முதலில் பெயர் சேர்க்கப்பட்டு, பின்னாலே, யாரின் தலையீட்டாலோ அவைகள் நீக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்வது ஆதாரம் அற்றது. எஸ்டாபிளிஷ் பண்ண முடியாது. இது பொதுவான விவரங்கள். குற்றம் சாட்டப்பட்டவர்கள் அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்களின் சொந்தக்காரர்கள் என்பதாலும், துரதிருஷ்டவசமாக அவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இந்த வழக்கில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்ற காரணத்தால் அமைச்சர் அவர்களுக்கு இதில் பொறுப்பிருக்கிறது என்று குற்றம் சாட்டலாமா என்று கேட்கிறேன். மாண்புமிகு உறுப்பினர், அமைச்சர் அவர்களுக்கு இதில் சம்பந்தமிருக்கிறது என்று சொல்லக்கூடிய அளவிற்கு சொல்லியதால் தயவு செய்து கேட்டுக்கொள்கிறேன். ஜட்ஜ் அவர்கள்

The Policeman arrogated himself as Judge.

என்று சொல்லியிருப்பதாகச் சொல்கிறீர்கள். அரகேட் பண்ணலாம். அவர்களுடைய வேலைக்கு அவர்கள்தான் ஜட்ஜ்.



போலீஸ்காரர்கள் ஜட்ஜாக இருக்கலாம். யார் குற்றவாளி என்று முடிவு செய்ய வேண்டியது அவர்கள்தான். ஜட்ஜ் அவர்கள் அவர்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார். ஆனால், பொது விவகாரங்களில் மாண்புமிகு அமைச்சர் அவர்களை அதோடு இணைத்துச் சொல்வதற்கு உங்களுக்கு ஏதாவது தகவல் இருக்கிறதென்றால் அதை ஆதாரத்தோடு சொல்லவேண்டும். இல்லாவிட்டால் உங்களைப் போல ஒரு மாமன்ற உறுப்பினரின் ராஜிநாமாவை இதோடு இணைத்துப் பேசுவதைத் தவிர்க்க வேண்டும். இந்த அமைச்சர் இந்த ஊரைச் சேர்ந்தவர். அங்கே இப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது என்ற காரணத்தினால் அவருக்கும் இதற்கும் என்ன சம்பந்தமிருக்கிறது என்று பார்த்துப் பேச வேண்டும். இல்லாவிட்டால் அதற்குள்ள பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சொல்லி இதை நீங்கள் ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமென்ற முறையில், வெளியில் நீங்கள் ஆயிரம் பேசலாம், ஆனால் இந்த வழக்குக்கும், அவர்களுக்கும் என்ன சம்பந்தமிருக்கிறதென்ற முறையில், இந்த நாட்டை ஆண்ட ஒரு மிகப் பெரிய கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் இதைக் கருத்தில் கொண்டு உங்கள் தகவல்களைத் தொடர்ந்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, நீதிபதி சொல்லவில்லை என்பதல்ல. ஒரு பத்திரிகையில் ஹிந்துஸ்தான் என்ற காரணத்தினால் இப்படிச் சொன்னேனே ஒழிய இதில் அவரின் தலையீடு என்று நான் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** குற்றச்சாட்டை நீங்கள் சொல்லவில்லை என்பதல்ல. ஒரு பத்திரிகையில் ஹிந்துஸ்தான் டைம்சோ. டைம்ஸ் ஆஃப் இண்டியாவோ இப்படி இப்படி இதில் ஏதோ இருக்கிறதென்று சொல்லி அதோடு அந்தப் பத்திரிகைக்கு பிறகு பல்லவி பாடி, பிறகு அனுபல்லவியும் பாடுனார்கள். ஆகவே சட்ட நிபுணரான மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி மேலும் 'இம்பிளிகேட்' பண்ணுகிற முறையில் இப்படி ஒரு மந்திரியின், உறுப்பினரின்—அமைச்சர் என்பதுபற்றி கவலையில்லை —மீது இன்னின்னதற்காக இப்படிக் குற்றம் சாட்டுகிறேன் என்று ஆதாரத்தோடு சொல்லுங்கள். அதை விடுத்து வேறு அர்த்தம் தொனிக்கிற வகையில் பேசவேண்டாம் என்றுதான் கூறுகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : குற்றம் சாட்ட வேண்டுமென்ற காரணத்திற்காக இதைச் சொல்லவில்லை என்று சொன்னார். ஆனால் நீங்கள் செய்த காரியம்தான் அவரைக் குற்றஞ்சாட்டி ராஜினாமா செய்ய வைத்தது போல இருக்கிறது. வெளியே இப்படி பேசுகிறபோது முதலமைச்சர் இப்படி ராஜினாமா செய்யச் சொன்னார் என்று சொல்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலமைச்சர் ராஜினாமா செய்யச் சொன்னார் என்று கூறுவது இந்த அவையில் எடுத்துக் கூறப்பட்ட வாதங்களுக்கு மாறாக அவர்கள் மறுப்பளிப்பது போல இருக்கிறது. ஒரு தவறான தகவலைக் கூறுகிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் அவர்களாகவே ராஜினாமா செய்தாரே ஒழிய நான் சொல்லிச் செய்யவில்லை என்பதை சொல்லிக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: அப்படி ராஜினாமா செய்திருந்தாலும், இப்படிப்பட்ட நிலையில் அவர் ராஜினாமா செய்திருப்பது இப்படிப்பட்ட சந்தேகங்களை கிளப்புகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் அமைச்சருக்குச் சொந்தக்காரர்தானே. அதை அவரிடமே சொல்லலாமே.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : யார் யாருக்குச் சொந்தக்காரர் என்று இந்த அவையிலே விளக்கமாகச் சொல்வார்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : புதிய அமைச்சர்கூட அனந்தநாயகி அம்மையார் அவர்களுக்குச் சொந்தக்காரர்தான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் யார்மீதும் குற்றம் சாட்டவில்லை. குற்றம் கற்பிக்கவும் இல்லை, யார்மீதுள்ள கெட்ட எண்ணத்தோடும் நான் சொல்லவில்லை. பத்திரிகைகளிலே இந்த கேஸ் சம்பந்தமாக இடம் பெற்ற செய்திகளைப் பார்த்துவிட்டுத்தான் சொல்லுகிறேன். ஒன்றுமே இல்லாமல், அப்படி நடந்தது, இப்படி நடந்தது என்று எப்போதும் நான் சொல்லமாட்டேன். இந்தக் குறிப்பிட்ட வழக்கிலே தீர்ப்பு அளிக்கப்பட்டு, அது அப்பீலில் இருப்பதால், ' சப்ஜுடிஸ் " ஆக இருக்கும் அதைப்பற்றி விரிவாகப் பேசுவது சரியல்ல என்ற காரணத்தால் சொல்லவில்லை.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேசைப்பற்றிச் சொல்லக் கூடாது என்பதல்ல. எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாம். ஆனால் தவறு யார் செய்தார்கள் என்பதை ஆதாரத்தோடு பேச வேண்டும். போலீஸார் தவறு செய்திருந்தால் எந்த வகையிலே தவறு செய்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லுங்கள். போலீஸார் தீர்ப்பு வழங்கியிருந்தால், அந்த அதிகாரம் அவர்களுக்கு எப்படிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறு செய்திருந்தால் கூட சொல்லுங்கள். ஆனால் ஆதாரமில்லாமல் அப்படிப்பட்ட எண்ணங்களை கிளப்பிவிட்டு, ஒரு எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, உறுதி செய்கிற வகையிலே பேசுவது பொறுப்புள்ள ஒரு கட்சித் தலைவரின் பேச்சாக—சட்டமன்றப் பேச்சாக அமைந்துவிடக் கூடாது என்பதுதான் என்னுடைய கவலையெல்லாம். ஆகவே, ஆதாரங்களோடு இந்த வழக்கைப்பற்றி எவ்வளவு வேண்டுமானாலும் பேசுங்கள். போலீஸார் தவறு செய்திருந்தால் அதைச் சொல்லுங்கள், ஜட்ஜ்களின் தீர்ப்புகளைப் பற்றிக்கூடச் சொல்லலாம். அவர்களுக்கு ஒரு கெட்ட நோக்கம் ஏற்படாத வகையில் தீர்ப்புகளை ஆராயலாம். நீங்கள் அமைச்சரையும், இந்த வழக்கையும் இணைத்துச் சொல்லியிருக்கிறீர்கள். எந்த முறையிலே அமைச்சருக்கு இதில் சம்பந்தம் இருக்கிறது என்பதை விளக்கிவிட்டால்தான் நீங்கள் தொடங்கிய உரை பூர்த்தியாகும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : போலீஸார் இப்போது இருக்கின்ற சட்டங்களின்படி நீதிபதியாக இருக்க முடியாது. ஏனென்றால் இரண்டு துறைகளும் வெவ்வேறாக இருக்கின்றன. மேற்கொண்டும் இந்த விவாதத்தைத் தொடாமல், இதோடு விட்டு விடுகிறேன். அடுத்து, வேறு விஷயங்களைப்பற்றி பேச முற்படுகிறேன்.

இன்று இந்த அரசாங்கம் வளர்ந்து வருகிற விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு எந்தவிதமான ஆக்கப்பூர்வமான வேலைகளையும் செய்யவில்லை என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். 1967-லே பொதுத் தேர்தல் நடைபெறக்கூடிய காலத்தில், ஒரு பொதுக்கூட்டத்தில் முன்னாள் முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் ஒரு கருத்தினை வெளியிட்டார்கள். அவர், ' நாங்கள் பதவிக்கு வந்த ஒரு ஆண்டிலேயே

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 10

விலைவாசியைக் குறைக்காவிட்டால் பதவியிலிருந்து விலக்கி விடுங்கள். கூட்டணி ஆட்சியை கலைத்துவிட்டு நாங்கள் வீட்டுக்குப் போகத் தயார். ஒப்பந்தம் வேண்டுமானாலும் எழுதி, கையெழுத்துப் போட்டுத் தருகிறோம். அப்படிச் செய்யவில்லை என்றால் பாராங்கல்லைத் தூக்கி வந்து எங்கள் தலைமேலே போடுங்கள்' என்று கூறியிருக்கிறார்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** அது எந்தப் பத்திரிகையிலே வந்த செய்தி என்பதைத் தெரிவிப்பீர்களா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இந்தச் செய்தி, 1967-லே வந்த நவமணி பத்திரிகையில் இருக்கிறது. இன்று முதலமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு கருணாநிதி அவர்கள் தி.மு.க. வெற்றி பெற்ற ஒரே மணி நேரத்தில் அரிசி விலையை ஒரு ரூபாயாகக் குறைக்கிறோம் என்றும், படிப்படியாக ரூபாய்க்கு மூன்று படி அரிசி வழங்குவோம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** சார், ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர். பத்திரிகைச் செய்தியை இந்த மன்றத்திலே படிப்பதற்கு முன் கூட்டியே அனுமதி பெற்றிருக்கிறார்களா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி பெற்றிருக்கிறார்கள்,

**திரு. ஆர்' பொன்னப்ப நாடார்:** இந்தமாதிரி சாதாரண பெர்மிஷன் கூட எங்களுக்கு இல்லை என்றால் இந்த மன்றத்திலே எங்களால் பணியாற்ற முடியாது, விலைவாசியை 1967-லேயே குறைக்கிறோம் என்று கூறினீர்கள். ஆனால் இன்றுவரையில் நீங்கள் சொன்ன அளவுக்கு குறைக்க முடிந்ததா என்று கேட்க ஆசைப்படுகிறேன். இன்று விலைவாசி விஷம்போல் ஏறிக்கொண்டிருக்கிறது: மார்ச் மாதத்திலே மத்திய பட்ஜெட் வரப் போகிறது. அது வந்தபின்னால் இன்னும் எவ்வளவுக்கு விலைவாசி ஏறப் போகிறதோ தெரியவில்லை. இந்தமாதிரியே விலைவாசி ஏறிக்கொண்டிருந்தால் சாதாரண மக்களுக்கு சொல்ல முடியாத கஷ்டங்கள் ஏற்படும் என்பதை நான் இங்கு கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன். அதற்கெல்லாம் ஏதாவது பரிகாரம் தேடப்பட்டிருக்கிறதா என்றால் இல்லை.



1972 மார்ச் 10] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

பொருளாதார நிபுணர் வி.கே.ஆர்.வி. ராவ் அவர்கள் விலைவாசியைப்பற்றி கூறிய கருத்துக்கள் 'மெயில் சன்' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. அதையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

" Finally, I am glad that Mr. Chavan has laid so much stress on stability in prices as an instrument both for the promotion of savings and of investment. " Stable Prices " he has said, " are the key to stable investment decisions and therefore for rapid economic growth ". Along with the prices of foodgrains, those of major commercial crops must therefore also be disciplined. Rising prices increase costs, make for increased non-productive Public expenditure distort investment decision and weaken the incentive to save by the erosion it brings about in the purchasing power of the rupee. Tackling the price rise and securing stability in their level is therefore a must for tackling the economic problem. "

பொதுவாகப் பல காரியங்களை எடுத்துக் கூறிவிட்டு, விலைவாசி எப்படி இருக்க வேண்டும் என்ற கருத்துக்களையெல்லாம் கூறி இருக்கிறார். நமது இந்த நிதிநிலை அறிக்கையில் இந்த விலைவாசியைப்பற்றி ஆக்கபூர்வமான எந்த அம்சத்தையும் காணவில்லை. அதற்குத் தக்க நடவடிக்கை ஏன் எடுக்கப்படவில்லை என்பதை ஒரு குற்றச்சாட்டாகவே கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம், பற்றி ஒரு கருத்தினைக் கூறவேண்டும். இன்று வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக் கொண்டே வருகிறது' ராஜ்ய சபாவில் டி., சஞ்சிவைய்யா அவர்கள் கூறியதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அதாவது தமிழ்நாட்டில் 1970 அக்டோபர் 31-ல், 410,852 பேர்கள் எம்பிளாய்மென்ட் எக்சேஞ்சில் பதிவு செய்திருக்கிறார்கள். அவர்கள் வேலை தேடுவதில் முனைந்திருக்கிறார்கள். வேலை இல்லாத் திண்டாட்டமே இதற்குக் காரணம் என்றும் கூறியிருக்கிறார்.

இந்த முறையில் பார்க்கின்றபோது தமிழ்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற வகையில் உருப்படியான எந்த நடவடிக்கையையும் எடுத்ததாகத் தெரியவில்லை. அண்மையில் மத்திய அரசாங்கத்தால் உயர்தர அதிகாரி வி. பகவதி அவர்களைத் தலைவராகக் கொண்டு அன்எம்பிளாய்மெண்ட் கமிஷன்

ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது, அந்தக் கமிஷன் ஃபுல் எம்பிளாய்மென்ட் எப்படி இருக்கவேண்டும், அண்டர் எம்பிளாய்மெண்ட்டை போக்க என்ன செய்யவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதையெல்லாம் பரிசீலிக்க வேண்டும்.

நமது தமிழ்நாட்டிலே இன்று எஞ்சினீயர்களுக்கு வேலை இல்லை. ஆசிரியர்களுக்கு வேலை இல்லை. படித்த மாணவர்களுக்கு எம்பிளாய்மெண்ட் ஆப்பர்சூனிட்டீஸ் இல்லை, ஆக, இந்த முறையில் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்துகொண்டே இருக்கிறது. அதைப் போக்குவதற்கு அரசாங்கம் தேவையான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, இன்றைக்கு செலவுகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. அதன் காரணமாக நிதிப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இந்த நிலையில் நமது அரசாங்கம் பல கார்ப்பரேஷன்களை—வாரியங்களை அமைத்திருக்கிறது. இன்று டிரான்ஸ்போர்ட்டிலே மூன்று வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பல்லவா, பாண்டியன், சோழா என்ற மூன்று வாரியங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் அரசாங்கத்தில் ஒரு டிரான்ஸ்போர்ட் பிரிவு இருக்கிறது. நிதி நெருக்கடியான இந்த நேரத்தில் இந்தமாதிரி வாரியங்கள் தேவைதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுபற்றி இந்த மன்றத்திலே ஆலோசிக்கப்பட வேண்டும். மூன்று கார்ப்பரேஷன்களையும் ஒரே கார்ப்பரேஷனாக ஆக்கினால் நல்லது.

கேரள மாநிலத்தில் கூட ஒரே ஒரு கார்ப்பரேஷன்தான் இருக்கிறது என்று திரு. கே.டி.கே. தங்கமணி அவர்கள் மேற்கோள் காட்டினார்கள்' அதேபோன்று இங்கும், ஒரே கார்ப்பரேஷனை அமைக்கும் முயற்சியைப் பரிசீலனை செய்யவேண்டும். மூன்று கார்ப்பரேஷன்களாக இருப்பதால் எஸ்டாபிளிஷ்மென்ட் அதிகமாகிறது. அதனால் செலவு ஜாஸ்தியாகிறது. ஒருவேளை வசதிக்காக ஆரம்பத்தில் மூன்று கார்ப்பரேஷன்களாக வைத்திருந்தாலும், இவைகளை ஒரே கார்ப்பரேஷனாக ஆக்குவது சாலச் சிறந்தது என்ற என் கருத்தினை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிலும் குறிப்பாக தொழிலாளர்களிடையே ஒருமித்த கருத்து இருப்பதற்கு இது உகந்ததாக இருக்கும் என்ற ஆலோசனை கூறிக்கொள்ள விரும்புகிறேன்.





அடுத்து, பொது நிறுவனங்கள் அதிகமாகிக் கொண்டு வருகின்றன. ஆகவே மற்ற இடங்களில் உள்ளதுபோல் இங்கேயும் ஒரு பப்ளிக் அண்டர்டேக்கிங் கமிட்டி நிறுவப்பட வேண்டும். இப்போது பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியிருக்கிறது, எஸ்டிமேட்ஸ் கமிட்டியிருக்கிறது. அதுபோலவே சட்டசபையில் அதைப்பற்றி ஆராய பப்ளிக் அண்டர்டேக்கிங் கமிட்டியை நிறுவுவது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

அடுத்து, தமிழகத்தில் ஒருவகையான அமைதியின்மை அதிகரித்து வருகிறது. குறிப்பாக பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடக்கிறபோது—நான் எந்த ஒரு கட்சியையும் கோடிட்டுக் காட்ட விரும்பவில்லை—சமூக விரோத சக்திகள் அந்தக் கூட்டங்களைக் கலைப்பதும், அதில் கலந்துகொள்கிறவர்களைத் தாக்குவதும் அதிகரித்து வருகிறது. இதுபோல திருச்சியில் ஒரு கூட்டம் கலைக்கப்பட்டது. இராமேசுவரத்தில் நடந்த கூட்டத்தில் பலர் தாக்கப்பட்டிருக்கிறார்கள். மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். எல்லாக் கட்சிகளின் சார்பிலும் தந்திகள் எனக்கும் வந்திருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்களுக்கும் வந்திருக்கும். இதுபோன்ற காரியங்கள் நாட்டில் அதிகரிப்பது நியாயமல்ல. போலீசார்களுக்குக் கண்டிப்பான உத்தரவு அனுப்ப வேண்டும். இதுபோன்ற சம்பவங்கள், வன்முறைகள் நடக்காதிருக்க எல்லாக் கட்சியினர்களும் கவனம் செலுத்த வேண்டுமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, ஒரு விஷயம்—நேற்றைய தினம் மாண்புமிகு டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது என் கட்சியைச் சார்ந்த குடந்தை இராமலிங்கம் தாக்கப்பட்டது பற்றிக் கூறினார்கள். குடந்தை இராமலிங்கம் தேர்தல் வழக்குதான் இப்போது நடந்து வருகிறது. மற்ற வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. அவர் தேநீர் அருந்திக்கொண்டிருந்தபோது சிலர் 'முதல் அமைச்சர் மீதா கேஸ் போட்டிருக்கிறாய்?' என்று சொல்லி தாக்கியிருக்கிறார்கள். பலத்த காயங்களை உண்டாக்கியிருக்கிறார்கள். அவரே என்னிடம் சொன்னார், இரண்டு பேர்களைத்தான் அடையாளம் சொல்ல முடியும் மற்றவர்களைத் தெரியாது என்பதாக எங்கள் கட்சியைச் சேர்ந்த பால தண்டாயுதபாணி அங்கே போகாதிருந்தால் அவரது உயிருக்கே

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 10

ஆபத்தாகியிருக்கும். ஒளிந்திருந்த அவரை ஒரு போலீஸ் அதிகாரிதான் மீட்டு வந்திருக்கிறார். அவரை நான் போய் ஆஸ்பத்திரியிலும் பார்த்தேன். பொதுவாக இதுபோன்ற காரியங்கள் நடப்பது சரிதானா, நியாயமானதுதானா என்பதைச் சிந்திக்க வேண்டும்' தேர்தல் காழ்ப்புணர்ச்சி காரணமாக இதுபோன்ற வன்முறைச் செயல்கள் தலைதூக்க விடுவது நியாயமாகாது. இதையும் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோலவே தொழில்துறையிலும் தொழிலாளர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள். இதைத் தவிர்க்க வேண்டுமென்ற நல்ல எண்ணம் படைத்த போலீஸ் அதிகாரிகள் இல்லாமலில்லை. அவர்கள் நடுநிலைமையில் இருந்து செயலாற்ற அரசு உத்தரவிட வேண்டும். நமது மாநிலத்தில் வெகுவாக தொழில் அமைதி குலைந்து வருகிறது. எந்தக் கட்சி இதற்கு உடந்தையாக இருக்கிறது என்பது எல்லாம் அரசாங்கத்திற்கே தெரியும். இன்றைய தினம் சிம்சன் விவகாரத்தில் எத்தனை தொழிலாளர்கள் வேலையில்லாமல், கூலியில்லாமல், பசி பட்டினியாய் இருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும். கோவை பஞ்சாலைத் தகராறை சுமுகமாகத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் தகராறைத் தீர்த்து வைத்திருக்கிறார்கள். அதுபோன்று இதிலும் நல்லதொரு சுமுகமான தீர்வை ஏற்படுத்தித் தர அரசு தன்னாலானவற்றை எல்லாம் செய்தாக வேண்டும். இது பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களது பிரச்சினை.

அடுத்ததாக, மிக முக்கியமான பிரச்சினையாக முதல் அமைச்சர் எடுத்து வைத்திருப்பது மாநில சுயாட்சி பற்றிய பிரச்சினை. இந்தப் பிரச்சினையின்மீது விரிவான கருத்துக்களை எல்லாம் எல்லாக் கட்சித் தலைவர்களும் எடுத்து வைத்திருக்கிறார்கள். இராஜபாளையம் மகாநாட்டில் நடந்தது என்ன என்பதுபற்றி பல பத்திரிகைகளிலும் வந்திருக்கின்றன. நமக்குச் சாதகமான பத்திரிகை என்கிற நியூயார்க் டைம்ஸில்கூட இந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு உருவாகிக்கொண்டிருக்கிறது எனக் குறிப்பிட்டிருக்கிறார்கள். முதல்வர் படம் ஒரு பக்கம்—முஜிபிர் ரகிமான் படம் ஒரு பக்கம் சேர்ந்திருப்பதாக வெளிவந்திருக்கிறது. நமது முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டு முஜிபிர் என்பதாகக் குறிப்பிட்



1972 மார்ச் 10] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

டிருக்கிறது. அதுபற்றி எல்லாம்கூட நேற்று விவாதம் நடந்தது. இராஜபாளையம் மகாநாட்டில் பேசிய அவர்களது கட்சியைச் சேர்ந்த தலைவர் திரு. ஆசைத்தம்பி அவர்கள்கூட "இராணுவம் போன்ற காரியங்களைக்கூட நம்மிடத்தில் கொடுக்கலாம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கூற்றுக்களையெல்லாம் பூராவாக நான் இங்கே எடுத்து விளக்கத் தேவையில்லை.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன் :** நம்முடைய மதிப்பிற்குரிய காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது சொன்னார்கள். அவர்கள் சொல்வதில் இராணுவம் அல்லாத—இராணுவத்தை மத்திய சர்க்காரிடம் ஒப்படைத்து—மற்ற பொதுத் துறைகளை மாநில அரசாங்கங்களிடம் ஒப்படைக்கிற மாநில சுயாட்சியை இவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களா என்று கேட்கிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நான் அப்படிப்பட்ட எந்த விதமான கருத்தையும் கூறவில்லை. இதுபற்றி முரசொலியில் என்ன வந்திருக்கிறது என்பது எனக்குத் தெரியும். அந்தப் பத்திரிகையையும் வைத்திருக்கிறேன்.

**திரு. கோவை செழியன் :** பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியில் இராணுவம், வெளிநாடு விவகாரம், போக்குவரத்து ஆகிய துறைகளைத் தவிர மற்ற அனைத்தையும் மாநிலங்களுக்குத் தர வேண்டுமென்று மதிப்பிற்குரிய ஜவஹர்லால் நேரு அவர்களும், காந்தி அவர்களும் ஒத்துக்கொண்டார்களே. அதை எதிர்க்கட்சி காங்கிரஸ் தலைவர் அறிவாரா என்று அறிய விரும்புகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** அதெல்லாம் பழைய சரித்திரம். இப்போது நமக்கு இருப்பது அரசியல் அமைப்புச் சட்டம். அரசியலமைப்புச் சட்டத்தில் இருப்பதை புனர்பரிசீலனை செய்ய வேண்டுமா? மாநில சுயாட்சி என்ன என்பதைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு காலம் இருக்கிறது. ஒருவேளை இந்த மாதம் 15-ம் தேதிக்குப் பிறகு என்ன நடக்கப் போகிறது என்பது முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் "Beware of the heights of March." எந்தெந்தக் கட்சிக்காரர்கள் அதிகாரத்திற்கு வரப் போகிறார்கள் என்பதை நான் எடுத்துக் கூறத் தேவையில்லை.

[1972 மார்ச் 10

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பதினைந்தாம் தேதிக்குப் பிறகு என்ன நடக்கப் போகிறது? இந்த இரு காங்கிரஸ் கட்சிகளும் ஒன்று சேரப் போகிறது என்றுதான் நான் கருதினேன். அதற்கு ஏதாவது வழி இருக்கிறதா?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அப்படி ஒன்று சேர்ந்தால் உங்களுக்குத்தான் முதலில் தெரிவிப்போம். அப்படி எனக்குத் தகவல் இல்லை.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் திடுக்கிடும் தகவல் என்று குறிப்பிட்டார்கள். அது தித்திக்கும் செய்தி என்று நான் கருதுகிறேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அப்படி இனிமையான செய்தி என்று இனிமையாகச் சொன்னதற்கு மகிழ்ச்சி. மாநில சுயாட்சியைப்பற்றி ராஜாஜி அவர்கள் சுயராஜ்யாவில் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிப்ரவரி 26, 1972 இதழில் குறிப்பிட்டுள்ள ஒரு பகுதியை மட்டும் உங்கள் அனுமதியின்பேரில் படிக்கலாம் என்று கருதுகிறேன்.

"There is no parallel whatsoever between the independence of Bangla Desh and the State autonomy slogan which has now been developed into an election cry by political parties who do not feel they can get on without a new cry. Asking for autonomy and begging for financial assistance do not go well together."

அதுமட்டுமல்ல, வேறு சில கருத்துக்களையும் கூறியிருக்கிறார்கள். உரிமம் வேண்டும், லைசென்ஸ் கொடுப்பதற்கு உரிமம் வேண்டும் என்று கூறியிருக்கிறார்களே, என்று கூறுகிறார். அதையெல்லாம் நான் கூறவேண்டிய தேவை இல்லை. இந்தக் கருத்தைப்பற்றிப் பொதுவாக பலரும் ஆட்சேபணை தெரிவித்திருக்கிறார்கள். எல்லாவற்றையும் சொல்ல வேண்டும் என்று இல்லை.

அடுத்து ஒரு மத்திய அமைச்சர் அவர்கள் "D.M.K. autonomy—attempt to divert public attention", என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் பல காரியங்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இதிலே ஒரு பகுதியை மட்டும் எடுத்துக் கூற விரும்புகிறேன். முன்பு பிரிவினை கேட்டதாகவும், அதை



1972 மார்ச் 10] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இப்போது கைவிட்டு விட்டதான முறையிலே பேசுகிறார்கள் என்று பேசியிருக்கிறார். பெடரல் அமைப்பு வேண்டும், இன்பத் திராவிடம் வேண்டும், முழுத் திராவிடம் வேண்டும் என்று மக்கள் மத்தியில் வைத்த காரணத்தால்தான் இந்தச் சந்தேகம் வருகிறது.

அவர்கள் இன்னொரு விஷயத்தையும் சொல்கிறார்கள். கங்கை-காவிரி இணைப்பு பட்ஜெட் உரையிலே இடம் பெற்றிருக்கிறது. இந்தத் திட்டம் அவர்களுடைய தேர்தல் விக்ஞாபன அறிக்கையில் வைக்கப்பட்டது என்கிற கருத்துப்பட பேசியிருக்கிறார்கள். இது மாதிரியான தன்னாட்சி, அடானமி பிரச்சினைகளினால் திட்டங்கள் நிறைவேறுவதற்குச் சங்கடம் இருக்கும் என்று கூறினார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது அடானமி அல்லது மாநில சுயாட்சி என்று சொன்னால் இன்று இருக்கிற அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்திக்கொள்ள வேண்டியது என்பதுதான் விஷயம். இதில் ஆத்திரப்பட்டுப் பேச வேண்டியதில்லை. வங்காளத்தில் நடந்தது மக்களிடத்தில் யாஹியாகான் நடந்துகொண்ட விதத்தினால் ஏற்பட்ட நிகழ்ச்சி. இங்கு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 184 உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆண்டுகொண்டிருக்கிறது. உங்களுடைய ஆட்சியை யாரும் கவிழ்த்துவிட மாட்டார்கள். அப்படி கவிழ்த்து விடுவார்கள் என்று நினைக்காதீர்கள். சட்டபூர்வமான முறையில் ஏற்பட்ட ஆட்சியை கவிழ்க்க சட்டபூர்வமாகத்தான் முடியும். யார் என்ன காரணம் கூறினாலும் சரி, அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பாக எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கிறேன். அரசியலமைப்புச் சட்டத்திலே ஒரு பிரிவு இருக்கிறது. அதாவது 263 வது பிரிவு. "Co-ordination between States" என்று சொல்லி, அதற்கு வேண்டுமானால் ஜனாதிபதி அவர்கள் ஒரு கமிட்டியைப் போடலாம் என்று இருக்கிறது. நிதியை, எப்படிப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதைக் குறித்து Finance Commission, 12-வது பிரிவிலே, அரசியலமைப்புச் சட்டத்திலே தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறது. அதிலே நமக்கு அநீதி ஏற்பட்டு விடுமானால் தமிழகத்து அமைச்சர்கள் எடுத்துக் கூற இருக்கிறார்கள். இல்லையானால் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொல்ல இருக்கிறார்கள். அதைப் பொறுத்தவரையில் இரண்டுவிதமான கருத்துக்கள் இருக்க முடியாது. "பல விரும்பத்தகாத நிலைகள் ஏற்படும்",

என்று முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அவர் "State autonomy demand is vicious and mischivous" என்று எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, நியூயார்க் டைம்ஸ் பத்திரிகையில் வந்ததை கட்டுரையாகத் தொகுத்து எழுதியிருக்கிறார்கள். இதில் மறைந்து கிடக்கும் விஷயத்தை தெளிவாக எடுத்துக் கூறுகிறார்.

திருச்சியில் நடந்த சம்பவத்தை எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தமாதிரியான கோஷம் கையால் எழுதப்பட்டது ஒரு மரத்தின்மீது ஒட்டப்பட்டிருந்தது. "வங்காள தேசத்திற்கு எந்தமாதிரி விடுதலை தரப்பட்டிருக்கிறதோ அதேபோல தமிழகத்திற்கும் விடுதலை தர வேண்டும். இல்லாவிட்டால் ரத்தப் புரட்சி ஏற்படும்", என்று போஸ்டரில் எழுதியிருக்கிறார்கள். யார் இதை ஒட்டியிருக்கிறார்கள் என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருப்பவர்கள் யார் இதை ஒட்டினார்கள் என்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும்.

**திரு. கோவை செழியன்:** ஆன் எ பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவர் அவர்களே, தமிழகத்தின் மீது, தமிழக ஆட்சியின் மீது மாசு கற்பிப்பதற்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர் போஸ்டர்களை ஒட்டினார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** அது போலீஸ் விசாரணையில் இருக்கிறது. யார் ஒட்டியது என்பது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** கனம் தலைவர் அவர்களே, எல்லாக் கட்சிகளிலும் * * இருக்கிறார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இந்த மாநில சுயாட்சி ஊறு விளைவிக்கக் கூடியது என்று அவர்கள் குறிப்பிட்டார்களே, அந்த மாதிரியானவர்கள் இந்தக் காரியத்தை ஏன் செய்திருக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எப்போது அப்படிப்பட்ட வார்த்தையைச் சொன்னார்கள்? * * *

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, நான் அப்படிச் சொல்லவில்லை. I nevr used the expression * *

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் ...





**திரு. திருப்பூர் ஏ. எம். மொய்தீன்:** சமூக விரோதிகள் என்றாலும் அப்படிப்பட்ட சமூக விரோதிகள் மாற்றுக் கட்சியில் உள்ளவர்களும் எழுதி அந்தப் பழியை திராவிட முன்னேற்றக் கழகத்தினர்மீது ஏன் சுமத்தக்கூடாது ?

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** தலைவர் அவர்களே, அது வழக்கிலே இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * என்று யார் சொல்லியிருந்தாலும் அதைப் பேரவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட வேண்டும்.

**திரு. வை. பாலசுந்தரம்:** தலைவர் அவர்களே. நான் ஒருநாள் பேசும்போது போஸ்டரில் போட்ட விஷயத்தை வைத்துக் கொண்டு பேசக்கூடாது என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள். மதிப்புக்குரிய தலைவர் அவர்கள் போஸ்டர்கள் ஆதாரமானதுதான் என்று சொல்கிறார்களா ?

**திரு. கு. காமாட்சி:** போஸ்டர் அருணாசல மன்றத்திற்கு அருகில் ஒட்டப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னொரு நாளைக்கு போஸ்டரை வைத்துக்கொண்டு உறுப்பினர்கள் பேசலாம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** இப்படியெல்லாம் தமிழகத்திலே நடக்கக் கூடாது என்று கருத்து தெரிவித்தேன். இந்தமாதிரியான மாநில சுயாட்சியை கேரள மாநில முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. திரு. அச்சுதமேனன் அவர்கள் பேசியதாக இருக்கின்ற பேச்சின் ஒரு அம்சத்தை மட்டும் படிக்க விரும்புகிறேன்.

"That the slogan of internal autonomy for States is a dangerous one". என்று கேரள முதலமைச்சர் அவர்கள் கூறியதாகப் பத்திரிகையில் வந்திருக்கிறது. இது மாதிரியான கருத்துக்கள் எல்லாம் ஊறு விளைவிக்கிற கருத்துக்களாக இருக்கிற காரணத்தால் எவ்வளவு விளக்கங்கள் கொடுத்தாலும் மக்கள் மன்றத்திலே இந்தமாதிரியான எண்ணம் ஏற்படுகிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

இந்தமாதிரி மாநில சுயாட்சி வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி எல்லாம் எல்லா முதலமைச்சர்களும் கூடி ஆராய்ந்து அரசியலமைப்புச் சட்டத்தை வேண்டுமானால் திருத்திக் கொள்ளலாம். அப்படித் திருத்திக்கொள்வதற்கு வழியிருக்கிறது. அதையும் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்னொரு விஷயத்தைப்பற்றிக் கூறவேண்டுமென்று நினைக்கிறேன். இந்த ஆட்சியானது பல காரியங்களிலே 'rule by majority for majority' என்ற வகையில் இயங்குகிறது என்ற குற்றச்சாட்டைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நேற்றைய தினம் இந்த மன்றத்திலே பேசிய உறுப்பினர் எங்கள் ஜில்லாவிலே என்ன என்னவோ நல்ல காரியங்கள் செய்ததாகவும் அதை நிரூபிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் கூறினார்கள். ஏதோ தப்பித் தவறி நாங்கள் அந்தப் பகுதியிலே வெற்றிபெற்று வந்துவிட்டதால் எங்கள் பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. வேண்டுமானால் இந்த மன்றத்திலிருந்து அல்லது வெளியிலிருந்து அல்லது வேறு எந்தப் பகுதியிலிருந்தாவது ஒரு கமிட்டி போட்டு விசாரணை செய்தால் எப்படி புறக்கணிக்கப்படுகிறது என்று நிரூபிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். நானூறு கோடி ரூபாய் வரவு செலவுத் திட்டத்திலே இருக்கிறது. எங்கள் ஜில்லாவிலே என்ன செய்யப்போகிறீர்கள் என்று தேடிப் பார்த்தோம். ஒன்றும் காணோம். அரசியல் காரணத்திற்காக ஒரு ஜில்லாவையே புறக்கணிக்கக்கூடாது. நாங்கள் முன்னாலே மலையாள ஆட்சியிலே பெரும் அவதிக்குள்ளாகி மலையாளத்தின் கொடுமையின்கீழ் இருந்தோம். அதற்குப் பிறகு நாங்கள் தாய்த் தமிழகத்தோடு இணைந்தோம் . . .

திரு. ஜி. ராஜாராம் : கன்னியாகுமரி ஜில்லா காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலிருந்து புறக்கணிக்கப்படுகிறது என்பது எதிர்க் கட்சித் தலைவர் அவர்களின் குற்றச்சாட்டா ? அல்லது . . .

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கேரள அரசாங்கம் கன்னியாகுமரி ஜில்லாவைப் புறக்கணித்தது. அதற்குப் பிறகு காங்கிரஸ் அரசாங்கம் வந்தபொழுது நன்மைகளைச் செய்தார்கள். இப்பொழுது வேண்டுமென்றே வஞ்சம் தீர்த்துக் கொள்கின்ற முறையிலே. . .





திரு. ஜி. ராஜாராம் : காங்கிரஸ் ஆட்சியிலே பொன்னப்ப நாடார் அவர்கள் இதே மன்றத்தில் எங்கள் ஜில்லாவிலே ஒன்றுமே செய்யவில்லை என்ற குற்றச்சாட்டை எழுப்பியதாக எனக்கு நினைவு இருக்கிறது. ஆனால் இப்பொழுது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவு இருந்ததுபற்றி எங்களுக்கு மகிழ்ச்சி. அவர்கள் இப்பொழுது எங்கள் பக்கம் இல்லை . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 1959-ஆம் ஆண்டிலே காங்கிரஸ் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபொழுது கன்னியாகுமரி மாவட்டம் பல வகைகளிலும் புறக்கணிக்கப் படுகிறது என்ற குற்றச்சாட்டை திரு. நேசமணி உள்படப் பலர் குரல் எழுப்பி, திரு. சுவாமிநாதன் உள்பட குற்றச்சாட்டுச் சொல்லி, அதன் பிறகு கன்னியாகுமரி மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி கலைக்கப்பட்டது ஞாபகம் இருக்கிறதா ?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : எங்களுடைய மாவட்டத்திலே கமிட்டி கலைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே காங்கிரஸ் கமிட்டியோ மற்ற கமிட்டியோ கலைக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த மாவட்டத்திலே அரசியலில் இருக்கிற ஒரு நபர் என்பதாலே நான் அதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே பட்டணங்கால் திட்டம் கோதையாறு திட்டம் இவைகள் எல்லாம் எங்கள் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தின்போது நிறைவேற்றப்பட்ட திட்டங்களாகும். தொடர்ந்து ஒருசிலவை நீங்கள் செய்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகு ஒன்றும் நீங்கள் செய்யவில்லை. எங்கள் தொகுதியிலே பலவிதமான காரியங்கள் . . .

திரு. க. மு. இராசகோபால் : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். இந்த சபையிலே இல்லாத ஒருவரைப் பற்றிப் பேசக்கூடாது என்று அவர்களே சொல்லி எத்தனையோ முறைகள் இங்கே கிளப்பியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு அவர்களே சபையில் இல்லாதவரைப்பற்றிப் பேசுகிறார்களே, அது சரியா?

[1972 மார்ச் 10

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நான் அவதூறாக ஒன்றும் பேசவில்லை. அப்பொழுது முதலமைச்சராக இருந்த அவர்களின் நல்ல காரியங்களைப்பற்றித்தான் சொல்கிறேன்.

அடுத்ததாக, நான் ஒன்றை திரும்பவும் எடுத்துச் சொல்வதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். ஊழல் சம்பந்தமாகப் பல்விதமான வதந்திகள் வந்து இருக்கின்றன என்று பேசினார்கள். ஒரு ஆலோசனையை நான் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். அட்மினிஸ்ட்ரேடிவ் ரிபார்ம்ஸ் கமிட்டியின் ரிப்போர்ட்டிலிருந்து ஒரு பகுதியை நான் இங்கே எடுத்துக்கூற விரும்புகிறேன். அதிலே ஆன் ஸ்டேட் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற பகுதியிலே 72-வது பக்கத்திலே 'Redress of Public Grievances' என்ற தலைப்பிலே சாப்டர் 8-லே,

'We have in our report on "Problems of Redress of Citizens' Grievances", recommended the appointment of a Lokpal to deal with complaints against the actions of Ministers and Secretaries at the Centre as well as in the States. We have also recommended the appointment of Lokayukts at the Centre and in the States to look into the complaints against the actions of officers below the level of Secretary. . . '

என்று கூறியிருக்கிறார்கள். மேலும் ஒரு பகுதியை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். இது சம்பந்தமாக லோக் சபாவிலே ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டது. ராஜ்யசபையிலும் நிறைவேற்றி முடிந்துவிட்டது என்று சொல்லிவிட்டு இந்தக் கருத்தைச் சொல்கிறார்கள்.

" As regards the State Ministers, we reiterate our former recommendations that the Lokpal should deal with complaints against them. The recommendation receives added support from the history of the recent attempts at conducting enquiries against the State Ministers. In Bihar, the first Ministry that was formed after the General Elections of 1967, appointed a Commission of Inquiry to look into the complaints against its predecessors in office. The fear of persecution by the Ministry using the Commission of Inquiry as a weapon led to such a great controversy and mutual recrimination that ultimately it became one of the major causes for the downfall of that Ministry. "



1972 மார்ச் 10] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

இந்த மாதிரியான கருத்துக்களைக் கூறிக்கொண்டு அது எப்படி இருக்கவேண்டும் என்ற கருத்தையும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

' In contrast with this, a Lokpal appointed in consultation with the Chief Justice of India and the Leader of the Opposition in the Lok Sabha will ensure confidence in the institution and will prevent the emergence of undesirable features of public life referred to above. . . '

என்று ரிப்போர்ட்டிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரிக் குற்றச்சாட்டுகள் ஏதாவது வந்தால் எப்படி கேரள மாநிலத்திலே குற்றச்சாட்டுகள் வந்தவுடனே விசாரணை செய்தார்களோ அதேமாதிரி இங்கேயும் உருப்படியான குற்றச் சாட்டுகள் வந்தால் இந்த முறையிலே செய்வதற்கு ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது நல்ல ஆலோசனை, எல்லா மாநிலங்களும் கவனிக்கலாம். எப்படி ஸ்டேட் அட்டானமி வேண்டுமென்று கேட்கிறார்களோ அதேமாதிரி இந்த அமைப்புகளையும் நிறுவ அரசாங்கம் ஆலோசனை செய்யவேண்டுமென்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் பல காரியங்கள் இருக்கின்றன, இருந்தாலும் சுருக்கமாக ஒன்றிரண்டு காரியங்களைப்பற்றிமட்டும் சொல்லிவிட்டு முடித்துக்கொள்கிறேன். மாணவர்கள் இல்லங்களிலே பல இடங்களிலே புகுந்து தாக்கியதாக புகார்கள், தந்திகள் வந்த வண்ணமாக இருக்கின்றன. முசிரியிலே அண்ணா ஆர்ட்ஸ் காலேஜிலே மாணவர்களைத் தாக்கியதாகப் புகார் வந்திருக்கிறது. திருப்பத்தூரிலே மாணவர்களை அடித்ததாகத் தந்தி வந்திருக்கிறது. நாச்சியார் கோயிலில் மாணவர்களை அடித்தார்கள், போலீஸார் மாணவர்களை அடித்தார்கள் என்று பல புகார்கள் வந்தவண்ணமாக இருக்கின்றன. இந்த மாதிரியான காரியங்களைக் கவனிக்க அரசாங்கம் கடமைப்பட்டிருக்கிறது.

அடுத்ததாக, காரைக்குடி முனிசிபாலிடியில் நடந்த ஒரு நிகழ்ச்சியைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். 1937-ஆம் ஆண்டிலே Gokhale Municipal Library and Reading Room என்ற வகையிலே ஒரு பொதுக் கட்டடமானது திறக்கப்பட்டது.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 10

The new building was opened by the Minister for Local Administration, Mr. B. Gopala Reddi on 7th October 1937

அப்பொழுது திரு. மெய்யப்ப, செட்டியார் அவர்கள் சேர்மனாக இருந்திருக்கிறார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இவைகள் எல்லாம் காண்பிப்பதற்கு நீங்கள் முன்னாலேயே அனுமதி வாங்கியிருக்க வேண்டும். நான் கொஞ்சம் தாராளமாக உரிமைகள் வழங்குகிறேன் என்பதாலே நீங்கள் அப்படிச் செய்யக்கூடாது.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** நான் உங்களிடம் பொறுப்போடு இவைகளையெல்லாம் ஒப்படைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள். ஏராளமான பத்திரிகைகளைக் காண்பித்தீர்கள். அவ்வளவு பத்திரிகைகளைக் கூடக் காண்பித்திருக்க வேண்டியதில்லை, வேறு காகிதத்தில் எழுதி வைத்திருக்கலாம். அதேபோல் இப்படிப் போட்டோக்களைக் கொண்டுவந்து காண்பிக்க வேண்டுமென்றால் அதற்கு முன் அனுமதியைப் பெற வேண்டும். நான் அந்த அனுமதியை எற்கனவே கொடுத்துவிட்டதாகச் சொன்னேன்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவரவர்களே, அதே கட்டிடத்தில் இப்பொழுது 7-1-1972-இல் பயணிகள் இல்லம் என்று, முன்பு போட்டிருந்த கல்லை மாற்றியிருக்கிறார்கள் என்று புகார்கள் வந்திருக்கின்றன இதைப்பற்றி முதலமைச்சரவர்கள் விசாரிக்க வேண்டும். அதற்காகத்தான் நான் இதைச்சுட்டிக் காட்ட விரும்பினேன்.

அதே மாதிரி இன்னொரு விஷயத்தை என்னுடைய ஞாபகத்திலிருந்து சொல்ல விரும்புகிறேன். எஸ்டிமேட்ஸ் கமிட்டியிலே நேர் சென்றபொழுது ஆலங்காயம் என்ற இடத்தில் மருத்துவமனை இருந்தது. அதில் ஒரு பகுதியில் அதைத் திறந்து வைத்தவர். மன்றாடியார் என்று ஒரு பக்கத்திலே பொறிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு பக்கத்திலே மறைந்த அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் திறந்து வைத்தார் என்றிருக்கிறது. இப்படி ஒரே கட்டிடத்தில் இரண்டு பகுதிகளில் இப்படி இருந்தது. இம்மாதிரியான சில காரியங்கள் தவறாக நடந்துவிடுகின்றன



1972 மார்ச் 10] [திரு. ஆர். பொன்னப்ப நாடார்]

என்பதைச் சுட்டிக்காட்டத்தான் கூறுகிறேன். இம்மாதிரியான காரியங்கள் நிகழக்கூடாது, அப்படி நடப்பது நல்லதல்ல என்பதற்காகத்தான் நான் இந்தக் காரியங்களைக் கூறுகிறேன்.

கடைசியாக, கட்சி எவ்வளவுதூரம் தலையிடுகிறது என்பதற்கு நான் ஓரிரு ஆதாரங்கள் வைத்திருக்கிறேன். அதை முதலமைச்சரவர்களுக்குக் கொடுப்பதற்கு நான் கடமைப்பட்டவனாகயிருக்கிறேன். எங்கள் ஜில்லாவிலேயே நடந்த ஒரு நிகழ்ச்சி. இன்றைக்கு மிகவும் பொறுப்போடுதான் எழுதி கையெழுத்துப்போட்ட ஒரு மனு என்னுடைய கையில் இருக்கிறது. ஆகவே, இம்மாதிரியான குற்றச்சாட்டுகள் தங்கள் கட்சியிலிருக்கும் முனிசிபல் உறுப்பினராக இருக்கும் ஒரு நபர் மீது சொல்லப்பட்டிருக்கின்றன. அவர் ஏதோ உத்தியோகம் வாங்கிக் கொடுப்பதாகவும், அதிலே பணம் பெற்றுவிட்டதாகவும் புகார் சொல்லி இத்தனை ரூபாய் கொடுக்கப்பட்டது என்ற செய்தியை எனக்குத் தந்திருக்கிறார்கள். அதைப்பற்றி விசாரணை நடத்தினால் அதற்கான ஆதாரங்களையும், சாட்சியங்களையும் சொல்லத் தயாராகயிருக்கிறார்கள்.

அதேபோல் இன்னொரு விஷயம், கன்னியாகுமரி மத்திய கூட்டுறவு வங்கியில் நிதி வசூல் செய்கிறார்கள். டிக்கெட்டுகள் விற்பனை செய்கிறார்கள். சிப்பந்திகளாக இருப்பவர்கள் கட்டாயமாக 10 ரூபாய் டிக்கெட், 50 ரூபாய் டிக்கெட், 100 ரூபாய் டிக்கெட் என்று கட்டாயமாக வாங்கிக்கொண்டு பணம் கொடுக்க வேண்டும்; இல்லாவிட்டால் வேலையிலிருந்து விலக்கிவிடுவோம் என்பதற்கு ஆதாரத்தோடு என்னுடைய கையிலே அந்த டிக்கெட்டுகளையே நான் வாங்கி வைத்திருக்கிறேன். இம்மாதிரியாக ஒரு கட்சியிலே இருப்பவர்கள், அதுவும் ஆளுங்கட்சியிலே இருப்பவர்கள் உத்தியோகப்பற்று உள்ளவர்களை மிரட்டும் தன்மையைப் பார்க்கிறோம். இது பொது வாழ்க்கைக்கு நல்லது அல்ல. இதுமாதிரி நாங்கள் எதாவது செய்தால் எங்கள் மீது விசாரணை செய்து தண்டிப்பதிலே எங்களுக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. இப்படிப் பலவிதமான துன்பங்களும், கஷ்டங்களும் நடக்கின்றன. இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இன்னமும் நீடிக்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். பொன்னப்ப நாடார்] [1972 மார்ச் 10

வேலப்பன் என்பவர் லாக்கப்பில் இறந்துவிட்டார் என்று திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதையும் விசாரணை செய்ய வேண்டும். நாமக்கல் போலீஸ் ஸ்டேஷனில் நடந்தது என்று கூறினார்கள், விசாரிக்க வேண்டும். பொதுவாக தமிழகத்திலேயிருக்கும் இந்த ஆளுங்கட்சியிலே யிருக்கும் பலரும் பல தவறான காரியங்களில் ஈடுபடுகிறார்கள். கேஸ்களில் வேண்டுமென்றே தலையிடுகிறார்கள். எங்கள் ஜில்லாவிலே தலையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அதைத் தங்களுடைய கவனத்திற்கு எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, அரசியல் காரணங்களுக்காக பலரும் பழி வாங்கப்படும் தன்மை இருக்கிறது. என்னுடைய தொகுதியிலே ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே, முஞ்சலை ஊராட்சி ஒன்றியத்திலே, பல விரும்பத்தகாத காரியங்கள் நடக்கின்றன. அதற்கு யார் காரணம் என்று அங்குள்ள பொதுமக்களுக்கு நன்றாகத் தெரியும். அதைப் பற்றி இங்கே விரிவாக எடுத்துக்கூறத் தேவையில்லை என்று கருதுகிறேன். இம்மாதிரியாக அதிகாரத்திலேயிருப்பவர் களெல்லாம் பல விரும்பத்தகாத நிகழ்ச்சிகளுக்கு உறுதுணையாக இருக்கிறார்களே என்ற காரணத்திற்காக நான் வேதனைப் படுகிறேன். பொதுவாக இருக்கின்ற நிலைமையானது நல்ல நிலைமையாக இல்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து இந்த விற்பனை வரியானது எடுக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்த்தோம். 1939-க்கு முன்புவரையில் விற்பனை வரி இல்லை. ஆனால் இன்றைக்கு ரூ 104 கோடிக்கு்மேல் விற்பனை வரி இருக்கிறது. 1939-லே கூட இந்த எக்சைஸ் வரி சுருக்கமாகத்தான், 372 லட்சமாகத்தான் இருந்தது. ஆனால் இப்பொழுது அது கோடிக் கணக்கில் வளர்ந்திருக்கிறது. சாதாரணமாக குறிப்பாக ஏழை மக்கள்தான் கள் உண்டு வாழ்கிறார்கள் என்ற உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். இது எத்தனை சோஷலிசம் மலர்ந்து பூத்துக்குலுங்கும் என்று சொன்னாலும், மாநில சுயாட்சிக்கு இது ஒரு சாசனம் என்று சொன்னாலும் பொதுமக்களுக்கு உகந்த பட்ஜட் அல்ல என்று கூறி நான் அமர்கிறேன், வணக்கம்.



1972 மார்ச் 10]

*.மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கையின்மீது இதுவரையில் 54 உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து, அவர்கள் அளித்த கருத்துக்களின் அடிப்படையிலே, எழுப்பிய பல்வேறு வினாக்களின் அடிப் படையிலே, கூறியிருக்கின்ற ஐயப்பாடுகளின் அடிப்படையிலே இயன்ற அளவிற்கு என்னுடைய பதிலை இந்த மன்றத்திலே அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இங்கே பேசும்பொழுது, கொஞ்சம் கண்ணை மூடிக்கொண்டிருந்தால் ஏதோ கேரள சட்டமன்றத்தில் நாங்களெல்லாம் எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்திருக்கின்ற உணர்வும், கேரளத்தின் நிதியமைச்சர் அங்கு என்னென்ன காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள் என்கின்ற பட்டியலைத் தருகின்ற உணர்வும் ஏற்படாமல் போகாது. அந்த அளவிற்கு அவர்கள் தமிழ்நாட்டை அறவே மறந்துவிட்டு கேரளத்திலே யிருக்கின்ற அவர்களுடைய கட்சியின் கூட்டு அரசு எப்படிப்பட்ட நல்ல காரியங்களையெல்லாம் செய்திருக்கிறது என்பவைகளை யெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

நான் கேரள மாநிலத்தோடு போட்டி போட்டு இந்த மாநிலம் முற்போக்கான திட்டங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறது என்றெல்லாம் வம்புக்கு நிற்க விரும்பவில்லை. கேரளம் அவர்கள் கூறியதைப்போல் அந்த அளவிற்கு முற்போக்கான நிலைக்குச் சென்றிருக்குமேயானால் நாமும் அந்த அளவிற்கு, நியாயமான முற்போக்கான நிலைமைகளுக்குச் செல்ல வேண்டும் என்கின்ற உணர்ச்சியைப் பெறுவதில் எந்தவிதமான தவறும் இல்லை. ஆகவே தான் கேரளத்தை அவர்கள் பல்வேறு நிலைகளிலே எடுத்துக் காட்டுக்குப் பயன்படுத்திய நேரத்தில் அதைப்போல் நம்முடைய தமிழகமும் முன்னேற்றம் பெற வேண்டும் என்கின்ற அந்தக் கருத்துக்களின் அடிப்படையில்தான் பேசியிருப்பார்கள் என்றே நான் கருதுகிறேன்.

ஆனால் ஒன்றை மறந்துவிடக்கூடாது. அவர்களே இங்கு எடுத்துக்கூறியதைப்போன்று இப்பொழுது இருக்கின்ற கேரள அரசு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இயங்கும் அரசு.

அதற்கு முன்பு இருந்த அரசு இன்னும் தீவிரமான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலே இருந்த அரசு. பல நேரங்களில் கேரள மாநிலத்தின் அரசியலில் பிற்போக்கு சக்திகள் வீழ்த்தப்பட்டு முற்போக்கு எண்ணம் கொண்டவர்கள் தொடர்ந்தோ அல்லது இடையிடையே தொய்வு ஏற்பட்டாலும் மீண்டும் ஆட்சி பீடத்திலே அமர்ந்து பரிபாலனம் செய்த காரணத்தால் முற்போக்கு விதைகளை கேரளம் போன்ற மண்ணிலே ஊன்றுவது என்பது சுலபமான காரியமாகும்.

ஆனால் நம்முடைய தமிழ் மாநிலத்தைப் பொறுத்தவரையில் கடந்த நான்கைந்து ஆண்டு காலமாகத்தான் நாம் அந்த முயற்சியிலே வேகமாக ஈடுபட்டு வருகிறோம். நான் இதைச் சொல்லுகின்ற காரணத்தால், இதற்கு முன்பிருந்த காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில் முற்போக்கு எண்ணம் தலைகாட்டவே இல்லை என்று நான் கூற மாட்டேன். தலை காட்டி, தலைகாட்டி மீண்டும் அது தன்னுடைய தலையை மறைத்துக் கொண்டது என்பதை நாம் யாரும் மறுத்திட இயலாது.

இன்றைய நிதிநிலை அறிக்கை விவாதத்திலே பொருளாதார சூழ்நிலைகள் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்தில் நிதி ஆதாரங்களைப்பற்றிப் பல கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. மாநிலத்தின் இன்றைய வருமானம் 397 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்திருப்பது சுட்டிக் காட்டப் பட்டு அந்த அளவிற்கு நாம் வரியைப் போட்டுவிட்டோம் என்றெல்லாம் இந்த மன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் சிலர் பேசினார்கள்.

இந்த மன்றத்தில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்குத் தலைவராக இருக்கின்ற மதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் கூட வெளி மேடைகளில் பேசுகின்ற நேரத்தில் '200 கோடி ரூபாய்களுக்கு வரியைப் போட்டு அந்த வரிப் பணத்தை எல்லாம் என்ன செய்தார்கள் என்றே தெரியவில்லை; மந்திரிகளின் பாக்கெட்டுக்கு அது போய்விட்டதா' என்கின்ற ஒரு கேள்வியைக் கூட எழுப்பினார்கள். நான் அவைகளை எல்லாம் மிகுந்த வருத்தத் தோடு உற்று நோக்குகின்றேன்.

ஏனென்றால் ஒரு அரசாங்க நிர்வாகத்திலே எட்டாண்டு காலத்திற்கு மேலாக முதலமைச்சர் பொறுப்பை வகித்த பெருமைக்குரிய தலைவர் காமராஜர் அவர்கள். வருகின்ற பணம்





எழுப்பினார்கள். நான் அவைகளை எல்லாம் மிகுந்த வருத்தத்தோடு உற்று நோக்குகின்றேன்.

ஏனென்றால் ஒரு அரசாங்க நிர்வாகத்திலே எட்டாண்டு காலத்திற்கு மேலாக முதலமைச்சர் பொறுப்பை வகித்த பெருமைக்குரிய தலைவர் காமராஜர் அவர்கள். வருகின்ற பணம் யார் மூலமாகச் செலவழிக்கப்படுகிறது; அமைச்சர்களுக்குச் செக்கில் கையெழுத்துப் போடும் அதிகாரமாவது உண்டா; எப்படிப்பட்ட நிர்வாகம் அரசாங்கத்தில் இருக்கிறது; நிதி இலாகா என்ன வேலையைச் செய்கிறது என்ற இவைகளை எல்லாம் காமராஜர் அவர்கள் உணர்ந்தார்கள். அவர்கள் சட்டசபையில் வாய் திறந்து பேசாமல் இருந்தார்கள் என்றாலும், நிர்வாகத்திலே நல்ல அனுபவமும், ஆற்றலும் வாய்ந்தவர்கள் என்பதை நான் என்றைக்கும் மறுக்கத் தயாராக இல்லை. அப்படிப்பட்டவர்களுக்கு வசூலிக்கப்படுகின்ற வரிப்பணம் எல்லாம் மந்திரிகளுடைய பாக்கெட்டுக்குப் போகிறதா என்ற கேள்வியைக் கேட்கக்கூடிய எண்ணம் ஏற்பட்டது உள்ளபடியே எனக்கு ஆச்சரியத்தையும், வேதனையையுந்தான் உண்டாக்கியது.

1967-ல் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 200 கோடி ரூபாய்க்கு வரிபோட்டுத் தள்ளுகிறேன் என்று அவர்கள் அறிவித்து, அண்ணா அவர்கள் அறிவித்த அந்த திட்டத்தை இந்த அரசு முனைந்து நிறைவேற்ற 200 கோடி ரூபாய்க்கு வரி போட்டிருக்கிறோம் என்று யாரும் தயவு செய்து எண்ணிவிடக் கூடாது.

இன்றைக்கு மாநிலத்திற்கு வரிகளின் மூலம் கிடைக்கும் வருமானம் 210 கோடி ரூபாய். வரிகளின் மூலம் கிடைக்கின்ற வருமானம் 210 கோடி ரூபாய் என்றால் அந்த 210 கோடி ரூபாய்க்கான வரிகளை இப்போது இந்த அரசு போட்டது என்று யாரும் தவறாக எண்ணிடக் கூடாது. 397 கோடி ரூபாய் வருமானத்தில் 210 கோடி ரூபாய் இன்றைக்கு ஸ்டேட் டாக்ஸ் மூலமாகக் கிடைக்கிறது என்றால் சென்ட்ரல் டாக்ஸ் ஷேர் 75 கோடி ரூபாய் நமக்குக் கிடைக்கிறது; கிராண்ட்ஸ் இன் எய்டு ஃப்ரம் கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா 33 கோடி ரூபாய் அளவுக்குக் கிடைக்கிறது; நான்-டாக்ஸ் ரெவின்யூ 78 கோடி ரூபாய் அளவுக்குக் கிடைக்கிறது. ஆக, மற்ற வருமானங்கள்

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 10

கிட்டத்தட்ட 400 கோடி ரூபாயில் 50 சதவிகிதம்; வரி வருமானம் 50 சதவிகிதம் என்ற நிலைமையில்தான் இன்றைக்கு மாநிலத்தினுடைய வருமானம் இருக்கிறது.

1956-57-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து கணக்கினைப் பார்த்தால் அதே அளவில்தான் இந்த சதவிகிதம் வளர்ந்து கொண்டு வருகிறது. 1956-57-ம் ஆண்டு 56.23 கோடி ரூபாய் வருமானம் என்று வைத்துக்கொண்டால் அதிலே ஸ்டேட் டாக்ஸஸ் 30.34 கோடி ரூபாய். 7.21 கோடி ரூபாய் ஷேர் ஆஃப் சென்ட்ரல் டாக்ஸஸ். கிராண்ட்-இன் எய்டு ஃப்ரம் கவர்ன்மென்ட் ஆஃப் இந்தியா 4.88 கோடி ரூபாய்; நான்-டாக்ஸ் ரெவின்யு 13.80 கோடி ரூபாய் என்ற அளவுக்கு அப்போது கிடைத்திருக்கிறது. அப்போதும் இதர வருமானங்கள் என்ற அளவிலும், வரிகள் என்ற அளவிலும் 50 சதவிகிதம், 50 சதவிகிதம் என்ற அந்தக் கணக்குத்தான் இருந்திருக்கிறது.

அதற்குப் பிறகு 1961-62-ல் 43 கோடி ரூபாய் அளவில் வரி மூலம் வருமானம் ஆயிற்று; 1966-67-ல் அது 95.84 கோடி ரூபாய் ஆயிற்று; 1971-72-ல் அது 163 கோடி ரூபாய் ஆயிற்று; 1972-73-ல் அது 210 கோடி ரூபாய் ஆயிற்று. இதிலே 210 கோடி ரூபாயில் 35 கோடி ரூபாய் அளவுக்கு மதுவிலக்கை ரத்து செய்ததன் மூலமாக கிடைக்கின்ற வருமானத்தையும் நாம் மறந்துவிடக் கூடாது. 1961-க்கும் 1966-67-க்கும் இடையில் 43 கோடி ரூபாய் என்று இருந்த மாநிலத்தினுடைய வரி வருமானம் 95 கோடி ரூபாயாக ஆகி இருக்கிறது என்றால் 2.2 மடங்கு அதிகமாகியிருக்கிறது. அதைப் போலதான் 95 கோடி ரூபாயிலிருந்து இன்றைக்கு 200 கோடி ரூபாய் அளவுக்கு மாநில வரி வருமானம் ஆறு ஆண்டு காலத்தில்---முதலில் ஐந்து ஆண்டு காலம் என்று சொன்னேன்—2.2 மடங்குதான் உயர்ந்திருக்கிறது. இப்படி நாம் பெறுகிற வருமானத்தைக் கணக்கிடுகிற நோக்கில் அது பாக்கெட்டுக்குப் போய்விடவில்லை, பயனுள்ள பல திட்டங்களை நாம் நிறைவேற்றி வருகிறோம் என்பதற்கு நிதிநிலை அறிக்கையில் நான் பல்வேறு திட்டங்களைத் தொகுத்து அளித்திருக்கிறேன்.

வரிகளை அதிகப்படுத்தியிருக்கிறோம், வரி விலக்கே செய்யவில்லை, செய்யவில்லை என்று குறை கூறப்பட்டது. வரிகளிலே கூட விற்பனை வரியைப் பொறுத்தவரையில் வியாபாரிகளுக்கு, சிறு



1972 மார்ச் 10] [டாக்டர் மு கருணாநிதி]

வியாபாரிகளுக்கு நாம் அளித்திருக்கும் சலுகைகள் ஏராளம் என்பதை இந்த மாமன்றம் நிச்சயமாக அறியும். முன்பு பத்தாயிரம் ரூபாய்க்குக் கீழ் விற்பனை செய்கிற வியாபாரிகளுக்குத்தான் விற்பனை வரி கட்ட வேண்டியதில்லை என்ற சலுகை இருந்தது. 1967-ல் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு அந்த பத்தாயிரம் ரூபாய் என்பதை மாற்றி, பதினைந்தாயிரம் ரூபாய் வரை விற்பனை செய்கின்றவர்கள் விற்பனை வரி கட்டத் தேவையில்லை என்று மாற்றப்பட்டது. சென்ற ஆண்டு அந்தச் சலுகை பதினைந்தாயிரம் ரூபாயிலிருந்து இருபத்தி ஐயாயிரம் ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டிருக்கிறது.

சாதாரண வியாபாரிகளுக்கு விற்பனை வரிச் சலுகை என்பது மட்டுமல்லாது, கம்பவுண்டிங் முறையில் விற்பனை வரி செலுத்துகிறவர்களுக்கு 75,000 ரூபாய் என்று இருந்த வரம்பை ஒரு லட்சம் ரூபாய் வரை என்று அந்த வரம்பு நீட்டிக்கப்பட்டிருக்கிறது என்பதையெல்லாம் இந்த அவை தெளிவாக உணரும்.

விற்பனை வரியின் மீது போடப்பட்ட உபரி வரிகூட யாருக்குப் போடப்பட்டது என்றால், ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் டர்ன் ஓவர் என்ற அளவில் விற்பனை செய்கிற அந்த வியாபாரிகளுக்குத்தான் விற்பனை வரி மீது வரி போடப்பட்டதே அல்லாமல் வேறல்ல மூன்று சதவிகிதமாக இருந்த விற்பனை வரியை மூன்றரைச் சதவிகிதமாக்கினோம் என்று பல முறை குறைபட்டுப் பேசப்பட்டது. சென்ற ஆண்டு 'வரி போடாமல் என்ன செய்வார்கள்? திட்டங்களை நிறைவேற்ற வேண்டாமா?' என்று பெரியவர் மணலி அவர்கள் பேசி, அதற்குப் பிறகு பேசிய திரு. தங்கமணி அவர்கள் 'என்னதான் மணலி பேசினாலும். 3 சதவிகிதம் என்று இருந்த வரியை 3½ சதவிகிதம் என்று ஆக்கியது அக்கிரமம், அநியாயம், இதைப் பொறுத்துக் கொள்ள முடியாது' என்று பேசினார்கள். அவர்கள் கேரளத்தைப் பற்றி இங்கு பேசியதற்காக ஞாபகமூட்ட விரும்புகிறேன்—அங்கு இந்த ஆண்டு 3 சதவிகிதமாக இருந்தது 3½ சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது என்ற தகவலைத் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கு எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (குறுக்கீடு) அவர்களுக்குத் தெரியும் என்று சொல்லுகிறார்கள். எனக்குத் தெரியாத விஷயங்களைத்தான் சொன்னார்கள் இதுவரையில்---அவர்களுக்குத் தெரிந்த

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 10

விஷயங்களையெல்லாம் என்னிடத்தில் சொல்லவில்லை. அவர்கள் போற்றிப் புகழ்ந்த கேரளத்தில் 3 சதவிகிதம் என்ற விற்பனை வரி 3½ சதவிகிதமாக ஆக்கப்பட்டிருக்கிறது.

மின்சாரக் கட்டணத்தைப் பற்றி காங்கிரஸ் கட்சியின் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இங்கு 1.2 பைசாதான் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. 10.8 பைசா என்று இருந்தது 12 பைசா அளவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது. எல்லா மாநிலங்களையும்விட இந்த 12 பைசா குறைவானது என்பதற்கு பல்வேறு நிலைகளில் ஆதாரங்கள் எடுத்துத் தரப்பட்டிருக்கின்றன. இது ஆந்திரத்தை விடக் குறைவு; மைசூரை விடக் குறைவு. வடக்கேயிருக்கிற பல்வேறு மாநிலங்களிலே இருப்பதை விடக் குறைவு என்று எடுத்துக் காட்டப்பட்ட போதெல்லாம் கேரளாவை விடக் கொஞ்சம் அதிகம் தானே என்று சுட்டிக் காட்டப்பட்டது. இப்போது கேரளத்திலும் அதை அதிகப்படுத்துவதற்கான திட்டத்தை உருவாக்கும் அறிவிப்பு நிதிநிலை அறிக்கையில் செய்யப்பட்டிருக்கிறது என்பதைக் கேரளத்தின் பேரில் மிகுந்த அன்பு கொண்டவர்களுக்கு, கேரளத்தைச் சுட்டிக் காட்டி இடித்து உரைத்தவர்களுக்கு சமர்ப்பிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்,

விற்பனை வரியிலும் பல்வேறு விதமான சலுகைகளை அளித்து வரி விலக்குகளைச் செய்திருக்கிறோம். குறிப்பாக, 110-க்கு மேற்பட்ட பொருள்களுக்கு கடந்த நாலைந்து ஆண்டு காலத்தில் விற்பனை வரியிலிருந்து ரத்து செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், கூடைகள், பாய்களுக்கு விற்பனை வரி கிடையாது; உப்புக்கு விற்பனை வரி கிடையாது; தேங்காய் கொள்முதல், வேளாண்மைக் கருவிகள் அரிசி மாவு, நொய், சோளம், கம்பு, கேழ்வரகு, மைலோ, மக்காச் சோளம், தவிடு ஆகியவற்றுக்கு விற்பனை வரி கிடையாது. தென்னை நார், தென்னை நார்ப் பொருள்கள், கதர்-பருத்தி உடைகள் இப்படி நூற்றுக்கு மேற்பட்ட பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப் பட்டிருக்கிறது. விற்பனை வரி ரத்து செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1972 மார்ச் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

அதுமாத்திரமல்ல நகர்ப்புறங்களில் ஒரு கிரவுண்டு, ஒரு கிரவுண்டுக்குக் கீழ் உள்ள மனைதாரர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. புஞ்சைக்கு முழுவதும், நஞ்சைக்கு ஐந்து ஏக்கர் வரையிலும் அடிப்படை நிலவரி ரத்து செய்யப் பட்டிருக்கிறது. வரி வருமானம் 210 கோடி ரூபாய் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்ற காரணத்தால் நாங்கள் வரியை விதித்து விட்டோம் என்று சொல்லுவது சரியாகாது.

திரு. தங்கமணி அவர்கள் கூட போட்டிருக்கிற வரிகளைச் சொல்கிறேன், கேளுங்கள் என்று ஒரு பட்டியலைப் படிக்கும் பாவனையில் பேச ஆரம்பித்து ஒன்று, இரண்டு, மூன்று என்று விரல்விட்டுக் காட்டினார்கள். அவை,

ஒன்று, குதிரைப் பந்தயத்திற்கு போடப்பட்டுள்ள வரி. அதைப் பற்றி விமர்சனம் செய்யவில்லை.

இரண்டாவதாக, மோட்டார் வாகனங்களுக்குப் போட்ட வரி. அதைப் பற்றியும் அவர்கள் அதிகமாகச் சொல்லவில்லை.

மூன்றாவதாக கிராமப்புறங்களில் உள்ள யூனியன்களுக்கு ரூ. 1.50 என்று இருக்கக்கூடிய செஸ்ஸை ரூ. 2.50 வரையில் வசூலித்துக்கொள்ளலாம் என்பது. அது ஒரு வரி விதிப்பல்ல. அனுமதிக்கப்பட்டிருக்கிறது. வேண்டுமானால் அவர்கள் போட்டுக் கொள்ளலாம். அதுவும் கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக. அரசு 1,500 மக்கள் வாழ்கிற இடங்களுக்கெல்லாம் அக்கிராமங்கள் எல்லாம் முக்கிய சாலைகள் வழி செல்கிற அந்தச் சாலைகளோடு இணைக்கக்கூடிய ஒரு பெரிய திட்டத்தை எடுத்துக்கொண்டு அதை நிறைவேற்றும்போது மோட்டார் வாகனங்கள் மீது 10 சதவிகிதம் வரி விதித்திருப்பது தவறு அல்ல.

திருமதி அனந்தநாயகி அவர்கள் கூட மிகவும் உருக்கமாகச் சொன்னார்கள். எடுத்ததற்கெல்லாம் இந்த மோட்டார்காரன்தானா உங்களுக்கு கிடைத்தான், பஸ்காரன்தானா உங்களுக்குக் கிடைத்தான், அவர்கள்மீது உங்களுக்கு ரொம்ப நாட்களாகவே ஆத்திரம் என்று சொன்னதிலிருந்து அவர்களுக்கு ரொம்ப நாட்களாகவே அவர்களிடம் அன்பு இருக்கிறது என்பது மறைமுகமாகத் தெரிந்தது. (ஆரவாரம்) ரொம்ப நாட்களாக

ஆத்திரம் என்று சொன்னார்கள். நாலைந்து தினங்களுக்கு முன்பு அவர்கள் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. இராமச்சந்திரன் அவர்களிடம் சில கேள்விகள் கேட்கும்போது சொன்னார்கள் "மூன்று பைசா என்று ஏன் ஆக்கியிருக்கிறார்கள் ? 2½ பைசாவாக இருந்தபோதே பஸ் முதலாளிகளுக்கு பெருத்த, ஏராளமான லாபம் கிடைத்து வந்ததே. ஆகவே ஏன் அதை மூன்று பைசாவாக ஆக்கவேண்டுமென்று" கேட்டார்கள். அவர்களின் கேள்வியின் அடிப்படை வாதத்தை நான் அப்படியே ஏற்றுக்கொண்டு 2½ பைசா என்றிருந்தபோதே அதிகம் லாபம் சம்பாதித்தார்களே இப்போது அதை ஏன் மூன்று பைசா என்று அனுமதித்தீர்கள் என்றார்கள். அதற்காகத்தானே லாபம் சம்பாதிப்பவர்கள் 10 சதவிகிதம் மோட்டார் வாகன வரி கொடுத்தால் என்ன என்று அவர்கள் கேட்ட கேள்விக்கு வாதமாகச் சொல்கிறேனே தவிர என்னைப் பொறுத்தவரையில் . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I mentioned not only buses but I particularly mentioned about lorries and private cars அதற்குத்தான் கேட்டேன். டக் என்று பஸ்ஸுக்குத் திரும்புவது நியாயம் அல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தங்கள் கருணையிலிருந்து பஸ்கள் தப்பித்ததற்கு மகிழ்ச்சி. (சிரிப்பு)

அதேபோல் எப்படி யூனியன்களில் 1,500 பேர்கள் இருக்கிற இடங்களை எல்லாம் முக்கிய சாலைகளுடன் இணைக்கக்கூடிய திட்டத்திற்கு, அதற்குத் தேவையான கிராமச் சாலை வளர்ச்சி நிதி என்ற ஒன்றை உருவாக்கி அதற்கு அந்த வரியைப் பயன் படுத்துகிற வகையில் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே யூனியன்களுக்கு கட்டுப்பட்டிருக்கின்ற ஒன்றியங்களின் பல கிராமங்களில் இன்றைக்கும் எவ்வளவோ குறைபாடுகள் இருக் கின்றன. நாம் சுதந்திரம் பெற்ற பிறகு இன்றைக்கும் கூட சாதாரண கிராமங்களில் உள்ள ஹரிஜன மக்கள் தாங்கள் நடந்து செல்வதற்கு சரியான பாதைகள் இல்லை என்பதுமட்டுமல்ல. இறந்தபிறகு கூட அந்தப் பிணத்தை எடுத்துச் செல்வதற்கு, இடுகாட்டிற்குச் செல்வதற்கு வழி இல்லாத நிலை இன்றைக்கும் இருக்கிறது. அவர்கள் அந்தப் பிணங்களைத் தூக்கிக் கொண்டு





நடப்பட்டிருக்கின்ற கழனிகளின் வழியாகச் செல்கின்ற காட்சி களைப் பல இடங்களில் இன்றும் நாம் பார்த்துக்கொண்டிருக் கிறோம், ஒற்றையடிப் பாதையில் நான்கு பேர்கள் தலையில் பிணத்தைத் தூக்கிக்கொண்டு செல்ல, சருக்கி விழுந்து பிணமும் வயலில் விழுந்துவிடும் கோரக் காட்சிகள் எல்லாம் இன்றைக்கும் தமிழ் நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற கோரக் காட்சிகளாக இருக்கின்றன. ஆகவேதான் அந்த இடங்கள் எல்லாம் சீர் பெற வேண்டும், செம்மை பெறவேண்டும் எல்லாக் கிராமப் புறங்களிலும் இணைப்புச் சாலைகள் வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இப்படிப்பட்ட வசதி களை நாம் உடனடியாகச் செய்து தரவேண்டும் என்பதற்காகத் தான் ஒன்றியங்களுக்கு ரூ. 1.50-ல் இருந்து ரூ. 2.50 வரையில் உயர்த்திக் கொள்வதற்கு அனுமதி வழங்கியிருக்கிறோமே அல்லாமல், அவர்கள் சொன்னதுபோல், இந்து பத்திரிகையில் எழுதியிருந்தாலும், வேறு எந்தப் பத்திரிகையில் எழுதியிருந் தாலும் அல்லது குறை கூறியிருந்தாலும், இரண்டரை ரூபாய் வரி விதித்துவிடவில்லை, அதற்கான அனுமதி வழங்கியிருக்கிறோம். அதுகூட காமராஜ் அவர்கள் சொன்னதைப் பார்த்து அவரது அறிவுரையை ஏற்றுத் தான் இதைச் செய்திருக்கிறோம். எப்படி என்றால் மாயவரத்தில் மதிப்பிற்குரிய திரு. காமராஜ் அவர்கள் பேசும்போது ஒன்று சொன்னார்கள், நகராட்சி வரவேற்பில் பேசும்போது. "இவர்கள் மாநிலச் சுயாட்சி கேட்கிறார்களே, கிராமங்களுக்கு சுயாட்சி கொடுத்தார்களா ? கிராமங்களில் இன்று பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரி போடுகிற அதிகாரத்தைக் கூட இவர்கள் கொடுக்கவில்லையே, வரியை விரிவாக்கிக் கொள்கிற அதிகாரத்தைக் கூட கொடுக்கவில்லையே" என்று சொன்னார்கள். அவர் பெரிய தலைவர், அவ்வளவு பெரிய தலைவரின் மனக்குறையைத் தீர்க்க அந்த அதிகாரத்தை அவர்களுக்குக் கொடுக்கவேண்டும் என்பதற் காகத்தான் இந்த வரி போடும் அதிகாரத்தைக் கொடுத் திருக்கிறோமே அல்லாமல், அது வரி அல்ல. (ஆரவாரம்)

அதேபோல் 200 கோடி ரூபாய், தொடக்கத்தில் நான் எடுத்துக் காட்டியது போல், வரிகள் மூலம் கிடைத்திருக்கிற வருமானம்— மீண்டும் மீண்டும் சொல்கிறேன், புதிதாகப் போட்ட வரிகளினால் அல்ல. அப்படி புதிய வரிகளினால் 30 அல்லது 40 கோடி

உயர்ந்திருக்கலாம். மதுவிலக்கை ரத்து செய்த காரணத்தினால் ரூ. 35 கோடி உயர்ந்திருக்கலாம். மற்ற வரிகள் எல்லாம் நாட்டிலே வாணிப வளர்ச்சியையும், தொழில் பெருக்கத்தையும், சமுதாயத்தில் ஏற்பட்டிருக்கிற மாற்றங்களையும் அடிப்படையாக வைத்து உயர்ந்திருக்கிற வருமானம் என்பதை மறந்துவிடக் கூடாது. அதோடு அதிகாரிகள் ஒழுங்காக வரி வசூல் செய்கிறார்கள் என்பதையும் இது பொறுத்திருக்கிறது என்பதையும் மறந்து விடக் கூடாது. உபரி பட்ஜெட் போட்டுவிட்டு, வரி போடலாமா என்று கேட்டிருக்கிறார்கள். அவ்வரிகள் எல்லாம் எத்தன்மை வாய்ந்தவை, யார் யாரை பாதிக்கக் கூடியவை என்பதைப்பற்றி ஏற்கெனவே நான் கூறிவிட்ட காரணத்தினால், மீண்டும் அவைகளை விளக்க முடியாமல் இருக்கிறேன். ஆனால் உபரி என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். உபரி என்றால் அது ரெவின்யூக் கணக்கில் ஏற்பட்டிருக்கிற உபரிதான். அதை நன்கு ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்.

கே. எம். சுப்பிரமண்யம் அவர்கள் கூட உபரி பட்ஜெட்டைப் போடுவது என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்திற்கு உகந்ததல்ல, நாம் துண்டு விழுகிற பட்ஜட்டைப் போட்டு திட்டங்களை அதிகமாகப் போட்டிருக்கிறோம் என்று காட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் கருத்துக்கு நான் மறுப்பளிப்பவன் அல்ல. ரெவின்யூக் கணக்கில் இன்று உபரி ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னால் 60-66 கோடி இன்று மத்திய அரசோடு நாம் பேசி செம்மைப்படுத்திக்கொண்ட வகையில், நம் திட்டங்கள் தடைபடக்கூடாது என்பதற்காக எதிர்பார்த்து நாம் பணத்தைச் செலவழித்திருக்கிறோம். ஆகவே உபரி என்று கூறுவது ரெவின்யூக் கணக்கில் ஏற்பட்டிருக்கிற ஒன்று என்பதை இந்த அவைக்கு மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

வரிகளைப் போட்டீர்களே, வசதிகளைப் பெருக்கினீர்களா என்று இந்த விவாதத்தைத் துவக்கி வைத்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுவாமிதாஸ் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்பினார்கள். இந்த விவாதத்தில் ஒரு வேடிக்கை விவாதம் குமரியில் எழுந்து குமரியிலேயே முடிந்திருக்கிறது. நான் குமரன் பேசிக்கொண்டிருக்கிறேன். (ஆரவாரம்) குமரி முனையில் இந்த விவாதம் எழுந்து நமது பொன்னப்ப நாடார்



அவர்கள் இந்த விவாதத்தின் இறுதியில் எதிர்க் கட்சித் தலைவர் என்ற வகையில் முடித்து வைத்திருக்கிறார்கள். நான் வரிகளைப் போடவில்லை, வரிகளைப் பெருக்கவில்லை என்பதற்கான ஆதாரங்களை எடுத்துக் காட்டினேன். எப்படி வரி வருமானம் அதிகப் பட்டிருக்கிறது என்பதற்கான ஆதாரங்களை எடுத்துச் சொன்னேன். ஆனால், வசதிகள் பெருகவில்லையே என்று கூறினார்கள். நான் இந்த நிதிநிலை அறிக்கையில் தந்திருக்கிற பட்டியலைக்கூட, ஒரே வரியில் தங்கமணி அவர்கள் சொல்லிவிட்டு "பார், பார், கேரளத்தை, அங்கு 27 நல்ல காரியங்கள் செய்யப் பட்டிருக்கின்றன, அவை ஆங்கிலப் பத்திரிகைகளில் எல்லாம் வந்திருக்கின்றன" என்று எடுத்துக் கூறினார்கள். இங்கு நம் சக்தியனுசாரப்படி எவ்வளவு முடியுமோ அதை அண்ணா அவர்கள் உருவாக்கிய இந்த அரசு சார்பில், எந்த தாழ்த்தப்பட்ட மக்கள். பிற்படுத்தப்பட்ட மக்கள், நடுத்தர மக்கள் இவர்கள் வாழ்க்கையில் நல்ல வளம் பெறவேண்டுமென்று கருதினார்களோ அந்த வகையில் இந்த நாலைந்து ஆண்டுகளாக நாங்கள் பணியாற்றி வருகிறோம்.

பிற்பட்டோர் நலனுக்காக பின்தங்கியோர் நலக் குழு அமைப்பதற்கு முன்பு, இங்கு 1966-ம் ஆண்டு வரையில் அவர்களுக்காகச் சில சலுகைகள் வழங்கப்பட்ட முறையில் ஒதுக்கப்பட்ட தொகை 91 லட்சம் ரூபாய் என்றால் இன்றையதினம் அந்த மக்களுக்காக இந்த ஆண்டு செலவழிக்கப்பட இருக்கிற தொகை 4.68 கோடி ரூபாய் என்பதை நாம் பார்க்கும்போது நாம் அவர்களுக்காகப் பணியாற்றுகிறோமா இல்லையா என்பதற்கான விடை கிடைக்கும். பரவலாக இந்தத் தொகை எல்லோருக்கும் போய்ச் சேரவில்லையே என்று திரு. மாரிமுத்து அவர்கள் குறைப்பட்டுக் கொண்டார்கள். சில இடங்களில் பாராட்டினார்கள், ஒவ்வொரு பாராட்டுக்கும் இடையே ஒரு "ஆனால்" எழுந்து "பாராட்டுகிறேன். ஆனால்", 'பாராட்டுகிறேன், ஆனால்' என்று "ஆனால்" வந்து விழுந்துகொண்டே இருந்தது. பரவலாக இது பயன்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். நான்கு கோடி ரூபாய் பின்தங்கிய மக்களுக்காகச் செலவழிக்கப்படுகிறது என்றால் எந்த முற்போக்கு சமுதாயத்தைச் சேர்ந்தவரும் இந்தப் பணத்தை அவர்களுடைய சௌகரியங்களுக்காகத் தட்டிப் பறித்துக்கொண்டு போய்விடவே முடியாது.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 10

அதேபோல் ஹரிஜன மக்களுக்காக 1966-67-ல் ரூ. 3.59 கோடி செலவழிக்கப்பட்டதற்கு மாறாக இன்று ரூ. 8.41 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வருமானமும் பெருகியிருக்கிறது, அதே நேரத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக, ஹரிஜனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி ஒதுக்கமும் பெருகியிருக்கிறது. எதையும் நாம் விட்டுவிடவில்லை.

கிராமப்புறங்களை இணைக்கிற வகையில் ஆயிரம் மைல் நீளத்திற்குப் பேருந்துகள் செல்கிற சாலைகளை அரசாங்கம் மேற்கொள்வது என்று இந்த ஆண்டு முடிவு செய்திருக்கிறோம். கல்விக்காக 1966-67-ல் ரூ. 43.85 கோடி செலவிட்டதற்குப் பதிலாக 1972-73-க்கு ரூ. 89.85 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெள்ளைக்காரன் காலத்தில் இருந்து 1966-67 வரை தமிழகத்தில் இருந்த கலைக்கல்லூரிகளின் மொத்த எண்ணிக்கை 105. அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கின்ற கலைக் கல்லூரிகள் மாத்திரம் 64. இந்த 4-5 ஆண்டுகளில் 64 கல்லூரிகள் தோன்றியிருக்கின்றன. ஆக, இப்போது 169 கலைக்கல்லூரிகள் இருக்கின்றன. அதைப்போலவே, 1966-67 வரை இருந்த உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2,372. இந்த 4-5 ஆண்டு காலத்தில் 341 உயர்நிலைப் பள்ளிகள் புதிதாகத் திறக்கப்பட்டிருக்கின்றன. சென்னை நகரத்தில் மாத்திரம் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடிசைப்பகுதிகள் இருப்பதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். 1967ஆம் ஆண்டு வரை சென்னை நகரம், தமிழகத்தில் வேறு சில பகுதிகளும் சேர்ந்து 4,155 குடியிருப்புகள் தான் அந்த மக்களுக்காக, குடிசை வாழ் மக்களுக்காகக் கட்டப்பட்டன. 1967-லிருந்து 1971 வரையில் 7,722 குடியிருப்புகள் கட்டப்பட்டன. அவைகளன்னியில். 2.300 தீப்பிடிக்காத வீடுகளும் அவர்களுக்காகக் கட்டப்பட்டன, 1971-72-ல் மாத்திரம் 7,700 குடியிருப்புகள் மேலும் கட்டமுடியும். எனவே. 1967 வரை 4,155 குடியிருப்புகள் இருந்தன என்பதற்கு மாறாக, 1967-லிருந்து 1972-க்குள் 17,000 குடியிருப்புகள் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவத் துறையிலும், மக்கள் நல்வாழ்வுத் துறையிலும் முன்பு செலவழித்ததைவிட இப்போது அதிகப் பணம் செலவழிக்கிறோம் என்பதற்கான ஆதாரங்கள் பலவற்றை நிதிநிலை அறிக்கையிலே எடுத்துக் காட்டியிருக்கிறேன்.



1972 மார்ச் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

அரசு ஊழியர்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று சொன்னார்கள். அவர்களுடைய கோரிக்கைகளைப் படிப்படியாக நிறைவேற்றி வந்தும் கூட, இப்போதும் தந்திருக்கின்ற கோரிக்கைகளை ஆராய்வதற்காக, முரண்பாடுகளைக் களைவதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் எடுப்பதற்காக, சேலம் மாநாட்டில் வைத்த அவர்களுடைய கோரிக்கைகளை ஆராய்வதற்காக, தலைமைச் செயலாளரைத் தலைமையாகக்கொண்டு ஒரு குழு அமைக்கப்பட்டு, ஆலோசனைக் குழுவில் அரசு ஊழியர்களுக்கு, அரசு அலுவலர்களுக்கு, ஆசிரியர்களுக்கு எல்லாம் இடம் அளிக்கப்பட்டபிறகும் அன்றைக்குப் பேசிய அம்மையார் அவர்கள் சொன்னார்கள், என்.ஜி.ஓ.வோக்களைக் கவனிக்கவில்லை, அவர்களுக்கு எதுவுமே செய்யவில்லை என்று. இரகசியக் குறிப்பேட்டை மட்டும் எடுத்துவிட்டால் போதுமா என்று கேட்டார்கள்.

இந்த இரண்டாவது ஊதியக்குழு வருவதற்கு முன்னாலே, அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனேயே, 1—10—1967 முதல் இந்தியாவிலே வேறு எந்த மாநிலத்திலுமே அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி அளிக்கப்படாது இருந்த நேரத்தில் நம் மாநிலத்தில் நகர ஈட்டுப்படி அளிக்கப்பட்டது. இதன்படி ரூ. 500 வரை சம்பளம் வாங்கும் அரசு ஊழியர்கள் அந்தப் படியினைப் பெறுவதற்குரியவர்கள் ஆவர். சென்னைக்கு மாத்திரமல்லாமல், சுற்றியுள்ள பகுதிகளுக்கும், மதுரைக்கும் அந்தத் திட்டம் நீடிக்கப்பட்டது. அடுத்து, ஈட்டிய விடுப்புக்குப் பதிலாகத் தொகை பெறுதல், 30 நாள் ஈட்டிய விடுப்பு எடுத்தால் மேலும் 30 நாள் ஈட்டிய விடுப்புக்குப் பதிலாகத் தொகையைப் பெறுவதற்கும் திட்டம் கொண்டுவரப்பட்டது. இது பின்னர் சம்பளம் ஆணைக்குழுவால் தாராளமாக்கப்பட்டது அனைவருக்கும் தெரியும். மலைவாழ்வுப்படி அளிக்கப்பட்டது. திருமணக் கடன் கொடுப்பதற்கு என்று ஒரு புதிய திட்டம் துவக்கப்பட்டு 1—4—1969 முதல் செயலுக்குக் கொண்டு வரப்பட்டது. ஓய்வு ஊதியமாகக் கொடுக்கப்படும் குறைந்த அளவு குடும்ப ஓய்வு ஊதியம் திங்கள் ஒன்றுக்கு 30 ரூபாயாக உயர்த்தப்பட்டது. அகவிலைப்படி திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் அந்த அகவிலைப் படி மூன்று முறை உயர்க்கப்பட்டன.

1967-ல் ரூ. 6.88 லட்சமும், 1968-ல் ரூ. 3.60 லட்சமும், 1969-லிருந்து ரூ. 3.60 லட்சமும், இவற்றைத் தவிர அவர்களுக்கு இடைக்கால நிவாரணமாகத் தரப்பட்ட அந்த 10 ரூபாய்க்கும், ரூ. 500-க்குக் குறைவாக சம்பளம் பெறும் அரசுப் பணியாளர்களுக்கும் அந்த 10 ரூபாய் அளிப்பது என்ற அந்தத் திட்டத்தின்படி, சம்பளக்குழு வருவதற்கு முந்தைய ஆண்டு இந்த அரசின் சார்பில் ஆசிரியர்கள், மற்றவர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டது. இதனால் அரசு அலுவலாளர்களுக்கு ரூ. 6 கோடி வழங்குவதற்கான செலவு ஏற்பட்டது.

சம்பள ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் மேல், அரசுக்கு ஏறக்குறைய ரூ. 23 கோடி வரையில் போயிற்று என்பதும், அதிலே சில குறைபாடுகள், முரண்பாடுகள் இருக்கின்றன என்று அவர்கள் குறைகள் தெரிவித்ததன் பேரில், அதற்கான நிவர்த்தி செய்யும் முயற்சிகளை இப்போது அரசு எடுத்து இருக்கிறது என்பதனை நான் மீண்டும் ஒரு முறை இந்த மன்றத்திற்கு நினைவூட்டுகிறேன்.

பயிரிடத்தக்க நிலங்களையும், வீட்டு மனைகளையும் கேரளத்திலே வழங்குகிறார்கள், இங்கே வழங்குகிறார்களா, இல்லையா என்பதைப் பற்றி சுட்டிக்காட்டாமல், கேரளத்தில் வழங்குகிறார்கள் என்று அளவோடு நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்கள் நிறுத்திவிட்டார்கள். தமிழ்நாட்டில் 1947-ம் ஆண்டு முதல் 1967-ஆம் ஆண்டு வரை 20 ஆண்டு காலத்தில் ஒப்படை செய்யப்பட்ட பயிரிடத்தக்க நிலங்கள்—மொத்தமாக ஒதுக்கீடு செய்யப்பட்டவை—2.88 இலட்சம் ஏக்கர்கள் தான். இவற்றால் பயன் பெற்றவர்கள் 1.15 இலட்சம் பேர். ஆனால் 1967-68-லே 7,019 பேரும், 1968-69-ல் 24,604 பேரும், 1969-70-ல் 71,738 பேரும், 1970-71-ல் 99,128 பேரும், 1972 ஜனவரி முடிய 45,000 பேரும் ஆக மொத்தம் ஏறத்தாழ 2,47,000 பேருக்கு இந்த 4-5 ஆண்டு காலத்தில் அந்த பயிரிடத்தக்க நிலங்கள் ஒப்படை செய்யப்பட்டிருக்கின்றன என்கிற நிலை இருக்கிறது.

இதுவரையில் விவசாயத் தொழிலாளர்கள் கண்டு வந்த கனவு நிறைவேற்றப்படுகிற அளவில், விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்குகிற திட்டம் அறிவிக்கப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் மாத்திரம் ஒரு இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இந்தத் திட்டத்தால். இந்தச் சட்டத்தால் பயன்



பெறுவார்கள் என்றும் அதனுடைய ஆரம்ப விழாவை சென்ற திங்களில் திருவையாற்றில் துவக்கி வைத்து, முதல் தடவையாக 6,000-க்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த வீட்டு மனைகளை ஒப்படை செய்திருக்கிறோம்.

அதைப்போலவே, குத்தகையாளர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்படாத அளவுக்கு நாம் நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். 25,000 பேர் வெளியேற்றப்படுகிறார்கள் என்று தஞ்சை மாவட்டத்தில் திரு. காமராஜர் சொன்னார். அவரது கணக்குப்படி 25 ஆயிரம் பேருக்கு மேற்பட்டவர்கள் இன்றைக்கு தஞ்சை மாவட்டத்திலேயும், மற்ற மாவட்டத்திலேயும் உள்ளவர்களைக் காப்பாற்றுகின்ற அளவுக்குக் குத்தகையாளர்கள் நிவாரணச் சட்டம் இந்த மாமன்றத்திலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அதைப்போலவே, ஒரு காலத்தில் மூதறிஞர் ராஜாஜி அவர்கள் விவசாயிகளுக்கு மாத்திரம் கடன் நிவாரணச் சட்டம் கொண்டு வந்து, அந்தக் காலத்திலே அவர்கள் விவசாயப் பெருங்குடி மக்களால் பெரிதும் பாராட்டப்பட்டார்கள். அன்றைக்கு ராஜாஜி செய்ததையே நாங்கள் செய்தாலும் கூட, அதை விட இன்னும் சில பேரைச் சேர்த்துக்கொண்டு, உழைப்பாளிகள், தொழிலாளர்கள், அரசு அலுவலாளர்கள் ஆகியோருக்கு இந்த நிவாரணம் அளிக்கிறோம் என்று சொன்னாலும் கூட, அதைப் பாராட்டுவதற்கு நம்முடைய ஹாண்டே போன்றவர்கள் முன் வரவில்லை என்று எண்ணுகிற நேரத்தில் உள்ளபடியே நெஞ்சம் கொஞ்சம் சஞ்சலம்தான் கொள்கிறது. ஆனால் அவர்கள் வாயாரப் பாராட்ட விரும்பாவிட்டாலும், உள்ளூர மகிழ்வார்கள் என்று நம்புகிறேன். வாயார வாழ்த்துவதை விட மனதார வாழ்த்துவது மேலும் சிறப்பானது, சிலாக்கியமானது என்று மகிழ்ச்சியடைகிறோம். இராஜாஜியே பாராட்ட மாட்டாரா? ஹாண்டே மாட்டாரா? நான் 1938-ல் கொண்டு வந்ததைத்தான், இப்போது இவர்கள் செய்து இருக்கிறார்கள். பரவாயில்லை, என்று சொல்லியிருப்பார். ஆனால் அரசியலுக்காகப் பாராட்டத் தோன்றாது.

முன்னேற்றக் கழக அரசு முற்போக்கு எண்ணங்களின் அடிப்படையில் செல்லுகிற அரசு, ஏழைகளின் அரசு,

தொழிலாளர்கள், விவசாயிகள், உழவர் பெருமக்கள், உழைப்பாளிகள், அலுவலாளர்கள் இவர்களுக்காகப் பாடுபடுகிற இந்த அரசு, சமதர்ம அடிப்படையிலே தான் இந்தத் திட்டங்களையெல்லாம் இந்த அவையிலே அறிவித்து இருக்கிறது. இந்த சமதர்மத் திட்டத்தின் அடிப்படையிலே கட்சி நடத்தி வருகிற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. தங்கமணி போன்றோர் கூட இன்னும் கொஞ்சம் வாயார மனமாரப் பாராட்டி இருந்தால் என்ன? அதில் ஏன் இவ்வளவு சிக்கனம்? இவ்வளவு செட்டு? பக்கத்திலே இருக்கிற கேரளாவை வாழ்த்துகின்ற அளவுக்கு வாழ்த்தாவிட்டாலும், தமிழ்நாட்டில் இருக்கும் எங்களை அதிலே ஒரு 50 சதவிகிதமாவது வாழ்த்தியிருக்கக் கூடாதா?

தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஹரிஜன மக்களின் காலனிகளை நீங்கள் எண்ணிப் பார்த்தால், பல ஆண்டு காலமாகக் கணக்கெடுத்துப் பார்த்ததில் 1966-ம் ஆண்டு வரை 20,000—25,000 ஹரிஜன் குடியிருப்புகள் 2,400 குடியிருப்புகளுக்குத்தான் ஆண்ட அரசு அவர்களுக்குக் கட்டிக் கொடுத்து இருந்த வீடுகள், ஹரிஜனக் குடியிருப்புகள் 2,.00 குடியிருப்புகளுக்குத்தான் மின்சார வசதி செய்து கொடுக்கப்பட்டது. ஆனால் இந்த 4 ஆண்டு காலத்தில் கழக அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு 15,600 ஹரிஜன் குடியிருப்புகளுக்கு மின்சார வசதி செய்யப்பட்டிருக்கிறது. 1972-73-க்குள் எல்லா ஹரிஜனக் காலனிகளுக்கும் மின் வசதி செய்து கொடுக்கும் திட்டம் வெற்றிகரமாக முடியும்.

அதைப்போலவே, தமிழ்நாட்டிலே உள்ள எல்லாக் கிராமங்களுக்கும் மின் வசதி அளிக்கும் திட்டமும் முழுமையாக வெற்றி பெறும். அருமை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் கோபால் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சொன்னார்கள். 1966-ல் 1,070 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது, இப்போது 150 மெகாவாட் தான் அதிகரித்து இருக்கிறது என்று குறை கூறினார்கள். அது தவறான கணக்காகும். தற்போது 1,475 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. இது 515 மெகாவாட் அதிகரித்து இருக்கிறது. எண்ணூர் அனல் மின் திட்டத்தின் 3-வது பிரிவு இந்த மாத இறுதிக்குள் செயல்படத் தொடங்கும். இதனால் மேலும் 110 மெகாவாட் உற்பத்தி அதிகமாக் கிடைக்கக்கூடும். ஆகவே 1966-லிருந்து 1972 வரை கூடுதல் உற்பத்தித் திறன் 515



மெகாவாட் ஆகும். மேலும் குந்தா 4-வது நிலையின் மூலம் 110 மெகாவாட்டுகளும், எண்ணூர் 5-வது பிரிவின் மூலம் 110 மெகாவாட்டும், சுருளியார் மூலம் 35 மெகாவாட்டும், சேர்வலார் மூலம் 30 மெகாவாட்டும், நெல்லித்துறை மூலம் 50 மெகாவாட்டும், ஆக எடுத்துக் கொள்ளப்படவிருக்கிற இந்தத் திட்டங்களின் மூலம் மொத்தம் 335 மெகாவாட்டுகள் உற்பத்தித் திறன் கிடைக்கும்.

இது தவிர. பாண்டியார்–புன்னம்புழா திட்டம் 100 மெகாவாட்டும், சோளத்திப்புழா திட்டம் 40 மெகாவாட்டும், காடம்பாரை திட்டம் 400 மெகாவாட்டும் தரக்கூடிய இந்தத் திட்டங்களும் விரைவில் எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன.

மேலும், இந்த ஆட்சியில் தொழில் வளர்ச்சியே இல்லை, தொழில் வளம் நலிந்து விட்டது என்று சில பேர்கள் குறைப்பட்டுக் கொள்கிறார்கள். அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன், தற்போது 100 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்யக்கூடிய தூத்துக்குடி உரத் தொழிற்சாலை, ஹெவி வாட்டர் ப்ளான்ட் போன்ற திட்டங்கள் பழைய அரசினரால் கைவிடப்பட்டு, இந்த அரசு பொறுப்பு ஏற்ற பிறகு இந்தத் திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியிருக்கிறது என்பதைத் தொழில் வளர்ச்சி இல்லை என்று சொல்பவர்கள் கவனிக்க வேண்டும்.

300 கோடி ரூபாய் செலவில் சேலத்தில் ஒரு இரும்புத் தொழிற்சாலைத் திட்டம் விரைவிலே தொடங்கவிருக்கிறது. அதற்கு எல்லா வகையான தொடக்க வேலையும் நடந்துகொண்டிருக்கிறது. எட்டுக் கோடி ரூபாயில் நைலான் தொழிற்சாலையும், 10 கோடி ரூபாய் செலவில் ரப்பர் டயர் தொழிற்சாலையும் தொடங்கப்படவிருக்கிறது. பாலிஸ்தர் தொழிற்சாலை ஒன்று தொடங்கப்பட்டு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இங்கே மூடப்பட்ட தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை, இந்த அரசிற்கு சரியான தொழிற்கொள்கை இல்லை, தொழிலாளர்களை எப்படி நடத்துவதென்று தெரியவில்லை என்றெல்லாம் குறை கூறப்பட்டது. நம்முடைய மாண்புமிகு காங்கிரஸ் உறுப்பினர்களும், கம்யூனிஸ்ட் உறுப்பினர்களும், சுதந்திரா உறுப்பினர்களும், மற்ற கட்சி உறுப்பினர்களும் அதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதைப்பற்றி அரங்கண்ணல் அவர்கள் பேசியபோது மற்ற

மாநிலங்களில் எப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது என்பதை எடுத்துச் சொன்னார். மைசூர் மாநிலத்தில் 871-ம், ஆந்திரத்தில் 647-ம், மேற்கு வங்கத்தில் 531-ம், கேரளத்தில் 293-ம், ஒரிசாவில் 66-மாக தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன.. அவற்றிலே மறுபடியும் தொடங்கி நடத்தப்படுகிற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை குறைவானதுதான் என்கின்ற கணக்கே தவிர, வேறல்ல.

ஆனால், தமிழ்நாட்டில் மூடப்பட்ட தொழிற்சாலைகள் 22 தான். மற்ற மாநிலங்களைப் பார்க்கிறபோது நம்முடைய மாநிலத்தில் தான் குறைவான தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. அதிலும் 6 தொழிற்சாலைகள் திறக்கப்பட்டுவிட்டன. இங்கே மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளும் நாம் மத்திய சர்க்காரை அணுகி இன்றைக்கு அதிலே கிடைத்திருக்கின்ற வெற்றிகளும் இந்த மன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் தெரியும். ஆகையால் அதைப்பற்றி விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. ஆனால் தொழிலாளர்களின் கிளர்ச்சியில் இந்த அரசு நிதானமாகக் கவனிக்கும் தன்மையில், அதற்கு முந்தைய அரசு கவனித்திருக்கிறதா என்பதையும் தொழிலாளர்களின் நலன் ஒன்றுதான் எங்கள் குறிக்கோள் என்று இங்கே முழக்கமிட்ட மாண்புமிகு உறுப்பினர் கே.டி.கே. போன்றவர்கள் யோசித்துப் பார்க்க வேண்டும்.

அனந்தநாயகி அவர்கள் நேற்றுச் சொன்னார்கள்—"நானும் சிம்சன் அறுவர் குழுவில் இருந்து பார்த்து விட்டேன். அங்கே கோரிக்கைகளைவிட வன்முறைச் செயல்கள் தான் வளர்ந்திருக்கின்றன என்பதைப் பார்க்கிறேன் என்று சொன்னார்கள். தமிழகத் Industrial fabric will be completely torn by these elements. என்பதைத்தான் சொல்ல ஆசைப்படுகிறேன். மேற்கு வங்கத்தில் தொழில் அமைதி கெட்டுப்போய்த் தொழில்கள் வேறு இடங்களுக்குப் பறந்து போய்க்கொண்டிருக்கிற அதே நிலை தமிழ்நாட்டிலும் வந்துகொண்டிருக்கிறது. ஏற்கனவே நாம் இங்கு வேலையில்லாத் திண்டாட்டத்தினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே வன்முறைச் செயல்கள் நடக்காத முறையில் பார்த்துக்கொண்டால்தான் தொழில் அமைதி ஏற்படும்." என்று சொன்னார்கள். முழுக்க முழுக்க அனுமதிக்கவில்லை. ஆனால் இப்படிப்பட்ட வன்முறைச் செயல்கள் ஏற்படும். அந்த வன்முறையைத்





தாண்டி விடுபவர்கள் யார் என்றெல்லாம் நான் இந்த அவையிலே எடுத்துக் காட்டியபோது, அவர்களுக்குச் சார்பாக நின்றுகொண்டு திராவிட முன்னேற்றக் கழக அரசை ஒரு மூலையிலே தள்ளி அதன் மீது யார் யார் குற்றம் சாட்டுகிற பணியிலே ஈடுபட்டிருந்தார்களோ அவர்கள் எல்லாம் இந்த உண்மையை உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

வன்முறை மூலமாக எந்தக் காரியமும், அது எந்தப் பகுதியிலே நடைபெற்றாலும், அதை நாம் அனுமதிக்க முடியாது, அதில் எந்தக் கட்சிக்காரர்கள் ஈடுபட்டாலும் இந்த அரசு பார்த்துக் கொண்டிருக்காது என்பதற்கு அடையாளமாகத்தான் அந்தக் கிளர்ச்சியிலே ஈடுபட்டவர்கள்—கழகத்தைச் சேர்ந்தவர்களா அல்லது காங்கிரசுக்கு ஆதரவாளர்களா—கம்யூனிஸ்டுகளா என்றெல்லாம் பார்க்காமல் அவர்கள் எல்லாம் கைது செய்யப்பட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் ஐம்பதுக்கும் மேற்பட்ட கழகச் சார்புடைய தொழிலாளர்கள் அடிபட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபோதும் கூட அவர்களால் புகார் செய்யப்பட்டவர்கள் அனைவரும் கைது செய்யப்படவில்லை. ஏனென்றால் தொழில் அமைதி பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக. அதைப்போல, கழகம் அல்லாத தொழிலாளி தாக்கப்பட்ட நேரத்தில் கழகச் சார்புள்ள முக்கியஸ்தர் கைது செய்யப்பட்டதையும் இந்த அவை அறியும். ஆகவே நாங்கள் தயவு தாட்சண்யம் இல்லாமல் பாரபட்சம் காட்டாமல் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம்.

எத்தனையோ கிளர்ச்சிகள் நடந்திருக்கின்றன, மறந்திருக்க முடியுமா? 1947-48-லிருந்து நடைபெற்ற போராட்டங்களில் 1967 வரை காங்கிரஸ் ஆட்சியில் துப்பாக்கிகள் பேசின. இந்த அரசில் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெறவில்லை என்று கூறவில்லை. எந்த அளவுக்குக் குறைவாக நடந்திருக்கின்றது?

எவ்வளவு பய உணர்ச்சியோடு துப்பாக்கிப் பிரயோகங்கள் கையாளப்பட்டிருக்கின்றன? எந்தெந்த கட்டங்களுக்குப் பிறகு துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது? அப்படி மீறி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு உடனடியாக எத்தனை நீதி விசாரணை வைக்கப்பட்டிருக்கிறது? இந்தக் கணக்கெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும்.

ஆனால் முதுகுளத்தூர் போன்ற பெரிய சம்பவங்களுக்குக்கூட நீதி விசாரணை வைப்பதற்கு முடியாது என்று மறுத்தவர்கள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே மேடைகளிலே ஏறிக்கொண்டு ஜன நாயகத்தைப்பற்றி முழங்குகிற முழக்கங்கள் இருக்கிறதே ! ஆஹா ஹா .... அதைப் பார்த்தால் நமக்கே வேடிக்கையாக இருக்கிறது. அந்த அளவுக்கு முழங்கியிருக்கிறார்கள்.

இங்கே அண்ணா அவர்களும், கல்யாணசுந்தரம் அவர்களும் நண்பர் சசிவர்ணத்தேவர் போன்றவர்களும் அன்றைக்கு கேட்டதெல்லாம், முதுகுளத்தூரிலே 40 நாள் ரணகளம் ஏற்பட்ட பிறகு—வைக்கோல் போர் கொளுத்தப்பட்டு—வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டு ஐந்து பேரோ ஆறு பேரோ கைகளும் கண்களும் கட்டப்பட்டு, கீழத்தூவலிலே துப்பாக்கியால் நேருக்கு நேரே சுடப்பட்டு வயல்களிலே குழந்தைகளுடைய பிணம், வாய்க்கால்களிலே பெண்கள் பிணம்—வைக்கோற் போரிலே கற்பழிக்கப்பட்ட மாதர்கள் என்கின்ற அளவுக்கு பயங்கரமான பட்டியல் வெளிவந்த அந்தக் காலத்தில் குறைந்தபட்சம் கேட்கப் பட்டது ஒரே ஒரு நீதி விசாரணைதான், வைக்கப்பட்டதா ? இல்லை. ஆனால் ஒரு துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேர் செத்தார்கள், அல்லது ஒருவர் காயம் அடைந்தார்.

Thiru R. PONNAPPA NADAR : May I just put one question to the Chief Minister?

அன்றைக்கு விசாரணைக்கு ஒரு ஐ.சி.எஸ். அதிகாரியைப் போட்டு நீதி விசாரணை நடத்தினார்கள். முதல்வர் அவர்கள் அதை மறைப்பதைப்போல் கூறுவது . . . ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** ஐ.சி.எஸ். அதிகாரி போதாது, நீதிபதி விசாரணை வேண்டுமென்றுதான் சொன்னோம். இன்றைக்கு உங்களுக்கு இங்கே இருக்கிற நீதிபதியே போதவில்லையே ? மற்ற மாநிலங்களிலிருந்தல்லவா நீதிபதி வேண்டுமென்று சொல்கிறீர்கள் ? அந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறீர்களே ? அதிலே முற்போக்கு சக்தியாக இருக்கிறீர்களே ? அன்றைக்கு 40 நாட்கள் ரத்த வெள்ளம் ஓடியது. அன்றைக்குக் கேட்டதெல்லாம் என்ன ? யார் தூண்டிவிட்டார்கள் ? ஏன் இவ்வளவு பேர்கள் கொலை செய்யப்பட்டார்கள் ? ஏன் கட்டி



வைத்துச் சுட்டார்கள் ? அப்படிச் செய்ததற்கு எல்லாம் நீதி விசாரணை வேண்டும் என்று அன்றைக்கு அண்ணா அவர்களும், சசிவர்ணத் தேவரும், மூக்கையாத் தேவரும் கேட்டார்கள். ஆனால், அன்றைக்கு அதற்கு ஒத்துக்கொள்கிறோம் என்று சொன்னார்களா ? இல்லை அதற்கு காமராஜர் ஆட்சியில் நிதி அமைச்சராக இருந்த திரு. சி. எஸ். அவர்கள் காமராஜரின் பக்கத்திலிருந்துகொண்டு சொன்னார்கள். எடுத்ததற்கெல்லாம் நீதி விசாரணை வைத்தால் போலீசார் புகழ் கெட்டுவிடும் என்று சொன்னார்கள். அது குறிப்பிலிருக்கிறது. இப்படிச் சொல்லக் கூடிய நிலை அன்றைக்கு. ஆனால் இன்றைக்கு அப்படியா ? அன்றைக்கு, மதுரை டி.வி.எஸ். நிறுவனத்தில் ஒழுங்கு நடவடிக்கை எடுத்த காரணத்தால் 27—1—1948 முதல் நிகழ்ந்த வேலை நிறுத்தத்தின்போது கலவரம் ஏற்பட்டு, காவல் துறையினர் கண்ணீர்ப் புகையும், தடியடியும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. 17–1–1948-லிருந்து 31–1–1948 வரை வேலை நிறுத்தம் முடியும் வரை இரவில் ஊரடங்கு உத்தரவும் மதுரை நகரத்தில் பிறப்பிக்கப்பட்டது. 21–11–1949-ல் நாமக்கல் காவல் நிலையத்தில் கைது செய்து வைக்கப்பட்டு இருந்த சில கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஆதரவாக காவல் நிலையம் நோக்கி ஓடி வந்த கும்பலைக் கலைக்க காவல் துறையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மூவர் காயமுற்றனர்.

8–6–1953-ல் பவானி எஸ்டேட், நீலகிரி மாவட்டத்தில் ஏற்பட்ட தொழிலாளர் கலவரத்தின்போது காவல்துறை தடியடிப் பிரயோகம் செய்யவேண்டி நேர்ந்தது.

15–7–1953-ல் திராவிட முன்னேற்றக் கழக ரயில் நிறுத்தப் போராட்டத்தின்போது தூத்துக்குடியிலும், டால்மியாபுரத்திலும் காவல் துறையினரால் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டது. அறுவர் உயிர் இழந்தனர்.

26–1–1957-ல் வால்பாறை தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்தின்போது காவல்துறை தடியடிப் பிரயோகம் செய்து துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். நால்வர் இறக்க அறுவர் காயமுற்றனர்.

1958-ல் துறைமுகத் தொழிலாளர் போராட்டத்தின்போது, துப்பாக்கிப் பிரயோகத்தில் அறுவர் இறந்தனர்.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 10

26–11–1960-ல் கன்னியாகுமரி மாவட்டம் கொல்லங்கோட்டில் மீனவர்கள் சில்லறை மதுவிலக்குக் குற்றங்களுக்காகப் பிடிக்கச் சென்றபோது, கலவரம் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் இறந்தார்.

17–3–1963-ல் மீன் பிடித்தல் தகராறு சம்பந்தமாக திருமங்கலம் (மதுரை மாவட்டம்) அருகே உரப்பனூரில் கலவரம் ஏற்பட்டு, துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் அங்கேயே மாண்டார். இருவர் மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லும்போது மாண்டனர். பத்து பேர் காயமுற்றனர்.

1964-ல் அரிசிப் பற்றாக்குறை காரணமாக எழுந்த கலவரங்களில் 17–10–1964-ல் அர்ச்சுனன் கோவை நகரில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

2–12–1964-ல் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி மாணவர்கள் நடத்திய போராட்டத்தில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் இரு மாணவர்கள் காயமுற்றனர். 28–4–1965-ல் சேடப்பட்டி பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர் தேர்தல் குறித்து நடந்த கலவரத்தில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது. இருவர் மருத்துவ மனையில் இறந்தனர். நால்வர் காயமுற்றனர்.

சேலம் சிறைச்சாலையிலே 23 கம்யூனிஸ்டு கைதிகளைச் சுட்டுக் கொன்றார்கள். பூட்டப்பட்டிருந்த சிறைச்சாலையின் கதவு துவாரத்தில் துப்பாக்கி முனையை வைத்து, பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த 23 கம்யூனிஸ்டு கைதிகளையும் சுட்டுக் கொன்றுவிட்டு, அந்த 23 பிணங்களையும் கொண்டுவந்து மீன்களை மார்க்கெட்டிலே அடுக்கி வைப்பதுபோல் அடுக்கி வைத்துக் காட்டியவர்கள் காங்கிரஸ் கட்சியினர். இரணியன் யார்? குப்பு யார்? இவர்களெல்லாம் துப்பாக்கிப் பிரயோகத்தில் சுட்டுக் கொல்லப்படவில்லையா? அப்போதெல்லாம் சட்டம், அமைதி கெட்டுப் போகவில்லையா? அந்தத் துப்பாக்கிச் சூடுகள் எல்லாம் எதைக் காட்டுகின்றன? அதையெல்லாம் விட்டுவிட்டு இன்றைக்கு தமிழ் நாட்டிலே சட்டம், அமைதி ஒழுங்கு எல்லாம் சீர்குலைந்து விட்டது என்று பேசப்படுவதேன்? ஏதோ ஒன்றிரண்டு இடங்களிலே நடைபெற்ற சம்பவங்கள் வைத்துக் கொண்டு இவ்வாறு பேசுவது முறைதானா? தமிழ் நாட்டைப் பற்றி பேசுகின்ற நீங்கள் மற்ற மாநிலங்களிலே என்ன நடக்கிறது என்பதைப் பார்த்தீர்களா?



1972 மார்ச் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

தமிழ்நாட்டிலே 1965-ல் மாநிலமெங்கும் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி நடைபெற்றது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே 51 பேரைச் சுட்டுக் கொன்றார்கள். இதை நான் சொல்லவில்லை. முன்னாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே சொன்னார்கள். இந்தச் சட்டமன்றத்திலே மதியழகன் அவர்கள், "150 பேரை சுட்டுக் கொன்றீர்களே" என்று கேட்டார். அதற்கு அப்போதைய முதலமைச்சர் பக்தவச்சலம் 51 பேரைத்தான் சுட்டுக்கொன்றோம் என்று இதே மன்றத்தில் கணக்குக் கொடுத்தார்கள். கிளர்ச்சியின்போது துப்பாக்கிச் சூட்டிலே இரண்டு மாணவர்கள் இறந்தார்கள். 'தமிழ் வாழ்க, இந்தி ஒழிக' என்று தீக்குளித்து எட்டு பேர் செத்தார்கள். இதைப்பற்றியெல்லாம் அப்போது கேட்கின்ற நேரத்திலே பக்தவச்சலனார் என்ன சொன்னார் தெரியுமா! அவர்கள் எல்லாம் கடன்பட்டல்லவா செத்தார்கள்? என்றார்.

அந்த அளவுக்கு இழிவாகவும், பழி கூறியும் தீக்குளித்துச் செத்தவர்களைப் பற்றி இந்த மாமன்றத்தில் அன்றைக்கிருந்த முதலமைச்சர் பேசவில்லையா? இன்றைக்குத் தமிழ்நாட்டிலே ஏதோ பெரிய கலவரம் என்று எல்லாம் பேசுகிற இதே நேரத்தில் மற்ற மாநிலங்களிலே என்ன நிலைமை? பத்திரிகைகளைப் பார்த்தால் தெரியும்.

Firing at Thumba : boy dies—Trivandrum.
Police Firing on Fishermen at Thumba--Trivandrum.
Police-Student Clash in Quilon—Trivandrum.
Hartal in Quilon over college incidents- Quilon.
Curfew Follows Police Firing in Ahmedabad.
Eight die in Punjab Police Firing.
Police Firing in West Bengal Town.
Rajathan Government Staff lathicharged.
Five injured, 16 Huts Damaged in Clash—Trivandrum.
One Killed in Police Firing in Bengal—
Mob Violence in Gulbarga : Police Open Fire.
Two Killed in Poll Clash near Vijayawada.
Army Column arrives in Riot-torn Gulbarga.
Mob Lathi-charged in Srinagar.

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 10

இப்பொழுதே எண்ணிறந்த ஆதாரங்கள் பல்வேறு மாநிலங்களில் நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்குச் சான்றுகளாக இருக்கின்றன. இப்படி மற்ற மாநிலங்களிலே நடக்கக்கூடியவைகளை எல்லாம் சொன்னதால் இங்கே எதுவுமே நடைபெறவில்லை என்று நான் பைத்தியக்காரத்தனமாக வாதிட விரும்பவில்லை. அசம்பாவிதங்கள், வன்முறைகள் நடைபெறக்கூடாது என்பதிலே நாங்கள் எவ்வளவு அக்கறை காட்டி வருகிறோம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவே இவைகளையெல்லாம் இங்கே குறிப்பிட்டேன்.

தமிழ்நாட்டிலே இங்கொன்றும், அங்கொன்றுமாக நடைபெற்ற சில சம்பவங்களை வைத்துக்கொண்டு, இங்கே சட்டம், ஒழுங்கு, அமைதி கெட்டு விட்டது, அராஜகம் நடக்கிறது, ஊழல் மலிந்து விட்டது, ஆகவே இந்த தி.மு.க. அரசை ஒழித்துக்கட்ட அணி திரளவேண்டுமென்று காமராஜர் வீர முழக்கம் செய்து வருகிறார். ஆனால் காமராஜர், 'ஐந்தாண்டுக் காலம் ஆளட்டும்; அதற்குப் பின்னால் பதவியில் வரவிடாமல் ஒழித்துக்கட்டுவோம், அது வரையும் பொறுத்திருப்போம்' என்று கூறுகிறார். ராஜாஜி அவர்களோ, இப்பொழுதே ஒழித்துக் கட்டிவிட வேண்டுமென்று குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார். தன்னுடைய துணைக்குக் காமராஜரையும் இழுக்கிறார். ஆனால் பச்சைத் தமிழர் காமராஜர் ராஜாஜியின் வலையில் விழமாட்டார் என்று நிச்சயம் நம்புகிறேன்.

'கோடு உயர்ந்தது, குன்றம் தாழ்ந்தது' என்று வீர முழக்கம் எழுப்பிய பேரறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட எங்களை, அந்த உயர்ந்த பாரம்பரியத்தில் வளர்ந்த எங்களை அவ்வளவு சுலபத்தில் நினைத்தாலே ஒழித்து விடலாம் என்று, ராஜாஜி அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

கல்வியைப் பொறுத்த வரையில் காமராஜ் அவர்கள் எடுத்த சரியான நடவடிக்கையின் காரணமாக, குடியாத்தம் தேர்தலிலே காமராஜர் வெற்றிபெற வேண்டுமென்று பேரறிஞர் அண்ணா பாடுபட்டார்கள். ஆனால் இன்றைக்குக் காமராஜ் அவர்கள் 'இந்த அரசை மாற்றியே ஆகவேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அரசை மாற்றி விடுவதிலே காமராஜரை விட ராஜாஜிக்கு அதிக அக்கறை ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை



1972 மார்ச் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

ராஜாஜிக்கு வயது அதிகமாகிவிட்டதால் விறுவிறுப்பாகச் செயல்பட்டு, விரைவிலே இந்த அரசை ஒழித்துக்கட்டி, அதைப் பார்த்து மகிழவேண்டுமென்று விருப்பம் கொண்டிருக்கின்றாரோ என்று நினைக்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே :
The Hon. Chief Minister made a remark that how long Rajaji may live or whatever it is. I am coming to the point.

ராஜாஜி அவசரமாக இருக்கிறார்கள். வயது ஜாஸ்தியாகிக் கொண்டிருக்கிறது. (சில உறுப்பினர்கள் : உட்கார், உட்கார்) அதனால்தான் இப்படி நினைக்கிறார் என்று முதலமைச்சர் சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஒன்றும் பேசவில்லை. அவர் எத்தனை ஆண்டு இருப்பாரோ நமக்குத் தெரியாது. நான் கேட்பதெல்லாம், மற்ற மாநிலங்களிலே நடப்பவைகளைப் பற்றியும், வேறு பல நிகழ்ச்சிகளையும் குறிப்பிடுகின்ற முதலமைச்சர் அவர்கள், சிம்சன் விவகாரத்தைப் பொறுத்தவரையில் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை.

What are the steps we are going to take? That is the subject matter of the controversy. There is no point in going round and getting vicarious satisfaction in what is happening in other States. What is the solution?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் இதனை எடுத்து . . .

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர்- டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது 'உட்கார், உட்கார்' என்று சொன்னார்கள். அது முறையல்ல. It is not fair.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிச் சொல்லியிருந்தால் அது முறையல்லதான். It is not fair.

A VOICE : It is not a fair price shop.

THIRU R. PONNAPPA NADAR : Hon. Members should not say that it is not a fair price shop. That is also not fair.

THIRU J. JAMES : It is not a toddy shop also.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** நான் கழக உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்வது—இந்த விவாதத்தை வேகமுடையதாக்கவேண்டாம், விவேகம் உடையதாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ராஜாஜி அவர்களுக்கு 'வயது அதிகமாகிவிட்டது; அதனால் அவருடைய காலத்திலேயே தி.மு.க. அரசை ஒழித்துக்கட்டி, அதைப் பார்த்து மகிழ்ந்திட நினைக்கிறார் என்று நான் சொல்வதாக டாக்டர் ஹாண்டே அவர்கள் நினைக்கின்றார்கள். நான் அந்த எண்ணத்தில் சொல்லவில்லை. ராஜாஜி அவர்கள் நீண்ட நாள் வாழ வேண்டும் என்பதிலே டாக்டர் ஹாண்டே அவர்களைவிட நான் மிகுந்த அக்கறை உடையவன். 1976-லும், இந்த அரசு கவிழாமல், இதே மாதிரியான கூட்டணியோடு தொடர்ந்து நிலைத்திருப்பதற்கு ராஜாஜி அவர்களின் இம்மாதிரியான உதவி எங்களுக்குத் தேவைப்படுகிறது. 1981-லும் இந்த ஆட்சி நடைபெறுவதை அவர் பார்த்து மகிழ வேண்டும் என்பதுதான் என்னுடைய ஆசை. நான் குறிப்பிட்டது, காமராஜரை விட ராஜாஜிக்கு அதிக வயதாகி விட்டதால், அவரைவிட அதிகக் கோபம் வருகிறது. அதனால் தான் இப்படிப் பேசுகிறார் என்பதுதான், இதைத் தவிர வேறொன்றுமல்ல.

சிம்ஸன் தொழிற்சாலையைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லையே என்று சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலைத் தகராறுகளை விரைவிலே தீர்க்கின்ற வகையிலே அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அரசின் நடவடிக்கைகள் போதாது, கோபால் அவர்கள் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்றும், ஒரு குழு அமைத்து அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண வேண்டும் என்றும் சொன்னார்கள். அந்த யோசனையை ஏற்றுக் கொண்டு அறுவர் குழு ஒன்றை அமைத்தோம். கோபால் தானாகவே விலகிக் கொண்டார்கள். அனந்தநாயகி அம்மையார் அவர்கள்தான் அதன் கன்வீனராகவும் இருந்தார்கள். குழு அமைக்கப்பட்ட சில நாட்களிலேயே எங்களுக்குத் தெரியாமலேயே அறுவர் குழுவைக் கலைத்துவிட்டார்கள். கலைத்து விட்ட பின்னால் சொன்னார்கள், 'சேதி தெரியுமா, அறுவர் குழுவைக் கலைத்துவிட்டோம்' என்று. எங்களுடைய கட்சியைச் சேர்ந்த மா. வே. நாராயணசாமி அவர்களும் அறுவர் குழுவிலே இடம் பெற்றிருந்தார்கள், ஆனால் பெரும்பான்மை முடிவு எப்படி





இருக்கிறதோ அதற்கு ஒத்துப்போகும்படி அவரைக் கேட்டிருந்தோம். இப்போது அந்தப் பிரச்சனையில் நல்லதொரு முடிவினைக் காண்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே வந்திருந்த மத்திய அமைச்சர் அவர்களைக் கேட்டிருக்கிறோம். அந்த ஏற்பாட்டினாலும் சரியாகவில்லை என்றால், மேலும் என்ன செய்யலாம் என்றும் எண்ணிக்கொண்டிருக்கிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி :** அறுவர் குழு கலைக்கப்பட்டது முதலமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அதற்குக் காரணம், அந்த அந்த அகில இந்தியத் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை அவர்கள் திரும்பப் பெற்றுக் கொண்டதுதான். அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, வேறு வழியில்லாததால் அறுவர் குழு கலைக்கப்பட்டது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** அவர்களுக்கெல்லாம் கொடுத்த மதிப்பை எங்களுக்குக் கொடுத்திருந்தால், எல்லோரும் போன பின்னாலும் நாம் இருவருமாவது இருந்திருக்கலாமே (பலத்த சிரிப்பு).

DR. H. V. HANDE : I will be happy if the Hon. Chief Minister in his reply concerning Simpson and Company would say whether it is possible for the Chief Minister to think of holding an election as early as possible. I have a feeling that unless an election takes place and somebody—X, Y or Z, it does not matter—is elected, unless a democratic process is adopted there, it will not be possible to solve the problem. May I request the Hon. Chief Minister to give consideration to this point of view in an objective manner?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** இதைப்பற்றி வேறு விரிவாகச் சொல்லவில்லை. யோசித்துக்கொண்டிருக்கிறேன். அதைத்தான் திரு காடில்கர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன். அதைத் தொடர்ந்து ஏற்பாடுகள் நடைபெறும்.

சட்டம் ஒழுங்கு அமைதி கெட்டுவிட்டது என்று பேசுவதற்கு அடுத்தபடியாக—அடுத்தபடி என்று இல்லாமல் முதற்படியாகவே—ஊழல், லஞ்சம் இவைகளைப்பற்றி இந்த மாமன்றத்தில் அதிகமாகப் பேசப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட எந்தக் குற்றச்சாட்டும் எடுத்து வைக்கப்படாமல்—அதை விசாரியுங்கள், இதை

விசாரியுங்கள் என்று கூறுவது பொருத்தமுடையதல்ல, ஆதாரத்தோடு தெரிவிக்க வேண்டும் என்று அரசுத் தரப்பில் இருந்து விளக்கப்பட்டிருக்கிறது. அன்றைக்கு பார்வேட் ப்ளாக் உறுப்பினர் திரு. கே. கந்தசாமி அவர்கள் பழைய காங்கிரஸ் ஆட்சியைக் குற்றம் சாட்டிப் பேசியபோது கூட திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் "இப்படி எல்லாம் ஆதாரம் இல்லாமல் குற்றம் சாட்டுவது பொருத்தம் தானா? இப்படிச் சொல்வதை முதல் அமைச்சர் அவர்களால் விசாரிக்க முடியுமா? என்று கேட்டார்கள். நான் அதற்கு, "விளக்கம் தேவையில்லை, வதந்தி என்பது இருபுறம் கூருள்ள கத்தி போன்றது. பயன்படுத்துகிறவர்களையே தாக்கக் கூடும்" என்றேன். அதைத்தான் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். வதந்திகளை வைத்து நான் விசாரணை நடத்த முடியாது, குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளைச் சொன்னால் விசாரணை நடத்தத் தயார் என்று கூறியிருக்கிறேன்.

அரசியல் நிலையில் ஊழல் எப்படி நடைபெறுகின்றது என்று எண்ணிப்பார்த்தால், வெளியில் பேசுவதை எல்லாம் வைத்துக் கொண்டு முன்னாள் முதல் அமைச்சர் பெரிய அளவில் ஊழல் நடப்பதாகப் பேசிவருகிறார். என்ன ஊழல் நடந்தது? யார் காலத்தில் நடந்தது என்பதை மக்களே அறிவார்கள். 30 ஸ்டாண்டர்ட் எக்கராவை 15 ஸ்டாண்டர்ட் எக்கராவாகக் குறைத்ததன் காரணமாக எத்தனை ஏக்கராக்கள் அரசுக்குக் கிடைத்தன என்று கேட்கிறார்கள். 15 ஸ்டாண்டர்ட் ஏக்கராவாக நாம் குறைத்தபோது அதிகமான பலன் காணமுடியவில்லை. அதற்குக் காரணம் என்ன? இரண்டாயிரம் ஏக்கரா, மூவாயிரம் ஏக்கரா, நாலாயிரம் ஏக்கரா என்று நிலம் வைத்திருந்தவர்கள் எல்லாம் 1959-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு முன்னால் பெரும் பகுதியை விற்றுவிட்டார்கள். அப்படி நிலங்களை விற்றவர்கள் யாரேனும் ஒருவர் பெயருக்கு விற்றார்களா என்றால் இல்லை. குறிப்பாக திரு. கருப்பையா மூப்பனார்—கபிஸ்தலம்—அவர்களுக்குச் சொந்தமாக இருந்த நிலம் 2,028 எக்கராவாகும், அவரிடம் இருந்து சர்ப்பளஸ் எதிர்பார்த்தது 1983 எக்கராக்கள். ஆனால் 1959-ஆம் ஆண்டு கடைசியில் 1,464 எக்காராக்களை அவர் விற்றுவிட்டார். அந்த நிலங்களையும் 30க்கும் மேற்பட்டவர்களுக்கு விற்று இருக்கிறார். இப்படி விற்பனை செய்யப்பட்ட



வகையில் 1464 ஏக்கராக்கள் போய்விட்டன. கடைசியாக அவரிடம் இருந்து சர்க்காருக்குக் கிடைத்தது 5 ஏக்கராக்கள் தான்.

உக்கடை எ. அப்பாவுத் தேவர் அவர்களுக்குச் சொந்தமானது 1695 ஏக்கராக்கள். அவரிடம் இருந்து 1541 ஏக்கராக்களை அரசு எதிர்பார்த்தது. ஆனால் 60-ஆம் ஆண்டு உச்சவரம்புச் சட்டத்தின்படி அவரிடம் இருந்து கிடைத்தது 113 ஏக்கராக்கள் தான். காரணம் 59-ஆம் ஆண்டு கடைசிக்குள்ளாக அவர் 502 ஏக்கராக்களை 21 பேர்களுக்கு விற்றுவிட்டார். பாக்கி நிலங்களை டிரஸ்டுகளாக எழுதிவைத்துக்கொண்டுவிட்டார்.

உக்கடை எ. விஸ்வநாத தேவர் அவர்களுக்குச் சொந்தமானது 582 ஏக்கரா. அதில் இருந்து சர்க்காருக்கு ஒன்றுமே வரவில்லை. பூண்டி வ. வீரய்ய வாண்டையாருக்குச் சொந்தமானது 467 ஏக்கரா. அதில் இருந்தும் சர்க்காருக்கு ஒன்றும் வரவில்லை. பூண்டி வ. அப்பாவு வாண்டையாருக்குச் சொந்தமானது 385 ஏக்கராகள். அவரிடம் இருந்து 337 ஏக்கரா சர்ப்ளஸ் எதிர்பார்க்கப்பட்டது. 307 ஏக்கராக்களை விற்றுக்கொண்டுவிட்டார். கிடைத்தது 30 ஏக்கராதான். பூண்டி வி அப்பாசாமி வாண்டையாருக்குச் சொந்தமானது 625 ஏக்கரா. அதில் இருந்து 552 ஏக்கரா சர்ப்ளஸ் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திக்கொண்டுவிட்டார். ஆகவே அதில் இருந்து கிடைத்தது ஒன்றுமே இல்லை. ஆக வாண்டையார் குடும்பத்திற்கு மட்டும் நாலாயிரம் ஏக்கராக்களுக்கு மேல் 1959-ஆம் ஆண்டில் இருந்தும் 60-ஆம் ஆண்டு சட்டப்படி அந்தக் குடும்பத்தில் இருந்து 48, 49 ஏக்கராக்களுக்கு மேல் அரசுக்கு சர்ப்ளஸ் கிடைக்கவில்லை. இதைப்போல ஏற்கனவே வி. எஸ். தியாகராஜ முதலியாருக்கு மட்டும் ஏழாயிரம் ஏக்கரா கரும்புத்தோட்டம் என்கிற அடிப்படையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுவிட்டது.

நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த 138 பேர்களைப்பற்றி மட்டும் சொல்கிறேன். தஞ்சாவூர், மாயவரம், நாகப்பட்டினம் தாலுக்காக்களில் மட்டும் 138 பேர்களுக்கு 1959-ஆம் ஆண்டு இறுதியில் சொந்தமாக இருந்திருக்கக்கூடிய நிலம் 48,924 ஏக்கராக்கள். அதிலே 60-ம் ஆண்டு உச்ச வரம்பு சட்டப்படி அரசுக்குக் கிடைத்தது 6,624 ஏக்கராக்கள் தான் நான்

கேட்கிறேன், எப்படி திடீரென்று 1959 ஆம் ஆண்டு இறுதியில் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த இந்த 138 நிலச் சொந்தக்காரர்கள் மட்டும் தங்கள் நிலங்களை விற்றுவிட வேண்டும் என்று உணர்ச்சிக்கு வந்தார்கள்?

இதுபோன்ற உச்சவரம்புச் சட்டம் வரப்போகிறது என்று அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. என்ன என்ன அறக் கட்டளைகளுக்கு விலக்கு அளிக்கப் போகிறார்கள் என்பதும் தெரிந்துவிட்டது. ஒருவர் தம் பங்களாவில் உள்ள கிருஷ்ணன் படத்திற்கு பூஜை செய்வதற்காக என்று 63 ஏக்கராவை டிரஸ்ட் செய்து வைத்திருக்கிறார். கிருஷ்ணன் படத்து பூஜைக்காக டிரஸ்ட் எழுதிவைக்கட்டும். கல்விக்காக டிரஸ்ட் எழுதி வைக்கட்டும் கன்னிகாபரமேஸ்வரி அம்மனுக்காகவோ, காளிக்காகவோ, மாரியம்மனுக்காகவோ டிரஸ்ட் எழுதி வைக்கட்டும். டிரஸ்டுகள் என்ற பெயரால் எழுதிவைக்கப்பட்ட நிலங்களுக்கு விலக்கு அளிக்கப்படும் என்பது தெரிந்துவிட்டதன் காரணத்தினால்தான் அவர்கள் அன்றைக்கு அப்படி எழுதிவைத்தார்கள். நான் சொன்னது எல்லாம் 138 பேர்களுடைய கணக்குத்தான். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு. சுப்பையா அவர்களுக்குத் தெரியும். திரு. மணலி கந்தசாமி அவர்களுக்குத் தெரியும். சர்வோதய கமிட்டித் தலைவர் திரு. ஜகந்நாதன் அவர்களுக்குத் தெரியும். கட்டளைகளின் பெயரால இப்படிப் பல்லாயிரம் ஏக்கராக்களை எழுதி வைத்துவிடுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டதன் மூலம் அந்த மாவட்டத்தைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான நிலமற்ற ஏழை விவசாயிகள் 1960-ம் ஆண்டிலே ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். இதைவிட பெரிய ஊழல் ஒன்று இருக்க முடியுமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** 30 ஸ்டாண்டர்ட் ஏக்கராவை பதினைந்தாகக் குறைத்ததன் மூலம் அரசாங்கத்திற்கு எவ்வளவு நிலம் கிடைத்தது என்று சொல்ல முடியுமா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதைத்தான் சொல்கிறேன். அடிப்படை ஊழல் 1959லேயே நடந்துவிட்டது. 48 ஆயிரத்துச் சொச்சம் நிலங்களில் இருந்து கிடைத்ததே 6,624 ஏக்கராக்கள் தான் என்கிறபோது இதில் இருந்து அதிகமாக எவ்வளவு கிடைத்துவிட முடியும்? சிலர் 30 ஸ்டாண்டர்ட்





ஏக்கருக்கு வைத்திருந்தார்கள். இன்னும் சில புத்திசாலிகள் 25 ஏக்கராவுக்கு, 20 ஏக்கராவுக்குக் கூட குறைத்து வைத்துக் கொண்டிருந்தார்கள்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தவறு 1959-இல் நடந்தது என்று சொன்னதுபோல இப்போது தவறு நடக்கவில்லை என்பதற்கு எடுத்துக் காட்டாக இப்போது கிடைத்த நிலம் எவ்வளவு என்று சொல்வார்களா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நாலாயிரம் போனது பற்றிக் கவலையில்லை—யானை போனது பற்றிக் கவலைப்படவில்லை—பூனை போகுமோ என்று கவலைப்படுகிறார்கள். அந்தச் சட்டத்திற்கு இப்போதுதான் குடியரசுத் தலைவருடைய அனுமதி கிடைத்திருக்கிறது. அதன்பேரில் எடுக்கப்படுகிற நடவடிக்கைகள் பூர்த்தியானவுடன் இந்த விவரங்களும் தெரியும்.

DR. H. V. HANDE: Even in the Committee meeting where we all met, it was clearly decided that this sort of malpractice should be completely put down and that action must be taken. But the point is when the Chief Minister and the Cabinet brought this 15 acres ceiling, did the Government examine what is the quantum of available surplus and was it not placed before this House? In other words, were all these things taken into consideration? Now the Government is coming and saying in the House that practically nothing is there—practically very little and there is nothing much to be talked of. Why were all these things not considered? May I know whether it is also because of some malpractice that has taken place recently or is it because of the malpractice that took place earlier. After 15 acres ceiling has been brought, the Chief Minister says there is not much surplus land. . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, 1960-ல் நடந்ததுபோல் நடக்க முடியாது. அப்போதுதான் திட்டமிட்டு நடக்க முடிந்தது. இதெல்லாம் புள்ளிவிவரங்களிலிருந்து தெரிந்து ஆலோசனைக் கமிட்டியில்கூட தெரிவித்து அன்றைக்கு விவாதித்தோம்.

DR. H. V. HANDE: I will be the last man to subscribe to this. முதல் அமைச்சர் அவர்கள் உட்பட I am not particular about

[Dr. H. V. Hande] [1972 மார்ச் 10

any Minister or the Government. I want to know whether any person is trying to cheat now also. Because he says not much of surplus is available now. I want to know whether all these aspects were thoroughly gone into by the department or the Government. That is my question.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, நான் முழுவதும் ஆராய்ந்த பிறகு அந்தப் பட்டியலைப் பேரவையில் வைக்கத் தயாராக இருக்கிறேன். அதிகமாக வராது என்று தெரிகிறது. இரண்டாயிரம், மூவாயிரம் ஏக்கர்கள் கிடைக்கலாம். நாற்பதினாயிரம் ஏக்கர் சிறு சிறு அளவுகளாகப் பிரிக்கப்பட்டு விட்டது. அவர்களிடத்திலிருந்து எடுக்கும்போது கொஞ்சம் தான் கிடைக்கும். 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் உச்ச வரம்பு என்று இப்போது கொண்டு வந்திருக்கிறோம். இன்னும் நிலச்சீர்திருத்தம் பொறுத்தவரையில் வேறுபல சட்டங்களும் கொண்டு வருவோம். கரும்புத்தோட்டம், மேய்ச்சல் நிலங்கள் போன்றவைகளை ரத்து செய்தோம். கரும்புக்கு ஒதுக்கப்பட்ட நிலத்திற்குச் சட்டம் கொண்டுவர இருக்கிறோம். தொடர்ந்து சர்க்கார் அதிகாரிகளை வேகமாக நடவடிக்கை எடுக்கும்படி செய்து, எவ்வளவு நிலம் கிடைக்கும் என்ற அறிக்கையை நிச்சயமாக இந்த மன்றத்தில் வைப்பேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இதுகுறித்து ஆலோசனைக் குழு சிபாரிசு செய்திருக்கிறதா?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நான் படிப்படியாக சொல்ல இருக்கிறேன். எல்லாவற்றையும் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்வோம். இப்போது இந்த மன்றத்தில் வைத்து இருக்கும் உங்கள் யோசனையைப் பொறுத்தவரையில், ஒரு குழு அமைக்கப் பட்டு, அதன் அறிக்கை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

அடுத்தபடியாக, லஞ்சம், ஊழல் என்று சொல்லி, கழக அரசு நம்பிக்கை இழந்து இருக்கிறது என்று நம் மாநிலத்தில் இருக்கிற கட்சிகள் பேசுகிற நேரத்தில், பதுவை மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, மத்திய ஆட்சியில் அமைச்சராக இருக்கும் திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் தமிழ்நாட்டிற்கு வருகிற நேரத்திலே கட்சி அளவிலே பேசுகிற நிலைமை இருக்கிறது. அப்படிப் பேசுவதற்கு உரிமை இல்லை என்று நான் சொல்ல



1972 மார்ச் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

வரவில்லை. நீண்ட காலமாக காங்கிரஸ் கட்சியில் இருப்பவர்கள் அவர்கள் (சிரிப்பு). ஒரு மத்திய அமைச்சர் மாநில அமைச்சர் தாக்கல் செய்த நிதிநிலை அறிக்கையையொட்டி இவ்வளவு தரக்குறைவாகப் பேசியிருப்பது—என்னை மாத்திரமல்ல—இந்த மன்றத்தில் இருக்கின்ற அனைவரையும் புண்படுத்துகிறது என்று நான் நினைக்கிறேன். திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், 'திரு. மோகன் குமாரமங்கலம் அவர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறாரே' என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார். ஒருவேளை நான் அதற்குப் பதில் சொல்ல வேண்டுமென்ற காரணத்தால் அதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். அவர் என்ன சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் சென்னைக்கு அவர் வந்திருந்தபொழுது நிதிநிலை அறிக்கையின் ஆங்கில நகல் வேண்டுமென்று கேட்டார்கள். நானும் நினைத்தேன். திரு. மோகன் குமாரமங்கலம் போன்றவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டுப் பாராட்டுவார்கள் என்று மகிழ்ச்சியோடு இருந்தேன். அவர் நிதிநிலை அறிக்கையைப் படித்துவிட்டு, "கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்தை இவர்தான் கண்டு பிடித்தார் என்பதைப் போல் சொல்லியிருக்கிறார்" என்று கூறியது பத்திரிகைகளில் வந்திருக்கிறது. கங்கை-காவிரி இணைப்பு பற்றி நான் குறிப்பிட்டது ஆங்கிலக் குறிப்பை அப்படியே படிக்கிறேன்.

"On behalf of the State Government, I have discussed with the Union Planning Minister and the Union Minister for Irrigation the need to take up immediately the massive scheme of linking up the Cauvery with the Ganga."

என்றுதான் சொல்லியிருக்கிறேன்.

"நான்தான் கண்டுபிடித்தேன்" என்று சொல்வதாகச் சொல்லியிருக்கிறார். மேலும் அவர், "வேண்டுமானால் இவருக்கு இன்னொரு டாக்டர் பட்டம் கொடுக்கலாம்" என்று திரு. மோகன் குமாரமங்கலம் கூறியிருக்கிறார். டாக்டர் பட்டம் வந்ததுபற்றி கிண்டலுக்கு உரியது என்று தெரிவிக்கிறார். அப்படிப்பட்ட பெரியவர்களின் பாராட்டுக்களை நான் எதிர்பார்க்கவில்லை (சிரிப்பு).

கங்கை-காவிரி இணைப்பு பற்றி சர். சி. பி ராமஸ்சுவாமி அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்தில், "சர். சி. பி. ராமஸ்வாமி அவர்களைக்கொண்டு ஒரு குழு அமைக்கச் சொன்னார்களே" என்று கேட்ட நேரத்தில், இந்தப் பக்கத்தில் இருந்த அமைச்சர்கள் "அது குழு அல்ல. அப்படி ஒரு ஆலோசனை தெரிவிக்கப்பட்டது" என்றுதான் சொன்னார்கள். இந்தத் திட்டத்தைப்பற்றி இரண்டு மூன்று ஆண்டுகளுக்குமுன் நானும் தொழில்துறை அமைச்சரும், பொதுப்பணித் துறை அமைச்சர் திரு. சாதிக் பாட்சா அவர்களும் மத்திய அமைச்சரிடத்தில் பேசியிருக்கிறோம். கங்கை-காவிரி இணைப்பு என்பது புதிதாகக் கண்டுபிடித்தது என்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் 1971-ல் இந்திரா காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் போட்டுவிட்டோம், 'நாங்கள்தான் கண்டுபிடித்தது' என்று கூறி சின்ன பிள்ளைகள் எச்சில் துப்பிவைத்து, அதை யாரும் தொடக்கூடாது என்பார்களே அதுபோல திரு. மோகன் குமாரமங்கலம் பேசுகிறார். அவர் எத்தனை ஆண்டுக் காலம் காங்கிரஸில் ஈடுபாடு கொண்டு நிலைத்திருக்கிறார் என்று தெரியவில்லை (சிரிப்பு). அவர் அப்படிப் பேசுவது நல்லதல்ல.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார் :** தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர்களைப்பற்றிப் பேசுகையில், "சின்ன பிள்ளைகள் எச்சில் துப்பி வைத்து. . . என்று சொல்வது பொருத்தமானது அல்ல" என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மத்திய அமைச்சர்களை சொல்ல ஆரம்பித்துவிட்ட பிறகு, மாநில அமைச்சர்களும் சொல்லலாம்.

(திரு. கே. டி. கே. தங்கமணி எழுந்தார்.)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** "மாநில சுயாட்சியைக் கேட்டுவிட்டு, கங்கை-காவிரி இணைப்பைப்பற்றிச் சொல்கிறாரே, இதுபோன்ற முரண்பாடான கருத்து இருக்க முடியுமா?" என்று திரு மோகன் குமாரமங்கலம் கேட்டிருக்கிறார். அவர் கம்யூனிஸ்ட் கட்சியில் ரொம்ப நாளாக இருந்திருக்கிறார்கள். பிறகு வேறு





கட்சிக்குச் சென்றிருக்கிறார். அதைப்பற்றி திரு. மணலி கந்தசாமி அவர்களுக்கும், திரு. தங்கமணி அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். என்னைவிட அதிகமாகத் தெரியும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** தலைவர் அவர்களே, அதுகுறித்து திரு. மணலி கந்தசாமி அவர்கள் இந்தச் சபையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** ரஷ்யாவிடத்தில் அவருக்குப் பற்று உண்டு. ரொம்ப தொடர்பு உண்டு. ரஷ்யா நாட்டிலே மாநில சுயாட்சி இல்லையா? இருக்கிறது. அங்கே ஒழுங்காக இருக்கிறது. வால்கா, டான் போன்ற பல நதிகள் இணைக்கப்பட்டு, வாய்க்கால்கள் எல்லாம் இணைக்கப்பட்டிருக்கின்றன. ஏஷியாடிக் ரஷ்யா, யூரோப்பியன் ரஷ்யா என்ற இரண்டையும் இணைக்கின்ற அளவுக்கு வால்கா-டான் நதித் திட்டம் நிறைவேறி இருக்கிறது. அதேபோல ரைன் நதியானது பிரான்ஸ், ஸ்விட்ஸர்லாந்து, ஹாலந்து போன்ற நாடுகளை ஒன்றாக இணைக்கிறது. டான்யூப் நதி யூகோஸ்லோவியா, ஹங்கேரி, ஆஸ்திரிலியா, ஜெர்மனி ஆகிய நாடுகளை இணைக்கிறது. ஆகவே, கங்கை-காவிரி இணைவதால் மாநில சுயாட்சி இருக்க முடியாது என்று சொல்கிற வாதம் பொருத்தமற்ற வாதமாக, அர்த்தமற்ற வாதமாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். கங்கை-காவிரி இணைப்பு திட்டம் தேசிய ஒருமைப்பாட்டை இதன்மூலம் வலியுறுத்துகிறது என்று சொல்லலாம் அல்லவா? இந்த மாநில சுயாட்சியால் பிரிவினை நோக்கம் எள்ளளவும் கிடையாது என்பதை சொல்லிக்கொள்கிறேன். வெறுமனே பிரிவினையைக் கேட்கிறோம் என்று சொல்லிவிட்டுப் போய்விடக்கூடாது.

"People's Action"—Sarva Seva Sangh Journal of News and Views —என்ற பத்திரிக்கையில் ஸ்ரீ ஜயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் ஒரு கட்டுரையில் எழுதியிருக்கிறார். ஜயப்பிரகாஷ் நாராயண் என்னையெல்லாம் பெருமையாக எண்ணி, அதில் குறிப்பிட்டிருக்கிறார்.

"But at the same time it must be recalled with pride the ringing words of Chief Minister Mr. Karunanidhi which he is recently reported to have spoken at a public meeting at Thanjavur:

[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 10

"The demand for greater autonomy to the States", he declared, "was never meant to divide the country but only to promote the welfare of the people . . . The Prime Minister, Mrs. Indira Gandhi, herself could examine the demand for more powers to the States for advancing the people's interest without in any way affecting unity and integrity of the country."
என்று சொல்லிவிட்டு, மேலும் சொல்கிறார்.

"There is enough flexibility in our Constitution and our Central and State leaders have been wise enough to appreciate the limits within which the demand for autonomy may be pressed."

மேலும் சொல்கிறார், ஜயப்பிரகாஷ் நாராயண்,

"I myself have been a consistent advocate of a much larger measure of autonomy to the States in view of the vastness of our population and the diversity of our problems."
திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஆகவே நாம் மாநில சுயாட்சி என்பது திரு. கே. டி. கே. சொன்னது போல் தமிழ்நாட்டிற்கு மாத்திரம் கேட்பதல்ல. அது போல் தமிழ்நாட்டிற்குச் சுதந்திரம் கேட்கிறோம் என்றும் யாரும் நினைத்துக்கொள்ளக்கூடாது. நியூ யார்க் டைம்ஸிலே போட்டிருக்கிறார்கள் என்றால், அவர்கள் இந்தியாவுக்கு ஆதரவாகவும் எழுதலாம், எதிராகவும் எழுதலாம். அவர்கள் போடுவதற்கு நாம் பொறுப்பாளியல்ல. அமெரிக்காவுக்கும் நமக்கும் என்ன நட்புணர்ச்சி இருக்கிறது? போர் நிகழ்ந்த நேரத்திலே நமக்கெல்லாம் துரோகமிழைத்த நாடு அது என்பது இங்கேயுள்ளவர்களுக்கு எல்லாம் தெரியும். அவர்கள் தமிழ்நாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் ஒரு மோதலை உண்டாக்கிப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்களே தவிர, வேறு ஒன்றும் இல்லை. 'நியூ யார்க் டைம்ஸிலே வருகிறது என்றால் அங்கு இருந்து இங்கே வந்து பார்த்துச் சென்ற ஒரு எழுத்தாளரா எழுதுகிறார்? யாரோ இங்கு இருந்து அந்த கைங்கரியத்தை, அந்தப் புண்ணிய காரியத்தை. அந்த திவ்ய காரியத்தை செய்திருக்கிறார்கள்



1972 மார்ச் 10] [டாக்டர் மு. கருணாநிதி]

என்பது தானே தவிர வேறு இல்லை, யார் எழுதியிருப்பார்கள் என்பது நமக்கு எல்லாம் தெரியும்.

இராஜபாளையம் மாநாட்டில் ஸ்டேட் அட்டானமியைப்பற்றி நான் ஒன்றரை மணி நேரம் பேசியிருக்கிறேன். நாவலர் அவர்கள், கழகத்தின் பொதுச்செயலாளர் பேசியிருக்கிறார்கள், இன்னும் மற்ற கழகத் தலைவர்களும் பேசியிருக்கிறார்கள், இவற்றைப்பற்றி எல்லாம் ஒரு வார்த்தையாவது எழுதியிருக்கிறதா? ஆனால் இராணுவப்படைகூட கேட்கலாம் என்று ஆசைத்தம்பி சொன்னால் அதைப்பெரிதுப்படுத்திப் போடுகிறார்கள், எழுதுகிறார்கள். அன்றைக்கே நாவலர் அவர்கள் அதை விளக்கியிருக்கிறார்கள். ஆசைத்தம்பி எது, எது கேட்கலாம் என்று கேட்டார்கள், நானும் கழகத் தலைவரும் எது எது கேட்கிறோம் என்பதைச் சொன்னோம் என்று வெகு அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். இதையெல்லாம் பொருட்படுத்தாமல் வேண்டுமென்றே விஷமத்தனமாக மாற்றிச் சொல்கிறார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்லிக்கொள்கிறேன், மாநில சுயாட்சி கேட்கிற திராவிட முன்னேற்றக் கழகம் இந்திய ஒருமைப்பாட்டிலே இந்திய ஒற்றுமையிலே திடமான கருத்தைக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவைப் போன்ற நாடுகள் தூபம் போட்டு இந்தியாவிலே நிலவும் ஒற்றுமையைக் கெடுப்பார்களானால் நான் நாலரைக் கோடி தமிழ் மக்களின் சார்பிலே அறைகூவல் விடுக்கிறேன், அமெரிக்காவின் எந்த ராஜதந்திரிகளாக இருந்தாலும் அவர்கள் இதிலே வெற்றிபெற முடியாது, வெற்றி பெற முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி).

இந்தியாவைப் பிரிப்பதோ, இந்திய நாட்டைத் துண்டாடுவதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேலையல்ல. ஸ்டேட் அட்டானமி வேண்டுமென்று, மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று மைசூர் மாநிலத்தின் சிண்டிகேட் காங்கிரஸ் தலைவர் வீரேந்திர பாட்டீல் அவர்கள் கேட்கிறார்கள், அங்குதான் திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சென்று அவர்களுக்கு வாக்களிக்கவேண்டுமென்று பேசியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி. இப்பொழுது மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்ற கருத்தை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால், கேட்கும்பொழுது நீங்கள் முஜிபீர் பட்டத்தைப்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 10

போட்டுக் கொள்வதும், நாங்கள் பிரிந்துபோவோம் என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோகரன் அவர்கள் பேசுவதும் பொதுமக்களைத் தவறான பாதைக்கு அழைத்துச் சென்றுவிடுமோ என்ற எண்ணத்திலே அதை முன்னாலேயே திருத்தி சரியாகக் கட்டுப்படுத்துங்கள் என்று சொல்கிறோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** நண்பர் மனோகரன் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள். அவர்கள் அப்படிச் சொல்லவில்லை என்று சொல்லி இருக்கிறார்கள். மைசூர் மாநிலத்திலே உங்களுடைய கட்சிக்காரர் அதிக அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார், ஆதரிப்போம் என்று பேசுகிறீர்கள். ஆனால் மாநில சுயாட்சி என்று நாங்கள் கேட்கிறபோது ஆதரிக்க மறுக்கிறீர்கள். அப்படியானால் அவர்களை ஆதரிக்கிறீர்கள்?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உங்களையும் நாங்கள் ஆதரிக்கிறோம், ஆனால் கேட்கும் முறை இருக்கிறது, அவர்கள் கேட்பதற்கும் நீங்கள் கேட்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** மாநில சுயாட்சியை நீங்கள் ஆதரிக்கிறீர்களா, இல்லையா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** என்ன என்ன அதிகாரங்கள் கேட்கிறோம் என்று நீங்கள் வரையறுத்துச் சொல்லுங்கள், நாங்கள் எந்த எந்த அதிகாரங்களைக் கேட்கலாம் என்று விரும்புகிறோமோ, அதை ஆதரிப்போம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** கர்நாடக மாநிலத்தில் சிண்டிகேட் காங்கிரஸ் கட்சி ஒரு தேர்தல் பிரகடனம் வெளியிட்டிருக்கிறது, அதிலே வீரேந்திர பாட்டீலின் படம் போட்டு வெளியிட்டிருக்கிறார்கள். அவர்கள் அதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

'Will fight in a determined manner for greater autonomy for the State and against all discrimnations and step-motherly treatment by the Centre.'

அதிலே அட்டானமி என்று தான் சொல்லியிருக்கிறார்கள், அதிகாரங்கள் வேண்டுமென்றுதான் கேட்டிருக்கிறார்கள், இன்ன இன்ன அதிகாரங்கள் வேண்டுமென்று விளக்கிச் சொல்லவில்லை, ஆனால் அவர்களை நீங்கள் ஆதரிக்கிறீர்கள். நாங்களும் அப்படித்தான் அட்டானமி என்று கேட்கிறோம், எங்களை ஆதரிக்க மறுக்கிறீர்கள்.



[டாக்டர் மு. கருணாநிதி] [1972 மார்ச் 10

**திருமதி த. ந. அனந்தநாயகி:** எது எது கேட்பார்கள் எங்கள் கட்சிக்காரர்கள் என்பது எங்களுக்குத் தகவல் தெரியும். ஆனால் உங்களை நாங்கள், எதை எதைக் கேட்கிறீர்கள் என்று கேட்க முடியாது. அதனால்தான், எதை எதைக் கேட்கிறீர்கள் என்று சொல்லுங்கள் என்று சொல்கிறோம்.

**திரு. ஆர். பொன்னப்ப நாடார்:** எங்களுடைய கட்சியின் காரியக் கமிட்டியிலே இன்ன இன்ன அதிகாரங்கள் வேண்டுமென்று திட்டவட்டமான முடிவு செய்திருக்கிறார்கள். தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அந்த வரம்புக்குட்பட்டுத்தான் நாங்கள் செயலாற்றுவோம்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** என்ன என்ன அதிகாரங்கள் கேட்கிறார்கள் என்று தெரியும் என்று சொன்னார்கள். அதை அவர்கள் விளக்கிச் சொன்னால் நல்லது.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** அதற்கு என்று தனியாக நேரம் ஒதுக்கிக் கேட்டால் நான் தயாராக இருக்கிறேன் எஜுகேட் பண்ணுவதற்கு.

**Dr. H. V. HANDE:** Sir, the Hon. Chief Minister has just now explained what the Leader of the D.M.K. Parliamentary Party had stated. But I have got the issue of the newspaper 'Thennagam' which is run by the persons belonging to the D.M.K., with me now and in that paper he has clearly stated that if the people went on teasing the D.M.K. like that, there would come a stage when they would be forced to reopen the issue of separation. On those lines his speech has been reported in several other papers also. With the permission of the Chair, I am even prepared to read the relevant portion of his speach. Also, the Hon. Chief Minister has stated that he would go to Court if anyone charged his party that it was preaching session. But does the Hon. Chief Minister dare take action against the members of his Party who had stated: 'Bhutto will have the last laugh'.

இதுகூடக் கேட்கலாம் என்று அவரது அகராதியிலே கேட்கிறார்கள். ஆனால் நாவலர் அவர்களுடைய அகராதியிலே எது கேட்கலாம் என்று விளக்கியிருந்தார்கள் என்று சொன்னார்கள்.

[டாக்டர் எச். வி. ஹாண்டே] [1972 மார்ச் 10

I feel that the Hon. Chief Minister is losing control over the entire situation and he might be reaching a point of no-return and that is why I am cautioning the Government . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி.** தலைவர் அவர்களே, கட்சியினுடைய தீர்மானம்தான் எடுத்துக்கொள்ளப்படவேண்டுமே தவிர, தீர்மானத்தையொட்டிப் பேசப்படுகிற கருத்துக்களை வைத்துப் பேசப்படுவது முறையல்ல. மாநில சுயாட்சி இல்லாவிட்டால் பிரிவினையில் முடிந்துவிடும் என்று சொன்னார்கள். ஏன் மாநில சுயாட்சி இல்லாமல் போகப்போகிறது? இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் என்ன ஜனநாயகம் தெரியாதவர்களா? மாநில சுயாட்சிக்காக வாதாடாதவர்களா? இப்பொழுதே அனந்தநாயகி அம்மையார் அவர்கள் மாநில சுயாட்சி வேண்டுமென்று தெரிவித்துவிட்டார்கள். அவர்கள், என்ன என்ன அதிகாரங்கள் என்று சொல்லுங்கள், ஏற்றுக்கொள்கிறோம் என்று சொன்னார்கள். தனியாகச் சொல்லுவதாகக் குறிப்பிட்டார்கள். வீரேந்திர பாட்டீல் அவர்கள் ஒரு இடத்திலே குறிப்பிடுகிறார்கள்.

'Further, our Party will strenuously strive for getting greater powers for the State commensurate with the responsibilities and obligations to the people cast by the Constitution without affecting the unity and integrity of the country.'

இதைத்தான் நாங்களும் சொல்கிறோம்.

இதைக் குறிப்பிட்ட அவர்களே தான் இதிலே எவ்வளவு தீவிரமான வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும்.

'will fight in a determined manner'.

என்று உறுதியான தன்மையிலே சொல்கிறார்கள். அது மட்டுமல்ல. நாங்கள் கேட்பது வெறும் அட்டானமி. அவர்கள் கேட்பது "for greater autonomy for the State and against all discrimination and step—motherly treatment by the Centre." என்கின்ற அளவுக்கு வீரேந்திர பாட்டீல் உறுதியாகக் கேட்டிருக்கிறார். நான் பேசிய அதே நாளிலேதான் வீரேந்திர பாட்டீல் கட்சியைச்



1972 மார்ச் 10] திருமதி த. ந. அனந்தநாயகி]

சேர்ந்தவர்களை ஆதரித்து அனந்தநாயகி அம்மையார் அவர்கள் பெங்களூரிலே அங்கே வெளியிடப்பட்டிருக்கிற தேர்தல் பிரகடனத்தின் அடிப்படையிலே வாக்குகள் கேட்டுக்கொண்டு வந்திருக்கிறார்கள். ஸ்டேட் அட்டானமி என்று நாங்கள் சொன்னால் தவறு, அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் சொன்னால் தவறில்லை. வேண்டுமானால் நாங்கள் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறோம், மாநில சுயாட்சி வேண்டுமென்று காமராஜர் கேட்டால், கிரேட்டர் அட்டானமி வேண்டுமென்று வீரேந்திர பாட்டீல் கேட்டாரே அதே வாசகத்தையே காமராஜர் கேட்டால், நாங்கள் கொஞ்சம் ஒதுங்கி நிற்கிறோம, வீரேந்திர பாட்டீல் கேட்கிற வாசகத்தை காமராஜ் அவர்கள் கேட்டால் அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்துக் கூட நிற்கிறோம். கிரேட்டர் அட்டானமி வேண்டுமென்று சொல்கிற துணிவு காமராஜருக்கு இருக்கிறதா? வீரேந்திரபாட்டீல் சொல்கிற கிரேட்டர் அட்டானமி வெண்டுமென்று சொல்கிற அளவுக்குத் துணிவு அனந்தநாயகி அம்மையாருக்கு இருக்கிறது? அப்படிச் சொன்னால் அவர்கள் பின்னாலே நாங்கள் அணிவகுத்து நிற்கத் தயாராக இருக்கிறோம்.

இதுவரையிலும் இந்த விவாதத்திலே கருத்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு நேரம் அதிகமாகிவிட்டதால் இதற்கு மேலே மற்ற மற்ற பிரச்னைகளை எல்லாம் அந்த அந்த மானியங்கள் எடுத்துக் கொள்ளப்படுகின்றபோது விவாதித்துக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் அலுவல்கள் இன்று இந்த அளவில் முடிவடைந்து பேரவை மீண்டும் நாளை காலை 9 மணியளவில் கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது.

## 4. பேரவையின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

54. Notification issued with Roc. No. 29691--70-E5, dated the 24th December 1970, in regard to extension of section 286 and relevant provisions relating to vital statistics under the Tamil Nadu

District Municipalities Act, 1920, within the jurisdiction of the Porto Novo Town Panchayat of South Arcot district. [Laid on the Table of the House under section 179 (4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

55. Notification issued with G.O. Ms. No. 3862, Public (Services-A), dated the 30th December 1971, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for exclusion of the post of Gazetted Manager, Childrens' Theatre, Madras, in the office of the Director of Information and Publicity from the Commission's purview. [Laid on the Table of the House under Article 320 (5) of the Constitution of India).]

### B. *Reports, Notifications and Other Papers.*

57. Erratum issued with Roc. No. 208985/69-E5, dated the 16th August 1970, to the notification published at page 123 of Part II—Section 2 of the *Tamil Nadu Government Gazette*, dated the 10th **May 1957.**

# தமிழ்நாடு சட்டப் பேரவை.

---

**சனிக்கிழமை, 1972 மார்ச் 11.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

### சென்னைப் பெருநகர்த் திட்டம்

*433 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை பெருநகர்த் திட்டத்திற்கு மத்திய அரசின் அனுமதி கிடைத்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** சென்னைப் பெருநகர்ப் பகுதி மேம்பாட்டிற்கான இருபதாண்டு காலத்திட்டம் மத்திய அரசிற்கு அனுப்பப்பட்டு, நிதி உதவி மத்திய அரசிடமிருந்தும், உலக வங்கி ஐக்கிய நாடு முகவாமைப்பிடமிருந்தும் எதிர்பார்க்கப் படுகிறது.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்த சென்னை பெருநகர்த் திட்டத்தில் எந்தெந்தக் காரியங்கள் அடங்கியுள்ளன என்பதனையும் இது நிறைவேற்றப்பட எத்தனை ஆண்டுகள் ஆகும் என்பதனையும் அறிவிக்க இயலுமா ?

**மாண்புமிகு திரு க. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், சென்னை மாநகரத்தைச் சுற்றிலுமுள்ள செங்கற் பட்டு மாவட்டத்தினுடைய பகுதிகளில் பலவற்றைச் சேர்த்து 459 சதுர மைல் உள்ள அளவுக்கு, இன்னும் இருபதாண்டுக் காலத்தில், அதாவது 1991-ம் ஆண்டில், இந்த நகரத்தைச் சுற்றி எப்படி எப்படி மாபெரும் வளர்ச்சி ஏற்பட்டுவிடும் என்பதை

அடிப்படையாக வைத்து, அந்த மக்கள் தொகை வளர்ச்சியும், போக்குவரத்து நெருக்கடியும், சுகாதாரத் தேவையும், கல்வித் தேவைகளும் எப்படியெப்படி விரிவடையும் என்பதைக் கருத்திற்கொண்டு அவையெல்லாம் நிறைவேற்றப்படுவதற்கு வழி வகுப்பதற்காக, அந்த வழி வகுக்கப்படாவிட்டால் ஏற்படக்கூடிய பெரிய பாதகத்தைத் தடுப்பதற்கு இருபதாண்டுக் காலத் திட்டமொன்று 938 கோடி ரூபாய் அளவுக்குத் தீட்டப்பட்டிருக்கிறது. இது ஏறத்தாழ இரண்டாண்டுக் காலமாகப் பரிசீலிக்கப்பட்டது. இந்தத் திட்டம், சாலை மேம்பாடு, நீர் வழங்குதல், கழிவுநீர் அகற்றும் திட்டம், வீட்டு வசதித் திட்டம், குடிசை மாற்றுத் திட்டம் ஆகியவையும், பள்ளி, மருத்துவமனை போன்ற பல்வேறு வசதிகளும் இந்தப் புறநகர்த் திட்டத்தில் அடங்கியவையாகும்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** இந்த 938 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்படவிருக்கும் இருபதாண்டுத் திட்டத்தில் பாதாள இரயில் போடுவது போன்ற அம்சங்களும் சேர்ந்திருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** போக்குவரத்து வசதி என்கிற பகுதியில் அதுவும்கூட இருக்கக்கூடும். ஆனால், அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

* 434 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Public Health be pleased to state whether this Government have requested the Centre during 1971 to give financial assistence for the development of Madras Metropolitan Area ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஆம்.

**திரு. என். கே. பழனிசாமி:** இந்த 938 கோடி ரூபாய்த் திட்டத்தில் மாநில சர்க்காரின் பங்கு என்ன? மத்திய சர்க்கார் பூராச் செலவுத் தொகையும் கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறதா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** மத்திய அரசு இன்னும் இதை விவாதத்திற்குரிய ஒரு பிரச்சினையாக வைத்திருக்கிறது. விவாதித்து முடிவு எடுக்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல் உலக வங்கி ஐக்கிய நாடு முகவரமைப்பின் குழுவைச் சேர்ந்தவர் இங்கே வந்திருந்தார். Mr. Westebbe,





Chief Urban Development Division, visited Madras in November 1969. அந்த உலக வங்கி 'அபிஷியல்' இங்கே வந்திருந்தார். இப்படியெல்லாம் வந்திருந்தும்கூட, என்ன என்ன வகையில் அவர்கள் உதவி செய்ய முடியும் என்பதைத் தீர்மானமாகத் தெரிவிக்கவில்லை. மத்திய அரசுக்கு வந்திருக்கும் குறிப்பில்,

The Ministry of Works and Housing, Government of India have sent their tentative comments on the plan suggesting in effect that rising urban property values should be mopped up to minimise subsidies for development. The Centre also suggested discussion on the subject.

என்று தெரிவித்திருக்கிறார்கள். அதுபற்றி மேலும் விரிவாகப் பேசவேண்டும் என்ற கருத்தையும் இந்த வளர்ச்சித் திட்டத்தில், இங்கே உள்ள நிலைபொருள்களாகவுள்ள வீடு முதலியவற்றினுடைய மதிப்பு உயர்வதைப் பொறுத்துக் கிடைக்கக்கூடிய வருமானமும் கணக்கிடப்படவேண்டும் என்ற கருத்தும் இருக்கிறது.

**திரு. நா. வீராசாமி:** 938 கோடி ரூபாய்க்கு திட்டம் போட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும் மத்திய அரசுடன் இன்னும் கடிதப் போக்குவரத்திலேயே இருந்துகொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதைத் துரிதப்படுத்தி உடனடியாக செயல்படுத்துவதற்கான ஆக்க வேலைகளை அரசாங்கம் செய்யுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இரண்டு அரசுகளுக்கிடையே இதுபற்றிய உரையாடல் நடத்தப்படவேண்டிய கட்டம் இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. இது நல்ல நோக்கமுள்ள திட்டம் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். நிறைவேற்றுவதற்கான வழி வசதி வாய்ப்புக்களைப்பற்றிப் பேசவேண்டியிருக்கிறது. இந்தத் திட்டம் 938 கோடி ரூபாய் மொத்த அளவில் இருபதாண்டுக் காலத்தில் என்று சொல்லப்பட்டாலும், குறைந்த அளவுக்காவது ஏறத்தாழ 185 கோடி ரூபாய் அளவுக்காவது முதல் ஐந்தாண்டுக் காலத்தில் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. எந்த அளவுக்கு நிதி வசதி தருவதற்கு மத்திய அரசு இசைந்து வருகிறார்களோ அந்த அளவுக்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்.

[1972 மார்ச் 11

**திரு. என். கே. பழனிசாமி:** ஏற்கனவே 'க்ரேட்டர் கல்கத்தா', 'க்ரேட்டர் பாம்பே' போன்ற திட்டங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, வெளிநாட்டு நிபுணர்களும் பரிசீலனை செய்து, அதற்காகக் கடனும் கேட்கப்பட்டு, கடைசியில் மறுபடியும் பரிசீலனை செய்யவேண்டும் என்று அவற்றையெல்லாம் கைவிட்டு விட்டார்களே, அதேமாதிரி இந்தத் திட்டமும் கைவிடப் படாமலிருக்க சர்க்கார் என்ன முயற்சிகள் செய்யும் என்று தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** தொடர்ந்து வலியுறுத்துவது ஒன்றுதான் இதற்குப் பரிகாரம். இல்லையானால், நம்முடைய மக்களே எதையும் தாங்கும் இதயம் பெற்று இதை நிறைவேற்றுவதற்கு அவர்கள் ஒத்துழைப்புத் தர முன்வருவார்களானால், அது பெருமளவுக்கு நிறைவேற்றப் படாவிட்டாலும் முக்கியமான அளவுக்காவது நிறைவேற்றப் படுவதற்கு வழி ஏற்படும்.

**திரு. கோ. இளங்கோவன்:** சென்னை மாநகரத்தின் தற்போதைய மக்கட் தொகை என்ன? நாம் விரிவுபடுத்த இருக்கிற அந்த சென்னை மாநகரத்தின் மக்கட்தொகை இருபதாண்டுக் காலத்திற்குப் பிறகு எந்த அளவில் இருக்கும் என்று இந்த அரசு கணக்கிடுகிறது?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** இப்பொழுதுள்ள சென்னை மாநகரத்தின் மக்கட்தொகை 25 லட்சம். சென்னை நகரத்தைச் சுற்றிலும் உள்ள பகுதிகளில் 5 லட்சம், 10 லட்சம் பேர் வாழ்கிறார்கள். சென்ற முப்பதாண்டுக் காலத்தில் மூன்று மடங்கு மக்கட்தொகை பெருகியிருப்பதாக ஒரு கணக்கு இருக்கிறது. எவ்வளவுதான் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் பேசப்பட்டாலும், அதற்கிடையிலே இது இன்னும் இரண்டு மடங்கு, மூன்று மடங்காகப் பெருகும். ஏறக்குறைய ஒரு மில்லியன் என்று சொல்லலாம் என்று எதிர்பார்க்கலாம். நான் சொல்லுகிற புள்ளிவிவரம் சரியாக இல்லாமலிருந்தால் அதற்கு நான் இப்பொழுது பொறுப்பு அல்ல.

**திரு. என். கே பழனிசாமி:** இந்த மாதிரி திட்டம் நீட்டுகிற போது, அடையாறிலிருந்து சென்ட்ரல் வழியாக மின்சார இரயில் பாதை போடுவதற்கு இதில் வழிவகை இருக்குமா?



1972 மார்ச் 11]

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அப்படி ஒரு திட்டம் தனியாகவே பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இந்தத் திட்டத்தில் அது எந்த வகையில் எப்படி உள்ளடங்கியிருக்கிறது என்ற விவரம் இப்பொழுது என்னிடத்தில் இல்லை.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** உப தலைவர் அவர்களே, இந்த மெடர்பாலிடன் சிடி ப்ளானில் 'டிபென்ஸ் டிபார்ட்மென்டின்' பெரும் பங்கும் உள்ளது. அப்படியிருந்தும் கூட, அவர்கள் ஐலண்டு கிரௌண்டில் கட்டடம் கட்டுவதற்கு அரசாங்கம் தடை விதித்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** ஒரு அரசாங்கம் இன்னொரு அரசாங்கத்திற்குத் தடை விதிப்பதென்பது அந்த அரசாங்கங்களுக்கிடையேயிருக்கும் நல்லெண்ணம், நல்லுறவு ஆகியவைகளைப் பொறுத்தது. ஆனால், நீதிமன்றத் தடை காரணமாக தற்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. விசாரணை முடிகிற போதுதான் தெரியும்.

**திருமதி ஜோதி வெங்கடாசலம்:** உப தலைவர் அவர்களே, ஸ்டே ஆர்டர் வாங்கியிருப்பது தெரியும். ஆனால், இந்த மாஸ்டர் ப்ளானில் டிபென்ஸ் டிபார்ட்மென்டிலே போடக்கூடிய கட்டடங்களெல்லாம் சேர்ந்திருக்கின்றன. ஆகையால், ஐலண்டு க்ரௌண்டில் கட்டடம் கட்டுவதைத் தடுக்க ஸ்டே ஆர்டர் இருந்தாலுங் கூட, கட்டடம் அங்கு வராமலிருப்பதற்கும் இந்த அரசாங்கம் மத்திய அரசுக்கு எடுத்துக்கூறுமா?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன்:** அரசாங்கம் தொடர்ந்து அந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர்களும் பிரதமரை நேரடியாகக் கண்டு இதைக் குறித்து எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இந்தத் திட்டம் என்பது புறநகர் விரிவுத் திட்டம் என்று கருதப்பட வேண்டும். இந்த டிபென்ஸ் டிபார்ட்மென்ட் பிரச்சினையை, அதிலே ஏற்படுகிற பாதகத்தை—அகநகர்த் திட்டமாகத்தான் கருதுகிறேன். இந்தப் புறநகர் விரிவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ சென்னை நகரத்தையொட்டிய 25 மைல் தூரத்திற்கு—முக்கியமாக தாம்பரம், ஆலந்தூர் போன்ற பகுதிகளும், அதேபோல் ஆவடி, அம்பத்தூர் போன்ற பகுதிகளும், கும்முடிப்பூண்டி போன்ற

[1972 மார்ச் 11

பகுதிகளும் அந்தப் பகுதியையொட்டியுள்ள எண்ணூர் ஆகிய சிறு சிறு நகரங்களாகச் சுற்றிலும் உள்ளவை பெருநகரங்களாக வளர முன்கூட்டி திட்டமிடுவதையும், அவற்றை சென்னை நகரத்தோடு இணைப்பதும், அந்த இணைப்பு பொருத்தமான இணைப்பாக அமைவதற்கு வகை செய்வதாகும்.

## கிராமப்புறப் பகுதியிலுள்ள மருத்துவர்கள்

* 435 வினா—திரு. எம் முத்தையா : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மருத்துவத் துறையில் பட்ட மேற்படிப்புக்காகவும், தமிழ்நாடு பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கும் தேர்ந்தெடுக்கும்பொழுது கிராமப் புறங்களில் அதிக நாள் பணிபுரிந்த மருத்துவர்களுக்கு முதலிடம் கொடுக்கும் உத்தேசம் அரசிடம் உண்டா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள விதிகளில் இவ்வகையாக கிராமங்களில் மருத்துவப்பணி ஆற்றுகிறவர்களுக்கு முக்கியத்துவம் அளித்திட வழி செய்யப்பட்டுள்ளது.

**திரு. எம். முத்தையா :** தலைவரவர்களே, இப்படிப்பட்ட மருத்துவத்துறையில் பட்ட மேற்படிப்பிற்குத் தேர்ந்தெடுக்கும் பொழுது அரிசனங்களுக்காக ஒதுக்கீடு இல்லை என்று சொல்லப் படுகிறதே, அது உண்மையா? அப்படி இருந்தால் அரசு அதைப் பரிசீலனை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. அன்பழகன் :** தலைவரவர்களே, மிகச் சிறப்பான நுண்ணறிவு தேவைப்படும் பயிற்சிகளுக்கு அப்படி வகுப்புவாரியாக ஒதுக்கப்படும்பொழுது முழுத் தகுதியுடைய வர்கள் இடம் பெறாமல்போய் தகுதியற்றவர்கள் இடம் பெறக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு அது வேறு பிரச்னைகளுக்கு வழிகோலி விடும். ஆனால் எந்த அளவிற்கு தாழ்த்தப்பட்ட மக்களும் சிறு பான்மை இனத்தவர்களும் விண்ணப்பிக்கிறார்களோ அதை அளவாகக் கொண்டு யார் யாருக்கு என்று, குறைந்தபட்ச தகுதி யிருந்தாலும் முயற்சி செய்யப்படும்.



1972 மார்ச் 11]

## திருப்பூர் குமரனின் வீடு

* 426. வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) விடுதலை வீரர் திருப்பூர் குமரன் குடியிருந்த வீட்டை வாங்கி நினைவுச் சின்னம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

(இ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** (அ) இல்லை.

(இ) இதற்குப் பொதுமக்கள் முயற்சியெடுக்க வேண்டும்.

**திரு. எம். தேவராசன் :** தலைவரவர்களே, அறிஞர் அண்ணா விற்கு ஒரு நினைவுச் சின்னமாகப் போற்றும்வகையில் காஞ்சியில் உள்ள இல்லத்தை வாங்கி நினைவுச்சின்னம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இது வேறு கேள்வி.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சார், பொதுவாக தமிழகத்திலே திருப்பூர் குமரன் என்றாலே கொடி காத்த குமரன் என்று நாடு பூராவும் பரவியிருக்கும் நேரத்தில், அவருடைய வீடு வெகு சிறிய வீடுதான், அவருடைய மனைவிதான் இருக்கிறார்கள், அவர்களுக்கு ஏற்பாடு செய்து அந்த வீட்டை எடுப்பதால் நல்ல காரியமாக இருக்கும் என்ற முறையில் இதை அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பொதுவாக தொல்பொருள் ஆராய்ச்சித்துறையினர் வரலாற்றுச் சிறப்படைய, கலைச் சிறப்புடையவைகளையும் மற்றவைகளையும் தான் பாதுகாக்கும் வகையிலே பெரும்பாலும் தொல்பொருள் ஆராய்ச்சித் துறையினர் ஈடுபட்டு காப்பாற்றி வருகிறார்கள். சுமார் 100 ஆண்டு காலத்திற்கு முன்பு வாழ்ந்த முக்கியமானவர் களின் பழமைப் பொருட்களைக் காப்பாற்ற அந்த இலாக்காவில் இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட போர் வீரர்கள், நாட்டுக் குழைத்தவர்கள் போன்றவர்களைப் போற்றும் வகையில் நினைவுச் சின்னங்கள் எழுப்புகின்ற முயற்சியில் சிலை வைப்பது அல்லது

வேறு நினைவுச் சின்னங்கள் எழுப்புவது என்ற முறையில் அதற்கென்று பொதுமக்கள் குழு அமைக்கப்பட்டு நினைவுச் சின்னங்கள் திறக்கப்பட்டு, பாதுகாக்கும் பொறுப்பு அந்தந்த நகராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்படுகின்றன. சிலைகள், மற்றவைகளுக்கான பராமரிப்புச் செலவை அந்தக் குழுவினரிடமிருந்து நகராட்சி மன்றங்களில் பெறுகிறார்கள். அந்த வகையில் குழு அமைத்து, திருப்பூரில் அந்த முயற்சியைச் செய்து நினைவுச் சின்னத்தை அங்கே அமைத்தால் அதைப் பராமரிக்கின்ற பொறுப்பை நகராட்சி மன்றம் மேற்கொள்வதற்கு முயற்சிக்கலாம். திருப்பூரில் திருப்பூர் குமரனுக்கென்று சிலபல நினைவுச் சின்னங்களை வைத்திருக்கிறார்கள். இந்த முயற்சியிலும் பொதுமக்கள் ஒத்துழைத்தால் நகராட்சி மன்றமும் ஒத்துழைக்கலாம்.

**கரக ஆட்டம்.**

*427. **வினா—திரு. பி. எஸ். மணியன்**: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நம் நாட்டில் சிறந்து விளங்கும் கரக ஆட்டக்காரர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி நமது கலை நுணுக்கத்தை வெளிப்படுத்தும் சொற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: சங்கீத நாடகக் கழகம் இதற்கான பரிந்துரைகளைச் செய்தால், அரசு பரிசீலிக்கும்.

**திரு. பி. எஸ். மணியன்**: தலைவரவர்களே, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களிலே தலைசிறந்த கரக ஆட்டக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் இப்போது இலங்கை, மலேயா போன்ற நாடுகளுக்கு தங்கள் சொந்தப் பொறுப்பிலே சென்று வருகிறார்கள். மகத்தான வரவேற்பு அந்த ஆட்டங்களுக்கு அங்கே இருப்பதாகத் தெரிவிக்கிறார்கள். ஆகவே, அரசு சார்பிலே அமெரிக்கா, ரஷ்யா போன்ற பெரிய நாடுகளுக்கெல்லாம் அவர்களை அனுப்பி வைத்து நம்முடைய பண்டைய நுணுக்கமான தலைசிறந்த ஆட்டமான இந்தக் கலையைப் பரப்புவதற்கு அரசே நேரடியாக தலையிட்டு ஆவன செய்யுமா ?



**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே, கிராமிய நடனக்காரர்கள், புரவி ஆட்டக்காரர்கள் போன்றவர்கள் இந்திய நாட்டின் பல்வேறு மாநிலங்களுக்குச் சென்று வருகிறார்கள். 1969-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ம் தேதி முதல் 18-ஆம் தேதிவரையில் புரவி ஆட்டம் சுந்தரமூர்த்தி குழுவினர் உத்தரப் பிரதேசத்திற்குச் சென்று புரவி ஆட்டம் காண்பித்து புகழோடு திரும்பியிருக்கிறார்கள். குடியரசு நாளிலேயும் இப்படிப்பட்ட ஆட்டங்கள், தமிழகத்தின் பண்பாட்டை விளக்கும் முறையில் சென்று காண்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. வேறுபல இடங்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறார்கள். வெளிநாடுகளுக்கும் சென்று வருவதென்றால் எக்சேஞ்ச் என்ற முறையில் அந்த நாட்டு மக்கள் குழு இங்கே வர, இங்கே இருப்பவர்கள் அங்கே செல்ல அத்தகைய முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். தமிழக நடனத்திலுள்ள அத்தகைய கலைஞர்களைப் பரிசீலித்து மிகத் தரமுள்ள, சிறந்த, உயர்ந்த கலை வல்லுநர்களை அனுப்புவதன் மூலம் தமிழகத்தின் பண்பாட்டு நடனத்திற்குச் சிறப்பும், புகழும் தரத்தக்க முறையில் அமைய வேண்டும். அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடலாம்.

**திரு. கோவை செழியன்**: தலைவரவர்களே, மத்தியிலே செல்வாக்குள்ளவர்கள் சிலர் வெளிநாடுகளுக்கு அடிக்கடி சென்று கலை நிகழ்ச்சிகளைச் செய்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையில் கூட பாட வாய்ப்பிருக்கிறது. ஆனால் அதிகத் திறமையுள்ளவர்கள் விளம்பரமில்லாமல் அமுக்கப்பட்டிருக்கிறார்களே, அவர்களுக்கு வாய்ப்பு தரும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: தலைவரவர்களே, சங்கீத நாடக சங்கத்திற்கு விண்ணப்பித்தால், முறைப்படி அனுப்பப்பட்டால் அதற்கான முறையில் வெளிநாடுகளுக்குச் சென்று இத்தகைய நிகழ்ச்சிகளைச் செய்து திரும்பலாம். ஆகவே செல்வாக்கு என்பது அந்த வார்த்தையிலேயே மிகத் தெளிவாகத் தெரிய வருகிறது. ஆகவே செல்வாக்கைப் பயன்படுத்துவதன் மூலமாக எந்தெந்த வகையில் செல்வாக்கைப் பயன்படுத்தி வெற்றிகரமாக ஆக்கமுடியுமோ அந்த அளவிற்கு அந்தத் திறமையாளர்கள் முயற்சிதான் செய்வார்கள். ஆகவே சங்கீத நாடகச் சங்கத்திடம் முயன்று அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

**திரு. நா. வீராசாமி :** தலைவரவர்களே, கரக ஆட்டம் என்றால் ஏதோ மிகச் சாதாரணமானவர்கள் ஆட்டம் என்ற மனப்பான்மை நம்முடைய நாட்டில் இருக்கிறது. ஆனால் நன்றாகப் படித்தவர்களெல்லாம் அதில் இன்றைக்குச் சிறந்து விளங்குகிறார்கள். உதாரணமாக இராணி மேரி கல்லூரியின் முதல்வரவர்கள் சமீபத்தில் வாலாஜா பெண்கள் கல்லூரி நிகழ்ச்சியொன்றில் மிக அழகாக ஆடிக்காட்டினார்கள். அப்படி படித்தவர்கள் ஆடும் ஆட்டத்தை வெளிநாடுகளில் காண்பிக்கின்ற முயற்சிகள் இல்லாமலிருக்கிறது. ஏதோ அதிகமாக ராக் அண்ட் ரோல் போன்றவைகள் அந்த நாடுகளிலிருந்து இறக்குமதியாகியிருக்கும் நேரத்தில் கலை ஆர்வமுள்ள இப்படிப்பட்ட ஆட்டக்காரர்கள் வெளிநாடுகளுக்குப் போய் தங்கள் திறமையைக் காட்டுவதற்கு படித்தவர்களுக்காவது ஒரு வாய்ப்பை அரசு உண்டாக்கித் தருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டுமானால் அவர்கள் நம்மை வரவழைத்து அந்த நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ய அங்கேயிருக்கும் குழுவினர் செய்ய வேண்டும். அந்த வகையில் நாம் இங்கே வளர வேண்டும். இங்கேயிருக்கும் படித்தவர்கள் அவர்களை ஆதரிக்கும் நிலையை உண்டாக்க வேண்டும். கிராமிய நடனம் போன்றவைகளை கிராமத்திலுள்ளவர்கள் பார்க்கிறார்களே தவிர மற்றவர்கள் ஊக்குவிக்க வேண்டாமென்ற நிலையில் வைத்திருக்கிறார்கள். மற்ற நாடுகளில் கலைகளில் அறிவியல் அறிவு சேர்க்கப்பட்டு காலத்திற்கேற்ப பிற நாடுகளைக் கவரத்தக்க அளவிற்கு வளர்க்கிறார்கள். இந்த நாட்டில் மற்றவர்களோடு போட்டி போடக்கூடிய கலை உணர்வும் திறமையும் இருந்தாலும் அதோடு அறிவியல் உணர்வையும், திறமையையும் வளர்த்தால் உலகத்திலுள்ள பல நாடுகளில் அங்கே நம்மை விரும்பி அழைப்பார்கள். அப்படிப்பட்ட முறையில் கலைத்துறையினர் கவனம் செலுத்த வேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலை உருவாக்கப்பட்டால் பிறநாட்டினர் தங்கள் நாட்டிற்கு நம்மை வரவழைப்பார்கள் என்பது திண்ணம்.

**திரு. சோ. கருணைநாதன் :** தலைவரவர்களே, அயல்நாடுகளுக்கு அனுப்பாவிட்டாலும், ஆதிவாசிகளை மத்திய சர்க்கார் அழைப்பது





போல் சென்னையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் நீலகிரி மாவட்டத்திலுள்ள ஆதிவாசிகளை அழைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, பல சமயங்களிலே இப்படிப்பட்ட பொது விழாக்களிலே கிராமியக் கலைஞர்களெல்லாம் கலந்துகொள்கிறார்கள். இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்புகூட ஒரு கிராமியத் திருவிழாவே நடத்தப்பட்டு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்தினார்கள். அந்த முயற்சியில் ஈடுபடலாம். ஆனால் அதற்கான ஆலோசனைகளை அந்தந்த மாவட்டத்திலேயே செய்யும்பொழுது இது இனிதாக நிறைவேறும்.

**திரு. ரா. ரா. முனுசாமி :** தலைவரவர்களே, கிராமிய நடனம், கரக ஆட்டம் போன்றவைகள் பெயர்பெற்று விளங்காத காரணத்தால் கிராமங்களில் ஆங்காங்கு கரக ஆட்டங்களை நடத்த வாய்ப்பு வசதியில்லாமல் எவ்வளவு திறமையிருந்தாலும் அந்தக் கலைஞர்கள் தங்களுடைய வாழ்க்கையைச் செப்பனிட முடியாமல் போகிறது. அதனால் சர்க்கார் தனி நிதி ஒதுக்கி அவ்வப்பொழுது கிராமிய நடனம் போன்றவைகளுக்கு அதிகச் சலுகை தருவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, அப்படிப்பட்ட துறையிலே ஈடுபட்டு வயதாகியிருக்கின்ற கலைஞர்களுக்கு உதவிப்பணம் அளிக்கின்ற முயற்சி இருந்து வருகிறது. கலைஞர்கள் 58 வயதிற்கு மேலாகி அவர்கள் எந்த வருவாயுமில்லாமல், கவனிப்பாரற்ற நிலையிலிருந்தால் மத்திய சர்க்கார் உதவிப்பணம் தந்து, சிலபல காரணங்களினால் கலைஞர்கள் உதவி பெற்று வருகிறார்கள். தெருக்கூத்து கலைஞர்கள், கிராமிய கலைஞர்களுக்கு ஆண்டுதோறும் இரண்டு விருதுகள் அளிக்கப்படுகின்றன. அதை ஊக்குவிக்கும் முறையில் சமுதாயத்திலுள்ள மக்களும் ஓரளவிற்கு ஊக்குவிக்க முன்வந்தால் ஒழிய இந்தக் கலைகளை நம்பியிருப்பவர்கள் சிறப்பாக வாழ முடியாது. ஆகவே ஊராட்சி ஒன்றியங்களின்மூலம் ஏற்பாடு செய்யும் பல்வேறு நிகழ்ச்சிகள், கண்காட்சிகள், பல்வேறு வாரங்கள், கொண்டாட்டங்கள் கொண்டாடும்பொழுது, குறிப்பாக குடும்பநல வாரம்

மற்றவைகள் கொண்டாடும்பொழுது கிராமத்திலிருக்கும் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசாங்கம் தன்னால் இயன்ற அளவிற்குச் செய்து வருகிறது, பொது மக்களும் ஒத்துழைத்தால் சிறப்பு பெற்றுவிடும்.

## நடிப்புக் கலையில் பட்டப் படிப்பு

*428. வினா—திரு. பி. எஸ். மணியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நடிப்புக் கலையில் பட்டப் படிப்புத் துவக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. பி. எஸ். மணியன் :** எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குபவர்களுக்கு பட்டப் படிப்பு ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. சில வெளிநாடுகளில் நடிப்புத் துறையில் இருப்ப வர்களுக்கு பயிற்சி கொடுத்து பட்டம் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. அதேபோல் இங்கும் நடிப்புக் துறையில் பயிற்சி கொடுத்து பட்டப் படிப்பும் அதற்காகத் துவங்க அரசுக்கு எண்ணம் இருக்கிறதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நடிப்புத் துறையில் பட்டப் படிப்பு துவங்க இப்போது முயற்சி இல்லை. ஆனால் பிலிம் இன்ஸ்டிட்யூட் திரைப்படத்துறையில் பல்வேறு பயிற்சிகள் அளிக்கும் விதத்தில் நடிப்புத்துறையிலும் இப்போது பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்டம் தருகிற படிப்பு இல்லை. சான்றிதழ் தருகிற வகையில் துவங்கப்பட்டிருக்கிறது. நம் நாட்டைப் பொறுத்தவரையில் வாங்குகிற டிக்ரியைப் பொறுத்து நடிப்புக் கலையைப் பார்த்து யாரும் மகிழத் தக்க நிலை இருக்காது. அவரவர்கள் நடிப்பினைக் கொண்டுதான் மக்கள் மதிப்பளிக்கும் வகையில் இருக்கிறதே தவிர அப்படிப்பட்டதொரு சூழ்நிலை உருவாக்கும்போது, பட்டப் படிப்பிற்கு மதிப்பு ஏற்பட்டு அதன் அடிப்படையில் கலைகளை நிகழ்த்த முன்வரும்போது, அப்படிப்பட்ட ஒன்றை வரவேற்கக்கூடிய நிலை ஏற்பட்டால் அப்போது இதற்கு வாய்ப்பு ஏற்படும். இப்போது பிலிம் இன்ஸ்டிட்யூட்டில்தான் நடிப்புக் கலைக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது.





**திரு. ஏ. சி. நரசிம்மன் :** முத்தமிழ் என்பது இயல், இசை, நாடகம் என்று . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** விளக்கம் வேண்டாம். கேள்வியைக் கேளுங்கள்.

**திரு. ஏ. சி. நரசிம்மன் :** இயல், இசை இவைகளுக்கு பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அதேபோல் நடிப்புக் கலையையும் ஏன் பாடமாக வைத்து கற்றுக்கொடுக்கக்கூடாது? கல்லூரிகளில் பி.ஏ. வரையில் நடிப்புக் கலைக்கு ஒரு பாடம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்னேன். நடனத்திற்கு பட்டப் படிப்பு வைக்க வில்லை. நடனம் சொல்லிக் கொடுக்க சென்னையில் இன்று நூற்றுக் கணக்கான பள்ளிகள் இருக்கின்றன. பல ஆண்டுகளாக சொல்லிக்கொடுக்கக்கூடிய திறன் உள்ளவர்கள் இருக்கிறார்கள். இயல் படிப்பு கூட ஒருகாலத்தில் இப்படித்தான் இருந்தது. நாளாவட்டத்தில் மெள்ள மெள்ள அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் துறையாக மாறிற்று. கலைகள் எல்லாம் தனிப்பட்டமுறையில் பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர்தான் பொது மக்கள் வரவேற்கக் கூடிய நிலை பெற்றிருக்கிறது. அதே நிலையில்தான் நடிப்புக் கலையும் இருந்துவருகிறது.

**திரு. கோவை செழியன் :** நடிப்புத் துறையில் பட்டம் தரா விட்டாலும் அதற்கான ஒரு கல்லூரியையாவது ஏற்படுத்துமா? பம்பாய்க்கு அருகில் பூனாவில் அதற்கான ஒரு கல்லூரி இருக்கிறது. இப்போது தமிழ்ப் பட உலகில் நடிகர்கள், நடிகைகள் கிடைக்காமல் மிகவும் சிரமமாக இருக்கிறது. புது முகங்கள் நிறையத் தேவைப்படுகிறது. நான் ஒரு படத் தயாரிப்பாளன் என்ற முறையில் அந்தக் கஷ்டத்தை அனுபவித்து வருகிறேன். ஆகவே நன்கு தேர்ச்சி பெற்ற நடிகர்கள், நடிகைகளை எங்களுக்குத் தயார் செய்து அனுப்பு வார்களா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இப்போது நடிப்புக் கலையில் பயிற்சி அளிக்கும் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. புதுமுகங்களைத் தேர்ந்தெடுப்பது என்பதில் நாட்டில்

[1972 மார்ச் 11

நாடகக் கலையை வளர்க்கும் முயற்சி இருந்தால் அப்படித் தேர்ந்தெடுக்கமுடியும். நாடகக்கலை வளர்ச்சியடையாத நிலையில் பள்ளிகளில் படித்துவிட்டு பயிற்சிபெறுபவர்களிடம் இருந்து நடிகர்களை ஒரு நாடு தேர்ந்தெடுத்துவிட முடியாது. நம் நாட்டு பழக்கப்படி நாடகக்கலைக்கு மெருகு ஏறினால்தான்—அதிலிருந்துதான் நல்ல நடிகர்களை திரைப்பட உலகத்திற்கு தேர்ந்தெடுக்க முடியும், அப்படித்தான் எடுக்கிறார்கள். அந்த வகையில் நாடகக் கலைக்கு என்னென்ன வகையில் ஊக்கம் தரமுடியுமோ அப்படி நாடகக் கலை வளர்ச்சிக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எ. சுவாமிதாஸ்**: புதிய நடிகர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்காக நடிப்புத்துறையில் ஈடுபட்டுள்ள வயதான நடிகர்களுக்கு வயதுவரம்பு கட்டுவதற்கு, கட்டாயமாக வயது வரம்பு வைப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: நடிப்புத் துறையில் இன்ன வயதுதான் இருக்கவேண்டும் என்பதல்ல. 97 வயது உடையவர்கள் கூட சிறந்த நடிகர்களாக இருக்கிறார்கள். பாத்திரத்திற்கு ஏற்ற பொருத்தம் இருக்கிறதா, அதற்கான திறமை இருக்கிறதா, மக்கள் மதிக்கிறார்களா, மக்களின் மதிப்பைப் பெற்றிருக்கிறார்களா, மக்கள் உள்ளங்களில் தங்கியிருக்கிறார்களா என்பதுதான் முக்கியமே தவிர வயதுக்கு உச்சவரம்பு கட்டுவது என்பது இந்தத் துறையைச் சரியாக அறியாதவர்கள் சொல்லும் கூற்றே தவிர அறிந்தவர்களாக இருந்தால் அப்படிச் சொல்ல மாட்டார்கள்.

## முதியோர் கல்வித் திட்டம்.

*429 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு கல்வி—உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கிராமப்புறங்களில் முதியோர் கல்வித் திட்டத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்**: ஆம்.



1972 மார்ச் 11]

*430. வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் புதிய முதியோர் பள்ளிகளைத் துவக்க செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: 500 முதியோர் கல்வி மையங்கள் துவக்கப்பட்டு நடத்துவதற்கான திட்டம் அரசால் பரிசிலிக்கப்பட்டு தள்ளிவைக்கப்பட்டது.

**திரு. என். கிட்டப்பா**: தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட முதியோர் பள்ளிகளை நடத்த முன்வரும் தனிப்பட்டவர்களுக்கும், பொது நல நிறுவனங்களுக்கும் அரசாங்கம் மானியம் வழங்க முன்வருமா? ஊராட்சி மன்றங்கள்தோறும் கண்டிப்பாக ஒரு முதியோர் பள்ளியாவது கட்டாயமாக நடத்தப்படவேண்டும் என்று ஊராட்சி ஒன்றியங்களுக்கு அறிவிப்பு அனுப்பப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்**: இப்போது முதியோர் கல்வி 48-49-ல் இருந்து பல்வேறு மாறுதல்களின் அடிப்படையில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருகிறது. பார்மேர்ஸ் எட்யுகேஷன் என்று முதியோருக்கு எந்த அறிவு, எப்படிப்பட்ட அறிவு வேண்டுமோ அப்படிப்பட்ட அறிவைமட்டும் கொடுப்பது என்பதில் அதிகக் கவனம் செலுத்துவது பலன் தரும் என்று உழவர்களுக்கு எப்படிப்பட்ட அறிவு தரவேண்டும், எந்த அறிவு தரவேண்டும் என்று அந்த அறிவை எழுத்துமூலம் பெறுவதற்கு, அதைத் தருவதற்குள்ள முயற்சியில் தஞ்சாவூர், பொள்ளாச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி போன்ற பலயிடங்களில் 240 பள்ளிகள் வைத்து ரூ. 2,14,800 செலவில் நடத்தப்பட்டு வருகிறது. ஆங்காங்குள்ள 500 முதியோர் பள்ளிகளில் பத்தாயிரம் பேர்களுக்கு பயிற்சி பெறும் அளவிற்கு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. முதியோர் கல்வியில் பொதுமக்களின் ஒத்துழைப்பு, ஊராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பு அடிப்படையில் முன்வருகிறபோது அரசு அதற்கு உதவி செய்ய முன்வரும்.

**திரு. எம். வி. கரிவேங்கடம்**: முன்பிருந்த முதியோர் கல்வித் திட்டத்திற்கும் இப்போதுள்ள முதியோர் கல்வித் திட்டத்திற்கும் உள்ள மாறுபாடுகள், வேறுபாடுகள் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முன்பெல்லாம் 13-ல் இருந்து 40 வயது வரையில் உள்ளவர்களுக்கு கல்வி புகட்டப்பட்டு வந்தது. 30, 40 வயது என்பதைவிட 8-ல் இருந்து 18 வயது உள்ளவர்களுக்கு கல்வி புகட்டுவதில் ஓரளவிற்கு நல்ல பலன் ஏற்படுகிறது என்பதால் 'ஃபங்ஷனல் லிட்டரஸி', யார் யார் எந்தெந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பார்த்து அந்தத் தொழில் அறிவைப் பெற என்னென்ன படிப்பைச் சொல்லிக்கொடுக்க முடியுமோ அதைச் சொல்லிக் கொடுப்பது பலனுள்ளதாக இருக்கும் என்ற முறையில் 240 பள்ளிகள் தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். முருகையன்:** முதியோர் கல்விக்காக 240 பள்ளிகள் துவங்கி இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த 240 பள்ளிகள் எந்தெந்தக் கிராமங்களில் நிறுவப்பட்டிருக்கின்றன? அங்குள்ள கல்வி அறிவில்லாத முதியோர்கள் கையெழுத்து போடுவதற்காகவாவது அந்த அறிவைப் பெறுவதற்காகவாவது ஏற்பாடு செய்யப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 240 பள்ளிகளில், பள்ளி ஒன்றுக்கு 30 பேர்கள் வீதம் நாள் ஒன்றுக்கு 1½ மணி நேரம், மாலை 7—8-30 வரையில் அல்லது 9 மணி வரையில் அந்தந்த ஊர் நிலைக்கு ஏற்ப முதியோர் கல்விப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. நாளாவட்டத்தில் இது எல்லா மக்களுக்கும் பரவச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கூடுமானவரையில் கட்டாய முறைக் கல்வியை ஆரம்பக் கட்டத்திலேயே நுழைப்பதன்மூலம் ஒருசில ஆண்டுகளில் இந்த கல்வி அறிவின்மையைப் போக்கவேண்டும் என்ற முயற்சியையும் எடுத்துவருகிறது.

**திரு. நா. கிருட்டிணன்:** தலைவரவர்களே, புதிதாக ஆரம்பிக்கப் பட்டிருக்கும் முதியோர் கல்விப் பள்ளியில் கோ-எடுகேஷன் முறையை அரசு ஏற்பாடு செய்ய முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** முதியோர் என்கிற நிலைமை என்று சொல்கிறபோது, கோ-எடுகேஷன் வைப்பதால் எந்த வித ஆபத்தும் ஏற்பட்டுவிடாது. இப்போது





இருக்கும் வகுப்புகளில் கூட ஆண்கள் பெண்கள் என்ற வித்தியாசம் பாராமல் தான் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**திரு. ந. தருமலிங்கம்:** சட்டப்பேரவைத் தலைவரவர்களே, முதியோர் கல்வித் திட்டம் எந்தெந்த மாவட்டங்களில் அமல் செய்யப்பட்டு நடைமுறையில் இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** இப்போது தஞ்சாவூர், பொள்ளாச்சி, திருவண்ணாமலை, தூத்துக்குடி போன்ற பகுதிகளில் ஒவ்வொன்றிலும் 60 பள்ளிகள் திறந்து வைக்கப்பட்டு, இப்போது 240 பள்ளிகள் நடைமுறையில் இருந்து வருகின்றன.

**திரு. என். கே. பழனிசாமி:** தலைவரவர்களே, இப்போது பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நிறைய பேர் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை கொடுக்கும் முகத்தான் ஒவ்வொரு சிற்றூர்களிலும் இந்த முதியோர் கல்வித் திட்டம் கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அதைச் செய்யலாம். நல்ல யோசனை தான். நிதிப்பற்றுக்குறை தான் அதைச் செய்யமுடியாததற்குக் காரணம். அதற்கு ஏராளமான நிதி வசதி வேண்டும். அந்த நிதியை வைத்துக்கொண்டு அந்த முயற்சியில் ஈடுபடலாம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தலைவரவர்களே, இந்த முதியோர் கல்வி அளிப்பதற்காக மன்றங்கள் முன் வந்தால் அவற்றிற்கு உதவித்தொகை அளித்து அந்த வேலையைச் செய்ய அரசாங்கம் தூண்டுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த முறையில் ஆங்காங்கு மகளிர் மன்றங்கள் போன்றவையும், வேறு பல பொது மன்றங்களும் ஏற்று நடத்த முன்வருவார்களேயானால், அந்த வகையில் உதவியளிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்கும்.

**திரு. நா. வெ. குருசாமி:** தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூறும்போது மதுரை மாவட்டத்தை கூறவில்லை. மதுரை மாவட்டத்திற்கும் இந்த முதியோர் கல்வித் திட்டம் விஸ்தரிக்கப்படுமா?

[1972 மார்ச் 11

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இந்த 'பார்மர்ஸ் எடுகேஷன் அண்டு பங்ஷனல் லிட்டரசி' அந்த இடங்களில் பரிட்சார்த்தமாக இப்போது நடத்தி வருகிறோம். அது வெற்றிகரமாக நடைபெறுகிறது என்பதை அறிந்தபிறகு, பிற மாவட்டங்களுக்கும் அதை விஸ்தரிக்கும் திட்டத்தை அரசு பரிசீலிக்கும்.

### அரசியல் தியாகிகளின் குழந்தைகள்

***431. வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அரசியல் தியாகிகளின் குழந்தைகளுக்கு சைனிக் ஸ்கூலில் சேர்ந்து படிக்க உதவித் தொகை வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இல்லை.

**திரு. என். மருதாசலம் :** தலைவரவர்களே. இந்த சைனிக் ஸ்கூலில் தியாகிகளின் குழந்தைகளைச் சேர்த்துக்கொள்ள ஏதேனும் சலுகைகள் அளிக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, இந்த சைனிக் பள்ளியில் எந்தவிதமான சலுகையும் யாருக்கும் தருவது இல்லை. மெரிட் பேசிஸ்ஸில்தான் எடுக்கிறார்கள். ஜாதி, மதம், இனம் முதலிய பாகுபாடுகள் எதைப்பற்றியும் கவலைப்படாமல், மாணவர்களுக்கு இருக்கும் ஆப்டிட்யூட், நோக்கம் ஆகியவற்றை பொறுத்து, தேர்வின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகிறது. அவர்களுடைய குடும்பங்களின் வருமான அடிப்படையில் வருஷ வருமானத்தை கணக்கிட்டு, அதற்கேற்ற அளவுக்கு சில்பேர்களுக்கு உதவித்தொகை அளிக்க முயற்சி இருந்து வருகிறது. வேறு எந்த வகையிலும் யாருக்கும் சலுகை அளிக்கப்படவில்லை.

**திரு. என். மருதாசலம் :** இப்போது இருக்கும் சைனிக் ஸ்கூல் ஒரே ஒரு மாவட்டத்தில் தான் இருக்கிறது. அப்படி இல்லாமல் எல்லா மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசுக்கு உத்தேசம் உண்டா?



1972 மார்ச் 11]

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** தலைவரவர்களே, தமிழ்நாட்டிலே ஒரே ஒரு இடத்திலே உடுமலைப்பேட்டைக்குப் பக்கத்திலே அமராவதி அணைக்கட்டுக்குப் பக்கத்திலே இருந்து வருகிறது. அங்கே இருக்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் கிட்டத்தட்ட ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,500 அல்லது ரூ. 3,000 செலவாகிறது. இதை எல்லா இடத்திலும் ஆரம்பிக்க முடியாது. வேறு ஒரு இடத்தில் ஆரம்பிப்பதற்காக செயற் குறிப்பு இருந்து வருகிறது. ஒவ்வொரு மாநிலத்திலும் இப்படி ஒரு ஸ்கூல் தான் இருந்து வருகிறது.

**திரு. எஸ். முருகையன் :** தலைவரவர்களே, சென்ற 4-5 வருடங்களுக்கு முன்பு சாத்தனூர் அணைக்கட்டிலே ஒரு சைனிக் ஸ்கூல் ஆரம்பிக்கும் திட்டம் இருந்ததே, அந்தத் திட்டம் என்ன ஆயிற்று? அதை ஆரம்பிக்க அரசு ஆலோசிக்குமா ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** திட்டம் இருந்ததாகத் தெரியவில்லை. எண்ணம் இருந்திருக்கலாம். அது பற்றிய தகவல் இல்லை. வேறு ஒரு இடத்தில் கொடைக்கானல் பகுதியில் ஆரம்பிக்கவேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. அது பற்றிய முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை.

**திரு. கே. எ. வகாப் :** இந்த சைனிக் பள்ளியில் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பின்தங்கிய வகுப்பினருக்கும் தனியாக இடம் ஒதுக்கித் தர அரசு முன்வருமா ?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றித்தான் முதலிலே பதில் சொல்கிறபோது 'இல்லை' என்று சொல்லி விட்டாரே! தகுதி அடிப்படையில் சேர்க்கப்படுகிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். திரும்பவும் அதே கேள்வியை எதற்காகக் கேட்கிறீர்கள் ?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலேயே சொன்னேன். அங்கே ஜாதி, மதம், இனம் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படாமல், அவர்களுக்கு இருக்கும் நோக்கத்தின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில் தான் மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். அந்தப் பள்ளி மத்திய அரசின் உதவியோடு நடத்தப்படுகிறது.

**திருமதி த. ந அனந்தநாயகி :** தலைவரவர்களே, தகுதியின் அடிப்படையில் அந்தப்பள்ளியில் சேர்க்கப்படுகிறவர்களுக்கு,

வருமானத்தின் அடிப்படையில் சலுகைகள் தரப்படுகின்றன என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். தகுதியின் அடிப்படையில் வருவதற்கு தியாகிகளின் குழந்தைகளுக்கு வாய்ப்பு இருந்தால், அவர்களுக்கு அரசு உதவி செய்ய முன்வருமா? நாட்டின் உரிமைக்காக போராடியவர்களுக்கு இந்த உதவியைக்கூட செய்யக்கூடாதா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** சேர்க்கப்பட்ட அளவில் பார்த்தால் பிற்படுத்தப்பட்டவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அதைப்பற்றிய கணக்கு என்னிடத்தில் இல்லை. அவர்களெல்லாம் புறக்கணிக்கப்படவில்லை. மேல் வகுப்புக் காரர்கள் மட்டும் சேர்க்கப்படுகிறார்கள் என்ற நிலையில்லை. புள்ளி விவரம் தேவையென்றால், தனிக்கேள்வி போட்டால் தரலாம்.

## துவக்கக் கல்வித் திட்டம்

* 432 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1967-ம் கல்வி ஆண்டு முதல் நடப்புக் கல்வி ஆண்டு வரையில் துவக்கக் கல்வித் திட்டத்தில் புதிய மாற்றங்கள் ஏதேனும் செய்யப்பட்டுள்ளனவா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** 1965-ம் ஆண்டில் அரசினரால் ஏற்கப்பட்ட புதிய பாடத்திட்ட முறைகள் 1967-68-ம் ஆண்டு முதல் ஏழாம் வகுப்பிலும், 1968-69-ம் ஆண்டு முதல் எட்டாம் வகுப்பிலும் அமுல் செய்யப்பட்டுள்ளன. தற்கால விஞ்ஞான வளர்ச்சி, அணுகு முறை, புதிய கண்டுபிடிப்புகள், பொருளாதார வளர்ச்சி, சமூக சூழ்நிலை, நவீன வாழ்க்கை முறைகள் இவைகளுக்கேற்பப் பள்ளிக் கல்வியின் பாடத்திட்டங்களை மாற்றி அமைக்கக் கருதி, இதற்கென வல்லுநர் குழுக்களை ஒவ்வொரு பாடத்திட்டத்திற்கும் அரசு அமைத்துள்ளது. இக்குழுக்கள் தங்களது புதிய பாடத்திட்டங்களின் நகல்களை தயாரித்துள்ளன. மேலும் ஆதாரக் கல்வித் திட்டத்தை, ஆதாரக் கல்வி அல்லாத பாடத் திட்டத்துடன் ஒருங்கு இணைத்தல் பற்றியும் ஒரு துணைக்கமிட்டி ஆய்வு செய்து அதுபற்றிய பாடத்திட்ட வரைவு ஒன்றினை சமர்ப்பித்துள்ளது.



இது பரிசீலனையில் உள்ளது. இம் முயற்சிகளின் விளைவாக தொடக்கக்கல்வி மேலும் செம்மைப்படுத்தப்பட்டு தர உயர்வு அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. என். கிட்டப்பா:** தலைவரவர்களே, முதல் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கு பரீட்சை வைத்து அந்த பிஞ்சு உள்ளங்களின் மனதில் வேதனையை உண்டுபண்ணுவதை விட, 5 ஆண்டுகள் படித்த பிறகு, 5-வது வகுப்பில் பரீட்சை வைத்தால் நலமாக இருக்கும், இதை அரசு ஆலோசிக்குமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, இப்போது இருக்கும் இந்தக் கருத்தை கல்வி வல்லுநர்கள்தான் ஆராய வேண்டும். குழந்தைகள் மனப்பக்குவம், மனத்திட்பம் அறிந்து கல்வி வல்லுநர்கள் என்ன கருத்து அறிவிக்கிறார்களோ அந்தக் கருத்தின் அடிப்படையில் அரசாங்கம் அதைச் செய்ய இருக்கிறது. அதற்காக திட்டக்குழுவில் இப்போது டாஸ்க் போர்ஸ் என்று பணிக்குழு அமைக்கப்பட்டு, அதிலே கல்வி வல்லுநர்கள் அடங்கிய குழு இதை ஆராய்ந்து வருகிறார்கள். அந்த வல்லுநர்களின் கருத்து அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப் பட்ட பிறகு, அந்தக் கருத்தை ஏற்று நடத்த அரசு முன்வரும்.

**திரு. ஆ. பரந்தாமன்:** தலைவரவர்களே, மாணவர்களுடைய நோக்கம் எந்தத் துறையில் செல்கிறது என்று அறிந்து அந்தத் துறையில் பாடத்தை நடத்துகிற முறை ரஷ்ய நாட்டில் பின்பற்றப்பட்டு வருவதால் நல்ல பயன் பெற்று இருக்கிறார்கள். அதை மனதில் கொண்டு, நம்முடைய மாநிலத்திலும் அப்படிப்பட்ட பாடத்திட்டத்தை கொண்டு வரும் முயற்சியை அரசு மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** அந்த அடிப் படையிலே தான் மாணவர்களின் ஞாபகத்தை சோதிக்கும் அடிப்படையில் மட்டும் தேர்வு நடத்தாமல், அவர்கள் திறன், அறிவு ஆற்றல் இவற்றையும் வைத்து அவர்களுக்கு மேலும் மேலும் ஊக்கமளிக்கின்ற வகையில் பாடங்களைக் கற்றுத் தருவதற் கான வகையில் அந்தப் பணிக்குழு ஆராய்ந்து வருகிறது. அதிலே பல்வேறு தரப்பட்ட வல்லுநர்கள் இருக்கிறார்கள். இந்திய அரசாங்கத்தில் இது பற்றி கல்வித்துறையில் ஆலோசனை தருகிற

[1972 மார்ச் 11

ஒரு அதிகாரியும் கூட அதிலே இடம் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த பிறகு அந்தத் துறையில் நல்ல மேம்பாடு இருக்கும் என்று எதிர்பார்க்கலாம்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக ஒரு தனி இயக்குநரைப் போட்டு, செயல்படுத்த அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது துவக்கப் பள்ளிகளுக்கும், ஆரம்பப் பள்ளிகளுக்கும் சேர்ந்து ஒரு இயக்குநர் இருந்தாலும், துவக்கப் பள்ளிகளை கவனிக்கக்கூடிய வகையில் இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள் இருக்கிறார்கள். அதற்காக தனியாக கவனிக்க அதிகாரிகள் இருக்கிறார்கள். உயர்நிலைப் பள்ளிகளிலேயே ஆரம்பப் பள்ளிகளும் இருக்கிற காரணத்தால், அதற்கென்று தனியாக இயக்குநர் தேவையில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று திரும்பிய நேரத்தில், வெளிநாடுகளில் இருக்கின்ற கல்வித் திட்டங்களைப்போல், அதிலுள்ள சிறப்பான அம்சங்களை நம்முடைய நாட்டிலே புகுத்த வேண்டுமென்றும் கூறியிருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட மாற்றங்களைச் செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப் பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, வெளிநாடுகளில் பல்வேறு வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டு, பல வருஷங்களாக, 100 வருஷ திட்டம், 50 வருஷ திட்டம், 200 வருஷ திட்டம் என்ற அடிப்படையில் வளர்க்கப்பட்டு, அந்தந்த தேச சூழ்நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டவையாகும். அவை எல்லாவற்றையும் இங்கே நடைமுறைக்குக் கொண்டு வருவது என்பது முடியாது என்றாலும், அந்த அடிப்படையில் நம்முடைய நாட்டிற்கு உகந்த வகையில் அவைகளைப் பயன்படுத்துகிற வகையில் செய்யலாம். அவற்றையெல்லாம் நிபுணர் குழு ஆராய்ந்து வருகிறது. அவர்களின் ஆராய்ச்சி முடிந்தபிறகு, அவர்கள் கருத்து அரசுக்குக் கிடைத்ததற்குப் பிறகு, அவற்றை எப்படி மாற்றுவது என்பதைப் பற்றியும், அதற்கான முயற்சியையும் அரசு எடுக்க முன்வரும்.



1972 மார்ச் 11]

## அரிசனங்களுக்கு குடியிருப்புகள்

* 436 வினா—திரு என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1971-72-ல் மாயூரம் தொகுதி காளி பஞ்சாயத்தில் தாழ்த்தப் பட்டவர்கள் எத்தனை பேருக்கு அரசு வீடுகள் கட்டித் தந்துள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : ஒருவருக்கும் இல்லை.

* 437 வினா—திரு. என். கிட்டப்பா . மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் ஒன்றியத்திலுள்ள மாப்படுகைப் பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு 1971-72-ம் ஆண்டில் அரசு கட்டித்தரவிருக்கும் வீடுகள் எத்தனை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : 10 வீடுகள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த இரு கேள்விகள் அடங்கிய மாயூரம் தொகுதி காளி, மாப்படுகை ஆகிய இரு பஞ்சாயத்துக்களிலும் மாவட்ட அரிசன நலத் துறை மூலமாக வீடுகள் கட்ட வேண்டுமென்று ஆரம்பித்து அதற்காக முன்பணமும் கோரி செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் அங்கே வீடுகள் கட்ட எந்த விதமான பணியும் துவங்கப்படவில்லை. அதைச் செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் சிபாரிசு செய்த காளி என்ற கிராமத்தில் தற்போது 940 ரூபாயில் நல இலாகா கட்டித் தரும் வீடுகளுக்குச் சற்று அதிகமாகப் பணம் கொடுத்து 1,150 ரூபாயில் கட்டித் தரவேண்டுமென்று கேட்டார்கள். 1,150 ரூபாயில் வீடு கட்டித் தர நலத்துறை இயக்குநர் ஒப்புக்கொண்டு எஞ்சிய பணத்தை வீடு ஒன்றுக்கு 210 ரூபாய் வீதம் அந்தக் கிராமத்தில் இருப்பவர்கள்

தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதை அந்தக் கிராமத்திலுள்ள அரிசன மக்களும் ஒத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் பத்து வீடுகளுக்கு கட்டவேண்டிய முழுத் தொகை 2,100-ஐயும் கட்டாமல் வெறும் ஆயிரம் ரூபாய் மாத்திரமே கட்டினார்கள். அதனால் அந்தக் கிராமத்தில் வீடுகள் கட்டவில்லை. அதே போன்று மாப்படுகையிலும் 2,100 ரூபாய் கட்ட வேண்டியிருக்க 1,050 ரூபாய்தான் கட்டினார்கள். இந்த ஆண்டு நிதி நிலைக்கேற்ப நலத்துறை மூலம் செலவழிக்கப்பட வேண்டிய தொகை ஒதுக்கப்பட்டு விட்ட காரணத்தால் அதே மாவட்டத்தில் வேறு பல இடங்களில் யார் முழுத் தொகையும் கட்டியிருக்கிறார்களோ அங்கு கட்ட முடிவு செய்து அறந்தாங்கி தாலுகாவிலுள்ள ஒரு கிராமத்திலும், ஒரத்தநாடு தாலுகாவிலுள்ள கள்ளிகுடி கிராமத்திலும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது. இந்த ஆண்டு உறுப்பினர் குறிப்பிட்ட இரண்டு கிராமங்களிலும் ஒப்புக் கொண்ட தொகையைக் கொடுத்துவிட்டால் வீடு கட்டிக் கொடுக்க வழி ஏற்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இத்தகைய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் பணியைக் குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைத்து நல்ல சுகாதார வசதியோடு திட்டமிட்டு குடியிருப்புகளைக் கட்டித் தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : பண வசதி இல்லாத ஏழை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நலத் துறை மூலமாக இப்போதே வீடு கட்டிக் கொடுப்பது இன்றைக்கும் அரசாங்கக் கொள்கையாக இருக்கிறது. கடனைக் கொடுத்து கடனைத் திருப்பிக் கொடுக்கத்தக்க நிலையிலுள்ள அரிசன மக்களுக்கு எல்.ஐ.சி. மூலமாக பண உதவி பெற்று நலத் துறை மூலமாக சொசைடி அமைத்து வீடு கட்டிக் கொடுப்பது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த சில அரசாங்கச் சிப்பந்திகள் தனியாக வீடு கட்டிக் கொள்ள என்று கடன்களை எழுப்புகின்ற நேரத்தில் நம்முடைய அரிசன நல இலாகா அவர்களுக்கு உதவி செய்வதற்கு முன் வருமா ?



மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிற திட்டத்தின் கீழ் எல்.ஐ.சி. மூலமாக நிதி உதவி பெறுவது பற்றிப் பரிசீலனை முடிந்து முடிவு எடுக்கப்பட்ட பிறகு இவை எல்லாம் நிச்சயமாக கவனிக்கப்படும்.

**மேட்டூரிலுள்ள அலுமினியம் கம்பெனிக்குச் சொந்தமான நிலம்.**

* 438. வினா—திரு. எம் சுரேந்திரன் : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மேட்டூரில் உள்ள மதராஸ் அலுமினியம் தொழிற்சாலைக்கு, நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா ?

(இ) ஆம் எனில், அவ்வாறு அனுமதிக்கப்பட்டிருக்கும் நில விஸ்திரணம் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) : தி மதராஸ் அலுமினியம் கம்பெனி, மேட்டூர் வட்டத்தில் தனக்குச் சொந்தமான 659.06 ஏக்கர் நிலம் குறித்து தமிழ்நாடு 1961-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தச் (நிலத்திற்கு உச்சவரம்பு கட்டுதல்) சட்டத்தின் (சட்டம் எண். 58/1961) 73 (iv) பிரிவின்கீழ் விலக்கு அளிக்க வேண்டுமென்று 15-7-71 அன்று அரசுக்கு விண்ணப்பித்துள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : மேட்டூரில் இருக்கக்கூடிய அலுமினியம் தொழிற்சாலையின் பேரில் இருக்கக்கூடிய, ஒதுக்கப்பட்ட நிலத்தின் விஸ்தீரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அவர்களுக்கு மொத்தமாக இருக்கும் நிலம், அடமானம் செய்த நிலம் ஹோல்டிங்க்ஸ் என்ற முறையில் 390 ஏக்கர் 82 செண்ட் ஆகும். இது தவிர புறம்போக்கு நிலத்தையும் அவர்கள் ஆக்கிரமித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் அது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : What is the extent of land which is exactly required for the Aluminium Factory? Has the Government gone into the question?

**மாண்புமிகு திரு. ப. உ சண்முகம் :** எவ்வளவு நிலம் தேவை என்பதைப் பொறுத்தவரை நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டு வந்தபோது இவற்றுக்கெல்லாம் விதிவிலக்கு வைத்திருக்கிறோம். சட்டம் அமலாக்கப்பட்ட நேரத்தில் ஒரு கம்பெனிக்கு எவ்வளவு நிலம் இருக்கிறதோ அதை எடுப்பதில்லை என்ற விதி இருக்கிறது. அந்த விதியின்கீழ் இப்போது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இப்போது இருக்கும் நிலத்திற்கு எக்ஸம்ப்ஷன் கேட்டு அவர்கள் அப்பீல் செய்து கொண்டிருக்கிறார்கள். அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒரு கம்பெனிக்கு எவ்வளவு நிலம் இருக்க வேண்டுமென்ற அந்த உச்ச வரம்பைக் குறைக்க தனிச் சட்டம் கொண்டு வர அரசு ஆலோசித்து வருகிறது.

**திரு. கே. கந்தசாமி :** இந்தக் கம்பெனிக்கு மின்சாரச் சலுகை அளிக்கப்பட்டிருக்கிறதா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க வேண்டிய கேள்வி இது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : When the Government propose to bring a legislation for limiting the extent of land which should be allowed for such factories, would they take into consideration the future expansion also? If so, what is the time limit which they would like to take?

THE HON. THIRU P. U. SHANMUGAM : Precisely that is what is under the consideration of the Government.

**திரு. ஏ. எம். இராஜா :** மேட்டூர் அலுமினியம் தொழிற்சாலைக்கு 659 ஏக்கர் நிலம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இதிலே தொழிற்சாலைக்குப் போக பாக்கி இருக்கும் நிலத்திலே அங்கு வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்ள நிலம் கேட்டால் இலவசமாக அந்த நிலத்தைக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரசு அந்தத் தொழிற்சாலை நிர்வாகிகளை வற்புறுத்துமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அவர்கள் எக்ஸம்ப்ஷன் கேட்டிருப்பது 659 ஏக்கர் என்று தெரிவித்தேன். அவர்களுக்கு உரிமை 390 ஏக்கர்தான். பாக்கி புறம்போக்கு நிலத்தைப் பிடித்து வைத்திருக்கிறார்கள். அதைப் பற்றிப் பரிசீலனை





செய்யப்பட்டு வருகிறது. பாக்கி விபரங்களுக்கு தொழிலாளர் நல அமைச்சருக்குக் கேள்வி போட்டால் பதில் சொல்லுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** கேள்வி எண்கள் 439, 440 ஆகியவை தொழில்துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகின்றன.

### *Bridges*

* 441 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there are proposals under the consideration of the Government to construct a bridge at Gnanamala Kadavu across Kuzhithurai river in Kanyakumari district?

**மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

**திரு. என். டென்னிஸ் :** இந்தப் பாலத்தை அமைப்பதன் மூலம் மார்த்தாண்டம் பகுதியிலுள்ள முக்கிய ஊர்களைத் தொடர்பு படுத்தும் என்ற வகையில் அந்த ஊர் மக்கள் நீண்ட காலமாக வற்புறுத்தி வரும் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முன்வருமா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இந்தப் பாலம் கட்ட 20 லட்சம் ரூபாய்க்கு மேல் செலவாகலாம் என்று கருதப்படுகிறது. அதற்கு தற்போது நிதிநிலை வசதி இல்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. ரா. ரா. முனுசாமி . . இது கன்னியாகுமரியைப் பற்றிய கேள்வி.

**திரு. ரா. ரா. முனுசாமி :** கன்னியாகுமரியில் இருப்பது போன்று தமிழ் நாட்டில் இருக்கின்ற முக்கியமான ஊராட்சி மன்றங்களில் நிதி வசதியைக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது பெரிய பெரிய நீர் ஓடைகள் இருக்கின்ற நிலையில் ஊருக்கு ஊர் தொடர்பு ஏற்படுத்த நிதிவசதி இல்லாத நிலையில் 40,000, 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட பாலம் கட்டும் திட்டங்களை அரசு எடுத்து நிறைவேற்றித் தர முன்வருமா ?

**மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா :** கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பஞ்சாயத்து யூனியன்களுக்குப் பரிந்து பேசியதற்காக நன்றி.

[1972 மார்ச் 11

* 442. வினா—திரு. இ. எஸ். தியாகராசன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

குசஸ்தலி ஆற்றில் பாலம் கட்ட திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம்.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழகத்தில் இது ஒரு முக்கியமான திட்டமாக இருப்பதால். இத்திட்டத்திற்கு ' இண்டர் ஸ்டேட்ஸ் எக்னமிக் ரிலேஷன்ஷிப் ' நிதி பெற்று, இதனால் விவசாய உற்பத்தி மேம்பாடு அடையும் என்பதால், இதை ஒரு தனித் திட்டமாக நிறைவேற்ற மத்திய அரசை நமது அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The work was among the 13 works recommended for inclusion in the Fourth Five-Year Plan under the Inter-State Economic Improvement Scheme. The Government of India had selected only three works.

அதனாலே இதை ஏற்கவில்லை.

The Chief Engineer's recommendation to include the work in the Central Road Fund Scheme in the Fourth Five-Year Plan is being pursued separately.

### இராமலிங்கபுரத்தருகே புதுக் கண்மாய்

* 443. வினா—திரு எஸ். அழகுத்தேவர் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டம்—சாத்தூர் வட்டம், இராமலிங்கபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது பற்றிய விபரம் என்ன?

மாண்புமிகு திரு எஸ் ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் வட்டம், இராமலிங்கபுரம் கிராமத்தில் புதிய கண்மாய் ஒன்று ரூபாய் 2.83 லட்சத்தில் கட்டும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளது.



1972 மார்ச் 11]

### ஒட்டப்பிடாரத்திலுள்ள துணைத் தாசில்தார் அலுவலகக் கட்டடம்.

* 444. வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஒட்டப் பிடாரத்தில் சப்-தாலுக்கா ஆபீஸ் ஒன்று வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவது உண்மையா ?

(இ) ஆம் எனின், அதற்கு எப்போது தனிக்கட்டடம் கட்ட அரசு ஏற்பாடு செய்யும் ?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : (அ) ஒட்டப் பிடாரத்திலுள்ள துணைத்தாசில்தார் அலுவலகம் வாடகையில்லாத் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

(இ) அந்தத் துணைக்கோட்ட அலுவலகத்திற்கு கட்டிடம் கட்டும் கருத்துரு ஒன்று விரைவில் சமர்ப்பிக்கப்படுமென திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியுள்ளார்.

திரு. எம். முத்தையா : தலைவரவர்களே, அந்த வாடகைக் கட்டிடத்திற்கு வாடகையாக அரசு வருஷம் ஒன்றுக்கு எவ்வளவு கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : நான் சொன்ன பதிலை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். வாடகை இல்லாமல் தனியார் கட்டிடத்தில் இயங்கி வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : வாடகை இல்லாமல் தனியார் ஒருவர் அரசாங்கத்திற்கு கட்டடத்தைக் கொடுக்கக்கூடிய அந்த தாராள சிந்தை உடையவரிடம் இருந்து அரசாங்கம் இலவசமாக அந்தக் கட்டடத்தை பெற்றுக்கொள்ளுமா ? எந்தெந்த மாவட்டங்களிலே தாலுகா ஆபீஸ்கள், கலெக்டர் ஆபீஸ்கள் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன ? எந்தெந்த இடங்களில் அரசாங்கக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன என்ற புள்ளி விவரத்தை அறிய பொதுப்பணித் துறையில் ஒரு குழு அமைக்கப் படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : புள்ளிவிவரங்கள் இப்போது இல்லை. ஆனுல் இந்த ஒட்டப்பிடாரத்தில் உள்ள கட்டடம், திரு. டி. எஸ். கிருஷ்ணன் நாயர் அவர்களால் வாடகை இல்லாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநிலம் பூராவிலும் உள்ள அரசாங்க அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

*Distribution of water from Pandravedu tank*

* 445 Q.—THIRU E. S. THIAGARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal for construction of masonry distribution of water from Pandravedu tank to Kesavarajakuppam village ayacuts in Pallipet Sub-taluk in Chingleput district and

(b) if so, the value of the estimates

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 33,000.

குஹூருக்கு சிறப்பு அங்காடி.

* 446 வினு—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மக்களுக்கு மலிவு விலையில் பொருள்கள் கிடைக்க வழி செய்ய குஹூரிலும் பல்லடத்திலும் கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இல்லை.

சித்தர்க் காட்டிலுள்ள நவீன அரிசி ஆலை

*447. வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் சித்தர்க் காட்டிலுள்ள நவீன அரிசி ஆலை எப்போது செயல்படத் துவங்கும்?





மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : இந்த நவீன அரிசி ஆலையில் பச்சரிசி அரைவை இந்த மாதம் இறுதியிலும், புழுங்கல் அரிசி அரைவை 1972 ஏப்ரல் திங்களிலும் துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த மாயூரம் சித்தர்க் காட்டிலுள்ள நவீன அரிசி ஆலை தாலுகாக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பாக அரசாங்கத்தின் உதவியுடன் கட்டப்பட்டு வருகிறது. நான்தான் அதனுடையத் தலைவராகவும் இருக்கிறேன். பலதடவைகள் அதற்கு மின்சார இணைப்புக் கொடுக்கவேண்டு மென்று தொடர்புடைய அதிகாரிகள் எல்லோரையும் கிட்டத்தட்ட ஓராண்டுக்காலமாகக் கேட்டு வருகிறேன். இன்னும் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. ஆகவே, இந்த சட்டமன்றக் கேள்வியின் மூலமாகவாவது, உடனடியாக இணைப்புக் கொடுக்கக் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் : தலைவரவர்களே, மின்சார இணைப்பு இன்னும் கிடைக்கவில்லை என்று கூட்டுறவுச் சங்கத் தலைவரே சொல்லுகிறுர்கள். ஆகவே, அந்த இலாகா அமைச்சரவர்களைக் கேட்டால் எவ்வளவு சீக்கிரமாக மின்சார இணைப்புக் கொடுக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகக் கொடுக்க ஏற்பாடு செய்வார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கூட்டுறவுத் துறையில் இயங்கி வருகின்ற ஆலைகள் எல்லாம் பெரும்பாலும் நஷ்டத்தில் இயங்கு கின்றன என்று ஏற்கனவே அமைச்சர் அவர்கள் சொல்லியிருக் கிருர்கள். அவற்றை லாபத்தில் இயங்கச் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட துணைக் கேள்வி அல்ல. அதனுல் இந்தக் கேள்வி அனுமதிக்கப்படக்கூடியதல்ல.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : My question relates to the modern rice mill and it is quite relevant to the main question. When the Hon. Minister is prepared to answer it, the Hon Deputy Speaker does not want him to answer it and that it taking away

[1972 மார்ச் 11

the privilege of the hon. Members. I take strong objection to that. . . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member need not give any judgment. . .

THIRUMATHI T. N. ANANDANAYAKI : My question is relevant and I take very strong objection to the Deputy Speaker disallowing the question. . .

MR. DEPUTY SPEAKER : It is left to the Hon. Minister to answer it or not.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : The Hon. Minister wanted to reply but the Deputy Speaker did not allow him to do so. . .

MR. DEPUTY SPEAKER : The hon. Member cannot make any observation about the Chair.

**திரு. நா. வீராசாமி :** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். தலைவரவர்களே, தங்களுக்கு இந்த மன்றத்தில் துணைக் கேள்விகளை அனுமதிக்கவும், மறுக்கவும் உரிமை உண்டு. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் disallowing the question. . . என்று சொன்னார்கள். அது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I have never stated that the Chair has no right. The Deputy Speaker told the Minister that he need not answer my question and that is not correct. . .

MR. DEPUTY SPEAKER : When the question is not relevant to the main question, how can the hon. Member ask the Hon. Minister to answer it ?

THIRUMATHI T. N. ANANDANAYAKI : This question relates to modern rice mill.

MR. DEPUTY SPEAKER : The main question does not relate to the modern rice mills but about the modern rice mill at Sitharkadu and the hon. Member wanted details about mordern rice mills. . .



1972 மார்ச் 11]

**திரு. என். கிட்டப்பா :** தலைவரவர்களே, இந்த மில் கேள்வி மாயூரம் சித்தர்க்காட்டிலுள்ள நவீன அரிசி ஆலையைப்பற்றியது. அதற்கும் மைலாப்பூருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது ?

**திருமதி த. ந. அனந்தநாயகி :** நான் மைலாப்பூருக்கு அரிசி ஆலை வேண்டுமென்று கேட்கவில்லை. கூட்டுறவுத் துறையில் இயங்கும் ஆலைகள் பெரும்பாலும் நஷ்டத்தில் இயங்குகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்களே. அந்த ஆலைகள் லாபத்தில் இயங்க என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்பதுதான் என் கேள்வி. If he is willing to answer the question, at any time he can answer it.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மூலக் கேள்வியை விட்டுவிட்டு லாப நஷ்டக் கணக்குக் கேட்டால் எப்படிப் பதில் சொல்ல முடியும் ?

**திரு. கே. கந்தசாமி :** தலைவரவர்களே, அரிசியை மில்களில் தீட்டுவதினால், அரிசியிலுள்ள புரதமிக்க தவிட்டுச் சத்துணவு போய்விடுகிறது. ஆகையால் அந்த தவிடு முழுதும் போகக் கூடாத முறையில் அரிசி அரைக்கப்பட வேண்டும். அல்லது கைக்குத்தல் அரிசியை உபயோகிக்க வேண்டும் என்று சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறுகிறார்கள். ஆகவே, ஆலைகளில் அரிசியை அரைக்கும்போது தவிடு முழுவதும் போய்விடாதபடி அரைத்துக் கொடுக்கும்படி உத்தரவிடப்படுமா ? அதுபற்றி அமைச்சரவர்களின் கருத்து என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, தவிடு ஒரு சத்துணவு என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனென்றால் தவிட்டில் ஒரு எண்ணெய் கலந்திருக்கிறது. அதில் நச்சுப்பொருள் கலந்திருக்கிறது. தவிட்டைச் சாப்பிட்டால் அது உடலுக்குச் சுகாதாரக் கேட்டை விளைவிக்கும். அதனால் தவிடு ஒரு சத்துணவு என்பது பொருத்தமுடையதல்ல. ஆனால் ஆலைகளில் அரிசியை எந்த அளவுக்குத் தீட்டிக்கொடுக்கச் சொல்கிறார்களோ, அந்த அளவுக்குத் தீட்டிக்கொடுக்க முடியும்.

**திரு. கே. கந்தசாமி :** இது அமைச்சரவர்களுடைய தனிப்பட்ட கருத்தா, அல்லது நிபுணர்களுடைய கருத்தா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தலைவரவர்களே, நான் சொன்னது தவிட்டில் நச்சுப்பொருள் கலந்த எண்ணெய் இருக்கிறது ; அதனால் அது உடல் நலத்திற்கு ஏற்றதல்ல என்று தான். அங்கத்தினர் அவர்கள் கையால் குத்தப்பட்ட அரிசியைத் தான் உபயோகிக்க வேண்டும் என்பதல்ல. கொஞ்சம் அதிகமாக தீட்டவேண்டுமென்று சொன்னாலும், அல்லது குறைவாகத் தீட்ட வேண்டுமென்று சொன்னாலும் அதற்கேற்ற முறையில் செய்து கொடுக்க ஆலைகளில் வசதி இருக்கிறது.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** தலைவரவர்களே, தவிட்டில் இருக்கக் கூடிய எண்ணெயில் விஷம் இருப்பதாகச் சொல்கிறார்கள். அது நீக்கப்பட்டுவிட்டால் சத்துணவாக உபயோகிக்கலாம் அல்லவா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** தவிட்டை நன்றாக சுத்தம் செய்துவிட்டால், அதில் இருக்கக்கூடிய விஷம் நீக்கப் பட்டு விடும். அப்போது அதை சத்துணவாகப் பயன்படுத்தலாம்.

**திரு. கே. டி. கே. தங்கமணி :** சித்தர்காட்டில் உள்ள நவீன அரிசி ஆலை இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை என்று தெரிவித் தார்கள். பொதுவாக நமது மாநிலத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள நவீன அரிசி ஆலைகள் எல்லாம் எந்த நிலையில் ஓடுகின்றன என்று அறிய விரும்புகிறேன். லாபத்திலா ? நஷ்டத்திலா ?

**மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் :** ஏற்கனவே இந்த அவையில் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன். 13 நவீன ஆலைகள் நம் மாநிலத்தில் இருக்கின்றன என்றாலும் அவை யாவும் நஷ்டத்தில்தான் ஓடுகின்றன. அவைகளை நல்லமுறையில் லாபகர மானதாக ஓட்டுவதற்கு, உணவுத் துறையினிடத்தில் ஒப்படைக் கின்ற குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் இருக்கிறது.

## அரசுப் போக்குவரத்துத் துறை ஓட்டுநர்களுக்கு குடைகள் வழங்கல்

*448. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசினர் பஸ் டிரைவர், கண்டக்டர்களுக்கு மழைக் காலங்களில், உரிய நேரத்தில் பணிக்கு வந்து போக இலவசமாக குடை வழங்கும் உத்தேசம் அரசிடம் உள்ளதா ?



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** இல்லை.

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே இலவசமாக குடை வழங்கும் திட்டம் இல்லை என்றாலும் மழைகாலங்களில் அவர்கள் சிறப்பாகப் பணிபுரிவதற்கு மழைக் கோட்டுகளையாவது வாங்கிக் கொடுத்து அவர்களிடம் இருந்து அதற்கான தொகையை மாதத் தவணைகளில் திரும்பப்பெற அரசு முயற்சி செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** அவர்களுக்கு இலவச மாகப் பயணம் செய்ய பேருந்துகள் இருக்கிற காரணத்தினால் இலவசமாக குடைகள் வழங்க வேண்டிய அவசியம் இல்லை, மழைக்கோட்டும் அவசியம் இல்லை என்று அரசு கருதுகிறது.

## கோயில்களின் கணக்குகள் தணிக்கை.

* 449. வினா—**திரு. கே ரங்கநாதன் :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அறநிலையத்துறைக்கு உட்பட்ட ஆலயங்களின் வரவு செலவுக் கணக்குகள் அதிகாரிகளால் தணிக்கை செய்யப்படுகிறதா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** ஆம்.

## திருவரங்கம் கோயில் வருமானம்

* 450. வினா—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

திருவரங்கம் கோயிலின் வருமானத்தைக்கொண்டு மருத்துவ மனை, கல்விச்சாலை ஏற்படுத்துவது போன்ற பொது நலப் பணிகள் எவையேனும் நடைபெறுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]**

## (2) ஒத்திவைப்புத் தீர்மானங்கள்

### (அ) ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நெசவாலைத் தொழிலாளர்கள் மீது போலீஸ் தடியடி நடத்தியதாகக் கூறப்படுவது குறித்து.

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice under Rule 42 of the Legislative Assembly Rules to adjourn the House to discuss a matter of urgent public importance, viz., the unjustified lathi charge by the Police on Srivilliputur Co-operative Textile Mill workers on 6th March 1972 seriously injuring 43 workers and consequent unrest in the area.

Thiruvalargal R. Ponnappa Nadar, V. M. Abdul Jabbar, K. M. Subramaniam, K. Suppu, J. James and Thirumathi T. N. Anandanayaki have also given similar motions.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களுடைய போராட்டத்தை ஆதரித்தும் தங்களுடைய கோரிக்கைகளையும் வலியுறுத்துவதற்காகத் தமிழகத்தின் இதர பகுதிகளில் இருக்கிற பஞ்சாலைத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தார்கள். இந்த வேலை நிறுத்தங்கள் பல இடங்களிலும் அமைதியாகத்தான் நடந்திருக்கின்றன. நல்ல வேளையாக எந்த அசம்பாவிதமான சம்பவங்களும் நடைபெறவில்லை. ஆனால் ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நெசவு மில்லில் இது போன்ற வேலை நிறுத்தம் அமைதியான முறையில் மில்லுக்கு வெளியே நடைபெற்றபோது மில்லுக்குள் தொழிலாளர்கள் அல்லாதவர்களை வைத்துக்கொண்டு சோடா பாட்டில்களை எறிந்து தொழிலாளர்களைத் தாக்கியிருக்கின்ற நேரத்தில் அதுபோலத் தாக்கியவர்களை ஒன்றும் செய்யாது, வெளியில் இருந்து போலீசார்கள் தாக்கப்பட்ட தொழிலாளர்களையே லத்திசார்ஜ் செய்து இன்றைய தினம் 46 பேர்களுக்கு மேல் காயம் அடைந்து மருத்துவமனையில் இருக்கிறார்கள். இதுபற்றி அந்தப் பகுதியில் ஒரு பெரிய பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இந்தப் போராட்டத்தைப் பெரும்பாலும் யாரும் எதிர்க்கவில்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் மறியலில் கலந்துகொள்ளாவிட்டாலும் போராட்டத்தின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். கொஞ்ச நாட்களுக்கு முன்னால் இந்த நெசவாலையில் தொழிலாளர்களுக்கு மத்தியில் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுப்பதற்கு தி.மு.க. சங்கத்தைச்



சேர்ந்தவர்கள் நீங்கலாக மற்றத் தொழிற் சங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து ஒருவரை நிறுத்தி வெற்றிபெறச் செய்திருக்கிறார்கள். அதன்காரணமாக இதுபோன்ற திட்டமிட்ட தாக்குதல்களை நடத்துவதும், அதற்குச் சாதகமாக போலீசார்கள் பயன்படுத்தப்பட்டு வருவதும் மிகமிக வருந்தத்தக்கது. பர்மாவில் இருந்து வந்துள்ள அகதிகள்கூட இந்த நெசவாலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் பயமுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அங்கே தொழிற்சங்கத் தலைவராக இருக்கிறவர்தான் நகர மன்ற தி.மு.க. தலைவராக இருக்கிறார். இதைபற்றி இன்னும் அதிகமான விவரங்கள் தர முடியும். ஆகவே, இந்த ஒத்திவைப்புப் பிரேரணையை அனுமதித்து அவைபற்றி எல்லாம் விவாதிக்க அனுமதி அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : பஞ்சாலைத் தொழிலாளர்கள் தங்களுடைய குறைகளை—மிகமிகப் பொறுமைக்கப்புறம் தான்—ஆண்டுக்கணக்கில் பொறுத்திருந்த பின்னர்தான்—வலியுறுத்துவதற்காக வேலை நிறுத்தத்தை ஆரம்பித்தார்கள். வேலை நிறுத்தத்தின்மூலம் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர முன்வந்தார்கள். அதற்குக்கூட அவர்களுக்கு உரிமையில்லையா ? அதற்குக்கூட உரிமை இல்லை என்கிற முறையில் கேட்டுக்கு வெளியே அமைதியான முறையில் வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை மில்லுக்குள் இருந்து extraneous elements என்கிறவர்களை வைத்துத்தாக்குவதும், அப்படித் தாக்கப்பட்டவர்களையே போலீஸ்காரர்களும் லத்தி சார்ஜ் செய்வதும் மிகமிகக் கண்டிக்கத்தக்கதாகும்.

ஸ்ரீவில்லிப்புத்தூரில் கூட்டுறவு நூற்பாலைத் தொழிலாளர்கள் அன்றைக்கு அமைதியான முறையில் வேலைநிறுத்தம் செய்திருக்கிறார்கள். அவர்களை போலீசார் ஒரு பக்கம் லத்தி சார்ஜ் செய்திருக்கிறார்கள். மில்லுக்குள் இருந்து பலர் சோடா பாட்டில்களினால் தாக்கியிருக்கிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். இதுபோன்றுதான் எல்லா இடங்களிலும் வன்முறை நடைபெறுகிறது. ஆகவே தொழிலாளர்கள் மிக்க மனவேதனை அடைந்து வருகிறார்கள். அடித்தவர்களை ஒன்றும் செய்யாது போலீசார்கள் அடிபட்ட

வர்களையே லத்தி சார்ஜ் செய்வதும் அடிபட்டவர்கள் மீதே வழக்குகள் போடுவதும் மிகமிக வன்மையாகக் கண்டிக்கக்கூடிய தொன்றாகும். போலீசார்களின் தவறான செய்கைகளைக் கண்டிக்க இந்த அரசு திராணி இல்லாமல் போய்விட்ட மாதிரிதான் இருக்கிறது. இதுபற்றிய விவரங்களை முழு அளவில் விவாதிக்க இந்த ஒத்திவைப்புப் பிரேரணைக்கு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பேரவைத் தலைவர் அவர்களே, அடித்தவர்களைப் பிடிப்பது இல்லை, அடிபட்டவர்களையே பிடிக்கிறார்கள் என்று அம்மையார் அவர்கள் தங்கள் காலத்தில் நடந்த நிகழ்ச்சிகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது பேசும்போது குறிப்பிடு கிறார்கள்.

ஸ்ரீவில்லிப்புத்தூர் கூட்டுறவு நூற்பாலையில் 726 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 421 பேர்கள் தி.மு.க. சங்கத்தைச் சேர்ந்தவர்கள் ஐ.என்.டி.யு.வி.யைச் சேர்ந்தவர்கள் 142 பேர்கள். ஏ.ஐ.டி.யு.சி.யைச் சேர்ந்தவர்கள் 165 பேர்கள். அங்கே நடந்த சம்பவம் என்னவென்றால் 6—3—72 அன்று மதியம் 3½ மணிக்கு தி.மு.க. அல்லாத தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 60-க்கும் மேற்பட்டவர்கள் வெளியில் நின்றுகொண்டு வேலைக்குச் சென்ற தி.மு.க சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களை வழிமறித்துத் தடுத்தும், உள்ளே வேலைசெய்து கொண்டிருந்தவர்களை அச்சுறுத்தியும் இருக்கிறார்கள். இதன் காரணமாக இரண்டு பேர்களிடையே மோதல் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் கற்களை வீசிக்கொண்டதன் காரணமாகச் சிலர் காயம் அடைந்திருக்கிறார்கள் என்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது.

அதில் ஐ.என்.டி.யூ.சி.,ஏ.ஐ.டி.யூ.சி, சி.ஐ.டி.யூ. ஆகிய தொழிற் சங்கங்களைச் சேர்ந்த மூவரும், தி.மு.க. தொழிற்சங்கத்தைச் சேர்ந்த இரு தொழிலாளர்களும் காயமுற்றிருக்கிறார்கள். இரு தரப்பிலும் காயம் ஏற்பட்டிருக்கிறது. இரு தரப்பிலும் உள்ளவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 8 பேர் இருதரப்பைச் சேர்ந்தவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். தி.மு.க. அல்லாதவர்கள் 6 பேர் ; தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் 2 பேர், கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களின்மீது இ.பி.கோ.





147, 341, 336 பிரிவுகளின்கீழ் வழக்கு ஒன்றும் தொடரப்பட்டிருக்கிறது. ஆகவே, நடவடிக்கைகள் எதுவும் எடுக்கவில்லை என்று கூறுவது தவறு. போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள் என்று கூறுவது தவறு. அடிப்படை உண்மைக்கு மாறான விஷயங்களைப் பேசுவது தவறு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் தொழிலாளர் பிரச்சினையை இந்த அரசு கவனிக்கவே இல்லையென்று குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே இருந்த அரசுதான் தொழிற்சாலைகளை மூடுகின்ற காரியத்தை துவஜாரோகணம் நடத்திவிட்டுச் சென்றார்கள். அப்போது 6 அல்லது 7 மில்கள் மூடப்பட்ட நேரத்தில், மூடிய மில்களைத் திறக்க வேண்டுமென்று இந்தப் பேரவையிலே தீர்மானம் கொண்டுவந்த நேரத்திலே, கோவைத் தொழிலாளர்கள் சார்பிலே நாங்கள் தீர்மானம் கொண்டுவந்த நேரத்திலே "ஆலைகளை ஏற்று நடத்த முடியாது, நஷ்டம் ஏற்படும்" என்று அன்றைக்குத் தொழில் அமைச்சர் சொன்னதை மறந்துவிட்டு, காலம் சில நினைவுகளை மறைத்துவிடும் என்ற தன்மையில் பேசிக் கொண்டிருப்பது நல்லதல்ல. அம்மையார் அவர்கள் சொன்னார்களே ஒருவார்த்தை, அதையே நானும் சொல்லவேண்டுமென்றால் திராணி அப்போது இருந்தவர்களுக்கு இல்லை.

இன்றைய தினம் மேலும் பல மில்களைத் திறப்பதற்கான முயற்சியில் வெற்றி பெற்று வருகிறோம். கோவைத் தொழிலாளர் பிரச்சினையிலே, வேறு எந்த மாநிலமும் காட்டாத அளவிற்குத் தமிழ்நாடு அரசாங்கம் அக்கறை காட்டி வந்திருக்கிறது. பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக, தொழிற்சங்கத் தலைவர்களோடு பேசி, அவர்கள் எடுத்துக்காட்டியவற்றைக் கேட்டு, அவர்களுக்காக 5 லட்சம் ரூபாய் நிவாரணமாக அரசின் சார்பில் அளிக்கப்பட்டிருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த பொழுது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக 2 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டது. இப்போது 5 லட்சம் ரூபாய் அளிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தைத் தவிர வேறு எந்த மாநிலத்திலாவது பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நிவாரணத் தொகை அளிக்கப்பட்டிருக்கிறதா? எந்த மாநில அரசாவது நிவாரணம் அளித்திருக்கிறதா என்பதை எண்ணிப்

பார்க்கவேண்டும். மனச்சாட்சி உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். தடியடிப் பிரயோகம் நடந்து, தொழிலாளர்கள் தாக்கப்பட்டார்கள் என்று திருமதி அம்மையார் அவர்கள் குறிப்பிட்டார்களே, அது சரியல்ல. அம்மையார் அவர்களைவிட இந்த அரசு தொழிலாளர்கள்பால் அதிக அக்கறையை எடுத்துக் காட்டியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, ஸ்ரீவில்லிபுத்தூர் நிகழ்ச்சியை எடுத்துக்கொண்டு பேரவையில் விவாதிக்க வேண்டிய அவசியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை ஏற்று விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

**(ஆ) மதுரையில் ஆசிரியர்களின் கோரிக்கையை ஆதரித்து மாணவர்கள் நடத்திய ஊர்வலத்தில் போலீஸ் தடியடி நடத்தியதாகக் கூறப்படுவதுகுறித்து.**

MR. SPEAKER : Thiru K. T. K. Thangamani has given notice of an Adjournment Motion under Rule 42 of the Tamil Nadu Legislative Assembly Rules for adjourning the business of the House to discuss the following matter of urgent public importance :

" Unjustified lathi charge by the police on the students in Madurai on 7th March 1972 in several areas including Gandhinagar, when students took out processions in support of demands of B.T. Teachers and candemning arrests and serious and tense situation prevailing in the City of Madurai."

**திரு. கே. டி. கே. தங்கமணி :** பேரவைத் தலைவர் அவர்களே. பட்டதாரி ஆசிரியர்களுக்கு இரண்டாவது சம்பளக் கமிஷன் அறிக்கையில் அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லி, 20 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்கள் 6, 7, 8 ஆகிய தேதிகளில் சென்னை கோட்டைக்கு அருகாமையில் உண்ணாவிரதம் இருப்பது என்கிற அடிப்படையில் இங்கு வந்தார்கள் என்பது இந்தச் சபையில் உள்ள எல்லோருக்கும் தெரியும். அந்தப் போராட்டம் நடந்துகொண்டிருந்த நேரத்தில் அரசின் தலையீட்டால், அதிர்ஷ்டவசமாக உண்ணாவிரதம் 8-ம் தேதிவரை போகாத அளவுக்கு



ஏற்பட்டு, ஆசிரியர்களின் குழுத் தலைவர்கள் திருப்திப்படும் அளவிற்கு ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. ஆனால் 6-ம் தேதி ஊர்வலமாகச் சென்று உண்ணாவிரதம் இருந்த 100-க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் மூன்று பெண் ஆசிரியர்கள் உட்பட கைது செய்யப்பட்ட செய்தி அன்றைய மாலைப் பத்திரிகைகளில் வெளிவந்தது. அந்தச் செய்தி மறுநாள் காலையில் மதுரையில் வெளிவந்த பத்திரிகைகளில் முக்கியமான செய்தியாக வெளியிடப்பட்டது. இதைப் பார்த்ததும் அங்கே இருக்கக்கூடிய ஆசிரியர்கள், தாங்கள் இன்றைக்கு வேலைக்கு வந்திருக்கிறோம் என்பதற்காக கையெழுத்திட்டுவிட்டு வெளியே வந்துவிட்டார்கள். அதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு ஆதரவாகக் கிட்டத்தட்ட எல்லாப் பள்ளிகளிலும், உயர்நிலைப்பள்ளிகளிலும் உள்ள மாணவர்கள், ஆசிரியர்களைக் கைது செய்ததைக் கண்டித்தும், அவர்கள் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்றும் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். அதில் கல்லூரி மாணவர்கள் அதிகமாக வந்ததாகத் தெரியவில்லை, எல்லா உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் ஊர்வலமாக வந்திருக்கிறார்கள். எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டு, மதுரை நகரமே பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஆதரவாக இருந்ததுபோல் காட்சியளித்தது.

மதுரையிலே பெரிய ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் காந்திநகர் பள்ளி இருக்கிறது. அது நகரசபைக்குச் சொந்தமானது. அந்தப் பள்ளியில் போலீசார் உள்ளே புகுந்து தடியடி நடத்தியிருக்கிறார்கள். காயம் ஏற்பட்டது பெரிய அளவா என்பதெல்லாம் எனக்குத் தெரியவில்லை. பல மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, மாணவர்கள் மறுபடியும் ஊர்வலமாகச் சென்று போலீசார் தலையீட்டின் பேரில் மதுரை நகரமே மாறியிருக்கிறது. போலீசாரைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களில் தடியடி நடத்தியிருக்கிறார்கள். அவ்வாறு தடியடிப் பிரயோகம் நடத்த வேண்டிய சூழ்நிலையை உண்டாக்க வேண்டிய அவசியம் இல்லை. இப்படி மாணவர்கள் ஊர்வலம் நடத்துகிறபோதெல்லாம் போலீஸ் கையிலே லத்திகூடக் கொண்டு செல்லாமல், வேறு முக்கியமான வழிகளை வைத்துக்கொண்டு சமாதானம் செய்வதுதான் பொருத்தமாக இருக்கும். போலீசார் மாணவர்களைத் தாக்கி, ஏதாவது விபரீதங்கள் ஏற்பட்டால் அதன் பிரதிபலிப்பு அபாயகரமாக இருக்கும் என்பதற்கு, இந்தச் சம்ப

பவம் எடுத்துக்காட்டாக இருக்கும். ஆகவே, இம்மாதிரியான சம்பவத்தின்போது அரசு ஜாக்கிரதையாக இருக்கவேண்டுமென்ற காரணத்தால் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கிறோம். ஆகவே, இதுகுறித்து விவரமாக விவாதிக்க இந்தப் பேரவையின் மற்ற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. ஏ. ஆர். மாரிமுத்து :** பேரவைத் தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்களுடைய கோரிக்கை ஓரளவு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அந்தப் போராட்டம் கைவிடப்பட்டிருந்தாலும், அந்தப் பட்டதாரி ஆசிரியர்களுடைய கோரிக்கைக்கு அனுதாபமாக இளம் பையன்கள், உயர்நிலைப் பள்ளிகளில் படிக்கும் 15 வயதுக்குட்பட்ட பையன்கள்—11, 12 வயதுள்ள பையன்கள்—ஆதரவாக நடத்திய ஊர்வலத்தில் போலீசார் தடியடிப் பிரயோகம் நடத்தியிருக்கிறார்கள் என்பது மிகவும் வருந்தத்தக்க ஒன்று. சிறுபையன்கள் மத்தியில் ஆத்திரமூட்டக் கூடிய வகையில் செயல்கள் நடைபெறுவது நாட்டுக்கு நல்லது அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். போலீசாருக்கு ஆத்திரமூட்டக்கூடிய வகையில் மாணவர்கள் நடந்துகொண்டார்களா, இல்லையா என்பதைப் பார்ப்பதைவிட, மாணவர்களை ஆத்திரப்படும்படி வைக்காமல் இருந்திருந்தால் தடியடிப் பிரயோகம் நடந்திருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த முக்கியமான பிரச்சினை சபையில் விவாதிக்கப்பட்டால், எதிர்காலத்தில் மாணவர்கள்—இளம் சிறார்கள்—மத்தியில் போலீஸ் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதுகுறித்து நல்ல கருத்துக்கள் கிடைக்கக்கூடும் என்பதால், இந்தப் பேரவையின் மற்ற அலுவல்களை ஒதுக்கிவைத்துவிட்டு, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கே. கந்தசாமி :** தலைவர் அவர்களே, இந்த மாணவர்களுடைய பிரச்சினையானது, ஆசிரியர்களுக்காக எழுந்தது. பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்சினை சுமுகமாக முடிந்துவிட்ட காரணத்தால் அதுபற்றிய சர்ச்சை தேவையில்லை. இப்படிப்பட்ட மாணவர்களுடைய பிரச்சினை வளர்ந்துகொண்டு வருவதற்கு நல்ல முடிவு கட்ட வேண்டுமென்று இந்த பிரச்சினையை அவைமுன் வைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மிகக் கனி



வோடு, இதை ஒரு பிரச்சினையாக எடுத்துக்கொண்டு, எல்லாக் கட்சித் தலைவர்களையும், மன்றத்தில் உள்ள பிரதிநிதிகளையும் வைத்துக்கொண்டு, "எந்தப் பிரச்சினையாயிருந்தாலும், அதில் மாணவர்களை இழுக்கக்கூடாது" என்று ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டுமென்று விரும்பிக் கேட்டுக்கொண்டு, மாணவர்களின் பிரச்சினைக்கு முடிவு காண வழிவகை செய்ய வேண்டும். மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமாக விளங்க, மாணவர் சமுதாயம் புத்தொளியுடன் விளங்க வழி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, பட்டதாரி ஆசிரியர்களுடைய கிளர்ச்சியையொட்டி ஆறாம் தேதியன்று மதுரையிலே உள்ள சில கல்லூரிகளின் உயர்நிலைப்பள்ளிகளிலே பட்டதாரி ஆசிரியர்கள் வேலைக்குச் செல்லாமல் இருந்துவிட்டார்கள். ஆசிரியர்கள் வராத காரணத்தினாலே மாணவர்களும் வேலையில்லாமல் வெளியே வரவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பத்திரிகைகளிலே ஆசிரியர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்திதான் வந்தது, கைதுசெய்யப்பட்ட ஆசிரியர்கள் விடுதலையானார்கள் என்ற செய்தியை அவர்கள் போடவில்லை என்று கருதுகிறேன். போட்டிருந்தால் அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கமுடியாது என்ற காரணத்தினாலே அவர்கள் போடாமல் இருந்திருக்கலாம்.

பட்டதாரி ஆசிரியர்கள் கிளர்ச்சிகளிலே ஈடுபட்டார்கள் என்பதற்காக மாணவர்களும் கிளர்ச்சியிலே ஈடுபட்டார்கள். முதல் நாள் இங்கே பேசிய சுப்பு அவர்கள் மாணவர்களும் ஈடுபடுவார்கள் என்று கூறியதன்மூலம் மாணவர்களும் ஈடுபட வேண்டுமென்ற கருத்தை எடுத்துச் சொன்னதை நாம் மறந்துவிடவில்லை. அதனால்தான் திரு. கந்தசாமி அவர்கள் இந்த விஷயங்களில் எல்லாம் மாணவர்களை இழுக்கக்கூடாது, மாணவர்களை அரசியல் தெரிந்து கொள்ளக்கூடியவர்களாக ஆக்க வேண்டுமே அல்லாது நேரடியாகப் பிரச்னைகளிலே ஈடுபடுத்தலாகாது என்ற கருத்தைக்கூட எடுத்துக் கூறினார்கள்.

போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தார்கள் என்று திரு. கே. டி. கே. அவர்களும் திரு. மாரிமுத்து அவர்களும் சொன்னார்கள்.

எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு அவர்கள் தெரிவித்தார்கள் என்று தெரியவில்லை. திரு. மாரிமுத்து அவர்கள் பத்திரிகையிலே வந்த செய்தி என்று சொன்னார்கள். பத்திரிகைகளிலே எல்லா விஷயங்களும் வரும். ஆனால் நாம்தான் விஷயத்தை அறியவேண்டியவர்களாக இருக்கிறோம். போலீசார், பாண்டியன் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள்மீதும் வாகனங்கள்மீதும் கல்லெறிந்து சேதப்படுத்திய மாணவர்களை விலகிச்செல்லவேண்டுமென்றுதான் கேட்டுக்கொண்டார்கள், வேறு எந்தவிதமான சக்தியையும் பயன்படுத்தவில்லை. பேருந்துகள் எம்.டி.ஏ. 943, எம்.டி.யூ. 7618, எம் டி யூ 6517, எம் டி ஏ 794 ஆகியவற்றின்மீது கற்களை வீசிக் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டுச் சுமார் நாலாயிரம் ரூபாய் அளவிற்குச் சேதம் ஏற்பட்டிருக்கிறது. கள்ளிக்குடியில் சர்க்கார் பஸ் அல்ல. பஸ் எண் எம்.டி.ஆர். 4313 என்ற ஒரு தனியார் பஸ்ஸை வழிமறித்துச் சுமார் 1,600 ரூபாய் 2,000 ரூபாய் அளவுக்குச் சேதப்படுத்தியிருக்கிறார்கள். அந்த பஸ்ஸிலே இருந்த பிரயாணிகள் இறங்கிவந்து மாணவர்களை விரட்டி விரட்டி அடித்து இருக்கிறார்கள். ஒருவேளை அந்தப் பிரயாணிகளும் போலீஸ் டிரஸ் போடாமல் வந்த போலீசார் என்று சொன்னாலும் நான் ஆச்சரியப்படமாட்டேன். வேண்டுமென்றே அரசாங்கத்தின்மீது குற்றச்சாட்டுச் சொல்லவேண்டுமென்று சொல்வதுதானே தவிர வேறு எதுவும் நடைபெறவில்லை. எனவே இந்த அவையிலே எழுப்பிய ஒத்திவைப்புத் தீர்மானங்களின்மீது கூறப்பட்டபடி, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்யவில்லை. மாணவர்கள் பல பஸ்களைச் சேதப்படுத்தியிருக்கிறார்கள். அந்த மாணவர்கள்மீது எந்தவித நடவடிக்கைகளும் எடுக்காமல், அமைதியாகக் கலைந்து செல்லுமாறுதான் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். கள்ளிக்குடியிலே வழிமறிக்கப்பட்ட பஸ்ஸிலிருந்து இறங்கிவந்தவர்கள் மாணவர்களைத் துரத்தியதாலே காயம் ஏற்பட்டிருக்கலாம் என்பதைக் கூறி, தலைவர் அவர்களே, முடித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. டி. கே. தங்கமணி:** நான் மதுரையிலே இருக்கிற விஷயத்தைத்தான் எழுப்பினேன். கள்ளிக்குடி சம்பவத்தைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படிச் சொல்வது என்றால் கல்லுப்பட்டியிலே மாணவர்களையும் ஆசிரியர்களையும்





ஆத்திரப்படுத் திட்டுகிற கூட்டங்களும் திட்டமிட்ட சில சம்ப வங்களும் நடந்து இருக்கின்றன. அம்மாதிரிச் சம்பவங்கள் நடை பெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மாணவர்களையும் ஆசிரியர் களையும் தாறுமாறாகப் பேசிக் கல்லுப்பட்டியிலே கூட்டம் நடத்தி யிருக்கிறார்கள், வேண்டுமானால் நீங்கள் போலீஸ் ரிப்போர்ட்டை வரவழைத்துப் பார்த்துக்கொள்ளலாம். ஆசிரியர்களையும் மாணவர் களையும் அவதூறாகப் பேசக்கூடிய நிலைமையெல்லாம் நடந்திருக் கிறது. இம்மாதிரிச் சம்பவங்களும் நடக்காத அளவுக்குப் பார்த்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. க. சுப்பு:** முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் போராடு வார்கள் என்று நான் குறிப்பிட்டதாகச் சொன்னார்கள். பிரச்னைகளைத் தள்ளிப் போடுவதன் மூலமாகத் தங்களுடைய கோரிக்கைகளுக்காகப் போராடக்கூடிய மாணவர்கள் ஆசிரியர்களுக்காகப் போராடக்கூடிய சூழ்நிலை வரக்கூடாது என்றுதான் சொன்னேன். ஆனால் அப்படிப்பட்ட சூழ்நிலை வந்துவிட்டது. அதை அரசாங்கம் தடுத்திருக்க வேண்டும். பிரச்னையைத் தள்ளிப்போட்டதால் அந்தப் போராட்டத்தை நடத்தக்கூடிய சூழ்நிலை வந்ததற்குக் காரணம் அரசாங்கம் செய்த தவறுதானே ஒழிய நான் அதற்குப் பொறுப்பு என்று சொல்வது சரியல்ல.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** இதிலே பொறுப்பு யார் என்பது அல்ல. இப்படியெல்லாம் பேசுவது தூண்டிவிடு வதற்கு உதவியாக இருக்கும் என்று சொன்னேன். திரு. கே. டி. கே. அவர்கள் யாரோ பேசினார்கள் என்று சொன்னார்கள். யாரையும் புண்படுத்திப் பேசவேண்டும் என்ற எண்ணம் இல்லை. அப்படித் தகவல் ஏதாவது இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே இந்த ஒத்திவைப்புத் தீர்மானங்களுக்கு அனுமதி மறுக்கப் படுகிறது.

### (3) அரசினர் தீர்மானங்கள்.

#### (அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 183-வது விதியின்கீழ் 1972-73 ஆம் நிதியாண்டுக்குரிய அவையுரிமைக் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதினொன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்"

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### (4) அறிவிப்பு.

#### (அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் அவையுரிமைக் குழுவிற்கு (Committee of Privileges) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 18—3—1972 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20—3—1972 திங்கட்கிழமை பகல் 11-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21—3—1972 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினொன்றிற்கு மேற்படுமாயின் 23—3—1972 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.



### (3) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

#### (ஆ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே—

"தமிழ்நாடு சட்டப் பேரவையின் 221 (1)-வது விதியின்கீழ் 1972-73 ஆம் நிதியாண்டுக்குரிய அவையினர் குழுவின் உறுப்பினர்களாய் இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

### (4) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (ஆ) அவையினர் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்குப் பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவையினர் குழுவிற்கு (House Committee) உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 18—3—1972 சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 20—3—1972 திங்கட்கிழமை பகல் 11-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 21—3—1972 செவ்வாய்க்கிழமை பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதின்மூன்றுக்கு மேற்படுமாயின் 23-3-1972 வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 1-00 மணிக்கும் இடையே உறுப்பினர்கள் ஓய்வறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (5) 1972-73 ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு.

*(அ) நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே—

ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் "நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,93,87,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

என்று முன்மொழிகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Sir, I move the following cut motion :—

**To discuss policy—**

"That the allotment of Rs. 9,93,87,400 under Demand No. 23—Community Development Projects, etc.—be reduced by **Rs. 100.**"

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion :—

**To discuss policy—**

**"That the allotment of Rs. 9,93,87,400 under Demand** No. 23—Community Development Projects, etc.—be reduced by **Rs. 100.**"

THIRU N. K. PALANISWAMY : Sir, I move the following cut motion—To discuss the failure of the Government to reorganise the Panchayat Unions in the State :—

"That the allotment of Rs. 9,93,87,400 under Demand No. 23—Community Development Projects, etc.—be reduced by **Rs. 100.**"

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துக்கும், மக்களுக்கும் தொடர்பு இருக்கும் வகையில் பஞ்சாயத்துச் சட்டத்தை மாற்றியமைக்க வேண்டும் என்பதை வற்புறுத்த—



"நிதிக் கோரிக்கை எண் 23—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 9,23,81,400-இல் ரூ. 100 குறைக்க வேணடும்

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, I move the following cut motion to discuss about the ways and means to increase the efficiency in the blocks :—

"That the allotment of Rs. 9,93,87,400 under Demand No. 23—Community Development Projects, etc.—be reduced by Rs. 100."

*(ஆ) நிதிக்கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள்.*

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

"நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ 4,69,29,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I move the following cut motion—To discuss about the Grants-in-Aid to the Corporation of **Madras :—**

"That the allotment of Rs. 4,69,29,500 under Demand No. 29—Public Works—Grants-in-Aid—be reduced by Rs. 100."

DR. H. V. HANDE : Sir, I move the following cut motion to discuss the need to implement the scheme for supply of drinking water to all the villages in this State :

"That the allotment of Rs. 4,69,29,500 under Demand No. 29—Public Works—Grants-in-Aid—be reduced by Rs. 100."

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, உள்ளாட்சி நிறுவனங்களின் குடிநீர், கழிவுநீர் அகற்றும் திட்டங்களை ஆராய்வதில் ஏற்படும் தாமதம் குறித்து விவாதிக்க—

[திரு. கே. எ. வகாப்] [1972 மார்ச் 11

"நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 4,69,29,500-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில் சிறு விவசாயிகள் திட்டத்திற்கு அதிகப் பணம் ஒதுக்கி அதிக சமுதாயக் கிணறுகள் தோண்டுவது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப்பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,69,29,500-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, பட்டுக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் சாலையான அணைக்காடு—பழஞ்சூர் சாலையை (Marketing Complex) திட்டத்தில் சேர்த்து மேம்படுத்த வேண்டும் என்பதைக் குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,69,29,500-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."
என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும், அவையின் முன் விவாதத்திற்கு வந்திருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சியும் ஊராட்சி வளர்ச்சியும் பற்றிய விளக்கக் குறிப்புகளும், கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை பற்றிய விளக்கக் குறிப்புகளும் * தரப்பட்டிருக்கின்ற காரணத்தினால், மன்ற உறுப்பினர்கள் அவற்றையெல்லாம் செம்மையாக படித்திருப்பார்கள். ஆகவே அதைப்பற்றி நான் விளக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். அவைகளை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

* 595-658-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.



1972 மார்ச் 11]

THIRU K. M. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, I am confining my speech to one particular subject, so that I do not want to waste the time of the House. There are other experts to speak on other subjects. Sir, so far as the Grants-in-Aid Scheme in respect of the Slum Clearance Board is concerned in the City of Madras, I think I should congratulate the Board on the fairly good work they have been doing during the last one year. The complaint has been that this side refuses to compliment even the good work done by the Government. I now take this opportunity to categorically congratulate the Government on the good work they have been doing so far as the Slum Clearance Board is concerned. They started the work fairly niggadly, but gradually it got accelerated and today I find they are progressing well. There have been many, many handicaps, the biggest handicap being the question of finance and the system of finding out the real slum-dwellers and how they are to be provided with tenements developed plots, etc.

Yesterday the Hon. Chief Minister made a small mistake, I think, when he announced that during the Congress regime they built only about 4,000 houses for the slum-dwellers. He forgot to mention—I think it is not wanton—that 6,000 and odd developed plots—open developed plots as they are called—have been allotted in the City of Madras to the slum-dwellers, both on instalment schemes and on rental basis. That is not a mean achievement for strating of the slum improvement. It is a very good achievement because there are very many handicaps in the matter of acquisition of properties. Of course, after the passing of 25th Amendment to the Constitution, it may be easier, but it was very diffcult at that time.

Now coming to another point, there was a stiff opposition to the flat system which is gradually dying down because the Chairman of the Slum Clearance Board tackled it fairly tactfully, although there are many handicaps in this system. One thing that has to be realised by this Government is that this is a Grants-in-Aid Scheme and not a remunerative scheme. It is not a business proposition, but it is a proposition to help the slum dwellers who cannot afford to pay economic rents. During Congress regime a specific area was constructed. There is an international standard for dwelling and on that international standard the flats were constructed. But today in what we call the fire-proof house construction, no standard is followed. It is 12 feet by 8 feet where no human being can live. I am very glad that fortunately the Government has given up that

[Thiru K. M. Subramaniam] [1972 மார்ச் 11

scheme today. That sort of construction has gone away and the Government have again come to a scheme of minimum space, minimum light and minimum air that are required for this slum-dwellers.

I think there was recently a proposition mooted by the officials of the department or perhaps the Finance Department that these are uneconomic and so, the rents should be increased. Then notices were actually sent to the slum-dwellers who were promised that they would be allotted plots on payment of Rs. 10 per month, and that the rent for the ground floor would be Rs. 20, for Second and Third Floor Rs. 18 and Fourth Floor Rs. 15 including water and electricity amenities. Of course, I am very happy to say that on strong representation, by the local people, including their representative, myself, the Government have been considerate enough to reduce the rent. They agreed that the rent would be Rs. 10 and only, if they wanted water-supply, it would be Rs. 12 and if they wanted water-supply and electricity it would be Rs. 15. I thank the Government very much for that. If, in this way, public opinion is taken into account in these matters and the Government act, surely people like us will not oppose the Government. We are not opposing the Government for apposition's sake. Wherever there has to be constructive criticism, we will criticise and wherever there is need for appreciation, we will definitely appreciate.

It was, during the last year on the same subject, I said that there was lot of corruption in the Housing Board. I was told 'You cannot speak about such things, unless you prove'. I have got sufficient proof to-day to show that corruption still persists, perhaps at the lower rungs without the knowldge of the people in the higher rugs. I have just brought one small example where a house has been alloted to a party who has been regularly paying rent till six months back. Then, without his knowledge the house had been allotted to somebody else. The man is not aware that he is going to be sent away from there. I have got all his receipts for the amounts paid by him to the Slum Clearance Board, but not a single entry of these payments is there in the Slum Clearance Board records, which I can surely write and show and bring it to the notice of the Slum Clearance Board. After taking the money for so many months, not a single entry is there of having received the monies. He has not only paid the Slum Clearance Board rent, but he has also paid the Corporation tax for this building. That is not a solitary instance.



1972 மார்ச் 11] [Thiru K. M. Subramaniam]

There is a gang, Mr. Speaker, which is trading on the plots allotted to the unfortunate slum dwellers and the latter are being evicted without assigning any reason or cause whatsoever. This is a very serious matter. After all, the poor slum dweller has been given allotment by the Government. For instance, there is one plot No. 73 in C.I.T. Nagar in front of the Slum Clearance Board and it was allotted to one Thiru Deenalu, S. He was paying regularly his rent and also the Corporation tax, for which receipt was obtained till 29th June 1970. After that, nobody came to collect the rent and the tax. The bill collector did not come there and so he had sent the money by Money Order. But now he has been evicted on the ground that he has not paid the rent and somebody else who was his tenant and who had spent, I understand, about Rs. 2,000 had been allotted that plot. This is not a solitary instance and there are many such instances which I can refer here.

What I say is, the intention of the Government is good and they want to house the people but unfortunately the Department is working so badly and so miserably—there is so much of corruption there—that the allotted plots are sold to others. They manipulate such things. With the constitution of the Slum Clearance Board and their vigilant watch I am sure that such things will not happen and I hope and trust that they will prevent such things.

Coming to the other point, the ultimate authority for drainage and water-supply—I am not again pleading for the Corporation—is the Corporation and they must see that the main drainage work is constructed in one place so that all the water flows to the main drainage channel. In this connection, I want to suggest that every Scheme must have the approval of the Corporation and I am not saying this for the sake of prestige. After all, the Corporation is the ultimate and the only authority which can link all the schemes together. Recently the Commissioner of the Corporation inspected the drainage scheme in C.I.T. Nagar and there the water is not allowed to go into the main drainage channel, with the result the drainage water is overflowing. In the olden days when I was a Member of the City Improvement Trust, we used to send all plans and schemes to the Corporation authorities and not to the Council so that they could be properly analysed and there would be no incompatability between the schemes of the City Improvement Trust and the Corporation. I think the same thing should be done now. What is the use of constructing a 10 storeyed building if there is

[Thiru K. M. Subramaniam] *[1972 மார்ச் 11*

no possibility of the supply of water to that building. So far as the maintenance of water-supply is concerned, it is definitely the Corporation and of course there is a controversy whether it should come under the Board. But unless these plans are co-ordinated, it is very difficult to do good work.

Thirdly, till 1965 there was 50 per cent loan and 37½ per cent grant from the Government of India and 12½ per cent grant from the Local Government. Now the excuse given by the Slum Clearance Board and the Housing Board is that there is only a block grant from the Government of India. My humblest suggestion is that the block grant that is given to the Government by the Central Government for development purposes must also include 50 per cent loan or 37½ per cent grant which was paid till 1965. If that is the case, there would be no excuse with regard to the fixation of economic rent at all. Even in the matter of hire-purchase scheme, the Government must deduct 50 per cent of the cost because 37½ per cent is given by the Central Government and 12 1/2 per cent by the State Government. The benefit of the grant should go to the buyer because it is for the buyer that this subsidy is given and it should not go to the State Government. Sir, 90 per cent of the slum dwellers are domestic servants, milkmen, watchmen, etc., who are getting only Rs. 30 or Rs. 40 or Rs. 50 per month—10 per cent of them may be working in Messrs. Simpson & Company and they should be given the benefit.

(Mr. Speaker sounded the gong.)

I will finish my speech in two minutes . I congratulate the Government for the Slum Improvement Scheme. Rent should not be increased under any circumstances. In the matter of hire purchase scheme, the original instalment of Rs. 25 should be continued and it should not be increased to Rs. 40 as the allottees cannot afford to pay more and they will be forced to sell them to somebody else.

The grant of Rs. 3.65 lakhs allotted by the Government is very, very meagre for the beneficial schemes for slum-dwellers. So, I request the Government to increase the grant because there are many schemes pending. I am fairly closely associated with that. I think the grant is very meagre. I request the Government to increase the grant to at least Rs. 2 crores.



*1972 மார்ச் 11]* [Thiru K. M. Subramaniam]

One minute, more, Sir. So far as drainage system in City of Madras is concerned, I need not say much. It is very bad indeed. The whole thing is dilapidated. It was designed for 6 lakhs and now the population is 23 lakhs. A substatial sum, whether it is through State Government or through some development expenditure should be found for the drainage. Either through Five-Year Plan schemes or through help of Union Government grant, at least Rs. 2 crores more should be obtained for improvement of drainage. I request the Government to look into this and see that the most elementary need viz. drainage is properly looked after for the City of Madras. Thank you, very much, Mr. Speaker for having allowed me to speak on this subject.

* திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று சட்டப் பேரவை மாலையிலும் கூடும். நான்கு மணி அளவில் கூடும். உறுப்பினர்கள் மாலையும் வந்து நல்லபடி வெற்றிகரமாக நடவடிக்கைகளை, முடித்துத்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிறையப் பேர்கள் பேசவேண்டியிருப்பதால் இன்று 1-30 மணி அளவில் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு மீண்டும் மாலை 4 மணி அளவில் சட்டப் பேரவைக் கூட்டம் தொடர்ந்து நடைபெறும். அதை இந்தப் பேரவைக்கு நான் அறிவிக்கிறேன்.

**திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த சமுதாய வளர்ச்சித் திட்டத்தின் மானியக்கோரிக்கையை நெஞ்சார வரவேற்று சில கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

இதற்கு முன்பெல்லாம் காலஞ்சென்ற ஆட்சிக்குச் சொந்தக்காரர்கள் கிராம ராஜ்யமே ராம ராஜ்யம் என்று சொல்லிக்கொண்டிருந்தாலும் அப்போது நிறைவேற்றப்படாத திட்டங்களை நமது கழக அரசு உருவான பின்னர் வெகு வேகமாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. உள்ளாட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில் என்னவாகுமோ என்ற பயம் ஒரு நேரத்தில் இருந்தது. அந்நிலை போய் அரசாங்கத்தின் பணிகளை

[திரு. கா. வேழவேந்தன்] [1972 மார்ச் 11

நிறைவேற்றுவதற்கு உள்ளாட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் இவைகளை முழுக்கமுழுக்கப் பயன்படுத்த வேண்டும் என்ற நிலையில் இப்போது திட்டங்கள் தீட்டப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

அரசாங்கம் என்பது ஒரு மரம் என்றால் அதற்கு அடிவேராக இருப்பது செயலகம் என்றால் மரத்தில் இருக்கிற இலைகளாக ஊராட்சி மன்றங்கள் இன்று இயங்கிக்கொண்டிருக்கின்றன. தழைகள் தழைத்திருந்தால் மரம் செழிப்பாக இருக்க முடியும் என்பதுபோல் ஊராட்சி துறை மிகச் சிறப்பாக செயல்படவேண்டுமென்று திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

கிராமங்களின் அடிப்படைத் தேவைகள் இன்று நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் ஒன்று எல்லாக் கிராமங்களுக்கும் மின்சாரம் வழங்குவது என்பது அதில் தன்னிறைவு அடைந்துள்ளோம்.

அடுத்து எல்லாக் கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் வரவேண்டும் என்பது. பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து நம் தரப்பிலிருந்து சொல்லிக் கொண்டிருக்கிற கருத்துக்களை நிறைவேற்றும் வகையில் இப்போது மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் அறிக்கை மூலமாகவும். முதல் அமைச்சர் அவர்கள் தந்துள்ள நிதிநிலை அறிக்கை மூலமாகவும் 1,500 மக்களுக்கு மேல் உள்ள கிராமங்களில் எல்லாம் கண்டிப்பாக இணைப்புச் சாலைகள் வர திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை அறிவித்திருக்கிறார்கள். இன்னும் பல்வேறு கிராமங்களுக்கும் இணைப்புச் சாலைகள் கிடைக்கப் போகிறது என்ற செய்தியை அறிந்து மக்கள் பூரிப்படைகிறார்கள். எதிர்காலத்தில் 1,500 மக்கள் கொண்ட கிராமங்கள் என்று மட்டுமல்லாமல் எல்லாக் கிராமங்களுக்குமே இணைப்புச் சாலைகள் ஏற்படுத்துவதற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும். சமுதாய நலத் திட்டங்கள் துவக்கப்பட்டு இருபது ஆண்டுகளாகியும் கூட பல கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள் இல்லை என்ற நிலையினை ஆராய்ந்து பார்த்து அவைகளை அமைத்துத் தரவேண்டும்.



1972 மார்ச் 11] [திரு. கா. வேழவேந்தன்]

அடுத்து பஞ்சாயத்து சட்டத்தில் காண்ட்ரிப்யூஷன் என்ற முறை இருக்கிறது. ஆனால் எவ்வளவோ பஞ்சாயத்துக்கள் ஒரு வேலைகூட செய்யமுடியாத நிலையில் வருவாய் இல்லாத நிலையில் இருக்கின்றன. அவைகள் எரிக்கும் விளக்குகளுக்குக்கூட கட்டணம் செலுத்தமுடியாத நிலையில் பல பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இதை கவலையோடு கவனிக்கவேண்டும். ஆசிரியர்களுக்கு, கல்வித்துறையில் மட்டும் ஊதியத்தை அளிக்க ஒரு குழு போட்டு அறிக்கையினை இந்த அவை முன் வைத்திருக்கிறோம். அதேபோல் உள்ளாட்சித் துறையில் வேலைகள் எப்படி நிறைவேற்றப்படுகின்றன என்பதையும் கவலையோடு கவனிக்க வேண்டும். ஆகவே, நான் சில யோசனைகள் கூற விரும்புகிறேன்.

யோசனை சொன்னாலும் வரி என்று எதிர்த் தரப்பில் உள்ளவர்கள் எடுத்துக்கொள்வார்கள். ரூ. 1.50 என்றிருந்த செஸ்ஸை ரூ. 2.50 வரையில் விதிக்கலாம் என்று செய்திருப்பதை வரி என்று வெளியே பேசப்படுகிறது. அப்படிப் போடவில்லை என்றால் அடிப்படை வேலைகளை நிறைவேற்றமுடியாது. இன்று கிராமப் பஞ்சாயத்துக்களில் பி. மெமோ சார்ஜ் விதிக்கப்படுகிறது. அந்தத் தொகை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்படவில்லை. பஞ்சாயத்து புறம்போக்குகள்மீது பி. மெமோ சார்ஜ் மூலம் வசூலிக்கப்படும் தொகையை அந்தந்த ஊராட்சிகளுக்கே ஒதுக்கித் தர விதிமுறைகள் வகுக்கவேண்டும்.

அடுத்து, இன்று கிராம தீவிர வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ஒன்றேகால் லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு இணைப்புச் சாலைகள் போன்ற வளர்ச்சிப் பணிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இது நமக்குக் கிடைத்திருக்கிற காமதேனு. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் ரூ. 28,000, ரூ. 30,000 என்று ஒதுக்கப்பட்டிருந்தபோது அது கடலில் கரைத்த பெருங்காயமாக இருந்தது. இப்போது ஒன்றேகால் லட்சம் ரூபாய் என்பது மிகச் சிறப்பான ஒன்றாகும். அதில் கூட இப்போது பாகுபாடு இருக்கிறது. ஒரு மாவட்டத்தில் இருபது வட்டாரங்கள்தான் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. மற்ற வட்டாரங்கள் என்ன பாவம் செய்தன என்றுதான் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

ரொட்டேஷன் வகையில் அடுத்த ஆண்டு எந்தெந்த வட்டாரங்கள் எடுத்துக்கொள்ளப்படவில்லையோ அவைகளை எடுத்துக்கொள்ளும் முறையில் விதிமுறைகள் வகுக்கவேண்டும்.

பக்கத்து வட்டாரத்தில் ஒன்றேகால் லட்சம் ரூபாய் செலவு செய்து வேலைகள் நடக்கும்போது எடுத்துக்கொள்ளப்படாத வட்டாரங்களில் இருப்பவர்கள் அதைப் பார்த்து பொறாமையோடு ஏங்கக் கூடிய சூழ்நிலை இருக்கக்கூடாது. ஆகவே எல்லா வட்டாரங்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்படவேண்டும் என்ற முறையில் மூன்று ஆண்டில் எது எதற்கு வாய்ப்பு தரப்படவில்லையோ அதை அடுத்த ஆண்டாவது எடுத்துக்கொள்ள வேண்டும். இதை அமைச்சர் அவர்கள் உன்னிப்பாக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசு ஏற்பட்டதற்குப் பின்னால் உள்ளாட்சி மன்றத் தலைவரை மக்களே பார்த்து நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நேரடித் தேர்தல் முறையைக் கொண்டு வந்து 2,000 அல்லது 5,000 என்று வாக்காளர்கள் நேரடியாகத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் ஊராட்சி மன்றத் தலைவர்கள் இப்போது தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதனால் இன்று பாகுபாடு அதிகமாக இல்லை. முன்பு நாலைந்து ஹாம்லெட்ஸ் கொண்ட ஊராட்சி மன்றத்தில் ஒரு வார்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர் தலைவராக வந்தால் அந்த வார்டிற்கான பணிகளைத்தான் செய்துகொண்டிருந்தார்கள். இப்போது நேரடித் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதால் எல்லாக் கிராமங்களின் மீதும் அவர்கள் அக்கறை காட்டுகிறார்கள். அதேபோல் வரக்கூடிய ஒன்றியத் தலைவர்கள் தேர்தலிலும் நமது அரசாங்கம் நிச்சயமாக நேரடித் தேர்தல் மூலம் ஒன்றியத் தலைவர்களைக் கொண்டுவரவேண்டுமென்று வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் தேர்தல் போன்று அது இருந்தாலும் ஒன்றியத் தலைவர்களுக்கு நேரடித் தேர்தல் நடத்தத்தக்க வகையில் பஞ்சாயத்து சட்டத்தைத் திருத்தி அமலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மூசுண்டையைக் கருடன் தூக்கிச் செல்வது போல் வசதி படைத்த யூனியன் தலைவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்களையே தூக்கிச் செல்லும் சூழ்நிலை இன்றும் இருக்கிறது. ஆகவே அதைத் தவிர்க்கும் விதத்தில் ஒன்றியத்தலைவர்களை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.

அடுத்து, கிராமங்களின் வேலைவாய்ப்பிற்கான பணிகளை உருவாக்கிடுதல் வேண்டும். ப்ராஜக்ட் அலுவலகங்கள் என்று அமைக்கப்பட்ட ஒன்றிரண்டில்கூட இன்று வேலைகள் நடை-





பெறவில்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். எனது தொகுதி முன்னாள் முதல் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் தொகுதியோடு இணைக்கப்பட்டு ஸ்ரீபெரும்புதூர் ப்ராஜக்ட் என்றதொரு நிறுவனம் அமைக்கப்பட்டது. சிறு சிறு தொழில்கள் துவங்குவதற்கு கடன் வசதிகள் செய்து தருவது போன்றவை இருந்தன. இப்போது அது செயல்படவில்லை. உறுப்பினர்கள் கூட்டம் நடத்தவேயில்லை. ஆகவே கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அதைக் கவனித்து அந்த ப்ராஜக்ட் நிறுவனங்கள் ஒழுங்காக வேலை செய்ய வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு நம்முடைய வருவாயைப் பெருக்குவதிலே நாம் இன்னும் கொஞ்சம் அக்கறை காட்டவேண்டும். மீனளத் துறையையும் இதோடு இணைத்திருக்கிறார்கள். எத்தனை கிராமங்களில் மீனளத் துறையின் உள்ளூர் மீன் வளர்ப்பு முறை மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கவனிக்கவேண்டும். முழுக்க முழுக்க அமல்படுத்தப்படவே இல்லை. ஏன் அந்தப் பணியினை செய்யவில்லை என்பதை கவலையோடு கவனிக்க வேண்டும். ஒன்றியங்களில் மீன்கள் அதிகமாக வளர்க்கப்பட்டு, வருவாயை அதிகப்படுத்தி தீவிர திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும். அவர்களெல்லாம் மீன் வளர்ப்பு இயக்குநர் அவர்களின் உழைப்பை; பணியினை பயன்படுத்திக்கொண்டு உள்ளூர் மீன் வளர்ச்சியில் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ரூரல் எம்பளாய்மெண்ட் திட்டத்திலே ஒரு சிறு யோசனை சொல்வதற்கு விரும்புகிறேன். ஏறத்தாழ 1¼ லட்ச ரூபாய் ஒரு வட்டாரத்திற்கு ஒதுக்கியிருக்கிறோம். அதிலே 80 சதவிகிதம் உழைப்புக்கும், 20 சதவிகிதம் பொருள்கள் வாங்குவதற்கும் உபயோகிக்கலாம் என்று இருக்கிறது. 20 சதவிகிதம் பொருள்கள் வாங்கவேண்டுமென்றால் ரோடுகள் போடுவதற்கு வேண்டிய பொருள்களை வாங்குவதற்கு போதுமானதாக இருக்கிறது. ஆனால் எதிர்காலத்தில் எத்தனையோ பள்ளிக் கூடங்கள் கட்டப்பட இருக்கின்றன. இன்று அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கும் அறிக்கையிலே கூட இருக்கிறது. கல்வி சிறந்த தமிழ்நாடு என்று சொல்வார்கள். கிராமங்களில் இருக்கிறவர்கள் கல்வி பெறவேண்டுமென்பதைக் கருத்தில்

[திரு. கா. வேழவேந்தன்] [1972 மார்ச் 11

கொண்டு இந்த அரசு சிறப்பாக பணியாற்றி வருகிறது. இன்னும் 7,000 கிராமங்களில் பள்ளிகூடங்களில் சொந்தக் கட்டிடங்கள் கட்டப்படவில்லை என்று மிக வருத்தத்தோடு சொல்லியிருக்கிறார்கள். எங்கள் பகுதியில்—எங்கள் தொகுதியில் பார்க்கிறேன். எவ்வளவோ மாணவர்கள் காக்கையைப் பாடத்திலே பார்க்காமல், மரத்திலேயே பார்க்கும் வகையில் மரத்தடியில் படித்து வருவதைப் பார்க்கிறோம். ஒரு தீவிர திட்டத்தின் அடிப்படையில் எல்லாக் கிராமப்புறங்களில் உள்ள பள்ளிகூடங்களும் சொந்தமாகக் கட்டடம் பெற ஆவனசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலைவாய்ப்புத் திட்டத்தில் 50 சதவிகிதம் உழைப்புக்கு செலவழித்து 50 சதவிகிதம் செங்கல், ஓடு வாங்குவதற்கு ஒதுக்கினால் அந்தப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு வசதியாக இருக்கும் இன்னும் பல பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சமுதாய வளர்ச்சித் திட்டம் நம் நாட்டில் நெம்புகோல் போன்றது—முதுகெலும்பு போன்றது. அவர்கள் இதிலே மிக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலெக்டர்கள் இன்ஸ்பெக்டர் ஆப் பஞ்சாயத்துக்கள் என்ற நிலையில் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஊராட்சித்துறை நிர்வாகத்தை கவனித்து வருகிறார்கள். ஊராட்சித்துறை நிர்வாகத்தை கவனிக்க டி.ஆர்.ஓ மட்டத்தில் ஒரு மேல் அதிகாரி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே பி.எ. (பி.டி.) இருக்கிறார்கள் என்று சொல்லலாம். அவர்கள் கூட கலெக்டரின் உத்தரவைக் கேட்டுத்தான் பணிபுரிய வேண்டியிருக்கிறது. ஆகவே, மாவட்ட அளவில், டி.ஆர்.ஓ. மட்டத்தில் ஒரு அதிகாரி இருந்தால் அவர்களே ஊராட்சித் துறையை மட்டும் முழுக்க முழுக் கவனித்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டங்களில் சட்டமன்ற உறுப்பினர்கள், மற்றவர்கள் முக்கியமான கருத்துக்கள் பலவற்றை எடுத்துச் சொல்கிறார்கள். அவைகள் தீர்மான வடிவில் அரசுக்கு வருகின்றன அவை சரியாக கவனிக்கப்படுவதில்லை. அருமையான யோசனைகள் செய்து முடிவு எடுக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளவையின் மேல், உடனடியாக அரசு பரிசீலனை



1972 மார்ச் 11] [திரு. கா. வேழவேந்தன்]

செய்து விரைவில் உத்தரவு போட முன்வருமேயானால் மிகவும் நன்மையாக இருக்கும். மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டங்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று அதில் ஏதோ பேசிவிட்டு, படியை வாங்கிக்கொண்டு வருகிறார்கள் என்று நினைக்காமல், அங்கே நிறைவேற்றப்படுகின்ற தீர்மானங்கள் நடைமுறைக்கு கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நிர்வாக சீர்திருத்தக்குழுவை பற்றி அறிக்கையிலே சொல்லி இருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் 370-க்கு மேற்பட்ட வட்டங்கள் இருக்கின்றன. என்ன பாவம் செய்தனவோ, சில வட்டங்களில் 60-70 ஊராட்சிகள் இருக்கின்றன. சில வட்டங்களில் 10-15 ஊராட்சிகள்தான் இருக்கின்றன. இப்படி இருக்கும் போது. நமது அரசாங்கம் எல்லா வட்டங்களுக்கும் ஒரே மாதிரியான தொகையைத்தான் வழங்குகிறது. 62 ஊராட்சிகள் உள்ளவற்றிற்கும் ஒரே தொகை. 10 ஊராட்சிகள் உள்ளவற்றிற்கும் ஒரே தொகை. எப்படி எல்லாக்காரியங்களையும் நிறைவேற்ற முடியும், ஆகவே, நாம் கவனிக்கவேண்டியதெல்லாம் தமிழ் நாட்டில் இருக்கும் இந்த 370-க்கு மேற்பட்ட வட்டங்களையும் முறைப்படுத்தவேண்டும். ஒரே சீராக அவற்றை மாற்றியமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியை, கும்மிடிப்பூண்டியை எடுத்துக் கொண்டால் 62 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. 3 ஊராட்சி ஒன்றியங்களின் விஸ்தீரணம் அதிகமாக இருக்கின்றது. எல்லா ஒன்றியத்திற்கும் ஒதுக்கும் தொகையை இதற்கும் ஒதுக்கினால் எப்படி அதன் மூலம் நல்ல முறையில் வேலை செய்ய முடியும்? ஆகவே, அதைத் தயவு செய்து உடனடியாக சீரமைக்கவேண்டும். நம்முடைய அமைச்சர் அவர்கள் அதை மாற்றுவதற்கு வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நிர்வாக சீர்திருத்தக்குழு இதைப்பற்றி பரிசிலித்து கொண்டு இருக்கிறது என்று சொல்கிறார்கள். நிர்வாக சீர்திருத்தக்குழு சொல்லும் அறிவுரைகளை ஏற்றுக் கொண்டு. அரசாங்கம் அவற்றை தக்கவாறு பரிசீலித்து அவற்றை சீரமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குடிநீர் வசதிகளைப்பொறுத்தவரையில், நாம் எல்லா கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதற்கு ஒரு திட்டம் போட்டிருக்கிறோம். அதற்காக ஒதுக்கியிருக்கிற பணத்தை கிணறு வெட்டு

வதற்கு மட்டும்தான் பயன்படுத்தலாம் என்று இருக்கிறது. அப்படி இருப்பதால், ஒரு இடத்தில் கிணறு வெட்டினால் தண்ணீர் வராது என்று இருந்தால் கூட, கிணறு வெட்டிவிடுகிறார்கள். அந்த இடத்தில் தண்ணீர் எடுக்கவேண்டுமானால் போர் வெல்ஸ் போட்டு எடுக்கலாம் என்று இருந்தால் கூட அப்படிச் செய்வது இல்லை. அரசாங்கத்தின் ஆணை அப்படியிருக்கிறது. ஆகவே, கிணறுதான் வெட்டலாம் என்று சொல்லி கிணறுதான் வெட்டு கிறார்கள். அப்படி கிணறு வெட்டுவதால் சில இடங்களில் அவை பயன்படாமல் போய்விடுகின்றன. மக்கள் தண்ணீர் எடுக்க முடியவில்லை. எனவே, முழுக்க முழுக்க எந்த இடத்தில் எப்படி குடி தண்ணீர் எடுப்பதற்காக வேண்டிய நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம் என்பதை, அதற்கான உரிமையை ஊராட்சி களுக்கே விட்டு நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

மொத்தத்தில் இன்றைக்கு அளிக்கப்பட்டிருக்கும் இந்த சமுதாய வளர்ச்சி மானியக்கோரிக்கையிலே தந்து இருக்கும் குறிப்புகள் மிகச்சிறப்பாக இருக்கிறது அவை எல்லாம் ஒளிமயமாக தமிழகத்தை ஆக்குவதற்கு வழிவகை செய்யும் என்று நம்புகிறேன். அதோடு நான் சொன்ன கருத்துக்களையும் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லிக்கொண்டு, தமிழ் நாட்டில் பசுமைப்புரட்சி ஏற்படுவதற்கு உதவுகிற வகையில் கிராமங்களில் வளர்ச்சி இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பினை நல்கியதற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*** திரு. என். கே. பழனிசாமி :** கனம் உதவி சபாநாயகர் அவர்களே, பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் என்ற தலைப்பிலே இன்றைக்கு இருக்கக்கூடிய மானியத்தின் மீது பேசுவதற்குத்தான் வெட்டுப்பிரேரணை கொடுத்திருக்கிறேன்.

இந்த வருஷம் என்னுடைய பஞ்சாயத்து ஒன்றியத்திற்கு வருக்கப்பட்டிருக்கும் தொகை இவ்வளவு அதிகமாக இருந்தாலும், அந்தப் பங்கு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த கிராம சமுதாய பணிகள் வருவதற்கு முன்பு இந்த நாட்டிலே அந்தந்த கிராமங்களில் அந்தந்த கிராம மக்களே தங்களுடைய வசதிகளைப் பூர்த்தி



செய்துகொள்ளக்கூடிய முறையிலும், மற்றும் வழக்கு போன்ற வைகளையும் அந்தந்த கிராமத்திற்குள்ளேயே கூடி அதைத் தீர்த்து வந்தார்கள். ஆனால் வாஸ்கோடிகாமா இந்தியாவிற்கு வந்ததற்குப் பிறகு இந்த மாதிரி கிராம அதிகாரம் அவர்களிடத் திலேயே இருக்கக்கூடிய சூழ்நிலை இருந்தால், நம்முடைய ஆட்சி இங்கே ஸ்திரத்தன்மை அடையாது என்று நினைத்து அதை ஒடுக்கி விட்டார்கள். தொடர்ந்து நாம் சுதந்திரப் போராட்ட காலத்திலும் அதிகாரங்கள் பரவலாக்கப்படவேண்டும், கிராமங் களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்று சொல்லி வந்தோம். அதன் அடிப்படையில் பின்பு பலவந்த்மேத்தா கமிட்டி விசாரணையின் அடிப்படையில் ஒரு பெரிய நிர்வாகத்தை ஏற்படுத்தி பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து ஒன்றியங்கள் முறை ஏற்பட்டது. மத்திய அரசாங்கத்திலிருந்து ஓரளவு மானியம் கொடுக்கப்பட்டது. கிராமங்களில் திறமை உணர்வு ஏற்பட்டது. கிராமங்களில் வேலை வாய்ப்பு, சமுதாய சீர்திருத்தம் இவை போன்ற காரியங்கள் செய்ய பரவலாக அதிகாரத்தைக் கொண்டு சட்டசபைக்கும் பாராளுமன்றத்திற்கும் உள்ள ஜனநாயகத்தை வழங்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இது 1965 வரையிலும் நிறைவேற்றப்பட்டுவந்தது. அதற்குப் பிறகு இதற்கு புது மலர்ச்சி கிடையாது. என்ன காரணம் என்று தெரியாது. 1967 பட்ஜெட்டிலிருந்து பார்த்தால் விவசாயம் மிகவும் விஸ்தரிப்பு செய்வதாக இருக்கிறது. அதுவும் குறைந்து விட்டது. சோசியல் எடுகேஷன் என்பதற்கு ஒதுக்கிய தொகையும் குறைத்து விட்டார்கள். பள்ளிக்கூடத்தை கட்டுவதற்கு கொடுத்த தொகையை ஒவ்வொரு யூனியனுக்கும் குறைத்துவிட்டார்கள்.

அதுமட்டுமல்ல. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் 50 மைலுக்கு மேற்பட்ட ரோடுகள் இருந்தால் 20 மைலுக்குத் தான் பணம் ரூ. 20,000 கொடுக்கப்படுகிறது. அதனால் அந்த 50 மைலில் 2 மைல் ரோடு போடவே ரூ. 20,000 செலவாகிவிடும். ஆகவே 50 மைலை எப்படி நிர்வகிக்க முடியும் அதுமட்டுமல்ல ; இருக்கக்கூடிய கமிஷனருக்கு வருடம் பூராவும், ஆகஸ்டு முதல் மார்ச் வரை பூராவும் வேலை தரப்படுகிறது இரண்டு தடவை ஃபாமிலி ப்ளானிங், சிறு சேமிப்பு, லாட்டரி சீட்டு விற்பது போன்ற வேலைகள் தரப்படுகின்றன. அதனால் நிர்வாகம் சரியாக நடக்கவில்லை. அது மட்டுமல்ல ; ஏற்கனவே இருக்கக் கூடிய குறைகளில், இப்போது ஒரு கிராம சேவக்கோ, எஞ்ஜினியரோ

[திரு. என். கே. பழனிசாமி] [1972 மார்ச் 11

சரியாக வேலை செய்யவில்லை என்று சொன்னால் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளான டிவிஷனல் எஞ்ஜினியருக்கோ, ஆர்.டி.வோக்-கோ எழுதவேண்டும். அவர்கள் நடவடிக்கை எடுப்பதில்லை. ஆக இன்றைக்கு அவர்களின் மேல் கன்ட்ரோல் கிடையாது.

சமீபத்தில் ஒரு உத்தரவு போட்டிருக்கிறீர்கள். எக்ஸ்டென்ஷன் ஆபீசர்ஸ் அவர்கள் இஷ்டம் போல ஆர்.டி.ஓ. கன்ட்ரோல் இல்லாமல் வேலை செய்ய அதில் வழி வகை இருக்கிறது. அதன் காரணமாக அவர்கள் வேலை செய்யவில்லை என்று சொன்னால் ஏன் செய்யவில்லை என்று கேட்க முடியவில்லை. அகையால் அந்த நிலைமையை மாற்றி மானேஜரானாலும் ஏன் செய்யவில்லை என்று கேட்கக்கூடிய அளவிற்கு நிலைமையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எலிமென்டரி எடுகேஷன் என்கொயரி கமிட்டி ஒரு சிபாரிசு செய்திருக்கிறது. அவர்கள் கூட சொல்லியிருக்கிறார்கள். முன்பு ஏ, பி, சி, டி என்று 4 வகைகளாகப் பிரித்திருந்தார்கள். அப்படி பிரிக்கிறபோது ஆர்பிட்டரரியாகப் பிரித்திருக்கிறார்கள். அதாவது ஏ-க்கு குறைந்த உதவியும், பி-க்கு அதைவிட கொஞ்சம் அதிகமாகவும், 'சி'-க்கு அதைவிட அதிகமாகவும்; 'டி'-க்கு அதைவிட கொஞ்சம் அதிகமாகவும்; இப்படிப் பிரித்திருக்கிறார்கள். இப்படிப் பட்ட நிலையால் வரட்சி மிக்க பஞ்சாயத்துக்களுக்கு எல்லாம் எந்தவிதமான உதவியும் இல்லாமல் இருக்கிறது. தண்ணீர் பாயக் கூடிய பஞ்சாயத்துக்களுக்கு அதிக வருமானம் இருக்கிறது. ஆகையால் இந்த தாராதரம் பார்த்து பிரிக்க வேண்டும் என்று கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது.

பள்ளிக்கூட ஆரம்ப ஆசிரியர்களுக்கு 18 சத விகிதம் ஒதுக்க வேண்டுமென்று இருந்தது. இப்போது படிப்படியாக அது 40 சத விகிதம் ஆகிவிட்டது. ஆனால் இந்தக் கமிட்டி என்ன சொல்லியிருக்கிறது என்று சொன்னால் பூராவும் அந்த பெர்சன்டேஜை எடுத்து 40 சத விகிதம் என்று சொல்கிறது. குறிப்பாக 40 சதவிகிதம் பஞ்சாயத்து யூனியன்கள் கட்டுகிறது என்று சொன்னால், மீதி 60 சத விகிதத்தை சர்க்கார் கொடுக்கவேண்டும். வருடம் பூராவும் மற்ற உயர்வுகளை எல்லாம் சர்க்கார் கொடுக்க வேண்டும். சர்க்கார் கிராண்டை சரியாக கட்டுவதில்லை. அதன் காரணமாக வருமானம் இல்லாத பஞ்சாயத்துக்களெல்லாம் பூரா



1972 மார்ச் 11] [திரு. என். கே. பழனிசாமி]

பணத்தையும் எடுகேஷன் ஃபண்டுக்கு கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. எங்கள் பஞ்சாயத்து ஒரு லட்சம் ரூபாய் வருமானம் உள்ளது. ஆனால் அது 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் எடுகேஷன் பண்டுக்கு கொடுத்திருக்கிறது. அதை எப்படி திரும்பப் பெற முடியும்? அதுமட்டுமல்ல மறுபடியும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு ரூ. 250 முதல் ரூ. 400 போடவேண்டுமென்ற அபிப்பிராயம் இருக்கிறது. ஆகவே அந்தச் செலவை யார் ஏற்றுக்கொள்வது, எலிமென்டரி எடுகேஷன் என்கொயரி கமிட்டி சிபாரிசு செய்திருக்கிறது, எடுகேஷன் சர்சார்ஜ், செஸ் போர்டு பூராவும் சர்க்கார் எடுத்து ரொம்ப வருமானம் குறைவாக இருக்கக் கூடிய பஞ்சாயத்துக்களுக்கு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு கொடுப்பது என்று சொல்லியிருக்கிறது. அப்படிச் செய்தால் எப்படி மொத்தம் சேர்த்து அதில் எவ்வளவு பணம் கிடைக்கும்; அதன் மூலமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு எவ்வளவு கிடைக்கும் என்று சொல்லி இருந்தால் நன்றாக இருக்கும். அது மொட்டையாக விடப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் சர்க்கார் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்கள் சர்சார்ஜ் போதாதென்று புதிதாக சர்க்காரிடம் மேட்சிங் கிராண்ட் வாங்குகிறது. பொதுவாக வருமானம் குறைவாக உள்ள பஞ்சாயத்து யூனியன்கள் அதிக வேலைகள் செய்ய வேண்டும் என்பதற்காக இந்த சர்சார்ஜ் போடுகிறது. மேட்சிங் கிராண்ட் கொடுக்கிறீர்கள். வரட்சியான பகுதியில் ரூ. 1½ சர்சார்ஜ் இருந்தது. இப்போது 2½ ரூபாய் போட்டிருக்கிறீர்கள். 1½ ரூபாய் இருக்கிறபோதே பஞ்சாயத்து யூனியன்களுக்கு வரவேண்டிய பாக்கிகள் நிறைய இருக்கின்றன. ஜனங்கள் அதைக் கட்டாமல் இருந்து இருக்கிறார்கள். முதலில் இருந்த 1½ ரூபாயே இருந்து இருக்கலாம். அது மட்டுமல்ல; இந்த சர்சார்ஜை சர்க்காரே எடுத்துக்கொள்ளக் கூடாது. சமீபத்தில் ஒரு திருத்தம் கொண்டு வந்து இந்த சர்சார்ஜ் பூராவும் சர்க்காரே எடுத்துக்கொண்டு இந்த எடுகேஷன் ஃபண்டை செலவழிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை விட ஜனங்களிடம் நேரடியாக வரி போட்டு இருக்கலாம். இப்படி 2½ ரூபாய் போட்டு சர்க்காருக்கு கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? அதைவிட சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம். இந்த எலிமெண்டரி எடுகேஷனை சர்க்காரே எடுத்துக்கொள்ளலாம்.

என்ற எண்ணம் இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களும் அதைத்தான் விரும்புகிறது. ஆகவே அதைச் செய்யலாம்.

இந்த சர் சார்ஜில வரக் கூடிய பணம் பூராவையும் யூனியன்கள் செலவு செய்ய அனுமதிக்கவேண்டும். சர்க்கார் வருடம் பூராவும் கொடுக்கக்கூடிய ‘கிராண்டை’ ஒரே தடவையாக டிரஷரியில் கட்டி விட வேண்டும். அதுதான் சரியே ஒழிய, இந்த சர் சார்ஜை பூராவும் எடுத்துக்கொள்ளக் கூடாது.

அது மட்டுமல்ல, அடிக்கடி எங்கள் பகுதியில் வரட்சி ஜாஸ்தி. 5, 6 வருடமாக மழை இல்லாத காரணத்தால் கிணறுகளில் தண்ணீர் வற்றிவிட்டது. எல்.ஐ.சி.யில் தரப்படுகிற பணம் 4, 5 கிணற்றை வெட்டத்தான் போதுமானதாக இருக்கிறது. பிருன்ஷியல் ஸ்கிமில் 3 பிர்க்கா, 4 பிர்க்காவுக்கு ஒரு நில வள வங்கி இருக்கிறது. இதிலிருந்து கிடைக்கக்கூடிய உதவியும் 3, 4 வருடமாக சரியாக கிடைக்கவில்லை. அந்த வங்கியில் குறைவான சூப்பர்வைசர்கள் இருப்பதால் அவர்களால் எல்லோரையும் பரிசீலனை செய்து பண உதவி விரைவாக அளிக்க ஏற்பாடு செய்ய முடியவில்லை. ஆகவே, அதை எல்லாம் மாற்றவேண்டும். இப்போது இந்த பாங்கியில் லோன் கொடுக்கப்படுகிறது. அப்படி வாங்கினாலும் கூட, குறிப்பாக அந்த பாங்கியின் ஏஜெண்ட் கடன் கொடுக்கிற போது எந்த மோட்டாரை வாங்கச் சொல்கிறாரோ அதைத்தான் வாங்கவேண்டும். இந்த மாதிரி ஊழலை நிவர்த்தி செய்யவேண்டும். அடிப்படையில் இந்த ஜில்லா புனரமைப்பு கௌன்சில்தான் அட்வைசரி கமிட்டியாக இருக்கிறது அதில் நிறைவேற்றுகிற தீர்மானங்கள் பூராவும் அமுலாக்கப்படுவதில்லை. ஆகவே அது ‘Statutory ’ ஆக இருக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, ஒரு பஞ்சாயத்து யூனியன் 3 லட்ச ரூபாய் இருந்தால்தான் கலெக்டரிடம் ஸாங்ஷன் பெற்று வேலை செய்ய முடியும். அதற்கு குறைவாக இருந்தால் அனுமதி கவர்ன்மெண்ட் இடம் வாங்கவேண்டும். அப்படி இருப்பதால் வேலைகள் செய்வதற்கு கஷ்டமாக இருக்கிறது. ஆகவே அதையெல்லாம் கவனிக்கவேண்டும். பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்களுக்கெல்லாம் சிறு கிரிமினல் கேஸ்கள் போன்றவற்றை விசாரிக்க ஏற்பாடு செய்யவேண்டும். அப்போதுதான் மறுமலர்ச்சி ஏற்படும். இப்படி அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதன் மூலம் பஞ்சாயத்து யூனியன் இன்னும் சிறந்த முறையில் செயலாற்றி மக்களிடம் நன்மதிப்பைப் பெறமுடியும்.



* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இப்போது நாட்டிலே கிராமப்புறங்களுடைய வளர்ச்சிக்காக சமுதாய நல திட்டத்தை அமுலாக்கி அதன் மூலம் பல வளர்ச்சிகளையும் பல அனுபவங்களையும் நாம் அடைந்திருக்கிறோம் என்பதிலே கொஞ்சம் கூட சந்தேகமில்லை. அந்த அனுபவத்தின் பலனாக இந்தத் திட்டங்களிலே பல மாறுதல்களை செய்தால், கிராமப்புறங்கள் வளர்ச்சிக்கு உகந்ததாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

ஆங்காங்கு இருக்கின்ற மக்களுடைய கோரிக்கைகளின்படி ஊராட்சி மன்றங்களை நாம் நாடு பூராவிலும் அமைத்திருந்தாலும் சிறு சிறு யூனிட்டுகளாக ஊராட்சிகளை ஏற்படுத்தியிருப்பதன் மூலம் அந்த ஊராட்சி மன்றங்களுக்கு போதிய வருவாய் இல்லாது இருக்கிறது. அந்த வருகின்ற வருமானத்தை வைத்துக்கொண்டு, மக்கள் குறைகளைப் போக்க இயலவில்லை என்பதை இன்றைக்கு உணர்ந்துகொள்ள முடிகிறது.

ஆங்காங்கே இருக்கின்ற பெரிய கிராமங்களையெல்லாம் சிறு சிறு பிரிவுகளாக—2 பிரிவாக. 3 பிரிவாக, 4 பிரிவாக—பிரிக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பிரிக்கப்படுவதன் மூலம் அவைகளுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தால், அவைகளின் கடமையைச் சரியாகச் செய்ய முடியவில்லை என்பதை அனுபவ பூர்வமாக நாம் பார்க்கின்றோம். சிறு சிறு ஊராட்சி மன்றங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து, ஒரு வயபிள் யூனிட்டாக, அதாவது ஐயாயிரம் மக்கள் தொகைக் கொண்டது ஒரு ஊராட்சி மன்றம் என்ற அடிப்படையிலே அமைத்தால் அதன் வருவாய் அதிகரித்து, நல்லமுறையிலே மக்கள் நலன்களைப் பேண முடியும். அதைப் பற்றி அரசாங்கம் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அப்படி சிறு ஊராட்சி மன்றங்களை ஒன்றாக இணைக்கும்போது பல எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். நான்கு யூனிட்டுகளை ஒன்றாக இணைக்கும்போது நான்குத் தலைவர்களுக்குப் பதில் ஒரு தலைவர்தான் இருக்க முடியும். எனவே நான்கு யூனிட்டுகளை 12 யூனிட்டுகளாக வேண்டுமென்றால் பிரிக்கச் சொல்வார்களே தவிர, பல யூனிட்டுகளை ஒன்றாக இணைக்க சொல்ல மாட்டார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல், மக்கள் நலனைக் கருதி அரசாங்கம் செய்ய வேண்டும். இந்த விஷயத்திலே மாண்புமிகு உறுப்பினர் வேழவேந்தன் அவர்களின் கருத்தை நான் முழுக்க முழுக்க

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1972 மார்ச் 11

ஆதரிக்கிறேன். ஊராட்சித் தலைவர்கள் எல்லாம் மக்களாலேயே நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் சட்டத்தில் மாற்றம் செய்யவேண்டும். ஆகவே இது பற்றி ஆலோசிப்பதும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இப்போது கிராமங்களில் இருக்கின்ற மக்கள் எல்லாம், தேர்தலில் ஓட்டு போட்டுவிட்டால் தங்களுடைய வேலை முடிந்துவிட்டது. மற்ற எல்லாப் பணிகளையும் தேர்ந்தெடுக்கப் பட்டவர்களே கவனித்துக்கொள்வார்கள் என்ற ஒரு தவறான எண்ணம் இருந்து வருகிறது. தேர்தல் என்று சொல்லும்போது எந்தத் தேர்தலானாலும் சரி, ஊராட்சித் தேர்தல் ஆனாலும் சரி, சட்ட மன்றத் தேர்தல் ஆனாலும் சரி, அல்லது பாராளுமன்றத் தேர்தல் ஆனாலும் சரி. தேர்தலில் ஓட்டுபோடுவதோடு தங்கள் பணி முடிந்துவிட்டதாகவே கருதுகிறார்கள். இது இன்றைக்கு நாட்டிலே இருக்கக்கூடிய ஒரு பெரிய சிக்கல். தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதிநிதிகள்தான் எல்லாப் பணிகளையும் செய்யவேண்டு மென்று சிக்கலான நிலையை கிராம மக்கள் ஏற்படுத்தியிருக் கிறார்கள். இந்தத் தவறான எண்ணத்தைப் போக்குவதற்கு ஏற்ற வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி மன்றத் தேர்தல் காரணமாக. தலைமைப் பதவிக்கு போட்டி ஏற்பட்டு, அது பின்னால் வரும் பெரிய தேர்தல் வரையிலும்கூட போட்டி மனப்பான்மை நீடித்துக்கொண்டிருக் கிறது. தேர்தல் என்று வந்தால் போட்டி வரத்தான் செய்யும். ஆனால் அந்தப் போட்டி மனப்பான்மையால் ஊருக்குச் செய்யக் கூடிய நல்ல காரியங்கள்கூட செய்யப்பட முடியாமல் போய் விடுகிறது. அந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு என்ன செய்வது என்பதைப்பற்றி பல பெரியோர்கள். பல்லாண்டு காலமாக ஆலோசனை செய்து கூறிய கருத்தினை நான் இங்கே கூற விரும்புகிறேன்.

அதாவது, ஊராட்சி மன்றம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்வாக அமைப்பாக இருக்கவேண்டும். யார் ஓட்டுப்போட்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தார்களோ அந்த மக்கள் கவுன்சில் ஒன்று நிர்வாக அமைப்புக்குமேல் அதிகாரம் படைத்ததாக



1972 மார்ச் 11] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

இருக்கவேண்டும். அந்த கவுன்சில் எடுக்கின்ற முடிவுகளை நிர்வாக அமைப்பு நிறைவேற்றக் கூடிய முறையில் இருக்கவேண்டும். ஊராட்சி மன்றங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கும். மக்களுக்கு என்னென்ன கடமை இருக்கிறது என்பதை தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், மக்களுக்கு உணர்த்த முடியும். மக்களுக்கு என்னென்ன தேவை என்பதை, மக்கள் கவுன்சில் மூலமாக ஊராட்சி மன்றத்திற்கு உணர்த்த முடியும். இதனால் ஒருவருக்கொருவர், கலந்துபேசி, நல்ல முடிவுகளை மேற்கொண்டு, தேவையான திட்டங்களைப் போட்டு நிறைவேற்றினால் ஊரின் வளர்ச்சி விரைந்து முன்னேறும். எனவே, அரசாங்கம் இதை உன்னிப்பாக ஆராய்ந்து பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஊராட்சி ஒன்றியங்களுக்கு நாம் அதிகமான ஊழியர்களை போட்டிருக்கிறோம். அதனால் அதிக செலவு ஏற்படுகிறது. அந்த ஊழியர்களின் பணியை நன்கு பயன்படுத்திக் கொள்ளக் கூடிய முறையில் அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும். பொதுப்பணிகளுக்கு அந்தந்த கிராம மக்களையே பயன்படுத்த வேண்டும். ஊராட்சி அமைப்புகள் வளம் பெற்றால்தான், கிராமங்களிலே தொழில் விவசாய அபிவிருத்தி ஏற்பட்டால்தான் இந்த நாடே வளம்பெற முடியும். நாட்டின் தொழில் அபிவிருத்திற்கு அடிப்படை விவசாய அபிவிருத்திதான். விவசாயம் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திகளை சரிவர கவனித்துக்கொள்ள இப்போதே இருக்கின்ற அமைப்பு போது மானதல்ல. எனவே, இந்த விஷயத்தில் ஊராட்சிப் பணியாளர் களுக்கு உதவியாக இருக்க, கிராமத் தொண்டர் அமைப்பை ஏற்படுத்த வேண்டும். அந்த கிராமத் தொண்டர் படையில் கிராமத்திலுள்ள இளைஞர்களை எல்லாம்—18 முதல் 30 வயதிற்குட் பட்டவர்கள்—சேர்க்கவேண்டும். அதற்கு இளைஞர் அணி என்று வேண்டுமானாலும் பெயர் வைத்துக்கொள்ளலாம். அந்த அணிக்கு கட்டாயமாக இளைஞர்களை சேர்க்கவேண்டும். அவர்களுக்கு அபிவிருத்திப் பயிற்சி அளிக்க வேண்டும். அப்படிக் கட்டாயப் படுத்துவதில் தவறு இல்லை. கட்டாயப்படுத்தும்போது, இது ஒரு சுதந்திர நாடா எங்கள் விருப்பப்படி பணியாற்ற எங்களுக்கு உரிமை இல்லையா என்றெல்லாம் கேட்பார்கள். சுதந்திர நாடு தான். அதில் சந்தேகம் இல்லை. பேசுவதற்கும் எழுதுவதற்கும் சுதந்திரம் இருக்கிறது. ஆனால் வேலையில்லாமல் சோம்பேறிகளாக

திரிவதற்கு சுதந்திரம் இல்லை. ஆகவே, சோம்பேறிகளாகத் திரியாமல், தங்கள் கிராமத்தை முன்னேறச் செய்யும் பணியில் அவர்களைக் கட்டாயப்படுத்தலாம். அப்படிச் செய்கின்றபோது மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் நேரடியானத் தொடர்பு ஏற்படுகிறது. அதற்குத் தேவையான சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு உறுதுணையாக ஒவ்வொரு கிராமத்திலும் 50 உறுப்பினர்கள், 30 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால் நிச்சயமாக நம்முடைய திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் பயனை அளித்திருக்கும். அப்படி ப்ராப்பராக அடிமட்டத்தில் இருந்து திட்டங்கள் செம்மையாக அமைய வழிவகை செய்தாகவேண்டும். ரோடு போடுவதற்குக் கூட—நான் கப்பி போடுவதைச் சொல்லவில்லை—மண் வெட்டிப்போடுவதற்கு சென்னையிலிருந்து பணம் ஒதுக்க வேண்டுமென்றால் கேட்கப்படவேண்டியதாக இருக்கிறது. இன்றைக்கு அநேகமாக எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் பணம், ரோட்டுக்கு மண்வெட்டிப்போடவே செலவாகிறது. கிராமத்தியில் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற பஞ்சாயத்து உறுப்பினர்களுக்கு ஊர்க்காரர்களை மண்வெட்டிப் போடும்படி சொல்ல அதிகாரம் கிடையாது—மண்வெட்டிப்போட தொகை செலவழிக்கத்தான் அதிகாரம் இருக்கிறது. ஆகவேதான் இதுபோன்ற கிராமப் பணிகளை கிராமத்தில் உள்ள மக்களே செய்யவேண்டும் என்று கட்டாயப்படுத்த அதிகாரம் இருக்கவேண்டும் பஞ்சாயத்துகள் மண்வெட்டிப்போட பணம் செலவழிக்கக்கூடாது என்று கூட தடையே விதித்துவிடலாம். முன்பெல்லாம் ரோடு போட்டுக்கொள்வது, வாய்க்கால் வெட்டுவது இதற்கெல்லாம் குடிமராமத்து என்று கிராம மக்களேதான் செய்து வந்தார்கள். இன்றையதினம் குடிமராமத்துக்கு என்று இவ்வளவு பணம் என்று வாங்குகிறோம். ஆனால் காரியங்கள் நடைபெறவில்லை.

அடுத்து, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு திட்டம் வேண்டும். ஒரு கிராமம் என்று எடுத்துக்கொண்டால் அதற்குத் தேவையான பாலங்கள், பள்ளிக்கூடம், சாலைகள் எல்லாவற்றையும் முன் கூட்டியே கணக்கு எடுத்து திட்டமிட்டுக்கொண்டு செயலாற்ற முன்வந்தால் நல்லமுறையில் அந்த வேலைகளை எல்லாம் குறுகிய காலத்திலேயே நிறைவேற்றிட முடியும். பணம் விரயம் ஆவதையும் தடுக்கலாம். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு





பெருகவேண்டும் என்றால் எப்படிப் பெருகும்? ஒவ்வொரு கிராமத்திற்கும் திட்டம் போட்டு அவற்றைச் செயல்படுத்த முன் வருகிற போதுதான் கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பு பெருகும். முதியோர் பென்ஷன் கூட கொடுக்கும் பொறுப்பை பஞ்சாயத்துக்களே வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். கிராமங்களில் வயதாகி—ஆதரவற்று பட்டினியாக செத்துக்கொண்டிருக்கிறவர்கள் யார் யார் என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

அடுத்து கிராமங்களில் லீடர்ஷிப் சரியான முறையில் வளர்க்கப்படவில்லை. இதை எல்லோரும் சொல்கிறார்கள். சேவா மனப்பான்மை உடைய இளைஞர்கள் ஒன்று சேர்க்கப்படுகிற போதுதான் கிராமங்களில் நல்ல லீடர்ஷிப்பும் கிடைக்கும். எல்லோரும் அமைச்சராக வர முடியாது என்றாலும் அமைச்சராக வருவதற்குத் தகுதி உடைய இளைஞர்கள் பத்துப்பேர்களாவது ஒவ்வொரு கிராமத்திலும் உண்டாக்கப்படவேண்டும். ரஷ்யா, சீனா போன்று இல்லாவிட்டாலும்—இங்கே பல கட்சிகள் இருப்பதால்—அரசாங்கம் தான் கட்சி அடிப்படையில் இன்றி இந்த இளைஞர் அணியை நல்லமுறையில் உருவாக்கி—கிராமத் தலைமைக்கு பின்னால் சரியானவர்கள் கிடைக்கக்கூடிய வகையில் பணியாற்றவேண்டும்.

பஞ்சாயத்து சட்டத்தை மாற்றம் செய்ய இருக்கிறார்கள். அதில் நான் சொன்ன கருத்துக்களுக்கு ஏற்ப சிலபல காரியங்களைச் செய்தாகவேண்டும். என்னுடைய கருத்துக்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்படாவிட்டாலும் ஒன்றிரண்டு கருத்துக்களாவது ஏற்றுக்கொள்ளப்பட்டால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன். என்னுடைய கருத்துக்கள் நிச்சயமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. வை. பாலசுந்தரம்** : மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை மனதார ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றைய தினம் தமிழ்நாடு மாநிலத்தில் ஏறத்தாழ 12,452 ஊராட்சிகளும், 600 பேரூராட்சிகளும், 12 நகரியங்களும், ஏறத்

தாழ 374 ஊராட்சி ஒன்றியங்களும் அடங்கி இருக்கின்றன. அப்படிப்பட்ட அமைப்பிற்குச் சிறந்த திட்டங்களின் மூலம் நிர்வாகத் திறனிலே நல்ல அக்கறையும், நாட்டமும் கொண்ட உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இவ்வாண்டுக்கு நல்லதொரு திட்டத்தை அமைத்துத் தந்திருக்கிறார்கள் என்று கூறுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் சாலைகளைச் செப்பனிட மட்டும் மானியமாக ஏறத்தாழ 119 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இணைப்புச் சாலைகளுக்கு ஏறத்தாழ 83 லட்சம் ஒதுக்கியிருக்கிறார்கள். இதுபோல நல்ல பணிகளுக்காக ஏராளமான பணத்தை நம்முடைய தமிழக சர்க்கார் ஒதுக்கி நல்ல பல சேவைகளை நாட்டு மக்களுக்கு ஆற்றி வருகிறார்கள் என்பதை எடுத்துக் கூறக் கடமைப்பட்டாலும் அதே நேரத்தில் இங்குள்ள பல உறுப்பினர்கள் நாட்டுக்குத் தேவையான பல்வேறு அம்சங்களைப்பற்றிப் பேசினார்கள்.

இதிலே மிக முக்கியமான திட்டம் வேலை வாய்ப்புத் திட்டமாகும். கிராமங்கள் வளர்ச்சி அடைவதற்கு மிக உன்னதமான திட்டமாகும். இதன்மூலம் ஏராளமான பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் அடிப்படையில் அமைத்துத் தரப்படுகிற ரோடுகளை பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் நல்ல முறையில் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பது என்னுடைய எண்ணம்.

அடுத்து, இளைஞர் அணியைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அந்த இளைஞர் அணி ஆற்றி வருகிற சிறப்பான பணிகளைப் பார்க்கிறபோது—நம் நாட்டு பட்டதாரிகள் தூய்மையான எண்ணத்தோடு நாட்டு சேவைக்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ள முன் வந்திருப்பது எல்லாம் பெருமைப்படக்கூடியதாகும். கிராமப்புற மக்களோடு நல்ல தொடர்பு கொண்ட இப்படிப்பட்ட இளைஞர்களுக்கு பிற்காலத்தில் அரசாங்க வேலை கிடைப்பதற்கும் நல்ல வழி முறைகளை வகுக்க வேண்டும் என்பது என்னுடய் எண்ணமாகும் என்பதை இந்தத் தருணத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, தலையாய பிரச்சினையாக நான் பேச இருப்பது சென்னை மாநகரத்தைப் பற்றியதாகும். ‘சென்னை மாநகர் எழில் கொழிக்கின்ற ஒரு பூஞ்சோலை’ என்று இந்தியத் துணைக் கண்டத்





தில் மட்டுமல்ல, உலகத்தில் இருக்கின்ற நாடுகளில் எல்லாம் உள்ள வர்கள் போற்றிப் புகழுகின்றனர். சென்னை எழில் கொஞ்சும் பூங்கா என்று அவர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். சென்னை மாநகரத்தில் ஏழ்மையின் சின்னமே இருக்கக்கூடாது, ஏழ்மையின் ஒளி வீசக்கூடாது என்ற காரணத்திற்காக சென்னை மாநகராட்சி கேட்கின்ற நேரத்தில் எல்லாம் தமிழக அரசு உதவியை அள்ளி அள்ளிக் கொடுத்துக்கொண்டு வருகிறது. தமிழக அரசு நல்ல உள்ளம் படைத்த தாய். அந்த நல்ல தாயின் செல்லப் பிள்ளைதான் சென்னை மாநகராட்சி என்று சொன்னால் அது மிகை அல்ல. தமிழக அரசு சென்னை மாநகராட்சியை தொடர்ந்து செல்லக் குழந்தை என்று அங்கீகரிக்க வேண்டும்.

சென்னையினுடைய சூழலிலேதான், சென்னையினுடைய வளர்ச்சியிலேதான், சென்னையினுடைய வாழ்விலேதான், தமிழ்நாட்டின் பாரம்பர்யமும், பெருமையும் அடங்கியிருக்கிறதென்பதை தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். வெளிநாடுகளிலிருந்து இங்கு வருபவர்கள் எல்லாம், “ஆஹா, எவ்வளவு அழகான கடற்கரை” என்று வியந்து போற்றுகின்றனர். அவ்வளவு அழகான கடற்கரையை, உலகத்திலே அழகான கடற்கரையிலே இரண்டாவது ஸ்தானத்தை பெற்றிருக்கிற கடற்கரையை மேலும் அழகுபடுத்திட, சிங்காரச் சென்னையை மேலும் நல்ல விதத்தில் பாதுகாக்க பல திட்டங்கள் நம்மிடத்தில் இருக்கின்றன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்காக நமது அரசு, 1972-73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ஏறத்தாழ 30 லட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், சென்னையில் கண்ணம்மாபேட்டை, கெங்குரெட்டி சாலை, தெற்கு கடற்கரைச்சாலை ஆகிய இடங்களில் போக்குவரத்துக்கு வகை செய்யும் வகையில் சுரங்கப் பாதைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கின்றன. இப்படியெல்லாம் சொல்லப்படுகிற நேரத்தில் சென்னை மாநகராட்சி விரிவாக வேண்டிய அவசியம் இருக்கிறது. சென்னை நகரத்தை அழகு கொழிக்கும் நகரமாக மாற்ற வேண்டுமென்ற எண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது, அதேபோல் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் அந்த எண்ணம் இருக்கிறது. அதன் அடிப்படையில்தான் கூவம் சீரமைப்புத் திட்டம். இந்தத் திட்டத்தைக் குறித்து ஆரம்பத்தில் எள்ளிநகையாடி, இதிலே

ஊழல். ஊழல் என்று ஊர் எல்லாம் சொல்லி சுற்றி வந்தார்கள். இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு, வருகிற ஜூலை மாதத்தில் படகுகள் விடப்படுகின்ற இனிமையான காட்சியை, ஊழல், ஊழல் என்று சொன்னவர்களும் காணத்தான் போகிறார்கள். நம்மைப் பார்த்து எள்ளிநகையாடியவர்களும் அந்த இனிய காட்சியைப் பார்க்க இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் தமிழ்நாட்டின் ஜீவாதாரமாக இருக்கும் சென்னை நகரத்தின் வளர்ச்சியிலே, தமிழக அரசு மிகவும் அக்கறை காட்டி வருகிறது. சென்னை மாநகரத்து மக்களின் இதயநாடியாக இருக்கும் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்க்க வீராணம் திட்டத்தை உருவாக்கி, அதற்கு 20 கோடி ரூபாய் என்று ஒதுக்கியிருக்கிறார்கள். வீராணத்திலிருந்து தண்ணீர் கொண்டுவந்து சென்னை நகர மக்களுக்குத் தருகின்ற சீரிய திட்டம் இது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையிலே வாழ்கின்ற படித்தவர்கள், பட்டதாரிகள், நல்ல அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள், நல்ல உள்ளம் படைத்தவர்கள். நல்ல மருத்துவர்கள், வியாபாரிகள், சட்ட நுணுக்கம் தெரிந்தவர்கள், பாமரர்கள் ஆகிய எல்லாத் தரப்பினரும் குழுமியிருக்கின்ற சென்னை மாநகரமாகும். இந் நகரத்தில் வாழ்கின்ற எல்லாத் தரப்பு மக்களுக்கும் வசதியும் வாழ்வும் செய்து கொடுக்க வேண்டியது மாநகராட்சியின் பொறுப்பாகும். சென்னையிலிருந்து வீராணம் திட்டம் மட்டுமல்ல, தென். சென்னையிலே 78 லட்சம் ரூபாய் செலவிலே நீர்நிலைத் தொட்டி அமைக்கவும் திட்டம் அமைக்கப்பட்டு, அதுவும் ஜூலைத் திங்களில் முடிவடைய இருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படியெல்லாம் சென்னைவாழ் மக்களுக்கு நல்ல வசதிகளைச் செய்து தருகிறது மாநகராட்சி. மேலும் ஒரு புனிதமான திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறது. அந்தப் புனிதமான திட்டம் தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அதுதான் குடிசை மாற்று வாரியம் என்கிற புனிதமான திட்டமாகும். இந்தியத் துணைக் கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலும் கையாள முடியாத திட்டம். இந்தத் திட்டத்தை நல்ல உள்ளம் படைத்தவர்கள் வரவேற்கிறார்கள். நம் மதிப்பிற்குரிய நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள், 'இது ஒரு முற்போக்கான





திட்டம்' என்று கூறி வரவேற்றார்கள். அவருக்கு உங்கள் மூலமாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி பொதுமக்களுக்காகச் செயலாற்றுகிற நேரத்தில், அடித்தளத்தில் இருக்கும் தாழ்த்தப்பட்ட மக்கள் மேல்தளத்திற்கு வரவேண்டும் என்கின்ற கருத்தை உள்ளத்தில் வைத்துக்கொண்டுதான் குடிசை மாற்றுவாரியத்தை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது என்பதை ஆணித்தரமாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இன்னும் இரண்டு நிமிடங்கள் இருக்கின்றன. உறுப்பினர் அவர்கள் சீக்கிரம் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும்.

**திரு. வை. பாலசுந்தரம் :** சென்னை நகரத்தில் ஆயிரம் குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. அவற்றில் 1 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்கள் வாழ்வதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குடும்பங்கள் நல்ல முறையில், குறைந்தபட்ச வசதிகளுடனாவது வாழ்கின்ற முறையில், ஒரு சீரான சிறப்பான திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. அந்த ஏழை எளிய மக்களின் வாழ்விலே நல்லொளி பிறக்க வேண்டும், அவர்களுடைய வாழ்வு ஒளிமயமாக அமைய வேண்டும், அவர்களுடைய வாழ்விலே ஒளிமயத்தைக் காண வேண்டும் என்கிற அடிப்படையிலேதான் குடிசை மாற்று வாரியம் சிறப்பான முறையில் பணியாற்றிக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு ஏழு ஆண்டுகள் என்று ஒரு காலவரையறை வைத்து, அந்த ஏழு ஆண்டுகளுக்குள் சென்னை நகரில் குடிசைகளே இருக்கக்கூடாது என்கிற நல்ல நோக்கத்தைக்கொண்டு செயலாற்றி வருகிறது. இதற்காக 3 கோடியே 65 லட்சம் ரூபாயை ஒதுக்கி, இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. நல்ல பல திட்டங்களுக்கு எல்லாம் வாரி வாரி வழங்குகிற தன்மையில் மாநில அரசு இருந்து வருகிறது. தமிழக அரசு தாய், சென்னை மாநகராட்சி செல்லப் பிள்ளை. தமிழக அரசாகிய தாய், செல்லப்பிள்ளைக்கு மேலும் பல சலுகைகளை வாரி வாரி வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சென்னை நகரம் எழில் கொழிக்கும் பூங்காவாக, சென்னை நகரம் சிங்காரப் பூஞ்சோலையாக விளங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1972 மார்ச் 11

* THIRU K. S. KOTHANDARAMIAH : Hon'ble Mr. Deputy Speaker, Sir, I stand to support this Demand No. 23 and say a few words about this.

I am glad to find that the Hon. Mnister in charge of Local Administration has been able to allot about Rs. 10 crores for community Development for this year. It is also a matter for great satisfaction that we have got the Education Minister also as the Minister for Local Administration. He has got great experience and also great interest in administration and I think under his regime there will be more benefits and also good administration.

(திரு. செ. சுந்தப்பன் தலைமை)

In regard to the subject that I have chosen to speak to-day—my cut motion--is about the ways and means to increase the efficiency in the Blocks. There are more than about 370 Blocks in Our State. The Central and the State Governments have been spending a lot of amount towards community development and we expect much from this department. But we have been finding that these Blocks have not been able to rise up to the expectation and also satisfy the expectation of the State or the Central Governments. The reasons are, these Blocks have been overburdened with heavy work, multifarious works, and so Blocks are not able to perform their work satisfactorily. In addition to the development works that have been given to these Blocks, they have been asked to do further, additional works like Family Planning, collection work and also other works that are often prescribed by the Collector and others. So, the Commissioner is not able to find time and devote his minimum attention to the dsvelopmental works. Therefore, we find that Blocks are not properly functioning. Now we find three kinds of works entrusted to the Block—obligatory work, legitimate work and discriminatory work. I do not know why, we have to burden these small Blocks with so many of works and expect from them so much of result. It is just placing a heavy load on a labourer, and ask him to stand erect and work. If we lessen his load, he will be able to stand erect and walk and do good work. So, the first thing which I want to impress upon the Hon. Minister for Education and Local administration is that he should lessen the burden of the works entrusted to these Blocks. We can take away the subject of Education from these Blocks. Education is a huge subject which requires greater attention of the Government



1972 மார்ச் 11] [Thiru K. S. Kothandaramiah]

The Blocks are not able to devote so much attention as to show satisfactory progress in this department.

We want to improve the quality of education. We want to construct new buildings for schools. Education is not properly imparted in these Blocks. Therefore my humble suggestion is that we have got an efficient administrative machinery and a separate department of Education. When you have got efficient officers, and a department, I do not know why this education should be entrusted to the Panchayat Unions. We know that, elementary education is the foundation for all education and unless elementary education is put on proper lines, you cannot expect higher education to be on good lines. Therefore, my submission is that the Hon. Minister for Local Administration who is also the Hon. Minister for Education should take the education subject from the panchayat unions.

Secondly, with regard to the transfer of teachers, we have got an Ad hoc Committee and the Sub-Collector is the Chairman of the Committee and the local M.L.As. are there. But so far as appointments are concerned, there are a number of complaints. In the Appointment Committee, the local M.L.A. is not there and unless he is also allowed to take part in that Committee, there will be room for such complaints. So, on the lines of the Ad hoc Committee for transfers of teachers, the Appointments Committee may be constituted so that the M.L.A. is also there and the poor teachers can get the advantages of that Committee.

As regards payment of salary to teachers, now every month every teacher has to pay something and something is deducted from his pay because the paymasters are asked by the Commissioner to deduct some amount. Consequently, every teacher is not able to get his legitimate pay. I think it is better that the pay is sent to the schools by money orders so that the schools may get the full amount that has been allotted to them.

With regard to mid-day meal, panchayats are expected to pay 4 paise in the rupee as the matching grant. They are not paying it and the teachers are undergoing some trouble on account of this. The Government can order the village officers to collect it and give it to the schools instead of depending upon the Presidents of the Panchayats.

[Thiru K. S. Kothandaramiah] [1972 மார்ச் 11

Further, in every school the mid-day meal is served in schools or thatched sheds where the classes are conducted. After the mid-day meal is served there, there is not even a peon to clean the plates and planks. I think the Hon. Minister for Local Administration may consider this and think of constructing separate rooms for serving mid-day meals so that the boys will be able to go there and clean their hands and cultivate healthy habits and cleanliness.

Then, I come to another point. The Deputy Inspector of Schools and the Extension Officers are at loggerheads always and they do not see eye to eye on several matters. Some arrangements should be made to see that these two persons function properly.

Now I wish to tell a few words about lady teachers. A number of houses have been constructed for them but in many places they have not been occupied by them and as such they are in a ruined condition. It is better that these houses are given to the male teachers, so that they can live there and look after the houses.

Next with regard to irrigation, it is a huge subject. So far as minor irrigation is concerned, in each block there are thousands of small tanks. Even in my constituency, there are three blocks and I have toured in all the blocks and seen the tanks. The repairs to the tanks by the Panchayat Unions are not at all satisfactory. They do not pay enough attention to it. They simply throw some mud and leave it and that is all. I had taken even the Sub-Collector for inspection to some tanks and he found it very unsatisfactory and he asked them to repair them in a proper way. Even then they are not doing it.

Also, drinking water wells are not properly dug. They are dug upto 10 or 15 feet and the parapet wall is constructed. But there is no water. I have asked the Collector and also the Sub-Collector to go there and inspect them but nobody has taken care to verify.

Then I come to education. When a teacher is appointed in a school, he is asked to produce a medical certificate whch is then pasted on his service register and it will be there. Unfortunately



1972 மார்ச் 11] [Thiru K. S. Kothandaramiah]

in the Sulagiri Block of Hosur taluk in my constituency, Commissioner has asked the teachers who have put in a service of 10 or 15 years to produce a medical certificate now. Without producing a medical certificate, how could they have been appointed as teachers ? The certificates would have been pasted on their service registers and perhaps they have lost it. This matter must be looked into by the Government immediately.

As regards village roads, the crash programme is now being implemented. A number of coolies have been engaged in this work. We have promised them to pay Rs. 3 per day. Actually they do not get Rs. 3 and so they are not coming forward to work. They should be paid Rs. 3 as promised earlier. Also, as soon as we lay the road, we should metal it. Unless it is metalled, it will get ruined and we will have to spend more later on.

There is a scheme under which the Collector gives rewards to Panchayat Unions. There are a number of panchayats which have got population less than 5,000 and some arrangement should be made to give rewards to such small panchayats also.

Then I come to reading rooms. Especially in Hosur and Denkanikottah taluks, there are a number of minorities and they happen to be the majority people there. Sufficient Telugu books are not supplied to the reading rooms there. Formerly we were getting Telugu Journals and they have been gradually stopped.

MR. CHAIRMAN : (THIRU S. KANDAPPAN) : The hon. Member has already taken 13 minutes.

THIRU K. S. KOTHANDARAMIAH : I will finish in one minute. Finally, some of the Commissioners are not functioning satisfactorily. Only persons in the grade of R.D.O.s should be appointed as Commissioners. In the Andhra Pradesh and other States, only persons having M.A. qualification are appointed as Commissioners. So also in our State persons with higher qualification and experience only should be posted as Commissioners. Otherwise will be very difficult to manage the Panchayat Unions. With these words, I conclude my speech.

*திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை 20-வது மானியக் கோரிக் கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன்.*

[திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்] [1972 மார்ச் 11

இதற்கு முன்பு பேசிய அன்பர்களெல்லாம் சென்னை மாநகராட்சியைப்பற்றிக் குறிப்பிட்டு அது செல்லப்பிள்ளையாக இருக்கிறது, நிறைய சலுகைகள் தரவேண்டுமென்று கூறினார்கள். மதுரை நகரம் இந்த அரசின் ஆட்சியிலே நகராட்சியிலிருந்து மாநகராட்சியாக மாறியிருக்கிறது. இந்த நிலைமையிலே மதுரையில் பல ஆண்டுகளாக ஏதோ சில காரணங்களால் பல தொழில் வாய்ப்புகளும், பலவிதமான முன்னேற்றங்களும் இல்லை, பின் தங்கியிருக்கிறது என்பது அனைவரும் அறிந்த விஷயம். இதை நன்றாக அரசு உணர்ந்து இந்த ஆண்டிலே வளர்ச்சி தர வேண்டுமென்ற நோக்கத்தின் காரணமாகத்தான் மாநகராட்சியாக ஆக்கியுள்ளது. அதற்குப் பிறகு மதுரை மக்களின் எண்ணமெல்லாம் மதுரை பல விதத்திலும் முன்னேறும் என்ற நம்பிக்கையைக் கொண்டு பல துறைகளிலும் அரசின் ஆதரவை எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய பல திட்டங்களைப்பற்றி விரிவாகப் பல கருத்துக்களை நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆனால் சுருக்கமாகச் சொல்ல வேண்டியதாயிருப்பதால் மிகவும் சுருக்கமாக வைத்திருக்கிறேன்.

பல ஆண்டுக் காலமாக கோடைக் காலத்தில் மதுரையில் வரும் தண்ணீர்க் கஷ்டத்தைப் பற்றிச் சொல்லாமலிருக்க முடியாது. வைகை ரிசர்வாயரிலிருந்து தண்ணீர் கொண்டுவரும் திட்டம் ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டு, பிற்பாடு அதற்கு அதிகச் செலவாகும் என்பதால் பேரணை ரிசர்வாயிலிருந்து கொண்டு வரும் திட்டத்தை அமல்படுத்த வேண்டுமென்று சொல்லப்பட்டு பிறகு பேரணை ரிசர்வாயர் திட்டம் வேண்டாமென்று வேறொரு திட்டத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நகரம் கார்ப்பொரேஷன் அந்தஸ்திற்கு உயர்ந்திருப்பதால் அங்கே உள்ள தண்ணீர்க் கஷ்டத்தைப் போக்க உடனடியாகத் திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1971-ம் ஆண்டில் தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம் அமைக்கப்பட்டு ரூ. 3,177.62 இலட்சம் நிர்ணயித்த செலவில் 101 நீர் வழங்கு திட்டங்களையும், ரூ. 1,100.22 இலட்சம் நிர்ணயித்த செலவில் 12 வடிகால் திட்டங்களையும் நிறைவேற்றி வருகிறது. அதனால் மக்களுடைய நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. அந்த வாரியம் மதுரை விஷயத்திலும் சற்றுக் கவனம்



1972 மார்ச் 11] [திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்]

செலுத்தி, சென்னைக்கு அடுத்ததாகவுள்ள, தமிழ்நாட்டின் மிகவும் பண்டைப் புகழ் பெற்ற நகரத்தில் தண்ணீர் கஷ்டம் இல்லாமல் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தவிர, நம்முடைய தமிழக அரசின் கொள்கைப்படி, ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்ற அடிப்படையில் ஏழைகளுக்குப் பல நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சென்னைக்கு வந்தால் குடிசை மாற்று வாரியம் செய்யும் திட்டங்களைப் பார்த்தால், சென்னையில் வசிக்கும் ஏழைகள் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இடம் கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் அந்தக் கட்டிடங்களைப் பார்க்கும்பொழுது எனக்கும் இதுபோன்ற கட்டிடம் 7 ஆண்டுக் காலத்தில் கிடைக்கத்தான் போகிறது, நானும் குடிசையை விட்டுவிட்டு கட்டிடத்தில் வசிக்கத்தான் போகிறேன் என்ற நல்லெண்ணத்தைக் கொள்ளும் அளவிற்கு நம்பிக்கை உண்டாகியிருக்கிறது. அப்படிச் சிறந்த முறையில் எல்லா ஏழை மக்களுக்கும் குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் மூலம் கட்டிடம் கட்டிக் கொடுக்கத் திட்டம் தீட்டியிருக்கிறார்கள். முதலில் இந்த வாரியத்தை ஏற்படுத்தும்பொழுது சென்னைக்கு மட்டும் என்று நாங்கள் கருதவில்லை. பிறகுதான் சென்னைக்கு மட்டும் என்று அறிந்தோம். ஆனால், இதுபோல் மற்ற ஜில்லாக்களுக்கும், மதுரை, கோயம்புத்தூர், சேலம் போன்ற பெரிய பெரிய நகரங்களுக்கும், சிறிய நகரங்களுக்கும் இம்மாதிரியான குடிசை மாற்று வாரியத்தைச் செயல்படுத்த வேண்டும். 1971-72-ஆம் ஆண்டில் வெளியூர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் பணிக்காக ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது என்று சொல்கிறார்கள். ஆனால் சென்னைக்கு மட்டும் 3 கோடி, 4 கோடி என்று செலவு செய்துவிட்டு, அதைப்போல் எல்லாப் பகுதிகளுக்கும் சேர்த்து 35 லட்சம் என்று சொன்னால் வெளியூர்களிலுள்ள மக்களுக்கு அதிருப்தி ஏற்படும். அது அவ்வளவு குறைந்திருக்கிறது. எல்லா மக்களுக்கும் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் பணி நிறைவேற்றப்பட வேண்டும். குடிசை வாழ் மக்கள் நல்ல கட்டிடங்களில் வசிக்க வேண்டுமென்ற எண்ணம் எல்லாப் பக்கத்திலேயும் இருப்பதால் அதிகமாக அந்தக் காரியத்தை நிறைவேற்ற அரசு தக்க திட்டத்தைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக இந்த நிர்வாகத்திலே உள்ளவர்களுக்கும், ஜனங்களுக்குமிடையே உள்ள சிக்கலான பிரச்சினையாக அடிக்கடி சொல்வது என்னவென்றால் சாதாரண சிறிய குற்றத்தைச் சொல்

[திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்] [1972 மார்ச் 11

கிறார்கள், அதை நிர்வாகம் சரியாகக் கவனிக்க வேண்டும். ஜனங்களிடமிருந்து பஞ்சாயத்து யூனியன்களுக்கோ, நகராட்சிகளுக்கோ புகார்கள் வந்தால் அவைகளை உடனடியாகக் கவனிக்க வேண்டும். நகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்களால் செய்யப்படும் செலவுகள் சரியாகச் செலவழிக்கப்படுகிறதா என்பதற்கு சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் செய்ய வேண்டுமென்று நான் நகராட்சி சேர்மனாக இருந்தபொழுதுகூடச் சொல்லி வந்திருக்கிறேன். திடீர் திடீரென்று இன்ஸ்பெக்ஷன் செய்து, ரோடுகளை எவ்வளவு அகலத்திற்குப் போட்டால் எவ்வளவு செலவாகும் என்பதையெல்லாம் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன் செய்தால் நல்லமுறையில் நடைபெறும். அப்படிப்பட்ட இன்ஸ்பெக்ஷன்கள் நடைபெற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எல்லா நகராட்சிகளிலும் பார்க்கும்பொழுது அடிக்கடி பணக் கஷ்டம் ஏற்பட்டு மிகவும் சிரமப்படும் நிலையை உண்டாக்கியிருக்கிறார்கள். மதுரை மாநகராட்சியில் மிகவும் கஷ்டப்படும் ஓர்க்கர்ஸ், என்.எம்.ஆர். போன்ற தினசரி வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். ரோடு வேலை, ஓர்க்ஷாப்புகளில் பணி செய்யக்கூடியவர்களுக்கு ரோடு வேலையில் ஒரு மாதத்தில் 20 நாட்களுக்கு மேல் வேலை கிடையாது. அதற்குக் காரணம் பணக் கஷ்டம் என்று சொல்லப்படுகிறது. மிகமிகக் குறைந்த கூலியுள்ள தினசரிக் கூலிகளுக்கு வேலை கொடுக்க அங்கே முடியவில்லை. ஆனால் அதேசமயத்தில் உயர்ந்த அந்தஸ்து உள்ளவர்களுக்கு முழு வேலையும், அதிகச் சம்பளமும் எல்லா இடத்திலும் தரும் நிலைமை இருக்கிறது. ஆகவே சிக்கன நடவடிக்கையை ஓரளவிற்கு அனுஷ்டிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பொதுவாக இப்பொழுது வேலையில்லாத் திண்டாட்டம் அதிகமாக இருக்கிறது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. உதாரணமாக எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களெல்லாம் ஒவ்வொரு நாளும் வேலைக்கு விண்ணப்பம் செய்து கொண்டேயிருக்கிறார்கள். பி.ஏ. படித்தவர்கள், பி.ஈ. படித்தவர்களை, டிப்ளமா ஹோல்டர்ஸ் எல்லாம் இளைஞர் அணியில் சேர்ந்து 175 ரூபாய் கொடுத்தாலும் போதும் என்று வருகிறார்கள். இந்த நிலையில் சிக்கனமாக காரியங்கள் சிலவற்றை நாம் செய்யவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தை பெரிய அளவில் நாம் குறைக்க வேண்டும். ஆகவே,



1972 மார்ச் 11] [திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்]

அந்த முறையில் படித்தவர்களை "கன்சாலிடேட்டட். ஸ்கேல் ஆஃப் பே" என்று சொல்லி கிளார்க்குகளாக நியமிக்கப்பட்டால் மூன்று ஆண்டுகளுக்கு 125 ரூபாய் பெற்றுக்கொண்டு வேலை செய்யுங்கள் என்று செய்யலாம். அதே கொள்கையை அனுஷ்டிக்கலாம். ஒரு ரெகுலர் ஸ்கேல் ஆஃப் பே இருந்தாலும் கூட முதலில் அப்ரெண்டிஸாக இந்த கன்சாலிடேட்டட் ஸ்கேல் ஆஃப் பேயில் முதலில் ஒத்துக்கொண்டால் பிறகு ரெகுலர் ஸ்கேல் ஆஃப் பேயில் எடுத்துக் கொள்கிறோம் என்ற நியதியை எடுத்துக்கொண்டு இன்னும் அநேக துறைகளிலே சேர்த்துக்கொண்டு வேலைவாய்ப்புக் கொடுக்க வேண்டும்.

நம்முடைய முதலமைச்சரவர்கள் பட்ஜெட் அறிக்கையிலே அவர்கள் எந்த வருஷமும் இல்லாத அளவில் 23 நல்ல காரியங்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

பொதுவாக நெசவாளர்கள் பற்றி அறிக்கையில் வருவதில்லை. ஆனால் இந்த ஆண்டு குறைந்த ஊதிய நிர்ணயம் பற்றிப் பேசியிருக்கிறார்கள். நெசவாளர்கள் படும் கஷ்டத்தை உணர்ந்து எப்படியும் சிறிது காலத்திலே அவர்கள் வாழ்விலே உயர்வைக் காணவேண்டுமென்ற அடிப்படையில் சிந்திக்க வேண்டும். அவர்களுடைய பிரச்சினை மிகவும் கஷ்டமான பிரச்சினை. அவர்கள் வாழ்க்கையிலே மாதத்திற்கு 100 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்க முடியாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு எந்த முறையிலாவது சலுகை காட்டி உயர்வைக் கொடுக்க வேண்டும். அந்த முறையில் சில சலுகைகளைக் கொடுக்க வேண்டுமென்றால் அதற்குச் சில காரியங்களை நிர்ணயம் செய்ய வேண்டும். 100 ரூபாய் அல்லது 150 ரூபாய்க்குள் வருமானமுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் அடையாளச் சீட்டு கொடுத்து, உண்மையிலேயே அவர்கள் குறைந்த வருமானமுள்ளவர்கள்தான் என்பதைச் சர்க்கார் அறியும் வண்ணம் 'ஐடென்டிபிகேஷன் கார்டு' கொடுக்க வேண்டும். அதன்பிறகு பல சலுகைகளை ஏற்படுத்த வேண்டும். இம்மாதிரி செய்து, ஏழைகளுக்குச் சர்க்கார் சலுகைகள் என்று கொடுக்கப்படும்பொழுது அரிசி குறைந்த விலையில், அதேபோல் வீடு வேண்டுமென்றால் குறைந்த விலையில், லோ இன்கம் குரூப்பிலே கட்டப்படும் வீடுகளில் சலுகை என்று இம்மாதிரியான திட்டங்களுக்கு முதலீடம் 150 ரூபாய் அல்லது 200 ரூபாய் வேண்டுமானாலும் இருக்கட்டும், அதற்கு குறைந்த வருமானம் உள்ள

நெசவாளர்களுக்கு சர்க்கார் செய்யும் சலுகைகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது நெசவாளர்களுக்குத் தனி முயற்சிகள் எடுத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

முக்கியமாக மதுரையைப் பொறுத்தவரையில் நெசவாளர்களுக்கு வீடுகள் கிடைப்பது, வீட்டுப் பிரச்சினை மிகவும் கடினமாக இருக்கிறது. மற்றவர்களைப்போல் சிறிய அறையில் அவர்கள் தங்க முடியாது. ஏனென்றால் அவர்கள் பாவு போடுவதற்கு நீளமான ரூம்கள் வேண்டும். மதுரையில் அப்படிப்பட்ட அகலமான இடத்திற்கு 70 ரூபாய், 80 ரூபாய் வரையில் கொடுக்க வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட நிலையில் அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். தனியாக வீடு கட்டிக் கொடுப்பதற்கு ஹவுசிங் போர்டில் ஒரு பகுதியையோ அல்லது குடிசை மாற்று வாரியத்தின் ஒரு பகுதியையோ அமைத்துச் சலுகைகளைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அடிப்படைச் சலுகைகளை எல்லாம் செய்வதற்கு கார்டு சிஸ்டத்தைக் கொண்டு வரவேண்டும். ஐடென்டிபிகேஷன் கார்டு கொடுத்தால்தான் வீட்டுப் பிரச்சினை மாத்திரமல்ல, மற்ற எல்லாப் பிரச்சினைகளையும் செய்ய முடியும். நெசவாளர் பிரச்சினையையும் அதிகமாகக் கவனிக்கவேண்டும் என்று சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

திரு. மு. சத்தியமூர்த்தி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சமுதாய நலத் திட்டத்தின் மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

சமுதாய நலத் திட்டத்தின் கீழ் ஊராட்சி ஒன்றியங்களும், ஊராட்சிகளும் கிராம நலத் திட்டத்தை நிறைவேற்றி வருகின்றன. சமுதாய நலத் திட்டம் என்பது, மக்களுக்கு, சமுதாயத்திலே கீழே இருக்கும் கிராம மக்களுக்கு நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி அவர்களுடைய வாழ்க்கை வளம்பெறச் செய்ய வேண்டுமென்ற முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது சமுதாய நலத் திட்டத்தின் நோக்கமே வேறு விதமாக மாற்றப்பட்டு வருகின்றது. அதிலே உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மிகவும் கவனித்து என்னுடைய கருத்துக்களை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.





அங்கே பணிபுரிகின்ற பஞ்சாயத்து யூனியன் அதிகாரிகளும், ஆசிரியர்களும் இன்று பலப்பல வேலைகளில் ஈடுபடுத்தப்படுகிறார் கள். பல பேர் அதைப்பற்றி எடுத்துச் சொல்லியும் அப்படியே தான் நடந்து வருகிறது. பஞ்சாயத்து யூனியனில் பணிபுரிகின்ற ஆசிரியர்கள் அறிவுப் பணியைத்தான் செய்யவேண்டுமேயொழிய அறுவைச் சிகிச்சைப் பணிக்கு அவர்களை ஆளாக்க வேண்டா மென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் ஆசிரியர்களுக்கு நிதி வசூல் மற்ற பல வேலைகளைக் கொடுக்கின்ற காரணத்தால் அவர்கள் ஆற்ற வேண்டிய பணி கெட்டு விடுகிறது. அதேபோன்று பஞ்சாயத்து யூனியனில் பணியாற்றுகின்ற அதிகாரி களும் நிதி வசூல் வேலைகளில் ஈடுபடுத்தப்படுகின்ற காரணத்தால் அவர்களுடைய வேலைகள் பாதிக்கப்படுகின்றன. சமுதாய நலத் திட்டத்தின் நோக்கமே அவர்கள் கொடுக்க வேண்டுமே தவிர வாங்குவதற்காக அல்ல என்பதை அடிப்படையாக உணர்ந்து இந்த மாதிரி வேலைகளில் அவர்களை ஈடுபடுத்தாமல் சமுதாய நலத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கி றேன்.

அடுத்தபடியாக, சமுதாய நலத் திட்டத்தை நிறைவேற்றுவதற் காக தனி இலாகா ஏற்படுத்த வேண்டுமென்று தமிழ்நாடு பஞ்சா யத்து யூனியன் கூட்டங்களின் மூலம் நீண்ட நாட்களாகக் கேட்டுக் கொண்டு வந்திருக்கிறோம். தனி இலாகாவாக ஆக்கினால்தான் சமுதாய நலத் திட்ட வேலைகளைத் திறம்படச் செய்ய முடியும்.

அடுத்தபடியாக, இப்போது பஞ்சாயத்து தலைவர்களுக்கு தினப் படி கொடுப்பது குறைவாக இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர் களுக்கு மாத்திரம் அவர்களுடைய சம்பளம் உயர்த்தப்பட்டிருக் கிறதே, எங்களுடைய தினப்படியை உயர்த்தப்பட வேண்டாமா என்று கேட்கிறார்கள். இதைப்பற்றி மாவட்ட அபிவிருத்தி மன் றத்தில்கூட தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கிறோம். அந்தக் குறை இன்றுவரை தீர்க்கப்படவில்லை. 1961-62-ல் இருந்ததுதான், அதாவது ஒரு தலைவர் பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் கூட்டத் திற்கு வந்தால் ஒரு நாளைக்கு 2 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் பணியாற்றுகின்ற ஆட் களுக்குக்கூட 3 ரூபாய் கொடுக்கப்படுகிறது. அதையெல்லாம் எண்ணத்தில் கொண்டு பஞ்சாயத்து யூனியன் தலைவர்களாக

இருக்கக்கூடியவர்களுக்குக் குறைந்தது ஒரு நாளைக்கு ஐந்து ரூபாயாவது படியாகக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கல்வி இலாகா பள்ளித் துணைத் தனிக்கையாளர் அவர்கள் கல்வி இலாகாவில் இருக்கிறார்கள். அவர்களைப் பஞ்சாயத்து யூனியனில் இணைத்து இங்கு வேலை செய்வதற்கு வழி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம நல ஊழியர்கள் முன்பு எல்லா வேலைகளையும் செய்து வந்தார்கள். இப்போது அவர்களிலே 3 பேரைப் பொதுப் பணிக்கென்றும், பாக்கியுள்ளவர்களை விவசாயப் பணிக்கென்றும் ஒதுக்கியிருக்கிறார்கள். அதைப்போல் இல்லாமல் ஏற்கனவே இருந்தது போல் எல்லா வேலைகளையும் செய்து கொடுக்க பணிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

முன்பெல்லாம் பஞ்சாயத்து யூனியன்களுக்கு அதிக அதிகாரங்கள் இருந்தன. பள்ளிகளுக்கு அதிக ஆசிரியர்களை நியமிக்க வேண்டுமென்றால் பஞ்சாயத்து யூனியனில் தீர்மானம் போட்டு நிறைவேற்றி அதிக ஆசிரியர்களை நியமிக்க அதிகாரம் இருந்தது. அதைப்போல் அதிக வகுப்புகளை ஏற்படுத்த வேண்டுமென்றாலும் அந்தப் பஞ்சாயத்து யூனியனின் கவுன்சிலுக்கு உரிமை இருந்தது. அதைப்போல் மானேஜ்மெண்டில் ஒரு ஆசிரியரை அதிகமாக்க வேண்டுமென்றாலும் பஞ்சாயத்து யூனியன் மூலந்தான் கிராண்டு அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. என்ன காரணத்தாலோ அந்தப் பொறுப்பு தற்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுக்கு இல்லை. அந்த அதிகாரங்களை மறுபடியும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். அதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தையும் ஒரு பக்கத்தில் நிறைவேற்றிக்கொண்டு கிராம ஆள்பல திட்டங்களையும் பஞ்சாயத்து யூனியன் நிறைவேற்றி வருகிறது. கிராம ஆள்பல திட்டத்தைப் பொறுத்தவரை அந்தந்தப் பஞ்சாயத்துத் தலைவர்கள் எந்த வேலைகளை அவர்களிடமிருந்து வாங்குவது என்று வாங்கி அந்த அளவுக்கு பஞ்சாயத்து நிதியிலிருந்து கொடுத்து வந்தார்கள். இப்போதுள்ள கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தில் பல



சிக்கல்கள் இருக்கின்றன. ஒரு நாளைக்கு மூன்று ரூபாய் கூலி என்று போட்டால் அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு குழி வெட்டினாலும் சரி, அரைக் குழி வெட்டினாலும் சரி, பொறுப்பில்லாமல் வேலை செய்கிறார்கள். அதற்குப் பொறுப்பான ஆளை நியமித்து அவர்கள் அன்றாடம் செய்கிற வேலைக்குத் தகுந்தபடி சம்பளம் வழங்க வழி செய்தால் வேலை நல்ல முறையில் நடக்கும் என்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன்களில் கம்போஸ்ட் இன்ஸ்பெக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இப்போது எந்த வேலையும் கிடையாது. அவர்கள் என்ன வேலைதான் செய்ய வேண்டுமென்ற பொறுப்பை அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் மூலமாக எவ்வளவோ செலவுகள், விவசாயத்திற்காக, விளம்பரத்திற்காகச் செலவழிக்கப்படுகிறது. பூச்சி மருந்துக்கு முன்பெல்லாம் 50 சதவிகிதம் மானியமாகக் கொடுத்து வந்தார்கள். பின்னால் 30 சதவிகிதமாக கொடுத்தார்கள். இப்போது 15 சதவிகிதமே மானியமாகக் கொடுத்து வருகிறார்கள். அந்த விளம்பரங்களை எல்லாம் தவிர்த்து 50 சதவிகிதம், மானியமாகப் பூச்சி மருந்துக்குக் கொடுத்தால் நல்லது. இந்த விளம்பரங்கள் தேவையில்லை. அதற்குப் பதிலாக பூச்சிமருந்துக்கு 50 சதவிகிதம் மானியம் கொடுத்தால் நல்ல முறையில் பயன் ஏற்படும் என்று கூறி இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**திரு. ந. நாச்சியப்பன்:** தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டு கிராம வளர்ச்சிக்காக உள்ளாட்சித்துறை மானியக் கோரிக்கை மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கிராமங்களிலுள்ள ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்
காக இந்த அரசு எந்த அளவிற்கு அக்கறை காட்டுகிறது என்ப
தைக் குறிப்பிடுகிற வகையில் கிராம மக்களின் முன்னேற்றத்திற்
காக அதிக நிதி ஒதுக்கீடுகள் அளித்து இன்றைய தினம் பல
காரியங்கள் செய்து வருவதைக் குறிப்பிட்டு அதே நேரத்தில்
செய்யவேண்டிய பணிகள் பற்றியும் இங்கு நான் குறிப்பிட விரும்பு
கிறேன். 21,900 தொடக்கப் பள்ளிகள் இருக்கிற தமிழகத்தில்

[திரு. ந. நாச்சியப்பன்] [1972 மார்ச் 11

14,900 பள்ளிகளுக்குத்தான் சொந்தக் கட்டடங்கள் இருக்கின்றன. 7,000 பள்ளிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. அந்நிலையில் ஆண்டு ஒன்றுக்கு ஆயிரம் பள்ளிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுவது என்ற நிலையில் ஒரு திட்டத்தினை அரசு மேற்கொண்டுள்ளது. அந்த அளவில் ஏழு ஆண்டுகளில் கட்டி முடிக்கப்படும் என்ற நிலையில் இப்போது பல பள்ளிகளுக்கு சொந்தக் கட்டடம் இல்லாத ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. துவக்கப் பள்ளிக் கட்டடத்திற்கு அரசு 4,000 ரூபாய் மானியம் அளித்து வந்ததை இன்றைய தினம் அதை ரூ. 8,000 ஆக உயர்த்தி உள்ளது. அதேபோல் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 7,000 மானியம் அளித்து வந்ததை அரசு இப்போது ரூ. 13,000 ஆக உயர்த்தியிருக்கிறது.

பரிசுச் சீட்டு மூலம் சென்ற ஆண்டு 35 லட்சம் ரூபாய் ஒதுக்கி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு துவக்கப் பள்ளி கட்டடமாவது கட்டவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் பணம் ஒதுக்கி அவைகளைக் கட்டி வருகிறார்கள். ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் சமூகக் கல்விக்காக 15 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்தச் சமூகக் கல்வி நிலையங்கள் சரியாகச் செயல்படுவதில்லை. பத்திரிகைகளை வரவழைத்து ஒன்றிரண்டு பேர்கள்தான் அவற்றைப் படிக்கக்கூடிய நிலையில்தான் அந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது. ஆகவே இப்படிப் பணம் வீணாகச் சிதறடிக்கப்படுவதை விட அந்தப் பணத்தைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுவதில் செலவு செய்யலாம். ஆகவே அந்த வகையில் அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கூடங்களில் இவ்வளவு மாணவர்கள் இருந்தால் ஒரு ஆசிரியர் என்று மாணவர்களின் வருகைக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் நியமிக்கப்படுகிறார்கள். குறைவான அளவிற்கு பிள்ளைகள் வருகை தந்தாலும் ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். பள்ளி ஆய்வாளர்கள் சரியானபடி கண்காணிக்காததால் தொடர்ந்து பிள்ளைகள் குறைவாக இருந்தாலும் ஆசிரியர்கள் அதிகமாக இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைப் பள்ளிக் கண்காணிப்பாளர்கள் கவனிக்க வேண்டும்.

அடுத்து, மையச் சமையற்கூடங்கள் துவக்கப்படுவதில் அதிக இடங்களில் அவைகளைத் துவக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து, விவசாயிகளுக்கு



1972 மார்ச் 11] [திரு. ந. நாச்சியப்பன்]

சாதாரணமாக நடந்து செல்வதற்கும் இரட்டை மாட்டு வண்டிகளை ஓட்டிச் செல்வதற்கும் பாதை வசதிகள் இல்லா திருந்த நிலைமையை மாற்றியமைத்து—இருபது ஆண்டுகளாக அவர்களது ஆட்சிக் காலத்தில் பாதை வசதிகள் சரியான முறையில் இல்லாமலிருந்தது—இப்போது ஓரளவிற்கு கிராம மக்கள் வெளியில் வருவதற்கு வேண்டிய பாதை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இப்போது கிராம மக்களுக்கு உதவக் கூடிய வகையில் பாதை வசதிகள் செய்து தரப்பட்டு வருகின்றன. 1,500 மக்களுக்கு மேல் வாழ்கிற கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகளை விரைவில் ஏற்படுத்த வேண்டுமென்ற திட்டத்தை நமது முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

நான் அது குறித்து ஒன்று கூற விரும்புகிறேன். ஒவ்வொரு கிராமத்திலும் எந்தளவிற்கு பாதை வசதிகள் செய்யப்படவேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் தமிழகம் முழுவதும் ஆய்வு செய்து அப்படி ஆய்வு செய்ததற்குப் பிறகு குறைந்தது இரண்டு மைல்களுக்கு மேலாக இருக்கிற சாலைகளை அரசாங்கத்தின் மூலம் செய்யவேண்டும். அதற்குக்குறைவாக உள்ள சாலைகளை ஒன்றியங்கள் மூலம் செய்வதற்கு வழிவகை செய்தால் திட்டமிட்டுச் செயலாற்ற வசதியாக இருக்கும். அதைவிடுத்து ஒன்றியங்களுக்கு மானியமாக வழங்குவதால், அந்த மானியம் பாதி ஆண்டு முடிந்த பிறகுதான் கிடைக்கிறது. பிறகு அவசரம் அவசரமாக மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு விவசாயிகளுக்கு விவசாய வேலைகள் இருக்கிற காலத்தில்தான் அங்கு வேலையைத் துவக்குகிற காலம் வருகிறது. ஜனவரியில் வேலைகளைத் துவக்கி மார்ச்சுக்குள்ளாக முடிக்கவேண்டுமென்ற அளவில் அவசரம் அவசரமாக வேலைகளைச் செய்கிறார்கள். ஆகவே குறிப்பிட்ட காரியங்கள் நடைபெறுவதில்லை. ஆனால் அரசாங்கத்தின் மூலம் அந்தக் காரியங்களை எடுத்துச் செய்தால் முன்னதாகவே மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒன்றிரண்டு ஆண்டுகள் தொடர்பாக அப்பணிகளை மேற்கொள்கிற வகையிலும், திட்டமிட்டு வேலைகளைச் செய்வதற்கு வசதியாக இருக்கும். ஆகவே அரசு அதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணமாக இன்றையதினம் மாவட்டத்திற்கு ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது என்பதன் அடிப்படையில் எங்கள் ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், கள்ளக்குறிச்சி வட்டத்தைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு யூனியனிலும் இந்த

வேலைகளை ஆரம்பித்தார்கள். ஜனவரியில் வேலைகளை ஆரம்பித்து அல்லது பிப்ரவரியில் ஆரம்பித்து இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்காக இந்த ஆயிரம் பேர்களுக்கு ஒரு ஆண்டுத் தொகையையும் செலவிடவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிறார்கள். இந்த ரெண்டு மாதமும், விளைச்சலுக்கே ஆட்கள் கிடைக்காத காலத்தில் இந்தப் பணத்தை எப்படிச் செலவழிப்பது என்ற திண்டாட்டம் ஏற்படுகிறது. ஆகவே வருட ஆரம்பத்திலேயே திட்டமிட்டு செயல்படவேண்டும். அதோடு இந்த மார்ச் மாதத்தில் கணக்கு முடியக்கூடியதை மாற்றி ஜூன் மாதத்தில் வருடம் முடிவதாக வைத்துக் கொண்டால் நல்லது. இல்லை என்றால் டிசம்பர் மாதத்திலேயே வருடம் முடியக் கூடிய அளவிற்கு வைத்துக்கொண்டால் நல்லது.

கிராமங்களில் மக்களுக்கு குடிநீர் வசதி அளிக்கக்கூடிய வகையிலே 4,420-க்கு மேற்பட்ட மேல் நிலை குடிநீர் தொட்டிகள் இருக்கின்றன என்றும், 61,000-க்கு மேற்பட்ட குடிநீர் கிணறுகள் உள்ளன என்றும் புள்ளிவிவரங்கள் தருகிறார்கள். கிராம மக்கள் அத்தனை பேர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் குடிநீர் வாரியத்தின் மூலம் எல்லாக் கிராமங்களுக்கும் விரைவாக மேல்நிலை குடிநீர் தொட்டிகள் கட்டிக் கொடுத்து பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கு ஆவன செய்யவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு பாசன வசதி மிக மிக அவசியமானது. இன்றைய தினம் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் இருக்கின்றன. அதில் 24,000 சிறு நீர்ப்பாசன வாயில்கள் ஒன்றியத்தின் மூலம் செயல்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். அதற்கு அரசு சார்பில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 67.62 லட்சமாகும். ஏறத்தாழ ஒரு சிறுபாசனவாயிலுக்கு ரூ. 250 தான் மானியம் வழங்குகிறார்கள். இந்தத் தொகை போதுமானதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். விவசாயிகள் தங்கள் வயல்களில் நல்ல மகசூலைக் காணவேண்டுமென்றால், உற்பத்தியை நன்கு பெருக்கவேண்டுமென்றால் பாசன வசதியை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும். ஏழை விவசாயிகளுக்கு உதவி அளிக்கிற வகையில் பாசன வசதிக்காக அதிகப்படியான தொகை ஒதுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.





நீர்ப்பாசன ஏரிகளின் பராமரிப்பில் போதிய கவனம் செலுத்தாமல், சாதாரணமாக ரூ. 1,500, ரூ. 2,000, ரூ. 3,000 என்ற அளவிற்கு மதிப்பீடுகள் தயாரித்து பணம் செலவு செய்து வருகிறார்கள். பக்கத்தில் கருங்கல்லில் கட்டுகிற நிலை இல்லை. நல்லமுறையில் ரிப்பேர்கள் நடைபெறுவதில்லை. மண் வேலைகள் தான் நடைபெற்றுவருகிறது. நல்ல பலன் கிடைக்கத்தக்க வகையில் காரியங்கள் செய்யப்படவில்லை. ஆகவே. 100 ஏக்கர்களுக்கு மேற்பட்டுள்ள பாசன ஏரிகளை பொதுப் பணித்துறையே மேற்கொள்ளவேண்டும். படிப்படியாக ஒன்றியங்களிலுள்ள மருத்துவமனைகளை அரசு ஏற்றுக்கொள்வது என்ற வகையில் திட்டமிட்டு செயலாற்றிக்கொண்டு இருக்கும் நேரத்தில் ஐயாயிரம் அல்லது பத்தாயிரம் மக்கள் மத்தியில் ஒரு சித்த மருத்துவ மனையாவது ஏற்படுத்தவேண்டும். அடுத்து விவசாயிகளுக்குத் தேவையான நல்ல காரியங்களைச் செய்வதற்கேற்ற வகையில் விவசாயக் கிடங்குகளில் மருந்துகளை விற்கக்கூடியவர் பட்டப் படிப்பு படித்தவராக இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களைத் தான் அதற்காக நியமிக்க வேண்டும்.

விவசாய வளர்ச்சி அலுவலர்கள் அந்தப்பகுதியில் இருக்கும் நிலங்களைப் பார்வையிடவேண்டும். மாவட்ட அளவிலே கரும்பு, மணிலா ஆகியவைகளுக்கு ஒரு தனி வளர்ச்சி அலுவலகம் இருக்கிறது. அதற்குக்கீழே விவசாய மேஸ்திரி போன்றவர்கள், மற்ற அதிகாரிகள் இருக்கிறார்கள். இதையெல்லாம் மாற்றி ஒவ்வொரு ஒன்றியத்திலும் விவசாய வளர்ச்சி அலுவலர் 2 பேர் நியமித்து அதற்குக்கீழே கிராம வளர்ச்சி, ஊர் வளர்ச்சி அதிகாரிகள், விவசாய மேஸ்திரிகள் அதிகமாக போட்டு, அவற்றை செய்தால், விவசாய வளர்ச்சி நல்ல முறையில் இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

நகரங்களில் எப்படி குடிசைகளை மாற்றித்தருகிற வகையில் குடிசை மாற்று வாரியம் செயல்படுகிறதோ, அதே போன்று கிராமப்புறங்களில் இருக்கும் ஏழை மக்களுக்கும் அந்த திட்டத்தின் கீழ் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிராமத்திலுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தரமுடியாவிட்டாலும், கடனாகவாவது உதவி கொடுத்து,

கூட்டுறவுத்துறை மூலமாவது, அரசுத்துறை மூலமாவது வீடுகள் கட்டிக்கொள்ள வசதி செய்து தரவேண்டுமென்று விரும்பி வேண்டி கேட்டுக்கொள்கிறேன். வணக்கம்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர்களே, சுதந்திராக் கட்சியின் சார்பாக நான் கொடுத்திருக்கக்கூடிய வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இன்று பரவலாக இந்த மாநிலத்திலே ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் மத்திய அரசாங்கம் அனாவசியமாக தலையீடுகளை, அதிலும் கூட குறிப்பாக, மாநிலத்திற்குரிய விஷயங்களிலே தலையிடுவது தவறான போக்கு என்று மிக வலிமையாக வாதிடக்கூடிய நேரத்தில், மிக வேதனையோடு சில முக்கியமான விஷயங்களை இந்த சட்டமன்றத்திலே நான் குறிப்பிடலாம் என்று கருதுகிறேன்.

உதாரணத்திற்கு சில குறிப்பிட்ட நகராட்சிகளிலே, முனிசிபாலிடிகளிலே அரசியல் தலையீடு கோட்டையிலே இருக்கக்கூடிய அமைச்சரவையிலிருந்து வருகிறது என்று ஆணித்தரமாக எடுத்துச் சொல்வதற்கு சில எடுத்துக்காட்டுகளை இந்த அவைக்கு அளிக்கலாம் என்று இருக்கிறேன்.

திண்டுக்கல் முனிசிபாலிடியில் சில மாதங்களுக்கு முன்பாக அங்கே திரு. பொன் சீனிவாசன்—இப்போது கூட அவர்கள் தான்—சேர்மனாக இருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்பு, அதிலும் குறிப்பாக ஜூலை மாதம் 12-ம் தேதி அவர் மீது ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொடுக்கப்பட்டது. அங்கே இருக்கக்கூடிய, ஆளும் கட்சியாக இருக்கக்கூடிய, கழக உறுப்பினர்களாலேயே அது தரப்பட்டது. அந்த முக்கியமான விஷயத்தை ஆகஸ்ட் 12-ம் தேதி கொண்டுவர அனுமதிக்கப்பட்டது. அது ஆகஸ்ட் 12-ம் தேதி எடுத்துக்கொள்வது என்று ஒப்புக்கொள்ளப்பட்டு ஆர்.டி.ஓ. அவர்கள் அந்தக் கூட்டத்திற்கு பொறுப்பு ஏற்றுக் கொண்டு நடத்துவதாக இருந்தது. அந்த வகையில் எழுத்து மூலமாகக் கூட ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். ஆனால் 12-ம் தேதி ஆகஸ்ட் மாதம் உறுப்பினர்கள் அந்தக் கூட்டத்திற்கு வந்தார்கள். அப்படி வருகிற நேரத்தில் ஆர்.டி.ஓ. அவர்கள் வரவில்லை. திடீரென்று யாரோ ஒரு உறவினருக்கு உடல் நலம் சரியில்லாத காரணத்தால் வரமுடிய





வில்லை என்று சொல்லி ஒரு மொட்டைக் கடுதாசியில்—மொட்டைக் கடுதாசி என்று கூறவில்லை—அப்படி சொல்லக்கூடிய அளவுக்கு யாரோ ஒருவர் கையில் கொடுத்தனுப்பினார்? உண்மையாக அது இருக்குமா? இந்த அவையில் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் அமைச்சர் அவர்கள் விசாரிக்கவேண்டும். உறவினர் என்றால் யார், ஆர்.டி.ஓ. உறவினருக்கு உடல் நலம் குறைவாக இருந்தது என்று சொல்ல முடியுமா? அதற்கு மெடிகல் சர்டிபிகேட் ப்ரொடியூஸ் செய்ய முடியுமா? என்னுடைய குற்றச்சாட்டு எல்லாம் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை அனுமதித்து விட்டால் அங்கே இருக்கும் கழக ஆட்சியிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே உள்ள அந்தச் சேர்மன் விலக்கப்படுவார்கள். ஆகவே, கழகத்திற்கு அங்கே ஒரு குந்தகம் ஏற்படக் கூடும் என்ற அச்சத்தின் காரணமாக, எப்படி மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்தில் தலையிடக்கூடாது என்று சொல்லிக்கொண்டிருக்கிற நேரத்தில்? இதை ஏன் அரசியல் காரணமாக அந்த ஆர்.டி.ஓ. வரவில்லை என்ற குற்றச்சாட்டை அந்[illegible] சுமத்த நான் தயாராக இருக்கிறேன்.

அந்த நேரத்திலே 23 கவுன்சிலர்கள் வந்தார்கள். வந்த[illegible] கையெழுத்துப்போடுவதற்கு அங்கே மினிட்ஸ் புக் இல்லை. எ[illegible] மினிட்ஸ் புக் என்றால், பூட்டி வை[illegible]ருக்கிறார்கள். அது[illegible] தரப்படவில்லை. அந்த அளவுக்கு நக[illegible]மன்றத்தின் அடிப்[illegible] உரிமைகள் பாதிக்கப்பட்டிருக்கிற[illegible] என்று சொல்கி[illegible]. 23 கவுன்சிலர்கள் வந்தார்கள். ஒரு தீர்[illegible]தைப் போட்டார்கள். ஆனால் எங்கே போடமுடிந்தது. சாதார[illegible] போட முடிந்ததே தவிர மினிட்ஸ் புக்கில் போட[illegible]. அது எந்தக் காரணத்திற்காக நடந்தது. அதிலே யார் தலையிட்டார்கள். திண்டுக்கல்லிலிருந்து ராத்திரி டெலிபோன் மூலம் அங்கே இருக்கும் நகராட்சி உறுப்பினர்களுக்கும், மற்றவர்களுக்கும் அங்கே பயங்கரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது, அங்கே சரியான வகையில் லா அண்டு ஆர்டர் இல்லாமல் இருக்கிறது, நீங்கள் ஐ.ஜி.-யை அணுகி சொல்லவேண்டும், அந்த அதிகாரியைப் பார்த்துச் சொல்லவேண்டும். முதலமைச்சரைப் பார்த்துச் சொல்லவேண்டுமென்று சொன்னார்கள். மதுரையிலிருந்து பல முக்கியஸ்தர்கள் இங்கே வந்து இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடத்தியிருக்கிறார்கள் என்ற செய்தி எனக்கு கூறிய நேரத்தில் மிக வேதனையாக இருந்தது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஆர்.டி.ஓ. அவர்கள் மீது ஒரு 'மோடிவேஷன்' கற்பித்திருக்கிறார்கள். அது கூடாது. சட்டத்திலே இருக்கிறது. ஆர்.டி.ஓ.-வுக்கு உடல் நலம் சரியில்லை என்று சொன்னார்கள். ஒரு முறை ஒத்தி வைக்கலாம் என்று விதியிருக்கிறது. உடல் நலம் சரியில்லாத காரணத்தால் ஒரு அதிகாரி வர முடியவில்லை என்று சொன்னால் டாக்டர் சர்டிபிகேட் கொண்டுவா, மெடிகல் சர்டிபிகேட் கொடுத்தாயா என்று கேட்பதா? அப்புறம் அந்த டாக்டர் முன்போ, இந்த டாக்டர் முன் போ, இப்படி எல்லாம் பேசுவது ஒரு கெஜட் அதிகாரியை, தமிழ்நாட்டிலே இருக்கும் ஒரு அதிகாரியைப் பற்றி, பேசுவது, ரொம்பவும் தவறான எண்ணத்தை மக்கள் மனதில் புகுத்திவிடும். இந்த மாதிரி பேசக்கூடாது. அவர்கள் மீது ஒரு மோடிவேஷன் கற்பிப்பது முறையல்ல. உடல் நலம் சரியில்லை என்று எந்த ஒரு அதிகாரியும் வராமல் இருப்பதற்கு அதிகாரம் இருக்கிறது, சட்டம் இருக்கிறது. வராமல் இருக்கலாம். இந்த மாமன்றத்தில் நிறைவேற்றிய சட்டத்தை வைத்துக்கொண்டு தான் ஒரு முறை வராமல் இருந்தார்கள். அதிலே ஒன்றும் தவறு இல்லை. மோடிவேஷன் கற்பிக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மற்றொன்று. அந்தக் கூட்டத்தைக் கூட்டியவர் ஆர்.டி.ஓ. அவர் வந்துதான் கூட்டத்தை நடத்தவேண்டும். அவர் அந்தக் கூட்டத்திற்கு வரவில்லை. கூட்டம் நடக்கவில்லை. உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வந்தார்கள். கையெழுத்துப்போட மினிட்ஸ் புக் கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். கூட்டம் கூடாதபோது மினிட்ஸ் புக் கொடுக்கவேண்டியதில்லை. கூட்டம் நடந்திருக்குமானால் மினிட்ஸ் புக் கொடுக்கப்பட்டு, கையெழுத்து வாங்கப்பட்டிருக்கும். கூட்டம் நடத்தப்படாதபோது மினிட்ஸ் புக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அதைத் தான் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

MR. CHAIRMAN: (THIRU S. KANDAPPAN): You better pass on to the next point. Do not harp upon the R.D.O's business. **I am not permitting it. The officer is not here to defend himself.**





DR. H. V. HANDE: The Hon. Minister says something. I have to explain the matter.

இது என்ன பயங்கரமாக இருக்கிறதே?

I do not want to cast any aspersion. No Speaker has asked me to jump to another topic before I have not even replied to the points raised by the Hon. Ministers.

அவர்கள் ஒன்று சொன்னார்கள். என்ன சொன்னார்கள். ஆர்.டி.ஓ.-வுக்கு உடல்நலம் சரியில்லை என்று சொன்னார்கள். ஆர்.டி.ஓ. ரிலேஷனுக்கு உடம்பு சரியில்லை என்று நான் நான் சொன்னேன்.

He complained that one of his relations was sick and therefore, it is a very serious matter. How can I asked to go to the next topic?

MR. CHAIRMAN (THIRU S. KANDAPPAN): I would request the hon. Member not to incriminate the Officer here.

DR. H. V. HANDE: I am specifically saying that his relation was sick. But the Hon. Minister said that I said that the R.D.O. himself was sick. R.D.O. was not sick, I definitely say that R.D.O. was not sick. I am not casting any asperation about the health of the R.D.O. I am making a charge that on a frivolous excuse he has not come there. That is my point. Therefore, I demand on the floor of the House an enquiry in the matter. I have got a right to say that the matter must be enquired into. No one can prevent me from saying that. There is nothing unparliamentary in that. It was the relation of the R.D.O. that was sick. That must be told to the House. Has the Government convinced itself that his particular relation was sick. These are the points. I did not say that the R.D.O. was sick at all.

(Mr. Deputy Speaker in the Chair.)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** ஒரு ஆர்.டி.ஓ. அவர்கள் ஒரு உறவினருக்கு உடல்நிலை சரியில்லை என்று சொல்லி, விடுமுறை கேட்கிறார் என்றால் எதற்காக கேட்கிறார், எப்படிக் கேட்கிறார் என்று ஒவ்வொரு அதிகாரியும் லீவு கேட்கிற போதெல்லாம் காரணங்களைத் தேடிக்கொண்டு போக முடியாது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : நான் அதைத் தான் சொன்னேன். திண்டுக்கல் உறுப்பினர்கள் கூட இருந்தார்கள். நான் இங்கு வந்ததே அதைச் சொல்வதற்குத் தான்.

My point is, I am making a specific charge and it is a very routine thing. I am only complaining and voicing a grievance in this House. The Hon. Minister can get the file and find out the reason. That is one thing.

அடுத்தபடியாக இன்னொரு விஷயத்திற்கு வருகிறேன். வாலாஜாபேட்டையில் உள்ள முனிசிபாலிடியில் இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. அந்த முனிசிபாலிடியின் சேர்மன் கண்ணன் என்பவர் தி.மு. கழகத்தைச் சேர்ந்தவர். வைஸ்-சேர்மன் டி. பி. பாலசுந்தரம் என்பவர்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** : அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : அவரும் திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்தவர்தான். சேர்மன், வைஸ் சேர்மன் இரண்டு பேருமே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தான். அங்கே இரண்டு கோஷ்டிகள் இருக்கின்றன. மொத்தமாக அதிலே 16 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒரு குற்றச்சாட்டு சொல்ல வாய்ப்பில்லை என்று சொன்னால் எப்படி இருக்கும்.

**ஓர் உறுப்பினர்** : மேலே சொல்லுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : என்ன சொன்னீங்க ? என்ன சொன்னீங்க ?

**திரு. இராம அரங்கண்ணல்** : தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற விதிகளின்படி உறுப்பினர்களைப் பார்த்து பேசக் கூடாது என்றிருக்கிறது. இந்தத் தரப்பில் சொன்னாலும் சரி, அந்தத் தரப்பில் சொன்னாலும் சரி தயவுசெய்து எழுந்து நின்று பேசுமாறு பணிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : உறுப்பினர்கள் தயவுசெய்து அமர்ந்து பேசக்கூடாது. எழுந்து நின்று பேசுவது நல்லது.

**டாக்டர் எச். வி. ஹாண்டே** : சொல்லியது காதில் கேட்கவில்லை. அதனால் தான் கேட்டேன். ஆகவே, அங்கே காங்கிரஸ்





உறுப்பினர்கள் 4 பேர் ; திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் 8 பேர் ; இன்டிபெண்டன்ட்ஸ் 4. அதிலே இரண்டு குரூப், ஒன்று வைஸ் சேர்மன் குரூப்பாகவும், மற்றொன்று சேர்மன் குரூப்பாகவும் இருக்கிறது. அதிலே காங்கிரஸ் உறுப்பினர்கள் ஜனவரி 6-ம் தேதி ஒரு நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்கள். அந்தத் தேதியை ஆர்.டி.ஓ. அவர்கள் குறித்திருந்தார்கள்.

On 6th January the R.D.O. sent his Tahsildar.

ஆனால் அதற்குப் பிறகு அவர்கள் அவருடைய தாசில்தாரை வாலாஜாபேட்டைக்கு கூட்டத்தை ஒத்திவைக்குமாறு அனுப்பியிருந்தார். அதிலே குறிப்பிடவேண்டியது திண்டுக்கல், வாலாஜாபேட்டை இப்படி ஒவ்வொரு இடத்திலும் கூட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

That is why I want both to be investigated.

அப்படி இங்கே அவர்கள் கூட்டத்தை ஒத்திவைத்தார்கள். அதற்குப் பிறகு காங்கிரஸ் மெம்பர்கள் 4 பேரும், டிஸிடென்ட் திராவிட முன்னேற்றக் கழக மெம்பர்கள் ஆகியோரும் சேர்ந்து ஒரு 'நோ கான்பிடென்ஸ் மோஷன்' வைத்தார்கள். அதை ஆர்.டி.ஓ.-வுக்கும், கலெக்டருக்கும் அனுப்பிவைத்தார்கள். அதற்குப் பிறகு சேர்மன் கண்ணன் அவர்களின் தூண்டதலின் பேரில் 'சந்திரா' என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நகர சபை உறுப்பினரை சில பேர்கள் சேர்ந்து கொண்டு காரில் எடுத்துக் கொண்டு போயிருக்கிறார்கள். போலீஸ்காரர்களும் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள். இது சம்பந்தமாக அந்த பெண் மெம்பரின் கணவரான ராஜமாணிக்கம் என்பவர் ஒரு 'கம்ப்ளெய்ன்ட்' கொடுத்திருக்கிறார். இதில் எனக்கு தெரிய வேண்டிய விஷயம் இது தான். அவர் கொடுத்த கம்ப்ளெய்ன்ட்டின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்ன விஷயத்திற்காக அந்தப் பெண் மெம்பர் வேறு இடத்திற்கு அவரின் இஷ்டத்திற்கு விரோதமாக கடத்திச் செல்லப்பட்டார்கள் ? எதற்காக இப்படி, கோட்டையில் இருக்கிற அதிகாரிகளோ, அல்லது வேறு யாரோ தெரியாது—எந்த விஷயமாகவும் இப்படி அரசியல் கண்ணோட்டத்தோடு விஷயங்கள் நடைபெறுகின்றன.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அப்படி அந்தப் பெண் உறுப்பினர் கடத்தப்பட்டதாக தகவல் வந்த பிறகு அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததா? இல்லையா? காவல் துறையினர் குற்றம் சாட்டப்பட்டவர்களை பிடித்தார்களா? இல்லையா? இப்போது இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சம்பந்தப் பட்டவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் சொல்லுவதை வரவேற்கிறேன். பாராட்டுகிறேன். ஏனென்று சொன்னால் அவர் இல்லாத நேரத்தில் நான் ஆரம்பித்த விஷயம். இப்படி ஒவ்வொரு முனிசிபாலிடியிலும் அரசியல் நோக்கத்தோடு நடவடிக்கை எடுக்க ஆரம்பித்தால் எந்த வேலையும் சரியாக நடக்காது. இப்படி ஒவ்வொரு கட்சிக்கும் இடையில் இப்படிப்பட்டதொரு போராட்டம் நடக்குமே தவிர வேறு ஒரு வேலையும் நடக்காது.

அடுத்தபடியாக திருவள்ளூர் முனிசிபாலிடியில் நடந்த சம்பவத்தை ஆதாரத்தோடு சொல்கிறேன்.

Extract from the proceedings of the Tiruvallur Municipal Council, counter-signed and attested by the Commissioner of the Tiruvallur Muncipality.

இதை நான் வாங்கிக் கொண்டு ஆதாரமாக வைத்துக்கொண்டு, நான் இதைப் படிக்கவில்லை, ஏனென்றால் நான் உங்களிடம் அதற்கு அனுமதி வாங்கவில்லை. ஆகையால் குறிப்புகளை மட்டும் சொல்கிறேன். அங்கே 6 திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும், மற்ற இரண்டு உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு 'நோ கான்பிடென்ஸ் மோஷன்' கொண்டு வந்தார்கள். பிப்ரவரி மாதம் 28-ம் தேதி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொண்டு வந்து விவாதம் நடத்தினார்கள். அதிலே முனிசிபல் சேர்மன் மேல் பல குற்றச்சாட்டுகள் சொல்லப்பட்டன. அதன் எக்ஸ்ட்ராக்ட் இருக்கிறது.

It is a certified copy.

அதை அமைச்சர் அவர்களிடம் கொடுக்கிறேன். அதன் மேல் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நான் இந்த மாதம் 8-ம் தேதி திருவள்ளூருக்குப் போனபோது இப்படிப்பட்ட



நிலைமைகள் அந்த முனிசிபாலிடியில் இருக்கிறதென்று என்னிடம் புகார் சொன்னார்கள். நான் அதற்கு ஆதாரம் வேண்டுமென்று கேட்டேன். கொடுத்தார்கள். நான் அதை இங்கே கொண்டு வந்திருக்கிறேன். அதை தயவுசெய்து கவனிக்கவேண்டும். இந்த மூன்று விஷயங்களை தயவுசெய்து கவனிக்கவேண்டும். நான் முதலமைச்சரிடம் சொல்லிக்கொள்கிறேன். கூடிய விரைவில் இதன் மேல் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திருவள்ளூர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவரான நகர சபைத் தலைவர் மீது குற்றச் சாட்டுகள் கூறப்பட்டதாக சொல்கிறீர்கள். அந்தக் குற்றச்சாட்டுகளை கொண்டுவந்தவர்கள் எந்தக் கட்சியை சேர்ந்தவர்களென்று கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் தான்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** அதிலிருந்து தி.மு. கழகத் தலைவராக இருந்தாலும் தவறு செய்தால் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் குற்றம் சாட்டுவார்கள் என்று சொல்கிறீர்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** அது தான் நான் சொல்கிறேன். திண்டுக்கல்லிலும் இப்படித் தான் நடந்தது. அதை முதலமைச்சர் அவர்கள் இல்லாத நேரத்தில் சொன்னேன். அரசியல் நோக்கத்தோடு இப்படி காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ஆகவே, மீண்டும் இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக முதலமைச்சர் அவர்கள் வாக்குறுதி தந்திருக்கிறார். அதில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நம்புகிறேன். இப்போது சென்னைக்கு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நீங்களே பார்த்தீர்கள், எவ்வளவு இண்டர்ஃபியரன்ஸுகள். சென்னையில் ரொம்ப முக்கியமான ஒரு விஷயம். அரசியல் ரீதியில் இப்படி அரசாங்கம் தலையிடுகிறது. இன்றைக்கு சென்னை கார்ப்பரேஷனில் ஹெல்த் டிபார்ட்மெண்டில், இன்னும் பல இலாக்காக்களில் பல கோளாறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது எல்லோருக்கும், இங்கே உள்ளவர்களுக்கும் தெரியும். அதிலும் குறிப்பாக ட்ரைனேஜ் ஸிஸ்டம்

கூவத்தை தடைப்படுத்தியதால் இவ்வளவு 'மோசமாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அது என்ன காரணமோ எனக்குத் தெரியாது.

ஆனால் கொசுக்கள், இந்த மஸ்க்யூடோ நிறைய இப்போது இருக்கிறது. இங்கே முன்னால் சுகாதார அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். அவர்களின் கருத்து என்ன என்று தெரியாது. அதை உடனடியாக தவிர்ப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அதிலும் குறிப்பாக இந்த சென்னை தான் மாநிலத்தில் ஒரு பெரிய நகரமாகும். அதோடு இது ஒரு 'டூரிஸ்ட் சிடி ஆல்ஸோ'. ஆகவே, இதற்கு ஒரு ஹை பவர் கமிஷனோ எக்ஸ்பர்ட் கமிட்டியோ போட்டு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே ஹைஜீனிக் ஸிஸ்டம் முக்கியமாக கவனிக்கப் படவேண்டும். தென் சென்னையிலுள்ள மாம்பலத்தில் பிரகாச முதலி தெருவில் ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். ஒரு பெரிய டாங்க் போட்டு அந்தப் பகுதிக்கு தண்ணீர் கொடுக்கவேண்டுமென்ற திட்டம். நல்ல திட்டம் தான். ஆனால் அந்த இடத்தில் ஒரு பயங்கரமான சுகாதாரத்திற்கு விரோதமான காரியம் நடந்து கொண்டிருக்கிறது. அங்கே உள்ளவர்கள் 'சாணி வரட்டி' தட்டுவதற்கு அதைப் பயன்படுத்துகிறார்கள். ஹைஜீனிக் புக்கில் எதை எதை செய்யக் கூடாதென்று சொல்கிறார்களோ அதையெல்லாம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதை முதலில் கவனிக்கவேண்டும். இந்த வேலைக்கு தாமதம் ஆகிறதென்பதை கவனிக்கவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். இந்தத் திட்டம் 6 ஆண்டுகள் அல்லது 10 ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்ட திட்டம்.

**திரு. வை. பாலசுந்தரம்:** பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். பத்து, 15 ஆண்டு காலமாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்று கூறுகிறார்கள். அது தவறு. 1966-லே தொடங்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** நான் ஆறாண்டு காலத்திற்கு மேலாக நிறைவேற்றப்படாமல் இருக்கிறது என்று சொன்னேன். கனம் அங்கத்தினருடைய கணக்குப்படி பார்த்தாலும் ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன.



**திரு. வை. பாலசுந்தரம்:** அது ஒரு பெரியத் திட்டம். ஏறத்தாழ 78 லட்சம் ரூபாய் செலவிலே உருவாகின்ற திட்டம் என்பதால், அதில் காலதாமதம் ஆவது இயற்கையானது; பொருத்தமானது ஆகும்.

**டாக்டர் எச். வி. ஹாண்டே:** இந்தத் தாமதத்திற்கு பலமாதிரியான காரணங்கள் சொல்லப்படுகின்றன. முக்கியமாக பைப் போடுவதிலே—பெரிய பைப்புகள்—மாநில அரசாங்கத்திற்கும் கார்ப்பரேஷனுக்கும் கருத்து வேறுபாடு இருப்பதால் தாமதம் ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. யார் காரணமாக இருந்தாலும் இந்த வேலையை விரைவில் முடித்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இன்னும் ஒரே ஒரு விஷயத்தைமட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன்:

டிமாண்ட் அண்டர் கம்யூனிட்டி டெவலப்மென்ட் குறிப்பில் 18, 19-வது பக்கங்களில் சில வளர்ச்சிப் பணிகளுக்கு ஒதுக்கப் பட்டிருக்கும் தொகைகளைப்பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். 1971-72-ல் 'சீஃப் எஞ்சினியர் (ஹைவேஸ் அண்டு ரூரல் ஒர்க்ஸ்)' என்ற வேலைக்கு 82.42 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கு 67.62 லட்சம் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1971-72-ம் ஆண்டை விட சுமார் 5 லட்சம் ரூபாய் குறைந்திருக்கிறது.

அடுத்து, 'டைரக்டர் ஆஃப் விமென்ஸ் வெல்பேர்' என்ற தலைப்பில் 1971-72-ல் 20 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கு 17.90 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அடுத்து, 'டைரக்டர் ஆஃப் பிஷரிஸ்' என்ற தலைப்பின்கீழ் 1971-72-ம் ஆண்டுக்கு 0.93 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டுக்கு 0.66 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் கணிசமான அளவுக்கு அதாவது, 0.27 லட்சம் குறைக்கப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக, 'லோன்ஸ் ஃபார் வாட்டர் சப்ளை அண்டு டிரெயினேஜ் ஸ்கீம்' என்ற தலைப்பின் கீழ் 1971-72-ல் 67.69 லட்சம் ஒதுக்கப்பட்டிருந்த. இந்த ஆண்டுக்கு 62.94 லட்சம்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் சுமார் 5 லட்சம் ரூபாய் குறைக்கப் பட்டிருக்கிறது.

இது ஒரு 'டெவலப்பிங் ஸ்டேட்' என்று சொல்லப்படுகிறது. வளர்ச்சிப் பணிகள் அதிகரிக்க வேண்டியதற்குப் பதிலாக குறைந்துகொண்டே போகிறது. இந்த முக்கியமான வேலைத் திட்டங்களுக்கான தொகை அதிகமான அளவுக்கு குறைக்கப் பட்டிருக்கிறது. அதன் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

இப்பொழுது பஞ்சாயத்துத் தலைவர்கள் எலெக்ஷனில் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதைப்போலவே, பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் நேரடியாகவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கருத்தடைத் திட்டத்தைப் பற்றி ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். இந்த கருத்தடைத் திட்டம் நல்லதுதான். அதிலே எனக்கு முழு நம்பிக்கை உண்டு. ஆனால் அதைக் கட்டாயப்படுத்தும் உத்தரவை பிறப்பிக்கக்கூடாது. கருத்தடைத் திட்டத்தை நல்லமுறையில் அமல்நடத்த வேண்டுமென்று சாதாரணமாகச் சொன்னாலும், கலெக்டர் மட்டத்திலே உள்ள அதிகாரிகள் அதை கட்டாய உத்தரவாக ஏற்றுச் செயல் படுகிறார்கள். அப்படிக் கட்டாயப்படுத்துவதால், சில அதிகாரிகள் மக்களிடத்திலே நடந்துகொள்ளும் முறை வெறுப்பூட்டக் கூடியதாக இருக்கிறது. அதிகாரிகளும் தவறாக நடந்து கொள்கிறார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. க. மு. இராசகோபால் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1972-73-ம் ஆண்டுக்கான சமுதாய, உள்ளாட்சித் துறை பற்றி, நிதிநிலை அறிக்கையின்மீது மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கொண்டுவந்திருக்கும் மானியக் கோரிக்கையினை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் இந்த மானியக் கோரிக்கையின் மீதாவது மக்களுக்கு என்னென்ன தேவைப்படும், அரசாங்கம் என்னென்ன செய்திருக்கிறது என்பதைச் சொல்வார்கள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் இதிலும் அவாது வழக்கமான பாணியையே காட்டியிருக்கின்றார்.



காரியங்களைச் செயலாற்றுகின்ற அதிகாரிகளின் விஷயத்தில் அரசு தலையிடுகிறது என்று சொன்னார்கள். ஆனால் இங்கே சொல்லி யிருக்கின்ற அவருடைய குற்றச்சாட்டுகளுக்கு எந்த அமைச்சரும் அல்லது எந்த எம்.எல்.ஏ-யும் அரசு அலுவலர்கள் விஷயத்தில் தலையிடவில்லை என்பதை அவருடைய பேச்சிலேயே தெளிவாகத் தெரிகிறது. ஆனால் 1965-லே நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தலிலே இதற்கு முந்தைய ஆட்சியாளர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

அப்போது நடைபெற்ற ஊராட்சி மன்றத் தேர்தலிலே அல்லது ஒன்றியத்தின் தேர்தலிலே கூட நான் தேர்ந்தெடுக்கப்படக்கூடாது என்ற அளவுக்குச் செயல்பட்டார்கள். நான் மிகவும் சாதாரணமான ஒரு குக்கிராமத்தில் இருப்பவன். ஊராட்சித் தேர்தலில் போட்டியிட இருந்தேன். ஆனால் அப்போதிருந்த முதலமைச்சரின் சட்டகர், டில்லியிலே அமைச்சராக இருந்தவர், அவருக்கு வேண்டிய ஒருவரை எனக்கு விரோதமாக அனுப்பி, ஒரு தமிழாசிரியரை நியமித்து, என்னுடைய நாமினேஷனை யாரும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தப்பட்டது.

என்னுடைய குக்கிராமம் வண்டியே போகமுடியாத பிற்பட்ட ஊராக இருந்தது. அங்கே தேர்தலை நடத்த தமிழாசிரியர் ஒரு காங்கிரஸ்காரர் என்பதற்காக அவரை நியமித்து, என்னுடைய நாமினேஷனைத் தள்ளுபடி செய்தார்கள். ஜனவரி 26-ந் தேதி என்னைக் கைதுசெய்து கொண்டுபோய் வேலூர் சிறையிலே அடைத்தார்கள். 27-ந் தேதி நாமினேஷன் ஃபைல் பண்ணக் கூடிய நாள். அதனால் எனக்கு உற்ற நண்பர்கள் அன்றைக்கே என்னை ஜாமீனில் விடுவிப்பதற்காக வந்தார்கள். ஆனால் என்னை அடுத்த மாதம் 1-ந் தேதிதான் விடுதலை செய்தார்கள். உடனே ஜாமீனில் விட மறுத்துவிட்டார்கள். இதையெல்லாம் நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால் இப்படிப்பட்ட சாதாரண சின்ன விஷயத்தில் கூட ஒரு முதலமைச்சர் தலையிட்டிருக்கிறார் என்பதற்காகத்தான். ஆனால், அந்தமாதிரியான சம்பவங்கள் இன்றைக்கு எங்காவது நடைபெற்றிருக்கிறதா என்றால் இல்லை.

அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்தினோம் என்பதற்காக ஊராட்சித் தேர்தலிலே கூட போட்டியிடாதபடி, செய்துவிட்டார்கள். நாங்கள் 5 பேர் சேர்ந்து, மறைந்த அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவைக் கொளுத்தினோம். நான் கைது

செய்யப்படுவதற்குக் காரணமாயிருந்த முதலமைச்சரும் இன்னும் இருக்கிறார். என்னைக் கைது செய்து சென்ற காவல்துறை அதிகாரியும் இருக்கிறார். இவன் மிக மோசமானவன், பெரிய குற்றவாளி என்று காரணம் காட்டி மூன்று ஆண்டு காலத்திற்கு கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கவேண்டுமென்று எங்கள் வழக்கை விசாரணை செய்ய நீதிபதியிடம் சொல்லியிருந்தார்கள். ஆனால் நியாயத்தின்பால் நின்ற அந்த நேர்மை உள்ளம் படைத்த நீதிபதியோ, என்னுடைய நாய்க்கு உடல் நலம் சரியில்லை; மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லவேண்டும் என்று சொல்லி, போய்விட்டார்கள். அந்த நீதிபதி அவர்களும் இருக்கிறார்கள். என்னென்ன நடந்தன என்பதை அவர்களையெல்லாம் கேட்டாலே தெரியும். இவற்றையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், ஒரு சாதாரண ஊராட்சி மெம்பர் தேர்தலில்கூட, முதலமைச்சர் எப்படி நடந்துகொண்டார், அவருக்கு வேண்டிய அதிகாரிகள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதை விளக்குவதற்காகத் தான். நேரம் இருந்தால் இப்படிப்பட்ட ஏராளமான ஒழுங்கீனங்களை எடுத்துக் காட்டிக்கொண்டே போகலாம்.

இன்றைக்கு ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் எப்படிச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன என்று பார்த்தால், எந்த ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றாலும், ஒரு சிறிய காரியத்தைக்கூட செய்யவேண்டுமென்றாலும் ரெவின்யு அதிகாரிகள் மூலமாகத்தான் செய்யவேண்டிய நிலையில்தான் இயங்கி வருகின்றன. கிராம வளர்ச்சிகளுக்காக ஏற்படுத்தப்பட்ட இந்த நிறுவனங்கள் எதற்கெடுத்தாலும் ரெவின்யூ அதிகாரிகளின் தயவை நாடி இருந்தால், தன் பணியை ஒருநாளும் சரியாகச் செய்யமுடியாது. ஆகவே, இப்போது இருக்கின்ற இந்த முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு பள்ளி ஆசிரியர் தவறு செய்தாலும், அவரை வேறு இடத்திற்கு மாற்றவேண்டுமென்றாலும் கூட, அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கோ, கமிஷனருக்கோ அதிகாரம் இல்லை. கலெக்டர் வரையும் போய் வந்தபின்னால்தான் தவறு செய்த ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஒரு பள்ளிக்கூட கட்டடம் கட்ட வேண்டுமானாலும் அந்த முறைதான். அப்படி போய் அனுமதி பெற்று வருவதற்குள் காலதாமதம் ஏற்படுவதோடு செலவும் அதிகரிக்கிறது.





பள்ளிக்கூடக் கட்டடங்கள் கட்டுவதற்கு 1958-ல் போட்ட விலை மதிப்பீட்டின்படி இப்போதும் தொகை ஒதுக்கப்படுகிறது. அப்போது கல்விலை—செங்கல் விலை—25 ரூபாய், 30 ரூபாயாக இருந்தது. இன்றைக்கு 55 ரூபாயாக இருக்கிறது. ஆகவே, பழைய ரேட்டுக்கு கான்ட்ராக்டரைக் கூப்பிட்டால் எந்த கான்ட்ராக்டரும் முன்வரமாட்டேன் என்கிறார்கள். அதனால் பல பள்ளிக்கூடங்கள் ஓலைக் கொட்டகைப் போட்டு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஊராட்சி மன்றத்திற்கு ஒரு பள்ளிக்கூட கட்டடம் கட்டவேண்டுமென்றால்கூட, அந்த ஊராட்சியால் செய்யமுடியவில்லை. காரணம் அது கல்வித்துறைக்கு எங்கேயோ போந்து சாங்ஷன் ஆகி மறுபடியும் அது திரும்ப வந்து சேர்வதற்குள் நெடுங்காலம் ஆகிறது. ஒரு மைல் தொலைவில் இருந்தாலும்கூட ஒவ்வொரு ஊரிலும் உள்ள பள்ளிக்கும் கட்டிடம் கட்டப்படவேண்டும். குறுக்கே ஆறுகள்—போக்குவரத்து வசதி இல்லாத இடங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கெல்லாம் உள்ள இணைநிலைப் பள்ளிக்கூடங்கள் ஒவ்வொன்றுக்கும் உள்ளாட்சித்துறை மூலமாகவே—பி.டி.ஓ. கட்டிடம் கட்டித்தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் பல திட்டங்களுக்கு எஸ்டிமேட் போட்டு இப்போதுள்ள முறைப்படி மேலே அனுப்பினால் அதுபற்றி ஐந்து மாதம், ஆறு மாதம் ஆனாலும்கூட எந்தவிதமான பதிலும் வரமாட்டேன் என்கிறது. ஆகவே ஊராட்சி ஒன்றிய என்ஜினியர்களுக்கே 25 ஆயிரம் ரூபாய் வரையில் ஆன திட்டத்தை எடுத்துச் செயல்படுத்த அதிகாரம் கொடுக்கப்படவேண்டும். அப்போதுதான் ஊராட்சி ஒன்றியங்கள் வேகமாக வளரும்.

அடுத்து, நிலவரியோடு போடப்படுகிற வரியை. அங்கங்கே உள்ள மணியக்காரர்கள் சரியான முறையில் வசூல்செய்து ஊராட்சிகளுக்குக் கொடுப்பதில்லை. தமிழகம் பூராவும் பார்த்தால் பலயிடங்களில் பஞ்சாயத்து வரிகள் வசூலாகாமல் நிற்பது தெரியும். இரண்டு மூன்று ஆண்டுகளாகத்தான் வசூல் செய்யப்படுகிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேரவேண்டிய வரியை ரெவின்யூ இலாக்கா மணியக்காரர்கள் வசூல் செய்யாவிட்டாலும் ஊராட்சி ஒன்றியங்களே தனி அதிகாரிகளைப் போட்டு வசூல் செய்துகொள்ள அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

1961-ஆம் ஆண்டு இந்த ஊராட்சி ஒன்றிய அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. அதில் இருந்து ரெவின்யூ இலாக்கா மூலமாகத்தான் ஊராட்சிகளுக்குச் சேரவேண்டிய வரி வசூலிக்கப் படுகிறது. இந்த ஆண்டு 5 லட்சம் வசூல் செய்தால் கொடுத்து விடுகிறார்கள். நிலுவை 3 லட்சம் அப்படியே நின்றுவிடுகிறது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் தருகிறார்கள். என்னுடைய மாவட்டத்தில் காஞ்சீபுரத்தில் எங்களுடைய ஒன்றியத்திற்கு மட்டும் 8 லட்சத்திற்குமேல் வரவேண்டிய தொகை இருக்கிறது. அதிலே நான் இந்த ஆண்டு மிகவும் சிரமப்பட்டு ஆறு லட்சத்து எழுபத்து ஒன்பது ஆயிரத்தைப் பெற்றிருக்கிறேன். இதுபோன்ற சிக்கல் ஏற்படாதிருக்க ஊராட்சி ஒன்றியங்களே தங்களுக்குச் சேரவேண்டிய வரியை தனி அதிகாரிகள் போட்டு வசூல் செய்து கொள்ள ஏற்பாடு செய்யலாம்.

எல்லா ஊராட்சிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை வழங்கவேண்டும் என்ற உயர்ந்த கருத்தை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் தம் உள்ளத்தில் வைத்திருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் அதற்காக ஒதுக்கப் பட்டிருக்கிற நிதி போதாது. ஊராட்சி . மன்றங்களுக்கும் எல்.ஐ.ஸி.-யில் இருந்து லோன் கிடைக்க வழி செய்யலாம். பேரூராட்சிகளுக்கு எல்லாம் எல்.ஐ.ஸி.-யில் இருந்து லோன் பெற வசதி இருக்கிறது. ஏற்கனவே அவர்கள் மின்சார போர்டினிடம் அதிகப்படியான கடன்பட்டிருக்கிறார்கள். எவ்வித . கடன் தொல்லைக்கும் உட்படாத ஊராட்சிகளுக்கு இந்தக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்தால் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை நல்லமுறையில் நிறைவேற்றித்தர முடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் உத்திரமேரூர் ஊராட்சி மிகப் பெரியதாக இருக்கிறது. அதை இரண்டு ஆகப் பிரித்துக் கொடுத்தால்தான் நல்லமுறையில் பல காரியங்களை எல்லாப் பகுதிகளிலும் செய்ய முடியும். 500 பேர்கள் இருக்கக்கூடிய கிராமம் தான் என்றாலும் அதை ஊராட்சியாகப் பிரித்து அமைத்துக் கொடுக்கவேண்டும். ஏன் இன்னும் ஊராட்சி மன்றத் தலைவர் சிலர் மதுரா உள்ள ஊர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை? தன் ஊருக்கு





மட்டும் வேலை செய்துக் கொண்டு மதுரா ஊர்களை விட்டு விடுவதால், பிரித்து தருமாறு கேட்டுக்கொண்டு, இந்த மானியங்களை ஆதரித்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ஜி. ராம்சாமி: தலைவர் அவர்களே, கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட—கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை, சமுதாய வளர்ச்சியும், ஊராட்சி வளர்ச்சியும் ஆகிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து அவற்றின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் கிராம வளர்ச்சியில் முக்கியமான பங்கு கொண்டு விவசாய வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குதல் போன்ற காரியங்களில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக, 1971-72-ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 1972-73-ஆம் ஆண்டிலே அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருப்பது பாராட்டுக்குரியது. இன்று தமிழகம் முழுவதும் ஊராட்சி ஒன்றியங்கள் சரியாக அமைக்கப்படவில்லை. ஒரு ஒன்றியத்தில் 15 பஞ்சாயத்துக்களே இருக்கின்றன. திருப்பத்தூர் ஒன்றியத்தின் பெரும் தலைவன் என்ற முறையில் என்றால் சொல்ல முடியும். எங்கள் ஒன்றியத்தில் 70 பஞ்சாயத்துகள் இருக்கின்றன. நிர்வாகம் சரியான முறையில் நடைபெறுவதற்கு போதுமான நிதி வசதி இல்லை. பதினைந்து பஞ்சாயத்துகளே உள்ள ஒன்றியத்திற்கும், 70 பஞ்சாயத்துகள் உள்ள ஒன்றியத்திற்கும் ஒரேமாதிரியாகத்தான் மானிய உதவிகள் செய்யப்படுகின்றன. ஆகவே ஒரே சீராக இந்த ஒன்றியங்களைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரட்சி நிவாரண நிதியின் மூலம் 18 கோடி ரூபாய் செலவழித்திருக்கிறோம். அதன்கீழ் பல சாலைகளை அமைத்திருக்கிறோம். ஆனால், அவைகளைச் சரியான முறையில் பராமரித்து வரக்கூடிய நிலைமையில் பஞ்சாயத்துகள் இல்லை. உள்ளூரில் பள்ளிக்கூடம் கட்ட வேண்டுமென்றால் போதுமான நிதி இல்லை. பணவசதி இல்லாத ஊராட்சி மன்றங்களுக்கு அரசாங்கமே பள்ளிக்கூடங்கள் கட்டுவதற்கு நிதி உதவி அளித்தாக வேண்டும்.

எல்லா கிராமங்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் திட்டத்தை ஏற்படுத்திக்கொடுத்தாகவேண்டும் என்று முதல் அமைச்சர் அவர்கள் கூறியிருப்பது பாராட்டத்தக்கது. எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி 1972-ம் ஆண்டுக்குள் அளிக்கப்

பட்டுவிடும் என்று தெரிவித்திருப்பதும் வரவேற்கத்தக்கது. அதுபோலவே எல்லா ஊர்களிலும் பள்ளிக்கூடங்கள் கட்டித் தருவதற்கு அரசாங்கமே ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியம் பல அமைப்புகளைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கிறது. விவசாயம், கூட்டுறவு, என்ஜினியரிங் போன்ற பல துறைகளைச் சேர்த்து அமைத்திருந்தாலும் கூட நிர்வாகம் தனித்தியங்குவது போன்ற நிலைமை ஏற்படுகிறது. நிலவள வங்கிகள் மூலமாக விவசாயிகளுக்குக் கடன் அளிக்கப்பட்டாலும் பெரும் தொகையாக அளிக்கப்படுகிறது. சிறு விவசாயிகளுக்கு அவர்களுடைய கிணறுகளை ஆழப்படுத்தவும் பம்பு செட்டுகள் அமைக்கவும் தேவைப்படுகின்ற தொகையை அதாவது இரண்டாயிரத்துக்கு உட்பட்ட தொகையை எல்லாம் பஞ்சாயத்து ஒன்றியங்களின் மூலமாக வழங்குவதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியைப் பொறுத்தமட்டில், ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள ஆசிரியர்களை ஜில்லா அளவில் மாற்று வதற்கு வழிவகை செய்ய வேண்டும். ஆசிரியர்கள் தொடர்ந்து ஒரே ஊராட்சி ஒன்றியத்தில் இருப்பதால் சரியாக வேலை செய்யாமல் இருப்பதற்கு வழிவகைகள் ஏற்படுகின்றன. அதே மாதிரி ஊராட்சி ஒன்றியத்தில் வேலைபார்க்கும் க்ளார்க்குகளை—எழுத்தர்களை—மாற்றுவதற்கும் வழிவகை செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அவர்கள் நல்ல ஊக்கத்துடன் வேலை செய் வார்கள். நிர்வாகம் நல்ல முறையில் இயங்கும். அவர்களுக்கு பொறுப்பும் இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியத்தின் வேலைகளான சாலைகள், நீர்நிலைத் தொட்டிகள் அமைத்தல், ஆகிய பல்வேறு பணிகள் ஹைவேஸ் என்ஜினியர் மூலம் பராமரிக்கப்படுகின்றன. ரோடு வேலைகளை அவர் மேற்கொள்வதோடு ஊராட்சி ஒன்றிய வேலைகளையும் கவனிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக ஊராட்சி ஒன்றியங்களின் வேலை துரிதமாக நடைபெற முடிவதில்லை. ஆகவே, நான்கைந்து ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்த்து அவற்றிற்கு என்று தனியாக ஒரு உதவிப் பொறியாளரை நியமித்தால் வேலை துரிதமாக நடக்கும் என்பதைச் சொல்கிறேன்.





ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக 'பாலர் பள்ளிகள்' நடத்தப் படுகின்றன. 'பால்வாடி வகுப்புகளில்' மூன்று வயதிலிருந்து ஐந்து வயதுக்குட்பட்ட சிறிய குழந்தைகளுக்கு விளையாட்டு மூலம் கல்வி போதிக்கப்படுகிறது. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் இதுபோன்ற அறுபத்து நான்கு பள்ளிகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் நல்ல முறையில் நடை பெறுகின்றன. சிறு குழந்தைகளுக்கு பாட்டு, கதை சொல்லி சிறப்பாக பாடம் நடத்துகிறார்கள். இந்த முறையை எல்லா இடங்களிலும் நடத்தினால் மிக்க உபயோகமாக இருக்கும். இதைத் தமிழகம் பூராவும் பரப்பலாம். நர்சரி முறையில் நடப்பதால் நல்ல கவனம் செலுத்துகிறார்கள். குழந்தைகளின் எதிர்காலம் நல்ல முறையில் அமையும், நல்லொழுக்கமும் பண்பும் பெற வசதியாக இருக்கும். பாலர் பள்ளி ஆசிரியர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களையே நியமிக்க வேண்டும். அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியம் 20 ரூபாயும், அரசாங்கம் 20 ரூபாயும் கொடுக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு எவ்வளவு கொடுக்க முடியுமோ, அவ்வளவையும் அரசாங்கம் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். பாலர் பள்ளிகள் சிறப்பான முறையில் நடத்துவது நல்லது.

தற்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அநேக பொறுப்புகள் இருக்கின்றன. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்புக்களையும் அவர் வைத்துக்கொள்வதால் சரியாக நிர்வகிக்க முடியவில்லை. ஆகவே, ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் வேலைகளைக் கவனிக்க தனி அதிகாரி ஒருவரை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். தமிழகத்திலே 12 ஆயிரத்து அறுநூற்றுக்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கிராமப் பஞ்சா யத்திற்கும் எழுத்தர் என்று ஒருவரை வைத்துக்கொண்டு, அவருக்கு 50 ரூபாய் சம்பளம் தருகிறார்கள். அதோடு நிலவரி வீட்டுவரி போன்றவற்றை வசூலிப்பதற்கு மணியக்காரருக்குச் சம்பளம் அரசாங்கத்தின் மூலம் அளிக்கப்படுகிறது. இந்த 50 ரூபாயையும், மணியக்காரரின் சம்பளத்தையும் சேர்த்து ஒரு ஊராட்சி மன்றத்திற்கு ஒரு எழுத்தர் விதமோ, அல்லது இரண்டு ஊராட்சி மன்றங்களுக்கு ஒரு எழுத்தர் என்ற விதமோ அமைத் தால் 6 ஆயிரத்திற்கு மேற்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர் களுக்கு வேலை கொடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஜி. ராமசாமி] [1972 மார்ச் 11

அடுத்தபடியாக, இன்னும் ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியங்களுடைய அதிகாரங்களை அதிகப்படுத்தி, அவைகளுக்குச் செல்வாக்கு வளருகின்ற வகையில் நல்ல முறையில் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு, இந்த மானியத்தை வரவேற்று என் உரையை முடித்து அமர்கிறேன். வணக்கம்.

**திரு. மணலி சி. கந்தசாமி :** பேரவை உப தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

பொதுவாக இந்த மானியத்தின் தன்மையை எடுத்துக்கொண்டு பார்த்தால், இதில் உள்ளடக்கியிருக்கின்ற பல்வேறு திட்டங்களை எடுத்துக்கொண்டு பார்த்தால், இதில் சொல்லப்பட்டிருக்கும் மானியம் போதாது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். 12 ஆயிரம் கிராம ஆட்சிகள், நூற்றுக்கணக்கான பேரூராட்சிகள், பெரும்பகுதியான மக்கள் வசிக்கின்ற இடங்களில், அந்த மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு பார்த்தால், இந்த மான்யம் மிகவும் குறைவு. இந்தக் காலகட்டத்தில் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென்பதும் ஒன்று. மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது என்று சொல்லும் நேரத்தில், நாமே முன்னுதாரணமாக இருந்து, கிராமங்களுக்கும், ஊராட்சி மன்றங்களுக்கும், ஒன்றியங்களுக்கும் அதிகமாக அதிகாரங்களைக் கொடுத்தால், அது மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்கிற கருத்துக்கு வலுவூட்டுவதாக அமையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் இப்போது ரோடு போடுகிறோம், தண்ணீர்த் தொட்டிகள் அமைக்கிறோம், பல்வேறு அபிவிருத்தி வேலைகள் செய்கிறோம். இவைகளையெல்லாம் பராமரிக்கக்கூடிய செலவுகளும் அதிகரித்துக் கொண்டே போகின்றன. அபிவிருத்தி வேலைகள் விஸ்தரிக்கப்படக்கூடிய நிலையில், மானியத் தொகையும் அதிகரிக்க வேண்டும். புதிது புதிதாக பல இடங்கள் அபிவிருத்தியடைந்து, விஸ்தரிக்கப்படுகின்றன. அந்த இடங்களுக்கு எல்லாம் தேவையான வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். ஆகவே, இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு பணம் ஒதுக்க



1972 மார்ச் 11] [திரு. மணலி சி. கந்தசாமி]

வேண்டும். எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்கள் சுறுசுறுப்பாக வேலை செய்கிறதோ, அதற்குத் தகுந்தவாறு நிதி ஒதுக்கக்கூடிய தன்மையில் நிதி ஒதுக்க வேண்டும்.

அடுத்தபடியாக, இப்போது பல்லாயிரக்கணக்கான இடங்களில் ரோடுகள் புதிதாகப் போடப்படுகின்றன. ரோடுகள் போடுவதோடு மட்டும் செலவு நின்று விடுவதல்ல. அவற்றைப் பராமரிக்க வேண்டிய செலவும் இருக்கிறது. ரோடுகள் போட்டவுடன் ஒன்று அல்லது இரண்டு ஆண்டுகளில் சில இடங்களில் பள்ளம் விழும், மண் அரித்திருக்கும். இவற்றையெல்லாம் சீர்திருத்த வேண்டும். நல்லமுறையில் பராமரிக்க வேண்டும். ரோடுகளைப் பராமரிப்பதற்கு எவ்வளவு செலவு என்பதைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். பல ரோடுகள் போட்டதோடு நின்று இருக்கின்றது. மேலும் பராமரிப்பு வேலைகள் நடைபெறவில்லை. புதிய சாலைகளை அமைப்பதோடு என்று நின்றுவிடாமல் அவற்றைப் பராமரிப்பது என்ற அடிப்படையில் திட்டங்களை அணுக வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, இந்த மானியத்தை வளர்ச்சிக்குத் தகுந்த விதத்தில் நிர்ணயிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஒன்றியங்களில், பஞ்சாயத்துக்களில் உள்ளாட்சித்துறையின் கீழ் வேலை செய்கிற ஆசிரியர்கள், நர்சுகள், போன்றவர்களை மாற்றுவது என்பது பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அவர்களுக்கு பெரிய அதிகாரம் கொடுத்துவிடவில்லை. அவர்களை ஏன் மாற்ற வேண்டும். ஒரு இடத்தில் ஒரு மீட்டிங்குக்கு நான் போயிருந்தேன். அங்கு அவரை இங்கே மாற்ற வேண்டும், இவரை அங்கே மாற்ற வேண்டும் என்கிறார்கள். மறு நாள் அத்தனை பேரும் என் வீட்டிற்கு வந்து, என்னை அங்கே மாற்றுகிறீர்கள், என்ற முறையில் கெஞ்சுகிறார்கள். ஆசிரியர்கள் போன்றவர்கள் ஒரே ஊரில் இருந்தால் என்ன தவறு? அவர்களை ஊர்விட்டு, வேறொரு ஊருக்கு மாற்றினால், அந்த ஊரின் நிலைமைகளுக்குத் தகுந்தவாறு அவர் நடந்துகொள்ள வேண்டும். அதற்குக் கொஞ்சம் நாள் தேவைப்படும். ஆகவே, ஆசிரியர்களை ஊரைவிட்டு ஊர் மாற்ற வேண்டிய தேவை இல்லை. ஏதாவது விசேஷமான காரணம் இருந்தால், ஏதாவது தண்டிக்கக்கூடிய காரியம் செய்திருந்தால் ஆசிரியர்கள், நர்சுகள் போன்றவர்களை மாற்றம் செய்யலாம். கூடுமான வரையில் ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு ஊரை எடுத்துக்கொண்டால், குடிநீர், சுகாதாரம், ஆரம்பக் கல்வி, போக்குவரவு சாதனங்கள் இவற்றைக் கவனித்து அதிக கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக குடிநீர், வாரியத்தின் தலைவர் அவர்கள் அங்கு வந்திருந்தார். இப்போது பாதுகாக்கப்பட்ட குடிநீர் வேண்டும் என்கிற உணர்வு எல்லா இடங்களில் உள்ளவர்களுக்கும் வந்திருக்கிறது. இதைச் சீக்கிரத்திலே செய்ய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. எங்கள் ஊரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இருக்கிறது என்று ஒருவர் சொன்னால், அடுத்த ஊரில் இருப்பவர்கள் 'நம் ஊரில் ஏன் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இல்லை' என்று கேட்கின்ற நிலைமை இப்போது இருக்கிறது. இது அவசியமான தேவையாக இருப்பதால் இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒன்றியத்தில் வேலை செய்யக்கூடிய, முனிசிபாலிட்டியில் வேலை செய்யக்கூடிய சிப்பந்திகள் இருக்கின்றார்கள். அவர்கள் சங்கங்கள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் பல கோரிக்கைகளை வைக்கிறார்கள். அந்தச் சங்கங்களுக்கு பிரமுகர்களும், சில சமயங்களிலும் அமைச்சர்களும்கூட விஜயம் செய்கிறார்கள். இந்தச் சிப்பந்திகள், கோரிக்கைகளை எழுப்பும்போது ஆரம்பத்திலேயே அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காண வேண்டும். அவர்களுடைய கோரிக்கைகளை செவிமடுத்துக் கேட்க வேண்டும். அப்படிச் செய்வது அந்தச் சிப்பந்திகளின் மத்தியில் ஏற்படக்கூடிய வெறுப்புணர்ச்சியை, சலசலப்பைத் தடுப்பதற்கு ஒரு முன்னோடியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூறி, அதைத் தீர்க்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே நான் முதலமைச்சர் அவர்களிடம் ஒருதரம் வேண்டிக் கொண்டேன். 1970-வது வருஷத்திற்கு முன்னாலே ரிடையர் ஆன முனிசிபல் சிப்பந்திகள் 500 பேர்கள் அல்லது 600 பேர்கள்தான் இருப்பார்கள். அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இருக்கிறது, நேற்று ஒருவர் ஓடோடி மத்தியானம் ஒரு மணிக்கு வந்தார், பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கக்கூடியவர்கள் நீங்கள், இவர்களுக்கும் மாதம் 50 ரூபாய் அல்லது 30 ரூபாயாவது கொடுக்கக்கூடாதா என்று மன்றாடுகிறார்கள். அவர்களுக்கு அப்படிக் கொடுப்பதாலே அதிகமான செலவு





ஒன்றும் ஆகாது. அதுகூட வருஷா வருஷம் பத்துப் பேர்கள், இருபது பேர்கள் செத்துக்கொண்டு இருப்பார்கள். இன்னும் 7, 8 வருஷங்களிலே அது தீர்ந்து போய்விடும். அவர்களுக்கு நாற்பது ரூபாய், ஐம்பது ரூபாய் கொடுப்பதாலே நான்கு அல்லது ஐந்து லட்சம் ரூபாய்தான் ஒதுக்க வேண்டியிருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில கிராமங்கள்—எவ்வளவுதான வளர்ச்சியடைந்த ஒன்றியங்களாக இருந்தாலும்—ஒதுக்கி வைக்கப்படுகின்றன, சில ஒதுக்கப்பட்ட கிராமங்கள் பிற்பட்ட கிராமங்கள் ஆங்காங்கே இருக்கின்றன. எங்களுடைய பகுதியிலே கொருக்கை, தலைக்காடு என்ற கிராமங்கள் ஒதுங்கி விட்டன. இரண்டு கிராமங்களுக்கும் வசதிகள் கிடைப்பதில்லை. இடையிலே ஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றைக் கடந்துதான் அந்த கிராமத்திலே உள்ளவர்கள் நெல்லை விற்க வேண்டுமானால் விற்கலாம், அங்கே சுமார் 5 ஆயிரம் 6 ஆயிரம் ஜனத்தொகையுள்ள மக்கள் இருக்கிறார்கள். அங்கேயிருக்கிறவர்கள் சொல்லுகிறார்கள், நாங்களும் இருபது வருஷமாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம், ஒருவரும் செய்யவில்லை. அவர்கள் நெல்லை விற்க வேண்டுமானால், ஆற்றைக் கடந்து விற்க வேண்டியிருக்கிறது. அதற்காக எங்களுக்கு ஒரு மூட்டைக்கு 2 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்கிறார்கள். எனவே, அரசாங்கம் அப்படி ஒதுங்கியிருக்கிற கிராமங்களுக்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக நமக்கு இருக்கிற தொந்தரவு, மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிற தொந்தரவு இவைகளைவிட கிராமத்திலே இருக்கிற குட்டி சர்க்கார்களுக்குத்தான் அதிகமான தொந்தரவுகள் இருக்கின்றன. காரணம் அவர்கள் அங்கேயே வசிக்கிறார்கள். காலையிலே எழுந்தவுடன் அங்கேயுள்ள மக்களைத்தான் அவர்கள் எதிர்நோக்கவேண்டிய நிலை இருக்கிறது. அவர்கள் நமக்கு எதிராகவே சொல்கிறார்கள். வோட்டுக்கு வா பார்த்துக்கலாம், ரோடு வேண்டுமென்றால் செய்வதில்லை, குடிநீர் வேண்டுமென்றால் கவனிப்பதில்லை, ஓட்டுக் கேட்டு அடுத்த தடவை வா பார்க்கலாம் என்று சொல்கிறார்கள்.

[திரு. மணலி சி. கந்தசாமி] [1972 மார்ச் 11

தயவுசெய்து அங்கேயுள்ளவர்களை கைதூக்கிவிட்டு அவர்களுக்கு அதிக அதிகாரங்களைக் கொடுத்து, அதிகமான அளவுக்குப் பணத்தை ஒதுக்கி சீரும் சிறப்புமாக திட்டங்கள் நிறைவேறச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிச் செய்வதன்மூலம் முக்கியமாக நான் சொன்னதைப் போல குடிநீர் ஆரம்பக் கல்வி இவற்றிற்கு சிறப்பாக கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானியத்தை ஆதரித்து, இந்த அரும்பெரும் பணிகள் ஆங்காங்கே சிறப்புற நடைபெற பரவலாக கிராமங்களிலே வேலைகள் நடைபெற அதிகமான வளர்ச்சியுற மானியத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* திரு. கே. எ. வகாப் : தலைவர் அவர்களே, சமுதாயம் என்ற காட்டைத் திருத்தி ஒரு சமதர்மப் பூங்காவாகச் செய்கின்ற சமுதாய நலத்துறைக்குத் தமிழக அரசு ஒதுக்கியிருக்கிற தொகை ஏறத்தாழ 77.14 கோடி என்ற அளவுக்கு இருக்கின்றதை நான் வரவேற்கிறேன். இன்று கிராமத்திலே உள்ள மக்களுக்கு எல்லா விதமான வசதிகளையும் செய்துதரவேண்டுமென்ற அடிப்படையிலே திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டு வருகின்றன.

இருந்தாலும் குடிநீர்த் திட்டத்திற்கும் சாலை இணைப்புத் திட்டத்திற்கும் 1968-ம் ஆண்டு என்ன தொகை ஒதுக்கப்பட்டதோ அந்த அளவுக்குத்தான் தொகைகள் இந்த ஆண்டும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன என்பதை நான் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதிகமான அளவில் கிராமப்புறங்களில் குடிநீர் திட்டத்திற்கும் இணைப்புச் சாலைத் திட்டத்திற்கும் ஒதுக்கி வேண்டிய வசதிகளைச் செய்துதர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே பல்வேறு கிராமங்களும் நகரப் பஞ்சாயத்தும் அங்கம் வகிக்கின்றன. ஆனால் ஒன்றியத்திலிருந்து நகரப் பஞ்சாயத்துக்கு எந்தவிதமான கடனோ அல்லது மானியமோ பெற முடியவில்லையென்பதை அனுபவப் பூர்வமாக, நகரப் பஞ்சாயத்துத் தலைவர் என்ற முறையிலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் நகரப் பஞ்சாயத்திலிருந்து திரைப்பட வரி வருமானங்கள் எல்லாம் ஒன்றியத்திற்கு வருகின்றது. அப்படியிருந்தாலும் ஒன்றியத்திலிருந்து நகரப் பஞ்சாயத்திற்கு எதுவும் கொடுப்பதில்லை. சாலை வசதிகள் திட்டத்திற்கும், கொசு ஒழிப்புத் திட்டத்திற்கும் ஒன்றியம் நகரப் பஞ்சாயத்திற்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று ஒன்றியங்களை வலியுறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1972 மார்ச் 11] [திரு. கே. எ. வகாப்]

முனிசிபாலிட்டிகளுக்கு கடனும் மானியமும் அரசாங்கம் கொடுக்கிறது. ஆனால் நகரப் பஞ்சாயத்துக்கள் தங்களுடைய கால்களாலேயே நிற்கவேண்டியவைகளாக இருக்கின்றன. எனவே இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டம் நல்ல முறையிலே செயல்பட்டு வருகிறது. ஆனால் சிலபல இடங்களிலே தாமதங்களினாலும் கோளாறுகளினாலும் தடைப்படுகிற நிலைமை ஏற்படுகிறது. வந்தவாசியிலே ஒரு குடிநீர்த் திட்டம் நிறைவேறுவதற்கு ரூபாய் 18 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த குடிநீர்த் திட்டம் வெற்றிகரமாக இன்றைக்கு அமல்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த குடிநீர்த் திட்டம் எட்டு அல்லது பத்து ஆண்டுகளுக்கு முன்னாலே இப்பொழுது உறுப்பினராக இருக்கின்ற ஜோதி அம்மையார் அவர்கள் அமைச்சராக இருந்தபோது சாங்ஷன் செய்யப்பட்டு, பிறகு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சியிலே வேலை துவங்கப்பட்டு இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் காலத்திலே தண்ணீர் பெறுகிற வகையிலே நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

வந்தவாசியிலே இருக்கிற குடிநீர்த் திட்டம் எல்லாம் பூர்த்தியடைந்துவிட்டது என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்து இருப்பதாகச் சொன்னார்கள். எனக்குத் தெரியும் நகரப் பஞ்சாயத்துத் தலைவர் என்ற முறையிலே இன்னும் பூரணமாக அது நிறைவேற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், சில திட்டங்களைப் பெண்டிங் ஆக வைத்திருக்கிறார்கள். வால்வுகள் போடாமல் வைத்திருக்கிறார்கள். குடி நீர் வாரியத் தலைவர் அவர்களிடம் நேரில் சொல்லியிருக்கிறோம். அவர்கள் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருப்பார்கள் என்று நம்புகிறேன். அதிகாரிகள் இதிலே சுறுசுறுப்புடன் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வந்தவாசி குடிநீர்த் திட்டம் ஏறத்தாழ பதினாறு மைல்கள் கடந்து வருகிறது. அங்கே இருக்கக்கூடிய வே சைட் வில்லேஜஸ் என்று சொல்லக்கூடிய வழியில் உள்ள கிராமங்கள் 9 கிராமங்கள்

இருக்கின்றன. அந்தக் கிராமங்களும் தண்ணீர் பெறுகின்றன. ஆனால், அந்தக் கிராமங்கள் கட்டவேண்டிய தொகையை நகரப் பஞ்சாயத்துதான் கட்டிக்கொண்டிருக்கிறது. 9 கிராமங்களையும் பணம் கொடுங்கள் என்று கேட்டால், தண்ணீரை வேண்டுமானால் நிறுத்திக் கொள்ளுங்கள், பணம் கொடுக்க மாட்டோம் "என்று சொல்கிறார்கள். இப்படியெல்லாம் நகரப் பஞ்சாயத்துக்கு ஏற்படுகிற பளுவை குறைக்கக்கூடிய வகையிலே அந்தக் கிராமங்கள் எல்லாம் இதற்காக அவர்கள் விகிதாச்சாரத்தைக் கொடுத்தால் நாங்களும் ஒரு விகிதாச்சாரத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம் என்று பல எழுதி அனுப்பியிருக்கிறோம். இதைக் குடிநீர் வாரியத் தலைவர்கள் அவர்கள் கவனத்தில் வைத்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

ஒன்றியத் தலைவரும், பேரூராட்சித் தலைவரும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் ஒன்றியத்திலே இருக்கிற ஆணையருக்கும் பேரூராட்சியிலே இருக்கிற எக்சிக்யூடிவ் ஆபீசருக்கும் அதிகமான அதிகாரங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. யூனியன் தலைவர் அவர்களுக்கு இல்லாத அதிகாரம் ஆணையருக்கு அதிகமான அளவிலே அளிக்கப்பட்டிருக்கிறது. ஒரு பேரூராட்சியின் நிர்வாக அதிகாரி நினைத்தால் தானே செல்ப் செக் போட்டு எடுத்து பயன்படுத்தக்கூடிய நிலையிலே நிர்வாக அமைப்பு இருக்கிறது. இந்த முறையினாலே பல கேடுகள் வருகின்றன. என்னுடைய பஞ்சாயத்திலே இப்படி நடந்திருக்கிறது. அங்கேயிருந்து இருபதாயிரம் ரூபாய்களை செக் போட்டு எடுத்துக்கொண்டுவிட்ட ஒருவர் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார். எனவே அதிகமான அதிகாரங்கள் தேவையா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். கூட்டுறவுத் துறையிலே எப்படி தலைவரும் அதிகாரியும் இரண்டு பேர்களும் செக்கிலே கையெழுத்துப் போடுகிறார்களோ, அதைப் போன்று இங்கேயும் கொண்டுவந்தால் எதற்காகப் பணம் எடுக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும். எனவே இதை கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அதேபோன்றுதான் ஆணையருக்கும் அதிகமான அதிகாரங்கள் இருக்கின்றன. அவர்களுக்குக் கீழே எம்.பி.பி.எஸ். படித்த கெஜடெட் அதிகாரிகளும் விவசாய அதிகாரிகளும் இருக்கிறார்கள். அண்மையிலே சில அதிகாரங்கள் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே அந்த முறையிலே இந்த அதிகாரங்களைப் பிரித்துக்



கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக, எல்லோரும் சொன்னார்கள், ஆசிரியர்களுக்குத் தொல்லைகள் அதிகமாக இருக்கின்றன என்று. என்னுடைய ஒன்றியத்திலேகூட ஆசிரியர்கள், தொல்லைகளை தினம் தினம் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள். அன்டிரெயின்டு ஆசிரியரை டிரெயன்டு போஸ்ட்டிலே போடுவதிலே சிரமங்கள் இருக்கின்றன. அவர்களை விடுமுறை போடச் சொல்லிவிட்டு அவர்கள் அந்த வேலையைப் பார்த்து, தாங்கள் பெறுகின்ற அந்தச் சம்பளத்திலே லீவ் எடுத்திருக்கும் ஆசிரியருக்குப் பாதியைக் கொடுத்துவிட்டு பாதி வருவாயைத்தான் அவர்கள் எடுத்துக்கொள்ள முடிகிறது. அப்படித் தந்தால்தான் இந்த வேலை கிடைக்கிறது. இது ஆசிரியர்களிடத்திலே ஒரு வியாதியைப் போன்று, தொத்து நோயைப் போன்று பரவியிருக்கிறது. அதற்கு அனுசரணையாக ஆணையாளர்களும் சம்மதித்திருக்கிறார்கள் என்பதை முதலிலே கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன். அதையெல்லாம் நல்ல முறையில் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நான்கு மணிக்குத் திரும்பவும் சபை கூடவேண்டியிருக்கிறது.

திரு கே. எ. வகாப் : ஒரு நிமிஷத்தில் முடித்து விடுகிறேன். ஒன்றியத்திலே வேலைவாய்ப்புகளை நிச்சயமாக அதிகப்படியாகக் கொடுக்க வேண்டும். கிராம சேவக்குகளை நிறைய ஏற்படுத்தி கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபடும் வகையில் செய்யவேண்டும். கிராம சேவக்குகள் 100 அல்லது 150 பேரோ எவ்வளவோ வேண்டுமென்று விண்ணப்பம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஏறத்தாழ 25,000 விண்ணப்பங்கள் வரும் என்று எதிர்பார்ப்பதாகச் சொல்கிறார்கள். அந்த அளவில் இருப்பதால் இன்னும் வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்தி, படித்து வேலையில்லாமல் நிறையப்பேர் இருப்பதால் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பு அளிக்கின்ற முறையில் கிராம சேவக்குகளை போன்று இன்னும் பல பதவிகளையும் ஏற்படுத்தி அந்த வேலைவாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியம் நகர்ப்புறங்களில் நல்ல முறையில் செயல்படுகிறது. அது கிராமங்களிலும் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால் 35 லட்சம் ரூபாய்தான்

ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் நகரத்திற்கு சுமார் 3½ கோடி ரூபாய் அளவிற்கு இருப்பதைக் கொஞ்சம் கனிவோடு கவனித்து கிராமங்களிலும் வீடுகள் தேவை என்ற அடிப்படையில், கிராம முன்னேற்றத்திற்கு குடிசை மாற்று வாரியத்தின் மூலம் அதன் ஆதரவிலே இன்னும் அதிகத் தொகையை ஒதுக்க வேண்டுமென்று கூறி எல்லாவிதமான மானியக் கோரிக்கைகளையும் வரவேற்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் இன்றைய காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. மாலை நான்கு மணிக்குப் பேரவை மீண்டும் கூடும், வணக்கம்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் தலைமையில் மீண்டும் கூடியது.

### (5) 1972-73-ம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகளின் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

**திரு. என். டென்னிஸ் :** தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சி கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்துச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நமது நாட்டில் நூற்றுக்கு 80 பேர் கிராமவாசிகள். கிராமவாசிகளின் வாழ்க்கைத்தரம் முன்னேறினால்தான் நம்முடைய தேசம் முன்னேறியதாக நாம் எடுத்துக்கொள்ள முடியும். கிராமங்களின் முன்னேற்றத்திற்காக நாம் பஞ்சாயத்து ஆட்சி முறையை நமது லட்சியமாகக் கொண்டிருக்கிறோம். அரசியல் சட்டத்தில் 40-வது ஷரத்து இந்த லட்சியத்தை வலியுறுத்துகிறது.

நகர்ப் புறங்களுக்கும் கிராமப் புறங்களுக்கும் இடையே இருக்கும் வித்தியாசம் அகல வேண்டும். கிராமப்புற மக்கள் நகர்ப்புற மக்கள் அனுபவிக்கக்கூடிய வசதிகளை எல்லாம் அனுபவிக்க வேண்டும். கிராமப் புறங்களுக்கு ரோடு வசதி வேண்டும். கல்வி வசதி வேண்டும், குடி தண்ணீர் வசதி வேண்டும், கூட்டுறவு சங்கம் வேண்டும், மின்சார வசதி வேண்டும் என்பதான லட்சியத்தின் அடிப்படையில் கிராம ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இந்த நோக்கங்கள், இந்த லட்சியங்கள் கை கூடி



இருக்கின்றனவா, கிராமத்தின் மூலை முடுக்குகளில் இருக்கும் மக்கள் கிராம நல வளர்ச்சித் திட்டத்தின் பயனை அனுபவிக்கிறார்களா என்று பார்த்தால், நாம் அவ்வளவு திருப்தியாக மக்கள் இதன் பயனை அனுபவிக்கிறார்கள். லட்சியம் ஈடேறி விட்டது என்று கூற முடியாது.

வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் ஊழியர்களும் மக்கள் பிரதிநிதிகளும் கையோடு கை கோர்த்து நின்று, இந்த நாட்டினுடைய முன்னேற்றத்திற்காக நாம் யாவரும் பொது நலச் சேவை உணர்வோடு உழைப்பதற்கான வழி வகைகளை உருவாக்க வேண்டும்.

ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கும் ஆணையாளர்களுக்கும் இருக்கக்கூடிய அதிகாரங்கள் சரியாக பஞ்சாயத்துச் சட்டத்தில் வரையறுக்கப்படவில்லை. பல அரசு உத்தரவுகள் மூலம் இந்த அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டிருந்தாலும் பஞ்சாயத்துச் சட்டத்தில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்களுடையவும், ஆணையாளர்களுடையவும் அதிகாரங்கள் என்னென்ன என்று வரையறுக்கப்படாத காரணத்தால் அரசு உத்தரவுகளைப் பின்பற்றக்கூடிய நிலைமை இல்லாமல் இருக்கிறது. இந்த அதிகாரங்களை வரையறுக்கும் விதத்தில் பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் அதிக அதிகாரம் இருக்க வேண்டும். இன்று இருக்கக்கூடிய நிலைமையில் பஞ்சாயத்துக்களும், பஞ்சாயத்து யூனியன்களும் சிறிய காரியங்களுக்குக் கூட மாவட்ட ஆட்சித் தலைவரின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது, டி.ஆர்.ஓ. அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது, சர்க்காரின் அனுமதியைப் பெறவேண்டிய நிலை இருக்கிறது. இந்த நிலைமை மாறவேண்டும். பஞ்சாயத்து எல்லைக்குள் உள்ள காரியங்களைப் பஞ்சாயத்து மன்றங்களும், பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள்ள காரியங்களுக்கு பஞ்சாயத்து யூனியன் மன்றங்களும் தீர்க்கக்கூடிய நிலைமை ஏற்பட வேண்டும். அப்படி இருந்தால்தான் பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் உண்மையான அதிகாரங்கள், மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்மையான அதிகாரங்கள் கொடுத்ததாகக் கொள்ள முடியும். இவ்விதமாகச் சிறிய காரியங்களுக்குக் கூட மாவட்ட ஆட்சித்

[திரு. என். டென்னிஸ்] [1972 மார்ச் 11

தலைவர், உயர்தர அதிகாரிகளிடம் போகும் நிலை இருப்பதன் காரணமாக மிகக் கால தாமதம் ஏற்படுகிறது. ஆகவே, இந்த நிலை இல்லாது மக்கள் பிரதிநிதிகளுக்கு உண்மையான அதிகாரங்கள் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் பஞ்சாயத்து யூனியன்களில் பூரண உரிமை பெற்ற அங்கத்தினர்களாக இருந்தால் பஞ்சாயத்து வளர்ச்சிப் பணிகளில் தங்களுடைய காரியத்தை அதிகாரத்தோடு எடுத்துக் கூறமுடியும். அந்த வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதில் நேரடியாகப் பங்கு கொள்ள வாய்ப்புக் கிடைக்கும். அந்த வகையில் பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தியமைக்க வேண்டும்.

பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வாகத்தைத் தனி இலாகா மூலமாக நடக்க வழி செய்தால்தான் நன்றாக இருக்கும். இன்று ரெவின்யூ இலாகாவுக்கு உட்பட்டு வேலை செய்யும் நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் வளர்ச்சிக்கான காரியங்களில் பஞ்சாயத்து யூனியன் அலுவலர்கள் முழு கவனத்தைச் செலுத்த முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, கோட்ட அளவில் கோட்டாட்சித் தலைவர் பொறுப்பில் வளர்ச்சி அலுவலர்களை நியமித்து வளர்ச்சித் திட்டங்களை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். வளர்ச்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத்தக்க நிலையில் வளர்ச்சி ஆணையாளருக்கு கெஜடட் ராங்க் கொடுக்க வேண்டும்.

பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் போதுமான நிதிவசதி இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, வளர்ச்சித் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகையால் எக்சைஸ் வருமானத்தில் ஒரு பகுதியை பஞ்சாயத்துக்களுக்கும், பஞ்சாயத்து யூனியன்களுக்கும் கொடுத்து பஞ்சாயத்து நிதிநிலையை ஊக்குவிக்க வழி வகுப்பதன் மூலம் வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்ற வழி ஏற்படும்.

அடுத்து உள்ளூர் சாலைகளுக்கு மானியம் 18 காசு வீதம் தரப்படுகிறது. அந்தச் சாலைகள் மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சாதாரண சாலைகளுக்கு 600 ரூபாய் கொடுக்கப்



1972 மார்ச் 11] [திரு. என். டென்னிஸ்]

படுகிறது; மணல் ரோடுகளுக்கு 800 ரூபாய் கொடுக்கப்படுகிறது; மலைப் பிரதேசங்களுக்கு 1,500 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இப்படி மூன்று தரங்களாக இருப்பதை நான்கு தரங்களாகப் பிரிப்பது நல்லது. சிறு குன்றுகள் இருக்கும் இடங்களை ஒரு தரமாகப் பிரிக்க வேண்டும். மேடு பள்ளமான அந்த இடங்களில் ரோடு போடுவதற்கு 800 ரூபாய்க்கும் 1,500 ரூபாய்க்கும் இடையில் 1,200 ரூபாய் என்று கொடுத்து அதை தனித் தரமாகப் பிரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால் பல ரோடுகள் சாதாரணத் தன்மையில் பிரிக்கப்பட்டிருப்பதால் 600 ரூபாய்தான் கிடைக்கிறது. அதனால் அவற்றை பராமரிக்க முடியாததொரு நிலை ஏற்படுகிறது. ஆகவே குன்றுகள் உள்ள இடங்களை ஒரு பிரத்யேக தரமாக வகுத்து நான்கு தரங்களாகப் பிரித்து லோக்கல் மானியம் கொடுப்பது நல்லது.

டவுன் பஞ்சாயத்துக்களுக்கு டஸ்ட்லஸ் சர்பேஸிங்குக்கு ஏழு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள எல்லா டவுன் பஞ்சாயத்து ரோடுகளுக்கும் சேர்ந்து ஏழு லட்சம் ரூபாய் என்பது மிகவும் குறைந்த அளவிலான தொகை ஆகும். ஆகவே நகரப் பஞ்சாயத்துக்களுக்குள்ள இந்த மானியத்தை அதிகரித்துக் கொடுக்க வழிவகை செய்ய வேண்டும். கிராமப் பஞ்சாயத்துக்கள் தங்கள் வேலைகளைச் செய்வதற்கு அதிகப்படி நிதி ஒதுக்கித் தர வேண்டும். அடுத்தபடியாக, வில்லேஜ் வொர்க்ஸ் ப்ரொக்ராம். குடி தண்ணீருக்காகவும் இணைப்புச் சாலைகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி குறைந்த அளவில்தான் இருக்கிறது. கிராமங்களில் "கல்வெர்ட்டுகள்" அமைக்கவோ அல்லது பாலங்கள் போடவோ கிராமப் பஞ்சாயத்துக்களிடம் நிதி வசதி இல்லாததால் அவைகளைச் செய்ய வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே வில்லேஜ் வொர்க்ஸ் ப்ரோக்ராமிற்கான நிதியை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பின்னர் லோக்கல் செஸ் சார்ஜை 1-50 ரூபாயில் இருந்து 2-50 ரூபாய் வரை அதிகப்படுத்த வழி செய்யப்பட்டிருக்கிறது. இன்று 1-50 ரூபாய் விதிக்கக்கூடிய பஞ்சாயத்து யூனியன்கள் அதிகமாக இல்லை. ஆகவே ரூ. 2-50 என்று சர்சார்ஜை அதிகப்படுத்தி விதிப்பதற்கு அதிகமான பஞ்சாயத்து யூனியன்கள் முன்வராது என்ப

தால், இது நடைமுறைச் சாத்தியமான ஒரு காரியமாக இருக்காது என்பதால் வில்லேஜ் வொர்க்ஸ் ப்ரோக்ராமிற்கு அதிகப்படி நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மைனர் இரிகேஷன் டாங்க்சுக்காக கொடுக்கப்படும் பணம் சரியான காலத்தில் கொடுக்கப்படுவதில்லை யாகையால் எங்கள் மாவட்டத்தில் மழைக் காலங்கள் வந்த பிறகு அந்த மானியம் கொடுக்கப்படுகிறது. ஆகவே குளங்களைச் சரியாகப் பராமரிக்க சந்தர்ப்பம் இல்லாமல் போய் விடுகிறது. ஆகவே அந்த மானியத்தைக் கோடைக் காலத்தில் கொடுக்கும்படி நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக, மதிய உணவுத் திட்டம். அதை அமல்படுத்த ஊராட்சி மன்றத் தலைவர் தலைவராகவும், தலைமை ஆசிரியர் அவர்கள் செயலாள ராகவும் உள்ள குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நடைமுறையில் இது ஒரு காகிதக் குழுவாகத்தான் இருக்கிறது. ஊராட்சி மன்றத் தலைவருக்கு மதிய உணவு குறித்து இன்ஸ்பெக்ஷன் செய்யலாம் என்று வரையறுக்கப்பட வேண்டும். ஆகவே அவர்களுக்கு இந்த மதிய உணவு வினியோகத்தை இன்ஸ்பெக்ஷன் செய்யக்கூடிய ஒரு அதற்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

சமூகக் கல்வி நிலையங்களுக்குக் கொடுக்கப்படும் மானியம் குறைவாக இருக்கிறது. சமூகக் கல்வி நிலையத்திற்கு ஒரு செய்தி பேப்பர் போடுவதற்குக் கூட நிதி கொடுக்கப்படவில்லை. ஆகவே அதற்கும் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும்.

அடுத்தபடியாக, மாதர் சங்கங்கள். ஒரு பஞ்சாயத்து யூனியனுக்கு 30 சங்கங்கள்தான் இருக்கலாம். 30-க்குத்தான் மானியம் கொடுக்கப்படும் என்று உத்தரவிருக்கிறது. ஆனால் எங்கள் யூனியனில் 1.25,000 மக்கள் இருக்கிறார்கள். இந்த அடிப்படையில் ஏகதேசம் 4,000 மக்களுக்குத்தான் ஒரு மாதர் சங்கம் இருக்கக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே இந்த 30 என்பதை அதிகப்படுத்தி 50 அல்லது 60 என்று உயர்த்தி மானியம் கொடுக்க வேண்டும்.

பின்னர், அப்ளைட் நுட்ரீஷன் ப்ரோக்ராம், சத்துணவுத் திட்டம். அதைக் கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனுக்கும் வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.





கிராம வேலைவாய்ப்புத் திட்டம். ஒரு சாதாரண வேலைக்காரனுக்கு ரூ. 100-ஆவது கிடைக்கத்தக்க அளவில் வழி வகுக்க வேண்டும். அவர்களுக்கு வேலை முடிந்தால்தான் சம்பளம் கொடுக்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஏழை மக்களாகிய அவர்களுக்கு வாரத்திற்கு ஒரு தடவையாவது சம்பளம் கிடைக்கக் கூடிய அளவில் ஏற்பாடு செய்ய வேண்டும். செகன்ட் ஸ்டேஜ் வரும்போது, அந்த ரோடுகளில் பாலங்கள் அமைக்கவும், சல்லி போடவும் வழிவகை செய்ய வேண்டும். உழைப்பாளர்களுக்கு 80 சதவிகிதம் என்றிருப்பதை 50 சதவிகிதம் உழைப்பாளர்களுக்கு 50 சதவிகிதம் மற்றக் காரியங்களுக்கு என்றிருந்தால் கல்வர்ட்கள் போட முடியும். சல்லி போட முடியும். ஆகவே அப்படிப்பட்டதொரு ப்ரப்போர்ஷனில் செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, பஞ்சாயத்து யூனியன் ஊழியர்களுக்கு பென்ஷன் இல்லாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்கு பென்ஷன் வழங்க வழி செய்ய வேண்டும். யூனியனில் ஒருவர் குமாஸ்தாவாக வேலை செய்யச் சென்றால் அவர் குமாஸ்தாவாகவே தான் ரிட்டயர் ஆக வேண்டியிருக்கிறது. ஆகவே அவர்களுக்குப் ப்ரமோஷனிற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தர வேண்டும்.

அடுத்தபடியாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் மாச்சிங் கிராண்ட்ஸ் கொடுக்கப்பட்டு வந்தது. 1970-ல் ஏற்பட்ட பஞ்சாயத்து பிரிவினைக்கு முன் அங்கு 40-உம் டவுன் பஞ்சாயத்துக்களாக இருந்தன. அவைகளுக்கு 1961-ல் 27-ம் நம்பர் ஆக்ட்படி கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களையும் கிராமப் பஞ்சாயத்துக்களாகக் கொண்டு அவற்றிற்கு மாச்சிங் கிராண்ட் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது—ஆனால் இன்று டவுன் பஞ்சாயத்துக்களுக்கு அந்த மாச்சிங் கிராண்ட் கிடைக்காத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது. அங்குள்ள பஞ்சாயத்துக்கள் வயபிள் யூனிட்ஸாக செயல்படாததால் எஸ்டாபிளிஷ்மென்ட் சார்ஜஸ் கொடுக்கவோ, மதிய உணவு வழங்கவோ, எலெக்ட்ரிக் சார்ஜஸ் கொடுக்கவோ முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகவே அவைகளுக்கு மாச்சிங் கிராண்ட் கொடுப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அங்கு ஒன்பது பஞ்சாயத்து யூனியன்கள்தான் இருக்கின்றன. ஒரு யூனியனில் 1,20.000 அல்லது 1,50,000 மக்கள் வசிக்

கிறார்கள். எனவே இப்போதுள்ள அந்த ஒன்பது பஞ்சாயத்து யூனியன்களை 18 பஞ்சாயத்து யூனியன்களாகப் பிரிப்பதற்கான வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ் ரூட்டாக உள்ள ரோடுகளை சர்க்காரே ஏற்று எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கிள்ளியூர் பஞ்சாயத்து யூனியனில் சாங்கையில் ஒரு வெட்டரினரி சப் சென்டர் ஏற்படுத்த வேண்டும். கடைசியாக பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் உறுப்பினர்கள் யாவரும் பஞ்சாயத்துத் தலைவர்கள். அவர்களுக்கு யூனியன் கவுன்சில் மீட்டிங்கிற்கு ஆஜராகும் நாள் இரண்டு ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மாதத்திற்கு ஒரு தடவை அல்லது இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவைகள்தான் கூடுகின்றன. இரண்டு ரூபாய் படி என்பது பஞ்சாயத்து போர்டு தலைவர்களை அவமானப் படுத்துவது போல செய்வதாக இருக்கும். ஆகவே பஞ்சாயத்து யூனியன் கவுன்சில் மீட்டிங்கில் ஆஜராகும் பஞ்சாயத்து போர்ட் தலைவர்களுக்குக் குறைந்தது பத்து ரூபாய் அல்லது குறைந்தது ஐந்து ரூபாய் ஆவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. எஸ். முருகையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்து இருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளை ஆதரித்து என் கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களை சமமான பஞ்சாயத்துகளாக இருக்கும் நிலையில் பிரிக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் சில ஊராட்சி ஒன்றியங்களில் 70–75 பஞ்சாயத்துகளும், சில ஒன்றியங்களில் 7-8 பஞ்சாயத்துகளும் இருக்கும் சூழ்நிலை இருக்கிறது. இவைகளை உடனடியாக மாற்றி சமமாக இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஜனத்தொகை பெருகுகின்ற நேரத்தில் சில ஊராட்சி ஒன்றியங்கள் நகர பஞ்சாயத்துகளாக மாறி இருக்கிறது. சில ஊராட்சிகள் மக்கள் தொகை குறைவாக இருப்பதால் பஞ்சாயத்துகளாகவே இருக்கின்றன. இருந்தாலும் அப்படிப் பார்க்கிறபோது மக்கள் தொகை சரி சமமாக வருகிற வகையில் அந்த ஊராட்சி ஒன்றியங்களுக் கெல்லாம் ஒரே மாதிரி



யான அடிப்படையில் ஊராட்சிகளைப் பிரித்துத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சில ஊராட்சி மன்றங்கள் 6 கிராமங்கள், 7 கிராமங்கள் கொண்டதாக இருக்கிறது. தனியாகப் பிரிக்க வேண்டுமானால் மக்கள் தொகை தனித்தனி கிராமங்களில் இருக்க வேண்டுமென்று இருக்கிறது. 7 கிராமங்களைக் கொண்ட ஊராட்சிகளைத் தனியாகப் பிரிக்க வேண்டுமென்பதில் கோளாறு இருந்தால் ஓரளவு தனி பஞ்சாயத்துகளாக பிரிக்கக்கூடிய அளவுக் குள்ள கிராமங்களைப் பிரித்து சுலபமான முறையில் பஞ்சாயத்து கள் அமைக்கலாம். பெரிய ஊராட்சிகள் இருப்பதைக் குறையாகச் சொல்லவில்லை. ஒரு கிராமத்திற்கும், ஒன்றியங்களுக்கும் 4 மைல், 5 மைல் தூரம் இருந்தால் அவற்றை மாற்றி தனியாக பஞ்சாயத்து களாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே துவக்கப் பள்ளிகளின் நிலை பொதுவாக இன்றையதினம் சரியான முறையில் இல்லை. கவனிக்க வேண்டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. கிராமப் பகுதியில் ஒரு பஞ்சாயத்தில் 5–6 கிராமங்கள் இருந்தால் 2–3 துவக்கப் பள்ளிகளே இருக்கின்றன. பொதுவாக துவக்கப் பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டுமானால், துவக்கப் பள்ளிகள் ஆரம்பிக் கிற நேரத்தில் பக்கத்தில் இருக்கும் கிராமத்திற்கும் பள்ளி ஆரம்பிக்க இருக்கிற கிராமத்திற்கும் 1 மைல் தூரத்திற்கு மேல் இருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஒரு மைலுக்குக் குறைவாக இருந்தால் பள்ளிகளைத் துவக்க முடியாது. ஆனால் வேறு சில இடங்களில் கிராமங்களுக்கு இடையில் ஆறு, ஓடை இவை வருவதால் போய் வருவதற்கு இடைஞ்சல் இருந்தால் 1 மைலுக்குள் இருந்தால் கூட புதிய பள்ளிகள் துவக்கலாம் என்று இருக்கிறது. ஆனால் கல்வித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்ன சொல்கிறார்கள் என்றால் அந்த கிராமத்திற்கும், பள்ளி ஏற்கெனவே உள்ள கிராமத்திற்கும் இடையே ஒரு மைலுக்கும் குறைவாக இடைவெளி இருக்கிறது. ஆகவே அங்கே ஆரம்பிக்க முடியாது என்று சொல்லி விடுகிறார்கள். இவற்றை அடிக்கடி மாவட்ட அபிவிருத்தி மன்றக்கூட்டங்களில் கூறியிருக்கிறோம். அப்படிச் சொல்லி வருகிற நேரத்தில் அடுத்த வருடம் பார்க்கலாம் என்று சொல்லிவிடுகிறார்கள். அடுத்த வருடம் வரும்போது மீண்டும் அவற்றை எழுப்புகிறபோது, ஜூன் மாதத்தில் ஆரம்பித் தால், சம்பந்தப்பட்ட குறிப்புகள் பெற்று அந்த விஷயம் வருவ தற்குள் செப்டம்பர் அக்டோபர் மாதம் வந்து விடுகிறது. ஆகவே,

[திரு. எஸ். முருகையன்] [1972 மார்ச் 11

மறுபடியும் அடுத்த ஆண்டு பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி விடுகிறார்கள். அதே நேரத்தில் தனியார் துறையில் வேறு பள்ளி ஆரம்பிக்கலாமா என்றால் அதற்கும் ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். ஆகவே, ஒரு பள்ளிக்கும் இன்னொரு பள்ளிக்கும் உள்ள தூரத்தைக் கணக்கெடுத்துக் கொள்ளாமல் தேவைக்கேற்றபடி துவக்கப்பள்ளிகளை உடனடியாகத் துவக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி ஆரம்பிக்கப்பட வில்லை யென்றால், துவக்கப் படிப்பே மாணவர்களுக்குத் தரவில்லை யென்றால் நாம் மேலும் மேலும் உயர்நிலைப் பள்ளிகளையும், கல்லூரிகளையும் துவக்குவதால் என்ன பயன் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

துவக்கப் பள்ளிகளுக்குக் கட்டிடம் கட்டுவதில் பல பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்றியங்களில் துவக்கப் பள்ளிகளைக் கட்டுவதற்கு அதிகத் தொகையை எந்தப் பஞ்சாயத்துக்கள் கொடுக்கின்றனவோ அங்கே முதலில் கட்டப்படுகிறது. பங்குத் தொகையைக் கொடுக்க முடியாத நிலையில் ஒரு சில பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. அவைகளுக்குத் துவக்கப்பள்ளிகளைக் கட்டுவதற்கு ஒன்றிய நிதியிலிருந்தோ, அல்லது அரசாங்கம் மானியமாகவோ, தொகை கொடுத்து, அந்தப் பள்ளிக் கட்டடம் கட்ட உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதை அரசாங்கம் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாதர் நலத் துறையைப் பொறுத்த வரையில் எடுத்துக் கொண்டால் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஏறத்தாழ 25 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. உண்மையிலே எங்கள் வடஆற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் 25 லட்சம் ரூபாய் செலவழிக்கப்படுகிறது. அதனால் போதுமான பலன் கிடைக்கிறதா என்றால் இல்லை. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் அந்த மாதர் நல இலாக்கா அதிகாரிகளைக் கேட்கிற நேரத்தில் அவர்கள் சொல்லக்கூடிய பதிலிலிருந்து தெரிந்து கொள்வது, எந்த அளவுக்குச் செலவினைச் செய்கிறோமோ அந்த அளவுக்குப் பலன் இல்லை என்பது தான். ஆகவே, இது சம்பந்தமாக அதிகாரிகள் தகுந்த கவனம் செலுத்தி, இந்த அளவுக்குப் பெரும்தொகை செலவழிக்கும் நேரத்தில் அதில் நலன்கள் எவ்வளவு பெற முடியுமோ அந்த வகையில் பெறுவதற்கு அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.



1972 மார்ச் 11] [திரு. எஸ். முருகையன்]

சில ஒன்றியங்களில் நகரப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. நகரப் பஞ்சாயத்துக்கள் என்றால் 5,000-க்கு மேற்பட்ட ஜனத்தொகையைக் கொண்டவை. அவர்களுக்கு ஒன்றியத்திலிருந்து எதுவும் மானியம் கொடுப்பது இல்லை. ஒன்றியத்திலிருந்து மானியம் கொடுக்காத சூழ்நிலையில் புதிதாக ரோடுகள் அபிவிருத்தி செய்வதற்கு முடியவில்லை. அவை நல்லமுறையில் இயங்க வேண்டுமானால், ஒன்றியத்திலிருந்து அவர்களுக்குப் பங்குத் தொகை தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படியில்லை யென்றால், அரசாங்கத்திலிருந்து தனி மானியம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அப்போது தான் அந்தப் பஞ்சாயத்துகள் நல்ல முறையில் தழைக்க முடியும் என்பதையும் சொல்லிக் கொள்கிறேன். அதோடு போதுமான சுகாதார வசதி, குடிதண்ணீர் வசதி பெற முடியும். ஆகவே, அரசாங்கம் இதற்குக் கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றியங்களிலே தச்சர், கருமார் பயிற்சி நிலையங்கள் வைத்து இருக்கிறார்கள். சிலயிடங்களிெ பயிற்சி நிலையமாக மட்டுமல்லாமல் உற்பத்தி நிலையங்களாக வைத்து இருக்கிறார்கள். உற்பத்தி நிலையத்தில் இரும்பு சாமான்கள் சரிவரக் கிடைப்பது இல்லை. கிடைக்காத நேரத்தில் அவர்கள் டன் ஒன்றுக்கு நியாயவிலை ரூ. 1,300 என்றால் வெளியே அவர்கள் ரூ. 2,000 வரை கொடுக்க வேண்டியிருக்கிறது. அரசாங்கத்திலிருந்து அவர்களுக்குக் கோட்டா ஒதுக்குகிறார்கள். ஒன்றியங்களில் உள்ள பல நிலையங்களில் இதுபோன்ற தச்சர், கருமார் பயிற்சி நிலையங்களுக்குப் போதுமான இரும்பு கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அரசாங்கம் அப்படிப்பட்ட ஒன்றியங்களுக்கு, இதுபோன்று பயிற்சி நிலையங்கள் வைத்து இருப்பவைகளுக்கு எல்லாம் அரசாங்கத்தின் உதவியோடு போதுமான இரும்பு பெற வசதி செய்ய வேண்டும். அதே போன்று இந்த நிலையங்கள் அரசாங்க டிப்போக்களிலிருந்து போதுமான மரங்களைக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொள்ள ஏற்பாடு செய்யவேண்டும். இன்றையதினம் ஒரு சின்ன நாற்காலி ஒன்றியத்தில் செய்ய வேண்டுமானால், மரத்தின் விலை வெளியே 50 ரூ. இருக்கிறது. விலை அதிகமாக இருப்பதால் வாங்குவதற்கு முடியவில்லை என்று இருந்து விடுகிறார்கள். அதையே டெப்போவில் வாங்கினால் ரூ. 10, குறைவாக ஆகிறது. ஆகவே, இன்றைக்கு ஒன்றியங்கள் அரசாங்க டெப்போவிலிருந்து மரம் வாங்கு

[திரு. எஸ். முருகையன்] [1972 மார்ச் 11

வதற்கும், அரசாங்க உதவியோடு இரும்புக் கோட்டா கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்து பரிசீலித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களில் நரம்புச்சிலந்தி போன்ற மற்ற தொத்துநோய் இருக்கிற பகுதிகளில் பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கிராமப் புறங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கொடுப்பதற்காக ஓவர் ஹெட் டாங்கு கட்ட வேண்டுமானால் அதற்குப் பங்குத் தொகை கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. சில பஞ்சாயத்துகள் அதைக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் இன்னும் கொஞ்சம் மானியத் தொகை ஒதுக்கிக் கொடுத்து, பங்குத் தொகை கொடுக்க முடியாத கிராமங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாசன வசதியைப் பொறுத்த வரையில் ஒன்றியங்கள் நிர்வகிக்கக் கூடிய சிறிய ஏரிகள, கால்வாய்கள் எல்லாம் பராமரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை குறைவாக இருக்கிற காரணத்தால் இவை செய்ய முடியவில்லை. இதனால் பாசன வசதி செய்வது காலதாமதம் ஆகிறது. வகுத்த கால்வாயைத் தொடர்ந்து இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை செப்பனிட நிதி வசதி இல்லாததால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவைகளை மாற்றி உடனடியாக எல்லாப் பாசன வசதிகளையும் பொதுப்பணித்துறை எடுத்துக் கொண்டால் நல்ல பாசன வசதி செய்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன். அதேமாதிரி ஒன்றியங்களின் நிர்வாகத்தில் மருந்தகங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு ஆண்டொன்றுக்கு 5,000 ரூபாய்க்குத் தான் மருந்து வாங்கக் கூடிய சட்டமிருக்கிறது. இந்த 5 ஆயிரம் ரூபாய்க்கு மருந்து வாங்கினால் போதுமா என்று கவனிக்க வேண்டும். அப்படி கவனிக்கிற நேரத்தில் போதாதென்று தோன்றுகிறது. இந்த ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து இன்னும் அதிகமாகப் பணம் ஒதுக்க வேண்டும், குறைந்தது 15 ஆயிரம் ரூபாயாவது ஒதுக்கப்பட வேண்டும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1972 மார்ச் 11] [திரு. எஸ். முருகையன்]

இந்த இணைப்புச் சாலைகள், ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குப் போக சரியான பாதை கிடையாது. அந்த மாதிரி பாதைகள் போடுகிற நேரத்தில் அதற்கு அந்தந்த இடத்திலுள்ள பட்டா நிலங்களை வாங்க வேண்டிய நிலை இருக்கிறது. அதைக் கூட சிலபேர்கள் கொடுக்க மறுக்கிறார்கள். இதுபோன்ற இணைப்புச் சாலைகளுக்கு நிலங்கள் வாங்கச் சட்டம் இடம் தரவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரி இணைப்புச் சாலைகளுக்கு வேண்டிய நிலங்களை இனிமேல் அரசாங்கமே வாங்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சீரணி இன்னும் சற்று அதிகமாக செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் ஊரான திருவண்ணாமலையில் பாதாளச் சாக்கடைத் திட்டம் இன்னும் செயல்படாமல் இருக்கிறது. இந்த ஊர் ஒரு நல்ல க்ஷேத்திரமாக இருப்பதால் அடிக்கடி மக்கள் நிறையப் பேர்கள் வந்து போகிறார்கள். ஆகவே இந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாவட்ட வளர்ச்சிக் குழு போடும் தீர்மானங்களை எல்லாம் செயல் படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடிக்கிறேன்.

* திரு. நா. வெ. குருசாமி: சட்டப் பேரவை உதவித் தலைவர் அவர்களே, 72-73-க்கான மானியக் கோரிக்கையின் மீது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளதன் மீது எங்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே அவர்கள் கொடுத்த வெட்டுப் பிரேரணையை ஆதரித்து என்னுடைய கருத்தைக் கூறவேண்டுமென்று ஆசைப்படுகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் இணைப்புச் சாலை வசதிகள் செய்வதற்கு இந்த மானியக் கோரிக்கையில் வகை செய்யப் பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் சாலை வசதிகள் மிகவும் மோசமாக இருக்கிறது. நமது கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியிலுள்ள மயிலாடும்பாறைக்குச் செல்கிறபோது அங்கேயுள்ள சாலை எவ்வளவு மோசமாக இருக்கிறது என்பதைப் பார்த்தார்கள். அதேபோல வருசநாடு புலிமான்கோம்பை, மற்றும் பெரியகுளம் ஆண்டிப்பட்டி சமீபத்திலுள்ள குள்ளப்புரம் வழியாகச் செல்கிற சாலைகள் ரொம்ப மோசமாக இருக்கிறது. அதையெல்லாம் கவனிக்க வேண்டு

மென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து ஒன்றியங்கள் மூலமாக விவசாயிகளுக்கு மருந்துகள் கொடுக்கப்படுறது. ஆனால் அவைகள் சரியாக விவசாயிகளுக்குக் கிடைப்பதில்லை.

குறிப்பாக 'பாலிடால்' கொடுக்கப்படவில்லை. அது, ஏன் கிடைக்கவில்லை என்று கேட்டால், அங்கே உள்ளவர்கள் கடைகளுக்குக் கொடுத்துவிடுவார்கள் போல் இருக்கிறதென்று பேசிக்கொள்கிருர்கள். மேலும் மருந்துகள் ஒரு ரூபாய்க்கு, அல்லது 5 ரூபாய்க்கு ஒரு ஏழை விவசாயி வாங்கப் போனுல் லாட்டரிச் சீட்டு வாங்கினுல் தான், அல்லது ஒரு ரூபாய்க்கு விவசாய சம்பந்தமான புக் வாங்கினுல் தான் கொடுப்பேன் என்று சொல்கிருர்கள். படிக்காத விவசாயிகள் ஒரு ரூபாய்க்கோ அல்லது 5 ரூபாய்க்கோ மருந்து வாங்கச் சென்ருல் இப்படிச் சொல்வது அவ்வளவு சரியல்ல என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மற்றும் ஊராட்சி ஒன்றியங்களில் ஆசிரியர்கள் படும்பாடு மிகவும் பரிதாபகரமாக இருக்கிறது. காரணம் லஞ்சம் தான் தாண்டவம் ஆடுகிறது. ஆசிரியர் பதவிக்குப் பணம் கொடுத்தால் தான் வேலை கிடைக்கும் என்ற நிலை இருக்கிறது. ஏழைகள், படித்துவிட்டு வேலை இல்லாமல், 65-ம் ஆண்டிலிருந்து இதுவரைக்கும். கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். ஆகவே அவர்களின் பிரச்சனையைத் தீர்க்க ஏற்பாடு செய்ய வேண்டும். நான் இதே கருத்தைச் சென்ற ஆண்டு பட்ஜெட் உரையில் கூறியிருக்கிறேன். ஆகையால் ஆசிரியர்களை நியமிக்கும் கமிட்டியில் சட்ட மன்ற உறுப்பினர்களையும் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் என்னுடைய பகுதியில் வருசநாடு மலைப் பகுதியில் சுமார் 100, 150 ஆசிரியர்கள் வேலை பார்க்கிருர்கள். அவர்களுக்கு வருடா வருடம் மாறுதல் கொடுக்கப்பட வேண்டியிருக்கிறது. காரணம் அவர்கள் மலைப் பகுதிக்குப் போவதற்கு விரும்பவில்லை. ஆகவே, அவர்களுக்கு மலைப் பகுதிக்குக் கொடுக்கக் கூடிய அலவன்சைக் கொடுத்தால் அவர்கள் இப்படி அடிக்கடி மாற்றத்தை விரும்பமாட்டார்கள். ஆகவே கல்வி அமைச்சர் அவர்கள் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மாணவர்களைப் பள்ளிக்கு அழைத்துச் செல்ல 'கண்டக்டர்கள்' என்பவர்கள் போடப்படுகிருர்கள். ஆனுல் இவர்களுக்கு ஒரு ஒன்றியம் 50 ரூபாய் சம்பளம் கொடுக்கிறது. மற்ருெரு ஒன்றியம் 100 ரூபாய் கொடுக்கிறது. இன்ருெரு ஒன்றியம் 150 ரூபாய் கொடுக்கிறது. ஆகையால் எந்த ஒன்றியம் இப்போது அதிகமாகக் கொடுக்கிறதோ அதையே எல்லா ஒன்றியங்களும் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி மன்றங்களுக்கு ஒன்றியங்களிலிருந்து வானொலிப் பெட்டிகள் சகாய விலையில் கொடுக்கப்படுகிறது. அதே போல, அதை வைப்பதற்கும் ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் வானொலி வைக்கக் கட்டிடம் தரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியான ஆண்டிப்பட்டியில், குன்னூர் கூட்டுக்கூடி நீர் வழங்கும் திட்டம் என்று போட்டு அதன் மூலம் 33 கிராம பஞ்சாயத்துக்களுக்கு குடி நீர் வசதி செய்யத் தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. அதை விரைவில் நிறைவேற்ற கல்வி, உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் ஒன்றியங்களுக்குத் தலைவர்களாக சட்டமன்ற உறுப்பினர்களையே போட வேண்டும் என்று எல்லா மாவட்டத்திலும் பேசப்படுகிறது. அப்படி சட்ட மன்ற உறுப்பினர் இருந்தால் நிர்வாகம் நன்ருக இருக்கும் என்றும் குறிப்பாக மதுரை மாவட்ட கவுன்சிலில் கேட்டுக் கொண்டார்கள். ஆகவே எம்.எல்.ஏ-க்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்குத் தலைவர்களாக நியமிக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி இல்லை என்று சொன்னுல் பஞ்சாயத்துத் தலைவர்கள் மூலம் தேர்ந்தெடுப்பதைக் காட்டிலும், நேரடியாகத் தேர்ந்து எடுக்க வகைசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிக்கூடக் கட்டிடங்கள் பல கட்டப்படுவதற்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். அதே நேரத்தில் எனது தொகுதியில் ஒரு இடத்தில் ஒரு பள்ளிக் கூடம் கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாக கட்டத் தொடங்கப்பட்டு அது ஜன்னல் மட்டம் வரையில் வந்து நிற்கிறது. அதில் பல அரசியல் தலையீடுகள் இருக்கிறதாக அறிகிறேன். அந்தப் பள்ளிக் கூடம் 5 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு புறம்போக்கு

நிலத்தில் கட்டத் தொடங்கப்பட்டது. அந்த ஊரில் உள்ள ஒரு பெரிய மனிதர் அதைக் கட்டவிடாமல் அடிக்கடி 'ஸ்டே' வாங்கிக் கொண்டிருந்தார். ஆகவே, அது ஜன்னல் வரை வந்து அப்படியே நிற்கிறது. சில மாதங்களுக்கு முன்பாக நானும், பெரியகுளம் ஆர்.டி.ஓ-வும், ஆண்டிப்பட்டி கமிஷனரும் ஒன்றியப் பெருந் தலைவரும் சென்று அந்த இடத்தைப் பார்த்தோம். அதைக் கட்டக் கூடாதென்று 'ஸ்டே' ஆர்டர் வாங்கிக்கொண்டிருந்ததை ஆர்.டி.ஓ. இனிமேல் வாங்கவிடாமல் தவிர்த்தார். ஆகவே இந்தப் பள்ளிக் கட்டிடத்தை விரைவில் கட்ட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நீர்ப் பாசன விஷயத்தில் ஒவ்வொரு குளத்தையும் 5 ஆண்டுக்கு ஒரு முறை சீர்திருத்த வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியில் பல கண்மாய்கள் தூரே எடுக்கப் படாமலிருக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்.

**திரு. கே. பி. கந்தசாமி**: தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டு இருக்கின்ற கோரிக்கைகளுக்கு எனது ஆதரவைத் தெரிவித்து எனது ஒரு சில கருத்துக்களை எடுத்து வைக்க விழைகின்றேன். கழக அரசு உறுதியோடு கடைபிடித்து வருகின்ற இந்த சமதர்ம கொள்கையைக் கொஞ்சம் விரிவுபடுத்தி கிராமங்களுக்கு எடுத்துச் சென்று நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் இடையில் இருக்கின்ற ஏற்றத் தாழ்வுகளை அகற்ற வேண்டுமென்ற அளவுக்கு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டதால் இன்றைக்குக் கிராம மக்கள் மத்தியில் இந்தக் கழக அரசின் மேல் ஒரு நல்ல எண்ணம் ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கிராமங்கள் தோறும் மின்சார வசதி, குடி தண்ணீர் வசதி, இணைப்புச் சாலைகள் வசதி ஆகிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வகை செய்துள்ளது. ஏராளமான கிராமங்களில் வாழும் மக்களுக்கும், நகரங்களில் வாழும் மக்களுக்கும் ஏற்றத்தாழ்வு இல்லாதிருக்க வேண்டும் என்ற நிலையில் அரசு செயல்படத் தொடங்கியிருப்பதை அறிந்து, கிராம மக்கள் எல்லாம் இந்த அரசை நிச்சயமாகப் பாராட்டுவார்கள். அதைப்பற்றி நான் மிகவும் பெருமைப்படுகிறேன்.





குறிப்பாக, 1972-73-ம் ஆண்டுக்குள்ளேயே எல்லாக் கிராமங் களுக்கும் மின்சார வசதி செய்து கொடுத்துவிட வேண்டுமென்ற எண்ணத்தோடு அரசாங்கமும், மின்சார வாரியமும் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இப்படி அரசாங்கமும், மின்சார வாரியமும் செயல்படுகின்றபோது அனேக ஊராட்சி களில், போடப்பட்ட பல்புகள் அல்லது மின்சார விளக்குகள் சரியாக எரியவில்லை என்ற குறை இருக்கின்றது. மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே கூட இப்படிப்பட்ட குறைகள் எடுத்துச் சொல்லப்படுகின்றன. இதைப்பற்றி மக்கள் ஊராட்சித் தலைவரைக் கேட்டால், "நான் என்ன செய்வது மின்சார வாரிய எஞ்சினியரைத்தான் கேட்க வேண்டும்" என்று சொல்லி விடுகிறார். அவரைப் போய் கேட்டால் அவர், 'நான் என்ன செய்வது, மாதத்திற்கு 10 ஆயிரம் விளக்குகள் தேவை என்றால் கிடைப்பது ஆயிரம் அல்லது இரண்டாயிரம் பல்புகள்தான்" என்று சொல்லிவிடுகிறார்.

இப்படி சம்பந்தப்பட்டவர்கள் சொல்லிவிடுவதால், எல்லோருக்கும் அரசாங்கம் இதற்குக் காரணமாக இருக்கிறது என்று நினைக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, உள்ளாட்சியும், மின்சார வாரியமும் சேர்ந்து கலந்து பேசி ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இப்போதே இந்த மாதிரியான சிறிய சிறிய பிரச்சனைகள் தீர்க்கப்படாமல் இருந்தால், இதை வைத்தே பெரும் பெரும் கிளர்ச்சிகளைத் தோற்றுவிப்பதற்குச் சிலர் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொழில் அனுமதி இல்லை என்று இங்கே பேசுகிறார்கள். அங்கே போய் தொழிலாளர்களைப் போராட்டத்திற்குத் தூண்டி விடுகிறார்கள். அந்தச் செய்கையால் பெரிய பெரிய கிளர்ச்சிகளும், போராட்டங்களும் தோற்றுவிக்கப்படுகின்றன. பின் இங்கே வந்து, என் இந்த அரசு தொழிலாளர்கள் கிளர்ச்சியில் கடுமை யான நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று கூடக் கேட்கிறார்கள். ஆகவே, இதை யெல்லாம் உத்தேசித்து இப்படிப்பட்ட சின்னப் பிரச்னைகளே பெரிய அளவுக்கு உருவாக விடாமல் ஆரம்பத்தி லேயே அவைகளுக்குத் தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதற்கு என்னுடைய கருத்தினை இங்கே கூற விரும்புகிறேன். மின்சார வாரியமும், அரசும்தான் ஆண்டு ஒன்றுக்கு மூன்று தடவைகள் பல்புகளை மாற்றிக் கொடுக்க வேண்டும் என்றிருப்பதை மாற்றி, இந்த பல்புகளை பஞ்சாயத்துக்களே வாங்கி மாற்றிக் கொள்ளலாம். என்று செய்ய வேண்டும். அப்படி பல்புகள் வாங்குவதிலே ஏதாவது தவறு நடந்துவிடும் என்று கருதினால் பஞ்சாயத்துத் தலைவருக்குப் பொறுப்பு இருக்கின்ற வகையில் ஒரு விதியை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்படிச் செய்தால் சில இடங்களில் கிராம மக்களுக்கு அரசாங்கத்தின் மீதிருக்கும் கசப்பு மாறிவிடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, கிராமங்கள் அனைத்திற்கும் குடிநீர் வசதி என்று திட்டமிட்டு நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். சிற்றூர் அனைத்திற்கும் சீர்மிகு சாலைகள் அமைத்திடவும், குடிநீர் வசதி அளித்திடவும் 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகும். எனினும், அதனையெண்ணி பெருமூச்சு விட்டுக்கொண்டேயிருந்தால் அந்த நல்ல காரியத்திற்கான தொடக்க விழாவில்கூட நம்மால் அடியெடுத்து வைக்க முடியாமல் போய்விடும் என்றும், அந்தப் பயன்மிகு காரியத்தைப் படிப்படியாகச் செய்து முடித்திட வேண்டுமென்று உறுதியளித்திருப்பதற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படிப்பட்ட வசதிகளைப் பெற வேண்டுமானால் குடிநீர் வாரியத்தில் கடன் உதவி பெறலாம் என்றிருக்கிறது. ஆனால் இந்த உதவி பெறுவதற்கு முன்பே, ஆய்வு செய்வதற்காக சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் 30 ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. இதைக் கொடுக்க முடியாத ஊராட்சிகள் இந்த வசதியை பெறமுடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே எப்படி நகரத்திற்கும், கிராமத்திற்கும் ஏற்றத் தாழ்வைப் போக்க வேண்டுமென்று நினைக்கிறோமோ அதைப்போன்று வசதி படைத்த ஊராட்சிகளுக்கும், வசதியற்ற ஊராட்சிகளுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வைப் போக்கி இந்தத் திட்டத்தைச் செயல் படுத்த வேண்டும். அதற்கு வசதியற்ற பஞ்சாயத்துக்களுக்கு இந்த விதியைக் கொஞ்சம் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்தபடியாக, எல்லாச் சிற்றூர்களுக்கும் நல்ல இணைப்புச் சாலைகள் அமைத்துக் கொடுக்க பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால், அந்த இணைப்புச் சாலைகளைப் போடும்போது, அந்தச் சாலை 10 அல்லது 15 பேர் நிலத்தில் வருகிறது என்றால், அதில் இரண்டு பேர் தங்கள் நிலத்தை விட்டுக் கொடுக்காவிட்டாலும் சாலை அமைக்கப்படாமல் நின்றுவிடுகிறது. பொதுப்பணித் துறையில் ரோடுகள் போடும்போது இப்படிப்பட்ட தடைகள் ஏற்பட்டால் அதை நீக்குவதற்கு இந்த அரசுக்கு அந்த நிலத்தை அக்வயர் செய்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் பஞ்சாயத்துக்களுக்கு அந்த அதிகாரம் இல்லை. எனவே பஞ்சாயத்துக்களுக்கும் அம்மாதிரிச் சந்தர்ப்பங்களில் நிலத்தை அகவயர் செய்வதற்கான அதிகாரம் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்வியைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கல்வித் திட்டத்திற்காக, ஆண்டு ஒன்றுக்கு தொடக்கக் கல்விக்காக 38 கோடி ரூபாய் செலவு செய்து வருகிறோம். இப்போது பரிசுச் சீட்டு மூலமாக ஏறக்குறைய 35 லட்சம் ரூபாய் வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இவைகளைப் பார்க்கும்போது நிச்சயமாகக் கிராம மக்கள் இந்த அரசைப் பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

அதே நேரத்தில் இதுவரை இந்தத் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஒரு குறை இருந்தது. அதாவது அவர்களுக்கு முதல் தேதியில் சம்பளம் கிடையாத நிலை இருந்தது. சில பள்ளிகளில் 2 மாதங்கள், 3 மாதங்கள் கழித்துக் கூட சம்பளம் பெறக்கூடிய நிலை இருந்தது. ஆசிரியர்களும் அந்த அளவுக்குப் பொறுமையாக இருந்தார்கள். அது சம்பந்தமாக அரசுக்குப் பல கோரிக்கைகளை விடுத்தனர். அவர்கள் கோரிக்கைகளை அரசு ஏற்று, கடந்த ஜனவரி முதல் மாதத்தின் முதல் தேதியே சம்பளம் வழங்கப்படுவதற்குத் தக்க நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இதை ஆசிரியர்கள் மனதாரப் பாராட்டுகிறார்கள்.

இன்னும் இந்தத் தொடக்க கல்வியைப் பொறுத்த மட்டில் நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி வசதி படைத்த ஊராட்சிகளிலும், வசதியற்ற ஊராட்சிகளிலும் கல்வியிலும் உள்ள ஏற்றத் தாழ்வைப் போக்க வேண்டும். அதற்கு ஊராட்சி கல்வி

நிதியாணைக் குழுவின் பரிந்துரைகளை அமைச்சர் அவர்கள் பரிவுடன் கவனித்து, விரைவிலே நல்லதொரு முடிவினை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி ஒரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். என் தொகுதியாகிய சாத்தான்குளத்திலுள்ள உடங்குடி ஊராட்சியில் கிராம வேலைவாய்ப்புத் திட்டம் செயல் படுத்தப்படுவதாக இருந்தது. ஆனால் கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு அந்தத் திட்டம் திரும்பப் பெறப்பட்டு, வேறொரு ஊராட்சிக்கு மாற்றப்பட்டிருப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்று மாவட்ட ஆட்சித் தலைவரைக் கேட்டால் அங்கு ஏதோ ஊழல் நடந்திருக்கிறது. அதனால்தான் மாற்றப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார். அந்த ஊராட்சியில் இப்போது ஊரெல்லாம் ஊழல், ஊழல் என்று சொல்லிக் கொண்டு திரிகின்றார்களே ஒரு கட்சியினர். அந்தக் கட்சியைச் சேர்ந்தவர் தலைவராக இருக்கிறார். ஊழல் செய்தவர் யாராக இருந்தாலும், தக்க விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்டவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராம வேலைவாய்ப்புத் திட்டம் உடங்குடி ஊராட்சியிலிருந்து மாற்றப்பட்டதால் அந்தப் பகுதி மக்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஒருவர் செய்த குற்றத்தால் ஊர் மக்கள் அத்தனைபேரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். எனவே, தவறு செய்தவர் மீது நடவடிக்கை எடுத்து, இந்த ஆண்டில் இல்லாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது உடங்குடி ஊராட்சிக்கு இந்தக் திட்டத்தைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்ததாக, திரு. எம். ஆர். கண்ணன் எட்டு நிமிடங்களுக்குள் பேசுவார். மேலும் நான்கு பேர்கள் பேசவேண்டியதாக இருக்கிறது.

**திரு. எம். ஆர். கண்ணன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்டிருக்கிற மானியத்திற்கு என்னுடைய ஆதரவைத் தெரிவித்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.





சென்னைக்குக் குறிப்பாக என்னைப் போன்ற ஒன்றிரண்டு உறுப்பினர்கள் தான் இருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பல பேச்சாளர்கள் பேசினார்கள். அவர்களுக்கு எல்லாம் கொடுத்த கால அளவாவது சென்னையைச் சேர்ந்த பேச்சாளர்களாகிய எங்களுக்குக் கொடுக்க வேண்டும் கொறடா அவர்கள் கூட இரண்டு முறை பேசினாய், மூன்று முறை பேசினாய் என்று கூறுகிறார்களே தவிர சென்னையைச் சேர்ந்த நாங்கள் பேச வேண்டிய அவசியத்தை உணர்ந்து எனக்குச் சிறிது கூடுதலாகக் காலம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தமிழக ஆட்சிப் பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் ஏற்றுக் கொண்ட பிறகு நல்லபல நன்மைகளைச் செய்திருக்கிறது. பொதுவாகத் தமிழக மக்கள் அத்தனைபேரும் பாராட்டுகிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் இருபதாண்டு காலம் ஆட்சி செய்த காங்கிரஸ்காரர்கள் காலத்தில் கிடைக்காத நன்மைகள் எல்லாம் கழக ஆட்சியில் ஒன்றன்பின் ஒன்றாகக் கிடைத்து வருகின்றன. அகில இந்தியக் கட்சியாகிய காங்கிரஸ் ஆண்டபோது சென்னையில் அவர்கள் செய்தது எல்லாம் நவீன மாட மாளிகைகளில் வசித்த பணக்காரர்களுக்கு நன்மை அளிக்கக் கூடியதாகத்தான் இருந்தது. தெரு ஓரங்களில் குடிசைகளில் வாழ்ந்த மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கத் தக்க திட்டங்களை வகுக்கவில்லை. ஒவ்வொரு ஆண்டும் காலரா போன்ற தொத்து நோய்களால் இந்த ஏழை எளிய மக்கள் எத்தனையோ பேர்கள் மாண்டு வந்தார்கள். இதற்கு முன் நம் மாநிலத்தை ஆண்ட காங்கிரஸ் கட்சியினர் இவர்கள் எல்லாம் வசதியாக சுகாதாரத்தோடு வாழ வேண்டுமென்று எண்ணினார்களோ என்னமோ? ஆனால் நடைமுறையில் இவர்களுக்காக எந்தவிதமான திட்டத்தையும் போடவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு தான் கூவம் சீரமைப்புத் திட்டத்தை எடுத்துக் கொண்டார்கள். இதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு எல்லாம் நல்ல சுகாதார வசதி கிடைக்கும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

அதேபோன்று வீராணம் குடிநீர்த் திட்டத்தை சென்னைக்குக் கொண்டு வந்தார்கள். காங்கிரஸ் ஆட்சியில் இதுபோன்ற திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று எத்தனையோ முறைகள்

சொல்லியும் அப்போது ஆண்டவர்கள் அதற்கு வாய்ப்புத் தரவில்லை. வீராணம் திட்டத்திற்கு மத்திய அரசு உடனடியாக அனுமதி அளிக்காவிட்டாலும் கூட இப்போது அந்தத் திட்டம் நல்லமுறையில் நடைபெற இருக்கிறது. இதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு சென்னைவாழ் மக்கள் என்றென்றைக்கும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதில் ஐயப்பாடு இல்லை.

அதேபோன்று குடிசை சீர்அமைப்புத் திட்டம் பற்றி எத்தனையோ ஆண்டுகளாகத்தான் சொல்லிவந்தோம். மழையினாலும், தீயினாலும் பாதிக்கப்படுகிறபோது ஏதோ உதவி செய்தார்களே தவிர நல்லமுறையில் எவ்விதத் திட்டமும் வகுக்கவில்லை. ஆனால் திராவிட முன்னேற்றக் கழகம் குடிசை மாற்று வாரியம் என்று ஏற்படுத்தி, அதற்காக ஒரு தலைவரைப் போட்டு 7 ஆண்டுத் திட்டம் ஒன்றைத் தயாரித்து நல்லமுறையில் ஏழை எளிய குடிசை மக்களுக்கு வீடுகள் கட்டி வருகிறார்கள். இப்படி கூவம் சீரமைப்புத் திட்டம், வீராணம் குடிதண்ணீர் திட்டம், குடிசைமாற்று அமைப்புத் திட்டம், பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டம் என்பதாக இந்த 4 திட்டங்களை எடுத்துச் செயல்படுத்தி வருகிறார்கள். இந்த நான்கு திட்டங்களும் நல்ல முறையில் பூர்த்தியானாலே சென்னை நகரம் மிகவும் வசதியுள்ளதாக, ஆரோக்கியமுள்ளதாக ஆகும் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

இதுபோன்று திட்டங்களை ஆட்சியாளர்கள் தீட்டித்தான் கொடுக்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற வேண்டியது அதிகாரிகள் தான். அதிகாரிகள் செய்வது ஒரு பெரிய சமூகத் தொண்டாகும். அவர்களும் நேர்மையுடன், நல்லமுறையில் செயலாற்றுகிறபோது தான் நன்மைகள் ஏற்படும். ஒன்றிரண்டு தவறுகள் அவர்களால் உண்டாக்கப்படுகிறபோது—ஊழல் ஊழல் என்பதாக ஆட்சியாளர்களைக் குறை சொல்லி என்ன பயன்? அந்த அதிகாரிகளும் இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் தான். எங்கிருந்தோ வரவில்லை. ஏழ்மை காரணமாக, வறுமை காரணமாக தவறி விடக்கூடும். அப்படித் தவறு செய்வதற்குக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் காலத்தில் இருந்தே பழகியவர்கள் தானே தவிர அதற்கு இந்த ஆட்சி பொறுப்பல்ல. நாங்கள் வந்து அவர்களை ஏழையாக்கி இந்தத் தவறுகளைச் செய்யும்படியாகச் சொல்லவில்லை. அது





போன்ற தவறுகள் நடைபெறாதிருக்க எல்லோரும் பார்த்துக் கொள்ளக்கூடிய பொறுப்பு இருக்கிறது. ஆட்சியாளர்களைக் குறைசொல்லி மட்டும் எவ்விதப் பயனும் இல்லை. அரசு திட்டங்களைத்தான் தீட்டுகிறது ஆட்சியாளர்கள் தான் அவற்றைச் செயல்படுத்துகிறார்கள். மாவட்டங்களில் எல்லா வேலைகளையும் அரசே செய்கிறது. ஆனால் சென்னையில் கார்ப்பரேஷன்தான் எல்லாவற்றையும் செய்கிறது. சென்னை நகரத்தை எடுத்துக் கொண்டால் ரோடுகள் நல்ல நிலைமையில் இல்லை. உள்ளதைச் சொல்ல வேண்டும். எங்கள் காலத்தில் இப்படி இல்லை, உங்கள் காலத்தில் இப்படி இருக்கிறது என்பதாகப் பேசுவதில் பயன் இல்லை. நாம் எல்லோருமே காரியங்கள் ஒழுங்காக, முறையாக நடைபெறுவதற்கு அரசுக்கு ஆலோசனை கூறத்தான் இருக்கிறோம்.

இன்றையதினம் கார்ப்பரேஷன் சில ரோடுகள் தார் போடுகிறார்கள். சிலவற்றை சிமின்ட் போடுகிறார்கள். சிலவற்றை செஸ்ஸ்டோன் போடுகிறார்கள். இப்படிச் செய்கிறபோது சிறிய ரோடுகளை எல்லாம் இரண்டு பக்கமும் குடியிருப்புகள் உள்ள இடத்தை சிமின்ட் ரோடாகப் போடுகிறார்கள். மின்சார கனெக்ஷன், தண்ணீர் கனெக்ஷன் கொடுக்கிறபோது அது உடைபட்டு விடுகிறது. மறுபடி ரோடு பாழடைந்துவிடுகிறது. ஆகவே சிறிய ரோடுகளைத் தார் ரோடாகவே போட வேண்டும். பெரிய ரோடுகளை சிமின்ட் ரோடுகளாகப் போடலாம். எங்கள் பகுதியில் ஆதியப்ப நாயக்கன் தெரு செஸ் ஸ்டோனால் போட்டார்கள். அது கூட ரிப்பேர் காலங்களில் துண்டுதுண்டாக கற்களை எடுத்துவிட்டு ரிப்பேர் ஆனவுடன் அவற்றை மீட்டும் சரிப்படுத்துவதற்கு முடிகிறது. அதுபோன்றாவது சிறு ரோடுகளை அமைக்கலாமே தவிர சிமின்ட் ரோடுகளாகப் போடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சென்னையில் விளக்கு வசதி பெரிதும் பழுதடைந்திருக்கிறது. எந்த டிவிஷனுக்குச் சென்றாலும் நூற்றுக்கு 50 விளக்குகள் எரிவதில்லை. என்னுடைய வேண்டுகோள் இந்த விளக்கு வசதி செய்து கொடுப்பதை மின்சார போர்டிடமே விட்டுவிடலாம். மற்ற மற்ற வீடுகளுக்கு அவர்களே வசதி செய்து கொடுப்பதுபோல் சென்னை வீதிகளுக்கும் மின்சார விளக்குகள் போட்டு பராமரிக்கும் பொறுப்பு மின்சார போர்டிடமே விடப்படலாம்.

[திரு. எம். ஆர். கண்ணன்] [1972 மார்ச் 11

என்னுடைய தொகுதியில் தண்டையார்ப்பேட்டையில் ரெயில் கேட்டை மூடிவிட்டால் ஒரு மணி ஆகும் மீண்டும் திறப்பதற்கு. மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். பாலங்கள் அமைப்பது என்கிறபோது இதுபோன்ற இடத்திற்கு முதலில் பாலம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடசென்னை புறக்கணிக்கப்படுகிறது என்கிற எண்ணம் அந்தப் பகுதி மக்களிடையே இருக்கிறது. தென் சென்னையைப் பார்த்தால் எல்லா அபிவிருத்திகளும் நடைபெறுகின்றன. அமைச்சர்கள் எல்லாம் தென்சென்னையில் இருப்பதால்தான் அப்படி அபிவிருத்திப் பணிகள் நடைபெறுகின்றன என்கிற எண்ணம் மக்களிடையே இருந்து வருகிறது. பக்கிங்காம் கால்வாயின் கிழக்கு, மேற்கு என்று இரு பகுதிகளாகப் பார்த்து, அமைச்சர்களும், அதிகாரிகளும் சுற்றிப் பார்த்தால், எந்தப் பகுதியில் அபிவிருத்திப் பணிகள் அதிகமாக நடைபெற்றிருக்கின்றன என்பது தெரியவரும். ஆகவே, இந்த நிலையில் தண்டையார்ப் பேட்டையில் அந்தப் பாலத்தை அமைத்துத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பஸ் ஸ்டாண்டைப் பற்றியது. மிண்ட் ஸ்ட்ரிட் இருக்கிறது. அங்கே ஒரு ஸ்கெச் சர்வே அமைத்திருந்தார்கள். நடுவிலே மழை பெய்ததால் அது மக்களுக்குப் பயன்படாமல் போய்விட்டது மூலக் கடையில் கார்ப்பரேஷன் பஸ் ஸ்டாண்டு இருக்கிறது. எந்தவிதமான அபிவிருத்தியும் இல்லை. நல்ல அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வேண்டும், பேசின். பிரிட்ஜை நல்ல முறையில் கட்டி வசதி செய்ய வேண்டும்.

அடுத்தது, வரி ஏய்ப்புப் பற்றியது. நூற்றுக்கு ஐம்பது பணக்காரர்கள் வரியே கட்டாமல் ஏய்க்கிறார்கள். இல்லாவிட்டால் குறைந்த வரி கட்டுகிறார்கள். ஏழை குடிமகன்தான் நிறைய வரி கட்டுகிறான். கார்ப்பரேஷன் அதிகாரிகள் அல்லது வேறு அதிகாரிகளைக் கொண்டு சாம்பிள் சர்வே எடுக்க வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருக்கக்கூடிய வரிகளையே வசூலித்தால் அதிக நிதி வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக டவுன் பிளானிங் சிஸ்டம் இருக்கிறது. சென்னையில் வீடு கட்டுபவர்கள், அனெக்ஸ் பகுதியில் அமல் படுத்தினால் நலமாக இருக்கும். ஆனால் திருவொற்றியூர், எண்ணூர் பகுதிகள் எல்லாம் டவுன் பிளானிங் நோட்டிபைடு ஏரியா என்று இருக்கிறது. அந்தப் பகுதிகளில் ஏழைபாட்டாளிகள்தான் அரை கிரவுண்டு, கால் கிரவுண்டு இடம் வைத்திருப்பான். அதில் முன்னே பத்தடி, ஓரத்தில் ஐந்து அடி, பின்னே ஐந்து அடி என்றால் அவன் என்ன செய்ய முடியும்? இருப்பதோ அரை கிரவுண்டு இப்படிப்பட்ட பகுதிகளில் டவுன் பிளானிங் சிஸ்டத்தை மாற்றி அமைக்க வேண்டும். எந்தெந்த இடங்களில் எந்தெந்த சிஸ்டத்தை அனுசரிக்க வேண்டுமென்பதை நிர்ணயித்துவிட வேண்டும்.



1972 மார்ச் 11] [திரு. எம். ஆர். கண்ணன்]

அடுத்து, மலேரியா ஒழிப்புத் திட்டத்தைப் பொறுத்த வரையில், நேஷனல் மலேரியா எராடிகேஷன் ஸ்கீம், லோகல் மலேரியா எராடிகேஷன் ஸ்கீம் என்று இரு அமைப்புகளாக இருக்கின்றன. இந்த இரு அமைப்புகளையும் ஒரே அமைப்பாக இணைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாநகராட்சி கல்வியிலே ஐந்தாவது வகுப்பு வரை அளிக்கலாம் என்றும் மற்றவற்றைச் சர்க்கார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் சொல்லிக்கொள்கிறேன். மாநகராட்சியின் வருமானத்தைக் கொண்டு அதிகமாகச் செலவழிக்க முடியாது. ஹைஸ்கூல் பள்ளிகளை நடத்த முடியாது. இதை அரசு பரிசிலிக்க வேண்டும் என்று கூறி, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து திரு. வி. கிருஷ்ணமூர்த்தி ஐந்து நிமிடங்கள் வரையில் பேசுவார்.

**திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (திருச்சி) :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் உள்ளாட்சி-கல்வி அமைச்சர் அவர்கள் அளித்திருக்கும் மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விழைகிறேன்.

உள்ளாட்சித் துறையின்கீழ் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்கு நமது அரசு 1972-73-ம் ஆண்டுக்காக 77.14 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது. இதன்கீழ் 12,642 ஊராட்சிகள், 600 பேரூராட்சிகள், 12 நகரியங்கள் ஆகியவைகளை உள்ளடக்கிய 374 ஊராட்சி ஒன்றியங்கள் பயன் அடைகின்றன.

1972 மார்ச் 11] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

ஊராட்சி ஒன்றியங்களின் இணைப்புச் சாலைகள், கிராமங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்கும் பொருட்டு இணைப்புச் சாலைகளை அமைக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு 1971-72-ல் ஒதுக்கப்பட்ட தொகை 72.16 லட்சம் ரூபாயாகும். ஆனால் 1972-73-ல் அது 83.90 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. நகராட்சி சாலைகளை சுத்தப்படுத்த ஆகும் செலவில் பாதியை அரசு ஏற்பதுடன் மறுபாதித் தொகையை கடனாகவும் வழங்க வகை செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் செலவிற்காக ரூபாய் 10 லட்சத்தை 1972-73-ம் ஆண்டுக்காக ஒதுக்கியுள்ளது. நகராட்சி களுக்குக் கடன் வழங்க ரூபாய் 13 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் 1972-73-ம் ஆண்டிற்காக ஒதுக்கியுள்ளது.

நகராட்சிகளுக்குப் பாலங்கள் அமைக்க அரசு 1972-73-ம் ஆண்டிற்கு 1 லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

தமிழ்நாடு நீர்வழங்கும் வடிகால் வாரியத்தின் மூலம் 1972-73-ம் ஆண்டிற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு நீர் வழங்கவும் கழிவு நீரை அகற்றவும் 7.78 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் 101 நீர் வழங்கும் திட்டங்களும் 12 வடிகால் திட்டங்களும் செயல்படுகின்றன. 1972-73-ம் ஆண்டிற்காக நீர் வழங்கல், வடிகால் திட்டத்திற்காகவும் ஊராட்சி மன்றங்களுக்குக் கடன் வழங்கவும் அரசு 338.35 லட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று காலையில் டாக்டர் ஹாண்டே அவர்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு நகராட்சிகளிலே கருத்துவேறுபாடு எண்ணங்கள் கொண்டவையாக நடந்துகொள்கிறது என்று குற்றம் சாட்டினார்கள். அவர் திண்டுக்கல் நகராட்சியையும் வேறு சிலவற்றையும் சுட்டிக்காட்டிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிற காரணத்தால் வேறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன என்று சொன்னார்கள்.

திருச்சி நகராட்சியிலே காங்கிரஸ் ஆட்சி செய்து கொண்டிருக்கிறது. அந்த நகராட்சிக்குத்தான் சென்ற திங்கள் நமது அரசு 35 லட்சம் ரூபாய் முதல் தவணையாக வடிகால் வாரியத்திற்கு வழங்கியிருக்கிறது. மொத்தம் திட்டத்திற்காக 2 கோடியே 85 லட்சம் ரூபாய் பாதாளச் சாக்கடைக்காக ஒதுக்கி இருக்கிறோம். இந்தத் திட்டத்தின் அடிப்படையில், கட்சி



1972 மார்ச் 11] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

மாச்சரியங்களுக்கு இடம் கொடுக்காமல், நகராட்சியில் யார் இருக்கிறார்கள் என்று கவனிக்காமல், போடுகிற திட்டம் பயன் உள்ளதாக அமைந்திருக்கிறதா என்று கவனிக்கிறோம். கட்சி வேறுபாடு இல்லாமல் இந்தத் திட்டத்தை அரசு செயல் படுத்துகிறது. இந்தத் திட்டத்தைக்கூட நான் முன்பு குறிப்பிட்டேன். 25 ஆண்டுக் காலம் நகராட்சியிலே ஆட்சி நடத்திய காங்கிரசாரும், மாநிலத்திலே ஏகபோகமாக ஆட்சி செய்த காங்கிரசாரும் இருந்த நேரத்தில், திருச்சியிலே இந்தத் திட்டம் பேப்பர் அளவிலே தான் இருந்ததே தவிர, செயல் திட்டத்தில் கொண்டுவரவில்லை. இதற்கு முந்தைய அரசு வழிசெய்யவில்லை. 1967-லே பேரறிஞர் அண்ணா அவர்கள் பொறுப்பு ஏற்றுக் கொண்டபோது, அப்போது திருச்சி காங்கிரஸ் வசம் இருந்தது. அப்படி இருந்தும் அண்ணா அவர்கள் அந்தத் திட்டத்திற்காகக் கையெழுத்திட்டார்கள். திருச்சி நகரத் திற்கு குடிநீர் பற்றாக்குறைக்காக அண்மையில் 3 கோடியே 20 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அடுத்த ஆண்டு, 1 கோடியே 20 லட்சம் ரூபாய் செலவிட அரசு உத்தேசித்திருக் கிறது. ஒரு உண்மையை மாற்றுக் கட்சிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்த வேறுபாடு கருத்துக்களுக்கும் இடம் கொடுக்கவில்லை.

அடுத்தபடியாக, பல்வேறு உறுப்பினர்கள் பேசும்போது, பஞ்சாயத்து ஒன்றியத்தின் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஆனால் நகராட்சிகளின் தலைவர்களையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கக் கூடிய நிலையை உருவாக்கித் தர வேண்டும். பஞ்சாயத்து யூனியன் தேர்தலில் ஆட்களைக் கூட கடத்திக்கொண்டு போய்விடுகிற நிலைமை இருக்கிறது. பஞ்சாயத்து ஒன்றியத் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதே போல நகராட்சியிலும் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக நகராட்சிகளில் கடைகளை ஏலம் விடுகிறார்கள். பல ஆண்டுக் காலமாக வியாபாரம் செய்து வருகிற வியாபாரிகள் பல லட்சக் கணக்கான ரூபாய்களை முதலீடு போட்டு வியாபாரம் நடத்துகிறபோது சட்டதிட்டத்தின்படி 3 ஆண்டுகளுக்கு ஒரு தட்வை கடைகளை ஏலம் விட வேண்டும் என்று இருக்கிறது.

அப்படி மூன்று ஆண்டுகளுக்கு ஒருதடவை ஏலம் விடுகிற சமயத்தில் அதுவரை வியாபாரம் செய்துவந்த வியாபாரி பாதிக்கப்படுகிறான். பல இடங்களில் கடையைக் கொடுத்தும், பல இடங்களில் பல பேர்களிடத்தில் அறிமுகமாகி வியாபாரம் செய்து வந்தவன் திடீரென நிறுத்திவிட்டால் அவன் பெரிதும் பாதிக்கப் படுவான். திருச்சி நகராட்சிகளிலும் பல கடைகள் ஏலம் விடப்பட்டிருக்கின்றன. ஆகவே, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விட்டு அதிகமாக ஏலம் கேட்பவனுக்குக் கடைகளைக் கொடுப்பது என்றால் அடிக்கடி வியாபாரி மாற வேண்டியிருக்கும். அப்படி மாறுகிறபோது யாரும் தொடர்ந்து வியாபாரமும் நடத்த முடியாது, அந்த ஏலம் எடுக்கும் வியாபாரி பெரிதும் பாதிக்கப் படுவான். ஆகவே, அண்மையில் நமது அரசு இந்தப் பிரச்சினையை மனிதாபிமான உணர்ச்சியுடன் அணுகி, மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலம் விடப்பட வேண்டுமென்று சட்டத்தில் இருந்தாலும், 5 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்று வாடகையை உயர்த்தி, அப்போது இருப்பவர்களுக்குத் தொடர்ந்து கடையை நடத்த அனுமதிக்கலாம் என்று வழிவகை செய்திருக்கிறது.

டாக்டர் ஹாண்டே அவர்கள் திருச்சி நகராட்சியைப்பற்றிப் பேசினார்கள். இப்போது அந்தத் திருச்சியிலே நகராட்சி காங்கிரஸ் வசம்தான் இருக்கிறது. திருச்சியிலே 37 கடைகள் இருக்கின்றன. வெளியில் ஒரு கடைக்கு 250 ரூபாய், 300 ரூபாய் என்று வாடகை வரும். காங்கிரஸ் வசம் இந்த நகரசபை 9 ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலேதான் ஒரு 5 சதவீதம் வாடகை உயர்த்தி, முன்பு வைத்திருந்தவர்களுக்கே அதை ஊர்ஜிதம் செய்திருக்கிறோம். இருந்தபோதும் சென்ற திங்கள் நகராட்சியிலே தீர்மானம் போட்டு இருக்கிறார்கள், அந்த 37 கடைகளையும் ஏலத்திலே விடவேண்டுமென்று. ஆனால் அதே நேரத்திலே பத்து சதவீதம் ஏற்றி அங்கே உள்ள கடைக்காரர்களுக்கே மீண்டும் இருக்கட்டும் என்று தீர்மானம் போட்டிருக்கிறார்கள். இப்படி ஒரே நகராட்சியிலே இரண்டுவிதமான தீர்மானங்கள் போட்டு இருக்கிறார்கள். அங்கேதான் சுதந்திராக் கட்சி ஒன்றாக இருக்கிறது. இத்தகைய வேறுபாடுகள் எல்லாம் இல்லாமல் அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தச்





சந்தர்ப்பத்திலே ஒட்டுமொத்தமாக இந்த மானியக் கோரிக்கை சமுதாய நலத் திட்டத்திற்குப் பயன்படும் அளவில் அமைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி:** உதவி சபாநாயகர் அவர்களே, இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த இரண்டு மானியங்களிலேயும் எங்களுடைய கட்சியின் சார்பிலே கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற காரணத்தினால் நான் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மானியங்களிலே கம்யூனிட்டி டெவலப்மெண்ட் புராஜக்ட்ஸ்க்காக என்று பத்து கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். இந்த வரவு-செலவுத் திட்டத்திலே திட்டத்தட்ட 394 கோடி ரூபாய் வரைக்கும் திட்டமிட்டிருக்கிறபோது கிராமங்களின் வளர்ச்சிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கிற தொகை மிக மிகக் குறைவு. கண்டிப்பாகப் பத்து கோடி ரூபாய் போதாது, இன்னும் அதிகமாக ஒதுக்கினால்தான் கிராம வளர்ச்சியை நாம் நல்ல முறையிலே காண முடியும். நம்முடைய நாட்டிலே என்ன திட்டங்கள் போட்டாலும் மேல்பரப்பிலேதான் திட்டங்களின் நன்மைகள் போய்ச் சேருகின்றனவே தவிர, கீழ் நிலையில் இருக்கின்ற மக்களுக்கு கிராம மக்களுக்கு அந்த கிராமங்கள் வளர்ச்சியடைவதற்கு நாம் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமென்று உணர்ந்தாலும், கிராமங்களுக்குப் போதுமான கவனம் செலுத்தப் படவில்லை, பத்து கோடி ரூபாய் அதற்குப் போதாது, குறைவாக ஒதுக்கியது தவறு என்ற குற்றச்சாட்டை நான் முதன் முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 374 பஞ்சாயத்து யூனியன்கள் நம்முடைய நாட்டிலே பல்வேறு வேலைகளைக் கவனிப்பதற்காக இருக்கின்றன. நாம் பஞ்சாயத்துச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். யூனியன்களைப் பிரிப்பதில் கோளாறுகள் இருக்கின்றன என்று பல உறுப்பினர்கள் பேசினார்கள். குறிப்பாக ஒரு பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால் அதிலே 64 கிராமங்கள் இருக்கின்றன. அதே நேரத்திலே இன்னொன்று பஞ்சாயத்து யூனியனை எடுத்துக் கொண்டால் அங்கு 10 கிராமங்கள்தான் இருக்கின்றன.

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 11

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இப்படிப் பெரிய பஞ்சாயத்து யூனியன்களாகப் பிரிப்பதும் தவறு, சிறிய பஞ்சாயத்து யூனியன்களாகப் பிரிப்பதும் தவறு. எனவே இதையெல்லாம் சரியாகக் கவனித்துப் பிரிக்க மீண்டும் ஒரு கமிட்டியைப் போட்டு எல்லாப் பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒரே மாதிரியாக 40 அல்லது 50 கிராமங்களாக இருக்கும்படி பிரிக்க வேண்டும். அதே மாதிரி ஜியாகராபிக்கல் லிமிட் அதாவது தூரம் அவர்கள் செல்லுகின்ற தூரத்தை எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்க முடியுமோ, பத்து மைல்கள், பதினைந்து மைல்கள் என்ற அளவுக்கு இல்லாமல் குறைவான தூரத்தில் அவர்கள் போய்வர வேண்டிய அளவுக்குச் செய்ய வேண்டும். எனவே 374 பஞ்சாயத்து யூனியன்களையும் எப்படிப் பிரிப்பது என்பதைப் பற்றி ஆராய்வது நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் பஞ்சாயத்துத் தேர்தல் நடத்தினாலும் தேர்தல் முடிந்தவுடன் நாம் எல்லாம் பொதுமக்கள் சேவைக்கு வந்திருக்கிறோம் என்று நினைத்துக் கொண்டு செயல்பட வேண்டும். அப்ப்டியில்லாம்ல் அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டு பஞ்சாயத்து நிர்வாகத்தை நடத்தினால் பொதுமக்களுக்கு பஞ்சாயத்தினால் வரக்கூடிய நன்மைகளைவிட தீமைகள்தான் அதிகம் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துக்களிலே பணியாற்றுகின்ற சிப்பந்திகளை எடுத்துக் கொண்டால் அவர்களை எப்படி எப்படி நடத்தலாம் என்று சட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு சிப்பந்தியை ஆறு மாதத்திற்கு மேலே சஸ்பென்ட் செய்து வைக்க வேண்டுமென்றால் அதற்கு அரசாங்கத்தின் அனுமதி தேவை என்று இருக்கிறது. ஆனால் இன்றைக்கு நூற்றுக்கணக்கான கேஸ்களை நான் காட்ட முடியும். ஆறு மாதத்திற்கு மேலாக அரசாங்கத்தின் அனுமதி இல்லாமலேயே சஸ்பென்டிலே வைத்திருக்கிறார்கள். அவர்கள் ஓடோடி வருகிறார்கள், ரிட் போட வேண்டுமென்று சொல்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் கிராம சேவக் போன்றவர்கள் அப்படிக் கேட்டால் பீஸ் வாங்காவிட்டால்கூட, செலவையாவது வாங்கித்தான் தீரவேண்டும். அந்தச் செலவே இருநூறு ரூபாய் வந்து விடுகிறது; அவர்கள் அந்தச் செலவை எப்படித் தாங்கு



1972 மார்ச் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

வார்கள், கிராமங்களிலே வேலை செய்யக்கூடிய சிப்பந்திகள் இதையெல்லாம் தாங்குவார்களா ? எனவே இதை யெல்லாம் துரிதமாகக் கவனிப்பதற்கு என்ன என்ன வசதிகளைச் செய்திருக்கிறீர்கள் என்று பார்த்து அதை யெல்லாம் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அர்சியல் விருப்பு வெறுப்பு பஞ்சாயத்துக்கள் நிர்வாகத்திலே தலைவிரித்தாடுகிறது. காங்கிரஸ்காரர் தலைவராக வந்தால் பல கோளாறுகள் வருகின்றன, வேறு கட்சிக்காரர் தலைவராக வந்தாலும் கோளாறுகள் வருகின்றன. இப்படி அரசியல் குறுக்கிடாமல் இருப்பதற்கு பஞ்சாயத்து யூனியன் தலைவரை நேரடியாகத் தேர்ந்தெடுக்க வேண்டும். பஞ்சாயத்துத் தலைவர் எப்படி நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறாரோ அதைப்போன்று பஞ்சாயத்து யூனியன் தலைவரையும் நேரடியாகத் தேர்ந்தெடுப்பது நல்லது. அப்படிச் செய்தால் ஆள் தூக்கும் படலம் இருக்காது, பணம் கொடுக்கும் படலம் இருக்காது, பயமுறுத்தும் படலம் எல்லாம் குறைக்கப்படும். நிர்வாகத்திலே நல்ல சூழ்நிலை இருக்க வேண்டும். அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் எனக்கு ஓட்டுப் போடவில்லை, ஆகவே அவர் பகுதிக்கு ஒன்றும் கொடுக்காதே என்கிற காழ்ப்புணர்ச்சி இருக்கிறதே தவிர, வேறு பரந்த மனப்பான்மை இல்லை. எனவே பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் எவ்வளவு துரிதமாக நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அவ்வளவு துரிதமாக நடத்த வேண்டும்.

அடுத்ததாக, பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்கள், அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியப் பெருமக்கள் எல்லோம் சிறப்புப் பணி என்ன என்ன செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள் என்றால், நான் அதை சபாநாயகர் அவர்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

சிறு சேமிப்பு இயக்கம். குடும்பக்கட்டுப்பாட்டிற்கு ஆள் சேர்த்தல், மதிய உணவு சமைத்தல், பரிமாறுதல், பள்ளிச் சீரமைப்பு மாநாடு, கல்விச் சீரமைப்பு மாநாடு, பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி, ஆசிரியர் நல நிதி, சயரோக நிவாரண நிதி, வனவிலங்கு நாள் நிதி, செஞ்சிலுவை சங்க நிதி, வீரர் தின நிதி, பாதுகாப்பு நிதி. இவ்வளவு நிதிகளைத் திரட்டும் வேலைகளையும் இத்தனை பணிகளையும் செய்வதற்கு ஆசிரியர்களுக்கு நேரம் இருக்கிறதா ? அல்லது பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக்

கொடுப்பதற்கு நேரம் இருக்கிறதா? இப்படிப் பிச்சையெடுப்பதற்கு நேரம் இருக்குமா அல்லது பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுக்க நேரம் இருக்குமா? இந்த வேலைகளை யெல்லாம் ஆசிரியர்களுக்குக் கொடுக்கலாமா? சிறு பிள்ளைகளுக்கு—குழந்தைகளுக்கு அவர்களைக் கட்டி மேய்த்துப் படிப்புத் தருவதற்கு இருக்கிற ஆசிரியர்களை சிறு சேமிப்பு நிதிக்கும், பாதுகாப்பு நிதிக்கும் இந்த நிதிக்கும் அந்த நிதிக்கும் நிதி திரட்டி வா என்றால் அவர்கள் நிதி திரட்டத்தான் நேரம் இருக்குமே தவிர பள்ளிகளிலே இருக்கிற குழந்தைகளின் விதியை மாற்றி அமைக்க நேரம் இருக்காது.

எனவே, ஆசிரியர்களுக்கு அரசாங்கம் இப்படிப்பட்ட வேலைகளைக் கொடுக்காமல் பிள்ளைகளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்க நேரம் கொடுத்தால்தான் பள்ளிக்கூடம் உருப்படும், இல்லாவிட்டால் பிள்ளைகளும் வேறு ஏதாவது பழக்கங்களைக் கற்றுக் கொண்டு வீட்டுக்கு வருவார்கள்.

என்னைப் பொறுத்தவரையிலே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளையும் அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும். நகராண்மைக் கழகப் பள்ளிக்கூடம், பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடம் இவற்றின் கல்வியின் தரம் என்ன என்பது எங்களுக்குத் தெரியும். தரத்தை உயர்த்துவதற்கான நிலைமையிலே இல்லை. ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்தால் அவர் கவுன்சிலர் வேறு யாரையாவது பிடித்துக் கொண்டுபோய் அதை ரத்து செய்கிறார்கள். அவர்கள் ஒழுங்காகச் சொல்லிக் கொடுப்பதும் கிடையாது, கடுமையான நடவடிக்கை எடுத்தால் பஞ்சாயத்துத் தலைவரும் அந்த ஆசிரியரை விரோதிக்க முடியாது. வக்காலத்து வாங்கித்தான் போக வேண்டிய நிலைமை ஏற்படுகிறது. எனவே பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளை அரசாங்கமே எடுத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது எப்படி 45 பிரைமரி ஹெல்த் சென்டர்களை எடுக்கிறார்களோ அதைப் போன்று இவற்றையும் அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும். அதற்கு என்று தனியாக ஒரு டைரக்டர் பார் எலிமெண்டரி எஜுகேஷன் என்று போட்டு அதிகமான அளவில் பணம் செலவழித்து சூப்பர்வைசரி அதிகாரம் இருக்கக்கூடிய வகையிலே செய்ய வேண்டும். இப்பொழுது ஒதுக்கி இருக்கிற தொகையிலே 40 கோடி ரூபாய்தான் எலிமெண்டரி எஜுகேஷனுக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். எலிமெண்





டரி எஜுகேஷனைப் பொறுத்த வரையில் பவுன்டேஷனே இல்லை. பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், கார்ப்பரேஷன் பள்ளிகளிலே எப்படிப் படிப்பார்கள். பிரைவேட் நர்சரிஸ் சென்று படிக்க அனுப்ப வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 20 ரூபாய், 25 ரூபாய் இண்டர்கார்டன் ஸ்கூலுக்கே ஆகிறது. எப்படி நடுத்தர மக்கள் அங்கே அனுப்ப முடியும்? எலிமெண்டரி எஜுகேஷனுடைய பவுன்டேஷன் சரியாக இருந்தால்தான் முடியும், அது சரியாக இல்லாவிட்டால் ஹைஸ்கூல், காலேஜ் படிப்பு எப்படி முடியும், பவுன்டேஷன் சரியாக இல்லாவிட்டால் எப்படி சூப்பர் ஸ்டரக்சர் உண்டாக்க முடியும்? எனவே, இவற்றைத் தரமுள்ளவைகளாக ஆக்க வேண்டுமென்றால் இவற்றை யெல்லாம் அரசாங்கமே நேரடியாக மேற்கொண்டு இப்பொழுது கொடுக்கிற மானியம் மேட்சிங் கிராண்ட் இவைகளைக் கொடுப்பதைவிட அரசாங்கமே ஏற்று நடத்தலாம்.

அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்கள் ஒரு குறையைச் சொல்கிறார்கள். பஞ்சாயத்து யூனியன்களில் ஆசிரியர்களுக்குச் சம்பளம் ஒழுங்காகக் கொடுப்பது இல்லையாம். இப்படிச் சம்பளத்தை ஒழுங்காகக் கொடுக்காவிட்டால் அவர்கள் எப்படி வேலை செய்வார்கள்? அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளமே குறைவு. அந்நிய நாடுகளில் ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் சம்பளத்தையும், நம்முடைய நாட்டில் கொடுக்கும் சம்பளத்தையும் பார்த்தால் வெளியே சொல்வதற்கே வெட்கமாக இருக்கும், அவ்வளவு குறைச்சலாகயிருக்கிறது. அதுகூட காலாகாலத்தில் சென்று சேரவில்லை என்று சொல்வது மிகமிக வருந்தத் தக்கதாகும். ஆகவே உடனடியாக நேரடியாக 1-ஆம் தேதி காலை ஆசிரியர்களுக்குச் சம்பளம் அவர்கள் கைக்குப் போய்ச் சேர வேண்டும், அதற்கு என்னென்ன வழிவகைகளைச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்லாமல் ஆசிரியர்களை மாற்றுகின்ற விஷயம். எனக்குப் பல கடிதங்கள் வந்து கொண்டிருக்கின்றன. சென்ற முறைகூட சட்டசபையில், புருஷன் மனைவியாக இருக்கும் ஆசிரியர்களைப் பிரிக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டேன். அமைச்சரவையிலே நாங்கள் அந்தப் பாவத்தைச் செய்வதில்லை என்று சொன்னார்கள். ஆனால் எனக்குப் பிறகும் எவ்வளவோ கடிதங்கள் வருகின்றன. புருஷன் மனைவியாக இருக்கும் எங்களை

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 11

வெவ்வேறு இடத்தில் உள்ள பள்ளிகளில் மாற்றிவிட்டார்கள், அதனால் எங்கள் பிள்ளைகள் கவனிப்பாரற்று வாடி வதங்கியிருக்கிறார்கள் என்று எழுதியிருப்பதைப் படிக்கும்பொழுது கண்ணீர் வருகிறது. ஒவ்வொரு முறையும் செக்ரட்டரியையும், பஞ்சாயத்து யூனியன் தலைவரையும் பார்த்துச் சொல்வது என்பது ரொம்பக் கஷ்டம். ஆகவே ஸ்டிரிக்ட்டாக ஒரு ரூல் போட வேண்டும்; 3 வருஷங்களுக்கு ஒருமுறைதான் மாற்ற வேண்டும் என்பதாக ஒரு ரூல் போட வேண்டும். அப்படி வந்திருக்கிறது. ஆனால் யாரும் அப்படிச் செய்வதில்லை. ஒவ்வொரு வருஷமும் செய்கிறார்கள். ஒருமுறை நிர்வாகத்திற்காக மாற்றுவது, ஒருமுறை பஞ்சாயத்துத் தலைவருக்கு வெறுப்பிருந்தால் மாற்றுவது என்று இப்படி மாற்றி விடுகிறார்கள். அப்படியில்லாமல், புருஷன் மனைவியாக இருந்தால் பிரிக்கக் கூடாது. கிடைக்கின்ற சம்பளமே மிகவும் குறைவு. இரண்டு பேரும் சம்பாதித்தாலும் எவ்வளவு கிடைத்து விடப் போகிறது. காலையில் கிளம்பி பஸ்ஸுக்கு ஓடி, பஸ்ஸைப் பிடிப்பது என்பதெல்லாம் ரொம்பக் கஷ்டம். அப்படிச் சென்றாலும் பிள்ளைகளை யார் கவனிப்பார்கள்? வேலைக்காரர்கள் வைத்துச் சம்பளம் கொடுக்க கட்டுப்படியாகுமா? விட்டு வேலைகளை யார் கவனிப்பது. பெண்களுக்குள்ள கஷ்டமெல்லாம் எனக்குத் தெரியும். எனவே அத்தகைய ஒரு ஸ்டிரிக்ட் ஆர்டரைப் போட்டு எந்தப் பஞ்சாயத்து யூனியனும் புருஷன் மனைவியாக இருப்பவர்களைப் பிரிக்கும் வேலையைச் செய்யக் கூடாது, அடிக்கடி உத்தரவுகளைப் போட்டு மாற்றக் கூடாது, அப்படி மாற்றுவதாகயிருந்தால் காரணம் காட்ட வேண்டும்.

He must be an inefficient teacher or there must be some specific charge against him.

அந்த மாதிரியிருந்தால்தான் மாற்றலாமே தவிர, பஞ்சாயத்து யூனியன் தலைவர், பஞ்சாயத்துத் தலைவர் போன்றவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றமாதிரி They are kicked from pillar to post. என்றால் அது தவறு, அது நடக்கக் கூடாது என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, எலிமெண்டரி எஜுகேஷன் டீச்சர்ஸ் குவார்ட்டர்ஸ் ரொம்பக் குறைவாகக் கட்டப்பட்டிருக்கிறது. அவர்களுக்குப் பல வீடுகளைக் கட்ட வேண்டும். ஆசிரியர்மார்களுக்கு அதுவும் பெண் ஆசிரியைகளுக்கு எவ்வளவு துரிதமாக



1972 மார்ச் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

நாம் வீடுகள் கட்டித் தருகிறோமோ அவ்வளவு துரிதமாகக் கட்டித் தந்தால் நல்லது என்பதை இந்த அரசாங்கத்திற்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

21.900 பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் 14,903 பள்ளிகள்தான் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்குகின்றன. இன்னும் பாதி அளவிற்கு, மூன்றில் ஒரு பங்கு அளவிற்குச் சொந்தக் கட்டிடங்கள் இல்லை என்பதைப் பார்க்கிறோம். ஆகவே, உடனடியாகப் பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடங்கள் கட்ட. வேண்டும். சில பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் சென்று படிக்கவே முடியாத அளவிற்கு இருக்கின்றன. மேல் கூரையில்லாமல் இருக்கின்றன. கட்டிடங்கள் இடிந்து ரொம்பப் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. கார்ப்பரேஷனிலேயே சில ஸ்கூல்களில் பிள்ளைகள் போகவே முடியாத அளவிற்குப் பயங்கரமாக இருக்கின்றன. பள்ளிக் கட்டிடங்கள் இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்தாலே, அது பிள்ளைகளை வா வா என்று அழைப்பதுபோல் இருக்க வேண்டும். அந்த வகையில் சுத்தமான நல்ல கட்டிடங்களாகச் சீர்படுத்த வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மற்றொரு யோசனையையும் அரசாங்கத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். அதாவது பஞ்சாயத்து யூனியன், கார்ப்பொரேஷன் ஸ்கூல்களில் ஒரு இங்கிலீஷ் மீடியம் செக்ஷன் தொடங்க வேண்டும். கார்ப்பொரேஷன், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளில் தமிழ் மீடியம்தான் இருக்கிறது. இங்கிலீஷ் மீடியம் படிக்க வேண்டுமென்று விரும்புபவர்கள் எல்லோரும் தனியார் நடத்தும் பள்ளிகளுக்குத்தான் செல்ல வேண்டியிருக்கிறது. தனியார் இதை ஒரு வியாபாரமாகவே நடத்தி ரொம்பவும் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் நடத்துகின்ற சில இடங்கள்கூட வகையாக இருப்பதில்லை. ஆகையால் படிப்பதற்கு ஆள் இருந்தால், வேண்டுமென்று கேட்டால் தனியாக இங்கிலீஷ் மீடியம் செக்ஷனைத் திறக்க வேண்டுமென்று மிகத் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மதிய உணவு. இன்றைக்கு 18 லட்சம் பிள்ளைகளுக்குத் தருகிறோம். அவர்களுக்கு மதிய உணவு தருகிறோம் என்றால், அது சுகாதாரமுள்ள உணவாக, சத்துள்ள உணவாகக் கொடுக்கப்படுவதற்கு அக்கறை காட்ட வேண்டும். கார்ப்பொரேஷனில் இரண்டாண்டுகளுக்கு முன்னால் மதிய உணவிற்காகக்

கொடுக்கப்பட்ட மிளகாய், பருப்பு போன்ற மளிகை சாமான்கள் கார்ப்பொரேஷன் சமையல் கூடத்திற்குப் போவதற்குப் பதிலாக வேறு எங்கேயோ கொண்டு போய் ஒளித்து வைக்கப்பட்டதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்றுகூடக் கேட்டேன். பாவம், ஏழை பிள்ளைகளுக்குக் கொடுப்பதைத் திருடுவது போன்று செய்வது கேடானது. எனவே மதிய உணவுக்காகக் கார்ப்பொரேஷனில் தனியாக ஒரு ‘நான் அபிஷியல் கமிட்டி கன்சிஸ்டிங் ஆஃப் பார்ட்டி ரெப்ரசன்டேட்டிவ்ஸ்’ என்று அமைக்க வேண்டும். அப்படி இல்லையென்றால் பெண்களில் சமூகத் தொண்டில் ஆர்வமுடையவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் யாரையாவது 4 பேரைப் போட்டு இன்ஸ்பெக்ட் செய்யச் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) போட்டால் தாராளமாகச் செய்வேன். எனவே இப்படி 4 பேரைக் கொண்ட கமிட்டி போட்டு இன்றைக்கு என்ன சாப்பாடு, எந்தப் பாத்திரத்திலே தயார் செய்யப்படுகிறது என்பதையெல்லாம் சுற்றிப் பார்க்க வேண்டும். என்ன உணவு சப்ளை செய்யப்படுகிறது, என்ன மாதிரி அரிசி, என்ன உணவு தரப்படுகிறது என்று பார்ப்பதற்கு ஒரு கமிட்டி போட்டால் நன்றாக இருக்கும். இல்லையென்றால் எத்தனை கோடி ரூபாய் செலவழித்தாலும் அவர்களுக்குப் போய்ச் சேருகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். கேர் கிச்சன் இருக்கின்றன. அதற்குக் கொடுத்தால் நல்ல முறையில் உணவு கொடுக்க முடியும்.

அடுத்து, 12,642 கிராமங்களில் 1,000 கிராமங்களில்தான் குழந்தைகள் காப்பகங்கள்—அதாவது நர்சரீஸ் என்று நினைக்கிறேன்—இருக்கின்றன. இந்தப் பன்னிரண்டாயிரம் கிராமங்களிலும் முடிந்தவரையில் பால்வாடிகளை ஆரம்பித்தால் நமது வருங்காலப் பிரஜைகளை நல்ல பிரஜைகளாக உருவாக்க முடியும். வீட்டிலிருக்கும் பிள்ளைகள்—அதாவது பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதற்கு முந்தைய நிலையிலிருப்பவர்கள்—அவர்களை நல்ல முறையில் பழக்கப்படுத்திவிட்டால் வருங்காலத்தில் நல்ல பிரஜைகளாக அவர்கள் வாழ்வதற்கு வழி பிறக்கும். பால்வாடிகளை ஆரம்பித்திருக்கிறார்கள், ஆனால் அது போதாது. இந்த 12,642 கிராமங்களிலேயும் கிராமத்திற்கு ஒன்றாவது ஆரம்பிக்க வேண்டும். ஏனென்றால் மகளிர் மன்றம், யுவர் மன்றம் என்று இவைகளுக்குப் பணத்தைக் கொடுக்கிறோம். அது பலவிடங்களில் சரியாக வேலை செய்வதாகவே தெரியவில்லை. பஞ்சாயத்து மகளிர்



மன்றம் என்றால் யார் வீட்டிலேயாவது போர்ட் மாட்டியிருக்கிறார்கள். ஆனால் கூடுவது கிடையாது, பேசுவதும் கிடையாது, என்ன நடக்கிறது என்றே தெரியாது. தையல் மிஷின் என்றால் அது பிரசிடெண்ட் வீட்டில் இருக்கும் அல்லது அந்த அம்மாள் வீட்டில் இருக்கும். சொந்தத் துணிகளைத் தைப்பதற்குப் பயன்படுமே தவிர, அப்படி இருப்பதாகக்கூட மற்றவர்களுக்குத் தெரியாது. இப்படிப் பணம் பாழாகிறது. அப்படியில்லாமல் போட்ட பணம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதைப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட மகளிர் மன்றங்கள் என்று வைத்தால் இப்படிப்பட்ட பால்வாடிகளை நடத்த வேண்டும். அதற்கான இடம் கொடுக்கப்பட்டிருக்கிறதா, எந்த இடத்திலே நடக்கிறது, சொந்தக் கட்டிடத்தில் நடக்கிறதா வாடகைக் கட்டிடத்தில் நடக்கிறதா, என்பதைப் பார்க்கலாம். தையல், சமையல், மற்றும் நுட்ரீஷன் லெசன்ஸ் கொடுக்கலாம், பல வேலைகளைச் செய்யலாம். அப்படியில்லாமல் இன்றைக்கு நாமும் வைத்திருக்கிறோம் என்ற நிலையில் காரியங்கள் நடக்கின்றன என்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். பலவிடங்களில் ‘விமன் அண்ட் சைல்ட் வெல்ஃபேர்’ என்று போட்டுக் காரியங்கள் நடக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. பஞ்சாயத்துக்களுக்குப் பணம் கொடுப்பது பெரிதல்ல, ஆனால் வேலை ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைப் பார்க்க வேண்டும்.

பஞ்சாயத்துக்கள் சம்பந்தமாகத் தனி இலாக்கா வேண்டும். எனக்கு முன் பேசிய மதிப்பிற்குரிய திரு. சத்தியமூர்த்தி அவர்கள் கூடச் சொன்னார்கள். கம்யூனிட்டி டெவலப்மெண்ட் இலாக்கா என்று தனி இலாக்கா இருக்க வேண்டும், மாவட்ட இலாக்காவாக இருக்க வேண்டும். கலெக்டருக்கு ரெவின்யூ வாங்குவதற்குத்தான் சரியாக இருக்கும். டி.ஆர்.ஓ. இருந்தாலும், பி.எக்கள் எத்தனை பேர் போட்டாலும் கலெக்டர்தான் ஆர்டர் எடுக்க வேண்டும். அப்படி இருக்கக் கூடாது. தனியாகப் பயிற்சி கொடுத்த கலெக்டர் அளவில் இன்சார்ஜ் ஆஃப் என்டயர் டிஸ்ட்ரிக்ட் என்ற அளவில் கலெக்டர் அளவிலாவது அல்லது டி.ஆர்.ஓ. அளவிலாவது போட்டு இயங்க வேண்டும். ஊராட்சி ஒன்றியம் சம்பந்தப்பட்ட உத்தரவுகளைக் கலெக்டர்களிடம் வாங்க வேண்டிய அவசியமில்லை என்ற நிலையிருந்தால்தான் பஞ்சாயத்திலுள்ள நிலைமைகளைச் சரியாக நடத்த முடியும். வேலை இல்லை வேலை இல்லை என்று ஒருபுறம் சொல்கிறார்கள். எனவே நியாயமான வேலை வாய்ப்பு

களைச் செய்ய வேண்டும். அதுபோலவே உபாத்தியாயர்கள், 60 பிள்ளைகளை ஒரே உபாத்தியாயரே பார்ப்பது என்பது கஷ்டம். அவர்கள் பிள்ளையைப் பார்த்திருப்பதே மறந்திருக்கும், பெயர்கூடச் சரியாக ஞாபகத்திற்கு வராது. அந்த வகையில் இல்லாமல் டீச்சர் பீப்பிள் ரேஷியோவைக் குறைந்த அளவிற்கு வைத்தால் நல்லது. இப்படிப் பல துறைகளில் பல சீர்திருத்தங்களைச் செய்தால், கம்யூனிட்டி டெவலெப்மெண்ட் மூலம் செய்யும் நன்மைகள் கிராமங்களுக்குப் போய்ச் சேரும். இல்லையென்றால் எங்கே போகிறது என்பதை யாராலும் சொல்ல முடியாது.

அடுத்தபடியாக ரோடுகள், பல பஞ்சாயத்து ரோடுகள் சரியாக இருப்பதில்லை. அப்படியே போட்டாலும் இன்றைக்குப் போட்டாலும் நாளைக்கே ஓடிவிடுகிறது. உண்மையாகவே பணம் கொடுப்பது பெரிதில்லை, ஆனால் எப்படிப் போட்டிருக்கிறார்கள், ஒழுங்காகப் போட்டிருக்கிறார்களா என்பதைப் பார்க்க வேண்டும். சில குறிப்பிட்ட கிராமங்களையாவது எடுத்துக்கொண்டு முதலில் சிறப்பாகச் செய்ய வேண்டும். வருஷாவருஷம் மண் அடித்து, கல்போட்டதாகக் கணக்கு எழுதி பணம்தான் பாழாகிறது. குறிப்பிட்ட கிராமங்களையாவது எடுத்துக்கொண்டு 'ப்ளாக் சர்ஃபேஸ், டஸ்ட்லெஸ் சர்பேஃஸ்' என்ற முறையில் செய்தால் 5 வருஷங்களுக்கு அந்தக் கிராமங்களுக்குப் போக வேண்டியதில்லை, அடுத்த கிராமத்தைக் கவனிக்கலாம். இப்படிப்பட்ட பிரச்னைகளை எப்படித் தீர்ப்பது என்று பார்க்க வேண்டும். ஆறு மாதம் 1 வருஷம் என்று காண்ட்ராக்ட் கொடுத்தால், அந்த காண்டிராக்ட்காரர்கள்கூட மார்ச் மாதம் வரையில் சும்மாயிருந்து விட்டு 31-ஆம் தேதி நெருங்கும்பொழுது சீக்கிரம் சீக்கிரமாக ஆட்களைப் போட்டு காசைக் கொடுத்து வேலை செய்கிறார்கள். அப்படிச் செய்கின்ற வேலை, அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்ததைப்போன்றுதான் பலயிடங்களில் காண்ட்ராக்ட்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் இல்லாமல் கொடுத்த பணத்தை நீண்டகால பிரயோசனத்திற்கு மக்களுக்குச் செலவழிக்க முடியுமா என்று கவனித்து இதையெல்லாம் செய்தால்தான் சிங்கார கிராமங்களாகச் சித்தரித்துக் காட்ட முடியும். என்றைக்குக் கிராம





மக்கள் வாழும் கிராமங்கள் சிங்கார கிராமங்களாக மாறுகிறதோ, அன்றைக்குத்தான் இந்தியா முன்னேறியிருக்கிறது என்று எடுத்துக்கொள்ள முடியும்.

இன்று நாம் உண்மையிலேயே கிராமங்களுக்கு அரசியலைக் கொண்டு போய் விட்டிருக்கிறோமே தவிர, ஆக்கபூர்வமான திட்டங்களைக் கொண்டு போகவில்லை. பஞ்சாயத்துத் தேர்தலிலே அரசியல் வந்து மச்சான் கூடச் சண்டை, அண்ணன் தம்பி சண்டை என்ற வகையிலே குடும்பத்திற்குள்ளே பகை வளருகிறது. இதிலே பெண்கள் மிக ஆபத்தான நிலைமைக்கு ஆளாகிறார்கள். இந்தச் சண்டையினால் பெண்களை மாமா வீட்டுக்குப் போகாதே. சித்தப்பா வீட்டுக்குப் போகாதே, அண்ணன் வீட்டுக்குப் போகாதே என்ற முறையில் குடும்ப வாழ்க்கையே பாழாகக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. இவ்வாறு உள்ள அரசியலுக்குப் பதிலாக ஆக்கபூர்வமான திட்டங்களைக் கொண்டு போவதற்கு என்ன வழிவகைகள் என்று ஆராய்ந்து அதையெல்லாம் செய்ய வேண்டும்.

29-வது டிமாண்டுக்கு வந்தால் இன்று கார்ப்பொரேஷன் வரி எக்கச்சக்கமாக ஏறிக் கொண்டே போகிறது. பதினான்கு கோடி ரூபாய் வருமானம் வருகிறது என்றால், அந்தப் பணம் எங்கே போய்ச் சேருகிறது என்ற கேள்விக்குறி எழுகிறது. கார்ப்பரேஷன் நிதி பற்றி ஒரு கமிட்டி போட்டுக்கூட ஆராய்ந்தார்கள். எவ்வளவு எஸ்டாப்ளிஷ்மெண்டுக்காகச் செலவழிக்க வேண்டும், எவ்வளவு வளர்ச்சித் திட்டங்களுக்காகச் செலவழிக்க வேண்டுமென்று திட்டமிட்டுச் செலவழிக்க வேண்டும்.

இன்றைக்கு கார்ப்பரேஷன் ஸ்ட்ரீட் லைட்டிங்கை எடுத்துக் கொண்டால், ஒரு ஸ்ட்ரீட்டில் கூட விளக்குகள் ஒழுங்காக 30 நாட்கள் எரிந்தது கிடையாது. அதற்கு அங்கு இருக்கும் சப் ஸ்டேஷன்கள் போதாது என்று டெக்னிகல் அறிவு படைத்தவர்களால் சொல்லப்படுகிறது. 120 டிவிஷன்களுக்கு 60 சப் ஸ்டேஷன்களாவது இருந்தால் ஒழுங்காக விளக்குகள் எரிய முடியும் என்று சொல்லப்படுகிறது. இன்றைக்குப் பல இடங்களில் பல நாட்கள் விளக்குகள் எரிவதில்லை. அதுமட்டுமல்லாமல் கார்ப்பரேஷனுக்கு என்று தனியாக எங்கே பல்ப் வாங்குகிறார்கள் என்று தெரியவில்லை. அந்த பல்புகள் போடப்பட்டு இரண்டு நாட்களுக்குள் 'டக்' என்று ப்யூஸ் ஆகிவிடுகிறது. பணத்தைச்

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1972 மார்ச் 11

செலவழித்தால் மட்டும் போதாது, நிர்வாகத்தைத் திறமையாக நடத்த வேண்டும். எங்கே குறை இருக்கிறது என்று பார்த்து அதை உடனடியாகக் களைய வேண்டும்.

சென்னை நகரசபை அந்தக் காலத்தில் கனம் மஜீத் அவர்கள் மந்திரியாக இருந்தபோதே ஐந்து பம்பிங் ஸ்டேஷன்கள் போடுவதாகத் திட்டம் இருந்தது. கழிவு நீரைப் பம்பிங் ஸ்டேஷன் மூலம் நல்ல நீராக்கி புல் பண்ணை போடுவது என்ற நல்ல திட்டங்கள் இருந்தன. இன்னும் அந்தத் திட்டங்கள் உருவாக்கப்படவில்லை. இப்படித் திட்டங்கள் எல்லாம் எத்தனை வருஷங்கள் பெண்டிங் ஆக இருப்பது? இன்று காசிமேட்டிலே சமுத்திரத்திலே கொண்டுபோய்க் கழிவு நீரை விடுகிறார்கள். வட சென்னை பீச் பக்கம் போனால் நாற்றம் சகிக்க முடியாது. கூவம் நாற்றத்தைப் போக்கிய நீங்கள் அந்த நாற்றத்தையும் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். காசிமேட்டிலே வாழ்கின்ற மக்கள் இந்த நாற்றக் காற்றைச் சகித்துக் கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, உடனடியாக பம்பிங் ஸ்டேஷன் அமைத்து சமுத்திரத்தில் சாக்கடைத் தண்ணீரை விடுவதை நிறுத்த வேண்டும். இந்த வருஷமாவது கனம் அமைச்சர் அவர்கள் இதைப் பற்றிக் கட்டாயமாக அறிவிக்க வேண்டும்.

சில பிரிட்ஜ்கள் கட்டுவதைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியில் அடையாறு எல்பின்ஸ்டன் பிரிட்ஜ், டர்ன்புல் ரோடு பிரிட்ஜ் ஆகியவை அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இரண்டும் ரொம்ப அவசியம். சீக்கிரமாகச் செய்ய வேண்டும். குறிப்பாக, அடையாறு பாலம் குறுகிய பாலமாக இருக்கிறது. கார்கள் போனால் வண்டிகள் போக முடியாது. ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். எவ்வளவு சீக்கிரமாக அதை அமல்படுத்த முடியுமோ, அவ்வளவு சீக்கிரமாகச் செய்ய வேண்டும்.

மைலாப்பூர் தொகுதியிலே முண்டைக்கண்ணி அம்மன் கோயில் பிரிட்ஜ் ஒன்று இருக்கிறது. அது எந்த நேரத்தில் விழுந்து விடுமோ என்று நினைக்கத்தக்க அளவுக்கு அவ்வளவு மோசமாக இருக்கிறது. நகர்ப்புறங்களில் இருக்கக் கூடிய பிரிட்ஜ்களைத் துரிதமாகப் பழுது பார்க்க வேண்டும். அதற்கு



1972 மார்ச் 11] [திருமதி த. ந. அனந்தநாயகி]

ஆகும் செலவை 'டோல்' போட்டுக் கூடக் கலெக்ட் பண்ணிக் கொள்ளலாம். ஆனால் அதற்கு எத்தனை வருஷம் கலெக்ட் பண்ணுவது என்று நிர்ணயிக்க வேண்டும். செலவழித்த பணம் எல்லாம் வசூலான பிறகும் தொடர்ந்து 15 வருஷம், 20 வருஷம், 30 வருஷம் என்று வசூலித்துக் கொண்டிருக்கக் கூடாது. அப்படி வசூலிப்பதாக இருந்தால், மக்கள் இதையும் ஒரு வரி என்று நினைத்துக் கொள்ளுவார்கள்.

தண்ணீர்த் திட்டத்தை எடுத்துக் கொண்டால் முன்னால் பேசிய நகர அங்கத்தினர் 'வீராணம் திட்டத்தை நாங்கள்தான் கொண்டு வந்தோம்' என்று சொன்னார். ஆனால் திட்டம் இன்னும் வரவில்லை. ஒரு சமயம் குழாயிலே அவருக்கு ஸ்பெஷலாகத் தண்ணீர் வந்ததோ என்னவோ தெரியவில்லை.

அன்றே காங்கிரஸ்காரர்கள் தண்ணீர்த் திட்டத்திற்காகப் பல திட்டங்களைத் தயாரித்தார்கள். சோமசிலா திட்டத்தையும், வீராணம் திட்டத்தையும் தயாரித்தார்கள். எந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அஷ்யூர்டு வாட்டர் சப்ளை கிடைக்கும் என்று பார்த்து நிறைவேற்ற முன்வந்திருக்க வேண்டும். சோமசிலா திட்டத்தைக் கொண்டு வந்திருப்பார்களேயானால், கிருஷ்ணா, கோதாவரி போன்ற ஜீவநதிகளில் எப்போதும் தண்ணீர் இருக்கின்ற நிலையில் நிச்சயமாகத் தண்ணீர் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கும். வீராணம் ஏரித் திட்டத்திற்காக தற்போது 21 கோடி ரூபாய் செலவழிக்கிறார்கள். மைசூரில் காவேரியில் அணை கட்டி இங்கே தண்ணீர் வரவில்லை என்றால், அதைக் காவேரித் தண்ணீர் என்று சொல்ல முடியாது; வீராணம் ஏரித் தண்ணீர் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தத் திட்டம் வந்தால் வரும்போது நிச்சயமாக வாழ்த்துவேன். ஆனால் அந்தத் திட்டம் வருமா? மைசூர்க்காரன் அணையைக் கட்டி முடித்து விட்டால் தண்ணீர் வருமா என்பதுதான் கேள்வி.

கடைசியாக, குடிசை மாற்று வாரியத்திற்கு வரும்போது குடிசை மாற்று வாரியம் நல்ல பணிகளைத் துரிதமாகச் செயலாற்றுவதற்காக அதனுடைய தலைவராக இருக்கும் சகோதரர் அரங்கண்ணல் அவர்களுக்கு என்னுடைய பாராட்டு. அந்தந்த ஃபிளாட்டுக்கே தண்ணீர் கொடுக்க முன் வந்தது பாராட்டுக்குரியது. இல்லையென்றால் மூன்று மாடிக்குப் பெண்கள் தண்ணீ

ரைத் தூக்கிச் செல்லவேண்டிய நிலை ஏற்படும். அந்தந்த மாடிக்கே தண்ணீர் கொடுத்துவிட்டு ஐந்து ரூபாய் அதிகமாக வாடகை வாங்கிக் கொண்டால் கூடப் பரவாயில்லை.

இப்போது பொதுவாகப் பல கட்டடங்களுக்கு மெயின்டனன்ஸ் இல்லாமல் கட்டடங்கள் ரொம்ப மோசமாக இருக்கின்றன என்று பரவலாகச் சொல்லப்படுகிறது. கட்டடம் கட்டுவதில் அக்கறை காட்டுவதுபோல், பழுது பார்ப்பதிலும் அக்கறை செலுத்த வேண்டும். ஏழை மக்கள் வாழ்கின்ற கட்டடங்களில் அவர்களுக்கு ஒழுங்காக வைத்துக்கொள்ளத் தெரியாது, அவ்வளவாக அக்கறை காட்டமாட்டார்கள். சாக்கடைத் தண்ணீர் போகாது, அடைத்துக் கொள்ளும்; தண்ணீர் ஏறாது. இதெல்லாம் உடனுக்குடன் களையப்பட வேண்டும். பம்பாயில் நடுத்தர மக்கள், பணக்காரர்கள் வாழ்கின்ற ஃப்ளாட்டுகள் ஒழுங்காகப் பராமரிக்கப் படுகின்றன. 'ஏ' க்ளாஸ் மெயின்டனன்ஸ் இருக்க வேண்டும். மற்றவற்றில் எப்படி இருந்தாலும் குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரை கட்டடங்களை அதிகமாகக் கட்டுவதைக் காட்டிலும் பராமரிப்பிலும் கவனம் செலுத்த வேண்டும். இப்போதே பல கட்டடங்கள் எப்படி இருக்கின்றன என்று பாருங்கள். ஹைகோர்ட்டைப் பாருங்கள்; எழிலகத்தைப் பாருங்கள். கட்டடம் கட்டிப் பத்தாண்டுகளுக்குள் ரொம்ப மோசமான நிலையை அடைந்து விடுகின்றன. பராமரிப்புச் செய்தால் கட்டடம் கட்டுவதில் பாதிப் பணத்தை மிச்சப்படுத்தலாம்.

இன்றைக்கு குடிசை மாற்று வாரியத்தில் கொடுக்கும் இடம் 120 ஸ்கொயர் பீட் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்:** பின்னால் எழுதியிருப்பதைப் படியுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: "Each tenement constructed, has a room of 120 square feet, a verandah, a kitchen of 84 square feet, a bath of 16 square feet and a lavatory of 12 square feet."

நாங்கள் கட்டிக் கொடுத்தபோது இன்னும் கொஞ்சம் விசாலமாக இருந்தது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலும் நாங்கள் கட்டிக் கொடுத்தோம். நீங்கள் கொஞ்சம் அதிகமாகக் கட்டுகிறீர்கள். உங்களுக்கு வேறு வேலை இல்லை. நாங்கள் அப்போது பல அணைகளைக் கட்டிக் கொண்டிருந்தோம். அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து நாங்களும் பல நல்ல காரியங்களைச் செய்தோம், நீங்களும் செய்து கொண்டிருக்கிறீர்கள். பாரபட்சம் இல்லாமல் விஸ்தீரணம் கொஞ்சம் அதிகமாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





நந்தனம் காலனியில் 80 வீடுகளை இடித்துவிட்டு ஃப்ளாட்டுகளைக் கட்டப் போவதாக நோட்டீஸ் விட்டிருப்பதைப் பார்த்தேன். They will be demolished and flats will be constructed. இடிக்கிற வேலையிலே ஈடுபடாமல் புதிதாகக் கட்டுகிற வேலையிலே ஈடுபடுவது நல்லது. அந்த வீடுகள் பத்தாண்டுகள், பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாக கட்டப்பட்ட வீடுகள்தான். அவற்றை இடித்துவிட்டுக் கட்ட வேண்டுமென்ற நிலைமை இல்லாமல் பாக்கி இருக்கும் காலி இடங்களில் புதிய வீடுகளைக் கட்டிக்கொண்டு போவது நல்லது. பின்னால் அவசியம் ஏற்பட்டால் இந்த வீடுகள் பராமரிக்க முடியாத நிலையை அடைந்துவிட்டன என்ற நிலை ஏற்பட்டால் அப்போது வேண்டுமானால் இடித்து விட்டுக் கட்டிக் கொள்ளலாம். இடிப்பது என்றால் அதற்கு ஒரு செலவாகும். பிறகு கட்டுவதற்குச் செலவாகும்.

**திரு. இராம. அரங்கண்ணல்:** வீட்டுவசதி வாரியம் சார்பில் இடிக்கப்படுவது என்று சொல்வதற்குப் பதிலாக அந்த வீடுகளுக்கு மேலேயே வீடுகள் கட்டினால் அம்மையார் அவர்களுக்குச் சம்மதமா?

**திருமதி த. ந. அனந்தநாயகி:** தாராளமாகக் கட்டிக் கொள்ளலாம். இடிக்காமல் எதைச் செய்தாலும் வரவேற்கிறோம். We do not want any distruction. We want only further construction. அதற்கு மேலேயும் கட்டினால் பரவாயில்லை. இந்த ஃப்ளாட் சிஸ்டத்தில் சென்னை நகரில் நான்கு மாடி வீடுகள் கட்டப் போவதாகச் சொன்னார்கள். நான்கு மாடிகள் ஏறி இறங்குவதற்குள்ள உடல் உரம் தமிழ்நாட்டில் யாருக்குமே கிடையாது. இரண்டு மாடி ஏறுவதற்குள் திணறுகிறது, இரண்டு மாடி என்பது வரவேற்கத்தக்கது. மூன்று மாடி என்றால் பரவாயில்லை. நான்கு மாடிகள் என்றால் ஸ்ட்ரெச்சரில் எடுத்துக் கொண்டு போக வேண்டியதுதான். மூன்று மாடியாக இருந்தாலே

தண்ணீரில் ப்ரஷர் இருக்காது. என்னதான் ஓவர்ஹெட் டாங்க்ஸ் கட்டினாலும் கஷ்டம்தான். ஆகவே தயவு செய்து நான்கு மாடிக்குப் போகவேண்டாம். (Mr. Speaker sounded the gong). Only one point and I will finish.

பின், வாட்டர் அன்ட் ட்ரேய்னேஜ் போர்ட், ஸ்லம் க்ளியரன்ஸ் போர்ட், ஹௌஸிங் போர்ட் என்று பல வாரியங்களை ஏற்படுத்தி இருக்கிறோம். இவற்றிற்கு பி.டபிள்யூ.டி. என்ஜினியர்கள் லீவில் சென்று விடுகிறார்கள். அவர்களுக்கு அங்கு சீக்கிரமாக ப்ரமோஷன்கள் கிடைக்கின்றன. சில பேர்களை நீங்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கிறீர்கள். இங்கு ஜூனியராக இருந்தவர் அங்கு சென்று ஏ.இ., எஸ்.இ என்று சீக்கிரமாக ஆகிவிடுகிறார்கள். ஆனால் இங்கு பி.டப்ளியூ.டி.யில் இருப்பவர்கள் அப்படியே இருக்கிறார்கள். இவர்களுக்கு ஜூனியராக உள்ளவர்கள் அங்குபோய் ப்ரமோஷன் பெற்று இவர்களுக்கு சீனியராக வந்துவிடுகிறார்கள். ஆகவே இங்கிருப்பவர்களுக்கு மனக்கசப்பு ஏற்படுகிறது. அப்படிப்பட்ட மனக்கசப்பு ஏற்பட இடம் தரக் கூடாது. amongst Government servants— ஏதோ ஒரு செல்வாக்கு இருப்பதால் அந்த வாரியத்திற்குச் சென்றுவிட முடிகிறது, ப்ரோமோஷன்ஸ் சீக்கிரம் கிடைக்க வழி ஏற்படுகிறது. கிடுகிடு என்று எஸ்.ஈ. ஆகிவிடுகிறார்கள். எனவே திறமைசாலிகளாக இருந்தும் செல்வாக்கு இல்லாததால் அங்கு செல்ல முடியாததால் இவர்களின் ஜூனியர்ஸ் சீனியர்ஸ் ஆகிவிடுவது என்றால் கவர்ன்மென்ட் சர்வன்ட்ஸ் இடையில் மன அமைதி இருக்காது.

திரு. இராம. அரங்கண்ணல் : சீனியாரிட்டியை ஓவர்லுக் செய்து வாரியத்தில் ப்ரமோஷன் கொடுத்திருக்கிறார்கள் என்பதற்கு அம்மையார் அவர்கள் ஒரு உதாரணம் காட்டுவார்களா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : எனக்குத் தகவல் சொன்னார்கள். அதை உங்களுக்கு அனுப்புகிறேன். அந்தமாதிரி நடக்காமல் இருக்க என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டும்.

என்ஜினியர்களுக்கு சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டுக் கொண்டேயிருக்கிறது. டாக்டர்களுக்கு ரூ 500 வெட்டரினரி டாக்டர்களுக்கு, தாசில்தாருக்கு கூட ரூ. 425 என்றால் பாவம் நாலரை ஆண்டுகள் என்ஜினியரிங் படித்தவர்களுக்கு ரூ. 400 என்று சொல்வது நியாயமாக இருக்க முடியாது. நாலரை ஆண்டுகள் கொண்ட எந்த டெக்னிக்கல் கோர்ஸ் பாஸ் செய்தவர்களுக்கு, அவர்களுக்கு ஒரே நிலையில் இருக்க வேண்டும். டாக்டர்கள் மிகவும் முக்கியமானவர்கள் என்றால் டாக்டர்கள் வெரி இம்பார்ட்டென்ட் என்றால் அவர்களுக்கு அதர் காம்பன்ஸேட்டரி அலவன்ஸ் கொடுக்கிறார்கள். தனியாக 100 ரூபாய் வாங்குகிறார்கள். ஆகவே இந்தச் சம்பளத்தில் இப்படிப்பட்ட வித்தியாசம் இருக்கக் கூடாது. தாசில்தாருக்கு 425 ரூபாய் என்றால், என்ஜினியர்கள் என்றால் அவர்கள் அவ்வளவு மட்டமான நிலையிலா இருக்கிறார்கள் ? இளநிலைப் பொறியாளர்கள் என்றால் மதிப்பே கிடையாதா ? இரண்டாவது ஊதியக் குழுவில் பி.டபிள்யூ.டி. அமைச்சர் அவர்கள் சற்று அக்கறை எடுத்து இவர்களின் சம்பளத்தை நியாயமான முறையில் ரிவைஸ் செய்ய வேண்டும். தாசில்தாருக்கு ரூபாய் 425 என்றால் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 10-லிருந்து இப்போது ரூ. 25 இன்க்ரிமென்ட் கிடைக்கிறது. ஆனால் இவர்களுக்கு அந்த ரூ. 15 அப்படியே இருக்கிறது. அதைக் கவனித்து நிவர்த்தி செய்ய வேண்டும். இவற்றைச் செய்தால்தான் நிர்வாகத்தில் சீரமைப்பு காண முடியுமே தவிர இல்லை என்றால் நீங்கள் இருபது கோடி ரூபாய் செலவு செய்தாலும் அது யாரைப் போய் தொட வேண்டுமோ அவர்களைத் தொடுகிறதா என்பது கேள்விக் குறியாகிவிடும். பஞ்சாயத்து எட்யூகேஷனல் பைனான்ஸ் என்கொயரிக் கமிட்டியில் கூட சொல்லியிருக்கிறார்கள். பைனான்ஸைக் கட்டுப்படுத்த ஸ்டேட் லெவலில் ஒரு அக்கவுண்ட்டென்ட் வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது பொதுப் பணம். அரசாங்கப் பணம் ஒழுங்காகச் செலவழிக்கப்படுகிறதா என்பது கண்காணிக்கப்பட வேண்டும். ஆகவே வேண்டிய அலுவலர்களை நியமிப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் இத்துடன் என் கருத்துக்களை முடித்துக் கொள்கிறேன்.





திரு. இராம. அரங்கண்ணல் : தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் பேசியதற்குப் பிறகு நான் பேச விரும்பவில்லை என்றாலும் நான் தொடர்புடைய குடிசை வாரியம் சம்பந்தமாக இரண்டொரு விளக்கங்களை தங்கள் அனுமதியின் பேரில் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை வாரியம் பணியாற்றுகிற தன்மை பற்றி இங்கு பேசிய சென்னை மாநகரத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் அதிகமாக

பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். அந்தப் பாராட்டுக்களுக்கு குடிசை மாற்று வாரியம் மட்டுமல்ல, இந்த அரசு மட்டுமல்ல, அதனுடைய காரியங்களோடு ஒத்துழைத்த எதிர்க்கட்சி சட்ட மன்ற உறுப்பினர்களையும் சாரும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்தவரையில் காலையில் பேசிய நண்பர் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் ஒரு குற்றச் சாட்டை வெளியிட்டார்கள். யாரோ ஒருவரை சட்டாயமாக ஒரு இடத்திலிருந்து வெளியேற்றி விட்டதாகவும், அவரை அப்படி வெளியேற்றுவது தேவையில்லாத முறையில் செய்யப்பட்டதாகவும், யாருக்கோ பணம் கொடுக்கப்பட்டு அதன் காரணமாக அவர் வெளியேற்றப்பட்டதாக அவர்கள் சொன்னார்கள். அதற்கான விளக்கத்தை அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். குடிசை மாற்று வாரியத்தைப் பொறுத்த வரையில் சிக்கனம், சீக்கிரம் என்ற குறிக்கோளோடு அது பணியாற்றுவது ஒருபுற மிருக்க அங்கு எந்தவிதமான தவறுதல்களும் நடந்து விடக் கூடாது என்பதில் மிக மிக ஜாக்கிரதையாக நடந்து கொண்டிருக் கிறோம். அங்கு பணியாற்றுகிற எல்லா அதிகாரிகளும், எல்லாப் பொறியாளர்களும், அதேபோல் மற்றவர்களும் அங்கு ஜாக்கிரதை யாக இருக்குமாறு எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் சொன்ன தகவல் தவறான தகவல் என்பதை மட்டும் சபைக்கு விளக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னை மாநகரத்தில் திறந்த வெளி மனைகள் என்ற பெயரால் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு காலேயரைக்கால் மனை ஒவ்வொரு குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கும், ரூ 250 கீற்று, மூங்கில் இவைகள் வாங்கவும் முன்பு கொடுத்தார்கள். அப்படிக் கொடுக் கப்பட்ட இடங்கள் 7,600-க்கு மேற்பட்ட திறந்த வெளி மனைகள் சென்னை நகரில் இருக்கின்றன. யாருக்கு கொடுக்கப்பட்டதோ அவர்கள் அந்த மனைகளை இன்னொருவருக்கு விற்றுவிட்டு பக்கத்தில் சென்று குடிசை போட்டுக் கொண்டு வசிக்கும் பழக்கம் இருந்தது. வாரியம் ஏற்பட்ட பிறகு திறந்த வெளி மனைகளை என்ன செய்ய லாம் என்று வந்த சிலர் ஒன்றரை மனையில் ரூ. 15,000 அல்லது ரூ. 20,000 போட்டு நான்கு கடைகள், எட்டு குடித்தனங்கள் என்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வீடு கட்ட முடியாதவர் களுக்கு எல்.ஐ.சி.-யில் அப்பெக்ஸ் கோவாப்பரேட்டிவ் சொசைட்





டியில் ஏற்பாடு செய்து பணம் வழங்க வேண்டுமென்ற திட்டம் இன்றைய தினம் பரிசீலனையில் இருப்பதால், இந்த ஆண்டு திறந்த வெளி மனைகளைச் சீர்திருத்தம் செய்வதாக இருக்கிறோம்.

திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்கள் குறிப்பிட்டது வி.ஐ.டி. காலனி 373 பிளாட்டாகும். அது திவானலி என்பவருக்கு பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒதுக்கப்பட்டது. பிறகு அவர்கள் விதிகளை மீறி—அங்கு ஒருவர்தான் வசிக்கலாம், அந்த இடத்தை வாடகைக்கு விடக் கூடாது அதன் மேல் வருமானம் பெறக் கூடாது என்பதுதான் விதி. இரண்டு பேர்களை வாடகைக்கு வைத்துக் கொண்டிருந்தார்கள். அத் தகவல் வீட்டு வசதி வாரியத்திற்கு வந்ததால் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட அலாட் மென்ட் ரத்து செய்யப்பட்டது. ரத்து செய்யப்பட்டும் அவர் அந்த உத்தரவின்மீது சர்க்காருக்கு அப்பீல் செய்தார்கள். சர்க்கார் பார்த்துவிட்டு அவர் செய்தது நியாயம் இல்லை என்று அவர் மீதுள்ளதை ரத்து செய்துவிட்டார்கள். பிறகு கோர்ட் டுக்குப் போனார்கள். கோர்ட்டாரும், உனக்கு அதில் சொந்தமில்லை, யார் குடியிருக்கிறார்களோ அவருக்குத்தான் சொந்தம் என்று கோர்ட்டார் தீர்ப்பு வழங்கிவிட்டார்கள். இதில் ஒரு விந்தை என்னவென்றால் இந்த நிகழ்ச்சிகள் நடந்தது பூராவும் இப்போது அல்ல. 1964-ல் வழக்கு, 65-ல் அரசாங்க உத்தரவு, 66-ல் கோர்ட் முடிவு. இப்படி திவானலி என்பவருக்கு அந்த இடம் சொந்த மானதல்ல என்று ஏற்பட்ட பிறகு அங்கு குடியிருந்தவர்கள் அந்த இடம் தங்களுக்கு வேண்டுமென்று குடிசை மாற்று வாரியத்திற்கு மனுச் செய்து கொண்டார்கள். அந்த மனுமீது திவானலியைக் கூப்பிட்டு விசாரணை செய்தோம். அங்குள்ள வர்களைக் கூப்பிட்டு விசாரணை நடத்தினோம், பிறகு யார் வரி பாக்கிகளைக் கொடுப்பதாக இருக்கிறார்களோ அதில் கோர்ட் முடிவுப் பிரகாரம் நாச்சியம்மாள் என்ற நபருக்குக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதால் அவர்களுக்குக் கொடுக்கலாம் என்ற அளவில் முடிவு செய்யப்பட்டது.

இந்த விளக்கத்தை உறுப்பினர் அவர்கள் இங்கு இல்லை என்ப தால் அவர்களது கட்சித் தலைவர் அவர்களிடம் இதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் ஒன்று. வீடு களை நன்கு பாதுகாக்கவில்லை என்று சொன்னார்கள். அது பழைய அனுபவம். பாதுகாப்பது என்பது மட்டுமல்ல, அவை எவ்வளவு

நல்லமுறையில் கட்டப்பட்டது என்பதும் அவர்களுக்குத் தெரியும். இப்போது ஃபோர் ஷோர் எஸ்டேட்டில் சர்க்கார் சிப்பந்திகள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். கட்டப்பட்ட இடம் 220 சதுர அடி. அங்கிருப்பது ஒரு அறை. ஒரு சமையல் அறை. ஆனால் இன்றையதினம் குடிசை மாற்று வாரியம் கட்டும் வீடுகளின் மொத்த சதுர அடி 212 ஆகும். இண்டர் நேஷனல் ஸ்டாண்டர்ட் படி பார்த்தால் ரஷ்யாவிலும், அமெரிக்காவிலும் 120 சதுர அடி தான் என்று இருக்கிறது. ஆனால் நம்முடைய அரசைப் பொறுத்த வரையிலும் நல்ல வசதி செய்து தர வேண்டுமென்ற நோக்கத்தில் காரியங்கள் செய்து வருகிறோம்.

**திருமதி த. ந. அனந்தநாயகி** : இன்டர்நேஷனல் ஸ்டாண்டர்ட் பற்றிச் சொன்னார்கள். அங்கே இரண்டு பேர் இருக்கலாம். ஆனால் இங்கே அரை டஜன் பேர்கள் இருக்கிறார்கள்.

**திரு. இராம. அரங்கண்ணல்** : அம்மையார் அவர்கள் வெளிநாட்டிற்குச் சென்று பார்க்க வேண்டும். பல பேர் இருக்கிறார்கள். அந்த இன்டர்நேஷனல் ஸ்டாண்டர்ட்டை விட்டுவிட்டு, நாம் கட்டுவது என்னென்ன வசதிகள் வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான். முன்பைவிட இப்போது நவீன வசதியோடு சமையல் அறை. அதற்குப் பக்கத்திலே குழந்தைகளோடு உட்கார்ந்துகொண்டு சாப்பிடுவதற்கு இடம், உற்றார் உறவினர்களோடு தூங்குவதற்கு ஒரு அறை, யாராவது வந்து விட்டால் தங்குவதற்கு ஒரு அறை என்று இப்படி கிட்டத்தட்ட 3-4 அறைகளாகப் பிரிக்கப்பட்டு 212 சதுர அடிக்குள்ளேதான் கட்டப்பட்டு வருகிறது. ஏனென்றால் நாம் விலையை கவனிக்க வேண்டியிருக்கிறது 212 சதுர அடி என்றால் அதற்கு ரூ. 11,000 வரை செலவாகிறது. செலவு அதிகமாகிறது என்று சொன்னால் வாடகையை உயர்த்த வேண்டியிருக்கிறது. வாடகையை உயர்த்தினால் சகோதரி அனந்தநாயகி போன்று விஷயம் நன்றாகத் தெரிந்தவர்கள் 20 ரூ. வரை வாடகை வசூலிக்கலாம் என்று ஒப்புக்கொள்கிறார்கள்; நண்பர் கே. எம். எஸ். அவர்கள் இதிலே பிரச்சினையைக் கிளப்பி விடுகிறார்கள். உடனே அங்கே சென்று எங்கள் சர்க்கார் இருந்த நோக்கில் 10 ரூபாய்தான் போட்டோம், இவர்கள் 20 ரூ. கேட்கிறார்கள், கொடுக்காதீர்கள் என்று பிரச்சாரம் செய்யும் முயற்சியை செய்து வருகிறார்கள். இன்னும் மறியல் ஆரம்பிக்க





வில்லை. அந்த அளவுக்கு அதிகமான ஒத்துழைப்பு எனக்குக் கொடுத்து வருகிறார்கள். எத்தனை சதுர அடியில் கட்டப்பட்டிருக்கிறது என்பது பிரச்சினை அல்ல. வசதிகள் எவையெவை வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து தந்திருக்கிறோம். நமது சென்னையில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் தயவுசெய்து அவர்களுடைய தொகுதியில் இருக்கும் குடிசை மாற்று வாரியப் பகுதிகளுக்குச் சென்று அங்கே நடைபெறும் வேலைகளைப் பார்வையிட்டு, என்னென்ன ஆலோசனைகளைக் கூறுகிறார்களோ, அவற்றை எழுதியனுப்பினால், அந்த ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறேன். காரணம் இந்தப் பணி கட்சி மாச்சரியத்திற்கு அப்பாற்பட்ட பணி. யாராலும் செய்ய முடியாது என்று இருந்த பணி. அந்தப் பணியை நாம் ஏன் செய்கிறார்கள் என்றால் ஒரு வேகம், ஒரு உத்வேகம், ஏழைகளுக்கு பரிகாரம் காணவேண்டும் என்பதுதான். இது எனக்கு மட்டுமல்ல, என்னுடைய இலாகாவிலே பணிபுரிகிற சாதாரண அதிகாரியிலிருந்து பெரிய அதிகாரிவரை அந்த உணர்வைக் கொண்டு, பெரு முயற்சியை எடுத்துக் கொண்டு நாமெல்லாம் மகிழக்கூடிய அளவுக்கு காரியங்கள் செய்து வருகிறார்கள். ஆகவே, நல்ல யோசனைகளை எழுதியனுப்பினால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

3-4 மாடிகளைப் பற்றிச் சொன்னார்கள். எனக்குக்கூட ஆசைதான். தனியாக வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று ஆசைதான். என்ன செய்வது? இருக்கிற 10 கிரவுண்டுக்குள் இருப்பவர்கள் 500 பேர். அந்த 500 பேரும் அங்கேயே இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் மைலாப்பூரில் இருக்கும் 500 பேரில், 300 பேரை அங்கேயே வைத்து விட்டு, மற்ற 200 பேரைக் கொண்டுபோய் என் தொகுதியில் இருக்கும் அண்ணா நகருக்குக் கொண்டு போய் விட்டால், அந்தக் காரணத்திற்காக அங்கே கொண்டு போய் விட்டார்கள், நாளைக்கு எலெக்ஷன் வந்தால் ஓட்டு குறைந்து விடும் என்று பேசப்படுகிறது. அப்படிப் பேசக்கூடாது என்பதற்காகத்தான் அவர்கள் வாழ்கிற அதே இடங்களில் வீடு கட்டித்தர வேண்டுமென்பது சர்க்காரின் கொள்கையாகும்.

பல பேர் மெரீனா கடற்கரை அழகான கடற்கரை, அங்கே போயா மீனவர்களுக்கு 15 ரூ. வாடகையில் இவ்வளவு பெரிய கட்டடத்தைக் கட்டிக் கொடுக்கிறீர்கள் என்று

கேட்கிறார்கள். 100 ரூ., 200 ரூ. வாடகை வருமே என்று சொல்கிறார்கள். இந்தச் சர்க்காரைப் பொறுத்தவரையில் ஏழை மக்கள் எங்கெங்கே வாழ்கிறார்களோ அதே இடத்திலேதான் அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுதான் கொள்கை. இடம் போதாது என்ற காரணத்தால்தான் மாடிக் கட்டடங்கள் கட்டப்பட வேண்டியிருக்கிறது. ஒரு காலம் வரும், 2 மாடிகூட இல்லாது, தனித்தனி வீடுகளாக கட்டும் நிலை வரும். அப்போது கட்டிக் கொடுப்போம். முன்பு 600 குடிசைப் பகுதிகள்தான் சென்னையிலே இருந்தன என்று சொல்வார்கள். ஆனால் இன்று 1,200 குடிசைப் பகுதிகள் சென்னையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட பயங்கரமான சூழ்நிலையில் அங்கே இருக்கும் மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

முதலில் ஃபேஸ்ட் ப்ரோக்ராமாக நெருக்கமாக உள்ள குடிசைப் பகுதிகளை எடுத்து மாற்றுவது என்ற பணியில் ஈடுபட்டிருக்கிறோம். அது தீர்ந்து விட்டால் அதற்கு அடுத்தாற்போல் விருப்பம் போல் செய்யலாம். இப்படி 4-5 மாடிகள் குடிசை வாரியம் கட்டுகிற நேரத்தில் குடிசை வாரியமே இதை யார் மீதும் நிர்ப்பந்தித்துக் கட்டுவது இல்லை. அங்கே உள்ள மக்களைக் கூட்டி வைத்து, சட்டமன்ற உறுப்பினர்கள், கவுன்சிலர்கள் ஆகியோரை கூட்டி வைத்து, அவர்கள் ஆலோசனையைக் கேட்டு அவர்கள். நிறையப் பேர் இருக்கிறார்கள். 3 மாடி கட்டினால் பரவாயில்லை, 4 மாடி கட்டினால் பரவாயில்லை. யாரையும் வெளியேற்றாதீர்கள் என்று சொல்கிறபடிதான் நாங்கள் கட்டுகிறோம். 4–5 மாடிக் கட்டடங்கள் கட்டுவதற்குக்கூட கோரிக்கைகள் வந்திருக்கின்றன. ஆனால் இப்போது 4 மாடிவரைதான் கட்டி வருகிறோம். ஆனால் அந்த மாடியில் இருக்கிற மக்களுக்கு என்னென்ன வசதிகள் செய்துதர வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்து தருகிறோம். அவர்களுக்கேகூடத் தெரியும், அந்தப் பகுதியில் இருக்கும் நொச்சி நகர். அந்த இடத்திற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் வருவார்களானால் அனைவரையும் அழைத்துச் செல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். உலகத்திலே அந்த அளவுக்கு வசதியோடு எங்காவது செய்து கொடுத்திருக்கிறார்களா என்று பார்க்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.



அந்த வகையிலே குடிசை மாற்று வாரியம் பணியாற்றிக் கொண்டிருக்கிறது என்று சொல்வதற்குரிய வாய்ப்பு கொடுத்தமைக்கு மகிழ்ச்சியடைகிறேன். இந்தப் பேரவையின் வாயிலாக இந்த மனிதாபிமான முயற்சியில் ஒத்துழைப்புத் தரும் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஒத்துழைப்பு தரும் பத்திரிகையாளர்களுக்கும்—இந்தப் பிரச்சினையைப் பற்றி எப்படி அவர்கள் எழுதினாலும் இந்த மனிதாபிமான பிரச்சினையில் பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் தரும் ஒத்துழைப்பிற்கும், அதிகாரிகளுக்கும், கார்ப்பரேஷன் சிப்பந்திகளுக்கும், கார்ப்பரேஷன் அதிகாரிகளுக்கும் அவர்கள் தருகிற ஒத்துழைப்புக்கும் நான் பாராட்டுகிற வாய்ப்பாக இதைக்கருதி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமுதாய வளர்ச்சி, ஊர் வளர்ச்சி பற்றிய மானியக் கோரிக்கைகளின் மீது இப்பேரவையின் உறுப்பினர்கள் காலையிலிருந்து மாலைவரை பல்வேறு கருத்துக்களை மிகச் சிறப்பாக எடுத்து வைத்து இருக்கிறார்கள். இதிலே பலரும் எடுத்து வைத்திருக்கும் கருத்துக்களிலே குற்றச்சாட்டுகள் குறைவாகவும், குறைபாடுகள் குறைவாகவும், இந்த ஊர் வளர்ச்சித் துறை, சமுதாய வளர்ச்சித் துறை, மேலும் மேலும் எந்தெந்த வகையில் பெருக்கலாம் என்பதற்கான பரிந்துரை நல்குகிற முறையில் பலரும் கருத்துக்கள் எடுத்து வைத்திருப்பதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மானியக் கோரிக்கையின் முதல் நாளிலேயே ஊர் வளர்ச்சித் துறையும், சமுதாய வளர்ச்சித்துறையும் இங்கே விவாதிக்கப்படுகிற அளவுக்கு முன்வந்திருப்பதும் மிகமிக போற்றுவதற்குரிய ஒன்றாகும். ஆகவே, உள்ளாட்சித் துறையின் மூலமாகச் செய்யப்படுகின்ற பல்வேறு பணிகளைப்பற்றி மிகச் சிறப்பாக பேரவை உறுப்பினர்கள் பலரும் இங்கே விளக்கிக் காட்டியிருக்கிறார்கள்.

இந்த ஊர் வளர்ச்சியில்தான் நாட்டின் முழு வளர்ச்சியும் அடங்கியிருக்கிறது என்பதை எல்லோரும் மிக நன்றாக அறிவார்கள். ஆகவே, ஊர் வளர்ச்சித் துறையிலும், சமுதாய வளர்ச்சி பற்றியும் பல்வேறு பணிகளிலே நாம் ஈடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம். அதிலும் நம்முடைய பகுதியைப் பொறுத்த வரையிலும் நீண்ட நெடுங்காலமாகவே ஒரு நாட்டின் ஊர் வளர்ச்சி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 11

வாழ்க்கை வசதி கவனிக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பாங்கினையும் நாம் அறியலாம். வேறு பல மாநிலங்களை விட, நம்முடைய மாநிலம் நீண்டபெரும் காலமாகவே பரவலான தன்மை கொண்டதாக இருக்கிறது. அதுவேகூட இப்படிப்பட்ட நன்மை பெறுவதற்கு வசதியுடையதாக, நம்முடைய பணிகளை ஓரளவுக்கு நல்லமுறையில் செய்வதற்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது.

சாதாரணமாக மற்ற மாநிலத்தைப் பார்த்தால் குறிப்பிட்ட சில பல நகரங்கள் பெரு நகரங்களாகவும், மிகப் பெரும் நகரங்களாகவும் மாறி, மற்ற பகுதிகள் எல்லாம் சிறிய சிறிய சிற்றூர்களாகவும் சிறிய சிறிய பகுதிகளாகவும் அமைந்திருக்கும் தன்மையையும் காணலாம். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் பார்த்தால் சென்னையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டம் வரையில் இருக்கிற பல்வேறு பகுதிகள் ஒரு பரவலான வளர்ச்சியைப் பெற்று இன்று நகரங்கள் 2-3 என்று நின்று விடாமல், ஒவ்வொரு மாவட்டத் தலைநகரமும் ஒரு குறிப்பிடத்தக்க பெருநகரமாக விளங்குவதையும் பார்க்கிறோம்.

மகாராஷ்டிரத்தை எடுத்துக் கொண்டால் பம்பாய், பூனா, நாக்பூர் போன்றவைகள்தான் பெருநகரங்கள் என்று சொல்லத்தக்க அளவுக்கு இருக்கின்றனவே தவிர மற்ற நகரங்களை எல்லாம் நகரங்கள் என்று சொல்ல முடியாது. மைசூரைப் பார்த்தால்கூட, மைசூர், பெங்களூர், கோலார் போன்ற சிலவற்றைத்தான் பெரு நகரங்களாக சொல்ல முடியும். மற்றவைகள் வாய்ப்பு, வசதிகள் பெற்று சிற்றூர்கள், பேரூர்கள் என்று கணித்துக் கொள்ளத்தக்க அளவுக்கு வளர்ச்சியாக சொல்ல முடியாது.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் சென்னைக்கு அடுத்து மதுரை, அதையடுத்து கோவை, அதையடுத்து சேலம், திருச்சி, தஞ்சை, திருநெல்வேலி, கடலூர், காஞ்சிபுரம், வேலூர் இப்படியாக ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரமும் பெரு வளர்ச்சி பெற்றிருக்கிற பாங்கினை நாம் பார்க்கிறோம். இப்படி நகரங்களில் ஏற்படுகிற வசதி வாய்ப்புகளெல்லாம் பக்கத்திலே உள்ள சிற்றூர்களுக்கும் கிடைக்கக்கூடிய அளவிற்கு அமைந்திருக்கிறது.



1972 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அது மட்டுமல்லாமல் நகரம் என்று சொன்னால் கணக்கின்படி பார்த்தாலும் இன்னின்ன மக்கள் தொகை என்கின்ற கணக்கின் அடிப்படையில் பார்க்கிறபோது தமிழகம் மிகச் சிறந்து விளங்குகிற பாங்கினை நாம் நன்றாகக் காணலாம். அந்த வகையிலே நாம் பார்க்கிறபோது தமிழகத்தைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டு தமிழகம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட இலாகாக்களை வைத்து கணக்கிட்டு இருக்கிறார்கள். அதேமாதிரி தமிழகத்தின் மக்கள் தொகை கணக்குப்படி பார்த்தால் $4\frac{1}{2}$ கோடி மக்கள் கொண்ட தமிழகத்தில் 443 நகரங்கள் இருக்கின்றன. 8 கோடி மக்களைக் கொண்ட உத்திர பிரதேசத்தில் 293 நகரங்கள்தான் இருக்கின்றன. மகாராஷ்டிரத்தில் 289 நகரங்களும், குஜராத்தில் 217 நகரங்களும் இருக்கின்றன. அதேநிலையில் பார்த்தால் தமிழகத்தில் 443 நகரங்கள் இருக்கின்றன. இதிலிருந்து எந்த அளவுக்கு வாய்ப்பு வசதிகளைப் பெற்று மக்கள் மதிக்கிற அளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோம் என்ற பாங்கினை, உள்ளாட்சித் துறை எந்த அளவிற்கு வளர்ந்திருக்கிறதென்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தற்போது 12,642 ஊராட்சி மன்றங்கள் தமிழகத்தில் இருக்கின்றன. அதைப் போன்று பேரூராட்சி மன்றங்கள் 600 இருக்கின்றன; ஊராட்சி ஒன்றியங்கள் 374; ஊராட்சி நகரியங்கள் 12 ; நகராட்சிகள் 89 ; நகர் நகரியங்கள் 8, மாநகராட்சி மன்றங்கள் என்று சொல்கிற அளவிலே 2 இருக்கின்றன.

உறுப்பினர் திருமதி அனந்தநாயகி அவர்கள் 9 கோடியே 93 லட்ச ரூபாய் மானியம் கிடைக்கின்ற வகையில் இவற்றை அடிப்படையாக வைத்து நாம் வளர்ச்சிக்கான எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்ற முடியாது என்பதையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். ஆனால் 9 கோடியே 93 லட்ச ரூபாய்க்குள் இருக்கின்ற அளவிலே 12 ஆயிரத்துச் சில்லறை ஊராட்சி மன்றங்களையும், மற்றவைகளையும் காப்பாற்றுகிற அளவிலே இந்தத் திட்டங்கள் அமைந்துவிடவில்லை. இந்தத் தொகையில் பாதிக்கு மேல் நிர்வாகச் செலவிற்கு மட்டும் $5\frac{1}{4}$ கோடி ரூபாய் ஆகிவிடுகிறது. மற்றப்படி உள்ளாட்சித் துறையின் மூலம் நடைபெறுகிற மற்றப் பணிகளை எடுத்துக் கொண்டாலும், அடுத்தபடியாக இந்த உள்ளாட்சித் துறையின் மூலம் கிராமங்களுக்கு அதிக நன்மைகள் வருகிற அளவிலே பார்த்து மற்ற நலத் துறைகளிலிருந்து நிதி ஒதுக்கீடு

செய்தாலும், திட்டங்கள் போட்டாலும், அதை நிறைவேற்றுகிற, அதை ஏற்று நடத்துகிற ஒரு ஏஜென்ஸியாக இருந்து நடத்துகிற பொறுப்பு இந்த உள்ளாட்சித் துறைக்குத்தான் இருக்கிறது. 77 கோடியே 14 லட்சம் ரூபாய் பெறுமான மற்ற திட்டங்களை இந்த உள்ளாட்சித் துறையில் ஏற்றுக்கொண்டு இருக்கிற நாம், 9 கோடியே 98 லட்சத்தை ஒதுக்கியிருந்தாலும் 77 கோடியே 14 லட்ச ரூபாய்க்கான பல பணிகளை நாம் ஏற்று நிறைவேற்ற வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

மற்ற துறைகள் எல்லாம் திட்டங்கள் போட்டாலும், துவக்கப் பள்ளியிலிருந்து மருத்துவத் துறை வரை உள்ளாட்சித் துறையோடு சேர்ந்து பணியாற்ற வேண்டியிருக்கிறது. இது போன்று பொது நலத் துறை, வேளாண்மைத் துறை, விலங்கினம் வளர்ப்பு, மருத்துவம், சமூக வளர்ச்சித் திட்டங்கள் போன்றவைகளெல்லாம் இதோடு இணைந்து 77 கோடியே 14 லட்ச ரூபாய்க்கான வேலையை நாம் செய்கிறோம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே பல்வேறு கருத்துக்களைப் பற்றிச் சொன்னார்கள். ஊராட்சி மன்றங்கள் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். 10, 12 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்கெனவே இருந்த டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் ஒழிக்கப்பட்டு, ஊராட்சி ஒன்றியங்கள் வந்ததால் நல்ல பல வளர்ச்சிகளைப் பெற்றிருக்கிறோம். ஆகவே டிஸ்ட்ரிக்ட் போர்டுகள் மூலம் செய்யப்பட்ட பணிகளை விட இந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலம் நடக்கிற பணிகள் நல்ல முறையில் நடக்கின்றன என்பதை யாரும் மறுக்க முடியாது.

ஏற்கனவே, ஜில்லா போர்டு இரு காதுகளால் கேட்கப்பட்டு இரு கண்களால் செய்யப்பட்ட பணிகளை இன்றைக்கு 383 ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் நாம் சீரோடும் சிறப்போடும் செய்து வளர்ச்சி அடைந்திருக்கிறோம். 1970-71-ல் 64 கோடியே 44 லட்சம் என்றிருந்தது. அது 1971-72-ல் 64 கோடியே 44 லட்சத்திலிருந்து 71 கோடியே 93 லட்ச ரூபாயாக உயர்ந்திருக்கிறது. 77 கோடியே 14 லட்ச ரூபாய்க்கு இந்தத் துறையின் மூலம் மேலும் பல பணிகள் வளர்ந்து வரும் பாங்கினை காண்கிறோம். ஆகவே இப்படிச் செய்வதின் மூலமாக ஒரு நாடு சிறந்த வளர்ச்சி





பெற்றிடும். அந்த முறையில் இன்றைக்கு குடிநீர் கிராமங்களுக்கும் கிடைக்கச் செய்யவேண்டும் என்கிற முறையில் திட்டங்களைத் தீட்டி அதை நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம்.

ஒன்றிய இணைப்புச் சாலைகள் மேலும் போக்குவரத்து வசதிக்குப் பயன்பட வேண்டும் என்கிற அடிப்படையில், கிராம மக்கள் பக்கத்திலுள்ள கிராமங்கள் நகரங்களோடு தொடர்பு கொள்ள வேண்டும், அதன் மூலம் கிராமங்களில் விளைகின்றனவற்றை நகரங்களுக்கு சுலபமாக எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்பதற்காக அந்த அடிப்படையில் இன்றைக்கு இணைப்புச் சாலைகளை சீரமைப்பதில் மிகுந்த அக்கறை காட்டப்படுகிறது. மூன்றாவதாக, எல்லாக் கிராமங்களும் மின்சார வசதி பெற வேண்டுமென்கிற அடிப்படையில். அதன் மூலம் விவசாயம் வளர்ச்சி பெற வேண்டுமென்கிற அடிப்படையில் இன்றைக்கு கிராமங்களுக்கெல்லாம் மின்சார இணைப்புகள் கொடுக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயத் துறையில் ஈடுபட்டவர்கள் வளர்ச்சி பெற்று படிப்படியாக தொழில் துறைக்கு வரவேண்டும் என்கிற முறையில் இப்படிச் செய்து கொண்டிருக்கிறோம்.

கல்வி வசதியைப் பொறுத்த வரையில் இன்றைக்கு 300 பேர்கள் கொண்ட ஒரு கிராமத்திற்கு ஒரு துவக்கப் பள்ளி என்றும், 2½ மைலுக்குள் ஒரு உயர் துவக்கப் பள்ளி என்றும், அதற்கப்பால் 5 மைலுக்குள் ஒரு உயர்நிலை துவக்கப் பள்ளி என்றும் இன்றைக்கு நாம் கல்வி வசதிகளைப் பெருக்கிக் கொண்டு வருகிறோம். இதே போன்று கிராமங்கள் பயன்படக்கூடிய அளவில் இன்றைக்கு மருத்துவ வசதிகளைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஆயிரம் என்றிருந்ததை இன்றைக்கு பல்வேறு வழிகளில் நாம் திட்டமிட்டு, திட்டமிட்டு 6 ஆயிரத்துச் சில்லரையாக ஆக்கியிருக்கிறோம். அதையெல்லாம் நாம் நிதி வசதியைப் பொறுத்துச் செய்ய வேண்டிய நிலையிலிருக்கிறோம்.

பொதுவாக எல்லா ஊர்களும் தங்கள் வசதிகளைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற ஆவலில் இருக்கின்றன. ஆகவே தான், உறுப்பினர்கள் எல்லாம் அதை மிகச் சிறப்போடு எடுத்துச் சொன்னார்கள். 9 கோடியே 93 லட்ச ரூபாய் செலவாகிற அளவிற்கு இந்தத் துறையில் வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 11

இணைப்புச் சாலைகளைப் பொறுத்த வரையில் 17,056 கிலோ மீட்டர் என்கிற அளவிலிருந்து நம்முடைய பெரு முயற்சியால் இன்றைக்கு 31,957 கிலோ மீட்டர் அளவிற்குக் கொண்டு வந்திருக்கிறோம். மேலும் வருகிற ஆண்டிலே அதிக ரோடுகள் போடுகிற முயற்சியிலே இருக்கிறோம்.

மேலும் மேல் நிலை நீர்த் தொட்டி 1966-ல் 1,936 என்றிருந்தது இன்றைக்கு நாம் எடுத்த பெரு முயற்சியால் 1971-ல் 4,420 என்றாகியிருக்கிறது. கிணறுகள் 43,200-லிருந்து இன்றைக்கு 69,329 ஆகியிருக்கிறது.

அதேபோல பள்ளிகள் 17,659-லிருந்து 18,616 ஆக உயர்ந்திருக்கின்றன. பள்ளிக்கூட கட்டடங்கள் 1966-ல் 9,874 என்றிருந்தது இன்றைக்கு 14,926 ஆக உயர்ந்திருக்கிறது. ஆக இன்னும் இந்தத் துறையில் இதுபோன்று அதிகமான பணிகளை நாம் செய்யவேண்டியிருக்கிறது. அதற்காக நாம் மேலும், மேலும் நிதி வசதி பெற்று திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம்.

நிர்வாகத்தினுடைய பொறுப்பை மாற்றியமைக்க வேண்டுமென்ற கருத்தினை பேரவை உறுப்பினர்கள் பலரும் தெரிவித்தார்கள். கடந்த 10, 12 ஆண்டுக் காலமாக ஊராட்சி ஒன்றியங்களைப் பற்றிய அனுபவம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த அனுபவத்தின் அடிப்படையிலே ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் எப்படி மாற்றி அமைக்கலாம்—அதிலே என்னென்ன சீர்திருத்தங்கள் செய்யலாம், அதிலேயுள்ள குறைபாடுகள் என்ன, நிறைபாடுகள் என்ன என்பதையும் சொல்லி, மேலும் என்னென்ன வகைகளில் செம்மைப் படுத்தலாம் என்பதையும் பேரவை உறுப்பினர்கள் பலரும் தெரிவித்தார்கள். அவர்கள் அளித்த கருத்தினையெல்லாம் அரசு பரிசீலனை செய்யும்.

இப்பொழுது ஊராட்சி ஒன்றியங்களில் ஆறு பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. உற்பத்திப் பிரிவு, கல்விப் பிரிவு, கூட்டுறவுப் பிரிவு, பொதுப்பணிப் பிரிவு, ஊராட்சி நிர்வாகப் பிரிவு, பொதுப் பிரிவு என்ற ஆறு பிரிவுகள் மூலம் கிராமப் பணிகள் செவ்வையாக நடைபெற்று வருகின்றன. இவை மேலும் சிறந்த முறையில் பணியாற்ற சில பல கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றார்கள். அவைகளையும் அரசு ஆய்வு செய்யும்.



1972 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அடுத்தபடியாக, சில ஊராட்சி ஒன்றியங்கள் விரிந்து, பரந்து இருக்கின்றன: அவைகளையெல்லாம் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிக்கின்றபோது ஏதாவது ஒரு அடிப்படையிலே பிரிக்க முடியாது. ஆங்காங்கே இருக்கின்ற வசதிகளையும், மக்கள் தொகையினையும், வருமானத்தையும், நிர்வாக வசதியையும் ஒட்டித்தான் ஊராட்சி ஒன்றியங்களை அமைக்கமுடியும். அப்படியாயின்தான் சீர்திருத்த அமைப்பிலே பலன்பெறமுடியும். பல்வேறுவிதமான அதிகாரிகள், அலுவலர்கள் ஊராட்சி ஒன்றியங்களிலே பணியாற்றி வருகின்றார்கள். கடந்த 12 ஆண்டுகால அனுபவம் அவர்களுக்கு இருக்கிறது. அந்த அனுபவத்தின் அடிப்படையிலே அவர்களும் சிலபல யோசனைகளைத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்தப் பிரச்சினையை மீண்டும் பரிசீலனை செய்ய நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைக் கேட்டிருக்கிறோம். முன்னாள் தலைமைச் செயலாளராக இருந்த திரு. வர்கீஸ் அவர்களைக்கொண்ட இந்த அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிஃபார்ம்ஸ் கமிட்டி அதுபற்றி ஆராய்ந்துகொண்டிருக்கின்றது. அவர்கள் அறிக்கை கிடைத்ததும், அவர்களின் பரிந்துரையின் பேரில் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு எண்ணியுள்ளது. இன்றைய ஊராட்சி ஒன்றியங்களின் அமைப்பையும் எந்தவகையிலே மாற்றி அமைக்கலாம் என்றும் நிர்வாகச் சீர்திருத்தக் குழுவைக் கேட்டிருக்கிறோம்.

இப்போது ஊராட்சி ஒன்றியத்தின் நிர்வாகம் ரெவின்யூ துறையோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. அதை ரெவின்யூ துறையிலிருந்து மாற்றி தனித் துறையாக அமைக்கவேண்டுமென்று பலர் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கருத்தையும் ஆராய்ந்து அதுபற்றியும் பரிந்துரை வழங்குமாறு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவுக்கு தெரிவித்திருக்கிறோம். அவர்கள் அறிக்கை தந்தவுடன் அதுபற்றியும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அரசு எண்ணியிருக்கின்றது.

அடுத்து, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்து எடுக்கவேண்டுமென்று சில பல உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். குறிப்பாக, திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் இந்தக் கருத்தினை வலியுறுத்தினார்கள். மற்றும் பல உறுப்பினர்கள் நேரடித் தேர்தலே சிறந்தது என்ற கருத்தினையும் தெரிவித்தார்கள். ஏற்கெனவே இதுபற்றி

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 11

நாங்கள் ஆலோசனை செய்திருக்கிறோம். அந்த ஆலோசனையின் பயனாகத்தான், முதலில் ஊராட்சிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைச் செயல்படுத்தினோம். அதில் நல்ல பலன் கிடைத்தால் ஊராட்சி ஒன்றியத் தலைவர் தேர்தலிலும் இந்த முறையைக் கொண்டு வரலாம் என்று பரிசீலித்துக்கொண்டிருக்கிறோம். இப்போது ஊராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் எப்படிச் செயல்படுகிறார்கள்; நிர்வாகம் முன்னால் நடைபெற்ற முறைக்கும் இப்போது நடைபெறும் முறைக்கும் மாற்றம் இருக்கின்றதா என்ற விபரத்தை மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே கேட்டிருக்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள், இந்த முறை நல்லது தான்; இதனால் நிர்வாகமும் நல்லமுறையில் நடைபெறுகிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்த முறையில் எந்த ஊராட்சித் தலைவரும் தவறு செய்ய முடியாது. சட்ட திட்டங்களை மீறி, தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ய முடியாது. அப்படி துஷ்பிரயோகம் செய்தால் நேரடியாகவே நடவடிக்கை எடுத்து, அவர்களை பதவியிலிருந்து நீக்கிவிடலாம். அந்த அடிப்படையில் சில பல தவறு செய்த தலைவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அரசும் இது நல்ல முறை என்றுதான் கருதுகிறது.

தலைவர்களை உறுப்பினர்கள் மூலம் தேர்ந்தெடுப்பதில் பல சிக்கல்கள் இருக்கின்றன என்பதை அறிந்துதான் தலைவர்களை நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பரிசிலனை செய்து பார்த்தோம். உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும்போது, சில மாச்சரியங்கள் ஏற்பட்டு, அதனால் ஊரிலே பிளவு ஏற்பட்டு, அந்தப் பிளவு வளர்ந்துகொண்டே சென்று, "நீ தலைவனாக இருந்தபோது பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அனுமதிக்கவில்லையே, இப்போது உன்னால் எப்படி சாலைபோட முடியும் அல்லது குடிநீர் கிணறு வெட்ட முடியும் என்பதை நான் பார்க்கிறேன்" என்று தற்போதைய தலைவர் சொல்ல, முன்னால் இருந்த தலைவர் இவருக்குப் பின்னால் தேர்ந்தெடுக்கப்பட்டால், இவர் கூறியதையே அவரும் திருப்பிச் சொல்ல, இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டு ஊரின் வளர்ச்சியே பாழ்பட்டு போய்விடக்கூடிய நிலை இருந்தது. அவர்களின் தலைமைப் போட்டியினால் தொல்லைக்குள்ளானோர் ஊர்



1972 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மக்கள்தான். நேரடித் தேர்தலின் மூலம் இந்தமாதிரியான சூழ்நிலையைத் தவிர்க்க முடியும் என்பதை இப்போது அறிந்திருக்கிறோம்.

ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கம் போதாது என்று பலரும் சொன்னார்கள். ஆண்டுக்காண்டு வளர்ந்து வருகின்ற தேவையைப் பார்க்கின்றபோது ஒதுக்கப்படுகின்ற தொகை மிக மிகக் குறைவுதான். அதை எப்படி எப்படி விரிவுபடுத்தலாம் என்று யோசனை செய்துகொண்டிருக்கிறோம். ஆண்டுக்காண்டு அளிக்கப்படுகின்ற உதவித்தொகையின் அளவு அதிகமாக இருந்தாலும், ஆண்டுக்காண்டு பெருகி வரும் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கும் பெருகி வரும் தேவைகளின் அளவுக்கும் அது போதாது. எனவே ஊராட்சி ஒன்றியங்களின் வருவாயைப் பெருக்கும் நோக்கத்தில், செஸ் வரி அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. முன்னால் ஒன்றரை ரூபாயாக இருந்த செஸ் வரியே இப்போது இரண்டரை ரூபாய் வரையில் வசூலிக்கலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இரண்டரை ரூபாய் வரை வசூலிக்கலாம் என்றுதான் இருக்கிறதே தவிர, இரண்டரை ரூபாயும் வசூலித்துவிட வேண்டுமென்று கட்டாயம் இல்லை. அது ஆங்காங்கு இருக்கின்ற இடத்தின் தன்மைக்கேற்றவாறு, நிதி வசதிக்கேற்றவாறு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்களில் வசூலிக்கப்படும்.

ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற இணைப்புச் சாலைகளை சரிவர பராமரிக்க ஒன்றியங்களுக்கு வசதி இல்லை. அதனால் அரசாங்கமே அந்த பராமரிப்புப் பணிகளுக்கு ஆகும் செலவை கொடுக்கவேண்டுமென்று சில பல பேரவை உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். இது சம்பந்தமாக எந்தெந்த வகையிலே நிதி வசதியைப் பெருக்கலாம் என்றும், அரசாங்கம் அதில் எந்த அளவுக்கு உதவ முடியும் என்பதையும் அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, கல்வித் துறையைப்பற்றிச் சொன்னார்கள். கல்விக்கு அதிகப் பணம் செலவழிக்கப்படுவதால் அரசாங்கம் அதற்கு மேலும் கூடுதலான உதவியைச் செய்யவேண்டும் என்று சொன்னார்கள். கல்வியைப் பொறுத்தமட்டில் மொத்தச் செலவில் 85 சதவிகிதத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. மீதமுள்ள 15

சதவிகிதம் தான் ஊராட்சி ஒன்றியம் செலவு செய்கிறது. கல்வி வளர்ச்சியை கிராமப்புறங்களிலே விரிவுபடுத்த அரசாங்கம் தீவிரத் திட்டங்களைத் தீட்டிச் செயல்பட்டு வருகிறது. அந்த வகையிலேயும் கல்விக்கு எவ்வளவு செலவானாலும் அதில் 85 சதவிகிதத்தை அரசாங்கமே ஏற்றுக்கொள்கிறது.

அடுத்து, ஊராட்சி ஒன்றியங்களுக்கு அதிக அதிகாரம் வேண்டும் என்றும் இப்போது எல்லா அதிகாரங்களும் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்றும் பலர் சொன்னார்கள். குறிப்பாக, ஊராட்சிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மாற்றக்கூடிய அதிகாரம் கூட ஊராட்சி ஒன்றியங்களுக்கு இல்லை என்று சொன்னார்கள். ஆசிரியர்களை மாற்றும் அதிகாரம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு இருந்தால் ஆசிரியர்களை அடிக்கடி தங்கள் விருப்பம்போல் மாற்றிவிடுகிறார்கள் என்றும் குறைகள் சொல்லப்பட்டன. எனவே, அதிலே ஒரு சீரான முறையை உருவாக்கும் பொருட்டு, ஒரு குழு அமைக்கப்பட்டது. அந்தக் குழுவில் முதலில் பி.டி.ஓ. இடம் பெற்றிருந்தார். பின்னால் ஆர்.டி.ஓ. இடம் பெற்றிருந்தார். அதற்குப் பின்னால் அந்தக் குழுவில் எம்.எல்.ஏ.யும், எம்.பி.யும் இடம் பெற்றார்கள். இப்போது அந்தக் குழுவில் எம்.எல்.ஏ., எம்.பி., ஆர்.டி.ஓ.வும் இருக்கின்றார்கள். அவ்வப்போது அதற்கேற்றவகையில் பல்வேறு விளைவுகள் ஏற்படுகின்றன.

ஆகவே கூடுமானவரையில் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் மாற்றித் தீர வேண்டும் என்ற அவசியம் இல்லைதான். வேறு துறைகளில் உள்ளவர்களைப்போல மாற்றங்கள் செய்யப்படுவது கல்வித்துறையைப் பொறுத்த வரையில் தேவையில்லை. தனியார் துறையில் நடத்தப்படுகிற பள்ளிகளில் ஒரு ஆசிரியர் 35 ஆண்டுகளில் ஒரே இடத்தில் ஒரே ஊரில் இருந்து பணியாற்றுவதன் காரணமாக எந்தவிதமான கேடும் ஏற்பட்டு விடவில்லை என்கிறபோது இந்தப் பள்ளிகளில் பணியாற்றுகிற ஆசிரியர்களை மாற்ற வேண்டியதும் அவசியம் இல்லைதான். அவர்களாக விரும்பி மாற்றம் வேண்டும் என்று கேட்கிறபோதோ, பதவி உயர்வு காரணமாக மாற்றல் அவசியம் என்கிறபோதோ அல்லது அவர் குற்றம் இழைத்துவிட்டார் என்கிற அடிப்படையில் மாற்றம் தவிர்க்க முடியாததாக இருந்தாலோ மாறுதல் செய்தால் போதும் என்கிற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒருவர் விரும்பி





ஒரு இடத்திற்கு மாற்றம் கேட்கிறபோது, அந்த ஊரில் ஒரு பாவமும் அறியாது பணியாற்றி வருகிற ஒரு ஆசிரியரை அவர் எதிர்பார்க்காமலேயே மாற்றவேண்டிய நிலை வந்துவிடுவதைப் பார்க்கிறோம். கல்வித்துறையைப் பொறுத்தவரையில் இந்த மாறுதல் அவசியம் இல்லை. இப்படி அடிப்படையான பொதுக் கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படிச் செய்யப்படுகிற மாறுதலும் கூட விடுமுறைக் காலத்தில் செய்யப்படவேண்டுமே தவிர பள்ளி நடக்கிற ஆண்டுக்காலத்தில் அப்படிப்பட்ட மாறுதல் செய்யவேண்டாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கணவன் மனைவிமார்களைப் பிரிக்கவேண்டுமென்ற நிலைமையும் இல்லை. குறிப்பிட்ட ஒரு இடத்தில் இருந்து பதவி உயர்வு காரணமாக கணவர் மாற்றப்படுகிறார் என்றால் அந்த ஊருக்கே அவரது மனைவியையும் மாற்றிவிடலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கல்வித்துறையைப் பொறுத்தவரையில் துவக்கப்பள்ளிக்கு அதிக வசதியும் வாய்ப்பும் ஏற்படுத்தித்தரவேண்டும் என்கிற அடிப்படையில்தான் 1966-67 இல் அதற்காக ஒதுக்கப்பட்டது 16 கோடியே 68 லட்சம் என்றால் இப்போது 39 கோடியே 95 லட்சம் செலவழிக்க வேண்டிய கட்டத்திற்கு நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். அந்த அளவுக்கு துவக்கக் கல்வியின் வளர்ச்சி ஏற்படுத்தப்பட்டு வந்திருக்கிறது. ஊராட்சி மன்றங்களுக்காக இத்துறையில் மானியமாக 3 கோடியே 14 லட்சம் வழங்குவதற்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனாலும் இன்னும் ஓரளவு நிலைமைகளைச் செம்மைப்படுத்தவேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது.

ஊராட்சி மன்றங்களுக்கு செஸ் போன்ற ஆறு வகையில் நிதி ஒதுக்கம் செய்யப்படுகிறது. ஆயினும் சில பல ஊராட்சி மன்றங்களினால் ஆசிரியர்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் சம்பளம் கொடுக்க முடியாதிருந்த நிலைமையை அரசு உணர்ந்து ஜனவரி 1 ஆம் தேதியில் இருந்து ஆசிரியர்களுக்கு சம்பளத்தை டிரஷரியில் இருந்து ஒவ்வொரு மாதமும் முதல் தேதி அளவுக்கே வாங்கிக் கொடுத்துவிடலாம் என்றும், பின்னர் அரசாங்கமும் ஊராட்சி மன்றங்களும் கணக்கைச் சரி செய்துகொள்ளலாம், ஆசிரியர்கள் ஊராட்சி மன்றங்களில் பணம் இல்லை என்கிற காரணத்தினால் கஷ்டப்படவேண்டாம் என்கிற அளவில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டது. ஆகவே இனி ஊராட்சி மன்றங்களில் ஆசிரியர்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 11

களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவில்லை—காலத்தில் அவர்களுக்குச் சம்பளம் வரவில்லை என்கிற நிலையே ஏற்படாது என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் குடிதண்ணீர் வசதிகளைப் பற்றி எல்லாம் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாம் அதற்காகப் பல வசதிகளைச் செய்திருக்கிறோம். குடி தண்ணீர் வசதி சிற்றூர்களுக்குச் செய்துகொடுப்பதற்காக ஆகும் செலவில் அரசு 75 சத விகிதம் ஒத்துக்கொள்கிறது. ஊராட்சி மன்றம் 25 சத விகிதம் பொறுப்பேற்கிறது. ஹரிஜனக் காலனிகளாக இருந்தால் அரசாங்கமே 85 சத விகிதம் மானியம் கொடுத்துவிடுகிறது. பாக்கி 15 சத விகிதம் கூட ஹரிஜனநலத்துறை ஏற்றுக்கொள்கிறது. அவர்களிடம் இருந்து எத்தகைய தொகையையும் எதிர்பார்க்காமல் குடிதண்ணீர் வசதி அவர்களுக்குச் செய்து கொடுப்பதற்கும் இப்படி முயற்சி எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிறது. நகர்ப்புறங்களுக்கு நல்ல முறையில் குடிதண்ணீர் வசதியை செய்து கொடுக்க இப்போது குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டிருப்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அவர்கள் பலவழிகளிலும் குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க பல பணிகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். சாதாரணமாகக் கூட குடிதண்ணீர் பற்றுக்குறை உள்ள பகுதியில், தொத்துநோய்கள் பரவுகின்ற பகுதிகளில் நல்ல பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி செய்துதர இருநூறு அடி ஆழத்திற்கு கிணறுகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஐந்தாண்டு காலத்தில் யுனிசெப் உதவியுடன் கூட எட்டாயிரத்து எண்ணூற்றைம்பது கிணறுகள் எடுக்க இரண்டுகோடியே எழுபத்தோரு லட்சம் ரூபாய் செலவில் அரசு முயன்று கொண்டிருக்கிறது. இத்திட்டத்திற்கு யுனிசெப் துளை போடும் கருவிகள், ஜீப்புகள் ஆகியவை தருகிற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். படிப்படியாக ஐந்து ஆண்டுகாலத்திற்குள் இந்தப் பணி செம்மையாக குடிநீர் வாரியத்தின் மூலம் முடிக்கப்பட்டுவிடும் என்கிற நம்பிக்கை உண்டு என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, ஏற்கெனவே 1,500-க்கு மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட ஊர்களை அருகில் உள்ள நெடுஞ்சாலையுடன் இணைக்கும் இணைப்புச் சாலைகள் போடுவதற்காக சிற்றூர்ப் பணிகள் மானியம்



1972 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

என்ற இனத்தின் கீழ் 110 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. உள்ளாட்சி சாலைகளுக்காக மானியம் அளிக்க ரூ. 119.32 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தூசு படியாத பேரூராட்சி சாலைகளுக்கு 50 சதவிகிதம் மானியம் அளிப்பது என்கிற அடிப்படையில் இதற்காக ரூ. 7 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தீவிர வேலை வாய்ப்புத் திட்டத்தின்படி எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளால் 75 சதவிகிதம் இணைப்புச் சாலைகள் போடுவதேயாகும்.

மனித சக்தித் திட்டத்தின் மூலம் எடுத்துக்கொள்ளப்பட்ட வேலைகளைப் பார்த்தாலும் பெரும்பாலும் சிற்றூர்களில் சாலைகள் போடுவதுதான் இருக்கிறது. வறட்சி நிவாரண திட்ட அடிப்படையிலும் முகவை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் சாலைகள் போடுகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆயிரம் மைல் தொலைவுள்ள ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசு எடுத்துக்கொள்ள இருக்கிறது. இப்படி ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அரசு எடுத்துக் கொள்வதன் மூலம் ஊராட்சி சாலைகளை ஒன்றியச் சாலைகளாக எடுத்க்கொவ்வதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது.

சிற்றூர் சாலைகளை பேருந்துச் சாலைகளாக மாற்றுவதற்காகவும் ரூ. 18.20 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக அந்தச் சாலைகளில் பேருந்துகள் போவதற்கான வசதி அதிகரிக்க முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் மார்க்கெட் காம்ப்ளெக்ஸ் திட்டத்தின் அடிப்படையில் தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி மாவட்டங்களுக்குப் பயன்படக் கூடிய அங்கங்கே இணைப்புச் சாலைகளை விரிவுபடுத்த, செம்மைப் படுத்த வகைசெய்யபப்பட்டிருக்கிறது. இதன் காரணமாகத்தான் ஊராட்சிகளை ஊக்கப்படுத்த செஸ் நிதியை ரூ. 1½ இல் இருந்து ரூ. 2½ வரை ஆக்கிக்கொள்ள அனுமதி தரப்பட்டிருக்கிறது. அவர்கள் வசூல் செய்கிற செஸ் நிதிக்கு ஏற்ற வகையிலும் அரசாங்கமும் மானியம் வழங்கலாமா என்பது யோசனையில் இருந்து வருகிறது. இன்னும் ரூ. 1½ என்ற அளவுக்குக்கூட செஸ் நிதியை உயர்த்திக் கொள்ளாத ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. குறிப்பாக 3 ஊராட்சி ஒன்றியங்களில் 25 பைசா 30 பைசா என்ற அளவில் வசூலிக்கப்படுகிறது. 185 ஒன்றியங்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 11

தான் ரூ. 1 என்ற அளவில் செஸ் வசூலிக்கிறார்கள். ரூ. 1½ அளவுக்கு இப்போது செஸ் வசூலித்துக் கொண்டிருக்கும் ஒன்றியங்கள் 38 தான்.

நாம் இந்த ஒன்றியங்களை ஏ.பி., ஸி.டி. என்று பிரித்து ஏ பிரிவுக்கு 75 சதவிகிதம் மானியமும், பி பிரிவுக்கு 100 சதவிகிதம் ஸி. பிரிவுக்கு 125 சதவிகிதம் மானியமும், டி பிரிவுக்கு 150 சதவிகிதம் மானியமும் வழங்கி வருகிறோம்.

ஊராட்சி ஒன்றியங்களும் செஸ் மூலம் குறிப்பிட்ட அளவுக்காவது தங்களது நிதி ஆதாரங்களைப் பெருக்கிக்கொள்ள ஊக்கம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில் இதை மாற்றி அவர்கள் 75 பைசா செஸ் வசூலித்தால் நாம் 75 சதவிகிதம், அவர்கள் 100 பைசா வசூலித்தால் நாம் 100 சதவிகிதம், அவர்கள் 150 பைசா வசூலித்தால் நாம் 150 சதவிகிதம் என்ற அடிப்படையில் மானியம் வழங்குகின்ற ஏற்பாட்டைக் கொண்டு வரலாமா என்று கூட அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

அடுத்தபடியாக, தீவிர வேலைவாய்ப்புத் திட்டம்பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார்கள். மாவட்டத்திற்கு பத்து பிளாக்குகள் எடுக்க வேண்டுமென்று முதலில் எடுக்கப்பட்டது. இப்பொழுது மேலும் பத்து பிளாக்குகள் கூடுதலாக எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி, நீலகிரி, தர்மபுரி மாவட்டங்கள் நீங்கலாக இப்போது மற்ற மாவட்டங்களில் மொத்தம் 229 பிளாக்குகளில் வேலை வாய்ப்புத் திட்டம் நடைபெறுகிறது. அதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 25 லட்சம் ரூபாய் நிதி உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. தர்மபுரி மாவட்டத்தில் 16 பிளாக்குகளுக்காக ரூபாய் 20 லட்சமும், நீலகிரி மாவட்டத்தில் 4 பிளாக்குகளுக்கு ரூபாய் 12½ லட்சமும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 9 பிளாக்குகளுக்கு ரூபாய் 12½ லட்சமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. தீவிர வேலைவாய்ப்புத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூபாய் 160.50 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது. மாநில அரசு 30 லட்சம் ரூபாய் போட்டு ஈடு கட்டியிருக்கிறது. மேலும் சிற்றூர்ப் புறங்களில் உள்ள மனித சக்தியைப் பயன்படுத்திக்கொள்ள 1972–73-ம் ஆண்டில் 40 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதைக் கொண்டு 72 பிளாக்குகளில் பல்வேறு வகைப்பட்ட நிவாரண வேலைகள்



1972 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

நடைபெறுவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் அங்கேயுள்ள கிராமப்புற மனித சக்தியை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

அடுத்தபடியாக, சென்னை மாநகராட்சியினுடைய தன்மையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. கே. எம். சுப்பிரமணியம் அவர்களும், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்களும் பேசினார்கள். மாநகராட்சியினுடைய நிதி வசதிகளைப் பெருக்கித் தருவதிலும், கடன் வசதிகளும் செய்து கொடுத்திருக்கிறோம். 1971-72-ல் ரூபாய் 54 லட்சத்து 75 ஆயிரம் கடனாகவும், ரூபாய் 25 லட்சம் மானியமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது. அண்மையில் பெய்த மழையினால் பாதிக்கப்பட்டுள்ள சாலைகளைப் பராமரிப்பதற்காகத் தனியாக 20 லட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, குடிநீர்—கழிவுநீர் வேலைத் திட்டங்களுக்காக ரூபாய் 55.75 லட்சம் கடனாகவும், ரூ. 43.37 லட்சம் மானியமாகவும் 1971—72-ல் அளித்தோம். 1972-73-ம் ஆண்டு ரூபாய் 57.75 லட்சம் கடனாகவும், ரூபாய் 60.25 லட்சம் ரூபாய் மானியமாகவும் அளிக்கப்பட்டிருக்கிறது. மேலும் சாலைகளின் குறுக்கே பாலங்களைக் கட்டுவதற்காக 1972—73-ம் ஆண்டில் கடனாக ரூபாய் 41.50 லட்சமும், மானியமாக ரூபாய் 29.84 லட்சமும் அளிக்கப்பட்டிருக்கின்றன. இதுதவிர எல்.ஐ.சி.-யிலிருந்து தனியாகக் கடன் பெற வசதி செய்யப்பட்டிருக்கிறது. மேலும் கார்ப்பரேஷன் தனியாகக் கடன் எழுப்ப வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்தபடியாக குடிநீர் திட்டத்தைப்பற்றி டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். குடிநீர் வசதிக்காக 1965-ம் ஆண்டிலே திட்டங்கள் போடப்பட்டன. இந்தத் திட்டம் 1965-ல் போடப்பட்டாலும், வீராணம் ஏரி நீரை சென்னைக்குக் கொண்டுவர வேண்டுமென்று 1967-ல் தீர்மானித்து, 1969-ல் முடிவு செய்யப்பட்டது. 1970-ம் ஆண்டில் வீராணம் திட்டம் காண்ட்ராக்டர் வசம் விடப்பட்டது. இந்தத் திட்டம் ஜூலை மாதத்தில் முடிய இருக்கிறது. பைப்புகள் எல்லாம் கொண்டு வரக்கூடிய நிலைமை ஏற்பட்டு, மேல்நிலைத் தொட்டி கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 11

இதற்கிடையில் அந்த பைப்புகள் எல்லாம் போட்டிருக்கக் கூடிய இடங்களிலுள்ள சேரிவாழ் மக்கள் அதன்மேல் விராட்டி தட்டுவதற்கு அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். அவர்களுக்கு வேறு இடம் கிடைக்காத காரணத்தால் அதைப் பயன்படுத்திக் கொண்டார்கள். தண்ணீர் வருகிற நிலையில் இப்போது அது செய்யப்படவில்லை. ஜூலை மாதத்தில் இந்த மாதிரியான எந்த மாசு ஏற்படுவதற்கும் வழி இல்லை. நாம் வீராணம் தண்ணீர் வருகின்ற சூழ்நிலையைப் பெற முடியும்.

அது மட்டுமல்ல, காலையில் பேசுகிறபோது டாக்டர் ஹாண்டே, தேர்தல் நடைபெற்ற நிலைமையையும், திண்டுக்கல் தேர்தலைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். எந்தத் தேர்தலானாலும், அரசாங்கமும், மற்ற உறுப்பினர்களும் செய்கிற முடிவை யாரும் மாற்றிவிட முடியாது. குறிப்பிட்ட தலைவரைக் கொண்டு வருவதோ, அல்லது அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதோ அங்கே இருக்கிற நகராட்சி உறுப்பினர்களுடைய தன்மையைப் பொறுத்தது. திண்டுக்கல்லில் உள்ள நகரசபைத் தலைவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வரப்பட்டு, 12—8—71-ல் கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. அந்தக் கூட்டத்தை நடத்தி வைக்க வேண்டிய ஆர்.டி.ஓ. அவர்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் அந்தக் கூட்டத்திற்குச் செல்லவில்லை. அவர் எழுதிய கடிதத்தில், அவர், கூட்டத்திற்கு வராததற்கான காரணத்தை விளக்கி,

"Received news that my uncle is seriously ill. Myself leaving headquarters due to unavoidable and pressing necessity."

என்று தந்தி கொடுத்திருந்தார். அந்தக் கூட்டம் அன்றைய தினம் நடைபெறாவிட்டாலும், அதை ஒற்றிவைப்பதற்குச் சட்டத்தில் இடம் இருக்கிறது.

"If the R.D.O. is unable to preside over the meeting he may after recording his reasons in writing adjourn the meeting to meet till such other time as he may appoint; the date appointed for the meeting shall not be later than a month of the date first appointed for the meeting." என்று விதி இருக்கிறது.

இதன்படி அந்தக் கூட்டம் ஒற்றிவைக்கப்பட்ட 30 நாட்களுக்குள் மறு தேதி அறிவிப்புச் செய்யப்பட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் கூட்டம் கூட்டப்பட்டது. அது நிறைவேறுவதற்கு



1972 மார்ச் 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போதிய 'கோரம்' இல்லாத காரணத்தால் அந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற முடியாமல் போய்விட்டது. ஆகவே, இதில் ஒன்றும் தவறு ஏற்படவில்லை.

திருவள்ளூரைப் பொறுத்தவரையில் 24—2—71-லே ஆர்.டி.ஓ. கூட்டத்தைக் கூட்டினார். கூட்டத்திற்கு யாரும் வரவில்லை. கூட்டம் நடைபெறாமல் போய்விட்டது.

வாலாஜாவைப் பொறுத்தவரையில் கூட்டம் ஒற்றி வைக்கப்பட்டிருக்கிறது. அதுபற்றித்தான் டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றித் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதுபற்றித் தெரிவித்திருக்கிறார்கள். வேறு முறைகேடான செய்கைகள் நடைபெறவில்லை. இவ்வளவு 12,642 ஊராட்சி மன்றங்கள், 600 பேரூராட்சி மன்றங்கள், 374 ஊராட்சி ஒன்றியங்கள், 89 நகராட்சிகள், 12 ஊராட்சி நகரியங்கள், 8 நகரியங்கள் இருக்கின்ற நேரத்தில் எங்கேயாவது நான்கைந்து இடங்களில் தவறுகள் ஏற்படத்தான் செய்யும். எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும், அம்மாதிரிச் சிற்சில இடங்களில் ஏற்படத்தான் செய்யும். நாம் எல்லாம் மகிழத்தக்க வகையில் முன்பு 10, 12 ஆண்டுகளுக்குமுன் இருந்ததைவிட, இப்போது அந்த எண்ணிக்கை குறைந்து வருகிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். இவ்வளவு ஊராட்சி மன்றங்கள் இருக்கும் இடங்களில் ஒரு சில இடங்களில் சிலபல நிகழ்ச்சிகள் ஏற்படுவது ஒன்றும் பெரிதல்ல. 100 கத்தரிக்காய் வாங்கி வந்தால் அதில் ஒன்றிரண்டு சொத்தையாகத்தான் இருக்கும். ஏசுநாதர் நம்பிய அந்த பன்னிரண்டு பேரில் அவரைக் காட்டிக்கொடுக்க ஒருவர் இருந்தார். இப்படிப்பட்ட ஊராட்சி மன்றங்களிலே தவறு நடந்தால் மேலும் நடைபெறாமல் இருக்க முயற்சிகள் செய்யப்படும். அரசியல் ரீதியில் கட்சி வேறுபாடுகள் இருந்தாலும் ஊராட்சி மன்றங்களில், ஊருக்கு நல்லது செய்ய வேண்டுமென்பதில் கட்சி மாச்சரியங்களைக் கொண்டு வேலைகளைச் செய்யாமல், பொது மக்களுக்காக உழைக்கிறோம். எல்லோரும் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டுமென்கிற எண்ணம் பல இடங்களில் இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1972 மார்ச் 11

மேலும் பேசுவதற்குப் பல பிரச்சினைகள் இருக்கின்றன. அநேக மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய பிரச்சினைகளுக்கு விரிவாகப் பதில் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. அதைப்பற்றி அவ்வப்போது கேள்விகள் எழும்போதும் நான் விளக்கம் தந்திருக்கிறேன். மேலும், இவற்றை விரிவாக விளக்கவேண்டிய அவசியமில்லை. ஆகவே, உள்ளாட்சி—சமுதாய வளர்ச்சித் துறை மானியங்கள்மீதும், பொதுப் பணிகள் உதவி மானியத்தின் மீதும் விவாதங்கள் நடத்தி, இந்தத் துறை மேலும் மேலும் வளருவதற்கு நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆங்காங்கு நடைபெற்ற சில குறைபாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அவையெல்லாம் கவனத்தில் வைக்கப்பட்டு, அவைகள் நீக்கப்பட்டு, நிறைவு பெற்ற முறையில் பணிகள் நடைபெற என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ அவற்றை அரசு செய்ய சீரிய கருத்துக்கள் வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துறை செம்மையாக நடைபெற அனைவரும் உதவ வேண்டும். வேறு எந்தத் துறையிலும் இல்லாத அளவுக்கு இந்தத் துறை அதிகமான பணியாளர்களைக் கொண்டிருக்கிறது. அதிகமான அளவுள்ள பணியாளர்களைக் கொண்டுள்ள இந்தத் துறையை நிர்வகித்து வருகிற செயலாளர், அதிகாரிகள், ஊழியர்கள், பணியாளர்கள் ஆகிய எல்லோருக்கும் நன்றிகூறி மேலும் மேலும் இந்தத் துறை செம்மையாக நடைபெற நீங்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன், வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் இப்பொழுது முடிவுற்றது. இப்பொழுது மானியக் கோரிக்கையின் மீது வாக்கெடுப்பு நடைபெறும்.

கோரிக்கை எண் 23-க்கு திருமதி த. ந. அனந்தநாயகி, திரு. ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர்கொடுத்திருந்த தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வற்புறுத்தவில்லை யாதலால். அவை பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்பட்டன.



1972 மார்ச் 11]

டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. என். கே. பழனிச்சாமி ஆகியோர் தங்களுடைய இருக்கைகளில் இல்லாததால், அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெறப் பட்டனவாகக் கருதப்படுகின்றன.

திரு. கே. எஸ். கோதண்டராமைய்யா அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 23. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,33,87,400-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

கோரிக்கை எண். 29—பொதுப் பணிகள்—உதவி மானியங்களுக்கு வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்திருந்த திருவாளர்கள் கே.எம். சுப்பிரமணியம், கே. டி. கே. தங்கமணி, எச்.வி. ஹாண்டே ஆகியவர்கள் பேரவையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப் பட்டன.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. வகாப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னுள்ள கேள்வி :

"கோரிக்கை எண் 29. பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,69,29,500-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இந்த அளவில் முடிவடைகின்றன. மீண்டும் பேரவை 13—3—1972-ஆம் நாள் திங்கட்கிழமையன்று காலை 9 மணியளவில் கூடும்.

### *(6) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.*

### A. *Statutory Rules and Orders.*

56. Notification issued with G.O. Ms. No. 2317, Rural Development and Local Administration, dated the 16th October 1971 in regard to an amendment to the conduct of Election of Members of Village Panchayats Rules, 1964. [Laid on the Table of the House under section 179( 4) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958)].

57. Notification issued with G.O. Ms. No. 1748, Revenue, dated the 17th June 1971, in regard to certain amendments to Revenue Department notification, relating to fixation of jurisdictions of the Special Deputy Collector, Tiruchirappalli. [Laid on the Table of the House under section 7 (2) of the Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 (Tamil Nadu Act XXV of 1955)].

58. Thirteenth Administration Report of the Tamil Nadu Electricity Board for the year 1969-70 (Tamil). [Laid on the Table of the House under section 75 (1A) of the Electricity Act, 1948 (Central Act 54 of 1948)].

### B. *Reports, notifications and other papers.*

@ 58. The Policy Note on Demand No. 23—'Community Development and Panchayat Development'. (English).

@ 59. The Policy Note on Demand No. 29 'Public Works—Grants in-Aid'. (English).

£ 60. The Policy Note on Demand No. 23—'Community Development and Panchayat Development'. (Tamil).

£ 61. The Policy Note on Demand No. 29 'Public Works—Grants-in-aid'. (Tamil).

£ 62. Financial Supplement to Demand under Community Development. 1972-73. (English and Tamil).

---

@ Despatched to Members on 9th March 1972.

£ Despatched to Members on 01th March 1972.





### இணைப்பு

### சமுதாய வளர்ச்சியும் ஊராட்சி வளர்ச்சியும்

458-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.

### 1. முன்னுரை

முதல் நிலை, இரண்டாம் நிலை என்ற இரண்டு நிலைகளில் சமுதாய வளர்ச்சித் திட்ட வேலைகள் செயற்படுத்தப்படுவது நன்கு தெரிந்ததே. முதல் நிலை வட்டாரம் ஒவ்வொன்றும் ஐந்தாண்டு காலத்தில் ரூ. 12 இலட்சம் மைய உதவி பெறத் தகுதி பெற்றது. ஐந்தாண்டுகள் முடிவுற்ற பின்னர், முதல் நிலை வட்டாரங்கள் ஒவ்வொன்றும், இரண்டாம் நிலை வட்டாரமாகி, ஐந்தாண்டு காலத்திற்கு ரூ. 5 இலட்சம் நிதியுதவியைப் பெறுகிறது. 10 ஆண்டுகள் முடிவுற்ற பின்னர், ஒவ்வொரு வட்டாரமும் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரமாகக் கருதப்படுகிறது. இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள், சமுதாய வளர்ச்சித் திட்ட அமைப்பிலிருந்து உதவி பெறத் தகுதியுடையனவல்ல. இம்மாநிலத்தில் முதல் நிலை வட்டாரம் இல்லை. 1972-73-ஆம் ஆண்டில் இரண்டாம் நிலை வட்டாரங்கள் 88-ம், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் 286-ம் இருக்கும்.

வட்டாரங்களெல்லாம் சமுதாய வளர்ச்சி வட்டாரங்களாக இருப்பினும், அல்லது சமுதாய வளர்ச்சி நிலையைக் (இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள்) கடந்த வட்டாரங்களாக இருப்பினும். அவற்றினிடையே வளர்ச்சியைப் பெறுதற்காக வட்டாரங்களுக்கென நிதி ஒதுக்குவதில் சரிசமமான ஒரு போக்கையே இவ்வரசு கையாண்டு வருகிறது. இரண்டாம் நிலையைக் கடந்த ஊராட்சி வளர்ச்சித் திட்ட வேலைகளுக்கென செலவிடப்பட்ட தொகையானது. சமுதாய வளர்ச்சி வரவு-செலவுத் திட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்கென, பல்வேறு வளர்ச்சித் திட்ட வேலைகளில் செலவிடப்பட்ட தொகைகளானவை, அதனதன் வளர்ச்சித் தலைப்புகளுக்குக் கீழே காட்டப்பட்டுள்ளன. ஒவ்வோராண்டும் பெரும்பாலான வட்டாரங்கள் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களாகி வருகின்றன. எனவே, "சமுதாய வளர்ச்சித் திட்டத்தில்" பற்று வைக்கப்படும் செலவினம் மிகக் குறைந்த அளவையுள்ளது. ஓராண்டுக் காலத்திற்குரிய பணிகளை நோக்கும்போது, 374 வட்டாரங்கள்

முழுவதிலும் எல்லா தலைப்புகளுக்குமான மொத்தச் செலவைப் பரிசீலனை செய்ய வேண்டுவது அவசியமாகும்.

பன்னிராண்டு ஆயிரத்து அறநூற்றி நாற்பத்திரண்டு ஊராட்சிகள் 600 பேரூராட்சிகள், மற்றும் 374 ஊராட்சி ஒன்றியங்களுக்கென 1972-73-ஆம் ஆண்டில் பல்வேறு வரவு-செலவுத் திட்டத் தலைப்புகளில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 77.14 கோடியிலிருந்து, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களுக்குரிய நிதி நிர்வாகம் எவ்வளவு பெரிய அளவில் செயற்படுகிறதென்பது தெளிவாகும். இக்குறிப்புரையுடன், சட்டமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ள நிதிநிலை அறிக்கை இணைப்பானது, ஊராட்சி நிர்வாகம் மற்றும் ஊர் வளர்ச்சிக்குரிய நிதி முதலீடுகளைத் தொகுத்துக் காட்டுகின்றது. 1971-72-ஆம் ஆண்டில் நடைபெற்ற பணிகள் பற்றிய ஆய்வும். 1972-73-ஆம் ஆண்டின் திட்ட வேலை வேலைகளும், இக்குறிப்புரையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

## 2. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களின் நிர்வாகம்.

### (அ) அமைப்பு

தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்றுகள் பகுதி நீங்கலாக, மாநிலம் முழுவதிலும் உள்ள ஊர்ப்பகுதிகள் அனைத்திலும், 1958-ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 35/1958) தற்போது நடைமுறையிலுள்ளது, ஜாகீர்தாரர்கள் செய்து கொண்ட முறையீட்டின் பேரில், உயர்நீதி மன்றம் பிறப்பித்த தடையாணையினால், ஜாகீர் பகுதிகளை ஜமீன்தார் ஒழிப்புச் சட்டத்தின் கீழ், அரசு இன்னும் எடுத்துக்கொள்ளவில்லையாதலால், கல்ராயன் குன்றுகள் பகுதியில் ஊராட்சிகள் சட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஜாகீர் பகுதிகள் எடுத்துக் கொள்ளப்பட்டவுடன் ஓர் ஊராட்சி ஒன்றியம் அமைக்கப்பட்டு, இப்பகுதிக்கும் இச்சட்டமானது விரிவு படுத்தப்படும். தமிழ்நாடு முழுவதிலுமுள்ள 12,642 ஊராட்சிகள். 700 பேரூராட்சிகள், 12 நகரியங்கள், ஆகியவை 374 ஊராட்சி ஒன்றியங்களுக்குள் அடங்கியுள்ளன.

### (ஆ) அலுவலர்க் குடியிருப்புகள்

படிப்படியாகச் செயற்படுத்தப்படும் திட்ட வேலையின்படி, ஊராட்சி ஒன்றிய அலுவலர்களான வட்டார வளர்ச்சி அலுவலர், வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் ஊர் நிலைப் பணியாளர்களுக்கு



அலுவலர்க் குடியிருப்புகளை, அரசு அளிக்கிறது. முன்பிருந்த தேசிய நெருக்கடி நிலை காரணமாக இத்திட்ட வேலை நிறுத்தப்பட்டது. ஆனால் 1970-71-ஆம் ஆண்டில் இத்திட்ட வேலையின் ஒரு பகுதி மீண்டும் தொடங்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 12 ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலர் குடியிருப்புக்களும், நீலகிரி, சென்னை நீங்கலாக உள்ள ஏனைய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஊர் நிலைப் பணியாளர்களுக்கென 2 குடியிருப்புகளும் கட்ட ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில், 180 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அலுவலர்களுக்கென குடியிருப்புகள் இன்னும் கட்டப்பட வேண்டியுள்ளன. பெருவாரியான ஊராட்சி ஒன்றியங்களில் தனியார் மூலம் கிடைக்கும் குடியிருப்பு வசதி குறைவாயுள்ளமையாலும், சில ஊராட்சி ஒன்றியங்களில் அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுவது இன்றியமையாததாய் உள்ளமையாலும், 1972-73-ஆம் ஆண்டில், 13 மாவட்டங்களில், 13 அலுவலர்க் குடியிருப்புகளும், மாவட்டத்திற்கு இரண்டாக ஊர் நலப்பணியாளர்களுக்கென 26 அலுவலர் குடியிருப்புகளும் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. நிதிநிலைத் திட்டத்தில் இதற்கென ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## 3. ஊராட்சி வளர்ச்சி நிர்வாகம்.

### (அ) நிர்வாக அமைப்பு வளர்ச்சி.

நிர்வாகத்தின் அமைப்பும் முறையும், அரசின் ஆய்வில் தொடர்ந்து இருந்த வண்ணமுள்ளது. 1971-72-ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன :—

(அ) ஒருங்கிணைந்த, திறமையான நிர்வாக அமைப்பாக இயங்குவதற்கென, வட்டாரத்தின் அமைப்பை அரசு திருத்தியமைத்துள்ளது. இதன்படி, ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் 6 பிரிவுகள் செயற்படும். உற்பத்திப் பிரிவு, கல்விப் பிரிவு, கூட்டுறவுப் பிரிவு, பணிகள் பிரிவு, ஊராட்சி நிர்வாகப்பிரிவு, பொதுப் பிரிவு ஆகியவை இந்த ஆறு பிரிவுகளாகும். ஒவ்வொரு பிரிவின் தலைவரே அப்பிரிவின் முறையான நிர்வாகத்திற்கும், அப்பிரிவின்

[1972 மார்ச் 11

பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பொறுப்புள்ளவராகிறார். வேளாண்மை வளர்ச்சி அலுவலருக்கு, ஒன்றிய வேளாண்மை அலுவலர் என்று புதிய பதவிப்பெயர் அளிக்கப்பட்டுள்ளது. வளர்ச்சி அலுவலர்களுக்குக் குறிப்பிட்ட வேலைகளும் பொறுப்புகளும் தரப்பட்டுள்ளன. இவர்களைத் திறமையாக மேற்பார்வையிடவும், அலுவலர்களின் தலைவர் என்ற முறையில், ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கரங்களைப் பலப்படுத்தவும் ஆவன செய்யப்பட்டுள்ளன.

(ஆ) வெளியிலிருந்து 150 பேர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை ஊர்ப்பணியாளர்களாக நியமிக்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இவர்கள் "பயிற்சிபெற்றுக் காத்திருப்பவர்"களாக வைக்கப்படுவார்கள். இவர்களுக்கு ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படும்: ஓராண்டு பட்டப்பயிற்சிக்கு நிலையான ஊர் நல உதவியாளர்கள் அனுப்பப்படும்போது எழும் காலியிடங்களில், இவர்கள் ஊராட்சி ஒன்றியங்களில் நியமிக்கப்படுவார்கள். நிலையான ஊர் நல உதவியாளர்கள் வேறு பணிகளுக்கென அனுப்பப்படும் போது, வட்டாரங்களின் பணிகள் நடையுறுவதைத் தவிர்க்கவே இவ்வாறு செய்யப்படுகிறது.

## (ஆ) பயிற்சித் திட்டம்.

ஊர் வளர்ச்சி இயக்கம் ஒரு பயிற்சிப் பிரிவைத் தன்னகத்தே கொண்டுள்ளது. ஊராட்சி நிறுவனங்களுக்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், பல்வேறு வளர்ச்சித் துறையைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள், ஊராட்சி நிறுவனங்களைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் இந்நிறுவனங்களில் பயிற்சி பெறுகின்றனர்.

கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன:—

1. சமுதாய வளர்ச்சி மாநிலம் நிறுவனம்.

2. தொழிற்கூடப் பிரிவு அமைந்த ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள்.



1972 மார்ச் 11]

### சமுதாய வளர்ச்சி மாநில நிறுவனம், பவானிசாகர்

இந்நிலையத்தில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன :—

(அ) ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணைத் தலைவர்களுக்கென பயிற்சி.—ஊராட்சி நிறுவனங்களின் பின்னணி, அவற்றின் செயல்முறை, தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், அலுவலர்கள் ஆகியோரின் பங்கு பற்றி விளக்கும் முறையில் 10 நாட்களுக்கு இப்பயிற்சி நடைபெறும்.

(ஆ) பல்வேறு வளர்ச்சித் துறைகளைச் சார்ந்த மாவட்ட அலுவலர்கள் வளர்ச்சி அலுவலர்களுக்குரிய பயிற்சி.—இது ஊராட்சிக் கொள்கையைப்பற்றி அரசு அலுவலர்களுக்குச் சிறந்த பயிற்சியளித்து, ஒருங்கிணைந்த முறையில் வளர்ச்சியைக் காணும் வழிவகைகளைக் கற்பிக்கும் 15 நாள் பயிற்சியாகும்.

(இ) வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்குரிய வேலைப் பயிற்சி.—தங்களுடைய பணிகளில் பயிற்சிபெற வட்டார வளர்ச்சி அலுவலர்களுக்கு இரண்டு திங்களுக்கு இப்பயிற்சியளிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட பணிகளுக்குரிய பயிற்சிகள்—தேசிய சேவைப் படை அலுவலர்களுக்குக் குறிப்பிட்ட பணிக்கெனப் பயிற்சியளித்தல் சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஆசிரியர்களுக்கும் பயிற்சியளித்தல் போன்றவைகட்கு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

ஊர் விரிவாக்க நிலையங்கள்.—இம்மாநிலத்தில் ஐந்து ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் செயற்படுகின்றன :—

1. டி. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்).
2. பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்).
3. பட்டுக்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்).
4. வி. நகரம் (வட ஆர்க்காடு மாவட்டம்).
5. கிருட்டிணகிரி (தர்மபுரி மாவட்டம்).

இந்நிலையங்களில் கீழ்க்கண்ட பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன :—

முன்சேவைப் பயிற்சி.—ஊர் நல உதவியாளர்களாக நியமிக்கப்படுவதற்கு முன்னர், அப்பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்

களுக்கு, இந்த ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் ஈராண்டு பயிற்சியளிக்கப்படுகிறது. இவர்கட்கு விஞ்ஞான முறையில் வேளாண்மை செய்வதைக் கற்றுத்தருதற்கு உதவும் வகையில், ஒவ்வொரு பயிற்சி நிலையத்துடனும் ஒரு பண்ணையும் பால் பண்ணை அலகும் இணைக்கப்பட்டுள்ளன.

**தேர்ந்தெடுக்கப்பட்ட ஊர்நல உதவியாளர்களுக்கு வேளாண்மையில் ஓராண்டுத் தீவிரப் பயிற்சி.**—ஊர்நல உதவியாளர்களின் திறமையை சிறப்பாக வேளாண்மைத் துறையில், மேம்படுத்துதற்கென, வேளாண்மை வளர்ச்சிப் பட்டச் சான்றிதழ்ப் பயிற்சி ஓராண்டிற்குத் தரப்படுகிறது. அனுபவம் பெற்ற ஊர் நல உதவியாளர்கள் இப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இது வரை 751 பேர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

**தொழிற் கூடங்கள்.**—ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்கள் அனைத்திலும், தற்போது தொழிற் கூடக் கிளைகள் இணைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தொழிற் கூடக் கிளையிலும் 10 பேர்களுக்குத் தச்சுத் தொழிலிலும், 10 பேர்களுக்குக் கருமார்த் தொழிலிலும் ஓராண்டிற்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

1970—71-ஆம் ஆண்டில், மூன்று தொழிற் கூடக் கிளைகள் "உற்பத்தி-பயிற்சி நிலையங்"களாக உயர்த்தப்பட்டுள்ளன. அண்மை வட்டாரங்களிலுள்ள உழுபடைக் கருவிகளைச் சீராக்குதல், பேணுதல் போன்ற பணிகளை இந்நிறுவனங்கள் மேற்கொண்டுள்ளன.

பட்டுக்கோட்டை, டி. கல்லுப்பட்டி, பவானிசாகர் ஆகிய இடங்களிலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களைச் சார்ந்த தொழிற்கூடங்களின் நிலைகள் 1970-71-இல் உயர்த்தப்பட்டன. அண்மை வட்டாரங்களிலுள்ள உழுபடைக் கருவிகளைச் சீராக்குதல், பேணுதல் போன்ற பணிகளை இந்நிலையங்கள் மேற்கொண்டுள்ளன.

**குறிப்பிட்ட பணிகளுக்குரிய கீழ்க்கண்ட பயிற்சித் திட்டங்களும் நடத்தப்படுகின்றன.**—(அ) மகளிர் நலத் துறையைச் சார்ந்த பால சேவிகைகளுக்கும், மகளிர் இணைப் பணியாளர்களுக்கும், ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.





(ஆ) சீரணித் தொண்டர்கள் இந்நிலையங்களில் **14 நாட்**களுக்கு பயிற்சி பெறுகின்றனர்.

(இ) இளைஞர் அணியினைச் சார்ந்த தொண்டர்களுக்கும், ஊர் விரிவாக்க பயிற்சி நிலையங்களில் பயிற்சியளிக்கப்படுகிறது.

பல்வேறு நிலைகளிலுள்ள வட்டார அலுவலர்களும் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ள அலுவல் சார்பற்றவர்களும், தங்களுடைய கடமைகளையும் பொறுப்புகளையும் நன்கு நிறைவேற்ற இப்பயிற்சி திட்டங்கள் பெருந்துணை புரிந்துள்ளன.

### (இ) கருத்துரைக் குழுக்கள்.

**நிர்வாகம்.**—பணிகள், உற்பத்தித் திட்ட வேலைகள், நலப் பணிகள் பற்றிய மாநில அளவிலான மூன்று கருத்துரைக் குழுக்கள் ஊராட்சி நிர்வாகம் குறித்த பிரச்னைகளை ஆய்வு செய்கின்றன. திட்டங்களைச் செயற்படுத்தும்போது, அதன் செயல் வேகத்தைத் தடுக்கும் நடைமுறை பிரச்னைக்களுக்குக் கருத்துரைக் குழுக்கள் தந்த ஆலோசனைகளின் அடிப்படையில் தீர்வுகள் காணப்படுகின்றன.

### (ஈ) பொருளாதார, உட்லுழைப்புச் சாதனைகள்.

இக்கோரிக்கையில் மட்டும் 1970—71-க்கான செலவினம் ரூ. 689.83 இலட்சமாகும். 1971—72-க்கான திருத்திய மதிப்பீடு ரூ. 1,028.32 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டது. 1972—73-க்காகக் கோரப்படும் தொகை ரூ.993.87 இலட்சமாகும்.

எல்லா ஊராட்சி ஒன்றியங்களும், உள்ளூர் "செஸ்" மேல் வரியை விதித்துள்ளன. இதிலிருந்து 1971—72-இல் கிடைத்த வருவாய் ரூ. 401.00 இலட்சமாகும். உள்ளூர் "செஸ்" மேல்வரியை ஊராட்சி ஒன்றியங்கள் விதிப்பதனால், அதற்கான இணை மானியத்தை. ஒன்றியம், அரசிடமிருந்து பெறமுடியும். 1970—71-இல் "செஸ் மேல்வரி இணை மானியமாக ரூ. 343.29 இலட்சத்தை அரசு அளித்துள்ளது. 1971—72-க்கான திருத்திய மதிப்பீடு ரூ. 401.00 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1971-72-க்கான நிதிநிலை மதிப்பீடு ரூ. 401.00 இலட்சமாகும். ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் கேளிக்கைவரி, காட்சி வரி மீது, மேல் வரி விதித்துள்ளன. இந்த வகையில் 1971—72-க்கான வருவாய் ரூ. 111.56 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாளன்று இருந்தவாறு, சில வேலைத் திட்டங்கள்பற்றிச் சேகரிக்கப்பட்ட புள்ளி விவரங்கள் (கூடுதல் எண்ணிக்கை) வருமாறு :—

| | 1968 | 1969 | 1970 | 1971 |
|---|---|---|---|---|
| இணைப்புச் சாலைகள் (கிலோ மீட்டர்) .. | 28,824 | 30,334 | 30,550 | 31,957 |
| மேல்நிலை நீர்த் தொட்டிகள் (எண்ணிக்கை) .. | 2,506 | 2,817 | 3,447 | 4,420 |
| கிணறுகள் (எண்ணிக்கை) .. | 52,126 | 54,768 | 60,049 | 69,329 |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள தொடக்கப்பள்ளிகள் (எண்ணிக்கை) | 18,220 | 18,272 | 18,531 | 18,616 |
| ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்திலுள்ள உயர் தொடக்கப் பள்ளிகள் (எண்ணிக்கை) .. | 3,252 | 3,246 | 3,207 | 3,177 |
| சொந்தக் கட்டடங்கள் உள்ள பள்ளிகள் .. | 11,619 | 12,386 | 13,109 | 14,926 |

வளர்ச்சிப் பணிகளுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் அரசு செலவழித்துள்ள தொகை பற்றிய விவரங்களை கீழ்க் புள்ளி விவர அறிக்கை காட்டுகிறது :—

| திட்ட வேலையின் பெயர். | 1968-69 (செலவுக் கணக்கு). | 1969-70 (செலவுக் கணக்கு). | 1970-71 (செலவுக் கணக்கு). | 1971-72 (செலவுக் கணக்கு). | 1972-73 (செலவுக் கணக்கு). |
|---|---|---|---|---|---|
| வேளாண்மை .. | 83.75 | 74·93 | 82·89 | 85 00 | 85·00 |
| கால்நடை வளர்ச்சி .. | 21·90 | 23·35 | 23·26 | 23·25 | 23·25 |
| மீன் வளம் .. | 3·66 | 2·53 | 3·55 | 4·93 | 4·66 |
| இணைப்புச் சாலைகள் .. | 67·63 | 93·82 | 1,09·03 | 1,10·00 | 1,10·00 |
| குடிநீர் வழங்கல் .. | 1,46·61 | 1,42·83 | 1,48·17 | 1,45·00 | 1,46·00 |
| பள்ளிக் கட்டடங்கள் .. | 33·64 | 48·71 | 53·82 | 52·60 | 52·60 |
| சமூகக் கல்வி .. | 12·13 | 18·88 | 16·36 | 15·00 | 15·50 |
| மகளிர், குழந்தைகள் நலம் .. | 6·67 | 14·93 | 14·29 | 20·00 | 17·90 |
| கிராமக் கலை, கைவினை, தொழில்கள் திட்ட வேலைகள். .. | 11·40 | 16·00 | 16·03 | 15·00 | 15·00 |

ஊர்ப்புறப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு இந்த அரசு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கிறதென்பதை மேற்காட்டியுள்ள புள்ளி விவரங்கள் தெளிவுபடுத்துகின்றன. 1972–73-ஆம் ஆண்டிற்கு, சென்ற ஆண்டை விட அநேகமாக எல்லாத் தலைப்பின் கீழும் கூடுதலான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





## 4. பணிகள் குறித்த திட்ட வேலைகள்.

### (அ) ஊர்ப் பணிகளுக்குரிய திட்ட வேலைகள்

ஊர்ப் பணிகள் மானியங்களில் கிடைக்கும் நிதிகளை குடிநீர் வழங்கல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், பள்ளிக் கட்டடங்கள் கட்டல் ஆகியவற்றில் ஊராட்சி ஒன்றியங்கள் செலவிடுகின்றன. 1971-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாளைய நிலவரப்படி, செய்துதரப்பட்ட அடிப்படை வசதிகளின் விவரங்கள் வருமாறு :—

| | |
|---|---|
| 1. மேல் நிலை நீர்த் தொட்டிகள் | 4,420 |
| 2. கிணறுகள் | 69,329 |
| 3. அமைக்கப்பட்ட இணைப்புச் சாலைகள் (கிலோ மீட்டர்) | 31,957 |
| 4. பள்ளிக் கட்டடங்கள் (கட்டப்பட்டவை) | 18,616 |

1972–73-க்கான நிதிநிலை மதிப்பீட்டில், ஊர்ப்பணிகள் திட்ட வேலைகளுக்கென ரூ. 308.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நடைமுறையிலுள்ள விதிகளின்படி ரொக்கமாக நன்கொடையளித்தல், பொருட்கள் அளித்தல் அல்லது உடலுழைப்பு நல்கல் போன்ற முறைகளில் பொது மக்கள் பங்கு பெறுவது, இத்திட்ட வேலையின் ஒரு முக்கிய கொள்கையாகும்.

அரிசனங்கள், மீனவர்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினருக்குகென்றே மேற்கொள்ளப்படும் ஊர்ப்பணிகளுக்கு மக்கள் நன்கொடைத் தொகை செலுத்த வேண்டுவதில்லை. இது போன்ற நேர்வுகளில், குடிநீர் பணிகளுக்கென 15 சதவீதமும், இணைப்புச் சாலைகளுக்கென 10 சதவீதமும் அரிசன நலத்துறை மானியத்திலிருந்து நன்கொடையாக அளிக்கப்படுகிறது. 20 சதவீதத் தொகை, அரிசனங்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினரின் நன்மைக்கெனச் செய்யப்படும் பணிகளுக்கென்றே ஒதுக்கப்படுகிறது.

(ஆ) சாலைகளைப் பேணுதல்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள சாலைகளைப் பேணுதற்கென, "உள்ளூர் சாலைகள் மானியம்" என்றதொரு மானியம் ஒன்றியங்களுக்கு அளிக்கப்படுகிறது. இச்சாலைகள் மானியமானது ஆளொன்றிற்கு 18 காசுகள் என்ற வீதத்திலும், ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்படும் சாலையானது சாதாரண மானதா, கடற்கரைப் பகுதிகளில், அல்லது கழிமுகப்பகுதிகளில் அமைந்தனவா அல்லது மலைப் பாதைகளா என்று வகைப் படுத்தப்பட்டு, அந்த அடிப்படையில் ஒவ்வொரு மைலுக்கும் ரூ. 600, ரூ. 800 அல்லது ரூ. 1,500 என்ற வகையில் வழங்கப் படுகிறது. 1972—73-ஆம் ஆண்டில் நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 119.32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிப் பகுதிகளில் புழுதியற்ற மேற்பரப்புடைய சாலைகளை அமைக்கப் பேரூராட்சிகளுக்கு உதவுவதற்காக, அரை மானியத் திட்டம் ஒன்றினை அரசு செயற்படுத்தி வருகிறது. இதற்கொன, 1972—73-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 7.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) சிறிய நீர்ப்பாசனம்.

இம்மாநிலத்தில் சுமார் 36,000 சிறிய நீர்ப்பாசன வாயில்கள் உள்ளன. அவற்றுள் ஊராட்சி ஒன்றியங்களிடம் பேணுதற்காக சுமார் 24,000 ஒப்படைக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வாயில் ஒவ்வொன்றும் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறையாவது கவனம் பெற வேண்டுமென்ற அடிப்படையில் பேணுதல் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளுமாறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு யோசனைக் கூறப்பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசனத்திற்கான ஒதுக்கப் பட்டுள்ள மொத்த நிதி ஒதுக்கீட்டிலிருந்து, ஒவ்வோராண்டும் அவ்வாண்டுத் தேவையினையொட்டி ஒரு தொகை ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒதுக்கப்படுகிறது. 1972-73-ஆம் ஆண்டில் நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 67.62 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(ஈ) கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள் தொழில் திட்ட வேலைகள்.

தமிழ் நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியத்தின் தொழில் நுட்ப உதவி ஆலோசனைகளை ஏற்று, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்டவேலைகள், ஊராட்சி ஒன்றியங்களால்





நிறைவேற்றப்படுகின்றன. இதுவரை ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்ட கிராமக் கலைகள், கைவினைப்பொருட்கள், தொழில் திட்டவேலைப் பிரிவுகள் அனைத்தும் தமிழ் நாடு கதர், கிராமத் தொழில்கள் பிரிவிற்கு மாற்றப்படவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு இவை தொடர்பாகவுள்ள சொத்துக்கள், கடன்கள் மற்றும் இப்பிரிவுகளைச் செயற்படுத்துதற்குரிய விதி, வரம்புகள் ஆகியவை கதர் வாரியத்தால் உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஊர்ப்புறங்களில் வேலை வாய்ப்பினை பெருக்குவதற்கென, கீழ்க்கண்ட இடங்களில் கதர் தொழிற்பேட்டைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளது:—

| | வேலைத் திட்டங்களின் பெயர். | நிலையம் உள்ள இடம். |
|---|---|---|
| | (1) | (2) |
| 1. | தூற்பு நெசவிற்கான மூன்று கதர் தொழிற்பேட்டைகள். | திருப்பூர். பெருமாநல்லூர். சூலூர். |
| 2. | கதர் தையல், பூப்பின்னல் தொழில். | திருப்பூர். |
| 3. | கதர் தொழிற்பேட்டைகள் .. | இடையன்வலசு (ஒட்டன் சத்திரம் வட்டாரம் மதுரை மாவட்டம்.) |

மேற்கண்ட பேட்டைகளோடு கூட, கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழில் திட்ட வேலைகளிலுள்ள நிதிகளிலிருந்து, ஐந்து கிராமத் தொழில் பேட்டைகள், மூன்று கிராமத் தொழில் திட்ட வேலைப்பகுதிகளில் நிறுவுவதற்கும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த ஐந்து கிராமத் தொழில் பேட்டைகளில் இரண்டு பேட்டைகள் ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதிகளில் சிறு வணிகம் செய்பவர்களின் நன்மைக்கென நிறுவப்படவிருக்கிறது. விதைத் தறிகளுக்கான இரண்டு கிராமத் தொழிற்பேட்டைகள் ஓமலூர் திட்டப் பகுதியிலும், சலகண்ட புரத்தில் ஒன்றும், தாரமங்கலத்தில் ஒன்றுமாக நிறுவப்பட்டும். பல்வேறுவகைப்பட்ட கிராமத் தொழில்களுக்கேற்ற கொட்ட கைகளை அமைப்பதற்குரிய கிராமத் தொழில் பேட்டை

யொன்றை நாங்குநேரித் திட்டப் பகுதியிலுள்ள வள்ளியூரில் நிறுவுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது, 1972—73-ஆம் ஆண்டில், எல்லா தொழிற்பேட்டைகளும் செயலிற்கு வரும்.

கிராமக்கலைகள், கைவினைப்பொருட்கள் தொழில் திட்டத்தில், 1972—73-ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலைத் திட்டத்தில் ரூ. 15.00 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

சில கிராமக் கலைகள், கைவினைப் பொருட்கள், தொழிற்பிரிவு களின் செயல்திறனை, கீழ்க்கண்ட அட்டவணை ஒருமுகமாக விளக்கும்:

| | பிரிவுகளின் பெயர். (1) | மொத்தப் பிரிவுகள். (2) | ஆதாயத்தில் இயங்குபவை. (3) | இழப்பில் இயங்குபவை. (4) |
|---|---|---|---|---|
| 1. | தச்சு .. | 96 | 91 | 5 |
| 2. | கருமார் .. | 25 | 23 | 2 |
| 3. | தச்சு, கருமார் .. | 39 | 35 | 4 |
| 4. | பழப் பாதுகாப்பு .. | 3 | 3 | .. |
| 5. | மணி வெண்கலப் பிரிவு | 1 | 1 | .. |
| 6. | தையற் பிரிவு | 1 | 1 | .. |
| 7. | திருகாணிப் பிரிவு | 1 | 1 | .. |
| 8. | சாக்கட்டி பிரிவு | 1 | 1 | .. |
| 9. | அழகான மரப் பொம் மைகள். | 1 | 1 | .. |
| 10. | பொது வசதிப் பட்டரை | 4 | 4 | .. |
| 11. | சுண்ணும்புப் பிரிவு | 1 | 1 | .. |
| 12. | பித்தளைப் பொருட்கள் உற்பத்தி. | 1 | .. | 1 |
| 13. | பிரம்பு உற்பத்தி நிலையம் | 1 | 1 | .. |
| 14. | பிரம்பு, மூங்கில் பிரிவு | 1 | 1 | .. |
| 15. | நெட்டிப் பொருட்கள் உற்பத்திப் பிரிவு. | 1 | 1 | .. |





5. உற்பத்தித் திட்டவேலைகள்

(அ) வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்.

மாநிலம் முழுமைக்குமாக ஒரே மாதிரியான திட்டத்தின் அடிப்படையில் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் வேளாண்மை, கால்நடை வளர்ச்சி, மீன்வளத் திட்டங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கென ரூ. 2 இலட்சம் வேளாண்மை மானியமாகத் தரப்பட்டுள்ளது. இதற்கு இணையாக, ஊராட்சி ஒன்றியங்கள் ரூ. 50,000-ஐ நன்கொடையாக அளித்தன. வேளாண்மை, கால் நடை வளர்ச்சிப் பெருக்கத் திட்டங்கள் அப்போது "இன்றியமையாத் திட்டங்கள்", "விருப்பத் திட்டங்கள்". குறிப்பிட்ட பகுதிக்குரிய "சிறப்புத் திட்டங்கள்" என்று தொகுக்கப்பட்டிருந்தன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டம் 1967-ஆம் ஆண்டில் முடிவுற்றது. நான்காம் திட்டம் இன்னும் முழுமையாக உருப்பெறாததால், ஒவ்வோராண்டிற்கும் நிதி நிலைத் திட்டத்தில் ஒதுக்கப்படும் தொகையைக் கொண்டு இத்திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. முன்பெல்லாம், இம்மானியத்தில் "சிறப்புத் திட்டங்களுக்கென" ஒதுக்கப்பட்டுள்ள தொகையைப் பயன்படுத்தச் சில குறிப்பிட்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டு வந்தன. குறிப்பிட்டத் திட்டங்களுக்குத்தான் இத்தொகையைச் செலவழிக்க வேண்டுமென்று கூறுவது, உள்ளூர் நிலைமைக்கு உகந்ததாய் இல்லையென்று அனுபவ வாயிலாகத் தெரிந்துள்ளது. மேற்கண்ட கூறுபாடுகளைக் கருத்திற்கொண்டு, வேளாண்மை இயக்குநர், கால்நடை வளர்ச்சி இயக்குநர், மற்றும் மீன் வளர்ச்சி இயக்குநர் ஆகியோருடன் கலந்தாலோசித்து இம் மானியத்தைச் செலவழிப்பதற்குரிய வழிமுறைகளை ஊர் வளர்ச்சி இயக்குநர் உருவாக்கியுள்ளார். சில கோட்பாடுகளுக்குட்பட்டு, மாவட்ட வேளாண்மை அலுவலருடனும், கால்நடை வளர்ச்சி உதவி இயக்குநருடனும் கலந்தாலோசித்து, "இதர திட்டங்கள்" என்ற தலைப்பில் ஒதுக்கப்பட்டுள்ள தொகைக்குரிய கோரிக்கைகளைத் தயாரிக்கும் பொறுப்பை ஊராட்சி ஒன்றியங்களிடமே தந்து

[1972 மார்ச் 11

விடுவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளவாறு, கீழ்க்கண்ட வேலைத் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களால் நிறைவேற்றப்படும்:—

**வேளாண்மை.**

1. வேளாண்மைக் கிடங்குகளைக் கட்டுதல்,

2. ஊராட்சித் தோட்டங்களை உண்டாக்கிப் பேணுதல்.

3. கீழ்க்காண்பவை போன்ற இதர வேளாண்மை வேலைத் திட்டங்கள்:

(அ) தனியார்களுக்குக் கருவிகள் வழங்கல்.

(ஆ) வேளாண்மை வளர்ச்சி விரிவாக்கப் பாத்திகள்.

(இ) விசைத் தெளிப்பான்கள் உட்பட்ட கருவிகளை ஊராட்சிகளுக்கு வழங்குதல்.

(ஈ) கண்காட்சிகள் நடத்தல், சிறு வெளியீடுகளை அச்சடித்தல்.

(உ) நாற்றுக்கள் நாற்றங்காலை ஏற்படுத்தி நாற்றுக்களை வழங்கல் அல்லது அப்பகுதிக்கென குறிப்பாயுள்ள சிறப்பு வேலைத் திட்டங்கள்.

(ஊ) நெற்களங்கள் கட்டுதல்.

**கால்நடை வளர்ச்சி**

1. கால்நடை மருந்தகங்களைக் கட்டல்.

2. கால்நடை அறுவை உதவி மருத்துவர்களுக்குக் குடியிருப்புகள் கட்டல்.

3. கீழ்க்காண்பவை போன்ற இதர கால்நடை வளர்ச்சி வேலைத் திட்டங்கள்:—

(அ) பேரூராட்சிகளில் தீவன வளர்ச்சி வேலைத் திட்டங்கள்.

(ஆ) தனியார் கோழி வளர்ப்பிற்கு உதவித் தொகை.

(இ) உதவித் தொகையில் செம்மறியாடுகள் வழங்கல்.



1972 மார்ச் 11]

**(ஆ) மீன் வளம்**

இத் திட்டத்தின் தன்மை காரணமாக மீன் வளத்தைப் பெருக்குவதற்கு வாய்ப்புக்கள் உள்ளனவென்று உறுதிப்படுத்தப் பட்டுள்ள வட்டாரங்களில் மட்டுமே இத்திட்டம் நிறைவேற்றப் படும். 1969-70-ஆம் ஆண்டு தொடக்கம், கீழ்க்கண்ட வேலைத் திட்டங்கள் இவ்வட்டாரங்களில் நிறைவேற்றப்படுகின்றன :—

1. மீன் வளர்ப்புப் பண்ணைகளைப் பாதுகாத்தலும் செயற் படுத்தலும்,

2. மீன் முட்டைகளை வழங்குதல்; பங்கிடுதல்,

3. ஏரிகளைப் புதுப்பித்தல்.

**6. சமூக நலத் திட்ட வேலைகள்,**

**(அ) தொடக்கக் கல்வி.**

ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில், ஒன்றியங்கள் அதனதன் நிதி வசதிக்கேற்றவாறு ஒரு நியாமான நிதியை ஒதுக்கி, தொடக்கப் பள்ளிகளை திறந்து, பேணி, தொடக்கக் கல்வியின் வளர்ச்சியில் நாட்டம் செலுத்துவதும், தனியார் தொடக்கப் பள்ளிகளுக்கு மானியங்கள் வழங்குவதும் 1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலுள்ள 65 (e) பிரிவின்படி, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கடமையாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதி களில் தொடக்கக் கல்வியை முழுமையாக நிர்வகிக்கும் பொறுப்பு சட்ட அடிப்படையில் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்ததாகும். ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 27,800 பள்ளிகள் (தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகள்) உள்ளன. இவற்றில் சுமார் 21,900 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. எஞ்சியவை உதவிபெறும் பள்ளிகளாக உள்ளன. ஊராட்சி ஒன்றியத் தொடக்க, உயர்தொடக்கப் பள்ளிகளில் 1,23,100 ஆசிரியர்கள் பணியாற்றி 43,62,200 மாணவர்களுக்குக் கல்வி கற்பிக்கின்றனர்.

ஆண்டுக்காண்டு தொடக்கக் கல்விக்காகும் செலவு படிப்படியாக உயர்ந்து வருவதைக் கீழ்க்கண்ட வரவு-செலவுத் திட்டத்திலிருந்து அறியலாம் :—

| | |
|---|---|
| 1970—71 | ரூ. 27.43 கோடி |
| 1971—72 | ரூ. 32.53 கோடி |
| 1972—73 | ரூ. 37.70 கோடி |

1972—73-ஆம் ஆண்டில், தொடக்கக் கல்விக்குரிய 85 சதவீதமான ரூ. 32 கோடியை அரசு மானியங்கள் வாயிலாக ஏற்றுக் கொண்டுள்ளது. எஞ்சியுள்ள ரூ. 5.70 கோடியை சுமார் 15 சதவீதம் ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியங்களால் தொடக்கக் கல்விக்கென உள்ளூரிலேயே திரட்டப்பெறும் நிதிகளும் கீழ்க்கண்டவாறு உயர்ந்து வந்துள்ளன:—

| | |
|---|---|
| 1970—71 | ரூ. 392 இலட்சம் |
| 1971—72 | ரூ. 414 இலட்சம் |
| 1972—73 | ரூ. 570 இலட்சம் |

**பள்ளிக் கட்டடங்கள்.**—21,900 ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் 14,930 பள்ளிகள் சொந்தக் கட்டடங்களிலேயே இயங்குகின்றன. சுமார் 900-இலிருந்து 1,000 பள்ளிக் கட்டடங்கள் வரை ஆண்டு தோறும் கட்டப்படுகின்றனவென்று கடந்த கால சாதனைகளிலிருந்து தெரிந்துள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களால் பேணப்படும் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் மானியங்களை அரசு உயர்த்தியுள்ளது. தொடக்கப்பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4,000-லிருந்து ரூ. 8,000-க்கும் உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ரூ. 7,000 முதல் ரூ. 13,000 வரையிலும் உயர்த்தப்பட்டுள்ளது. தொடக்கப்பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 4.000-உம் உயர்தொடக்கப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 6,000-உம் குறைந்த அளவில் நன்கொடையாக திரட்டப்பட வேண்டும்.



இம்மாநிலத்திலுள்ள தொடக்கப்பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு, பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கென ஒரு விரிவான திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. சொந்தக் கட்டடங்கள் இல்லாத ஊராட்சி ஒன்றியப்பள்ளிகள் அனைத்திற்கும் கட்டடங்கள் கட்டுவதற்கென இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை அணுகும் ஒரு கோரிக்கை உள்ளது. 1972—73-ஆம் ஆண்டு தொடங்கி, மூன்றாண்டு காலத்தில் ரூ. 13.85 கோடி செலவில், 7.377 தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள், 1,112 உயர் தொடக்கப் பள்ளிக் கட்டடங்களைக் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. எதிர்நோக்கிய சட்டப் பூர்வமான தடங்கல்களைத் தகர்க்க, இது மேலும் ஆய்வு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற தமிழ்நாடு சிறப்பு நல நிதியிலிருந்து ஊராட்சிப் பகுதியில் பள்ளிக் கட்டடங்கள் கட்ட ரூ. 35 இலட்சம் காலாவதியாகாத ஒதுக்கீட்டிற்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களிடையே பகிர்ந்தளிப்பதற்கென், இத் தொகை ஊர் வளர்ச்சி இயக்குநரிடம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிதியிலிருந்து தொடக்கப்பள்ளி, உயர்தொடக்கப்பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை புதிய பள்ளிக் கட்டடங்கள் கட்டுதற்கெனவே பயன்படுத்தப்பட வேண்டுமென்றும், இயன்றால் 1971—72 நிதியாண்டிற்குள் ஊராட்சி ஒன்றியத்தில் ஒரு பள்ளிக் கட்டடமாவது மேற்கொள்ளப்பட்டு கட்டி முடிக்கப்படவேண்டும். மாநில பரிசுச் சீட்டுத் திட்டத்திலிருந்து கிடைத்த உதவியினால், சிறப்பு நல நிதியைக் கொண்டு இப்பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டது என்ற சொற்கள் கொண்ட ஒரு கல், அக்கட்டிடத்தின் ஒரு முக்கிய இடத்தில் பொருத்தப்பட வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது.

**ஆசிரியைக் குடியிருப்புகள்.**—ஊர்ப் பகுதியில் பணியாற்றும் ஆசிரியைகளுக்குத் தகுந்த போதுமான இருப்பிட வசதி அளிக்க வேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. இதற்கென 1972—73-ஆம் ஆண்டில் ரூ. 5 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை 1,568 கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன.

ஊராட்சிக் கல்வி நிதிநிலை விசாரணைக் குழு.—கல்விக்குரிய ஊராட்சிக் கல்வி நிதிநிலை விசாரணைக் குழு விரிவாக ஆய்ந்தது. பல்வேறு மானியங்களை ஒன்று திரட்டி, ஊராட்சி ஒன்றியப்பள்ளி

ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிப்பதும், நில வருவாய் வருலை ஆசிரியர்கள் சம்பளத்துடன் இணைப்பதும், விரும்பத்தக்க பயனைத்தரவில்லையென்று ஊராட்சிக் கல்வி நிதிநிலை விசாரணைக் குழு சுட்டிக் காட்டியுள்ளது. ஆசிரியர்களுக்கு ஊதியமளிப்பதில் பின்பற்றப்படும் தற்போதைய முறைகளை மாற்றியமைக்கும் வகையில் இக்குழு பரிந்துரைகளைச் செய்துள்ளது. பரிந்துரைகள் மீது முடிவெடுப்பது ஒருபுறமிருக்க, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களுக்கும். உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், அரசினரால் 1972 சனவரித் தொடக்கம், ஒவ்வொரு திங்களும் முதல் நாளன்றே ஊதியம் அளிக்கப்பட்ட வேண்டுமென்று அரசு முதற்கட்டமாக ஆணையிட்டுள்ளது. பரிந்துரைகள்மீது அரசு ஒரு முடிவெடுக்குமென்பது எதிர்பார்க்கப்படுகிறது.

**மதிய உணவுத் திட்டம்.**—பள்ளிகளில் மதிய உணவு வழங்குவதில் ஏனைய மாநிலங்களைவிட தமிழ்நாடு முன்னணியிலுள்ளது. ஊராட்சிகளையும் ஊராட்சி ஒன்றியங்களையும் நிறுவியதனால் அவற்றின் துணை கொண்டு இம்மதிய உணவுத் திட்டத்தை, சீராகச் செயற்படுத்த முடிகிறது. இத்திட்டத்தினைக் கொண்டு உணவளிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. இம்மாநிலத்திலுள்ள எல்லா தொடக்கப் பள்ளிகளிலும் இத்திட்டம் செயலிலுள்ளது. அரிசனப் நலப் பள்ளிகளிலுள்ள மாணவர்கள் உட்பட மொத்தமாகப் பயன்பெறும் மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 13 இலட்சமாகும். ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மதிய உணவுக்குழு செயற்படுகிறது. தொடர்புள்ள ஊராட்சித் தலைவர் இக்குழுவின் தலைவராகவும். தலைமையாசிரியர் செயலராகவும் பணியாற்றுகின்றனர். 1972—73-ம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 205.48 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சேக்காடு என்னும் ஊரில் "கேர்" நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் 1967-68-இல் ஒரு முன்னோடித் திட்டமாகத் தொடங்கப்பெற்ற மையச் சமையற் கூடத் திட்டம் மிகவும் பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமைந்துள்ளது. சேக்காட்டில் அமைந்துள்ள மையச் சமையற் கூடத் திட்டம் வெற்றிகரமாக இயங்கியதைக்கண்ட "கேர்" நிறுவனம் மேலும் 30 நிலையங்களை 1969-இல் திறக்க முன் வந்துள்ளது. அரசு இவ்வுதவியை





ஏற்றுக்கொண்டு, 1969-70-இல் 30 நிலையங்களைத் திறக்க ஆணை பிறப்பித்துள்ளது. 1970-71-ம் ஆண்டில் மேலும் 30 நிலையங்களை, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் துவங்க ஆணையிடப்பட்டுள்ளது. "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் இன்னும் 30 மையச் சமையற் கூடங்களைத் திறக்க. அரசு தற்போது ஒப்புதல் அளித்துள்ளது. மதிய உணவுத் திட்ட வேலைகளுக்குரிய பொருட்களைச் சேகரித்து வைப்பதற்கென 10 மண்டலக் கிடங்குகளை அமைக்கும் பணி மேற் கொள்ளப் பட்டுள்ளது. இவற்றில் 6 கிடங்குகள் கட்டி முடிக்கப் பட்டுள்ளது. எஞ்சியவை மேற்கொள்ளப்பட்டு விரைவில் நிறை வேற்றப்படும்.

## (ஆ) நலப்பணிகள்.

**ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.**—ஆரம்பச் சுகாதார நிலையம் மேல் நிலையாக நிறுவப்பட்ட பல நோக்கப்பிரிவாகும். சமுதாயத்திற்குத் தடுப்பு சிகிச்சையளிப்பதிலும், நோய்ச் சிகிச்சையளிப்பதிலும் அக்கறை கொண்டு மக்களின் உடல்நலனை நாளடைவில் ஊட்டம் பெறச் செய்வதே இந்நிலையங்களின் பணியாகும். ஒரு வட்டாரத்திற்கு ஓர் ஆரம்பச் சுகாதார நிலையம் வீதம் திறக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மூன்றும் ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 188 நிலையங்கள் செயற்பட்டன. 1966-69-இல் 129 நிலையங்கள் கூடுதலாகத் திறக்கப்பட்டன.

ஒப்பளிக்கப்பட்ட 381 நிலையங்களில், 379 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இன்றளவில் இயங்கி வருகின்றன.

**தாய் சேய் நல நிலையங்கள்.**—தாய் சேய் நலப் பணிகளைத் தங்கள் பகுதிகளில் வளர்ப்பது, ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகும். இத் திட்டத்திற்காகும் செலவை ஊராட்சி ஒன்றியம் சமாளிக்கும் வகையில், மொத்தச் செலவில் 2-3 பங்கை அரசு உதவி மானியமாகத் தருகிறது. இலட்சம் பேர்களுக்கு மேற்பட்ட மக்கள் தொகையுடைய ஊராட்சி ஒன்றியங்களின் 10-க்கும் மேற்பட்ட தாய் சேய் நல நிலையங்களைப் படிப்படியாகத் தொடங்கும் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் செயற்படும் சேய் நல நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 2,819 ஆகும்.

[1972 மார்ச் 11

**ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள்.**—மருந்தகங்களை நிறுவுவதும், நிர்வகிப்பதும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் செலவினங்களுக்கு, ஊராட்சி ஒன்றியக்குழு நிதி ஒதுக்கீடு செய்கிறது. மருந்தகங்களை நிர்வகிப்பதற்காகும் மொத்தச் செலவில் 50 சதவிகிதம் அது ஆண்டொன்றுக்கு ரூ. 5,400-க்கு மேற்படாமல் நிதியுதவியைப் பெற ஊராட்சி ஒன்றியம் தகுதி பெற்றதாகிறது.

**குடும்ப நலத்திட்டம்.**—குடும்ப நலத்திட்ட வேலைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. திருத்தப்பட்ட குடும்பநல வேலைத் திட்டத்தின்கீழ், இம் மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களும் கொணரப்பட்டுள்ளன. இவ்வட்டாரங்கள் அனைத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவர்களால், ஒவ்வோர் ஆண்டும், குடும்ப நலத்திட்டப் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன. 1974-ம் ஆண்டில், பிறப்புத் தொகை ஆயிரம் பேர்களுக்கு 40 என்பதை 25 எனக் குறைப்பதே அரசின் குறிக்கோளாக இருக்கிறது. வெவ்வேறு பகுதிகளில் உள்ள மக்கள் தொகை, பிறப்பு விகிதம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே, பல்வேறு நலத்திட்ட முறைகளிலும், திட்ட இலக்குகள் நிர்ணயிக்கப்படுகின்றன. குடும்ப நலத்திட்டத் தின்கீழ், ஊராட்சிகளால் ஊக்குவிக்கப்பட்டு, அதன் காரணமாக அனுமதிக்கப்பட்டுள்ள ஒவ்வோர் அறுவை சிகிச்சைக்கும் ரூ. 10-ஐ ஊட்டு மானியமாகப் பெற ஊராட்சிகள் தகுதியுடையவை. அறுவை சிகிச்சை செய்து கொள்ளச் செல்பவரின் போக்குவரத்துச் செலவுக்கும், ஒன்றியப் பகுதிகளில், குடும்ப நலத்திட்டத்தை விளம்பரப்படுத்துவதில் ஏற்படும் செலவிற்குமாகவே இத்தொகை அளிக்கப்படுகிறது.

(இ) சமூகக் கல்வி.

1969-70-ம் ஆண்டு முதல் சமூகக் கல்வி வேலைத் திட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அவை பின் வருமாறு :—

1. சமூகக் கல்வி நிலையங்கள்.
2. வானொலிப் பெட்டிகள்.
3. தகவல் நிலையங்கள்.
4. பள்ளி வேலைகள்.



1972 மார்ச் 11]

5. விளைச்சல் போட்டி பொருட்காட்சி, விழா கூட்டங்கள்.
6. தேசிய நாட்களைக் கொண்டாடுதல்.
7. பலவகை.

1972-73-ஆம் ஆண்டுக்குரிய வேலைத் திட்டங்கள் வருமாறு:—

1. சமூகக் கல்வி நிலையங்கள்.
2. கிராம நூலகங்கள்.
3. விளையாட்டுப் பந்தயங்கள்.
4. தகவல் நிலையங்கள்.

தற்போது 12,900 சமூகக் கல்வி நிலையங்கள் உள்ளன. கிராமங்களில் வயது வந்தோர், நடைமுறைத் தகவல்களின்மீது விருப்பப்படி விவாதிக்கும் ஒரு நிலையமாக, இவை அமைக்கப்பட்டுள்ளன. உள்ளூரில் உள்ள ஆசிரியர்கள் அல்லது இதர கல்வி அறிவு பெற்றவர்கள், இதன் அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள் செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றைப் படித்து விவாதங்களைத் துவக்கி உதவுகின்றனர்.

ஊராட்சிகளில் வானொலிப் பெட்டிகளை நிறுவும் செயல் திறமிக்க திட்டமொன்று, தொடர்ந்து செயற்படுத்தப்பட்டதனால், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், இம்மாநிலத்திலுள்ள எல்லா ஊராட்சிகளிலும் வானொலிப் பெட்டிகள் நிறுவப்பட்டு விட்டன. ஊராட்சித் தலைமையிடங்கள் அனைத்திலும் வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டு விட்டதனால், இத்திட்ட வேலைகள் தற்போது சிற்றூர்களுக்குக்கூட விரிவாக்கப்படுகின்றன. இது வரை 33,315 வானொலிப் பெட்டிகள் ஊர்ப் புறங்களில் அமைக்கப் பட்டுள்ளன.

ஐந்தாண்டுத் திட்டங்களில் மக்களின் கவனத்தை ஊக்குவிப்பதற்கும் ஆக்கப் பணிகள், திட்டங்கள் ஆகியவற்றிற்கு மக்களின் ஆதரவைப் பெறுவதற்கும் கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம் மன்றங்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு, விவாதிக்கும் குழுக்களாகச் செயற்படுகின்றன. இதுவரை 6,000 கிராம வானொலி மன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றை ஊக்குவிப்பதற்கென, ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள சிறந்த வானொலி மன்றங்களுக்கு 'டிரான்சிஸ்டர்' வானொலிப் பெட்டிகள்

சுழற் கேடயங்கள் ஆகியவை ஆண்டுதோறும் பரிசுகளாக அளிக்கப்படுகின்றன. மாநில அளவிலான சிறந்த கிராம வானொலி மன்றத்துக்கும் சுழற் கேடயம் பரிசாக அளிக்கப்படுகிறது. தவிர கிராம வானொலி மன்ற நிகழ்ச்சிகளை உள்ளடக்கும் 'வானொலிக் கதிர்' என்னும் சிற்றேடொன்று திங்கள்தோறும், நன்கு செயல்படும் வானொலி மன்றங்களுக்கும், ஊராட்சி ஒன்றிய தகவல் நிலையங்களுக்கும் அனுப்பப்படுகிறது. ஊர்ப்புறத் திட்டங்கள், வேளாண்மை திட்டப் பணிகள் போன்றவை தொடர்பான திரைப் படங்களைத் திரையிடும் பொறுப்பினை 54 திரைப்படப் பிரிவுகள் ஏற்றுக் கொண்டுள்ளன. சமுதாய வளர்ச்சி, வேளாண்மை, சமுக நலம் பற்றிய சிறிய திரைப்படங்கள், இத்திரைப்படப் பிரிவுகள் மூலமாகத் திரையிடத் தயாரிக்கப்பட்டுள்ளது. 1972-73-ம் ஆண்டில் இளைஞர்களின் நடவடிக்கைகள் பற்றிய, சிறிய திரைப் படமொன்றைத் தயாரிக்க ரூ. 50,000 ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

அரசால் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையான வளர்ச்சிப் பணிகள் பற்றிய அறிவையும் செய்தியையும் உட்புற கிராமங் களிடையே வாழும் மக்களிடையே பரப்பி, அவர்களையும் நாட்டை உருவாக்கும் இப்பணியில் பங்கு பெறத் தூண்ட, மேற்கண்ட நடவடிக்கைகள் பெரிதும் துணை புரிந்துள்ளன.

### (ஈ) மகளிர் குழந்தைகள் நலம்.

1962-63-ம் ஆண்டு தொடக்கத்திலேயே, ஓர் ஊராட்சிக்கு ஒரு மகளிர் மன்றம் வீதம், ஊராட்சி ஒன்றியத்துக்கு, குறைந்த எண்ணிக்கையாக 30 மன்றங்களாக, ஊர்ப்புறங்கள் அனைத்திலும் மகளிர் மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. மனப்போக்கு மாறுதற் குரிய முக்கிய அங்கமாக இம்மன்றங்கள் செயற்படுகின்றன. இம் மன்றங்களில், குடும்ப வளர்ச்சியைக் கட்டுப்படுத்தக் கருத் தடைச் சாதனங்களைக் கையாள வேண்டுமென்றும், சிரமமான காலங்களில் உதவுவதற்கெனச் சேமிக்க வேண்டுமென்றும், மூட நம்பிக்கைகள், சாதி உணர்வுகள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும், மகளிர் அறிவுறுத்தப்பட்டு, பின்பற்ற வேண்டப்படுகின்றனர். முன்னேற்றமான வாழ்க்கை முறையைக் கற்று, பின்பற்றப் பழகும் 2—3 இலட்சம் கிராம மகளிர் பங்கு பெறும், 13,124 மகளிர்



மன்றங்கள் உள்ளன. இந்த 13,124 மகளிர் மன்றங்களில் 10,082 மன்றங்களுக்கு 50 சதவிகிதம் அரசு நன்கொடை மூலம் தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மகளிர் மன்றங்களுக்குச் சொந்தக் கட்டடங்கள் உள்ளன. வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 359 மகளிர் கேட்பு மன்றங்கள் நிறுவப்பட்டுள்ளன. ஒவ்வொரு வட்டாரத்திலும் 30 மகளிர் மன்றங்கள் உள்ளன. இம் மன்றங்கட்கு, மகளிர், குழந்தைகள் நலத்தைப் பேணுதற்கென ரூ. 4,000 அளிக்கப்படுகிறது.

## 7. சிறப்புத் திட்ட வேலைகள்.

### (அ) கிராம ஆள்வலத் திட்டம்.

1961-62 ஆம் ஆண்டிலிருந்து, இம்மாநிலத்தில், கிராம ஆள் வலத் திட்டம் செயற்பட்டு வருகிறது. சமுதாய சொத்துக்களை உருவாக்கி, அதன் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கு வதற்கும், வேளாண்மை வேலை இல்லாக் காலங்களில் வேலை வாய்ப்பு அளிப்பதற்கும், கிராமப் பகுதிகளில் கிராம ஆள்வலத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு, ஊராட்சி ஒன்றியக் குழுக்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. சிறிய நீர்ப்பாசன ஆதாரங்களை விருத்தி செய்தல், சிறிய சாலைகளை அமைத்தல், ஊராட்சிகளிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள நிலங்களைப் பயன்படுத்தல், சமுதாயக் கிணறுகளைத் தோண்டுதல், விறகுகளுக்காகப் பயன்படும் மரங்களை வளர்த்தல், சிறிய கழிவுநீர்ப் பாதைகளை அமைத்தல், செம்மைப்படுத்தல் போன்றவை, கிராம ஆள்வலத்திட்ட வேலைகளில் அடங்குவன வாகும். இம்மாநிலத்திலுள்ள 374 வட்டாரங்களில், 72 வட்டாரங் களில் இத்திட்டம் செயற்படுகிறது. சுமார் ரூ. 4 இலட்சம் வரை முதலீடு செய்து, சுமார் 4 முதல் 5 ஆண்டுகளாக இத்திட்டத்தை மேற்கொண்டு நிறைவேற்றிய வட்டாரங்களை, இத்திட்டத்தி லிருந்து நீக்கிவிட்டு, அவ்விடங்களில், பின்தங்கிய வட்டாரங்கள் சேர்க்கப்படவேண்டுமென்பது தற்போதைய கொள்கையாகும். 1969-70 ஆம் ஆண்டில் 42 பழைய வட்டாரங்கள் நீக்கப்பட்டு, 42 புதிய வட்டாரங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. 1970-71 இல்

மேலும் 24 வட்டாரங்கள் நீக்கப்பட்டு, அவ்விடங்களில் 24 புதிய வட்டாரங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டன. 1972-73 இல் 5 வட்டாரங்கள் நீக்கப்பட்டு, 5 வட்டாரங்கள் இணைக்கப்பெறும்.

இத்திட்டத்தின் நிதி, திட்ட சாதனைகளைப் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

| | செய்யப்பட்ட செலவு. (ரூ. இலட்சத்தில்.) | ஏற்படுத்தப்பட்ட வேலைவாய்ப்பு. (வேலை நாட்கள் இலட்சத்தில்.) |
|---|---|---|
| 1966–67 | 52·43 | 17·26 |
| 1967–68 | 40·70 | 15·72 |
| 1968–69 | 50·89 | 18·49 |
| 1969–70 | 40·65 | 14·94 |
| 1970–71 | 50·00 | 17·66 |

1972-73 ஆம் ஆண்டு நிதி நிலை மதிப்பீட்டில், இத்திட்ட வேலைகளுக்கென ரூ. 40 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஆ) சத்துணவுத் திட்டம்.

'யூனிசெஃப்' நிறுவனம், மாநில அரசு ஆகியோரின் உதவியுடன், 1962-63 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் முதல் முறையாகச் சத்துணவுத் திட்டம் தொடங்கப் பெற்றது. நல்ல உடல் நலத்துடன் வாழ, உள்ளூரிலேயே சத்துணவுப் பொருட்களை உற்பத்தி செய்து, அவற்றை உட்கொள்ள வேண்டியதன் அவசியத்தை ஊர் மக்களுக்கு எடுத்துக் கூறுவதே இத்திட்டத்தின் பரந்த நோக்கமாகும். இம்மாநிலத்திலுள்ள 7 ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள 7 வட்டாரங்களே இத்திட்டத்தை நிறைவேற்ற முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. இவ்வட்டாரங்களில் இத் திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதைக் கண்ணுற்ற பின்னர், சுய தேவைகளை அவசியம் எழும்போதெல்லாம் வேளாண்மை மானியத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய அடிப்படையில் இத்திட்டம், 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாள் முதல், இவ்வட்டாரங்களிடமே ஒப்படைக்கப்பட்டன. 1966-67 இல் இரண்டாவது கட்டமாகத் தொடங்கப்பெற்ற இரண்டு வட்டாரங்கள், 1971 ஆம் ஆண்டு மார்ச்





திங்கள் 31 ஆம் நாளில், ஐந்தாண்டுகளுக்குரிய செயல்களை முடித்துள்ளன. இத் திட்ட வேலைகள் வருங்காலத்தில் நிறைவேற்றப்படுவதற்கென ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப்படும். 1971 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளோடு, சாத்தூர் அகஸ்தீஸ்வரம், பெரிய நாயக்கன் பாளையம் ஆகிய வட்டாரங்கள் திட்ட வேலைகளை முடித்துள்ள போதிலும், 'யூனிசெஃப்', மாநில அரசு ஆகியவற்றின் நிதியுதவியுடன் மேலும் ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும் விரிவாக்கப்பட்ட இந்த காலவரையில் இந்த வட்டாரங்கள், மத்திய அரசிலிருந்து எந்த உதவியும் பெறத்தகுதியுடையவையல்ல. கீழ்க்கண்ட வட்டாரங்களில், அவற்றிற்கு எதிரே குறித்துள்ள ஆண்டுகள் தொடக்கத்திலிருந்து, இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

| வட்டாரம். | தொடங்கப்பட்ட ஆண்டு. |
|---|---|
| 1. எருமைப்பட்டி (சேலம் மாவட்டம்) | |
| 2. திருவரங்குளம் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | |
| 3. கொடைக்கானல் (மதுரை மாவட்டம்) | |
| 4. மோகனூர் (சேலம் மாவட்டம்) | 1969—70 |
| 5. ஆலங்காயம் (வட ஆர்க்காடு மாவட்டம்) | |
| 6. அறந்தாங்கி (தஞ்சாவூர் மாவட்டம்) | |
| 7. போளூர் (இராமநாதபுரம் மாவட்டம்) | 1970—71 |
| 8. அரூர் (தர்மபுரி மாவட்டம்) | |
| 9. குறிஞ்சிப்பாடி (தென் ஆர்க்காடு மாவட்டம்) | |
| 10. மானூர் (திருநெல்வேலி மாவட்டம்) | |
| 11. கீரப்பாளையம் (தென் ஆர்க்காடு மாவட்டம்) | |
| 12. கமுதி (இராமநாதபுரம் மாவட்டம்) | |
| 13. மணச்சநல்லூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) | 1971—72 |
| 14. காடையாம்பட்டி (சேலம் மாவட்டம்) | |
| 15. வில்லிவாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்) | |
| 16. திருப்போரூர் (செங்கற்பட்டு மாவட்டம்) | |

சத்துணவுத் திட்டத்தை 1972-73 இல் விரிவாக்க 6 வட்டாரங்களை இந்திய அரசு தமிழ் நாட்டிற்கு ஒதுக்கியுள்ளது. 1966-67 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் நான்காம் திட்டச் சத்துணவுத் திட்ட வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுக்கு ரூ. 34,000 வீதம் ஐந்தாண்டுகளுக்கு மைய அரசின் சிறப்பு உதவியைப் பெறும். இத்தோடு மாநில அரசின் நன்கொடையாக ரூ. 51,000 "யூனிசெஃப்" உதவி ஆகியவையும் சேரும்.

1972-73 ஆம் ஆண்டிற்கு சத்துணவுத் திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 18.00 இலட்சமாகும்.

(இ) கிராமத் தொழில்கள் திட்டம்.

1962-63 ஆம் ஆண்டில், ஸ்ரீபெரும்புதூர், ஓமலூர், நான்குனேரி ஆகிய இடங்களில், இந்திய அரசினரால் கிராமத் தொழில்கள் திட்டம் நிறுவப்பட்டன. கிராமத் தொழில் திட்டப் பகுதிகளில் தகுதியான நடைமுறைகளை அறிந்து கொள்ளுதற்கென முன்னோடியாக இத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. உள்ளூர் கைவினைஞர்களுக்கும், உழவர்களுக்கும் தொழில் செய்வதற்கான வசதிகளை அளிப்பதற்காகப் பொது வசதிப்பணி நிலையங்கள் நடத்துதல், உள்ளூர் மக்களின் தேவையையொட்டிப் பொருள்களைத் தயாரிப்பதற்காக, அரசுத் துறையினால் கண்காணிக்கப்படும் உற்பத்திப் பிரிவுகளை அமைத்தல் ஆகியவை இவற்றின் தொடக்க காலப் பணிகளாம். எதற்காக இவை தோற்றுவிக்கப்பட்டனவோ, அப் பணிகளை இவை செய்து முடித்துவிட்டதனால் அரசு கண்காணிப்பில் உள்ள 16 பொது வசதிப் பணி நிலையங்களை வாடகை விற்பனை அடிப்படையில் தனியார்களுக்கு அளிப்பதற்கென அரசு முடிவு செய்தது. இதுவரை 5 பொது வசதிப் பணி நிலையங்கள் வாடகை விற்பனை அடிப்படையில் தனியார்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. பொதுவசதி பொறியியல் பட்டறையில் அளிக்கப்பட்டு வரும் பயிற்சிப் பிரிவு தவிர, மாநிலத்திலுள்ள எல்லாப் பயிற்சிப் பிரிவுகளும் மூடப்பட்டுவிட்டன. கிராமத் தொழில்கள் திட்ட 'ஏஜென்சி'களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு, சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள கிராமக்கலை, கைவினைப் பொருள்கள், தொழில் திட்டத்திலுள்ள நிதிகளைப் பயன்படுத்தி, ஸ்ரீபெரும்புதூர் திட்டப் பகுதியில் இரண்டும், ஓமலூர் பகுதியில் இரண்டும், நான்குநேரியில் ஒன்றுமாக, ஐந்து கிராமத் தொழில்பேட்டைகளைத் தொடங்க அரசு அனுமதி அளித்துள்ளது. தனியார்கள் தொழில்களைத் தொடங்குவதற்குப் போதிய வசதிகளை அளிப்பதற்கே இவை நிறுவப்படுகின்றன. திட்டப் பகுதியிலுள்ள தனிப்பட்ட தொழில் அதிபர்களுக்கு 1969 ஆம் ஆண்டு இறுதியிலிருந்து ரூ. 5,000 வரை ஒவ்வொரு பிரிவும் கடன் வசதி பெற ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா வழிவகை செய்துள்ளது. இப்போது செயல்படும் மூன்று திட்டங்களையும் மாவட்ட முழுவதற்கும்



விரிவாக்கி, 1—4—1974 முதல் தொடங்கும் ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மேலும் இரண்டு கிராமத் தொழில் திட்டங்களுக்கு அனுமதி வழங்க இருப்பதாக, இந்திய அரசு தெரிவித்துள்ளது.

(ஈ) குழந்தைகள் நலன் ஒருங்கிணைப்புத் திட்டம்.

குழந்தைகள் நலனிலுள்ள எல்லா வகைகளையும் தழுவி, குழந்தைகள் அனைவருக்கும், சிறப்பாக 10 முதல் 16 வயது வரையிலான குழந்தைகள் (மகப்பேறுக்கு முந்தைய காலம் உட்பட) நன்மை பயக்கும் ஒரு செயல் விளக்கத் திட்டம், இம் மாநிலத்திலுள்ள பூவிருந்தவல்லி வட்டாரத்தில் தொடங்கப்பட்டுள்ளது. முழு உதவி அடிப்படையில், இத்திட்டத்தை இந்திய அரசு ஊக்குவித்துள்ளது. தானே முன்வந்து பணியாற்றும் கிராம நிறுவனங்களும், உள்ளாட்சிகளும் நல்கும் மனமுவந்த ஒத்துழைப்பு, அயராத தொண்டுள்ளத்தின் கூட்டுறவுடன், குறைந்த செலவில் குழந்தைகளுக்கு நிறைந்த பயன் அளிக்க முடியும் என்பதே இத் திட்டத்தின் அடிப்படைக் கருத்தாகும். இத் திட்டத்தில் 50 குழந்தைகள் காப்பகங்கள், 20 குழந்தைகள் ஓய்வு நிலையங்கள் இருக்கின்றன. குழந்தைகள் வளர்ச்சியில் பயிற்சி பெற்ற ஒரு பாலசேவிகாவும், ஒரு ஆயாவும் குழந்தைகள் காப்பகம் ஒவ்வொன்றையும் நிர்வகிக்கிறார்கள். குழந்தைகள் காப்பகங்களின் சராசரி எண்ணிக்கை 40. குழந்தைகள் ஓய்வு நிலையங்கள் 10. இத் திட்டத்திற்கு 1968 இல் ஏற்பட்ட செலவுகள் அனைத்தும் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 1972-73 ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 3.00 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ) பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள்.

சேலம் மாவட்டத்தில் கொல்லி மலையில் ஒன்றும், ஏர்காட்டில் ஒன்றுமாக இரண்டு பழங்குடி மக்கள் வளர்ச்சி வட்டாரங்கள், இந்த அரசினரால் செயல்படுத்தப்படுகின்றன. இந்த வட்டாரங்களில் செயற்படுத்தப்படும் திட்டங்கள் அனைத்தும் பழங்குடி மக்களின் நல்வாழ்வுக்காகவே நடத்தப்படுவனவாகும். 'போக்குவரத்து', 'குடிநீர் வழங்கல்' ஆகிய ஈரம்சங்களையொட்டி இப் பகுதியின் தேவைகள் விரிவான முறையில் மதிப்பிடப்பட்டுள்ளன. பழங்குடி மக்களின் நல்வாழ்வுக்காகச் செய்யப்படும்

பணிகளுக்கு நன்கொடைகள் எதுவும் திரட்டப்படுவதில்லை. எல்லா பணிகளும் உள்ளூர் நிலைமைக் கேற்ற வகையில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. 1972-73-ஆம் ஆண்டு நிதிநிலை மதிப்பீட்டில் ரூ. 15.91 இலட்சம் இதற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

### (ஊ) இளைஞர் மன்றங்கள்.

இளைஞர் மன்றங்களுக்குச் செயலூக்கப் பரிசுகள்' அளிக்கும் இந்திய அரசின் திட்டமானது, 1970-71-ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. கிராம இளைஞர்கள், தனித்தனியாகவும் ஒரு தொகுதியாகவும் செயல்படுவதை ஊக்குவிப்பது சமுதாய வளர்ச்சித்திட்டத்தின் முக்கிய அங்கமாக எப்போதும் கருதப்பட்டு வந்துள்ளது. கிராமப் பகுதிகளிலுள்ள இளைஞர்களின் நடவடிக்கைகள், இளைஞர் மன்றங்களைச் சார்ந்தே நடைபெறுகின்றன. இதில், பொருளாதாரத் திட்டங்கள், சமூக, கலாச்சாரப் பணிகள், உடல் வளர்ச்சிப் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் ஆகியவை அடங்கும். இளைஞர் மன்றங்கள் பொருளாதார நடவடிக்கைகளில் முனைப்பாக ஈடுபடுவதற்கு இத்திட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. நற்பணி புரிந்த மன்றங்களுக்கு செயலூக்கப் பரிசுகள் அளிக்கப்படுகின்றன மன்றங்களுக்கு வழங்கப்படும் ரொக்கப் பரிசுகள், பொருளாதார நடவடிக்கைகளை மேலும் வளர்ப்பதற்குப் பயன்படுத்தப்படும். இளைஞர் மன்றங்கள், இன்ன நிலையங்களென வரையறுக்கப்பட்டிருப்பதையொட்டி மூன்று தரங்களாகப் பிரிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு செயலூக்கப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

அ. தரம். A இளைஞர் மன்றங்கள்—ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000.

ஆ. தரம். B இளைஞர் மன்றங்கள்—ஒவ்வொன்றுக்கும் ரூ. 600.

இ. தரம். C (இளைஞர் மன்றங்கள்—ஒவ்வொன்றுக்கும் ரூ. 400.

வட்டார, மாவட்ட, மாநில அளவில் ஆய்வுக் குழுக்கள் மூலம், இளைஞர் மன்றங்களின் முந்தைய ஆண்டுத் திட்டங்கள் குறித்து நடத்திய ஆய்வின் அடிப்படையில், பரிசளிக்கத் தகுந்த மன்றங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. 1970-71-ஆம் ஆண்டில்



A தரத்திலுள்ள 15 இளைஞர் மன்றங்கள், B தரத்திலுள்ள 15 இளைஞர் மன்றங்கள், C தரத்திலுள்ள 15 இளைஞர் மன்றங்களுக்கு ரூ. 30,000 வரைப் பரிசுகள் வழங்கப்பட்டன.

1971-72-ஆம் ஆண்டில், ஆய்வுக் குழுவால் தெரிந்தெடுக்கப்படும் இளைஞர் மன்றங்களுக்குப் பரிசுகள் வழங்குவதற்காக, இந்திய அரசு ரூ. 75,000 ஒதுக்கியுள்ளது. 1972-73-ஆம் ஆண்டிற்கு, இதே அளவுத் தொகை பரிசாக வழங்க வகை செய்யப்பட்டுள்ளது.

### 8. 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் முன்னிலைப் பள்ளிக் குழந்தைகளுக்கு உணவளித்தலும்—குழந்தைகள் காப்பகங்கள் கட்டுதலும்.

மாநிலத்திலுள்ள 47 வட்டாரங்களில் 1,000 குழந்தைகள் காப்பகங்கள் உள்ளன. காப்பகம் ஒவ்வொன்றிலும் முன்னிலைப் பள்ளிக் குழந்தைகள் (3-5 வயதுள்ள) கருவுற்ற, பாலூட்டும் தாய்மார்கள் கொண்ட 120 பேர்களுக்கு நாள்தோறும் உணவளிக்கப்படுகிறது. இதனால் நாளொன்றுக்கு 1,12,000 பேர்கள் பலன் பெறுகின்றனர். 'கேர்' நிறுவன ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. புரதமும் இதரச் சத்துக்களும் அடங்கியுள்ள உணவுகள் போதிய அளவு குழந்தைகளுக்குக் கிடைக்காததன் காரணமாக, அவர்களுக்கு உடல்நலக் குறைவுடன், நரம்புத் தளர்ச்சியும் ஏற்பட்டு, பிற்காலத்தில் அவர்களின் அறிவு வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கெனவே, ஆண்டில் 300 நாட்களுக்குக் குழந்தைகள் காப்பகங்களில் உணவளிக்கப்படுகிறது.

ஆயிரம் குழந்தைகள் காப்பகங்களில், இதுவரை 928 நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. இந்த நிலையங்களில் கிட்டத்தட்ட 85,570 பேர்கள் உணவு பெற்று பயனடைகின்றனர். மீதமுள்ள 72 நிலையங்கள் விரைவில் தொடங்கப் பெற்று, குறியீட்டு எல்லையான 1,20,000 பேர்கள் பயனடைவர்.

ஆயிரம் குழந்தைகள் காப்பகக் கட்டடங்களில், செங்கற்பட்டு தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களில் 115 கட்டடங்கள் கட்டுவதற்கென, ஆரம்பக் கட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கட்டடங்கள் கட்டுவதற்கான இரண்டாவது கட்டமாக மகளிர் நல இயக்குநரால் 225 மனைகள் தெரிந்தெடுக்கப்பட்டு, "கேர்" நிறுவனத்தாரின் ஒப்புதலுக்கென அனுப்பப்பட்டுள்ளன.

இந்நிலையங்களை நிர்வகிக்க, வட்டாரங்களிலுள்ள கிராம சேவிகைகளுக்குப் போதிய பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. 'கேர்' நிறுவனம் அளிக்கும் உணவுப் பொட்களைக் கொண்டு பல்வகை உணவுகளைத் தயாரித்தல், பாதுகாத்தல் மற்றும் சமைக்கும் போதும், பறிமாறும்போதும் துப்புரவைக் கடைப்பிடித்தல் போன்றவற்றிற்குத் தேவையான சிறப்புப் பயிற்சிகள், டி. கல்லுப் பட்டியிலும், பவானி சாகரிலுள்ள ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையத்திலும் அளிக்கப்படுகின்றன. பயிற்சிபெற்ற கிராம சேவிகைகள், பாலசேவிகைகளுக்கும், ஆயாக்களுக்கும், 4 நாட்களுக்கு மறுபயிற்சி அளிக்கப்படுகிறது. அனுமதிக்கப்பட்ட வடிவில் ஒவ்வொரு காப்பகமும் ரூ. 7,000 செலவில் கட்டப்படுகிறது. 'கேர்' நிறுவனம் ஒவ்வொரு கட்டடத்திற்கும் உதவிப் பணமாக ரூ. 6,500 தருகிறது. மிகுதியுள்ள தொகை மக்களிடமிருந்து நன்கொடையாகப் பெறப்படும்.

1972-73-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை ரூ. 15.40 இலட்சமாகும்.

## 9. சீரணி.

சீரணியானது மக்களிடையே ஒரு புதிய சமுதாய எழுச்சியை உருவாக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பெற்று, நான்கு ஆண்டுகளாகச் சமூகத் தொண்டாற்றி வருகிறது. சீரணி உறுப்பினர்கள், தங்கள் ஓய்வு நேரங்களில் சமூக நலனுக்கான வகையில் தொண்டாற்றுவோராவர். பள்ளிக்கூடங்கள் கட்டுதல், குளங்கள் தூர்வை எடுத்தல். பாதைகள் போடுதல் போன்ற பொது மக்களுக்குப் பயனளிக்கும் வேலைகளில் சீரணியினர் செயல்படுகின்றனர். குடிசைப் பகுதிகளில் உள்ள குழந்தைகளுக்கு, சத்தூட்டப் பெற்ற ரொட்டிகளை வழங்குவதில் சீரணியினர் பங்கேற்கின்றனர். இத்திட்டத்தால் சுமார் 40,000 குழந்தைகள் பயனடைந்துள்ளனர். சென்னை நகரில் உள்ள முக்கிய பேருந்து நிலைகளில், பயணிகளை வரிசைப்படுத்தி, ஒழுங்கேற்படுத்தும் பணிகளையும், இவர்கள் செய்து வருகின்றனர்.



தமிழ்கம் முழுவதிலும் தற்போது 44,524 சீரணித் தொண்டர்கள் உள்ளனர். கிராமங்களின் இன்றியமையாத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, ஓராண்டுத் திட்டமொன்று தீட்டப்பெற்று சீரணியினரின் மூலமாக நிறைவேற்றப்பட இருக்கிறது. 1971-72-ஆம் ஆண்டுக்கென, சீரணியினரின் செயல் திட்டத்திற்கென, ரூ. 10 இலட்சம் மாநிலம் முழுவதற்குமாக ஒதுக்கப்பட்டது. மக்களிடையே அறியாமையை விரட்டி, அறிவொளி பரப்பும் முதியோர் சமூகக் கல்வி நிலையங்களாகச் செயல்படும் 534 சீரணி அறிவகங்கள், சீரணித் திட்டத்தின் கீழ், மாநிலம் முழுவதிலும் இருக்கின்றன. 1970-71-ஆம் ஆண்டிற்கு சீரணி அறிவகங்களை நடத்துவதற்கென ரூ. 49,000-மும் மாவட்ட தலைமையிடத்தில் நடத்தும் சீரணித் தொண்டர்களின் பயிற்சிக்கென 1970-71-இல் ரூ 2,79,000-மும் செலவிடக்கப்பட்டுள்ளன.

மையத் திட்டத்தின் கீழ், சீரணியினருக்கு, திருந்திய வேளாண்மை முறை, கால்நடை வளர்ச்சி, கிராமத் தலைமைப் பொறுப்பை மேற்கொள்ளல் ஆகியவை குறித்து ஊர் விரிவாக்கப் பயிற்சி நிலையங்களில், 12 நாட்களுக்குப் பயிற்சியளிக்கப்படுகிறது.

1967 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் நாள் முதல், 1971 ஆம் ஆண்டு டிசம்பர் 31-ஆம் நாள் முடிய உள்ள காலத்தில், இவ்வணியினர் எடுத்து முடித்துள்ள பணிகள் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. | கட்டி முடிக்கப்பட்ட பள்ளிக் கட்டடங்கள் | 1,147 |
| 2. | ஏரிகள், கால்வாய்கள் தூர் எடுத்தல் | 1,356 |
| 3. | இணைப்புச் சாலைகள் அமைத்தல் | 942 |
| 4. | தரிசு நிலங்களை விளைநிலங்களாக்கல் | 500 ஏக்கர்கள். |
| 5. | வெள்ளை பூசப்பட்ட பள்ளிகள் | 13,523 |
| 6. | பூச்சி மருந்தடித்தல் | 1,500 ஏக்கர்கள். |
| 7. | பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட பெயர்ப் பலகைகள் | 2,562 |
| 8. | காய்கறித் தோட்டங்கள் | 3,848 |

9. இதர பணிகள் (வீதிகளைச் சுத்தம் செய்தது, பள்ளிகளுக்கு மின்விளக்குகள் பொருத்தியது, பள்ளிச் சுவர்களில் திருக்குறள் எழுதியது). 11,032

10. நாளொன்றுக்கு ஒரு முறையாவது கோதுமை உணவைக் கொள்ளவேண்டுமென்று தூண்டியதன் விளைவாக அப்பழக்கத்தை பின் பற்றும் மக்கள். 7,02,146

11. நடைபெற்றுள்ள வேலைகளின் மதிப்பு ரூ. 1,14,97,606

12. அரசினர் செலவு ரூ. 44,25,822

10: கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டம்.

ஊர்ப்புறங்களில் வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கென 1970-71-ஆம் ஆண்டில் இவ்வரசு சிறப்பு ஊர்ப்பணிகள் திட்ட வேலைகளை துவக்கியது. இணைப்புச் சாலைகளையமைத்தல், தாய் சேய் நல விடுதிகள், பள்ளிக் கட்டடங்கள், குடிநீர் வினியோகத்தை விரிவாக்கல் ஆகிய பணிகள் இச் சிறப்புத் திட்டத்தில் அடங்குவனவாம். இத் திட்ட வேலைகளுக்கென, 1970-71-ஆம் ஆண்டில் நிதி நிலை மதிப்பீட்டில் ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டது. அனைத்திந்திய அடிப்படையில் இந்திய அரசினால் உருவாக்கப்பட்ட கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்துடன் மேற்சொன்ன சிறப்பு திட்டம் இணைக்கப்பட்டு விட்டது.

மாநிலத்திலுள்ள மாவட்டம் ஒவ்வொன்றிலும் குறைந்த அளவாக 1,000 பேர்களுக்கு வேலையளிக்க "கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டம்" ஒன்றினை மைய அரசு வகுத்துள்ளது. உடலுழைப்பும், உற்பத்தியும், இரண்டறக் கலந்து பல்வகைப்பட்ட கிராமத் திட்டங்கள் வாயிலாகக் கூடுதலான வேலை



வாய்ப்புகளை உண்டாக்கும் வகையில், இத் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத் திட்ட வேலைகளில் நிறைவேற்றப்படும் பணிகளாவன:—

(அ) பெருந் திட்ட அடிப்படையில் சாலைகள் அமைக்கும் பணிகள் உள்ளிட்ட உள்ளமைப்பு வேலைகள்.

(ஆ) தரிசுகளை விளை நிலங்களாக்கல், ஊராட்சி நிலங்களைத் திருத்துதல் போன்றவை.

(இ) கழிவு நீர்வசதி, கரைகள் அமைத்தல் போன்றவை.

(ஈ) நீரைப் பாதுகாத்து, நிலஅடிநீரைப் பயன்படுத்துதல் போன்றவை.

(உ) பாசனத் தேக்கங்கள் அமைத்தல், சீராக்குதல் போன்ற சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்.

(ஊ) மண்வளப் பாதுகாப்பு அல்லது மனித உழைப்புத் தேவைப்படும் காடு வளர்ப்புத் திட்டங்கள்.

இது நூற்றுக்கு நூறு மைய அரசு உதவித் திட்டமாகும். நான்காம் திட்டக்காலத்தில் எஞ்சி நிற்கும் ஆண்டுகளிலும் இத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களைத் தவிர, ஏனைய மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 20 வட்டாரங்கள் வீதம் இத்திட்டம் நிறைவேற்றப்படுகிறது. கன்னியாகுமரி, நீலகிரி, தர்மபுரி மாவட்டங்களில் முறையே 9, 4, 16 வட்டாரங்களே உள்ளமையால், இத் திட்டம் இம் மாவட்டங்களிலுள்ள வட்டாரங்கள் அனைத்திலுமே செயற்படுத்தப்படுகின்றன. இவ்வாறாக இம் மாநிலத்திலுள்ள 374 மொத்த வட்டாரங்களில் 229 வட்டாரங்களில் இத் திட்டம் தற்போது செயற்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து, ஏனைய மாவட்டங்கள் அனைத்திற்கும் வட்டாரம் ஒன்றிற்கு ரூ. 1.25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. தவிர்க்கப்பட்ட மாவட்டங்களிலுள்ள வட்டாரங்களைக் கருத்திற் கொள்ளாமல், ஏனைய மாவட்ட முழுமைக்கும் ஒரு மாவட்டத்திற்கு ரூ. 12.50 இலட்சம் வீதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டில் உழைப்

பாளிகளுக்கென 80 சதவீதம், பொருட்களுக்கும் கருவி களுக்குமென 17 சதவீதம் மற்றும் அலுவலர்களுக்கென 3 சதவீதம் பங்கிடப்பட்டுள்ளது.

அந்தந்தப் பகுதியில் நிலவும் ஊதிய விகிதத்தைக் கருத்திற் கொண்டு, ஓர் உழைப்பாளிக்கு திங்களொன்றிற்கு 25 நாட்கள் வேலைக்கு ரூ. 100 வரை உயர் அளவாக ஊதியம் அளிக்கப் படுகிறது. எனவே, ஊதிய விகிதத்தைப் பெறுதற்கு, போது மான அளவில் உழைப்பாளிகள் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.

கிராம வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்திற்கென ஒப்பளிக்கப் பட்டத் தொகைகள், வேறு திட்டங்களுக்குச் செலவழிக்கப் படுவதைத் தவிர்ப்பதற்கென "உள்ளூர் வைப்பு நிதி கணக்கு—4" (அதாவது விரைவுத் திட்டக் கணக்கு) என்ற கணக்கொன்று தனியே தொடங்கப்பட்டுள்ளது. ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதி வசதியளிப்பதற்கென உள்ளூர் வைப்பு நிதி கணக்கு—4-இல் ரூ. 10,000-க்கு, ஒரு சுழல் நிதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் வேண்டியபடி, இத் தொகையை ரூ. 30,000-க்கு உயர்த்தி, தற்போது ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளன.

இந்திய அரசின்படி, இத்திட்டமானது நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் எஞ்சிய ஆண்டுகளிலும் தொடர்ந்து நிறைவேற்றப் படும். மாவட்டத் திட்டங்களை இந்திய அரசு கோரியுள்ளது. எனவே கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டத்திற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களில் நிலையான, குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய திட்டங்களை வட்டார வாரியாக 1972-73, 1973-74-ஆம் ஆண்டுகளுக்கு விரிவாக உருவாக்கி அனுப்புமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். 1—4—1972 முதற்கொண்டு இவற்றை நிறைவேற்ற, அவை இந்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்படும்.

1972-73 நிதி நிலை மதிப்பீட்டில் இந் திட்டத்திற்கென ரூ. 295 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.





## 11. வருங்கால வாய்ப்பு நிலைகள்.

1958-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தைச் செயற் படுத்துவதில் காணப்படும் குறைகளைக் களைய, சட்டத்தையே மிகவும் விரிவான முறையில் பரிசீலனை செய்யும் பணிமேற் கொள்ளப்பட்டது. இறுதி வடிவம் பெற்ற சட்டவரைவு தயாரிக்கப்பட்டுக் காலப் போக்கில் சட்டப் பேரவை முன்னர் வைக்கப்படும்.

வருவாய்த்துறை நிர்வாகத்தை, திருத்தியமைக்கும் பிரச்னையை நிர்வாகச் சீர்திருத்தக் குழு தற்போது ஆய்வு செய்து வருவதால், வட்டாரங்களின் எல்லைகளைத் திருத்தியமைக்கும் பிரச்னையும் நிர்வாகச் சீர்திருத்தக்குழுவின் பரிந்துரைக்கு விடப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் கல்வித் தொடர்பான நிதியமைப்புக்களை ஆய்வு செய்ய அரசால் நியமிக்கப்பட்ட ஊராட்சிக் கல்வி நிதி விசாரணை குழு, பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. அவை அரசின் ஆய்வில் உள்ளன. ஊராட்சி ஒன்றியக் குழுக்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கென, ஒரு திருத்தப்பட்ட முறையானது உருவாக்கப்பட்டு வருகிறது. இம்முறை முழு வடிவம்பெற்று, ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன், இரண்டாம் ஊதியக் குழுவினால் ஏற்பட்ட கூடுதல் செலவிற்கு ஒரு தீர்வு கிடைக்கும். இவை பற்றி முடிவெடுப்பது ஒருபுற மிருக்க, ஊராட்சி ஒன்றியங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு (முன்கடன் மானியம் வாயிலாக) திங்களின் முதல் நாளன்றே தவறாது ஊதியமளிக்க வகை செய்து அரசு ஆணை பிறப்பித் துள்ளது.

கிராமக் குடிநீர் விநியோகம்.—முதற்கட்டமாக ஊர்கள் அனைத்திலும் குடிநீர் வழங்கும் திட்டத்தை கொணர்தற்கென, கீழ்க்கண்ட பணிகளுக்கு நிதியுதவியளிக்கக் கோரி, இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்தை, தமிழ்நாடு குடிநீர் வழங்கல் "வடிகால் வாரியம்" அணுகியுள்ளது—

(அ) குடிநீர் வழங்குதற்குரிய ஆதாரங்கள் இல்லா ஊர்கள், சிற்றூர்கள்.

(ஆ) நோய் பரவும் பகுதிகளில் உள்ள ஊர்கள், சிற்றூர்களுக்குக் குடிநீர் வழங்கல், முதல் இனத்திற்கு ரூ. 3.01 கோடியும், இரண்டாம் இனத்திற்கு ரூ. 5.03 கோடியும் செலவாகும்.

**ஊர்ப்புறச் சாலைகள்.**—கிராமச் சாலைகளைப் பொறுத்த வரையில், இம் மாநிலத்தில் உள்ள எல்லாக் கிராமங்களின் தேவைகளை நிறைவு செய்ய, விரைவுப் பெருந்திட்டமொன்றை வகுப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறது. எல்லா காலநிலைகளிலும் பயன் படத்தக்க சாலைகளை அமைத்தல், மேற்பரப்பு சரிவர இல்லாத தற்போதைய சாலைகளை மேம்படுத்தித் தரம் உயர்த்தல், தற்போது ஊராட்சி மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சரளைக்கல் பாவிய சாலைகளில் உள்ள குறைபாடுகளை நீக்குதல் ஆகியவை இப்பெருந்திட்டத்தின் நோக்கமாகும். சரளைக்கல் பரவுதல், தார் போடுதல், குறுக்கு வடிகால்களை அமைத்தல் போன்ற பல்வேறு மேம்பாட்டுப் பணிகளையும் இத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றக் கருதப்படுகிறது.

**பள்ளிக் கட்டடங்கள்.**—தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் அனைத்திற்கும் சொந்தக் கட்டடங்கள் இருக்கவேண்டுமென்பதற்காக, இக்குறிப்புரையில் ஏற்கனவேயே கூறியுள்ளபடி, சிறப்பான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கென அரசு அளித்த மானியம் ஒரு கோடி ரூபாயாகும். தவிர ஆயுள் ஈட்டுறுதிக் கழகமும் அணுகப் பட்டுள்ளது.

**ஊர்ப்புற மின்வசதி.**—நம் நாட்டில் ஊப்புறங்களுக்கு மின் வசதியளிப்பதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தற்போதுள்ள திட்டத்தின்படி, எஞ்சியுள்ள ஊர்கள், சிற்றூர்களுக்கு 1972-73-க்குள்ளும், அரிசனக் குடியிருப்புக்களுக்கு 1973-74-க் குள்ளும் மின்வசதியளிக்கப்பட்டுவிடும்.

**ஊர்ப்புற வேலை வாய்ப்பு.**—ஊர்ப்புறங்களில் வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கான சிறப்பு முயற்சிகள், 1971-72-ஆம் ஆண்டில் மேற்கொண்டமை காணலாம். கிராம வேலைவாய்ப்பு விரைவுத் திட்டம், கிராம ஆள் வலத் திட்டம், இராமநாதபுரம், தர்மபுரி மாவட்டங்களுக்குரிய வறட்சிப் பகுதிகளுக்கானத்



திட்ட வேலைகள், மற்றும், நடுத்தர, சிறிய உழவர்களுக்குப் பயனளிக்கும் வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட திட்டங்கள் ஆகியன மேலும் வலுப்படுத்தப்பெற்று, வேலை வாய்ப்புக்களை உண்டாக்குவதுடன், நிலையான சொத்துக்களையும் உருவாக்கியுள்ளன.

**மண்டலத் திட்டம்.**—பல்வேறு மண்டலங்களின் வளர்ச்சியை சமநிலையில் ஏற்படுத்த, வளர்ச்சிக்குரிய பகுதிகளைக் கண்டெடுத்து, குறிப்பாக, ஊர்ப்புற, நகர்ப்புற வளர்ச்சிக்கான ஆக்கவேலைகளை மேற்கொள்வதே மண்டலத்திட்டத்தின் நோக்கமாகும். நிலவியல், பொருளாதார, சமூக, மக்கள் தொகை முதலியன பண்புகளைக் கொண்டு. மாநிலம் முழுவதும் வளம் பெறக்கூடிய வகையில் அமைந்திட்ட மண்டலங்கள் எட்டாக, மாநிலம் முழுவதுக்கும் வகுக்கப்பட்டுள்ளன. இம் மண்டலத் திட்டங்கள் 1972-73-ஆம் ஆண்டுக்குள் முடிவடையுமென எதிர்ப் பார்க்கப்படுகின்றன. வளர்ச்சி நிலையங்களில் முன்னோடி ஆய்வுத் திட்டம், இந்திய அரசின் உதவியுடன் தொடங்கப் பட்டுள்ளது. அதன் நோக்கம், மண்டலங்களின் சமநிலையான வளர்ச்சியை, உறுதியான கோட்பாடுகளையொட்டி உண்டாக்குவதும், வளர்ச்சி நிலையங்களை உரிய வகையில் கண்டெடுத்து, ஏற்ற வழிமுறையில் அவற்றை உருவாக்குவதுமேயாகும்.

*முடிவுரை.*—மேற்கூறியவற்றால், முதலாவதாக, இந்த அரசு, ஊர்மக்களின் அடிப்படைத் தேவைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்றுவதிலும், அதேநேரத்தில், ஊர்ப்புற மக்களின் வேலைவாய்ப்புக்கள் பற்றிய சிக்கலைத் தீர்த்து, பல்வேறு மண்டலங்களின் சமநிலை வளர்ச்சிக்கு அடிகோலுவதிலும் ஆர்வம் கொண்டுள்ளமை விளங்கும்.

ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பெற்ற பின்பு, உள்ளூர் தலைவர்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பெற்ற பல்வேறு பொறுப்புக்களை, அதிக ஆர்வமும் அக்கறையும் கொண்டு நிறைவேற்றுவதை எங்கும் காணமுடிகிறது. ஊர்புறங்களில் ஒருங்கிணைந்த வளர்ச்சியை ஏற்படுத்தும் முயற்சியில், அரசையும் மக்களையும் நெருங்கிய தொடர்புள்ளவர்களாக்கியுள்ளமை, ஊராட்சி வளர்ச்சித் திட்டத்தின் நிலைபெற்ற சாதனையாகும். மேலும், பசுமைப் புரட்சியை உருவாக்கவும், இது உதவியுள்ளது.

குறிப்பாக, ஊர் மக்களின் மன நிலையில் அமைதியான புதிய மாறுதலை உண்டாக்கி, தங்கள் வளர்ச்சிக்குத் தாங்களே பாடுபடும் உணர்வையும், தன்னம்பிக்கையையும் வளர்த்து, அதன் விளைவாக, பல்வேறு வசதிகளை அமைத்துக்கொள்ள வழி வகுத்து, சிறந்த சாதனைகளைக் காணவும் முடிந்தது.

## இணைப்பு 1. (அ).

### மகளிர்-சிறுர் நலத்திட்டங்கள்

1. தோற்றுவாய்.

மகளிர் நலத்துறை 1947-இல் ஏற்படுத்தப்பட்டது. சமுதாய வளர்ச்சி வட்டாரங்களைத் தொடர்ந்து தேசிய வளர்ச்சிப் பணிகள் 1952-54-இல் தொடங்கப்பட்டன. மாநில சமூக நல வாரியம் 1954-இல் ஏற்படுத்தப்பட்டது. மகளிர் நலத்துறை, மாநில சமூக நல வாரியம், சமுதாய வளர்ச்சி திட்டப் பணியாளர்கள் (மகளிர்) ஆகிய மூன்று பிரிவுகளும் 1961-இல் மகளிர் நல இயக்குநர் அலுவலகமாக ஒன்ருக இணைக்கப்பட்டன. இம்மூன்று பிரிவுகளும் பெரும்பாலும் கிராமப் பகுதிகளில் மகளிர், குழந்தைகள் குறித்து மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டன. அத்துடன் 1961-இல் ஊராட்சி முறை கொண்டு வரப்பட்டதால் ஊராட்சி ஒன்றியம்/சமுதாய வளர்ச்சி வட்டாரங் களில் திட்டங்கள், கொள்கைகள் குறித்து முடிவு செய்ய ஊராட்சி மன்றத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் உரிமையுடையவராகின்றனர். ஒருங்கிணைக்கப்பட்ட மாநில சமூக நல வாரியம் ஆலோசனை வாரியமாக தொடர்ந்து பணி புரிய அரசு அண்மையில் ஆணைகள் பிறப்பித்துள்ளது.

2. நிர்வாக மேம்பாடு.

மாநில மட்டத்தில், மகளிர் நலத்துறை இயக்குநர், துறையின் தலைவராவார். திட்டங்களை நிறைவேற்ற ஒருவர், குழந்தைகள் நலத்தைக் கவனிக்க மற்ருெருவர் ஆக இரண்டு துணை இயக்குநர் கள், நேர்முக உதவியாளர்கள் இருவர், சிறப்பு அதிகாரி ஒருவர்



(குழந்தை நலன்) முதுநிலைக் கணக்கு அதிகாரி ஒருவர் மற்றும் இளநிலைக் கணக்கு அதிகாரி ஒருவர் ஆகியோர் இயக்குநர் தமது கடமைகளை ஆற்ற உதவி புரிகின்றனர்.

மேற் கூறியவர்களைத் தவிர, இம்மாநில முழுவதிலும் 1 இலட்சத்திற்கு மேற்கொண்ட மக்கட் தொகையைக் கொண்ட எல்லா நகரங்களிலும் உள்ள நகர்ப்புற குடிசைப் பகுதியிலுள்ள 0-3 வயதுத் தொகுதி குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்குவதற் கான இந்திய அரசின் சிறப்புச் சத்துணவு திட்டத்தை நிறை வேற்றுவதற்காக சிறப்புச் சத்துணவு அதிகாரி ஒருவரை 1971-72-இல் அரசு நியமித்துள்ளது.

மாவட்ட அளவில், மாவட்ட மகளிர் நல அதிகாரி ஒருவர் உள்ளார். இவர் இவருடைய மாவட்டத்திலுள்ள துறை திட்டப் பணிகளுக்குப் பொறுப்புள்ளவராவார்.

3. பயிற்சித் திட்டங்கள்.—இத்துறை, கீழ்காணும் பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளது—

(i) இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பாடமுறை

மாநில சமூக நல வாரியத்தின் உதவியுடன் தொண்டாற்றும் நிறுவனங்களால் நடத்தப்படும் சுருக்கல் பாடமுறை வாயிலாக பள்ளியிறுதித் தேர்வு முடித்துள்ள உரிய வயது வந்த மகளிருக்குப் பயிற்சியளிக்க 1966-67-ஆம் ஆண்டில், தாம்பரத்தி லுள்ள பணி இல்லத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சிப் பாட முறை ஒன்று தொடங்கப்பட்டது. பயிற்சி தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. ஆண்டு தோறும் 40 பேர் பயிற்சி யளிக்கப்பட்டு தேர்வு எழுத அனுப்பப்படுகின்றனர். இப்பயிற்சி வகுப்பை நடத்த ஆண்டுதோறும் தோராயமாக ரூ. 50,000 செலவிடப்படுகிறது.

(ii) தட்டச்சு முதலிய வணிகவியல் பாட முறை.

பள்ளியிறுதி வகுப்பு முடித்துள்ள பெண்களுக்கான வாழ்க்கைத் தொழில் பயிற்சியாக, சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகியவற்றில் நான்கு வணிகவியல் பாடமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன.—தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங் களிலுள்ள மூன்று பணி இல்லங்களில் மூன்று பாடமுறைகளும் சென்னை ஸ்த்ரீ சேவா மந்திர தொண்டாற்று நிறுவனத்தில்

மற்றொரு பாடமுறையும் கொண்டுவரப்பட்டுள்ளன—இப்பயிற்சி வகுப்புகளை நடத்த அரசு 1969-70 முதற்கொண்டு மானியம் அளித்துவருகிறது. 1972-73-வரை தொடர்ந்து இம்மானியம் வழங்கப்பட்டு வரும் ஒவ்வொரு பயிற்சி வகுப்பிற்கும் ஒப்பளிக்கப்பட்ட மாணவிகளின் எண்ணிக்கை 20 பேர் ஆகும். வரும் ஆண்டுகளில் ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சி வகுப்பு ஒன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

### (iii) தையற் கலை.

பணி இல்லத்தில் முன்பு இருந்தவர்கள் சிலருக்கு மறுவாழ் வளிக்கவும் பின்னல் வேலை, ஆடை தயாரித்தல் போன்றவற்றில் அரசு நடத்தக்கூடிய தொழில் நுட்பத் தேர்வினை அவர்கள் எழுத இயலும் வகையில் தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் தையற் கலையில் ஓராண்டு பயிற்சி வகுப்பு ஒன்று 1956-இல் தொடங்கப் பட்டது. இப்பயிற்சி வகுப்பிற்கு ஒப்பளிக்கப்பட்ட உரிய வயது வந்த பெண்களின் எண்ணிக்கை 15 ஆகும். இந்த எண்ணிக்கை 1968 முதல் 50 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்ந்து நிறைவேற்றப்படுகிறது.

தஞ்சாவூர், கடலூர் ஆகிய இடங்களிலுள்ள இரண்டு பணி இல்லங்களில் இல்லத்திற்கு ஒன்றாக இரண்டு தையற் கலை பயிற்சி வகுப்புகளைத் தொடங்க 1970-71-ல் ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது. இப்பயிற்சி வகுப்புக்கு ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கை 15-ஆகும். இரண்டு பணி இல்லங்களிலிருந்தும் முதல் தொகுதியினர், 1971 டிசம்பரில் நடைபெற்ற அரசுத் தேர்வை எழுதியுள்ளனர். இப்பயிற்சி வகுப்புகள் 1972-73-லும் தொடர்ந்து செயல்படும்.

### (iv) பால சேவகிகளுக்குப் பயிற்சி.

எட்டாம் வகுப்பும் அதற்கு மேற்பட்டும் படித்தவர்களும் 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்டவர்களும் கிராமங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்டுள்ளவர்களுமான மகளிர் பவானிசாகர், தெ. கல்லுப்பட்டி ஆகிய இடங்களில் பாலசேவகிகளாக பயிற்சி அளிக்கப்படுகின்றனர். இவர்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. பயிற்சிக்காலம் 3 திங்க ளாகும். பயிற்சி பெற்ற பின்னர் இப்பெண்கள் துறையின் பாலர் பள்ளிகளில் பணியாற்றுகின்றனர். இங்கு இவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 மதிப்பூதியம் பெறுகின்றனர். இதுவரை பயிற்சி யளிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப் பட்டுள்ளது —



| | | | | |
|---|---|---|---|---|
| 1967–68 | .. | .. | .. | 306 |
| 1968–69 | .. | .. | .. | .... |
| 1969–70 | .. | .. | .. | 70 |
| 9170–71 | .. | .. | .. | 130 |
| 1971–72 | .. | .. | .. | 61 |

### (v) முக்கிய சேவகிகளுக்குப் பயிற்சி.

பாலர் பள்ளித் திட்டத்தைத் திறம்படச் செயலாற்றவும் பால சேவகிகளின் பணியினை மேற்பார்வையிடவும் அவர்களுக்குப் பணியினைச் சொல்லிக் கொடுக்கவும் முக்கிய சேவகிகளுக்கு தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் தொகுதிகளாக 2 திங்களுக்குச் சிறப்புப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை :—

| | | | | |
|---|---|---|---|---|
| 1969–70 | .. | .. | .. | 32 |
| 1970–71 | .. | .. | .. | 115 |
| | | மொத்தம் | .. | 147 |

4. சமூக நலப்பணிகள்.

(அ) குறைந்த அளவுப்பணி :—

( i) ஊராட்சி ஒன்றியங்களில் மகளிர் மன்றங்கள்.

ஊராட்சி ஒன்றுக்கு ஒரு மகளிர் மன்றம் என்ற விதத்திலும் ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் குறைந்தது 30 மகளிர் மன்றங்கள் இருக்கும் வகையில் 1962-63 முதல் கிராமங்கள் முழுவதும் மகளிர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. மாறிவரும் கருத்துக்களை வெளிக்கொணர்வதற்கு இது முக்கிய கருத்தரங்க மாகும். குடும்பத்தைக் கட்டுப்படுத்த கருத்தடை மாத்திரை களைப் பயன்படுத்தவும், பணமுடையான காலத்திற்காக பணம்

சேமித்து வைக்கவும், பழங்காலத்து நம்பிக்கைகளையும் மத உணர்ச்சிகளையும் அறவே கைவிட்டுவிடவும் மகளிர் அறிவுறுத்தப் படுகின்றனர். கிராமப் பகுதிகளில் தற்போது 13,124 மகளிர் மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. 2 முதல் 3 லட்சம் கிராமப் பெண்கள் இம்மன்றங்களில் சேர்ந்துள்ளனர். இங்கு இவர்கள் முன்னேற்ற வாழ்வுக்கான நல்லபல வழிகளைக் கற்றுத் தெளிவ தோடு அவற்றை நடைமுறையில் பின்பற்றியும் வருகின்றனர். இந்த 13,124 மகளிர் மன்றங்களில், 10,082 மன்றங்களில் தையல் இயந்திரங்கள் உள்ளன. இதற்கு அரசிடமிருந்து ஐம்பது சத வீதம் உதவித் தொகை பெறப்படுகிறது. 300 மகளிர் மன்றங் களுக்குச் சொந்தக் கட்டிடங்கள் உள்ளன. வளர்ச்சி வட்டாரத் திற்கு ஒன்றாக சுமார் 359 வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்கும் மகளிர் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த 359 சங்கங்களில், 318 சங்கங்களில் வானொலிப் பெட்டிகள் உள்ளன. சலுகை வீதத் தில் தனி நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் தாமே பதிவு செய்துள்ள மகளிர் மன்றங்களின் மொத்த எண்ணிக்கை 1,076 ஆகும். தொண்டாற்று நிறுவனமாக பதிவு செய்துள்ள மாநில சமூக நல வாரியத்திடமிருந்து மானிய உதவி பெற இவற்றில் சில தகுதி யுடையவை. ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரமும் மகளிர் மன்றங் களின் நடவடிக்கைகளை நிறைவேற்ற தற்போது ரூ. 4,000 செல வழித்து வருகின்றது.

(ii) காவலர் குடியிருப்புகளில் மகளிர் மன்றங்கள்.

காவலர் குடியிருப்புகளில் உள்ள மகளிர் மன்றங்களை மேம்படுத்தும் பொருட்டு, 12 மாவட்டங்களுக்கு ரூ. 0.51 லட்சம் நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

1969-70-ஆம் ஆண்டில், சேலம், திருச்சிராப்பள்ளி மாவட் டங்களில் உள்ள 2 மகளிர் மன்றங்களுக்குத் தையல் இயந்திரங்கள் போன்ற சாதனங்கள் வழங்கப்பட்டன. 1970-71-ஆம் ஆண்டிற்கு, மேலும், தஞ்சாவூர், திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள 2 மகளிர் மன்றங்களுக்கு தையல் இயந்திரங்கள், மாச்சாமான் களை வழங்கவும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ. 0.17 லட்சம் செலவிடப்பட்டது. 1971-72-இல் கோயம்புத்தூர், மதுரை, செங்கற்பட்டு, நீலகிரி, கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களிலுள்ள காவலர் குடி. இருப்புகளில்





உள்ள மகளிர் மன்றங்களுக்குத் தையல் இயந்திரங்களை வழங்கு வதற்கும், புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும் ரூ. 25,000 வழங்கப்பட்டுள்ளது.

(இ) மகளிர்—பள்ளி செல்லும் வயதடையா குழந்தைகளுக் கான ஒருங்கிணைந்த திட்டம்.

ஊட்டச் சத்துணவுத் திட்டம், குடும்ப நலத்திட்டம், சிசு நலத் திட்டம் ஆகியவற்றை தவிர நான்காம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் செயல்படுத்துவதற்காக மகளிர்—பள்ளி செல்லும் வயதடையா குழந்தைகளுக்கான கூட்டுத் திட்டம் ஒன்றை இந்திய அரசு வகுத்துள்ளது. இத் திட்டத்தில் 4 பணிகள் அடங்கியுள்ளன.

(1) மகளிர் மன்றங்கள் மூலமாக சத்துணவு பற்றிய கல்வி (அரசுத்துறை).

ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் சத்துணவு கட்புல விளக்கப்பணிகளை மேற்கொள்வதற்கென 12 மகளிர் மன்றங்கள் தெரிந்தெடுக்கப்படும். உள்ளூர் உணவு வகைகளை இன்னும் சிறந்த முறையில் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்து அவற்றில் விளக்கப்படுவதுடன், சீரான உணவு பற்றி ஆலோசனை கூறப்படும். ஒவ்வொரு மகளிர் மன்றத்திலும் வாரத்திற்கொரு முறையாக 2 ஆண்டுகளுக்கு இந்தக் கட்புல விளக்கம் நடத்தப்படும். ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் ரூ. 500 பெறுமான சமையற்கூட கட்புல விளக்க சாதனங்களும், நடைமுறை செலவுக்கென ஒரு மொத்த மானியமும் வழங்கப் படுகிறது.

இத் திட்டத்திற்காக ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| | (ரூ. இலட்சம்) |
|---|---|
| 1969-70 | 1.56 |
| 1970-71 | 2.86 |
| 1971-72 | 5,96,720 |

104 தெரிந்தெடுக்கப்பட்டுள்ள வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் மேற்சொன்ன திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1969-70-இல் 2 மகளிர் மன்றங்கள் என்ற விதத்திலும், 1970-71-இல் 3 மகளிர் மன்றங்கள் என்ற விதத்திலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. 1971-72 ஆம் ஆண்டிற்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் 3 மகளிர் மன்றங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறாக, 104 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் மொத்தம் 8 மகளிர் மன்றங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. கட்புல விளக்கம் முதலியவற்றை மகளிர் மன்றங்களில் ஏற்கெனவே உள்ள சாதனங்களைக்கொண்டு கட்புல விளக்கம் முதலியவற்றை நடத்தவும், மகளிர் மன்றம் ஒன்றுக்கு, திங்கள் ஒன்றுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 21-ஐப் பயன்படுத்திக் கொள்ளவும் ஆணைகள் ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்டுள்ளன.

104 வட்டாரங்களிலுள்ள 832 மகளிர் மன்றங்களுக்கு சமையல் கட்புல விளக்க சாதனங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன.

மகளிர் மன்றங்கள் மூலமாக சத்துணவு பற்றிய கல்வி திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக இன்னும் 2 மகளிர் மன்றங்களை 1972-73 இல் தெரிந்தெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த மகளிர் மன்றங்கள் இரண்டும் மேற்சொன்ன அரசு மானியத்தை பெறத் தகுதியுள்ளவை. 1972-73 இல் ரூ. 3.66 லட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

**(2) ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் துணைத் தொழில்களை மேற்கொள்ள ஊக்கமளித்தல்—மகளிர் மன்றங்களுக்குப் பரிசுகள் (மத்திய அரசுத்துறை).**

தங்களது சொந்த நலனுக்கான வெவ்வேறுவகை துணைத் தொழில்களை மேற்கொள்ள மகளிர் மன்றங்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, காய்கறித் தோட்டம் அமைத்தல் அல்லது பன்றி, கோழி, தேனீ வளர்த்தல், விற்பனைக்கான பூச்செடிகளை வளர்த்தல் முதலிய துணைத் தொழில்களில் தங்களுக்கு உள்ள தீவிர ஈடுபாட்டினை வெளிப்படுத்தும் மகளிர் மன்றங்களுக்குப் பரிசுகள் வழங்கத் கருதப்பட்டுள்ளது. வளர்ச்சி வட்டாரங்களில் உள்ள மகளிர் மன்றங்கள் மூன்று வகையாக வகுக்கப்படுவதுடன் இவற்றிற்கு முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 தொகை பரிசாகக் கொடுக்கப்படும்.



1970-71இல் 142 மகளிர் மன்றங்களுக்குப் பரிசு வழங்குவதற்காக ரூ. 0.81 லட்சம் செலவிடப்பட்டது. 1971-72 இல் 204 பரிசுகள் வழங்குவதற்காக ரூ. 1.20 லட்சத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. 1971-73 இல் 340 பரிசுகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 1.70 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(3) பெண் தொழிலாளர் பயிற்சித் திட்டம் (மத்திய அரசுத் துறை).**

இது மத்திய அரசின் ஆதரவு பெறும் திட்டமாகும். இத் திட்டத்தின் மூலமாக கிராமப் பெண்களுக்குக் கல்வி கற்பிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் மகளிர் மன்ற அமைப்பாளர்களும் விரைந்து செயலாற்றும் உறுப்பினர்களும் நல்ல சுகாதாரமும், ஊட்டச் சத்து, இல்ல நிர்வாகம், வேளாண்மை முதலிய பாடங்களில் ஒரு திங்கள் கால அளவுக்குப் பயிற்சியளிக்கப்படுகின்றனர்.

குடும்ப-சிசு நலத் திட்டங்களின்கீழும் இதுபோன்ற பயிற்சியளிக்கப்படுகிறது. இத் திட்டங்களுடன் இணைந்துள்ள இல்ல நலன் மன்றங்கள் Graha Kalyan Kendras மூலமாக இளம் தாய்மார்களுக்கும் மகளிர்க்கும் இப்பயிற்சியளிக்கப்படுகிறது. குழந்தை நலம், ஊட்டச் சத்து, பொதுச் சுகாதாரம், இல்ல நிர்வாகம் முதலிய பல்வேறு பாடங்களில் இப்பெண்கள் பயிற்சி பெற்ற பின்னர் தங்களது பயிற்சிக் காலத்தில் அறிந்தவற்றை தங்களது கிராமங்களுக்குத் திரும்பிச் சென்று அங்கு நடைமுறையில் செயல்படுத்திக் காட்டுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

பெண் தொழிலாளர் பயிற்சித் திட்டத்தின்கீழ், இதுவரை, பயிற்சியளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| | |
|---|---|
| 1967-68 | 130 |
| 1968-69 | 596 |
| 1969-70 | 493 |
| 1970-71 | 385 |
| 1971-72 | 495 |

1972-73-இல் ரூ. 0.66 லட்சம் செலவில் 630 மகளிர் மன்ற அமைப்பாளர்களுக்குப் பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(4) பாலர் பள்ளிகளில் ( Pre School ) கட்புல விளக்க சத்துணவுத் திட்டம் (மத்திய அரசுத்துறை).

கிராமப் பகுதிகளில் சிறப்பாக ஏழை மக்களிடையே சத்துணவு தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். முப்பது பாலர் பள்ளி சிறுவர்களுக்கும், 20 குழந்தைகளுக்கும், குழந்தை ஒன்றுக்கு 15 காசு என்ற வீதத்திலும், 30 கருவுற்றிருக்கும் மகளிர், செவிலித்தாய்மார் ஆகியோருக்கு ஒருவருக்கு 25 காசு என்ற வீதத்தில் உணவு வழங்கப்படுகிறது. தற்போது, 28 வட்டாரங்களில் ஒவ்வொரு வட்டாரத்திலும் 3 பாலர் பள்ளிகளில் கட்புல விளக்க சத்துணவுத் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் முழுவதும் நிறைவேற்றப் படும்போது 28 வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் 5 பாலர் பள்ளிகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் கால அளவு 5 ஆண்டுகளே ஆகும்.

1972-73-இல் ஒரு நிலையமும், 1973-74-இல் மற்றொரு நிலையமும் தொடங்கப்படும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் இத்திட்டத்தின் கீழ் 140 பாலர் பள்ளிகள் இருக்கும். 1971-72-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ. 4.8 லட்சமாகும். நவம்பர் முடிய செலவு ரூ. 2.32 லட்சமாகும். 1972-73-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவு திட்ட மதிப்பீடு ரூ. 6.3 லட்சமாகும்.

5. ஏனைய திட்டங்கள்.

பணி இல்லங்கள்.

18-30 வயதுத் தொகுதியைச் சேர்ந்த குறைந்தது 5-வது வகுப்பு வரை படித்த, சமூகத்தில் கலந்து கொள்ள முடியாத மகளிர், புகலற்ற மகளிர், கைம்பெண்கள், கைவிடப்பட்ட மகளிர் ஆகியோருக்காக மகளிர் நலத்துறை, தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களில் மூன்று பணி இல்லங்களை நடத்தி வருகிறது. அவர்கள் அங்கே பேரளவு 3 ஆண்டு வரை தங்க அனுமதிக்கிறார்கள். சிறார்கள், பையன்களானால் 5 வயது வரையிலானவர்களும், சிறுமிகளானால் 7 வயது வரையிலானவர்களும் தாய்மார்களுடன் சேர்ந்துக் கொள்ளப்படுகிறார்கள். பேணுதல் செலவிற்காக, வயது வந்தவர்களுக்கு திங்கள்



ஒன்றுக்கு ரூ. 30-ம் சிறார்களுக்குத் திங்கள் ஒன்றுக்கு ரூ. 27-ம் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அங்கே தங்கியுள்ளவர்களுக்கு அவர்கள் தங்குகின்ற மூன்று ஆண்டுகளுக்குள் எட்டாவது வகுப்புத் தேர்விற்கும், பின்னல் வேலை, பூ, தையல் வேலை, ஆடை தயாரித்தல் ஆகியவைகளில் அவரவர்களுக்கு விருப்பமானவற்றில் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இம்மூன்று துறையைச் சேர்ந்த 3 பணி இல்லங்களைத் தவிர, 6 தொண்டு நிறுவனங்களுக்கும் பணி இல்லங்கள் நடத்துவதற்கான மானியம் அளிக்கப்படுகிறது. ரூ. 28,000 செலவில் தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் பள்ளியிறுதி வகுப்பைத் தொடங்க அண்மையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த வகுப்பு தொடங்கப்படுவதால் பல வேறு பணி இல்லங்களில் 8-வது வகுப்பு தேறியவர்கள் தொடர்ந்து தங்களது படிப்பை மேற்கொண்டு நல்ல நிலையை அடைய இயலும்.

தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் உடல் ஊனமுற்ற மகளிர் சிறார்கள் ஆகியோருக்கென்றே தனிப் பிரிவு ஒன்று உள்ளது. இப்பிரிவில் உள்ளவர்கள் அரசினர் பொது மருத்துவமனையில் உள்ள முட நீக்கியல் துறைக்கு அனுப்பப்பட்டு இயல்-மின் சிகிச்சை அளிக்கப்படுகின்றனர். அதற்குப் பின்னால் செய்ய வேண்டிய சிகிச்சையை முழுநேர இயல்-மின் சிகிச்சை மருத்துவர் ஒருவர் செய்கிறார். அவர்கள் அங்கு தங்கும் காலத்தில் கல்வி, கைவினைப் பயிற்சி ஆகியவை அளிக்கப்படுகின்றார்கள். ரூ. 25,000 செலவில் ஆயத்த உடை தயாரிப்புப் பிரிவு ஒன்றை அமைக்க அரசு 1971-72 இல் ஒப்பளிப்பு வழங்கியது.

(i) பணி இல்லங்களுக்கான கட்டிடங்கள்.

தாம்பரத்திலுள்ள பணி இல்லத்திற்கு சொந்தமாக ஒரு கட்டிடம் உள்ளது. தஞ்சாவூர், கடலூர் ஆகிய இடங்களில் உள்ள பணி இல்லங்கள் தற்போது வாடகைக் கட்டிடங்களில் நடத்தப்படுகின்றன. எனவே, இவ்விரு பணி இல்லங்களுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்காக நான்காவது ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர், பணி இல்லத்திற்காக நிலம் ஒன்று ரூ. 26,070 விலையில் வாங்கப்பட்டுள்ளது. கடலூரிலுள்ள பணி இல்லத்திற்காக நிலம் கையகப் படுத்தப்பட்டு வருகிறது. இரண்டு பணி இல்லங்களுக்கான கட்டிடங்களின் கட்டிப்பணி விரைவில் மேற்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## (ii) பணிபுரியும் மகளிருக்கான விடுதி.

மாநகரங்களில் பணி புரிகின்ற குறைந்த வருவாய் நடுத்தர வருவாய் உடைய மகளிருக்கு விடுதி வசதிகள் மிகவும் அவசியமாகிறது. இத்துறை சென்னையில் ஆசிரியர், சட்டச்சர், எழுத்தர் போன்ற குறைந்த வருவாயுடைய 25 பேர்களைக் கொண்ட விடுதி ஒன்றை 1967-லிருந்து நடத்தி வருகிறது. இதற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25,000 செலவாகிறது. சென்னை, கோயம்பத்தூர், திருச்சி, மதுரை முதலியவை போன்ற பெரிய மாநகரங்களில் பணிபுரியும் மகளிரின் எண்ணிக்கை பெருகி வருவதால் பணி புரியும் மகளிருக்கான விடுதிகளின் தேவை அதிகமாகிறது. எனவே வரும் ஆண்டுகளில் ரூ. 300-க்கும் 600-க்கும் இடைப்பட்ட வருமானமுள்ள குறைந்த வருவாய்த் தொகுதியில் வரும் பணிபுரியும் மகளிருக்கு மேற்சொன்ன மாநகரங்களில் குறைந்தது இன்னும் 4 விடுதிகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் நடத்திவரும் தொண்டு நிறுவனங்களை ஆதரித்து ஊக்குவிப்பதற்காக, சொந்தக் கட்டிடங்கள் கட்டிக் கொள்வதற்கு சில நிறுவனங்களுக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கட்டிட மானியம் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1969-70-இல் இரண்டு தொண்டு நிறுவனங்களுக்கு அரசு ரூ. 0.70 லட்சம் வழங்கியுள்ளது. 1970-71-க்காக தொண்டு நிறுவனம் ஒன்றுக்கு ரூ. 0.35 லட்சம் வழங்கப்பட்டது. 1971-72-ல் 2 நிறுவனங்களுக்கு மானியம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. 1972-73-இல் 5 நிறுவனங்களுக்கு ரூ. 1 லட்சம் மானியம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.



## (iii) மகளிர் நலப் பிரிவுகள்.

மகளிர் நலத்துறையின் வேலைகளை மகளிர் நலப் பிரிவுகள் மேற்கொள்ளுகின்றன. இதன்மூலம் இத்துறை கிராமத்தைச் சேர்ந்த மகளிருடன் தொடர்பு கொள்கிறது. மாநிலம் முழுவதிலும் மொத்தம் 48 மகளிர் நலப் பிரிவுகள் உள்ளன. அப்பிரிவுகளுக்குப் பொறுப்பு வகிக்கும் மகளிர் நல அமைப்பாளர்கள் காலையில் பாலர் வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று குடும்பக்கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு ஆகியவற்றைப் போதிக்கின்றார்கள். அவர்கள் மேலும், மகளிர் கூட்டங்கள் நடத்தி தையல், பாய்முடைதல், தையல் இலை தயாரித்தல் முதலியவற்றில் பயிற்சி அளிக்கின்றனர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ரூ. 0.07 லட்சம் செலவாகிறது.

## (iv). பணி நிலையங்களும் உற்பத்திப் பிரிவுகளும்.

அரிசனங்கள், பழங்குடியினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினர், இனத்தைச் சேர்ந்த மகளிர் (அரிசன நலத்துறையினால் நிதி உதவி செய்யப்படுவது) பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மகளிருக்கு என்றே பணி நிலையங்கள், உற்பத்திப் பிரிவுகள் ஆகியவை இரண்டாம், மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்திலிருந்து துவக்கப்பட்டன. அந்தந்த திட்டக் காலங்கள் முடிவடைந்தவுடன் இந்த நிலையங்கள் தொடர்ந்து எல்லா வகுப்பைச் சேர்ந்த மகளிருக்கும் நடத்தப்படுகின்றனர். இவை துறை நிதியிலிருந்து நடத்தப்படுகின்றன. சிறு குடிசைத் தொழில்களில் மகளிருக்குப் பயிற்சி அளித்து அதன்மூலம் சமூக, பொருளாதார நிலையில் பின்னடைந்த மகளிருக்கு வருவாய் கிடைக்கச் செய்வதே இந்த நிலையங்களின் நோக்கமாகும். ஒவ்வொரு பணிநிலையத்திலும் 3 அல்லது 4 பிரிவினர்களுக்குப் பயிற்சி அளித்தவுடன் பயிற்சி அளிக்கப்பட்ட மகளிரை அங்கே பணியாளர்களாக நியமித்து அவர்கள் செய்கின்ற வேலைக்கு தகுந்த வாறு சம்பளம் வழங்குவதன்மூலம் இப்பணி நிலையங்களை உற்பத்திப் பிரிவுகளாக மாற்றுவதற்கு முயற்சி எடுக்கப்படுகிறது.

| | | அரிசன நலத்துறையின் நிதி உதவி செய்யப்படும் பணி நிலையங்களின் எண்ணிக்கை. | | | மகளிர் நலத்துறை நிதியிலிருந்து நடத்தப்படுகின்ற பணி நிலையங்களின் எண்ணிக்கை. | | பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையின் நிதியிலிருந்து குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங்குடியினருக்கு நடத்தப்படும் பணி நிலையங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|---|---|---|
| | | அரிசனங்கள். | பழங்குடியினர். | குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பழங் குடியினர். | பணி நிலையங்கள். | உற்பத்திப் பிரிவுகள். | |
| 1967–68 | .. | 5+1* | 1 | 1 | 33 | 5 | .. |
| 1968–69 | .. | 5+1* | 1 | 1 | 30 | 5 | .. |
| 1969–70 | .. | 7+1* | 3 | .. | 33 | 5 | 2 |
| 1970–71 | .. | 7+1* | 3 | .. | 31 | 5 | 2 |
| 1971–72 | .. | 7+1* | 3 | .. | 25 | 7+1 | 3 |

*விற்பனை நிலையங்கள்.

## (6) குழந்தை நலம் பேணுதல்.

### (i) குழந்தை நலம் குறித்த ஒருங்கிணைந்த கட்புல விளக்கத் திட்டம், பூவிருந்தவல்லி.

பல்வேறு நலத்துறைகளின் ஒருங்கிணைந்த பணிகளை 0-16 வயதுத் தொகுதி சிறார்களுக்கு அளிப்பதற்காக 1963-இல் முன்னோடி திட்டம் ஒன்று தொடங்கப்பட்டது.

தற்போது இந்தத் திட்டத்தில் 50 பாலர் பள்ளிகளும், 10 பாலர் பள்ளிகள்—குழந்தை காப்பகங்கள் ( Creche ) ஆகியவை உள்ளன. ஒவ்வொரு பாலர் பள்ளியிலும் சராசரி 40 சிறார்கள் உள்ளனர். ஒவ்வொரு குழந்தை காப்பகத்திலும் 10 குழந்தைகள் உள்ளனர். பள்ளியிறுதி படிப்பு படித்தவர்கள், குழந்தைகள் நல இந்தியக் கழகம், பாலசேவிகாக்கள் பயிற்சி நிலையத்தில் ஓராண்டு காலப் பயிற்சி பெற்றவர்கள் இந்த பாலர் பள்ளிகளில் பணிபுரிய



நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் பள்ளியிறுதிப் படிப்பு படித்தவர்களாவர். இவர்களுக்கு ரூ. 200-5-250-10-300 என்ற வீதத்தில் சம்பளம் வழங்கப்படுகிறது.

கல்வி கற்பிப்பதற்கான சாதனங்களும் மற்றும் பிற சாதனங்களும் இந்த பாலர் பள்ளிகளுக்கு வழங்கப்படுகின்றன. பாலர் பள்ளிகள் அவற்றிற்காகவே கட்டப்பட்ட நல்ல கட்டிடங்களில் செயல்பட்டு வருகின்றன.

குழந்தை ஒன்றுக்கு 10 காசு என்ற வீதத்தில் பாலர் பள்ளி சிறுவர்களுக்கு நண்பகல் உணவு அளிக்கப்படுகிறது. உணவு சமைப்பதற்காக ஒவ்வொரு பாலர் பள்ளிக்கும் ஆயாக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத் திட்டத்திற்காக மருத்துவ அதிகாரி ஒருவர் உள்ளார். தவிர பொதுச் சுகாதார பணியாளர் குழு ஒன்றும் உள்ளது.

திட்டப் பணிகள், குழந்தைகளின் பொதுச் சுகாதாரப் பணிகள் இவற்றிற்கு இவர்கள் பொறுப்புள்ளவர்களாவர். திட்டத்தை முழுவதும் மாற்றியமைப்பதற்காக, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2 லட்சம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில், செயற்குறிப்பு ஒன்று அரசின் ஆய்வில் உள்ளது.

### (ii) குழந்தைகள் காப்பகங்கள்.

மூன்றாவது ஐந்தாண்டு திட்டத்தின்கீழும், மூன்று ஆண்டு திட்டங்களின்கீழும் இம் மாநிலத்தில் 47 தெரிந்தெடுக்கப்பட்ட வட்டாரங்களிலுள்ள 1,040 ஊராட்சிகளில் பாலர் பள்ளிகள் தொடங்கப்பட்டன. இப்பள்ளிகள் தொடங்கப்பட்டதனால் கிராம மகளிர் தங்கள் குழந்தைகளைப் பற்றிக் கவலைப்படாமல் தங்கள் பணிகளைச் செய்ய முடிகிறது. மேலும், குழந்தைகளுக்குத் தொடக்கக் கல்வி இப்பள்ளிகள் மூலம் அளிக்க முடிகிறது. 8-வது வகுப்பு படித்த உள்ளூர் பெண்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, மூன்று திங்கள் கால அளவுக்கு அவர்களுக்கு பாலர் பள்ளித்திட்டம் குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. பிறகு அவர்கள் பாலர் பள்ளிகளை நடத்துவதற்காக அப்பள்ளிகளில் நியமிக்கப்பட்டனர். பாலர் பள்ளிகளை நடத்துவதற்கு இந்த பால சேவிகைகள் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 மதிப்பூதியம் பெறுகின்றனர். கடந்த ஆண்டு

வரை பாலர் பள்ளிகள் பெரும்பாலும் காலை 9 மணியிலிருந்து நண்பகல் 12 மணிவரை நடத்தப்பட்டன. கடந்த ஆண்டிற்குப் பிறகு கேர் நிறுவனம், இந்திய அரசு ஆகியவற்றின் உதவியுடன் பெருமளவு குழந்தைகளுக்கு உணவு வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டது. பாலர் பள்ளி ஒன்றுக்கு ரூ. 400 மதிப்புள்ள கல்வி—பொது சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவை தவிர, ரூ. 5 சில்லறைச் செலவினங்களுக்காகவும், ரூ. 7 நிர்வாக மானியத்தின் கீழும் வழங்கப்படுகிறது.

பாலர் பள்ளிகளுக்கு இதுவரையிலும் உணவு வழங்கும் திட்டம் எதுவும் இல்லை. அண்மையில் 928 பாலர் பள்ளிகளில் கேர் நிறுவன உதவியுடன் உணவு வழங்கும் திட்டம் கொண்டுவரப் பட்டுள்ளது. பாலர் பள்ளி உணவு வழங்கும் திட்டத்தின்கீழ் பாலர் பள்ளி சிறுவர்களுக்கு தானியம், சோயா மொச்சை, பால் பவுடர் ஆகியவை கலந்த உணவும் 'சாலட்' எண்ணெயும் (Salad Oil) வழங்கப்படுகிறது. மேற்சொன்ன உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் சமையில் செய்வதற்காக ஆயர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். உணவு வழங்கும் திட்டத்தைக் கொண்டுவந்த பிறகு பாலர் பள்ளிகள் காலையிலும் மாலையிலும் நடத்தப்படுகின்றன. மகளிர் நலத்துறை இயக்குநரின் உதவியுடன் இத்திட்டம் கிராம வளர்ச்சி துறை இயக்குநரால் செயல்படுத்தப்படுகிறது.

பெரும்பான்மையான பாலர் பள்ளிகளுக்கு சரியான இடவசதி இல்லை. 1,000 பாலர் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டித் தருவதற்காக 'கேர்' நிறுவனம் முன் வந்துள்ளது. இதுவரை 115 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### நான்காவது ஐந்தாண்டுத் திட்டம்—பாலர் பள்ளிகள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இதுவரை 400 பாலர் பள்ளிகளை நிறுவ ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இந்த பாலர் பள்ளிகளில் உணவு வழங்கும் திட்டம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. சிறுவர்களுக்கு பொரிகடலை, முளைகட்டிய தானியங்கள், சுண்டல் முதலியவை மட்டுமே வழங்கப்படுகிறது.



1971-72-ஆம் ஆண்டிற்கு வரவு-செலவு திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 3.28 லட்சமாகும். நவம்பர் முடிய செலவு ரூ. 0.43 லட்சமாகும். 1972-73-ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம் ரூ. 6.75 லட்சமாகும்.

### (iii) குடும்ப, குழந்தைகள் நலத் திட்டங்கள்.

இது முற்றிலும் மத்திய அரசு ஆதரவு பெறும் ஒரு திட்டமாகும். இத் திட்டத்தின் வாயிலாக, மகளிர், சிறார்கள், பள்ளிச் சிறார்கள் முதலியோர் போன்ற ஒவ்வொரு தொகுதியினருக்கும் செய்யப்படுகின்ற ஏற்பாடுகள் ஒருங்கிணைக்கப்படுகின்றன. 1969-70-இல் தென் ஆற்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியிலும், செங்கல்பட்டு மாவட்டம் வில்லிவாக்கத்திலும் இரண்டு திட்டங்கள் தொடங்கப்பட்டன. 1970-71-இல், மதுரை மாவட்டம் ஆத்தூரிலும், கோயம்புத்தூர் மாவட்டம் பெரியநாயக்கன்பாளையத்திலும் மேலும் இரண்டு திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன, ஒவ்வொரு திட்டத்திலும், ஒரு முக்கிய நிலையமும், ஐந்து துணை நிலையங்களும் உள்ளன. ஒவ்வொரு திட்டத்திற்கும் கட்டடங்கள் கட்டுவதற்காக ரூ. 35.000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டத்திலும், முக்கிய நிலையக் கட்டடங்களுக்காக ரூ. 20,000-ம் ஒவ்வொரு துணை நிலையத்திற்கும் ரூ. 3,000-ம் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையத்திலும், ஆறு வயதிற்குக் குறைந்த சிறார்களுக்கு ஒரு 'பாலர் பள்ளி, மகளிருக்கு மனை இயலில் பயிற்சி அளிக்கும் திட்டம், உணவு முறை, சத்துணவு, சுகாதாரம், குடும்பநலத் திட்டம் செவிலிப்பணி முதலியவையும் இத் திட்டத்தில் அடங்கும். பாலர் பள்ளியில் சராசரி 40 குழந்தைகள் அன்றாடம் பள்ளிக்கு வருகின்றனர். குழந்தை நலனிற்கான இந்தியக் கழகத்தில் பால சேவிகைகள் பாடப் பயிற்சியில் ஓராண்டுக்காலம் பயிற்சி பெற்றவர்கள் இந்த நிலையங்களுக்குப் பொறுப்புள்ளவர்களாவர். இவர்கள் பள்ளியிறுதி வகுப்பு தேறியவர்களாவர். இவர்களுக்கு ரூ. 200-5-250-10-300 என்ற சம்பள வீதத்தில் சம்பளம் வழங்கப்படுகிறது. யூனிசெஃப் நிறுவனம், கல்வி-பொது சாதனங்களை பாலர் பள்ளிகளுக்கு வழங்கியுள்ளன. குழந்தைகளுக்கான சுகாதாரத் திட்டமும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 30 குழந்தைகளுக்குக்

குழந்தை ஒன்றுக்கு 20 காசு என்ற வீதத்தில் பகலுணவு அளிக்கப் படுகிறது. 1972-73-இல் இன்னும் இரண்டு திட்டங்களைத் தொடங்க மத்திய சமூகநல வாரியம் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

(iv) சிறப்புச் சத்துணவுத் திட்டம்.

ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களின் நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலுள்ள 0 மாதம் மூன்று வயது தொகுதி குழந்தைகளுக்கு உணவு வழங்குவதற்கான இந்திய அரசின் திட்டம் என்று இம் மாநிலத்தில் செயல்படுத்தப் பட்டு வருகிறது. இம் மாநிலத்தில் சென்னை மாநகரம், பிற பெரிய நகரங்கள் 17 ஆகிய இடங்களிலுள்ள 1.56 லட்சம் குழந்தைகளுக்கு, வாரத்தில் ஐந்து நாட்களுக்கு ஒவ்வொரு குழந்தைக்கும் 25 கிராம் எடையுள்ள வைட்டமின் அடங்கிய மாடர்ன் ரொட்டி 3 துண்டுகள் வழங்கப்படுகின்றன. ஒரு குழந்தைக்குக் கொடுக்கும் உணவின் மொத்த விலை 23 காசு (உணவின் அடக்க விலை 18 காசு, போக்குவரத்துச் செலவு 2 காசு, நிர்வாகச் செலவு 3 காசு ஆக மொத்தம் 23 காசு). இந்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்சவரம்பின்படி, இதைத் தவிர, சேலம் மாவட்டம் பழங்குடியினர் பகுதியில் உள்ள 1,300 குழந்தைகளுக்கும் இத் திட்டத்தின்கீழ் உணவு வழங்கப்படுகிறது. சேவாணிப்படை, கில்டு ஆப் சர்வீஸ், ரோட்டரி சங்கம், லயன்ஸ் சங்கம் முதலிய தொண்டு நிறுவனங்கள் உணவு வழங்குவதில் தங்களது ஒத்துழைப்பை நல்குகின்றன. 3—6 வயது தொகுதி குழந்தைகளுக்கும், கருவுற்றிருக்கும் மகளிர், செவிலித் தாய்மார்கள் ஆகியோருக்கு இத்திட்டத்தை நீட்டிக்கும் செயற்குறிப்பு ஒன்று உள்ளது. இது அரசின் ஆய்வில் உள்ளது.

(7) உதவி மானியத் திட்டம்.

மத்திய சமூக நல வாரியத்தின் பொது உதவி மானியத் திட்டத்தின்கீழ் தொண்டு நல நிறுவனங்களுக்கு மாநில சமூக நல வாரியத்தின் மூலமாக உதவிபெறும் திட்டம்.

தொண்டாற்றும் சமூக நல அமைப்புகளுக்கான உதவி மானிய திட்டத்தை வாரியம், முதல் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தொடங்கியது. அடுத்துவரும் திட்டக் காலங்களில் தொடர்ந்து



இத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நலப்பணிகளின் மேம்பாட்டை மும்முரப் படுத்தவும், வளர்ச்சி அடைந்து வரும் பகுதிகளில் இத்திட்டத்தை நீட்டிக்கவும் ஐந்தாம் ஐந்தாண்டு திட்டக் காலத்தில் இத் திட்டம் தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக கிராமப் பகுதிகளிலுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்கப் பட்டுவருகிறது :—

(a) குழந்தை நலப் பணிகள்—

(i) சமூகத்தில் கலந்துகொள்ள முடியாத சிறுர்களின் நலம் பேணுதல், பாதுகாப்பு அளித்தல், புதுவாழ்வு அளித்தல் ஆகியவற்றிற்கான நிறுவனங்கள்.

(ii) சிறுர்களுக்கான தற்காலிகக் காப்பு இல்லங்கள்.

(iii) குழந்தை காப்பகங்கள் (Creches)

(iv) பால்வாடிகள், சிறுர் பள்ளிகள் அல்லது பாலர் பள்ளிகள்.

(v) பொழுதுபோக்கு நிலையங்கள்.

(b) மகளிர் நலப் பணிகள்—

(i) புகலற்ற மகளிர், கைம்பெண்கள், வறிய நிலையிலுள்ளவர்கள் ஆகியோருக்குப் புகலிடம் அளித்தல், பயிற்சி அளித்தல், பாதுகாப்பு அளித்தல், புதுவாழ்வு அளித்தல் ஆகியவற்றிற்கான நிறுவனங்கள் அவர்களுக்கான விடுதிகள்.

(ii) ஆதாயம் தரத்தக்க கலைகள், கைவினைப் பணிகளை நடத்தும் நிறுவனங்கள்.

(c) உடல் ஊனமுற்றவர்களுக்கான நலப் பணிகள்.

(d) முதியோர், நலிவுற்றோர் நலப் பணிகள்.

(e) மருத்துவப் பணிகள்.

(f) மாணவர்களல்லாத இளைஞர்களுக்கான நலப் பணிகள்.

தொண்டு நிறுவனங்களுக்குக் கீழ்வரும் மானியங்கள் வழங்கப் பட்டு வருகின்றன :—

1. திட்டகாலம்.—5 ஆண்டுகளுக்கான உச்சவரம்பு மானியம் ரூ. 50,000 வரை.

2. **ஆண்டு மானியம்.**—உச்சவரம்பு மானியம் ரூ. 5,000 வரை.

3. **விடுமுறை முகாம்.**—ஒவ்வொரு நிறுவனத்திற்கும் முகாமிடுவதற்காக ரூ. 2,500.

4. **குறுகிய கால பயிற்சி**—2 ஆண்டுகளுக்கு ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூ. 30,000 அல்லது ரூ. 35,000.

5. **மகளிர் மன்றம்.**—ரூ. 65,000—13 நிறுவனங்கள் முன்னுள் திட்டச் செயல் குழுவின் 45 நிலையங்களில் தொடர்ந்து பணிபுரிகின்றன.

6. **மகளிர் நல விருத்தி திட்டங்கள்.—2.—**குடிசைப் பகுதி நலப்பணிகளுக்கு ரூ. 13,200.

7. சத்துணவுத் திட்டம்.—நாள் ஒன்றுக்கு குழந்தை ஒன்றுக்கு 15 காசு என்ற விதத்தில் உணவு வழங்கும் புதிய திட்டம்.

8. சமூக பொருளாதாரப் பிரிவு—மகளிருக்குத் துணை வருவாய் அளித்தல்.

9. குடும்ப, குழந்தை நலத் திட்டங்கள்.

## இணைப்பு-2.

### பொதுப் பணிகள்—உதவி மானியங்கள்.

### கொள்கை விளக்கக் குறிப்பு.

**இது 1972-73-க்**குரிய ரூ. 4,69,29,500-க்கான கூட்டு மானியக் **கோரிக்கையாகும்.** இக் கோரிக்கை, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சிகள், சென்னை மாநகராட்சி, மதுரை மாநகர நகராட்சிக் கழகம் குடிசை மாற்று வாரியம் ஆகியவற்றின் திட்டங்களுக்கு கீழ்க்காணுமாறு உதவி மானியங்கள் வழங்க வகை செய்கிறது. அவை :—

நகர்புறங்களில் நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் திட்டம். குடிசைப் பகுதிகளை மாற்றி அவற்றை மேம்படுத்தும் திட்டம்; ஊர்ப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் பெருகியுள்ள வாழ்க்கை



வசதிகளுக்கும் நல்வாழ்வு நிலைமைகளுக்கும் ஏற்ப உள்ளாட்சி மன்றங்களில் சாலைப் போக்குவரத்தினைப் பேணி மேம்படுத்தும் திட்டம் ஆகியவற்றின் தொடர்புடையன.

### ஊராட்சி ஒன்றியம் பகுதிகளில் சாலை வசதி

ஊராட்சி ஒன்றியங்களுக்கும் பேரூராட்சிகளுக்கும், கீழ்க்கண்ட திட்டங்களுக்காக உதவி மானியங்கள் வழங்க இக் கோரிக்கையில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது:—

1. ஊராட்சி ஒன்றியங்களின் சாலைகள் பராமரிப்புக்காக ஆண்டு தோறும் உள்ளூர்ச் சாலை மானியம் ஏறத்தாழ ரூ. 119 இலட்சங்கள்.

2. பேரூராட்சிகளில் தூசிபடியா மேற்பரப்புள்ள சாலைகள் போடுவதற்காக வருடாந்தர பாதி மானியம்.

3. மழை, வெள்ளம், புயல் போன்ற இயற்கைக் கேடுகளால் சேதமுற்ற ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் சாலைகள், பாலங்கள் இவற்றைச் சீர்படுத்துவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு சிறப்பு மானியம் மேற்சொன்ன சேதங்களின் அளவிற்கு ஏற்ப.

பேரூராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் போக்குவரத்து வசதிப் பராமரிப்புக்காக இம்மானியங்கள் வழங்கப்படுகின்றன.

### ஊராட்சி ஒன்றியங்களின் இணைப்பு சாலைகள்.

கிராமப் பணித் திட்டத்தின்கீழ் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கிராமப்புறங்களில் போக்குவரத்து வசதிகளைப் பெருக்குவதற்காக, இணைப்புச் சாலைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ், இரண்டாம் நிலை கடந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு இணைப்புச் சாலைகளுக்காக, 1971-72-ல் ரூ. 72.16 இலட்சம் ஒதுக்கப்பட்டது. 1972-73 ஆம் ஆண்டுக்காக, ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 83.90 இலட்சங்கள் ஆகும்.

[1972 மார்ச் 11

## நகராட்சி சாலைகளும், பாலங்களும்.

நகராட்சிகளுக்கு அவற்றின் மேற்பார்வையில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக, அரசு மானியங்கள் வழங்கிவருகிறது. மக்கள் நெரிசல் அதிகமாயுள்ள பகுதிகளில் பொதுமக்களின் உடல் நலத்தைக் கருதி நகராட்சி நகர்ச்சாலைகளில் தூசுபடியா மேற்பரப்பை அமைப்பதற்கு ஒவ்வோர் ஆண்டும் நிதி வழங்குவதென்பது, அரசு கொள்கையாகும்.

ஒவ்வொரு நகராட்சிக்கும் சாலைகளில் தூசிபடியா மேற்பரப்பை அமைக்கும் திட்டத்துக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஓராண்டில், இத்திட்டத்திலிருந்து இரண்டு வேலைகளை நகராட்சி மன்றங்கள் மேற்கொள்ளலாம். நகராட்சிகளில் சாலைகள் மேற்பரப்பைத் தூசிபடியாமல் அமைக்கும் வேலைக்கென, அரசு அவ்வேலையின் செலவில் பாதியை மானியமாக வழங்குகிறது. செலவின் மறுபாதியை, தொடர்புடைய நகராட்சிகள் அவற்றின் நிதியிலிருந்து செலவு செய்யவேண்டும்: அல்லது இதற்கென அரசிடமிருந்து கடன் பெற்று அச்செலவை ஈடுகட்டவேண்டும். 1972-73-ல் இந்தக் கோரிக்கையில் சாலைகளின் மேற்பரப்பைத் தூசிபடியாமல் அமைப்பதற்கென, நகராட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்காக, ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கோரிக்கை 47-இன் கீழ். சாலை வேலைகளுக்காகவும், பால வேலைகளுக்காகவும் நகராட்சிகளுக்குக் கடன்கள் வழங்கு ரூ. 13,75,000 ஒதுக்கப்பட்டுள்ளது. சிறப்பான நேர்வுகளில் வதற்காக 1972-73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நகராட்சிப் பகுதிகளுக்குள் பாலங்கள் கட்ட, நகராட்சி மன்றங்களுக்கு உதவி வழங்கப்படுகின்றது. இக் கொள்கையை ஒட்டி 1972-73-ஆம் ஆண்டுக்கு, இக் கோரிக்கையில் ரூ. 1,00,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

குன்னூர், உதகமண்டலம் நகராட்சிகளுக்கும் கோடைக்கானல் நகரியத்திற்கும் சாலைகள் பேணத் தொடர் மானியங்கள் வழங்கவும் ஸ்ரீரங்கம் நகராட்சிக்கு முன்னாள் திருச்சிராப்பள்ளி மாவட்டக் கழகம் தரவேண்டிய சங்க இழப்பீட்டுக்கான மானியம் வழங்கவும் ரூ. 25,300 ஒதுக்கப்பட்டுள்ளது. பெருமழை, வெள்ளம் ஆகியவை காரணமாக சேதமுற்ற சாலைகளைச் செப்பனிடுவதற்குத் தேவைப்படும்போது, போதிய மானியங்கள் வழங்கப்படுகின்றன.



1972 மார்ச் 11]

1968-69 ஆம் ஆண்டிலிருந்து, இம் மாநிலத்தில் உள்ள எல்லா நகராட்சி மன்றங்களுக்கும் சாலைப் பராமரிப்புக்காக, அரசு, அதற்கென அமைந்த ஒரு வருடாந்திர மானியம் வழங்கி வருவது இங்கு குறிப்பிடத் தகுந்ததாகும். இவ்வகையில் 1972-73-ஆம் ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 10 இலட்சமாகும்.

## சென்னை மாநகராட்சி.

சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் உள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும். அதற்கு அரசு கணிசமான நிதி வழங்கி வந்துள்ளது. 1971-72-இல் (திட்டத்திற்குட்பட்ட, திட்டத்திற்குட்படாத) மானியமாக ரூ. 25 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டு மாநில வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 29,94,000 மானியமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் உள்ள எல்லாப் பெருஞ் சாலைகளையும், இப்போது நெடுஞ்சாலைகள் துறை பேணி வருகிறது. நெடுஞ்சாலைகள் நீங்கலாக மாநகரில் பேருந்துகள் ஓடும் சாலைகளை மேம்படுத்துவதற்காக, அரசு உதவி அளித்து வந்துள்ளது. சென்னை மாநகராட்சி ஆணையாளர் வேண்டியுள்ளவாறு சென்ற ஆண்டுகள் போலவே, பேருந்துகள் ஓடும் சில முக்கியமான சாலைகள் அகலப்படுத்தி மேம்படுத்துவதற்காக. மாநகராட்சிக்கு மானியமும் கடனும் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கண்ணம்மா பேட்டை, கெங்கு ரெட்டி சாலை, தெற்கு கடற்கரை சாலை ஆகிய மூன்று இடங்களில் சுரங்கப் பாதைகள் அமைப்பதற்காக நிதி. உதவி அளிக்க 1972-73 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. அடையாற்றின் குறுக்கே இரண்டு பாலங்கள் ("டேர்ன்புல்" சாலைப் பாலமும். "எல்பின்ஸ்டன்" பாலச் சீரமைப்பும்) கட்டுவதற்கும், கூவம் ஆற்றின் குறுக்கே நுங்கம்பாக்கத்தில் உள்ள 'மன்றோ' பாலத்தையும் 'காண்ட்ஸ்' சாலை "குக்ஸ்" சாலை ஆகியவற்றில் உள்ள பாலங்களையும் அகலப்படுத்துவதற்கும், உதவி அளிக்க நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவை நீங்கலாக, சாலைப்பணிகளுக்கான சாதனங்கள் வாங்கவும், தெரு விளக்குகள் அமைப்பை மேம்படுத்தவும், கடனுதவி செய்யவும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### " சென்டேஜ் " கட்டணங்கள்.

தொழிலாளர் அரசாங்கக் காப்புறுதிக் கழகத்தின் கட்டிடங்களைப் பொதுப் பணித்துறை கட்டுவதற்காக, அக்கழகம் சென்டேஜ் கட்டணம் செலுத்த உதவி மானியமாக ரூ. 5,100 ஒதுக்கப்பட்டுள்ளது.

### நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றும் திட்டங்கள்.

நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றும் திட்டங்களுக்காக, உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியங்கள் வழங்குவதற்கும், இக்கோரிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டங்கள் தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படுகின்றன. இதற்காக 1972-73 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 7.78 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, நகராட்சிகளுக்கும் ஊராட்சிகளுக்கும் அவற்றின் நீர்வழங்கு, கழிவு நீர் அகற்றும் திட்டங்களை நிறைவேற்ற கடன்கள் வழங்கப்படுகின்றன. பெரும்பாலும், இத்திட்டங்களை அரசின் கடன், மானிய உதவி கொண்டும், ஓரளவு நீர் வழங்கு வடிகால் கணக்குச் சேமிப்பைக் கொண்டும், உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றுகின்றன. அரசு சாதாரணமாக, இத்திட்டங்களின் ஆய்வுக்காகவோ தற்போதுள்ள நீர் வழங்கு வடிகால் திட்டங்களின் பராமரிப்புக்காகவோ, கடனோ மானியமோ அளிப்பதில்லை. உள்ளாட்சி மன்றங்கள் செயல்படுத்தும் நீர் வழங்குத் திட்டங்கள், வணிக நோக்குடன் தன்னுதவிப்பு அடிப்படையில் இருக்க வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. அவ்வாறிருந்தால், இத்திட்டங்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு, இவற்றைப் பேணி வருவதற்கான ஆண்டுச் செலவுகளையும் இத்திட்டங்களை நிறைவேற்றுவதற்காகப் பெறப்பட்ட கடன்களுக்கான ஆண்டுத் தொகையையும் ஈடு கட்டுவதுடன், எதிர்காலத்தில் இத்திட்டங்களை மேம்படுத்துவதற்கு ஒரு வைப்பு நிதியை எழுப்புவதற்கும் அவைகளால் இயலும். 1971-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அமைக்கப்பட்ட "தமிழ் நாடு நீர் வழங்கு வடிகால் வாரியம்" இம்மாநிலம் முழுவதும், குடிநீர் வழங்கவும் கழிவு நீர் அகற்றவும் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளது.





ரூ. 3,177.62 இலட்சம் நிர்ணயித்த செலவில் 101 நீர் வழங்கு திட்டங்களையும், ரூ. 1,100.22 இலட்சம் நிர்ணயித்த செலவில் 12 வடிகால் திட்டங்களையும் இம்மாநிலம் முழுமையும் சட்டப்படியான நீர் வழங்கு வடிகால் வாரியம் தற்போது நிறைவேற்றி வருகிறது. குடிநீர்த் திட்டங்கள் 73 நகராட்சிகளிலும், 12 நகரியங்களிலும், 10,000-த்துக்கும் மேற்பட்ட மக்கள் தொகையுள்ள 26 ஊராட்சிகளிலும் உள்ளன. 15 நகராட்சிகளிலும், 30 ஊராட்சிகளிலும் நீர் வழங்குவதற்கான புதிய திட்டங்கள் ஆயுள் ஈட்டுறுதிக் கழகக் கடன் உதவி கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 14 நகராட்சிகளிலும், 5 நகரியங்களிலும், 2 ஊராட்சிகளிலும் கழிவு நீர் அகற்றும் பகுதித் திட்டங்கள் உட்படக் கழிவுநீர் அகற்றும் திட்டங்களும் உள்ளன. 7 நகராட்சிகளில் கழிவு நீர் அகற்றும் புதிய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. 1972-73 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு வரும் நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் திட்டங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களுக்குக் கடன்கள், மானியங்கள் வழங்குவதற்காக அரசின் பங்காக ரூ. 338.35 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1969-70 ஆம் ஆண்டிலிருந்து இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் பல்வேறுபட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு நீர் வழங்கல், கழிவு நீர் அகற்றல் திட்டங்களை நிறைவேற்றக் கடனுதவி செய்து வருகிறது. ஒவ்வொரு திட்டத்துக்கும் ஆண்டொன்றுக்கு ஏற்படும் செலவினத்தில் 2-3 பங்கை ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் கடனாக வழங்குகிறது.

இதுவரையில், 53 உள்ளாட்சி நிறுவனங்களுக்கு இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகம், ரூ. 824.46 இலட்சங்கள் கடனுதவி அளித்துள்ளது.

### குடிசை மேம்பாடு—குடிசை மாற்றும்திட்டம்.

நகர்ப் பகுதிகளில் பெரிய வீடுகள் வாடகைக்கு எடுக்கப் போதிய வருமானம் இல்லாது, மிகக் குறைந்த வருமானம் உள்ளவர் குடிசைப் பகுதிக்குக் குடிபுகுந்துள்ளனர். தூரத்தைக் கருதியோ, விரைவான போக்குவரத்து வசதியின்மையாலோ வேலை செய்யும் இடத்துக்கு அருகிலேயே தங்கள் இருப்பிடங்களைச் சிலர் அமைத்துக்கொள்ள நேரிடுகிறது. இம்மட்டத்தில் உள்ளோர் பெரும்பாலும் வீடுகளில் வேலை செய்வோர், பால் வணிகர், நாள்

தோறும் ஊதியம் பெறும் உழைப்பாளர்கள், கூலித் தொழிலாளிகள், துப்புரவு செய்வோர், சிறு கடை வைத்திருப்பவர்கள், தொழிற்சாலைகளில் பணி புரிவோர் ஆகியோராவர். காலியுள்ள இடங்களில் அவர்கள் அமைத்துக் கொண்ட வாழும் இடங்கள் நெரிசலானதும், காற்று சரிவரப் புகாததும் சுகாதாரம் இல்லாததும் ஆன குடிசைப் பகுதிகள் நிறைந்தவையாகும். இப் பகுதிகளின் வளர்ச்சி ஒழுங்கில்லாமல் இருந்து வருகிறது. மக்கள் நெரிசல் இவ்விடங்களில் அதிகமாக இருப்பதுடன் அங்குள்ள சுகாதார நிலை பிரமிக்கத்தக்க வகையில் மோசமாக உள்ளது.

குடிசை மேம்பாடு/குடிசை மாற்றுத் திட்டம் 1956-57 ஆம் ஆண்டில் சென்னை நகரில் புதிதாக அமுலுக்கு வந்தது. பின்னர் மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் வெளியூர்ப் பகுதிகட்கு விரிவுபடுத்தப்பட்டது. முதலில் சென்னை நகர அபிவிருத்திப் பொறுப்புக் குழுவும் சென்னை மாநகராட்சியும் குடிசை மாற்று வேலையைச் செய்து வந்தன. 1961 ஆம் ஆண்டில் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அவ்வேலைகளை அது ஏற்றுக்கொண்டது. இத்திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகள் இரண்டு வகைகளில் நிறைவேற்றப்பட்டன. 800 சதுர அடி முதல் 1,000 சதுர அடி வரை உள்ள மேம்பாடுற்ற திறந்த வெளி மனைகளில் 300 சதுர அடி உயர்த்தப்பட்ட அடித்தளம் அமைக்கப்பட்டு, அத்துடன் ரூ. 252 பெறுமான குடிசை அமைப்புப் பொருள்களும் தன்னுதவி அடிப்படையில் குடிசை போட்டுக் கொள்வதற்காக ரூ. 32.50 ரொக்க மானியமும் வழங்கப்பட்டன. வாரியம் ஒவ்வொரு மனையிலும் ஒரு குளியல் அறையையும் நீரடிக் கழிப்பிடத்தையும் அமைத்துப் பேணி வருகிறது. தெரு விளக்கு, சாலைகள், நீர் வழங்கு வசதி ஆகியவையும் செய்து கொடுக்கப்படுகின்றன. குடிசைகளை மேம்படுத்துவதில் இது ஒரு முறையாகும். மற்றொரு முறை இடத்துக்கு ஏற்றபடி உறைவிடங்களையும் ஒரு மாடி அல்லது பல மாடிக் கட்டிடங்களையும் கட்டுவதன்மூலம், மேம்பாடு செய்வதாகும். கட்டப்பட்ட ஒவ்வோர் உறைவிடத்திலும் 120 ச. அடி பரப்பளவுக்குத் தாழ்வாரமும், 84 ச. அடி கொண்ட சமையல் அறையும், 16 ச. அடி கொண்ட குளியல் அறையும், 12 ச. அடி உள்ள கழிப்பிடமும் அமையும்.



இத்திட்டத்துக்கு 1969 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரை கிடைத்து வந்த உதவிமுறை வருமாறு—இந்திய அரசிடமிருந்து திட்டத்துக்கு ஆகும் செலவில் 50 சதவிதம் கடன்; திட்டச் செலவில் 37½ சதவிதம் இந்திய அரசிடமிருந்து மேலுதவி; திட்டச் செலவில் 12½ சதவிதம் மாநில அரசிடமிருந்து மேலுதவி.

மாநில அரசுகளுக்கு 1—4—1969 முதல், இந்திய அரசு வட்டாரக் கடனாகவும், வட்டார மானியமாகவும் உதவியை வழங்கி வருகிறது. எனவே தனியாக ஒரு திட்டத்துக்கு நிதி ஒதுக்கப்படுவதில்லை.

குடிசை மாற்றம் பிரச்னையை மிக விரைவாகத் தீர்ப்பதற்காக 1970 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் "தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம்" என்ற சட்டப்படியான ஓர் அமைப்பை அரசு உருவாக்கியது. சென்னை நகரிலுள்ள எல்லாக் குடிசைப் பகுதிகளையும் ஏழு ஆண்டுகட்குள் காலி செய்துவிட வேண்டுமென்பதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. சென்னை நகரில் இப் பணி குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. வெளியூர்ப் பகுதிகளில் இப் பணியை தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் செய்து வருகிறது. சென்னை நகரில் 118 குடிசைப் பகுதிகளில் குடிசை மாற்றுப் பணி செய்ய மூன்றாண்டுத் திட்டத்தை "தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம்" தயாரித்துள்ளது.

1970-71 ஆம் ஆண்டு குடிசை மாற்றுப் பணிக்காக மாநிலம் முழுமைக்கும் ரூ. 96.67 இலட்சம் செலவாயிற்று. இவ்வாண்டு இப்பணிக்காக டிசம்பர் 1971 வரை செலவாகியுள்ள தொகை ரூ. 174.22 இலட்சம் ஆகும். 1971-72 ஆம் ஆண்டில் வெளியூர்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் இப்பணிக்காக ரூ. 35 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டது.

சென்னை நகரில் ஏறத்தாழ 1,000 குடிசைப் பகுதிகள் உள்ளன. இதுவரை 601 குடிசைப் பகுதிகள் நில அளவை (சர்வே) செய்யப்பட்டுள்ளன. இன்னும் 400 குடிசைப் பகுதிகளை நில அளவை செய்ய வேண்டியுள்ளது. 1,50,000 குடும்பங்கள் குடிசைப் பகுதிகளில் வாழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மற்ற விபரங்கள் பின் வருமாறு :—

| | |
|---|---|
| மேற்பார்வை செய்யப்பட்டுள்ள குடும்பங்கள் | 87,394 |
| இன்னும் மேற்பார்வை செய்யப்பட வேண்டிய குடும்பங்கள் | 63,696 |

[1972 மார்ச் 11

குடிசை மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்னால், 7,384 குடியிருப்புகளைத் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியம் கட்டியுள்ளது. குடிசை மாற்று வாரியத்திடமுள்ள மேம்பாடுற்ற திறந்த வெளி மனைகள் 8,446 ஆகும். அத்துடன் தமிழ் நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட தீப்பிடிக்காத குடியிருப்புகள் 1,820-ம் தற்காலிகக் குடியிருப்புகள் 630-ம் குடிசை மாற்று வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. 1971-72-ல் குடிசை மாற்றுத் திட்டதுக்காக சென்னை நகரில் ரூ. 65 கோடியும் வெளியூர்ப் பகுதிகளில் 03.35 கோடியும் அரசு வழங்கியுள்ளது. இதுவரை தமிழ் நாடு குடிசை மாற்று வாரியம் 1,981 குடியிருப்புகளைக் கட்டி முடித்துள்ளது. இன்னும், இந்த ஆண்டில் 68 திட்டங்கள் வாயிலாக 4,956 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. 1972-73 ஆம் ஆண்டுக்காக அரசு குடிசைப் பகுதிகளை மாற்றும் பணிக்காக நகர்ப் பகுதிகளுக்கு ரூ. 365.00 இலட்சமும், வெளியூர்ப் பகுதிகளுக்காக ரூ. 35.00 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 4.00 கோடி நிதி ஒதுக்கியுள்ளது. 1972-73 ஆம் ஆண்டில், சென்னை நகரில் ஏறத்தாழ 8,000 குடியிருப்புகள் கட்டப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

## HOW TO USE THE INDEX.

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the Sub-headings are indented from the Main Headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject matter within brackets, e.g. (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the Main Heading "Bill(s)".

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., "Committee(s)", "Council(s)", "Corporation(s)", etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | | |
|---|---|---|
| A.M./Ad.Motion | .. | Adjournment Motion. |
| Ann. | .. | Announcement. |
| B.O.H. | .. | Business of the House. |
| C.A. | .. | Calling Attention to a Matter of Urgent Public Importance. |
| C.A.St. | .. | Calling Attention Statement. |

| | |
|---|---|
| Consid. | .. Consideration stage of a Bill. This stage includes :— (i) Motion to refer to Select/Joint Select Committee. (ii) Amendment to refer to Select/Joint Select Committee. (iii) Amendment to circulate. (iv) Motion to consider as reported by Select/Joint Select Committee. (v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | .. Consideration Clauses of a Bill. |
| D.E.E. | .. Demands for Excess Expenditure. |
| Dis.S.D. or D.S.D. | .. Discussion for Short Duration on an Urgent Matter of Administration. |
| D.S.G. | .. Demands for Supplementary Grants. |
| G.A. | .. Governor's Address. |
| G.D. | .. General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | .. Half-hour Discussion. |
| Int. | .. Introduction stage of a Bill. |
| L.A. | .. Legislative Assembly. |
| L.C. | .. Legislative Council. |
| M. | .. Motion. |
| P.M. | .. Privilege Motion. |
| R/Res. | .. Resolution. |
| St. | .. Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates.

FOURTH SESSION OF THE FIFTH LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA

*8th to 11th March* 1972.

*Volume XVII* (*Nos.* 1 *to* 4).

AGES

A


ABDUL JABBAR, THIRU V. M.—

Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers (A.M.) .. .. 444

ACCIDENTS—

Night Decker Bus .. .. .. .. 31–33

ADITANAR, THIRU SI. PA.—

Budget, 1972–73,

G. D. .. .. .. .. .. 206, 210–211, 242, 243, 245.

ALAGU THEVAR, THIRU S.—

Tank near Ramalingapuram, construction .. 436

ANANTHANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1972–73—

G. D. .. .. .. .. .. 46, 47, 52, 74, 83, 84, 85, 86, 91, 200–214, 233, 234, 305–306, 307, 348, 374, 392, 396, 397 404, 405.

PAGES

A—*cont.*

ANANTHANAYAKI, THIRUMATHI T. N.—*cont.*
Budget 1972-73—*cont.*
Voting :
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 456, 553-569.

Pellettisation Plant at Salem, working .. 277-284

Point of Order—
Resignation of a Minister .. .. .. 170-171, 173, 175, 178.

Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers (A.M.) .. .. .. 445-446

ANBAZHAGAN, THIRU K.—
Budget, 1972-73,
G. D. .. .. .. .. .. 198, 239, 240, 243, 244, 246-248.

ANIMAL HUSBANDRY—
Buffalo Farms, establishment .. .. 135-137
Cattle Development Farm, establishment in Javadu Hills .. .. .. .. .. 134-135
Cows and Buffaloes, sale to Kerala .. .. 9-10
Live-stock development, stoppage of Central grant .. .. .. .. .. 131-134

ARANGANNAL, THIRU RAMA—
Budget, 1972-73,
G. D. .. .. .. .. .. 340-350
Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. 504, 568, 569-575.



PAGES

A—*cont.*

ARCHAEOLOGY—
Moat around Vellore Fort, repairs .. .. 14-15
Panchalankurichi Fort, amount spent for excavation and protection .. .. .. 255-257

ARTS—
Acting, Degree course.. .. .. .. 420-422
Karagam dancers, sending to foreign countries 416 420

ARUMUGAM, THIRU S.—
Budget, 1972-73,
G. D. .. .. .. .. .. 79-87

B

BALASUNDARAM, THIRU V.—
Budget 1972-73,
G. D. .. .. .. 359
Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 479-483

BRIDGE(S)—
Across Kuchasthali river, construction .. .. 436
Across Kuzhithurai river at Gnanamala kadavu, construction .. .. .. 435
Levy of tolls .. .. .. .. 27-29
Near Jamalia at Perambur, closure .. .. 159
Over bridge across kudathalai river, construction .. .. .. .. 288

C

CHAIR—
Announcements:
Business of the House .. .. .. 38
House Committee, election .. .. 455

PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Announcements—*cont.*

Privileges Committee, election .. .. 454

Release of Thiru A. Subramaniam, M.L.A. ... 250

Rulings and Observations—

*Adjournment Motions*:

*Lathi Charge on students in Madurai*: Consent was withheld on the ground that there was no need for the motion after the clarification by the Chief Minister.. .. 453

*Lathi Charge on the workers of Srivilliputhur Co-operative Textile Mill*: Consent was withheld on the ground that there was no need for the motion after the clarification by the Chief Minister .. .. 448

*Non-availability of yarn at fair prices and its consequences*: Consent was withheld on the ground that there was no need for the motion after the clarification by the Minister for Industries .. .. .. 183

*Debate*:

*Allegations*: Allegations based on rumours were inadmissible. While a member could demand an enquiry into a past incident, for which there should be some basis, he should not conclude himself that a particular person was guilty of the charge levelled by him .. .. 91-94

Insinuating remarks implicating an ex-Minister and connecting his resignation to certain observations of the Court in a murder case were held to be not in order. Such allegations could be made only if they could be proved and if there was some basis for the same. As the privilege



PAGES

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Debate*—cont.

of all the Members had to be safeguarded by the Chair, it was desirable that vague, insinuating remarks against a member for which there was no basis or which could not be proved, were avoided .. .. 346-349

*Reference to Officers*: Incriminating references to officers should be avoided as they could not defend themselves .. 502-503

*Decorum*:

Members should not give any judgment on any matter before the House nor make any observations about the Chair .. 440

Members should speak standing and not sitting .. .. .. .. .. 504

*Expressions used in the House*:

'உட்கார்" 'உட்கார்" (Sit down, sit down)—Remarks addressed to a Member who held the floor, by some other Members. Held to be not fair .. .. .. .. 391

"ஒப்பாரி', "நீலிக்கண்ணீர்" "sing an elegy" 'crocodile tears' in the sentence "எங்களைப் பார்த்து முதலாளி பக்கம் போய் விட்டார்கள் என்று ஒப்பாரி வைத்துக் கொண்டிருப்பதன் மூலம்—நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள்—singing an elegy—shedding crocodile tears alleging that we had gone by the side of capitalists'—Deprecated .. 84

'குட்டிச் சுவராக்கி விட்டார்கள்' '*utterly spoiled*' in the sentence—குமரி மாவட்ட அரசியலையே குட்டிச் சுவராக்கி விட்டார்கள்—(they have utterly spoiled the political atmosphere of Kumari district).—Held to be not in order .. .. .. .. .. 219

C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Ministers* :

*Introduction of new Minister*—

On a request made by a Member that a new Minister be introduced to the House the Chair observed that the Minister needed no introduction. However, the Minister might introduce himself. Thereupon the Minister (Hon. Thiru Mannai Narayanasamy) rose in his seat, wished the Members and resumed his seat. The Chair welcomed the Minister and offered him good wishes on behalf of the House .. .. ... .. 312

*Resignation and appointment of new Minister* :

On 9th March 1972 as soon as the House met and before the question hour points of order were raised about the reported announcement in the Radio about the resignation of a Minister and appointment of a new Minister on the ground that while the House was in session, such information should first have been announced in the House and also it was improper for the outgoing Minister to make a statement outside without first making a statement in the House.

The Law Minister explained that there were clear provisions in the Constitution regarding resignation of a Minister, its acceptance by the Governor and appointment of a new Minister on the advice of the Chief Minister. Information about the resignation of a Minister and the appointment of a new Minister had been furnished





C—*cont.*

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Ministers*—cont.

*Resignation and appointment of new Minister*—cont.

by the Governor and not by the Chief Minister or the Ministers. He also stated that the outgoing Minister might make a statement if he desired, but he could not be compelled to make any statement.

The Deputy Speaker held that it did not appear that the outgoing Minister had made a statement outside. Moreover, it was not obligatory on his part to make a statement in the House. It was only a right on his part, not a duty and hence there was no point of order .. ... 121–126

Later, after the question hour, when the Speaker was in the Chair and after the Leader of the House made a statement under Rule 82 about the resignation of a Minister and the appointment of a new Minister, points of order were raised on the grounds that it was the responsibility of the Chief Minister to make such important statements, the information should have first been furnished to the House, the House should have been taken into confidence and informed of the reasons for the resignation of the Minister and, it was incumbent on the Chief Minister who was in charge of the Publicity Department to have taken the House into confidence before the news had been broadcast from the All India Radio.

The Leader of the House explained that the acceptance of the resignation of the out going Minister and appointment of the new

CHAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Ministers*—cont.

*Resignation and appointment of new Minister*—cont.

Minister by the Governor had taken place on the afternoon of the previous day when the House was not in session and Government had taken the earliest opportunity to inform the House of the same.

He added that while the outgoing Minister might, if he desired, make a statement on his resignation, it was not necessary for the Government to inform the House of the reasons for the resignation, and as the Leader of the House, it was quite in order for him to have made the statement in the House.

The Law Minister stated that no statement was issued outside the House by the Chief Minister or any other Minister. The news that had appeared outside was on the basis of information passed on through the Governor. They could not curtail that Constitutional right, though the Cabinet as such was not responsible for the news. So there was no question of showing any disrespect to the House.

The Chair held as follows:

"Inasmuch as there was joint responsibility of the Cabinet, any Minister could make the announcement.

As pointed out by the Leader of the House, the announcement had been made at the earliest opportunity.

It was the prerogative of the Chief Minister to make any changes in his Cabinet.







CHAIR—*cont.*

Rulings and Observation—*cont.*

*Ministers*—cont.

*Resignation and appointment of new Minister*—cont.

It was the will and pleasure of a Minister to resign his Ministership. It was open to him to make a statement in the House or not. It was just a right on his part and not a duty. He could not be compelled to make any statement on his resignation.

Points of order could, therefore, not be raised on these matters .. .. 170–180

*Questions and answers:*

Supplementary questions—

Supplementaries should relate to the main question .. .. 35, 439

*Quotations:*

While referring to documents, Members should first get permission of the Chair so that the Chair would have time to go through the text .. .. 242

*Rulings:*

A ruling on a matter would be binding on the Members till another ruling was given .. 73

There was no rule prohibiting the revision of an earlier ruling . .. .. .. 74

Whoever occupied the Chair for the time being, gave the rulings as per the rules of the House and no ruling against the rules would ever be given irrespective of the conventions of the British Parliament which they need not necessarily follow .. .. .. 73–79

PAGES

CAAIR—*cont.*

Rulings and Observations—*cont.*

*Rulings*—cont.

With reference to the view expressed by a Member that it was not in keeping with the dignity and decorum of the House to give a different ruling on a matter on which a ruling had already been given, the Deputy Speaker observed that just as the Supreme Court's decision had also been changing, in the light of new experiences, new circumstances, new ideas and new trends noticed every day, rulings given in the House might also undergo changes from time to time, and so, it could not be construed as affecting the dignity or decorum of the House.. .. 72–73, 74

CHINNA VELLAIYAN, THIRU C.—

Scheduled Tribes in Kolli Hills, grant of pattas .. 276–277

COLLEGES—

College of Technology for Tiruchirappalli, opening on behalf of Wakf Board .. .. .. 22–23

Karnatic Music (Madras), new courses .. .. 261–262

COMMITTEE(S)—

Government Assurances:

Second Report (Fifth Assembly), presentation.. 39

House, election (M) .. .. .. .. 455

Privileges, election (M) .. .. .. 454

COTTON—

Import .. .. .. .. .. 19–22

COURTS—

Munsif's Court for Palladam .. .. .. 147–15



PAGES

D

DAIRIES—

Madavaram Milk Project, ghee production .. 33–37

DENNIS, THIRU N.—

Bridge acrorss Kuzhithurai river at Gnanamala Kadavu, construction .. .. .. 435

Budget, 1972–73, Voting:

Community Development Projects, etc., Public Works–Grants-in-Aid .. .. .. 526–532

Transport buses, re-treading of tyres .. 168–169

DURAI MURUGAN, THIRU—

Budget, 1972–73,

G.D. .. .. .. .. .. 188–189, 213, 227–235

DURAISWAMY, THIRU S.—

Cotton, import .. .. .. 19–22

Thermal Station for Coimbatore, establishment .. 29–30

Thiruppur Kumaran's house, conversion into monument .. .. .. .. 415–416

E

EDUCATION—

Adult Literacy Scheme, expansion .. .. 422

Adult schools, opening.. .. .. .. 423–426

Elementary Education Scheme, modifications in syllabi .. .. .. .. .. 428–430

Sainik Schools, scholarships to political sufferers' children for study in .. .. .. 426–428

S.S.L.C. Examination, scrapping of collection of fees . .. .. .. .. 262–264

ELECTRICITY—

Thermal Station for Coimbatore, establishment .. 29–39

EMPLOYMENT—

Cash Programme of Government of India for rural unemployed .. .. .. .. .. .. 257–261

PAGES

E—*cont.*

ERASAGOPAL, THIRU K. M.—
Budget, 1972–73, Voting :
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid .. .. .. 510–515

ETTIAPPAN, THIRU P.—
Budget, 1972–73,
G.D. .. .. .. .. .. .. 116–120

EX-SERVICEMEN —
Permits for fishing .. .. .. .. .. 14

F

FACTORIES—
Aluminium Factory at Mettur, exemption from Land Ceiling Act .. .. .. .. .. 433–435

FINANCIAL BUSINESS—
Budget, 1972–73,
G.D. .. .. .. .. .. .. 39–120
183–249
296–407
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. 456–593

FISHERIES —
Fishermen of Punnaikayal, grievances .. .. 272–273
Fish oil, Production .. .. .. 11–14

FRUITS—
Pineapple Processing Unit for Kulaseharam .. 159–160

G

GANAPATHY, THIRU N.—
Point of Order, resignation of a Minister .. .. 174–175

GANAPATHY, THIRU T.—
Budget, 1972–73,
G.D. .. .. .. .. .. .. 215–220



PAGES

G—*cont.*

GANESAN, THIRU L—
Budget, 1972–73,
G.D. .. .. .. .. .. .. 110–116

GURUSAMY, THIRU N. V.—
Budget, 1972–73, Voting :
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid .. 537–540
Secretariat, construction of new building .. 2–7

H

HANDE Dr. H. V.—
Budget, 1972–73,
G.D. .. .. .. .. .. .. .. 183–188,
190–200
304–305
308–309
392–393
397–398
405–406
Voting :
Community Development Projects, etc., Public Works—Grants-in-aid .. .. .. .. 456–457,
500–510
Drinking Water-Supply, Pallavaram .. .. 8
English-medium Schools, number .. .. 261–265
Overbridge near Jamalia at Perambur, closure .. 159
Point of Order, resignation of a Minister .. 171, 177

HARIJAN(S) —
House-sites in midst of inhabitants, allotment .. 273–276

HARIJAN WELFARE—
Harijans in Kali Panchayat, number of houses constructed .. .. .. .. .. .. 431–433
Harijans in Mapadugai Panchayat, construction of houses .. .. .. .. .. .. 431–433

PAGES

H—*cont.*

HARIJAN WELFARE—*cont.*

House-sites, amount allotted .. .. .. 143–144

Scheduled Caste Students, constitution of Committee re-admission in Colleges .. .. .. 141–143

HOSPITALS AND DISPENSARIES—

Doctors in rural areas, preference for post-graduate education .. .. .. .. .. .. 414

Government Hospital at Sankarapuram, establishment .. .. .. .. .. 8

Government Hospital at Vellore, number of special wards .. .. .. .. .. .. .. 269–270

Kadambur Hospital—New building for Mother and Child Block, .. .. .. .. 8–9

Mobile Hospitals for villages .. .. .. 126–131

HOSTELS—

Backward Classes Students in Coimbatore district, opening .. .. .. .. 289–290

I

INDUSTRIES—

Industrial Estate for Gomuki Reservoir area, establishment .. .. .. 147

Industrial Estate for Jalakandapuram, establishment .. .. .. .. .. 19

Pelletisation plant at Salem, working .. .. 277–284

Small Car, grant of licence for manufacture .. 284–286

IRRIGATION—

Big Tank in Melmalayanur Supply Channel .. 157–158

Malattaru Scheme, Mudukulathur, details .. 24–26

Mettur High Level Channel, increased ayacut 27

Sathanur dam, channel to Sankarapuram .. 287–288

Streams in Tirunelveli district, link-up .. 151–157

Vaigai river, release of water to Mudukulathur taluk 288

Water from Manimuthar, letting into Canals .. 24



PAGES

J

JAMES, THIRU J.—

Budget, 1972–73—

G.D. .. .. .. .. 72,73,74, 81,236–249

Pine-apple Processing Unit for Kulasekaram .. 159–160

Point of Order:

Resignation of a Minister .. .. .. 170

Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers (A.M.) .. .. .. 444

JOTHI VENCATACHELLUM, THIRUMATHI—

Budget, 1972–73—

G.D. .. .. .. .. 71–79 86–87

K

KAMATCHI, THIRU K.—

Budget, 1972–73—

G.D. .. .. .. .. 341–359

KANDAPPAN, THIRU S.—

Point of Order:

Resignation of a Minister .. .. .. 175–176

KANDASWAMI, THIRU K.—

Budget, 1972–73—

G.D. .. .. .. .. .. 87–97

Police lathi charge at Madurai on students' processions in support of Teachers' demands (A.M.) .. 450–451

KANDASWAMI, THIRU K. P.—

Budget, 1972–73, Voting.

Community Development Projects, etc., Public Works-Grants-in-Aid .. .. .. 540–544

KANDASWAMY, THIRU MANALI C.—

Assurances Committee Second Report (Fifth Assembly), Presentation .. .. .. 39

KANDASWAMY, THIRU MANALI C.—cont.

Budget, 1972–73, Voting :

Community Development Projects, etc., Public Works-Grants-in-Aid .. .. .. 518–522

S.S.L.C. Examination, scrapping of collection of fees .. .. .. .. .. 262–264

KANNAN, THIRU M. R.,—

Budget, 1972–73, Voting :

Community Development Projects, etc., Public Works-Grants-in-Aid .. .. .. 544–549

KARUNANIDHI, Dr. M.—

Budget, 1972–73,

G.D. .. .. .. .. .. 76, 82, 93, 94, 189, 195, 196, 200, 201, 211, 213, 244, 322, 331, 332, 333, 334, 335, 356, 361, 367–407.

Community Development Projects, etc., Public Works-Grants-in-Aid .. .. 506

Police lathi charge at Madurai on students' processions in support of Teachers' demands (A.M.) .. 451–452, 453

Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers (A.M.) .. .. .. 446–448

KHADER BATCHA (*alias*) VELLAICHAMY, THIRU—

Malattaru Scheme, Mudukulathur, details .. 24–26

Registrar's Office, Perunazhi, opening .. .. 271–272

Vaigai river, release of water to Mudukulathur taluk .. .. .. .. .. 288

KITTAPPA, THIRU N.—

Adult Schools, opening .. .. .. 423–426

Bridges, levy of tolls .. .. .. .. 27–29



KITTAPPA, THIRU N.—cont.

Deceased orphans, assistance for burial .. .. 10–11

Elementary Education Scheme, modifications in syllabi .. .. .. .. .. 428–430

Fish-oil, production .. .. .. 11–14

Harijans in Kali Panchayat, number of houses constructed .. .. .. .. 431–433

Harijans in Mapadugai Panchayat, construction of houses .. .. .. .. .. 431–433

Master Plan for Madras, Centre's permission .. 409–410

Mettur High Level Channel, increased ayacut .. 27

Modern Rice Mill at Sitharkadu, functioning .. 438–442

Newsprint, attainment of self-sufficiency .. .. 16–19

Night Buses, operation in Madras City .. .. 30–31

Secretariat, construction of new building .. 2–7

Siva Vishnu temple, Theagarayanagar .. .. 37–38

Srirangam temple, utilisation of income .. .. 443

Transport drivers, supply of umbrellas .. .. 442–443

KOTHANDARAMIAH, THIRU K.S.—

Budget, 1972–73, Voting :

Community Development Projects, etc., Public Works—Grants in Aid .. .. .. 457, 484–487

State Transport Buses from Madras and Madurai to Hosur, details .. .. .. 292–293

Tourist Bungalow for Devarabetta, construction 290–292

KOVAI CHEZHIAN, THIRU—

Budget, 1972–73 G.D. .. .. .. .. 355, 358

KRISHNAMOORTHY, THIRU V.—

Budget, 1972–73, Voting:

Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 549–553

PAGES

K—*cont.*


KUMARASWAMY, Thiru K. N.—
Ex-Servicemen, permits for fishing .. .. 14
Live-stock development, stoppage of Central grant. 131–134
Mobile Hospitals for villages .. .. .. 126–131
Munsif's Court for Palladam .. .. 147–153
Ramachandran tank at Sulur, formation .. .. 286
Super Markets for Sulur and Palladam . ... 438

L.

LABOUR—
Working hours, reduction .. .. 138–139

LANDS—
Aluminium Factory at Mettur, exemption from Land Ceiling Act .. .. .. .. 433–435
Poramboke lands in Coimbatore district, particulars .. .. .. .. 141–147

LATHEEF, Thiru M. A.—
Cattle Development Farm, establishment in Javadu Hills .. .. .. 134–135
Javadu Hills, Wild Life Sanctuary .. 164

M

MADHAVAN, Thiru S.—
Budget, 1972–73,
G. D. .. .. .. .. 325, 344–345
Growing unemployment among Handloom Weavers at Aruppukkottai (A. M.) ... .. .. 182–183
Point of Order:
Resignation of a Minister .. .. .. 177–178

MADRAS CITY—
Financial assistance from centre .. — 410–414
Master Plan, Centre's permission .. .. 409–410




PAGES

M—*cont.*


MALAICHAMY, Thiru P.—
Slum Children Training Camp to give training in citizenship .. ... ... .. 144

MANIAN, Thiru P. S.—
Art of acting, Degree course .. .. .. 420–422
Cows and buffaloes, sale to Kerala .. .. 9–10
Karagam dancers, sending to foreign countries .. 416–420
Lorry Transport, Nationalisation . .. 164–167
Small Car, grant of licence for manufacture .. 284–286

MARIMUTHU, Thiru A. R.—
Budget, 1972–73—
G. D. .. .. ... .. ... 39–50
Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 455–457, 458, 475–479
Police lathi charge at Madurai on students' processions in support of Teachers' demands (A.M.) .. 450

MARUDACHALAM, Thiru N.—
Political Sufferers' Children, Scholarships for study in Sainik Schools .. .. .. .. 426–428
Poramboke lands in Coimbatore district, particulars 144–147
Tourist Homes, increase in rent .. .. 162–164

MILL(S)—
Modern Rice Mill at Sitharkadu, functioning .. 438–442

MINISTER(S)—
Resignation .. .. ... .. 169–170

MOHIDEEN, Thiru Thiruppur A. M.—
Budget, 1972–73,
G. D. ... .. .. — 299–304, 306–308, 309–312, 355, 358, 359.

M—*cont.*


| | PAGES |
|---|---|
| MONUMENT(S)— | |
| Thiruppur Kumaran's house, conversion into .. | 415-416 |
| MOTION(S)— | |
| Ad. Motions: | |
| Growing unemployment among Hand-Loom Weavers at Aruppukkottai .. .. .. | 180–183 |
| Police lathi charge at Madurai on students' processions in support of Teachers' demands .. | 448–453 |
| Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers .. .. .. | 444–448 |
| House Committee, election .. .. .. | 455 |
| Privileges Committee, election .. .. .. | 454 |
| MUNICIPALITIES— | |
| Permission to take over town buses .. .. | 293–296 |
| MUNUSWAMY, THIRU R. R.— | |
| Big Tank in Melmalayanur supply channel .. | 157–158 |
| Tindivanam-Gingee-Tiruvannamalai road, broadening .. .. .. .. .. | 287 |
| MURUGAIYAN, THIRU S.— | |
| Budget, 1972-73, Voting: | |
| Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. | 532–537 |
| MUTHIAH, THIRU M.— | |
| Adult Literacy Scheme, expansion .. .. | 422 |
| Doctors in rural areas, preference for Post-graduate education .. .. .. | 414 |
| Fishermen of Punnaikayal, grivances .. .. | 272–273 |
| Kadambur Hospital, new building for Mother and Child Block .. .. .. .. | 8–9 |
| Paper mill to manufacture quality paper, opening.. | 277 |
| Streams in Tirunelveli district, link-up .. .. | 154–157 |
| Sub-Taluk Office at Ottapidaram, construction of building .. .. .. .. | 437–438 |




N


| | PAGES |
|---|---|
| NACHIAPPAN, THIRU A. M. T.— | |
| Budget, 1972-73— | |
| G. D. .. .. .. | 50–55 |
| NACHIAPPAN, THIRU N.— | |
| Budget, 1972-73, Voting: | |
| Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. | 495–500 |
| Government Hospital at Sankarapuram, establishment .. .. .. | 8 |
| Industrial Estate establishment in Gomuki Reservoir area .. .. .. .. | 147 |
| Sathanur Dam, channel to Sankarapuram .. | 287–288 |
| NAGARAJAN, THIRU K.— | |
| Pumpsets for Agriculturists purchase through Co-operative Marketing Societies .. .. | 26<br>161–I |
| NATARAJAN, THIRU N. V.— | |
| Budget, 1972-73— | |
| G. D. .. .. .. .. .. | 187 |
| NEDUNCHEZHIAN, DR. V. R.— | |
| Budget, 1972-73— | |
| G. D. .. .. .. .. .. | 107, 197 |
| Voting: | |
| Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. | 456, 457, 458, 502, 575–592 |
| House Committee, election (M) .. .. | 455 |
| Point of Order, resignation of a Minister .. | 172, 174 |
| Privileges Committee, election (M) .. .. | 454 |
| Resignation of a Minister (St.) .. .. | 169–170 |

PAGES

N—*cont.*

NEWSPRINT—
Attainment of self-sufficiency .. .. .. 16–19

NURSES—
Married, construction of quarters .. .. 270–271

O

OBITUARY REFERENCE—
Venkataswamy Naidu, Thiru K. .. .. 1

OFFICES—
Registrar's Office, Perunazhi, opening .. .. 271–272
Sub-Registrar's Office for Gummidipoondi .. 137–138
Sub-Taluk Office at Ottapidaram, construction of building .. .. .. ... .. 437–438

ORPHANS—
Deceased, assistance for burial .. .. .. 10–11

P

PALANISAMY, Thiru N. K.—*cont.*
Budget 1972–73—Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 456, 470–474
Buffalo farms, establishment .. .. .. 135–137
Master Plan for Madras, financial assistance from Centre .. .. .. .. .. 410–414
Road connecting Rameswaram and Mainland, reply from Union Government .. .. .. 158–159
Secretariat, construction of new building .. 2–7

PAPER—
Mill to manufacture quality paper, opening .. 277

PAPERS LAID ON THE TABLE—
Community Development and Panchayat Development, Policy Notes (English and Tamil) .. 594
Community Development, Financial Supplement, (English and Tamil) .. .. .. 594





PAGES

P—*cont.*

PAPERS LAID ON THE TABLE—*cont.*
Cultivating Tenants Protection Act, 1955, notification .. .. .. 594
District Municipalities Act, 1920, notification .. 12)
Electricity Board, Thirteenth Administration Report for 1969–70 (Tamil) .. .. 594
Factories Rules, 1950, notification .. .. 120
Factories (Welfare Officers) Rules, 1953, notification .. .. .. .. .. 120
Government Gazette, dated 10th May 1957, errata to notification .. .. .. .. 408
Panchayats Act, 1958, notifications .. .. 407-408 594
Public Service Commission Regulations, 1954, notification .. .. .. .. 408
Public Works—Grants-in-Aid, Policy Notes (English and Tamil).. .. .. .. .. 594

PERUMAL, Thiru A. R.—
Budget, 1972-73—
G. D. .. .. .. .. .. 91, 92, 220–227

PONNAPPA NADAR, Thiru R.—
Budget, 1972–73—
G. D. .. .. .. .. .. 84, 86, 91, 92, 93, 204, 215, 216, 218, 219, 222, 223, 240, 241, 242, 243, 246, 342–366, 386, 391, 400

P—*cont.*

PAGES.

PONNAPPA NADAR, THIRU R.—*cont.*
Budget, 1972-73—*cont.*
Point of Order:
Resignation of a Minister .. .. .. 171, 174
Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers (A. M.). .. .. 444

PUMP-SETS—
Purchase through co-operative marketing societies .. .. ... .. .. 161–162

R

RAJA, THIRU A. M.—
Labourers, working hours .. .. .. 138–139

RAJAGOPAL, THIRU K. M.—
Budget, 1972–73—
G. D. .. .. .. .. .. 361

RAJARAM, THIRU G.—
Budget, 1972–73—
G. D. .. .. .. .. .. 199–200, 240, 360, 361

RAMAKRISHNAN, THIRU KUPPAL K. S.—
Budget, 1972–73—Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 487–492

RAMALINGAM, THIRU R.—
Budget, 1972–73—
G. D. ... .. .. .. .. 61–67

RAMASWAMY, THIRU E.—
Hostels for Backward Classes students in Coimbatore district, opening .. .. .. 289–290

RAMASWAMY, THIRU G.—
Budget, 1972–73—Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. ... .. 515–518



R—*cont.*

PAGES

RANGANATHAN, THIRU K.—
Temple accounts, auditing .. ... .. 443

ROAD(S)—
Road connecting Rameswaram and Mainland, reply of Union Government .. .. .. 158–159
Tindivanam—Gingee — Tiruvannamalai road, broadening .. .. .. .. 287

S

SADASIVAM, THIRU S.—
Budget, 1972–73—
G. D. ... ... .. .. .. 97–104

SADIQ PASHA, THIRU S. J.—
Budget, 1972–73—
G. D. ... .. ... ... .. 192–241

SANGUMUTHU THEVAR, THIRU S.—
College of Karnatic Music, Madras, new courses .. .. .. .. .. 261–262
Road connecting Rameswaram and Mainland, reply from Union Government .. ... 158–159
State Transport, permission for food-carrying baskets ... .. .. .. ... 167–168
Water from Manimutharu, letting into cannals in Tirunelveli district .. .. .. .. 24

SARATHY, THIRU M. P.—
Moat around Vellore Fort, repairs ... ... 14–15

SATHIAMOORTHI, THIRU M.—
Budget, 1972–73—
G. D. .. .. ... ... ... 59–60
Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. 492–495

PAGES

S—*cont.*

SATHIAVANIMUTHU, THIRUMATHI—
Budget, 1972-73—
G. D. .. .. .. .. .. 203-204

SATHIYENDRAN, THIRU M. S. K.—
Budget, 1972-73—
G. D. .. .. .. .. .. 339

SCHEDULED CASTES—
Kolli Hills, grant of pattas .. .. .. 276-277

SCHOOLS—
English Medium, number .. .. .. 264-265
Needamangalam High School, construction of new building .. .. .. .. 265

SCOUTS—
Regulation of traffic in Madras City .. .. 265-269

SECRETARIAT—
Construction of new building .. .. .. 2-7

SHANMUGAM, THIRU P. U.—
Budget, 1972-73—
G. D. .. .. .. .. .. 107, 184, 185, 246, 305, 323-324, 326, 327
Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 502, 504,

SLUM(S)—
Children training camp to train in citizenship .. 144

SOMASUNDARAM, THIRU N.—
Needamangalam High School, construction of new building .. .. .. .. .. 265
Scheduled Caste students, constitution of Committee re. admission in Colleges .. .. 141-143



PAGES

S—*cont.*

SONIAH, THIRU T.—
Budget, 1972-73, G. D. .. .. .. 67-71

SOUNDARAPANDIAN, THIRU P.—
Drinking Water supply, Uppidamangalam .. 7
House site to depressed class people, amount allotted .. .. .. .. .. 143-144

SUBBIAH, THIRU A. K.—
Budget, 1972-73, G. D. .. .. .. 104-110

SUBRAMANIAM, THIRU A.—
Scouts, regulation of traffic in Madras City .. 265-269

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1972-73, G. D. .. .. .. 84
Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. 457, 459-463
Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers (A. M.) .. .. .. 444

SUNDARABHARATHI, THIRU SOWDI, S.—
Budget, 1972-73, G. D. .. .. .. 91
Growing unemployment among handloom weavers at Aruppukottai (A.M.) .. .. .. 180-183

SUPERMARKETS—
Establishment at Sulur and Palladam .. .. 438

SUPPU, THIRU K.—
Budget, 1972-73, G. D. .. .. .. 225-226
Panchalankurichi Fort, amount spent for excavation and protection .. .. .. .. 255-257
Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers (A. M.) .. .. 444-445
Sudanthiram Transport in Madurai, strike .. 139-140

SURENDRAN, THIRU M.—
Aluminium Factory at Mettur, exemption from Land Ceiling Act .. .. .. .. 433-435

PAGES

S—*cont.*

SURENDRAN, Thiru M.—*cont.*
Industrial Estate for Jalakandapuram, establishment .. .. .. .. 19
Point of Order :
Resignation of a Minister .. .. .. 176, 177

SWAMIDHAS, Thiru A.—
Madhavaram Milk Project, ghee production .. 33-37

T

TANK(S)—
Pandravedu distribution of water .. .. 438
Ramachandran Tank at Sulur, formation .. 286
Ramalingapuram, construction .. .. .. 436

TEMPLES—
Accounts, auditing .. .. .. .. 443
Siva-Vishnu Temple, Theagarayanagar .. .. 37-38
Srirangam Temple, utilisation of income .. .. 443

THANGAMANI, Thiru K. T. K.—
Budget, 1972-73, G. D. .. .. .. 312-341, 398-401
Voting :
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 458
Crash Programme of Government of India for rural unemployed, enforcement .. .. .. 257-261
Night Decker Bus, accident .. .. .. 31-33
Point of order :
Resignation of a Minister .. .. .. 121, 122, 126
Police lathi charge at Madurai on students' processions in support of Teachers' demands, (A.M.) .. .. .. .. .. 448-450, 452-453



PAGES

T—*cont.*

THANGAMANI, Thiru K. T. K.—*cont.*
Police lathi charge on Srivilliputhur Co-operative Textile Mill Workers, (A. M.) .. .. .. 444
Sudanthiram Transport in Madurai strike .. 139-140

THOOYAMANI, Thiru M. C.—
Budget, 1972-73, G. D. .. .. .. 55-59

THOPPUR THIRUVENGADAM, Thiru—
Government Hospital at Vellore, number of special wards .. .. .. .. .. 269-270
Married nurses, construction of Quarters .. 270-271
Town buses, permission to municipalities to take over .. .. .. .. .. 293-296

THYAGARAJAN, Thiru E. S.—
Bridge across Kuchasthali river, construction .. 436
Budget, 1971-72, G. D. .. .. .. .. .. 296-299
Pandravedu tank, distribution of water .. 438

TOURISM—
Tourist Bungalow for Devarabetta, construction .. 290-292
Tourist Homes, increase in rent .. .. 162-164

TRANSPORT—
Buses, re-treading of tyres .. .. .. 168-169
Drivers, supply of umbrellas .. .. .. 442-443
Lorry Transport, nationalisation .. .. 164-167
Night buses, operation in Madras City .. 30-31
State buses from Madras and Madurai to Hosur .. 292-293
State permission for food-carrying baskets .. 167-168
Sudanthiram Transport in Madurai, strike .. 139-140
Town buses, permission to Municipalities to take over .. .. .. .. .. 293-296

D

V.R11, 31 N72

31 N72.17

PAGES

V

VEERASAMY, THIRU N.—
Budget, 1972–73, G. D .. .. 92, 93, 240
Point of Order—
Resignation of a Minister .. 171

VEZHAVENDAN, THIRU K.—
Budget, 1972–73, Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 463–470
Fish-oil, production .. .. .. .. 11–14
House sites to Harijans in the midst of inhabitants, allotment .. .. .. .. .. 273–276
Kudathalai river, construction of overbridge across. 288
Sub-Registrar's Office for Gummidipoondi .. 137–138

W

WAHAB, THIRU K. A.—
Budget, 1972–73, G. D. .. .. .. 306
Budget, 1972–73, Voting:
Community Development Projects, etc., Public Works—Grants-in-Aid .. .. .. 457–458, 522–526
College of Te[illegible] Tiruchirappalli, opening on behalf of Wakf Board ... .. 22–23

WATER SUPPLY—
Pallavaram .. .. .. .. .. 8
Uppidamangalam Town Panchayat .. .. 7

WILD LIFE—
Sanctuary for Javadu Hills .. .. 164

61548